JL
Q6m211,N03NA
N03.11
162045

# நல்ல ஆயன்

மாதம் ஒரு முறை பிரசுரிக்கப்படும்.




# The Good Pastor

(PUBLISHED MONTHLY.)

ஜனவரிமீ 1913. JANUARY 1913.


| புத்தகம். 11. இலக்கம். 1. | பொருள் அடக்கம். | | Contents. | Vol. 11. No. 1. |
|---|---|---|---|---|


| பொருள். | பக்கம். | Subject. | Page. |
|---|---|---|---|
| 1 காலப்பிரயோகம் | 1 | 1 The use of Time | 1 |
| 2 ரயில் வண்டியில் சல்லாபம் | 3 | 2 A talk in Railway Carriage | 3 |
| 3 ஞானோபதேசம் | 8 | 3 Christian Doctrine | 8 |
| 4 சுவாமி பிறந்த திருநாள் கதை | 9 | 4 Christmas Story | 9 |
| 5 கிறிஸ்துவர்களுடைய சகாயம் | 12 | 5 Help of Christians | 12 |
| 6 கடிதங்கள் | 14 | 6 Correspondence | 14 |
| 7 கத்தோலிக்கருக்கு நல்லொழுங்குகள் | 16 | 7 Correct Things for Catholics | 16 |
| 8 பொது வர்த்தமானக் குறிப்புகள் | 18 | 8 General News and Notes | 18 |
| 9 மாச வர்த்தமானம் | 21 | 9 News of the Month | 21 |
| 10 குடும்ப சுபாசுப விளம்பரங்கள் | 24 | 10 Domestic Occurrences | 24 |



நல்ல ஆயன் சந்தா (தபாற்கூலி யுட்பட) வருஷம் ஒன்றுக்கு :
உள் நாடுகளுக்கு ... ... 1 4 0
சிங்கப்பூர், மோரீஸ் நெட்டால் முதலிய வெளிநாடுகளுக்கு 1 12 0
தனிப் பிரதி முறையே 2-அணா, 3-அணா.

Annual subscription for the Good Pastor (including postage) :
for inland countries 1 4 0
for over-land countries such as Singapore, Natal and Mauritius 1 12 0
Single copies respectively annas 2 & 3


## விசேஷ குறிப்பு.

(இதனை நமது சந்தாதாரர் அனைவரும் அவசியம் கவனமாய் வாசிக்கவேண்டியது)

1. நண்பர்கள் மணியார்டர் அனுப்பும்போது தங்கள் நம்பரை விடாமற் குறித்து எழுதல் வேண்டும். பத்திரிகையைச் சுற்றிவரும் ராப்பர் கடுதாசியில் சந்தாதாருடைய நம்பர் பெரிய எழுத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது. இதை ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டியது. மேல் விலாசம் மாற்றும்போது, ஊர், பேர் முதலியவற்றை திருத்தமாக எழுதவேண்டும். இவ்விரு விஷயங்களைக் கவனித்தால் பிழை நேராது.

2. பிரதிமாதம் 25-ந் தேதிக்குப்பின் பத்திரிகை முடிக்கவேண்டிய துரிதத்தில் அப்போது புத்தகங்கள், கார்டுகள் வேண்டுமென்று கேட்கும் நண்பர்களுக்கு உடனே அனுப்பக் கூடுமாயிராது. பத்திரிகை அனுப்பினபின்தான் கவனிக்கப்படும்.

3. நமது மறுமொழி வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பினாலன்றி அதற்கு எதிர்பார்ப்பது தருமமல்ல.

## விசேஷ விஞ்ஞாபனம்.

நல்லாயனின் நல்லிருப்பைக் கோரு நண்பர்காள்!

எம்தன்பார்ந்த நண்பர்களிற் சிலர் கர்த்தர் திருவவதாரத் திருவிழாவைக் குறித்து நமக்கு அனுப்பிய வந்தனோபசாரக் கார்டுகளுக்காகவும், கடிதங்களுக்காகவும் நாம் மிகவும் நன்றியறிந்திருக்கிறோம். இந்த நமது நன்றியறிதலையும், நமது பிரதி வந்தனங்களையும் ஒவ்வொருவருக்கும் பிரத்தியேகமாய்த் தெரிவித்துக் கொள்வதானால் செலவும் சிரமமு மாகிறதி னிமித்தம் அவைகளை இதன் மூலமாய் அவர்களுக்கு நாம் அறிவிக்கிறோம். நண்பர்கள் இதை அங்கீகரிப்பார்களெனக் கோருகிறோம். இது நிற்க,

இந்தப் புது வருட மகோற்சவ தினத்திலும் நமது குறையைப்பற்றி முறையிட்டுக் கொள்ளவேண்டியதா யிருப்பதைப்பற்றி நாம் வெகுவாய் வ்யசனிக்கின்றோம். ஆயினும்வேறு விமோசன மில்லை. குறையை நிவிர்த்தித்து நமக்கு இந்தப் புது வ்ருஷத்திலாகிலும் ஒருவாறு உவகையையும் உற்சாகத்தையும் உண்டுபண்ணுவது சந்தாதாரர் கையி லிருக்கிறது. நம்முடைய முறைப்பாடு.பாக்கி சந்தா கொடுபட வில்லை யென்பதே. 1911. 1912 ஆக இந்த இரண்டு வருஷச் சந்தாபாக்கி யுள்ளவர்கள் இன்னும் வெகுபேரிருக்கிறார்கள். ஏற்கெனவே கொடுக்கப்பட்ட எச்சரிக்கைப்படி இவர்களெல்லோருக்கும் பத்திரிகை நிறுத்திவிடப்பட்டது.

1912ஆம் சந்தா செலுத்தாதவர்கள் 306-பேருண்டு. இவர்களும் நாம் கொடுத்திருக்கிற தவணையாகிய இந்த ஜனவரிமீ முடிவுக்குள் பாக்கியைச் செலுத்தாமல் பத்திரிகையை நிறுத்தும்படியான வருத்தத்துக்குரிய கடமைக்கு நம்மை உட்படுத்தமாட்டார்களெனக் கோருகிறோம்.

### இனாம் புஸ்தகம்

இது இன்னும் பூர்த்தியாய் அச்சடித்து முடியவில்லை. இதற்கு "நற்கருணைப்பேழைப் புரு" வென நாமகரணஞ் சூட்டியிருக்கிறோம். இம்மாதத்துக்குள் முடிவாகுமென நம்புகிறோம். ஆகவே பெப்ரவரிமீ முதல் வாரத்தில் அனுப்பப்படும். மேலும் இந்த இனாம் புத்தகம் பெறுவிக்குங்காலதவணையை இன்னும் ஒரு மாதத்துக்கு நீளிக்கச்செய்ய தீர்மானித்திருக்கிறோம். அதாவது, ஜனவரிமீ முடிவுக்குள் இந்த 1913ஆம் சந்தாவையும், தபாற்செலவு ஒரு அணாவையும் அனுப்புகிறவர்களுக்கு ஷை இனாம் புத்தகங்கொடுக்கப்படும்.

### நன்கொடை.

நமது நல்லாயன் அச்சுக்கூடத்திற்கு அத்தியாவசியமாய் வேண்டியிருந்த புது எழுத்துக்களை சவதரிப்பதற்கு நாம் கேட்டுக்கொண்டபடி கருணை கூர்ந்து நன்கொடையனுப்பிய நண்பர்களுக்கு நமது அன்பார்ந்த வந்தன மளிக்கின்றோம். புது எழுத்துக்களுக்காகச் செலவழிந்த தொகை ரூ. 305-8- இதற்காக நன்கொடைவரவு ரூ. 10-15-0 புது வருஷத்தில்புது எழுத்துக்களை உபயோகிக்க வேண்டுமென்ற ஆவலினால் இதற்கு வேண்டியிருந்த பணத்தை வேறோர் நிதியினின்றும் எடுத்து செலவு செய்துவிட்டோம். அந்த நிதியை யிப்போது பூர்த்தி பண்ணவேண்டி யிருப்பதால் நண்பர்கள் தங்கள் தங்களால் கூடிய அளவுக்கு திரவிய சகாயஞ் செய்து எம்மை யாதரிப்பார்களெனக் கேட்டுக்கொள்ளுகிறோம். இதுவரையிலும் பாக்கிதாரர்கள் பாக்கியைச் செலுத்தாமல் நமக்கு வருவித்த கஷ்ட நஷ்டங்களின் மத்தியில் அப்போதுக்கப்போது மற்ற நண்பர்களின் சகாயம் சிறிதாயினுங் கிடைத்திராவிட்டால் பத்திரிகையின் நிலைமை பரிதாபத்துக்குரியதாயிருந்திருக்கும். ஆகவே நண்பர்களின் உதவியை யெதிர்பார்க்கிறோம். நன்கொடையாளர்களின் ஜாபிதா பின்வருமாறு:—

### பத்திரி காபிவிர்த்திக்காக நன்கொடை.

| | | | | |
|---|---|---|---|---|
| பொரளும்பு. | Mr. I. X. பெரைரா. | 3 | 11 | 0 |
| மணப்பாடு. | ,, S. A. மொராயஸ். | 3 | 0 | 0 |
| பெங்களூர். | ,, அந்தோனி. | 1 | 11 | 0 |
| திருவனந்தபுரம் | ,, P. S. முத்து பிள்ளை. | 1 | 0 | 0 |
| புதுச்சேரி. | ,, பிலோமொன் குழந்தைசாமி. | 0 | 8 | 0 |
| திருச்சினாப்பள்ளி. | ,, S. [illegible] S. அம்புரோஸ். | 0 | 8 | 0 |
| அட்டா[illegible] | ,, F. பொன்னுதம்பி பிள்ளை. | 0 | 3 | 0 |
| கொளும்பு | ,, K. [illegible] A. பெர்னாந்தோ. | 0 | 3 | 0 |
| பெங்களூர் | ,, சாமுவேல் டேவிட். | 0 | 3 | 0 |
| | ஆக மொத்தம் ரூபா | 10 | 15 | 0 |

பத்திராதிபர்.

162045” 600 008



# நல்ல ஆயன்.

January—1913.

புத்தகம். 11. | "நாம் நல்லஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுடுகளும் நமக் குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10:16-14.) | நெம்பர். 1.

## THE USE OF TIME.

### காலப் பிரயோகம்.

இதோ! இன்று புது ஆண்டான 1913ஆம் பிறந்துவிட்டது. வருஷப்பிறப்பு நாள் எல்லோருக்கும் சந்தோஷத்துக்குரிய நாள். உடுத்து சிங்காரித்துக்கொண்டு ஒருவர் ஒருவரைச் சந்தித்து மங்கள மொழிகளால்சோபனங் கூறி, உண்டுகளிப்பார்கள். அங்கங்கே விளையாட்டுகளும், களியாட்டுகளும்,விநோத வேடிக்கைகளும் வெகு மும்முரமாய் நடைபெறும். இவ்வளவு மங்களகரமாயும் மனோகரமாயும் ஆரம்பமாகும் வருஷப்பிறப்பு நாளில் எல்லோருக்கும் ஒரு எச்சரிக்கையாக "உன் கை செய்ய வேண்டிய வேலையைச் சுறுக்காய்ச் செய்; ஏனெனில், நீ போகிற பாதாளங்களிலே செய்கையு மில்லை, புத்தியு மில்லை, ஞானமு மில்லை" (சங்கப் பிரசங்கியாகமம் IX. 10) என்று ஞானியானவர் உரைக்கிறார். ஆம், நம் ஒவ்வொருவரைப் பொறுத்ததும், நம் ஒவ்வொருவருக்கும் சொந்த அலுவலாயுமிருக்கும் நம்முடைய ஆத்தும இரக்ஷணயத்தின்மட்டில்,வருஷத் துவக்கத்திலேயே அக்கறையும் ஆவலும் கொள்ள, நம்மை அவர் தூண்டுவது நியாயந்தானே. அப்படியானால், இவ்விஷயத்தில் நாம் ஏனோதானோ வென்று அசட்டையா யிருந்துவிடாமல் கரிசனக் கவலையோடும் சுறுசுறுப்போடும் வருந்தி யுழைப்போமாக. ஒருக்கால் நாம், நமது ஆத்தும காரியங்களை விசாரியாமலே சென்ற வருஷத்தைப் போக்கி யிருக்கலாம். நித்திய கேட்டுக்குச் செல்லுகிற வழியில் விரைந்து சென்று, இன்னும் அப் பிரயாணத்தை செய்துகொண் டிருக்கலாம். இப் புதுவருஷத்திலாவது நம்முடைய ஈடேற்றத்தின் பேரில் கவலைகொண்டு, நாம் இதுகாறும் கட்டிக்கொண்ட பாவாக்கிரமங்களுக்குப் பரிகாரந் தேடவேண்டிய தல்லவா? மறுசீவியத்துக்கு வேண்டிய புண்யபேறு பலன்களைச் சம்பாதிப்பது நமக்குப் புத்தியும் யுக்தியு மல்லவா? இவ்விஷயத்தில் காலதாமதஞ் செய்தல் எவ்வளவும் சரியல்ல. ஏனெனில், நம்முடைய அந்தியகாலம் திடீரென வருமாயின், அந்நேரத்தில் கலக்கமுந் திகிலுங் கொண்டு அங்கலாய்ப்போம். நமது வாழ்நாட்களை சர்வேசுரனுடைய தோத்திரத்துக்காகவும் மகிமைக்காகவும் செலவழிக்காமலும், அவருடைய பரிசுத்த பணிவிடையில் போக்காமலும் நம்முடைய சொந்த இஷ்டானுசாரப்படி உலகம், பசாசு, சரீரம் இவைகளுக்கு ஊழியஞ் செய்வதிலேயும், இவைகளுடைய மகிமையைத் தேடுவதிலேயும் உபயோகப்படுத்தி யிருப்போமானால், அந்தோ! மரணவேளை எவ்வளவு பயங்கரத்துக்கும் பரிதாபத்துக்கும் உரியதாயிருக்கும்!

ஆகையால், மரணநேரத்தில் நாம் மன அமரிக்கையோடும் சமாதானத்தோடு மிருக்கக் கோருவோமானால், கருணையங் கடவுள் கருணையாய் நமக் களித்திருக்கும் இப்புதுவருஷத்தை நம்முடைய இரக்ஷணயத்துக்கு அனுகூலமாய் உபயோகித்துக் கொள்ள பிரதிக்கினை செய்துகொள்வோமாக. இப்பிரதிக்கினை உண்மையும் உறுதியுமுள்ளதா யிருக்கும்படி காலப் பிரயோகத்தின்பேரில் யோசிக்கக் கடவோம்.

எவ்வளவுக்கு ஒரு வஸ்து விலையேறப் பெற்றதா யிருக்குமோ, அல்லது அருமையானதாயிருக்குமோ அவ்வளவுக்கு அதை

நாம் பத்திரமாய் உபயோகித்துக்கொள்வோம். அதன்மட்டில் கவலை யற்று அசிரத்தையா யிருக்கமாட்டோமல்லவா? காலத்தின் அருமையும் அதன் பெருமையும் அளவிடத் தக்க தன்று. இப் பிரபஞ்ச சகல நன்மைகளையும் விட அது உயர்ந்த பொக்கிஷம். ஆஸ்தி பாஸ்திகள், ஆடை ஆபரணங்கள், இன்ப சுகங்கள் கீர்த்தி பிரதாபம் முதலானவைகளை ஒருங்கே சேர்த்தாலும், இவைகளெல்லாம் அதன் ஒரு நொடிப் பொழுதுக்கு ஈடாகாது. காலமானது இவ்வளவு விலையேறப்பெற்றதா யிருப்பதின் நிமித்தம் அதை முழுதும் நம்முடைய நல்ல கடவுள் நம் வசத்தில் விட்டுவிடாமல், ஒவ்வொரு க்ஷணமாகக் கொடுத்து வருகிறார். பொய்மத சித்தாந்தியான சேனேக்கா என்பவன் முதலாய், காலம் இவ்வளவுவிலையுயர்ந்த பொக்கிஷமென்று எண்பித்துக்காட்ட "காலத்துக்கு ஈடான கிரயம் கிடையாது" என்கிறான். அர்ச். சியென்னா பெர்நர்தின் என்பவர் சொல்லி யிருக்கிறதாவது: "சர்வேசுரன் எப்படி விலைமதிக்கப்படாதவரோ அப்படியே காலத்தின் ஒவ்வொரு நொடிப் பொழுதும் விலைமதிக்கப்படாதது. அதேனென்றால், ஒவ்வொரு நொடிப்பொழுதிலும் மனிதன் தன் பாவாக்கிரமங்களுக்கு மனஸ்தாபப்பட்டு தேவானுக்கிரகத்தையும், நித்திய பாக்கியத்தையும் சம்பாதித்துக் கொள்ளக்கூடும்" என்பதேயாம்,

இவ்வளவு விலையேறப்பெற்ற இக்காலமானது கழிந்துபோனால், மறுபடியும் திரும்பாது. ஆனதுபற்றியல்லவா, மோட்சவாசிகள் பரலோகத்தில் தங்கள் பாக்கியத்தை அதிகரிக்கச் செய்யவும், பாவிகள் நரகத்தில் தங்கள் நிர்ப்பாக்கியத்தை குறைத்துக்கொள்ளவும், அல்லது அதை முற்றும் ஒழித்துக்கொள்ளவும் இயலாது. அவர்களுடைய வாழ்நாட்களோடு அவர்கள் புண்ய பேறு பலன்களைச் சம்பாதிக்கக்கூடிய காலமும் கழிந்துபோனது. "மரமானது தெற்கே விழுந்தாலும், வடக்கே விழுந்தாலும், விழுந்த இடத்திற்றானே கிடப்பது" (சங்கப்பிரசங்கியாகமம் X1: 3) போல, அவர்கள் எந்த அந்தஸ்தில் மரணவேளையி லிருந்தார்களோ அந்த அந்தஸ்திலேயே நித்திய காலத்துக்கும் இருப்பார்கள். ஆனபடியால் "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்னும் பழமொழிக் கொப்ப, நமக்குக் கால முள்ளபோதே, அதாவது நாம் உயிரோடிருக்கும்போதே நம்முடைய இரக்ஷண்யத்துக்காக பாடுபட வேண்டியது. நமதாண்டவரான சேசுநாத சுவாமியும் "எவனும் வேலைசெய்யக்கூடாத இராக்காலமான" (அருள. 1X. 4.) மரண நேரம் வந்தபின் நம்முடைய இரக்ஷண்ய அலுவலைச் செய்ய முடியாதபடியால், "பகல் நேரமா யிருக்கும்" (அருள. 1X. 4.) இப் பிரபஞ்ச சீவியத்திலேயே அதைச் செய்து முடித்துக்கொள்ள வேண்டுமென்று திருவுளம் பற்றியிருக்கிறார்.

மரணத்துக்குப் பின் மனிதர் தங்களாத்தும காரியங்களை ஒழுங்கு படுத்துவது அசாத்தியமென்று அறிவார்களாயினும், ஐயோ! எத்தனையோ பேர் தங்கள் வாணாட்களை வீணாட்களாக்கிக் கொள்ளுகிறார்கள். சிலர் மோட்சம், நரகம் இல்லையென்பதுபோலவும், இவ்வுலகமே சதமென்றாற் போலவும் எவ்வித அக்கிரமங்களையும் அஞ்சாமல் செய்து வருகிறார்கள். சிலர் தங்கள் பாவாக்கிரமங்களுக்காகப் பச்சாதாபப்பட்டுப் பரிகாரந்தேட, காலம் தங்கள் கையிலிருப்பதுபோல எண்ணி, நாளைக்கு நாளைக்கென்று, காலதாமதஞ் செய்து வருகிறார்கள். "தங்களுடைய தோஷதுரோகங்களுக்காக அழுது மனஸ்தாபப்படுகிறவர்களுக்குப் பொறுத்தல் அளிக்க சர்வேசுரன் வாக்குத்தத்தம்செய்திருக்கிறார் என்றாலும், அவர்களுடைய மனஸ்தாபத்துக்காக அவர்கள் இஷ்டத்தைப்போல் காலத்தைக் கொடுக்க அவர் வாக்குத்தத்தம் செய்தவ ரல்லர்" என்று அர்ச். அகுஸ்தீன் வசனித்திருக்கிறார். ஆனதினிமித்தம் நாம் செய்யக்கூடுமான புண்ணியங்கள் பாவப்பரிகாரங்களை யெல்லாம் ஒன்றையும் தவறவிடாமல், நமக்குக் கால முள்ளபோதே செய்வோமாக. இப்படி நாம் செய்யாதபடி வீணிலே காலத்தைக் கழிப்போமானால், சர்வேசுரனுக்குக் கண்டிப்பான கணக்குக் கொடுக்க வேண்டியதாகும். நம்முடைய ஒவ்வொரு வியர்த்த வார்த்தைக்கும் நமது கர்த்தர் நம்மிடத்தில் கணக்குக் கேட்பாரானால், அருமையாய்க் கொடுத்த சீவியத்தில் வீணாய்ச் செலவழிக்குங் காலத்துக்குக் கண்டிப்பான கணக்கு கேளாமல் விடுவாரோ? "சர்வேசுரனைக் குறித்து நினையாத நேரமெல்லாம் வியர்த்த நேரம்"



என்று அர்ச். பெர்நார்து சொல்லுகிறார். ஆதலினால், சென்ற வருஷத்தை எப்படிச் செலவழித்திருக்கிறோமென்று யோசித்துப் பார்ப்போம். சர்வேசுரனுடைய தோத்திரத்துக்காகவும், நம்முடைய ஆத்தும நன்மைக்காகவும் அதை செலவழித்திருப்போமானால், நாம் அகமகிழ்ந்து சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரம் செலுத்துவோமாக. அவ்வாறே, துவக்கியிருக்கும் புது வருஷத்தையும் போக்க தேவானுக்கிரகத்தை இரந்து கேட்போமாக. ஆனால், கடந்த வருஷத்தில் சர்வேசுரனுக்குப்பிரமாணிக்கமாய் ஊழியம்செய்யாமலும், நமது ஆத்தும இரக்ஷண்ய அலுவலைக் கவனியாமலும் காலத்தைக் கடத்தி யிருப்போமானால், அதற்காக பச்சாத்தாபப்பட்டு தக்க பரிகாரம்தேட உடனே முயலுவோமாக. தயையுள்ள சர்வேசுரன் தங்களுக்குத் தந்திருந்த காலத்தை முடித்துக்கொண்டு சென்ற வருஷத்தில் இம்மையைவிட்டு மறுமையை அடைந்தவர்கள் அநேகம் பேராயிருக்க, நாம் மாத்திரம் இன்னும் உயிரோடிருக்கிறோம். இப்படி நாம் உயிரோடு வைக்கப்பட்டிருப்பது என்னத்துக்காக? இப் புது வருஷத்திலாவது நம்முடைய சீவியத்தைத் திருத்திக்கொண்டு புண்ணிய வழியில் சுறுசுறுப்பாய் நடப்பதற்காகவே. நாம் எவ்வளவு சுறுசுறுப்பாய் நம்முடைய இரக்ஷண்ய அலுவலை இவ்வருஷத்திற் செய்வோமோ அவ்வளவுக்குச் சென்ற வருஷத்திலும், இன்னும் நம்முடைய சீவியகால முழுமையிலும் வீணிலும், வினைபுரிவதிலும் போக்கின காலத்தையெல்லாம் நமக்குப் பிரயோசனப்படுத்திக் கொள்ளலாம். ஏனெனில், நமது ஆத்தும க்ஷேம இலாப விஷயங்களில் நாம் எவ்வளவு செய்கிறோமென்பதைச் சர்வேசுரன் கவனியாமல், எவ்வளவு சுறுசுறுப்பாயும் ஆவலாயும்செய்கிறோமென்பதையே கவனிக்கிறார். ஆகையால், இவ் வருஷத்தின் ஒவ்வொரு நாளையும் தேவ ஊழியத்தில் பக்தி சுறுசுறுப்பாய்ப் போக்குவோமாக. நம்மிடத்தில் ஓர்வேளை குடிகொண்டிருக்கும் பாவப்பழக்கங்கள், பாவத்தின்மேலுள்ள பற்றுதல்கள், இன்னும் பாவத்துக் கடுத்த ஆட்கள், தருணங்கள், இடங்கள் இவை முதலானவைகளையெல்லாம் விலக்கி விடுவோமாக. நல்ல பாவசங்கீர்த்தனத்தினால் பரிசுத்தத்தனத்தை அடைவோமாக. இடைவிடா முயற்சியோடு புண்ணியங்களைப் பயிற்சித்து சாங்கோபாங்கத்தில் உயர்வோமாக.

இவ்வாறு, இப் புது வருஷத்தில் நாம் சீவித்து வருவோமானால், இன்று ஒருவரொருவருக்குக் கோரிக்கொள்வதுபோல இவ் வருஷம் எல்லோருக்கும் மங்களகரமான வருஷமாயிருக்கும். இதற்காக வேண்டிய தேவானுக்கிரகத்தை நல்ல ஆயனை நம தாண்டவ ரிடத்தில் இரந்து கேட்போமாக. இந்த தேவானுக்கிரகம் நமது சந்தாதார நேயர்களுக்கும், நமது ஆயனுக்கு நன்கொடை யளித்து அதன் அபிவிருத்தியை அன்பாய்க் கோருபவர்களுக்கும், அதற்காக விஷய தானம் செய்பவர்களுக்கும் ஏராளமாய்க் கிடைக்கும்படி நாம் வேண்டிக் கொள்வதோடு கூட, நம்மால் இன்று ஒரு திவ்விய பூசை செய்தும் ஒப்புக்கொடுக்கப்படும்.

---

## A TALK IN A RAILWAY CARRIAGE

## ரயில் வண்டியில் சல்லாபம்.

---

மாலை ஐந்து மணியளவில் வாலிபர்களிருவர் ரயில் ஸ்டேஷனை நோக்கிச் செல்லுகிறார்கள். ஒருவன் பெயர் **அமிர்தசாமி**. உத்தம கத்தோலிக்குப்பெற்றோருக் குதித்தவன். பக்தியில் வளர்ந்தவன். வேத விஷயங்களை நன்றா யறிந்தவன். மத வைராக்கிய முடையவன். மற்றொருவன் **ஆரோக்கியசாமி**. இவனும் கத்தோலிக்கனே. அடக்க வொடுக்கமும் மேரைமரியாதையுமுள்ளவன். பிறர்பால் அன்புற்றவன். இவ்விருவரும் போய்க்கொண்டிருக்கும்போது, குறுக்கேயுள்ள ரஸ்தா மார்க்கம் வந்த **மோசஸ்** என்னும் வாலிபனைச் சந்தித்தார்கள். இவன் பதிதன். புரோட்டஸ்டாண்டு மெதடிஸ்டு சபையைச் சேர்ந்தவன். வேதவிஷயத்தில் வெறுப்பும், கத்தோலிக்கு வேதத்தின் மாட்டு கசப்புமுள்ளவன். வேதசாஸ்திரங்களைக் கற்ற நிபுணன் போல் கத்தோலிக்கரைக் கண்டால், வீண் வாக்குவாதஞ் செய்யுஞ் சுபாவம் அவனுக்குண்டு. இம்மூவரும் ஒருக்கால் கலாசாலைத் தோழர்களாயிருந்ததால், ஒன்றாய்ச் சந்திக்க நேரவும் ஒருவரோடொருவர் சந்தோஷமாய்ப் பேசிக் கொண்டுபோயினர். அவ்வாறு செல்லுகையில்

கத்தோலிக்கு குருவானவரொருவர், ரிக்ஷா வண்டியில் மந்திரமாலைப் புஸ்தகத்தைத் திறந்து ஜெபித்தவண்ணம் இவர்களுக்கெதிர் திசையிலிருந்து வந்து கொண்டிருந்தார். சமீபத்தில் வரவும், அமிர்தமும் ஆரோக்கியமும் தங்களது பெல்ட் காப்பை (குல்லாவை) தலையினின்றெடுத்து வந்தனங்கூறினார்கள். ரிக்ஷாவும் பின்னால் போயிற்று. மோசஸ் குருவானவரைத் திரும்பிப் பார்த்தான். நகைத்தான் சற்றே. கேட்டான் தோழர்களிடம்:

மோசஸ்.—எது! உங்கள் பாதிரியார் தெருவில் கூட ஜெபஞ் சொல்லிக்கொண்டு போகிறாரே.

ஆரோக்கியசாமி.-பாதிரியென்று சொல்ல வேண்டாமப்பா. அவர் எங்கள் குருவானவர். நாங்களவரைச் சுவாமியாரென்றழைப்போம்.

அமிர்தம்.—உங்களுடைய மினிஸ்டரைத்தான் நீங்கள் பாதிரி யென்பீர்கள்.

மோச.—உங்கள் சுவாமியார் நல்ல பரிசேயர்தான்.

அமிர்.—என்ன சொன்னாய்?

மோச.—யேசுக்கிறீஸ்து காலத்தில், பரிசேயர் பக்தியுள்ளவர்களெனக் காட்டுமாறு, வீதிகளில் மௌனமாயும், கண்ணை மூடிக்கொண்டும் பக்தர்கள்போல் பாசாங்கு பண்ணி வந்தார்கள். அதே மாதிரியாகப் போகிறார் உங்கள் சுவாமியார்.

அமிர்.—மோசஸ்! நீ யடிப்பச் சொல்ல வேண்டாம். அவர் ரிக்ஷா வண்டியில் போகிறார். எங்கே யேகுகிறாரோ நாமறியோம். சில சமயம் அவஸ்தைக்குப் போகலாம். போகும்போது அக்கம்பக்கம் பார்த்துகொண்டு போகிறதைவிட தன்னுடைய கடமைச் செபத்தைச் செபித்துக்கொண்டு போகலாம். அல்லது அலுவலினிமித்தம் வீட்டில் ஒய்வுநேரமில்லாதிருக்கலாம். அதனால் தான் இப்போது தனது கடமையை முடித்துவிடுகிறார் போலும்.

மோச.—வீட்டில் நாள் முழுதும் என்ன செய்கிறார்?

ஆரோ.—என்னவா செய்கிறார்? அவர் இல்லத்தில் போய் பார். உங்கள் பாதிரிமார்களைப் போலவோ?

அமி.—ஆம்! பாதிரிமார்களைப்போல் வீட்டில் சொகுசாய் உட்கார்ந்திருந்தால் சரிதான். ஏதோ ஞாயிற்றுக்கிழமைகளில், காலையில் ஒரு சேர்விஸ், மாலையில் ஒரு சேர்விஸ் வைத்துவிட்டு, வாரமுழுதும் பெண்டு பிள்ளைகளுடன் காலத்தை கழிக்கிறவர்களுக்கு வீட்டில் சவகாசம் ஏராளமாயுண்டு.

மோச.—(பாதிரிமாருடைய நடவடிக்கைகைகளை நன்கு அறிவானாதலால், அமிர்தம் சொன்னதை ஆட்சேபித்துப் பேசாது வேறு ஞாயம் பேசத் துவக்கினான்) இப்படிப் பகிரங்கமாய்ச் செபஞ்செய்துகொண்டு போகிறது யேசுகிறிஸ்து சொன்னதற்கு நேர் விரோதமாயிருக்கிறதல்லவா?

அமிர்.—எப்படி?

மோச.—சுவிசேஷத்தில் அவர் சொன்னதாவது: "ஜெபம் பண்ணவேண்டுமேயானால் மறைவான இடந்தன்னைத் தேடி, கதவை மூடிச் செபஞ் செய்யுங்கள்" என்பதே. பார்த்தீர்களா? சுவிசேஷ வாக்கியத்தை? அல்லது நான் சொல்லுவது பொய்யா?

அமிர்.—இக்கருத்தடங்கிய வாக்கியமிருக்கிறது உண்மைதான். ஆனால் அதினர்த்தத்தை யுணர வேண்டாமா?

மோச.—இதற்கு வியாக்கியானம் வேண்டுமோ? அது பட்டப்பகலினும் வெட்டவெளியாயிருக்கிறதே. வேண்டுமானால் நீயே சொல் வியாக்கியானம் பார்க்கலாம்.

அமிர்.—அதன்பொருள் என்னவென்றால், நாம் ஜெபம் பண்ணும்போது, மனதை யங்குமிங்கு மலையவிடாது, கருத்தையெல்லாங் கூடியவாறு அதிலேயே செலுத்தவேண்டுமென்பதே.

மோச.-(சிரித்துக்கொண்டு)"எல்லாமிருக்கிறது பெட்டியிலே இலைக் கறி கடைய சட்டியில்லை" என்றாற்போல், உள்ளங்கை நெல்லிக்கனிபோல் வார்த்தைகள் தெளிவாயிருந்தும் நீ என்னவோ வியாக்கியானம் பண்ணுகிறாயே.

ஆரோ.—சுவிசேஷத்தில் "நீ பிரசங்கிக்க வேண்டுமேயானால் வீட்டின் கூரை மீதேறிப் போதிப்பாயாக" வென்று சொல்லியிருக்கிறதை நீ யறிவாயா?

மோச.—ஆம்! அறிவேன். அதற்கென்ன?

ஆரோ.-அப்படியானால், சுவிசேஷ வார்த்தைகளை யணுப் பிசகாமல் எழுத்துப் பிரகாரமனுசரித்து வருகிற உங்கள் பாதிரிமார் ஏன் கோவிலின் கூரையின்மீதேறிப் போதிக்கக் கூடாது? எங்களுக்குப் போதிக்கிற நீதானும் என் இதோ யிருக்கிற (பக்கத்தில் காணப்பட்ட வீட்டைச் சுட்டிக் காட்டி) வீட்டுக் கூரையின் மேலேறிப் போதிக்கவில்லை.



இப்படியாக மோசஸ் சாரமற்ற விதமாய் சம்வாதஞ் செய்து "தானெடுத்த குழியிலே தானே விழுவான்" என்பதற்கொப்ப அவனை விழத் தாட்டுஞ் சமயத்தில் மோசஸினுடைய நல்ல காலம் அவர்கள் ஸ்டேஷனுக்குள் வந்து விட்டார்கள். டிக்கட்டு வாங்கியாயிற்று. மூவரும் வெவ்வேறு ஊர்களுக்குப் போக விருந்தபோதிலும், ஒருமணி நேரமாகிலும் ஒன்றாயிருக்கச் சம்பவித்தது. பூ! பூ! எனப் புகையை வெளியிட்டுக்கொண்டு புறப்பட்டது வண்டி. மோசஸ் அடிபட்ட அரவம் போலானானென வெண்ணினார்கள் மற்றிருவரும். ஆனால் அப்படியல்ல; திரும்பவும் வாதாட வாரம்பித்தான் மோசஸ்.

மோச.—ரோமான் வேதம் சன்னஞ் சன்னமாய்ப் பட்டுப்போகிறது. பண்டைக் காலத்திலேதோ தழைத்திருந்தது. நாகரீகமும், சாஸ்திர சம்பிரதாயமும், வித்யா விர்த்தியுமுள்ள இக்காலத்தில் அது முன்னேறுவது எங்கே?

அமிர்தமும் ஆரோக்கியமும் இது விஷயங்களைப்பற்றி அவனோடு பேசப் பிரியப்பட்டனரல்ல. ஆனால் அமிர்தம் வலியச் சண்டைக்கும் போகமாட்டான்; வந்த சண்டையையும் விடமாட்டான். வேத வைராக்கிய முள்ளவனாதலால் வேத தர்க்கங்களில் சும்மா விருப்பவனல்ல. ஆதலால் மோசஸ் சொன்னதற்கு விடையளித்தான்.

அமிர்.—நீ ரோமான் வேதமென்று சொல்வது சரியல்ல. கத்தோலிக்கு வேதமென்று சொல். நீ கத்தோலிக்கு வேதம் பட்டுப் பாழாகுமென்று சொன்னாயல்லவா? அதற்கத்தாட்சி யென்ன?

மோச.-அத்தாட்சியா? கண்ணைத்திறந்து பார். எல்லாம் வெள்ளிடைமலைபோல் வெளியாகும். வித்யாவிர்த்தியும், சாஸ்திரப் பயிற்சியுமுள்ள இக்காலத்தில் பிடித்த முசலுக்கு மூன்றே காலென்று சாதித்துப் பழய கோட்பாடுகளையே ஓதி வருகிறீர்கள் நீங்கள். அது பலிக்குமா? நாங்களோ காலத்துக்குத் தகுந்த கோலம் போட்டுக்கொண்டு விர்த்தியெனும் ரதத்திலேறிச் செல்கிறோம்.

ஆரோ.—ஓ! ஓ! அதனாலேதான் புரோட்டஸ்டாண்டுவேதம் 300 பிரிவுகளுக்கு மேலாக பெருகியிருக்கிறது! விருத்தியினாலல்லோ விரிந்து பிரிந்து போயிருக்கிறது! அறிகிறேன்! அறிகிறேன்!

மோச.-உங்கள் வேதம் ஒருகாலம் செழித்தோங்கியது மெய்தான். ஆனால் அப்போது, பாழூருக்கு நரிராஜா வென்றாற் போலும், ஆலையில்லா ஊர்க்கு இலுப்பைப் பூச் சர்க்கரையென்றது போலும், வெறொன்று மில்லாதலால் அதை ஜனங்கள் அக்காலத்தில் நாடினார்கள். ஆனால் இந்தக் காலத்திற்கு அது ஒத்ததல்ல; சீக்கிரம் நிலை குலைந்து, பலங் குறைந்து, க்ஷீணதசை யடையும் என்பது திண்ணமே.

அமிர்.-நீ பெரிய தீர்க்கதரிசிதான். உன்னைவிட பெரிய மாகான்கள் எல்லோரு மப்படித்தான் சொன்னார்கள். அதுவெல்லா மென்னாயிற்று? சொன்னவர்களோடு மண்ணாயிற்று! கத்தோலிக்கு வேதத்தின் சீர் சிறப்பையும், பேர் பெருமையையும், செழிப்பு செல்வாக்கையும், அபிவிர்த்தியையும் பற்றி நான் சொல்லவேண்டிய தில்லை. உலகமுழுமையுமே சாட்சி பகரும். அகங்காரத்தாற் கெடுமதி கண்ணுக்குத் தோன்றாமல் 'வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ' என்று எளிதாய் வாய்மதம் பேச வேண்டாம். உலகை யுற்று நோக்கினால் எல்லாம் உச்சிப் பகலிலும் நிச்சயமாய்த் தெரியும். இப்புவியின் கண் உள்ள ஏறக்குறைய 1,600,000,000 மானிடர்களுள் சராசரி 300,000,000 பேர் கத்தோலிக்கர். மெதடிஸ்டு சபையில் எத்தனைபேர்? வேண்டாம், புரோட்டஸ்டாண்டு மத முற்றிலுமே யெத்தனைபேர்? இதை நீயறிவாய். அப்படியிருந்தும் வாய்கூசாது பேசுகிறாயே! கத்தோலிக்கு வேதம் சேசுக்கிறிஸ்து நாதரால் ஸ்தாபிக்கப்பட்டது முதலிது வீறுக வளர் பிறைபோல் வளர்ந்தோங்கி வருகிறது. உலகத்தி னஷ்டதிசையும் பரவிவருகிறது. இதனிமித்தமா, நீ அது பட்டுப்போகுமெனப் பகர்கிறாய்? மெய்யாகவே காய்மகாரத்தினாலே, வயிற்றெரிச்சலினாலே நீ யப்படிச் சொல்கிறாய்.

மோச.—என்ன சொன்னாய்?..........

(மோசஸை ஒன்றுஞ் சொல்லவிடாது; தனது வாய்ச் சாலத்தையெல்லாந் திரட்டி அபரிமிதமான அத்தாட்சிகளைக் கொண்டு சத்திய திருச் சபை ஆதிமுதலின்றுவரையில் தழைத்தோங்கி வருகிறதெனக் காட்டத் தலைப்பட்டான் அமிர்தம்.)

அமிர்.-மோசஸ்! திருச்சபையின் விரோதிகள் அதைத் தொலைத்துப்போட எக்காலமும்

பிரயத்தனப்பட்டு வந்தார்கள். இதனுற்ருன்
திருச்சபையானது இடைவிடாது இடுக்கண்க
ளால்இம்சைபட்டது. ஆனல் அதுபட்டுப்போ
காது நாளுக்கு நாள் செழிப்புற்றே வருகிறது.
இது ஓர் பெரிய புதுமையன்ருே?

முதல் நூற்ருண்டில் டிரோஜான் என்னும்
ரோமை சக்கரவர்த்தியின் பிரதம மந்திரி, அக்
கோமானுக் கெழுதினதாவது, "மாட்சிமை
பெற்ற மகுடாதிபதியே! வேதகலாபனை யாரம்
பமாகிவிட்டது. புதிதாய் முளைத்த கிறிஸ்துவர்
வர்கள் தினே தினே தொலைந்து போகிருர்கள்.
கொஞ்சநாளில் எஞ்சியவர்களும் பட்டுப்போ
வார்கள். அதன்பின் சிலுவையி லீனமாய் மரி
த்த தேவனைப்பற்றி கேள்விப்படோம்." என்
பதே. இவ்வாறெழுதினவன் எக்கதியானுன்? சக்
கரவர்த்தி தானுமெங்கே? மண்ணேடு மண்
ணுயினர். திருச்சிலுவையில் பலியாக மரித்த கட
வுள் அகில முழுவதையும் அன்பினல் ஆளு
கிருர்!

இன்னும் மூன்று நூற்ருண்டுகளுக்குப்பின்
வேதத்தை விட்டோடிய அப்பாஸ்டேட் ஜூலி
யன் என்பவன் வெகு அகங்காரமாய் "கலிலே
யனுக்குச் சமாதி கட்டியாகிவிட்டது. சீக்கிரம்
புதைத்து விடலா" மென்ருன். ஆனல் அடா
தது சொன்னவன் படாதது பட்டு மாண்டான்.
கலிலேய னென யேளனஞ் செய்யப்பட்ட கட
வுள் கிறிஸ்துநாதர் ஜீவிக்கிருர்.

16-வது நூற்ருண்டில் மதிகெட்டு மான
மிழந்த லூத்தர்என்பவன் சேசுநாதருக்குப் பதி
லாயிருந்த அர்ச். பாப்பானவரைப் பழித்துப்
பகைத்துத் தூற்றினுன். "ஓ பாப்பானவரே!
என் சீவிய காலத்தில் உன்னைத் துன்ப துயரத்
துக் குள்ளாக்கினேன். நான் சாகவே நீயும்
உன் சபையுஞ் சிதறிச் சீரழிந்து இருந்தவிடந்
தெரியாது போவீர்கள்" என வீம்பு பேசினுன்.
லூத்தர் எங்கே போனுன்? அவன் ஸ்தாபித்த
பதித புரோடஸ்டாண்டு சபையும் நிற்கச் சக்தி
யின்றி நிலைகுலைந்து கிடக்கிறது. கத்தோலிக்
குத் திருச்சபையோ வெற்றிக்கொடியைக் கையி
லேந்தின வண்ணம் ஜெய சீலியாய் நிற்கிறது.

இன்னுங் கேள்! இங்கிலாந்து தேசத்தில் எட்
டாவது ஹென்ரி என்னும் மன்னன் வெகு விம
ரிசையுடன் ராஜாதிபத்தியம் பண்ணிவந்தான்.
அவன் கத்தோலிக்கன். வேதப் பற்றுதலுள்
ளவன். பாப்பானவருக்குப் பணிந்து நடந்து
வந்தான். அந்தோ! "கேடுவரும் பின்னே மதி
கெட்டுவரும் முன்னே" என்ருற்போல், காம
வலையிற் சிக்கி, கடவுள் கற்பனைகளைக் காலால்
தள்ளிவிட்டு மனம் போன போக்கெல்லாம்
போக வெண்ணினுன் தான் செங்கோலேந்தும்
அரசன் என அகங்காரங்கொண்டு, தனது துர்
இச்சையின் பிரகாரஞ் செய்வதை அங்கீகரிக்
கும்படி பாப்பானவரைக் கேட்டான். ஆனல்
அவர், அதற் கிசையாது அவனது துர்க்
கருத்தைச் சபித்து அவனைக் கண்டித்தார்.
அரசனே கொண்டான் கோப வெறி, விட்
டான் வேதத்தை, சென்ருன் பசாசின் மார்க்
கம். கத்தோலிக்கு வேதத்தை மறுதலித்தது
மன்றி, அதைத் தகர்த்துத் தவிடுபொடி
யாக்குவேனென சபதங் கூறினுன். புது வேத
மொன்றை யேற்படுத்தி தனது பிரஜைகளெல்
லா மதை யனுசரிக்க வேண்டுமென்று ஆக்ஞா
பித்தான். இதற்கு உத்தமர்கள் எத்துணையு
முடன்படவில்லை. வேதகலாபனை யுண்டானது.
கொடூர ஆக்கினைகள் அநுபவித்தார்கள். கோ
வில்கள் விழுந்தன. குடும்பங்கள் சிதறின.
உயிர்கள் மாண்டன. சத்திய திருச்சபையோ
அற்றுப்போனது போல் தோன்றினது. கடைசி
யாக என்ன சம்பவித்தது? அவன் மாண்ட
பின் அவனைப்பற்றிப் பேசுபவர் எவர்? அவ
னது அக்கிரமச் செயல்களையே எல்லோரும்
பழித்துப் பேசினுர்கள். ஆனல் சத்திய வேத
மோ! சற்றே மறைந்ததுபோ லிருந்தாலும்,
பட்டுப் போகவில்லை. தங்கத்தை நெருப்பில்
புடம் போட்டாற் றூய்மையுற்றுத் துலங்கு
வதுபோல், கஷ்டநஷ்டங்கள், துன்ப துரிதங்
கள் மத்தியில் படாது பட்டு, வருந்தாது வருந்தி
திரும்பவும் சோதிப் பிரகாசத்தோடு தோன்
றினது. இப்போது இங்கிலாந்து தேசத்தைப்
பார்த்தால், கத்தோலிக்கு வேதம் செழிப்புற்
றுய்கிறதென்பது கரதலாமலகம். வித்வ நிபு
ணர்களும், சாஸ்திர சம்பன்னர்களும், கற்றறிந்
த கலைஞர்களும், மாட்சிமை பெற்ற மேன்மக்க
ளும், சுத்த விருதயமுள்ள எத்திறத்தோரும்
சத்திய திருச்சபையில் வந்து சேர்கின்ருர்கள்.
அங்கே வருஷம் ஒன்றுக்கு ஏறக்குறைய 1000
சிதறிப்போன ஆடுகள் நல்லாயனின் மந்தை
யை வந்தடைகிருர்கள். மீண்டு மத்தாட்சிகள்
வேண்டுமோ? ஏராளமாயுள. ஆனல் விரிக்கிற்
பெருகும்! மோசஸ்! நீ இதைக் கேட்டபின், கத்
தோலிக்கு வேதம் சன்னபின்னமாய்ப்பட்டுப்
போகிறதெனப் பகரத் துணிவையோ? சத்ய
கத்தோலிக்குச் சபை இயேசுநாதரால் ஸ்தா



பிக்கப்பட்ட சபை. இயேசுநாதரோ கடவுள்.
ஆதலால் அவர் சித்தமன்றி அது ஒருபோதும்
அழிந்து போகாது. அதற்கு முடிவு உலக இறு
தியே. அது மண்ணில் ஸ்தாபிக்கப்பட்ட கட்டட
மன்று. கல்லின்மேல் ஸ்திரமாய்ச் சிறந்த சிற்பி
யால் கட்டப்பட்ட தேவாலயம். ஆயிரங் காற்
றும்புசலும் மோதி யடித்தபோதிலு மசையா
து. 'நீ கல்லா யிருக்கிருய் இந்தக் கல்லின்மேல்
எனது திருச்சபையைக் கட்டுவேன்! அன்றியும்
நரகத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ள
மாட்டாது' எனத் திருவாய் மலர்ந்தருளினுர் இ
யேசுநாதர். அவர் தமது திருச்சபைக்குத் தமக்
கடுத்த அஸ்திவாரக் கல்லாகவும். தமக்குப்பின்
பிரத்தியட்சத் தலைவராகவும் ஒருவரை நியமிக்
கச் சித்தமானுர். அதற்காகவே சிமோன் என்
பவரைத் தெரிந்தெடுத்தார். அத் தேசத்தி
னுச்சாரபடியே அவருக்கிருந்த பெயரை மாற்
றிக் கல்லென்னும் பொருள் படுகிற இராயப்பா
என்கிற நாமகரணஞ் சூட்டினுர். இதனல்
இயேசுநாதர், தமது திருச்சபையின்மேல் இரா
யப்பருக்குத் தலைமையையும் பரிபூரண வதிகா
ரத்தையு மளித்தனரென விளங்கும். இத்திருச்
சபை உலக முடிவுமட்டும் நிலைத்திருக்க வேண்
டுமென்பது கடவுளது திருவுளம். ஆதலால்,
அவர் அதற்கு அஸ்திவாரமாக இராயப்பருக்
குத் தந்தருளிய தலைமையுஞ் சாதாரண பரி
பூரண வதிகாரமும் உலக முடியும் பரியந்த
மிருக்கவேண்டும். எங்கிருக்கும்? இராயப்பருக்
குப் பதிலாக விருக்கும் பாப்பானவர்களிடத்தி
லல்லோ? இயேசுநாதர் இவர்களுக்கு அவற்றைச்
சுதந்தரமாய்த் தந்தருளினுரெனச் சந்தேகமற
விசுவசிக்கவேண்டியது. மீளவும், திருச்சபை
யானது என்றும் நிலைத்திருக்குமென்னு வாக்கிற்
காதாரமாகவும், அவருடைய சீஷர்கள் படும்
உபத்திரவங்களில் மலைத்துப்போகாத வண்ண
மும் 'நரகத்தின் வாசல்கள் அதை மேற்கொள்
ள மாட்டாது' என்று விளம்பினுர் இயேசுநாதர்.
நரகத்தின் வாசல்கள் என்ருல் பசாசின் வல்ல
மையும், அதின் சோதனைகளும், பசாசின் மக்
களால் விளையுங் கலக வாதை யுபத்திரவங்களு
மே இவைகளெல்லாம், பட்டகாலிலே படுமாப்
போலடுத்தடுத்து வந்தபோதிலும் திருச்சபை
யை யொருபோதும் மேற்கொள்ளமாட்டா.
இது வுண்மையிலு முண்மையே!

கடவுளதை ஸ்தாபித்தார்; கடவுளே யதை
கண்காணித்து வருகிருர், கடவுளே யதைக்
கடைசிமட்டுங் கை கொடுத்துக் காத்து வரு
வார். துன்பத்திலாறுதலும், பயத்தில் மன
தைரியமு மூட்டத்தக்கதாக 'உலக முடியுமட்
டும் நாம் உங்களோ டிருப்போ' மெனும்வார்த்
தைகளை யுரைத்தார் இயேசுநாதர்.

மனிதர்களால் உண்டுபண்ணப்பட்ட போ
லி வேதங்களோ நிலை நிற்கா. புரோட்டஸ்
டாண்டு வேதம் ஓர் தலைவனுமின்றி, நிலைமையு
மின்றி தவறி அலைந்து, எண்ணிறந்த மார்க்கங்
களாய்ப்பிரிந்து திரிகிறதே! என்னபரிதாபம்!
சத்திய திருச்சபையோ என்றுஞ் செழித்தோங்
கும். மலைகளைப்போல் அல்லல் பல அடுத்தடுத்து
வந்தபோதிலுஞ் சரி, ஆழியி னலைகளைப்போல
வேத கலாபனைகள் பொங்கிக் கரை புரண்டோ
டின போதிலுஞ்சரி, அது கடவுளது திருவடிக
ளைக் கடைப்பிடியாகப் பற்றி, அவரது அருள்
பெற்று ஒன்றுக்கு மஞ்சாது, பசாசின் வல்ல
மையைத் தோற்கடித்து கலக்கமற்று என்றும்
நிலைமையாகவும் ஒருமிப்பாகவும் நிலை நிற்கும்.
முன்னவன் முன்னின்ருல் முடியாத காரியமு
முண்டோ?

இப்படி வெகுவாய் வியக்கத்தக்க விதமாய்
சொல்லி முடித்தான் அமிர்தம். ரயில் வண்டி
யும் ஸ்டேஷனில் நின்றது. மோசஸ் இறங்க
வேண்டிய இடம் அதுவே. ஆகச்சே, விடைபெ
ற்றுப் போகும்போது மோசஸ் சொல்வான்:—
அமிர்தம்! உன்னிடம் இவ்வளவு சாமார்த்திய
முண்டென இன்றுதான் கண்டேன். இன்னுங்
கொஞ்சநேரம் உன்னேடிருப்பேனுகில் என்னை
யும் ஓர் ரோமானுக்கி விடுவாய். பார்க்கப்போ
னல் நீ சொல்கிறது உண்மையாக தென்படுகி
றது. அதிக வந்தனம். போய்வருகிறேன்.

அமிர்தம்.—அதெல்லாஞ் சரி. எட்டிச்
சுரைக்காய் கறிக் குதவாது. இனிமேலாகிலும்
இது விஷயங்களைப்பற்றி எங்கள் குருவானவ
ரிடத்திலாவது அல்லது புஸ்தகங்களினின்ருவ
து தீர்க்க ஆராயப் பிரயாசைப்படுவாயாக?

மோசஸ்.—'ஆஹா! நேரமிருந்தால் தவ
ருமற் செய்கிறேன்.

எனச் சொன்னபின் ஸ்டேஷனை விட்டுப்
போனுன். இல்லம் போனபின் அமிர்தம்சொன்
ன அமிர்த மொழிகளைச் சிந்தித்தானே! வேத
விஷயங்களைப் பற்றி யாராயச் சமயம் வாய்த்
ததோ! அவனைப்பற்றி இதுமட்டும் நாமொன்று
மறியோம்.

M. S. M.

# CHRISTIAN DOCTRINE.

## ஞானோபதேசம்.

### 18-ம் பாடம்

**விசுவாச மந்திரத்தின் 9-ம் பிரிவு.**

(முன் தொடர்ச்சி.)

22 **ஒருபுரோட்டஸ்டாண்டான்.**-புரோடெஸ்டாண்டானை ஒரு கனவானுடைய சகோதர னிறந்துபோனபடியால் அவன் மகா துக்கங்கொண்டு, மரணமான தன் சகோதரனுக்கு யாதோ ருதவியுஞ் செய்யக்கூடாமற் போனதே யென்று மனச் சங்கடங் கொண்டு, துக்கத்தை மாற்றும்படி அந்நிய நாடுகளுக்கு யாத்திரைசெய்து வந்தான். புரோடெஸ்டாண்டார் தங்களுடைய மதக்கோட்பாட்டுப் பிரகாரம், செத்தவன் ஒன்றில் மோக்ஷத்துக்காவது அல்லது நரகத்துக்காவது போவானே யன்றி நடுஸ்தலமில்லை யென்று பிதற்றுவார்கள். இந்தக் கனவான் ஒருநாள் ஒரு கத்தோலிக்குக் குருவுடன் சம்பாஷிக்க நேரிட்டபோது சத்தியவேதப் படிப்பினைப்படி ஒரு நடு ஸ்தலமாகிய உத்தரிக்கிற ஸ்தல முண்டென்று ஞாயத்துடன் அவர் ஸ்தாபித்ததைக் கேள்விப்பட்டு சற்று ஆறுதல் கொண்டவனாய், தன் சகோதரர்கள் சிலவிசை உத்தரிக்கிற ஸ்தலத்திலிருந்தால் ஒத்தாசை செய்யக்கூடுமென் றெண்ணி வெகு திரவியத்தை தர்மத்திலும், ஞானகிருத்தியங்களிலுஞ் செலவிட்டு சத்தியவேதத்தில் சேர்ந்து உத்தம கிறிஸ்துவனாயொழுகினான். (Gaume.)

23 **அர்ச் மலக்கியாரு மவர் சகோதரியும்.**—மேற்றிராணியாரான மலக்கியார் மகா அர்ச்சியசிஷ்டவரா யொழுகி, உத்தரிக்கிற ஆத்துமாக்கள் மட்டில் வெகு இரக்கம் வைத்து அவர்களுக்காக மகா உருக்கத்துடன் வேண்டிக்கொண்டு வருவார். இவருடைய சகோதரியானவள் உலக புத்தியுள்ளவளாய் நேர்த்தியான வஸ்திராபரணங்களைச் சம்பாதித்து மேட்டிமையா யுடுத்துவதில் பிரியங்கொண்டு வந்தாள். வியர்த்தப் புத்தியுடைத்தான தன் சகோதரியை அர்ச். மலக்கியார் கண்டித்து வருவார். இவள் மரணமானபின், மலக்கியார் அநேகம் பூசைகளையுஞ் செப தபங்களையுஞ் செய்து அவ்வாத்துமத்துக்கு ஒப்புக்கொடுத்து வந்து பிறகு அவ்வாத்துமத்தை மறந்து போனார். ஒரு மாசத்துக்குப்பின் நித்திரையில், உமது சகோதரி செத்து 30-நாளாகிறது, யாதோருதவியும் பெறுமல் கோவிலுக்கு வெளியே காத்துக்கொண்டு நிற்கிறுள் என்கிற சத்தத்தைக் கேட்டார். அது தொடங்கி அர்ச்சியசிஷ்டவர் தன் சகோதரிநிற்பதை தமது கண்ணுல் கண்டு ஞான முயற்சிகளை அதிகமதிகமாய்ச் செய்து அவ் வாத்துமத்துக்கு ஒப்புக்கொடுத்தார். சில தினத்திற்குப்பின் கோவில் வாசற்படியில் தன்சகோதரி கஸ்தியுடனிற்பதைக் கண்டு முன்னிலு மதிகமான ஞானக்கிருத்தியங்களைச் செய்து அவ்வாத்துமத்துக்கு ஒப்புக்கொடுத்த சில தினத்துக்குப் பின் சந்தோஷானந்தத்துடன் வேறு புண்யவாளருடன் தன் சகோதரி பீடத்துக் கருகாமையில் வந்ததைக் கண்டு, அவ்வாத்துமம்மோக்ஷப்பிரவேச மடைந்ததென்று நிச்சயித்தார். (இவர்சரித்திரம்.)

24 **இறந்து போனனென்று நினைத்து உயிருள்ளவனுக்கு ஒப்புகொடுத்த பூசையுந் தர்மமும்.**—ஏழாம் நூற்றுண்டில் சைபிரஸ் என்னுந் தீவிலிருந்த ஏராளமான பிரசைகளை பெர்சியர் சிறையாக்கி, தங்கள் தேசத்துக்கு கொண்டுபோ யவர்களை சிறையில் அடைத்தார். சிறையாக்கப்பட்டவர்களில் சிலர் தப்பித்துக்கொண்டு தங்கள் சுதேசத்துக்கு ஓடிப்போனுர்கள். ஒருவனுடைய பெற்றோர் தங்கள் குமாரனைப்பற்றி யிவர்களை விசாரித்தபோது, அவன் செத்துப்போனனென்று சொன்னதின்மேல், அவர்கள் சொல்லிமுடியாத துக்கப்பட்டழுததுடன் அப்போதைக்கப்போது தங்கள் குமாரனுடைய ஆத்துமத்துக்காக பூசை செய்வித்து தர்மங் கொடுத்து வேண்டிக்கொண்டுவந்தார்கள். சில வருஷத்துக்குப்பின் தங்கள் குமாரன் தங்கள் வீட்டில் பிரவேசிப்பதைக் கண்டு ஆச்சரிய பிரமிப்புகொண்டு, "மகனே நீ செத்தாயென்று கேள்விப்பட்டு சொல்லிமுடியாத கஸ்திப்பட்டதுடன் உன்னுத்துமத்துக்காகவேண்டிக்கொண்டு தர்மங் கொடுத்து, திவ்விய பூசையுஞ் செய்வித்தோ" மென்றுர்கள். அதற்கு மகன், நான் சாகவில்லை யிதுவரையிலுஞ்சிறையிலடைபட்டு, சிலமாசத்துக்கு முன்தான் விடுதலை யாக்கப்பட்டேன்; நீங்கள் வருஷத்திலெத்தனை பூசை யேந்தெந்த நாளி லெனக்காகச் செய்வித்தீர்களென்று வினவ, கர்த்தர் பிறந்த திருவிழாவிலும்



அவருயிர்த்த திருவிழாவிலும், இஸ்பிரீத்துசாந்துதிருவிழாவிலும் பூசைசெய்வித்தோம் என்றுர்கள். அப்போது மகன்: "அது உண்மையா யிருக்கவேண்டும். ஏனெனில் அந்த நாட்களில் பிரகாசம் பொருந்திய ஒரு உத்தியோகஸ்தன் நானிருந்த சிற்றறையில் பிரவேசித்து, என் விலங்குகளை யவிழ்த்துவிட்டு, என்னிஷ்டப்படி ஊரில் போயுலாவிவரும்படி சொல்வார். சாயந்தரவேளையில் எனக்கே தெரியாமல் நான் திரும்பவும்சிறையி லிருப்பேன். பூசையின் பலத்தினுல் அவ்வாச்சரிய முண்டானதென்றிப்போது கண்டு பிடிக்கிறேன். ஆகையாலென் அன்புக்குரிய பிதாமாதாவே! என்னை சர்வேசுரன் இவ்வுலகினின்று அழைத்துக்கொள்ளும் போது பூசை தர்மஞ் செப முதலிய ஞான முயற்சிகளா லெனக்குதவி புரிய மறவாதேயுங்க" ளென்றுன். (Howe.)

25. **சிறு நாய் கல்லறையில் புதைக்கப்பட்டது.**—ஒரு குடியானவன் நாய்க்குட்டியொன்றைவளர்த்துவந்தான். அது அவன் வீட்டைக்காபந்து செய்வதில் பிரமாணிக்கமா யிருந்தபடியால், அதன் மட்டிலிவன் பற்றுதல் வைத்திருந்தான். இந்த நாய் செத்துப்போனபோது அதை நாய் நரிக்கு இரையாய் வெளியே எறிந்து போடாமல், தன் தோட்டத்தில் ஒரு சிறுகுழிவெட்டி யதி லதைப்புதைத்துக் கொண்டிருந்தான். அப்போது அவ்வழியாய் நடந்துபோன ஒரு புரோடெஸ்டாண்டுப்பாதிரியார் பரிகாசமாய்ச் சிரித்துக்கொண்டு, "என்ன மர்த்தீன் ஏதாகிலுஞ் செபஞ் செய்து உன் நாயைப் புதைக்கிறுயோ? என்றுர். அதற்கு மர்த்தீன் "இல்லை ஐயா, ஒரு ஜெபமுஞ் சொல்லவில்லை" யென்றுன். அதற்கு பாதிரியார் "ஏன்? நீங்கள் செத்தவர்களுக்குப்பாடுவதுபோல, Libera, De profundis என்கிற பாடல்களைப் பாடக்கூடாதா" வென்றுபரிகாசமாய்க்கேட்க, கூடாதென்றுன். ஏன் பாடக்கூடாதென்று திரும்பவும் பாதிரியார் வினுவ, குடியானவன், "என் நாய்புரோடெஸ்டாண்டு நாய் ஐயா! செத்தவர்களுக்காகச் செய்யப்படுஞ் செபஞ் சபலமாகிறதென்று புரோடெஸ்டாண்டார் சாதிப்பதினுல், என் நாயையும் புரோடெஸ்டாண்டாரைப் போல் புதைத்தேன்" என்றுன். இதைக்கேட்ட பாதிரியார் வெட்கி வாய் திறவாமல் நடந்து போய்விட்டார். (Cath. Anect.)

26.—**வெறுங் கண்ணீரா லாத்துமத்துக்குப் பயனில்லை.**—ஒருதாய், இறந்துபோன தன் மகனைப்பற்றி யிரவும் பகலும் அழுதமணியமா யிருப்பாள். ஒரு நாளிராத்திரி யவள் கண்ட சொப்பனத்தில் அநேக வாலர் சந்தோஷ உல்லாசத்துடன் ஒரு சிறந்த பட்டணத்துக்குத் தமாஷாய் நடந்து செல்வதைக்கண்டு, அந்தக் கூட்டத்தில் தன் மகனைக் காணுதபடியால் துக்கித் தழுதாள். சற்றுநேரத்துக்குப்பின் அவள் மகன் கிழிந்து அழுக்காய் நனைந்த கந்தையைப் போர்த்திக்கொண்டு அழுகைமுகத்துட னிற்பதைக்கண்ட தாய், அவன் கஸ்தியின் காரணத்தைப்பற்றிக் கேட்க! அவனிவ்வாறு சொல்வான்: என் நிர்ப்பாக்கிய தாயே! நானிவ்வாறு கஷ்டப்படுவதற்குக் காரணம் நீயே. என்னுத்துமத்துக்காக செபஞ் செய்யாமலுந் தர்மங் கொடாமலும் விசேஷமாக திவ்வியபூசை செய்வித்து ஒப்புக்கொடாமலும், நீ சிந்தும் வெறுங் கண்ணீரால் என் கந்தைத்துணியை நனையச் செய்து எனக்கு அதிக வாதை வருவித்தாயே ஒழிய மற்றபடி யல்லவென்று சொல்லி மறைந்தான். அப்போதவளுக்குப் புத்திவந்து முன்போல நடவாமல் ஞானக்கிருத்தியங்களைச்செய்து தன் மகனுடைய ஆத்துமத்துக்கு உதவி புரிந்தாள். (Baxter.)

(இன்னும் வரும்.)

# CHRISTMAS STORY.

## சுவாமி பிறந்த திருநாள் கதை.

அல்லது,

### ரோமான் கோவிலுக்குப் போகாதே.

(முன்தொடர்ச்சி.)

இரண்டுவாரங்களுக்குப்பின் பவுல்போதகர் ஈசாக் உபதேசியார் வீட்டுக்குப்போய் பல விஷயங்களைப் பற்றிப் பேசினபின் அவ்விருவருக்கும் பின்வருமாறு சம்பாஷணை நடந்தது:

பவுல் போ.—நமதூரில் வைசூரி கண்டு சிலர் இறந்துபோன சங்கதி யுமக்குத் தெரியுமா சார்?

ஈசாக் உப.—ஆம் இந்த வீதியிலும் இரண்டொருத்தருக்குக் கண்டிருக்கிறது. ஆனுல் யாதோர் பிராணுபத்து இதுவரையிலும் நேரிடவில்லை. இந்த வியாதி நீங்கும்படி கோவிலிற் பொது செபமுந் துவக்கியிருக்கிறது.

பவுல் போ.—கொள்ளை நோய் நமதூரில் பலதட்வை தலை காட்டியிருந்தும், இந்த வருஷத்தைப்போல் கொடூரம் எப்பொழுது மிருந்ததில்லை யென்று, சொல்லுகிறார்கள் வயது முதிர்ந்தோர். எங்கள் பக்கத்துவீட்டில் ஒருவன் இறந்து போனான். நேற்று சாயங்காலம் அவனை யடக்கஞ் செய்தார்கள். வீட்டார் தவிர ஒரு பிராணியும் பிரேதத்துடன் கல்லறைக்குப் போகவில்லை.

ஈசாக் உப.— உமக்கு ஏற்கெனவே இந்த வியாதி கண்டிருக்கிறதினால் நீர் இனிமேல் இதற்கு பயப்படத் தேவையில்லை.

பவுல் போ.—ரூத்துக்கும் அம்மை குத்தியிருக்கிறது. ஆனால் குழந்தை அபிராமியைப் பற்றித்தான் பயப்படுகிறேன்.

ஈசாக் உப.—என் குழந்தைக்கு வைசூரிப் பால் குத்திவிட வில்லை?

பவுல் போ.— அது ரூத்துடைய பிசகு. பால் குத்துகிறவர்கள் மூன்று விசை வீட்டுக்கு வந்தபோதிலும், குழந்தைக்கு ஜுவர முண்டாகுமென்கிற பயத்தால், குழந்தையை ஒளித்து வைத்துக் கொண்டு பிள்ளை ஸ்கூலுக்குப் போனதாகச் சொல்லிவிட்டாள்.

ஈசாக் உப.—இதுவரையிலுங் குழந்தைக்கு ஒன்றுமில்லையே?

பவுல் போ.—ஒன்றுமில்லை. ஆனால் இன்று காலை உடம்பு சிலுசிலுப்பா யிருக்கிறதென்று சொன்னதின்மேல் பாலின்றி சுடச்சுட வெறுங் காப்பி கொடுக்கச் சொன்னேன்.

இதற்குள்ளாக விஸ்வாச நாயகர் வீட்டில் பிரவேசித்து இருவருக்குங் காலை வந்தனம் புரிந்து உட்கார்ந்தார்.

பவுல் போ.—(விஸ்வாச நாயகரைப் பார்த்து) என்ன சார்? 'உங்கள் வேதமாத்திரம் உண்மையானதென்றும் அதைச் சேராதவர்களுக்கு இரக்ஷண்ய மில்லையென்றும் சொன்னீரல்லவா அன்றைக்கு?

விஸ்வாச நா.—ஆம். அன்றுஞ் சொன்னேன், இன்றுஞ் சொல்லுகிறேன். நமது இரக்ஷகராகிய சேசுக்கிறிஸ்து நாதருடைய வாக்கியத்தின் பலத்தால் திருச்சபை அவ்வாறு படிப்பிக்கிறது வாஸ்துவமே.

பவுல் போ.—ரோமானருக்கு மாத்திரம் இரக்ஷண்ய முண்டு; மற்ற கிறிஸ்து மதத்தாருக்கு இரக்ஷண்யமில்லை யென்றாரா ஏசுக்கிறிஸ்து?

விஸ்வாச நா.—"திருச்சபையின் வார்த்தையைக் கேளாதவன் அக்கியானியைப் போல உனக்கு ஆகக் கடவான்" என்று நமது இரக்ஷகர் திருவாய் மலர்ந்தருளி யிருப்பதால் திருச்சபை இத் தீர்மானத்தைச் செய்திருக்கிறது.

பவுல் போ.—யோவான், 15-ம் அதிகாரத்தில் "நான் முந்திரிகைச்செடி; நீங்கள் கொடியாயிருக்கிறீர்கள்" என்ற உபமானத்தை வாசித்திருக்கிறீரா சார்?

விஸ்வாச நா.—(புஸ்தகத்தை யெடுத்துப் பார்த்து) ஆம், வாசித்திருக்கிறேன்.

பவுல் போ.—ஆகையால் ஏசு, தாம் மரமென்றும் தம்மை விஸ்வசிக்கிறவர்கள் கிளைகளென்றுஞ் சொல்லுகிறார். நீரும் நானு மவரை விஸ்வசிக்கிறதைப் பற்றி நாமிருவரும் மரமாகிய அவரிடத்தி லுற்பத்தியான கிளைகளா யிருக்கிறோ மென்பதற்கு ஆக்ஷேபனை யென்ன?

விஸ்வாச நா.—பெருத்த ஆக்ஷேபனைகள் உண்டு.

பவுல் போ.—(சிரித்துக் கொண்டு) நீர் லாஜிக் (**Logic**, தர்க்கசாஸ்திரம்) படித்திருக்கிறீரா?

விஸ்வாச நா.—இல்லை ஐயா! நானவ்வளவு உயர்ந்த சாஸ்திரங்களைப் படித்ததில்லை.

பவுல் போ.—இன்னொருவிசை சொல்லுகிறேன் நன்றாய்க் கேளும். ஏசுவை நாமிருவரும் விஸ்வசிப்பதால், நீரும் நானும் செடியாகிய அவரிடத்தினின்று கொடிகளாய் கிளைத்திருக்கிறோம். ஆகையால். அவர் குறித்துப் பேசும் கனியாகிய புண்யங்களை விளைவிப்போம். அதாவது நாமிருவரும் தவறாமல் இரக்ஷண்யம் அடைவோம். கண்டு பிடித்தீரா?

விஸ்வாச நா.—உமது நியாய பிரமாணத்தை யிரட்டித்துச் சொல்வது அனாவசியம். உமது தார்ப்பரியத்தைத் தெரிந்துகொண்டேன். நீரெங்கள் தோட்டத்திலுள்ள மரங்களைப் பார்த்திருக்கிறீரா?

பவுல் போ.—நான் அதில் ஒருபோதுங் கால் வைத்ததில்லை. அதில் என்ன விசேஷம்?

விஸ்வாச நா.— அந்தத் தோட்டத்தில் பெரியதோர் மாமரமுண்டு. அது வெகுகாலத்து மரம். மேற்கிளையில் பொந்து விழுந்து அதிலிருந்து ஒரு வேப்பங் கன்று முளைத்திருக்கிறது. அதில் வேம்பு எப்படி முளைத்தது தெரியுமா?



பவுல் போ.—அது காக்கை குருவிகளிட்ட எச்சத்தால் முளைத்ததென்று குருட்டுக் கிழவி கூட சொல்வாள். இது ஒரு அதிசயமா?

விஸ்வாச நா.—நன்றாய்ச் சொன்னீர்! அதை அறுத்துவிடும்படி தோட்டக்காரனுக்கு நான் சொன்னபொழுது, அதை அறுக்காதபடி ஸ்வாமியார் கற்பித்ததுடன், சத்திய திருச்சபைக்கும் பதித மதங்களுக்குமுள்ள வித்தியாசம் இதில் தெளிவாய்க் காணப்படுகிறதென்றார்.

பவுல் போ.—என்ன சார்! இது விடுகதையா? தயவுசெய்து விளங்கச் சொல்லும்.

விஸ்வாச நா.—இது விடுகதையல்ல. அந்த வேப்பமரம் மாமரத்தில் முளைத்திருந்தபோதிலும் மா வித்தினின்று உற்பத்தியானதல்ல.

பவுல் போ.—அதற்குச்சந்தேகமா! வேம்புக்கும் மாவுக்குஞ் சம்பந்தமேது!

விஸ்வாச நா.—மாமரத்தின் சாரம் வேம்புக்கு ஏறாது. மாமரத்தின் வாசனை ருசி முதலிய குணங்கள் வேம்புக்கு இரா. வேப்பங்காய்க்குந் திவ்விய மாங்கனிக்கும் எவ்வளவோ வித்தியாசம்!

பவுல் போ.—அது யாருக்குத்தான் தெரியாது சார்?

விஸ்வாச நா.—அவ்வாறே கணக்கிலடங்காத புறமதங்கள் கிறிஸ்துநாதரின் பெயரைக் கொண்டிருந்தபோதிலும், அவைகளிடத்தில் அடிமரமாகிய கிறிஸ்துநாதரின் சத்தியபோதனையின் சார மிருக்கிறதில்லை. மாமரத்துக்கும் வேம்புக்கும் யாதொரு சம்பந்த மில்லையென்று சொன்னதுபோல கிறிஸ்துநாதருக்கும் புறமதங்களுக்கும் ஐக்கியங் காணப்படாது. மாங்கனிக்குப் பதிலாய் வேப்பங் கனியைக் கொடுப்பார்கள்.

பவுல் போ.—(கோபமுகத்துடன்) என்ன சார்? குருவி. காக்கை முதலிய பக்ஷிகளின் எச்சத்தால் எங்கள் வேதம் உற்பத்தியானதென்கிறீரோ?

விஸ்வாச நா.—கோபங் கொள்ளவேண்டாம் ஐயா! பட்சிகளின் எச்சத்தினின்று உங்கள் மதம் புறப்பட்டதென்று சொன்னேனில்லை. மாமரத்துக்கும் வேப்பமரத்திற்கு முள்ள வித்தியாசத்தை யெடுத்துக் காட்டினேனே யன்றி உமது மதத்தை யிகழவில்லை.

பவுல் போ.—அப்படியானால், உங்கள் மத மாத்திரங் கிறிஸ்துவினா லுண்டாகி மற்ற புரோட்டஸ்டாண்டு மதங்கள் அவரா லுண்டாகவில்லை யென்கிறீரோ?

விஸ்வாச நா.—அதற்கு அற்ப சந்தேகமுமில்லை.

பவுல் போ.—இதை நீர் ஒப்பிக்கும் மட்டும் உம்மை சும்மா விடமாட்டேன்.

விஸ்வாச நா.—அப்படியே ஆகட்டும் ஐயா. நமது இரக்ஷகர் ஒரே ஒரு வேதத்தை யுண்டாக்கினாரே யொழிய பல வேதங்களை யுண்டாக்கவில்லை.

பவுல் போ.—அதை யொருவரும் மறுக்க மாட்டார்.

விஸ்வாச நா.—அவ ருண்டாக்கின வேதத்தையும் சத்திய படிப்பினையையும் அப்போஸ்தலர் அனுசரித்து படிப்பித்து வந்தார்கள்.

பவுல் போ.—சரி; இதையும் மறுப்பார் ஒருவரு மில்லை.

விஸ்வாச நா.—அப்போஸ்தலர் படிப்பித்து வந்த போதகங்கள் எந்த வேதத்தில் போதித்து அனுசரிக்கப்பட்டு வருகின்றனவோ, அதே மெய்ஞ்ஞான வேதமும் கிறிஸ்துநாதரா லுண்டாக்கப்பட்ட வேதமுமா யிருக்கவேண்டும்.

பவுல் போ.—ஆ, ஆ! அதையும் ஒத்துக் கொள்ளுகிறேன்.

விஸ்வாச நா.—அப்போஸ்தலருடைய படிப்பினைக்கு விரோதம் எந்த மதம் படிப்பிக்கிறதோ அது சத்தியவேத மல்லவென்றும், நான் உதாரணமாக எடுத்துக் காட்டின மாமரத்தின் பொந்தில் முளைத்த வேம்புக்கு ஒப்பா யிருக்கு மல்லவா?

பவுல் போ.—எப்படி? காட்டும் பார்க்கலாம்.

விஸ்வாச நா.—1. சேசுநாதர் அர்ச். இராயப்பரை திருச் சபைக்குத் தலைவராக ஸ்தாபித்தார். (மத். 19: 18. லூக். 12: 32.) கத்தோலிக்கு வேதம் இதைப் போதித்து வருகிறது. மற்ற சகல மதங்களும் இதை மறுக்கின்றன.

2. நான் முன் னுமக்கு விவரித்ததுபோல சேசுநாதர் உபவாசமா யிருந்து, உபவாசம் பிடிக்கும் ஒழுங்கைப் படிப்பித்தார். கத்தோலிக்கு வேதம் அதை யனுசரித்துவர மற்ற மதங்கள் யனுசரிக்கிறதில்லை.

3. ஸ்திரீகள் கோவில்களில் போதிப்பது

சரியல்ல (கொரி: 14: 34.) வென்று அர்ச். சின்னப்பருடைய படிப்பினைப் பிரகாரம் கத்தோலிக்கு வேதம் நடத்திவருகிறது. மற்ற கிறிஸ்து மதத்தார் இதற்குக் காது கொடாமல் ஸ்திரீகளைக் கோவிலில் பிரசங்கிக்க உத்தரவு அளித்து வருகின்றார்கள்.

4. அர்ச். இராயப்பரும் அருளப்பரும் சமரியாவுக்குப் போகும்போது புதுக் கிறிஸ்துவர்களுக்கு உறுதி பூசுதல் கொடுத்தார்கள். (அப்போஸ்தலர் நடவடி. 7: 7.) கத்தோலிக்கு வேதம் அவ்வாறே அனுசரித்து வருகிறது. புரோட்டஸ்டாண்டு மதங்களில் சில இதையனுசரிக்க, பல அது அனுவசியமென்று தள்ளிப்போட்டன.

5. திவ்வியநற்கருணையில் தமது சரீரமும் இரத்தமு மிருக்கிறதென்று சேசுநாதர் பிரமாணத்துடன் படிப்பித்தார். கத்தோலிக்கு வேதம் அந்த சத்தியத்தை நம்பி படிப்பித்து வருகிறது. புரோட்டஸ்டாண்டு வேதங்களோ அது வெறும் அப்பமென்று சாதித்து வருகின்றன.

6. பாவம் பொறுக்கும்படி நம தாண்டவர் அப்போஸ்தலருக்கு அதிகாரங் கொடுத்தார். கத்தோலிக்கு வேதம் இதைப் போதித்து அனுசரித்து வருகிறது. மற்ற வேதங்களோ இதை முழுதும் மறுக்கின்றன.

7. வியாதிக்காரனை குருக்கள் தைலத்தால் பூசி அவர்களுக்காகச் செபிக்க வேண்டுமென்று அர்ச். யாகப்பருடைய படிப்பினைப்படி கத்தோலிக்கு வேதம் போதிக்கிறது. மற்ற வேதங்கள் அதைப் படிப்பிக்கிறதில்லை.

8. கலியாணக்காரர் ஒருவர் ஒருவரை விட்டுப் பிரியக்கூடாது. அப்படிப் பிரிந்து மறுகல்யாணஞ் செய்துகொள்வோர் விபசாரிகளென்று நமதாண்டவர் போதித்தார். கத்தோலிக்கு வேதம் இந்தப் படிப்பினையை நுணுநுணுக்கமாய்ப் போதித்து வருகிறது. புரோட்டஸ்டாண்டு மதங்களோ, அற்ப சொற்ப தப்பிதத்தைப் பற்றிக் கலியாண பந்தனமுள்ள ஸ்திரீ பூமான்கள் ஒருவர் ஒருவரை விட்டுப் பிரிந்து மறுகல்யாணஞ் செய்துகொள்ள பூரண உத்தரவு கொடுக்கின்றன.

9. நமதாண்டவர் விரத்தராயிருந்து அதைப் புகழ்ந்து அவ் வந்தஸ்துக்கு அழைக்கப்பட்டவர்கள் விரத்தத்துவத்தையனுசரிக்க புத்திசொல்லுகிறார். கத்தோலிக்கு வேதம் இப் படிப்பினையை யனுசரித்து வருகிறது. மற்ற மதங்களோ, விரத்தத்துவம் உதவாதென்று படிப்பிக்கின்றன. இதைப்போலொத்த இன்னும் அநேக போதனைகளை புற மதங்கள் தள்ளிவிட்டதாகக் காட்டுவேன்.

ஆகையால் மரமாகிற சேசுக் கிறிஸ்துநாதருடைய போதனையையுங் கற்பனையையும் மறுத்துவரும் மதங்கள் நம தாண்டவர் குறித்துப் பேசும் கிளைகளா யிருக்கக்கூடுமா? நீரே சொல்லும். நீ ரெடுத்துக் காட்டின அதிகாரத்தில் "ஒருவன் என்னிடத்தில் சேர்ந்திராவிட்டால், கொடியைப்போல வெளியே எறியப்பட்டு உலர்ந்துபோவான். பிறகு அக்கினியில் போடப்படுவான்" என்றார் நமது கர்த்தர். ஆகையால் புரோட்டஸ்டாண்டு மதங்கள் மரமாகிய சேசுக்கிறிஸ்து நாதரிடத்தினின்று புறப்படாமல், ஆசாபாசக்காரராலும், தாறுமாறானவர்களாலும் போடப்பட்ட வேம்புக்கு ஒப்பான மதங்களிலிருந்து புறப்பட்டவைகளா யிருக்கின்றன.

பவுல் போ.—நல்லது; இதைப்பற்றி யோசித்துப் பார்ப்பேன் சார்.

என்றபோது தன் வேலைக்காரன் கொண்டுவந்த சீட்டை வாசித்துப் பார்த்து, "ரூத் உடனே வரச்சொல்லுகிறாள்" என்று எழுந்து வந்தனங்களுடன் துரிதமாய் வெளியே புறப்பட்டார்.

(இன்னும் வரும்.)

## HELP OF CHRISTIANS.

### "கிறிஸ்துவர்களுடைய சகாயம்"

அர்ச். கன்னிமரியாயி, கிறிஸ்துவர்களுக்கு எப்போதும் சகாயியா யிருந்துவருகிறாள் என்பதற்குக் கணக்கில்லாத உதாரணங்கள் உண்டானாலும், "கிறிஸ்துவர்களுடைய சகாயமே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்" என்னும் வாக்கியம் அர்ச். தேவமாதாவின் பிரார்த்தனையில் சேர்க்கப்பட்டதற்கு ஓர் விசேஷ சம்பவம் காரணமாயிருந்தது. அஃதாவது, சமீபத்தில் நடந்த துருக்கி யித்தாலி யுத்தத்தைப்போல், பதினாறும் நூற்றாண்டில், துருக்கிக்கும் இத்தாலிக்கும் மிக மும்முரமான ஓர் யுத்தம் ஆரம்பித்தது. துருக்கியர் அநேக நூற்றாண்டுகளாக ஆண்டுவரும் துருக்கி நாடுகளுக்கு மத்தியில் இத்தாலியருக்கு சொந்தமான சில நகரங்களும் தீவுகளு மிருந்தன.



இவைகளையும் தாங்கள் கைப்பற்றிக் கொண்டு ஏக சக்ராதிபதிகளாய் ஆண்டுவரவேணுமென்ற பேராசையால் தூண்டப்பட்ட துருக்கியர், சைப்பிரஸ் என்னுந் தீவை தங்களுக்குத் தரவேண்டு மென்று இத்தாலியரைக் கேட்க, இவர்கள் கொடோ மென்றார்கள். இதுவே ஷை சண்டைக்குக் காரணம். உடனே துருக்கியர் எண்பதினாயிரம் காலாட் படையையும், மூவாயிரங் குதிரைப் பட்டாளங்களையும், பயங்கரத்துக்குரிய அநேக் பீரங்கிப் பட்டாளங்களையும் சேர்த்துக்கொண்டு சைப்பிரஸ் என்னுந் தீவை முற்றிக்கையிட்டு, அதன் பலமான கோட்டைகளில் இரண்டையுங் கைப்பற்றிக்கொண்டார்கள். இத்தாலியருக்கு துருக்கியரைப்போல் அவ்வளவு சைன்னியங்களில்லை. அண்டை அயல் துணையில்லை, திக்குமில்லை. "திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை" என்பதற் கொப்ப தேவ உதவியைத் தேடினார்கள். அக்காலத்தில் திருச்சபையை ஆண்டிருந்த ஐந்தாம்பத்திநாதராகிய பாப்பானவரிடம் ஓடினார்கள். அவர், இந்த ஆபத்து சமயத்தில் தேவமாதாவே தமது திருக் குமாரனிடத்தில் மனுப்பேசி நமக்கு ஜெயம் பெறுவிப்பாள் என்று, அவளுக்கு விசேஷ ஜெபங்கள் செய்யும்படி எல்லோருக்குங் கற்பித்து, தாமும் மெத்த உருக்கமாய் செபிக்க ஆரம்பித்தார். இக் கருத்துக்காக கிறிஸ்துவ நாடெங்கும் நூற்றைம்பத்து மூன்று மணிச் செபத்தை இடைவிடாது செபிக்கும்படி கட்டளையிட்டார்.

கத்தோலிக்கு அரசர்களாகிய ஸ்பெயின் அரசருக்கும் போர்த்துகல் அரசருக்கும் நிருப மெழுதி, இத்தாலிய கிறிஸ்துவர்களுக்கு ஒத்தாசை யனுப்பும்படிக் கேட்டார். இந்த இரண்டு அரசர்களும் ஏராளமான சேனைகளைத் திரட்டி யனுப்பி வைத்தார்கள். இந்த சேனைகளும் இத்தாலிய சேனைகளுஞ் சேர்ந்து கிரீக்கு நாட்டின் நகரமாகிய "லெப்பான்டோ" என்னு மிடத்தில் துருக்கிய சேனைகளை எதிர்த்து யுத்தந் தொடுத்தார்கள். மிக உக்கிரமான சண்டை நடந்தது. இரு பக்கத்திலும் ஆயிர மாயிரமாய் சேனைகள் மடிந்தன. போர்க் கப்பல்கள் உடைந்து தகர்ந்து சமுத்திரத்தி லமிழ்ந்திப்போயின. இப்படி மும்முரமாய் சண்டை நடக்குஞ் சமயத்தில் கிறிஸ்துவர்கள் பக்கத்துத் தளக்கர்த்தன் தக்க தருணம் பார்த்து, துருக்கிய கப்பற் படை நடுவே, இரண்டு சிறு போர்க் கப்பல்களை யனுப்பி, அவை தங்களது அல்லது எதிரிகளது என்று தெரியவொட்டாமல் துருக்கியருக்குள் கலக்கமும் குழப்பமும் உண்டாக்கிப் போட்டான். "வெற்றி வெற்றி" எனுங் கூக்குரல் கிறிஸ்துவ சேனைகளுக்குள் உண்டாயிற்று. இதனால் இவர்கள் உற்சாகமுந் தைரியமுங்கொண்டவர்களாய் எதிரிகள்மேல் அடுத்தடுத்து விழுந்து உக்கிரமாய்த் தாக்கவே, அவர்கள் சேனை வெகுவாய்ச் சேதப்பட்டு சின்னபின்னமாய்ச் சிதைந்து சிதறியோடத் துவக்கிற்று. இத்தாலியர் அவர்களைத் துரத்தியடித்து அநேக போர்க் கப்பல்களைத் தகர்த்து அதம் பண்ணினார்கள். கடலெங்கும் உடைந்துபோன துருக்கியப் போர்க் கப்பல்கள் அமிழ்ந்தியு மிதந்துங் காணப்பட்டன. இவ்வித வெற்றியைப்பற்றிக் கேள்விப்பட்ட கிறிஸ்துவர்களெல்லாரும் சந்தோஷித்து ஆர்ப்பரித்தார்கள். இந்த வெற்றியடைந்தது அக்டோபர்மீ 7-ம் தேதி. இந்நாளை வெனிஸ் இராஜாங்கத்தார் ஓர் பெருந் திருநாளாக இதுவரையில் கொண்டாடி வருகிறார்கள்.

ஷை வெற்றியடைகிற நேரத்தில் இதற்காக கிறிஸ்துவ நாடெங்கும் பரிசுத்த செபமாலை செபிக்கச் சொன்ன அர்ச். பாப்பானவர் தாமே அர்ச். தேவமாதாவைப்பார்த்து, கிறிஸ்துவர்களுக்கு ஜெயம் பெறுவிக்கவேணுமென்று மகா பக்தி யுருக்கத்துடன் தமது அறையில் செபமாலை செபித்துக்கொண் டிருந்தார். அச் சமயத்தில் பரிசுத்த கன்னிமரியாயி, அவருக்குத் தரிசனையாகி, துருக்கியர்மேல் கிறிஸ்துவர்கள் கொண்ட வெற்றியை அறிவித்தாள். இந்த சந்தோஷ செய்தியை பாப்பானவர் உடனே படைமுகத்திலிருந்து சங்கதி எட்டா முன்னமேயே உரோமாபுரி யெங்கும் பிரசித்தப்படுத்தினார். பிறகு போர்க்களத்திலிருந்து சமாச்சாரம் வந்தது. இதைக் கண்டவர்களெல்லோரும் ஆச்சரியமுற்று, அர்ச். கன்னி மரியாயியைப் போற்றிப் புகழ்ந்து தோத்திரித்து நமஸ்கரித்தார்கள். இவ்வாறு தேவ மாதாவின் சனுகூல் சித்தி பெற்ற வெற்றியை எந்நாளும் கிறிஸ்துவர்களுக்கு ஞாபகப்படுத்தவும், அதனால்

அவர்கள் ஆபத்துவேளைகளில் அந்த ஆண்டவளின் அடைக்கலத்தை அண்டி அநுகூலம் அடைய ஏதுவா யிருக்குமென்றுங் கருதி, அர்ச். தேவமாதாவின் பிரார்த்தனையில், "கிறிஸ்துவர்களின் சகாயமே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்" என்ற வாக்கியத்தை சேர்த்தருளினர். இதுவுமன்றி அக்டோபர்மீ த்தில் வரும் முதல் ஞாயிற்றுக்கிழமையில் அர்ச். ஜெபமாலை மாதாவின் திருநாளை உலகமெங்குங் கொண்டாடக் கற்பித் தருளினர். தக்க பக்தி விசுவாசத்துடன் ஜெபமாலை மூலமாய்க் கேட்ட வரத்தை தேவமாதா ஒருநாளும் மறுக்கமாட்டாள். ஜெபமாலைப் பக்தி ஜெயந்தரு முக்தி.

---

## CORRESPONDENCE.

## கடிதங்கள்.

---

**[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்தரவாதி யல்லர். கடித மெழுதுவோர் தங்கள் கடிதங்களை மிகத் திருத்தமாயும், காகிதத்தின் ஒரே பக்கத்தில் இடது பாரிசத்தில் நாலு விரற்கடை இடம் விட்டும் எழுதுவதுடன், தங்கள் பெயர் விலாசங்களையும் தெளிவாய் எழுதல் வேண்டும். பெயர், விலாசம் வெளிப்படுத்துவதற் கல்ல, கடிதத்தின் உண்மைச் சங்கதிகளைப் பத்திராதிபர் உறுதிப்படுத்திக் கொள்வதற்கே. வெளிப்படுத்துவதற்கு தகுதியற்றன வென்று தள்ளிவிடப்பட்ட கடிதங்கள் திரும்பவும் வாப்ஸ் செய்யப்பட மாட்டா. ப—ர்]**

### "தென்னிந்தியரின் பத்திரிகாபிமானம்"

இலங்கையில் வாழும் சிங்களவருக் கிருக்கும் பத்திரிகாபிமானம் நம்மவர்க் கில்லாதது மிகவும் கஸ்திக்குரியதே. இலங்கையில் தினசரி சிங்களப்பத்திரிகைகள் மலிந்து கிடக்கின்றன. வாராந்தர மாதாந்தர பத்திரிகைகளோ எண்ணற்ற பிரகடனம் பெறுகின்றன. இவை யெல்லாம் பௌத்த மதாபிமானப் பத்திரிகைகளேயாகு மென்றால், பௌத்த மதத்தினரான சிங்களவருக்கு பத்திரிகை மட்டிலிருக்கும் மதிப்பு இதனால் நன்கு புலப்படுகிறதன்றோ? பத்திரிகைகளின் சந்தாவோ மிகவு மதிகம். நமது ஆயன் அளவுள்ள ஒரு மாதாந்தரப் பத்திரிகைக்கு ரூபா 3 க்கு குறையாத சந்தா கொடுக்கப்படுகிறது. சந்தாவைப்பற்றிய கூக்குரல் ஒன்றையும் அவற்றிற் காணோம். இதை நாமே பார்த்து வருகிறோம். நமது தமிழ் பத்திரிகைகளின் எக்கோணத்திலும் சந்தாவைப்பற்றிய கூக்குரல் நிறைந்துள்ளது. நம் பரதகண்டத்திலோ சொற்ப தமிழ் பத்திரிகைகளே பிரசுரம் பெறுகின்றன. இதிலும் கத்தோலிக்குப் பத்திரிகைகள் அத்திபூத்தது போன்று ஆங்காங்கு ஒவ்வொன்று பூத்து மணம் வீசுகின்றன. அவையும் நன்று பராமரிக்கப்படுவதாய்ச் சொல்வதற்கிடமில்லை. சந்தாதாரரிற் பலர் யாசகரா யிருக்கிறார்கள்.

இங்ஙனமிருக்க பத்திரிகை விருத்தியாவதெங்ஙனம்? நமது நல்லாயன் சந்தாதாரரிலும் அநேகர் யாசக வாசகராகவே யிருக்கின்றனர். அங்ஙனமின்றேல் அது இம்மட்டில் கணுபிவிர்த்தியை யடைந்திருக்குமென்பதிற் றடையென்னை? கத்தோலிக்குப் பக்தர் வாசித்தற்கரிய வுத்தம பத்திரிகை யிவ்வொன்றே வுலாவுகிறதெனினும், இதின் தற்காலநிலைமையும் திருப்திகரமற்றதாயிருக்கிறது. நாம் பத்திரிகாபிமானம் பூண்டு நிதம் மதாபிமானப் பத்திரிகை பார்ப்பதெக்காலம்? அந்தோ! பரிதாபம்!! பத்திரிகை பார்ப்பதினாற் பயக்கும் பயனென்னை? என்கிறார் ஒரு சாரார். தொழிலற்றோருக்கே பத்திரிகை வேண்டுமென்கிறார் மற்றொரு சாரார். கத்தோலிக்கு பத்திரிகைகளில் சமாசாரங்கள் விரிவாயில்லை. முற்றும் வேதத்தைப் பற்றியேதான் எழுதுகிறார்கள். வாசிக்க முதலாய் அருவருப்பாயிருக்கிறது என்கிறார் பிறிதொரு சாரார்.

நமது பரிசுத்த பிதா கத்தோலிக்கு பத்திராதிபர்களின் எழுதுகோலை ஆசீர்வதித்தது இக்காரணங்களைப் பற்றியோ வென்ன? பத்திரிகை ஒரு தேசத்தை நாகரீகப்படுத்தும் உத்தமோபாத்தியாசி. புத்தியை விசாலப்படுத்துங் கருவி. மதாபிமானமூட்டுங் குரு. ஒரு கத்தோலிக்கு பத்திரிகை ஓர் உத்தம ஆத்மீக மேய்ப்பனையொத்திருக்கிறது. மாதாந்தரம் பத்திரிகையின் தலையங்கம் மேலான ஆத்மீக பிரசங்க மடங்கி வெளியாகிறது. (இன்னும் வரும்.)

Brook Side,
Dec. 5th, 1912. } தாழைமீனவன்.

### அர்ச். தோமையார்.

கனந்தங்கிய "நல்லாயன்" பத்திராதிபர் அவர்களே!

சென்ற சஞ்சிகையில் "முதல் அப்போஸ்தலர்களின் முடிவு" எனும் மகுடத்தை யுடைய



வியாச மொன்று தோன்றினது. அதில் அப்போஸ்தலராகிய தோமையார் இந்தியாவ.. மரித்ததாகவும், அவரது சரீரம் ஒரட்டோனுவிலிருப்பதாகவும் கண்டிருந்தது. இவ் வப்போஸ்தலர், நமது சொந்த நாடாகிய சிந்து தேசத்தில் வேதத்திற்காக உழைத்து, வேதசாட்சி முடிபெற்றதை நினைப்பூட்ட வறிகுறியாக அதில் யாதொன்று மில்லாதிருந்ததின்பொருட்டு அது விஷயத்தை யிங்கு சுருக்கிச்சொல்ல வெத்தனித்தேன்: இதை தயை செய்து நும்பத்திரிகையி னோர் கோணத்தில் பிரசுரிப்பீரென வேண்டுகின்றேன்.

நமது ஆண்டவராகிய சேசுக் கிறிஸ்துநாதருடைய பன்னிரண்டு அப்போஸ்தலரில் ஒருவராகிய அர்ச். தோமையார் இந்துதேசத்தின் பற்பல விடங்களில் சத்தியவேதத்தைப் பிரசங்கித்தார். இப்படி யரிய வேதத்தைச் சகலருக்குந் தெரியப்பண்ணி வருங்கால் வேதவிரோதிகளால் பிடிபட்டு மயிலாப்பூருக்கு ஆறு மயிலுக்குத் தென் மேற்கே யிருப்பதும், தமிழில் பரங்கிமலை அல்லது பெரியமலை யென்றும், அங்கிலேய பாஷையில் Saint Thomas Mount என்றும் சொல்லப்படுவதுமான ஒரு சிறு குன்றின் மீது, வேதசாக்ஷியாகத் தன் பிராணனைக் கொடுத்தார். பின்பு அவருடைய திருமேனியைச் சீஷர்கள், எடுத்து மயிலாப்பூர் அல்லது தற்காலம் சந்தோம் என்றழைக்கப்படுமிடத்தில் அடக்கஞ் செய்தார்கள். இது விஷயங்கள், அதி நுட்பமாய்க் காரியங்களை விசாரித் தெழுதியிருப்பதைக்கொண்டுள்ள பூர்வீகமும், நவீனமுமான சாதனங்களால் உறுதிப்படுத்தப்பட்ட பாரம் பரியத்தினால் தெரியவருகின்றது.

Mgr. Medlycott என்பவரால் எழுதிய "India and the Apostle St. Thomas" என்னும் புஸ்தகத்தில் காண்க. சந்தோமில் வெகு சிறப்பலங்காரமாய் கட்டப்பட்டிருக்கும் மேற்றிராசனக் கோவிலானது மேற்சொல்லிய கல்லறையின்மீதே கட்டப்பட்டிருக்கிறது. இவ் வாலயத்தைப் புதுப்பித்துக்கட்டுமுன் அர்ச். தோமையாருடைய கல்லறையை அதனுள் சேர்த்தது மன்றி, அக் கல்லறை ஷை கோயிலின் மத்தியிலிருக்கும்படி யுத்தேசித்து, அவ்வண்ணமே செய்து முடித்தார் கனந்தங்கிய ரீட் தேசில்வா எனும் நாமதேயங்கொண்ட மேற்றிராணியார்.

தற்காலம் திருமயிலை மேற்றிராசனத்தில் வீற்றிருக்கும் காஸ்றோ ஆண்டவர், 1903ஆல அர்ச். தோமையார் கல்லறையை இன்னு மதிகமாய் மேன்மைப்படுத்த ஆவல்கொண்டு, கோயில் பூமி மட்டத்துக்கு எழடி ஆழமாய்க் கல்லறை யிருக்குமிடத்தைச் சுற்றிலும் அகலப்படுத்தினதுந் தவிர, அக் கல்லறையின் மீதே, திருப் பலியாகிய திவ்யபூசையைச் செய்வதற்கு வெண்டிய பல வர்ண சலவைக் கல்லினால் உரோமாபுரியிற் செய்த பலிபீட மொன்றை யிணைத்துவைத்திருக்கிறார். இதுநிற்க, இம்மேற்றிராசனக் கோயிலில், அபூர்வ அர்ச்சியசிஷ்ட பண்டங்கள் வைக்கும் பொருட்டுச் சொக்க வெள்ளியினால் வெகு வேலைப்பாடாய்ச் செய்யப்பட்ட ஒரு சுடர் செப்பில் அர்ச். தோமையார் தரித்திருந்த வஸ்திரச் சிறு துண்டுகளும், அவருடைய எலும்பின் சிறு துண்டுகளும், அவரைக்குத்திய ஈட்டியின் சிறு துண்டுகளும், மகா வருமையோடு காப்பாற்றி வைக்கப்பட்டிருக்கின்றன. பிரதி வருஷமும் டிசம்பர்மீ 21-ம் தேதியாகிய அர்ச். தோமையார் திருவிழாவன்று இந்த அருளிக்கம் விசுவாசிகளுக்கு மிக பூச்சியமாய் முத்தஞ் செய்யக் கொடுக்கப்படுகிறது. இதனால் அர்ச். தோமையாரின் ஞாபகச் சின்னங்கள் நமது நாட்டிலு மிருக்கின்றன வென்று விளங்குகிறதல்லவா? இதன்பொருட்டே ஜனங்கள் சமையா சமையங்களில் இத் திருஸ்தலத்தை தூர தேசங்களி லிருந்து வந்து சந்தித்துப்போகிறார்கள். ஐரோப்பா அமெரிக்கா முதலிய தேசங்களிலிருந்து வருங் குருக்கள் முதலாய் மேற்சொல்லிய கல்லறைப் பீடத்தில் பூசைசெய்ய ஆவல்கொள்கிறார்கள்.

இதுகாரணம்பற்றி மயிலையைப் பாக்கியம் பெற்ற ஸ்தலமெனச் சொல்லலாமன்றோ! அர்ச். தோமையார் அந் நகர்தன்னில் வாழும் அஞ்ஞானிகள் சத்தியவழி சேருமாறும், கிறிஸ்துவர்கள் உத்தமர்களாகுமாறுஞ் சகாயம் பெற்றருள்வாராக.

விசுவாசத்தை வெளியாக்குவோய் வாழி
யிசையுஞ் சத்தியத்தின் செஞ்சுடர் வாழி
திசை முழுவதின் சேரானந்தம் வாழி
வசையி லெந்நகர் மாமகிமை வாழி!

இங்ஙனம்,
மயிலைவாசி.

### பத்திராதிபர் குறிப்பு.

நமது பிரிய நிருபநேயராகிய ஷை "மயிலைவாசி" அர்ச். தோமையாரைப்பற்றி எழுதும்

விவரங்கள் சுத்த உண்மையானவைகளும் நாம் அறிந்தவைகளுமே. அவைகளை மறைக்கவேணுமென்பது சற்றும் நமது கருத்தல்ல. நண்பர் கடிதத்தில் குறித்த வியாசம், ஒரு அங்கிலேய பத்திரிகையின் மொழிபெயர்ப்பு. அதன்மேல் விஷயங்களை விவரித்தெழுத நமக்கு அப்போது சவகாசம் போதவில்லை. ப—ர்.

---

## CORRECT THINGS FOR CATHOLICS.

## கத்தோலிக்கு கிறிஸ்துவர்ளுக்கு நல்லொழுங்குகள்.

(முன் தொடர்ச்சி.)

### கோவில்.

---

1. பூசை முதலிய பக்தி முயற்சிகளுக்கு எப்போதும் நேரத்தோடு போவது ஒழுங்கு.

2. கபால மலையில் நடத்தப்பட்ட பலியே பூசையிலும் நடக்கிறபடியால், நமதாண்டவரைப் பின் தொடர்ந்து கபால மலைக்குப்போன பக்தியுள்ள ஸ்திரீகளைப்போல் அடக்க ஒடுக்கத்தோடும், மேரை மரியாதையோடும் கோவிலுக்குப் போவது ஒழுங்கு.

3. கோவிலுக்குப் போகும்போது முகத்தைக் கழுவி, தலையைவாரி கூடியமட்டும் சுத்தமாய்ப் போவது ஒழுங்கு.

4. ஒவ்வொரு கிறிஸ்துவனும் கோவிலில் தனக்கோர் இடத்தை நியமித்துக் கொள்ளுவது ஒழுங்கு.

5. விசாரணைக் குரு கோவிலுக்கு அதிகாரி யாகையால், அவரைக் கண்டால் ஆசாரம் செய்வது ஒழுங்கு.

6. உள்ளே பிரவேசிக்கும்போதே தீர்த்தத்தைத் தொட்டு நெற்றியில் சிலுவை வரைந்து கொள்ளுவது ஒழுங்கு.

7. கோவிலில் கர்த்தர் பலி பீடத்தில் இருக்கிறார் என்பதை எண்ணி, முதலில் அவருக்கு வலது முழங்கால் தரையில் ஊன்ற நமஸ்காரம் செய்வது ஒழுங்கு.

(இவ்வொழுங்கை சிலஊர்களில் ஏதோ ஒருவாறு ஆண் பிள்ளைகள் அநுசரித்தாலும் பெண்கள் அனுசரிக்கிறதில்லை. பெண்பிள்ளைகள் நடுபீடத்திற்குவந்து இருமுழங்காலூன்றி கர்த்தருக்கு ஆராதனை செய்து பிறகு தங்களிடத்துக்குப் போவது தகுதி. பூலோக மோட்சமா யிருக்கும் நமது கோவிலில் பிரசன்னமா யிருக்கும் தெய்வத்திற்கு அவ்வளவரவது வேண்டாமா? சில கிறிஸ்துவர்கள்பலிபீடத்தின்முன் எவ்வித வணக்கமும் செலுத்தாமல் அர்ச்சியசிஷ்டவர்களின் சுரூபங்களின்முன் மெத்த வணக்கங் காட்டுவார்கள். இது சத்திய வேதத்திற்கு ஆதாரமா யிருக்கும் தேவநற்கருணையின் மட்டில் நமக்குண்டான விசுவாசத்திற்கடுத்த பக்தியென்று சொல்லக்கூடுமோ?)

8. தன் அந்தஸ்தையும் பெருமை சலாக்கியத்தையுங் காட்டுவதற்கு கோவில் இடமல்ல என்றறிந்திருப்பது ஒழுங்கு.

9. கர்த்தர் கோவிலில் இருக்கிறார் என்பதை நினைத்து அங்கு மரியாதையோடு நடந்துகொள்ளுவது ஒழுங்கு.

10. பூசை துவக்கப் பட்டிருந்தால் யாருக்கும் தொந்தரை வருவியாமல் யாதொரு சப்தமுமின்றி கோவிலுக்குள் பிரவேசிப்பது ஒழுங்கு (விசேஷமாய் பெண்டுகள் சலங்கை கட்டின மாடுகளைப்போல் கலகலவென சப்திக்கும் காலணிகளை யணிந்து வருவது நன்றன்று.)

11. பூசை துவக்குமுன்னே வர யாதோர் அசந்தர்ப்பத்தினால் கூடாதபோனாலும் சுவிசேஷம் மாற்றுகிறதற்கு முன்னாவது கோவிலுக்கு வருவது ஒழுங்கு.

12. கோவிலில் எந்தெந்த நேரத்தில் உட்காருவது, எந்தெந்த நேரத்தில் நிற்பது, எந்தெந்த நேரத்தில் முழங்காலிலிருப்பது என்றறிந்து அவ்வவ்விதமாய் நடந்து கொள்ளுவது ஒழுங்கு.

13. பரிசுத்தர் பரிசுத்தர் என்று கைமணி அடிக்கும் சமயத்திலிருந்து, சுவாமியார் தேவநற்கருணை யுட்கொண்டு தேவநற்கருணைப் பெட்டியை மூடுகிறவரைக்கும் முழங்காலி லிருப்பது ஒழுங்கு.

14. தேவ நற்கருணை எழுந்தேற்றத்திலிருந்து குருவானவர் தேவ நற்கருணை



யுட்கொள்ளுமட்டும் கோவிலிலிருந்து வெளியே போக நேரிட்டாலும் அல்லது வெளியேயிருந்து உள்ளே வந்தாலும் இருமுழங்கால்படியிட்டு நமஸ்காரம் செய்வது ஒழுங்கு.

15. கோவிலில் தண்டப்படும் உண்டிப்பெட்டியில் எப்போதும் ஏதாவது காசு போடுவது ஒழுங்கு.

16. கோவிலில் போகிறவர்களுக்கும் வருகிறவர்களுக்கும் சற்று ஒதுங்கி இடங்கொடுப்பது ஒழுங்கு.

17. குழந்தை கத்த ஆரம்பிக்கும்போது தானே அதை அடக்க முயலுவதும் அதிகமாய்க் கத்தினால் வெளியே கொண்டுபோவதும் ஒழுங்கு.

18. ஞாயிற்றுக் கிழமையில் பூசை காணக் கடன் இருக்கிறது போலவே பிரசங்கம் கேட்கவும் கடன் உண்டென்று அறிந்திருப்பது ஒழுங்கு.

19. பிரசங்க முடிந்த பிறகு கேட்ட பிரசங்கத்தைத் தியானிப்பது ஒழுங்கு.

20. கோவிலில் பாடுபவர்கள் தங்கள் தொனியைக் காட்டுவதற்கல்ல, ஆனால் கர்த்தருக்கு ஸ்தோத்திரமாகத்தானே பாடுகிறோமென்று எண்ணிப் பாடுவது ஒழுங்கு.

21. கோவில் திருநாட்கள் முதலிய விசேஷ நாட்களை பக்தி முறையுடன் அநுசரிப்பது ஒழுங்கு. (திருநாட்களை கிறிஸ்துவர்கள் மூன்று விதமாய் அநுசரிக்கிறார்கள். முதலாவது:— சிலர் திருநாளின் காரணத்தை யுணர்ந்து நல்ல பாவசங்கிர்த்தனம் செய்து நன்மை வாங்கி அன்று முழுதும் ஜெபந் தியானமுதலிய சுகிர்த கிருத்தியங்களை அநுசரிப்பார்கள். இரண்டாவது:-வேறு சிலரோவெனில் குடும்ப சமேதராய் குறித்த நேரத்தில் சுத்த ஆடைகளைத் தரித்துக்கொண்டு கோவிலுக்குப் போய் பூசை கண்டு வீட்டுக்கு வந்தபிறகு தங்கள் இன ஜன பந்துக்களுடன் விருந்து செய்து நாணயமான விதமாய்த் திருநாளைக் கழிப்பார்கள். மூன்றாவது:—வேறு சிலரோவெனில் திருநாளென்றால் ஆயத்தத்திற்கும் போகாமல் சில சமயங்களில் கோவிலுக்கும் போகாமல் அந்த நாளை மிஞ்சிய குடியிலும் வீண் சண்டையிலும் செலவழித்து தங்கள் குடும்பத்திற்கும்ஜனசங்கத்திற்கும் அவமானத்தை யுண்டுபண்ணுவார்கள். உலக சஞ்சாரத்தில் இருப்பவர்கள் குறைந்தபட்சம் இரண்டாவதாகக் குறித்தவர்களைப் போலவாவது திருநாட்களைக் கொண்டாடவேண்டும்.

22. திருத்தேர் சுற்றுப் பிரகாரங்களுக்குப்பின் பக்தியுடன் ஜெபமாலை சொல்லிக்கொண்டு மரியாதையாய் போவது ஒழுங்கு. (தேர் சுற்றுப்பிரகாரங்களை அநேகர் ஒருவித விநோத வேடிக்கையைப் போல் பாவிக்கிறார்கள். தேர் சுற்றுப் பிரகாரங்கள் சர்வேசுரனுக்கு ஸ்தோத்திரமாகவும், அர்ச்சிய சிஷ்டவர்களுக்கு வெகுமானமாகவும் நடத்தப்படுகின்றன. மேலும் பரதேசிகளாகிய நாம் நமது சொந்த நாடாகிய மோட்சத்திற்குப்போக செய்யும் பயணத்தை இது நன்றாய் குறிக்கிறது. கர்த்தருக்கடையாளமாக சிலுவையும், சம்மனசுக்களுக் கடையாளமாக பாடகர்களும், கர்த்தரிடம் வெகுமான மடைந்த அர்ச்சியசிஷ்டவர்களின் திவ்விய சுரூபங்களும், குருக்களும், தபமுறை கன்னியர்களும் கிறிஸ்துவர்களுக்கு வழி காட்டிகளாயிருந்து முன்போக, கிறிஸ்துவர்கள் விநய வணக்கத்துடன் அவர்களைப் பின் தொடர்ந்து செபித்துக்கொண்டு போவது எப்படிப்பட்ட காட்சி! எவ்வளவோ பயன் தரத் தக்க சுகிர்த கிருத்தியம்! ஆனதால் அக்கியானிகள் தங்கள் பொய்த் தேவர்களின் விக்கிரகங்களை சூழ்ந்துகொண்டு மரியாதை தப்பி போவதுபோலும், துலுக்கர் மோஹரம் கடைசிநாளில் தங்கள் தாபுத்தைச்சுற்றிப் போவதுபோலும்போகாமல், கிறிஸ்துவர்கள் ஒழுங்குடன் ஆண் ஒருபுறம் பெண் ஒருபுறமாய் ஒருத்தர்மேல் ஒருத்தர் விழாமல் தங்கள் கண்களை அங்குமிங்கும் திருப்பாமல் பத்தியுடன் செபமாலை செய்துகொண்டு, கர்த்தரைப் பின் தொடர்ந்து தாங்கள்செய்யும் மோட்ச பயணத்தைச் சிந்தித்துப் போகவேண்டும்.)

23. கூடியமட்டும் யாவரும் மாலையில் நடக்கும் தேவநற்கருணை ஆசீர்வாதத்திற்குப் போவது ஒழுங்கு.

24. குருவானவர் பீடத்திலிருந்து அவஸ்தை நன்மை யெடுக்கும்போது முழங்காலிலிருந்து வணங்குவது ஒழுங்கு.

25. அச்சாணி யில்லாத் தேர் முச்சாணும் ஓடாது என்பதைப்போல் தெய்வ

பக்தியில்லாத குடும்பம் ஒருபோதும் முன்னுக்குவராதென்றறிந்திருப்பது ஒழுங்கு. (அப்படிப்பட்ட குடும்பங்கள் ஏதோ சில காலம் பிரகாசிப்பது போலத் தோன்றினாலும் சீக்கிரத்தில் மாயமாய் மறைந்துபோகும்.)

26. நல்ல பிரசங்கங்கள், விசேஷ சடங்குகள் கோவிலில் நடக்கும்போது அக்கியானிகளையும் பதிதர்களையும் கூட அழைத்துப் போவது ஒழுங்கு.

27. நேர்ச்சிக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்க விருக்கும் வெள்ளி தங்க சாமான்களைத் தட்டானிடம் செய்விப்பதை விட, கூடுமானால் விசாரணை குருவிடம் விலைக்கு வாங்கிக் கொள்வது ஒழுங்கு.

28. கோவிலுக்கு ஒப்புக்கொடுக்கும் வர்த்திதேன்வர்த்தியாயிருக்கப் பார்ப்பது ஒழுங்கு.

29. அர்ச்சியசிஷ்டவர்களையும்கோவில்களையும் பற்றிப் பேசும்போது அந்தோனியார், சவேரியார் என்றுபேசாமல் முறையே அர்ச். அந்தோனியார், அர்ச். அந்தோனியார் கோவிலென்றும், அர்ச். சவேரியார், அர்ச். சவேரியார் கோவிலென்றும் சொல்வது ஒழுங்கு.

30. கோவிலுக்குப் போகும் போது ஜெப புஸ்தகத்தையாவது ஜெபமாலையையாவது கூட கொண்டுபோவது ஒழுங்கு.

31. கோவிலிலிருந்து திரும்பி வரும் போது பெரியவர்களைக்கண்டால் ஆசாரம் செய்வது ஒழுங்கு. (இன்னும் வரும்.)

---

## GENERAL NEWS AND NOTES.

## பொது வர்த்தமானக் குறிப்புகள்.

---

**இளங்கைம் பெண்கள்.**— இப்போது இந்தியாவில் பதினைந்து வயதுக்குட்பட்ட பால்ய விதவைகள் 90-லட்சம் பேர் இருக்கிறார்களென்று கணக்கிடப் பட்டிருக்கின்றது. என்ன பரிதாபம்! இதில் கத்தோலிக்குப் பெண்கள் ஒருவரும் இருக்கமாட்டார்கள் என்று நம்புகிறோம்.

**சில உயிர்களின் சீவிய கால அளவு.**— எல்லாவற்றையும் விட அதிக காலஞ் சீவிக்கிற பிராணி திமிங்கிலம். இது ஆயிரம் வருடம் சீவிக்குமாம். யானை 400, சிங்கம் 70, கரடி 20, ஓநாய் 20, நரி 16, அணில் 8, முயல் 7 வருடங்கள் சீவிக்கின்றனவென்க் கணக்கிடப்பட்டிருக்கிறது.

**உலர்ந்த புல்லும் சலமும் ஆகாரம்.**— நியூயார்க்கில் ஒரு ரோகி எவ்வித ஆகாரமும் சாப்பிடாமல் நோயால் வருந்தி அநேக மருந்துகளைத் தின்றான். அவனுக்கு எதனாலும் குணம் வரவில்லை. கடைசியில் உலர்ந்த புல்லையும் சலத்தையும் ஆகாரமாக உட்கொண்டதில் நோய் பறந்தோட, இப்போது அவன் சுகதசையி லிருக்கிறான்.

**ஜப்பான் ஸ்நான கட்டங்கள்.**— ஜப்பான் தலைநகராகும் டொக்கியோ பட்டணத்தில் 800 ஸ்நான கட்டங்க ளிருக்கின்றன. 300,000 ஜனங்கள் பிரதிதினமும் ஸ்நானஞ் செய்கின்றனர். இதில் ஸ்நானம் செய்பவர்கள் தலைக்கு ஸ்நானம் ஒன்றுக்கு ஓரணா வரி செலுத்துகிறார்களாம். நமது நகரங்களிலோ பொது ஸ்நான கட்டங்கள் கிடையா. இவைகளை யேற்படுத்த முனிசிப்பாலிட்டியார் முயற்சி செய்யா திருப்ப தேனோ!

**கல்கத்தா தங்கசாலை.**— உலகத்திலுள்ள நாணய சாலைக ளெல்லாவற்றிலும் பெரிது கல்கத்தா தங்கசாலையாம். அதில் தினமொன்றிற்கு 100,000 நாணயங்கள் செய்யப்படுகின்றன. அவைகளில் இருபத்தையாயிரம் சிறிய வெள்ளி நாணயமும், மற்றவை இதர காலணா முதலிய சிறிய செம்பு நாணயங்களுமாம். இந்த தேசத்தில் காலணா அதிகமாய் உபயோகப்பட்டு வருகின்றன வாகையால், தினமொன்றிற்கு 750,000 காலணாக்கள் செய்யப்பட்டு வருகின்றன.

**மிளகாய் மருந்து.**— காய்ந்த மிளகாயை பொன்னிறமாக வறுத்து சுத்த ஜலம் வார்த்து 8-ல் ஒருபாகமாகக் கஷாயம் செய்து உபயோகித்தாலும், அல்லது காய்ந்த மிளகாயை வறுத்துப் பொடிசெய்து அந்தப் பொடியை கொஞ்சம் பொடி செய்த மிளகோடும் பெருங்காயத்தோடும் சேர்த்து மாத்திரையாகச் செய்து உபயோகித்தாலும் அஜீரணபேதி வாந்திபேதி முதலிய வியாதிகள் குணப்படுகின்றன வென்று சொல்லப்படுகிறது. இது பரிட்சிக்கத் தக்கதே.



**இந்தியாவில் பெண்கல்வி.**-1910-11-வது வருஷத்தில் இந்தியா முழுவதிலும் காலேஜில் படித்த பெண்களின் மொத்த தொகை 374. இதில் 110 பெண்கள் பம்பாயிலும், 104 வங்காளத்திலும், 58 மத்திய மாகாணத்திலும், 43, சென்னையிலும், 42 பஞ்சாபிலும், 17 பர்மாவிலும் உள்ளவர்கள். மொத்த காலேஜ் பெண்கள் 374-லில் 244 பேர்கள் வைத்தியப் பரீக்ஷைக்கும், உபாத்தியாயர் பரிக்ஷைக்கும்படித்தவர்களாகும். பி. ஏ. எம். ஏ. முதலிய பொதுப்படிப்பில் பெண் பாலார்க்கு மெத்தப் பிரிய மில்லை போலும்.

**குண்டூர் ஜில்லாவில் வைரம்.**— கல்கத்தாவிலுள்ள ஒரு சுரங்க வேலை செய்யும் கம்பெனியைச்சேர்ந்த மிஸ்டர் மாக் இனர்னி என்பவர் குண்டூர் ஜில்லாவில் சில சோதனைகள் செய்ய அனுப்பப்பட்டிருக்கிறார். அநேக வருஷங்களுக்கு முன் அந்த ஜில்லாவில் வைரச் சுரங்கங்கள் இருந்தன. கிருஷ்ணாநதிக் கரையிலுள்ள கொல்லார் என்ற இடத்தில், அவர் இப்பொழுது சோதனைகள் செய்துகொண்டிருக்கிறார். அங்குதான் கோஹினூர் என்ற பிரசித்த வைரம் முதலில் கண்டெடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

**ஜியார்ஜ் அரசரின் பக்தி.**— ஜியார்ஜ் அரசர் தாம் சிறுபையனா யிருந்தபோது, வேத புத்தகத்திலே தினம் ஒரு அதிகாரம் வாசிப்பேனென்று தமது மாதாவுக்கு வாக்கு கொடுத்திருந்தாராம். அந்த வாக்குப் பிரகாரம் இன்றைவரையிலும் தவறாமற் செய்து வருகிறாராம். உலகத்தில் பேர் பெற்ற சக்கரவர்த்தி யாகிய இவர் தமது பலகனத்த அலுவல்களின் மத்தியில், தன் தாய்க்குச் செய்த வாக்கை மறவாது இன்றுஞ் செய்துவரும் இச்சுகிர்த கிருத்தியத்தினால் இவரது வியக்கத்தக்க கீழ்ப்படிதலும், பக்தியும் விளங்குகிற தல்லவா?

**நூதன உலோகம்.**— மத்திய ஆசியா பாகமாகிய பாமீர் பீட பூமிக்கு வடக்கேயுள்ள துருக்கிஸ்தான் டொர்கானா மலைப் பிரதேசங்களில் ஒரு புதிய உலோகம் அகப்பட்டிருக்கிறது. அது பார்வைக்கு பழுப்புநிறமான மெழுகுபோ லிருக்கிறது. கைக்கு மிகக் கனமாகவு மிருக்கிறது. திராவகத்துடன் இதைக் கலந்தால் அதிக குளிர்ச்சியைக் கொடுக்கிறது. ஆனால் ஒரு வித வாயுவும் அதினின்று ஜனிக்கிறதில்லை. இதன் விசேஷ குண மிப்போது தெரிந்தவரையில் யாதெனில், இதனுடன் சம்பந்தப்பட்ட எந்த வஸ்துவையும் கனமில்லாமற் போம்படி செய்கிறது. இவ் வஸ்து அமெரிக்க ரசாயன சாஸ்திரிகளிடம் அகப்பட்டால் வெகு பிரயோசனமான காரியங்கள் செய்வார்கள்.

**வியன்னா சற்பிரசாத சங்கம்.**-இந்தச் சங்கம் நடத்துவதற்காக வசூலாக்கப்பட்ட தொகையில் செலவு போக முந்நூறாயிரம் கிரௌன் நிலுவையாயிருக்கிறதாம். இது கொடையாளர்களின் தாராளத்தைக் குறிப்பிக்கிறதல்லவா? இவ்வூரிலேயோ யாதொரு பொதுக் காரியத்துக்காக முன்னின்று தண்டல் செய்தவர்கள் தங்கள் கையிலிருந்து போட்டு காரியத்தைச் சரிக்கட்ட வேண்டுமே தவிர தண்டல் மீதியாய் நிற்பது எப்போதுங் கிடையாது. நம்மவர்களுக்கு பொது விஷயங்களில் பிரீதியும் தாராளமும் இன்னும் ஏற்படவில்லை! இது நிற்க ஷெ மிகுதி தொகையைக்கொண்டு, ஷெ சற்பிரசாத சங்கத்தின் ஞாபகார்த்தமாய், நமது திவ்ய சற்பிரசாதநாதர் பேரால் ஓர் கோவில் கட்ட உத்தேசிக்கின்றனர்.

**டில்லியில் சுப்ரீம் கோர்ட்.**— ஒவ்வொரு மகாணத்திலுமுள்ள ஐகோர்ட்டுகளில் சரிவர தீர்க்கப்படாத வழக்குகள் சீமையிலுள்ள பிரிவி கவுன்ஸில் என்னும் சுப்ரீம் கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டு வருவது இப்போது வழக்கமாயிருக்கிறது. இதனால் செலவும் சிரமமும் மேற்படுகிறதால் இதை இந்தியாவிலேயே தீர்த்துவிட டில்லியில் சுப்ரீம் கோர்ட் ஒன்று ஸ்தாபிக்க இந்தியா கவர்ன்மெண்டார் கருதுவதாயறிகிறோம். ஆனால் இக்கோர்ட்டு வைஸிராயின் ஆதீனத்திற்குட் படாதென்றும், இந்தியா ஸ்டேட் செக்ரெடரியின் ஆதீனத்திற்கே உட்பட்டு நடக்குமென்றுந் தெரிய வருகிறது. சக்கரவர்த்தி அவர்கள் இந்தியாவிற்கு விஜயஞ் செய்ததின் பலனாய் இந்த நற்காரியமும் நிறைவேறுமானால், நம் இந்திய ஜனங்கள் நமதிறைவனுக்கு பல வழிகளில் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்களாகிறார்கள்.

**மனிதரைத் தின்னும் புலிகள்.**— இவ்வகையைச் சார்ந்த புலியொன்று கஞ்சம் ஜில்லா மலைக் காடுகளிலிருந்து கொண்டு

அக்கம் பக்கத்தார் ஜனங்களுக்கு மிக்க கெடுதி செய்துவந்தது. இப்புலி இதுவரையில் 30-க்குமேல் மனிதர்களைக் கொன்றிருக்கிறதாம். சென்ற மாதம் ஓர்நாளிரவு மாண்டாசா யுவராஜா சாஹேப்பால் இப்புலி கொல்லப்பட்டது. இது 9 அடி நீளமும் 3½ அடி உயரமுமானதாம். இன்னொரு புலி கன்னியாகுமரிக்கு 6 மைல் தூரத்திலுள்ள மைலாடி என்ற கிராமத்தில் சென்ற வாரத்தில் வந்து மூன்றுபேரைத் தாக்க ஒருவன் உடனே இறந்துபோனான். மற்ற இரண்டுபேர் விசேஷ காயம்பட்டு கோட்டாறு ஆஸ்பிட்டலில் சிகிச்சையில் இருக்கிறார்கள். இந்தப்புலி 8 அடி நீளமும் 4 அடி உயரமும் இருந்ததாம். ஒரு பெண்புலி இரண்டு குட்டிகளுடன் அந்தப் பக்கத்தில் அலைந்துகொண்டிருப்பதாகவுந் தெரியவருகிறது.

**ஓர் உத்தம தருமம்.**—இங்கிலாந்திலே வெஸ்ட் மின்ஸ்டரில் கருதினலா யிருக்கும், கண்யந் தங்கிய வான் ஆண்டவரவர்களுக்கு சமீபத்தில் யாரோ ஒருவர் பேர் ஊர் தெரிவிக்காமல் ஐம்பதினாயிரம்பவுன் (அதாவது 7 லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாய்) அனுப்பி டொலிஷகில் என்னுமிடத்தில் ஒரு கத்தோலிக்கு தரும வைத்தியசாலை கட்டும்படி கேட்டுக்கொண்டாராம். இதுவன்றோ நமது கர்த்தர் கற்பித்தபடி, வலதுகை செய்வதை இடது கையறியாத தருமம்! இவ்வளவு பெருந் தொகையிவ்வூரில் யாராவது கொடுக்க ஏற்பட்டால், ஊரெங்கு முரசமறைவித்து, பத்திரிகைகளில் பிரசுரஞ்செய்து, கற்சிலாசாசனங்கள் ஏற்படுத்தி, சட்டப்பிரகாரம், பத்திரமும் பதிவுஞ் செய்து ஆரவாரஞ் செய்வார்கள் இவ்வளவும் செய்வது என்னத்திற்கு? யாதோர் கௌரவம், கிதாப்புப் பட்டம் அல்லது பிறிதோர் நன்மை பெறுவதற்கு. ஷை புண்யவான் செய்த தருமம் சர்வேசுரனிடத்தில் பூரண பலன் பெறுவிக்கும். அவரோர் சிறந்த உத்தம பக்தரா யிருத்தல் வேண்டும். அவருடைய தருமத்தை மறைவில் காண்கிற பிதா அவருக்குத் தக்க விதமாய் சம்பாவனை தப்பாதளிப்பார்.

**அர்ச். அந்தோனியார் செய்த செபம்.**—அர்ச். அந்தோனியார் தமது வாழ்நாளில் ஆத்தும சரீர பரிசுத்தத் தனத்தைக்கேட்டு அர்ச். கன்னிமரியாயியைப் பின்வருமாறு வேண்டிப் பலனடைந்ததால், அந்தப்படி பிரதிதினமும் எல்லோரும் வேண்டிக் கொள்ளும்படி வற்புறுத்தி வந்தார். அதாவது:

ஓ! மரியாயே, கர்த்தரைப் பெறுமுன்னங் கன்னிகையே! என் ஆத்துமத்தையும் சரீரத்தையுங் காப்பாற்றியருளும். (பிரியதத்)

ஓ! மரியாயே! கர்த்தரைப் பெறும் போதுங் கன்னிகையே! என் ஆத்துமத்தையும் சரீரத்தையுங் காப்பாற்றியருளும். (பிரியதத்)

ஓ! மரியாயே! கர்த்தரைப் பெற்ற பின்னுங் கன்னிகையே! என் ஆத்துமத்தையுஞ் சரீரத்தையுங் காப்பாற்றியருளும். (பிரியதத்)

(இச் செபத்துக்கு நூறு நாள் பலனுண்டு.)

**ஓர் புது தமிழ் அகராதி**—இப்போதிருக்கிற அகராதிகளெல்லாவற்றையும் விட அதிக சவிஸ்தாரமாயும், அதிக சொற்கள், அதிக விவரங்கள், விஷயங்கள் அடங்கியதாயும் ஓர் புது அகராதி எழுதியச்சிட வேண்டுமென்று கவர்ண்மெண்டார் அபிப்பிராயப்பட்டு, அதைச் செய்து முடிக்கும் வேலையை சென்னை சர்வகலா சாலைக்கு ஒப்பித்திருக்கிறார்கள். இது முடிவாக, ஏறக்குறைய ஐந்து வருஷகாலமும், ஒரு லட்ச ரூபாய்செலவும் பிடிக்குமென்று தெரிவித்ததில், கவர்மெண்டார் அத்தொகையை தாம் கொடுப்பதாக ஒருப்பட்டிருக்கிறார்கள். இதற்குத் தமிழறிந்த இரண்டு ஐரோப்பியர்களும், மூன்று இந்தியர்களும் சேர்ந்த ஒரு சப்கமிட்டி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இத்தகைய அகராதி இது விஷயத்தில் நெடுநாளிருந்த குறையை நீக்கி அதிபிரயோசனத்தைத் தருமென்பதிற் சந்தேகமில்லை.

**க்ஷய ரோகத்துக்குப் புது முறை.**—க்ஷயம் தீராத வியாதியென்பர். இதைத் தீர்த்துவிடுவோம் என்று முன்வரும் வைத்தியர்களுக்கோ கணக்கில்லை. ஆயினும், இவ்வியாதி கண்டவர்கள் நூற்றில் பத்துப்பேர் கூட எந்த மருந்தினாலாவது தேறுவது அருமையென்று அனுபோகத்தில் அறிந்துள்ளோம். இப்போது ஜெர்மன் வைத்திய சாஸ்திர நிபுணராகிய டாக்டர் பிரீட்மன்



என்பவர் இதற்கு ஒரு புதிய முறை கண்டுபிடித்திருக்கிறார். அதனால் அநேக க்ஷய ரோகிகளைக் குணப்படுத்தி ஜெயங்கொண்டதாகச் சொல்லுகிறார். இப்புதிய முறை யாவது யாதெனில், க்ஷய ரோகக் கிருமிகளைக் கொல்லும்படிக்கான ஓர்வித மருந்தை சருமத்தின் வழியாய் தேகத்துக்குட் (இன்ஜெக்ஷன் செய்து) செலுத்துவதே. இந்த முறை மெத்த நல்ல முறையென்று தேர்ந்த பண்டிதர் பலர் நற்சாட்சி கூறுகிறார்கள். இப்படியானால் இது க்ஷயரோகிகளுக்கு ஓர் நல்ல செய்தியே.

**ஹிந்து சர்வ கலாசாலை நிதி.**—இந்நிதிக்கு டாக்டர் ராஷ் பிஹாரிகோஷ் ஒரு லக்ஷ ரூபாய் நன்கொடை யளித்திருக்கிறார். இதுவன்றோ மதாபிமானம்! 'காத்தலிக் ஹோம்' என்னும் ஒரு பொது கத்தோலிக்கு விடுதி யொன்று சென்னையிற் கட்ட வேண்டிய செலவுக்காக கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தார் கத்திவருகிறார்கள் நெடுநாளாய். கத்தோலிக்குக் கனவான்களெவருங் கவனித்தார்களில்லை! ஷை சர்வ கலாசாலை நிதிக்கு இதுவரையில் வாக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற தொகை 67-லட்சம்; வசூலிக்கப்பட்டிருக்கிற தொகை 17-லட்சம்; வேண்டுந் தொகை ஒரு கோடி. இதில் 50-லட்சம் சர்வ கலாசாலைச் சட்டத்தின் பிரகாரம் வங்காளத்து பாங்கியிற் கட்டி விடவேண்டும். இன்னும் வேண்டியிருக்குந் தொகைகளுக்காக டர்பாங்கா மஹாராஜாவும் வேறு சில கனவான்களும் அடுத்த மாதம் முதல் புறப்பட்டு இந்தியா வெங்குஞ் சுற்றி நிதி சேகாஞ்செய்ய கமிட்டி சேர்ந்திருக்கிறார்கள். கத்தோலிக்கரும் தங்கள் நிதிக்கு இவ்வாறு வூரெங்குஞ் சுற்றி வசூலிப்பதே நல்ல முறை.

**சமைத்த சிப்பியில் முத்து.**-அமெரிக்காவைச்சேர்ந்த சிகாகோ நகரிலுள்ள ஒரு சாப்பாட்டு விடுதியில் ஒரு புருஷனும் பெண்சாதியும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குச் சாப்பிட வைக்கப்பட்ட சிப்பியில், 35 பவுன் மதிப்புள்ள ஒரு அழகிய பெருமுத்து அகப்பட்டது. விருந்து சாப்பிடப் போய் வெகுமானங் கிடைக்கப்பெற்ற ஷை தம்பதிகள், விசேஷமாய் அந்த ஸ்திரி, அபரிமிதமான ஆனந்த வாரியில் ஆழ்ந்திருப்பார்களென்று சொல்லவும் வேண்டுமோ!

# NEWS OF THE MONTH.

## மாச வர்த்தமானம்.

---

**டில்லி நகர் ப்ரவேசம்.**—சென்ற மீ 23-ம் தேதி யன்று, இந்தியாவின் புது தலைநகரமாகிய டில்லிக்குள், இராஜப்பிரதிநிதியாகிய ஹார்டிஞ்சு பிரபு அவர்களும், அவரது பத்தினியும் யானைகளின்மீது ஏறிக்கொண்டு முன்னும் பின்னும் சேனைகள் செல்ல, தளக்கர்த்தர் எக்ஸிகியூடிவ் கவுன்சில் மெம்பர்கள், லெப்டினேனட் கவர்னர், பஞ்சாப் தலைவர்கள் முதலானோர்கள் வரிசைக் கிரமமாய்ப் பின்செல்ல, ஊர்ப்பவனி வந்தார்கள். இவ்வாறு மகா ஆரவாரச் சிறப்புடன் வைபவமாய் ஊர்கோலம் வரும்போது, இராஜப்பிரதி யவர்களுக்கு ஓர் பெரிய ஆபத்து நேரிட்டது. காண்டி சௌக்கிலுள்ள ஒரு வீட்டின் மாடியி லிருந்து இராஜப்பிரதிநிதியின் மீது பாம் என்னும் ஒரு வெடி குண்டு வந்து விழுந்தது. இது வெடிக்கவே, பக்கத்தினின்ற ஜமேதார் ஒருவர் படுகாயப்பட்டு உடனே உயிர்துறந்தார். இராஜப்பிரதிநிதி யவர்களுக்கு உயிர்சேத மில்லையாயினும், முதுகிலும் கழுத்தண்டையிலும் பெரிய காயங்கள் உண்டாயின. லேடி ஹார்டிஞ்சு அவர்கள் ஆச்சரியத்துக்குரிய விதமாய் தப்பித்துக்கொண்டார்கள். பரிவாரங்களில் பன்னிருவருக்குப் படுகாயங்களாம். இந்தப் பாதகச் செயல் செய்த சண்டாள னெவனென்று தெரியவில்லை. வெடி குண்டு வந்து விழுந்த வீட்டிற்குள் ளிருந்தவர்களில் 50 நபர்களைப் பிடித்து வைத்திருக்கிறார்கள். போலீசு பரிசீலனை நடந்து வருகிறது. குற்றவாளிகளைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு 10,000 ரூ. வெகுமதி கொடுக்கப்படுமாம்.

**பால்கன் துருக்கி யுத்தம்.**-இந்த யுத்தம் இப்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. வல்லரசுக்களின் முயற்சியால் அநேகமாய் சீக்கிரம் சமாதான உடன்படிக்கை ஏற்படுமென்று நம்பப்படுகிறது. கிரீக் நாடு மாத்திரம் மத்தியஸ்தர்கள் பிரேரேபிக்கும் நிபந்தனைகளுக்குச் சம்மதிக்கவில்லை. அது துருக்கியோடு இன்னும் சண்டை செய்துகொண்டு வருகிறது. இப்போது லண்டன் நகரத்தில் இருதிறத்தாருடையவும் பிரதிநிதிகள் கூடி உடன்படிக்கையின்

நிபந்தனைகளை ஆலோசனை செய்கிறார்கள். நிபந்தனைகள் பின்வருமாறு:—பல்கேரியர்கள் இப்போது பிடித்திருக்கும் எல்லா இடங்களும் பல்கேரியர்களையே சேரவேண்டும். அவை யாவன:—மாஸிடோனியாவில் சில இடங்களைத்தவிர மற்ற பாகங்கள் முழுமையும். தவிர்க்கப்பட்ட அந்தக் கடற்கரை பாகங்கள் துருக்கி சுல்தானுடைய அதிபத்தியத்தின் கீழ் இருக்கவேண்டும். யுத்தச்செலவு விஷயமாய் இருகக்ஷியாரும் அவரவர்களுடைய செலவை ஏற்றுக்கொள்ளவேண்டும். யுத்தத்தில் பிடிபட்டவர்களின் செலவுக்காக அந்தந்த ஜாதியார் கொடுக்கவேண்டும். துருக்கி-இத்தாலி யுத்தத்திலிருந்து பால்கன்-துருக்கி யுத்தங் கிளம்பினது போல இதிலிருந்து ஆஸ்திரியா-பால்கன் யுத்த முதிக்கும்போலும். ஆஸ்திரியாவுக்கும் செர்வியாவுக்குந் துறைமுகப்பட்டணங்கள் விஷயமாய் சில வழக்குகளிருக்கின்றன.

**சென்னை சட்ட நிரூபண சபை.**—இச்சபையின் எலெக்ஷன்கள் இப்போது நடந்து கொண்டிருக்கின்றன. இவைகளெல்லாம் முடிவாக இம்மாதம் பத்து தேதி வரையிலும் செல்லும். இந்த புது சபையில், அந்தந்த வகுப்பினர், சங்கத்தார்களால் தெரிந்தெடுக்கப்படும் 21 மெம்பர்களும் கவர்ண்மெண்டாரால் நியமனஞ் செய்யப்படுபவர்கள் 21 மெம்பர்களும், அட்வோக்கேட் ஜெனரலும், கவர்னர் அவர்களின் காரிய நிர்வாக சபை மெம்பர்கள் நால்வரும் இடம் பெறுவார்கள். ஆக இச்சபை மெம்பர்களின் தொகை அக்கிராசனாதிபதியாகிய மாட்சிமை தங்கிய கவர்னர் அவர்களுட்பட, 48 ஆகும். இவர்களன்றி, யாதொரு விசேஷ சட்டங்கள் ஏற்படுத்தவேண்டும் பட்சத்தில், அவைகளின் மட்டில் தக்க அபிப்பிராயந் தரத்தக்கவர்களுக்காக இரண்டு இடங்கள் காலியாய் வைக்கப்பட்டிருக்கின்றன.

**பப்ளிக் சர்விஸ் கமிஷன்.**—கவர்ண்மெண்டு உயர்தர உத்தியோகங்களுக்கு நபர்களை நியமனஞ் செய்வதில் ஐரோப்பியருக்கும் இந்தியருக்கும் இப்போது காட்டப்படுகிற வித்தியாசங்களை எவ்வளவு தூரம் மட்டுப் படுத்தலாம் என்கிற விஷயத்தில் ஜனங்களின் பொது அபிப்பிராயம் எப்படி யிருக்கிறதென்று தெரிந்து அறிவிக்கும்படி கவர்ண்மெண்டாரால் நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிட்டியே "பப்ளிக் சர்விஸ் கமிஷன்" என்பது. இதற்கு அபிப்பிராயங் கொடுக்கும்படி பல பிரபல கவர்ண்மெண்டு உத்தியோகஸ்தர்கள், பண்டித மேதாவிகள், கல்விமான்கள், முதலானோர்களைக் கவர்ண்மெண்டார் கேட்டிருக்கிறதுந் தவிர, சில பொதுச் சங்கத்தவர்களுடைய அபிப்பிராயங்களும் கேட்கப்பட்டிருக்கின்றன. இச்சங்கங்களில் நமது கத்தோலிக்கு இந்தியர் சங்கம் ஒன்றாயிராதது விசனிக்கத்தக்க காரியம். ஆயினும் இச்சங்கத்தையும் சென்னை இந்திய கிறிஸ்துவர் சங்கத்தையும்,(புரோடெஸ்டாண்டார் சங்கம்) ஒன்றாய்க் கருதி பின்னதின் அபிப்பிராயத்தைக் கேட்டிருக்கிறார்களெனத் துணிகிறோம்: அபிப்பிராயங் கேட்கப்பட்ட சங்கங்களாவன: சென்னை ஐரோப்பியர் வர்த்தக சங்கம், தென் இந்தியாவின் ஒன்றுகூடின தோட்டக்காரர்களின்சங்கம், சென்னை வர்த்தகச் சங்கம், சென்னை மாகஜன சபை, சென்னை நிலச்சுவாதீனர்களின் சங்கம், ஆங்கிலோ இந்தியன் சங்கம், சென்னை இந்திய கிறிஸ்தவர் சங்கம், கஞ்சம் நிலச்சுவாதீனர்களின் சங்கம், சென்னை மகாண முஸ்லிம் லீக் சங்கம், ஹைகோர்ட் வக்கீல்கள் சங்கம், சென்னை மாகாண காங்கிரஸ் கமிட்டி.

**கன்னியாகுமரி கலகக் கேஸ்.**—கடந்த ஏழெட்டு மாதமாய் விசாரணை செய்யப்பட்டுவந்த இந்த கேஸில் சென்ற நவம்பர் மீ 20-ம் தேதி ஸ்பெஷல் ஜட்ஜியாகிய மிஸ்டர். வி. செரியன் நியாயாதிபதியால் தீர்ப்புச் சொல்லப்பட்டது. இந்தக்கேசில் நிரபராதிகளான ஓர் கத்தோலிக்குக் குருவானவரும் சில கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களும் சம்பந்தப் படுத்தப்பட்டிருந்ததால் நாம் வெகுவாய் கவலைக் குள்ளாயிருந்தோம். இப்போது மேற்கண்ட ஜட்ஜுமெண்ட்டைப் பார்த்தபிறகு நமக்கு ஒருவாறு மன வாறுதல் உண்டாயிற்று. நமது சங். ஜெரோமி பெர்நாண்டஸ் சுவாமிகளும், 31 கத்தோலிக்கரும் குற்றமற்றவர்களென நிரூபிக்கப்பட்டு, விடுதலை செய்யப்பட்டார்கள். கன்னியாகுமரிக் கருகே கடலில் தீப் பிடிக்கப்பட்ட எஸ். எஸ். சின்னியாவென்ற கப்பலிலிருந்து களவு போன சொத்துக்கள், அவ்விடத்து கத்தோலிக்குக் கோவிலான அமலோற்பவ



மாதாக்கோவிலுக்குள் ஒளித்து வைக்கப்பட்டிருந்தன வென்னுஞ் சந்தேகத்தால் அதற்குள் துராகிருதமாய் நுழையப் போன போலீசாருக்கும், அக் கோவில் கிறிஸ்துவர்களுக்கும் நடந்த சண்டையே "கன்னியாகுமரிக் கலகம்" என்னப்படுவது. இதில் குற்றஞ் சாட்டப்பட்ட 51பேர்களில் மேற்சொன்ன 32 பேர் தவிர மற்றவர்கள் குற்றவாளிகளெனத் தீர்மானிக்கப்பட்டு, பின்வருமாறு தண்டனை விதிக்கப்பட்டார்கள். 6, 12, 13, 14, 11, 24, 30, 35, 36, 37, 42, 50 இந்த நம்பர் குற்றவாளிகள் இந்தியன் பீனல்கோடு 139-வது செக்ஷன்படி ஒரு வருஷங் கடுங் காவல் 27, 28, 41 நெ. குற்றவாளிகள், ஷை 139 323-வது செ. படி முறையே ஒருவருஷம் ஒருமாதங் கடுங்காவல். 31, 33, 34 நெ. குற்றவாளிகள் ஷை 139, 352 செ. படி முறையே ஒருவருஷம்3 மாதங்கடுங்காவல். 25 நெ. குற்றவாளி, 139, 323, 352, 427-வது செ. படி முறையே, ஒருவருஷம் ஒரு மாதம், மூன்று மாதம், ஒரு நாள் கடுங் காவல்.

**தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கம்**—ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறபடி இச் சங்கத்தின் வருஷாந்தப் பொதுக்கூட்டம் சென்னையில், அரமனைக்காரத்தெருவிலிருக்கும் அர்ச். கபிரியேல் கலாசாலையில் இம் மாதம் 13-ம் தேதி யாகிற திங்கட்கிழமை மாலை 4 மணிக்குக் கூட்டப்படும். இக் கூட்டத்தில் வழக்கப்படி, சங்கத்தின் அக்கிராசனாதிபதி யாகிய, சென்னை யதிமேற்றிராணியார் மிகவும் வந்திக்கத்தக்க அருளப்ப ஆலன் ஆண்டவரவர்களே அக்கிராசனம் வகிப்பார்கள். இக் கூட்டத்தில், ஷை சங்கத்து உத்தியோகஸ்தர்களின் நியமனங்களையும், அங்கத்தினர்களின் கட்டணங்களையும் பற்றிய ஒழுங்குகள் விஷயமாய் இதற்கென்று நியமிக்கப்பட்ட சப் கமிட்டியார்களால் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள், அங்கத்தினருடைய அங்கீகாரத்துக்குக் கொண்டுவரப்படுமாகையால் வெளியூர் கிளைச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் கூடியவரையில் பெருந்தொகையினராய் விஜயஞ் செய்வார்களென்று கோரப்படுகிறது. மேலும், ஷை சங்கத்தின் நிர்வாக சபையார் கூட்டமும், அதே தினத்தில் காலை 10 மணிக்கு அதே இடத்தில் கூட்டப்படுமென்றும் அறிவிக்கப்படுகிறது.

**சென்னை பேனிடன் ஷரியில் கலகம்.**—சென்ற நவம்பர் மீ 28-ம் தேதியன்று சென்னையிலிருக்கும் ஜெயிலுக்குள் ஓர் பெரிய கலகம் நடந்தது. கைதிகளில் அறுவர் ஜெயில் சூப்பரின்டெண்டையும், ஜெயிலரையும் எதிர்த்து இரும்பு கம்பித் துண்டுகளைக்கொண்டு தாக்கி, தலையிலும் முகத்திலும் படுகாயங்கள் செய்ய மற்ற கைதிகளுஞ் சேர்ந்துகொண்டு அவர்கள் உயிருக்கே மோசம் வரும்படியான பெருங் கலகம் ஆரம்பித்தார்கள். இதைக்கண்ட வார்டரில் ஒருவன் ஜெயில் உத்யோகஸ்தர்களின் உயிரைக்காக்கவும், கலகத்தை யடக்கவும் ஹேதுவாகுமெனக் கருதி கைத்துப்பாக்கியெடுத்து கலகத்துக் காஸ்பதமான கைதிகளைப்பார்த்து சுட்டான். சுடவே, பிஞ்ஜி என்பவனும், கன்னி யென்பவனும் கொல்லப்பட்டார்கள். இன்னுமிருகைதிகள் காயப்படுத்தப்பட்டார்கள். இதோடு கைதிகள் நாலாபக்கமாய் ஓடிப்போக கலகம் நின்றுபோனது. இக்கலகத்துக் காரணம் சாப்பாடு விஷயத்தில் சமீபத்தில் உண்டாக்கப்பட்ட மாற்றங்களெனச் சொல்லப்படுகிறது. பழய ஒழுங்கின்படி கைதிகளுக்குச் சாப்பாடு கேழ்வரகுக் களியும் வாரத்திற்கு ஒருவிசை ஆட்டுக்கறியும் கொடுத்து வந்தார்கள். சமீபத்தில் இதைவிட்டு, அரிசிச் சாப்பாடும், ஆட்டுக்கறிக்குப் பதில் பருப்புக் குழம்பும் பரிமாறப்பட்டது. களி சாப்பிட்டவர்களுக்கு அரிசிச்சாதங் காணவில்லை. ஆட்டுக்கறியும் அற்றுப்போயிற்று. பழயபடி கைதிகள் களியும் கறியுங் கேட்க திருப்திகரமான பதில் கிடைக்காததால் கலகமாரம்பித்தார்கள். இந்த கேசை போலீசார் விசாரணைசெய்து வருகிறார்கள். பொதுவாய் கைதிகளின் சாப்பாட்டு விஷயத்திலும், உடுப்புவிஷயத்திலும் பரிகரிக்கக் கூடிய குறைபாடுகளிருக்கலாமென்றும், அவைகளைப் பரிசீலனைசெய்து குறையுண்டானால் அதை நிவர்த்திக்கத்தக்க முயற்சி தேடவேண்டுமென்றும் "இந்தியன் பேற்றிரியட்" பத்திரிகை கூறுகின்றது.

**இரண்டு புது குருவானவர்கள்.**—சென்றமீ 21-ம் தேதியன்று சென்னையில் ஒருவரும், புதுவையில் ஒருவருமாக இரண்டு இந்தியர்கள் சர்வேசுரனின் திராட்

சைத் தோட்டத்தின் ஊழியத்துக்கு அழைக்கப்பட்டு குருப்பட்டஞ் சூட்டப்பெற்ருர்கள். முந்தினவராகிய சங். ஜோசெப் அந்தோஸ் என்பவர் செங்கல்பட்டு ஜில்லாவைச் சேர்ந்த வடகரமென்னும் வளர்புரத்திலுள்ள கம்மவார் குலத்துதித்தவர். இவர் கண்டி குருமடத்தில் படிக்கும்போதே இவரது பெற்ருே ரிருவரும் காலகதியாயினர். இவரது குலத்தில் குருப்பட்டம் பெறப் பாக்கியம் பெற்றவர்களில் இவர் இரண்டாவதாவர். முதல்வர் காலஞ்சென்ற சங். சவரிநாதர். இவரது உற்ருரும் ஊராரும் சேர்ந்து இவரைச் சென்னையிலிருந்து தங்களூருக்கு வெகு ஆரவாரச் சிறப்புடன் அழைத்துக்கொண்டு போக அங்கே 23-ம் தேதியன்று அவர் தமது முதற் பூசையைச் செய்தார். இவரது தங்கை கந்நியாஸ்திரியாவதற்கு அர்ச். அன்னம்மாள் மடத்தில் பரிட்சை யந்தஸ்தி லிருப்பதாக அறிகிறேம். பிந்தினவராகிய சங். மரியநாதர் என்பார் வேளாளர் மரபிலுதித்தவர். நாகப்பட்டணம் வக்கீல் காலஞ்சென்ற கண்ணுசாமிப் பிள்ளையின் பௌத்திரரும், கொழும்பு ரெயில்வேயின் அசிஸ்டன்ட் இஞ்ஜினீயாகிய ஸ்ரீமான் க. தேவராயப்பிள்ளை யவர்களின் துவிதிய புத்திரருமாவர். இவர் அடுத்த நாளாகிய ஞாயிற்றுக்கிழமை காலை புதுவை தேவமாதாவின் திரு இருதய மடத்துக் கோவிலில் முதற் பூசைசெய்தார். இவ்விளங் குருக்களிருவரும் இம்மையில் எமதாண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவானவர்நடந்துகாட்டியருளிய உத்தம நெறியில் வழுவா தொழுகவும், அநேகருடைய ஆத்தும ஈடேற்றத்துக்காக பலன்பட உழைக்கவும் வேண்டிய வரப்பிரசாதங்களை, எல்லாம் வல்ல ஈசன் அவர்களுக்கு அநுக்கிரகிக்கும்படி நாம் அவரை மனப்பூர்வமாய் வேண்டுவது போல இதை வாசிக்கும் நமது நண்பர்கள் ஒவ்வொருவரும் வேண்டும்படி கேட்டுக்கொள்ளுகிறேம்.

**கோவாப்பரேடிவ் காண்பரன்ஸ்.**— ஏழைக் குடியானவர்கள், விவசாயிகள், வியாபாரிகள் முதலானோர்களுக்கு சுவற்ப வட்டிக்கு பணங்கொடுத் துதவி, அவர்களுடைய ஜீவனும்சத்தை விர்த்தி பண்ணுவதற்காக கவர்ண்மென்டாரால் அங்கங்கே இப்போது "ஐக்கிய நாணயக் கூட்டுறவு சங்கங்கள்" என்னும் பரோபகாரச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு வருவதை நண்பர்கள் அறிந்திருக்கலாம் இவைகளைக் கண்காணித்து பரிசீலனை செய்வதற்காக நியமிக்கப்பட்ட கவர்ண்மென்ட் உத்தியோகஸ்தர், நமது கத்தோலிக்கு நண்பராகிய ம-ா-ா-ஸ்ரீ திவான் பஹதூர் எல். டி. சுவாமிக்கண்ணுப் பிள்ளை யவர்களே. இத்தகைய சங்கங்கள் இப்போது இந்த சென்னை இராஜதானிக்குள் 972 சங்கங்கள் இருக்கின்றனவென்றும், இவைகளால் சுமார் 300 கிராமங்களுக்கு சகாயஞ் செய்யப்பட்டு வருகிறதென்றும், இவைகளால் ஆளப்பட்டு வரும்நிதியின் தொகை ரூபாய் 74,63,739 என்றும் சமீபத்தில் பிரசுரிக்கப்பட்ட ரிப்போர்ட்டால் தெரியவருகிறது. இந்த வெளிநாட்டு உள்நாட்டு ஐக்கிய சங்கங்களுடைய பிரதிநிதிகளெல்லாம் ஒன்ருய்க்கூடி, இச்சங்கங்களினுல் உண்டாகும் பிரயோஜனத்தை இன்னும் விருத்திபண்ணும் விஷயமாய் ஆலோசிக்கும் படிக்கேஷி "கோவாப்பரேடிவ் காண்பரன்ஸ்" என்னும் மகா சங்கம் சென்ற டிசம்பர் மீ 21-ம் தேதி சென்னை பச்சையப்பன் கலாசாலையில் கூட்டப்பட்டது. இக்கூட்டத்தை மாட்சிமைதங்கிய சென்னை கவர்னராகிய பென்ட்லான்ட் பிரபு அவர்கள் ஆரம்பஞ் செய்தார்கள். இச்சென்னை இராஜதானியின் பற்பல ஊர்களினின்றும் பிரதி நிரதிகள் வெகுபேர் விஜயஞ் செய்தார்கள். இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் அடுத்த பத்திரிகையில் விவரிக்கப்படும்.

---

# DOMESTIC OCCURRENCES.

# குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

## விசேஷக் குறிப்பு.

---

**அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 8-அணு முன்பணம் அனுப்பினுலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டாவென்பதை நண்பர்கள் கவனிக்கக்கோருகிறேம். அரைக்கலத்துக்கு மேற்பட்டு முக்கால் கலத்துக்குட்பட்டால் முக்கால் ரூபாயாகும். முழுக் கலத்துக்கு ஒரு ரூபாயாகும். கால் ரூபாய்க்கு இவ் விளம்பரங்கள் ஒருபோதும் பிரசுரிக்கப்படமாட்டா.**



## நன்மரண அறிக்கைகள்.

தூத்துக்குடி திவ்ய பனிமயமாதா கோவிலைச் சார்ந்த மடத்தில், நக்ஷத்திரமரி யெனுங் கன்னியாஸ்திரி சென்ற நவம்பர்மாதம்பரலோக பிராப்தியாஞர்கள். இக்கன்னிகை அஞ்ஞானப் பெற்ரேர்க் குதித்தவள். சிறு வயதிலேயே தன திளஞ் சகோதரியுடன், புதுவையில் அடைக்கலமாதா மடமென்னும் அர்ச். அசிசி பிராஞ்சீஸ்கு மூன்ருவது சபை மடத்தையே தஞ்சமெனக்கொண்டு, அங்கு வந்தடைந்தனள். ஞானதீட்சை பெற்று, வயதில் வளர வளரப் பக்தியில் முதிர்ந்து வந்தனள். பின்னர் தன்னை முழுவதும் இயேசுநாதர்க்கே தானஞ் செய்யுமாறு, கன்னியாஸ்திரீயாக வெண்ணி யநுமதி கேட்க, அப்படியே யேற்றுக் கொள்ளப்பட்டாள். சபையில் மூன்று வார்த்தைப் பாடுகளுங் கொடுத்து, பிறருக்கு நன்மாதிரியாக்வும், சர்வேஸ்பரனுக்குந் தனது சபைக்கும் உழைத்துவருவதில் பிரமாணிக்கமுள்ளவளாயு மிருந்தனள். இம்மடமானது மயிலாப்பூர் வந்தபின், உதவித்தாயாராய் நியமிக்கப்பட்டவள் இக்கன்னிகையே. புதிதாய் வந்தவிடத்தில் மடத்தை ஸ்தாபிப்பதில் பிரயாசையும், கட்டிடங்களைச் சீராய்க் கட்டிமுடிப்பதில் சிரத்தையுமெடுத்து, ஊக்கமுடன் உழைத்தவர்களில் ஒருவர் நக்ஷத்திரமரி சகோதரி. தனது வாஞ்சனையினுலும், பாராமரிப்பினுலும் கன்னியரால் "சின்ன தாயர" ம்மாளென்று அன்பாய் அழைக்கப்படுவாள். நாகப்பட்டணத்து கிளை மடத்தில் சிலகாலம் முதலாளித் தாயாராய் நியமிக்கப்படிருந்தனள். கடைசியாக, கொஞ்சகாலத்துக்கு முன்னேதான், தூத்துக்குடிக்குப் போகச் சித்தமானது: அங்கே யெல்லோருக்கும் பிரியமாக, தனது வேலையைச் செய்துவருங்கால் கொடும் வியாதியாகிய விஷபேதியால் பீடிக்கப்பட்டாள். மிக வமரிக்கையோடுஞ் சுத்த விருதயத்தோடுங் கடைசித் தேவத்திரவியாநுமானங்களைப் பெற்று தனது பத்தாவும் எஜமானனுமாகிய திவ்ய சேசுநாதர் பாதஞ்செல்ல, இவ் வுலகை விட்டகன்றனள். அவ் வாத்துமத்திற்காக வேண்டிக்கொள்வோமாக!

ஓர் பரிதாபி.

பெங்களூர் பிளாக்கிபள்ளி புராதீனரும், மெஸ் கண்டிராக்டர் ம-ா-ா-ஸ்ரீ, ஆரோக்கியம் பிள்ளை யவர்கள் ஏக புதல்வரும், பர்மாஸிவில்மெடிக்கல்சபார்டினேட்டும், தற்போது பெக்காக்கோ (Pekokko) ஸிவில் ஆஸ்பிற்றல் டாக்டரும், ஜேய்ல் தலைமையதிகாரி (Jail Superintendent) யாகவு மிருந்த என தத்தியந்த வாய்த வாச்சல்ய பள்ளித் தோழர் டாக்டர் பிரான்சீஸ் (Dr. F. A. Francis) இரக்ஷண்ய 1912-ஆம் டிசம்பர் மீ 16-ம்தேதி சோமவார மிரவு கர்த்தருக்குள் நித்திரையடைந்தனரென்ற சங்கதி யடுத்தநாள் அவரது இல்லறத் துணைவி ஸ்ரீமதி அந்தோனியம்மாள் விடுத்த தந்தியா லறிந்து திடுக்கிட்டு திக்பிரமை கொண்டேன். நாங்கள் ஒருவரைவிட்டொருவர் பிரிந்து கடந்த 20 வருடங்களாக என்று சந்திக்க வாய்க்குமோ வெனும் பேராவல் எங்கள் மனதில் குடிகொள்ள, அக்காலம் வருமென் றெதிர் பார்த்திருக்கையில், சருவமுமறிந்த தேவனின் திருவுளச்சித்த மிவ்விதமிருந்தது. நன்மைக்கே யாமென் றுணர்ந்தும் சஞ்சலம்நெஞ்சிற் பதிந்த தந்தோ விசனம்! இவர்தெய்வபக்தி யுள்ளவராயும், சற்குண சாந்த சீல சம்பன்னராயும், வந்தடுத்தவரெவரையுஞ் சொந்தமெனப்பாவித்து பரிசளிக்கு மியல்புவாய்ந்தவராயும், தமது அலுவலில் சதுரனென நற்பெயர்பூண்டு, எல்லவராலும் நல்லவரென மதிப்புப்பெற்றவராயு மிருந்தபடியால்; அப்பேர்ப்பட்ட நல்லவரைக்கடவுள் திருவுள் முவந்து அழைத்துக்கொண்டது ஆச்சர்யமல்ல. இவராத்தும இளைப்பாற்றிக்காகவும், தநயனை இழந்து தயங்கித் தவிக்கும் விருத்தாப்பிய தாயும், புருஷனைப் பரிகொடுத்துப்புலம்பியழும் பூவை அந்தோனியம்மாளும், தந்தையையிழந்து சிந்தைநொந்து சஞ்சலமுற்றழும் மக்களும், Marie Josephine Francis (பொன்னம்பாள்) Goerge Patrick Tom Francis, (ராஜபஹதூர்) Albert Edward Francis (ராஜராவ்) இவர்கள் மனவாறுதலுறவும், தங்கள் நுதின ஜெபங்களி லவசியம் மறவாது வேண்டிவர வெகு விநயமாய்க் கெஞ்சி மன்ருடுகிறேன்.

| | |
|---|---|
| 'Sth Marys' B ngalore. | C. S. ஞானப்பிரகாசம் பிள்ளை. ஹெட்மாஸ்டர். |

எனது மாமனுராகிய B. Manickam Pillay. B. மாணிக்கம் பிள்ளை அவர்கள்; சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் வசித்தவரும், தென்னிந்திய இருப்புப்பாதையில் சீப்கார்ட் வேலையில் 38 வருஷம் உத்தியோகஞ் செய்தவரும், கடைசியாய் அந்தியகாலத்தில் கோவில் விஷயத்தில்

மெத்த கவலையெடுத்து திரு இருதயநாதர் ஆலயத்தில் ஏற்படுத்திய ஜெப அப்போஸ்தலர் சபையில் 8 வருஷம் பிரமோட்டராயுமிருந்து, தினந்தவறுமல் சற்பிரசாதநாதரை உட்கொண்டுவந்தவர், திடீரென அசௌக்கியத்தினுல் 2 நாள் கோவிலுக்குவராமலிருந்து, நவம்பர்மீ 16-ந்தேதி சனிக்கிழமையன்று தன்னுடைய பத்தினியையும், ஏக குமாரனையும் இரு புதல்விகளையும், தன் அன்பான பேரப்பிள்ளைகளையும், இக் கண்ணீர் கணவாயில் பரிதபிக்கவிட்டு தன்னுடைய ஆத்துமத்தை பரம பிதாவினிடம் ஒப்புவித்தார். அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை கனம். நானஸ் சுவாமி அவர்கள் வீட்டிற்கு வந்து சடலத்தை மந்திரித்து, திரு இருதய கல்லறையில் நல்லடக்கம் செய்தார். இதனைக் கண்ணுறும் நண்பர்கள் அவர் ஆத்தும இளைப்பாற்றிக்காக 1-பர. 1-பிரி. 1-திரி. வேண்டிக்கொள்வார்களாக.

இங்ஙனம்,

அவருடைய மருமகன்,

A. John Pillai.

---


## கத்தோலிக்கு நண்பர்களுக்குப் புது அறிவித்தல்.

இவ்வருஷம் பிப்ரவரிமீ 5-ம் தேதியிலே தபசு காலம் ஆரம்பிக்கின்றது. இந்தத் தபசு காலத்தில் தியானத்திற்கும், ஞான வாசகத்திற்கும் ஏற்ற புஸ்தகங்கள் பல எம்மிடமுண்டு. அவற்றுள் சிலவற்றை இங்கு குறிப்பிட்டுக் காட்டுவோம். அவையாவன.—மன்ரேசா அல்லது ஞானமுயற்சிகளின் வியாக்கியானம், விலை ரூ. 1 அணு 14. ஆத்துமநேசம் என்ற திருப்பாடுகளின் தியானம் அணு 7. வெள்ளிக்கிழமைப் புதுமை அணு 10. அர்ச். வருஷம் ரூ. 1. அர்ச். வாரம் அணு 8. சிலுவைப்பாதை சிறியது கடுதாசிக்கட்டு அணு 3½. சிலுவைப்பாதை பெரியது அரைக்கட்டு அணு 10, ஷை தோல்கட்டு அணு 12. வியாகுல பிரசங்கம் அரைக்கட்டு அணு 9. ஷை கலிக்கோகட்டு அணு 10½. அர்ச் சூசையப்பர் வணக்கமாதம் கலிக்கோ அணு 12. ஷை தோல் அணு 14. திருஸ்தல வாசகம் அணு 3½.

### புலம்பலும் ஒப்பாரியும்.

திருப்பாடுகளின் ஒப்பாரி, வியாகுல மாதாவின் புலம்பல், திருமரி அன்னை பிரலாபம், ஒவ்வொன்றும் அணு 1½. சிலுவையகை ஒப்பு, வியாகுல மாமரியின் சாகரம், வியாகுலக் காதல் ஒவ்வொன்றும் அணு 1¼. அன்னை அழுங்கல் ஒப்பாரி அணு 2½.

இன்னும் பல ஞானவாசகப் புஸ்தகங்களும், வெகுமதி கொடுக்கத்தக்க பல வடிவான சீமைக்கட்டு செப புஸ்தகங்களும், ஜெபமாலை, படம், சுரூபம், கோவில் ஜோடினைச் சாமான்களும் இருக்கின்றன. விலை லீஸ்டு கேட்டால் அனுப்பப்படும்.

ச. பி. பாய்வ, கன்னுரத்தெரு, 7-வது நெம்பர், கொழும்பு.

X. P. Paiva, No 7, Brass Founder St., Colombo, Ceylon.


---


### கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு

நெடுங்காலமில்லாதது! அதிமுக்கிய அறிக்கை. நெருங்கக்கிடைத்தது!

யாவரும் தேடியலையும் புத்தக மிதுவேயாகும்.

## அர்ச். அந்தோனியார் சத்துரு சங்காரமாலை.

இஃது எம்மால் பழைய கையேட்டுப் பிரதிகளைக்கொண்டு சென்னை திருமயிலை மேற்றிராணி ஆண்டவரவர்கள் அளித்த உத்தாரப்படி ஷை யூர் ஜார்ஜ் டவுன் அர்ச். மோட்சராக்கினி மதாநாயகி மாதாவின் ஆலய விசாரணை குரு சங். L. X. பெர்னுர்தீஸ் சுவாமிகளால் நன்கு பரிசோதிக்கப்பெற்று, இலக்கண, இலக்கிய, சரித்திர வழுவில்லாமல் சுத்தப் பிரதியாக்கி நல்ல கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. இதில்,

அர்ச். அந்தோனியார் சரித்திர சுருக்கமும், சத்துரு சங்கார மாலையும், பதின் மூன்று தேவார மன்றுட்டும், சீட்டும், ஜெபமாலையும், அர்ச்: மிக்கேயேல் சம்மனசானவருடைய சத்துரு சங்கார மாலையும், சத்துருவை ஜெயிக்கும் மந்திரங்களும், வேறு தனித்தனியான விஷயங்களும், நவமாய்ச் சிலதும் சேர்க்கப்பட்டு லோகோபகாரமாக சுலப விலைக்கு விற்கப்படுகிறது

☞ இவ்வரிய புத்தகம் ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது. விலை. அணு 4. வி. பி. போஸ்டில் அணு. 6.

விலாசம்: A. ஜோப்பிள்ளை. (A. JoePillai.)

நெ. 30, ஏழுகிணற்றுத் தெரு, ஜார்ஜ் டவுன், சென்னை. E.





# நல்ல ஆயன்.

February—1913.

புத்தகம். 11. { "நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுடுகளும் நமக் குண்டு..அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10:16-14.) } நெம்பர். 2.


## PENANCE.

### தபசு.

தபசுகாலம் நெருங்கிவிட்டது. வருகிற புதன்கிழமை விபூதித் திருநாள். அன்றைய தினம் குருவானவர் மந்திரித்த நீற்றை நம் ஒவ்வொருவருடைய நெற்றியில் சிலுவை யடையாளமாய்ப் பூசி, "மனிதா! நீ மண்ணுய் இருக்கிறபடியால் மறுபடியும் மண்ணுய்ப் போவாய் என்பதை நினைத்துக் கொள்,, என்பார். தபசுகால துவக்க நாளாகிய அன்று குருவானவர் நடத்தும் இத் திருச் சடங்கின் தாற்பரிய மென்ன? முற்காலத்தில் மனிதர்கள் தவத்திற்கு அடையாளமா யிருக்கும் சாம்பலைத் தங்கள் தலைமேல் தூவிக்கொண்டு, தங்கள் பாவாக்கிரமங்களுக்காகத் தங்களை ஒறுத்து, கடின தவம் புரிவதுண்டு. அவ்வாறே பாவிகளான நாமும் தவம் புரியவேண்டு மென்று படிப்பிக்க பரிசுத்தத் திருச்சபை விபூதித் திருநாளை ஏற்படுத்தி ஷை சடங்கை அன்றைய தினம் நிறைவேற்றுகிறது. நம் ஆயுள் அளவும் நம்முடைய பாவாக்கிரமங்களுக்காக அழுது மனஸ்தாபப்பட்டு தவம் புரியவேண்டியவர்களாயினும், தபசு காலத்தில் அதை நாம் விசேஷ விதமாய் அனுஷ்டிக்கத் திருச்சபை கற்பிக்கின்றது. ஆகையால், விபூதித் திருநாளன்று விபூதியை ஒப்புக்கும் உபசாரத்துக்கும் குருவின் கையால் பூசிக்கொள்ளாமல், அது சுட்டிக்காட்டும் தபசை உண்மையும் உருக்கமுமுள்ள ஆசையோடு அனுசரிக்கும்பொருட்டு பூசிக்கொள்ளுவோமாக.

பூர்வம் பிலிஸ்தியருக்கும் இஸ்ராயேலருக்கும் யுத்தம் நடந்தபோது, இராக்ஷதனை கொலியாத் பட்டயம், ஈட்டி, கேடயம் ஆகிய இம் மூவ்வித ஆயுதங்களோடு புறப்பட்டுப்போய்த் தன்னோடு தனியாய்ச் சமர் புரிய சாமர்த்திய முள்ளவன் எவனுவது இஸ்ராயேலரின் சேனையி லிருந்தால் வரட்டும், ஒருகை பார்ப்போம் என்று நாற்பதுநாள் பரியந்தம் சபதங் கூறிக் கூப்பிட்டான். அதுபோல நரக இராக்ஷதனை பசாசும் மனிதர்பேரில் வெற்றிகொண்டு, அவர்களைத் தனக்கு அடிமைகளாக்கிக்கொள்ள, மூவ்வித ஆயுதங்களை உதவிக்கொள்ளுகிறது. அவையாவன:— சுகபோக வாசை, பொருளாசை, பெருமையி னுசை. அல்லது அர்ச். அருளப்பர் சொல்லியிருப்பது போல சரீர இச்சையும், கண்களின் இச்சையும், சீவியத்தின் ஆங்காரமுமே. (1-அரு. II. 16.) இம் மூவ்வித ஆயுதங்களினுலேயே பசாசு ஆதியில் நமது ஆதித் தாய் தந்தையை எதிர்த்து அவர்களை ஜெயித்தது. இம் மூவ்வித ஆயுதங்களினுலேயே இரண்டாயிர வருஷங்களுக்கு முந்தி நமது ஆண்டவரான சேசுநாத சுவாமியையும் அது எதிர்த்து நின்றது. ஆனுல் அவர் அதை அபஜெயப்படச் செய்தார். இவ் வாயுதங்களைக் கொண்டே இப்போதும் இத் துர்மன பசாசு நம்மைத் தாக்கிவருகின்றது. இத் தாக்கல்களை எதிர்த்து நின்று போராடி வெற்றி பெற நாம் விருப்பங் கொள்வோமானுல், ஒருத்தலுபவாசம், தானதர்மம், ஜெபத்தியானமாகிய இம் மூன்றையும் நமக்கு ஆயுதங்களாக உபயோகித்துக்கொள்ளக் கடவோம். வரப்போகிற தபசுகாலத்தில் இவ்வாயுதங்களைப் பழக்காமல் அவைகள் துரு பிடித்து, கருத்து, மழுங்கிக்கிடக்கப் போட்டு வைப்போமானுல், நாம் தவம் புரிகிறவர்களல்ல. ஏனென்றுல், இவ் வாயுதங்

களைச் சரியாய்ச் சாதகஞ் செய்வதே மெய்யான தபசு.

சிற்றின்ப வாசையை ஜெயித் தடக்க ஒருபொழுது உபவர்சம் அவசரம். மட்டுதிட்டமின்றி பெருந் திண்டி தின்போரும், வெறிகொள்ளுமட்டும் மதுபானங்களை அருந்துவோரும், கிரமந் தப்பின பற்பல சரீர இச்சைகளால் இம்சிக்கப் படுவார்களென்பது திண்ணம். நன்றாய் ஊட்டங்கொடுக்கப்பட்டு நாளொரு மேனியாயும் பொழுதொரு வண்ணமாயும் வளர்க்கப்பட்டு வரும் மானுட தேகம் கடிவாளத்திற்கு முதலாய் அடங்காத ஓர் சண்டிக் குதிரைக்கே சமானம். ஆகையால் இப்படி தங்கள் சரீரத்தை வளர்க்கிறவர்களிடத்தில் மோகவாசை, சோம்பேறித்தனம் முதலான துர்க்குணங்கள் உக்கிர ஆவேசத்தோடு கிளம்பும். அவர்கள் அவைகளை வென்றொழிக்க முடியாமல், அவைகளுக்கு அடிமைப்பட்டுக் கிடப்பார்கள். சோதோம் கொமோரா பட்டணத்தார் அன்னபானப் பிரியரா யிருந்த தினிமித்தம் காமாதுரராய்ச் சீவித்தார்கள். அன்றியும் அன்னபானப் பிரியத்திற்குத் துணையாயிருக்கும் துர்க்குணமான சோம்பேறித்தனத்தை அவர்கள் ஓட்டி, தங்கள் பாவாக்கிரமங்களுக்காக ஜெபதபம் புரியவும் தவறினபடியால், சாத்தானால் ஜெயிக்கப்பட்டு நித்திய கேட்டுக்குள்ளானார்கள். ஆனால் மட்டசன பானம் பண்ணி ஒருபொழுதுபவாசம் பிடிப்பவர்களுக்கு இப்பேர்ப்பட்ட நிர்ப்பாக்கியம் நேரிடாது. இவர்கள் தங்களிடத்தில் கிளம்பும் துர் இச்சைகளை எதிர்த்து அவைகளை மேற்கொள்ள பின்னிடையார்கள். சாத்தானால் அவர்களுக்கு வரக்கூடிய சோதனைகளையும் விலக்கி விடுவார்கள். "உபவாசத்தால் துர் இச்சைகள் உலர்ந்துபோகும், காமவாசை குறைந்துபோகும், சிற்றின்பவாசை பலவீனப்படும், சுகபோகவாசை ஒழிந்துபோகும்" என்கிறார் அர்ச். சிப்பிரியான். வாலிபன் ஒருவன் வயோதிகரான ஓர் சந்நியாசியாரிடஞ் சென்று மோகசோதனைகளால் தான் அதிகமாய் அலைக்கழிக்கப்பட்டு வருவதாகச் சொல்லி முறையிட்டுக்கொண்டான். அதற்குச் சந்நியாசியார் தாம் இதுவரையிலும் அந்த சோதனைகளால் அவ்வளவாக இம்சைப் பட்டதில்லை யென்றார். அப்போது வாலிபன் இவைகளின் இம்சைக்குத் தப்பித்துக்கொள்ள அவர் பிரயோகித்துவரும் சாதனங்கள் என்னவென்று கேட்க சந்நியாசியார் சொன்னதாவது:-"எனக்கு அவசரமானமட்டும் ஆகாரமும் தண்ணீரும் உண்டு வருகிறேன். மட்டுக்கு மிஞ்சி ஒருபோதும் என் பசி தாகத்தை தீர்த்துக் கொள்வதில்லை. ஆனதுபற்றி மோக சோதனைகளினால் என் ஆத்துமத்துக்குச் சேதம் நேரிடுவதில்லை. ஒருத்தலுபவாசமே இதற்குத் தக்க பரிகாரம்" என்பதேயாம்.

ஆகையால் நமது சரீரத்தை ஒறுத்தலுபவாசத்தினால் வரப்போகும் தபசுகாலத்தில் தண்டித்து வருவோமாக. திருச் சபையின் கட்டளைக்கு அமைந்து சுத்த போசன நாட்களில் சுத்தபோசனமும் ஒரு சந்தி நாட்களில் ஒரு சந்தியும் அனுசரித்து நமது சரீரத்தை ஒறுப்போமாக. உபவாச விஷயத்தில் இவ்வளவாகிலும் வருந் தபசுகாலத்தில் அனுசரியாவிட்டால் நாம் பேருக்கு தவம் புரிவோர்களாவோம். ஒருபொழுது பிடிக்க கடமைப்பட்டவர்கள் கவனிக்கத் தக்க ஒரு விஷயமுண்டு. சில்லறைப் போசனம் அருந்துகையில் மட்டுக்கு மிஞ்சிப் போகாமல் இருக்கவேண்டுமென்பதே. அனேகர் உருசியான பலகாரங்களைச் செய்து வைத்துக்கொண்டு "சில்லறைப் போசனந்தானே" என்று சொல்லி அவைகளைப் பிட்டுப்பிட்டு தாங்கள் வழக்கமாய்ச் சாப்பிடும் சாப்பாட்டின் அளவுக் கதிகமாகவே அவைகளை மூக்குப்பிடிக்க சாப்பிட்டு வருகிறார்கள். சில்லறைச் சாப்பாட்டினளவு பூரணசர்ப்பாட்டின் மூன்றிலொரு பாகமாயிருக்கக்கொள்ள, அந்த அளவை மீறி சாப்பிடுகிறவர்கள் ஒருபொழுதின் கடமையை நிறைவேற்றுகிறவர்களல்ல. ஆனபடியால், ஒழுங்கின்படி ஒருபொழுது பிடிப்பதினாலும் விலக்கவேண்டிய நாளில் மாமிசத்தை விலக்குவதினாலும் நமது சரீரத்தை ஒறுத்து வருந்தபசுகாலத்தில் தபம் புரிவோமாக.

இப்பிரபஞ்சத்தில் குபேர சம்பத்துடையவனாய் வாழ ஆசியாதவன் யார்? ஆஸ்தி பாஸ்தி, சொத்து சுதந்தரம், காணி பூமி இவைகளை யெல்லாம் ஏராளமாய்க் கொண்டிருக்க எல்லோரும் ஆசைப்படுவது சகஜம். ஆகையால், பாடுபட்டுத் தேடி பணத்தைச் சம்பாதிப்பார்கள். சம்பாதித்த பணத்தை வட்டிக்கு விட்டாவது அல்லது வேறுவிதமாகவாவது பெருக்கி வரு



வார்கள். "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும்" என்பதற்குகொப்ப காசு பணம் சம்பாதிப்பதில் நாம் மட்டுதிட்டம் பாராவிட்டால், மதிமோசம்போவோம் என்பது வாஸ்தவம். காசு பணம் தேடும் விஷயத்தில் பொருளாசை நியாயம் அநியாயம் பாராது; பிறர் சொத்தை அபகரிக்க அஞ்சாது; ஏழை எளியோர் பேரில் ஈவு இரக்கங்கொள்ளாது. காசுக்குமேல் காசு சேர அநியாய வட்டி வாங்க துணிவுகொள்ளும். இன்னும் காசையே கடவுளாகப் பாவித்து மெய்யங்கடவுளை மறக்கச்செய்யும். ஆகையால் அல்லவா, அர்ச். சின்னப்பரும் "ஐசுவரிய வான்களாய்ப்போக விரும்புகிறவர்களோ சோதனையிலும், பசாசின் கண்ணியிலும், கேட்டிலும், நரகாக்கினையிலும், மனிதர்களை அமிழ்த்துகிற வீண் கெடுதியுமான பற்பல இச்சைகளிலும் விழுகிறார்கள்" (1. திமோத் VI. 9) என்று வசனித்திருக்கிறார். ஞான நூலாசிரியரான இன்னொருவர் சொல்லியிருக்கிறதாவது: மனிதனை நித்தியகேட்டுக்குள்ளாக்க மண், பெண், பொன் என்னும் மூவாசைகளுண்டு. பெண்ணாசையைப்பற்றி மோகபாவங்களைக் கட்டிக்கொள்ளுகிறவர்களுக்குள் 100-க்கு 50 பேரும், மண்ணாசையினால் மகிமை பெருமையைத் தேடுகிறவர்களுக்குள் 100-க்கு 30-பேரும் பாவசங்கீர்த்தன மூலமாய்ப் பாவ விமோசனம் பெறுவார்கள். ஆனால் பொன்னாசையான பணவாசை பிடித்தவர்களுக்குள் 100-க்கு மூன்று பேர் கூட பொறுத்தல் அடைவது துர்லபம். ஏனென்றால், இவர்கள் அநியாயமாய்ச் சம்பாதித்த சொத்தை உத்தரிக்க மனசுகொள்ளாததினால், பாவ விமோசனமடைகிறதில்லை என்பதே. லம்பார்டியருடைய அரசனான அரிபார்த் என்பவன் தன் சேனைக்குள் கலகமாயிருந்ததின் நிமித்தம் பிரான்சு தேசத்துக்கு ஓடிப்போகத் தீர்மானஞ் செய்தான். அப்போது தன் நாட்டின் கஜனாவுக்குள் சென்று எவ்வளவு பணம் தன்னோடு கொண்டுபோகக் கூடுமோ அவ்வளவு எடுத்து மடியிற் கட்டிக்கொண்டு புறப்பட்டான். வழியில் ஓர் ஆற்றைக் கடக்க நேரிட்டது. பணமுடிப்போடு நீந்த முடியாமல் ஆற்றுக்கு இரையானான். இவ்வாறே பணப் பைத்தியம் பிடித்தவர்களும் மரணத்துக்குப் பின் நித்திய காலத்துக்கும் நரகக்குழியில் புதைபட்டுக் கிடப்பார்கள்.

தானதர்மமே பணவாசையை வென்றொழிக்க வல்ல ஆயுதமாகும். "தர்மம் தலை காக்கும்" என்று உலகமே சொல்லி வருகிறது "இரக்கமுள்ளவர் பாக்கியவான்கள்; ஏனெனில் அவர்கள் இரக்கம் அடைவார்கள்" என்று நமதாண்டவரான சேசுநாதசுவாமியும் திருவுளம்பற்றியிருக்கிறார். இப்படியா யிருக்க, நாம் பணத்தை எவ்வளவு ஆவலாய்ச் சேகரித்து சேர்க்கிறோமோ, சேர்த்ததை நியாயமானபடி செலவிடாமல் எவ்வளவுக்கு அதைப் பதுக்கிப் பத்திரப்படுத்தி வைக்கிறோமோ அவ்வளவுக்கு அதன்பேரில் நமக்குள்ள பற்றுதலும் அதிகரிக்கும். ஆனால் எவ்வளவுக்கு உதார குணத்தோடும் நல்ல மனதோடும் ஏழை எளியவர்கள் விஷயமாகவும், சர்வேசுரனுடைய மகிமை தோத்திரத்துக்காகவும் செலவிடுவோமோ, அவ்வளவுக்குப் பணவாசை நம்மிடத்தில் அற்றுப்போகும். ஆகையால், துவக்கப்போகிற தபசுகாலத்தில தாராளமாய் தர்ம மிடுவோமாக. "நான் தனவந்தனல்ல; என்னிடத்தில் காசு பணமில்லை; எனக்குப்பல இழுப்பு பறிப்புகளுண்டு; நான் எப்படி தர்மஞ் செய்வது?" என்று சொல்வது நியாயமல்ல. ஏனெனில், "மனசுண்டானால் வழியுண்டு" நம்முடைய பாவங்களைப் போக்கிக் கொள்வதற்காகத் தவம்புரிய நமக்குக் கடமையுமுண்டு. ஆகையால், நாம் ஒவ்வொருவரும் சாக்குப்போக்குச் சொல்லாமல் நம்முடைய அந்தஸ்துக்குத் தக்கபடி தவத்தோடு சம்பந்தப்பட்டிருக்கும் தான தர்மத்தையுஞ்செய்து பாவப்பரிகாரமடைவோமாக.

சர்வேசுரன் ஆங்காரமென்னும் துர்க்குணத்தின்பேரில் பகை வர்மம் கொள்வதுபோல் வேறு எதின்பேரிலும் கொள்வதில்லை. ஏனெனில் "ஆங்காரமானது சர்வேசுரனாலும் மனிதராலும் அருவருக்கப்படத்தக்கது........ சகல பாவத்தின் அஸ்திவாரம் ஆங்காரம்; அதைக் கைப்பற்றினவன் சாபனைகளால் நிரப்படுவான்; கடைசியில் அது அவனை நாசமாக்கும்". (சர்வ. பிரச. X 7-15.) பரலோகத்தில் சம்மனசுக்களும் பூலோகத்தில் ஆதாம் ஏவாளும் கடினமாய்த் தண்டிக்கப்பட்டதே இதற்கு அத்தாக்ஷி. இப் பாவத்துக் குள்ளாகாதோர் வெகு சொற்ப பேரே. ஏறக்குறைய எல்லோரும் தங்களுக் குள்ள சுபாவ நன்மைகளான அழகு சௌந்தரியம், சாமர்த்தி

யம், திறமை, கல்வி, புத்தி இவை முதலானவைகளும், உலக நன்மைகளான ஆஸ்திபாஸ்தி முதலியவைகளும் சர்வேசுரனுக்குச் சொந்தமல்ல, தங்களுக்கே சொந்தமெனப் பாராட்டுவார்கள். மற்றவர்களை விட தாங்களே மேலானவர்களென்றும், மற்றவர்களால் தாங்கள் பெருமையாகப் பாவிக்கப்பட்டு புகழ்ந்து கொண்டாடப்பட வேண்டுமென்றும் ஆசிப்பார்கள். யாதோர் குறைவு, தாழ்வு வந்துறுமாயின் ஐயோ! எவ்வளவோ கலங்கி கஸ்திப்பட்டு கோபமும் ஆத்திரமுங் கொள்வார்கள். ஆங்காரம் எப்போதும் சாவானபாவமாகாதாயினும், அதனால் விளையும் பொல்லாப்புகள் அநேகம். அது நமது நற்கிருத்தியங்களுக்கு பலன் கிடையாமற் போகச் செய்யும். தேவானுக்கிரகத்தை இழக்கச் செய்யும். பற்பல குற்றங்குறைகளுக்குக் காரணமாயிருந்து நாம் சன்மார்க்கத்தில் தேற்சியடையால் போகச் செய்யும். அதை மாத்திரம் நம்மிடத்தில் வேறான்ற விடுவோமானால், சன்னஞ் சன்னமாய் நாம் சர்வேசுரனைப் புறக்கணிக்கவும், கடைசியாய்க் கனமான பாவங்களில் விழுந்து சர்வேசுரனை முற்றும் புறக்கணித்து அவரை அவமதிக்கவும் அது செய்யும்.

இப்பேர்ப்பட்ட துர்க் குணத்தோடு நாம் வெகு எச்சரிக்கையாய் போராட வேண்டியதல்லவா? இப்படி போராட செபத்தியானத்தையே நாம் படைக்கலமாக உபயோகித்துக் கொள்ளவேண்டும். அதேனென்றால், நாம் ஒன்றுமில்லாமையிலிருந்து உண்டானவர்களென்றும், நம்மால் ஒன்றுமாகாதென்றும், நமக்கு அவசரமானவைகளையெல்லாம் அளிக்க சர்வேசுரனே வல்லவரென்றும், அவரிடத்திலிருந்து தான் அவைகளை பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் உள்ளத்தில் உணர்ந்தல்லவா ஜெபிக்க நாம் வாய் திறக்கிறோம். இது நம்மிடத்தில் விளங்கும் தாழ்ச்சியேயன்றி வேறென்ன? ஜெபத்தியானம் செய்ய பசாசால் முடியவே முடியாது. ஏனென்றால், அது தாழ்ச்சியின் வாசனையை முதலாய் அறியாது. மேலும் "என் நாமத்தினால் நீங்கள் பிதாவை கேட்கும் யாவையும் உங்களுக்கு அளித்தருள்வாரென்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (அருள: XVI 23) என்று நமது கர்த்தர் திருவுளம் பற்றி யிருக்கிறபடி, சகல நன்மைசுரூபியாகிய சர்வேசுரனுடைய பொக்கிஷத்திலிருந்து நமக்கு வேண்டிய நன்மைகளையும் உதவி சகாயங்களையும் மனங்கொண்டமட்டும் நாம் வாரிக்கொள்ள, ஜெபமே திறவுகோலாயிருக்கிறது. ஆகையால், நம்முடைய ஆங்காரத்தை ஜெயித்தடக்கி, தாழ்ச்சியுள்ளோராக, வரும் தபசுகாலத்தில் பக்தி உருக்கத்தோடு ஜெபிப்போமாக. நமது கர்த்தர் மரிப்பதற்கு முந்தி பட்டபாடுகள், அனுபவித்த நிந்தை அவமானங்கள், கஸ்தித் துன்பங்கள் இவைகளையெல்லாம் ஆழ்ந்து தியானித்து, அவரைப்போல் தாழ்ச்சியும் சாந்தகுணமுமுள்ளவர்களாக முயலுவோமாக.

வியாதி பிடித்தவன் ஔஷதம் அருந்துவது அவசிய மென்பதுபோல் பாவ வியாதி பிடித்திருக்கிற நாமும் தவம் புரிவது அவசியம். "நீங்கள் தவஞ் செய்யாவிட்டால் சிதைந்து போவீர்களென்று" நமது கர்த்தர் திருவுளம் பற்றின வசனத்தை மனதில் இருத்தி, மேற்சொன்ன தவக்கிருத்தியங்களான ஒறுத்தல் உபவாசம், தான தருமம், ஜெப தபம் இவைகளை சுறுசுறுப்புடனும் ஆவலுடனும் வரும் தபசுகாலத்தில் அனுஷ்டித்துப் பரிசுத்தத் தனத்தை யடைவோமாக.

---

## CATHOLIC ZEAL.
## கத்தோலிக்கு சித்த வைராக்கியம்.

---

கத்தோலிக்கு திருச்சபையானது தன் சத்துருக்களுடன் சதா போர் பொருதவேண்டியதா யிருக்கிறது. நீதிப்பிரமாணம் என்னும் அஸ்திவாரத்தின்மேல் சத்தியமார்க்கம் என்னும் சுவரை வளர்த்து, சுஞ்ஞானமாகிய முகடு வேய்ந்து, தனது விடா முயற்சியோடும் வீர பராக்கிரமத்துடனும் விளங்கிக்கொண்டிருக்கும் இந்த தெய்வீகக் கலாசாலையானது அதன் மாணவராகிய கத்தோலிக்கு விசுவாசிகளுக்கு ஏற்படுகின்ற கஷ்டநஷ்டங்கள் மட்டில் மிகவும் அநுதாபமுடையதாயிருக்கிறது. அதன் விரோதிகள் எவர்களோ அவர்கள் கிறீஸ்து வேதத்திற்கே விரோதிகளா யிருக்கிறார்கள். ஓ! திருச்சபையின் எதிரிகள் எவ்வளவு ஒருமைப்பாடா யிருந்து அதை மேற்கொள்ளப் பார்க்கிறார்கள். எங்கு பார்த்தாலும் கலகத்தையும் புரளியையும் எழுப்பிவிட எத்தனிக்கிறார்கள்; கிறீஸ்து



வத்துக்கு விரோதமான போலிச் சட்டங்களைச் செய்கிறார்கள்; இராஜாங்கத்தையே வேதத்துக்கு விரோதமாகத் திருப்பி விடுகின்றனர்; கத்தோலிக்கரை எந்தமட்டுக்கும் அடிமைப்படுத்தக் கூடுமோ அந்தமட்டிற்கும் அவர்களை அடிமைப்படுத்திவைக்க ஆவேசத்துடன் உழைத்து வருகிறார்கள். ஆமாம், சத்துருக்களின் ஊக்கத்திற்கும் உற்சாகத்துக்கும் அநேக வேளைகளில் நமது அசமந்தமும் அசதியுமே காரணமா யிருக்கின்றன வென்கலாம்.

சகோதரர்களே! இற்றைக்கு ஏறக்குறைய 30 வருடங்களுக்கு முன் பெல்ஜிய தேசத்திலும் இப்படித்தான் பிரான்ஸ், போர்த்துகாலிற் போல, வேத கலகம் விளைய ஆரம்பித்தது. 30 வருடங்களுக்குப் பின்னால் வரப்போகிற கலாபனையை முன்னாலேயே கண்டுகொண்டார் "வெர்பெக்" என்னும் ஓர் சேசு சபைக் குருவானவர். இவர் பேச்சில் வல்லவர், எழுத்தில் சமர்த்தர். வரவிருந்த புரட்சி மிகவும் பயங்கரத்துக் குரியதென்பதற்கு, அத் தேசத்தில் யாதாமொருவன் கத்தோலிக்குப் பத்திரிகையை வாசிப்பானாயின், உடனே அவன் சின்னாபின்ன மடைவதோடு அப்பத்திரிகையும் டாறுடாறாய்க் கிழிக்கப்படும் என்று சொல்லப்பட்டதையும் இங்கே அத்தாட்சி கூறலாம். இதற்கெல்லாம் கிறிஸ்துவர்களின் அசமந்தமே காரணமெனக் கண்ட வெர்பெக் என்னும் அந்த அந்தணசிரோன்மணி யென்னசெய்தார்? கத்தோலிக்கரை ஒன்று சேர்த்தார். கவலையினத்தால் வந்த கஷ்டத்தையும், இனிவரப்போகிற கடும் பாடுகளையும் சவிஸ்தாரமாய் விளக்கிக்காட்டினார். அதிர்ஷ்ட வசத்தால் 1882-ம் வருடத்திய தேவ நற்கருணைச் சங்கமும் பெல்ஜிய தேசத்திலேயே நிறைவேறக் கிடைத்தது. இது விஷயத்திற்காக கத்தோலிக்கர் சகலரும் ஒன்றுகூட வேண்டி வந்தது. இக்கூட்டத்தில் தலையாய் நின்றவர் அத்தேசத்து இளங் குமாரர்களே. "வெர்பெக்" சுவாமிகளின் நல்லுபதேசத்தால் வீராவேசங் கொண்டவர்களாகிக் குமாரர்களெல்லோரும் ஆர்ப்பரித்துச் சிங்கநாதம் செய்தார்கள். தம்மையும் தங்கொள்கையையும் அஃதால் தமது நாட்டையும் பேணிக்கொள்வான் முற்பட்டார்கள். இடியோசை கேட்ட நாகம்போல் கிடுகிடுங்கினார் வேத விரோதிகள். சில்லறைகளையெல்லாம் கட்டிப் பரணில் போட்டு விட்டார்கள் குழப்பக்காரர்கள். ஒன்றித்த அபிப்பிராயத்துக்கு உறைவிடமாயிருந்த ஓர் கத்தோலிக்க சங்கத்தின் ஆதரவில் கல்வி பெற்று, மந்திராலோசனைச் சபையில் அங்கத்தினராகவும், இராஜாவிற்கே பிரதம மந்திரிகளாகவும் வந்துவிட்டார்கள் உண்மையான கத்தோலிக்கர்கள். வாசிப்பார் கிடையாது மயக்கத்தில் ஆழ்ந்து கிடந்த பல கத்தோலிக்குப் பத்திரிகைகள் உடனே முனைமுகத்தில் நின்று வேத விரோதப் பத்திரிகைகளை வேரோடறுத்து வீழ்த்தின. பசாசின் தாசராகிய பிரிமேசன் கொள்கைக்கு ஈடுபட்டுக் கிடக்கும் பிரான்ஸ் போர்த்துக்கல் முதலிய தேசங்கள் பிரமிக்கும்படியாய் இந்தப் பெல்ஜியதேசம் திருச்சபைக்கு வலப்புஜம் போல் நின்று எண்ணிறந்த குருக்களை இன்றைக்கும் சவதரித்துக் கொண்டிருக்கின்றது. சுறுசுறுப்பிலும் சுகிர்த கிருத்தியங்களிலும் தலைப்பட்டவர்கள் பெல்ஜியவாசிகள் என எங்கள் ஞான தந்தையாகிய சிஷ்ட சவேரியார் முன்னொரு நாள் சொன்னது மேற்கூறியவகையாயும் நிறைவேறிவருகின்றது.

இனி இப்போது வேத விரோதிகள் வசப்பட்டுக் கிடக்கும் போர்த்துக்கால் தேசத்தைப் பார்ப்போம். பெல்ஜிய தேசத்திற் போன்ற ஓர் விசேஷித்த கத்தோலிக்க ஜன சமூகமானது அங்கு இருக்கிறதாகத் தெரியவில்லை. ஆனால் வேதப் பிரமாணிக்க முள்ளவர்கள் ஆங்காங்கு துக்குடி துக்குடியாய்ச் சிதறி நிற்கின்றார்கள் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது. இவ்விதமான நல்ல கிறீஸ்துவர்கள் அநேகமாய் போர்த்துகாலின் வடபாகத்தில் இருக்கிறார்கள் தான். இது வேத விரோதிகளால் நிர்ப்பந்திக்கப் பட்டுவரும் குருப்பிரசாதிகளுக்குப் பக்கபலமாய் நின்று அவர்கள் அப்போதைக் கப்போது அக்குருக்களைப் பாதுகாத்து வருவதிலிருந்து ருஜுவாகிறது. என்றாலும் போர்த்துக்கீஸ் கத்தோலிக்கரின் பூராத் தொகையையும் எடுத்துக் கொள்ளுவோமானால், அத்தேசத்திய கத்தோலிக்க ஜன சமூகமானது எந்த மட்டும் திருச்சபைக்குத் துணையாய் நிற்க வேண்டுமோ அந்த மட்டும் நிற்கிறதாக வில்லை யென்பதையிங்கு சொல்லாமலிருக்க முடியவில்லை. தேச சட்டமும் வேதசட்டமும் இத்தனைகாலம் ஒன்றையொன்று தழுவியிருந்ததுபோய், இப்போது திருச்சபையைப் புறம் பாக்கிப் போட்டோமெனத் திருச்சபை மகிமைக்கெல்லாம் எதிர்முகமும் எடாகூடாமுமான போலிச் சட்டம், ஊழல் அரசால் ஊர்ஜிதத்திற்கு வந்தபோது பூர்வ கிறீஸ்துவராகிய போர்த்துக்கீஸ் ஜன

சமூகத்தார் அநேகமாய் சட்டத்துக்குச் சரண் புகுந்ததுபோல் இருந்து விட்டது மிகவும் அநுதாபமான காரியம். பட்ச பாதகமில்லாத புத்திமான்களுக்குப் பரிச்சேதமும் ஒத்துவராத அவ்வீன சட்டத்தின் போக்கையும் நோக்கையும் நமது ஞானப்பிதாவாகிய பரிசுத்த பாப்பாண்டவர் சுட்டிக்காட்டி, அது குருப்பிரசாதிகளும் அவர்களது அத்தியட்சர்களும் தங்கள் மேன்மையான ஸ்தானத்தைக் காப்பாற்றிக் கொள்ள எவ்வளவு இடைஞ்சலாயிருக்கிறதென்பதையும், திருச்சபை மகிமைக்கு அந்நாட்டில் எத்தனை பங்கத்தை வருத்துவிக்கக் கூடியதென்பதையும், வேத பிரமாணிக்கம் நிறைந்த விசுவாசிகள் இதன் விஷயத்தில் எத்தனை எச்சரிக்கையாயிருக்கவேண்டுமென்பதையும் எடுத்துச்சொல்லி, ஓர் நிருபம் அனுப்பியிருக்கிறது நம் மெல்லோருக்கும் தெரியும். நமது ஞான தந்தையால் அறவே கண்டிக்கப்பட்ட அந்த ஈன சட்டம் போர்த்துக்கீஸ் கத்தோலிக்க ஜன சமூகத்துக்கு இதுவரை எவ்வித மனத் தாங்கலையும் கொடாதிருப்பதற்கு நம்போல்வார் மிகவும் ஆச்சரியப்படவேண்டிய தொழிய வேறென்ன விருக்கிறது! என்ன பரிதாபம்! ஆங்கு எல்லையற்ற நிர்ப்பந்தமும், நிட்டூரமும் இன்னமும் தொடர்ச்சியாக நடந்துகொண்டேயிருக்கிறது. போர்த்துக்காலில் குருக்களில் பலரும், பிரமாணிக்கம் நிறைந்த கத்தோலிக்கரில் அநேகரும் அன்றுடம் கைதியாக்கப் படுகிறார்கள். இவர்களுக்கெனப் புதிதாய்ச் செய்யப்பட்டுப் பன்றிக்குகைகளைப் பார்க்கிலும் கேவலமாயுள்ள சிறைச்சாலைகளில் இதுவரை பெரும்பான்மையோர் இறந்தும்போய் விட்டார்கள். தேவபயமில்லாத மந்திரிமார் இப்போது "லிஸ்போன்" பட்டணத்துப் பிதாப்பிதாவையும் "கார்தா" நகரத்து அதிமேற்றிராணியாரையும், ஒப்போர்ட்டோ நகரத்து அத்தியட்சர்களையும் ஊரைவிட்டுப் புறம்பாக்கிப் போட்டார்கள்.

இனிமேல் போர்த்துக்கால் நிலைமை அந்த ஜன சமூகத்தின் உற்சாகத்தைப் பொறுத்திருக்கிறது. போர்த்துகேயர் தங்கள் உற்சாகத்தை எந்தவிதமாய்ப் பிரயோகித்துத் தங்கள் பூர்வீகக் கீர்த்தியைப் புதுப்பித்துக்கொள்ளப் பார்ப்பார்களென்று நாம் பார்க்கவேண்டும். எவனும் கொடுங்கோல் அரசாட்சி யொன்றிற்குத் தனது ஆத்தும காரியத்தில் தன்னை அடிமையாக்கிக்கொள்ள வேண்டுமென்று இங்கு சொல்லப்படவில்லை. லிஸ்போன் பிதாப்பிதாவும் இரு அதிமேற்றிராணிமார்களும், ஆறு மேற்றிராணிமார்களும் சேர்ந்து பிரஜாதிபதிக்கு ஓர் மறுப்புக் கடிதம் எழுதி, அதில் வேத விஷயங்களில் அரசாங்கத்தார் இந்தவிதமாய்க் கலந்துகொள்வது மிகவும் அயோக்கியமான காரியமென்றும், மனிதனுக்குக் கடவுளால் கொடுபட்ட சுவாதந்திரியத்தைத் தமது மந்திரிமார் அப்புறப்படுத்தப் பார்ப்பது மனுஷத் தனத்திற்கே விரோதமென்றும், ஆத்தும காரியத்தில் இன்னனைய கொடுங்கோலுக்குக் கீழடங்கிப் போவதற்குப் பதிலாய் இன்னும் உங்களால் வரக்கூடியதாயுள்ள எத்தனையோ நிஷ்டூரங்களையுங்கூட அநுபவிக்கத் தயாராயிருக்கிறோமெனவும் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். மேலும் நமது குருப் பிரசாதிகளால் குடியரசிற்கு எவ்வித இடைஞ்சலும் இருக்கிறதாகத் தெரியவுமில்லை. ஆனால் திருச்சபைக்கு விக்கினமான துர்க்கிரிகைகளை ஓர் அரசாங்கம் செய்யுமேயானால் அவ்வரசாங்கத்தை எவ்வளவு தூரம் எச்சரித்துப் புத்தி புகட்டவேண்டுமோ அவ்வளவையும் புகட்டி வருவதில் அந்த நல்ல குருப்பிரசாதிகள் கிஞ்சிற்றும் பின் வாங்கவில்லை.

புது அரசாட்சியில் நாட்டின் ஏனையவளங்களாவது எப்படியிருக்கிறதென்றால் உத்தியோகஸ்தருடைய நோக்கமெல்லாம் எக்காரணத்தைக் கொண்டேனும் உயர்ந்த சம்பளம் வாங்கவேண்டுமென்பதிலும், அவர்களது சகாக்களுக்குப் பக்கபலமாயிருக்கும் நூதன நியமனங்களையுண்டாக்கி உத்தியோகம் கொடுக்கவேண்டுமென்பதிலும், திருச்சபையின் பலத்தைக் குறைத்து அதற்கு விரோதமான இரகசியக் கூட்டங்களைப் பலப்படுத்தவேண்டுமென்பதிலுமே அடங்கியிருக்கிறது. காரியமிப்படியிருப்பதால் இனி ஆங்குள்ள கத்தோலிக்க ஜனசமூகம் செய்யவேண்டியதெல்லாம் தனது மேற்றிராணிமாருடையவும் குருக்களுடையயும் கட்டுப்பாட்டுக்கடங்கி, அவ் வேத தாதாக்களையே முன் மாதிரிகை கொண்டு நடப்பதே. போர்த்துக்கீஸ் ஜனசமூகமானது வேதபிரமாணிக்கத்தையே தனது பிரதம கோட்பாடாய்க் கொண்டிருக்குமாயின், அப்பேர்ப்பட்ட வேத வுறுதியைத் தளர விடுவதைப் பார்க்கிலும் கீழானதொன்றுமில்லை யெனத் தான் நினைக்கவேண்டுவதொடுங் கூடத் தனது குருப்பிரசாதிகளுக்கு வருகிற இடுக்கண்களெல்லாம் தனக்கே வருகிறதாகப் பாவித்து, எந்த நிமிஷமும் குருக்களுக்கு ஒத்தாசை செய்யத் தயாராயிருக்கவேண்டும். அப்படியாயின் எப்பேர்க்கொத்த வேத கலாபனையும் வெகு விரைவில் மாறிப்போகக் கூடும். அங்ஙனமல்லவா பெல்ஜிய தேசத்தில் வரவிருந்த பெரிய பொல்லாங்கு சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கிப்போனது. போர்த்துக்கால் கலாபனையைப்போலொன்று ஜெர்மனியில் பிரின்ஸ் பிஸ்மார்க் மந்திரியாயிருக்கும்போது வெளிக் கிளம்பப் பார்த்தது. அங்குகூட அத்தியட்சர்களும் குருப்பிரசாதிகளும் கைதியாக்கப் பட்டார்கள். என்றாலு மென்ன? அத்தேசத்துக் கத்தோலிக்கர் "குல்ட்டர்காம்ப்" என்னும் ஓர் ஐக்கிய சங்கத்தில் ஒருமித்து உழைத்து, வேதவுறுதியில் சிறிதும் குன்றிப்போகவில்லை. உடனே பிஸ்மார்க் கோணல் திருந்திக் குணத்திற்கு வந்துவிட்டார். போர்த்துக்கால் வாசிகளும் அப்படியே செய்யக் கூடுமல்லவா? அப்படிச் செய்வதல்லவா கத்தோலிக்கு சித்த வைராக்கியம்? இவ்வாறே நந்தேசத்திலும், வேதத்துக்கும், ஞானாதிகாரிகளுக்கும் நேரிடுகிற இக்கட்டு இடுக்கண்களில் இவர்களுக்கு அனுகூலமாய் நின்று கத்தோலிக்குக் கிறிஸ்துவர்கள் சித்த வைராக்கியத்துடன் போர் பொருதி ஜெயங்கொள்ளக் கடவார்கள்.

M. P. Mascarenhas.

---



## CHRISTIAN DOCTRINE.

## ஞானோபதேசம்.

### 18-ம் பாடம்

### விசுவாச மந்திரத்தின் 10-ம் பிரிவு.

(முன் தொடர்ச்சி.)

---

**பாவப்பொறுத்தலை விசுவசிக்கிறேன்.--** பாவப் பொறுத்தலென்பதாலறியவேண்டியதென்ன வெனில், மனிதன் பலவீனனாயிருப்பதால் சொற்ப தபிதங்களையுங் கட்டிக்கொள்ளாமலிருப்பது அவனாற் கூடாது. ஆகையாலாத்தும வியாதியாகிய பாவங்களை நமது திவ்விய கர்த்தரிவ்வுலகத்திலிருந்தபோது பொறுத்ததுடன், தமது குருக்களுக்குந் தமது தேவாதிகாரியத்தையருளச் சித்தங்கொண்டவராய், "நீங்கள் யாருடைய பாவங்களைப் பொறுப்பீர்களோ அவர்களுடைய பாவங்கள் பொறுக்கப்படும். யாருடைய பாவங்களை பொறுக்காதிருப்பீர்களோ அவர்களுடைய பாவங்கள் பொறுக்கப்படாதிருக்கு"மென்று தமது அப்போஸ்தலருக்கு திருவாக்களித்தார். ஆனதைப்பற்றி நாம்செய்த பாவங்களுக்கு உத்தம மனஸ்தாபப்பட்டு சத்திய குருக்களிடம் பாவசங்கீர்த்தனஞ் செய்யும்போது அவர்கள் மூலமாய் நமது பாவங்களுக்குப் பொறுத்தலடைகிறோமென்பதை முழுமனதுடன் விசுவசிக்கவேண்டும்.

1. **மரிய மதலேனாள்.**—நமது திவ்விய இரக்ஷகரிவ்வுலகில் சஞ்சாரஞ் செய்யும்போது பெரும்பாவியாகிய மரியமதலேனாள் என்னுமோர் ஸ்திரீ சேசுநாதருடைய பாதங்களில் முழங்காற்படியிட்டு தன் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு அவருடைய திருப்பாதங்களை பரிமளத் தைலத்தால் பூசி, தன் கூந்தலால் துடைத்தபோது நமது கர்த்தரவளைப்பார்த்து உன் பாவங்கள் பொறுக்கப்பட்டன என்றார்.

(அர்ச் லூக்.)

2. **அர்ச் பிரான்சீஸ்கும் பெரும் பாவியான ஓர் ஸ்திரியும்.**— அர்ச். பிரான்சிஸ் சேல்ஸ் என்பவர் செய்த பிரசங்கத்தைக் கேட்ட ஒரு பெரும்பாவியானவள் மனந்திரும்பி யவரிடத்தில் மகா துக்கத்தோடு நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்து பாவப்பொறுத்தல் பெற்றபின் அவளர்ச்சியசிஷ்டவரைப் பார்த்து: "சுவாமி, என் பாவாக்கிரமங்களை யெல்லாந் தேவரீர் கேட்டீர், என்னைப்பற்றித் தேவரீரென்ன நினைக்கிறீ"ரென்றாள். "என் பிரியமகளே! நீ மெய்யாகவே அர்ச்சியசிஷ்டவள். நீ நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்தபடியால் கணக்கற்ற உன் பாவாக்கிரமங்களை யெல்லாஞ் சர்வேசுரன் பொறுத்தா"ரென்றதைக் கேட்ட அந்த ஸ்திரி சந்தோஷ ஆறுதலுடன் தன்வீட்டுக்கு திரும்பினதுடன் அதற்குப்பின் பசாசு செய்த தந்திர சோதனைகளுக்குட்படாமல் பிரமாணிக்கமுள்ள பிள்ளையாய் நடந்துவந்தாள். (இவர் சரித்திரம்.)

3.-**அர்ச். தாயி யென்பவளுடைய தவம்.**- இவள் வாலிப பிராயத்தில் கட்டிக்கொண்ட கணக்கற்ற பாவாக்கிரமங்களால் தன்

னுடையவும் பலருடையவு மாத்துமங்க
ளைக்கெடுத்து விட்டாள். மடாதிபதியான
பார்நாசியுஸ் என்பவர் சர்வேசுரனாலந்தப்
பாவியிட மனுப்பப்பட்டார். இவர் வெகு
நாள் பிரயாணஞ்செய்து அவளிருந்த ஊ
ருக்குப் போய்ச் சேர்ந்து, அவளுடன்
வேறு காரியங்களைப்பற்றி பேசினபின், சர்
வேசுரனிருக்கிறாராவென்று மடாதிபதி
வினவ: ஆம் சர்வேசுரனிருக்கிறார்; மேலு
மவரெங்கும் வியாபித்திருக்கிறா ரென்ற
துடன், அவர் நல்லோருக்கு மோக்ஷமுந்
தீயோருக்கு நரகமுங் கட்டளையிடுவா ரெ
ன்றாள். அப்போது மடாதிபதி யவளைப்
பார்த்து நீ சத்தியவேதத்தை நன்றா யறிந்
திருந்தும் தீயவழியில் நடந்து கெட்டு அ
நேகாத்துமங்களையுங் கெடுப்பதினால் நீ சர்
வேசுரனுடைய கையிலகப்பட்டு அவரு
டைய கோரா நீதியா லகோரமான தண்ட
னைக் குள்ளாவாயென்று வெகு நேரம் உப
தேசித்தார். இந்த உருக்கமான உபதேசத்
தைக்கேட்ட அந்த ஸ்திரியானவள் பயந்து
மனந்திரும்பி, மடாதிபதியிடம் மூன்று
மணிநேரந் தவணை பெற்றுக்கொண்டு
வீட்டுக்குத் திரும்பி பாவங் கட்டிக்கொள்
வதற்குக் காரணமாயிருந்த நகை நட்டு
வஸ்திராபரண முதலியவைகளை மூட்டை
கட்டி, சகலரும் பார்க்கும்படி, ஜனங் கூடி
யிருக்கும் ஒரு மைதானத்தில் சென்று,
அந்த மூட்டைக்கு நெருப்புவைத்து, சாம்
பலாக்கியபின் மடாதிபதியிடஞ் சென்று
தனக்குப் பெருத்த அபராதங் கொடுக்க
வேண்டுமென்று மன்றாடினாள். அப்போது
மடாதிபதி, திரும்பவுஞ் சர்வேசுரனுடைய
நீதியைப்பற்றி உருக்கமாய்ப் பேசினபின்,
அவளைப் பார்த்து, "உன் பாவாக்கிரமங்
கள் கணக்கற்றவைகளா யிருப்பதால், நீ சர்
வேசுரனுடைய பெயரை முதலா யுச்சரிக்க
அபாத்திரவதியா யிருக்கிறாய். ஆகையா
லினிமுதல் நீ ஒரு சிற்றறையி லடைபட்டு,
உனக்குக் கொடுக்கப்படுஞ் சிறு உரொட்
டித் துண்டையுந் தண்ணீரையும் புசித்து,
என்னைப் படைத்தவரே! என்பேரில் தய
வா யிருமென்று இராப்பகலாய் மன்றாடி
வரக் கடவாய்" என்று கற்பித்தார். அவ்வா
றே அந்த ஸ்திரி மூன்று வருஷகாலமாய்
தவஞ்செய்துவந்தாள். அதற்குப்பின் சர்
வேசுரன் மடாதிபதிக்கு தரிசனையாகி, தா
யியென்பவளுடைய பாவங்கள் பொறுக்க
பட்டனவென்றறி வித்ததின்மேல், அவர்

ஷெ தவசி யடைபட்டிருந்த சிற்றறையைத்
திறக்கக் கட்டளையிட்டார். அப்போது தவ
சியான தாயி யென்பவள் சாகுமட்டு மந்தச்
சிற்றறையிலிருந்து தவம்புரிய உத்தரவு
கொடுக்கும்படி மடாதிபதியை மன்றாடினா
ள். அதற்கு அவரவளைப்பார்த்து: மகளே
சர்வேசுரனுன் பாவங்களைப் பொறுத்தாரா
கையால் மனச் சமாதானங் கொண்டிருப்
பாயாக வென்றார். இந்தப் புண்யவதி தன்
பாவங்களுக்காகப் பட்ட மனஸ்தாபத்தா
லும், செய்த கடின தவசாலும் மோக்ஷப்
பிராப்தி யடைய பேறுபெற்று 14 நாட்
களுக்குப் பின் பாக்கியமான மரணமடைந்
து அர்ச்சியசிஷ்டவர்கள் டாப்பில் அவள்
நாமம் பதியப்பட பாக்கியம் பெற்றாள்.

(இவள் சரித்திரம்.)

**4. சகல பாவங்களுக்கும் பொறுத்த
லுண்டு.**— ஒரு பெண்பிள்ளை பாவவழியி
லிருந்து சகலருக்குந் துர்மாதிரிகையாய்
நடந்து வந்தாள். இவள் ஒரு நாளிராத்திரி
பெரியதோர் இரஸ்தாவில் நடந்துபோகும்
போது பக்கத்திலிருந்த கோவிலி லநேகர்
கூடி யிருப்பதைப் பார்த்து வேடிக்கையி
னிமித்தம் கோவிலிற் பிரவேசித்தாள். அப்
போது ஒரு குருவானவர் சர்வேசுரனுடை
ய தயவைப்பற்றிப் பிரசங்கஞ் செய்து:
சகல பாவங்களுக்கும் பொறுத்தலுண்
டென்று சொன்னார். இவ்வார்த்தையை
யவள் கேட்டு ஆறுதலடைந்து, கோவில்
முடிந்து சகலரும் வெளியே போனபின்,
அவளங்கேயே உட்கார்ந்து தன் கணக்கற்
ற பாவங்களைப் பற்றி நினைத்து துக்கித்து,
கோவிலைவிட்டு வெளியே போகுங் குரு
வானவரண்டைக்குப் போய், "சுவாமி, என்
சீவியத்தின் சரித்திரத்தைச் சொல்லுகிறே
ன் கேளும். கேட்ட பின் எனக்குப் பொறுத்
தலுண்டாகுமா வென்று சொல்லு" மென்
றாள். "நல்லது, அப்படியே ஆகட்டும் பாவ
சங்கீர்த்தனஞ் செய்" யென்று பாவசங்
கீத்தனத் தொட்டிக்குள் பிரவேசித்தார்
குருவானவர். இவளு மகா துக்க மனஸ்தா
பத்துடன் பாவசங்கீர்த்தனஞ் செய்தாள்.
அன்று கடின குளிரடித்தபடியா லன்றிராத்
திரி கோவிலிலேயே தங்கும்படி குருவான
வரைக் கேட்டுக்கொண்டதின்மே லவரு
மதற்குச் சம்மதித்தார். அந்த ஸ்திரி யன்
றிராத்திரி யெல்லாந் தன் பாவங்களுக்காக
எவ்வளவு துக்கப்பட்டு அழுது மனஸ்தா



பப்பட்டாளென்றால், மறுநாளைக் காலை
கோவில் கதவு திறந்தபோது சிலுவை சுரு
பத்துக்கு முன் அவள் பிரேதமாய்க்கிடந்
தாள். (Baxter)

**5. ஒரு புரோடெஸ்டாண்டான் பாவசங்
கீர்த்தனஞ் செய்தல்.**— புரோடஸ்டாண்டு
சமயத்தாரில் சில வகுப்பார் தங்கள் பா
திரிமாரிடம் பாவசங்கீர்த்தனஞ் செய்வ
துண்டு. பாவங்களைக் கேட்டபின் உன் பா
வங்களை யீஸ்பரன் பொறுத்தாரென்பார்.
இந்த வகுப்பைச்சேர்ந்த ஒருவன் வியாதி
யாய் விழுந்தமையால் தன் பாதிரியை வர
வழைத்து பாவசங்கீர்த்தனஞ் செய்தான்.
பாதிரியார் உன் பாவங்களை ஈஸ்பரன் பொ
றுத்தாரென்றார். அப்போது வியாதிக்கார
ன் இல்லை யில்லை நீரென் பாவங்களுக்குப்
பொறுத்தல் கொடுக்கவேண்டும்: "யாரு
டைய பாவங்களைப் பொறுப்பீர்களோ அ
வர்கள் பாவங்கள் பொறுக்கப்படுமென்று
பைபிளில் சொல்லப்பட்டிருப்பதால் நீரெ
ன் பாவங்களுக்குப் பொறுத்தல் தரவேண்
டுமென்று மன்றாடினான். பாதிரியாரோ,
பாவங்களைப்பொறுக்க எனக்கு அதிகார
மில்லை யென்று சொன்னதின்மேல், வியா
திக்காரன் பாதிரியாரை யனுப்பிவிட்டு கத்
தோலிக்குக் குருவானவரை வரவழைத்து
பாவம் பொறுக்க உமக்கு அதிகாரமுண்
டோவென்று வினவ, உண்டென்று குரு
வானவர் சொன்னதின்மேல், தக்ஷணமே
தன்னை சத்திய வேதத்தில் சேர்த்துக்
கொள்ள மன்றாடி, பிறகு பொதுப் பாவ
சங்கீர்த்தனஞ் செய்து மன சமாதானத்
துடன் மரணமடைந்தான். (Baxter.)

---

## CHRISTMAS STORY.

## சுவாமி பிறந்த திருநாள் கதை.

அல்லது,

### ரோமான் கோவிலுக்குப் போகாதே.

(முன்தொடர்ச்சி.)

---

பவுல் போதகர் தன் வீட்டுக்குப் போன
பொழுது அவருடைய குமாரத்தி அபூர்வமணி
மஞ்சத்தில் படுத்துக்கொண்டு ஆ, ஊ, என்று
[illegible]றிக்கொண்டிருந்தாள். அவளுடைய தாயு
ம் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, "அழாதே
அம்மா," என்று சொல்லி, மகா துக்கத்துடன்
ஏராளமாய்க் கண்ணீர் சொரிந்துகொண்
டிருந்தாள்.

பவுல் போ.—குழந்தைக்கு என்ன ரூத்?

ரூத்.—காய்ச்சல் நெருப்புப்போல் அடிக்
கிறது! உடம்பில் கொப்பளமும் புறப்பட்டிருக்
கின்றது.

பவுல் போ.—வைசூரியா யிருக்குமோ?

ரூத்.—நீங்கள் வீட்டை விட்டுப் போன
சற்று நேரத்துக்குப்பின் பக்கத்து வீட்டுக்கா
ரர் இங்கே வந்து பேசிக் கொண்டிருக்கும்
பொழுது, குழந்தை யெனைப்பார்த்து "அம்
மா, உடம்பு ஒருமாதிரியாயிருக்கிறது; நெருப்
புப்போல சூடாயிருக்கிறது; வந்து பாருங்கள்"
என்றாள். அப்பொழுது நானும் என்னோடு பே
சிக்கொண்டிருந்த பெண்பிள்ளைகளும் பிள்ளை
யைப் போய்ப் பார்த்த உடனே, "ஐயையோ
குழந்தைக்கு அம்மை கண்டிருக்கிறது" என்று
சொல்லி, அக்ஷணமே வீட்டைவிட்டு விரை
வாய் ஓடிப்போனார்கள் அப்பெண் பிள்ளைகள்.
இதைக்கேட்டுக் குழந்தை அழத்தொடங்கி
னாள். நான் அவளுக்கு தைரியஞ் சொல்லி அவ
ளைக் கட்டிலில் படுக்கவைத்து உங்களுக்கு ஆள்
அனுப்பினேன்.

பவுல் போ.—அப்போதே குழந்தைக்கு
வைசூரிபால் குத்தி யிருந்தால் இந்தச் சங்கடம்
வராதே! என்ன செய்யலாம்! சகலமும் பரா
பரனுடைய செய்கையால் ஆக வேண்டியது
தான். (என்று துக்கத்துடன் சொல்லி வியா
திக்காரி பக்கமாய்ச் சென்று) அபூர்வம்? பயப்
படாதே காய்ச்சல் சீக்கிரத்தில் விட்டுவிடும்.
கொப்பளமும் ஆறிப்போம்.

குழந்தையோ பயத்தால் அஞ்சி நடுங்கி,
"நாயினா! நேற்று நமது பக்கத்து வீட்டில் செத்
துப் போனவனுக்குக் கண்ட வியாதிதானே
எனக்குங் கண்டிருக்கிறது! நானுஞ் செத்துப்
போவேனோ என்னமோ!" என்று அழுவதைக்
கண்ட ரூத்தம்மாள் தன் கண்ணீரைத் துடைத்
கொண்டு விம்மலுடன் சமயல் வீட்டுக்குள்
சென்றாள்.

அப்பொழுது போதகர் கட்டிலின் ஓரத்
தி லுட்கார்ந்துகொண்டு குழந்தையின் கன்
னத்தைத் தடவிக்கொடுத்து "பயப்படாதே
அம்மா; நீ சாகமாட்டாய்" என்று பிள்ளைக்குத்
தைரியமும் ஆறுதலுமான வார்த்தைகளைச்
சொல்லிக் கொண்டிருந்தார்.

மறுவாரம் ஞாயிற்றுக்கிழமையன்று வழக்கப்படி போதகர் கோவிலில் பிரசங்கம், இராப்போசனம் முதலிய சடங்குகளை நிறைவேற்றும் படி அவ்விடத்துக்குச் சென்றார். அன்று அநேகர் கோவிலுக்கு வந்த போதிலும் பவுல்போதகர் கோவிலுக்குப் போவதைப் பார்த்தவுடனே அதில்பிரவேசியாமல் தங்கள் வீட்டுக்குத் திரும்பினார்கள். அன்று கோவிலில் தோட்டக்காரர், மசாலச்சி முதலிய சில வேலைக்காரர் தவிர வேறொரு பிராணியுங்கோவிலுக்கு வராதபடியால் போதக வேலையைச் செய்யாமலே தமது வீட்டுக்குத் திரும்பினார் போதகர்.

ரூத்.—என்ன? இவ்வளவு சீக்கிரம் செர்விஸ் (தேவாராதனை) முடிந்ததா?

பவுல்.—கோவிலுக்கு ஒருவரும் வராதபடியால் செர்விசை நடத்த வில்லை.

ரூத்.—என்ன காரணத்தைப்பற்றி சபையார் கோவிலுக்கு வரவில்லை?

பவுல் போ.—அது பரம இரகசியமா யிருக்கிறது! சிலவிசை (Circus) சர்க்கஸ் நாடக வேடிக்கையைப் பற்றி கோவிலுக்கு வாராதிருக்கலாம். இதற்கு முன்னே இரண்டொருவிசை இப்படி நடந்ததுண்டு.

ரூத்.—இது மிஷநெறிக்குத் தெரியுமா?

பவுல் போ.—அவருக்குத் தெரியாதென்று நினைக்கிறேன்.

ரூத்.—என் அவரிடம் போய் சங்கதியைத் தெரியப்படுத்தவில்லை?

பவுல் போ.—இந்நேரத்தில் அவர் வீட்டில் தங்கமாட்டார். குடும்பத்தோடு ஷிக்காறிக்குப் போயிருப்பார். மேலுங் குழந்தை சௌக்கியப்படும்படி சபையாரை வேண்டிக்கொள்ள கேட்டுக்கொள்ளலாமென்று எண்ணியிருந்தேன். என் துராதிஷ்டம்! இன்று ஒருவருங் கோவிலுக்கு வரவில்லை.

ரூத்.—குழந்தையின் சௌக்கியத்துக்காக சபையாரைக் கேட்பது மிஷநெறிக்குத் தெரியவந்தால்?

பவுல் போ.—தெரியவந்தால் என்ன?

ரூத்.—அது போகட்டும். பிள்ளை இந்தக் கண்டத்துக்குத் தப்பித்துக் கொள்வாளா?

பவுல் போ.—என்னமோ, சந்தேகந்தான்! ஆனால் பராபரனுடைய சித்தமின்றி ஒன்றும் நடவாது.

ரூத்.—(அடிக்கடி கண்ணைத் துடைத்துக் கொண்டு) எனக்கு நம்பிக்கையில்லை. கண்விழியிலுங் கொப்பளம் புறப்பட்டிருக்கிறது.

என்று விம்மிவிம்மி அழும்பொழுது: "அம்மா" என்று கூப்பிடுங் குழந்தை கிட்டப்போய் "என்ன வேண்டும் கண்ணே" என்றாள். "நாயினாகோவிலுக்குப் போனார்களே இன்னும் வரவில்லையா?" "வந்திருக்கிறார்" என்று சொல்லி தன் புருஷனைக் கூப்பிட்டழைத்தாள். போதகர், வியாதிக்காரி யிருந்த அறைக்குள் சென்று "அபூர்வம் என்னவேண்டும்?" என்றார். அப்பொழுது சிறுமி "நமது ஐயரைக் கூப்பிட்டு பைபில் வாசிக்கச் சொல்லுங்கள்" என்றாள். "ஐயர் வெளியேபோயிருக்கிறார். 9, 10 மணிக்குத்தான் பங்களாவுக்கு வருவார். நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம்" என்றார். அன்று இராத்திரி யெல்லாங் குழந்தை சங்கடப்பட்டதினால் போதகரும் அவர்மனைவியும் அற்ப நித்திரையின்றி விழித்திருந்தார்கள். இந்த ஆபத்தானவேளையில் சபையாரில் ஒருவரும் தமது குழந்தையை வந்துபார்த்து ஆறுதலானவார்த்தை சொல்லாமற் போனது அவ்விருவருக்கும் துக்ககரமாயிருந்தது.

மறுநாள் மிஷநெறி போதகருக்குக் கடிதமெழுதி, வைசூரி வார்த்திருக்கும் அவருடைய குமாரத்திக்குப்பூரண சௌக்கிய முண்டாகுமட்டும் கோவிலுக்குப்போய் செர்விஸ் நடத்தாதபடிக்கு கண்டிப்பான கட்டளையிட்டார். மேலும் அவர் தன் வீட்டில் தொற்று வியாதியிருந்தும் அதைக் கவனியாமல் செர்விஸ் நடத்தினதைப்பற்றி சபையார் கோவிலுக்கு வராமல் நின்றுபோனார்களென்றுந் தெரியப்படுத்தினார்.

வியாதிக்காரப் பிள்ளை மிஷநெறியை அழைத்து வரும்படி அடிக்கடி தொந்தரித்த படியால், போதகரெழுந்து பாதிரியார் வீட்டுக்குப் புறப்பட்டார். சற்று நேரத்துக்குப்பின் அபூர்வமணி தன் தாயைக் கூப்பிட்டு "லூர்து மாதா அநேக வியாதிக்காரருக்கு சௌக்கியங் கொடுத்ததாக ஒரு புஸ்தகத்தில் வாசித்தது உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா அம்மா?"

ரூத்.—ஆம் என் கண்மணி.

அபூர்வ.—அப்படியானால் நாயினாவுக்குச் சொல்லி ஐயரைக் கேட்டு லூர்துமாதா தீர்த்தம் வாங்கிவரச் சொல்லுங்கள்.

ரூத்.—உன் நாயினா ஐயரை அழைத்து வரப்போயிருக்கிறார்கள். ஐயர் வந்து பைபில் வாசிப்பார்.



FEB 1913 MADRAS

அபூர்வ.—பைபில்போதாதம்மா; லூர்து மாதா தீர்த்தமுங் கொண்டு வரச் சொல்லுங்கள். இரண்டு கண்ணுந் திறக்கக்கூடுமாயில்லை.

ரூத்.—ஐயரிங்கே வரும்பொழுது லூர்து மாதாத் தீர்த்தத்தைப் பற்றிப் பேசவேண்டாங் கண்ணே.

அபூர்வ.—ஏனம்மா? எத்தனையோ பேருடைய வியாதி தீர்ந்தது அந்தத் தீர்த்தத்தினாலே!

ரூத்.—தீர்த்தத்தைப்பற்றி ஐயர் கேள்விப்பட்டால்...........................அதைப்பற்றி யவருடன் ஒன்றுஞ் சொல்லாதே குயிலே!

அபூர்வ.—என்?

ரூத்.—அது ஐயருக்குச் சரிப்படாதம்மா! நீ அதிகமாய்ப் பேசினால் வியாதி அதிகரிக்கும், களைப்புண்டாகும்; சும்மா படுத்துக் கொள் மகளே!

அபூர்வ.—அம்மா! லூர்து மாதா தீர்த்தமிருந்தால் நான் பிழைப்பேன். இல்லாவிட்டால் நாயினாவையும் உங்களையும் விட்டுவிட்டு செத்துப் போவேன்.

ரூத்.—அப்படிச் சொல்லாதே என் மகளே. (என்றபின், மூக்கை சிந்திக்கொண்டு அப்பாலே போய் தேம்பி தேம்பி அழுதாள்.)

அபூர்வ.—அம்மா, அந்த லூர்துமாதா புஸ்தகத்தை யெடுத்துக்கொண்டு வாருங்கள்.

தாய் கொண்டுவந்து கொடுத்த புஸ்தகத்தை அக் குழந்தை வாங்கி அன்பாய் மார்பில் அணைத்துக்கொண்டு "லூர்துமாதாவே! எனக்கு சௌக்கியங் கொடுக்கவேணும். எத்தனையோ வியாதிக்காரர் உமது வேண்டுதலால் சௌக்கியப் பட்டார்கள்" என்று உருக்கமாய் வேண்டிக்கொண்டாள் அபூர்வமணி

ரூத்.—என் கண்மணி சும்மாயிரு. ஐயர் வருகிற நேரமாச்சுது. அவர் வரும்பொழுது லூர்து மாதாவைப்பற்றிப் பேசவேண்டாம். அப்படிப் பேசினால் அவருக்குக் கோபமுண்டாகும்.

அபூர்வ.—ஏனம்மா அப்படிச் சொல்லுகிறீர்கள்? லூர்துமாதா என்றால் ஐயருக்குச் சரிப்படாதோ? லூர்துமாதா செய்ததெல்லாம் நன்மையாயிருக்க ஐயருக்கு என் சரிப்படாது?

ரூத்.—லூர்துமாதா மட்டில் ஐயருக்கு விஸ்வாசமில்லை.

அபூர்வ.—உங்களுக்கு?

ரூத்.—எனக்கு விஸ்வாசமுண்டு.

அபூர்வ.—நாயினாவுக்கு?

ரூத்.—நாயினாவுக்குக் கூட உண்டு.

அபூர்வ.—ஆம் அம்மா, எனக்குக்கூட லூர்து மாதாமேல் ரொம்ப விசுவாசமும் ஆசையுமிருக்கிறது. என் ஐயருக்கு மாத்திரமில்லை?

ரூத்.—அது அவருடைய பிரியம்.

அபூர்வ.—லூர்துமாதா ஏசுவின் அம்மா தானே?

ரூத்.—ஆம்! கன்னிமரியாயிதான் ஏசுவைப் பெற்றெடுத்த தாய்.

அபூர்வ.—ஏசுமட்டில் ஐயருக்கு விஸ்வாசமுண்டா அம்மா?

ரூத்.—உண்டு.

அபூர்வ.—ஏனவருடைய தாயார் மட்டில் அவருக்கு விஸ்வாசமில்லை?

ரூத்.—கண்மணி சும்மாயிரு. பேசப்பேச உனக்கு களைப்புண்டாகும் (என்று சொல்லி விசிறியையெடுத்து விசிறத் துவக்கினாள்.)

பவுல்போதகர் மிஷனெரியுடைய பங்களாவுக்குப்போனபொழுது, பாதிரியார் தமது சிறு பிள்ளைகளோடு தமாஷாய்ப் பேசி விளையாடிக் கொண்டிருந்தார். போதகரைப் பார்த்தவுடனே, "ஓ! பால், உன் பிள்ளைக்கு வைசூரி கண்டிருக்கும்போது கடந்த ஞாயிற்றுக்கிழமை நீ செர்விஸ் வைத்திருக்கக்கூடாது."

பவுல் போ.—சபையாருக்கு அவ்வளவு பய முண்டாகுமென்று நினைக்கவில்லை சார்.

மிஷனெரி.—நேற்று இராத்திரி சபையாரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் உன்னைப்பற்றிக் கோபமாய்ப் பேசி, இதுமுதற் கொண்டு நமது கோவிலுக்குப் போகிறதில்லையென்று தெரியச்செய்தார்கள். உடனே அவர்களுக்கு நல்ல மறுமொழி கொடுத்து, இந்த விசை ஏதோ கவனப் பிசகாய் நடந்துவிட்டது. இனி யப்படி நடவாதென்று அறிவித்ததின்மேலவர்கள் திருப்தி யடைந்தார்கள். அதிருக்கட்டும் இப்போது நீ யிங்கே வந்த காரணமென்ன?

பவுல் போ.—இப்போது என் மகளுக்கு வியாதி யதிக கடினமா யிருக்கிறது. பிழைப்பாளென்ற நம்பிக்கையில்லை.

மிஷனெரி.—அவ்வளவு கேவலமா யிருக்கிறாளா?

பவுல் போ.—ஆம், மெத்த கேவலமா யிருக்கிறாள். அவள் பிழைப்பாளானால் அது ஓர் பெரிய ஆச்சரியமே. அப்படிப் பிழைத்தபோ

திலும் சாகுமட்டுங் குருடியாயிருப்பாள்.

மிஷனெரி.—ஏன்?

பவுல் போ.—கண்ணிலுங் கொப்பளம் புறப்பட்டு கடந்த பத்துநாளாய் கண்ணைத்திறக்கக் கூடாமல் அவஸ்தைப்படுகிறாள்.

மிஷனெரி.—பாவம் உன் மகள் மெத்த நல்லவள்.

பவுல் போ.—தாங்கள் வீட்டுக்கு வந்து பைபிலை வாசித்தால் சௌக்கியமாகு மென்று இடைவிடாமல் சொல்லிக்கொண் டிருக்கிறாள்.

மிஷனெரி.—நான் உன் வீட்டுக்கு வருவதால் பிரயோசன மென்ன பால்? கிறிஸ்துவில் முழு நம்பிக்கை யிருந்தால் போதும்.

இவ்வாறு பாதிரியாரும் போதகரும் பேசிக்கொண்டிருக்கையில் மேல் மெத்தையிலிருந்த பாதிரியாருடைய மனைவி யேதோ ஒரு வேலையினிமித்தம் கீழே இறங்கி போதகரைப் பார்த்த க்ஷணமே, அவர் மேல் கோபோக்கிரங் கொண்டு, புலி போலச் சீறி விழுந்து சொன்னதாவது:

"என் குடும்பத்தை நாசனஞ்செய்ய இங்கே வந்தாயோ? உன் வீட்டில் வைசூரி கண்டிருக்கும்பொழுது உன் வீட்டைவிட்டு வெளியே புறப்பட்டதே பிசகா யிருக்கக்கொள்ள, குழந்தை குட்டிகளிருக்கும் என் வீட்டில் பிரவேசிக்க எப்படித் துணிந்தாய்" என்று கதறி, போதகருடைய கையைப் பிடித்து இழுத்துக்கொண்டுபோய் வீட்டுக்கு வெளியே விட்டு "போ வெளியே இனி யிங்கே கால்வையாதே" என்று, வீட்டுக்குள் சென்று தன் புருஷனைக் கடிந்து பேசினபின் பிள்ளைகளின் வஸ்திரங்களைக் களைந்துவிட்டு, அவர்களுக்கு ஸ்நானஞ் செய்வித்து சுத்தமான உடை உடுத்தும்படி வேலைக்காரிக்குக் கற்பித்தாள். தோட்டக்காரனை வரவழைத்து, வீட்டை ஒட்டடை யடித்துத் துப்புர வாக்கினபின் கடைக்குப் போய் ஒரு ரூபாய் பெறுமான கீல் வாங்கிவந்து வீட்டைச் சுற்றிலும் புகை போடும்படி சொல்லி, தன் வீட்டில் வைசூரி வராதபடிக்கான முயற்சியெல்லாஞ் செய்தாள்.

தன்னைக் கடுகடுத்துப் பேசின மனைவிக்கு பாதிரியார் எதிரிடை பேசாமல், எழுந்து ஜன்னல் பக்கமாய் நின்றுகொண்டு, கை தட்டி "பால், பால்" என்று போதகரைக் கூப்பிட்டழைத்தார். போதகரு மவரைத் திரும்பிப் பார்த்தார். "எனக்குள்ள Faculties (ஞான அதிகாரம்) எல்லாம் உனக்குத் தருகிறேன். என் போரால் பிள்ளைமேல் பைபில் வாசி" என்று பாதிரியார் கூவிச் சொல்லும்பொழுது போதகர் தலை அசைத்துக்கொண்டும் வாய்க்குள் முணங்கிக் கொண்டுந் தன் வீட்டுமார்க்கமாய்ச் சென்றார்.

வாசற்படியில் காலடிச் சத்தத்தைக் கேட்ட ரூத்தம்மாள்; "ஐயர் வருகிறார். புஸ்தகத்தைக் கொடு; பத்திரமாய் வைக்கிறேன்" என்று சொல்ல வியாதிக்காரப்பிள்ளை "நான் கொடுக்கமாட்டேன்" என்று அதை நெஞ்சோடு அணைத்துக்கொண்டாள். அப்போது ரூத்தம்மாள் புஸ்தகந் தெரியாதபடிக்கு துப்பட்டியை யிழுத்துப் போர்த்திவிட்டு, மிஷநெறிக்கு வந்தனம் புரியும்படி வாசற்படி பக்கமாய்ச் சென்றபொழுது, தன் கணவன்மாத்திரந் துக்கக்கிலேசத்துடன் வருவதைக் கண்டு "மிஷநெறி யெங்கே" என்றாள். பாதிரியார் வீட்டில் நடந்த கோஷ்டங்களை தன் புருஷன் வாயால் சொல்லக் கேட்ட ரூத்தம்மாளுக்குச் சொல்லி முடியாத கோபோக்கிர முண்டான போதிலும் வியாதிக்காரக் குழந்தையினிமித்தம் அதை யெல்லாம் அடக்கிக்கொண்டு, அழுத கண்ணுஞ் சிந்தின மூக்குமாய் ஒரு மூலையி லுட்கார, போதகருந் தன் அன்புக்குரிய மகள் கிட்டப்போய் விசிறியை யெடுத்து விசிறத்துவக்கினார். (இன்னும் வரும்.)

---

## CORRECT THINGS FOR CATHOLICS.

## கத்தோலிக்கு கிறிஸ்துவாகளுக்கு நல்லொழுங்குகள்.

(முன் தொடர்ச்சி)

### கோவில்.

---

1. கோவிலுக்குப் போகும் போது தாம்பூலந் தரித்துக்கொண்டு போவதும், வழியில் ஊர்பேச்சு முதலிய வீண் பேச்சுகளை பேசிக்கொண்டு போவதும் ஒழுங்கல்ல.

2. தன் ஆடை யாபரணங்கள் முதலியபெருமை சலாக்கியத்தைக் காட்டவும், பிறர் அழகு சௌந்தரியத்தைக் கண்ணோக்கவும் கோவிலுக்குப் போவது ஒழுங்கல்ல.

3. கோவிலுக்குப் போகும் போது, தன் கூட நாய்களையும், கூச்சலிட்டு அழும்



பிள்ளைகளையும் அழைத்துப் போவது ஒழுங்கல்ல.

4. மரியாதை காட்டத் தெரியாத அக்கியானிகளையும், பதிதர்களையும் கோவிலுக்கு அழைத்துப் போவது ஒழுங்கல்ல.

5. உள்ளே போதுமான இடமிருந்தும், கோவில் வாசலை அடைத்த விதமாய் அங்கு நின்றுகொண்டும் உட்கார்ந்துகொண்டும் ஜனங்கள் உள்ளே போக இடைஞ்சலாயிருப்பது ஒழுங்கல்ல.

6. கோவிலில் தனக்கு ஆசனம் இல்லையென்று, சபைக்குப் புறம்பானவன் போல் கோவிலுக்கு வெளியில் நின்றிருப்பது ஒழுங்கல்ல.

7. தீர்த்தத்தைத் தொட்டு ஈ யோட்டுகிற மாதிரி கையை ஆட்டிக்கொள்வது ஒழுங்கல்ல.

8. பாடல்களைக்கேட்டு ஆனந்திக்க நாடகத்திற்குப் போவதுபோல், பாடல் கேட்குங் கருத்துடன் மாத்திரம் பாடல் பூசைக்குப் போவது ஒழுங்கல்ல.

9. கரடியைப் போல் ஒற்றை முழங்காலிலிருந்து செபிப்பது ஒழுங்கல்ல.

[கிறிஸ்துவர்களுள் ஆங்கிலேய உடை தரித்திருக்கும் பல வாலிபர்கள், ஏதோ தாங்கள் அதிகம் கற்றுவிட்டதாக எண்ணிக்கொள்ளும் மோழைகள், மேன்மையான உத்தியோகங்களை வகித்திருப்பதாக நினைத்துக்கொள்ளும் பிண்டங்கள், கோவிலுக்கு வந்தால் தேவ நற்கருணைக்கு நமஸ்காரம் செய்யமாட்டார்கள். செய்தாலும் கால் சரியாய் வழங்கக் கூடாத முடவனைப் போல் முழங்காலை யாட்டுவார்கள். இப்படிச் செய்வது யூதர்கள் நமதாண்டவருக்குச் செய்த சக்கட்ட பரிகாசத்திற் கொக்கு மென்பதில் சந்தேகமில்லை. இதனாலே தான் பதிதர்கள் நமது கோவிலில் நடக்கும் சங்கை யீனத்தைப்பார்த்து, தேவ நற்கருணையில் சேசுநாதர் மெய்யாகவே எழுந்தருளி யிருக்கிறாரென்பதாக நீங்கள் கண்டிதமாய் விசுவசிக்கிறீர்களோ வென்று ஆச்சரியத்துடன் கேட்பதுண்டு. அக்கியானிகள் கேவலம் தங்கள் பொய்த் தேவர்களின் சிலைகளின் முன் இருகை குவித்து அஞ்சலித்து, அடக்க ஒடுக்கத்துடன் பய பக்தியாய் செய்யும் சாஷ்டாங்க அஷ்டாங்க நமஸ்காரங்களை நாம் கவனித்துப் பார்த்தால், நமது கோவிலில் நிஜார்த்தமாய் எழுந்தருளி யிருக்கும் பரம தெய்வத்திற்குமுன் கிறீஸ்துவர்கள் காட்டும் அசட்டைத்தனத்தைக் கண்டு வெட்கமடைய வேண்டியதுதான். இன்னுஞ் சிலர் கோவிலில் முழங்காலிலிருந்து முதலாய் ஜெபிக்காமல், ஏதோ சில நேரம் நின்றிருந்து வந்தவழி பார்த்துத் திரும்புவார்கள். ஐயோ! வளர்த்த கடா கையில் பாய்வதைப்போல் நமக்குச் சர்வத்தையும் அளித்திருக்கும் சர்வேசுரனிடந்தானா நமது கர்வம் நமது பெருமை, சலாக்கியத்தைக் காட்டுவது? அவர் கரம் நமது பேரில் தாங்கினல் நமது கதி யென்னவாகும்?]

10. பரலோகத்தையும் பூலோகத்தையும் சிருஷ்டித்த கர்த்தருக்கு மரியாதையாகத் தன் தலைப் பாகையைக் கழற்றுவது தனக்கு ஈனமென்பதும், அதில் சுதேசியம் முதலிய வீண் சடங்கைப் பாராட்டுவதும் ஒழுங்கல்ல.

11. கோவிலில் யார் வந்தார், யார் போனார் என்று பார்ப்பதும், குசுகுசென்று பேசுவதும், சப்தத்துடன் காறுவதும், பாயினகீழ் துப்பிவைப்பதும் ஒழுங்கல்ல.

12. கோவிலில் பூசை முதலிய ஆராதனைகள் நடக்கும்போது பக்கத்திலிருப்பவர்களுக்கு பராக்கும் அசௌகரியமும் உண்டுபண்ணத்தக்கவிதமாய் உரக்க சப்தமிட்டு ஜெபிப்பது ஒழுங்கல்ல.

13. யாதொரு ஜெபமுமின்றி சும்மா கோவிலில் உட்கார்ந்திருந்து வந்துவிட்டால், பூசை கண்டாப்போல் தான் என்றெண்ணுவது ஒழுங்கல்ல.

14. உண்டிற் பெட்டியை தன்னிடம் கொண்டுவருகிற சமயத்தில், பரம தியானத்தி லிருப்பதுபோல் பாசாங்கு பண்ணுவது ஒழுங்கல்ல.

15. செல்லாத் காசுகளையும், பொத்தான்களையும் உண்டிற் பெட்டியில் போடுவது ஒழுங்கல்ல.

16. கோவிலில் பரப்பி உட்கார்ந்து கொண்டு, வந்த ஜனங்களுக்கு வழிவிடாம லிருப்பது ஒழுங்கல்ல.

17, சிலுவையைக் கண்டு பசாசு பறந்தோடிப் போவதுபோல், குருவானவர் பிர

சங்கத் தொட்டியில் ஏறுவதைக் கண்டவுடன் ஓட்டம் பிடிப்பது ஒழுங்கல்ல.

18. பிரசங்க நேரத்தில் ஜெபம் செய்வது ஒழுங்கல்ல.

19. பூசை நேரத்தில் வெளியில் கதை பேசிக்கொண் டிருப்பது ஒழுங்கல்ல.

20. நேரம் பொறுத்துக் கோவிலுக்குப் போய், எல்லோருக்குமுன் வெளியில் போய்விடுவது ஒழுங்கல்ல.

21. காலரியில் பாடுகிறவர்களைத் திரும்பித் திரும்பிப் பார்ப்பது ஒழுங்கல்ல.

22. பாடகர்கள் தாங்கள் நின்று பாடும் காலரியானது, கோவிலின் ஒருபாகம் என்று நினையாமல், பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும், அங்கு கேலி பரிகாசஞ் செய்து கொண்டு மிருப்பது ஒழுங்கல்ல.

23. இவர் பிரசங்கம் சரி, அவர் பிரசங்கம் சரியல்ல, அதில் இது தப்பு, இதில் அது தப்பு என பிரசங்கத்தின் மட்டில் குறை கூறுவது ஒழுங்கல்ல.

24. கோவிலுள் இருக்கும்போது, பிறருக்கு ஆசாரம் செய்வது ஒழுங்கல்ல.

25. கோவிலிலே தன் சிநேகிதர்களைக் கண்டால், தீர்த்தத்தொட்டி அருகாமையிலேயே சம்பாஷணை துவக்குவது ஒழுங்கல்ல.

26. ஜெபமாலையைக் குழந்தைகளிடம் கொடுத்து விளையாட விடுவது ஒழுங்கல்ல.

27. தீர்த்தத் தொட்டியிலுள்ள தீர்த்தத்தைக் குடிப்பதும், குழந்தைகளின் வாயில் ஊற்றுவதும், ஜெபமாலையை அந்தத் தொட்டியில் துவைப்பதும் ஒழுங்கல்ல.

28. கோவிலில் பூசை முதலிய ஆராதனை முடிந்த வேளையில், மழை முதலிய காரணங்களை முன்னிட்டு கோவிலுள் சற்றுநேரம் காத்திருக்க நேரிட்டால், அப்போது தேவநற்கருணையில் பிரசன்னமாயிருப்பவரை மறந்து ஆசாரக் குறைவாயிருப்பது ஒழுங்கல்ல.

29. கோவில் முடிந்தவுடன் நடக்கும் கூட்டத்திற்கு இருக்கக் குருவானவர் சொன்னால், ஓட்டம் பிடிப்பது ஒழுங்கல்ல.

30. கிறீஸ்துவர்கள் பதிதர்களுடைய கோவிலுக்குப் போவதும் அவர்கள் பிரசங்கங்களைக் கேட்பதும் ஒழுங்கல்ல.

(இதைத் திருச்சபை கண்டிப்பாய் விலக்கி யிருக்கிறது.)

31. கோவில் திருநாள் செலவுக்குப் பணம் தண்டல் செய்வதாய் ஒத்துக்கொண்டு, தண்டல் பணத்தில் பாதியை விழுங்கிவிட்டு, கேட்டால் என் கஷ்டத்திற்குக் கூலி யென்று சாக்குபோக்கு சொல்லுவது ஒழுங்கல்ல.

32. ஆராதனை நேரங்களில், கோவில் முழுவதும் நிர்சப்தமாய் செபம் செய்திருக்கும் வேளையில், காணிக்கை வர்த்தி முதலியன செலுத்துவது ஒழுங்கல்ல.

33. பூசை முடிந்தவுடன் செபிக்க வேண்டி யிருக்கும் 3 பிரியதத்த மந்திரத்தைச் செபிக்கத் தவறிப்போவது ஒழுங்கல்ல.

34. குழந்தைகள் கூச்சல் போட்டால், தொண்டையை நெறிப்பதும், குப்புறக் கவிழ்த்துப்போட்டுக் கும்மா குத்து குத்துவதும் ஒழுங்கல்ல.

35. கடன் பூசை காணத் தவறினாலும் தேவநற்கருணை யாசீர்வாதத்திற்குப் போனால் சரிப்பட்டுப்போகும் என்றிருப்பது ஒழுங்கல்ல.

(ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்ற கடன் திருநாட்களிலும் முழுபூசை காண்பதுதான் கடனே யன்றி, தேவநற்கருணை ஆசீர்வாதம் கடனல்ல. கடன் பூசை காணாவிட்டால் சாவான பாவம். தேவநற்கருணை ஆசீர்வாதத்திற்குப் போகாவிட்டால் பாவமல்ல.)

36. வெஸ்பர்ஸ், தேவநற்கருணை யாசீர்வாதம் முதலிய மாலை யாராதனைகளுக்குப் போகாமல் பக்தி விசுவாச உணர்ச்சிகளின்றி வேடிக்கையார்த்தமாய் தேர் பார்க்கிறதற்காக மாத்திரங் கோவிலுக்குப் போவது ஒழுங்கல்ல.

37. தேர் சுற்றுப்பிரகாரம் முடிந்த பிறகு, தேரின்மேலிருக்கும் பூவைப் பிடுங்கப் பிராணன் போகிறாப்போல் சண்டையிடுவது ஒழுங்கல்ல. (தேர்மேலிருக்கும் புஷ்பம் எவ்விதத்திலும் பரிசுத்தத் தனம் அடைந்ததில்லை. இது தெரியாமல் அக்கியான புத்தியுள்ள சில கிறிஸ்துவர்கள், சில சமயங்களில் காட்டும் இகழ்ச்சிக்குரிய ஆவலினால்; தேர் உடைந்து திருச் சுரூபங்கள் கீழ் விழுவது எவ்வளவு அனுசாரமான காரியம்! நல்ல கிறிஸ்துவர்கள் இப்படி செய்யார்கள்.)

38. கோவில் முடிந்தபிறகு, வாசலில் நின்றுகொண்டு போகிறவர்களை முறைத்துப் பார்த்துக்கொண்டிருப்பது ஒழுங்கல்ல.

39. வீண் பெருமைக்காக திருநாள் திருநாளுக்கு பாடல் நோட்டீசுகளை யச்சிட்டு வழங்குவது ஒழுங்கல்ல.

(யாப்பிலக்கணததைச் சுத்தமா யறியாத போலிவித்துவான்கள், பற்பல வழுக்கள் நிறைந்த பாடல்களைச் சுயமாய்க் கட்டியச்சிடுவதைவிட, பூர்வ வித்துவான்களியற்றியுள்ள திவ்விய சங்கீதங்களையாவது, வேத புத்தகங்களில், திருநாள் விஷயமாயெழுதியிருக்கிற புத்தி போதனைகளையாவது மேற்றிராணியார் அனுமதிபெற்று துண்டுச் சீட்டுகளாக அச்சிட்டு ஜனங்களுக்குக் கொடுத்தால் மெத்தவும் நன்மையா யிருக்கும்.)

40. பாடல் பூசைகள், ஒப்பீசு பாடல் பூசைகள் செய்விக்க அதிகமான தொகை கோவிலுக்குக் கொடுக்க நேர்ந்தால், சாதாரண பூசைகளுக்கும் இவைகளுக்கும் பேதமில்லாததால், இவைகள் பணம்பறிக்க வழியென்று பேசுவது ஒழுங்கல்ல.

(பூசையின் தன்மையில் எவ்வித பேதமுமில்லையாயினும், தாவீது இராசாவைப் போல் வாத்திய கோஷ்டத்தோடும் பாடல் சங்கீதத்தோடும் கர்த்தரை ஸ்துதிப்பது மேன்மை யன்றோ? உண்பதிலும், உடுத்துவதிலும், சீவிப்பதிலும் நாம் எவ்வளவோ பண விரயம் செய்து மனக்களிப்பைத் தேடுவதா யிருக்க, சகலத்தையும் அளித்த கர்த்தருக்கு நமஸ்காரமாக நமது சகலத்தையு மில்லாவிட்டாலும், சொற்பத்தையாவது செலவிட்டு ஆடம்பரத்தோடு அவரை வாழ்த்தி ஸ்துதிக்க மனமில்லாமல் காயீனைப்போல் முறையிடுவதேன்? அவர் மட்டில் நாம் எவ்வளவு தாராளமா யிருப்போமோ, அவ்வளவுக்கு அவரும் நமது மட்டில் தாராளமா யிருப்பார்.)

41. கர்த்தர் பிறந்த திருநாள் நடுச்சாம பூசை நடக்கும்போது கோவிலில் சங்கை வணக்கமின்றி யிருப்பது ஒழுங்கல்ல.

42. கோவிலில் தன தந்தஸ்திற்கேற்ற விட மிருப்பதைக்கண்டு மனங் களிப்பதும், அங்ஙன மில்லாததைக்கண்டு மனங் கசிவதும் ஒழுங்கல்ல.

43. மற்றெல்லா விடங்களில் விட கிறிஸ்துவ பிற சிநேகம் விசேஷமாய் விளங்க வேண்டியதான தேவாலயங்களில், அப்பிற சிநேகத்தை மறந்து, கலகத்திற் கிடந்தேடி குருக்களைத் தொந்தரைக் குட்படுத்துவது ஒழுங்கல்ல.

44. கோவில் காரியங்களில், கிறிஸ்துவனுக் கடுத்த தாழ்ச்சியையும், பிற சிநேகத்தையும் காட்டாமல், அக்கியானிக்கும் பரிசேயனுக்கும் அடுத்த ஆங்காரத்தையும் மனக் கர்வத்தையும் காட்டுவது ஒழுங்கல்ல.

45 சுதேச ஜோடுகளையும் சப்பாத்துகளையும் அணிபவர்கள் அவைகளைக் கோவிலுள் தரித்துக்கொண்டு போவது ஒழுங்கல்ல.

46. எல்லோரும் ஏகமாய்க் கோவிலில் நுழையத் துவக்கி, ஜன சந்தடியும் நெருக்கமும் உண்டாக்குவது ஒழுங்கல்ல.

47. கோவிலுக்குள் போகும்போது ஜனங்களை யிடித்துக்கொண்டும், தலைப்பாகைகளை தள்ளிக்கொண்டும்போவது ஒழுங்கல்ல.

48. வேளாங்கண்ணி முதலிய திருஸ்தலங்களுக்குப் போகிறவர்கள், பத்தியுள்ள கருத்துப்படி போகாமல் வேடிக்கை விநோதங்களைக் காணவும், மனம் போன போக்குப்படி திரியவும் போவது ஒழுங்கல்ல.

49. கிறீஸ்துவர்கள் வேத சம்பந்தமான தர்மசாலைகளையும் பொது நன்மைக்குரிய மற்ற ஸ்தாபனங்களையு முழுதும் மறந்துவிட்டு, தேர் திருநாள் முதலிய விஷயங்களுக்கு மாத்திரம் பணத்தை வாரிக் கொடுப்பது ஒழுங்கல்ல.

(அநேக பணக்காரர்கள் தங்கள் பணத்தைக் கோவில்கள் கட்டுவதில், சுரூபம்

வாங்கிக் கொடுப்பதில், தேர் திருவிழா நடத்துவதில் ஆகிய இது முதலிய விஷயங்களிலேயே செலவழிப்பார்கள். இது மெத்த நல்ல காரியந்தான். ஆத்தும ரட்சணியத்துக்காக மனிதாவதாரமெடுத்த ஆண்டவர், ஞான நன்மைகள் புரிந்துவந்த காலத்தில் மனுஷனுடைய சரீர நன்மைகளையும் மறக்காதவராய் குருடர்களுக்குக் கண்ணும், செவிடர்களுக்குக் காதும், ஊமைகளுக்கு வாயும் கொடுத்து வியாதியஸ்தர்களைச் சுகப்படுத்தி பற்பல நன்மை புரிந்து வந்தார். அப்படியே நமது குருக்களும் நமது ஆத்தும காரியங்களை சவரட்சணை செய்வதுடன், இந் நன்மைகளையுங் கோரி பள்ளிக்கூடங்களையும், கலாசாலைகளையும், அநாத பிள்ளைகள் மடங்களையும், போர்டிங் ஸ்கூல்களையும், குருமடங்களையும், தொழிற்சாலைகளையும், சபைகளையும், சங்கங்களையும் ஸ்தாபிக்கிறார்கள். கிறீஸ்துவர்கள் இவைகளைப் பார்த்தும் பாராததுபோலிருப்பது மன்றி, இவைகளுடைய அபிவிர்த்தியின் மட்டில் கவனம் கொள்ளுகிறதே யில்லை. ஆனால் பணக்குறைவினால் மேற்படி தர்மசாலைகள் கொஞ்சம் தடமாட்டத்தில் வந்துவிட்டால், ஐயோ! அவர்கள் பேசுகிற பேச்சுக்கு மட்டுத்திட்டம் கிடையாது தேவ சிநேகத்திற்குப் பிறகு பிற சிநேகமென்பதை அவர்கள் அறியார்கள் போலும்.) (இன்னும் வரும்.)

## CORRESPONDENCE.

## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்தரவாதி யல்லர். கடித மெழுதுவோர் தங்கள் கடிதங்களை மிகத் திருத்தமாயும், காகிதத்தின் ஒரே பக்கத்தில் இடது பாரிசத்தில் நாலுவிரற்கடை இடம் வட்டும் எழுதுவதுடன், தங்கள் பேயர் விலாசங்களையும் தெளிவாய் எழுதல் வேண்டும். பேயர், விலாசம் வெளிப்படுத்துவதற் கல்ல, கடிதத்தின் உண்மைச் சங்கதிகளைப் பத்திராதிபர் உறுதிப்படுத்திக் கோள்வதற்கே. வெளிப்படுத்துவதற்கு தகுதியற்றன வென்று தள்ளிவிடப்பட்ட கடிதங்கள் திரும்பவும் வாப்ஸ் செய்யப்பட மாட்டா. ப—ர்]

### "தென்னிந்தியரின் பத்திரிகாபிமானம்"

(முன் தொடர்ச்சி.)

நம்மிந்தியரைவிட இலங்கை வாசிகளாம் பௌத்த மதத்தினருக்கிருக்கும் பத்திரிகாபிமானம் மெத்தவும் வியக்கற்பாலதே. ஒவ்வொரு பௌத்த வித்யாசாலைகளிலும் தினசரிப் பத்திரிகைகள் வாசிக்கப்பட்டு வருகின்றன. வியாபார சாலைகளிலோ வருடாந்தர கணக்கு பார்க்கும்போது பத்திரிகைகளின் சந்தாவை மிகவும் விசேஷமாய்க் கவனித்து முன்னனுப்பாதிருக்கின் அக் காலங்களிலேனும் திட்டமாய் அனுப்பிவைத்துவிடுகிறார்கள். பத்திரிகைகளின் சந்தாவை ஒவ்வொரு வியாபார ஸ்தலங்களிலும் தங்கள் பொதுச்செலவிலொன்றுபோலெண்ணிவருகிறார்கள் என்பது கரதலாமலகம். இப்படி வர்த்தகசாலைகளிலும், வித்யாசாலைகளிலும் வாசிக்கப்படும் பத்திரங்களும் பௌத்த மதாபிமானப் பத்திரிகைளேயாம். நம்மிந்தியரின் வியாபார தலங்களில் இங்ஙனம் கிரமமாய் நடந்து வருகிறதென்பதற் கிடமில்லை. வித்தியாசாலைகளிலு மிப்படியே. சில தினங்களின் முன்னர் பத்திரிகைகளின்மட்டில் ஓர் சிங்களவரோடு சம்பாஷித்துக்கொண் டிருக்கும்போது பலசத்காரியங்களோ டொன்றாய் கீழ் வருனவற்றையும் சொன்னார். "பத்திரிகையை நம் பிதா மாதாக்களைவிட அதிகமாய் பராமரித்து வரக்கடமை பூண்டிருக்கிறோம். எனெனிலோ, நம் பிதா மாதாக்கள் நமக் கூட்டும் புத்தியையும் காட்டும் முன் மாதிரிகையையும்விட ஓர் உத்தம பத்திரிகை அதிக நன்மை விளைவிக்கிறது" என்றார். உண்மையாகவே இவ்வரிய கருத்தால் பத்திரிகாபிமானம் எத்துணை இவர்களிடமிருக்கிறதென்பது இலகுவில் கண்டுபிடிக்கலாமன்றோ? இவற்றை யெல்லாம் கவனித்து ஆழ்ந்து ஆலோசிக்குங்கால் நம்மிடமிருக்கும் மட்டுக்கடந்த சுயநலப்பிரியம், பொதுநலப்பிரியமின்மை, அநாகரீகம், மதாபிமானக் குறைவு, பிறர்குற்றஞ் சகியாமை முதலியவைகளுக்கு பத்திரிகாபிமானம் கொண்டு பத்திரிகை வாசியாமையே முக்கிய காரணங்களில் ஒன்றெனக் கூறலாம். இஃதிங்ஙனமிருப்ப நமது கத்தோலிக்கு பத்திரிகைகளின் நிலைமையோ மிகவும் பரிதாபத்துக்குரியதா யிருக்கிறது. இத்தகைய நிலைமைக்குக் காரணமும் நம்மவரே! நம்மில் பத்திரிகாபிமானமின்மையே! அபிமானம் என்பது நல்லெண்ணம், பற்றுதல், ஆசை, சந்தோஷம் எனவுங் கொள்ளலாம். ஆகவே, பத்திரிகை வாசிப்பின் மட்டில் நம்மவர்க் காசை யுதித்த காலத்திலேயே நமது நாகரீக நிலையும் பூர்த்தியாகும், அநாகரீகம் ஒழியும் என்பதற்கு சந்தேக மென்ன?

ஆங்கிலேயருக்கிருக்கும் பத்திரிகாபிமானத்தினாலன்றோ எத்தனையோ மைல் தூரத்திலிருக்கும் அமெரிக்கா முதலிய வன்னிய நாடுகளின் வர்த்தமானங்களை உடனுக்குடனே இலங்கையிலும் அந்நிய நாடுகளிலும் வசிக்கும் ஆங்கிலேயர் அறிந்துகொள்பவரா யிருக்கின்றனர். நாம் இலங்கைக்கு ஒரு நாள் அல்லது அரை நாட் பயண தூரத்திலிருந்தும் அங்கு நடப்பன இங்கு தெரியாமலும், இங்கு நடப்பன அங்கு தெரியாமலும் கடித மூலமாயறிந்தவை தவிர. விசேஷ, சாதாரண வர்த்தமானங்களை யாராவது நம் நாட்டுவாசிகள் அன்றேல் பந்துக்கள் வருமளவும் அவர்கள் மூலமறிந்து கொள்ள அவர்களையே அவாவோடு எதிர்பார்க்கிறோம். கேவலம், கேவலம்!! இவ்வாறு ஒவ்வொன்றுக்கும் அயலாரை எதிர்நோக்கும் நிலைமை எப்போது நம்மைவிட்டு அகலுமெனிலோ நம் நாட்டில் பத்திரிகைகள் அதிக விஸ்தாரமாய் நடமாடு நாளில்தான் எனலாம். பத்திரிகைகள் விருத்தியாவது நமது கையிலேயே யிருக்கிறது. தோன்றிய பத்திரிகைகளை ஆதரியாது விட்டுவிடுகிறோம். உதவியை நாடும் பத்திராதிபருக்கு யாது முதவி புரியாது கைநெகிழ்ந்துவிடுகிறோம். பத்திரிகை தாழ்வடைந்து, மெலிந்து, இறந்து விட்டபிறகு வியஸனிக்கிறோம். உதாரணமாக இலங்கையில் சிலகாலங்கட்கு முன்னர் பிரகடனம் பெற்ற "திராவிட மித்திர" னின் அருமையை அறியாதார் யார்? அந்தோ! அப்பத்திரிகை யிப்போதெங்கே? அது மறைந்து போனதற்குக் காரணம் யாது?

ஆகவே, திராவிடரே! இந்தியரே! உங்கள் தாய்ப்பாஷையாம் தமிழை நேசிக்கிறீர்களோ? நேசிப்பீர்களானால் தமிழ் பத்திரிகை வாசிக்க ஆசைகொள்ளுங்கள். தினசரிப் பத்திரங்கள், வாராந்தரப் பத்திரங்கள் உற்பத்தியாக முயற்சி செய்யுங்கள். கல்விமான்களே! தனவான்களே இந் நன்முயற்சிக் குதவி புரியுங்கள்!

அப்படியானால் நாம் விரைவில் நாகரிகம் பெற்று நற்கதியடைவோம்.

Brookside }
8-1-1913 }

இங்ஙனம்,
நாஞ்சிலூரன் நாஞ்சிலர்

### ஓர் மனு.

இதை வாசிக்குங் கனவான்களே,

சிலகாலங்களுக்கு முன் அக்கினியாலுங் கடல் உக்கிரத்தாலும் அநேக வீடுகளும் பள்ளிக்கூடந் தேவ ஆலயம் முதலியனவுஞ் சேதமாய்ப்போகவே, அதற்குப்பின்னு நேரிட்ட பஞ்சம் விஷபேதி முகாந்தரமாக கிறிஸ்தவர்கள் வருத்தப்பட்டு பரிதபித்திருக்கும் வேளையில், கொல்லம் வாடி, என்கிற அவர்களுடைய ஊர் நமது விசாரணையின் கீழ் சேர்க்கப்பட்டது.

அவ்வூரை அதின் முன்னிலைமைக்கு கொண்டுவரும்படியாக வேண்டிய முயற்சியும் பிரயாசமும் எடுத்துகொண்டதின்பேரில், சர்வேசுரனுடைய உதவியினாலே, காரியாதிகள் அனைத்தும் அநுகூலமாகவே நடந்துவருகின்றன.

தற்காலம் அந்த எழை ஜனங்களுக்காக கட்டிவரும் அர்ச். அந்தோனியாருடைய தேவ ஆலயத்திற்கு மேற்கூரையும் ஓடும் வைத்திருக்கிறது. ஆகிலும் அதின் முழுவேலையையுஞ் செய்துமுடிக்கிறதற்கு வழிவகை யில்லாதிருக்கிறது. ஆனதுபற்றி தர்ம சிந்தையுள்ள கனவான்களே! மேல்கண்டிருக்கும் வறுமையின் பேரில் நீங்கள் தயையாய் ஆலோசித்து, நல்மனமாய் உங்களால் கூடியமட்டும் ஏதாவது பொருளுதவி செய்வீர்களெனக் கோருகிறோம். இப்படியாய் நீங்கள் செய்யும் பிறர் சிநேகக் கிரியைகளுக்கு நூறுமடங்காக, அற்புத அர்ச். அந்தோனியாருடைய மன்றாட்டினாலே சருவேசுரன் உங்களுக்கு பிரதிபலன் அளிக்காமற் போகார். மேலும் தினந்தோறுந் திவ்விய பூசையில், உபகாரிகளுக்காக பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.

மீளவும், உதவிசெய்கிறவர்களுடைய் பெயர்களை டாப்பில் அச்சிட்டு, ஞாபகத்துக்காக எப்போதும் பத்திரமாய் காப்பாற்றி அவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுடன், அவர்களுடைய நாமங்கள் நித்திய சீவியத்தின் புத்தகத்தில் பதிக்கப்படுமென்றும் எண்ணுகிறோம்.

கொல்லம், வாடி, பங்குவிசாரணை,

அம்புரோசு சுவாமிகள்.

15-1-1912 } Fr. Ambrose Gonzaga,
Vicar of Vaddy, Quilon.

### ஓர் எச்சரிக்கை.

இதனால் சகலமான கிறிஸ்துவர்க்கும் தெரிவிக்கிற தென்ன வென்றால்: திருநெல்வேலி ஜில்லாவில் சேர்ந்தமரம் என்னும் நமது பங்கு விசாரணைக் கிராமத்தில் புலவர்களென்னும் ஓர் ஜாதியார் புதிதாய் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள். இவர்கள் 4,5 பேராகச் சேர்ந்துகொண்டு சங்கீத வாத்தியங்களுடன் சென்னை ராஜதானியிலுள்ள பல இடங்களுக்குப் போய் தேம்

பாவணி, இஸ்தாக்கியார், ஞானசவுந்தரி சபா முதலிய பாட்ல்களில் சிலதைப் பாடி பணம் சம்பாதிக்கிறதே இவர்கள் தொழில். இப்படிச் செய்வது குற்றமில்லாததாயினும் இதனோடு அவர்கள் அநேக புரட்டுகள் செய்து பணம் சம்பாதிக்கிறார்களென்று நாம் கேள்விப்படுகிறோம். அதாவது:-இவர்களின் சொந்த ஊர் சேர்ந்தமரமாயிருக்க அதைமாற்றி தங்களூர் மலையாளம் என்கிறதும், முன்னர் வேதசாஷியாக மரணமடைந்த தேவசகாயம் பிள்ளை வம்சத்தாரென்கிறதும், அல்லது வேறு ஓர் ஊரைச் சொல்லி ஊர் பேர் மாறாட்டம் செய்கிறதும், கிறிஸ்துவர்களுள்ள கிராமங்களுக்குப் போனால் பத்தியுள்ளவர்களைப்போல் பாவனை பண்ணி அடிக்கடி திவ்விய நன்மை வாங்குகிறதும், பேரின்ப பாட்டுகளைப் படிக்கிறதும், இந்துக்கள் உள்ள இடங்களுக்குப் போனால் தாங்களும் இந்துக்களென்று சொல்லி ராமாயணம், பாரத முதலிய பாடல்களைப்பாடி பணம் சம்பாதிக்கிறதும், சிற்சில இடங்களில், கோவில் கட்டுகிறதற் கென்றும், கன்னியாஸ்திரீ மடம் கட்டுகிறதற் கென்றும் கள்ளத்தனமாய் பணந் தண்டல் செய்கிறதுமா யிருக்கிறார்கள். இப்படிச் செய்கிறவர்கள் வேறுவிதமான புரட்டுகளெல்லாம் செய்வார்களென்பதற்கு சந்தேகமில்லை.

இக் கூட்டத்துக்கு தலைமையான தேவசகாய புலவன் என்னும் ஓர் வாலிபன் வேதத்திற்கு விரோதமாய் மசுவாதிக் கல்யாணம் செய்து வேதத்தைவிட்டு நீங்கினவன்.

ஆகையால் இதை வாசிக்கும் கிறிஸ்துவர்கள் இவ்வித ஏமாற்றாய் பல உபாய தந்திரம் பண்ணி பணம் சம்பாதிக்கிறவர்கள் சேர்ந்தமரத்தி லுள்ள புலவர்கள்தா னென்றும், இவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டு வருகிற ஓநாய்க்கு ஒப்பானவர்க ளென்றும் நன்றாயறியக் கடவார்கள். மேலும் இவர்களைப் பார்த்தவர்கள் நமக்கு இவர்களைப் பற்றி எழுதக் கோருகிறோம். நல்ல நடத்தை யுள்ளவர்கள்தானென்று இப்புது வருடத்தில் நம்மால் கொடுக்கப்பட்ட யோக்கியதா பத்திரம் பெற்று வருபவர்களுக்கு மாத்திரம் உதவி செய்ய இஷ்டமுள்ளவர்கள் உதவி செய்யலாம்.

சேர்ந்தமரம்.
2—1—1913.

J. Ignatius. S. J.

## கன்னியர் மடத்தில் திருச் சடங்கு.

ஐயா,

கீழ்வரும் சங்கதியை உமது பத்திரிகையின் ஓர் கோணத்திற் பிரசுரிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதாவது:

திருமயிலை மேற்றிராசனத்தில் ஸ்தாபிக்கப்பட் டிருக்கும் அர்ச். அசிசி பிராஞ்சீஸ்குவின் மூன்றாவது சபைக் கன்னியர்க ளெல்லோருந் தங்களது தாய் மடத்தில் ஜனவரிமீ 6-ந்தேதி 8 நாள் ஞான ஒடுக்கத்தி லமர்ந்தனர். கனம். மோதா வாஸ் சுவாமியார் ஒடுக்கங் கொடுத்தார். ஒடுக்கம் முடிந்த 14-ந்உ ஆனந்த தினமாயிருந்தது. மடமும் அதைச் சுற்றிலு முள்ள விடமும், தோரண துவஜங்களால் சிறப்பிக்கப்பட் டிருந்தன. தேவாலயமோ, பூமாலைகளாலும், புஷ்பக் கொத்துகளாலும், எண்ணில்லா வர்த்திகளாலும் வெகுவா யலங்கரிக்கப்பட் டிருந்தது. சரியாய் காலை 7 மணிக்கு வந்திக்கத்தக்க மயிலை மேற்றிராணி யாண்டவர் மணிகள் ஒலிக்க, கீதங்கள் தொனிக்க கோவிலுள் பிரவேசித்தார். புதிதாய் சபை யுடுப்புப் பெறவிருந்த மாதுக்களும், வார்த்தைப்பாடு கொடுக்கவிருந்த சபையோருஞ் சுற்றுப்பிரகாரமாய் வந்தடைந்தனர். உடனே திருச்சடங் காரம்பமானது. முதன்முதல், உடுப்புப் பெறவிருந்த பெண்கள் சிறந்த வாடைகள் உடுத்து. ஆபரணங்க ளணிந்து, தங்களது மணநாளில் மங்களமாய்க் கோவிலுக்குச் செல்வதுபோல் ஆண்டவர் சமுகம்வந்து நின்றார்கள். அந்தோ! கொஞ்ச நேரத்துக் குள்ளாக, அவர்களது ஆடையாபரணங்களை யெல்லாங் களைந்து, உலகவாசையையுமே துறந்து, அர்ச். பிராஞ்சீஸ்கு சபையின் தாரித்திர உடுப்பை மிக்க மகிழ்ச்சியுடன் பெற்றனர். தலை மயிர் வெட்டுண்டதும், உடுப்புப் பெற்றதும், பூ முடி சூட்டப்பட்டதுமாகிய சடங்குகள் பார்த்தோர் மனதைப் பற்றி, உள்ளத்தில் சேசுநாதரைச் சேவிக்கு மாசையை யூட்டின. நாலுபேர் தற்கால வார்த்தைப்பாடும் ஐந்துபேர் நித்திய வார்த்தைப்பாடுங் கொடுத்தனர். இது முடியவே, திவ்ய பலி பூசை நிறைவேறினது. இந்த வைபவங்களைப் பார்க்க, கன்னியர்களின் இனசனத்தோரும், ஏனையோரும் ஏராளமாய் வந்து கூடினர். அன்று பூசையில் அசரீரிகளின் அப்பத்தை யருந்தினவர் 100-க்குமே லிருப்பார். இந்த சபையின் ஐந்து மடங்கள் மயிலை மேற்றிராசனத்தி லுண்டு. அவைகளில் நான்கு தென்னிந்தியாவிலும், ஒன்று டக்காவின் பக்கம் நாகேரரி யென்னு மூரிலு மிருக்கின்றன. இவ்வளவு தூரஞ் சென்று ஆத்துமாக்களுக்காக உழைக்கிறதைப் பார்க்குங்கால், அவர்கள் சர்வேஸ்பரனது அதி மிகத் தோத்திரத்திற்காக எடுக்கும் ஊக்கத்தையும், சிரத்தையையும், தைரியத்தையும் நன்கு அறியலாம். இச்சபையானது என் றென்றும் தழைத்துக் கிளைத்து செழித்தோங்கி வளருமாறு எல்லாம் வல்ல நல்ல தேவ னருள் புரிவாராக.

இப்படிக்கு,
ஓர் மயிலைவாசி.



### மஹா வந்திக்கத் தக்க யே. டோண்டன்வ்ல் ஓ. எம். ஐ. ஆண்டவ ரவர்களின் வருகை.

அஷ்டதிசை எங்கு மகாப் பிரகாசம் வீசி ஜொலித் திலங்கும் சுத்த சத்திய மெய்மறைத் தலை நகராகிய ரோமாபுரியில் ஸ்தாபித்திருக்கும் சுப்பீரியர் ஜெனரல் ஸ்தான மிருந்து இவ் வாண்டகை இவ் விலங்காபுரியின்கண் கொழும்பு அதி மேற்றிராசனத்திற்கு முதலாவதாக வந்து, சென்ற இரு மாதங்க ளளவாய் ஒவ்வொரு பிரதான ஸ்தானங்கள் சென்றதுபோல் "அஸ்திஜயிலாபுரம்" எனும் இவ் வூருக்கும் இம்மதி பன்னீராந் திகதி ஆதிவாரம் மாலை சுமார் ஏழரை மணிக்கு "மோட்டோகார்" எனும் இரதத்தில் கனம். பங்கு சுவாமிகளும் இன்னுமிரு குருக்களுடன் வந்திறங்கவே, பாண்ட் வாத்தியங்கள் முழங்க, தேவாலய மணிகள் ஆர்ப்பரித்தன. ஆண்டவ ரவர்களின் வருகைக்காகத் தயாரிக்கப்பட்டிருந்த இரு தோரணங்களிலொன்று சந்த்ரகுலப் பாத வம்சத்தினரால் வெகு அலங்காரமாய் நிர்மாணிக்கப்பெற் றிருந்தது. இங்கு முதலாவதாக ஆண்டவ ரவர்கள் எழுந்தருளி சமஸ்தருக்கும் ஆசீ ரருளி "வெல்டன் வெல்டன்" "போமவந்தாய்" என் றுரைத்து தேவாலயம் புகுந்தனர். அங்கு கனதனவானாகிய ஸ்ரீமான் ஜோன் குளோவிஸ்ட சில்வா அவர்களால் ஓர் வந்தனோபசாரப் பத்திரிகை வாசிக்கப் பெற்றது. அதற்குப் பதில் வந்தனமளித்ததுடன் சமஸ்தரும் பிரமிக்கத் தக்கவிதமாய் ஆங்கிலத்தில் ஓர் திவ்விய பிரசங்கம் செய்தார்கள். இப் பிரசங்கத்தின் மொழி பெயர்ப்பு கனம். பங்கு சுவாமிகளால் சிங்களத்தில் செப்ப லுற்றது. அதன்பின் திவ்யநற்கருணை ஆசீர்வாதம் ஆண்டவ ரவர்களா லருளப்பட்டது.

மறுதினம் திவ்ய பூசை ஆனவுடன் பலனுள்ள தமது பௌத்திரத்தை கத்தோலிக்கரனைவோரும் முத்திசெய்து பலனடையச்செய்தனர். 14-ம் திகதி திருக்குடும்ப சபைக் கன்னியர் மடத்தின் முதலாளி அம்மாள், மேரி எலன் தாயா ரவர்கள் இத்தேசம் வந்த ஐம்பதாம் வருட தங்கஜுபிலி கொண்டாட்ட தினமாகையால், மடத்துக் கோவிலில் திவ்ய பூசை செய்து, அன்பும் தயையும் உருவாகக் கொண்ட தாயாரின் கடின உழைப்பைப் பற்றியும், நன்னடக்கையைப் பற்றியும் வெகுவாய்ப் புகழ்ந்து; அத்தாயாரைப் பின்பற்றி நடக்கும்படியாய் அனைவோருக்கும் நன்மதி யுரைத்தனர். அழைத்தல் பத்திரம் அனுப்பியபடி தாயாரின் பழக்கமுள்ளவர்கள் யாவரும் சென்று கை குலுக்கிக் களிகூர்ந்தார்கள். அன்றிரவு "Cantata" எனும் நடன சங்கீத விநோதக் கொண்டாட்டம் பாடசாலை சிறுமிகளால் ஆண்டவ ரவர்களுடன் இருமூன்று குருக்களும் இவ் வூர் பிரதானிகள் உட்பட அழைக்கப்பட்டவர்களும் வீற்றிருக்க, மெச்சத்தக்க விதமாய் நடத்தப்பட்டது. அதில் முதலாளி அம்மாள் அவர்களுக்கு இந்நகர் வாசிகளாலும், ஆண்டவ ரவர்களுக்கு பாடசாலை சிறுமிகளாலும வந்தனோபசாரப் பத்திரங்கள் முறையே வாசிக்கப்பட்டன. ஐம்பதாம் வருடத் தங்க ஜுபிலியின் ஞாபகார்த்தமாக ஐம்பது தங்கப் பவுன்கள் தாயாருக்குச் சன்மானிக்கப்பட்டன. இறுதியாய் ஆண்டவ ரவர்கள் தயா ரவர்களைப் புகழ்ந்து வாழ்த்த, கரகோஷ்டங்களுடன் ஷை ஜுபிலி தினக் கொண்டாட்டம் "God Save The King" எனும் சங்கீதத்துடன் முற்றுப்பெற்றது.

15th January 1913.
Kurunegala.

இங்ஙனம்,
ஓர் கத்தோலிக்கன்.

## தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கம். பதினைந்தாவது பொதுக்கூட்டம்.

தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தின் பதினைந்தாவது வருடோற்சவப் பொதுக் கூட்டம் சென்ற ஜனவரிமீ 13-ம் தேதி சென்னை, அரமனைக்காரர் தெருவிலிருக்கும் அர்ச். கபிரியேல் கலாசாலையில், சரியாய் வந்திக்கத் தக்க மயிலை மேற்றிராணியாராகிய தியற்றோனியஸ் டிக்காஸ்த்திரோ ஆண்டவர் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் வெகு விமரிசையாய் நடைபெற்றது. தென்னிந்தியா வெங்குமுள்ள கிளைச் சங்கங்களி லிருந்தும் உள்ளூரி

விருந்தும் அநேக மெம்பர்களும் ஏனையோருமாகிய கத்தோலிக்கு ஜனக்கூட்டத்தால் அவ்விசாலமான சாலை முழுதும் நிற்க விடமின்றி, நிரம்பியிருந்தது. திருச்சினாப்பள்ளியிலிருந்து சங். சூவல் சுவாமிகளும், கூடலூரிலிருந்து சங். பாரர் சுவாமிகளும், புரத்தாக்குடியிலிருந்து சங். சவரிநாத சுவாமிகளும், உள்ளூர் குருசுவாமிகளும் சேர்ந்து 15-குருக்கள் விஜயஞ் செய்திருந்தார்கள். மகாகனந் தங்கிய அக்கிராசனாதிபதியவர்களின் அன்பும் ஆதரவும் செறிந்த முகவுரையுடன் கூட்டம் ஆரம்பமானது. சங்கத்தின் கௌரவ காரியதரிசியாகிய ஆனரபில் திவான் பஹதூர் .எல். டி. சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்களால் சங்கத்தின் 1912-வது வருஷத்திய விருத்தாந்த விளம்பரப் பத்திரம் வாசிக்கப்பட்டது. அதனால் சங்கத்து அங்கத்தினர் ஷை வருடாந்தத்தில் 1538-பேரிருந்தார்களென்றும், சந்தா முதலிய வருமானம் ரூ 1139–7–3 என்றும், இதில் செலவு ரூ 161–11–6 போக மிகுதியுடன் சென்ற வருடத்து நிலுவையுஞ் சேர்ந்து ரூ 4898–11–9 கையிருப்பு என்றும் தெரியவந்தது. தற்காலமிருக்கும் அங்கத்தினரின் தொகையாகிய 1538-க்கு வசூலிக்கப்பட்ட சந்தா ரூ 196–12–0 என்றும், இதுவிஷயத்தில் அந்தந்த கிளைச்சங்கத்துக் காரியதரிசிகள் அதிக சிரமமெடுத்து சந்தா பாக்கிகளை வசூலித்து சங்கத்தின் நிதியை விருத்திபண்ணுவது அத்தியாவசியமென்றும், இப்படிச் செய்கிறவரையில் சங்கம் மேற்கொண்டிருக்கிற பல பிரயோசனகரமான காரியங்களில் ஒன்றையேனும் செய்து முடிக்க இயலாதென்றும் கௌரவ காரியதரிசியவர்கள் முறையிட்டுக்கொண்டார்கள். இதன்பின் ம-ா-ா-ஸ்ரீ திண்டுக்கல் ஆ. சூசை மாணிக்கம்பிள்ளையவர்கள் பி. ஏ. "அங்கத்தினரின் உபேக்ஷை" என்னும் விஷயத்தைப்பற்றி வெகு சாதுரியமாய் உபந்நியாசஞ் செய்தார்கள். அதன் பிறகு ஆனரபில் திவான் பஹதூர் எல். டி. சுவாமிகண்ணுப் பிள்ளையவர்கள். எம். ஏ. பி. எல்; எல். எல். பி. "சங்கத்துக்கு ஓர் பத்திரிகை அவசியமா?" என்னும் விஷயத்தின் பேரில் ஓர் அரிய பிரசங்கஞ் செய்தார்கள். சங்கத்தின் அங்கமாக ஓர் சமாசாரப்பத்திரிகை அத்தியாவசியகமென்றும், ஆயினும் அதை சங்கம் ஆரம்பித்து நடத்தவேண்டிய நிதியின்மையால் அது விஷயத்தில் இப்போது சங்கம் தலையிட்டுக்கொள்ளக் கூடாத நிலைமையிலிருக்கிறதென்றும், அங்கத்தினர் சிலர் ஒன்றுசேர்ந்து அதற்காக திரவிய சேகரஞ் செய்வதில் தளரா முயற்சிசெய்தல் வேண்டுமென்றும் சொல்லி முடித்தார்கள். இவ்விஷயத்தை ஆமோதித்தே தூத்துக்குடி வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ, எம். எஸ். மாஸ்கரேனா அவர்கள் பல மேற்கோள்களையும் உதாரணங்களையுமெடுத்துக் காட்டி, சங்க விருத்திக்கும், கத்தோலிக்குக் குடும்ப விருத்திக்கும் ஓர் பத்திரிகை இன்றியமையாத சாதனமென ஸ்தாபித்துப் பிரசங்கித்தார்கள். இதன் பின்னர் சென்ற டிசம்பர் மாதத்தில் நமது இராஜப் பிரதிநிதியாகிய ஹார்டிஞ்சு பிரபு அவர்களுக்கும் அவரது தேவியாருக்கும் டில்லி நகர்ப் பிரவேசத்தின் போது ஓர் சண்டாளனால் நேர்ந்த பிராணாபத்தைப் பற்றி, "தென்னிந்தியர் கத்தோலிக்கு இந்தியர் சங்க"த்தின் பேரால் அநுதாப சமாசாரம் அனுப்பவேணுமென்று ஓர் பிரேரபனை, சென்னை கபிரியேல் கலாசாலை தலைமை உபாத்தியாயர். ஏ. ஆரோக்கியசாமிபிள்ளை பி. ஏ. எல். டி. அவர்களால் கொண்டுவரப்பட, அது புரத்தாக்குடி சங். ஏ. சவரிநாத சுவாமிகளால் ஆமோதிக்கப்பட்டு, சகலராலும் மிக்க உருக்கமான உணர்ச்சியுடன் அங்கீகரிக்கப்பட்டது. இதற்கு அறிகுறியாக கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள் அனைவோரும் எழுந்து நின்று சிரவணஞ் செய்தார்கள். பிறகு கோயமுத்தூர் மேற்றிராசனத்தின் விக்கர் ஜெனரலாகிய கனந்தங்கிய ராண்டி சுவாமிகளுக்கு அவரது பொது ஜன ஊழியத்திற்கு சம்மானமாக இந்திய கவர்ண்மெண்டாரால் அளிக்கப்பட்ட "கைசரி இன்டு மெடல்" என்னும் முதற்றர தங்கக் கிதாப்புப் பதக்கத்தை முன்னிட்டு அக் குருதேசிகருக்கு ஷை சங்கத்தின் பேரால் சோபனவாழ்த்துப் பத்திரம் அனுப்பவேண்டுமென ஓர் பிரேரபனை மகா-ா-ா-ஸ்ரீ எஸ். அமிர்தசாமிபிள்ளை பீ. ஏ. அவர்களால் கொண்டுவரப்பட, அது நாகப்பட்டணம் ம-ா-ா-ஸ்ரீ பி. தம்புசாமி பிள்ளையவர்களால் ஆமோதிக்கப்பட்டு, சகலராலும் சர்வசம்மதமாய் அங்கீகரிக்கப்பட்டது. இதன்பின் சங்கத்து கௌரவ காரியதரிசியாகிய ஆனரபில் திவான் பஹதூர் எல். டி. சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்களை சென்னை கவர்னரவர்களின் சட்ட நிரூபண சபையில் ஒரு மெம்பராக நியமனஞ் செய்ததற்காக, மாட்சிமை தங்கிய சென்னை கவர்னராகிய, பெண்ட்லண்டு பிரபு அவர்களுக்கு நன்றியறிந்த வந்தனோபசாரப்பத்திரம் அனுப்பவேணுமென்று. திருச்சினாப்பள்ளி அர்ச். சூசையப்பர் கலாசாலை



உபாத்தியாயராகிய மகா-ா-ா-ஸ்ரீ. எஸ். அற்புதசாமி உடையார் பி. ஏ. எல். டி. அவர்கள் ஓர் பிரேரபனை கொண்டுவந்து ஷை சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்களின் கல்வி சாமர்த்தியத்தையும் அவர் தன் முயற்சியால் தேடிக்கொண்ட உந்நத பதவியையும், அவருடைய நல்லொழுக்கத்தையும் பற்றிப் புகழ்ந்து, இவருடைய நன்மாதிரிகை மற்றவர்கள், விசேஷமாய், கல்வி கற்கும் மாணவர்கள் பின்பற்றத்தக்கதென்று மிக்க சாதுரியமாப் பேசினார்கள். இப்பிரேரபனை, சென்னை கிறிஸ்டியன் காலேஜு இலத்தீன் போதகாசிரியராகிய எம். பி. ஏ. தம்பிப்பிள்ளையவர்களால் ஆமோதிக்கப்பட்டு, சந்த்தாரால் குதூகலத்துடன் அங்கீகரிக்கப்பட்டது. அதன்பிறகு மகா கனந்தங்கிய அக்கிராசனாதிபதியவர்களின் சுருக்கமான முடிவுரையுடன் கூட்ட முகிவுற்றது. இக்கூட்டம் முடிந்தவுடன் ஆனரபில் திவான் பஹதூர் சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் சென்னை சட்ட நிரூபண சபையின் மெம்பர்களில் ஒருவராகத் தெரிந்தெடுக்கப்பட்ட விஷயமாக ஓர் "ஜனசங்கக் கொண்டாட்டம்" செய்யப்பட்டது. அப்போது ஷை அற்புதசாமி உடையார் அவர்களே நமது பிள்ளைவர்களுக்கு தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தின் பேரால் சுபசோபன வாழ்த்து கூறி, புஷ்பமாலை சூட்டினார்கள். சென்னை மோட்சராக்கினி யாலய விசாரணை குருவாகிய சங். எல். எக்ஸ். பெர்நாந்திஸ் சுவாமிகள் குருக்கள் பேரால் பிள்ளையவர்களையபரிமிதமாய்ப் புகழ்ந்து ஆசிகூறினார்கள். பிள்ளையவர்கள் எல்லோருக்கும் மிக்க உருக்கமான மொழிகளால் தக்க பிரதிவந்தனங் கூறினார்கள். பின்னர் ஆங்கு விஜயஞ் செய்திருந்தவர்கள் எல்லோருக்கும் பலவித மிட்டாய் பலகார தினுசுகளுடன். தோட்ட விருந்து அளிக்கப்பட்டது. "காட்சேவ் தி கிங்" என்ற அரசர் வாழ்த்துபாட்டுடன் அந்நாட் கொண்டாட்டம் அதிசந்தோஷகரமாய் முற்றுப்பெற்றது. இக்கொண்டாட்டத்தின் ஞாபகம் நெடுநாள்வரைக்கும் எல்லார் மனதிலும் எடுபடா திருக்கும் என்பதிற் சந்தேகமில்லை.

இப்படிக்கு
கண்டது விண்டோன்.

---

துன்பம் வேண்டாமென்று ஓடுபவனுக்குத் துன்பமே வரும். இவ்வுலக சீவியம், குறைவும் துன்பமும் நிறைந்த சீவியம்.



# GENERAL NEWS AND NOTES.

## பொது வர்த்தமானக் குறிப்புகள்.

**ஓர் குகை.**—அமெரிக்க ஐக்கிய மாகாணத்திலுள்ள ஒரு மலைத் தொடரில், 64 மைல் நீளமுள்ள குகையொன்றிருக்கிறது. இதுவே உலகத்திலுள்ள குகைகளிலெல்லாம் மிகப் பெரியதாகும்.

**யானைப் பால்.**—யானைப் பால் மற்ற பால்களெல்லாவற்றுள்ளும் மேம்பாடுடையதாம். இதிலிருக்கும் நீர் மிக அற்பமாம்; வெண்ணெயும் சீனியும் மற்ற பால்களில் விட இதில் அதிக நறுமணமும் நற்சுவையும் பொருந்தியனவாம்.

**சரீர அழகுக்கு மருந்து.**-ஒவ்வொரு நாளும் இரவில சயனிப்பதற்கு அரைமணி நேரத்திற்கு முன் வெந்நீர் அருந்தினால் முகத்தில் நல்ல பிரகாசமும் தேஜஸும் உண்டாகுமென்று ஒரு சாஸ்திரியார் கூறுகிறார்.

**கஞ்சா குடியருக்கு வைத்தியசாலை.**—கஞ்சாகுடியால் ஜனங்களுக்கு நேரு நோயைத் தீர்க்க கல்கத்தாவில் ஏக காலத்தில் 50-வியாதியஸ்தர்கள் தங்கி யிருந்து சிகிச்சை பெற ஒரு ஆஸ்பத்திரி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

**உரோட்டிக் காய்.**—டெங்களூரி லிருக்கும் ஒருவித மரத்தின் காயை தீயில் சுட்டுத் தின்றால் அதன் உருசி கந்தம் முதலியன கோதும்பை உரொட்டிக்குச் சமானமா யிருக்கின்றனவாம். அதன் குணம் எத்தன்மைத்தோ!

**இரும்பு மலை.**—அமெரிக்காவி லுள்ள மெக்சிகோவைச் சேர்ந்த டுராங்கோ என்னுமிடத்தில் 400 அடி உயரமுள்ள ஓர் இரும்பு மலை யிருக்கின்றது. அது $1\frac{1}{4}$ மைல் நீளமும் $\frac{3}{4}$ மைல் அகலமு முடையதாம். இது அவ் வூர் வாசிகளுக்கு பெரும் புதையலன்றோ?

**உயரமுள்ள ஸ்திரீ.**—உலகத்துள்ள ஸ்திரீகளுள் பிரேசில் என்னு நாட்டிலிருக்கும் பிரனெல்ட் என்பவள் மிகவும் உயரமுள்ளவளாம். அவள் 1 அங்குலங் குறைய 8 அடி உயரமா யிருக்கின்றனள். அவளுக்கிப்போது வயது 18 ஆம்.

**புதிய பொன் சுரங்கம்.**—ஜப்பானில் 58,000 அடி யுயரமுள்ள ஷினுனே மலைப் பக்கத்தில் இப்போது புதிதாக ஒரு பொன் சுரங்கம் கண்டு பிடிக்கப்பட்டது. இதில் விஸ்தாரமாய் பொன் அகப்படுகின்றது. ஜப்பானியருக்கு இதுவும் ஓர் அதிர்ஷ்டமே!

**ஆகாய தபால்.**—நாகரிக மிகுந்த பிரான்ஸு தேசத்தில் ஆகாயக் கப்பலேறி தபால் கொடுக்கும் புது ஏற்பாடு வழங்கி வருகிறது. இனி ஆகாய மார்க்கமாய் ஜனங்கள் ஊர்ப்பயணம் செய்யும் வழக்கமும் வெகு சீக்கிரத்தில் கேள்விப்படலாம்.

**புகையிலையும் விஷ பேதியும்.**—ஜெர்மனி தேசத்துப் பர்லின் பட்டணத்தில் கியாதிபெற்ற தத்வ சாஸ்திரியாகும் ப்ரொபஸர் வெங்க் என்பவர், விஷபேதியைத் தடுக்க புகையிலையை உபயோகிப்பது தக்க ஔஷதமாமென சமீபத்தில் ஒரு உபந்நியாசத்தில் எடுத்துக் காட்டினார்.

**பெண் போலீஸ் சேவகர்கள்.**—ஜெர்மன் தேசத்தின் பிரதான நகராகிய பெர்லினில் 30 பெண் பாலார் போலீஸ் சேவகர்களாய் நியமிக்கப்பட் டிருக்கிறார்கள். போலீசு உத்தியோகத்திற்குப் பெண்கள் எவ்வளவுதூரம் லாயக்கானவர்கள் என்பது இனி யநுபவத்தில் தெரியவரும்.

**கண்ணாடி கடியாரம்.**—ஜர்மன் தேசத்திலுள்ள பவேரியா நாட்டில் கண்ணாடி மெழுகிடுமொருவன் ஆறுவருஷம் சிரமப்பட்டுக் கண்ணாடியால் ஒரு கடியாரஞ் செய்திருக்கின்றானாம். அக் கடியாரத்தில் கண்ணாடியாலே சக்கரமுதலிய சகல யத்தனங்களையும் செய்திருக்கிறதாகச் சொல்லப்படுகிறது. ஆயினும் கடியார உறுப்புக்கள் இயங்குவதற்கு மூல காரணமாயுள்ள ஸ்பிரிங் என்னும் வில், கண்ணாடியால் செய்வதற்கு சாத்தியமோ என்பதுதான் சந்தேகாஸ்பதமா யிருக்கிறது.

**வர்த்தமானப் பத்திரிகைகள்.**—உலக முழுமையும் தினப்பதிப்புப் பத்திரிகைகள் 6000 பிரசுரிக்கப் படுகின்றனவாம். இதில் 900 ஜெர்மனியிலும், 250 பிரிட்டனிலும், 150 பாரிஸ் நகரத்திலுமாம். ஜெர்மனியில் நடந்துவரும் "போஸ்டு சைடிங் ப்ராங்போர்ட்" பத்திரிகையே ஐரோப்பாவுக்குள் ஆதியானதாம். சைனாவில் நடக்கும் "பீக்கிங் நியூஸ்" என்ற பத்திரிகை உலகத்துள் மிகவும் பழமை யானதாம். இது ஏற்பட்டு 1400 வருஷமாகின்றனவாம். இதற்கு 10,000 சந்தாதாரர்கள் இருக்கிறார்களாம்.

**பஞ்சாப் பிராமணர்களும் படைச்சேவகமும்.**- பஞ்சாபில் பிராமணர்கள் ஒரு பொதுக்கூட்டம் கூடி பிரிட்டிஷ் இந்தியன் சைன்னியத்தில் தங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கமாண்டரின் சீப் என்னுந் தளக்கர்த்தரைக் கேட்டதற்கு அவரும் அங்ஙனஞ்செய்ய மனமிசைந்து வாக்குக் கொடுத்திருக்கிறதாகச் சொல்லப்படுகிறது. படைக்கும் பார்ப்பார் பிந்தினவர்களல்ல வென்பது இதனால் ஏற்படுகிறதல்லவா?

**தேள் கொட்டுக்கு சிகிச்சை.**—தேள் கொட்டின விடத்தில் படிகாரத்தை எலுமிச்சம் பழத்தின் ரசம் விட்டு அரைத்துப் போட்டு, நெருப்பிற் காய்ச்சினால் தேள் விஷம் நீங்கும். மயிலிறகின் புகை நன்றாகப் படுமாறு செய்தாலும் மேற்படி விஷம் இறங்கும். அல்லது வெள்ளைப்பூண்டை யுரித்து அதனை யரைத்துத் தேள் கொட்டின விடத்தில் போல்டீஸ் மாதிரி 10-அல்லது 20-நிமிஷங் கட்ட நோய் முற்றும் நீங்கும்.

**துருக்கி பால்கன் யுத்த நஷ்டம்**—துருக்கி பால்கன் யுத்தத்தால் ஒவ்வொரு நாட்டிற்கும் நேர்ந்துள்ள ஜீவ நஷ்டமும் பொருட் சேதமும் பின்வருமாறாகும்—

| நாடு. | ஜீவநஷ்டம். | பொருட் சேதம். |
|---|---|---|
| பல்கேரியா | 300,000 | பவுன் 70,50,000 |
| ஸர்வியா | 200,000 | 47,00,000 |
| க்ரீஸ் | 150,000 | 48,00,000 |
| மாண்டினீக்ரோ | 40,000 | 11,20,000 |
| துருக்கி | 400,000 | 128,00,000 |
| மொத்தம் | 1090,000 | 30,470,000 |

**பட்டுப்பூச்சிகளிடத்தும் முத்துக்கள்.**—முத்துக்கள் சங்கு, சிப்பி, மீன், நண்டு, முதலை, உடும்பு, தாமரை, வாழை, கமுகு, கரும்பு, செந்நெல், மூங்கில், யானைக்கொம்பு, பசுவின்பல், நாகம், கொக்கு, இவற்றில் உண்டாவதாக பழைய இந்து நூல்களிற் சொல்லப்பட் டிருக்கிறது. இப்போது ஸமுத்திரங்களில் பின்னா என்ற ஒருவிதப் பட்டுப் பூச்சிகளிருக்கின்றன வென்றும், அவைகளில் பட்டு இருக்கிறதோடுங் கூட ஏராளமான கருமுத்துக்க ளிருக்கிறதாகவும் டாக்டர் பெஞ்சமின் எச். க்ரோவு என்பவர் தெரிவிக்கிறார். அவர் சில பட்டுப்பூச்சிகளைக் கொண்டுவந்து பார்த்ததில் ஐந்துக் கொன்றில் முத்து இருந்ததாகச் சொல்லுகிறார்.



**செழிப்பான கரும்பு.**—கோதாவரி சாமல் கோட்டைக்கு சுமார் 8 மைல் தூரத்திலுள்ள காத்திர்வல்பல்லி யென்னும் கிராமத்தில் ஒரு குடியானவனின் கரும்புத் தோட்டத்தில் கரும்புகள் சராசரி 20 அடி யுயரம் வளர்கின்றனவாம். அவற்றில் ஒன்று 29 அடி யுயர மிருந்ததாம். (தோகை 6 அடியும், கணுவுள்ள கரும்பு 23 அடியும்) இது பயிரான நிலம் நல்ல இருமண் சேர்ந்ததும் வடிகாலுள்ள மணற்பாங்கானதுமாம். மேலும், ஏக்கர் ஒன்றுக்கு 1660 ராத்தல் ஆமணக்குப் பிண்ணாக்கு எருபோட்டு மண் அணைக்கப்பட்டதென்று தெரிவருகிறது.

**கஞ்சாவும், சீனாவும், இந்தியாவும்.**—சீனர்கள் கஞ்சாகுடியில் பேர்போனவர்கள். கஞ்சாகுடியினால் விளையுந்தீமைகளை யவர்களிப்போது உணர்ந்து, இந்த துர்ப் பழக்கத்தை முழுதும் விலக்கவேண்டிய எத்தனம் செய்துவிட்டார்கள். கஞ்சாக்குடியை விடாதவர்களுக்கு கடுந்தண்டனை விதித்திருக்கிறார்கள்; அவரவர்கள் வயதுக்குத் தகுந்தபடி, மரண தண்டனை, தீபாந்திர சிட்சை, கடுங்காவல், அபராத முதலிய தண்டனைகள் விதித்திருக்கிறார்கள். இதனால் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் நெடுங்காலமாய் நடந்துவந்த கஞ்சா வியாபாரத்துக்கு பங்கம் நேர்ந்துவிட்டது. இது விஷயமாய் கஞ்சா வியாபாரிகள் கவர்னர் ஜெனரலுக்கு மனுசெய் திருக்கிறார்கள்.

**திராட்சைக் கொடி.**—பழைய ஏற்பாட்டில் பலஸ்தீன் நகரத்திலும் கானான் தேசத்திலும் கிடைத்த ஒரு திராட்சைக் கொலையை 2 பேர் சுமக்கமுடியாம லிருந்ததாகச் சொல்லியிருக்கிறது மெய்யே. இதை வாசிக்கும் நமது கிறிஸ்துவ சகோதரர் அனைவரும் தங்கள் தங்கள் வீட்டிலும், கூடுமானால் கிணறுள்ள தோட்டம் புஞ்சை நிலங்களிலும் திராட்சை செடி வைத்து பயிர்செய்து, 3 வருஷம் கழித்து வருஷா வருஷம் கபாத் செய்து, உடனே அடித்தூரில் 4 கெஜ சதுரம் ஆழம் வெட்டி, கிளறிக்கொடுத்து, கொஞ்சம் எலும்புத்தூள் பொடி, பச்சை மீன், செத்த மிருகம் முதலியவற்றை 2 கெஜ தூரத்தில் புதைத்து வைத்து 3மீ வரை ஏராளமான தண்ணீர் விட்டுவந்தால், செடி ஒன்று வருஷம் 2 தடவை காய்த்து, ரூபாய் 100-க்குக் குறையாமல் இலாபம் பெறுவிக்கும். செம்மண்ணும் அதற்கு ஓர் உரம். 10 அடி தூரத்திற்கு ஓர் செடி வைத்தல் தகுதி.

**ஓர் புதிய பெண் பாடசாலை.**—நமது ஜியார்ஜ் சக்ரவர்த்தியவர்கள் டெல்லிக்கு விஜயஞ்செய்ததின் ஞாபகார்த்தமாக, டெல்லியில் ஒரு பெண்பாடசாலை ஸ்தாபனஞ் செய்யவேண்டுமென்றும், அது மேரி "சக்ரவர்த்தினி பெண் பாடசாலை" யென்ற பெயரால் விளங்கிவரவேண்டும் என்றும், அதற்காக இந்தியாவிலுள்ள மகாராணிகளும், ராணிகளும், பேகங்களும் இன்னும் பல ஸ்திரீகளும் பண உதவி செய்யவேண்டுமென்றும் போபால் பேகம் பிரேரேபித்திருக்கிறார்கள். அந்த பாடசாலைக்குப் பண உதவி செய்வதாக வாக்குத்தத்தஞ் செய்திருக்கிறவர்களின் பெயரும் தொகையும் பின் வருமாறு.—

| | |
|---|---|
| நிஜாம் | 50,000 |
| குவாலியர் மகாராணி | 50,000 |
| குவாலியர் டுவேஜர் மகாராணி | 50,000 |
| ஜஞ்சீரா பேகம் | 3,000 |
| ராஜகார் ராணி | 2,000 |
| நரசிங்கர் ராணி | 3,000 |
| தடார் ராணி | 5,000 |
| போபால்க்வெய்ஸர் டுலாடீன் சாஹிப் | 7,000 |
| ஷாஹார்யார் | 5000 |
| ஷாபானோ பேகம் | 2000 |
| லண்டன் டைம்ஸ் பத்திரிகை. ஸர் வாலண்டைன் சிரால் | 75 |
| போபால் பேகம் | 1,25,000 |

**இந்தியாவிற்கு ஓர் கப்பற் படை.**—இந்தியாவில் ஒரு கப்பற்படை சித்தப் படுத்தும்படி இந்திய மன்னர்கள் ஒரு பிரேரேபணை செய்வதுடன், அதற்கு வேண்டிய செலவுக்கு தாங்கள் கொடுப்பதாக முன் வந்திருக்கிறார்கள். ஆயினும் இவர்களுடைய பண உதவியை ஏற்றுக்கொள்ள பிரிட்டிஷ் பார்லிமெண்டாருக்குப் பிரியமில்லை யென சொல்லப்படுகிறது. வாக்களித் திருக்கும்

மன்னர்கள் 21 பெயர். இவர்கள் கொடுக்க விருக்கும் தொகை ஒரு கோடியே பதினேழு இலட்சத்து ஒன்பதினாயிரம்.

---

## NEWS OF THE MONTH.

## மாச வர்த்தமானம்.

---

**தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கம்.**—ஏற்கெனவே அறிவித்திருந்தபடி சென்ற௴ 13-ம் தேதியன்று இச் சங்கத்தின் பதினைந்தாவது வருஷாந்தப் பொதுக் கூட்டம், மகா கனந்தங்கிய மயிலை மேற்றிராணியாண்டவருடைய அக்கிராசனாதிபத்தியத்தின்கீழ் நிறைவேறியது. இதன் விவரந்தெரிய விரும்புவோர் கடிதங்கள் பக்கத்தில் ௸ தலைப்பிட்ட வியாசத்தை பார்க்கவும்.

**ஆனரபில் திவான்பஹதூர் சுவாமிக்கண்ணு பிள்ளை யவர்கள்.**—இந்த கத்தோலிக்குக் கனவான் சென்னைக் கவர்னரவர்களின் சட்ட நிரூபண சபை மெம்பர்களில் ஒருவராக நியமனமடைந்த செய்தியைக் கேள்விப்படும் கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களனைவோரும் சந்தோஷங் கொள்வார்களென்பதற்குச் சந்தேகமில்லை. மகா கல்விமானும் கண்ணியவானுமாகிய இவர் இந்த உந்நத பதவிக்கு யோக்கியர் என்பதையும், இவர் பெற்ற இந்த மகிமையால் கத்தோலிக்கு இந்தியர் குடும்பத்துக்கே ஓர் பெருமையென்பதையும் நாம் சொல்ல வேண்டுவதில்லை. கத்தோலிக்கு இந்தியரது க்ஷேமத்தை யொட்டிய விஷயங்களில் இவர் அக்கறைகொண்டு, அவர்களுக்கு ஹிதஞ் செய்ய முயலுவாரெனக் கோருகிறோம். எல்லாம் வல்ல ஈசன் இவருக்கு தீர்க்காயுசும், திடகாத்திரமும், இன்னும் அதியோந்நத பதவியும் தந்தருள்வாராக!

**மோன்சிஞ்ஞோர் ராண்டி குருசுவாமிகள்.**—கோயமுத்தூர் மேற்றிராசனத்தின் வைக்கர் ஜெனரலாகிய சரியாய் வந்திக்கத்தக்க மொன்சிஞ்ஞோர் என். ராண்டி குருசுவாமிகளுக்கு, இந்திய கவர்ன்மென்டாரால் "கைஸரிஇண்டு" என்னும் முதல் வகுப்பு பொற்பதக்கம் பரிசளிக்கப் பட்டதைக் கேள்வியுற்று மெத்த சந்தோஷமானோம். கோயமுத்தூரில் நடைபெறும் எந்தப் பொதுநலக் காரியத்திலும், விசேஷமாய் சென்றசில வருஷங்களாய் அவ்வூரை மிக்க உபத்திரவப்படுத்திய பிளேக் என்னும் பெருவாரிக் காய்ச்சல் மும்முரமாயிருந்த காலத்திலும் இந்த சிரேஷ்ட குரு செய்த பொது ஊழியத்துக்குச் சன்மானமாக இப் பதக்கம் இவருக்கு அளிக்கப் பட்டதெனத் தெரியவருகிறது. இவருக்கு எமது மனமுவந்து சுப சோபன வாழ்த்து கூறுகிறோம்.

**அநுதாபத் தந்திக்குப் பதில் தந்தி**—தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தியார் தாங்கள் சமீபத்தில் கூடின பொதுக்கூட்டத்தின் தீர்மானப்படி, மேன்மை தங்கிய வைசிராய் அவர்களுக்கு நேர்ந்த வெடிகுண்டு ஆபத்தின் விஷயமாய், அவர்களது அந்தரங்க காரியதரிசிக்கு அனுப்பிய அநுதாப தந்திக்கு அவரிடமிருந்து வந்த பதில் தந்தி பின்வருமாறு:—"மெம்பர்களால் அனுப்பப்பட்ட அநுதாபத் தந்தி சமாசாரத்திற்காக அநேக வந்தனம். இச்சமாசாரம் முறைமைப்படி வைசிராய் அவர்கள் முன்னிலைக்கு சமர்ப்பிக்கப் படும். சந்தேகமற அதை யவர் வெகுவாய் மதிப்பார். வைசிராய் திருப்திகரமான விதமாய் விருத்தி யடைந்துகொண்டு வருகிறார்"

**அர்ச். பாப்பானவரின் ஸ்தானாதிபதி.**-மிகவும்மேன்மைதங்கிய மைக்கல்சலெஸ்க்கி ஆண்டவர் அவர்கள் சென்ற௴ 11-ம் தேதி சென்னைக்குவந்து அதிமேற்றிராணியாரின் விருந்தினராயிருந்தார். 13-ம் தேதி சென்னை அர்ச். கபிரியேல் கலாசாலைக் கூடத்தில் ஏற்கெனவே நியமித்திருந்தபடி தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்து மெம்பர்களுடன் ஒருமணி தேவகாலம் உள்ளன்பாய் சம்பாஷணை செய்தபின் அவர்களால் புஷ்பாரம் செண்டு சமர்ப்பிக்கப்பட்டு உபசரிக்கப்பெற்றார். 16-ம் தேதி மயிலாப்பூருக்குச் சென்று மயிலை மேற்றிராணியாரால் விருந்தளிக்கப் பெற்றார். 17-ம் தேதி சென்னை கவர்னர் அவர்களைக் கண்டு பேசினார். 17-ம் தேதி திருச்சினாப்பள்ளிக்குப் பிரயாணமாயினார்.

**பப்ளிக் சர்விஸ் கமிஷன்.**—இந்த பப்ளிக் சர்விஸ் கமிஷன் கமிட்டியார் சென்ற மாதம், 8-ம் தேதி தொடங்கி 18-ந் தேதி வரையில் கவர்ன்மென்டு உத்தியோகங்களைப் பரிமாறும் விஷயமாய் பல மேதாவிகளுடையவும், முக்கிய சங்கங்களுடையவும் அபிப்பிராயங்களைக் கேட்டு, அவைகளைக் குறிப்பு செய்துகொண்டு 20-ம் தேதி கல்கத்தாவுக்குப் பிரயாணமானார்கள். இந்த கமிட்டியாருக்கு அபிப்பிராயங் கொடுத்தவர்களில் நமது ஆனரபில் திவான் பஹதூர் சுவாமிக்கண்ணுப்பிள்ளை யவர்களும் ஒருவர். இவர் நமது கத்தோலிக்கு இந்தியருக்கு அநுகூலமாகவே அபிப்பிராயங் கொடுத்திருக்கிறார். இப்படியாய் அங்கங்கே கொடுக்கப்படும் அபிப்பிராயங்களை யெல்லாம் ௸ கமிட்டியார் ஒருங்கு சேர்த்து, அதிக அபிப்பிராயம் எந்தப்போக்கா யிருக்கிறதோ அந்தப் போக்குப்படி ஒருவகை தீர்மானங்கள் செய்து, அவைகளை நமது அன்புள்ள ஜியார்ஜ் சக்கரவர்த்தியார் முன்பாக சமர்ப்பிப்பார்கள். சக்கரவர்த்தியார் இவைகளை யனுசரித்து தமது மந்திராலோசனைச் சபையாருடன் யோசித்தபின், தீர்மானமான உத்தரவு பிறப்பிப்பார். இவ்வுத்தரவு இந்தியர்களுக்கு, இப்போதிருக்கிறதை விட அதிக உயர்தர உத்தரவாத உத்தியோகங்களும், அதிக சம்பளமும் பெறுவிக்கும்படியா யிருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை.

**டில்லி சதிச்செயல்.**-டில்லியில் வெடிகுண்டெறிந்து இராஜப் பிரதி நிதியைப் படுகாயப்படுத்தின பாதகன் இன்னம் பிடிபடவில்லை. இப்பாதகனைப் பிடிக்க துப்பு சொல்லுபவருக்கு வெகுமதி இரண்டு லட்சம் ரூபாய் வரையில் கொடுப்பதாக வாக்களித்தும் யாரும் முன் வரவில்லை.

**பால்கன்-துருக்கி யுத்தம்.**—இந்த யுத்தத்தை முடிவாக்கி சமாதான உடன்படிக்கை ஏற்படுத்த இருபக்கத்தாருடைய பிரதிநிதிகளும், வல்லரசு ஸ்தானாதிபதிகளும் சேர்ந்து, சென்றசில வாரமாய் ஆலோசித்து செய்த ஏற்பாட்டை துருக்கி முதலில் ஒப்புக்கொண்டது. இது துருக்கி பொது ஜனாபிப்பிராயத்துக்கு ஒத்ததா யில்லை. அடிரியானோப்பிளை எதிரிகள் வசம் ஒப்புவித்து சமாதானஞ் செய்தல் துருக்கியின் பூர்வ கௌரவத்துக்கும், வீரதத்துவத்துக்கும் குறைவுஎன்று ஜனங்கள் அபிப்பிராயப்பட்டு, கலக முண்டுபண்ணி, பிரதம மந்திரியாகிய நாசிம் பாக்ஷாவைச் சுட்டுக் கொன்றுவிட்டு, சுலத்தானின் மந்திராலோசனைச் சபை மெம்பர்களெல்லோரையும் கைதி செய்து ஜெயிலில் அடைத்துவிட்டு, வேறு மந்திராலோசனைமெம்பர்களை நியமித்திருக்கிறார்கள். இந்தப் புது மந்திராலோசனைச் சபையார், துருக்கி யிராச்சியம் முற்றும் அழிந்து நாசமாய்ப் போனாலும் போகட்டும், எதிரிகள் சொல்லும் நிபந்தனைகளுக்கெல்லாம் உட்பட்டு சமாதானஞ் செய்வது துருக்கியின் கௌரவத்துக்கு குறைவு என்று அபிப்பிராயப்படுகிறார்கள். ஆகையால் மறுபடியும் யுத்தம் ஆரம்பிக்கும்போலும். வல்லரசுக்கள் செய்த மத்தியஸ்தத்திற்கு உட்படாமற் போனால், துருக்கிக்கு துன்பமாய் முடியும்.

**அப்பாராவ் காலஞ் சென்றார்.**-நெல்லூரில் பிரபல நியாயவாதியா யிருந்து, தமது பந்துக்களைப் பார்க்க கீழ்ச்சேரிக்கு வந்த விடத்தில் சென்ற௴ 5-ம் ஞாயிற்றுக்கிழமை காலகதி யடைந்த ம-ள-ள-ஸ்ரீ அப்பாராவு அவர்களின் மரணத்தைக் கேள்வியுற்று வியசனப்பட்டோம். இவர் ஓர் கத்தோலிக்குக் கிறிஸ்துவ பிராமணர். கலியாணஞ் செய்து பல பிள்ளைகள் பெற்றபின் உண்மைக் கடவுளை யறிந்து சத்திய கத்தோலிக்கு வேதத்திற் சேர்ந்தவர். ஆரம்பத்தில் பெண்சாதி பிள்ளைகளாலும், பந்துக்களாலும் சத்திய வேதத்தைச் சேர்ந்ததினிமித்தம் வெகு துன்பம் கஸ்தியநுபவித்தாலும், இவைகளால் தாம் கொண்ட கருத்தையும் தைரியத்தையும் விடாது; உண்மைக் கத்தோலிக்கராய் நிலைநின்று வெற்றிபெற்றார். சில நாட்களுக்குள்ளாக மனைவி, மக்களை தம் வசப்படுத்தி சத்தியவேதத்தி லுட்படுத்தினார். இவர் உண்மையும் ஊக்கமு முள்ள உத்தம கத்தோலிக்கர். தெலுங்குபாஷையில் தேர்ந்த பண்டிதர். அறியாதவர்களுக்கு அறிவைப் புகட்ட ஆவலும் அக்கறையுங் கொண்டவர். வேதம் அறியாதவர்களை அடிக்கடி கூட்டி அவர்களுக்கு ஞானோபதேசஞ் சொல்லுவார். வாசிக்கத் தெரிந்தவர்களுக்கு உதவும்பொருட்டு, தமது சொந்த செலவில் பல புத்தகங்களை தெலுங்கில் எழுதி யச்சிட்டு வெளிப்படுத்தினார். இவைகளில் விசேஷமானவை "சத்திய வேத உண்மை விளக்கம்" "பரமண்டலமந்திர வியாக்கியானம்" "விசுவாச மந்திர விளக்கம்" என்பனவாம். பந்துக்களைப்பார்க்க வந்த விடத்தில் திடீரென வியாதியுற்று, கடைசி தேவத்திரவி யாதுமானங்களைப்

பெற்று சமாதானத்துடன் கர்த்தருக்குள் நித்திரை யடைந்தார். இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்வோமாக.

**தோமாஸ் சகோதரரின் மரணம்.**—சென்ற டிசம்பர்மீ 11-ம் தேதி பல்லாவரத்துக் கடுத்த தர்க்காஸ் சந்நியாசி மடத்தில் தோமாஸ் சகோதரர் தமது 74-ம் வயதில் மரண மடைந்தனரென்று கேள்வி யுற்று துக்கிக்கலானோம். இவரது ஆத்துமத்துக்கு நித்திய இளைப்பாற்றியைக் கர்த்தர் கட்டளை யிடுவாராக! இவர் இன்னைய ரெட்டியார், ஞானம்மாள், என்னும் பக்தியுள்ள தாய் தந்தைய ரிடமாய் பிரங்கிபுரத்தில் பிறந்தார். இளந்தையில் தந்தையை யிழந்து தாயின் பராமரிப்பிலிருந்து, வால வயதிலேயே பக்தியால் தூண்டப்பட்டு, செங்கல்பட்டில் சங். ஆரோக்கியநாத சுவாமிகள் சாமிநாத சுவாமிகள், கபிரியேல் சகோதரராகிய இவர்களால் அப்போதுதான் புதிதாய் ஸ்தாபிக்கப்பட்ட சந்நியாச மடத்தைச் சேர்ந்தார். அம்மடம் கீழ்ச்சேரிக்கும், அங்கிருந்து பிளேஸ் தோட்டத்துக்கும் மாற்றப்பட்டபோது இவருங் கூடவே வந்தார். கடைசியாய் அது கலைந்துபோனபோது வேறு வழியில்லாமல் சிறிது காலம் தன் இளைய சகோதரராகிய இராயபுரம் அர்ச். இராயப்பர் கோவில் விசாரணைகுரு சங். இராஜநாதரிடம் இருந்து, பிறகு சந்நியாசிகளுக்கு சந்நியாச மடமே அழகு எனத் தேர்ந்து, தமது சகோதரர்களும் பந்துக்களும் தடுத்தபோதிலுங் கேளாமல், மயிலை மேற்றிராசனத்தைச் சேர்ந்த ஷை தர்க்காஸ் மடத்தை யடைந்து, கடந்த இரண்டு வருஷங்களாய் தளர்ந்த வயசில் தள்ளாமையோடு மன வலிமை கொண்டு எதிர்த்து சண்டை செய்து, சந்நியாச சபையின் சட்டங்களை சரிவர அநுசரித்து வந்தார். கடைசியாய் கர்த்தரிட்ட கெடுவு வரவே இப்பூவுலகை நீத்து மேலுலகு சேர்ந்தார். இவர் பொறுமை, சாந்தம், தளரா ஊக்கம், கீழ்ப்படிதல், தெய்வ சித்தத்துக் கமைதல் முதலிய சிறந்த புண்ணியங்களமைந்த உத்தம சந்நியாசி. இவர் சந்நியாசிகளுக் கோர் நல்ல மாதிரிகை யாயிருந்து சிறந்து விளங்கினரென்று அவரை யறிந்த எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள்: இவர் நமது நல்ல ஆயன் பத்திரிகை முதல் முதல் பிளேஸ் தோட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அதற்காக மெத்த உழைத்து உதவி புரிந்தவராகையால், நமது சந்தாதாரர்களனைவோரும் இவரது ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளக் கோருகிறோம்.

---

## வரவேற்பு.

**பாலிய பரிபாலன சபை, மணப்பாடு.**—இச் சபையின் வருடாந்தப் பிரசுரத்தின் நகல் ஒன்று நமக்கு அனுப்பப்பட்டது. இதுவே இப் பிரசுரத்தின் முதற் சஞ்சிகையாகும். இதில் ஷை சபையின் 15-வது வருட யாதாஸ்தும், இல்லற வாசிகளின் கடமை, சாவும் கிறிஸ்துவனும், கண்டி நகரம், தித்தானிக் கப்பற் சேதம் முதலிய விஷயங்களைப் பற்றி எளிய தமிழ் நடையில் எழுதப்பட்ட அரிய வியாசங்களும் அடங்கி யிருக்கின்றன. இது கத்தோலிக்கர் வாசித்து பயன்பெறத் தக்க ஓர் நல்ல பிரசுரம். இதற்கு நாம் எம் மனப்பூர்வமாய் நல்வரவு கூறுகிறோம். இதைப்போன்ற பிரயோஜனகரமான பிரசுரங்கள் பல நம் நாட்டில் உலவவேண்டுமெனக் கோருகிறோம்.

**அர்ச். அந்தோனியாரின் சுயரூபப்படம்** - பதுவைப் பதியரான அர்ச். அந்தோனியார் இவ்வுலகில் சீவித்திருந்தபோது எவ்வித சாயலா யிருந்தாரோ அவ்வித சாயலாய் பதிப்பித்த சீர்மைப் படம் பெரியது (18×13) இலங்கை, குருணிகாலாவி லிருக்கும் மிஸ்டர் ஜே. எ. பல்டானு விடமிருந்து வந்தனத்துடன் வரப் பெற்றோம். இதன் விலை ரூபா 1. இதேமாதிரி படங்கள் (சிறிதும் பெரிதும்) ஷை ஆச்சியசிஷ்டவரின் சாயலுள்ள பதக்கங்கள் (அருளிக்கம் என்னும் மெதால்கள்,) சீட்டுகள் கிரயத்துக்கு ஷை யாரிடம் அகப்படும். மற்றும் விவரம் வேண்டுவோர் அவருக்கே எழுதிக் கொள்ளல் வேண்டும்.

**வேதப்பட காலண்டர்கள்.**-வெகு நேர்த்தியான பல வர்ண சீர்மைப் படத்தில் ஒவ்வொரு நாளைக்கும் கிழித்தெறியும்தேதிக் காலண்டர் அடங்கிய வேதப்பட காலண்டர் ஒன்று கொழும்பு கன்னாரத்தெரு, மெஸர்ஸ் எக்ஸ். பி. பாய்வ விடமிருந்து வந்தனத்துடன் வரப்பெற்றோம். இதைப் பற்றிய விவரங்களுக்கு இப் பத்திரிகையிலடக்கம் பண்ணப்பட்ட துண்டுப்பத்திரத்தைப் பார்க்க.



# DOMESTIC OCCURRENCES.

## குடும்ப சுபாசுப் விளம்பரங்கள்.

### விசேஷக் குறிப்பு.

---

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 8-அணா முன்பணம் அனுப்பினாலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப் பட மாட்டா வென்பதை நண்பர்கள் கவனிக்கக் கோருகிறோம். அரைக் கலத்துக்கு மேற்பட்டு முக்கால் கலத்துக்கு உட்பட்டால் முக்கால் ரூபா யாகும். முழுக்கலத்துக்கு ஒரு ரூபாயாகும். கால் ரூபாய்க்கு இவ்விளம்பரங்கள் ஒருபோதும் பிரசுரிக்கப்பட மாட்டா.

### ஜன்ன அறிக்கை.

எனது மருமகளும் கனம். A. ஜான்பிரான்சிஸ் மனைவியுமாகிய சௌ. G. சலேத்துமரியம்மாள் 1913௵ ஜனவரிமீ 17-ந் தேதி இரவு தேவானுக்கிரகத்தால் முதற்பேறாக ஒரு மைந்தனை யீன்றனள். தாயுஞ் சேயும் சுகம்.

இப்படிக்கு,
C. A. ஆரோக்கியம் பட்ளர்.
பாலக்காடு.

---

### நன்மரண அறிக்கைகள்.

---

புதுக்கோட்டை சமஸ்தானம் ஆலங்குடி தாலூக்கா அய்யங்காடு கிராமவாசியாகிய ம-ா-ா-ஸ்ரீ மு. சி. சவரிமுத்து உடையார் அவர்கள் 1912௵ நவம்பர்மீ. 19-ந்தேதி செவ்வாய்க்கிழமை கடைசித் தேவத் திரவியானுமானங்கள் யாவுஞ் சரிவரப் பெற்று, பந்து மித்திரர்கள் புடைசூழ்ந்து நிற்க, அன்று மாலை $5\frac{1}{2}$ மணிக்கு தமது 60-ம் வயதில் பாக்கியமான மரணத்தை யடைந்தார். மறுநாள் 20-ந் தேதி புதன்கிழமை பகல் $3\frac{1}{2}$ மணிக்கு அவரது சடலம் நல்லடக்கஞ் செய்யப்பட்டது. இதைனக் கண்ணுறுங் கிறிஸ்துவ ஸ்ரீபுமான்கள் ஷை யாரின் ஆத்தும விளைப்பாற்றிக்காக ஒரு-பர. ஒரு பிரி. ஒரு-திரி. வேண்டிக்கொள்ள கேட்டுக் கொள்ளுகின்றனன். இப்படிக்கு,

மு. சி. ச. ஆரோக்கியசாமி உடையார்.

---

இதனால் எனது பந்துக்களுக்கும் சிநேகிதர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்: மரிமலைவாசி யாகிய (Mr. Rowberry) துரை பட்ளர் Mr. M. D. சாலமோன் அவர்களின் குமாரன் Mr. D S. அலக்ஸாண்டர் (Clerk, Cant. Mag. Office) கடந்த டிசம்பர் மாதம் 7-உ சனிக்கிழமை காலை $6\frac{1}{2}$ மணிக்கு தனது 25-ம் வயதில் தனது மனைவியையும் பிள்ளையையும் தாய் தந்தையர்களையும் சிநேகிதர்களையும் விட்டு கர்த்தருக்குள் நித்திரை யடைந்தார். அவருடைய ஆத்தும இளைப்பாறுதலுக்காக ஒரு பர-பிரி-திரி. வேண்டிக்கொள்ள கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,
மைத்துனர் S. லாசர்ஸ். வந்தனம்.

---


# I. RAMASAMY'S COOKS' GUIDE.

## டி. ராமசாமி என்பவரால் தமிழிற் செய்யப்பட்ட சமைக்கிறவர்களின் வழிகாட்டி அல்லது சமையல் நூல்.

இதனால் துரை துரைசானிகளுக்கும், துரைகள் வீட்டு வேலைகாரர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்: மேற்கண்ட புத்தகமானது சமைக்கிறவர்களுக்கும், சமைக்கும்படி தெரிவிப்பவர்களுக்கும் அநேகவிதமான சமையல் பாகங்களின் நுட்பங்களை வெகு எளிதில் தெரிந்துகொள்ளத்தக்க விதமா யெழுதியிருப்பதால், இதைக்கொண்டு பெரிய டின்னர் பார்ட்டிகளுக்கும் (DINNER PARTIES) பால்ஸ்களுக்கும் (BALLS) செய்யவேண்டிய முறைகளை சுளுவில் தெரிந்து கொள்ளக்கூடும். இதில் அநேக இங்கிலீஷ், பிரஞ்சு கூக்கரிகளி லிருந்தும், மெட்ராஸ் கிளபில் அநுபவஸ்தர்களிட மிருந்தும் அநேக அருமையான நூதன பாகங்கள் திரட்டிச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இக் கூக்கரியானது அநேகருக்கு வெகு பிரயோஜனமா யிருந்ததுபற்றி மூன்றாவது பதிப்பு காப்பிகளும் அநேகமாய் செலவாகி, இன்னும் சொற்ப பிரதிகளே கைவசமிருப்பதால், வேண்டியவர்கள் காலதாமதமின்றி எழுதி பெற்றுக்கொள்ளவும். இதன் விலை போஸ்டேஜ் உட்பட ரூபாய் 2—0—0.

| | | |
|---|---|---|
| TELEGRAM "Paldano" VEPERY | எஸ். டி பல்டானு, வேப்பேரி, மெட்ராஸ். | S. T. PALDANO, *General Merchant*, VEPERY, MADRAS. |

# Superior Watch Co.,

## Post Box No. 167 Madras, உ.




ரூபாய் இரண்டரை மாத்திரம்
ஆலசியம் செய்தால் இவ்வளவு விலைக்கு அகப்படாது.
நல்லசமயம்! விடவேண்டாம் குறைந்தவிலை!!
வியாபாரிகளுக்குக் கொடுக்கும் விலைக்கு விற்பனை?

### ரேயில்வே லீவர் ஜுவல்டு வாச்சு.

இது பார்க்கிறதற்கு மிக்க அழகாயும், உயர்ந்த கெட்டித் தரமாக நீண்ட நாள் உழைக்கக் கூடியது. காலத்தை சரியாய் காட்டக் கூடியது. இதில் கெம்புகள் செதுக்கி யிருக்கிறது. இவ்வளவு குறைந்த விலைக்கு அகப்படாது. இதரக் கம்பெனிக்காரர்கள் இதற்கும் மட்டமான கடியாரங்களை 3-8-0. 4-8-0 ரூபா வென்று விற்கிறார்கள். மோசம் போகாதீர்கள். நம்மிடத்தில் வரவழைத்துக் கொண்டால் மெத்த திருப்திகரமா யிருக்கும்.

விலை ரூபா 2-8-0. 5-வருடம் காரண்டி; வி. பி. சார்ஜி அணு 4.

### ராஸ்கோப் லீவர் ஜுவெல்டு கடியாரம்.

கொலுசுடன் விலை ரூபா 2—4—0.

7 வரு உத்தரவாதம் கொடுக்கப்படும்.




இது முரட்டு வேலைக்கு உபயோகமானது. இருபக்கம் கனத்த கண்ணாடியால் மூடி போட்டிருக்கும். சக்கரங்களுக்கு கெம்புகள் பிகிந்திருக்கும். இவ்வளவு குறைந்த விலைக்கு இப்பேர்க்கொத்த கடியாரம் இன்னொருவரிடம் கிடைக்காது. ஆயிரக்கணக்கானகடியாரங்கள்செலவாகின்றன.

### 8-நாள் சாவி கடியாரம்.

10-வருஷம் காரண்டி.



ஒரு பக்கம் அதிக கனத்த கண்ணாடியால் மூடப்பட்டதும். தலை சாவியுள்ளதும். சித்திர வேலை செய்ததும் உயர்ந்த பேடண்டு லீவர் 8-நாளைக்கொருவிசை சாவி கொடுக்கும் அசல் வெள்ளி கடியாரங்கள்.

நெ. 15. A. லீவர் ஜெர்மன் சில்வர் கடியாரம் விலை ரூபா 8 8 0

நெ. 16 B. லீவர் சொக்க வெள்ளி கடியாரம் 12 0 0

நெ. 17 லீவர் மேல் மூடியுள்ள வெள்ளி ஹண்டிங் கடியாரம் விலை ரூபா 13 8 0

### ரேயில்வே கார்ட் பாக்கேட் லீவர் கடியாரம்.

இதற்கு 5 வருஷம் காரண்டி.




ரெயில்வே கார்ட் லீவர் வாட்ச் என்னும் இந்த பாக்கெட் கடியாரத்திற்கு 5-வருஷம் உத்தரவாதப் பத்திரம் கொடுக்கப்படும். இந்தக் கடியாரத்தைக்கண்டு அதன் உருவு உறுதி நாணயங்களைச் சற்றுப் பரியாலோசித்து வாங்கி உபயோகித்துப் பார்த்தால் இவ்வுண்மை நன்கு விளங்கும். இது வெகு நாணயமும் உறுதியும் சரியான காலத்தைக் காட்டக் கூடியதும் சரசமுமானது. இக் கடியாரமானது எளிதில் மணிபார்க்கக் கூடியதும், அதிக கனத்த கண்ணாடியால் மூடி போட்டதும், தலை சாவி உள்ளதும், நடுத்தர அளவுள்ளதும் ஜெர்மன் வெள்ளியால் செய்யப்பட்டதும் காலத்தைக் காட்டும் பீங்கான் தாம்பிர பிளேட்டினால் செய்ததுமாம்.

இதை அநேக கம்பெனிக்காரர்கள் ரூபா 4, 5க்கு விற்று வருகிறார்கள். ஆனால் இதன் விலை கடியாரம் 1-க்கு அழகிய நிக்கல் வெள்ளி சங்கிலியுடன் விலை ரூபா 2 8 0

நமது விலாசம்—சுப்பீரியர் வாட்ச் கம்பெனி, தபால் பெட்டி நெம்பர் 167, மதிராஸ்.







# நல்ல ஆயன்.


March—1913.

| | | |
|---|---|---|
| புத்தகம். 11. | "நாம் நல்லஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராதவேறுடுகளும் நமக் குண்டு: அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10:16-14.) | நெம்பர். 3. |





மிகவும் வந்திக்கத் தக்க

## சென்னை அதிமேற்றிராணியா ரவர்கள்,

## தமது அதிமேற்றிராசனத்துக் குட்பட்ட குருக்களுக்கும் கிறிஸ்துவர்களுக்கும் எழுதும் நிருபம்.

கிறிஸ்து நாதரில் அன்புள்ளவர்களே.

அஞ்ஞானிகளின் மட்டில் உங்களுக் குள்ள கடமையைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல, நெருங்கிவரும் தபசுகாலம் நல்ல தருணமா யிருக்கிறது. ஒவ்வொரு கிறிஸ்துவனுக்கும் இது அதிக பிரியமா யிருக்கவேண்டிய விஷயமாமே.

சர்வேசுரனுடைய இராச்சியம் இவ்வுலகில் பரவும்படி பார்ப்பதானது, சந்தேகமற ஒவ்வொரு உண்மைக் கிறிஸ்துவனும் அக்கறைகொள்ள வேண்டிய விஷயம். "உம்முடைய இராச்சியம் வருக" வென்று பிரார்த்திக்க சேசுக்கிறிஸ்துநாதரே தம்முடைய அப்போஸ்தலருக்குக் கற்பித்திருக்கிறார். அவர் அப்படி கற்பித்து இப்போது பத்தொன்பது நூற்றாண்டுகளாகின்றன. "பரலோகத்திலும் பூலோகத்திலும் எனக்கு சர்வ அதிகாரமுங் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் போய் எல்லா ஜாதியாருக்கும் உபதேசியுங்கள்" (மத். XXVIII. 18-19.) என்று திருவுளம்பற்றி, உலகத்திலுள்ள அஞ்ஞானிகள் அனைவரையும் மனந்திருப்பி சத்திய வேதத்தி லுட்படுத்தும் வேலையை தம்முடைய திருச்சபைக்கு நமதாண்டவர் ஒப்புவித்தார். இக்கட்டளை நிறைவேறி வருகிற தென்பதைத் திருச்சபை சரித்திரம் எண்பித்துக்காட்டும். "நான் சுவிசேஷத்தைப் பிரசங்கியாவிட்டால், ஐயோ! எனக்குக் கேடாம்" என்று அர்ச். சின்னப்பர் அக்காலத்திலேயே எழுதிவைத்தார். தம்முடைய சத்திய வேதத்தைப் போதிக்கும் பொருட்டு கிறிஸ்துநாதர் திருச்சபையை ஸ்தாபித்ததுமன்றி, அதற்குத் தம்முடைய ஞான அதிகாரத்தையுந் தந்தருளினர். "ஆனபடியால், பிதாவானவர் என்னை

அனுப்பினதுபோல நானும் உங்களை யனுப்புகிறேன்.” (அருள. XX 21.) என்று அவர்
தம்முடைய அப்போஸ்தலர்களை நோக்கிச் சொன்னார். 13-ம் சிங்க இராயரான அர்ச்.
பாப்பானவர் எழுதி வைத்திருப்பதாவது: “திருச்சபை சர்வேசுரனுடைய திருநகர
மாயிருக்கிறது. அது நாளுக்கு நாள் செழிப்புற்று சிறந்து விளங்கவும், அதனால் உலகத்
தின் எத்திசையிலும் தனக்குரிய தேவாலயங்களை பெருகச் செய்யவும் தனக்கு வேண்
டிய சக்தியை தன்னை ஸ்தாபித்தவரிடத்திலிருந்து அடைந்திருக்கிறது” என்பதேயாம்.
உலக சரித்திரத்தில் அதிமுக்கியமான சம்பவம் சந்தேகமற கிறிஸ்துவேத உற்பனமே.
சேசுக்கிறிஸ்து நாதர் இவ்வுலகத்துக்கு வந்து தற்போது பத்தொன்பது நூற்றாண்டுக
ளாகியும், இவ்வுலகத்தி லுள்ள மனிதருக்குள் பாதிக்கு அதிகமான பேர் இன்னும்
இரட்சண்யத்துக்கு அத்தியாவசியமான (அப். நடபடி. IV. 12.) அவருடைய திருநா
மத்தை முதலாய்க் கேட்டறியார்கள். ஆ! இது எவ்வளவோ விசனத்துக் குரியது! மே
லும் இவ்வுலகில் 160 கோடி ஜனங்க ளிருக்கிறார்கள். இவர்களுக்குள் 30 கோடி பேர்
மாத்திரம் கத்தோலிக்குக் கிறிஸ்துவர்கள். ஆகையால், உல்க ஜனங்கள்க்குள் ஐந்
தில் ஓர் பங்குகூட கத்தோலிக்கர் இல்லை. பதிதராகவும் பிரிவினைக்கார ராகவும்
இருப்பவர்களின் தொகை இன்னொரு 30 கோடி. இவர்களையும் கிறிஸ்துவர்களாக
கணித்துக்கொண்ட போதிலும், இன்னும் 100 கோடி ஜனங்கள் இரட்சண்ய பேறுக்கு
அருகராகாத அஞ்ஞானிகளாகவே யிருக்கிறார்கள். இந்தியாவின் ஜனத் தொகை 28
கோடி. இதில் 20 இலட்சம் பேரேனும் கத்தோலிக்கர் அல்ல வென்றறிவது, எவ்வள
வோ பரிதாபத்துக்குரியதா யிருப்பதுமன்றி, அதைரியத்துக்கும் இடமாகிறது. இத்
தகைய நிலைமை சத்திய வேத விருத்திக்கு எத்துணையும் ஆஸ்பதமாய்க் காணப்பட
வில்லை. ஆனால், கிறிஸ்துநாதர் இவ்வுலகை விட்டுப் பிரியும்போது அப்போஸ்தலரை
நோக்கி “நீங்கள் போய் எல்லா ஜாதி ஜனங்களுக்கும் உபதேசித்துப் பிதாவுடைய
வும், சுதனுடையவும், இஸ்பிரீத்து சாந்துடையவும் நாமத்தினால் அவர்களுக்கு ஞானஸ்
நானங் கொடுங்கள்” என்று கற்பித்தாரல்லவா? இக்கட்டளையை நிறைவேற்றுவதில்
நம்மில் ஒவ்வொருவரும் குருப்பிரசாதிகளோடு உடன் உழைக்க வேண்டு மென்பது
கிறிஸ்துவானவரின் நோக்கம். இந்த தம்முடைய ஞான அலுவலை ஒவ்வொரு கிறிஸ்து
வனும் தொடர்ந்து நடத்தும்படி அதை அவனிடத்தில் ஒப்புவித்திருக்கிறார். உலக
இரட்சண்ய அலுவல் பிறநேசத்துக்கும் சுயபரித்தியாகத்துக்கும் உரிய அலுவலாமே.
“அணை கடந்த அன்போடு நான் உங்களை நேசித்திருக்கிறேன்” என்று சேசுநாதசுவாமி
ஒவ்வொருவருக்கும் வசனிக்கிறார். ஆகையால், நாம் நேசத்துக்கு நேசங் காட்டவும்,
சகல நன்மைசுரூபியான சர்வேசுரனை விட்டகன்று அஞ்ஞான அந்தகாரத்தில் அமிழ்ந்
து கிடக்கும் நம்முடைய நிர்ப்பாக்கிய சகோதரர்களுக்காக வருந்தி யுழைக்கவும் அவர்
நம்மிடத்தில் ஆசிக்கிறார்.

உங்களிடத்தில் அவர் கேட்கும் இந்த நேச அலுவலை நீங்கள் எப்படி நிறை
வேற்றுகிறீர்கள்? அஞ்ஞானிகளை மனந்திருப்ப அதி சுறுசுறுப்பாயும் ஆவலாயும்
உழைக்கும் குருக்கள், கன்னியாஸ்திரிகளுக்கு இதுவரையில் நீங்கள் என்ன உதவி புரிந்
தீர்கள்? “நீங்கள் சர்வேசுரனுடைய வேலையாட்கள்” (1. கொரி. III. 9.) என்று அர்ச். சின்
னப்பர் சொல்லி யிருப்பதை மறந்து விட்டீர்களோ? நீங்கள் ஆத்துமங்கள் மட்டில்
கொள்ளும் ஆவலின் பேரிலும், உங்களுடைய கூட்டுழைப்பினால் உண்டாகும் நன்மை
யின் பேரிலும் கோடாகோடி ஜனங்களுடைய இரட்சண்யம் பொறுத்திருக்கிறதென்று
நீங்கள் அறியவில்லை போலும். அஞ்ஞானிகள் மட்டில் உங்களுக்குள்ள இக்கடமையை
நிறைவேற்ற நீங்கள் தவறுவீர்களானால், இரட்சண்யத்துக்கு அவசரமாய் வேண்டிய விசு
வாசம் ஒருக்கால் அநேகருக்கு கிடையாமற்போகும். “வாஸ்தவத்தில், ஆத்துமங்களை
இரட்சிக்க சேசுக்கிறிஸ்துநாதரிடத்தில் சத்துவம் உண்டு என்றாலும், தேவானுக்கிரகத்
தின் உதவியால் இரட்சண்ய பேறுபலன்களுக்கு நாமும் பங்காளிகளாகத் தக்கதாக
நாமே ஆத்துமங்களை இரட்சிக்கவேண்டுமென்று அவர் அபேட்சிக்கிறார்” என்று பரி
சுத்த பாப்பானவரான சிங்க இராயர் எழுதியிருக்கிறார். ஆனபடியினால், எல்லோருக்
கும் சுவிசேஷத்தைப் போதிக்கும்படி கத்தோலிக்குத் திருச்சபையின் மேல் சுமத்தி



யிருக்கும் இப்பெருங் கடமையை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொருவரும் எவ்வாறு
உதவி செய்யக்கூடும்?

அதற்குதவும் ஞானாயுதங்களுக்குள் ஜெபமே மிகவும் பலமுள்ள எத்தனம்.
அதை நாம் எந்த நேரத்திலும் உபயோகித்துக் கொள்ளலாம். நிர்ப்பாக்கிய அக்கியா
னிகள் மனந்திரும்பும் விஷயமாய் ஜெபஞ் செய்து ஒப்புக்கொடுக்க முதலாய் உங்க
ளுக்கு அவகாசமில்லை யென்று சாக்கு சொல்ல முடியாது. எல்லோருக்கும் ஜெபம்
அவசியம். விசேஷமாய் விசாரணைக் குருக்களுக்கு அது வேண்டியது. “சர்வேசுரனை
வேண்டிக் கொள்வதிலே இரவெல்லாம் செலவழித்த” (லூக் VI. 12.) தன்னுடைய
திவ்ய உபாத்தியாயரையும், அப்படியே “ஜெபத்திலும் வாக்கிய ஊழியத்திலும் இடை
விடாத அலுவலாயிருந்த” (அப். நடபடி. VI. 4.) அப்போஸ்தலர்களையும் தனக்கு
மாதிரிகையாகக் கொண்டு, ஒரு நல்ல குருவானவர் ஜெபித்து வருவார் என்பது வாஸ்
தவம். ஆகையால், அஞ்ஞானிகள் மட்டில் உங்களுக்குள்ள கடமையை நிறைவேற்ற
நீங்கள் விரும்பும் பட்சத்தில், அவர்கள் மனந்திரும்ப குருக்கள் செய்யும் ஜெபத்தோடு
உங்களுடையதையும் ஒன்றித்து நாடோறும் வேண்டிக் கொள்வீர்களாக. “உம்மு
டைய இராச்சியம் வருக” என்னும் விண்ணப்பம் பரமண்டல மந்திரத்தின் பிரதான
பாகமென்று நன்றாய் அறிந்து கொள்ளுங்கள். திருச்சிலுவையின் ஒளியானது அதிக
மதிகமாய் ஊடுருவிச்சென்று அஞ்ஞான அந்தகாரத்தைப் போக்கவும், கிறிஸ்துநாத
ருடைய இராச்சியம் எங்கும் வியாபிக்கவும், இதுவரையிலும் பரமண்டலமந்திரம் ஜெ
பிக்கப்படாத இடங்களிலே அது ஜெபிக்கப்படவும், இவ்வருஷத்திலே புதுப்பீடங்
களில் பூசை பலி நிறைவேற்றப்படவும், புது இராச்சியங்கள் சத்திய வேதத்திலே உட்
படவும் நாடோறும் பத்தி சுறுசுறுப்போடு வேண்டிக்கொள்ளக் கடவீர்கள். இவ்வ
ளவாகிலும் உங்கள் ஒவ்வொருவராலும் செய்யப்படக்கூடியதே. அன்றியும் இது உங்
கள் ஒவ்வொருவர் பேரிலுஞ் சுமந்த கடன். உங்களுடைய உடன் உழைப்பின்றியும்,
உங்களுடைய ஜெபதபமின்றியும் குருக்களால் ஆகக்கூடியது வெகு கொஞ்சமே. அர்ச்.
தெரெசம்மாள் தன்னுடைய ஜெபத்தைக்கொண்டு ஆயிரக்கணக்கான அஞ்ஞானிகளை
மனந்திருப்பினதாக சர்வேசுரன் அவளுக்கு அறிவித்திருக்கிறார். திருச்சபையின்
ஜெபம் வீண்போகாது. நீங்கள் எல்லோரும் திருச்சபையின் உயிருள்ள அவையவங்
களா யிருக்கிறீர்கள்.

இத்விஷயத்தில் பத்தாம் பத்தி நாத பாப்பானவர் சொல்வதாவது: திருச்ச
பையின் விசுவாசிகள் கிறிஸ்துவின் வேதக்கோட்பாடுகளை ஜனங்களுக்குப் போதிக்க
அதிகாரம் பெறாதவர்களானபோதிலும், அவைகளைப் போதிக்கும் அப்போஸ்தொலிக்
குக் குருப்பிரசாதிகளுக்கு தங்களுடைய தருமத்தினாலாவது உதவிபுரியவேணும் என்ப
தே. விசுவாசப் பரம்புதல் சபையாரின் சென்ற வருஷாந்த ரிப்போர்ட்டி லடங்கிய விவ
ரங்களைப் பார்க்குங்கால், ஐரோப்பிய தேசத்தார் தங்களுக்கு நேர்ந்த கொடிய துன்ப
துரித சோதனைகளில் தங்களுடைய கண்யத்தைக் காப்பாற்றிக்கொள்ள காட்டிய உற்சா
கத்தையும் மனோபலத்தையும் அறிந்து, நாம் பெருமை கொள்ளாமலிருக்க முடியவில்லை.
சென்ற வருஷத்தில் ஐரோப்பாவானது ஷை சபைக்கு 30-லட்சத்துக்கு அதிகந்
தர்மங் கொடுத்திருக்கிறது. இதில் பிரான்சு மாத்திரம் பதினெட்டு லட்சத்துக் கதிகங்
கொடுத்தது. மேற்கண்ட தொகையன்றி அங்கங்கே யுழைக்கும் ஐரோப்பிய குருக்க
ளுக்கு தங்கள் சுற்றத்தார் சிநேகிதர்களால் தனித்தனியே உதவப்பட்ட உதாரமுள்ள
நன்கொடைகள் அனந்தம். ஷை சபை ரிப்போர்ட்டின் பிரகாரம் சென்ற வருஷத்தில்
ஆசியா முழுவதும் கொடுத்த தருமமோ ஆறாயிரங்கூட ஆகவில்லை. ஆசியாவிலிருக்கும்
கிறிஸ்துவர்கள் ஏழைகளென்றும், ஆனதினால் ஆசியாவை மனந் திருப்பும் வேலையை
நடத்துவதற்கு இன்னும் பல வருஷமட்டும் ஐரோப்பிய, அமேரிக்க கிறிஸ்துவர்களின்
தயாளமுள்ள நன்கொடைகளுக்கு எதிர்பார்க்க வேண்டியதுதா னென்றும் நாம் அறி
வோம். ஆயினும், ஐரோப்பாவிற்கூட அந்நிய தேச போதகச் சபை விஷயத்தில் மிக
சிரத்தையும் அக்கறையுங் கொள்பவர்கள் பெரும்பாலும் ஏழைகளே! அவ்வேழைகள்
உண்மையான கத்தோலிக்கு வேதாபிமானத்தைக் கொண்டிருப்பதற்கு அவர்களு

டைய தரித்திரந் தடைசெய்வ தில்லை. அஞ்ஞானிகளை மனந்திருப்பும் விஷயமாய், தங்கள் தரித்திரத்திலும் தருமஞ்செய்கிற இந்த உதாரகுணமுள்ள ஐரோப்பியருடைய மாதிரிகையை நீங்கள் பின்பற்றுவீர்களாக. வேறு எங்கேயோ கண்காணாத தேசத்தி லல்ல, உங்கள் மத்தியிலேயே, உங்களுடையவும் உங்கள் மக்களுடையவும் ஆத்தும விஷயங்களைக் கவனித்து உழைக்கிற அநேக குருமார்களுடையவும், சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகளுடையவும் உற்சாகத்தைப் பாருங்கள்! இவர்களுக்கு நீங்கள் மிகுதியுங் கடமைப்பட்டவர்களன்றோ? ஆகையினால், ஏற்கெனவே ஞானமந்தையி லுட்டிருக்கும் உங்களைப் பாதுகாத்து வருகிற குருப்பிரசாதிகளுக்கு உங்கள் தருமத்தால் உதவிபுரிவதும், "இம்மந்தையிற் சேராத வேறுடுகளை" (அருள. X. 16) மந்தையிற் திரும்பச் சேர்ப்பதற்காக மற்றவர்களால் அவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கும் உபகாரணங்களுக்கு உல்லங்கனஞ்செய்யாமலிருப்பதும் உங்கள் கடமையாமே.

மூன்றாவதாகிய இன்னொரு கடமையு முண்டு. அஞ்ஞானிகளின் மத்தியில் வசிக்கிறவர்களாகிய உங்களுக்கு இது விசேஷித்த கடமையாகும். அதாவது: கிறிஸ்துவ நன்மாதிரிகையே. "உங்களுடைய வெளிச்சம் உலகத்துக்கு முன் பிரகாசிக்கட்டும்." இந்தியாவில் இலட்சக் கணக்கா யுள்ள அஞ்ஞானிகளுக்கு, உங்களுடைய திவ்ய மாதிரிகையாகிய கிறிஸ்துவானவரின் வார்த்தைகளை நிறைவேற்றுவதில், நீங்கள் பிரமாணிக்கமுள்ளவர்களா யிருக்கிறீர்களென்று காண்பியுங்கள்."பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதா உத்தமரா யிருக்கிறது போல, நீங்களும் உத்தமரா யிருங்கள்." நீங்களிப்படி ஒழுகுவீர்களாகில் உங்களைச் சூழ்ந்திருக்கும் அஞ்ஞானிகள், அப்போஸ்தலர்கள் நடபடிக்கையில் பூர்வீக கிறிஸ்துவர்களைப்பற்றி நாம் வாசிப்பதுபோல, "ஆ! இந்த கிறிஸ்துவர்கள், ஒருவரை யொருவர் எவ்வளவாய் நேசிக்கிறார்கள்." என்று ஆச்சரிய பிரமிப்புடன் புகழ்ந்து பேச இடமாகும். சிலவேளைகளில், கிறிஸ்துவர்களுடைய நடத்தை இதற்கு முழு விரோதமா யிருக்கிறது. கத்தோலிக்கருடைய சீவியம் தங்களதை விட அதிக சீலமுடையதா யிராததைக் கண்ட அஞ்ஞானிகள், நம்முடைய பரிசுத்த வேதத்தின் உண்மையை ஆராய்வதற்குப் பிரியமற்றவர்களாய்ப் போகவும், அது காரணமாய்ச் சத்தியவேதத்திற் சேரும் பாக்கியத்தை அவர்கள் இழக்கவும் ஷ கெட்ட கிறிஸ்துவர்கள் காரணமாகிறார்கள்.

பதின்மூன்றாஞ் சிங்கராய பாப்பானவர் உலகமுழுவதையும் சேசுவின் திருஇருதயத்துக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தார். இதில், பாவிகளையும், வேதவிரோதிகளையும், அஞ்ஞானிகளையும், எவரையும் அவர் விலக்கினதில்லை. அவர்கள் எல்லோரையும் கிறிஸ்துநாதரின் திருச் சமுகத்தில் சமர்ப்பித்து, அவர்களனைவோர் பேரிலும் இராஜரீகம் செலுத்தும்படி அவரை மன்றாடினார். அஞ்ஞானிகளை மனந்திருப்பும் விஷயமாய் உங்களுடைய ஒத்தாசையையும், தயாளத்தையுங் கேட்டு எழுதின இந்த நிருபத்தை, அந்த பாப்பானவர் செய்த ரம்மியமும் உருக்கமுமான செபத்தைக்கொண்டு முடிப்பதே உத்தமமாகும். இந்த செபம், பரமண்டல மந்திரத்தி லடங்கிய "உம்முடைய இராச்சியம் வருக" என்னும் வார்த்தைகளின் பொழிப்புரையே யன்றி வேறென்ன! இவ்வார்த்தைகளை நீங்கள் அடிக்கடி சொல்லவும், சிந்திக்கவும் படியாய் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

"நாங்கள் தேவரீருக்குச் சொந்தமானவர்கள். உமக்குச் சொந்தமானவர்களாகவே யிருக்க ஆசிக்கிறோம். உம்மை யறியாதவர்கள் அநேக ரிருக்கிறார்கள். அநேகர் உம்முடைய கற்பனைகளைக் கவனியாமல், உம்மை நிராகரித்துத் தள்ளிவிட்டார்கள். ஓ! தயாள நிறைந்த சேசுவே, மானுட ஜாதியார் எல்லோரையும் உமது திரு இருதயத்தினிடத்து இழுத்தருளும். ஆண்டவரே! தேவரீர் உமது விசுவாசிகளுக்கு மாத்திரமல்ல உம்மைவிட்டுப் பிரிந்துபோன ஊதாரிப்பிள்ளைகளுக்கும் இராஜாவாயிருக்கிறீர். குருட்டாட்டத்தினால் மதிமோசம் போனவர்களுக்கும் இராஜாவாயிருப்பீராக! அவர்களுக்கு சர்வேசுரனுடைய இராச்சியத்தின் ஒளி யில்லாமற் போகாதபடி அவர்கள் அனைவோரையும் அந்தகாரத்தினின்று வெளியே நடத்தியருளும்."



இந்நிருபம், அஞ்ஞானிகளின் அப்போஸ்தலராகிய அர்ச். சின்னப்பர் மனந்திரும்பின திருநாளன்று சென்னையில் அருளப்பட்டது. இது தபசுகாலத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமையதினம் நமது அதிமேற்றிராசனத்துக்கு உட்பட்ட எல்லா பங்கு விசாரணைக் கோவில்களிலும், ஜெபக்கூடங்களிலும், மடத்துக் கோவில்களிலும் வாசிக்கப்பட நியமிக்கப்பட்டது.

இப்படிக்கு,
கிறிஸ்துநாதரில் பக்தியுள்ள,
✠ அருளப்ப ஆலன்.
சென்னை அதிமேற்றிராணியார்.

ஏ. மெர்க்கஸ் V. G.
காரியதரிசி.

## LETTER TO ST. JOSEPH.
## அர்ச் சூசையப்பருக்குக் கடிதம்.

---

வியன்னா நகரில். பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில், ஓர் ஏழைக்கிழவனாகிய பவுல் மெர்ட்டன் என்பவனும் ஜொசெபாள் என்னும் அவன் ஏக புத்திரியும் ஓர் சிறு வீட்டில் குடியிருந்தார்கள். இக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இவர்கள் இருவரைத்தவிர வேறு ஒருவருமில்லை. குடும்பத் தலைவியும் இரண்டு யௌவன புத்திரர்களும் கடந்த வருஷத்தில் கடவுள் சித்தத்தால் காலகதி யடைந்தனர். தகப்பனுக்கும் பெண்ணுக்கும் யாதோர் உதவி ஒத்தாசை செய்வா ரொருவரில்லை. விழுந்தாலும் இவர்கள்தான்; எழுந்தாலு மிவர்கள்தான். இவர்களுக்குக் காசு பணம், வீடு வாசல், ஒன்றுமே கிடையாது; பரம ஏழைகள். தகப்பனார், மியூசிக் என்னும் பாட்டு கற்றுக்கொடுத்தல். மகள் துணி தைத்தல் ஆக இந்த தொழில்களினால் வரும் சொற்ப வரும்படியைக்கொண்டு ஜீவனஞ் செய்துகொண்டு வந்தார்கள். ஆயினும் "வறுமையிற் செம்மை" என்றபடி இவர்கள் புறத்தியாரோடு செய்யும் சகவாசம், கொடுக்கல். வாங்கல். பரபத்தியம் முதலியதுகளில் பொய், திருட்டு, மோசம், வஞ்சகம், சூது, வாது சண்டை, சச்சரவுகளின்றி கடவுளுக்குப் பயந்து, திருச்சபைக்கமைந்து நடந்துவந்தார்கள். மிக்க தெய்வபக்தியுள்ளவர்கள். காலை, மாலை செபஞ்செய்தல் பிரதி தினம் பூசை காணுதல், அடிக்கடி நன்மை வாங்குதல் முதலிய பக்திக் கிருத்தியங்களில் தவறார்கள். விசேஷமாய் 18-வயதுள்ள ஷ ஜொசெபாள் மெத்த பத்தியும் புத்தியு முள்ள பெண்மணி. உள்ளும் புறமுமொத்த தெண்மணி. கள்ளங் கபடமற்ற கண்மணி. இரந்தவர் எவர்க்கும் இல்லையென்னாமல் இருப்பதை ஈயுங் குணமுள்ள தியாகி. எந்நேரமும் கடவுளைத் தியானிக்கும் யோகி. தன் பெயர்கொண்ட பிதாப்பிதாவாகிய அர்ச். சூசையப்பர்மீது விசேஷ பக்திகொண்டவள். தனக்கு நேரிடும் இக்கட்டு இடையூறுகள், துன்ப துரிதங்களை அவரிடஞ் சொல்லி யாறும் வழக்கம் பூண்டவள். இவ்வாறான சற்குணம் அமைந்த இந்தச் சிறு குடும்பத்திற்கு சகிக்கொணா தரித்திரம் நேர்ந்தது. அக்காலத்தில் அந்நாட்டின்மேல் துருக்கியர் படையெடுத்து வந்து முற்றுகையிட்டு அதை நாசமாக்கிச் சென்றார்கள். அதினிமித்தம் அந்நாட்டில் பஞ்சம் மிஞ்சியது. "பசிவந்திடப் பத்தும் பறந்துபோம்" என்பதற் கொப்ப வயிற்றுப்பாட்டுக்கே ஜனங்கள் பெரும் பாடுபடவேண்டி யிருக்கையில், பாட்டு சங்கீதம் படிப்பார் யார்? உடைகள் தைய்த்து உடுப்பதெங்ஙனம்? ஆகவே, நமது பெரியவரும் அவர் குமாரியும் யாதோர் வரும்படியு மின்றி வருந்தலாயிற்று. வறுமை மலிந்தது. பசிபொறுக்க முடியவில்லை. பாவம் எத்தனை நாள் பட்டினிகிடப்பார்கள்! வய்து தளர்ந்த தகப்பன் பசியால் வருந்துவதைப்பார்க்க மகளுக்குச் சகிக்கக்கூடவில்லை. மகள் பட்டினியா யிருப்பதைத் தகப்பன் சகிக்க முடியவில்லை. இவ்வாறு பசிநோய் மிகுந்திருந்த ஓர் நாள் தகப்பனுக்கும் மகளுக்கும் பின் வருமாறு சம்பாஷணை நடந்தது:

மகள்.—அப்பா! எத்தனை நாள் இப்படி நாம் பட்டினி யிருக்கலாம்? நீங்கள் பட்டினியா யிருப்பதுதான் எனக்கு மெத்த விசனமா யிருக்கிறது. நான் யார்வீட்டிலேயாவது போய் பணிப்பெண்ணாக அமர்ந்து, குற்றேவல் செய்வதினால் வருங்கூலியை உங்களுக்கு அனுப்பிவைக்கிறேன். அது உங்கள் பசியை ஆற்றிக்கொள்வதற்கு உதவுமே. அப்படிச் செய்யட்டா அப்பா?

தகப்பன்.—ஆ! மகளே! நீயுமென்னை விட்டுப் பிரிய நினைக்கிறாயோ? நீயும் போய்விட்டால் நான் என்ன செய்வேன் ஒன்றியாய்? கிழவனுக்கார் துணை?

மகள்!—என் அருமை யப்பா! நானென்ன செய்வேன். தள்ளாத வயதில் தங்களுக்குத் தாரகம் பண்ண வழியாதொன்றுங் காணேனே! நமக்கு ஒத்தாசை செய்வார் ஒருவருமில்லை. எப்போதாவது ஒரு வேளாவேளையில் யாதொரு சொற்ப உதவி செய்பவர்களான எனது ஞானத் தாயாருக்குக் கடிதம் எழுதினதுதான் உங்களுக்குத் தெரியுமே. அவர்களிட மிருந்தும் பதில் ஒன்றுங்காணோம். என்ன செய்யலாம்?

தகப்பன்.—(பசியின் கொடுமையினால் கோபங்கொண்டவராய்) ஆம். அவளேன் பதில் எழுதுவாள்! அவளுக்கு எழுதினதைவிட ஒரு பசாசுக்கு எழுதி யிருக்கலாமே!

மகள்.—என்ன அப்பா அப்படிச் சொன்னீர்களே! வறுமையானது உங்களை அப்படிப் பேசச்சொல்லுகிறதோ? இது நிற்க, இப்போது எனக்கொரு யோசனை தோன்றுகிறது. அப்படிச்செய்வதுதான் நல்லதென்று நினைக்கிறேன்.

தகப்பன்.—என்ன யோசனை?

மகள்.—எனது அன்புள்ள பாதுகாவலராகிய அர்ச். சூசையப்பருக்கு நமது குறைகளையெல்லாஞ் சொல்லி ஒரு கடிதமெழுதி, தம்முடைய திருக்குமாரனாகிய நமதாண்டவரிடத்தில் மன்றாடி நமக்கு யாதோர் ஜீவனம்சம் தேடி தரும்படிக் கேட்டால் அவர் அதைச் செய்யாமற் போவாரா!

தகப்பன்.—அந்த ஏழைத் தச்சனுக்கு சர்வேசுரனிடத்தில் அவ்வளவு செல்வாக்கிருக்கிறதென்று நீ நினைக்கிறாயா? அப்படியானால் எழுதி வேண்டியதைப் பெற்றுக்கொள் அவரிடம் மகாராசியாய்!

மகள்.—என்னப்பா! அப்படிச் சொல்லுகிறீர்கள்! அர்ச். கன்னிமரியாயிக்குப்பின் அர்ச். சூசையப்பரைவிட அதிக செல்வாக்குடையவரார் மோட்சத்தில்? அவர் ஏழைகளுக்குத் தகப்பனல்லவோ! நம்மைப்போன்ற தொழிலாளிகளுக்குத் தஞ்சமுந் தாரகமுமல்லவோ! அவரை நம்பிக் கேட்ட வார்த்தை யடையாமற் போனதார்? எனக்கிதுவரையில் இந்த யோசனை வராமற் போயிற்றே! ஆயினும் இதோ இன்று சூசையப்பருக்கு ஒரு கடிதம் எழுதி யனுப்புவேன். எனது வெள்ளைப் புறாவும் அதைக் கொண்டுபோய் அவரிடஞ் சேர்க்கும். ஐயோ! இந்தப் புறாவுக்குப் போடக் கூட ஒருமணி யரிசியு மில்லையே இன்றைக்கு! சர்வேசுரா!

இவ்வாறு சொல்லிக்கொண்டே ஜொசெபாள் மேசையண்டை சென்று, பின் வருமாறு கடித மெழுதினாள்:

“பிதாப்பிதாவாகிய அர்ச் சூசையப்பரே! அடியோர்கள் படும் துன்பத்தை உமது கடைக்கண்ணா லிரங்கிப்பாரும். எங்கள் ஜீவனத்துக்கு யாதோர் வழியில்லை. வேலை கொடுப்பாரு மிங்கில்லை. பட்டினியும் பசியுமா யிருக்கின்றோம். எனக்கேதாவது ஓர் வேலையனுப்பும்படி எனக்காக நமது அன்புள்ள ஆண்டவரைக் கேளும். என் தகப்பனார் பசியால் வதைகிறார். இதைப் பார்க்க என் மனந் தாளவில்லை. எங்கள் பேரிலிரக்கமாயிரும்!

இப்படிக்கு,<br>
உமது திருநாமம் பூண்ட<br>
பிரமாணிக்கமுள்ள ஊழியக்காரி,<br>
ஜோசேபா மேர்டடன்,<br>
தையற்காரி, பாட்டுக்காரன் மகள்,<br>
13-நெ. வீடு, மரியா எல்பர் தெரு,<br>
லேயிம் குரூப்.”

இக்கடிதத்தை மடித்து ஷை புறாவின் கழுத்தில் நூலினால் கட்டி பறக்கவிட்டாள். அது உடனே, தத்தித் தத்திப் பறந்தோடிற்று.

புறாவானது பறந்துபோனபின் ஜொசெபாள் மனதில் கடவுளைத் தியானித்துக்கொண்டே கிழிந்திருந்த சட்டை யொன்றைத் தைத்துக்கொண் டிருந்தாள். அவள் தகப்பனார் நாற்காலியின் மீது பசியினால் சோர்ந்து சாய்ந்துகொண் டிருந்தார். புறா கடிதங் கொண்டுபோன சற்றேறக்குறைய ஒருமணித் தியால மிருக்கலாம். அப்போது யாரோ வீட்டின் தெருக்கதவைத் தட்டின சத்தம் கேட்கப்பட்டது. கிழவனார் எழுந்துபோய் கதவைத் திறக்க, உள்ளே நுழைந்தார் ஓர் துரை. கண்ணியமும் பெருந் தன்மையுமான தோற்ற முடையவர்.

“ஜொசெபா மெர்டன் என்னுந் துரைசானியின் இருப்பிட மிதுதானோ?” என வினவினர். “ஆம். இதுதான். அந்தம்மாளிடம் உமக்கென்ன அலுவல் ஆகவேண்டும்” என்று முகத்தில் சம்சய குறி தோன்ற விளம்பினார் பதில்:—

“என் பெயர் ஜோசெப் சார்லஸ் எர்ட்டி. இந்த நகரில் நான் ஒரு நகை வியாபாரி” என்று விநயமாய் மறுமொழி பகர்ந்து பின்னுந் தொடர்ந்து சொல்வார்:

“நான் இதற்கு சமீபத்தில்தான் வசிக்கிறேன். நான் அர்ச். சூசையப்பரின் தாசன். அந்த அன்புள்ள தகப்பன் எனக்கொரு சமாச்சாரம்



அனுப்பி, உமது குமாரத்தி தமக்கு அனுப்பிய கடிதத்துக்கு தமது பேரால் என்னை பதில் தரும்படி கட்டளையிட் டிருக்கிறார். ஆதலால் நானிங்கே வந்தேன். என்னிடம் தையல்வேலைகள் மெத்தவுண்டு. அவைகளை உமது மகள் மிக நேர்த்தியாய் செய்து தரும்படி கோருகிறேன். இதுவுமன்றி, இந்த ஊர் உத்தரியமாதாக் கோவில் சங்கீத சபையில் நான் சேர்ந்திருக்கிறேன். எனக்கு சங்கீத விஷயத்தில் கொஞ்சம் சிக்ஷை வேண்டி யிருக்கிறது: ஆகவே, நீரும் உமது மகளும் எனக்கு ஆகவேண்டிய இந்த இரண்டு அலுவல்களையும் ஏற்றுக் கொள்வீர்களா?” என்றான்.

இச் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்த ஜொசெபாள் கண்களில் ஆனந்த பர்வஷம் பஞ்சொரிய ஓடிவந்து, “ஆஹா! மெத்த சந்தோஷமாய்ச் செய்ய காத்துக்கொண் டிருக்கிறோம் ஐயா!” என்றார்.

துரை:—“நல்லது நானுங்களுக்குத் தருமிந்த வேலைகளை முடித்துக்கொடுக்க முன் பணந் தரட்டுமா? ஏனெனில், நான் யாதொருவருக்கு வேலை கொடுக்கும்போது அவர்கள் செலவுக்கு முன்பணம் கொடுப்பது எனது வழக்கம். அதேபிரகாரம், இதோ ஐந்து ரூபாய்.” எனச் சொல்லி ஐந்து ரூபாய் எடுத்து மேசையின்மீது வைத்தார்.

ஜொசெபாள்;—பார்த்தீர்களா அப்பா! அர்ச். சூசையப்பர் எவ்வளவு தயவாய் எனது கடிதத்தை ஏற்றுக்கொண்டாரென்று. அவருடைய தயைக்கும் பட்சத்துக்கும் நான் மெத்தவும் உருக்கமாய் நன்றி செலுத்துவேன்!

துரை:—(பட்ச பற்றுதலுடன்) ஆம் ஜொசெபா அர்ச். சூசையப்பர்மேல் எப்போதும் பத்தியாயிரு. சந்தேகமற அவர் உனக்கு உதவியொத்தாசையும் ஆறுதலும் சந்தோஷமும் அளிக்காமற் போகமாட்டார். நானிதோ வீட்டுக்குப் போய் தையல் வேலைக்கு வேண்டிய துணி, நூல் முதலானதும் ஆள்வசம் அனுப்பி வைக்கிறேன். அவைகளைச் சற்று சீக்கிரமாய்த் தைத்துக் கொடுத்துவிடு. பின்னும் வேலை தருவேன். (பெரியவர் பக்கந் திரும்பி) ஐயா நாளை முதல் எங்கள் வீட்டுக்கு வந்து, சங்கீதப் பாடங் கற்பிக்க தயை செய்வீரா? (விலாசத்தை யெழுதி கையில் கொடுத்து) எங்கள் வீட்டைக் கண்டுபிடிக்க உமக்கு அதிக தொந்தரவு இருக்காது. அந்த வீட்டின் முகப்பில் அர்ச் சூசையப்பரின் திருவுருவப் படம் பெரியதொன்று மாட்டப்பட் டிருக்கும்.” என்று சொல்லி இவர்கள் இருவரிடத்திலும் விநயமாய் விடை பெற்றுக்கொண்டு வெளியே போனார்.

அர்ச். சூசையப்பர் செய்த இந்தப் புதுமையினாலும், தருணமறிந்து செய்த இந்த சகாயத்தினாலும் மனப்பூரிப்பு கொண்டவளாய் ஜொசெபாள் கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரிய, தனது தகப்பனார் மடிமீது விழுந்து பேச வாய் வராமல் அவர் முகத்தை உற்று நோக்கினாள். தகப்பனாரோ தான் முதலில் அர்ச். சூசையப்பர்மேல் அவநம்பிக்கை கொண்டாரானதால், வெட்கமும், அநுதாபமு முற்றவராய் தன் தலை கவிழ்ந்து கீழ் நோக்கினார்.

இவ்வாறு இந்த பக்தியுள்ள ஏழைக் குடும்பத்தை கருணையங் கடவுள் கவனித்துக் காப்பாற்றின விதத்தை கேட்கும் ஒவ்வொருவருக்கும் அர்ச். சூசையப்பர் பேரிலுள்ள பக்தியும் பற்றுதலும் அதிகரிக்காமற் போகாது. “கடவுளை நம்பினோர் கைவிடப்படார்” என்பதற்கு இது ஓர் சிறந்த அத்தாட்சி யல்லவா?

ஷை ஜொசெபாள் அனுப்பிவைத்த புறாவானது எவ்விதம் தபாற்காரன் வேலை செய்ததென்பதை யறிய நமது நண்பர்கள் விரும்புவார்க ளன்றோ?

அந்தச் சிறு புறாவானது பசியினால் களைப்புற்றிருந்ததுமன்றி, தான் எப்போதும் அநுபவித்திராத தன் கழுத்தில் கட்டப்பட்ட கடிதத்தின் பளுவினால் பயமுந் திகிலுங் கொண்டு, அதிகத் தொலை பறக்கச் சக்தியற்று, அடுத்த தெருவின் மூலையிலிருந்த ஓர் மெத்தை வீட்டு அறையின் ஜன்னலில்போய் உட்கார்ந்தது. அந்த பலகணியினருகே ஓர் மேஜையண்டை உட்கார்ந் தெழுதிக்கொண்டிருந்தார் ஷை எர்ட்டி துரை. தமது வீட்டுக்கு வந்த இந்த எதிர்பாராத சிறு விருந்தாளியையும், அதன் கழுத்தில் கட்டப்பட்டிருந்த கடிதத்தையும் பார்த்து ஆச்சரியமுற்று, புறாவைப் பிடித்து, அவிழ்த்து வாசித்தார் கடிதத்தை. மனங் கசிந்து சொரிந்தார் அநுதாபக் கண்ணீர். தீர்மானித்தார் அவ் வேழைக் குடும்பத்தைக் காப்பாற்ற. இந்தத் தீர்மானமே அவரை அவர்கள் வீட்டுக்கு உடனே வரச் செய்தது.

இவ் வதிசய விருத்தாந்தத்தின் முடிவைச் சொல்லாது விடுவது அழகல்ல. அதாவது:

முன் சொன்ன சந்தர்ப்பங்கள் நிகழ்ந்த சில மாதங்களாக ஜொசெப்பாளின் நற்குணங்களையும், சுகிர்த புண்ணியங்களையும், புனித ஒழுக்கத்தையுங் கண்டஷெ எர்ட்டி தனவான், அவளை மணம் புரிய விருப்பமுற்று, அவளுடைய தகப்பனார் உத்தரவையும் அம்மாதின் சம்மதத்தையுங் கொண்டு, அவளை விவாகஞ் செய்துகொண்டார். ஆகவெ, ஜொசெபா மெர்ட்டன் என்னும் ஏழைத் தையற்காரப் பெண்ணானவள் எர்ட்டி யென்னும் ஐஸ்வரிய பெருமாட்டி யானாள். அர்ச். சூசையப்பரின் தயவால் கிடைத்த இந்த உந்நத பதவியைக் கண்டு ஜொசெபாள் பெருமை கொள்ளாமல், முன்போலவே தாழ்ச்சி, பொறுமை, தயை தாட்சண்யம் முதலிய சற்குணங்களால் விளங்கி வந்ததுமன்றி, தனக்கு சூசையப்பர் மட்டிலுள்ள நன்றியின் அறிகுறியாக தான் தரித்திரத்தில் சீவித்த சிறு வீட்டின் முகப்பில் அவருடைய படம் ஒன்றை ஸ்தாபித்து வைத்தாள். அந்த படத்தை இன்றைக்கும் அவ்விடத்தில் பார்க்கலாம்.

---

## SELF HELP.
## தன் முயற்சி.

---

தன் முயற்சி அல்லது சுயப்பிரயாசை என்பது ஒருவருக்கு வேண்டியதைக் கூடியவரையில் பிறருதவி யின்றி தன் சொந்த பிரயாசையால் தேடி யடைவதாம். கடவுள் நமக்கு அறிவும் பலமுங் கொடுத்திருக்கிறார்; இவற்றைக்கொண்டு நமக்கிஷ்டமான நற்காரிய மனைத்தையும் செய்து முடிக்கலாம். ஆதலால், நமதுடலை வளர்த்து, பெறற்கரும் பொருளாகிய ஆன்மாவை மாசின்றிக் காப்பதிலும், அறிவை விர்த்தி செய்வதிலும், கடவுள் நமக் களித்திருக்கும் இவ்விரு கொடைகளை யுபயோகிக்க வேண்டியது நமது கடன். பிறருக்கு நம்மால் கெடுதல் நேரும்படி யுழைப்பது கூடாது; நம் மயலார் நம்மால் நன்மை அடைவது, நாமிவ்வுலகிற் சீவித்திருப்பதினால் உண்டாகும் ஓர் முக்கிய பயன்.

உலகமோர் நாடகமேடை யெனவும் அதில் சீவிக்கு மன்பதைகள், அம்மேடையின்கண் ஆடும் நடிகள் எனவும், ஓர் பேர்போன ஆங்கிலக் கவி வரைந்திருக்கிறார். இந்நடன சாலையில் நாமெல்லோரும் நம்மாலான வரையில் ஒழுங்காயும் சுறுசுறுப்பாயும் நடித்தல் வேண்டும். இதற்கு மாறாய் நாடக சாலையில் வேடிக்கை பார்ப்பவர்கள் போல, ஒன்றுஞ் செய்யாமல் சோம்பலுக் கிடங்கொடுத்து, கைகட்டி உட்கார்ந்திருப்போமேயாகில், இவ்வுலகில் நாம் முன்னுக்கு வருவது குதிரைக் கொம்புதான். இதனாலன்றோ பொய்யா மொழிப் புலவராகிய திருவள்ளுவ நாயனார்,

"மடியுளாள் மாமுகடி யென்ப மடியிலான்
றாளுளான் தாமரையினாள்".

என்று மொழிந்தார். சுயப்பிரயாசையின்றி, எப்போதும் பிறருதவியையே நாடுபவர் முன்னுக்கு வரலாமென் றெண்ணுவது மதியீனம். இவர் ஒருகூடைப் பழங்களை விற்பதற்காய் தன் முன்வைத்துக்கொண்டு, கொஞ்ச காலத்தில் குபேரனாய் விடலாமென்று வீண் மனோராச்சியம் செய்து, ஆகாயக்கோட்டை கட்டி, உள்ளதையு மிழந்த முழு மூடனை ஒப்பார்.

பேரறிவென்னும் வரத்தைக் கடவுள் தமக் கருளவில்லை யாதலால், தம்மால் அரும் பெருங் காரியங்கள் செய்து, இவ்வுலகில் முன்னுக்கு வர முடியாதென்று சிலர் சொல்வார். இப்படி எண்ணுவது அறிவீனம்; ஏனெனில் இவ் விஷயத்தைச் சற்றே ஆழ்ந் தாராய்வோமாயின், இதன் உண்மை உள்ளங்கை நெல்லிக் கனியென விளங்கும். தமக் கீசனருளிய சாதாரண புத்தியுத்தியைத் தக்கவிதமா யுபயோகித்து, பெருங் காரியங்களைச் செய்து புகழ்பெற்று விளங்கின மகான்களைப்பற்றி எத்தனையோ இடங்களில் வாசித்துங் கேட்டும் இருக்கிறோம். "இடைவிடாமல் தக்கவாறுழைத்து வருவதே இறுதியில் பேரறிவாகும்" என்று ஒரு மேற்புல ஞானி எழுதியிருக்கிறார். வானசாஸ்திரத்தில் நிபுணரென பேர் பெற்ற நியூட்டன் என்பவர் இது விஷயத்தில் சொல்லியிருப்பதை நாங் கவனிக்கற்பாலது. பூதல முழுதும் பேசும்படியான அவ்வளவு பெருங் கீர்த்தியை யளிக்கவல்ல நூதன சாஸ்திர மீர்மங்களைக் கண்டறிந்த தெவ்வா றெனப் பலர் அவரை வினவியபோது, "அவற்றைப் பற்றி சதா சிந்தனை செய்து வந்ததினால்தான்" என்று விடை பகர்ந்தனராம். வேறொரு பண்டிதரானவர் மாணவர் குழுமிய கூட்டத்தில் பிரசங்கம் செய்யும்போது, "சிறுவர்களே, இவ் வாதரையில் நீங்கள் முன்னுக்கு வர வேண்டுமென ஆசிப்பீர்களானால், நான் செய்ததுபோல செய்யுங்கள்; அதாவது ஊக்கதோடுழையுங்கள்" என்று சுயப் பிரயாசையின் மகத்துவத்தை விளக்கிக் காட்டினார். ஆம், ஊக்கமும் உழைப்பும் ஆக்கமளிப்பன. ஊக்கமும் உழைப்பும் உண்மையான பேரறிவாம். தனக்கு வேண்டிய எந்த வஸ்துக்காகவும் பிறரை எதிர்பாராது தானே முயன்று வருந்தி யுழைத்து அதைச் சம்பாதித்துக்கொள்ளுதலே பேரறிவாகும். மேலும் இத்தகைய தன் முயற்சியைக் கையாடி சித்தி பெறுபவனுக்கு உண்டாகும் மனமகிழ்ச்சிக்கும் உற்சாகத்துக்கும் கீர்த்தி பிரதாபத்துக்கும் அளவு சங்கியை யுண்டோ! இவ்வாறு வருந்தி ஊக்கத்துடன் உழைத்ததால், வறுமையென்னும் படுகுழியிற் கிடந்தார் பலர் குன்றின்மேலிட்ட விளக்கைப் போல் பேரும் புகழும் பெறுமிதமாய்ப் பெற்று விளங்கினார். புதிய உலக மெனப்படும் அமெரிக்க கண்டத்தைக் கண்டு பிடித்த கொலம்பஸ் என்பவர் யார்? வறுமையிற் பிறந்து வறுமையில் வளர்ந்தவரே யன்றோ? இவரைப்போல் எத்தனையோபேர் தாரித்திர நிலைமையி லிருந்து சுயப் பிரயாசையால் தனிகராகி தாரணியில் மங்காப் புகழ்பெற்று வாழ்ந்ததாக பல தேச சரித்திரங்களில் நாம் வாசிக்கின்றோம்

"பொறுத்தார் பூமி யாள்வார்" என்பது போல், பொறுமை வெற்றிக்கடையாளம். பொறுமையும் முயற்சியும், கவனம் உழைப்பு, உற்சாகம், உவகை என்னும் இந்நால்வருடன் சேர்ந்தேக வேண்டும். உழைப்பும் திடச்சித்தமும் வெற்றிக்காதாரம். பேர்போன இராணுவவீரர் ஒருவர், தன்னறைப் பக்கல் உலாவி யிருக்கும்போது, "நான் என் தேசத்தின் முதல் வீரனாவேன்" என்று தனக்குள்ளேயே அடிக்கடி சொல்லிக் கொள்வாராம். அவர் நினைத்த வண்ணமே விடாமுயற்சியாலும் சுயப்பிரயாசையாலும், கொஞ்சகாலத்தில் அவ்வுன்னத பதவி யடைந்தனர். "வைராக்கியமும் விடாமுயற்சியும் நின்னிடமிருந்தால், நீ எந்த அடைய விரும்புகிறாயோ, அதை யடையாமற் போகாய்." என்று ஓர் மகாத்மா மொழிந்திருப்பது பொய்க்குமா?



எல்லாம் அதிர்ஷ்டத்தைப் பொருத்ததென்றும், அதிர்ஷ்டத்திற்குக் கண்ணில்லையென்றும் சிலர் பிதற்றுவார்கள். அதிர்ஷ்டத்திற்குக் கண்ணில்லையோ, அல்லது இவ்வாறு மொழியுநர்க்குக் கண்ணில்லையோ! மனிதரது மனக்கண் சரியாயிருந்தால் அதிர்ஷ்டமாவது என்ன செய்யும்? உண்மையில் முயற்சியில்லா மனிதரே குருடர்; ஏனெனில், இவ்வாறு வீண் சாக்குப் போக்குகளைச் சொல்லித் திரிவதால் தம்மைத்தாமே ஏமாற்றிக்கொள்வதை அவர்கள் காண்கிறதில்லை. சாமர்த்திய முள்ள மாலுமிக்கு அலையுங் காற்றும் அநுசரணையாயிருக்கும் என்று கேட்டதில்லையா? இப்பூமியில் படைப்புண்டவை யனைத்தினும் உயர்ந்தவனும், அவற்றை ஆளும் எஜமானனும் மனிதனே யல்லவோ? அவனுக்கன்றோ எல்லாம் வல்ல இறைவன் பகுத்தறியும் பரம சத்தியைக் கொடுத் திருக்கிறார். பகுத்தறி வென்னும் ஞானக் கடலில் ஒருவன் சற்றே மூழ்கி எழுவானாகில், அதனுள் மறைந்து கிடக்கும் அளவற்ற அற்புதங்களையும், மதிப்பிற் கடங்கா நன்மைகளையும் சுயப் பிரயாசை என்னும் உதவியால் பெறலாம்.

உரமொருவற்குள்ள வெறுக்கை யஃதில்லார்
மரமக்களாதலே வேறு"

நம்மிடமுள்ள சோம்பல் என்னும் அழுக் குடையைக் களைந்தெறிந்து, மனவன்மை, முயற்சி என்னும் வெண்ணுடையணிந்து வேலைக்குப் புறப்பட வேண்டியது நமது கடன். இப்படிச் செய்தால் தான் நாமும் முன்னுக்கு வருவதுடன் பிறருக்கும் நன்மை செய்யக்கூடும். சுறுசுறுப்பாய் செலவிட்ட காலம் எப்பவும் வீண்போகாது. விடாமுயற்சியுடன் ஒரு காரியத்தைச் செய்து வந்தால், வறுமையும் இழிபிறப்பும் கடைசியில் ஜயமடைய தடையா யிராவென ஒரு மகான் வரைந்திருக்கிறார். இதன் உண்மையை நாம் கண்கூடாக எத்தனையோ விசைக் கண்டிருக்கிறோம். "எந்த காரியத்தைச் செய்தாலும், உன்னிட முள்ள சத்தியனைத்தையும் அதன் பாற் செலுத்தினால், அதைச் சுலபமாய்ச் செய்து முடிக்கலாம்" என்று சென்ற நூற்றாண்டில் ஆங்கில நாட்டுப் பிரதான மந்திரியா யிருந்து கீர்த்திபெற்ற ஓர் பிரபு சொல்லி இருக்கிறார்.

ஆதலால் தன் முயற்சி மனிதனுக்கு இன்றியமையாதது என்றறிந்து நம் எல்லோரும் பின் வரும் ஆங்கில செய்யுளின் கருத்தைக் கடைபிடித் தொழுகுவோமாக:

மலைகள் எழுந்து நின்னெதிரில் நின்றாலும் மயங்காமல் முன்னட; அவற்றின் மேலேறிக் கடந்து செல்வது ஓர் பெருங் காரியமல்ல; அவை வானளாவி ஓங்கியிருப்பினும் மனிதன்முன் நிற்குமா? ஆதலால் முன்னட.

அலைகடல் பொங்கி நின்னைச் சூழ்ந்து கொண்டாலும், மயங்காமல் முன்னட; இன்னலுக்குடைந்து நீ மலைக்காதே; இடியும் மின்னலும் இருண்டவானில் தோன்றி பயமுறுத்தினும் தைரியத்தைக் கைவிடாமல் உறுதியாய் முன்னட.

கலகக்காரருஞ் சத்துருக்களும் நின்னைக் கொல்ல எழுந்தாலும் மயங்காமல் முன்னட; காரியத்தின்மேல் கண்ணுயிருந்து ஜெயமடையப் பார்; மனச் சாட்சிக்கு மாறாய் நடவாமல், இன்பம் வந்தாலும் துன்பம் வந்தாலும் முன்னட.

தொலைவழியாச்சே, துணை யார் என்று கேட்காதே, மயங்காமல் முன்னட; தொலையா? இது கோழைகள் சொல்லும் போக்கென இகழ்ந்துவிடு; ஒருவர் இருவர் துணையிருப்பினும், இல்லாமல் தனிமையிருப்பினும் அஞ்சாமல் முன்னட.

S. Selva Raju.

---

# CHRISTMAS STORY.

## சுவாமி பிறந்த திருநாள் கதை.

அல்லது,

## ரோமான் கோவிலுக்குப் போகாதே.

(முன்தொடர்ச்சி.)

---

இவ்வாறு குழந்தையை விசிறிக்கொண்டிருக்கையில் போதகருக்கு மகா துக்கமுண்டாக, தன் ஏகுமாரத்தி யிறந்துபோனல் தானினி உலகத்தி லிருப்பதில் பயனென்று மில்லை யென்றும், தானுங் குழந்தையோடு சாவதே நலமென்றும் எண்ணி, துயரமாய் கண்ணீர் சொரிந்து கொண்டிருக்கையில், வியாதிக்காரி "அம்மா" என்றாள். அப்பொழுது போதகர் எழுந்து விசிறியை நாற்காலியின்மேல் வைத்துவிட்டு, குழந்தைப் பக்கமாய் தலைசாய்த்து "அம்மா அபூர்வம்! என்ன வேண்டும்?" என்று கேட்கவே,

அபூர்வ.—ஐயர் இன்னம் வரவில்லையா நாயினு?

பவுல் போ.—வரவில்லையம்மா.

அபூர்வ.—எப்போது வருவார் நாயினு?

பவுல்போ.—அவர் வருவதால் பிரயோசனமில்லை யம்மா (என்றபோது துக்க மிகுதியால் வந்த விம்மலை அடக்கிக்கொண்டு,) பயப்படாதே அம்மா, நானும் உன் தாயும் உன்கிட்ட இருக்கிறோம், ஒன்றுக்கும் அஞ்சாதே அபூர்வம்.

அபூர்வ.—நாயினு! உங்கள் முகத்தையும் அம்மா முகத்தையும் பார்த்து வெகு காலமாச்சுதே! இனிமேல் எப்போ பார்ப்பேனோ!" (என்றதைக் கேட்ட போதகர் தமது துக்கத்தை அடக்கமாட்டாதவராய் வெளியே போய் சிறுகுழந்தைபோல அழுது கண்ணைத் துடைத்துக் கொண்டு வியாதிக்காரியிடம் திரும்பி வந்து)

பவுல்போ.—அபூர்வம் பயப்படாதே. பராபரன் உன்னைக் காப்பாற்றுவார்.

அபூர்வ.-லூர்து மாதா மட்டில் ஐயருக்கு விசுவாசம் இல்லை யென்று அம்மா சொன்னார்கள். அது நிசந்தானு நாயினு? (என்று மகா பல யீனத்துடன் வாய்க்குள் சொன்னாள்.)

பவுல் போ.—ஐயரைப்பற்றி நினைக்க வேண்டாம் அம்மா. பராபரனை மாத்திரம் மனதில் தியானித்துக் கொள்"

அபூர்வ.—லூர்து மாதாவை?

பவுல்போ.—அந்த மாதாவையும் மன்றாடு.

அபூர்வ.-நாயினு நீங்கள் லூர்து மாதாவை விசுவசிக்கிறீர்களா?

பவுல் போ.—ஆம் அம்மா. அவள் ஏசுக் கிறிஸ்துவின் தாயார்.

அபூர்வ.—லூர்துமாதா என்னை சௌக்கியப்படுத்துவாள்! என் கண்ணைத் திறப்பாள்! அப்போது நாயினு, உங்களையும் அம்மாவையும் நன்றாய்ப் பார்ப்பேன்?

பவுல் போ.—பராபரனல் கூடாத காரியமில்லை.

அபூர்வ.—ஆம், நாயினு லூர்து மாதா உதவி செய்வார்கள் (அப்போது நெஞ்சின்மேலிருந்த புஸ்தகத்தைக் கையில் பிடித்துக்கொண்டு) இந்தப் புஸ்தகத்திலுள்ள சரித்திரங்களையும் அற்புதங்களையும் வாசித்திருக்கிறேன். இதில் சொல்லப்பட்டிருக்கிறவர்களைச் சுகப்படுத்தினதுபோல அந்த நல்ல மாதா என்னையுஞ் சுகப்படுத்துவாள். ஆனல் அத்தனை பேரும் லூர்து. மாதா தீர்த்தத்தால் சௌக்கியப்பட்டார்கள். அந்த தீர்த்தமிருந்தால் எனக்குஞ் சுகமுண்டாகும் அல்லவா நாயினு? ஐயரிடத்தில் அந்தத் தீர்த்தம் அகப்படுமா?

பவுல் போ.—அது அவரிடத்தில் அகப்படாது. மாதா மட்டில் விசுவாசங் கொள்ளாத அவரிடத்தில் அவளுடைய தீர்த்தம் எப்படி யகப்படும்?

அபூர்வ.—நாயினு எங்கேயாகிலும் போய் லூர்துமாதா தீர்த்தங் கொண்டு வருவீர்களா? கண் திறக்கக் கூடுமாயில்லை. மூச்சு விடக் கூடக் கஷ்டமா யிருக்கிறது. (என்றபோது சிறுமியின் கண்களினின்று நீர் கசிவதைக் கண்ட போதகருக்கு மித மிஞ்சின துக்க முண்டாக, அவர் அவ்விடத்தை விட்டெழுந்து தன் மனைவி யிருந்தவிடம் போனார்)

ரூத்தம்மாள், கண்ணீரழுகையுடன் வருந்தன் கணவனை நோக்கி "பிள்ளைக்கு எப்படி யிருக்கிறது? என்றாள்.

பவுல் போ.—இன்றை சாயங்காலமட்டும் உயிரோடிருப்பாளென்று நம்பிக்கை யில்லை!

என்றதைக் கேட்கவே "ஐயோ! தெய்வமே! நான் என்ன செய்வேன்! என் அருமைக் கண்மணி மகளே" என்று அழுதுகொண்டு அவருடைய மனைவி வியாதிக்காரி யிடத்துக்குப் போகையில், போதகர் அவள் கையைப்பிடித்து நிறுத்தி "லூர்துமாதா தீர்த்தம் வேண்டுமென்று குழந்தை கலவரிக்கிறாள். ஈசாக் உபதேசியாரைக் கேட்டால் அகப்படலாம்" என்றார்.

ரூத்.—அகப்படுமானல் போய்க் கொண்டு வாருங்கள். நமக்குள்ள சகலமும் போனாலும் போகட்டும்; பிள்ளை மாத்திரம் பிழைத்தால் போதும். அதற்கு என்ன செலவு பிடித்தாலும் பிடிக்கட்டும். ஆனலினி மிஷநெறி வீட்டுக்குப் போகவே வேண்டாம். மரணபத்தான நேரத்தில் ஞான உதவி புரியாதவரிடம் நமக்கு இனி யென்ன வேலை? நான் செத்தாலும் அந்தக் கோவிலில் கால் வைக்கவே மாட்டேன். ஆபத்துக்குதவாப் பிள்ளை யிருந்தென்? அரும் பசிக்குதவாத அன்னத்தாலென்ன பயன்? நமது பிள்ளையின் மரணபத்துக் குதவாத பாதிரியா ரிருந்தென்? நீங்கள் போய் எவ்வளவு பணம் பிடித்தாலுஞ்சரி, அந்த லூர்துமாதா தீர்த்தத்தை அவசியங் கொண்டு வாருங்கள். நமது வீடு தீவிபத்துக் குள்ளா யிருந்தபோது நான் செய்துகொண்ட பொருத்தனையை செலுத்தாதபடியால், இது ஆக்கினையென்று நினைக்கிறேன்.

பவுல் போ.—நீ யென்ன பொருத்தனை செய்து கொண்டாய் ரூத்?

ரூத்.—பிறகு சொல்லுகிறேன் நீங்கள் போய் குழந்தை ஆவலாய்க் கேட்கும் அந்தத் தீர்த்தத்தைக் கொண்டு வாருங்கள்.

என்று சொன்னதின்மேல் போதகர் ஈசாக் உபதேசியார் வீட்டுக்குப் புறப்பட்டார்.

இவ்வளவு அதிகாலையில் தமது வீட்டுக்கு போதகர் வந்ததைக் கண்ட ஈசாக் உபதேசியார் அதிசயித்து, அவருக்கு காலை வந்தனங் கூறி "இப்போது விஸ்வாச நாயகர் பிள்ளைகளுக்கு ஞானோபதேசம் சொல்லிக் கொண்டிருக்கிறார். இன்னும் ஒருமணி நேரத்துக்குப் பின்தான் அவருக்கு இங்குவர ஒழியும்." என்றார்.

பவுல் போ.—இப்பொழுது தர்க்க விஷயமாக இங்கு நான் வரவில்லை சார். என் வீட்டில் பெரும் ஆபத்து நேரிட்டிருக்கிறது! ஆகையால் உமது உதவியை நாடி வந்தேன். சபையோரும் பந்து மித்திரரும் எங்களை கைவிட்டார்கள். மிஷநெறியும் இப்பெரும் ஆபத்தில் ..... (என்று கண்கலங்கி, துக்கத்தால் பேச வாய் வராமல் மௌனமா யிருந்தார்.)

ஈசாக் உப.-என்ன ஆபத்து ஐயா? பெருஞ் சஞ்சல சாகரத்தில் அமிழ்ந்தி யிருப்பதாகத் தோன்றுகிறதே! சங்கதியைச் சொல்லும். என்னால் கூடுமான சகாயஞ் செய்கிறேன்.

அப்பொழுது போதகர் தன் குழந்தைக்குக் கண்டிருக்கும் பயங்கரமான வியாதியைப் பற்றியும், மிஷநெறியும் அவர் மனைவியுஞ் செய்த கொடுமையைப்பற்றியும் சுருக்கமாய் விவரித்து, லூர்துமாதாத் தீர்த்தஞ் சம்பாதித்துக் கொடுத்தால் பேருபகாரமா யிருக்குமென்றார்.

ஈசாக் உப.-ஐயோ! உமது குழந்தை இவ்வாறு சுக மற்றிருப்பது எனக்குத் தெரியாமல் போயிற்றே! தெரிந்திருந்தால் அடிக்கடி உமது வீட்டுக்குப் போய்க் குழந்தையைப் பார்த்து வருவேனே. பயப்படாதேயும் ஐயா! தேவ தாயாருடைய சரணஞ் சென்று நம்பிக்கையுடன் அப்பரமாண்டவளை மன்றாடும் மன்றாட்டு வீணாய்ப் போகாது. நீர் ஆசித்துக் கேட்கும் லூர்து மாதாவின் தீர்த்தத்தால் பலர் சௌக்கிய

மடைந்ததை நானே கண்ணாரப் பார்த்திருக்கிறேன். இங்கேயே இரும்; நான் ஓட்டமாயோடிப்போய் தீர்த்தத்தைக்கொண்டு வருகிறேன்.

என்று சொல்லி அந்த க்ஷணமே கோவில் மார்க்கமாய்ப் புறப்பட்டுப்போய் விஸ்வாச நாயகரைக்கண்டு பேசி, போதகர் சொன்ன செய்தியெல்லா மவருக்கு வெளிப்படுத்தினார். விஸ்வாச நாயகருந் தாமதஞ் செய்யாமல் குருவானவரண்டைக்குப் போய், ஒரு சிறு சீசாவில் லூர்துமாதா தீர்த்தத்தைப் பெற்றுக்கொண்டு, ஞானோபதேசங் கற்றுக்கொண்டிருந்த பிள்ளைகளை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, தன் வீடு சென்று, ஒரு சிறு லூர்துமாதாவின் படத்தை யெடுத்துக்கொண்டு, ஈசாக் உபதேசியாருடன் போதகர் கிட்டப்போய் "வாருங்கள் போகலாம் உமது வீட்டுக்கு" என்றார்.

பவுல் போ.—நீங்கள் கூட வீட்டுக்கு வருகிறீர்களா?

விஸ்வாச நா.—என் ஐயா? நான் வரக் கூடாதா?

பவுல் போ.—அதற்கல்ல சார். பிள்ளைக்கு வைசூரி கண்டிருக்கிறதே!

விஸ்வாச நா.—நாங்கள் அதற்கு பயப்படுகிறதில்லை ஐயா! தேவ சித்தமின்றி ஒன்றுஞ் சம்பவியாது.

பவுல் போ.—Thanks Thanks! Many thanks! வந்தனம் வந்தனம்! அநேக வந்தனமய்யா! இந்தப் பெரும் ஆபத்தான வேளையில் சகலரும் என்னைக் கைவிட்டிருக்க, அந்நியரான நீங்கள் என் வீட்டில் கால்வைப்பதே பெரும் பாக்கியம். எனக்கும் ரூத்துக்கும் எவ்வளவோ ஆறுதல்! பராபரன் ஆசீர்வதிக்கப் படுவாராக!

என்று விரைவாய் நடந்து போக, விஸ்வாச நாயகரும் ஈசாக் உபதேசியாரும் அவரைப் பின் தொடர்ந்தார்கள். மூவரும் வீட்டில் பிரவேசிப்பதைக் கண்ட ரூத்தம்மாள் அதிசயமும் ஆறுதலுங் கொண்டவளாய் எழுந்து உபதேசிமா ரிருவருக்கும் ஆயிரம் வந்தனங்கள் புரிந்து "எங்கள் சபையோரும் பந்துக்களும் கடந்த மூன்று வாரமா யிந்த வீட்டில் கால் வையாதிருக்க, அந்நிய சபையாரான நீங்கள் இங்கு வந்தது எவ்வளவோ பெருத்த உபகாரம் ஐயமாரே, உங்கள் முகத்தைப் பார்த்த உடனே என் சஞ்சலந் தீர்ந்தது" என்றாள்.

விஸ்வாச நா.—உங்கள் குழந்தை வியாதியா யிருக்கிற செய்தி யெங்களுக்குச் சுத்தமாய் தெரியாதம்மா. தெரிந் திருந்தால் நாடோறும் இங்கு வந்து வந்து, பார்த்திருப்போமே ஈசாக் உப தேசியாரும் நானும்.

விஸ்வாச நாயகர் தீர்த்த சீசாவைக் கையில் பிடித்துக் கொண்டு வியாதிக்காரி பக்கமா சென்ற போது, ரூத்தம்மாள் தன் மகளுடைய கையைப் பிடித்து "அம்மணி அபூர்வம்! நீ ஆசித்துக் கேட்ட லூர்து மாதா தீர்த்தம் இதோ வந்திருக்கிறது" என்றபோது, சிறுமி கண் திறக்கக் கூடாமல் இரண்டு கையையும் மேலே உயர்த்தி "எங்கே அம்மா! அதனால் நான் சௌக்கியம் அடைவேன்" என்றாள். அப்பொழுது விஸ்வாச நாயகர் சிறுமியை நோக்கி "இதோ பார் தீர்த்தம்" என்று சீசாவை முகத்துக்கு எதிரே தூக்கிக் காட்டினார். ரூத்தம்மாள் விஸ்வாச நாயகரை அழுகைக்கண்ணீருடன் நோக்கி "குழந்தையின் கண்கள் அவிந்து போயின ஐயா. கடந்த ஒருவாரமாய் அந்தகளா யிருக்கிறாள்" என்றார். இதைக்கேட்ட நாயகர் "அப்படியா" என்று பரிதபித்து குழந்தையை நெருங்கி, "அம்மா அபூர்வமணி! நீ ஆசித்த லூர்து மாதா தீர்த்தத்தைக் கொண்டுவந்திருக்கிறேன். இது தேவதாயாருடைய அற்புத சுனையினின்று எடுபட்ட ஜலம். இதை அருந்திக் குணமடைந்த வியாதிக்காரர் ஆயிரக் கணக்கானவர்கள். நா னிப்பொழுது சொல்லுகிற செபத்தை வாய்க்குள் சொல்" என்று "மிகவும் இரக்கமுள்ள தாயே" என்னும் செபத்தைச் சொன்னபின் குழந்தையின் வாயில் இரண்டொரு துளி தீர்த்தத்தை விட்டு, அந்த திரு ஜலத்தையே அவளுடைய இரு கண்களிலும் பூசினார். பிறகு நால்வரும் முழங்காலிலிருந்து லூர்துமாதாப் பிரார்த்தனையைச் சொல்லி முடித்தார்கள். இது முடிவானபின் "நான் செய்தபடி ஒரு நாளைக்கு ஒருவிசை செபத்தையும் பிரார்த்தனையையுஞ் சொல்லி, திரு ஜலத்தை குழந்தை வாயில் விட்டு, அதையே கண்களிலும் பூசுங்கள். நாங்களும் உங்கள் குழந்தையின் சௌக்கியத்துக்காக லூர்து நாயகிக்கு ஒன்பது நாள் நவநாள் செபம் ஆரம்பிப்பதுடன் கன்னியாஸ்திரிகள் மடத்திலுஞ் சொல்லி இதே கருத்துக்காக வேண்டிக் கொள்ளும்படிக் கேட்டுக்கொள்ளுகிறோம்" என்று சொல்லி இருவருந் தங்கள் வீட்டுக்குப் புறப்பட்டார்கள்.



விஸ்வாசநாயகர் சொன்னதுபோல ஒரு நாளைக்கு ஒரு முறை மாத்திரமல்ல மும்முறை போதகரும் ரூத்தம்மாளும் ஷ நவநாள் செபத்தை மகா விஸ்வாச பக்தியுடன் செபித்து வந்தார்கள். கத்தோலிக்கு உபதேசிமார் தங்கள் வீட்டுக்கு அடிக்கடி வந்து கொண்டிருந்தபடியால். போதகரும் அவர் மனைவியும் தைரியமும் ஆறுதலுங் கொண்டு அவர்கள் மட்டில் நன்றியறிந்த குணமுள்ளவர்களா யிருந்தார்கள். மூன்றும் நாள் காலையில் வழக்கப்படி ஜெபித்து தீர்த்தத்தை உள்ளுக்குச் செலுத்தி கண்ணில் பூசினபின், சிறுமி வாய் திறந்து "அம்மா! இன்று எனக்குச் சற்று சுகமாகக் காணப்படுகிறது" என்றாள்.

ரூத் —கன்னிமரியாயி கை விடமாட்டாள் கண்ணே! பயப்படாதே.

குழந்தை.—லூர்துமாதா தானே அம்மா?

ரூத் —ஆம், அந்தப் பரிசுத்த மாதாதான்.

குழ.—ஆம் அம்மா; இப்போது எனக்கு அவ்வளவு கஷ்டமில்லை. நோவுங் குறைந்திருக்கிறது. பசியு மெடுக்கிறது, ஏதாகிலுஞ் சாப்பிடக் கொடுப்பீர்களா அம்மா?

ரூத்தம்மாள் "ஆகட்டும்" என்று பழம், பால் முதலிய பத்திய உணவுகளைக் கொடுத்தாள். அன்று மத்தியான வேளையில் செபிக்கும் பொழுது, வியாதிக்காரி தன் தாயைக் கூப்பிட்டு "அம்மா கிட்டவந்து என் கண்ணைத்திறந்து பாருங்கள். தீர்த்தத்தை பூசின வுடனே கண்ணில் நமச்சலுண்டாகிறது!" என்றாள். அப்போது அவளுடைய தாய் குழந்தை கிட்டப்போய் கண்ணிரப்பைகளை மெதுவாய்த் தூக்கிப் பார்த்த பொழுது, அதிலிருந்து வடிந்த சீழைத் துடைத்தாள். அப்போது வியாதிக்காரி சந்தோஷத்துடன் "இத்தனை நாளாய் மூடியிருந்த கண்ணை யின்றைக்குத்தான் திறந்தேன்! உங்களையும் நாயினாவையும் பார்த்து எத்தனை நாளாய் விட்டதம்மா!" என்று சிரித்து "முன்னிருந்த உபத்திரவமும் வலியுமில்லை. இப்போது நன்றாயிருக்கிறது" என்றாள்.

அப்போதே ஈசாக் உபதேசியாரும் விஸ்வாச நாயகரும் வீட்டில் பிரவேசித்துக் குழந்தையின் சௌக்கியத்தைப்பற்றி விசாரிக்கும் பொழுது "ஐயமாரே! நீங்களிருவருந் திருதீர்த்தத்துடன் எங்கள் வீட்டில் பிரவேசித்தபடியால், கன்னிமரியாயின் உபகாரத்தாலும் உங்கள் பட்சமுள்ள வேண்டுதலாலும் குழந்தைக்கு இன்று மெத்த லகுவா யிருக்கிறதுடன் சிற்றுணவுகளைப் புசித்தாள். சாகுமட்டும் கண் தெரியாத கபோதியா யிருப்பாளென்று பயந்திருந்தோம். ஆனால் பதினைந்து நாளாய் மூடிக் கொண்டிருந்த கண்களை யின்றைக்குத்தான் திறந்தாள்" என்று ரூத்தம்மாள் சொல்லும்போது, வியாதிக்காரப்பிள்ளை விஸ்வாச நாயகரைச் சுட்டிக்காட்டி "இவராரம்மா?" என்றபோது: "இவர்க ளிருவருந்தானம்மா நமது உபகாரிகள். ஆபத் சகாயிகள். உனக்கு லூர்துமாதா தீர்த்தங் கொண்டுவந்து கொடுத்தது, இவர்கள் தான். கையெடுத்துக் கும்பிடு அவர்களை யம்மணி" என்கவே. சிறுமி கையிரண்டையுங் குவித்து ஸ்தோத்திரஞ் சொன்னாள். போதகருடைய வேண்டுகோளின் மீது விஸ்வாச நாயகர் செபத்தைச் சொல்லி முடித்து, சில நேரஞ் சம்பாஷித்த பின். ஈசாக் உபதேசியாருடன் வீட்டை விட்டுப் புறப்பட்டார்.

(இன்னும் வரும்.)

---

## CORRECT THINGS FOR CATHOLICS.

## கத்தோலிக்கு கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

(முன் தொடர்ச்சி)

### தபசுகாலம்.

---

1. தபசுகாலத்தில் விவாக முகூர்த்தங்கள், விருந்து விநோதங்கள், நாடக வேடிக்கைகள் முதலிய சந்தோஷ கொண்டாட்டங்கள் யாவையும் விலக்கி வைப்பது ஒழுங்கு.

2. கடந்த வருஷத்தில் பெற்ற குருத்தோலைகளையும், பழைய உத்தரியங்களையுஞ் சேர்த்து வைத்து விபூதித் திருநாளுக்கு முந்தி கோவிலாரிடம் கொடுப்பது. ஒழுங்கு.

3. விபூதித் திருநாளிலேயே நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து நன்மை வாங்கித் தபசுகாலத்தைத் துவக்குவது ஒழுங்கு.

4. கூடியமட்டும் நித்தம் பூசை காண்பது ஒழுங்கு.

5. கூடுமானமட்டும் தபசுகால ஒழுங்குகளை நிறைவேற்ற முயலுவது ஒழுங்கு.

6. புதன் வெள்ளிக்கிழமைகளிலும், பெரிய சனிக்கிழமையிலும் சுத்த போசனம் அநுசரிப்பது ஒழுங்கு. (சுத்த போசன நாட்கள் சில மேற்றிராசனங்களில் வித்தியாசப்படு மாகையால், கிறிஸ்துவர்கள் தங்கள் தங்கள் மேற்றிராசனத்தில் சுத்த போசனத்துக்காகக் குறிக்கப்பட்டிருக்கிற நாட்களை யறிந்து அநுசரிக்கவும்.)

7. ஞாயிற்றுக் கிழமைகளில் சுத்த போசனக் கடனும் ஒருபொழுது கடனுமில்லையென் றறிந்திருப்பது ஒழுங்கு.

8. திங்கள், செவ்வாய், வியாழன், சனி (பெரிய சனிக்கிழமை நீங்கலாக) ஆகிய இத்தினங்களில் ஒருவேளை மாத்திரம் முக்கிய சாப்பாட்டில் சுத்த போசனக் கடனில்லை யென்றறிந்திருப்பது ஒழுங்கு.

9. தபசுகாலத்தில் எந்த நாளிலும் ஞாயிற்றுக்கிழமைகளில் முதலாய் மாமிசம், மச்சம் அல்லது கருவாடு இவைகளைக் கலந்து ஓரே சாப்பாட்டில் சாப்பிடக் கூடாதென் றறிந்திருப்பது ஒழுங்கு.

10. புத்தி விவரம் அறிந்த பிள்ளைகள் அனைவரும் பெரியவர்களைப்போலவே சுத்த போசனம் அநுசரிக்கவேண்டுமென் றறிந்திருப்பது ஒழுங்கு.

11. 21 வயதிற்கு மேற்பட்டவர்கள் தபசு காலத்தின் எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் பெரிய சனிக்கிழமையிலும் ஒரு சந்தி யனுசரிக்க வேண்டுமென் றறிந்திருப்பது ஒழுங்கு.

12. ஒருபொழு திருக்கும்போது தலையை வாரி, முகத்தைக் கழுவி முகவாட்டங் காட்டாம லிருப்பது ஒழுங்கு.

13. சுத்த போசனம் வேறு, ஒருபொழுது வேறு என் றறிந்திருப்பது ஒழுங்கு. (சுத்த போசனம் மாமிசத்தை விலக்குவது, ஒருபொழுது ஒருவேளை சாப்பிடுவது.)

14. வருஷத்தின் ஒவ்வொரு வெள்ளியும் சுத்த போசன நாளே யன்றி ஒருபொழுது நாளல்லவென் றறிந்திருப்பது ஒழுங்கு.

15. வியாதியஸ்தர்களும், பலவீனமுள்ளவர்களும், கஷ்டவேலை செய்பவர்களும், கருப்ப ஸ்திரீகளும், பிள்ளைகளுக்குப் பால் கொடுப்பவர்களும், ஊர்பயணம் செய்பவர்களும் ஒருபொழுதிருக்கக் கடனில்லையென் றறிந்திருப்பது ஒழுங்கு.

16. வெள்ளிக் கிழமைகளில் சிலுவைப் பாதைக்குத் தப்பாமல் போவது ஒழுங்கு.

17. தபசுகாலத்தில் கூடியமட்டும் குடியை விலக்கிவைப்பது ஒழுங்கு.

18. தபசுகாலத்தில் தன் ஆத்தும காரியத்தைச் சிந்திப்பது ஒழுங்கு.

19. தபசுகாலத்தில் விசேஷ தர்மம் செய்வது ஒழுங்கு.

20. தபசுகாலத்தில் விலக்கப்பட்ட நாட்களில் மாமிசம் சாப்பிட வேண்டியவர்கள் குருவானவர் ஆலோசனைப்படி ஏதாவது நற்கிருத்தியம் செய்வது ஒழுங்கு.

21. சரீர ஒறுத்தலை விட ஆத்தும ஒறுத்தலே விசேஷமென் றறிந்து, கோள் குண்டணி, வீண் சம்பாஷணை, குடி, திருட்டு, வீண் சத்தியம், சண்டை சச்சரவு முதலியவைகளை விலக்குவது ஒழுங்கு.

22. தபமுறைகளை யநுசரிக்கக் கூடாமற்போனால் தன் ஆத்தும குருவிடம் உத்தரவு பெறவேண்டியதென் றறிந்திருப்பது ஒழுங்கு.

23. அர்ச்சியசிஷ்ட வாரத்தில் நடக்கும் சகல சடங்கு சாங்கியங்களுக்கும் போவது ஒழுங்கு.

24. அர்ச்சியசிஷ்ட வாரங்களை அநுசரிப்பதினால் அநேக பலன்களை யடையக் கூடுமென் றறிந்திருப்பது ஒழுங்கு.

25. விவேகத்துடனேயும், ஆத்தும பிரயோசனத் துடனேயும் இச் சாங்கியங்களை யனுசரிப்பதற்காக "அர்ச்சியசிஷ்ட வாரம்" என்னும் புஸ்தகம் ஒன்று வைத்திருப்பது ஒழுங்கு.

26. பெரிய வியாழக்கிழமை யன்று தேவநற்கருணை பீடத்திற்கு வர்த்தி, புஷ்பம் கொடுத்து உதவுவது ஒழுங்கு.

27. அன்று தேவநற்கருணை சந்திக்கும்போது இரண்டு முழங்காலிலுமிருந்து ஆராதிப்பது ஒழுங்கு. (தேவநற்கருணை பிரத்தியட்சமாய் ஸ்தாபகஞ் செய்யப்பட்டிருக்கும்போ தெல்லாம் இதுவே ஒழுங்கு.)

28. வண்டியில் சவாரி செய்துகொண்டு நாலா கோவில்களுக்கும் போய் தேவநற்கருணை சந்திக்கிறவர்களை விட நடந்து போய்ச் சந்திக்கி றவர்களுக்கு அதிக பலனுண்டென் றறிந்திருப்பது ஒழுங்கு.

29. பெரிய வியாழக்கிழமை தேவநற்கருணை உட்கொள்ளுவது ஒழுங்கு.

30. சரியாய் வாசிக்கத் தெரிந்தவர்கள் விசாரணைக் குருவானவர் உத்தரவின் பேரில் பெரிய வியாழக்கிழமை யன்று கோவிலில் பக்திக்குரிய செபத் தியானங்களை சப்தமாய் வாசிப்பது ஒழுங்கு.

31. இரவில் தேவநற்கருணை ஸ்தாபித்திருந்தால சந்திக்கப்போவது ஒழுங்கு.

32. பெரிய வெள்ளிக்கிழமை காலையில் பாடுபட்ட சுரூபத்தின் பாத முத்தி செய்யும்போது உண்டியில் போடும் காசு ஜெருசலேம் பட்டணத்திலுள்ள பரிசுத்த ஸ்தலங்களின் சம்ரட்சணைக்கு அனுப்பப்படுகின்றதென்று அறிந்திருப்பது ஒழுங்கு.

33. பெரிய வெள்ளிக்கிழமை பகல் 3 மணிக்கு கர்த்தர் பட்ட பாடுகளின் பேரில் தியானம் செய்வது ஒழுங்கு.

34. பெரிய சனிக்கிழமை புது நெருப்பு, புது தீர்த்தம் கொடுக்கும்போது ஒழுங்காய் முறைமுறையாகப் பெற்றுக் கொள்ளுவது ஒழுங்கு.

35. பாஸ்கு காலத்தில் தப்பாமல் பாஸ்குக் கட்டளையைத் தீர்ப்பது ஒழுங்கு.

36. உயிர்த்த ஞாயிறு அன்று மிதத்தோடு சந்தோஷம் கொண்டாடுவது ஒழுங்கு.

இன்னும் வரும்.

---



# THE LEGEND OF THE TREE OF MERCY.

## தயையின் விருட்ச சரித்திரம்.

ஆதாமுடைய அந்திய காலத்தில் அவர் தமக்கு மரணங்கிட்டி வந்ததை யுணர்ந்து, தன் குமாரனாகிய சேத்தை யழைத்து, "நீ ஏதன் தோட்டத்துக்குப் போய், அங்கு சீவிய விருட்சத்தைக் காவல் செய்துகொண்டிருக்கும் சம்மனசானவரைக் கண்டு, எனக்கு ஏற்கெனவே, வாக்குக் கொடுத்திருக்கிற 'தயையின் தைலத்தைக்' கேட்டு வாங்கிவா" என்று கட்டளையிட்டார். அதற்கு சேத், ஏதன் தோட்டத்துக்குப் போகும் வழி யெதுவென்று கேட்க; ஆதாம் "அதோ! கிழக்குப் பக்கமாய்த் தோன்றுகிறதே ஓர் கணவாய், அதன் வழியாய்ப்போ. அங்கே ஒரு பாதைக் காணப்படும். அந்தப் பாதையில் தான் நானும் உன் தாயாரும் நீ பிறவாமுன்னமே, நடந்து சென்றோம். எங்களுடைய அடிச்சுவடுகளையும் நீ அங்கே காணலாம். ஏனெனில், நாங்கள் மிதித்த விடத்தில் புல், பூண்டுகள் முளையவேயில்லை. அந்தப் பாதையே போனால் ஏதன் தோட்டத்திற் கொண்டுபோய் விடும்" என்று சொன்னார். இந்தப் பிரகாரம் சேத் நடந்து செல்ல அஷ்சி பாதை தென்பட்டது. அதைக் கிட்டி நெருங்கிய போது, அது அங்கு நின்ற தேவதூதன் கையிலேந்தி யிருக்கும் அக்கினிப் பட்டயத்தினின்று புறப்படுவதைக் கண்டு சேத் அந்த தேவதூதனை நெருங்கினவளவில் தேவதூதன் சேத்தை நோக்கி, "நீ எதைத் தேடி யிங்கு வந்தாய்" என, சேத், தகப்பன் மரணத்தறுவாயி லிருப்பதையும், அவர் அந்த பூலோக மோட்சத்தினின்று அப்புறப் படுத்தப்பட்ட தன் முன்னே அவருக்கு வாக்களிக்கப்பட்ட தயையின் தைலத்தை வாங்கி வரும்படி என்னை யனுப்பினாரென்றுஞ் சொன்னான். அதற்கு தேவதூதன் "ஐயாயிரத்து ஐந்நூறு வருஷங்கள் செல்லுமட்டும் அத்தைலம் அவருக்குக் கொடுக்கப்படமாட்டாது. ஆயினும் இதோ, சீவிய விருக்ஷத்தின் விதைகள் மூன்று இருக்கின்றன. இவைகளைக் கொண்டுபோய், உன் தந்தையின் நாவுக்கு அடியில் வைப்பாயாக. அது வைக்கப்பட்ட 3-நாளைக்கெல்லாம் அவர் இறந்து, பாதாளங்களிலே சென்று, இரண்டாவது ஆதாம் வந்து மீட்குமட்டும் அங்கே காத்திருப்பார்" என்றார். சேத் இந்த அற்புத கட்டளையின் பிர

காரம் தகப்பனிடஞ் சென்று, தேவதூதன் சொன்னவற்றையெல்லாம் அவருக்குச் சொல்லவே, ஆதாம் கேட்டு சத்தமாய் நகைத்து, (ஏதன் தோட்டத்தைவிட்டபிறகு அவர் சிரித்தது இதுவே முதல் விசையாகும்) "ஓ! கடவுளே நானிவ்வுலகில் நெடுநாள் போதுமானமட்டும் ஜீவித்தாயிற்று. இனி எனதாத்துமத்தை உம்மிடத்துக்கு அழைத்துக்கொள்ளும்" என்று வசனித்தார். தேவதூதனுடைய கட்டளைப்படியே அவர் கொடுத்த அந்த மூன்று விதையை, சேத் ஆதாம் நாவினடியில் வைக்க அவர் மூன்றாநாள் இறந்து போனார். அவர் சடலம் எபுரோன் கணவாயில் பூஸ்தாபகஞ் செய்யப்பட்டது. அதற்குபின் வந்த வசந்த காலத்தில், ஆதாம் புதைக்கப்பட்ட இடத்தினின்று பரமதிரித்துவத்தின் அடையாளமாக மூன்று சிறு செடிகள் முளைத்தன. இவை மூன்றும் ஒன்றாய்ச் சேர்ந்து காலவட்டத்தில் ஓர் பிரமாண்டமான மரமாய்ப்பரந்து வளர்ந்து, விஸ்தீரணமான இடத்தைக் கவர்ந்திருந்தது. இந்த விருட்சமே, எஜிப்திலிருந்து மோயீசனால் கொண்டு போகப்பட்ட இஸ்றாயேல் ஜனங்களுக்கு நிழல் தந்தது. இம்மரத்திலிருந்து ஒடித்த ஓர் கிளையைக் கொண்டே மோயீசன் மாராவின் கசப்பான ஜலத்தை மதுரமானதாக மாற்றினது. மேலும் கற்பாறையினின்று தண்ணீரூற்றைப் பிறப்பித்தது. தாவீதரசர் இளைப்பாறினதும் இந்த மரத்தடியிலேயே. ஆனால் அவர் குமாரனாகிய சாலோமோன் என்பவரால் கட்டப்பட்ட தேவாலயத்துக்கு உத்திரமாக உபயோகப்படுத்தும் பொருட்டு இம்மரம் வெட்டி வீழ்த்தப்பட்டது. இப்படி வெட்டியும் அம்மரம் அக்கட்டிடத்துக்கு உபயோகப்படுத்தக் கூடாமற்போனதால், அங்கே ஒரு ஒதுக்கிடத்தில் போட்டப்பட்டு கிடந்தது நெடுங்காலம் வரைக்கும். இதை ஓர் காலக்கியானியானவள் பார்த்து இம்மரம் பின்னொரு காலத்தில் யூதரின் அழிவுக்கு ஆயுதமாகும் என்று தீர்க்கதரிசனமா யுரைத்ததால், யூதரான சிலர் இந்தத் தீர்க்கதரிசனம் எங்கே நிறைவேறப்போகிறதோவெனப் பயந்து, அந்த மரத்தைக் கொண்டுபோய், ஓர் நீரோடையிற் போட்டு அமிழ்த்தி மக்கிமண்ணாகட்டுமென விட்டார்கள். ஆனால் அந்த மரமோ நீரில் அமிழ்ந்திப் போகாமல் மிதந்ததுமன்றி, பின்னோர் நாள் சாபா தேசத்தின் இராக்கினியானவள் சாலோமோன் ராசாவைச் சந்திக்க வந்தபோது, சேத்ரோன் என்னும் அருவியைக் கடக்க பாலமாய் நின்றது. அந்த இராக்கினி அப்பாலத்தைக் கடக்கையில், நமது ஆண்டவர் சிலுவையில் அறையுண்ட பாவனையான ஓர் காட்சியைக்கண்டாள். உடனே முழங்காலிட்டு தரையில் வீழ்ந்து ஆண்டவரை வணங்கியபின், தானிவ்வாறு வணக்கஞ் செய்ததை சாலோமோனுக்கு விளக்கிச் சொல்லி, இந்த பரிசுத்த மரத்தின்மீது தொங்கி மரிப்பவர் மெசையாவா யிருப்பாரென மொழிந்தாள். ஆனதினால் சாலொமோன் இம்மரத்துக்குப் பொன்கவசமிட்டு அந்தத்தாம் கட்டிய கோவில்வாசற்படியின் மேல்விட்டமாக உபயோகித்தார். அதை யவர் தேவாலய வாசற்படியின் விட்டமாக வைத்ததின் காரணமென்னவெனில், அதனுள் நுழைபவரெல்லோரும் அதைப்பார்த்து ஆசீர்வதிக்கட்டும் என்பதே. அது நெடுநாள் துர்மார்க்கனான அபியாவின் ஆளுகைக் காலமட்டும் அவ்விடத்திலேயே இருந்தது. இவன் அதன்மேல் கவசமிடப்பட்டிருந்த பொன்னைக் கவர்ந்துகொள்ள ஆசைப்பட்டு அதைப்பெயர்த்துத் தள்ளி, பொன் தகட்டை உரித்தெடுத்துக் கொண்டு, அதைப் பூமிக்குள் புதைத்துவிடக் கட்டளையிட்டான். இது நடந்த அநேக வருஷங்களுக்குப் பிறகு அம்மரம் புதைக்கப்பட்ட இடத்தருகே ஒரு கிணறுவெட்டப்பட்டு. நாளாவட்டத்தில் அது பெத்செய்டாவின் குட்டையென வழங்கலாயிற்று. கடைசியாக நமது கர்த்தர் பிடிபட்ட நாளையில் இக்குட்டையில் அம்மரம் மிதக்க, அதை யூதர் எடுத்து தாங்கள் கொலை செய்யப்போகிற பலியின் பயங்கர எத்தனமாகிய சிலுவையாக உபயோகித்தார்கள். இந்தத் திருச்சிலுவை மரமே கடைசியாய், தயையின் விருக்ஷமாய் விளங்கிற்று.

## CORRESPONDENCE.
## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்தரவாதி யல்லர். கடித மெழுதுவோர் தங்கள் கடிதங்களை மிகத் திருத்தமாயும், காகிதத்தின் ஒரே பக்கத்தில் இடது பாரிசத்தில் நாலுவிரற்கடை இடம் விட்டும் எழுதுவதுடன், தங்கள் பெயர் விலாசங்களையும் தெளிவாய் எழுதல் வேண்டும். பெயர், விலாசம் வெளிப்படுத்துவதற் கல்ல, கடிதத்தின் உண்மைச் சங்கதிகளைப் பத்திராதிபர் உறுதிப்படுத்திக் கொள்வதற்கே. வெளிப்படுத்துவதற்கு தகுதியற்றவென்று தள்ளிவிடப்பட்ட கடிதங்கள் திரும்பவும் வாபஸ் செய்யப்பட மாட்டா. ப—ர்]



### இனாம் புத்தகம்.

சங்கைக்குரிய "நல்லாயன்" பத்திராதிபரவர்கட்கு அன்பார்ந்த வந்தனம்.

தாங்கள் பெப்ரவரி மாதத்திய சஞ்சிகையுடன் அனுப்பின இனாம் புத்தகம் "நற்கருணைப் பேழைப்புறா" வந்து சேர்ந்தது. அதை வெகு நன்றி யறிதலுடன் பெற்றுக் கொண்டேன். இது விஷயத்தில் எனக் குண்டாகிய சில உணர்ச்சிகளை இங்கு வரையலானேன். இக் கடிதத்திற்கு தங்கள் பத்திரிகையின் ஓர் கோணத்தில் இடந் தருவீரென உமது மேலான கனத்தை மெத்தவும் வேண்டுகின்றேன். "நற்கருணைப் பேழைப்புறா" வின் கிரயம் 6 அணா வென்று அறிவிக்கப்பட் டிருக்கின்றது. "நல்லாயன்" சந்தா தபாற் செலவுடன் வருஷ மொன்றுக்கு 1 ரூபா 4 அணா. இத் தொகையில் 6 அணா கழித்துவிட்டால் மீதி 14 அணா தான் 1913-வது வருஷத்திய சந்தா வாகிறது. இவ்விதமாக ஏறக்குறைய 1000 சந்தாதாரர்களுக்கு அனுப்பிய புஸ்தகங்களால் தங்களுக்கு எவ்வளவு பண நஷ்டம்! ஒருபக்கத்தில் சந்தாதாரர்களுள் அநேகர் 1911 1912-வது வருஷங்களுடைய பாக்கி செலுத்தாம லிருப்பதாகவும், அச்சுக்கூடத்துக்கு புது எழுத்துக்களுக்காக பணம் வேண்டியதாகவும் தாங்கள் முறைப்பாடுகள் செய்திருக்க, இதை மறந்தாற்போல் இன்னொரு பக்கத்தில் ஷெ இனாம் புத்தக விஷயமாய் பெரு நஷ்டத்தை ஏற்றுக்கொண்டீர்கள். பிறர் ஆத்தும ஈடேற்ற விஷயத்தில் தங்களுக்குள்ள அவாவினாலன்றோ இங்ஙனஞ் செய்யலானீர்? தாங்களிவ்விதமாக எங்களுக்கு இலாபஞ் செய்தும் 300 பேர்வரையிலும் 1912வது வருஷத்திய சந்தா செலுத்தாத தோஷத்தால் 1913-வது வருஷம் பெப்ரவரி மாதப் பத்திரிகை நிறுத்தப்பட்டதென்று கேட்டு மெத்த வியசனமுற்றேன். பத்திரிகை நிறுத்தப்பட்டபோதிலும் பாக்கிதாரர்கள் தங்கள் கடனைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இதனையவர்கள் உணர்ந்து பாக்கியையும் இவ்வருஷ சந்தாவையும் அனுப்பி தங்களுக்கும் பத்திரிகைக்கும் நன்மை செய்வார்களெனக் கோருகிறேன்.

"நற்கருணைப்பேழைப்புறா" என்னும் ஷெ இனாம் புத்தகத்தை வாசித்துப் பார்த்ததில் அது இந்த தபசுகாலத்தில் மெத்த ஆத்தும பிரயோசனத்தைக் கொடுக்கத்தக்க அருமையான புத்தகமென்று தெரியவருகிறது. இந்த உத்தம புத்தகத்தை பிரதி நன்றி யொன்றும் பாராமல் எங்களுக்கு இலவசமாய்த் தந்ததற்காக, தேவரீருக்கு இன்னொரு முறை என்போராலும், இனாம் புத்தகம் கிடைக்கப்பெற்ற மற்ற சந்தாதாரருடைய பேராலும் மனப்பூர்வமாய் நன்றியறிந்த வந்தனஞ் செலுத்துகின்றேன். சர்வ ஜீவ தயாபரக் கடவுள் தங்களையும், தாங்கள் செலவு சிரமம் பாராது பிறர் ஆத்தும நன்மையைக் கருதி நடத்திவரும் நல்லாயன் பத்திரிகையையும் ஆசீர்வதிப்பாராக!

புது எழுத்துக்களுக்காக இன்னுஞ் சிறிது காலத்தில் என்னால் கூடிய உதவியை உங்களுக்கு அனுப்புவேன்.

பிராட்வே, சென்னை. | ஓர் அனுதாபி.
19—2—13.

### பத்திரிகையின் அவசியம்.

(இஃது சென்ற ஜனவரி௴ 13-ம் தேதி இச் சென்னையின்கண் கூடிய தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தின் வருஷாந்த பொதுக் கூட்டத்தில், தூத்துக்குடி வித்துவான் ம-ா-ா-ஸ்ரீ எம். பி. மஸ்கரேஞ்ஞ அவர்களால் செய்யப்பட்ட உபந்நியாசம்.)

மஹா மாட்சிமை தங்கிய மேற்றிராணி ஆண்டவரவர்களே!
சங்கைக் குரிய குருப்பிரசாதிகளே!!
அறிவிற் சிறந்த ஸ்திரி புமான்களே!!!

ஞானவான்களும் அறிஞர்களும் கூடியிருக்கிற இந்த சபையில் பத்திரிகையின் அவசியம், அதிலும் ஓர் கத்தோலிக்குப் பத்திரிகையின் அவசியம் என்பதைப் பேச வந்திருக்கிறேன். அன்னைய அவசியத்தைப்பற்றிப் பேச இதுவே மேலான காலமெனவும் நினைக்கின்றேன். ஏனெனில் "எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும் ஆன்ற பெருமை தரும்" என்பதற்கொப்ப இந்த நேரம் கனவான்கள் இத்தனை தூரம் சத்விஷயங்களைக் கேள்வியுற்று மிகவும் மகிழ்ச்சியோடிருக்கின்ற நேரமாதலின். நல்லது அப்படியாயின்,

"எவ்வது றைவ துலகம் உலகத்தோ டவ்வது றைவ தறிவு" என்பதைக் கொண்டு முதல் முதல் இக்காலத்தில் உலகம் எப்படி யிருக்கிறதென்று பார்க்கவேண்டும். பார்த்தால் உலகத்

தின் அந்தஸ்துக்கும் நமது நிலைமைக்கும் மத்தியில் இருக்கிற வித்தியாசம் சித்த பூர்வமாய்த் தெரியவரும். "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்பவாகலின் வளமுயர்ந்த ஜன சமூகங்கள் என்பதுதான் நான் சுட்டிப்பேசுகிற வுலகம். அத்தகைய ஜனசமூகங்களுடன் நமது கத்தோலிக்கு ஜனசமூகத்தை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்பதே இற்றைக்கு எனது வேண்டுகோள்.

முதன் முதல் அவ்வித ஒப்பிடுதலை இந்தச் சென்னப்பட்டணத்திலேயே தொடங்குவோம். இங்கு புரொடெஸ்டாண்டார் எப்படி யிருக்கிறார்கள்? இந்துக்கள் எப்படி யிருக்கிறார்கள்? கத்தோலிக்கராகிய நாம் எப்படி யிருக்கிறோம்? கனவான்களே! சற்று தயவு செய்து ஆழ்ந்து யோசித்துப் பார்க்கவேண்டும். மேலும், இந்துக்களும் மகம்மதியரும் அவரவர்களுக்குப் பிரத்தியேகமான சர்வ கலாசாலைகள் ஏற்படுத்திக்கொள்ள முற்பட்டு விட்டனர். கல்வி வளத்தில் நாம் எப்படி யிருக்கிறோம்? கல்வியை விர்த்திபண்ண நாம் என்ன செய்கிறோம்: 1910-1911-ஹூத்தில் 1300 B. A. பட்டம் பெற்றிருக்கிறார்கள். இதில் 1012 பேர் இந்துக்கள்; 173 பேர் மகம்மதியர்; 115 பேர் சுதேச கிறிஸ்துவர்கள் என்று கண்டிருக்கிறது. இந்த 115-ல் புரோடஸ்டாண்டாரைத் தள்ளிவிட்டால். நமது கத்தோலிக்கர் மாத்திரம் எவ்வளவு இருப்பார்களென்று நினைக்கிறீர்கள்? அந்தோ! வெகு சொற்பம்.

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு" என்பதைக் கொண்டு படித்த கல்வியைப் பக்குவப் படுத்த அறிவு உண்டாகும்; அறிவைப் பதமாக்க ஞானம் உதிக்கும்; ஞானத்தைத் தீட்ட, வேதப் பற்று உற்பத்தியாகும்; வேதப்பற்றைக் கொண்டாட வேத அநுசாரங்கள் அநுஷ்டானங்கள் பலப்படும். இன்னனைய பலமே நமது ஜன சமூகம் வேண்டுகின்ற பலம் என்பதை நம்மவருக்கு அடிக்கடி நாம் ஞாபகப் படுத்த வேண்டும். அப்படி ஞாபகப்படுத்துதல் நமது சொந்தப் பத்திரிகையாலாகும் கருமமேயொழிய வேறெவ்வாற்றாலும் முடியாதது. மேலும் "நீ அறிவில் முதிர்ந்தவனாக வேண்டுமானால் தேச சஞ்சாரம் செய்; அல்லது பத்திரிகைகளைப் படித்துவா" என்று பேக்கன் என்பவர் சொல்லுகிறார். நாமோ தேச சஞ்சாரம்பண்ண அவ்வளவு ஆஸ்தி மான்கள் அல்லவே. அப்படியாயின் நமது அறிவை விர்த்தி பண்ணிக்கொள்ளப் பத்திரிகை யல்லவா அவசியம்?

இவ்விஷயத்தில் "பெர்னார்து வான்" என்ற பெரிய குருவானவர் அபிப்பிராய மேதெனில் "எக்கருமமென்றாலும் சரி அதிதுரிதத்தில் பகிரங்கப் படுத்துவதற்கு அச்சுப் பிரசுரத்தைப் பார்க்கிலும் வேறொரு பொருள் இல்லை" யென்பதே. அச்சுப் பிரசுரத்தை யிட்டுப் பேசிய "வுட்லாக்" சுவாமிகள் "உலகத்தைப் பிரமிக்கச் செய்வதில் ஆடவர் குரலைவிட அரிவையர் குரல் மேம்பட்டது; அதிலும் அநேகமடங்கு பத்திரிகையின் குரலே மேம்பட்ட" தென்கிறார். "இப்பிரபஞ்சத்தில் வல்லமையுடைய தொன்றைச் சொல், என எவரேனும் என்னைக் கேட்டால் அது அச்சுப்பிரசுரமே யென்று சற்றுந் தாமதமில்லாமல் சொல்லி விடுவென்" என்று Mr. ஹில்லாரி பெல்லக் என்பவர் கூறி மேலே சொன்னதைச் சரியாய் உறுதிப் படுத்துகிறார். தவிரவும், தேசங்களில் ஜெருமானிய தேசம் எவ்வளத்தினும் முற்பட்டதாயிருக்க வேண்டியதற்குக் காரணம் ஆங்கிருக்கும் பத்திரிகை வளமேயொழிய வேறில்லை. அந்நாட்டில் ஏறக்குறைய 5500 பத்திரிகைகளும் அவற்றில் 900 தினசரி பத்திரிகைகளாகவு மிருக்கின்றன இன்னமும், அச்சுப் பிரசுரத்திற்கு ஆஸ்பதமாய் நிற்கும் சீன தேசத்தார் பத்திரிகாபயனை எந்த மட்டும் கொண்டாடுகிறார்களென்பதற்கு இற்றைக்குச் சற்றேறக்குறைய 1500 வருடங்களுக்குமுன் ஏற்பட்ட "கிங்பாவோ" என்ற வர்த்தமானப் பத்திரிகை இற்றைவரையும் நிலவிக் கொண்டிருக்கின்றது என்பதே ஆதாரமா யிருக்கிறது. பத்திரிகையின் பிரதானத்தைக் காட்டுவதற்கு கர்தினல் மெர்சீர் என்பவர் "தேவாலயம் கட்டாதே போனாலும் கவையில்லை; பத்திரிகை நடாத்து" எனச் சொல்லி யிருக்கிறார்.

அன்றியும், பத்திராதிபர்கள் எங்ஙனம் பாராட்டப்படுகிறார்கள் எனறு பார்த்தால், ஐரோப்பாவின் பயங்கரம் என்று பேர்வழங்கப் பெற்று வந்த நெப்போலியன் "நான் இவ்வுலகத்தில் ஒருவருக்கும் அஞ்சுகிறதில்லை; ஆனால் பத்திராதிபர்களுக்கோ வென்றால் நடுநடுங்கி கிடுகிடுங்க வேண்டி யிருக்கிற" தென்கிறார். லார்ட் மில்னர் என்கிற பெரிய படிப்பாளி, "மனிதன், ஒன்றில் பிரித்தானிய துரைத்தனத்தின் பிரதம மந்திரியாயிருத்தல் வேண்டும்; அல்லது ஒரு செல்வாக்குள்ள பத்திரிகைக்கு ஆசிரியரா யிருத்தல் வேண்டு" மெனச் சொல்லிப் பத்திராதிபரை வல்லமை பொருந்திய இராஜரீகத்தை நடாத்தும் ஓர் பிரதான அமைச்சருக்கு உவமைப்படுத்துகிறார். நமது ஞானத் தந்தையாகிய பத்தாம் பத்திநாதப் பாப்பாண்டவர் "நமக்கு முன் பாப்பாசனத்தி லிருந்தவர்களில் அநேகர் திருச்சபைச் சத்துருக்களை வெட்டி வீசும் வாளை ஆசீர் வதித்தார்கள்; ஆனால் நாமோ வென்றால் வேத விரோதிகளைத் தாக்கும் பத்திராதிபர்களின் எழுதுகோலை ஆசீர்வதிக்கிறோமென்று" மொழிந்திருக்கிறது மல்லாமல், "மேற்சொன்ன பத்திராதிபர்கள் செலவுக்காக எனது பூசைப் பாத்திரத்தையும் கூட, விற்றுக் கொடுப்பதில் பின்வாங்கமாட்டேன்" என்றும் சொல்லியதுண்டு. பார்த்தீர்களா கனவான்களே! பத்திராதிபர் மட்டில் உலகத்தாருக்கு ஏற்படுகிற அச்சமும் அவர்களுக்கு இருக்கிற வல்லமையும் அவர்களால் திருச்சபைக்குக் கிடைக்கக்கூடுமான உதவியும், அவர்களைப் பொது ஜனங்கள் காப்பாற்ற வேண்டிய கடமையும் எத்தன்மைத் தெனத் தெரியும்போது இவ்வனைத்தும் அவர்கள் நடாத்திவருகிற பத்திரிகையால் வரும் மேம்பாடென்பது கரதலாமலகமாக புலப்படுகிறதல்லவா?

பத்திரிகையின் மேன்மையை இத்தனை தூரம் சொல்லிக் கொண்டுவந்த நான் அதற்காதாரமாகிய அச்சு யந்திரவேலையில் மற்ற ஜன சமூகங்களைப் பார்க்கிலும் நமது கத்தோலிக்க ஜனசமூகத்திற்கு விசேஷ சுதந்தரமுண்டென்பதற்குக் காரணம் சொல்லாமல் போதல் உசிதமல்ல. அதாவது-இவ்விந்தியாவை நம் காருண்ய பிரித்தான்ய கவர்ண்மென்டார் கைக் கொள்வதற்கு வெகு முன்னாலேயே நமது ஜனசமூகத்தில் அச்சுயந்திர சாலையிலிருந்து வந்ததாகத் தெரிகிறது. துரைத்தனத்தார் கல்குத்தாவில் வில்லியம் கோட்டையைக் கட்டுவித்து 78வருடங்களுக்குப் பிற்பாடு, அதாவது 1778ம் வருடத்தில் அச்சுயந்திரசாலையைக் கொண்டு வந்தார்கள்; நம்முடைய சேசு சபைக் குருக்களோ வென்றால், போர்த்துக் கீஸ்காரர் கோவைப் பட்டணத்தைப் பிடித்த 46-ம் வருடத்தில் அதாவது 1556-ம் ஆண்டிலேயே அச்சுசாலையை யேற்படுத்தி வைத்ததற்கு ஆதாரம் இருக்கிறது. ஆகவே இவ்விந்திய நாட்டில் அச்சுப்பிரசுரத்திற்கு முதல் முதன் நமது ஜனசமூகமே உரிமை பெற்றிருக்கிறது.

அங்ஙனமாக, பூர்வ உரிமை பெற்றவராகிய நம்மை, நேற்று மழை இற்றைக்குப் பருத்தி போன்றதாகிய மற்ற ஜனசமூகங்கள் தங்கள் பத்திரிகைகளால் தாக்கியும், சரமாரியாய்ப் பேசியும் வாதம் நிகழ்த்திவர, நாமோ இவ் விஷயத்தில் இன்னமும் மௌனமாயிருத்தல் ஒரு சிறிதும் பொருந்தாது.

ஆகையால் கனவான்களே! நமது ஜன சமூகத்தில் எத்தனைக் கெத்தனை பத்திரிகைகள் மலிகிறதோ அத்தனைக் கத்தனை நமது முற்போக்குத் திடப்படும் என்பேன். காரிய மிப்படி யிருக்க இவ் வரும்பெருங் காரியத்தில் திவான் பகதூர் L. D. சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் போன்ற மகான்களுக்கு இன்னமும் எண்ணம் உதியா திருப்பதற்குக் கத்தோலிக்க மதாபிமானத்தில் நமக்கு இருந்துவரும் அசதியும் அசமந்தமுமே காரணமொழிய மற்றப்படி யல்ல. ம-௱-௱-ஸ்ரீ, திவான்பகதூர் அவர்கள் நமது சமூகத்திற்கு முதுகெலும்புபோல் நின்று உழைக்கிறார்கள். அவர்களுக்கு நாம் ஒரு பக்க பலமாயிருந்து உதவி செய்யவேண்டும். அதற்கெல்லாம் நமக்கோர் சொந்த பத்திரிகையின்றி சாலாது.

கனவான்களே, கல்வியிற் றேர்ந்த பெரியவர்கள் அமர்ந்த இந்த உத்தம சபையில் எனக்குப் பேசக் கிடைத்த நேரம் மிகவும் சொற்பமாதலால், இக்காரியத்தை யிட்டு இன்னமும் நெடுகப் பேசிக்கொண்டு போவதில் சபையானது ஓர்வித சிரமத்திற் குள்ளாகக் கூடுமென பயப்படுகிறேன். நானும் புதிதாய்ச் சொன்னது ஒன்றுமில்லை. இச்சென்னப்பட்டணத்திற்கு நான் புது மனுஷன் என்றாலும், மேற்சொன்ன ஆதாரங்கள் யாவும் உங்களுக்குப் பழையதே. பழைய காரியங்களைக் கொண்டே நமக்கோர் சொந்தப் பத்திரிகையின் அவசியத்தை சற்றேறக்குறைய எண்பித்திருக்கிறேன் இஃதோடு விஷயத்தையும் முடித்துக் கொள்ளுகிறேன்.

M. P. Mascarenhas.

---

"நல்யாத்திரிகன்" "பத்திரிகை நேயன்" இவர்கள் கடிதங்கள் அடுத்த மாதம் பிரசுரிக்கப்படும்.

கடித நேயர்கள் தங்கள் கடிதங்களை காகிதத்தின் ஒரே பக்கத்தில், இடது பக்கத்தில் நாலு விரற்கடை இடம் விட்டு எழுத வேண்டுமென்னும் நமது வேண்டுகோளை கவனிக்கிறார்களில்லை. இதனால் நமக்கு அதிக சிரமம் ஏற்படுகிறது. இதை யவர்கள் கவனிக்கக் கோருகிறோம். [ப-ர்.]

## GENERAL NEWS AND NOTES.

## பொது வர்த்தமானக் குறிப்புள்.

**4,16,456 சந்தாதாரர்கள்.**—இலண்டனில் பிரசுரமாகும் "டேய்லி கிரானிக்கில்" என்னும் தினவர்த்தமானப் பத்திரிகைக்குச் சந்தாதாரர்கள். நாலுலட்சத்து பதினாறாயிரத்து நானூற்று ஐம்பத்தாறு சந்தாதாரர்களாம்! இது வன்றோ பத்திரிகாபிமானமுள்ள ஊர்?

**திமிங்கிலத்தின் நிறை.**—ஓர் பெரிய திமிங்கிலத்தின் எடை சுமார் 700 யானைகள் பாரமிருக்கிறதென்று கணக்கிடப் பட்டிருக்கிறது. இதனால் ஷை திமிங்கிலத்தின் பருமன் எவ்வளவென்று யூகித்துக் கொள்ளலாமன்றோ?

**புத்தி சூட்சமமே பணம்.**—இங்கி தொடாமல் எழுதுகிற பௌன்டன் பேனாவை நூதனமாய் தன் புத்தி சூட்சமத்தால் முதல் முதல் கண்டு பிடித்துச் செய்தவருக்கு அதனால் 30 லட்சம் ரூபாய் இலாபம் கிடைத்ததாம்!

**ஓர் விநோதப் பிறவி.**-சமீபத்தில் வட ஆர்க்காடு ஜில்லாவைச் சேர்ந்த ஆம்பூரில் ஓர் எருமை இரண்டு முகங்களையுடைய ஒரு கடாக்கன்றை யீன்றதாம். ஒன்று எருமை முகமும் மற்றொன்று சிங்கமுகமுமா யிருந்ததாம்!

**சாயப் பூச்சிகள்.**—அமெரிக்காக் கண்டத்தைச் சார்ந்துள்ள சில தீவுகளிலும் மெக்ஸிகோவிலும் கள்ளிச் செடிகளில் சில சாயப் பூச்சிகள் தென்படுகின்றனவாம். இதை ஜனங்கள் கொன்று காயவைத்துப் பொடிபண்ணி தண்ணீரிற் கலந்து சிவப்பு சாய மெடுக்கின்றனராம்.

**கைதிகளுக்கு ஸங்கீதக் கச்சேரி.**—கைதிகள் அதிக சிரமப்படுவதால் ப்ரான்ஸிலுள்ள பெந்தல்வீல் என்ற சிறைச்சாலையில் பாடக் கூடியவர்களை ஒன்றுசேர்த்து ஒரு மணி நேரம் பாடும்படி செய்கிறார்கள். அதே மாதிரியாக ஜர்மெனி தேசத்திலும் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்.

**துருக்கி சீமாட்டியின் தேசாபிமானம்.**—பாரிஸில் வசிக்கும் ஒரு துருக்கிச் சீமாட்டி துருக்கி யுத்தத்துக்குப் பொருளுதவி செய்யக் கருதி, தனது ஆபரணங்களையெல்லாம் ஏலம் போட்டு விட்டாள். இவ்வாபரணங்களி லொன்றாகிய ஒரு ஹாரம் 48,200 பவுனுக்கு விலைபோயிற்று. அதாவது 7-லட்சத்து இருபத்துமூவாயிரம்ரூபாய்க்கு விலையாயிற்று. ஐதராபாக்கத்தில் சமீபத்தில் மகம்மதிய பெண்பாலார்கள் ஓர் கூட்டங் கூட்டி, துருக்கி யுத்தத்திற்கு எப்படி சகாயம் புரியலாமென யோசித்து ஒவ்வொருவரும், தாங்கள் தரித்துக்கொண் டிருந்த நகைகளில் விலை யுயர்ந்த தொன்றைக் கழற்றிக் கொடுப்ப தெனத் தீர்மானித்தார்களாம். அதன் பிரகாரம் சிறிது நேரத்திற்குள் ஓர் பெரிய நகைக்குவியல் குவிந்து விட்டதாம்.

**கொசுக்களின் தொந்தரவு.**—கொசுக்களினால் துன்பப்படுவோர் சாதாரணம். விசேஷமாய் ஜன நெருக்கமுள்ள பட்டணங்களில் அவைகளின் அநுபோகம் மிகுதி. இவைகளை நாசஞ்செய்ய வெகு சுலபமான வழியுண்டு. கொசு மிகுதியாயுள்ள அறையில் குப்பை செத்தைகளைப் போட்டுத் தீயிட்டு அதிற் கொஞ்சம் சாம்பிராணியைத் தூவிவிட்டால், அதிலிருந்து எழும்பும் புகையின் காரத்தைத் தாங்காமல் அவை மாண்டுபோம்; அல்லது கொடிக்கள்ளியின் ஒரு சிறு கிளையைக் கொணர்ந்து அறையின் மத்தியில் கட்டி விட்டால் கொசுக்கள் அக்கொடிக் குலையைச் சுற்றிச் சுற்றி வருமே யல்லாமல் கீழே யிறங்கமாட்டா. இப்படி இடையிறாது சிலநாள் செய்தல் வேண்டும்.

**சாப்பாட்டுடன் ஜலபானஞ் செய்வது ஆவசியகமா?**—சாப்பாட்டுடன் ஜலபானஞ் செய்யின் அஃது அஜீரணத்தை யுண்டு பண்ணுகின்றதென்று பலர் ஜலபானஞ் செய்வதேயில்லை. அவ்வாறு செய்வது தேகத்திற்குக் கெடுதியை விளைவிப்பதாமென்று "மாண்ட்ரீல் ஸ்டார்" கூறுகின்றது. ஒரு வைத்திய கலாசாலையில் இவ்விஷயமாக வைத்திய மாணவர்கள் பரீட்சிக்கப் பட்டனர். போசனத்துடன் இரண்டு டம்ளர் ஜலம் குடித்துவந்த மாணவர்கள் திடகாத்திர சுக சரீரிகளாக விருக்கக் காணப்பட்டனர். இவர்களுள் 8 பேர் போஜனத்துடன் ஜலபானஞ் செய்யாது ஒவ்வொரு சாப்பிட்டிற்கு மிடையிடையே தாகசமனஞ் செய்வதற்கு வேண்டும் ஜலம் பானஞ் செய்யுமாறு உத்தரவிடப்பட்டனர். வேறு 7 பேர் போஜனத்துடன் ஒரு புட்டி ஜலமும், ஒவ்வொரு சாப்பாட்டிற்கு மிடையே வேண்டிய அளவு ஜலமும் பானஞ் செய்யுமாறு உத்தரவு செய்யப்பட்டனர். முதல் 8 பேர்களுள் ஒருவர் நீங்கலாக 7 பேருக்குத் தேக நிறை குறைவுப்பட் டிருந்தது; மேலும் அவர்களுக்குத் தலைவலியும், மலபந்தமு முண்டாயின. இரண்டாவது 3 பேர்களுள், ஒருவர் தவிர 7 பேர் தேக நிறை மிகுதிபெற்றனர்; அவர்களுள் ஒருவருக்கும் மலபந்தனமும், அஜீரணமு முண்டாயினவென்று காணப்படவில்லை.

**யார் வைத்த கொள்ளி** யானால் தானென்ன? வீடு வெந்ததில் குறைச்சலில்லை. அமெரிக்காவில் வல்பரைசோ என்னு மூரிலுள்ள சர்வ கலாசாலைக் கட்டிடக் கோபுரம் சமீபத்தில் எரிந்து சாம்பலாய்ப் போனதற்குக் காரணம், சிட்டுக் குருவி யொன்று நெருப்போடு தெருவிலே கிடந்த பீடியொன்றைக் கவ்விப்போய் தன் கூட்டிலிருந்த வைக்கோலில் போட்டதேயாம். இரங்கூன் ப்ரோம் ரோட்டில் பட்டாளத்தார் வீட்டுக் குழந்தைகளொன்று தீக்குச்சி கிழித்து விளையாடினதில், ஓர் வைக்கோல் குவியலும், அதையடுத்த 44 வீடுகளும் வெந்து நீறாயினவாம். இதனால் ஒருலட்சம் ரூபாய் நஷ்டமென நம்பப்படுகிறது

**இந்து நாஷனல் பண்டும் அதன் தர்மமும்.**—பின் வருமாறு நாஷனல் பண்டிலிருந்து, சென்னை கைத்தொழில் வித்யாபிவிருத்தியை நாடி வெளியே செல்லும் மாணவர்களுக்கு உதவிச் சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது: இங்கிலாந்திற்குச் சென்று இஞ்சினீரிங்கு பரீட்சைக்குப் படிக்கும் மிஸ்டர். ஜி. வெங்கட்ராவுக்கு மாதம் ரூ. 60; மிஸ்டர் எம். வி. கிருஷ்ணாவிற்கு மாதம் ரூபா 50; பிரான்ஸுக்குப் படிக்கச் செல்லும் மிஸ்டர் எம். வி. கோபால கிருஷ்ணாவிற்கு ரூபா 60; தவிர பம்பாயில் படிக்கும் மிஸ்டர் டி. ராகவையாவுக்கு ரூபா 25; வைத்ய நாதன், நடராஜபிள்ளை, ஜகந்நாதம், கிருஷ்ணராவ் முதலியவர்களுக்கு ரூ. 15. இவ்விதமான உதவிசெய்வது பெரிய தர்மமன்றோ? இதுவும் தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தின் கருத்துக்களில் ஒன்றென அறிகிறோம். ஆயினும் கத்தோலிக்கர் அச்சங்கத்தைப் போதுமான படி ஆதரிக்காதபடியால், ஷை நன்மையொன்றும் செய்ய சக்தியற்ற நிலைமையிலிருக்கிறதென்று சொல்லப்படுகிறது.

**டில்லி சதிச்செயலும் தர்ம நிதியும்.**—வைஸிராய் அவர்கள் விபத்தினின்றும் தப்பி முதலில் பகிரங்கப் பிரவேச கோலமாய் வந்து காக்ஷி தந்ததன் ஞாபகார்த்தமாய், பற்பல தர்ம ஸ்தாபனங்கள் ஏற்படுத்த நிதிகள் சேர்ந்து வருகின்றன. இதற்கு பின் வரும் பட்டிப்படி நாளது தேதி வரையில் பணமுபகரிக்கப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| காஷ்மீர் மகாராஜா | ரூ, 10,000 |
| பிகானீர் மகாராஜா | 5000 |
| சம்பா ராஜா | 1000 |
| திவான் மங்கல்ஸென் | 1000 |
| ஸர்தார் பகதூர்கர்ஸல் ஸிங் | 500 |
| காப்டின்பீர் ஸிங் | 500 |
| சோடிசால் | 500 |
| நவாப்பாடே ஆலிகான் | 200 |
| மாலமாரம் | 60 |

**பெண் ராஜ்ஜியம்.**—அமெரிக்காவில் அன்னிய வெல்கெஸ்ட்ஸ் என்னுமிடத்தில் பெண் ராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. அங்குப் போலீஸ் படைக்குத் தலைவராயிருப்பவரும், ஜட்ஜியாக விருப்பவரும், மேயர் ஸ்தானம் வகித்திருப்பவரும் பெண்களேயாகும்.

**போலி அரிசி**—ஜப்பானில் ஒருவித அரிசி மக்காச்சோளத்தினின்று செய்யப்படுகிறது. இது சாதாரண அரிசியைவிட ருசியாயும் தேகத்திற்கு புஷ்டியைத் தரத்தக்கதாயும் விலை மலிவாயு மிருக்கிறதாம். இவ்விதம் அரிசி நம்மூர்களிலும் வந்துவிடுமானால் ஏழை ஜனங்களின் கஷ்டம் ஒருவாறு நீங்கலாகும்.

**வெடியால் நிலத்தை யுழுவது.**-தோட்ட நிலத்தை மண்வெட்டி முதலியவற்றால் கொத்திக் கொடுப்பதற்குப் பதிலாய் "டைனமிட்" என்னும் வெடிமருந்தை இரண்டடியாழத்தில் புதைத்துக் கொளுத்திவிட்டால், அது பூமிக்குள் வெடித்து செடிகளுக்குத் தீங்கு செய்யாமலே கெட்டியான பூமியைச் சிதறச் செய்து மெதுவாக்கி, செடிகளின் வேர் தாராளமாய் பரவும்படி செய்கிறதாம். இவ்வாறு மேனாட்டார் பரிட்சித்துப் பார்த்து அதன் பலனைக் கண்டு அதைக் கையாடி வருகிறார்கள். இது நம் நாட்டிலும் பரிட்சிக்கத் தக்கதே.

**சந்திரனில் எரிமலைகள்.**—நமது பூமியிற் காணப்படும் எரிமலைகளைப் போலவே சந்திரனிலும் எரிமலைகள் அநேகம் பரந்து நீண்டு, கொடிமுடிகளுடன் 6400 கெஜம் உயரமுடையவையாயிருக்கின்றனவென்றும், அவைகளைச் சுற்றி அநேக சமதரைகளுண்டென்றும் வான சாஸ்திரிகள் தூரதிருஷ்டி கண்ணாடியைக்கொண்டு யூகித்துச் சொல்லுகிறார்கள். சிலகாலத்துக்கு முன்னே சந்திரனில் நதிகளுண்டென யூகிக்கப்பட்டன. இப்போது அங்கே நீர்ப்படலங்களும் காற்றும் இருக்கிறதற்கு ஆதாரமில்லையெனச் சொல்லப்படுகிறது.

---

## NEWS OF THE MONTH.
## மாச வர்த்தமானம்.

---

**ஆனரபில் திவான் பஹதூர் எல். டி. சுவாமிக்கண்ணுப்பிள்ளை.**—நாம் ஏற்கெனவே அறிவித்திருக்கிறபடி, சென்னைச் சட்ட நிரூபண சபை மெம்பருள் ஒருவராய் நியமனம் பெற்ற இந்தக் கனவான் சென்ற மாதம் 18-ம் தேதி கூடின ஷை சபைக் கூட்டத்தில், சட்டப்படி இராஜாங்கத்துக்கு ஐக்கிய சத்தியவாக்குக் கொடுத்த பின், தமது ஸ்தானத்தில் அமர்ந்தார்.

**சத்தியந் தழைக்கும்**-ஜப்பானிய பிரபுவும் ஸ்பெயின் தேச அந்நிய நாட்டு மந்திரியுமாகிய பாரன் மோன்டேனோ என்பவரின் புத்திர ரத்னம், ஜப்பானின் தலைநகராகிய டோக்கியோவில் ஞானஸ்நானம் பெற்றுப் புது நன்மையும் வாங்கினாராம். இச்செய்தி நம்மவர்க்கு பேரானந்தத்தைத் தருவதோடு சற்பிரசாத நாதரை அவமதித்து சத்திய சமயத்தை இகழ்ந்து திரியு மறிவிலிகட்கு நல்லறிவைப் புகட்டாது விடாது.

**ஜப்பான் சக்ரவர்த்தி.**—தற்காலத்தில் கிறிஸ்துவ நாடாகிய ஐரோப்பா கண்டத்தின் சில தேசங்கள் நமது சத்தியமறைக்குப் பலவித இடுக்கண் புரிந்து பெரும் புரளிக்காரரால் தடுமாறிக் கிடக்க, ஜப்பான் தேசமானது நமது உன்னத திருச்சபைக்குப் பலவித சகாய உதவி ஒத்தாசைகளைச் செய்துகொண்டு வருவதோடு, ஜப்பான் சக்கரவர்த்தி யவர்களை நமது பரிசுத்த பாப்பாண்டவரை அடுத்த மே மாசத்தில் நேரில் காண்பாரென்பது நம்மெல்லோருக்கும் பெரிய சந்தோஷத்தை உண்டாக்கக் கூடியதே. வலைஞ்ஞரைக் கொண்டு இவ்வுத்தம சத்திய திருச்சபையை ஓங்கி வளரும்படிச் செய்த நமது தெய்வநாதனின் திருவுளத்தை யார் அறிவார்!

**டில்லி சதிச்செயல்.**-டில்லியில் வைசிராய் அவர்கள் உயிரைப்பறிக்க வெடிகுண்டெறிந்த சதிகாரன் யார் என்று இன்னும் கண்டு பிடிக்கக் கூடுமாயில்லை. இராஜ விசுவாச முள்ளோர் அனைவரும், போலீசாரும் இவனைக் கண்டுபிடிக்க எவ்வளவோ பிரயத்தனங்கள் செய்து வருகிறார்கள். நமது வைசியராய் டில்லியிலிருந்து, டேராடுன்னுக்குக் கொண்டு போகப்பட்டு, அங்கே வெகு திறமையுடன் சிகிச்சை செய்யப்பட, அவர் படிப்படியாய் சௌக்கியமடைந்து வந்து இப்போது ஏறக்குறைய முற்றுமே சௌக்கியமடைந்து விட்டார் என்றும், இவ்வருஷ கோடையில் ஸிம்லாவில் தங்கியிருப்பாரென்றும் தெரியவருகிறது. மகா பொறுமையும் சாந்தமுமுள்ள இந்த நல்ல பிரபுவுக்கு கடவுள் தீர்க்காயுளைக் கட்டளையிடுவாராக!

**பால்கன் துருக்கி யுத்தம்.**-நாம் சென்ற சஞ்சிகையில் அறிவித்தது போலவே இந்த யுத்தம் மறுபடியும் ஆரம்பமாகி மும்முரமாய் நடந்து வருகிறது. துருக்கியர் வெகு ஆவேசத்துடன் சண்டைபுரிகிறார்கள் அடிரியாநோப்பிளின் முற்றுகை இன்னும் நீங்கவில்லை. ஸ்குட்டாரியிலும் இன்னு மற்ற விடங்களிலும் சண்டை நடந்துகொண்டு வருகிறது. இச்சண்டைகளைப்பற்றி இருதிறத்தாராலும் சொல்லப்படும் சங்கதிகள் ஒன்றுக்கொன்று முழுதும் பேதப்படுவதால், இதுதான் மெய்யென்று சொல்வதற்கிடமில்லை. துருக்கியருக்கு ஆசியாவிலிருந்து சேனைகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆனால் அவர்கள் செலவுக்குப் பணமில்லாமல் மெத்தவும் தயங்குகிறார்கள். இருதிறத்தாரும் சமாதானத்தைக் கோருவதாகத் தெரிகிறது. வல்லரசுக்களின் மத்தியஸ்தை மறுபடியும் கோரியிருக்கிறார்கள். இன்னும் ஒன்றும் முடிவாய்த் தீர்மானிக்கப்படவில்லை. சண்டைகள் நடந்து கொண்டேயிருக்கின்றன.

**இந்தியன் சாண்டோ.**— இந்துக்களுடைய பாரதக் கதையில் மிக்க பராக்கிரமசாலியான பீமனைப்பற்றிக் கேட்டும் வாசித்துமிருக்கிறோம். ஆயினும், கலைவல்லோர்களுடைய யுக்தி அனுபவங்களுக்கு விரோதமும் தகாததுமான பல விஷயங்களை யவனுக்கேற்றி, வரம்பில்லா தெழுதப்பட்டிருப்பதால், அவைகளை முற்றிலும் நம்பக் கூடாமையாய் இருக்கின்றது. தற்கால பீமனாகிய இண்டியன் சாண்டோவைப்பற்றி எல்லோருமறிந்திருப்பார். அவர் ஐதாரப்பாத் அரசரைக் கண்டு தம் சாமர்த்தியங்களைக் காட்டியதில் ஷை யரசர் மகிழ்ந்து 10,000 ரூபாய் பெறுமான நகை முதலியவைகளை வெகுமானமாகக் கொடுத்தாராம். இது நம் இந்திய ஜனசமூகத்திற்கோர் நற்கியாதியாம்.

**தேவாலயத்தில் தற்கொலை**—கடந்த 13-ந் தேதி மலையாளத்தைச் சேர்ந்த முத்தன்சேரி கோவிலில் ஒரு கிறிஸ்துவன் நுழைந்து, காலரி வழியாய் உத்தரத்தில் தாவியேறி, அதன் மேல் நிறுத்தப்பட்டிருந்த தூணில் ஏறி உச்சியில் போனதும், கை கால்களை விட்டுக் கீழே விழுந்து மண்டை உடைந்து இறந்தானாம். இதற்கு ஒரு மாசத்திற்கு முன் அவ்விடத்திய குருவானவரைக் கண்டு தான் சாக இருப்பதாகவும் தனக்குக் கடைசித் தேவத்திரவியாநுமானங்களை நிறைவேற்ற வேண்டியதாவும் அவன் கேட்க, அதற்கவர், அவன் சுகநிலமை யுள்ளவனாயினும் தான் சாகப்போகிறதாக சொன்னபடியால், அவனைப் பைத்தியம் பிடித்தவனென்றெண்ணிச் சும்மா இருந்துவிட்டாரெனத் தெரியவருகிறது. ஆகவே, கோவிலில் கொலை நடந்ததும் ஷை கோவிலை மறுபடியும் அபிஷேகம் செய்ய நேர்ந்ததும் மிக்க விசனகரமானதே. இதுவே மலையாள தேசத்தில் கத்தோலிக்குக் கோவிலில் நடந்த முதல் தற்கொலை.

**தக்ஷிண துருவப்படை.**-தக்ஷிண துருவத்தைக் கண்டுபிடிக்க காப்டன் ஸ்காட் அவர்கள் சில நண்பர்களுடன் போய் அநேக சங்கடங்களுக்குட்பட்டு, அதை யூடறுத்துச் சென்று, பல புது இடங்களைக் கண்டுபிடித்தபின் அநியாயமாய்ச் செத்தார்கள். அவர் மரணத்துக்குக் காரணம், உணவுப்பொருள் குறைவும், குளிரும், பலஹீனமுமே என்று தெரியவருகிறது. இவ்வாறு தன் உயிரையே லட்சியஞ் செய்யாமல் தேச நன்மையைக் கருதி உயிரிழந்த இந்த மகோபகாரியின் மரணம் மிகவும் விசனத்துக் குரியதே. இவர் இந்தப் பிரயாணம் புறப்பட்டது முதல், தமக்கு வழியில் நேரும் விஷயங்களை யெல்லாம் குறித்துவைத்து அப்போதைக்கப்போது அவைகளையெல்லாம் கடித மூலமாய் தம் நேசருக்கு எழுதிக்கொண்டே வந்தார். அவர் கடைசியாய் எழுதிவைத்தது மிகவும் பரிதாபத்துக் குரியது. அது பின்வருவாறு: "எங்களுக்கு மெத்த இளைப்பாயிருக்கிறது. கடிதம் எழுதவுங் கூடவில்லை. ஆயினும் இப்பேர்ப்பட்ட ஆபத்தான பிரயாணத்தை கையேற்றுக் கொண்டதற்காக நான் விசனப்படவில்லை. கடந்த காலத்திற் போலவே இக்காலத்திலும், அங்கிலேயர் பொது நன்மைக்காக எந்த கஷ்ட நஷ்டங்களையும் பாராமல், மகா தைரியத்துடன் மரணத்தை யேற்றுக் கொள்ளுகிறார்களென்று உலகமறியட்டும். இப்பிரயாணம் ஆபத்துள்ளதென்று தெரிந்தே அதை யேற்றுக் கொண்டோம். என்றாலும், காரியங்கள் எங்களுக்கு விரோதமாய் முடிந்தன. பரவாயில்லை. நாங்கள் இதைப்பற்றி முறைப்படவில்லை. கடவுள் திருச் சித்தத்துக்கு முழுமனதுடன் கீழ்ப்படிகிறோம். ஆயினும் கடைசிவரையில் எங்களால் கூடியதைச் செய்ய தீர்மானித்திருக்கிறோம். நாங்கள் இப்படித் தீர்மானித்தது நமது தேச கௌரவத்தைக் கருதியே யாதலால், இந்தத் தீர்மானத்தில் நாங்கள் உயிரிழக்கும்படி நேர்ந்தால், எங்களை நாடியிருந்த எங்கள் பெண்சாதி பிள்ளைகளை எங்கள் தேசத்தார் சரியாய்க் காப்பாற்றுவாரென்று அவர்களுக்கு மனு செய்து கொள்ளுகிறோம். நாங்கள் இவ்வாபத்துக்குத் தப்பிப் பிழைத்து தேசந் திரும்புவோமானால் என்னுடனிருக்கும் நண்பர்கள் பட்டபாடுகளையும், கஷ்டங்களையும், காண்பித்த பொறுமை தைரியத்தையும் சவிஸ்தாரமாய்ச் சொல்லுவேன். இவைகள் அங்கிலேயருக்கு மனக்கிளர்ச்சியை யுண்டுபண்ணும். திரும்பாத பட்சத்தில் எங்களுடைய தினசரிக் குறிப்பும், எங்களுடைய பிரேதங்களுமே இனி யுங்களுக்கு எங்கள் விருத்தாந்தத்தைச் சொல்லும். ஆயினும், நம்முடையதைப் போன்ற ஓர் பெரிய பணக்காரர் தேசமானது எங்களுடைய குடும்ப சம்ரட்சணையைப்பற்றிக் கவனிக்குமென்று நம்புகிறோம்.

R. Scott.
25th. March 1912.

---

# DOMESTIC OCCURRENCES.
## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.
### விசேஷக் குறிப்பு.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பாம் ஒன்றுக்கு 8-அணு முன்பணம் அனுப்பினாலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட மாட்டா வென்பதை நண்பர்கள் கவனிக்கக் கோருகிறேம். அரைக் கலத்துக்கு மேற்பட்டு முக்கால் கலத்துக்கு உட்பட்டால் முக்கால் ரூபாயாகும். முழுக்கலத்துக்கு ஒரு ரூபாயாகும். கால் ரூபாய்க்கு இவ்விளம்பரங்கள் ஒருபோதும் பிரசுரிக்கப்பட மாட்டா.

## நன்மரண அறிக்கைகள்.

பரதராஜவம்ச யிளஞ் சிங்கமாகிய

### ம-ள-ள-ஸ்ரீ, B. சவியேர்தவத்த வாஸ், அவர்களின் மரணம்.

எந்நாட்டிலுஞ் சிறந்து தபோமகிமையில் பேர் பெற்ற பாண்டிய நாட்டின் நன்னாடாகிய திருமந்திர நகரின்கண், 'நெய்தற்கோன்' வம்சத்திலுதித்து, இளமையிலே தாய் தகப்பனாரிருபேரையுமிழந்து, சந்தமரிதஸ் நேவிஸ் அன்னையடியை யணுவளவும் மறவாத இரு தாய்மாமன்மார்களால் வளர்க்கப்பட்டு, இலங்கையில் பேர் பெற்ற காலி நகரின்கண் பெல்ஜியம் சேசுசபை குருக்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலா சாலையில் உயர்ந்த கல்வி கற்றுத்தேர்ந்து; பழைய நூல்களை ஆராய்ச்சி செய்து, அருமையான நீண்ட வியாசங்களை அங்கிலேயப்பத்திரிகைகளுக் கெழுதி பாதவாசக சாலை மெம்பராகி, அச்சங்கப் பிரசங்கியுமாகத் தோன்றி, திரிகோணமலை அசிஸ்டெண்ட் பாரஸ்ற்று மாஸ்டராக கொஞ்சகாலம் திறமையுடன் வேலைபார்த்து, போதுமான லீவின்பேரில் மதுராஸ், பாம்பை, கல்கட்டா முதலிய விடங்களுக்குச் சென்று, சுயநலங் கருதாதப்டி பொது நலப்பிரியராய் ஜாதிஐக்கியப் பிரசங்கஞ்செய்து. அநேக பெரிய மனுஷாள் சிநேகங்கொண்டு சொந்த பூமியாகிய மந்திர நகருக்குத் திரும்பி வாழ்ந்து வருங் காலத்தில், தனக்குண்டான வயிற்றுக் கட்டியினால் மெத்த அவஸ்தைப்பட்டு தேவத்திரவிய அநுமானங்கள் குறைவின்றிப் பெற்று, பால்ய வயதில் பந்து மித்திரர் சகலரையும் பரதவிக்க விட்டு, அமலனடியை யுன்னி, சென்ற மாதம் 28-ந்தேதி பரலோகப் பிராப்தி யானார்.

இதைக் கண்ணுறும் நேயர்கள் அவரது ஆன்மாவுக்காக ஒரு பர-பிரி-திரி. வேண்டிக் கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

S. V. M.

10-2-13. சென்னை.

### பழைய காயல்.

திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த பழையகாயலில் என்து பிரியமுள்ள பேத்தியார் மரிய சேசுவடியாள் பெற்றுந்தீசாள் 85-ம் பிராயமாகிய நிகழும் 1913-ம் வருஷம் ஜனவரிமாதம் 13-ம் திகதி காலை 9-மணிக்கு இக்கண்ணீர் கணவாயையும், தமது இரு புத்திரிகளையும், அநேகம் பேரப்பிள்ளைகளையும், பேத்திமார்களையும், ஏனைய பந்து மித்திரரையும் விட்டுக் கடைசித் தேவத்திரவிய அநுமானங்களைச் சரிவரப் பெற்று, விருத்தாப்பியத்திலேயே பரலோக பதவி அடைந்தனர். இவரது பிரேத சேமச் சடங்கு மறுநாள் காலை 9-மணிக்கு மிகவும் பத்திக்குரிய விதமாய் கர்மேல் சபையார் சபை உடையுடனும் கொடியுடனும் வரிசைக் கிரமமாய்ச் செல்ல, இவ்வூர் கட்டளைக் குருவாகிய, சங். மரிய அதிசய நாதர் சுவாமிகளால் நிறைவேற்றப்பெற்றது. இதைக் கண்ணுறுங் கத்தோலிக்க நேயர்களனைவரும் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக. 1-பா 1-பிரி 1-திரி வேண்டிக்கொள்ள மன்றாடுகிறேன்.

பழையகாயல், 3-2-1913. } இங்ஙனம் சிலுவை பூரணப் பேர்னந்து.

### பூனா.

சென்ற 1911 வருடம் ஆகஸ்டு மாதம் 29-ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று இரவு $9\frac{1}{2}$ மணிக்கு என் செல்வக் குமாரன் ஊர்து புஷ்பநாதன் சத்தாராவில் பிறந்து, நடக்கும் 1913 வருஷம் ஜனவரிவரிமாதம் 21-ம் திகதி இரவு செவ்வாய்க்கிழமை $1\frac{1}{2}$ மணிக்கு, மேல் குறித்த பூனாவில் பரமபதம் சேர்ந்தான். இதை வாசிக்கும் நண்பர்கள் திரியேக சர்வேசுரனுக்குத் தோத்திரமாக ஒரு பா. ஒரு பிரி. ஒரு திரி. வேண்டிக்கொள்ள வெகுவாய்க் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
பிரான்சீஸ் ஜோசப்,
பென்ஷன் நாயக்
80-வது பட்டாளம், பூனா.

---




# நல்ல ஆயன்.

April—1913.

புத்தகம் 11. } "நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுடுகளும் நமக் குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10:16-14.) { நேம்பர். 4.


# THE JUSTICE OF St. JOSEPH.
## அர்ச். சூசையப்பரின் உத்தம தனம்.

உலகத்தை மீட்டிரட்சிக்க மானுடனாயவதரித்த திவ்யகர்த்தரின் கைத்தாதையாகிய அர்ச். சூசையப்பரின் திருநாள்கொண்டாட்டத்துக்காகக் குறிக்கப்பட்ட நாள் மார்ச்சுமீ 19-ந் தேதி ஆயினும், அது இவ்வருஷம் நாளதுமீ 2-ந் தேதி கொண்டாடப்படும். ஷை 19-ந் தேதி அர்ச்சியசிஷ்டவாரத்தில் வர நேரிட்டதே இம் மாற்றத்துக்குக் காரணம். பக்தியுள்ள கிறிஸ்துவர்கள் எல்லோரும் இந்நாளை ஒரு பெருநாளாகக் கொண்டாடுவார்களென்பது பரிஷ்காரம். அமலோற்பவியாய்ப் பிறந்த அர்ச். கன்னிமரியாயின் பிரிய பத்தாவும், குழந்தை யேசுநாதரின் தந்தையாக பாவிக்கப்பட்டவருமான இவரை யார்தான் ஏற்றிப் போற்றித் துதியார்? யார்தான் இவருடைய வல்லபமுள்ள சனுசையும் அடைக்கலத்தையும் நாடார்? இவரை இவ்வளவு உன்னத அந்தஸ்துக் குயர்த்த் சர்வேசுரன் திருவுளங் கனிந்ததின் காரணம் இவரிடத்தில் விளங்கின உத்தம தனமே அல்லது பரிசுத்தத்தனமே யாகும். "சேசுக்கிறிஸ்துநாதரை பராமரித்து வர அர்ச். சூசையப்பரை சர்வேசுரன் தமக்குப் பதிலாய் தெரிந்துகொண்டாரென்பதை அறிவதே அவருடைய உத்தமதனத்தை நாம் ஒருவாறுய்க் கண்டுபிடிக்கப் போதுமானது" என்கிறார் அர்ச். அல்பொன்சுஸ். அர்ச். சூசையப்பர் உத்தமசீலன், சிறந்த புண்யவாளனென்று இன்னும் தெளிவுபடும்படி நமக்குத் தெரிவிக்க, வேதபுத்தகத்திற் சொல்லப்பட்டிருப்பதென்ன? இவர் "நீதிமான்" என்பதே. இதை அர்ச். கிறிசோலொகுஸ் இராயப்பர் வியாக்கியானித்து சொல்லி யிருப்பதாவது: "அர்ச். சூசையப்பர் ஒவ்வொரு புண்யத்திலும் பரிபக்குவமுற்று நிறைந்து நின்றவரானதைப் பற்றியே அவர் நீதிமானாக விளங்கினார்" என்பதேயாம். அர்ச். சூசையப்பர் இவ்வளவு பரிசுத்த வாளனாக சிறந்து விளங்கினதெப்படி? அவர் எல்லா விஷயத்திலும் மனப்பூரணமாய் தெய்வச் சித்தத்தை சிரமேற் கொண்டு சகலத்தையும் நிறைவேற்றி வந்ததே இதற்குக் காரணமாகும்.

மட்டில்லாத உத்தமர் சர்வேசுரன். அவர் நன்மையை நாடி நன்மையையே செய்யும் சுபாவம் பூண்டவர். எட்டுணையும் தீமையை நாடாமல் அதைப் பகைத்துப் பழிவாங்குங் குணமுடையவர். ஆகையால், பாவத்தை விலக்கிப் புண்யத்தைக் கடைப்பிடிப்பவனே தெய்வ சித்தத்தை நிறைவேற்றி நீதிமானாக விளங்குவானென்பது தெளியக்கிடக்கின்றது. அர்ச். சூசையப்பர் தெய்வ சித்தத்தை நிறைவேற்றும் விஷயத்தில்சற்றும் பின்னிடைந்தவர் அல்லவென்று சொல்ல யாதேனும் ஆடங்க முண்டோ? பரிச்சேதமுமில்லை. தம் சீவியகாலமெல்லாம் தெய்வ சித்தத்துக்கு அமைந்து நடப்பதே அவருடைய பிரதான நோக்கமாயிருந்தது. இதற்கு வேத புத்தகமே அத்தாட்சி.

இவருடைய இந்த திருநாளின் சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருப்பதுபோல தமக்கு விவாகபந்தனமாக்கப்பட்டிருந்த கன்னிமரியாயி கருப்பிணியா யிருப்பதை இவர் கண்டபோது இவருக்குத் திக்பிரமை

யுண்டாயிற்று. சுதனவர் அப்பரிசுத்த கன்னிகையிடத்தில் மனிதாவதாரமெடுத்த பரம இரகசியத்தை சர்வேசுரனும் அவருக்கு அறிவித்தவரல்லர். அர்ச். கன்னிமரியாயும் தாம் இஸ்பிரீத்து சாந்துவினால் கருப்பந் தரித்ததாக தெரிவித்தவளுமல்ல. அப்படி தெரிவித்தால் தன்னுடைய ஆழ்ந்த தாட்சிக்குப் பங்கமுண்டாகுமென்றெண்ணி இவள் சும்மா இருந்துவிட்டாள். அர்ச். சூசையப்பருக்கு இதனால் வெகு கலக்கமும் குழப்பமுமுண்டாயின. அர்ச். கன்னிமரியாயி குற்றமுள்ளவளென்று அபிப்பிராயப்பட இவருக்கு இடமில்லை. ஏனெனில் தம்முடைய பிரிய பத்தினியான இவள் மகா பரிசுத்தவதியென்றும், தெய்வ பயமுள்ளவளென்றும், இல்லறவாழ்க்கையில் முதலாய் கன்னிகையாயிருந்து தன் கற்பைக்காக்கத் தீர்மானித்தே தம்முடன் பாணிக்கிரகணஞ் செய்துகொண்டாளென்றும் இவருக்கு மனப்பூரணமாய்த்தெரியும். ஆயினும் யாராகிலும் பலவந்தப்படுத்தி அவளுடையமனசுக்கு விரோதமாய் அவளை மோசஞ் செய்தார்களோவென்னும் சந்தேகம் ஒருக்கால் அவர் உள்ளத்தில் உதித்திருக்கலாம். ஆயினும் இவ்விஷயத்தில் அவர் செய்ததென்ன? இதைப்பற்றி தன் பத்தினியினிடத்தில் ஏதாவது விசாரித்தாரோ? பரிச்சேதமுமில்லை. அப்படிச்செய்து அவளுக்கு மனவருத்தம் வருத்துவிக்க சம்மதித்தாரில்லை. யாரிடத்திலாகிலும் இதைப்பற்றி ஆலோசனைக் கேட்டாரோ? அதுவுஞ் செய்யத் துணிந்தவரல்ல. ஏனெனில், அதனால் அவள்பேருக்கு ஆவலாதி உண்டாகுமென்றறிவார். ஆனால் அவளுடன் கூடி வாழ உடன்பட்டாரோ? இல்லை. தன் கணவனை யறியாமல் கருப்பிணியாயிருக்கும் ஒரு ஸ்திரீயை வேதக் கட்டளைப்படி விலக்கிவிடவும் சபைக்குக் காட்டிக்கொடுக்கவும் கடமைப்பட்டிருந்தபடியால், இதற்கும் சம்மதித்தவரல்ல. ஆகையால், அவர் என்ன செய்தார்? என்னவாயிருந்தபோதிலும் தாம் தெய்வச் சித்தத்துக்கு விரோதஞ் செய்யவாகாதென்றெண்ணி, தம்முடைய பத்தினியை தாய்வீட்டுக்கனுப்பிவிட்டு, தாம் பரதேசம் போக நினைவாயிருந்தார். தாம் ஆலோசித்திருந்தபடி செய்ய சர்வேசுரன் இவரை விட்டவரல்ல. தேவதூதன் அவருக்குச் சொப்பனத்தில் தரிசனையாகி, "தாவீதின் குமாரனாகிய சூசையே! நீ நுமது மனைவியாகிய மரியம்மாளை அங்கீகரித்துக்கொள்ள ஐயப்படவேண்டாம். ஏனென்றால் அவள் தரித்திருக்கிற கருப்பம் இஸ்பிரீத்து சாந்துவினாலுண்டாயிற்று" என்றார். ஆ! இதைக் கேட்ட அர்ச். சூசையப்பர் எவ்வளவோ ஆனந்த பூரிப்பு கொண்டார். சம்மனசு சொன்னபடி நடந்துகொள்ள முழுமனதுடன் பிரியப்பட்டு, தம்முடைய மனைவியைவிட்டுப்பிரியாமல், அவளை அங்கீகரித்துக்கொண்டு அவளுடன் வாசஞ்செய்து வந்தார்.

அர்ச். சூசையப்பர் தெய்வ சங்கற்பப்படி நடந்தவரென்று எண்பிக்க சுவிசேஷத்தில் இன்னும் சொல்லப்பட்டிருப்பது யாதெனில், அவர் எஜிப்து தேசத்துக்குத் திடீரென பிரயாணப்படுதலேயாம். குழந்தை யேசுநாதர் பிறந்த சொற்ப காலத்துக்குப் பிறகு மறுபடியும் ஒரு தேவ தூதர் அர்ச். சூசையப்பருக்குச் சொப்பனத்தில் தோன்றி "நீரெழுந்து குழந்தையையும் அதின் தாயையுங் கூட்டிக்கொண்டு எஜிப்து தேசத்துக் கோடிப்போய் நான் மறுபடியும் உமக்குச் சொல்லுந்தனையும் அங்கேயேயிரும். ஏனெனில் எரோதென்பவன் பிள்ளையைக் கொல்ல எத்தனித்து அதைத் தேடுவான்" (மத். II-13.) என்றார். யாருக்கும் இக்கட்டளை பிரமிப்பை வருவிக்கத் தக்கதாமே. தூரந்தொலையிலுள்ள ஒரு பரதேசத்துக்குத் திடீரென்று பிரயாணப்படுதல் சாத்தியமன்று. ஆகவே, இக் கட்டளையை நிறைவேற்றத் தமக்கு பல வில்லங்கங்களும் சங்கடங்களுமுண்டென்று அர்ச். சூசையப்பர் தேவ தூதனுக்குச் சொல்லிக்காட்டலாமே: "ஆண்டவருடைய சம்மனசானவரே, பிரயாணத்துக்கு யாதோர் ஆயத்தமுமின்றி, தாயையும் சேயையுங் கூட்டிக்கொண்டு உடனே நான் எப்படி புறப்படக்கூடும்? இது வெகு தூர பிரயாணமாயிருப்பதோடுகூட வழியும் வெகு ஆபத்துக் குரியதல்லவோ? மேலும் வழியுந் தெரியாது; வழிச்செலவுக்கு மொன்றுமில்லையே. நான் அறியாத அந்த அஞ்ஞான இராச்சியத்துக்குத் தானோ போக வேண்டும்? அஞ்ஞானிகளிடமிருந்து என்ன உதவியை நான் பெற்றுக்கொள்ளக் கூடும்? எப்படி அந்த பரதேசத்தில் தேவ பாலகனையும் அவருடைய தாயையும் ஆதரிப்பேன்? அத்தேசத்துப் பாஷை முத



லாய் எனக்குத் தெரியாதே! வேறு தேசத்துக்குப் போகக்கூடாதோ? ஓர் அற்பனான எரோதுக்குப் பயந்தா தேவகுமாரன் ஓடி ஒளியவேண்டும்?" என்றும், இன்னும் இவைகளைப் போன்ற பலகேள்விகளையும் அத்தேவதூதனை அர்ச். சூசையப்பர் கேட்கக் கூடுமாயிருந்தது. ஆயினும், தாம் எஜிப்து தேசத்துக்குப் பிரயாணமாவது தெய்வச் சித்தமென்றுன்னி மறுவார்த்தைப் பேசாமல், அவர் உடனே எழுந்து பச்சைக் குழந்தையையும் அதின் தாயையும் இரவிற் கூட்டிக்கொண்டு எஜிப்து தேசத்திற்குப் புறப்பட்டார்.

தமது சுயநாட்டுக்குத் திரும்பும்படி சம்மனசானவர் மறுபடியும் அர்ச். சூசையப்பருக்குக் கற்பிக்குந்தனையும் அந்த அன்னிய நாட்டிலேயே அவர் தங்கியிருக்க வேண்டியதாயிருந்தது. அப்படி தங்கியிருப்பது எவ்வளவு காலத்துக்கென்று முதலாய் அவருக்கு அறிவிக்கப்படவில்லை. இதைப்பற்றியாவது அவர் முறைப்படலாமல்லவா? ஆயினும், ஒன்றும் மறுத்துப் பேசாமல் எஜிப்துக்குப்போய், எரோதனுடைய மரண பரியந்தம் அவ்விடத்திலேயே இருந்தார். அப்பரதேசத்தில் அநேக துன்ப துரிதங்களை யிவர் பட்டனுபவித்தாரென்று சொல்லவும் வேண்டுமோ? அநேக தருணங்களில் குழந்தை பேசுநாதர், கன்னிமரியம்மாள் இவர்களுடைய பசியையாற்ற முதலாய் இவருக்கு நிர்வாகமின்றி ஏங்கி நிற்க நேரிட்டது. இப்படி பலவித நிர்ப்பந்தங்களைப் பட்டனுபவிக்கையில், "சகலமும் எனக்குத் தெய்வ திருவுளப்படி சம்பவிக்கின்றதேயன்றி மற்றப்படியல்ல" வென்று சொல்லி தம்மைத்தாமே ஆற்றித்தேற்றிக்கொண்டு, தம் சுயநாடான இஸ்ராயேல் நாட்டுக்குத் திரும்பிப்போக சர்வேசுரன் சித்தங்கொள்ளுமட்டும் எஜிப்த்தில் சீவித்து வந்தார்.

இக்கண்ணீர் கணவாயில் நாம் நாளுக்கு நாள் புண்ணியத்தில் விர்த்தித்து உத்தமர்களாய் ஒழுகிவர, இதோ! அர்ச். சூசையப்பர் நமக்கு ஓர்மேல்வரிச் சட்டமாயிருக்கிறார். நாமடைய வேண்டிய உத்தமதனம், நற்கிருத்தியங்களான ஜெபதபம், தானதர்மம், ஒறுத்தல் உபவாசம் இவைகளை அனுஷ்டிப்பதில் அடங்கியுள்ளதன்று. ஏனெனில், பரிசேயர்களும் உபவாசம் பிடித்து, தானமிட்டு, ஜெபித்தும் வந்தார்களென்றாலும் கிறிஸ்துநாதர், தமது சீஷர்களுக்குத் திருவுளம்பற்றினதென்ன? "வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய உத்தமதனத்திலும் உங்கள் உத்தமதனம் அதிகப்பட்டிராவிட்டால், மோட்ச விராச்சியத்திற் பிரவேசிக்கமாட்டீர்கள்" (மத். V.20) என்பதே. ஆனபடியால் அல்லவா நமது கர்த்தர் "உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுமாப்போல பூமியிலும் செய்யப்படுவதாக" வென்று பிரார்த்திக்கக் கற்பித்தார்? நாம் எவ்வளவுக்கு ஆவலாயும் சுறுசுறுப்பாயும் தெய்வச் சித்தத்தை நிறைவேற்றி வருவோமோ அவ்வளவுக்கு நம்முடைய உத்தமதனம் அதிகரிக்கும். அதினால் நமக்குக் கிடைக்கும் மோட்ச சம்பாவனையும் அதிகமாகும்.

ஆகையால், நாம் சகலத்திலும் தெய்வச்சித்தத்துக்கு ஒத்து நடக்கக் கற்றுக்கொள்வோமாக. தெய்வச்சித்தம் யாதென்று நம்முடைய மனசாட்சி நமக்கு அறிவிக்கும்; பாவத்தை விலக்கவும் புண்யத்தைச் செய்யவும் அது நம்மை வற்புறுத்தும். ஆகையால் தன் மனசாக்ஷிக்குக் காதுகொடுத்து அது கற்பிக்கும்வழி நடப்பவன் எவனும் தெய்வச் சித்தத்தை நிறைவேற்றுகிறவனாவான். மனசாட்சியின் குரலே தெய்வ குரல். மேலும் பத்துக்கற்பனைகள், திருச்சபை கட்டளைகள் இவைகள் மூலமாயும் தெய்வச் சித்தத்தை நாம் அறிந்துகொள்ளலாம். சர்வேசுரன் தம்முடைய சித்தத்தை நமக்கு அறிவிக்கும் பொருட்டே கற்பனைகளைத் தந்திருக்கிறார். ஆகையால், கற்பனைகளின்படி நடக்கிறவர்கள் எல்லோரும தெய்வச்சித்தத்தையே நிறைவேற்றுகிறவர்களென்று சொல்ல ஐயமில்லை. "உங்களுக்குச் செவிகொடுக்கிறவன் எனக்குச் செவிகொடுக்கிறான்; உங்களைப் புறக்கணிக்கிறவன் என்னைப் புறக்கணிக்கிறான்" (லூக் X 16) என்று நமதாண்டவர் வசனித்திருக்கிறபடியால், அவருக்குப் பதிலாயிருக்கும் சத்திய திருச்சபையின் மேற்றிராணிமார்கள், குருக்கள் வழியாயும் நாம் தெய்வச் சித்தத்தையறிந்துகொள்ளலாம். ஆகையால் இவர்களுடைய புத்திபோதங்களுக்குக் காதுகொடுத்து அவைகளின்படி ஒழுகுவோமானால், நாம் தெய்வச் சித்தத்தையே நிறைவேற்றுகிறவர்களாகிறோம்.

இப்படி திருச்சபையின் போதகத்தினாலும் வேத கற்பனைகளினாலும் நம்முடை

ய மனசாட்சியினாலும் தெய்வச் சித்தத்தை யறிந்து, அதை யனுசரித்து, உத்தமர்களாய் ஒழுகிவர நல்ல பிரதிக்கினைசெய்து கொள்வோமாக. அர்ச். சூசையப்பரைப் போல் சகலத்திலும் தெய்வச் சித்தத்துக்குக் குருட்டுக் கீழ்படித லுடையவர்களாயிருப்போமானால், நாமும் உத்தமர்களாய்ச் சீவித்து, அவரைப்போல பாக்கியமான மரணத்தையடைந்து, மோட்ச பேரின்ப பாக்கியத்தைச் சுதந்தரித்துக்கொள்வோம். "என்னைநோக்கி ஆண்டவரே! ஆண்டவரே! என்றுசொல்லுகிற எவனும் மோட்ச இராச்சியத்திற் பிரவேசியான், ஆனால், என் பிதாவின்சித்தத்தை நிறைவேற்றுகிறவனே மோட்ச இராச்சியத்திற் பிரவேசிப்பான்."

---

## A FAITHFUL CONVERT.
## விசுவாசமுள்ள புதுக்கிறிஸ்துவன்.

மதகஸ்கார் தீவில் புதுக் கிறிஸ்துவனான வாலனொருவன் இருந்தான். அவனுக்கு வயது சுமார் 20 தான் இருக்கும். இந்த வயதில் சாதாரணமாய் மற்றவர்களிடத்தில் காணப்படாத சில அரிய குணங்கள் அவனிடத்தில் அமைந்திருந்தன. ஆச்சரியமான அழகுங் குணமு மமைந்த அதி உத்தம வாலிபன். நல்ல ஒழுக்கமும் உயர் நடையும் பொருந்தியவன். "அகத்தினழகு முகத்தில் தெரியும்" என்பதுபோல் உள்ளும் புறமு மொத்த உத்தமகுணசாலி. அவன் பேர் பாக்கியம். அநாதபிள்ளைகள் வாசிக்கும் மடத்தில்தான் படித்துக்கொண் டிருந்தான்.

அதிபுத்தியும் விவேகமு முள்ள அவன் கலாசாலையில் மற்ற மாணாக்கரைப் பார்க்க அதி தீவிரமாயும் சாமார்த்தியமாயுங் கல்வியிற் றேறி வந்தபடியால், அவன் தோழர்கள் அவனை வெகுவாய் மதித்து வருவார்கள். அவன் இவ்வாறு இருக்கையில் திடீரென ஏதோ தெய்வ சங்கற்பத்தால் வியாதியாய் விழுந்து ஒரு மாதத்துக் குள்ளாக மகா கேவலமான ஸ்திதிக்குள்ளானான். வெளிப் பார்வைக்கோ இன்ன வியாதியென்று யாருக்கும் தெரியாதிருந்தது. முதல் முதல் கண் பார்வை பலவீனப்பட்டது. பின்னர் அகோர தலைவலியும் சேர்ந்துகொண்டது. பாக்கியமோ பதினைந்து தினத்துக்குள் கண்ணிழந்த கபோதியானான். வைத்தியர் வந்து இவனை சோதித்துப் பார்த்தும் யாதொன்றும் கண்டு பிடிக்காமல் போய்விட்டார்கள். சரீர முழுமையிலும் பெருத்த வீக்கம் கண்டது. இதைப் பார்த்தவர்கள் எல்லோரும் "வீக்கமோ தூக்கமோ" என அஞ்சி ஏங்கலானார்கள். ஔஷதத்தால் வீக்கம் ஒருவாறு வாடினபோதிலும், வேறே யாதொரு குணமுந் தோன்றவில்லை. கடைசியாய் எலும்புகளிலும் அவனுக்கு உபத்திரவம் ஆரம்பித்தது. வியாதியஸ்தன் ஐந்து நிமிஷமேனும் ஒரே நிலையில் படுத்திருக்க முடியாதவனும், புறத்தி உதவின்றி ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கம் திரும்பிப் படுக்கவும், இப்புறம் அப்புறம் அசையவுங் கூடாதவனானான். அவன் சரீர சாயல் ஓர் கந்தைத் துணிக்குச் சமானமாய்ப் போய் விட்டது.

இப்படி யிருக்கும்போது, அவன் நோவாளி சாலைக்குக் கொண்டுபோகப்பட்டான். அவனுடைய தாயும் தகப்பனும் வந்து அவன் அருகாமையிலிருந்து அவனைக் கவனித்துப் பார்க்க உத்தரவு பெற்றுக்கொண்டார்கள். இதினால் வியாதிக்காரரை விசாரணை செய்கிறவர்களுக்கும் பளுவு குறைந்துவிட்டது.

பாக்கியத்தின் தகப்பன் இன்னம் ஞானஸ்நானம் பெறாத அஞ்ஞானி. தன் பிள்ளையின் அருகாமையி லிருந்து பிள்ளையைப் பார்த்து: "தம்பி, உன்னை நமது ஊருக்குக் கொண்டு போகிறேன்; வந்துவிடு. அங்கே கோடங்கி சகுன சாஸ்திரத்திலும், வைத்திய சாஸ்திரத்திலுஞ் சிறந்த பண்டித சமர்த்தனொருவ னிருக்கிறான். வா" என்றான். பாக்கியமோ அந்த ஆபத்தான வேளையில் அஞ்ஞானிகளின் மத்தியில் போகப் பிரியமற்றவனாய் ஒரே கண்டிப்பாய் வர முடியாது, முடியாதென்றான். தகப்பன் மிகவுங் கோபங்கொண்டு. "இவ் விடத்தில்தானே உன்னை விட்டுவிட்டுப் போகிறேன் பார். நீ யிங்கிருந்தால் சாவது நிச்சயம். வீணாய்க் கெட்டுப்போகாதே; சும்மா என்னுடன் வா" என்று மிரட்டினான். "அப்படி உமக்கு இஷ்டமிருந்தால் என்னை விட்டுவிட்டுப் போம். நான் செத்தாலும் சாகிறேன். ஆனால் சாஸ்திரக்காரனிடம் வர நான் ஒருக்காலும் சம்மதியேன். அது சர்வேசுரனுக்கு எறாத துரோகம்; விசுவாசத்துக்கு பொருந்தாத பாவம்; அது ஒருபோதும் ஆகாது" என்றான்.

அப்போது தகப்பனுக்கும் பிள்ளைக்கும் மகா கடுமையான சம்பாஷணை நடந்தது. பதினைந்து தினங்களுக் கதிகமாக தகப்பன் தன்



மகனுடைய உபத்திரவங்களைக் கண்டும், ஈவிரக்கமின்றி அவனைத் தொந்தரை செய்து மிரட்டி தன் கருத்துக் கிணங்கும்படி பார்த்தான். மகன் ஒரே பிடிவாதமாய் சம்மதிக்காம லிருக்கிறதைக் கண்டு அவனை எடுக்கப் பிடிக்க இருந்ததை முதலாய் விட்டுவிட்டதோடுகூட அவனை ஏறெடுத்துப் பார்த்தவனுமல்ல. கொஞ்சமேனும் கவனிப்பது மில்லை. இராக்காலத்தில் நிர்ப்பாக்கிய பிள்ளை: அப்பா! அப்பா! வென்று கேவி தகப்பனைக் கூப்பிட்டு, என்னை வேறுபக்கமாய் மாற்றிப்போடும், எரிவந்தமா யிருக்கிறது, மூர்ச்சை அடைக்கிறது, கொஞ்சம் ஜலம் கொண்டுவந்து கொடும்" என்பான். தகப்பன் தன் படுக்கையில் திரும்பி திரும்பிக் கொடுத்துக்கொண்டு முறுமுறு வென்றுகருவி, "நான்தான் உன்னைக் கவனிக்கவேண்டாமென்கிறாயே; உன் கத்தோலிக்கு மார்க்கத்தாரிடம் போய் சொல்; அவர்கள் வந்து உன்னைக் கவனிப்பார்கள்" என்பான்.

கபோதியும் முடவனுமான பாக்கியத்துக்குக் கடைசி ஊழியஞ் செய்யவேண்டியிருக்கிறது. நோயாளிகளை விசாரணை செய்கிறவர்கள் தகப்பனை சாக்கிட்டு இவனைக் கவனிக்கிறதில்லை. ஆனால் தகப்பனோவெனில், பதினாயிரந்தரம் வேண்டினபிறகுதான் உதவிக்கு வருவான். நோயாளியின் சடலத்தைக் கடுமையாய் நடத்துவான்; இவனுக்கு ஊழியஞ்செய்வதைவிட வேறோர் ஆதியானுக்கு ஊழியஞ் செய்வது தாவிளை என்பான்.

சில சமையங்களில் தகப்பன் மகனைத் தன் வசப்படுத்த பலவாறு முயற்சி செய்வான். "உனக்கு வேண்டியதெல்லாம் ஒருகாலும் தவறாமல் எப்போதும் கொடுத்துவந்தேனே. பணஞ்செலவிட்டு உன்னைப்படிக்கவைத்தேனே. உனக்காகக் கஷ்டப்பட்டு உழைத்தேனே. இப்போது உன்னிடம் இங்கே வந்திருக்கிறதினால், நெல், சோளம், உருளைக்கிழங்கு முதலிய என் வேளாண்மை யெல்லாம் அழிந்துபோகிறதே. நீயோவென்றால், நான் கேட்கிற ஒரே ஒருகாரியத்துக்குச் சம்மதியேனென்கிறாய். என் என் வைத்தியனிடம் வரமாட்டேன் என்று சொல்லுகிறாய்"? என்பான் இவ்விதமான வஞ்சகபேச்சுகளெல்லாம் வியாதிஸ்தனுக்கு மெய்யான வேதசாக்ஷி உபத்திரமாகவேயிருந்தன. ஆனால் திவ்ய சற்பிரசாத நன்மையைத் தினந்தோறும் உட்கொள்ளுகிறதினால் அந்தத் தைரியசாலியான பையன் எதற்கும் அஞ்சாமல் ஒரே உறுதியாயிருப்பான். மேலும் சர்வேசுரனுக்குத் தன்னை உத்தமபலியாகக் கையளித்ததினிமித்தம் தன் உபத்திரவ வேதனைகளை யெல்லாம், தன் தகப்பன் மனந்திரும்புகிறதற்காக வென்று ஒப்புக்கொடுப்பான். ஒருநாள் "என் தகப்பனே; நான் ஆரோக்கியம் அடைந்தால், நான் ஆசிப்பதெல்லாம் நீர் எனக்குத் தருவீரோ"வென்றான். "ஆம்! என் மகனே; நீ ஆசைப்படுவதெல்லாம் நான் உனக்கு வாங்கிக் கொடுப்பேன்"என்றான் தகப்பன். "இல்லை, இல்லை, எனக்கு வேறொன்றும் வேண்டாம். நான் சௌக்கியமடைந்தால், நீர் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுவீரென்று சர்வேசுரனுக்கு வார்த்தைப்பாடு கொடும்" என்றான்.

அப்போதே மகன் தன் காணிக்கையைப் புதுப்பித்து "என் சர்வேசுரா! என் தகப்பன் மனந்திரும்ப, என் உயிரை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்" என்றான்.

தகப்பன் தனது மகனுடைய பிடிவாதத்தை ஜெயிக்க அவநம்பிக்கைக்கொண்டவனாய், தன் வைத்தியனிடமிருந்து அஞ்ஞான சாஸ்திரத்துக்கடுத்த மருந்து வர்க்கங்களைவரவழைத்து அவைகளைத் தன் மகனுக்குக் கொடுக்கப் பிரயாசைப்பட்டான். அவன் அசந்து சோங்கிக்கிடக்குஞ் சமையம் பார்த்து, துர்க்கந்தமான மருந்தொன்றை அவன் கண்களில் பூசி, வேறோர் மருந்தை அவனுக்குக் குடிக்கக் கொடுத்தான். பின்னும் தான் ஜெயங்கொண்டதாக, "ஆ, கடைசியாய் என் வைத்தியனுடைய அவுஷதத்தைச் சாப்பிட்டதால் குணமடையப் போகிறாய்" என்றான். மகன் இதைக்கேட்கவே மகா துயரமாய் அழத்தொடங்கினான். பின்னும் மனந்தேர்ந்து "இல்லை, இல்லை, உம் அவுஷதங்களைச் சாப்பிட நான் சம்மதிக்கவேயில்லை. நான் கபோதியாய்ப் போனதினிமித்தம், இதுதான் சமையமென்று நீர் பார்த்தீர். ஆனால் நான் குற்றவாளியல்ல. அஞ்ஞான சகுனசாரங்களை அநுசரிப்பதைவிட சாகிறதே எனக்குத் தாவிளை" யென்றான்.

அப்போது அவன் உறவின் முறையார் அவனுடைய கேவலமான அந்தஸ்தைப்பார்த்து இனி இவனால் என்னகூடும்? மகா பலவீனப்பட்டிருக்கிறானே யென்று உத்தேசித்து, அவனை ஓர் தள்ளுவண்டியில் வைத்து, கோரமான வெயில் நேரத்தில் இரண்டு நாள் பயணம் செய்து, தங்கள் சொந்த ஊருக்குக் கொண்டுபோய் விட்டார்கள். ஐயோ! என்ன கஸ்திக்குரிய அந்தஸ்து! வியாதிக்காரன் தான் மெத்தப் பயந்து வெறுத்திருந்த சாஸ்திரக்காரனிடம் கையளிக்

கப்பட்டான். அப்போது அவ்விடம் என்ன நடந்தது! அவனைப் பலவிதத்திலும் பயமுறுத்தி, பலவந்தஞ்செய்தது இவ்விதந்தானென்று சொல்லி முடியாது.

அந்தக் கிராமத்திலிருந்த குருவானவரொருவர் இந்தச் செய்தி கேள்விப்பட்டு, உடனே தீவிரமாய் பாக்கியத்தினிடம் ஓடிவந்து, பாக்கியம் மகாபிரகாசகாந்தியுள்ளவனாயும், ஒரே உறுதியுள்ளவனாயும், மகா பொறுமைசாலியாயும், கொஞ்சமாகிலும் முறைப்படாமல் கடைசி பரியந்தம் மெய்யான வேத சாக்ஷி உபத்திரவத்தை அனுபவிக்கிறதாகவுங் கண்டதனால் கடைசி விசை திவ்ய சற்பிரசாத நன்மையை இவ்வளவு கஷ்டங்களுக்கு நடுவேயும் அவன் இருதயத்தில் இறங்கச்செய்தார். இந்தக் கடைசி நன்மைக்குத்தான் காத்திருந்தாற் போல, பாக்கியம் அதை உட்கொண்டவுடனே எந்த சங்கடத்தையும் ஜெயங்கொண்டவனாய் தனது உறுதியான விசுவாசம் தன்னைச் சூழ்ந்தவர்களுக்கு சுகந்தப் பரிமளம் வீச பாக்கியமாய் உயிர் விட்டான்.

இந்த மகா பக்தி விசுவாசமுள்ள வாலிபனுடைய வைராக்கியமும் திடச்சித்தமும், அவனைப் போன்ற வாலிபர்களுக்கேயன்றி, மற்ற எல்லோருக்குமே நன் மாதிரிகையாயிருக்குமென்றெண்ணி, இச்சரித்திரத்தை நல்லாயன் பத்திரிகைக்கு எழுதலானேன்.

A. S. M.

பணிக்கன் குப்பம்.

---

## CHRISTIAN DOCTRINE.

## ஞானோபதேசம்.

### 18-ம் பாடம்

**விசுவாச மந்திரத்தின் 10-ம் பிரிவு.**

(முன் தொடர்ச்சி)

---

6. **திருடருக்குத் தலைவன்.**—நாலாம் யுகத்தில் ஆப்ரிகாவில் தாவீது என்னப்பட்ட பேர்போன திருடனிருந்தான். இவன் திருடருக்கெல்லாந் தலைவன். இவன் அநேகரைக் கொலை செய்ததுடன் ஆயிரக்கணக்கான வழிப்போக்கரை கொள்ளையடித்தான். இவன் பெயரைக் கேட்டாலே பயந்து நடுங்குவார்கள் அத்தேசத்தார். கணக்கற்ற அக்கிரம பாதகங்களைக் கட்டிக்கொண்ட தாவீதுக்கு ஒரு நாள் தேவபயமுண்டாக, அவன் மனந்திரும்பி ஒரு சந்நியாச மடத்துக்குப்போய் தன்னையதிற்சேர்த்துக்கொள்ளும்படி சிரேஷ்டரை மன்றாடினான். அவன் விருத்தாப்பியனாயிருந்ததால் மடத்தின் ஒழுங்குகளை யனுசரித்து, ஒரு சந்தியுபவாசம் பிடித்து தவஞ்செய்ய அவனாற் கூடாதென்றெண்ணி, யவனை மடத்தில்சேர்த்துக்கொள்ள சம்மதியாவிட்டாலும், அவனுடைய அழுகைப் பிரலாபத்தைக் கண்டிரங்கி யவனை மடத்தில் சேர்த்துக்கொண்டார். தாவீது தான்கட்டிக்கொண்ட பாவாக்கிரமங்களுக்காக கடின தவம்புரிந்தான். அழுகை மனஸ்தாபத்துடன் தன்பாவங்களை சகலருங் கேட்கும்படிக்கு சத்தமாய் சங்கீர்த்தனஞ் செய்வான். ஆண்டவரே தயவாயிரும்! சர்வேசுரா தயவாயிரும்! என்று பேரொலியாய்க் கூப்பிடுவான். இவ்விதமாக அநேக வருஷகாலங் கடின தவம்புரிந்தபின் "தாவீது! உன் பாவங்கள் பொறுக்கப்பட்டன" என்று வானத்தினின்று ஒரு சத்தங் கேட்கப்பட்டது. அப்போது தாவீது "இல்லை யில்லை. என் பாவாக்கிரமங்கள் கொஞ்சமானவைகளல்ல, இவ்வளவு துரிதத்தில்பொறுத்தலடைய" வென்று அவநம்பிக்கையாய்ச் சொன்னான். உன் அவநம்பிக்கைக்குத் தண்டனையாக நீ சாகுமட்டும் ஊமையாயிருப்பாய். ஆனால் பொதுச்செபஞ் செய்யும்போதுமாத்திரம் உன் நா அவிழ்க்கப்படுமென்று ஒரு வாக்கியந் தொனித்தது. அவ்வாறே சகலமும்சம்பவிக்க, தாவீது அருந்தவங்களைப்புரிந்து பாக்கியமான மரணமடைந்தான். நாமெவ்வளவு கனமான பாவங்களைக் கட்டிக்கொண்டபோதிலுந் தக்கமனஸ்தாபப்பட்டு பிரதிக்கினையுடன் பாவசங்கீர்த்தனஞ்செய்யும்போது சர்வேசுரன் அவைகளை மன்னிப்பாரென்பதற்கு சந்தேகமில்லை. (Bollandus.)

### 19-ம் பாடம்.

**விசுவாச மந்திரத்தின் 11-ம் பிரிவு.**

**மாம்ச உத்தானத்தை விசுவசிக்கிறேன்.**-யாதாமொருவன் இவ்வுலகில் சாகும்போது தேவ இஷ்டப்பிரசாதத்துடனிருப்பானாகில் அவனாத்துமம் மோக்ஷத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும். அவன்சரீரமோ கல்லறையிலடைக்கப்பட்டு மண்ணாய்ப்போம். சாவானபாவத்துடன் செத்தவனுடைய ஆத்துமம் நரகத்துக்குப்போம். அவன் சரீரம் மண்ணாகும். அந்தியகாலம்நெருங்கும்போது உலகமுமதிலுள்ள சகலமுந் தீயால் சாம்பலாக்கப்பட்டபின், சேசுக்கிறிஸ்துநாதர் மகிமைப் பிரதாபத்துடன் தேவ தூதரால் சூழப்பட்டு உலகி லெழுந்தருளிவருவார். அப்போது மரித்தோரே எழுந்திருங்கள் என்னும் எக்காளச் சத்தந் தொனிக்கவே மரித்த சகலரும், பாவிகளும் புண்ணியவாளரும், ஸ்திரி புமான்களும், பெரியோருங், குழந்தைகளும் சகல மதத்தைச் சேர்ந்தவர்களும் தங்கள் சரீரத்துடன் எழுந்திருந்தபின் ஆத்துமங்களுந் தங்கள் தங்கள் சரீரத்தில் பிரவேசித் தொன்றிக்கும்.



**மனிதர் உயிர்த்தலைப்பற்றி எசக்கியேல் உரைத்த தீர்க்கதரிசனம்.**-பிள்ளைகளே! நாம் மரணமடைந்தபின் நமது சரீரங் கல்லறையி லடைக்கப்பட்டுப் புழுவுக்கு இரையாகி, மக்கி மண்ணாகுமானாலும், ஒரு நாள் நாம் ஆத்துமசரீரத்துடன் உயிர்ப்போமென்று, கர்த்தர் பிறப்பதற்கு 600 வருஷத்துக்கு முன்னிருந்த தீர்க்கதரிசியாகிய எசக்கியேலுக்கு சர்வேசுரன் அறிவித்தார். இவரெழுதின தீர்க்கதரிசனமாவது: கர்த்தருடைய கரம் என்மேல் வந்து, இஸ்பிரீத்துசாந்துவினால் கொண்டுபோகப்பட்டு, எலும்புகள் நிறைந்த ஒருமைதானத்தில் நான் நிறுத்தப்பட்டு, அம் மைதானத்தின் நாலாபக்கத்திலும் கூட்டிக்கொண்டு போகப்பட்டேன். அந்த மைதான முழுதும் எலும்பால் நிறையப்பட்டிருந்தது; மேலு மவை மெத்த உலர்ந்தவைகளுமாயிருந்தன. மனுமகனே, இந்த எலும்புகளுயிர்க்குமா வென்றென்னை அவர் கேட்டார். ஆண்டவரே, அது உமக்குத் தெரியுமென்றேன். அப்போதவர் எனக்குச் சொன்னதாவது: நீயிந்த எலும்புகளைக்குறித்து தீர்க்கதரிசனமுரைத்து அவைகளைப்பார்த்துச் சொல்லவேண்டியதாவது: உலர்ந்த எலும்புகளே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள். கர்த்தராகிய சர்வேசுரனிந்த எலும்புகளுக்குச் சொல்வதாவது: இதோ நாமுங்களுக்கு உயிர் கொடுப்போம். அப்போது நீங்கள் சீவிப்பீர்கள். நாமுங்கள்பேரில் நரம்புகளைப் பூட்டி, மாம்சமேற்றி, உங்கள்பேரில் தோலைப் போர்த்தி உங்களுக்கு உயிர்தருவோம்; அப்போது நீங்கள் சீவித்து நாம் கர்த்தரென்று அறிந்துகொள்வீர்களென்றுரைக்கிறாரென்று சொல்லென்றார். எனக்குக் கற்பித்தபடி தீர்க்கதரிசன முரைத்தேன். அப்போது அவைகளுக்கு உயிருண்டாகி யெழுந்து நிற்க அவைகள் பெருத்ததோர் படைபோல காணப்பட்டன.

(எசக்கியேல் 37.)

---

## CHRISTMAS STORY.

## சுவாமி பிறந்த திருநாள் கதை.

அல்லது,

### ரோமான் கோவிலுக்குப் போகாதே.

(முன்தொடர்ச்சி.)

---

சிலநாளைக்குள் அபூர்வமணிக்கு படிப்படியாய் அதிக சுகமுண்டாயிற்று. கொப்பளங்கள் காயத் துவக்கின. சிறுமி கட்டிலில் உட்கார்ந்துகொண்டு விசுவாசநாயகர் கொண்டுவந்த லூர்து மாதாப் படத்தைக் கையில் பிடித்துக்கொண்டு அடிக்கடி யதை முத்திசெய்து, லூர்து மாதா என்னை சௌக்கியப் படுத்தினாளென்று சொல்லிவருவதைக் கேட்ட அவள் தாய் சந்தோஷ மகிழ்ச்சி கொள்வாள். தன் மகள் லூர்து மாதாவைப்பற்றி பேசும்போதெல்லாம் ரூத்தம்மாள் செய்து கொண்ட பொருத்தனை யவள் மனதில் உறுத்த, அது நாளுக்குநாள் அதிக பலங் கொண்டு அவியாத தீபம்போல பிரகாசித்து வந்தது.

ஓர்நாள் இராத்திரி வழக்கப்படி இராச்செபஞ் செய்தபின் ரூத்தம்மாளுடைய மனங்கரைந்து, அவள் கன்னிமரியாயின் மீது கொண்ட பக்தி விஸ்வாசம் அதிகரிக்க, தன் புருஷனை நோக்கி "நான் முன் செய்து கொண்ட பொருத்தனையை நிறைவேற்றக் காலங் கிட்டி வருகிறது. என்னிருதயத்தில் ஒருபோதுங் காணாத சந்தோஷ ஆறுதலுண்டாகிறது." என்றாள்.

பவுல்போ.—அதென்ன பொருத்தனை ரூத்?

ரூத்.—லூர்துமாதாமட்டில் பத்தி விஸ்வாசம் வைப்பதே என் பொருத்தனை!

பவுல்போ.—அது நமது வேதகோட்பாட்டுக்கு நேர்விரோதமான விஷயமென்று மறந்து விட்டாயோ?

ரூத்.—உமக்கும் உரோமான் காற்றிகிஷ்டுக்கும் நடந்த சம்பாஷணையை யெனக்கு நீர் தெரியப்படுத்தினதை மறந்துவிட்டீரோ?

பவுல் போ.—எதைப்பற்றிய சம்பாஷணை?

ரூத்.—வேத சம்பாஷணையே! விசேஷமாக கன்னி மரியாயைப்பற்றிய வேத தர்க்கத்தை

நான் மறக்கவே இல்லை. நாம் கர்த்தரை விஸ்வசித்து அவரை ஆராதிக்கும்பொழுது, அவரை அற்புதமாய்ப் பெற்றெடுத்த தாயாரை அசட்டைசெய்வது அவருக்குப் பொருந்துமா? அவர் தமது தாயாரைச் சிநேகித்ததுபோல, அவருடைய சீஷராகிய நாம் அந்தக் கன்னித்தாயை ஸ்நேகித்து வணங்குவது ஞாயமல்லவென்று யார் சொல்லுவார்?

பவுல் போ.—இதைப்பற்றி மிஷநெறி கேள்விப்பட்டால் என்னை உத்தியோகத்தினின்று தள்ளிவிடமாட்டாரோ?

ரூத்.—உங்களுக்கு இஷ்டமிருந்தால் அந்த வேதத்திலிருக்கலாம். ஆனால் நானுங் குழந்தையும் கன்னிமரியாயை நம்பி அவளுக்கு யோக்கியமான பிள்ளைகளாக நடக்கத் தீர்மானித்திருக்கிறோம்.

பவுல் போ.—உன் அண்ணன் சும்மாயிருப்பாரா?

ரூத்.—என் அண்ணனுக்கு வியாதியாய்க்கிடந்த பிள்ளையை வந்து பார்க்கும்படிக் கடிதத்தின் மேல் கடிதமெழுதியும், தந்தியுங் கொடுத்திருந்தும் அவர் என் குழந்தையைவந்து பார்த்தவரல்ல. மேலுஞ் சாகக்கிடந்த பிள்ளைக்கு உயிர் கொடுத்தது அவர் தானா?

பவுல் போ.—நீ சொல்வது மெய்தானா ரூத்.?

ரூத்.—இது தீர்மான மாத்திரமல்ல என் பிரமாண வார்த்தைப் பாடாகும். இது சத்தியம். என் பிராணன் போனபோதிலும் இந்த தீர்மானத்தை மாற்றேன்? ஏசுக்கிறிஸ்துவினுடையவும் அவருடைய திருத்தாயாருடையவுஞ் சமுகத்தில் சத்தியமாகச் சொல்லுகிறேன்?

போதக ரிவ்வார்த்தையைக் கேட்டபின் முக மாறி ஆழ்ந்த யோசனை செய்து கொண்டு மௌனமாயிருந்தார்.

ஈசாக் உபதேசியார் வியாதிக்காரியைச் சந்திக்கப் போன பொழுது குழந்தை யதிக சுகமாயிருப்பதைக்கண்டு "உங்கள் பிள்ளைக்கு சீக்கிரத்தில் பூரண சௌக்கியமுண்டாகும்" என்றதைக் கேட்ட சிறுமி, "ஹார்துமாதா தான் என்னைக் குணப்படுத்தினார்கள் நான் அந்தத் தாயாருக்குப்பிள்ளையா யிருப்பேன்." அம்மாவும் அப்படித் தான் சொல்லுகிறார்கள் என்றாள். அவர் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு வீட்டுக்குப் புறப்படும்பொழுது, "உங்களிடத்தில்செபப்புஸ்தகமிருந்தால் அனுப்பிவைப்பீர்களா?" என்று ரூத்தம்மாள் கேட்க, அப்படியே அனுப்பிவைக்கிறேனென்று உபதேசியார் சொல்லி வெளியே புறப்பட்டார். போதகரும் அவரைப் பின் தொடர்ந்து "என் குடும்பத்துக்காக நாடோறும் விசேஷ விதமாய் வேண்டிக்கொள்ள மறவாதேயுங்கள்" என்று விண்ணப்பஞ் செய்து தன் வீட்டுக்குத் திரும்பினார்.

அபூர்வமணிக்கு நாளுக்கு நாள் சௌக்கியமுண்டானது. மூன்று ஸ்நானங்கள் செய்விக்கப்பட்டன. அவளும் வெளியே சென்று நடமாடத்துவக்கினாள். போதகருடைய பந்து ஜனங்களும் சபையாருங் கூட்டங் கூட்டமா யவருடைய வீட்டுக்குப் போய் குழந்தை சௌக்கியமடைந்ததைப்பற்றி சந்தோஷங் கொண்டாடினார்கள். ஆனால் வீட்டில் ஒரு சிறு படத்துக்கு முன் இராப் பகலாய் விளக்கு எரிவதைப் பார்த்து ஆச்சரியங்கொண்டார்களே யன்றி அதைப் பற்றியாரும் வீட்டாரைக் கேட்கத் துணியவில்லை.

மூன்றுமாதம் பவுல்போதகருக்கு மிஷநெறியிடத்தினின்று வந்த கடிதத்தில், அடுத்து வரும் குருத்தோலை ஞாயிறுவாரத்தில் போதகர் கோவிலுக்குச் சென்று வழக்கம் போல சேர்விஸ் நடத்த உத்தரவு அளித்ததுடன் தன் மனைவியின் பயத்தைப்பற்றி இன்னும் ஒருமாதம் வரைக்குந் தன் பங்களாவுக்கு வராதபடிக் கேட்டுக்கொண்டார். இக்கடிதத்தைப் பற்றி ரூத்தம்மாள் கேள்விப்படவே "இஷ்டமிருந்தால் நீங்கள் மாத்திரம் அந்தக் கோவிலுக்குப் போகலாம். ஆனால் நானுங் குழந்தையும் அதில் கால் வையோம்" என்றதைக்கேட்ட போதகர் இதைப்பற்றி மிஷநெறிக்கு அறிவிக்கலாமா? என்று கேட்க "ஆ ஆ நன்றாயறிவிக்கலாம். கன்னிமரியாயின் பாதத்தை உறுதியாய்ப் பிடித்தபின் அப்பரமாண்டவனைப் பற்றி நிந்தனையாய்ப் போசும் வேதத்தையநுசரிப்பது பராபரனுக்கு விரோதமாயிராதோ?" என்றாள் ரூத்தம்மாள்.

குருத்தோலை பண்டிகை யன்று பவுல்போதகர் தங்கள் கோவிலுக்குப்போவதைக்கண்ட பெரிய மனுஷாளான சபையார் எதிர்கொண்டு அவருடன் கைகுலுக்கி சந்தோஷங் கொண்டாடினார்கள்.

குறித்த நேரத்தில் பவுல்போதகர் பிரசங்கத் தொட்டியிலேறி நிற்பதைக்கண்ட சபை



யோர் அநேகர் சந்தோஷ மகிழ்ச்சியை யடக்க மாட்டாதவர்களாய் கை கொட்டவும் வேறு அநேகர் கைக்குட்டையை மேலே உயர்த்தி விசிறவுந் தொடங்கினார்கள். சந்தடி அமர்ந்த பின் போதகர் பினவருமாறு சுருக்கமான பிரசங்கஞ்செய்தார்:

பிரிய சபையாரே! இந்த வாரம் மகா துக்கத்துக் குரிய வாரமென்று நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. ஏசுக்கிறிஸ்து மனிதரை இரக்ஷிக்கும் பொருட்டு மரணமானார். தமது இரத்தத்தைச் சிந்தி நம்மை யிரக்ஷித்தார். அவரைப் பவுல் அபோஸ்தலன் கூறுவதுபோல இருதயத்தில் தியானித்துக் கொள்ளுங்கள். துஷ்ட யூதரையும் பிலாத்தையும் பின் செல்ல வேண்டாம். பிலாத்து ஏசுவைநோக்கி உண்மையாவது என்னவென்று கேட்டானேயன்றி அதை யறிந்துகொள்ள மன மற்றிருந்தான். (யோவான்.) கிறிஸ்துவர்களிலும் அநேகர் பிலாத்தனைப்போல பிரபஞ்ச நன்மையைப் பற்றி உண்மையை யறிய மனதின்றி யிருக்கிறார்கள்! இன்னும் அநேகர் உண்மையையறிந்தும் அதைப் பின் சொல்லா திருக்கிறார்கள்! உங்களிருதயத்தில், சபையோரே! உங்களிருதயத்தில் யாதொரு வேதசந்தேகமுண்டாகும் பொழுது அதைத் தகுந்தவிதமாய் பரிகரித்துக்கொள்ள முயற்சியுங்கள். அவிந்துபோன நேத்திரங்களிலும் குழப்ப முள்ள மனச்சாஷி வாதைக் குரியது! ஆம்! உண்மையை அறிந்தால் மனதில் ஞான சமாதானமுண்டாகும்; மனக்குழப்பமற்று ஆறுதலுண்டாகும். உண்மை யின்னதென்று கண்டுகொள்பவனே பாக்கியவான்! நீங்களும் பாக்கியவான்களா யிருக்க மனமிருந்தால் அந்த உண்மையை அறிந்துகொள்ள பிரயாசைப்படுங்கள். அந்த உண்மையை அறிந்து அதைப் பின்செல்ல முயலும்பொழுது மலைபோ லெழும்பும் விக்கினங்களை ஜெயிக்கப் பராபரனுடைய அருளை மன்றாடுங்கள். சுருக்கமாய்ச் சொல்லும் இச்சிறு வசனங்கள் என்னிருதயத்தினின்று புறப்படும் கடைசிவார்த்தைகளாக இருக்கட்டும். இதே என் கடைசிப் போதகம். கடந்த 18 வருஷ காலமாய் உங்கள் இரக்ஷண்ய வேலையில் அலுவலாயிருந்தேன். என் போதகத் தொழிலில் நான் செய்த தவறுகளை ஏசுவின் முகத்தைப் பார்த்து மன்னித்துக்கொள்ளுங்கள். (என்ன தவறுகள்? என்று சபையாரில் சிலர் வாய்க்குள் சொல்லிக் கொண்டார்கள்.) உண்மையைக் கண்டறிய கெஞ்சிக் கேட்டுக்கொள்ளும் உங்கள் போதகருடைய கடைசி போதகத்தை ஒருபோதும் மறவாதேயுங்கள். ஏசுக்கிறிஸ்துவில் உங்கள் சமஸ்தருக்கும் மங்களம். கடைசி வந்தனம். ஏமென்" என்று சொன்னபின் பிரசங்கத்தொட்டியினின்று இறங்கினார்.

போதகர் பிரசங்கத்தை முடித்தபின் வழக்கப்படி இராப்போசன சேர்விஸ் நடத்தாமலே தன் வீட்டுக்குப் புறப்பட்டுப் போவதைக் கண்ட சபையார் வெகுவாய் அதிசயித்தார்கள். போதகர் பிஞ்சின் பெறப்போகிறாரென்று சிலர் சொன்னார்கள். வேறே ஊருக்குப் போகப் போகிறாரென்று வேறு சிலர் பேசிக் கொண்டார்கள். ஆனதைப்பற்றி அவரை வீட்டில்போய்க் கண்டு பேசலாமென்று சிலர் வீட்டுக்குப்போன பொழுது அவர் வெளியே புறப்பட்டுப் போனாரென்று கேள்விப்பட்டுத் தங்கள் வீட்டுக்குச் சென்றார்கள்.

பவுல் போதகர் கோவிலைவிட்டுப் புறப்பட்டு தமது வீட்டுக்குப்போய்த் தமது மனைவியோடு சில நேரம் பேசின பின் ஈசாக் உபதேசியார் வீட்டுக்குச் சென்றார். அவ்விடத்தில் உபதேசியாரைக் கண்டவுடனே அவரைக்கட்டி மினவி கண்ணீர் விடுவதைக்கண்ட உபதேசியார் கலவரங்கொண்டு, சிலவிசை அவருடைய குழந்தைக்கு வியாதி திரும்பியிருக்குமென்று சந்தேகித்து "உமது பிள்ளையின் சௌக்கியம் எப்படி ஐயா"? "சௌக்கியந்தான் சார். அது சௌக்கிய மடைந்தது பெரியதோர் அதிசயஞ்சார்" "சந்தேகமா? குழந்தைக்கு தேவ தாயாரா லுண்டான சௌக்கியம் மெய்யாகவே அதிசயத்துக்குரியது?" "அதிலும் பெரிய அதிசயம் சார், ரூத் சத்தியவேதத்தில் சேரத் தீர்மானஞ் செய்துகொண்டது" "மெய்தானா?" "இது சத்தியம். நான் இன்று கோவிலுக்குச் சென்று கடைசி சேர்விஸ் நடத்தி சபையாரிடங் கடைசி விடை பெற்றுவந்தேன். கர்த்தருக்கு எவ்வளவோ நன்றியுள்ள வனாயிருக்கக் கடவேன். மேலும் நான் உம்மை எங்கள் சபையி லிழுத்துக் கொள்ள பட்ட பிரயாசை யெல்லாங் நிஷ்பலமானதுடன் நீரே என்னையும் என் குடும்பத்தையும் உமது சத்தியவேதத்தில் இழுத்துக்கொண்டீர்?" "நமது வேதசம்பாஷணை நேரத்தில் விஸ்வாச நாயகர் சொன்ன நியாயங்கள் உமது புத்திக்கு பிடிப்பட்டனவா?" "எனக்கு சந்தேகமுண்டாகி தர்க்கித்தே னென்று எண்ண வேண்டாம் சார். அந்த வேத சத்தியங்களில் பல எனக்கு ஏற்கெனவே தெரிந்திருந்தும்

அவர் அவைகளை விவரிக்கும் பொழுது அதிகத் தெளிவாய் கண்டுகொண்டேன். ஆனால் எங்களுடையவர்கள் ரோமான் வேதத்துக்கு விரோதமாய்க் கூறப்பட்ட ஆபேக்ஷபனைகளடங்கிய புஸ்தகமொன்றை மிஷநெறி யெனக்குக் கொடுத்து, ரோமான் மதத்தை ஷெ ஆயுதத்தால் தாக்கும்படி சொல்லி, அவரும் தமக்குத் தெரிந்த ஞாயங்களை அப்போதைக்கப்போது எனக்குத் தெரியப்படுத்தி, யெப்படியாகிலும் உம்மையெங்கள் மதத்தில் இழுத்துக்கொள்ளும்படிக்கான முயற்சி யெல்லாஞ் செய்யச் சொன்னதின்மேல் நான் அந்த சந்தேகங்களை யெடுத்துக்காட்டினேனே ஒழிய மற்றப்படி யல்ல. இரண்டு வருஷத்துக்கு முன்னேயே யான் சத்தியவேதத்தில் சேர்ந்திருப்பேன். ஆனால், சில விக்கினங்களால் பின்னிடைந்தேன். எல்லாத்துக்கும் முக்கியமும் முதன்மையுமான விக்கினம் என் மனைவி ரூத்தே. இப்பொழுது அந்த முக்கிய விக்கின முழுதும் நீங்கிப் போயிற்று. ரூத்துங் குழந்தையும் சத்தியவேதத்தில் சேரத் தீர்மானங் கொண்டு, நீங்களனுப்பிவைத்த செபப்புஸ்தகத்தை வாசித்து வருகிறார்கள். ஆனதைப்பற்றி இது அர்ச்சியசிஷ்ட வாரமாகையால் இந்தப் பரிசுத்த வாரத்துக்குள் என் குடும்பத்துடன் திருச்சபையி லுட்பட கருத்தா யிருக்கிறேன். இதைப்பற்றி யுங்கள் காட்டிகிஷ்டுக்கும் குருவானவருக்கும் தெரியப்படுத்தினால் பெருமுபகாரமாயிருக்கும்" என்று சொன்னபின் தமது வீட்டுக்குத் திரும்பினார்.

மறுநாள் காலை விஸ்வாசநாயகர் போதகர் வீட்டுக்குப் போய் ஞானோபதேச முதலிய வேத சத்தியங்களைப் படிப்பிக்கத் துவக்கினார். ஆனால் ரூத்தம்மாளும் அவள் மகளும் ஞானோபதேசத்தை நன்றாயறிந்திருப்பதை யறிந்து அதிசயித்து "கத்தோலிக்கு சத்தியங்களை யெப்படி யறிந்துக் கொண்டீர்கள்" என்று வினவினபோது "ஈசாக் உபதேசியார் கொடுத்தனுப்பின இந்த புஸ்தகத்தை வாசித்து அறிந்து கொண்டோம்" என்றார்கள். இரண்டு மூன்று நாள் பாவசங்கீர்த்தனம், தேவநற்கருணை முதலியவைகளைப்பற்றி விஸ்தாரமாய் உபதேசித்தார். பெரிய வியாழக்கிழமை இவ்விருவரும் குருஸ்வாமியாரிடஞ்சென்று அவர் கேட்ட கேள்விகளுக்கு திருப்தியாய் மறுமொழி சொன்னதின்மேல் பெரிய சனிக்கிழமை ரூத்தம்மாளுக்கும் அவள் மகளுக்கும், விஸ்வாச நாயகர் மனைவியும் ஈசாக் உபதேசியார் குமாரத்தியும் ஞானத்தாய்மார்களாக நிற்க, ரூத்மரி யென்றும் ஊர்துமரி யென்றும் நாமங்களிட்டு ஞானத்தீட்சைக் கொடுக்கபட்டது. மறுநாளாகிய பாஸ்கு திருவிழா வன்று பவுல் போதகரும் அவருடைய மனைவியும் பிள்ளையும் மகாப் பத்தி விஸ்வாசத்துடன் தேவநற்கருணை உட்கொள்ளும் பாக்கியம் பெற்றார்கள்.

இரண்டாம் பாகம் முற்றிற்று.

---

# CORRECT THINGS FOR CATHOLICS.

## கத்தோலிக்கு கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

(முன் தொடர்ச்சி)

### தபசுகாலம்.

1. தபசுகாலம் துவக்கும்போதே, ஐயோ தபசுகாலம் வந்துவிட்டதே யென்று விசனித்து முறுமுறுப்பது ஒழுங்கல்ல.

2. முகத் தாட்சண்யத்திற்காகத் தபசுகால முறைகளை யனுசரிப்பது ஒழுங்கல்ல.

3. அற்ப காரணத்தைப் பெரிதாக விஸ்தரித்துக் காட்டி விசாரணைக்குருவிடத்தில் சுத்தபோசன ஒரு சந்தி ஒழுங்குகளினின்றும் விடுதலைபெறுவது ஒழுங்கல்ல.

4 ஒரு பொழுது வென்று சொல்லி, பலவகை கறி பதார்த்தங்களுடன் இருபொழுது சாப்பாட்டையுஞ் சேர்த்து மூக்கைப் பிடிக்க சாப்பிடுவதும், சில்லறைப் போசனமாக தாங்கள் ஆசைப்பட்ட கொழுமையான பலகாரங்களைச் செய்து திருப்தியாய்த் தின்பதும் ஒழுங்கல்ல.

5. சிறுவைப்பாதைக்குப் போகத் தப்பிப்போவது ஒழுங்கல்ல.

6. கூடியபோது நித்தம் பூசைக்குப் போகாமலிருப்பது ஒழுங்கல்ல.

(விசாரணைக்கோவிலுக்கு அருகாமையிலிருக்கும் எத்தனையோ நூற்றுக்கணக்கான பேர்கள் கொஞ்சம் தொந்தரை யெடுத்துக்கொண்டால், நித்தம் பூசைக்குப் போக முடியும்; பூசையோடு தங்கள் நாட்களைத் துவக்கலாகும். ஜெர்மானியா தேசத்தில் வாரநாட்களில் ஞாயிற்றுக்கிழமையைப்போலவே பூசைநேரத்தில் கோவில் நிரம்பி யிருக்கிறதென்று சமாசாரப் பத்திரிகையால் தெரியவருகிறது).



7. இயாதோர் உத்தியோகம், அலுவலின்றி வீட்டில் சும்மா யிருப்பவர்களும், பேதைகளும், புத்தியற்றவர்களுமே ஒருசந்தியா யிருக்கவேண்டும் என்றெண்ணுவது ஒழுங்கல்ல.

8. ஆரம்ப சூரத்துவமாக துவக்கத்தில் அதிக சுறுசுறுப்பைக் காட்டி பிறகு தளர்ந்துபோவது ஒழுங்கல்ல.

9. தபசுகால முறைகள் சரியோ சரியல்லவோ என்று தர்க்கமிட்டு அதைப் பற்றிக் குறை கூறுவது ஒழுங்கல்ல.

10. தாய் தந்தைகள் தபமுறைகளை யநுசரிக்காமல் தங்கள் பிள்ளைகளுக்குத் துர்மாதிரிகையா யிருப்பது ஒழுங்கல்ல.

11. குருத்தோலை பெற்றபிறகு பூசை காணாமல் அதிலே பின்னல்வேலையா யிருப்பது ஒழுங்கல்ல.

12. பெரிய வியாழக்கிழமையை ஒரு சந்தோஷ நாளாகப் பாவித்து, கோவில் சந்திப்பதாகச் சொல்லி, ஊர் சுற்றித் திரிவது ஒழுங்கல்ல.

13. பெரிய வியாழக்கிழமை யன்று எல்லா நகைகளையுந் தரித்துக்கொண்டும், கபாலமலை சந்திக்கப்போகும் ஒவ்வொரு விசைக்கும் உடுப்பை மாற்றி, தினுசு தினுசாய் புடைவைகளைக் கட்டிக்கொண்டும் வீண் டம்பஞ்செய்வது ஒழுங்கல்ல.

14. பெரிய வியாழக்கிழமை யிரவில் தேவநற்கருணை சந்திக்கப்போய் தூங்கி விழுவது ஒழுங்கல்ல.

15. பெரிய சனிக்கிழமையன்று தீர்த்தத்திற்காக ஒருத்தர்மேல் ஒருத்தர் விழுந்து சண்டை யிடுவது ஒழுங்கல்ல.

16. கொஞ்சம் துட்டு செலவுக்கு அஞ்சாமல் அர்ச்சியசிஷ்டவாரம் என்னும் புஸ்தகத்தை வாங்கி எல்லா சாங்கியங்களின் விவரத்தையும் அறிந்துகொண்டு அர்ச். வார்த்தை தக்க பக்தியோடு செலவழித்து ஞான நன்மையடையாம லிருப்பது ஒழுங்கல்ல.

17. விநோதப் பிரியத்தினால் தன்னுடன் கோவிலுக்கு வந்திருக்கும் அக்கியானிகளுக்கும் பதிதர்களுக்கும் கோவிலிலேயே வியாக்கியானம் செய்வது ஒழுங்கல்ல.

18. அக்கியானிகளைப் போல உண்பதிலும் தின்பதிலும் மாத்திரம் இல்லாத சீலத்தைக்காட்டி ஆத்தும சீர்திருத்தம் இல்லாமலிருப்பது ஒழுங்கல்ல.

(இன்னும் வரும்.)

---

# OUR WOMEN.

## நமது மாதர்.

எத்தேசத்திலும் நாகரிகத்தின் உயர்வு தாழ்வை யறிவதற்கு, தேசாசார ஒழுங்கில் அத்தேசமாதர் வசிக்கும் நிலைமையே ஓர் முக்கிய சாதனமாகும். மதாசாரம், தேசாசாரம், சன்மார்க்கம் முதலிய விஷயங்களில் மாதர்க்குள்ள அறிவளவேயாகும் ஒரு தேசத்தார் முன்னுக்கு வருவது. இப்படியிருக்க, நந்தேய மாதர், முக்கியமாய் நமது கத்தோலிக்கு இந்திய மாதரின் தற்போதிய நிலைமை இன்னதென்றுணர்ந்து, அவர்களைத் தற்கால நாகரிகங்களுக்குத் தக்கவாறு சீர் திருத்துவது, நமது முக்கிய கடமை என்றே இவ்வியாசத்தை ஒருவாறு வரையத் துணிந்தேன். இதை வாசிக்கநேரும் பெண்மணிகள் இதில் சொல்வனவற்றை சற்றே கவனித்து தம்மிட முள்ள குறைகளைத் தாமே கூடியவரையில் நிவர்த்திசெய்து கொள்ளினும் கொள்ளலாம்.

"பழையனகழிதலும் புதியனபுகுதலும்
வழுவல காலவகையினானே."

நம்மைச்சுற்றி இப்போது நடந்தேறிவரும் ஆயிரங் கணக்கான மாற்றங்களை நாம் கண்ணாரக் கண்டிருந்தும் கண்டுங் காணாதவர்போலவும், கேட்டுங் கேளாதவர்போலவும், ஒன்றுக்கும் உதவாப் பண்டைய வழக்கங்களையும், ஆதாரமில்லா அநேக கொள்கைகளையும் நமது வாழ்க்கையில் தினசரி நேரும் சாதாரண காரியங்களிலும் பிரவேசிக்க விடுகின்றோம். சிதைந்துபோன அநேக பழைய வழக்கங்களைப் பிடிவாதமாய்க் கையாடி பலவகையினும் அவற்றை ஆதரித்து; அவற்றின்படி ஒழுகாதவர்களையும் நிந்தித்து, தான் கெட்டதுமன்றி தன்னினத்தையுங் கெடுத்ததுபோல் ஆசார சீர்திருத்தத்

திற்கு பெருத்த இடையூறாய் இருந்து, அநேகர் தமக்கென்றே இவ்விஷயங்களில் ஓர் புதுநெறியைத் தெரிந்துகொள்ள சக்தியற்றவராய் இருக்கின்றனர். இவ்வாறு பழமை பாராட்டுவதால் வருங்கெடுதிகளை இன்னார் சற்றேனுங் கவனியாதிருப்பது வெகு விசனத்துக்குரியதா யிருக்கிறது. மேலே சொல்லிய பவணந்தி முனிவரது சூத்திரப்படி, அனுவசியமும், அசௌகரியமுமா யிருப்பதன்றி நமது முன்னேற்றத்துக்கு இடையூறாகவு மிராநின்ற வழக்கப் பழக்கங்களை முழுதுந் தொலைத்துவிட்டு நமது நல்லிருப்புக்கும் நாகரிகாபிவிருத்திக்குமான புதிய வழக்கங்களையும் ஆசாரங்களையும் கைப்பற்றுவது சற்றுங் குற்றமாகாது. மாமூல் என்னுங் கொடுங்கோலனுக்கு அடிமைகளைப்போல் அடிபணிந்தொழுகலும், பூர்வகாலத்தவர் அநுசரித்து வந்த பழக்க வழக்கங்களில் பூரண நம்பிக்கை வைத்து குருட்டுத்தனமாய் அவர்களைப் பின்பற்றி நடத்தலும் ஒரு தேசத்தார் முன்னுக்கு வரவொட்டாமற் றடுக்கும் முக்கிய காரணங்கள். இதனாலன்றோ நமது மாதர் இல்வாழ்க்கைக்கின்றியமையாத் துணைவரா யிருப்பதைவிட்டு அநேக குடும்பங்களில் இன்னலுக் கிடனாயிருந்து ஆடவர்க் களவற்ற ஆயாசத்தையும் மனக்கவலையையும் விளைவிக்கின்றனர். சிறந்த அறிவும் செறிந்த குருட்டாட்டத்தில் மழுங்கியே போயிற்று. சீர்திருத்தம் நம்மவர்க் கவசியமென்றுணருபவர் அநேகரல்ல. இவர்களில் சீர்திருத்தமே கண்ணுங் கருத்துமாய் இருந்து அதற்காக உழைப்பவர் வெகு சிலரே. இச்சிலரும் தம்முழைப்புக்குத் தகுந்த ஊதிய மில்லை என்று கலங்குவதின் காரணம்; ஆசார சீர்திருத்த நெறியில் பழையன போற்றுதல், புதியன வெறுத்தல் என்னும் கடக்கருங் கற்பாறைகள் கிடத்தலேயாம்.

இதுவே நம்மவரின் தற்போதிய நிலைமை. தேசங்கள் தோறும் பாஷைகள் வேறு என்பதுபோல், தேசாசார ஒழுங்குகளும் வெவ்வேறாகவே இருக்கக் காணலாம். இவ்வொழுங்குகளுக் கமைந்தே தேசகாரியங்களும் நடைபெறுவதும் சகசமென்பது அநேக சரிதநூலாசிரியர் துணிபு. நமது சுயதேயமாகிய இந்தியாவிலும் காரியங்கள் அப்படியே நடந்தேறி வருகின்றன. ஆனால் இதர தேசங்களில் பழக்க வழக்கங்கள் காலவித்தியாசங்களுக்குத் தகுந்தவாறு மாறுதல் அடைகின்றன; இந்தியாவிலோ பரம்பரையாய் நமது முன்னோர் அநுசரித்து வந்த ஆசாரங்களை இக்காலத்துக் கேற்ப மாற்றுவதென்றால் கூடாதகாரியம். மனிதருடைய நல்லபிப்பிராயங்களையும் சீர்திருத்த நோக்கங்களையும் சற்றுங் கணியாது, தாமே சரியானவையென ஆட்சிபுரிந்துவரும் ஆசாரவொழுங்குகள், ஒரு தேயத்துக் குரித்தானவை என்று புகழ்ந்தாதரிப்பதற் கேற்றவை யல்ல வென்று ஓர் மேற்புல சாஸ்திரி வரைந்திருக்கிறார். பழைய ஆசாரங்கள் பண்டைய காலத்தவர்க்காதலின், அவற்றை காலத்துக் குகந்தவாறு மாற்றிப் பிரயோகியா திருத்தலே, மேற்கூறிய நியாயத்தை உறுதிப்படுத்த சாலும்.

நமது தேசத்தில் விசேஷமாய் மாதர்க்கென் றமைந்துள்ள வழக்கம், ஆசாரம், முதலியவற்றை எடுத் திங்கெழுதுவதால், நமது மாதரின் நிலைமை இத்தகைத் தென்பது போதரும். குழந்தைப் பருவத்திலேயே ஆண் பெண் என்னும் இருபாலர்க்கு முள்ள செயற்கை வித்தியாசம் செவ்வனே விளங்குகிறது. மணக்கோலம் பூணுக் கன்னிகைப்பருவம் பிறந்தது முதல் பத்து அல்லது பன்னிரண்டு வருடங்களேயாம். பெண் பிறவி பெரிதுந் துன்பத்திற் கிடனாகுமென்று பெற்றோர் நினைப்பது வழக்கம். தங்களுக்குக் கடவுள் அருளியபிள்ளை பெண்ணாயின் தங்களைப்போல் நிர்ப்பாக்கியர் இவ்வுலகில் எவரும் இல்லையென்று நினைக்குந் தாய்மார் எத்தனையோ பேரை இந்நாட்டிற் காணலாம். நமது மாதரே பெண்ணினும் பிள்ளை விசேஷமென்று, தமக்குண்டாவது ஆண் பிறப்பா யிருக்கவேண்டுமென்று கடவுளைத் தொழுகின்றனர். ஓர் ஆண் மகவை வளர்ப்பதில் தாய்மார்க் கிருக்கும் சிரத்தையும் ஊக்கமும் பெண் குழவிகளிடங் காட்டுவதில்லை. நமது மங்கையர் இப்பிரபஞ்ச உற்பத்தி யியல்பில் தமக்கென் றுள்ள சுதந்தரங்கள் இன்னவையென அறியாதிருத்தலே அவர்களிடங்காணும் மேற்கூறிய வஞ்சகமும் இயற்கைக்கு விரோதமுமான குணபேதங்களுக்குக் காரணம்போலும். இந்திய மாதர் தாம் இவ்வுலகில் இருப்பது ஆடவர்க் கூழியம் செய்யவே யன்றி வேறெதற்கு மல்ல என்று நினைக்கிறார்கள். கல்வியறிவும் நன்னெறிப் பழக்கமு மின்றி, நற்குண நற்செய்கைகளைக் கைப்பற்றாதவர்களாய்த் தன் னில்லமும் விசேஷமாய்ச் சமையலறையுமே கதியென் றிருத்தலால் ஓர் இந்தியமாது, ஆதியில் சர்வேசுரன் கருதியபடி தன் காதலனுக் கினிய "துணைவி" யென்னும் பதவிக் கருகளல்ல.



மனிதர் இவ்வுலகில் நற்பதவியடைந்து தம் வாணாளை கூடியவரையில் நிம்மதியுடன் கவலையின்றி போக்க முக்கிய எதுவாயிருப்பவர் பெண்பாலர் என்பதை நம்மவர் சற்றுங் கவனியாமல், ஆண்பிள்ளைகள் அபிவிர்த்திக்காய் எடுத்துக்கொள்ளும் பிரயாசையும் ஊக்கமும் பெண்பிள்ளைகள் மாட்டில்லை. ஆணும் பெண்ணும் மனிதரேயன்றி ஆண்வேறு பெண்வேறு என்னும் வித்தியாசம் உண்டோ? அப்படியிருக்க, ஆண்பிள்ளைகளைப்போல் பெண்பிள்ளைகளையும் படிப்பிக்குங் கடமை பெற்றோரைச் சார்ந்தது என்பதை நஞ் சத்தியவேத மாந்தர் நன்குணர்வாராயின், நம்மை எப்பக்கமும் போக விடா திடைஞ்சல் செய்யும் பழக்க வழக்கங்கள் நம்மை விட்டகன்று கூடியசீக்கிரம் நாம் முன்னுக்குவருவோம் என்பதற் கையமில்லை.

(இன்னும் வரும்.)

S. Selvaraju.

---

## CORRESPONDENCE.

### கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்தரவாதி யல்லர். கடித மெழுதுவோர் தங்கள் கடிதங்களை மிகத் திருத்தமாயும், காகிதத்தின் ஒரே பக்கத்தில்இடது பாரிசத்தில் நாலுவிரற்கடை இடம் விட்டும் எழுதுவதுடன், தங்கள் பெயர் விலாசங்களையும் தெளிவாய் எழுதல் வேண்டும். பெயர், விலாசம் வெளிப்படுத்துவதற் கல்ல, கடிதத்தின் உண்மைச் சங்கதிகளைப் பத்திராதிபர் உறுதிப்படுத்திக் கொள்வதற்கே. வெளிப்படுத்துவதற்கு தகுதியற்றன வென்று தள்ளிவிடப்பட்ட கடிதங்கள் திரும்பவும் வாபீஸ் செய்யப்பட மாட்டா. — ப—ர்]

கண்டி மேற்றிராசனம்

மகா கனந் தங்கிய

பெக்மேயர் மேற்றிராணி ஆண்டவரின்

(The Right Rev. Dr. Beed Beekmeyer. O. S. B.)

நார்வுட் பகுதி விஜயம்.

---

காலஞ் சென்ற கிலமென்ற் பஞ்ஞானி மேற்றிராணி ஆண்டவரின்பின் தமது மந்தையை



மேய்க்க மகா வணக்கத்துக்குரிய பெக்மேயர் ஆண்டவரைத் தெரிந்தெடுத்து எங்களுக்கு கையளித்த சருவேஸ்பரனுக்கு அனவரத காலமும் ஸ்துதியும் தோஸ்திரமு முண்டாவதாக!

நமது மேன்மை தங்கிய மேற்றிராணி ஆண்டவர் தமது பங்கு விசாரணையி லடங்கிய அட்டன் சந்த குருஸ் ஆலயத்திற்கு சென்ற மாசிமாதம், முதல் திகதி முதல் விஜயம் செய்யலானார். 9-ம். திகதி காலையில் அட்டன் பங்கைச் சேர்ந்த புகவந்தலா அர்ச்: ஜெபமாலை மாதா ஆலயத்திற்கு விஜயம் செய்ய, நார்வுட் மார்க்கமாய் இரட்டைக்குதிரை பூட்டிய இரதத்தில் மாக்ஷிமை தங்கிய மேற்றிராணி ஆண்டவரும் மகா சங்கைக்குரிய மெக்கெல் பங்கு சுவாமியாரும் வருவதாகக் கேள்வியுற்ற நார்வுட் பங்கு கிறிஸ்தவர்களும், சில கனவான்களும் எதிர்கொண்டு அழைக்க, நமது ஞானத்தந்தை தம்மைக் காண வந்த கிறிஸ்தவர்களைக் கண்ணேக்கி இரதத்தை விட்டிறங்கினவுடன் சகல கிறிஸ்தவர்களும் திருக்கரத்தை முத்தி செய்தபின், கிறிஸ்தவர்களின் வேண்டுகோளின்படி மேற்றிராணி ஆண்டவரை (பொட்டோகிறாப்,) புகைப் படம் பிடிக்கப்பட்டது. இது முடிந்தபின் மேளதாள வாத்தியம் முழங்க, சிறுவர் பக்தியுடன் கொடிபிடித்து முன் செல்ல, காண வந்த சகலரும் அணியணியாய் வர, நடை பாவாடை விரித்து அவருக்கென அமைக்கப்பட்ட விசித்திர பூப்பந்தலிற்கு பவனியாய்ச் செல்ல, அங்கே நமதாண்டவர் ஆசன மமர்ந்தார். உடனே கனம் பிராஞ்சிஸ் மிராந்தா அவர்களால் தமிழில் வந்தன வாழ்த்துப் பத்திரிகை ஒன்று வாசிக்கப்பட்டது. இது முடியவும் அங்கு கூடியிருந்தவர்களெல்லாம் ஹீப் ஹீப் உறு! என்று மும்முறை கரக்கோஷ்டம் செய்தார்கள். பின் மேற்றிராணி ஆண்டவர் எழுந்து வாழ்த்துப் பத்திரிகையை அங்கீகாரம் செய்து, இக்காரியங்களில் அதிக சிரமமெடுத்துக்கொண்ட நார்வுட் எட் கங்காணி அவர்களுக்கு நன்றி யறிந்த வந்தனஞ் சொல்லி யாவருக்கும் கடைசி ஆசீர்வாதம் கொடுத்து இரதத்தில் ஏறினார். உடனே இரதமும் புகவந்தலாவை நோக்கி ஓடிமறைந்தது.

இங்ஙனம்.

பத்திரிகை நேயன்.

நார்வுட்.

சாத்தூரில்

## சேசுசபை அல்போன்ஸ் நாதர் கல்லறை தெரிசன யாத்திரை.

1911-ம் வருடம் பெப்ரவரிமாதம் 15-ந் தேதி பரலோக பிராப்தியான சேசுசபை கனம். அல்போன்ஸோ ஜேர்சேப் ஹாஸ் சுவாமிகளின் கல்லறையைத் தரிசிக்கத் தூத்துக்குடியிலுள்ள பரதகுல கிறிஸ்துவர்கள் நிகழும் மாதம் 15-ந் தேதி சாத்தூர்க்குப் பயணமானார்கள். மறுநாட் காலை 6 மணிக்கெல்லாம் சாத்தூரையடுத்த கிராமங்களிலுள்ள கிறிஸ்துவர்களில் அநேகர் சாத்தூர் சேசுவின் திரு இருதயத் தேவாலயத்தைச் சேர்ந்தார்கள். யாத்திரிகர் சகலரும் பாவசங்கீர்த்தனம் பண்ணி முடிந்ததும் 7 மணிக்குச் சாத்தூர் பங்குவிசாரணை கனம். E. "தலான்" சுவாமிகளால் பாடற்பூசை ஆரம்பிக்கப்பெற்றது. அந்நேரத்தில் Mr. சின்னையா வில்லவராயர், Mr. சார்லி ரோச் இவர்களிருவருடையவும் முயற்சியில் சவுதரிக்கப்பெற்ற தேவ தோத்திரக் கீர்த்தனங்களானவை பெரிதோர் திருவிழா மஹோற்சவத்தை நினைப்பூட்டியது. கூடியிருந்த கிறிஸ்துவர்களில் பெரும்பாலர் தேவநற்கருணை பெறவும் அல்போன்ஸ் நாதரது ஆத்தும இளைப்பாற்றிக்காகச் சகலரும் வேண்டிக்கொள்ளவுமாயிருந்த திவ்ய பூசை முகிந்ததும், கிறிஸ்துவர்கள் சகலரும் கனம். E. தலான் சுவாமிகள் சகிதம் கண்ணைக் கவரும் சீதளம் பொருந்திய செடி கொடிகளாலும், மகரந்தத்தை அள்ளி யிறைக்கும் பல வர்ண முடைத்தான மலர்களால் அலங்கரிக்கப்பெற்று பிரகாசிக்கின்ற மெழுகுவர்த்திகளாலும் விளங்கிக்கொண்டிருந்த அழகிய கல்லறைக்கு வந்து "லீபெராமே" என்கிற மந்திரத்தைப் பாடி அல்போன்ஸ்நாதர் ஆத்துமத்திற்காக வேண்டிக்கொண்டார்கள். உடனே, மிகவும் சங்கீத கியான முடைத்தான Mr. சூசை வில்லவராயர் அவர்களாலும் இவரது சகோதரர் Mr. சின்னையா வில்லவராயர் அவர்களாலும் அல்போன்ஸ்நாத சுவாமிகளின் அன்பின் திரட்சியையும் அபிமானப் பெருக்கையும் பாராட்டிப் பாமாலைகள் பாடப் பெற்றன. பாடலைத் துவக்கியதும் சூழநின்றவர்கள் எல்லோரும் சுவாமியவர்களை அன்றைக்குத்தான் மரிக்கக் கொடுத்தவர்கள்போல மாலைமாலையாய்க் கண்ணீர் சொரிந்து ஓலமிட்டழுதார்கள். அந்நேரத்தில் ஆகாயமும் அந்தகாரப்பட்டு மழை துளித்துக்கொண்டிருந்தது. பாமாலை ஆனதும் அல்போன்ஸ்நாத சுவாமிகளின் அடியார்களில் ஒருவர் ஆகிய ஸ்ரீமத் பண்டித M. P. மஸ்கறிஞஸ் அவர்கள் சுவாமியவர்களின் சுகிர்த லட்சணங்களைப் பற்றி சிறந்ததோர் உபந்நியாசம் செய்தார்கள். உபந்நியாசத்தின் முக்கிய பாகமாகச் சுவாமியவர்கள் மரித்த தேதியாக நிகழ் மாதம் 15-ந் தேதி காலைத் தூத்துக்குடியில் பெய்த மழையையும் மறுநாட் காலை சாத்தூர்க் கொண்டாட்டநேரத்தில் பெய்து கொண்டிருந்த மழையையும் உபமானப்படுத்தி, சுவாமியவர்களை நினைக்குந்தோறும் நாம் மாத்திரமல்ல, ஆகாய முதலாய் அழுதுக் கொண்டிருக்கிறது பாருங்களென்று சொல்லித் தமது பிரசங்கத்தைப் பூர்த்திசெய்தார்கள். அதன்பின் அங்கிருந்த பிச்சைக்காரர் சகலருக்கும் பண உதவியும் சிற்சிலருக்கு வஸ்திரதானமும் வழங்கப் பெற்றன. அன்று மாலை 5 மணிக்குத் தூத்துக்குடிவாசிகள் சாத்தூரை விட்டுப் புறப்பட்டார்கள். உடனே அல்போன்ஸ் நாத சுவாமிகளின் சரித்திர காவியத்தை Mr. சூசை வில்லவராயர் அவர்கள் ஆரோகண அவரோகணத்துடன் பாலினுமினிமையாகப் பாடத் தொடங்கினர். ரெயில் ரதத்தில் உடனிருந்த இதர மதஸ்தருங் கூடக் காவியத்தைக் கேட்டு சுரோத்திரானந்தங் கொண்டு மிகவே சொக்கிப் போனார்களென்றால், கிறிஸ்துவயாத்திரிகளாகிய எங்களுக்குக் கதாநாயக சுவாமிகளிடத்தும், காவியகர்த்தாவிடத்திலும், கண்டமெடுத்துப்பாடிய Mr. வில்லவராயரிடத்திலும் ஏற்படக்கூடிய நன்மதிப்பைக் கேட்பானேன்? தூத்துக்குடி ஸ்டேஷன் அடைந்ததும் காவியமும் எல்லை கண்டது. இந்தவகையாய் எங்களது இந்த வருஷ தெரிசன யாத்திரை சமாப்தி பெற்றது.

நல் யாத்திரைக்கு வேண்டிய சகல விஷயங்களும் சரியாய் நடந்தேற உதவியா யிருந்த சாத்தூர் கனம். E. தலான் சுவாமிகளுக்கும், தூத்துக்குடி முனிசிப்பல் சேர்மன் ஸ்ரீமான். குருஸ் பெர்னாந்தீஸ் அவர்களுக்கும் விருதுபட்டி ராலி ஆபீஸ் புரோக்கர் ஸ்ரீமான். J. N. கொறேர அவர்களுக்கும் யாத்திரிகர் வந்தனம் அளிக்கின்றார்கள்.

அல்போன்ஸ்நாத சுவாமிகளின் அழகிய நாமம் அநவரதமும் ஆசீர்வதிக்கப்படுவதாக.

தூத்துக்குடி.
17—2—13. } நல்யாத்திரிகன்.



## ஓர் சந்தேக வினா.

நல்லாயன் பத்திராதிபருக்கு பல்லாயிரம் வந்தனம்.

ஐயா!

ஓர் பெண்ணை அல்லது ஆணை திருச்சபை ஆசாரத்தின்படி ஞானப்பிள்ளைகளாகச் சுதந்தரித்துக்கொண்ட ஞானத் தாய்தந்தையர்கள் தங்களுடைய சொந்தப் பிள்ளைகளுக்கு ஷை ஞானப்பிள்ளைகளை விவாகஞ் செய்துகொள்ள நமது தயை நிறைந்த தாயாகிய திருச்சபை ஸ்வாதீனம் கொடுக்கிறதா? வென்பதற்கு நும் பத்திரிகை மூலமாக விடைபகர கனம் தங்கிய பத்திராதிபர் அவர்களையும், கண்யம் நிறைந்த பத்திராபிமானிகளையும் வெகு விநயத்துடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சந்தேகிப்போன்.

[ஞானத்தாய் தந்தையர் தங்கள் ஞானப்பிள்ளையைத் தங்களுடைய சொந்தப் பிள்ளைக்கு விவாக பந்தனமாக்கத் திருச்சபை ஆக்ஷேபிக்கிறதில்லை. ஞான உறவினால் மெய்விவாகத்திற்கு ஏற்படும் விக்கினம், ஞானப் பிள்ளைக்கும் அதன் ஞானத்தாய் தந்தையர்க்கும் அதன் பெற்றோருக்குமே யன்றி மற்றவர்களுக் கல்லவென்றறியவும். ப-ர்.]

---

## பேரியதாழை

"அமலோற்பவ லூர்து நாயகியின் திருநாள் மஹோற்சவம்"

ஆதவனை யாடையாகவும், அம்புலியைப் பாத பீடமாகவும் கொண்ட அமலோற்பவ லூர்துநாயகியின் திருநாள் சென்ற வாண்டைப் போலவே தக்க சிறப்போடு நடைபெற்றது. சென்ற பெப்ரவரிமாதம் 7-ந் தேதி இவ் வுற்சவத்திற்காய் துவஜாரோகணஞ் செய்யப்பட்டது. அற்றைமுதல் 9 நாள் நொவீனா இந் நாயகியின் திருக் கெபியிலேயே மிக்காடம்பரத்துடன் நடை பெற்றது. தினந்தோறும் ஹார்மோனிய வாத்தியத்துட னினிய கீதங்களு மீற்றில் தீபாலங்கார காக்ஷியு மிருந்தன. 15-ந் தேதியாகிய சனிவார மாலையிற் கதிரவன் தன்னையே வாடையாகக் கொண்ட "தாய்" மிகுதியு மன்புடைத்தவள், என் றுரைக்குமாப்போல் தணிந்து தண்ணிழல் தருவானாயினான். தெருக்களெங்கும் துவஜ தோரணங்களால் சிங்காரிக்கப்பட்டிருந்தன. திரு யாத்திரிகர் 'உம்மிடத்தி லிரந்து கேட்டதை யடையாமற் போனோர் ஒருவரு மில்லை யென வுலகத்திற் கேள்விப் படுகிறோம்.', என்னும் திரு மொழிகளையே யடிக்கடி புகன்றவராய் கெபியினருகே நிறைந்து நின்றனர். $4\frac{1}{2}$ மணிக்கு சங். சுவாமிகள் முன் செல்ல, எம் நகரிலுள பஞ்ச சபையினரும் அணியணியாய் அவரைப் பின் தொடர்ந்து செல்ல, திரு யாத்திரிகரும் இதரரும் பின்னேக, சுரூப சுற்றுப்பிரகாரம் நடந்தேறியது. பின் னிம் மஹாத்திரள் மீண்டும் கெபி வந்தடைய, சங்கைக்குரிய இஞ்ஞாசிநாத சுவாமிகள் நமதிரக்ஷகர் சிலுவையி லிருந்து திருவாய்மலர்ந் தருளிய "ஸ்திரீயே! இதோ உனது மகன்": இதோ உனது தாயார்" என்ற விரு வாக்கியங்களைக் கொண்டு கன்னெஞ்ச ரிருதயமுங் கரையும் வாறு பிரசங்கித்தார்கள். 7 மணிக்கு வெஸ்ப்பர்ஸ் பாடப்பட்டது. பின் னிரவெல்லாம் தீபாலங்காரத்தாலும் வாண வேடிக்கையாலு மிருள் நீங்கி வொளி வீச, இரவு பகலெனக் காணப்பட்டது. 16-ந் தேதியாகிய ஆதிவாரத் தன்று உதயம் $5\frac{1}{2}$ மணிக்கு திருக் கெபியில் ஒரு பூசையும் $7\frac{1}{2}$ மணிக்கு தேவாலயத்தில் ஒரு பாட்டுப் பூசையும் நிறைவேறின. மாலை 4 மணிக்கு முந்தின தினத்திற்போலவே சுற்றுப்பிரகாரம் நடைபெற்றது.

## அமலோற்பவ லூர்துநாயகி சபையின் வருடாந்த பொதுக்கூட்டம்.

கடவுள் நமது பாப்பரசரை காப்பாராக என்ற கீதத்தோடு கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அடுத்த வருடத்துக்கு காரியதரிசியாக ஸ்ரீமான். T. N. பெர்னாந்து அவர்கள் நியமனமடைந்தனர். வருடாந்த கட்டண விஷயமாய் சில நிபந்தனைகள் நிரூபிக்கப்பட்டன. சபையபிவிர்த்தியை யிட்டும், நகராபிவிர்த்தியை யிட்டும் சில உபன்யாசங்கள் நிகழ்ந்தன. கடவுள் நம தரசரைக் காப்பாற்றுவாராக வென்ற கீதம் ஆங்குள்ள அனைவராலும் பாடப்பட கூட்டம் கர கோஷ்டத்துடன் கலைந்தது.

"அமலோற்பவ நாயகியே வாழ்க"

இங்ஙனம்,

"தாழை, வெண்பிறை மரபினன்"

---

## உப்பள்ளி.

கடந்த பெப்ரவரிமீ 10-ம் தேதி சாயரட்சை சுமார் 7 மணிக்கு உப்பள்ளி அர்ச் சூசையப்பராலய காம்பவுண்டில் வெய்யோன்போல் விளக்குகள் பிரகாசிக்க, மகுட தோரணங்கள்

எப்பக்கத்திலும் பறக்க, கனதனவான்களான வரும் கூட்டங்கூட்டமாய் அங்குசெல்ல, இது என்ன வேடிக்கையோ வென ஆவலாய் நானும் அவர்கள் பின் சென்றேன். ஆ! ஆ! அவ்விடத்தில் சென்ற் மேரிஸ்-தமிழ்-ஸ்கூலின் பிள்ளைகளால் இயற்றப்பட்ட ஓர் சிங்கார மண்டபம் துலங்கவும், அதனுள் ஸ்கிரீன்கள் அணியணியாய்த் தொங்கவும், எதிரில் யாவரும் ஆசனங்களில் அடைந்து அமரிக்கையா யிருக்கவும் கண்டேன். சற்று நேரத்துக்குள் திடீரென பூஜ்ய மேற்றுணியாராகிய மிக வந்திக்கத்தக்க என்ரி-டேரிங் S. J. ஆண்டவரவர்கள் சபா மண்டபத்தை நோக்கி வருகிறதைக் கண்ட ஷை ஸ்கூல்பிள்ளைகள் "வெல்கம்" என்கிற மங்கள சோபன பாடல்பாடி முடிக்கவும், ஆண்டவரவர்கள் தம் ஆசனத்தில் அமரவும் அவர்களுக்கு இருசிறுமிகளால் புஷ்ப ஆரம் செண்டு அளிக்கப்பட்டன. சிறுவர்களால் நடிக்கப்பட்ட "மார்வாடி" டிராமா ஆட்டமும், பிசிக்கல்டிரில்லும் சிறுமிகளால் நடத்தப்பட்ட, "சோம்பேறி பையன்" என்கிற ஆட்டமும், பிசிக்கல் டிரீலும் யாவருடைய மனதையும் களிக்கச் செய்தன. கடைசியில் "காட் சேவ் தி கிங்" என்கிற ராஜா வாழ்த்தல் பாட, அன்றிரவு கொண்டாட்டம் முகிவுற்றது; ஷை மார்வாடி டிராமா எனக்கு மெத்த மனோகரமா யிருந்ததால் என் அருகாமையிலிருந்த ஓர் பெரியவரை அண்டி, இந்த டிராமாவை யார் செய்தது என்று வினவ, இது ஷை ஆலய உதவி விசாரணை குருவாகிய சங். S. Cotta, சுவாமிகளால் இயற்றப்பட்டதாகக் கேள்விப்பட்டு சந்தோஷித்தேன். இந்நாடகம் நம் ஜனங்கள் தங்கள் சுபாசுப தினங்களில் எவ்வளவு மட்டு திட்டமுடன் செலவு செய்யவேண்டு மென்றும், கடன் வாங்கி வீண் செலவு செய்வதால் விளையும் தின்மையைக் கண்டு எச்சரிக்கையா யிருக்க வேண்டு மென்றும் மெத்த நல்ல விதமாய்ப் படிப்பிக்கிறபடியால் இது அநேகருக்கு கசப்பாயிருக்கலாம். இருந்தாலும் கசப்புள்ள ஒளஷதம் போல் அநேகருடைய வறுமை யென்னும் வியாதியை விலக்க உதவு மென்பதற்குச் சந்தேகமில்லை.

உப்பளி } இப்படிக்கு
5. 3. 13. } கண்டு களித்தோன்.

### ஐயோ! இதேன்ன மோசம்!!

ஐயா, நேற்று என்னிடம் ஒருவன் ஆரோக்கியபுரத்தில் ஒரு கோவில் கட்டவென்று தருமத்திற்கு வந்தான். அவனைப் பார்த்தால் வெகு யோக்கியனாகவே காணப்பட்டான். நானும் தர்ம சிந்தனையுடன் அவன் கொண்டுவந்த தண்டல் புஸ்தகத்தை (Subscription list) வாங்கினேன். அதன் தலை ஏட்டில் ஆரோக்கியபுரம் பங்கு சுவாமியார் சங். வெச்சூரியர் சுவாமியாரால் கையொப்ப மிடப்பட்டு மகா வந்திக்கத்தக்க காந்தி அதிமேற்றிராணியார் அவர்களாலும் சரியாய் வந்திக்கத்தக்க கும்பகோணம் மேற்றிராணியார் அவர்களாலும் சிபார்சு செய்யப்பட்டதாயும் (English Circular printed in some press at Coimbatore; Tamil Circular printed at V. G. Brothers, Tanjore.) அச்சிடப்பட்ட ஒரு சர்க்குலர் (Circular) ஒட்டப்பட்டிருந்தது. அதில் கும்பகோணம் மேற்றிராணியார் அவர்களுடைய நாமம் Hugues Kandalam Botters என்று கையெழுத்தால் தவறுதலாய் எழுதப்பட்டும், அச் சர்க்குலரின் தலையில் Hugues Mandalam Botters என்று ஓர் முத்திரையும் பதிப்பிக்கப்பட்டிருந்ததினால் சந்தேகித்து, அவனை மிரட்டிக் கேட்டதில், அந்த ஊர் கோவில்பிள்ளையை அழைத்து வருகிறேன் என்று சொல்லி அவன் கொண்டு வந்த தண்டல் புஸ்தகத்தை என்னிடம் போட்டு விட்டு தப்பி ஓடிவிட்டான். போனவன் இன்னும் வரவில்லை. அப் புஸ்தகத்தை (Rt. Rev. Chapuis D.D.) சரியாய் வந்திக்கத்தக்க கும்பகோணம் துணை மேற்றிராணியாண்டவர் அவர்களிடம் காட்ட, அவர் ஆரோக்கியபுரம் பங்கு என்பது கிடையாதென்றும், அவனைத் தனக்கு தெரியுமென்றும், அவன் ஓர் குடிகாரனென்றும், அவன் முன்னொருதரம் கோட்டப்பாளையம் பங்குசுவாமியாரை ஏமாற்றப் பார்த்தவனென்றும், அவன் கொண்டுவந்தவைகள் போர்ஜரி என்னும் மோசக்கையெழுத்துப்போட்ட பத்திரங்கள் என்றும் கூறினார். ஐயோ! என்ன பரிதாபம்! கூடலூர் மஞ்சகுப்பத்தில் தர்ம சிந்தனையுடைய என் சுற்றத்தார் அனைவருடையவும், என்னுடன் கூடப்படித்த சினேகிதர்களுடையவும், பாகூர் புதுவையிலுள்ள அநேக கனவான்களுடையவும் கையொப்பங்களைக் காண எனக்குப் பரிதாபமா யிருந்தது. அவர்கள் எண்ணித்தந்த தர்மம் கோவில் கட்டுவதற்குப் பிரயோஜனப்படாமல் கள்ளுக்கடை சாராயக் கடைகளை ஆதரிக்கச் சென்றனவேயென்று விசனமாயிக்கிறது. இனியாகிலும் என் சகோதரர்களே, இப்படிப்பட்ட மோசக்காரர்களின் மட்டில் எச்சரிக்கையாயிருங்கள். கிராம பங்கு சுவாமிமார்களும் கண்டவர்களிடம் (Subscription list) தண்டல்புஸ்தகங்களைக் கொடாமலிருப்பது உஜிதம்.

Kumbakonam } T. S. D'sami.
5—3—13. }

---



## GENERAL NEWS AND NOTES.

## பொது வர்த்தமானக் குறிப்புகள்.

---

**ஜப்பானில் பெண் கல்வி.**—ஜப்பான் தேசத்திலுள்ள பெண்கள் நூற்றில் தொண்ணூற்றுறுபேர் பாடசாலையில் படிக்கிறவர்களா யிருக்கிறார்கள். இந்தியாவில் பெண் கல்வி விருத்தியானால்தான், தேசஞ் செழிக்கும் நாடு செழிக்கும் நாகரிக விருத்தியுமுண்டாகும்.

**தேங்கா யுரிக்க யந்திரம்.**—ஒருமணி நேரத்துக்குள் நூறு தேங்காய்களுக்கு மேல் உரித்துக் கொடுக்கக் கூடிய ஓர் இயந்திரம் ஜெர்மனியில் புதிதாய்க் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதன் விலை ஏறக்குறைய ரூபாய் 200 ஆகு மெனத் தெரியவருகிறது.

**உப்பு மலை**—சான்டொமிங்கோவில் 4 மயில் நீளமுள்ள உப்பு மலையொன்றிருக்கிறதாம். அதிலுள்ள உப்பு 9 கோடி டன் எடை யுள்ளதென மதிக்கப்படுகிறது. அவ்வுப்பு பளிங்கு போன்று வெண்ணிறமுடையதாயிருக்கிற

**மிகக் கடினமான வஸ்து.**—எல்லா பதார்த்தத்தையும் விட மிகக் கடினமானது வைரம் ஒன்றே யென இது வரையில் கருதப்பட்டிருந்தது. இப்போது இதை விட அதிக கடினமான இரண்டு வஸ்துக்களை மிஸ்டர் மாய்ஸன் என்ற ஓர் பிரகிருதி சாஸ்திரி கண்டுபிடித் திருக்கிறார்.

**ஓர் பேரிய புத்தகம்.**—சீனாவில் ஒரு வைத்திய சங்கத்தாரால் எழடி நீளமும், மூன்றரை யடியுயாமும் 1203 பவுன் எடையுமுள்ள புத்தகஞ் செய்யப் பட்டிருக்கிறது. உலகத்திலுள்ள புத்தகங்களுக் கெல்லாம் இதுவே அதிக பளுவுள்ளதாம். முதல் முதல் காகிதஞ் செய்தவர்களுஞ் சீனர்களே!

**அச்சுப் புத்தகங்கள்.**—அச்சுயந்திரங் கண்டுபிடிக்கப்பட்ட நாள் முதல் இது வரையில் உலகத்தில் அச்சு வாகனத் தேற்றிய புத்தகங்களின் தொகை நான்கு கோடிக்கதிகமாம். ஏறக்குறைய இவைகளெல்லாம் லண்டனிலுள்ள "பிரிட்டிஷ் முசெயம்" என்னும் பொருட் காட்சி சாலையில் வைக்கப்பட்டிருக் கின்றனவாம்.

**மைனர் பேரால் புரோ நோட்.**—மைனர் பேருக்கு எழுதி வாங்கப்பட்ட ஒரு ஆண்டிமாண்டு பத்திரத்தைக் கொண்டு கோர்ட்டில் தாவா செய்யலாகுமோ என்னுங் கேள்வி சென்னை ஐகோர்ட்டு ஜட்ஜிகள், சர் பென்சன், மிஸ்டர் சுந்தர ஐயர் இவர்கள் முன்பாக வந்ததில், தாவா செய்யலாமென தீர்மானஞ் செய்யப்பட்டது.

**ஓர் பேரிய சர்வகலாசாலை.**—சீனாவிலாவது ஜப்பானிலாவது உலகத்தி லெங்குமில்லாத ஒரு பெரிய சர்வகலாசாலை ஸ்தாபிப்பதற்காக, அமெரிக்க கோடீஸ்வரராகிய மிஸ்டர் ராக்பெல்லர் என்பவர் இருபது லட்சப் பவுன் நன்கொடையளித்திருக்கிறார். இதற்காக இன்னும்மற்ற கோடீஸ்வரார்களுடையவும் நன்கொடை எதிர் பார்க்கப்படுகிறது.

**குறும்பர் செய்கை.**—கல்கத்தா ஜெனரல் போஸ்டாபீசில் தபால் பெட்டியி லிருந்து கடிதங்களை யெடுத்து வழக்கப்படி தபால்தேதி முத்திரை போடும்போது, அவற்றில் இரண்டு முத்திரை குத்தப்பட்டதும் திடீரென வெடித்தனவாம். இந்த இரண்டு கடிதங்களுக்குள்ளும் வெடி மருந்து வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிய வருகிறது. இப்படிச் செய்தவர்கள் என்ன பயன் அடைந்தார்களோ!

**பேண்களுக்கோர் மேடிகல் காலேஜ்.**—இந்தியாவிற்குத் தலை நகரமான டில்லியின் கண் ஸ்திரிகளுக் கென்றே ஒரு மெடிகல் காலேஜ், அதாவது வைத்திய வித்தியாசாலை நியமிப்பதற்காக; இராஜப் பிரதிநிதியவர்களின் பத்தினியாராகிய லேடி ஹார்டிஞ்சி பெருமாட்டியால் பதினைந்து லட்ச ரூபாய் நன் கொடை யளிக்கப்பட்டிருக்கிறது. இது பெண்களுக்கோர் அத்தியாவசியமான விஷயமே.

**பூமிக்குள் பழய கட்டிடங்கள்.**—வட இந்தியாவில் பாட்னா அல்லது பாடலிபுர

மென்னும் பட்டினத்தில் யாதுக்காகவோ பூமியைத்தோண்டின விடத்தில் பூர்வம் அசோகா அரசாட்சி செய்த காலத்தில் கட்டப்பட்டதாக யூகிக்கப்படுகிற சில அருமையான வேலைத்திற மமைந்த கட்டிடங்கள் தென்பட்டனவாம். இது இந்தியரின் பூர்வ நாரிகத்தைக் காட்டும் அறிகுறிகளில் ஒன்றாக உதவுகின்ற தன்றோ?

**ஓர் ப்க்தியுள்ள குடும்பம்**—சுவிட்ஸர்லாண்டு தேசத்தில் எயின்சீடெல்ன் என்னு மூர் கோவிலில் சமீபத்தில் திவ்ய நன்மை வாங்கினவர்களில், ஹெர் பெனடிக்ட் கேலின் என்னுங் குடும்பத் தலைவனும், அவன் பெண்சாதியும், அவர்களுடைய 24 பிள்ளைகளு மிருந்தார்கள். இந்த இருபத்து நான்கு பிள்ளைகளில் மூத்தவருக்கு வயது ஐம்பதாம். இளையவனுக்கு பத்தாம். இது வன்றோ ஆசீர்வதிக்கப்பெற்ற குடும்பம்?

**உலகத்துள்ள சமாசாரப் பத்திரிகைகள்.**—இவ்வுலகத்தில் இப்போது ஏறக்குறைய 82,000 சமாசாரப் பத்திரிகைகள் வெளியாகின்றன. இவைகளுள்:—

| | |
|---|---|
| அமெரிக்க ஐக்கிய நாட்டில் | 12350 |
| ஆசியா கண்டத்தில் | 3000 |
| இங்கிலாந்தில் | 3000 |
| ஜெர்மனியில் | 5500 |
| பிரான்சில் | 2719 |
| ஜப்பானில் | 1500 |
| ஆபிரிகா கண்டத்தில் | 200 |

**செயற்கை மரம்.**—இயற்கை மரங்களெவையும் நெருப்புக்கு முன் நிற்காததை முன்னிட்டு, தீ பற்றாத மரம் ஒன்றை அமெரிக்காவில் புதிதாய் செய்திருக்கிறார்கள். இதற்கு அஸ்பெஸ்டோஸ் மரமென்று பெயர். இது இயற்கை மரத்தை விட ஒருவாறு பலக்குறைவா யிருப்பினும், நன்றாய் இழைத்து கொத்து சித்திர வேலை செய்வதற்கு யோக்கியமாயும், தளதளப்பு பொருந்தியதாயும் நெருப்பில் வேகாததாயுமிருக்கிறது.

**ஒட்டைக் கறி.**—ஒட்டகத்தின் மாமிசம் பாரீஸ் நகரத்தில் விற்கப்பட்டதில், அதை வாங்கிப் புசித்தவர்கள் அது மெத்த ருசிகரமா யிருக்கிறதெனக் கண்டு, அதன் மேல் அதிக ஆசை கொண்டு, அதுமுதல் வாரத்துக் கொருமுறையாவது ஒட்டைக் கறி கொண்டுவந்து விற்கும்படிக்கான ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஒரு ராத்தல் கறியின்விலை பதினைந்து ரூபாயாம். இதை வாங்கிப் புசிக்க சாமான்ய ஜனங்களால் கூடாதாகையால், இருபது கோடீஸ்வரர்கள் சேர்ந்து ஆபிரிக்காவிலிருந்து கொழுத்த ஒட்டகங்களை வரவழைக்க முயன்றிருக்கிறார்கள்.

**ஓர் ஆச்சரியமான பனை.**—திருநெல்வேலி ஜில்லா நான்கூனேரி தாலூகாவிலுள்ள மூலைக்கரைப்பட்டி என்ற ஊருக்கு இரண்டு மயிலுக்கு வடபாகத்தில் சுமார் 40 அடி உயரமுள்ள பனை ஒன்றில் அதின் நடு மத்தியினின்று 9 கிளைகள் பிரிந்து போயிருக்கின்றன. ஒவ்வொன்றும் தனித்தனியே சுமார் 20 அடி உயரமிருக்கும். இப்போர்ப்பட்ட கிளைகளுள்ள பனைகள் அநேக இடங்களில் இருந்தாலும், அவைகளிலிருந்து கள்ளாவது பதநீராவது இறக்க முடிகிறதில்லை. ஆனால் இந்த மரத்திலோ ஏறக்குறைய எல்லாக் கவர்களிலும் பதநீர் இறக்குகிறார்கள். இதில் முன் 22 கிளைகள் இருந்ததாகவும், அவை மிகவும் அடர்த்தியா யிருந்ததால் சிலவற்றைக் கழித்து விட்டதாகவும் சொல்லப்படுகிறது.

**பத்து ரூபாய் சவரன்.**—இந்தியாவுக்கென்றே ஓர் தங்க நாணயம் செய்யப்பட வேண்டுமென்றும், அந் நாணயம் பத்து ரூபாய் பெறுமானமுள்ளதாயிருக்க வேண்டுமென்றும், நமது இந்திய கவர்ண்மெண்டார் இங்கிலாந்திலுள்ள இந்திய இராஜாங்கக் காரியதரிசி யவர்களுக்கு பிரேரேபணை செய்திருக்கிறார்கள். இதைப்பற்றி இந்தியாவின் இதர மாகாணத் தலைவர்களுடையவும், வர்த்தக சங்கங்கம் முதலிய ஏனையோர்களுடையவும் அபிப்பிராயங்களை அறிந்தபின் ஓர் முடிவான தீர்மானஞ் செய்யப்படும். இந்தியாவில் பத்து ரூபாய் சவரன் ஒன்று அவசியமென்று அநேக நாளாய் அனேகருடைய அபிப் பிராயமாயிருத்தலி னிமித்தம் இப்படியே அநேகமாய் தீர்மானிக்கப்படுமென்று கருதப்படுகிறது.

**ஓர் புது யந்திரம்.**—பொன், வெள்ளி, செம்பு முதலிய லோகங்களை உருக்கும்போது அவைகளி லிருந்து எழும்பும் புகை வழியாய்ச் சேதமாகும் லோகத்தை சேதமாக வொட்டாமற் சேகரஞ் செய்வதற்கு, சர் ஆலிவர்லாட்ஜ் என்பவரும் அவர் குமாரராகிய லபொனஸ் லாட்ஜ் என்பவரும் ஓர்வித மின்சார யந்திரத்தைப் புதிதாய்க் கண்டுபிடித் திருக்கிறார்கள். பெருமளவாய் உலோகங்கள் உருக்கப்படும் உலைக்களங்களிலும், பட்டரைகளிலும், ௸ இயந்திரத்தை பரிட்சித்துப் பார்த்ததில் உருக்குச் சேதாரத்தில் நூற்றுக்கு தொண்ணூறு பங்கு மறுபடியும் அடையலாமெனக் கண்டுபிடிக்கப்பட் டிருக்கிறது. இந்த அளவுக்குப் பார்க்கப்போனால் செம்பு அதிகமாய் உருக்கி வேலை செய்யும் ஓர் பட்டரையில் ஒரு வருஷத்துக்கு ரூ. 50,000 பெறுமான செம்பு ௸ இயந்திரத்தினால் இலாபப் படுத்தலாமென ஏற்படுகிறது. தங்க நாணயங்கள் செய்யும் தங்கசாலைகளில் இவ்விதமாய் எவ்வளவு இலாபம் பெறலாம்' இது தொழிலாளிகளுக்கு மெத்த இலாபகரமான யந்திரம்.



**ஓர் ஐரோப்பிய மாதின் வீரச்செயல்.**—கொச்சிக் கடுத்த பாப்பிக்குளத்தில் காப்பித்தோட்டம் வைத்திருக்கும் ஓர் ஐரோப்பிய துரையின் மகளாகிய மிஸ் ஆலிஸ் கே என்னும் இளமாது, தம் வீட்டில் யாரும் ஆண்பிள்ளைகளில்லாத ஓர்நாள் (சென்ற பெப்ரவரிமீ 28-ம் தேதி, அயலிலிருந்த காட்டினுள்ளே தங்கள் மாட்டைப் புலி கொன்று தின்றுகொண்டிருப்பதாகக் கேள்வியுற்று, துப்பாக்கிகொண்டு தனியே சென்று, புலியைக்கண்டு, ஒரு மரத்தின் மறைவில் தைரியமாய் பதுங்கி நின்று, நெற்றியின்மேல் குறி பார்த்து சுட்டுப் புலியைக் கொன்றாளாம். இம் மாதின் அஞ்சாத வீரத் தன்மை மெத்தவும் மெச்சத் தக்கதே! இம் மாதிரி புலியைக்கொன்ற ஸ்திரீயைப்பற்றி இந்தியாவில் இதுவரையிற் கேள்விபட்டதில்லை.

**ஒரு விநோத சம்பவம்.**—விலோனைச் சேர்ந்த விந்தேலா என்னுமிடத்திலுள்ள "வெல்லி சர்ச்" என்ற கோவிலண்டையிருந்த புளியமர மொன்று வெட்டி வீழ்த்தப்பட்டு அறுக்கப் படுகையில், கீழ் கண்ட விநோத சின்னங்கள் காணப்பட்டனவாம். அறுக்கப்பட்ட துண்டு ஒன்றில் சிலுவைபோன்ற சரியான உருவம் காணப்பட்டது. மற்றொன்று அறுக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் குறடுகளைப்போன்ற சின்னமொன்று பிதுங்கிக் கொண்டிருக்கக் காணப்பட்டது. மற்றொரு மரத் துண்டில் 72 என்ற எண்ணிக்கைகள் பிரகாசமாய் எழுதப்பட்டவைகள் போல் பதிந்திருக்கக் காணப்பட்டன. இந்த எண்களுக்குப் பக்கத்தில் ஒரு ஆணி போன்றும் சுத்தியைப் போன்றும் உருவங்கள் காணப் பட்டனவாம். இவ்விஷயமாய் இன்னும் என்ன அதிசயமென்றால் ஒரு சிறு பெண் அந்த மரம் வெட்டப்பட்டதற்கு முதல் நாளிரவு தான் சொப்பனங் கண்டபடி பலித்திருக்கிறதெனக் கூறுகிறாளாம்.

**ஓர் விநோத சாப்பாட்டு விடுதி**—பாரிஸ் நகரத்தில் ஓர் ஆச்சரியமான ஒட்டல் கட்டப்பட்டிருக்கிறதாம். அந்த ஒட்டலுக்கு வருகிறவர்களை விசாரித்தல், அவர்களுக்கு சிஸ்ரூஷை செய்தல், வேண்டியவைகளைக் கொண்டு வந்து கொடுத்தல் இது முதலியவைகளைச் செய்ய ஆள் என்பதே கிடையாதாம். ஒவ்வொன்றையுஞ் செய்வதற்கு அங்கங்கே மின்சார சக்தியைக் கொண்டு அததற்குத் தக்க யத்தனங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றனவாம். எப்படியெனில், முசாபரி யாதாமொருவர் வந்து ஒட்டல் வாசற்படியில் கால்வைத்தவுடனே, அதில் வைக்கப்படிருக்கும் விசையானது அவரையுடனே அழைத்துக் கொண்டுபோய் பொது ஹால் ஒன்றில் விட்டுவிடுகிறது. அங்கே அச்சிட்டு ஒட்டப்பட் டிருக்கிற விவரப்படி (முதல் தரமோ, இரண்டாந்தரமோ மூனாந்தரமோ) எந்தவிதமான வசதி சாப்பாடு சௌகரியங்கள் வேண்டுமோ அவைகளை அங்கு மேசையின் மீது வைக்கப் பட்டிருக்கும் விவரப்பட்டியில், பேர் ஊருடன் எழுதினவுடனே, கோரியபடி மேல் மெத்தையிலோ, நடு மெத்தையிலோ, அடி மெத்தையிலோ உள்ள அறை ஒன்றில் அவரைத் தூக்கிக் கொண்டுபோய் விட்டு விடுகிறது. அங்கு இருக்க, படிக்க, குளிக்க, உண்ண, படுக்க வேண்டிய வசதிகளெல்லாம் மிகு விசித்திரமா யமைக்கப்பட் டிருக்கின்றன. அங் கிருந்தபடியே எந்நேரத்தில் எந்த பாதார்த்தம் வேண்டுமானாலும், அங்கே தயாராயிருக்கும் ஓர் கண்ணாடிக் காகிதத்தின் பேரில் எலெக்ட்ரிக் பேனாவினால் எழுதினவுடன், அச்சமாசாரம் அடியிலிருக்கும் சமையல் அறைக்குப்போக, அங்கிருக்கும் சுயம்பாகிகள் அதைக் கவனிக்க, இரண்டொரு நிமிஷத்தில் கேட்ட பொருள் மேசையின்மீது வந்து சேர்ந்து விடுகிறதாம். இந்த வசதிகளுக்கேற்றபடியே கட்டணங்

கள் கொடுக்கப்பட வேண்டுமானாலும், இவ்வித ஏற்பாடு அற்புதமும் அருமையுமானதன்றோ?

**பால்கன் சண்டையில் வேதசாட்சி.**—பால்கன் நாடுகளில் ஒன்றாகிய மாண்டிநிகிரோ நாட்டார் அல்பானியாவிலுள்ள கத்தோலிக்கரைக் கட்டாயப்படுத்தி ஆர்த்தடாக்ஸி என்னும் பிரிவினைமதத்திற் சேர்த்தும், சேராதவர்களை வதைத்துக் கொன்றும், கோவில்கள், கந்நியாஸ்திரி மடங்கள், சந்நியாச மடங்கள் முதலிய கட்டிடங்களை பீரங்கியால் சுட்டுத் தகர்த்தும் அநியாய அட்டூழியங்கள் சில நாளாய் செய்து வருகிறார்கள். சமீபத்தில், ஜகோவா என்னுமூரில் பாலிக் என்னுங் குருவானவரையும், அவருடன் 300 கத்தோலிக்கரையும் கயிறுகளால் கட்டிவிட்டு கத்தோலிக்கு வேதத்தை விட்டு விட்டு, "எங்கள் மதத்தைச் சேருகிறோம் என்று இந்த பத்திரத்தில் எழுதி கையொப்பமிட்டுக் கொடுங்கள்; இல்லாவிட்டால் நீங்களெல்லோரும் துப்பாக்கிக்கு இரையாவீர்கள்" என்று பயமுறுத்தவே, ஷை 300 பேரும் பயந்து அவ்வாறே கையொப்பமிட்டுக்கொடுத்தார்கள். ஆனால் அந்த பாலிக் என்னுங் குருவானவரோ சத்திய வேதத்தை மறுதலிக்க மனங் கொள்ளாதவராய் மாட்டேன் என மறுக்க, படைச்சேவகர்கள் அவருடைய உடுப்பைக் கிழித்து, துப்பாக்கியால் முதுகிலும் மார்பிலும் குரூரமாய் அடித்து, கை கால் எலும்புகளும் விலாவெலும்புகளும் முறிய அடித்துக் கீழே வீழ்த்தினார்கள். குத்துயிராய்க் கீழேவிழுந்தும் தம்வைராக்கியத்தை விடாமல் குருவானவர் முன்போலவே மறுக்க, சனியனால் அவருடைய இருதயத்தை ஊடுருவக் குத்தி அவரைக் கொன்றார்கள். என்ன குரூரம்! என்ன அக்கிரமம்! நாகரீகம் மிகுந்த இக்காலத்திலேயே இவ்வித கொடூரக்கொலை நடக்கிறதானால், பூர்வகாலத்தில் எப்படியிருந்திருக்காது! இதைக்கேள்வியுற்ற அவுஸ்திரியாதேசத்தரசர் மாண்டிநிகிரோவருக்கு எச்சரிக்கைசெய்து, செய்த கொடிய செய்கைக்கு சமாதானஞ் சொல்லாவிடில் சண்டையாய் முடியுமென எச்சரிக்கை செய்திருக்கிறதுடன் அவர்களுடைய பயத்துக்காக ஒரு போர்க் கப்பலையும் அந்நாட்டிற்கு அனுப்பியிருக்கிறார்.

**கர்ப்ப ஸ்திரிகள் நடந்துகொள்ளவேண்டிய முறை.**—ஆயுர்வேத டாக்டராகிய பண்டித எம். துரைசாமி ஐயங்கார் ஸ்திரீகள் கருப்ப காலத்தில் நடந்துகொள்ளவேண்டிய முறைகளைப்பற்றி சமீபத்தில் 'சுதேசமித்திர'னில் எழுதியிருக்கிறார். அவையாவன: கருப்பிணி ஸ்திரீகள் அதிகவேலைசெய்யாமலிருக்கவேண்டும். பாரமான சாமான்களைத் தூக்கக்கூடாது. பயப்பட்டு, திடுக்கிடும்படியான இடங்களுக்குப் போகக்கூடாது. கடுங் கோபங்கொள்ளவுங் கூடாது. வேகமாய் நடமாடவுங்கூடாது. நெருப்புக்கு சமீபத்தில் அடிக்கடி இருக்கக்கூடாது. உயரத்திலிருந்து ஆழமான இடங்களைப் பார்க்கக்கூடாது. இந்தமாதிரி தேகத்துக்கு ஆயாஸத்தையாவது மனதுக்கு பயத்தையாவது கொடுக்கக்கூடிய காரியங்களைச் செய்யக்கூடாது. மந்தம் தட்டாத புஷ்டியான ஆகாரத்தை சாப்பிடவேண்டும். சில கருப்பிணிகள் செய்வதுபோல் கண்டதையும் கேட்டதையும்சாப்பிடக்கூடாது. குடல்கள் அடைபட்டிருக்கக்கூடாது. மலபந்தம் உள்ள கருப்பிணிகள் அடிக்கடி கொஞ்சம் ஆமணக் கெண்ணெயை இரவில் படுக்கப் போகும்பொழுது பாலில் சேர்த்து சாப்பிடுவது நலம். பழங்கள், காய்கறி பதார்த்தங்கள் முதலியவைகளில் பக்குவமானவைகளை மிதமாகச் சாப்பிடவேண்டும். சக்தியுள்ளவரையில் கொஞ்சமாக வேலை செய்வது பலத்தைக் கொடுக்கும். விடியற்காலத்திற் படுக்கையை விட்டு எழுந்ததும் ஒரு சிறிய டம்ளர் அளவு சுத்தமான குளிர்ந்த ஜலத்தை சாப்பிட்டு வருவதும் நலமாகும். சில சமயங்களில் வாந்தியினால் ஆயாஸம் உண்டாகலாம். அதற்காக காபி போடுவதுபோல் கிராம்புக் கஷாயம் போட்டுக் கொஞ்சம் சாப்பிடவேண்டும். அப்போது வாந்தி நின்றுவிடும். பிரசவ வேதனை உண்டானால் ஜவ்வரிசிக் கஞ்சி போன்ற லேசான ஆகாரத்தைச் சாப்பிடவேண்டும். குளிர்ந்த பானங்களைக் குடிக்கவேண்டும். மல்லாந்தாவது ஒருபக்கமாகவாவது படுத்திருக்கவேண்டும். கருப்ப ஸ்திரீகளுக்குப் பிரசவத்தினால் உண்டாகும் கஷ்டங்களைப் பற்றி பேசி அவர்களுக்குத் திகில் உண்டாகும்படி செய்யக்கூடாது. சுத்தமான காற்றும் நல்ல தண்ணீரும் எப்பொழுதும் அவசியமானவைகள். கதவுகளை அடைத்து வைத்து காற்றுப் புகாத அறைகளில் இருக்கவிடாமல் சமுத்திரக் காற்று படும்படி கடலோரங்களுக்கு அழைத்துப்போவதும் நலம். பிரசவகாலம் சமீபிக்க சமீபிக்க கருப்பிணிகள் வேலை ஒன்றும் செய்யக்கூடாது. கூடுமானால் வீட்டுச் சுற்றுப் புறங்களிலேயே கொஞ்சம் உலாவலாம். மேற்சொன்னபடி கருப்பிணிகள் இருந்தால்தான் பிரஸவமாகும்பொழுது சௌகரியமாயிருக்கும்.

---



# NEWS OF THE MONTH.

## மாச வர்த்தமானம்.

**அர்ச். பாப்பானவர் சகோதரியின் மரணம்.**—வத்திக்கான் மாளிகைக்கு அருகே ஒரு வீட்டில் குடியிருந்த பத்தாம் பத்திநாதரின் மூன்று சகோதரிகளில் ஒருவராகிய சிக்னேரினா ரோஸா சார்ட்டோ என்பவர் சில நாளே அசௌக்கியமுற்றிருந்து குணப்படாமல் சென்ற பெப்ரவரிமீ 11-ம்தேதி காலஞ் சென்றனர். இந்த துக்கச்செய்தியைக் கேட்டு, அர்ச் பாப்பானவர் மெத்தவுந் துயருற்று அங்கலாய்த்தனர். இந்தம்மாள் நமது பரிசுத்த பிதாவுக்கு ஒரே வயதுதான் இளையவராம்; 1836௵ பிறந்தவர்.

**புரோடேஸ்டாண்டு சந்நியாசிகளும் கன்னியாஸ்திரிகளும்**—அயர்லாண்டைச் சார்ந்த கால்டீ என்னுந் தீவில் கடந்த பதினைந்து வருஷங்களாய் புரோடெஸ்டாண்டர்களுடைய சந்நியாச சபையும் கந்நியாஸ்திரி சபையும் நடந்தேறி வந்தன. அவைகளிலுள்ள அந்த சந்நியாசிகளும் கந்நியாஸ்திரிகளும் மெத்த பக்தியுடையவர்களாய் தவக்கிரியைகளை நடப்பித்து, புரோடஸ்டாண்டர்களால் மெத்தவும் மதிக்கப்பட்டு வந்தார்கள். ஆயினும், அவர்களுடைய தவ ஒழுக்கம், பக்தி நாளுக்கு நாள் முத்தியபிவிர்த்திக்க, தங்களது மதம் சரியானதல்லவென்றும், மெய்யான உண்மையுள்ள வேதம் கத்தோலிக்கு வேதமேயென்றும் அவர்களுடைய மனசாட்சி வாதித்தது. அவர்கள் கடைசியாய் மனத்திடன்கொண்டு, சந்நியாசிகளுங் கன்னியாஸ்திரிகளுமாக 64 பேர்கள் சத்திய திருச்சபையைச் சேர்ந்தார்கள். உண்மைக் கருத்துடன் ஆராய்ச்சி செய்பவர்களுக்கு சத்தியவேதத்தின் உண்மை புலப்படாமற் போகுமா?

**காகல்கன் ஞாபகச் சின்னம்.**—காலஞ்சென்ற சென்னையதி மேற்றிராணியாராகிய கூசை கால்கன் ஆண்டவர் அவர்களுடைய ஞாபகத்துக்காக ஒரு சின்னம் ஏற்படுத்தவேண்டுமென்று ஏற்கெனவே தீர்மானித்தபடி, அவ்வாண்டவருடைய சாயலாக சலவைக் கல்லால் செய்யப்பட்ட ஒரு சிறு சிலை, மேற்றிராசனக் கோவிலுக்குள் நடுச்சாலை முகப்பு வளைவின் இடது பக்கத்துச் சுவரில், சலவைக் கல்லால் நேர்த்தியாய் செய்யப்பட்ட மாடத்தில், மிகவும் வந்திக்கத்தக்க அருளப்ப ஆலன் ஆண்டவர் அவர்களால், சென்றமாதம் 23-ம் தேதி மிக ஆரவாரத்துடன் திறந்து வைக்கும் சடங்கு நிறைவேறியது. அந்த சிலையைத் திறப்பதற்கு முன் கனம் ஆலன் ஆண்டவரவர்கள் கால்கன் ஆண்டவரின் ஜீவிய வரலாற்றைப்பற்றி சுருக்கமாயும் உருக்கமாயும் பிரசங்கித்தார்கள். கடைசியில் காலஞ்சென்ற அதிமேற்றிராணியாருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக செபத்துடனும் ஆசீர்வாதத்துடனும் அச்சடங்கு முடிவு பெற்றது.

**லண்டனில் ஸ்திரீசுதந்தரவாதிகள் படுத்தும் பாடு.**—சொல்லக்கூடுமாயில்லை. ஸ்திரீகள் தங்களுக்கு இராஜாங்கத்தில் வாக்குச் சுதந்தரம் வேண்டுமென்று வாதாடிக் கேட்டும் அது கொடுபடாமையால் கோபவைராக்கியங் கொண்டு, உத்தியோகஸ்தர்களை வழி மடக்கி வம்பு பண்ணுகிறதும், சட்டையைக் கிழிக்கிறதும், தொப்பியைத் தட்டுகிறதும், உத்தியோகசாலைகளுடையவும் வர்த்தகசாலைகளுடையவும் கதவுகளையுஞ் சன்னல்களையும் உடைக்கிறதும், கட்டிடங்களைக் கொளுத்துகிறதும், இன்னும் பலவித சேஷ்டைகளைச் செய்கிறதுமாயிருக்கிறார்கள். இப்படி அநியாயஞ் செய்கிறவர்களைப் பிடித்து ஜெயிலில் அடைத்து தண்டனை செய்து வருகிறார்கள். இவ்வகைக் குற்றத்திற்காக ஜனவரிமீ முதல் அங்கு ஜெயிலில் அடைக்கப்பட்டவர்கள் 66 பேர். ஜெயிலுக்குள்ளும் அவர்கள் செய்கிற பிடிவாதம் மெத்த பயங்கரத்துக்குரியதாயிருக்கிறது. சிலர் ஆகாரத்தை வெறுத்து சாப்பிடாமலிருந்து சாகத் துணிந்தவர்களாய் பலநாள் பட்டினி கிடக்கிறார்கள். தங்களுக்கு நோய் வந்தாலும் டாக்டரிடத்தில் சொல்லாமல் மறைக்கிறார்கள். ஓர் ஸ்திரீ, இராமுழுதும் வெட்ட வெளி

யில் பனி குளிரில் வஸ்திர மொன்றின்றி நிர்வாணமாய் படுத்திருந்தாளாம் குளிர் ஜன்னி பிறந்து சாகவேண்டுமென்று. இப்படியாய் தங்களுக்கு வாக்குச் சுதந்தரத்துக்காக உயிரை இழக்கவுந் துணிந்திருக்கிறார்கள். சமீபத்தில் லேடி வொயிட் என்னும் பெருமாட்டியின் மாளிகைக்குத் தீமூட்டி அதை எரித்துவிட்டார்கள். இதனால் அறுபதினாயிரம் ரூபாய் நஷ்டம். "ஜெயிலிலிருக்கிற எங்கள் கூட்டாளிகளை உபத்திரவப் படுத்துவதை நிறுத்துங்கள். ஸ்திரீகளுக்கு சுதந்தரங் கொடுங்கள்" என்று எழுதப்பட்ட ஒரு கடுதாசித் துண்டானது கொளுத்தப்பட்ட வீட்டின் அருகாமையில் போடப்பட்டிருந்ததாம். என்னே இந்த ஸ்திரீகளின் பிடிவாதம்!

**இன்னொரு இராஜ கொலை.**—கிரீக் தேசத் தரசராகிய ஜார்ஜ் என்பவர் சென்றமீ 18-ம் தேதி மாலை தன் குமாரனோடும், ஏய்டிகாங் என்னுந் துணைவனோடும் வெளியே போய் வழக்கப்படி உலாவிவிட்டுத் திரும்பி வரும்போது, ஓர் கொடிய பாதகன் அங்கு ஒருமறைவிடத்தில் பதுங்கியிருந்து சடுதியில் வெளிப்பட்டு அவரைக் கைத்துப்பாக்கியால் சுட்டான். சுட்ட குண்டு அரசனின் இருதயத்தில் பாய்ந்து ஊடுருவி வெளியே சென்றது. உடனே அரசன் கீழே விழுந்து பரிதாபத்துக்குரிய விதமாய் துடித்து பிரக்ஞையற்றுப் போனார். அவரை வண்டியிற் றூக்கிக்கொண்டு அருகேயிருந்த ஆஸ்பத்திரிக்குப் போகும் வழியிலேயே அரசர் உயிர் துறந்து பிரேதமானார். என்ன கொடூரம்! என்ன பரிதாபம்! இந்தப் படுகொலை புரிந்த பாதகனை உடனே பிடித்துவிட்டார்கள். அவன் பேர் அலக்கோ ஸ்கீனாஸ்; வயது 40; முன் ஓர் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயராயிருந்தவன்; குடிகாரன்; கோபவெறி கொண்டவன். அவன் தன் வேலையினின்று இரண்டு விசை தள்ளிவிடப்பட்டதற்காக அரசருக்கு மனுச் செய்துகொண்டதில், அவர் அதைத் தக்கபடி விசாரித்து அவன் தள்ளப்பட்டதில் அநியாய மொன்றுமில்லையெனக் கண்டு மனுவைத் தள்ளிப்போட்டார். இதற்காக வர்மங்கொண்டு இத் தீச்செயல் செய்தானென்று யூகிக்கப்படுகிறது. ஆயினும், அவனைக் கேட்டதற்குக் காரணஞ்சொல்லாமல், எல்லாம் நியாயஸ்தலத்தில் சொல்லுவதாகச் சொன்னானாம். இறந்துபோன அரசரைப்பற்றி கிரீக் தேசத்தில் மாத்திரமல்ல, ஐரோப்பாவைச் சேர்ந்த இன்னும் வேறு மூன்று ராஜாங்கங்களிலும் துக்கங் கொண்டாடப்படும். எப்படியெனில், இறந்தவர் காலஞ்சென்ற டென்மார்க்கு அரசனின் இரண்டாவது புத்திரர். ருஷியா சக்கரவர்த்தினியின் சகோதரர். இங்கிலாந்து அலெக்சாந்தரா அரசியின் சகோதரர். இராஜ குமாரராகிய நிக்கோலாஸ் என்பவர் அரசனாக சத்திய வாக்குக் கொடுத்தார்.

**சுதேச பாஷாபிவிருத்தி.**—சில வருடங்களுக்கு முன், தமிழ், தெலுங்கு, மலையாளங் கன்னட முதலிய சுதேச பாஷைகள் சர்வ கலாசாலைப் பரிட்சைகளுக்கு கட்டாயமான பாடமாக வைத்திருந்தனர். இதைப்பின்னர் ஒழித்து அவைகளை இஷ்டமான பாடமாக வைத்ததில் நமதுசிறுவர் சிறுமிகள் சுதேச பாஷைகளை அசட்டை செய்து வருகிறார்கள். இப்படியே சிலவருஷம் நடந்து வருமாகில், நம்மவர்களுக்குச் சுதேச பாஷா ஞானம் வரவரக் குறைய, தாய் பாஷையின் அருமையும் பெருமையுமற்று அது ஹீனதசை யடையும் என்பதற்கு ஐயமில்லை. ஆயினும், நமது அன்புக்குரிய சக்கரவர்த்தியவர்கள் மகுடதாரணத்தின்போது கல்வி யபிவிருத்திக்காக அளித்த தாராளமான நன் கொடையையும், இதன் விஷயத்தில் காருண்ய இந்திய கவர்ண்மெண்டாருக்குள்ள எதிர் நோக்கையும் அநுசரித்து, சுதேச பாஷாபிவிருத்திக்கு நல்ல காலம் கிட்டியிருக்கிறதென்று எண்ணியிருக்கையில், சென்னை சர்வ கலாசாலை சங்கத்தார் சென்றமாத மத்தியில் கூடிய கூட்டத்தில் செய்த தீர்மானம், சுதேச பாஷாபிமானிகளுக்கு மெத்த வருத்தத்தையும் கவலையையு முண்டு பண்ணிற்று. எப்படியெனில், சுதேச பாஷைகளை மறுபடியும் கட்டாய பாடமாக்கும்படி ஒரு அங்கத்தினர் கொண்டுவந்த பிரேரபணையையும், அதை ஆமோதித்த வேறு மூவருடைய பலத்த நியாயங்களையும் நிராகரித்துத் தள்ளிவிட்டு, அவைகளை இஷ்டமான பாடமாகவே தீர்த்து விட்டனர். கட்டாய பாடமாக இருக்கும் பொழுதே சுதேச பாஷையை அவமதித்து அவலம்பித்த சிறுவர்கள் இஷ்டபாடமாக்கினால் அதை எப்படி மதிப்பார்கள்? சுதேச பாஷைகளைக் கட்டாயபாடமாக்கி பரிசினாலும், பட்டத்தி



னாலும், பல வாற்றானும் அவைகளை அபிவிருத்தி செய்ய வேண்டு மென்பது இந்தியருடைய பலத்த பொது அபிப்பிராயமாயிருக்கிறது. ஆகவே, சமீபத்தில் சென்னையில் கூடிய மகாஜனக் கூட்டத்தாரும், மதுரைத்தமிழ்ச் சங்கத்தார், திருநெல்வேலிச் சங்கத்தார் முதலிய பலரும் இவ்விஷயத்தைப்பற்றி கவர்ன்மெண்டாருக்கு மனுசெய்து, சர்வ கலாசாலை சங்கத்தினுடைய தீர்மானத்தை ரத்து செய்யவும், சுதேச பாஷாபி விருத்திக்கான வழிவகைகளைத் தெரிந்து செய்யவும் கேட்டிருக்கிறார்கள்.

**அமெரிக்க ஐக்கிய நாட்டில் அகோர வெள்ளம்.** பிக்குவா என்னுமூரில் புயற்காற்று அடித்ததால் அவ்விடத்திலிருந்த ஓர் பெரிய ஏரியுடைந்து அபார வெள்ளம் புறப்பட்டு ஊரைச் சமுத்திர மாக்கிவிட்டது. 5000 ஜனங்களுக்கு உயிர்ச்சேதம். 200,000 பேர்கள் இருக்க விடமின்றி தவிக்கிறார்கள். ஒரு பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்த 400 பிள்ளைகளும் அடியோடே மாண்டுபோனார்கன். ஒரு ஆஸ்பத்திரியிலிருந்த 600 நோயாளிகள் வெள்ளத்திலமிழ்ந்திபோனார்கள். இதன்றி இன்னொரு பக்கத்தில் தீப்பிடித்துக்கொள்ள பன்னிரு கட்டிடங்கள் பஸ்பமாயின. ஒருபக்கத்தில் வெள்ளம் மறுபக்கத்தில் தீ ஆக இருவகையிலும் கஷ்டம் நேர்ந்தது. இருக்க இடமும், உண்ண உணவும், குடிக்க ஜலமுமின்றி தவிக்கிறார்கள் ஜனங்கள். பரிதாபம்!

**பால்கன் துருக்கி யுத்தம்.**—இந்த யுத்தம் இப்போது அநேகமாய் முடிவாயிற்றென்றே சொல்லலாம். துருக்கியரால் வெகு வீரத்துடன் காக்கப்பட்டுவந்த அடிரியாநோப்பில் என்னும் பலத்த கோட்டையானது பல்கேரியரால் பிடிபட்டுவிட்டது. இவர்கள் மார்ச்சுமீ 26-ம்தேதி அதி காலையில் தைரியமாய் அக் கோட்டையின் மேல் விழுந் தடித்து சண்டை செய்து, அடிரியாநோப்பிலின் கிழக்குப் பாகங்களையும், அதிலடங்கிய ஆறு கோட்டைகளையுங் கொத்தளங்களையும் பிடித்துக்கொண்டார்கள். பறி கொடுத்த துருக்கியர் கோபாவேசங் கொண்டவர்களாய், தங்களுடைய மருந்து கிடங்குகளையும், யுத்தாயுதசாலைகளையும், பீரங்கிக் கிடங்குகளையும், ஆஸ்பத்திரிகளையும், இன்னும் அடிரியாநோப்பிலின் வடபாக முழுவதையுமே கொளுத்திவிட்டு ஓடிவிட்டார்கள். இந்தத் தீயானது அதை யடுத்த கட்டிடங்களை யெல்லாம் எரித்து நாசமாக்கிக்கொண்டிருக்கிறதாம். அவ் வூர் குடிகளெல்லாம் திக்பிரமை கொண்டு திகிலடைந்து திக்கானுக்கொருவராய் உயிருக்குத் தப்பி யோடுகிறார்கள். அதிலிருந்த தளகர்த்தனாகிய சுக்கிரி பாட்சா என்பவன் அன்று மாலை 2 மணிக்கு ஜெனரல் ஐவனாப்பிடம் சரணடைந்தான். இப்போது அடிரியாநோப்பில் முழுதும் பல்கேரியர் கைவசமாய்விட்டது. 27-ந் தேதி சடால்ஜாவையும் பிடித்துக்கொண்டார்கள். இன்னொரு பக்கத்தில் கிரேக்கர்களால் ஜனினா வென்னும் இடமும் பிடிபட்டு விட்டது. ஆகவே இன்று முதல் ஐரோப்பாவில் துருக்கியர் நாமமே அற்றுப்போயிற்றென்கலாம். இரு கட்சியாரும் ஏற்கெனவே வல்லரசுக்களை மத்தியஸ்தஞ் செய்யக் கேட்டிருப்பதாலும், துருக்கிக்கு நாடுமுழுமையும் போனதன்றி, தலைக்குமேல் கடன் ஏற்பட்டிருப்பதாலும், இந்தக் கடனைக் கொடுக்கவோ, அல்லது துருக்கியருக்கு வேறுவித சகாயஞ் செய்யவோ வல்லரசுக்கள் பால்கன் நாடுகளை ஏவிக்கொள்ளலாம்.

---

## DOMESTIC OCCURRENCES.

## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

### விசேஷக் குறிப்பு.

அரைக் கலதுக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 8-அணா முன்பணம் அனுப்பினாலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட மாட்டா வென்பதை நண்பர்கள் கவனிக்கக் கோருகிறோம். அரைக் கலத்துக்கு மேற்பட்டு முக்கால் கலத்துக்கு உட்பட்டால் முக்கால் ரூபாயாகும். முழுக்கலத்துக்கு ஒரு ரூபாயாகும். கால் ரூபாய்க்கு இவ்விளம்பரங்கள் ஒருபோதும் பிரசுரிக்கப்பட மாட்டா.

168045

### திருமண அறிக்கை.

குறள் வெண்பா.

கங்கை தங்கிப் பொங்குநிகர் காசினிமேல்
யோக்கியராய் நங்கை மணன் வாழ்க நனி.

சென்னை புதுப்பேட்டை நாடானும் செக்கெந்திராபாத் பூர்வ மட்போர்ட் டில்லேரியில் நிவாசியா யிருந்து 1910 வருடம் காலஞ்சென்ற எனது தந்தை ம-ா-ா-ஸ்ரீ ஏ. சந்தியாவு அவர்களின் மைந்தனும் நல்லாயன் கையொப்ப நேயர்களிலொருவரும், H. H. The Nizam's

State Railway யில் சிக்னல்லராய் உத்தியோகம் வகிப்பவருமாகிய என் தமயன் ஸ்ரீமான் S. ஆரோக்கியசாமி என்பவர் சென்னை எழும்பூர், சுவாமிரெட்டி வீதிவாசியாகிய (Madras City Police Constable) ம-ள-ள-ஸ்ரீ C. துரைசாமி அவர்களின்ற சுபுத்திரி ஸ்ரீமதி மங்கள மரியம்மாளை வருகிற ஏப்ரல்மீ 9-ந் தேதி புதவாரம் காலை 7 மணிக்கு செக்கெந்திராபாத் அர்ச். மோக்ஷவிராக்கினியம்மன் ஆலயத்தில் வண. C. ம்ரீயர்னி தேசிகரால் நடத்தப்படும் திவ்ய பலிபூசைக்கு முன் மங்கிலியஞ் சூட்டப் போகிறபடியால், இதனைக் கண்ணுறும் ஆபனின் நேயர்களும் ஏனையோரும் இம் மங்கிலியம் நீடித்து வாழ பரிசுத்த திருக்குடும்பத்தை மன்றாடவுந் தங்களின் பூரணசீரளிக்க கோருகிறேன். சந்திப்பு 29/1/13. முதலவோலை 30/3/13. இரண்டாவது, 3-வது ஓலை 6-4-13.

ஓர் மனு.

அன்பிற் சிறந்த நண்பர்களாகிய மோல்மீன் வாசிகளுக் கென் பணிதலான வந்தனம். எமது சிறிய தந்தை எ. இலாசர் குசினிக்காரர் ஓர் பதித பாதிரியாரிடம் உத்தியோகம் வகிக்கிறதாக வதந்தி. இவருக்கு 3 ஆண் மகனுவகள்; முதல்வன் பெயர் பெரிய அந்து, 2 வது சின்ன அந்து, 3-வது பெயர் தெரியவராது. சிறிய தாயார் பிச்சையம்மாள். குமாரர்களும் தகப்பன் தொழிலையே கைக்கொண்டதாக சங்கதி. ஆனால் இவர்கள் எங்களின் கடிதங்களுக்கு மறுமொழி பகருகிறதில்லை. இவர்களை யறிந்த நண்பர்கள் எங்களின் நற்க்ஷேமத்தையும் மேற் குறித்த விவாகத்தையும் இதனடியில் காணும் என் தமயன் விலாசத்தையும் தயை செய்து அவர்களுக்குத் தெரியப்படுத்தி, தாங்கள் அவர்களுக்கு தெரியப்படுத்தினதாகவும் ஷெயாரின் க்ஷேமத்தையும் விலாசத்தையும் பேரிங் கடித மூலியமாக என் தமயனுக்கு தெரியப்படுத்துவீர்களென தங்கள் மேலான கனத்தை மெத்தவும் பிரார்த்திக்கின்றேன்.

என் தமயன் விலாசம். S. Aorkiaswmy Signaller. N. G. S. Railway. Purna, (Deccan) Via. Secunderabad (Deccan.)

எஸ். வியாகுல மரியம்மாள், வந்தனம்,
பொல்லாரம், தக்கண். 20-3-13.

---


# *St. Anthony's Depot.*

Altar Candles, Church Ornament & Ecclesiastical Arts.

கிறிஸ்துவ நண்பர்காள்,

இவ்விடத்தில் இத் தபசுகாலத்தில் ஞானவாசகத்திற்கும், தியானத்திற்கு மேற்ற அநேக புஸ்தகங்களும், சிலுவைப்பாதைப் படங்கள், சிலுவைகள், சுரூபங்கள் முதலியனவும் எம்மிடம் விற்பனைக் கிருக்கின்றன. அவற்றுள் சில முக்கியமானவைகளாவன.—

மன்ரேசா, அல்லது ஞான முயற்சிகளின் வியாக்கியானம். ரூ. 1–14–0; ஞானவொடுக்கங்களுக்கு நியமிக்கப்பட்ட அர்ச். இஞ்ஞாசியாருடைய ஞானத்தியானங்கள் அணா. 0–7–0; ஆத்துமநேசம் அணா. 0–7–0; வெள்ளிக்கிழமைப் புதுமை 0–9–6; அர்ச். வாரம் 0–8–0; சிலுவைப் பாதை சிறிது 0–3–3; சிலுவைப்பாதை பெரிது தோல்கட்டிடம் 0–12–0; வியாகுலப் பிரசங்கம் அரைக்கட்டிடம் 0–8–0; வியாகுலப்பிரசங்கம் கலிக்கோ 0–10–0; திருஸ்தலவாசகம் 0–3–6; திருஸ்தல தரிசனை 0–6–0; தெய்வீக விருந்து ரூ. 1–0–0; சேசுநாதர் திருப்பாடுகளின் தியானம் 0–10–0; கிறிஸ்துநாதர் அநுசாரம் தோல்கட்டிடம் 0–12–0; தேவமாதா, சூசையப்பர் வணக்கமாதங்கள் ஒன்று 0–12–0; வியாகுலமாதா புலம்பல் 0–1–6; அன்னை அழுங்கல் ஒப்பாரி 2–6–0; தேவமாதா வியாகுல ஒப்பாரி 0–6–0; சிந்தாகுலத்திரட்டு சிந்தாகுலக்கோவை 0–4–0; மிகவும் நேர்த்தியாய் வர்ணந் தீட்டிய சிலுவைப்பாதைப் படங்கள் 10×8 இஞ்சு செட். ரூ. 1–4–1; ஷை 17+3 இஞ்சு செட். ரூ. 4–8–0 எண்ணை வார்ணிஷ் 30+22 இஞ்சு செட். ரூ. 35–0–0; மிகவும் நேர்த்தியான கருப்பு போட்டோ படங்கள் (By Professor Gebhard Fugel) செட். 18½×13½ ரூ. 25; இதோ மனிதன் என்ற (Ecce Homo) சுரூபம் 20 இஞ்சு ரூ. 10; ஆண்டவருடைய உயிர்த்தானச்சுரூபம் 20 இஞ்சு ரூ. 12; இன்னு மநேகவிதமான வெகுமதி பண்ணத்தக்க பல வடிவான சீமை கட்டுப் புஸ்தகங்களும், செபமாலை, படம், சுரூபம், வரவணிக்க முதலியவையும் கோவில் சோடினைச் சாமான்களும் விற்பனைக் கிருக்கின்றன.

1 ரூபாய்க்குக் குறைந்த சாமான்கள் V. P. P. யில் அனுப்பக் கூடாமையால் இவைகளுக்கு ஸ்டாம்பு அனுப்பினால் ஒப்புக்கொள்வோம்.

Thomas Rodrigo,
No. 40, Kochikadde,
Colombo.

தோமாஸ் உறுதிரீகு,
நெ. 40, கொச்சிக்கடை,
கொழும்பு.





# நல்ல ஆயன்

May—1913.

புத்தகம். 11. | "நாம் நல்லஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறு [illegible]களும் நமக் குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10:16-14.) | நெம்பர். 5.


## MONTH OF MARY.

## அர்ச். கன்னிமரியாயின் வணக்கமாதம்.

---

இதோ! மேமாதம் பிறந்து விட்டது. இம்மாதம் நமக் கெல்லோருக்கும் மிக்க பாக்கியகரமான மாதம். அதேதெனெனில், தேவனுக்கும் நமக்கும் தாயான அர்ச். கன்னிமரியாயின் வணக்கமாதம். தங்கள் அன்பு அருமை நிறைந்த அன்னைக்கு வந்தனை வழிபாடுகள் செய்வது மக்களுக்கு பிரியமான கரும மன்றோ? ஆகவே, எல்லா கத்தோலிக்கு நாடு நகரங்களிலும், ஊர் பட்டணங்களிலும், சந்நியாசி கந்நியாஸ்திரி மடங்களிலும், கலாசாலைகளிலும், பள்ளிக் கூடங்களிலும், பக்தியுள்ள குடும்பங்களிலும் இன்னுமற்ற ஸ்தலங்களிலும் இம் மாதத்தை மிக்க சிறப்பாய்க் கொண்டாடுவார்கள். இந்நாயகியின் மகிமைக்காக அங்கங்கே அதிர் வெடிகள் கிளம்பும்; கோவில் மணிகள் அடிபடும்; விநோத விசித்ர வாணவேடிக்கைகள் நடைபெறும். நறுமணம் வீசும் பல வகைப் புஷ்பங்களாலும் சுடர்விட்டெரியும் பல வர்ன தீபங்களாலும் பார்ப்பவர்கள் கண்களைப் பறித்துக்கொண்டு போகும்படி இவ்வாண்டவளின் பீடத்தை அலங்கரித்துச் சிங்காரிப்பார்கள். அதைச் சுற்றிலும் அநந்தம் பேர் முழந்தாட்படியிட்டு வெகு பக்தி விநயமாய் வேண்டிக் கொள்வார்கள். இவ்வன்னையின் காருண்ணியத்தையும், மகிமை வல்லமையையும் பிரசித்தப் படுத்த விசேஷ புத்திப் பிரசங்கங்களும் உபந்நியாசங்களும் செய்யப்படும். பல சுரங்கள் அமைந்த பாட்டு கீர்த்தனைகள் பாடப்படும். இப்படி இம்மாதத்தில் ஒவ்வொரு நாளிலும் தேவதாயை ஏற்றிப் போற்றித் துதித்துக் கொண்டாடி இவளுடைய உதவி சகாயங்களை இரந்து மன்றாடுவார்கள். இம்மாதத்தில் இவ்வன்னையின் மூலமாய் நமக்கு உபகரிக்கப்படும் உதவி ஒத்தாசைகளும் அருட் பிரசாதங்களும் அனந்தம்.

மனுக்குலத்தை மீட்டு இரட்சிக்க மனிதனாய் அவதரித்த சர்வேசுரன், தம்முடைய நேசத்தாய் அம்மனுக்குலத்தாலேயே இப்படித் துதித்துக் கொண்டாடப் படுவதைப் பார்க்கையில், எவ்வளவோ பூரிப்பும் பெருமையுங் கொள்ளுவார். தம்மைப் பெற்றெடுத்து, அன்பாய் வளர்த்து, அக்கறையாய்ப் பேணிக்காப்பாற்றின தம்முடைய அருமைத்தாய்க்கு நாம் காட்டும் மேரை மரியாதையும் பக்தி வணக்கமும் எவ்வளவு அற்பமானாலும், அவைகளைப்பற்றி அவர் அகமகிழ்ந்து முகமலர்ந்து நம்மை அதிகமதிகமாய் ஆசீர்வதிக்கத் திருவுளங் கனிவா ரென்பது திண்ணம். இவ்வாண்டவள் மூலமாய் இது காறும் நிகழ்ந்த புதுமைகளும் இன்று நிகழ்ந்துவரும் புதுமைகளுமே இதற்கு உலக பிரசித்தமான அத்தாட்சி. ஏழை ஒருவனுக்கு நாம் செய்யும் ஒரு அற்ப உதவியை சர்வேசுரன் தமக்கே செய்ததாகப் பாவித்து மகிழ்கிறார். தாம் பாடுபட்டு மரித்த சிலுவையின் பேரிலும், தம்மைக் கஷ்ட நிஷ்டூரப்படுத்தி வாதிக்க உபயோகிக்கப்பட்ட கசை, வார், சட்டி, ஆணி முதலான எத்தனங்களின் மட்டிலும் நாம் காட்டும் பக்தி வணக்கத்தைப்பற்றி நமக்கு எண்ணிறந்த உபகார சகாயங்களைச் செய்கிறார். அப்படியானால், அமலோற்பவியும், வானோர்க்கரசியுமான தம்முடைய திருத்தாயாரை நாம் புகழ்ந்தேத்துவதற்காக அவர் நம்மேல் எவ்வளவு பிரியங்கொள்ளமாட்டார்? நமக்கு என்ன

உதவி சகாயங்களைத்தான் செய்யமாட்டார்? மேலும் நாம் அவ்வாண்டவளை ஒரு நாளைக்கு, இரண்டு நாளைக்கு மாத்திரமல்ல, ஆனால் இம்மாதம் முழுமையும் துதித்துக் கொண்டாடுவோமானால், அவருக்கு சொல்லி முடியாத ஆனந்தபூரிப்புண்டாகி, தம்முடைய அருட்பிரசாதங்களை நம்மேல் சரமாரியாய் பொழிய விடுவா ரென்பதற்கு கிஞ்சிற்றும் சந்தேகமில்லை.

நாம் தேவதாயின்பேரில் பக்திவைப்பதைப்பற்றி பரலோகத்திலுள்ள சகல சம்மனசுக்களும் அர்ச்சியசிஷ்டவர்களும் சந்தோஷங்கொள்வார்கள். எப்படியெனில், இவ்வாண்டவள் பரலோகத்துக்கு இராக்கினியாய் உயர்த்தப்பட்டு, ஜெகஜோதியாய் ஜொலிக்கும் சிம்மாசனத்தின்மேல் வீற்றிருக்கிறாள். தங்கள் இராக்கினி இவ்வளவாய் மகிமையில் இலங்குவதை இவர்கள் கண்டு ஆனந்த பரவசங் கொள்வதுடன், இடைவிடாமல் இவளை எவ்வளவோ பயபக்தியோடு வணங்கித் துதித்துக்கொண்டிருக்கிறார்கள். தேவதாய் தங்களுக்கு இராக்கினியா யிருப்பதுமன்றி நமக்கும் இராக்கினியா யிருக்கிறாளென்று அவர்கள் அறிவார்கள். ஏக்கமும் கவலையுங் கொண்டு இக்கண்ணீர் கணவாயில் தயங்கி நிற்கும் நமக்கு இவளுடைய அடைக்கலமும் ஆதரவும் அத்தியாவசியமென்றும் அவர்களுக்குத்தெரியும். ஆகவே, நாமும் அவர்களுடன் ஏகோபித்து இவளைப் புகழ்ந்துகொண்டாடவும் இரந்து மன்றாடவும் அவர்கள் ஆசிக்கிறார்கள். அர்ச். ஞானப்பிரகாசியார் இவ்வுலகத்தில் இருந்தகாலத்தில் இவ்வாண்டவளுடைய திருநாமத்தை மற்றவர்கள் உச்சரிக்கக் கேட்பாரானால், உடனே அவருக்கு உள்ளம் பூரிக்க சந்தோஷத்தினால் அவருடைய இருதயம் துடிக்கும். ஆயிரங் கணக்காய் ஜனங்கள் இம்மாதத்தில் இவ்வன்னையை வணங்கித் துதிக்கையில் இப்போது பரலோகத்திலுள்ள அந்த அர்ச். ஞானப்பிரகாசியாருக்கு மாத்திரமல்ல, ஆனால் இன்னுமற்ற மோட்சவாசிகளெல்லோருக்கும் எவ்வளவோ சந்தோஷமுண்டாகும்.

இம்மாதத்தை நாம் கொண்டாடவேண்டுமென்று அர்ச். கன்னிமரியம்மாளும் ஆசிக்கிறாள். இவள் இப்படி ஆசிப்பது தம்முடைய தற்பெருமைக்காகவல்ல, ஆனால், நம்முடைய நன்மைக்காகவே. ஏனென்றால் நமக்கு வேண்டிய உபகார சகாயங்களைச் செய்ய இது அவளுக்கு நல்ல தருணம். இவள் நம்முடைய தாய். தம்முடைய தேவ குமாரன் உயிர்துறந்த சிலுவையின் அடியிலேயே நம்மெல்லோரையும் தமக்குப் பிள்ளைகளாகப் பெற்றெடுத்தபடியால், நம்மைத் தாய்க்குரிய நேசத்தோடு நேசிக்கிறாள். நம்முடைய க்ஷேம லாபங்களின் பேரில் எப்போதும் கண்ணும் கருத்துமாயிருக்கிறாள். நம்முடைய நித்திய வாழ்வைப்பற்றி நாம் கொள்ளுகிற கவலையைவிட அவள் அதிக கவலை கொள்ளுகிறாள்! ஆகவே, நாம் எல்லோரும் அவளை அண்டிப்போய் அவள் நமக்கு அளிக்க ஆசிக்கும் அருட்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்ள "என்னை ஆசிக்கிறவர்கள் எல்லோரும் என்னண்டைக்கு வாருங்கள்." (சங்கபிரசங்கி. XXIV. 26.) என்று சொல்லி நம்மெல்லோரையும் வருந்தி யழைக்கிறாள்.

முதன்முதல் பாவிகளே தம்மிடம் வரவேண்டுமென்று தாற்பரியப்படுகிறாள். இவர்கள் தங்கள் நிர்ப்பாக்கிய நிலைமையை விட்டு உடனே எழுந்து சர்வேசுரனோடு சமாதானப்பட வேண்டுமென்று ஆசிக்கிறாள். தாம் பாவிகளுக்கு அடைக்கலமாயிருப்பதினால் அவர்கள் மனந்திரும்பவும், பாவவிமோசனமடைந்து பரிசுத்தர்களாகவும் தம்மாலான உதவிசெய்யத் தயாராயிருக்கிறாள். பசாசுக்கு அடிமைப்பட்டு கிடப்பதினால் இவர்கள் இடும் பெருமூச்சைக்கேட்கவும், நித்திய கேட்டுக்கு இவர்கள் விரைவாய் நடந்து செல்லுவதைப் பார்க்கவும் இவளால் சகிக்கக் கூடவில்லை. இவர்களுடைய ஆத்துமங்கள் எவ்வளவோ விலையேறப்பட்டவையென்றும், இவைகளை இரட்சிக்க தம்முடைய தேவகுமாரன் எவ்வளவோ அரியபாடுகள்பட்டு மரித்தாரென்றும் இவளுக்குத் தெரியும். அவர் இவ்வாத்துமங்களுக்காக மோட்ச இராச்சியத்தில் சித்தஞ்செய்து வைத்திருக்கிற சிறந்த சிம்மாசனங்களை இவள் கண்ணோக்குகிறபடியால், அவைகளில் இவர்களெல்லோரும் வந்து அமர்ந்து மற்ற மோட்சவாசிகளைப்போல் மோட்ச பேரின்ப பாக்கியத்தை சுகிக்கவேண்டுமென்று கோருகிறாள். ஆகையால் ஒருவரும் தவறாமல் சகல பாவிகளும் இந்த மாதத்தில் தம தண்டைக்கு வரும்படி வருந்தி யழைக்கிறாள். மேலும் அவர்கள் எல்லோரையும் கட்டி அரவணைத்துக்கொண்டு தம் தேவ குமாரனிடத்தில் அழைத்துப்போய் அவர்களை அவரோடு சமாதானப்படுத்த தம்முடைய கரங்களை விரித்துக்கொண்டிருக்கிறாள்.

அப்படியென்றால், நாம் ஒவ்வொருவரும் தெய்வ சன்னிதியில் நமது ஆத்துமத்தை சோதித்துப் பார்ப்போமாக. நாம் நிர்ப்பாக்கியராய் சாவானபாவ அந்தஸ்திலிருப்பதாக அறிவோமானால், உடனே தேவ தாய் அண்டைக்குப் போவோமாக. அவளுடைய உதவியால் நாம் இழந்துபோன தேவ இஷ்டப்பிரசாதத்தை மறுபடியும் சம்பாதித்துக்கொள்ள இம்மாசம் நல்ல வசதியான மாதம். ஆகையால் பாவிகளுக்கடைக்கலமாகிய அப்பரமாண்டவளை அண்டிப்போய், பாவத்தின்மட்டில் நமக்குள்ள பற்றுதல்களையும், இன்னு நம்மிடத்தில் குடிகொண்டிருக்கும் துர்ப்பழக்கங்கள் கெட்ட வாடிக்கைகள் முதலானவைகளையும் விட்டொழித்து விட்டோமென்றும், நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்யவும் இனிமேல் பரிசுத்தமாய்ச் சீவிக்கவும் மனசுள்ளவர்களாயிருக்கிறோமென்றும் அவளிடஞ் சொல்லிக்கொள்வோமாக. இதைக் கேட்குமாத்திரத்தில் அவளுக்கு சொல்ல முடியாத சந்தோஷமுண்டாக, வான மண்டலத்திலுள்ள சகல வானோர்களையும் தம்முடன் ஏகோபித்து ஆனந்தங்கொண்டாட கூப்பிட்டழைப்பாள். மேலும் நம்முடைய நிர்ப்பாக்கிய நிலைமையை விட்டெழுந்து சர்வேசுரனுடன் உறவாடவும், இனிமேற்பட உத்தமர்களாய் நாம் ஒழுகவும் வேண்டிய அருட் பிரசாதங்களைத் தேவதாயார் தம்முடைய திருக்குமாரனிடத்திலிருந்து நமக்குப் பெற்றுக்கொடுக்கப் பின்னிடையாள் என்பது திண்ணம்.

தம்முடைய வணக்கத்துக்காகக் குறிக்கப்பட்டிருக்கிற இம்மாதத்தில் அர்ச். கன்னிமரியம்மாள் பாவிகளையே யன்றி தங்களுடைய ஆத்தும ஈடேற்றத்தின் பேரில் அசட்டையும் அசிரத்தையு முடையவர்களையும் தம்மிடம் வருந்தி அழைக்கிறாள். இப்பேர்ப்பட்டவர்களுக்கு தேவ ஊழியத்தி லிருந்த சுறுசுறுப்பு ஓய்ந்து குளிர்விட்டிருப்பதினால், இவர்கள் காலக்கிரமத்தில் தேவ இஷ்டப் பிரசாதத்தையும் தேவ நேசத்தையும் போக்கடித்துக்கொண்டு, சாத்தானுக்கு அடிமைகளாவார்களென்று அவளுக்குத்தெரியும். இவர்கள் மேல் தம்முடைய தேவகுமாரனும் அருவருப்பு கொள்ளுகிறாரென்று அவள் அறிவாள். உண்மையில் ஒருவன் தனக்கு அத்தியாவசியமாயிருக்கும் இரட்சண்ய அலுவலில் சோம்பல் கொண்டு அதை அலட்சியஞ்செய்வது. எவ்வளவோ மதியீனமாகும்! ஏனென்றால் "மோட்ச இராச்சியம் பலவந்தம் செய்யப்படுகிறது; பலவந்தஞ் செய்கிறவர்களே அதைப்பறித்துக் கொள்வார்க" ளென்று வேதப் புத்தகத்திலும் சொல்லப்பட் டிருக்கிறது. ஆனபடியால், தங்கள் ஆத்தும காரியங்களின் பேரில் கவலையீனமுள்ளவர்கள் பாவத்தை விலக்கவும் புண்யத்தைச் செய்யவும் என்ன பிரயாசையெடுத்துக்கொள்வார்கள்? ஆகையால் தங்கள் ஆசாபாசங்களை அடக்கி புண்ணியத்தைச் செய்ய, சோம்பிக்கிடக்கிறவர்களெல்லோரும் அர்ச். கன்னிமரியம்மாளுடைய குரலுக்கு இம்மாதத்திற் காதுகொடுத்து, அவளுடைய் தஞ்சமடைந்து, தேவ ஊழியத்தில் சுறுசுறுப்பும் ஆசையுங்கொள்ள தங்களுக்கு வேண்டிய வரப்பிரசாதங்களை இரந்து மன்றாடுவார்களானால், அவைகளை அவசியம் அடைவார்களென்பது உண்மை.

சர்வேசுரனுடைய விசேஷ தயவால் நாம் தேவ ஊழியத்தில் மிக்கப் பிரமாணிக்கமும் மெய்யான ஆவலு முடையவர்களாய்ச் சீவித்து, புண்ணியத்தில் நாளுக்குநாள் விருத்தி யடையும் பாக்கியம் பெற்றவர்களாய் இருந்தாலும், நாமும் தேவதாயை இம்மாதத்தில் அண்டிப்போய் நம்முடைய மரண பரியந்தம் இப்பரிசுத்த அந்தஸ்தில் நிலைத்திருக்கவேண்டிய வரத்தை யிரந்து கேட்டுக்கொள்ள வேண்டியவர்களா யிருக்கிறோம். ஏனெனில், இவளுடைய உதவியின்றி நம்முடைய பரிசுத்தத்தனத்தைக் காப்பாற்ற முடியாது. "நிற்கிறவன் தவறிவிழாம லிருக்கப் பார்த்துக் கொள்ளக் கடவான்." என்று இஸ்பிரீத்து சாந்துவானவரும் வசனித்திருக்கிறார். சாங்கோபாங்கத்தின் கொடுமுடியைச் சேர்ந்தவர்களிலும் எத்தனையோ பெயர் கெட்டழிந்து நித்திய கேட்டுக் குள்ளா யிருக்கிறார்கள். ஆகையால் நாம் பரிசுத்தவான்களானாலுஞ்சரி, பாவிகளானாலுஞ்சரி, தேவ ஊழியத்தில் சுறுசுறுப் புள்ளவர்களானாலுஞ்சரி, வெது வெதுப்புள்ளோரானாலுஞ்சரி எல்லோரும் தேவ தாயின் உதவியை

நாடிப் போக வேண்டியவர்களே. அந்த நாயகி பரலோகத்தின் வாசலல்லவோ? அவள் மூலமாயன்றி மோட்சராச்சியத்தில் பிரவேசிக்கக்கூடியதார்? தம்முடைய வணக்கத்துக்கும் தோத்திரத்துக்கும் குறிக்கப்பட்டிருக்கும் இம்மாதத்தில் சகலரும் இரட்சண்யம் அடையவேணுமென்றுமெத்த ஆவலுடன் தமது திருக்குமாரனுடன் கோரிக்கை கொள்ளுகிறவளாகிய இந்த தயைநிறைந்த ஆண்டவள், நம்மை விசேஷ விதமாய் கிருபைக் கண்ணோக்கி பார்க்கிறவளாகையால், அவளை அண்டிப்போவோமாக. அவளுடைய உபகார சகாயங்களை இரந்து மன்றாடுவோமாக. கத்தோலிக்கு உலகமுழுமையும் இம்மாதத்தைக் கொண்டாடும். நாமும் மற்றவர்களுடன் ஏகோபித்து நாடோறும் இவ்வாண்டவளுடைய மகிமைக்காகவுந் தோத்திரத்துக்காகவும் வருந்தியுழைத்து, அவளுடைய சனுகையடையப் பிரயாசைப்படுவோமாக. நாம் வசிக்கும் ஊர்,பட்டணத்தில் இம்மாதங் கொண்டாடப்படுமேயானால் அதற்கு நம்மாலியன்ற உதவி புரிந்து இவ்வாண்டவளை ஏற்றிப் போற்றித் துதித்து, இவ்வாறே நமது சீவிய முழுதும் வருஷா வருஷம் செய்து, அவளுடைய மெய்யான மக்களாகச் சீவித்து, நமது ஜென்ம சாபல்லியமாகிய மோட்ச பேரின்ப பாக்கியத்தைப் பெற்றுக்கொள்வோமாக!

## VOCATION.

## தேவ அழைப்பு.

இயாதொரு நாட்டில், அனேக கிறீஸ்துவ குடும்பங்களிருந்தும், அக் குடும்பங்களின் சிறுவர் யாருந் தேவ ஊழியத்திற்கு அழைக்கப்படவில்லையாயின் அது ஓர் பெருங் குறையேயல்லவா? அக்குறை மூன்று காரணங்களால் விளையலாம். அவையாவன: 1-வது வாலிபர் தேவ அழைப்பு யாதென்று அறியாமை. 2-வது தேவ அழைப்பைப்பற்றி அறிந்தாலும் உலகம் அவதூறாய் சொல்லுவதை நம்பி, அவ்வழைத்தலை அலட்சியம் செய்தல். 3-வது தாய் தந்தைகள் பேருக்கு மாத்திரம் கிறீஸ்துவர்களாயிருத்தல். இக் குறைகள், நம் மிந்திய வாலிபரிடத்திலும், அவர்களின் பெற்றோரிடத்திலுமிருந்து நீங்க அவர்கள் ஏதேது செய்ய வேண்டுமென்பதைப்பற்றிச் சொல்லாமுன்னர் தேவ அழைப்பு என்றால் என்னவென்று கிஞ்சித் தாராய்வோம். தேவ அழைப்பு என்னும் பதம் பல பொருள் கொள்ளும். ஒருவன் மெய்வேதத்திற் கழைக்கப்பட்டானென்றால், அவன் சத்திய திருச்சபையில் பிரவேசிக்க பாக்கியம் பெற்றானென்று நாமெல்லோருமறிவோம். அவ்வழைத்தலைப்பற்றியல்ல நாம் இவ்விடம் பேசுவது. ஒருவன் தேவசித்தத்திற்கிணங்கி, சத்திய திருச்சபையிலுட்படுவது நித்திய ஜீவியமடையவே என்றாலும், மானிடனின் கடைசி முடிவாகிய அந்த ஞான பாக்கியத்தை இல்லறம் துறவறம் என்னும் இரண்டு ஜீவியங்களாலும் அடையலாம். இல்லறம் புகுவது துறவறத்தைப்போல் தேவ சித்தத்தாலே யானாலும், துறவறமே இல்லறத்தைவிடச் சிறந்தது. ஒருவன் இப்பேர்க்கொத்த அரிய அந்தஸ்தைத் தெரிந்துகொண்டானென்றால், அது இரு பொருள் கொள்ளும். அதாவது சந்நியாச ஊழியத்திலேயோ, அல்லது குருப்பட்டத்தின் தொழிலிலேயோ பிரவேசித்தானென்றர்த்தமாகும். ஆனால் இந்த சிறுவியாசத்தில் தோன்றும் தேவ அழைப்பு என்னும் பதம் குருப்பட்டம் பெறுதலையே குறிக்கின்றது. இக் கருத்தைப் பற்றியே இப்போது இங்கு பேச நமது நோக்கம்.

தேவ அழைத்தலாகிய இந்த சிறந்த அந்தஸ்தைப்பற்றி உலகம் பலவாறாய்ப் பேசும். கிறிஸ்துநாதருக்கும் தேவமாதாவுக்கும் உள்ள வித்தியாசத்தை அறியாத அம்மூட உலகம் சத்திய குருவுக்கும் ஓர் இந்து பண்டாரத்துக்கும் உள்ள தாரதம்மியத்தைக் கண்டுபிடிக்க முடியுமோ? அல்லது அதையறிய மனமும் ஒக்குமோ? ஓ! பாரபட்ச உலகமே! ஒருவன் ஓர் படம் எழுதுவதில், அவன் எவ்வளவோ ஊக்கங்கொண்டு உழைப்பதை நீ கண்டு மகிழ்கிறாய். வேறொருவன் ஓர் விநோத பாட்டைச் செய்வதில் சாப்பாட்டை முதலாய் மறப்பதை நீ பார்த்து மெச்சுகிறாய். மற்றொருவன் நூதனமான கருவியொன்று கண்டுபிடிக்கிறதிலேயோ அல்லது வடமுனை, தென்முனை சேர்வதிலேயோ உற்சாகங்கொண்டு தன் பிராணனை முதலாயிழக்கத் துணிவதைப் பார்த்து, அதைவிட வேறு சிறந்ததில்லை என்று மலைக்கிறாய். இவைகள் பலிக்க ஏராளமான பண உதவியும் புரிகிறாய். ஆனால், ஒருவன் தேவ அழைத்தலை நாடினானென்றாலோ, மதியில்லாத உலகத்தைநாடிய உனக்கு அது ஓர் பரிகாசமான காரியமாயிருக்கும்.



தேவபக்தியுள்ள வாலிபரே! உலகம் இவ்வாறு நினைப்பதற்கு விசுவாசக்குறையேயல்லாது வேறு காரணமுண்டோ? தன் இரட்சண்யத்திற்காகவும், பிறர் ஆத்தும ஈடேற்றத்துக்காகவும் துறவறம் புகுந்தவனை நிந்தித்து, பிழைக்க வழியில்லாமல் அவ்வாறு செய்தானென்றும், தன் மனதுக்குத் தகுந்த மணம் பூணக் கூடாமையால் சன்னியாசம் புகுந்தானென்றும் சொல்லுகிற உலகத்தையும் அதின் மதியீன புத்திரரையும் நாம் சட்டைபண்ணுமலிருப்பதேயன்றி, அவர்களைப் பார்த்துப் பரிதபிக்கவும் வேண்டும். இவ்வுலகின்கண் அனேக அழகான பொருட்கள் உண்டென்கிலும், அவ்வவற்றின் குணமறிந்தவர்களே அவ்வவற்றை ஆவலுடன் அணுகுவார்களல்லவா? அதுபோல் தேவதூதர் முதலாய் இச்சிக்கும் இந்த தேவ ஊழியத்தின் மகிமையையும் மனோகரத்தையும் பற்றி கிஞ்சித்தே அறிவீராயின், நீங்கள் ஒருக்காலும் வெறிகொண்ட உலகத்தைப் போல் நினைத்து அவ்வூழியத்தை அலட்சியம் செய்யமாட்டீர்கள். எத்தனையோபேர்கள் தங்கள் நீச எஜமான்கள் காலாலிட்ட வேலையை கையால் செய்ய, ராஜாதிராஜாவாகிய சர்வேசுரனுக்கு ஊழியம் செய்வதும், அவர் ஏக சுதன் துவக்கிய ஆத்தும ரட்சண்ய அலுவலை முடிப்பதும் ஓர் நீசமான காரியமாமோ? ஒருக்காலுமில்லை. மேலும் இம்மேன்மையான வேலை எல்லோருக்குமே கிடைப்பதில்லை. இதற்காக அழைக்கப்பட்டு, அதற்கு செவி கொடுப்பவர்களுக்கே அந்த இன்பசத்தத்தைக் கேட்க முடியும். இன்னும் இத்தொனி வெகு இன்பமான மெல்லியதேயாயினும், அதைத் தக்கவிதமாய் கேட்பவனுக்கு ஒரு இடிச்சத்தம் போலும் இருக்கும். அச்சத்தம் இப்பேர்ப்பட்டதாகையாலன்றோ அனேகர் தாங்கள் மெய்யாகவே தேவ ஊழியத்திற்கு அழைக்கப்பட்டாரென்றறிந்து, அதை நாட எக்கஷ்ட துன்பங்களையும் பாராமல், உலகமே ஒரு மாயமென்றும், ஓர் நீர்க்குமிழி என்றும் நினைக்கிறார்கள். அர்ச். பெர்நர் தென்பவர் பர்கண்டி தேசத்தின் பிரபுவின் குமாரர்களிலொருவர். தேவ அழைத்தலை அணுகி தனக்குண்டாயிருந்த ஏராளமான ஆஸ்தியாஸ்திகளையும் உலகமகிமையையும் புறக்கணித்து, துறவறம் புகுந்தார். இவர் அல்லாது இவருடன் கூடப்பிறந்தவர் ஆறுபேர். இவர்களெல்லோரையும், கடவுளுக்கு சித்தமானால் தேவ ஊழியத்திற் சேர்க்கவே பெர்நார்தென்பவருடைய கருத்து. இதற்காகவே, அவர் வெகுவாய் சர்வேசுரனைப் பார்த்து, மன்றாடியும் வந்தார். மூத்த சகோதரன் இல்லறம் புகுந்தபிற்பாடும் அவர் மன்றாட்டு வீணாகவில்லை. ஏனெனில், அடிக்கடி அதிசயமாய் தன் காதில் விழும் அரியசத்தத்தை புறக்கணிக்க முடியாமல் தன் பாரியாள் மடம் புகச் சம்மதிக்க, தானும் அவளும் துறவற அந்தஸ்தைத் தெரிந்துகொண்டார்கள். ஆகையின் இளையமகன் ஒருவன்தான் தன் தந்தையின் ஏராளமான ஆஸ்தியை எல்லாம் வகிக்க உலகத்திலிருந்தான். என்றாலும், அப்போதைக்கப்போது இடிபோல் தன் காதில் விழும் தேவ அழைப்பின் சத்தத்தை அவ்விளைய மகனும் புறக்கணிக்கக் கூடாமற் போயிற்று. இச்சிறுவனும் தன் சகோதரர்களின் ஆஸ்தி எல்லாம் தனக்கே சேர்ந்தபோதிலும், தனக்கு அழிந்துபோகும் உலக ஆஸ்திகளைத் தந்து, தம் சகோதரர்கள் என்றுமழியா பரலோக பொக்கிஷத்தை தமது பங்காக எடுத்தது வெகு அநீத ஏற்பாடென்று சொல்லி, தானும் உலக சுக போகங்களை வெறுத்து தன் சகோதரர்களைப் பின்சென்றான். ஆகையின் இந்திய வாலிபரே! உங்களுக்கும் இம்மட்டில்லா பாக்கியம் கிடைக்குமாயின் நீங்களும் பாக்கியவான்கள். கணக்கில்லாப்பேர் தேவ தாயாரின் சகாயத்தால் இப்பாக்கியத்தை யடைந்தார்கள். நீங்களும் இதற்காக அப்பரம நாயகியை நாடி மன்றாடுங்கள். எல்லாவற்றிலும் இதே வெகு அனுகூலமானது. நமது ஆண்டவர் ஸ்தாபித்த சத்திய திருச்சபை நீடித்திருக்கவும் விருத்தியாகவும் குருத்துவம் வெகு அவசியம். ஆகையின் இந்திய யௌவனரே! குருத்துவத்தை நாடுங்கள். காட்சியாகமத்தில் காணும் பரலோக ஜெருசலேமை அங்கீகரிக்கவே குருத்துவம் ஏற்படுத்தப்பட்டது. திருச்சபையை விருத்தி செய்யும் அந்த உன்னத ஊழியத்தில் பங்கடைய உங்களுக்கு மனமில்லையோ? ஆனால் இதர தேவ வரப்பிரசாதங்களைப் போல், இதுவும் யாதொருவனுடைய மனதையும் கட்டாயப்படுத்துவதில்லை. அழைக்கப்பட்ட பவுல் என்பவர் ஓர் தேவதுரோகியாயிருந்தும் ஓர் பெரிய அபோஸ்தலரானார்.

கிறிஸ்துவ குடும்பமே சிறுவரின் மாசற்றதனத்திற்கு ஓர் கலசம் போலிருக்கிறதாகையால், தேவ அழைத்தலை யடையவும் அந்தக் குடும்பமே ஓர் அதியுபயோகமான தூண்டுகோலாயிருக்கின்றது. பத்தியுள்ள தாய் தந்

தைகள், தமது தரும கிரியைகளாலும், நன்மா
திரிகையாலும், தாங்கள் அப்போதைக் கப்
போது ஓதும் புத்திமதிகளாலும் சர்வேசுர
னுக்குச் சித்தமுண்டானால் அவர்களை தேவ
அழைத்தலுக்குக் காது கொடுக்கும்படி முஸ்தி
ப்பு செய்கிறார்கள். நசரேத்து திருக்குடும்பத்
தை அனுசரித்து நடவாதது ஓர் பக்தி குடும்
பமன்று. அத்திரு குடும்பத்தைப் பாவித்து நட
ந்த குடும்பங்களிலேயே அனேகர் குருப்பட்
டம் பெற பாக்கிய மடைகிறார்கள். உதாரண
மாக பேசீல் என்னும் குடும்பத்தைப் பாருங்கள்.
அக்குடும்பத்தைச் சேர்ந்த அர்ச். மக்கரீனவைப்
பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இவளுடை
ய புத்திரன், பேசீல் என்னும் அர்ச்சியசிஷ்ட
வர். இவருடைய மனைவி அர்ச் எமேலியா.
இவ்விரு புண்ணியவாளர்களின் புத்திரன்தான்
பேர் போன பேசீல்; திருச்சபைசாஸ்திரி. இவரு
டன் பிறந்தவர்கள் 9 பேர். இவர்கள் எல்லோ
ரும் தமது புண்ணியங்களால் துலங்கினவர்
களே யன்றி, 4 பேர் அர்ச்சியசிஷ்டவர்களும்
ஆனார்கள். என்ன ஆச்சரியம்! ஒரே குடும்பத்
தில், மூதாய், தாய், பிதா, நாலுபிள்ளைகளும்,
ஆக 7 பேர் அர்ச்சியசிஷ்டபட்டம்பெற்றார்கள்.
கர்தினல் வான் என்பவரின் குடும்பமும் ஓர் பத்
திக்குரிய குடும்பமே. அவர் தந்தைக்கு உதித்த
13 பிள்ளைகளில் 10 பேர் குருப்பட்டம் பெற
வோ, அல்லது கன்னியாஸ்திரிகள் ஆகவோ பாக்
கியம் பெற்றார்கள். இப்பேர்ப்பட்ட பக்திவிசு
வாசம் நிறைந்த குடும்பங்களி லல்லாது தாய்
தந்தைகள் பேருக்கு மாத்திரம் கிறிஸ்துவர்
களா யிருக்கும் குடும்பங்களினின்றும் பிள்ளை
கள் தேவ ஊழியத்துக்கு அழைக்கப்படுவார்
களா? ஆகையால் பெற்றோர்கள் தங்கள் பிள்ளை
களை தங்கள் குடும்பங்களில் நாடோறும் நடத்
தப்படும் பத்திக்குரிய விஷயங்களில் சேர்ப்
பிப்பது மாத்திரம் பற்றாது. அவர்கள் செய்கி
றது என்ன. என்னத்திற்காக செய்கிறார்கள்
என்று ஒவ்வொரு கிரியையின் அர்த்தத்தையும்
அதுசெய்யப்பட வேண்டிய வகையையும் அவர்
களுக்கு அறியப் பண்ண வேண்டும். அவ்வி
தம் அறிவதாலேயே சிறுவர் சிறுமிகளுக்கு
தேவ காரியங்களின் மேற் பிரீதியும் அபிலா
ஷையு முண்டாகிறது. "தொட்டிற் பழக்கம்
சுடுகாடுமட்டும்" என்றபடி இளமைப் பழக்க
மெப்போது மறவாது. ஆகையின் இவ்விஷயம்
வெகு உபயோகத்துக் குரியதே. பேருக்குமாத்
திரம் கிறிஸ்துவர்களா யிருக்கும் பெற்றோர்கள்
இப்படிச்செய்ய மாட்டார்கள். மெய்யான கிறி
ஸ்துவ குடும்பங்களில் சிறுவர் துர்மார்க்கத்
தில் நடப்பது அரிதென்கிலும் பழுதுண்டு. அ
திலுமரிது பத்தியுள்ள பெற்றோர் தங்கள் மக்
களின் தேவ அழைத்தலுக்கு விரோதமாய்ப்
போவது. ஆனால் ஏன் வெகு சொற்பபேர் மாத்
திரம் அவ்வழைத்தலுக்கு அழைக்கப்படுகிறார்
கள்? குடும்பங்கள் கிறிஸ்துவக் குடும்பங்களே
யானாலும், அவற்றிலுள்ளோருடைய ஆசை கவ
லையெல்லாம் எவ்வுபாயத்தால் பணம் சம்பாதிக்
கலா மென்பதேயொழிய ஏழைகளின் இக்கட்
டுக்களையும், கஷ்ட துன்பங்களையும் கனவிலும்
நினையார்கள். ஜெப முதலிய விஷயங்களென்
றால் வெகு வெறுப்பு. சிலவிசை ஜெபித்தாலும்
அதைச் சீக்கிரத்தில் முடிக்க பல உபாயந்
தேடுவார்கள். ஆனால் வேடிக்கை முதலியவை
பார்க்க வெகு விருப்பு; அதற்கு யாதொரு
ஆட்சேபனையு மில்லை. இவைகளுக்காக தங்
கள் பணத்தையும் தாராளமாய் செலவிடுவார்
கள். தரும மென்றால் தங்கள் ஆஸ்தி எல்லாம்
நாஸ்தி என்பார்கள். இவ்விதமான குடும்பங்
களின் சிறுவர் சான்றோராகாரென்பது அதி
சயமோ? அவர்கள் துறவறம்பூண்டு குருப்பட்
டம்பெற ஆசிப்பது ஓர் புதுமையே! சிலவிசை
தேவ அழைத்தலென்னும் வான எக்காளச் சத்
தத்தின் இனிய ஓசை அவர்கள் காதில் விழுந்
தாலும் அதை கவனியார்கள். புஷ்பங்கள் செ
டி கொடி யோடிருக்கும் வரையில் வாடிப்
போகா. ஆனால் கொடியினின்று வேறு படவும்
சூரிய வெப்பத்தினால் வெகு துரிதத்திலேயே
வாடி வதங்கி, தம் நறுமண மிழந்து யாராலு
மிச்சிக்கப்படா. அதுபோலவே பெற்றோருடை
ய நன்மாதிரிகையும், நல்யோசனையும், அநுசர
ணையு மற்ற பிள்ளைகள் அப்பூக்களைப் போல்
தாங்களும் விசுவாசக் குறைவால் நாளாவட்
டத்தில் சூரிய காந்தி எனனும் உலக இச்சைக
ளால், தேவ அழைத்தலை அண்டவேமாட்டார்
கள். இவ்வாறு பத்திக்குடும்பங்களும் விசுவா
சம் நிறைந்த தாய் தந்தைகளும் பிள்ளைகளின்
தேவ அழைத்தலுக்கு வெகுவாய் உதவலாகும்.
சாதாரணமாய்ப் பத்தியுள்ள சிறுவர் தமது
ஆனந்த புது நன்மை நாட்களில் தாம் சர்வே
சுரனால் அழைக்கப்படுகிறார்களென்று, தங்கள்
எண்ணத்தி லெழும்பும் ஆசை மெய்யாகவே
யிருக்கலாம். இவ்வண்ணம் தோன்றிய எண்
ணம் தற்சமயம் மறைவது முண்டு. இதே எண்
ணம் நாளாவட்டத்தில் தேவ கிருபையால் மறு



படியும் தோன்றுவது முண்டு. மேலும் ஞான
வைத்தியனான சற்குரு சிறுவரின் அபாயங்
களைக் கண்டு, அவற்றை விலக்கியும் அவர்
களுக்குத் தகுந்த நேரத்தில் தக்க விஷயமாய்
போதித்தும், மற்றும் அவர்களுக்கு அவசிய
மாய்த் தோன்றும் உதவிகளைச் செய்தும் அவர்
களைப் பராமரிக்கவேண்டும். வாலிபர் தங்கள்
கல்வி விஷயங்களே யல்லாது, தேவபயம்,
தேவ பக்தி முதலிய ஞான விஷயங்களையும்
ஓதும் கலாசாலைகளை விடுமுன், தங்களை விசா
ரித்துவந்த சுவாமிமாரின் சிரமத்தாலும் அப்
போதைக் கப்போது தங்களுக்கு ஓதப்பட்ட
நற்புத்திகளாலும் ஆத்தும் ரட்சண்ணியத்தை
யும், அதன் குணாதிசயங்களையும் நன்றாய்
அறிந்தும், தாங்கள் தேவ ஊழியத்திற் கழைக்
கப்படுகிறார்க ளென்று தெரிந்தும் தங்கள்
வீண் விளையாட்டுகளாலும், தாங்கள் பின்னர்
சேரும் கலாசாலைகளின் பராமரிப்புக் குறைவி
னாலும், கெட்ட தோழருடைய துர்மாதிரிகை
களாலும் தங்கள் தேவ அழைத்தலை மறந்து
விடுகிறார்கள்; அல்லது அதைப் புறக்கணிக்கிறா
ர்கள். இத் தருணத்தில்தான் ஞான வைத்திய
னின் உதவி, ஒத்தாசை அத்தியாவசியம். இவ்
வாறு அவர்கள் தத்தளிக்கும் சமயத்தில் குரு
வானவரின் அநுசரணையும் ஆறுதலும், பட்ச
மும் பற்றுதலும் வெகு அவசரம். அதிலும், அத்
தியாவசியம் மாசற்ற மரியாயின் சர்வ வல்லப
அடைக்கலம். ஆகையால் மக்களைப் பெற்றோர்
களே! சுதேச குரு சுவாமிகளே! சில
விசை நீங்கள் பிரயாசைப்பட் டிருந்தும் அது
வீணாய்ப்போ யிருக்கலாம். ஆனால், "முயற்சி
யுடையார் இகழ்ச்சி யடையார்" என்னும் பழ
மொழியை மறவாதேயுங்கள். கடவுள் கடாட்
சத்தால் முடிவில் உங்களது பிரயாசை வெகு
வாய் ஆசீர்வதிக்கப்படும். நமது தேசத்தாருக்கு
வேதம் போதிக்கவும், நமக்கு ஞான விஷ
யங்களில் உதவி புரியவும் எவ்வளவு காலந்தா
ன் நாம் மேல்நாட்டாரை எதிர்ப்பார்க்கலாம்.
சுய குருக்களாலேயே நமதுதேசம் பராமரிக்
கப்பட கால மாகவில்லையோ? பூர்வத்திலேயே
நாகரிகத்தில் சிறந்து, வேறு தேசங்களையும்
அதில் பங்கடையச் செய்த நமது இந்துதேசத்
தை மேல் நாட்டார் ஆப்பிரிக்கா முதலிய, நா
கரிகமற்ற தேசங்களுக்கு ஒப்பிடுவது என்ன
வெட்கத்துக்குரிய காரியம்? நமது ஆண்டவர்,
தமது சத்தியவேதம் சுதேசகுருக்களால் போ
திக்கப்படா தென்கிறாரோ? அல்லது அவ்வூழி
யத்துக்கு, அம்மக்களை அழைக்க அவருக்கு
ஆட்சேபனையோ? இல்லையே! ஆகச்சே, நமது
தேசத்தில் மெய் வேதம் பரவச்செய்ய அனே
கர் குருப்பட்டத்துக்கு அழைக்கப்பட வேண்டு
மானால், மேலே குறிப்பித்தபடி சிறுவரும்,
அவர்களின் பெற்றோர்களும் அவர்களின் ஞா
னத்தந்தைகளும் அவரவர், தாம் தாம் செய்ய
வேண்டியதை சரிவரக் கவனிக்க வேண்டா
மோ? இந்தியவாலிபரே! நீங்கள் இச்செவிக்கு
காது கொடுப்பதால், மோட்சத்தையே உங்கள்
பங்காக எடுத்துக் கொள்ளுகிறீர்கள். உலகம்
அவதூறாய் பேசுவதை கவனியா தேயுங்கள்.
குருப்பட்டத்துக்குமுன் படிப்பது, வெகு கடி
னமென்றும் நினையா தேயுங்கள். "சித்திரமும்
கைப்பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம்"
தாய் தந்தைகளே! உங்கள் புத்திரரில் ஒரு
வர் மாத்திரமே பலிப்பீடத் தண்டையில்
நிற்க கடவுளுக்குச் சித்தமாயின் நீங்களே
பாக்கியவான்கள். நமது தேசத்திலேயும் குரு
வானவர்களின் தாய் தந்தைகளை எல்லோரும்
மரியாதை செய்கிறதில்லையா? பிரிட்டோ என்
னும் அருளப்பருடைய தாயார் போர்த்துகல்
தேசத்து இராணியின் தாதிகளி லொருத்தி.
ஒருநாள் அவ்விராணி சிங்காசனம் வீற்றிருக்
கையில், அருளப்பர் மறவர் தேசத்தில் வேத
சாட்சியடைந்த சங்கதி அவளுக்குக் கொண்டு
வரப்பட்டது. உடனே அவள் எழுந்து தான்
வீற்றிருந்த சிங்காசனத்திலேயே, எல்லோரும்
அதிசயப்பட, அருளப்பருடைய தாயாரை உட்
காரச்செய்து அந்நாள் முழுதும் ஓர் இராணிக்
குரிய மரியாதையை அவளுக்கு தானும் மற்ற
வர்களும் செலுத்தினார்கள். இது ஏன்? அவள்
மகன் குருப்பட்டம் பெற்று, தன் ரட்சகருக்கு
தன் ஜீவனை முதலாய் தந்ததாலேயே. உல
கத்தில் ஓர் சிறந்த காரியத்தை செய்தவனு
டைய கீர்த்தி நிலைபெற அவன் பேரால் ஓர்
ஞாபக மண்டபம் கட்டுகிறார்கள். அல்லது
அவனது பிரதிமையை ஸ்தாபிக்கின்றார்கள். இப்
பேர்ப்பட்டவைகளுக்காக உலகத்தில் அனேக
கோடாகோடி பணத்தையும் செல
விடுவார்கள். ஆனால், இவைகளை ஓர் விசுவாசி
தன் பிரயாசையால் சிறுவர் தேவ அழை
த்தலை நாடச் செய்ததை ஞாபகப்படுத்தும்
சிங்கார ஞாபக மண்டபத்துக்கு ஒப்பிட இவ்
வுலக மண்டபங்களெல்லாம் ஒரு தூசிபோல்
தோன்றும். அது தான் காட்சியாகமத்தில்
காணும் ஞான ஜெருசலேம். இம்மண்டபமே

மனிதரோடு சர்வேசுரன் வசிக்கும் ஸ்தலம். தன் பத்தாவுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாளியைப்போல் ஆயத்தமாக்கப்பட்ட மண்டபமிதுவே: அஸ்திவாரங்கள் இரத்தினக் கற்களாற் கட்டப்பட்டு, பன்னிரண்டு வாசல்கள் பன்னிரண்டு முழுமுத்துக்களால் அமைக்கப்பட்டு. அதின் வீதிகள் துலக்கமான பளிங்குபோல் சுத்த பொன்னாற் செய்யப்பட்டு ஒளிரும் மண்டபமு மிதுவே.

M. Jos. Anthos.

---

## CHRISTIAN DOCTRINE.

## ஞானோபதேசம்.

### 19-ம் பாடம்

### விசுவாச மந்திரத்தின் 11-ம் பிரிவு.

(முன் தொடர்ச்சி.)

---

**2. உயிர்த்தலைப்பற்றி ஜோப் என்பவரின் அத்தாட்சி.**-செத்த மனிதன் ஒருநாள் ஆத்தும சரீரத்துடன் உயிர்ப்பா னென்று ஆதிகாலந் தொட்டு சகல மனிதரும் நம்பிவந்தார்கள். கர்த்தர் பிறப்பதற்கு இரண்டாயிர வருஷத்துக்கு முன் ஜோப் என்னும் பிரபு அரேபியா தேசத்தில் வசித்துவந்தார். இவருக்கு திரண்ட ஆஸ்தி பாஸ்தியும், பூஸ்திதியும், ஆயிரக்கணக்கான கால் நடைகளுமிருந்தும் புண்ணிய வழியில் நடந்து சர்வேசுரனுக்குப் பிரமாணிக்கமாய் ஊழியஞ் செய்துவந்தார். சர்வேசுரனுடைய உத்தரவின்படி பசாசு இந்த மகாத்துமாவை பலவிதத்திலுஞ் சோதித்து அவருக்குச் சொந்தமான ஆடு, மாடு, ஒட்டகங்களையும், அவருடைய பிள்ளைகளையுஞ் சாகடித்தது. கடைசியா யவருக்குக் குஷ்டரோகத்தை யுண்டாக்கிவிட்டது. அப்போது ஜோப் "சர்வேசுரன் கொடுத்தார்; திரும்பவு மெடுத்துக்கொண்டார்" என்று தேவனைப் புகழ்ந்து அவருக்கு அமைந்திருந்தார். அவரைப் பார்க்கும்படி அவர் சிநேகிதர் வந்தபோது, தமது நிர்ப்பாக்கியத்தைப்பற்றி முறைப்படாமல் "என் இரக்ஷகர் சீவிக்கிறார். கடைசிநாளில் நான் மண்ணினின் றெழுந்திருப்பேன்; என் மாம்சத்தால் மூடப்படுவேன்; இந்த என் சரீரத்தில் என் தேவனைப் பார்ப்பேன்; அவரை யென் கண்ணால் தரிசிப்பேன். இந்த நம்பிக்கை யன்றி வேறெனக்கு இல்லை"யென்று மகா விசுவாசத்துடன் உரைத்தார். (ஜோப் ஆகமம்.)

**3. இலாசரின் உயிர்த்தல்.**-நமது இரக்ஷகரிவ்வுலகி லிருக்கும்போது இறந்த அநேகருக்கு உயிர் கொடுத்தார். செத்து நாலுநாளாய் கல்லறையில் அழுகியிருந்த இலாச ரென்பவரை உயிர்ப்பித்தார். இயேசுக்கிறிஸ்துநாதர் செய்த இவ் வற்புதங்களும் அவர் மரித்த மூன்றாம் நாள் கல்லறையை விட்டு உயிர்த்ததும், நா மொரு நா ளவ்வாறே அவருடைய கட்டளைப்படி உயிர்ப்போ மென்பதற்கு அத்தாட்சியா யிருந்தன. மேலும் அர்ச்சியசிஷ்டவர்களில் அநேகர் மரித்த அநேகருக்கு சர்வேசுரனுடைய உதவியால் உயிரளித்தார்கள்.

**4. அநேக வருஷங்களுக்கு முன் இறந்துபோனவன் கோர்ட்டுக்கு சாக்ஷியாக வருகிறான்.**—பொலாண்டு தேசத்தில் மகாப் புண்யவாளரான அர்ச். ஸ்தனிஸ்லாஸ் என்னும் மேற்றிராணியா ரிருந்தார். அத்தேசத்து அரசனான பொலெஸ்லாஸ் என்பவன் பல அக்கிரமங்களைக் கட்டிக்கொண்டதுடன், காமாதுரனாய் நடந்து வந்தபடியால் இந்த பரிசுத்த மேற்றிராணியார் பலமுறை யவனுக்குப் புத்தி சொல்லிவந்தும் அவன் அவைகளை கவனித்ததில்லை. ஒருநாள் சில சாமாசிகளுடன் மேற்றிராணியார் அரமனைக்குச் சென்று, அரசனுடைய பாவாக்கிரமங்களை யவனுக்குத் தெரியப்படுத்தி, அதனால் வரவிருக்கும் தேவ கோபாக்கினையை அவனுக்கு அறிவித்து, மகா தைரியத்துடன் புத்தி கோசரங்களைச் சொன்னார். அரச னிதைக்கேட்டு கோபோக்கிரங்கொண்டு அர்ச்சியசிஷ்டவரைப்பழிவாங்க பல வழிப்பாடுகளைத் தேடியும் அனுகூலப்படாததினால் வேறோர் உபாய மெடுத்தான். அது யாதெனில்: அர்ச். ஸ்தனிஸ்லாஸ் இராயப்பன் என்னப்பட்ட ஒருவனிடங் கோவிலுக்காக ஒரு நிலம் கிரயத்துக்கு வாங்கி யிருந்தார். அந்த நிலத்துககுக் கிரயப் பத்திர மில்லாதபடியால், நிலத்தின் கிரயத்தை மேற்றிராணியார் செலுத்தவில்லை யென்று செத்துப்போன இராயப்பனுடைய பந்துக்கள் தன்னிடம் பிரியாது செய்துகொள்ளும்படி அவர்களை அரசன் தூண்டி விட்டான். இராயப்பனுக்கு கிரயஞ் செலுத்தினதை அறிந்திருந்த சாக்ஷிகள் அரசனுக்குப் பயந்து உண்மைக்கு விரோதமாய் சாக்ஷி கூறினதைக் கண்ட ஸ்தனிஸ்லாஸ் மேற்றிராணியார் திடுக்கிட்டபோதிலும், சர்வேசுரன் பேரில் தமது நம்பிக்கையை வைத்து, நிலத்தை விற்ற இராயப்பனை மூன்று தினத்துக்குள் இராஜ சமுகத்துக்குக் கூட்டிக்கொண்டு வருவதாகச் சொன்னார். இதைக் கேட்ட அரசன் நகைத்து அவரைப் பரிகசித்தபோதிலும் அவர் சொன்னதற்கு சம்மதித்தான். பரிசுத்த மேற்றிராணியாரந்த மூன்று நாளும் ஒரு சந்தி பிடித்து, ஜெபதபங்களைப் புரிந்து, மூன்றாம் நாள் திவ்விய பூசைசெய்தபின் குருப்பிரசாதிகளுடன் கல்லறைக்குச் சென்று, இராயப்பன் புதைக்கப்பட்ட கல்லறையைத் திறக்கச்செய்து, அங்கு எலும்பு மண்ணுமாய்க் கிடக்கும் இராயப்பனுக்கு உயிர்கொடுத்து அவனை அரசனிடம் அழைத்துக்கொண்டு போக, மேற்றிராணியாருக்கு விற்பனை செய்த நிலத்துக்குச் சேரவேண்டிய கிரயத்தை தான் மேற்றிராணியாரிடம் பெற்றுக்கொண்டதாக இராயப்பன் சொன்னதைக் கேட்ட இராசாவும் மற்றவர்களும் பிரமித்து நின்றார்கள். (இவர் சரித்திரம்.)

**5. ஏழு சகோதரர்.**—அந்தியோகுஸ் என்னும் நிஷ்டூர இராயன் இசரேலித்தாரை பலவிதத்திலும் உபாதித்து தங்கள் வேதத்தை விட்டுவிடும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டான். இந்தக் கட்டளையை நிறைவேற்றாத முகாந்தரமாக அவர்களில் அநேகரைக் கொலைசெய்து, சகோதரரான ஏழு பேரையு மவர்கள் தாயையும் பிடித்துவரக் கட்டளையிட்டான். தங்கள் வேதத்தை மறுதலிக்கும்படி புத்தி சொல்லியும் அவர்கள் கேளாதபடியால் அவர்களுக்கு மரணாக்கினை தீர்ப்பிட்டான். இவர்களில் முதல்வரை உயிருடன் தோலுரிக்கும்போது அவ்வேதசாக்ஷி வாக்குக்கெட்டா வேதனை யனுபவித்து கொடுங்கோலனை நோக்கி, "நீர் என்னுயிரைப் பறித்தபோதிலும், அரசருக் கெல்லாம் அரசராயிருக்கப்பட்டவர் எனக்குத் திரும்பவும் உயிர் கொடுத்து என்னை உயிர்ப்பிப்பார்" என்று சொல்லி உயிர் விட்டார். மற்றொருவர் அகோர வேதனை அனுபவித்துச் சாகும்போது "நான் மனிதருடைய கையால் மடிந்தபோதிலும் சர்வேசுரன் மறுபடியும் என்னை உயிர்ப்பிப்பா ரென்கிற நம்பிக்கையால் ஆறுதலடைகிறேன்" என்றார். இவ்விதமாக ஆறு பேரும் வேதத்துக்காக மரணமானபின் கடைக்குட்டி யாகிய சிறுவன்மாத்திரந் தனியாய் நிற்பதைப் பார்த்த அந்தியோகுஸ் அவனை யவன் தாயிட மனுப்பிவைத்து, அவன் தன்னுயிரைக் காப்பாற்றிக்கொள்ளும்படி அவனுக்கு புத்தி கற்பிக்கச் சொன்னான். தாயோவென்றால் தன் மகனைக் கட்டி யரவணைத்து, அவன் தன்னுடைய அண்ணன்மாரை தைரியத்துடன் பின்செல்லும்படி அவனுக்கு புத்தி சொன்னதின்மேல் சிறுவன் அரசனை நோக்கி, "இப்போது என்னுயிரை நீர் பறித்தபோதிலும், ஒருபோதும் அழியாத உயிரை சர்வேசுரன் எனக்குக் கொடுப்பார்" என்று சொல்லி, தன் தாயுடன் நிஷ்டூரமாய் உபாதிக்கப்பட்டு இரத்தஞ் சிந்தி உயிர்கொடுத்து வேத சாக்ஷிமுடிபெற்றார்.



### 19-ம் பாடம்.

### விசுவாச மந்திரத்தின் 12-ம் பிரிவு.

### சததமான சீவியத்தை விசுவசிக்கிறேன்.

பொதுத் தீர்வைக்குப் பின் புண்யவாளர் சர்வேசுரனா லாசீர்வதிக்கப்பட்டு, ஆத்தும சரீரத்துடன் மோக்ஷத்தைச் சுதந்தரித்துக்கொண்டு, ஒருபோது முடியாத நித்திய கால சந்தோஷ பாக்கியத்தைச் சுகிப்பார்களென்றும், பாவிகளோவெனில், சர்வேசுரனால் சபிக்கப்பட்டு, நரகநெருப்பில் தள்ளுண்டு, அங்கே ஆத்தும சரீரத்துடன் நித்திய காலமாய் சகல ஆக்கினைகளையு மனுபவிப்பார்களென்றும் சததமான சீவியம் அர்த்தங் கொள்ளும்.

**1. அர்ச். பையோனியுஸ்.**—இவர் வேதத்துக்காக பிடிபட்டு, கொல்லப்படும்படி கொலைக்களத்துக்குக் கூட்டிக்கொண்டு போகப்படும்போது, சந்தோஷ மகிழ்ச்சியுடன் அவர் நடப்பதைக் கண்ட அக்கியானிக ளதிசயித்து, அவரைப் பார்த்து, "உன் தலை நறுக்கப்படுமென்று நீ நன்றா யறிந்திருந்தும் இவ்வளவு சந்தோஷத்துடன் துரிதமாய் நடப்பதற்குக் காரண மென்ன?" வென்று கேட்க: "நேசரே! நான் கொல்லப்படவல்ல, ஆனால் நித்தியமான மோக்ஷத்தில் வாழப்போகிறேன்" என்றார்.

(இவர் சரித்திரம்.)

இன்னும் வரும்.

# OUR WOMEN.

## நமது மாதர்.

(முன்றொடர்ச்சி.)

இப்படியிருக்க, சில மதியீனர் கல்வி இல்லற உபயோகத்திற் கடுத்ததல்லவென்று நினைத்து, பெண் கல்விக் கிடங்கொடா திருக்கின்றனர். "எண்ணும் எழுத்துங் கண்ணெனத் தகும்" என்று ஆன்றோர் அருளிய அமுத வாசகத்தை மறந்து, எழுதவும் படிக்கவுந் தெரிந்த பாவை குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக் காம்பென்றும், குடும்பத்திற்கு துர் அதிஷ்டமும் அபகீர்த்தியும் கொண்டுவருங் குலநாசியென்றும் சிலர் பிதற்றுவதைக் கண்டுங் கேட்டுமிருக்கிறோம். இத்தகைய குருட்டபிப்பிராயங்கள் இக்காலத்தில் தலையெடுப்பது அரிதாயினும், அவை அநேக குடும்பங்களில் வேரூன்றியிருப்பதால், நம்மவரிற் பெரும்பான்மையோர் தம் பெண்களைப் படிப்பிக்க அக்கறை கொள்வதில்லை. நம்மைச்சுற்றியுள்ள இந்துக்கள், முக்கியமாய்ப் பதிதர் முதலியவர்களை இவ் விஷயத்தில் நமக்கு ஒப்பிடுவோமானால், அன்னார் நம்மைவிட எவ்வளவோ முன்னேறியிருக்கிறார்கள் எனக் கண்டறியலாம். இதனால்தான் அவர்கள் ஜனசமூக சம்பந்தமான காரியங்களிலும், ஆசார சீர்திருத்த நெறியிலும், இராஜாங்க விஷயங்களிலும் நம்மிலும் மேம்பாடுடையவர்களாய் விளங்குகின்றனர்.

நமது சிறுமிகளுக்குக் கிடைக்கக் கூடிய பயிற்சியெல்லாம் அரைகுறையாயும், ஒழுங்கீனமாயும் தாய்மார் கற்றுக்கொடுக்கு முறைகளேயன்றி வேறல்ல. தாய்மார் படித்திருந்தாலல்லலோ தம் பிள்ளைகளை ஒழுங்காய்ப் பழக்குவர். "தம்பிள்ளைகளுக்குப் பிற்காலத்தில் உதவக் கூடிய சன்மார்க்கம், தேவபயம் முதலிய வற்றை எப்படி ஊட்டுவதென்று படித்தேனும் பழகியேனும் அறியாத் தாய்மார் குழந்தைகளைப் பெற்றுவளர்க்கத் தகுந்தவர் அல்ல" வென்று ஒரு சாஸ்திரி எழுதியிருக்கிறார். தமக்குத் தெரிந்த குருட் டாட்டங்களையும், தாம் அநுசரிக்கும் பழக்க வழக்கங்களையுமே தாய்மார் தம் பிள்ளைகளுக்குப் புகட்டுகின்றனர். அவைகள் பிள்ளைகளின் இளமனதில் பசுமரத் தாணி போல் நன்கு பதிந்து, பிற்காலத்தில் நம்மவரை ஈடேற வொட்டாமற் றடுக்கும் முக்கிய இடையூறுகளாய் கணக்கற்ற கெடுதிகளை விளைக்கின்றன.

மேலும் தாய்மார் தமது ஆண்பிள்ளைகளைவிட பெண்பிள்ளைகளை மிகக் கண்டிப்பாயும் அன்பில்லாமலும் நடத்துகிறார்கள். பிள்ளைகளை வளர்ப்பதில் தாய்மார் அன்பென்னும் ஆயுதத்தை அடிக்கடி பிரயோகிக்க வேண்டும். எந்நேரமும் கடுகடுத்த முகத்துடனிருக்கும் பெற்றோரிடம் வளரும் பிள்ளை பிற்காலத்தில் தன் தாய் தந்தையரைப் போல் இருப்பதற்குக் கேட்கவும் வேண்டுமா? எதிர் கால சந்ததிக்கு முக்கிய காரணமாகிய நமது பெண்பிள்ளைகளை நேர்மையான வழியில் வளர்த்து, அன்பும் ஆசாரமும் அவர்களிடம் படியும்படி தகுந்த ஏற்பாடு செய்யாதவரையில் இந்நூற்றாண்டிலல்ல, வருகிற நூற்றாண்டிலும் நம்மவர் நிலைமை சற்றும் மாறாதென்பது திண்ணம்.

நம்முன்னோர் நமது மாதர் நடவடிக்கையைப் பற்றி ஒன்றும் வரையறுத் துதவாவிடினும், அவர்கள் கையாண்டுவந்த பழக்க வழக்கங்களை தமது ஞாபக சின்னமாக தம்பின் விட்டுப்போயினர். அவற்றின்படி, பாவையர் வெளிவந்து தமது புத்தி கூர்மையாலும், சுத்த செய்கையாலும் மேம்பாடடையும் மார்க்கம் ஒன்றும் அவர்களுக்குக் காட்டாமையால், அவர்கள் தினமும் ஒவ்வொரு நாழிகையும் தமது புருஷர் பிள்ளைகளுக்கு வேண்டிய உண்பன உடுப்பன முதலிய காரியங்களில் உழைக்குந் தொழிலையே மேற் கொண்டிருக்கின்றனர். ஓர் பெண் தன் கணவன தில்லம் புக்கது முதல் சாகும் வரையில் செய்யும் அநுதினத் தொழில் மேற் கூறியதே யன்றி வேறில்லை. இதனால் அவர்கள் புத்தி விசாலமடையப்பெறாமல் குருட் டாட்டத்தில் நிலை நின்று தமது குடும்ப விவகாரங்களிலும், மற்றவர்களோடு செய்யும் சகவாச சஞ்சாரங்களிலும் தமக்கும் தமது சுற்றத்தார் கிளைஞர் முதலானோருக்கும் அறியாமலே அநேக கெடுதிகளைச் செய்துவிடுகின்றனர்.

இங்கிலாந்து முதலிய பிறதேசங்களில் சனசமூகத்துக்கு மாதரால் உண்டாகும் நன்மைகள் கணக்கற்றவை; ஆனால் நந்தேயத்து மாதரோ அத்தகைய புகழ்ச்சிக்குரியர் என்று சொல்ல எள்ளளவும் இடமில்லை. நமக்குப்பின் நம்மிடத்திற்கு வரவிருக்கும் குழந்தைகளை மேற்கூறியபடி குறையான பழக்க வழக்கங்களில் வளர்த்து வருகையில் நாகரிகப் படியில்



நாம் உயர்ந்தேறுவதென்பது முடியாத காரியம்.

நமது மாதரைப் பல கட்டுப்பாட்டுக்குள் நாம் வைத்திருக்கும் விதமும், அன்னார் தம் விருப்ப நாட்டங்களை உபயோகிக்கக் காட்டியிருக்கும் மாறான வழியும் சீர்திருத்த நெறியில் அவர்களைப் போகாமற் றடுக்குங் காரணங்களாகின்றன. இதனாலன்றோ நமது மங்கையருள் பெரும்பாலர் சீர்திருத்தம் என்றால் இன்னதென்றுணராதிருப்பதுடன், மற்றவர்களையும் அதிற் பிரவேசியா திருக்கச் செய்கின்றனர்? யாரேனும் அவர்கள் பரிதாபத்திற்குரிய நிலைமையை சீர்திருத்த முயன்றால் பிரமாதமான பகையும் விரோதமும் பரிகாசத்திற்கு இடமும் உண்டாகின்றன. சாமான்ய மனிதர்களைச் சுலபமாய் வசப்படுத்தும் கேலியும் பரிகாசமும், ஆசார சீர்திருத்தத்தை மேற்கொண் டுழைக்கும் பரோபகாரிகளின் நன்முயற்சிகளை வீணாக்குகின்றன

நமது மாதரில் அநேகர் அந்தப்புரங்களில் அடைபட்டு, வெளியில் நடப்பவை இன்னவை யென்றுணராமல் தம் வாணாளைச்செலவழிக்கின்றனர். அவர்கள் உடுத்தும் ஆடை மேனாட்டுமாதரின் உடுப்புகளைவிட இந்நாட்டு சீதோஷ்ணஸ்திதி முதலியவற்றிற்கு மிக்க பொருந்தியதென்பது உண்மையாயினும், தற்கால நாகரிகத்திற்குத் தக்கவாறு தங்கள் உடுப்புகளைத் திருத்திக் கொள்ளா திருப்பது விசனத்துக் குரியதே. சென்னையிலிருந்து தெற்கே வெகு தொலை போய் நஞ்சத்திய வேத மாந்தர் வசிக்கும் அநேக இடங்களைப் பார்க்குமளவில், இவ்விஷயத்தில் நமது மங்கையர் மிகவாய் திருந்த வேண்டியதென்பது நன்கு விளங்கும். நாம் உடுக்கும் ஆடை விலையுயர்ந்ததாயும் பார்ப்பதற் கழகாயும் இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை; ஆனால் சாதாரண உடையேயாயினும் அதை அடக்க வொடுக்கம் மேரை மரியாதை முதலியன விளங்கும்படி உடுத்துவதே பெண்டீர்க் கழகு.

கல்வியை நாடி யடையுநர் யாராயிருப்பினும், அதனால் உண்டாகும் பெரும் பயனை யீட்டாமற் போகார். படிப்பில்லாப் பெண்பிள்ளை பயனற்ற மண்பிள்ளை. படிப்பதினாலும் ஊன்றிப் பார்ப்பதினாலும் வரும் நன்மைகளை அவர்கள் அடையாததால், அவர்கள் அடைப்பட் டுள்ள அந்தப்புரச் சுவற்றி னளவேயாகும் அவர்தம் சிந்தையுங் கருத்தும். அவர்கள் குருட்டாட்டத்திற் பழகி வருவதால், நீதிமார்க்கத்துக் கடுத்தவைகளைக் கைப்பற்ற விருப்பமில்லாதவர்களாய் பிரவர்த்திக்கின்றனர். அறிவைச் செலுத்தித் தர்க்கிக்கவேண்டிய உயர்தர விஷயங்களை ஆடவர் நமது மங்கையரிடம் ஒருக்காலும் பேசத்துணியார்; ஏனெனில், அவர்கள் அத்தகைய காரியங்களை யுணர்ந்து, அவற்றைப் பற்றி சம்பாஷிப்பதால் உண்டாகும் ஆநந்தத்தை அநுபவிக்கும் ஆற்ற லில்லாதவர் என்று அவர்களுக்குத் தெரியும். சம்பாஷிக்குங் காலத்தில், சமையலின் உயர்வு தாழ்வு, இல்லத்தின் சுத்தாசுத்தம், ஆடை யாபரணங்களின் பெருமை சிறுமை முதலியவை சம்பந்தமாய்ப் பேசுவரே யன்றி, சன்மார்க்கம், ஆசார சீர்திருத்தம், தேசவிஷயம், இராஜாங்கம் முதலிய காரியங்களைப்பற்றிப் பேசத் தலைப்படுவது பயனற்றதென வாய் திறவாதிருப்பர். மாதர் புத்தி மேற்றிசையிலிருப்பதுபோலவே கீழ்த்திசையாகிய நந்தேயத்தினும் பயிற்சியுந் திருத்தமுமடைய மியல்புடையதென்பது திண்ணம். சீதோஷ்ண ஸ்திதியிலுள்ள வித்தியாசத்தால், அறிவிலும் வித்தியாசமிருக்கும் என்பது பொருந்தாது. ஆங்கில பாஷையில் பாண்டித்தியம் அடைந்து ஆங்கிலராலும் ஏனையோராலும் புகழப்பட்டு விளங்கும் சரோஜினி என்னுங் கவித்திலகம் நந்தேயத்து மாதராளல்லவா? ஆதலால் நம்மாதர் இத்தகைய நிர்ப்பாக்ய நிலைமையில் இருக்கவேண்டுமென்பது அன்னார்கடமையல்லவே; இந்நிலைமைதானா வாழ்க்கைத் துணை நலனுக் கின்றியமையாதது? தேசாபிவிர்த்திக்குப் பெண் கல்வி ஒரு காரணமொழிய, காரியமன்று இவை ஒன்றுக்கொன்று அவசியமானவை. மாதர் கல்விபறிவில்லாமல் பேதைகளாயிருப்பின், ஒரு தேசம் அபிவிர்த்தியடைவது முடியாத காரியம்; நாகரிகந் தலையெடுத்துள்ள நாட்டில் பெண்களை இத்தகைய அறியாமையில் குருடரைப்போல் வருந்த விடுதல் கூடாது ஆடவருக்கும் பெண்டிருக்கும் ஆதிநாயகனால் அமைக்கப்பட்ட வித்தியாசங்களை ஒருங்கே ஒழிக்கவேண்டுமென்பதல்ல எனதெண்ணம்; அவ் விருதரத்தாருக்கும் இயல்பாகவே யுள்ள மாற்றங்கள் இருந்தே தீரும். மாதர் ஆடவர்க்கடங்கி, அவர்கள் பாதுகாப்பில் என்றும் இருக்கும்படியாய் படைக்கப்பட்டவர்களே; ஆடவர் பலசாலிகளா யிருப்பதால், அவர்கள் கடமை குடும்ப போஷணைக்கு வேண்டியவற்றைத் தேடுவதாம்; மாதர் மெல்லியரா

னமையின் அத்தகைய தொழிலை மேற்கொள்ளாமல், பிள்ளைகளை வளர்த்தல், குடும்பத்தை வரவுக்கேற்ப நடத்தல் முதலியவற்றைச் செய்து ஆடவருக்கு ஆநந்தத்தையும் மன வமைதியையும் அளிக்குங் கடைமை பூண்டவரல்லவா? ஆதலால் பெண்டீர் ஆடவரைப்போல் படித்து அவர்களைப்போல் பெருங்காரியங்களைச் செய்ய வேண்டும் என்பது எனது கருத்தல்ல; மேலும் உலகத்திற்கு ஒரு பெண்ணின் ஆழ்ந்த கல்வித்திறம் முக்கியமானதல்ல; ஆனால் அவளிடம் இயல்பாகவே யுள்ள குணங்களையும் அறிவையும் கல்வியென்னும் புடத்திற்போட்டுப் பயன்படச் செய்வது நமது கடமையாகும்.

(தொடரும்.)

S. Selva Raju.

---

# CORRECT THINGS FOR CATHOLICS.

## கத்தோலிக்கு கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

(முன் தொடர்ச்சி)

### மடங்கள்.

1. மடங்களில் அல்லது போர்டிங் பள்ளிக்கூடங்களில் யாரையாவது காணவேண்டியதாயிருந்தால், சிரேஷ்டரிடம் முதல் உத்தரவு பெறுவது ஒழுங்கு.

2. சக்தி யுள்ளவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல படிப்பு ஊட்ட அவர்களை மடங்களுக்கு அல்லது போர்டிங் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவது ஒழுங்கு.

3. மடத்திலிருக்கிறவர்கள் அல்லது போர்டிங் பள்ளிக் கூடங்களி லிருப்பவர்கள் எல்லா விஷயங்களிலும் சிரேஷ்டருக்குக் கீழ்ப்படிந்து நடபபது ஒழுங்கு.

4. மடத்துக்கு அல்லது போர்டிங் பள்ளிக்கூடத்திற்குச் செலுத்த வேண்டிய வீதங்களைத் தவறாமல் செலுத்துவது ஒழுங்கு

5. மடங்களிலுள்ள மக்கள் சொல்லும் கோள்குண்டணி முதலிய வார்த்தைகளுக்கு தாய் தந்தையர் செவி கொடா திருப்பது ஒழுங்கு.

6. ஏதாவது குற்றங் குறையிருப்பதாகத் தோன்றினால், அதைப் பற்றிப் புறங்கூறாமல் நேரே சிரேஷ்டர்களிடம் சகலத்தையும் விவரித்துக்காட்டி அவர்களுடைய யோசனையைக் கேட்டு நடப்பது ஒழுங்கு.

7. யாதொரு காரியத்தைத் தீர்மானிக்கு முன் இரண்டு பக்கமும் விசாரணை செய்வ தவசியம் என்றறிந் திருப்பது ஒழுங்கு.

8. மடத்து சட்டங்களைக் கிரமமாய் அனுசரிக்கும்படி பிள்ளைகளுக்குப் புத்தி சொல்லி அது விஷயமாய் அவர்களை உற்சாகப்படுத்துவது ஒழுங்கு.

9. மிஞ்சின ஆடையாபரணங்களைத் தரித்துக் கொள்ள மடம் தக்க இடம் அல்லவென்று பெற்றோரும் பிள்ளைகளும் அறிந்திருப்பது ஒழுங்கு.

10. சந்நியாசம் கன்னித்வம் என்னுமிரு அந்தஸ்தும் அவைகளில் பிரவேசிப்பவர்கள் ஒரு கவலையின்றி வேளை தவறாமல் சாப்பிட்டு தாங்கள் மனம்போனபடி நடந்து, சுகசந்தோஷமாய் காலங்கழிப்பதற்காக ஏற்படுத்தப் பட்டதென்றிராமல் தன்னை யொறுத்து கஷ்டங்களைப் பொறுமை யோடனுபவித்து கற்பனைகளின்படி நுணு நுணுக்கமாய் நடந்து மோட்சத்தில் இடந்தேடிக் கொள்ளத்தான் என்றறிந் திருப்பது ஒழுங்கு.

11. ஒரு குடும்பத்தில் ஒருவராவது சந்நியாசி அல்லது கன்னியாஸ்திரியாவது அக் குடும்பத்திற்கு அளவற்ற ஞான நன்மை பயப்பதுந் தவிர, மற்ற குடும்பங்களுக்கு நன் மாதிரிகையாயு மிருக்குமென்று அறிந்திருப்பது ஒழுங்கு.

12. விவாக அந்தஸ்தினருக்குத் தங்கள் அந்தஸ்தில் திருப்தியும் சந்தோஷமுமிருப்பது போலவே, சந்நியாசிகளுக்கும் கன்னியாஸ்திரீகளுக்கும் தங்கள அந்தஸ்தில் ஞான சந்தோஷம் உண்டென் றறிந் திருப்பது ஒழுங்கு.

(நமது நாட்டுக் கிறிஸ்துவர்கள், தங்கள் பிள்ளைகள் சந்நியாச அந்தஸ்து அல்லது கன்னித்துவ அந்தஸ்தில் சேரப் பிரியம் காண்பித்தால் படுகுழியில் விழும் கபோதிகளைப்போல் அவர்களைப் பாவித்து "என் பிள்ளைக்குப் புத்தி தடுமாற்றம் ஆய்விட்டது! இவன் ஏதம் புருஷத்துவமில்லாத பேடியா யிருப்பானோ! கலியாண மில்லாத சீவியம் ஒரு சீவியமா?" என்று அவர்கள் மனதைக் கலைக்கத் தேடுவார்கள். இது மகா அக்கிரமம். சர்வேசுரன் தமது திவ்விய ஊழியத்திற்காகத் தங்கள் பிள்ளைகளைத் தெரிந்துகொள்ளுவது தங்களுக்குப் பெருமையென்றெண்ணி முழுதும் தேவ திருவுளத்திற்கு அமைந்திருப்பது புத்தி. ஐரோப்பிய திருச்சபை சரித்திரங்களைப் பார்வை யிட்டால் எந்த நாட்டில் ஏராளமானபேர் சந்நியாசிகளும் கன்னியர்களுமானார்களோ, அந்த நாடே சீக்கிரத்தில் முழு கிறிஸ்துவ ராஜ்யமாக மாறியதென்று தெரியவரும். நமது நாட்டில் ஏராளமானபேர் சந்நியாச அந்தஸ்தைத் தெரிந்துகொள்வார்களானால், அது கிறிஸ்துவேதம் தழைத்தோங்க ஓர் நற்குறி யென்னலாகும்.)

13. மடத்தி லிருப்பவர்கள் வெளிக் கிறிஸ்துவர்களுக்கு நன்மாதிரிகை தரத்தக்க சீவியம் சீவிப்பது ஒழுங்கு.

14. தங்கள் பெண்கள் கன்னியாஸ்திரி அந்தஸ்தில் சேர்வதானால் தாங்கள் செலுத்தவேண்டிய துணி மணி வஸ்திரங்களையும் வீதத்தையும் செலுத்துவது ஒழுங்கு.

15. மடத்தின் உட்பிள்ளையா யிருந்து பிறகு விவாகம் செய்யும் பெண்கள், தங்கள் மடத்துப் பேருக்குப் பங்கம் வராதபடி நடந்துகொள்ளுவது ஒழுங்கு.

16. புருஷர்கள் வெளி யூர்களுக்குத் தனிப்படப் போக நேரிடும் பட்சத்தில் அவசிய மிருந்தால், தங்கள் சமுசாரங்களை மடத்தில் ஏற்றுக் கொள்ளுவார்களானால் அங்கே விட்டுவைப்பது ஒழுங்கு.

17. கன்னியாஸ்திரிகள் சேசுகிறிஸ்து நாதரின் ஞான பத்தினிகள் என்றுணர்ந்து, அவசியமானபோது அவர்களிடம் வீண் பேச்சின்றி, மேரை மரியாதையுடன் சம்பாஷிப்பது ஒழுங்கு.

18. கன்னியாஸ்திரிகள் தாங்கள் பூலோகத்திற்குச் செத்தவர்கள் எனவெண்ணி, பூலோக காரியங்களைப் பற்றற நீக்குவது ஒழுங்கு.

19. கன்னியாஸ்திரிகளுக்கு இச்சக வார்த்தைகள் பிரியமில்லை யென்றறிந் திருப்பது ஒழுங்கு.

20. கிறீஸ்துவர்களுக்கு கன்னியாஸ்திரிகள் தங்கள் மடத்தில் நடந்த அற்புத விசேஷங்களையும் மற்றும் சம்பவங்களையும் வெளிப்படுத்தினால், அவைகளை மரியாதையுடன் கேட்டுக்கொள்வது ஒழுங்கு.

21. கன்னியாஸ்திரிகள் தங்கள் ஆத்தும ரட்சணியத்துக்காக வருந்தியுழைப்பதுடன் ஏராளமான அநாத பிள்ளைகளையும் உட்பிள்ளைகளையும் விதவைகளையும் வைத்து ஆதரித்து, அவர்களை நல்வழியில் பயிற்றி வருகிறார்களென்றறிந்திருப்பது ஒழுங்கு.

22. கன்னியாஸ்திரி மடங்களுக்கும் அநாத பிள்ளைகள்சாலைகளுக்கும் கிறிஸ்துவர்கள் தங்கள் சக்திக்கேற்ற தர்மம் செய்வது ஒழுங்கு.

23. தன்னைப் போலவே எல்லோரும் லோபிகளா யிருந்தால் மடம் சவரக்ஷணை விஷயத்தில் முட்டுபடுமென் றறிந்திருப்பது ஒழுங்கு.

24. தங்கள் வீடுகளில் விசேஷ சம்பவங்கள் நடக்கும் போது அநாத பிள்ளைகளுக்குள் சிலருக்காவது சவரட்சணை செய்வது ஒழுங்கு.

25. குறிக்கப்பட்ட நாளில் மாத்திரம் தன் பந்துக்களைப் பார்க்க மடத்திற்குப் போவது ஒழுஙகு.

26. சந்நியாசிகள் கன்னியாஸ்திரிகள் பணம் தண்டல் செய்யவாவது அல்லது வேறு அலுவலாகவாவது வீட்டுக்குவந்தால், அவர்களை வேலையாட்களைப்போல் பாவியாமல் தக்க மரியாதையோடு நடத்துவது ஒழுங்கு.

27. சந்நியாசிகளும் கன்னியாஸ்திரிகளும் தங்களுடைய நாட்டம், விருப்பம், இஷ்டம், ஆசையென்பதை முற்றிலும் ஒறுத்து எவ்விஷயத்திலும் தங்கள் சிரேஷ்டர்களுக்கு குருட்டுக் கீழ்ப்படிதலோடு நடப்பது ஒழுங்கு.

(இப்படி நடப்பதினால் அவர்களுக்கு மெத்த ஞான பாக்கியமும் சாங்கோபாங்கத்தில் விருத்தியும் உண்டாகும். சீர்பெற்றிலகும் சேசு சபையார்களின் விசேஷம் யாவும் இது ஒன்றிலேதான் அடங்கி யிருக்கிறது.)

28 சந்நியாச அல்லது கன்னித்துவ அந்தஸ்திற் சேர்ந்திருப்பவர்கள், சீவியகர்களும் மரித்தவர்களுமாகிய தங்கள் உறவினர் எல்லோருக்காகவும் எப்போதும் வேண்டிக்கொள்வது ஒழுங்கு.

(இன்னும் வரும்.)

---

# CORRESPONDENCE.
## கடிதங்கள்.

---

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்தரவாதி யல்லர். கடித மெழுதுவோர் தங்கள் கடிதங்களை மிகத் திருத்தமாயும், காகிதத்தின் ஓரே பக்கத்தில்இடது பாரிசத்தில் நாலு விரற்கடை இடம் விட்டும் எழுதுவதுடன்; தங்கள் பெயர் விலாசங்களையும் தெளிவாய் எழுதல் வேண்டும். பெயர், விலாசம் வெளிப்படுத்துவதற் கல்ல, கடிதத்தின் உண்மைச் சங்கதிகளைப் பத்திராதிபர் உறுதிப்படுத்திக் கொள்வதற்கே. வெளிப்படுத்துவதற்கு தகுதியற்றன வென்று தள்ளிவிடப்பட்ட கடிதங்கள் திரும்பவும் வாபீஸ் செய்யப்பட மாட்டா. ப—ர்]

### வேம்பார் அமலோர்பவ நாயகியின் ஜூபிலிக் கிளப்.

---

ஷை கிளப்பின் 4-வது வருடப் பொதுக் கூட்டம் நாளது ம௴ 11 தேதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கொளும்பில் கூடப்படும். ஷை கூட்டத்திற்கு மெம்பர்கள் அனைவரும் சமுகந்தந்து உற்சாகப்படுத்தக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கொழும்பு 1—5-13. } எம். ஜே. விக்டோரியா. ஸ்தல காரியதரிசி.

---

### ஓர் பிழைத் திருத்தம். காரியதரிசியல்ல சபைத்தலைவர்.

சங்கைக்குரிய பத்திராதிப!

சென்ற மாதம் நுமது பத்திரிகையில் அமலோற்ப ஊர்து நாயகி சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் என்ற மகுடத்தின்கீழ் அடுத்த வருடத்துக்கு ஸ்ரீமான் T. N. பெர்னாந்து அவர்கள் "காரியதரிசியாக" நியமக மடைந்தனர் என்றென்னால் வரையப்பட்டிருந்தது தப்பிதம். அஃது சபைத்தலைவராக நியமகமடைந்தனர் என்றிருத்தல் வேண்டும்.

இங்ஙனம்,
"தாழை வெண்பிறை மரபினன்"

---

### அப்பர்பர்மா, மேய்மியோ, திரு இருதயநாதர் ஆலயம்

ஐயா;

ஷை தேவாலய குருதேசிகராகிய சங். ஜார் ஜீன் மோரஸ் (Rev. Father Jarre Jean Mourice.) சுவாமிகள் குருப்பட்டம் பெற்ற 25-வது வருட வெள்ளி ஜூபிலிக் கொண்டாட்டம் சென்ற பெப்ரிவரி ம௴ 25-ம். தேதி வெகு சம்பிரமமாக நிறைவேறியது. அன்று ஷை தேசிகருக்கு அர்ச். தேவமாதாவின் வணக்க ஆராதனை மாதர் சங்கத்தாரால் ஓர் வந்தனோபசாரப்பத்திரம் வாசிக்கப்பட்டது. இவ் வந்தனோபசாரத்தை வாசித்தபின்னர், ஷை மாதர் சபையோரால் ஓர் சிறு வெகுமதியும், செயின்ற் மேரிஸ் தமிழ் பாடசாலை பிள்ளைகளால் ஓர் வெகுமதியும் ஷை சுவாமிகளுக்கு அவரது வெள்ளி ஜூபிலியின் ஞாபகார்த்தமாய் அளிக்கப்பட்டன. அதன்பின் சிறுமிகள் கோலாட்டத்துடன் நடித்து கனம் V. இரத்தினம் பிள்ளை உபதேசியாரால் இயற்றிய வாழ்த்தற்பாவை சபையோர் குதூகலிக்கப்பாடி ஒன்று சேர்ந்து உரத்த சப்தமாய் சங். J. M. ஜார் சுவாமியார் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க, வென ஆர்ப்பரிக்கவும், மாண்டலே அர்ச். சவேரியார் ஆலயவிசாரணை குருவும், வைக்கர் ஜெனரலுமாகிய, சங். இராஜரிஷி, F. Hervy குருதேசிகர் செய்த சிறு உபந்யாசத்துடன் விஜயஞ்செய்திருந்த குருமாரனைவரும் சபையாரை ஆசீர்வதித்த பின் ஸ்ரீமான் A. C. ஜோசப் அவர்களால் புகைப்பட மெடுக்கப்பட்டு, சிற்றுண்டி முதலியவை பரிமாறப்பட்டு அவரவர் வளவுக்கு ஏகினார்கள். அன்றுமாலை திவ்ய நற்கருணையா சீர்வாதத்திற்கு பின் திருக்குடும்பக் கன்னியர் மடத்து பிள்ளைகளால் இங்கிலீஷில் ஓர் சிறு நாடகம் நடித்துக் காட்டப்பட்டது.

இப்படிக்கு,
கண்டு களித்தோன்.

---



### தூத்துக்குடி அர்ச். பிரான்சீஸ் சவியேர் மதுவிலக்கு சபை.
#### பெரியதோர் மைதானக் கூட்டம்.

---

நிகழுமாதம் 13-ந் தேதி அர்ச். சூசையப்பர் அடைக்கலத் திருநாளன்று இரவு 8-மணியிலிருந்து 11-மணிவரையும் மதுவிலக்கு சபையார் ஆதீனத்தில் ஸ்ரீமத் பண்டித M. P. மஸ்கறீனாஸ் அவர்கள் சபாநாயகத்தில் பெரியதோர் மைதானக் கூட்டம் நடைபெற்றது. பெரியோரும் சிறியோருமாக ஆண் பெண் இருதிறத்தாரிலும் ஏராளமான ஜனங்கள் கூடினார்கள். சபாநாயகர் தமது முகவுரையில் சில வருடங்களின் முன்னால் இவ்வூரில் நடந்த சுதேசிக் கலகத்தைச் சுட்டிக்காட்டி, அந்த நேரத்தில் இங்கிருந்த ஐரோப்பிய கனவான்களுக்கு நமது கத்தோலிக்க சகோதரர் எவ்வளவு பக்கபலமாய் நின்றார்கள் என்பதையும், யாழ்ப்பாணத்தின் பூர்வீக துரைத்தனத்தில் ஆயிரக் கணக்கான பரவர் சேனை வீரராயிருந்து அந்நகர்ப் புறங்களை காத்துவந்ததற்கு ஆதார மிருக்கிறதென்றும், இவர்கள் அக்கரை துறைகளில் வசிக்கவேண்டியதற்குக் காரண மெல்லாம் பூர்வம் மதுரையை யாண்ட தமது பாண்டிய அரசாட்சிக்குக் கடல் மார்க்கமாய் வரக்கூடியதாயுள்ள சத்துருக்களை எதிர்ப்பதற்காகவே யென்றும், இவ்விந்தியாவில் முதன் முதன் மேனாட்டாரோடு பற்றுவரவு பண்ணிக்கொண்டவர்களில் பரவரும் ஒருவராயிருக்க மேனாட்டாரால் கிடைக்க வேண்டிய சனுகுகளுக்குப் பரவரே முந்தின சுதந்தரவாதிகள் என்பதையும், இவ்வளவு மேம்பாடான ஜனங்கள் தமது சுதந்தரங்களில் அநேகத்தை இன்றைக்கு இழந்துபோனதற்கான நிமித்த மெல்லாம் காலவித்தியாசத்தால் அவர்களிடத்தில் உண்டாயிருக்கும் மதுப்பழக்கமே யெனவும் எடுத்துச் சொல்லி, அன்னைய மதுப்பழக்கத்தைப் பற்றிப் பேசுவதற்கு மகான்களில் இருவர் பிரசங்கிகளாக இன்று வந்திருக்கிறார்களென்று கூறியதும், அவர்களில் முதலாவதாக மகா-ா-ா-ஸ்ரீ மத்தேயு பெருநாந்து அவர்கள் தமது பிரசங்கத்தைத் தொடங்கினார்கள். இவர்கள் பிரசங்கத்தில் தாம் சிறிது காலத்திற்குமுன் குடியனாயிருந்த காலத்தில் பட்ட வருத்தத்தையும் வாதையையும் தரித்திரத்தையும் எடுத்தோதி, இப்போது இந்த மதுவிலக்கு சபையினால் தாம் திருந்தி நாலுபேருக்கு மனுஷனாயிருந்து வரும் அநுபவத்தை சபையார்களே கண்டிருக்கிறார்கள் என்பதை அநேக நீதிவாக்கியங்களுடன் விளக்கிச் சொல்லித் தம்து உபந்நியாசத்தை முடித்தார்கள். அப்புறம் ம-ா-ா-ஸ்ரீ, சூசை வில்லவராயர் அவர்கள் தமது உபந்நியாசத்தில், சபை மெம்பர்களில் பலரை அவர்கள் இந்த சபையில் சேருமுன் தாம் அறிவதாகவும், அக்காலத்தில் அவர்களிருந்த தாழ்ந்த நிலைமை யெத்தன்மைத்தென்பதையும், இப்போது அவர்களிருக்கும் மேம்பாடு எவ்வள வென்பதையும், சமீபத்தில் நடந்த பேதி வியாதிக்குப் பயந்து சபையிலிருந்து விலகிப்போன மெம்பர்கள் திரும்பவும் பட்டியில் வந்து சேராததால் எத்தனை அலங்கோலப் படுகிறார்களென்பதையும், அவர்களுடைய மனைவி மக்கள் பசி பட்டினியால் எவ்வளவு சங்கடப் படுகிறார்கள் என்பதையும் விரிவாய்ச் சொல்லித் தமது பிரசங்கத்தின் எல்லை கண்டார்கள். இதற் கிடைக்கிடையே மதுவிலக்குக் கீர்த்தனங்கள் நடந்த பின், சபாநாயகரவர்கள் மேற் சொன்ன பிரசங்கங்களுக்கு வேண்டிய குறிப்புரை கூறி, தமது முடிவுரையாகத். தூத்துக்குடிக் கத்தோலிக்கு ஜனசமூகத்திலிருந்து இன்னமும் ஒரு நாளைக்கு ஏறக்குறைய இரண்டாயிரம் ரூபாய் வெளியே மதுப்பழக்கத்தில் விரயமாகிக் கொண்டிருக்கிறதென்றும், இந்தத் தொகை மாதத்திற்கு அறுபதினாயிரம் ரூபாய் ஆகிறதென்றும், இதைக் கொண்டு B. I. கம்பேனியின் "அமரபுரா" என்கிற ஸ்டீமரை வாங்கிக் கன்னியாகுமரியிலிருந்து பாம்பன்வரை ஏற்றுமதி யிறக்குமதி செய்யலா மென்பதையும், இப்படியாக வருடத்திற்கு 6 ஸ்டீமர் வாங்கலா மென்பதையும், மேலும் விபசாரிகளுக்கு வீடு கொடுப்பது எவ்வளவு குற்றமோ அதே குற்றம்தான் குடியருக்கும் வீடு கொடுப்பதில் இருக்கிறது என்றும், விபசாரி குணத்திற்கும் குடியன் குணத்திற்கும் ஊன்றி யோசித்தால் ஒரு சிறிதும் வித்தியாசமில்லை யென்றும், புருஷன் குடியனாயிருக்க சமயோசிதமாக அவனுக்குப் புத்திசொல்லித் திருப்ப பிரயாசைப்படாத பெண்சாதி நல்ல குலத்தில் பிறந்தவளென்று சொல்ல வழியில்லை யென்றும், அவள் "குலமகட்கழகு தன் கொழுநனைப்பேணுதல்" என்பதை அடிக்கடி நினைவு கூர்ந்தால் தாம் சொன்னதின் உண

மை விளங்கு மென்றும், குடியர் செய்கையைக் கண்டு கோபப்படுகிற மற்றவர்களைக் குடியர் குறை கூறுதல் ஒருசிறிதும் ஞாயமில்லாத காரியம் என்றும், ஏனென்றால் துர்ச்சனரின் அக்கிரமங்களைப் புத்தக மூலமாய் வாசிக்கும்போதும், கேள்விமுறையால் கேட்கும்போதும் வாசிப்பவருக்கும் கேட்பவருக்கும் அத்துர்ச்சனரின் பேரில் கோபம் வருதல் இயல்பென்றும், அப்படியிருக்கக் குடியர் அலங்கோலத்தை கண் கூடாய்ப் பார்க்கிறவரில் எவர்தான் அவர்மேல் கோபப்படாமல் இருக்க முடியுமென்றும், ஆகையால் குடியர் தம்மைத் திருத்திக் கொள்வதை விட்டுவிட்டு அவரைப் பழிக்கும் மற்றவர்மேல் குற்றஞ் சுமத்தல் கொஞ்சமும் பொருந்தாதென்றும் மிகவும் சாதுரியமாக விரித்துக்கூறி, இறுதியாக சென்னை மோட்ச விராக்கினி மாதாவின் ஆலய குருவாகிய கனம் L. X. பெருநாந்து சுவாமிகள் சபைக்கு நன் கொடையாகத் தந்த ஐம்பது ரூபாயையும், ம-ா-ா-ஸ்ரீ கயித்தான் வில்லவராயர் அவர்கள் தந்த பெரிதோர் கடிகாரத்தையும் சபையானது எவ்வளவு உபசாரத்துடன் பெற்றுக்கொண்ட தென்பதையும், மேலும், மதுவிலக்குச் சபை அப்பேர்ப்பட்ட மகான்களின் க்ஷேமலாபத்தை எத்தனைதூரம் விரும்புகிற தென்பதையும் விளக்கிக்காட்டி, விஜயம் செய்திருந்த அனைவருக்கும் வந்தனம் கூறி முடித்தார்கள். இஃதானதும் உடனே மங்களம்பாடி மதுவிலக்கு சபைக்குப் பல்லாண்டு கூற கூட்டம் முடிவுற்றது.

தூத்துக்குடி. }
15-4-13. } கண்டு களித்தோன்.

---

## சேர்ந்தமரம்.
## அர்ச். லூர்துமாதா கோவில் பிரதிஷ்டை.

இந்த ஊருக்கு சுமார் $1\frac{1}{2}$-மைல் தூரத்திலிருக்கும் திருமலைபுரம் என்னும் கிராமத்தில் "வருண ஆச்சிமலை" என்றழைக்கப்படும் மலையின்மேல் புதிதாய்க் கட்டப்பட்டிருக்கும் அர்ச். லூர்துமாதா கோவில் பிரதிஷ்டை சடங்கு சென்ற மார்ச்சு மீ 30௳ மாலை 5-மணிக்கு நடத்தப்பட்டது. மறுநாள் 31௳ அப்புதுக் கோவிலில் திவ்ய பூசை செய்யப்பட்டபின் சப்பரச் சுற்றுப்பிரகாரம் வெகு ஆடம்பர சிறப்புடன் நடந்தேறியது. இத்தேவாலய திருப்பணி வேலை சென்னை ராஜதானியிலுள்ள அநேக கிறிஸ்தவ நண்பர்களும் இந்துக்களும் கொடுத்த பொருளுதவியால் கட்டபபட்டதால், தூர இடங்களிலும் இச்சில்லாவின் பல பாகங்களிலுமிருந்து ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்களும் இந்துக்களும் இவ்வைபவத்திற்காக வந்திருந்தார்கள். மலையின் உச்சியில் விஸ்தாரமான சமதளத்தில் இவ்வளவு நேர்த்தியான தேவாலயம் நிர்மாணிக்கப்பட்டதைப்பற்றியும், அதனுள் எழுந்தருளியிருக்கும் அர்ச். லூர்துநாயகியின் திருச்சுருபம் இப்போதுதான் மோக்ஷத்திலிருந்து இறங்கிகாக்ஷிகொடுக்கும் தன்மைபோலிருக்கும் வடிவத்தின் அழகைப்பற்றியும், கோவில் கட்ட ஆரம்பித்ததற்குப் பின்னாலே மலையின் உச்சியில் புதிதாய்கண்டுபிடிக்கப்பட்டு வெட்டியிருக்கும் சுனைபோன்ற தெப்பத்தின் ஜலமகத்துவத்தைப்பற்றியும் ஆச்சரியப்படாதார் ஒருவருமில்லை. இக்கோவில் கட்டிட வேலைக்கு அநேக விதத்தில் உதவிசெய்த திருச்சினாப்பள்ளி மகா-ா-ா-ஸ்ரீ அமிர்தசாமிபிள்ளை அண்டு கம்பெனியார் இவ்விடம் பிரதிஷ்டை வைபத்திற்கு விஜயஞ்செய்து கோவில், பீடம், மலை முதலியவைகளையும், பூர்வீக அரசர்களால் ஏராளமான பொருள் செலவுசெய்து மலையினிருபுறத்து சார்பிலும் மலையைத் துளைத்து செய்திருக்கும் மண்டபத்தையும், தம்பொருள் செலவினால் பொட்டகிராப் படம் பிடித்ததுமன்றி, கோவிலைச்சுற்றி 14-சிலுவைப்பாதை ஸ்தலங்களும் 3.தீபஸ்தம்பகளும் தம் பொருள் செலவில் ஸ்தாபிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். திருயாத்திரைக்காரர் சனிவாரந் தோறும் ஏராளமாய் இங்குவந்து தங்குகிறபடியால், தங்குகிறதற்கு ஓர் மண்டபமும் ஷை ஊற்றினோரம் லூர்து கெபியும் கட்டவேண்டிய திருப்பதால் இதைவாசிக்கும் நண்பர்கள் பணவசூலுக்காக கையொப்ப புஸ்தகம், விளம்பர பத்திரிகை, கோவில் பட முதலியவைகளை கொண்டு வருபவர்களுக்கு, சந்தேகப்படாமல் தங்களால் கூடிய பொருளுதவிசெய்தால் நலமாயிருக்கும்.

31௳ பகல் மலையின்மேல் பிரதிஷ்டையைப் பற்றிய சகல வைபங்களும் முடிந்தபின் அன்று சாயந்தரம் சேர்ந்தமரத்தில் எங்கள் பங்கு சுவாமியாரான ஜே. இஞ்ஞாசிநாத சுவாமியவர்கள் சேசுசபையில் பிரசித்த 50-ம் வருட தங்கஜூபிலி மகோற்சவத்திற்காக கோவில்ப் பீடங்களும், நான்கு ரதவீதிகளும் வெகு அலங்காரமாய் சோடிக்கப்பட்டிருக்க, இரவு 7-மணிக்கு சங். இஞ்ஞாசிநாத சுவாமிகள் சங். போஸ்கு சுவாமிகள், பொம்மால் சுவாமிகள், அடைக்கலநாத சுவாமிகளுடன் கோவில் மண்டபத்தில் எழுந்தருளியிருக்க, கிறிஸ்துவர்கள் பலவித பழவர்க்கங்களுடன் காணிக்கை கொண்டுவந்து, கடந்த 36 வருடங்களாய் இவ்வூரிலே பங்கு சுவாமியாராயிருந்து பிரஜைகளுக்கு ஆத்தும விஷயமாயும் சரீர விஷயமாயும் செய்துள்ள அரியபல பேருபகாரத்திற்கு நன்றியறிதலாக வந்தனோபசாரப் பத்திரிகை வாசிக்கப்பட்ட பிறகு "தேதேயும்" என்னும் தோத்திரப் பாடல் பாடப்பட்டு திவ்விய நற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டது. அதன்பின், பலவிதமான மேளவாத்திய கோஷ்டங்களுடன் காந்த விளக்கும் மத்தாப்பும் பிரகாசிக்க, இரண்டு அசுவம் பூட்டிய ரதத்தில் மேற்சொல்லிய நான்கு குருப்பிரசாதிகளும் எழுந்தருளி சுற்றுப்பிரகாரம் வரவும், பலவித வாண வேடிக்கையுடன் ஜூபிலிமகோற்சவம் முடிவுபெற்றது. ஸர்வஸாம்பிராஜ்ய நிரம்ப மகத்துவ ஷட்குண சர்வேஸ்பரன் எங்கள் நேச தந்தையாகிய சங். இஞ்ஞாசிநாத சுவாமிகள் இன்னும் பல்லாண்டு எங்களுடன் நற்சுகமாய் வாழும்படி கிருபை கூர்வாராக.

Sendamaram. } இங்ஙனம்,
14-4-13 } சேர்ந்தநகர் நேசன்.

---

## கத்திவாக்கம் அர்ச். சூசையப்பர் திருநாள்.

சென்னைக்கடுத்த கத்திவாக்க மென்னும் க்ஷேத்திரத்தின்கண் திருக்கோவிற் கொண்டிலங்கும் திருக்குடும்பப் பாதுகாவலரான அர்ச். சூசையப்பர் திருநாள் சென்ற ஏப்ரல்மீ 3௳ வியாழக்கிழமை மாலை $6\frac{1}{2}$-மணிக்கு கொடியேற்றத்தோடு தொடங்கி, அன்று முதல் நாடோறும் காலையில் திவ்யபூசைப்பலியும் மாலையில் அர்ச். சூசையப்பர் தேர்சுற்றுப்பிரகாரமும் அதற்குப்பின் பிரார்த்தனையும் நடைபெற்றது. 12௳ சனிக்கிழமை சாயரட்சை $6\frac{1}{2}$-மணிக்கு வெஸ்பர்ஸ் என்னு மாலை தேவதோத்திரக் கீர்த்தனைகள் பாடப்பட்டு தேவநற்கருணை ஆசீர்வாதங் கொடுக்கப்பட்டது. அன்றிரவு 11-மணிக்கு மிக்க மணங்கமிழும் புஷ்பங்களால் சிங்காரிக்கப்பட்ட விதவிதமான ஐந்து அர்ச்சியசிஷ்டவர்களின் ரதங்கள் கிறிஸ்துவ பக்தரால் ஏந்தப்பட்டு மெல்லெனச் செல்ல, வாத்திய கோஷ்டிகள் முழங்க, கணக்கற்ற திருயாத்திரைக்காரர்கள் புடைசூழ்ந்து பிரார்த்தித்துக்



கொண்டு பின்செல்ல வெகு விமரிசையுடனும் பக்தி வணக்கத்துடனுஞ் சுற்றுப்பிரகாரம் நடந்தேறியது. மறுநாள் ஞாயிற்றுக்கிழமை 13௳ அதிகாலையில் ஒரு திவ்ய பூசையும் $7\frac{1}{2}$-மணிக்கு இன்னொரு பாடல்பூசையும் Very Rev. Monsgr. E. M. Angelo மிகவும் சங்கைக்குரிய இ. எம் ஆஞ்செலோ குருதேசிகரால் நிறைவேற்றப்பெற்றது. பூசைமுடிந்தபின் திவ்ய நற்கருணை ஆசீர்வாதங் கொடுக்கப்பட திருநாள் சம்பிரமமாயும் யாவருக்கும் ஆனந்தமான விதமாயும் முடிவுபெற்றது.

இவ்வரிய அர்ச்சியசிஷ்டவரின் திருநாள் ஷை க்ஷேத்திரத்தில் வருஷாவருஷமும் கொண்டாடப்படும்படி வெகு முயற்சியும் பிரயாசையும் எடுத்துக்கொள்ளும் மகா-ா-ா-ஸ்ரீ சி. துரைசாமிபிள்ளையவர்கள் குடும்பசமேதராய் பல்லாண்டு வாழ அர்ச். சூசையப்பர் கிருபை புரிவாராக. இப்படிக்கு,

சூசைதாஸன்.

---

# GENERAL NEWS AND NOTES.
# பொது வர்த்தமானக் குறிப்புகள்.

**ஓர் நூதன யந்திரம்.**—இந்த யந்திரத்தினால் செவியால் கேட்கிற சத்தத்தைக் கண்ணால் பார்க்கவும், நேத்திரத்தால்காண்கிற வெளிச்சத்தைக் காதாலே கேட்கவும் கூடுமாம். இது என்ன ஓர் ஆச்சரியம்!

**மோட்டார் வண்டிகளால் உயிர்ச்சேதம்** — இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, ஐயர்லாந்து என்னும் இந்த பிரிட்டிஷ் தீவுகளில் சென்ற வருஷத்தில் மோட்டார் வண்டிகளால் 1000 பேர் உயிர்ச்சேதமும், 23,000 பேர் படு காயமும் அடைந்தார்களாம்.

**உலகத்தில் அதி பெரிய ரெயில்வே ஸ்டேஷன்.**—ஜெர்மனி தேசத்தில் லெய்ப்ஸீக் என்ற பட்டணத்தில் புதிதாய்க் கட்டப்பட்டுச் சென்ற பெப்ரவரிமாதம் முதற் தேதியில் திறக்கப்பட்ட ரெயில்வே ஸ்டேஷன்தான் உலகத்தில் மிகப் பெரிய ஸ்டேஷனும்.

**பெண்பிள்ளையும் முகக்கண்ணாடியும்.**-ஒரு பெண்பிள்ளை முகக் கண்ணாடியிலே ஒவ்வொருநாளுந் தன் முகத்தைப் பார்ப்பதற்குச் செலவிடும் நேரத்தைத் தொகுத்

துப் பார்த்தால் அவள் தன் சீவிய காலத்திலே 242 நாட்களை யிதிலே செலவிடுகிறளென்று பரீஸ் நகரிலுள்ள ஒருவர் கணக்கிடுகிறர்.

**ஓர் தாராளமான நன்கோடை.**—நிர்ப்பாக்கிய நிலையிலிருக்கும் பெண்களைச் சேர்த்து அவர்களைத்திருத்தி நல்வழிப்படுத்துந் தருமஸ்தாபனங்களுக்காக அமெரிக்க கோடீஸ்வரராகிய மிஸ்டர் ருக்பெல்லர் 20 லட்சம் பவுன் கொடுத்திருக்கிறர்.

**ஓர் புது செய்தி.**—வயிற்றுக்குள் நேரிடும் பல வியாதிகளுக்கு பற்கள் நல்ல ஸ்திதியிலில்லாததே காரணமென்றுஓர் வைத்தியர்சொல்லுகிறர். வாயையும் பற்களையும் சுத்தமாய் வைத்திருக்கிறவர்களுக்கு வயிறு சம்பந்தமான வியாதிகள் வராவாம்.வாயை சுத்தமாக்க கொப்பளிக்கத்தகுந்தது ஓடல் என்னுந் தைலமாம்.

**ஓர் புது ரேயில்வே.**—ராமநாத புரத்திலிருந்து சிவகங்கைக்கு ரேயில்வே போடவேண்டியதென்று டிஸ்டிரிக்ட் போர்டார் செய்த தீர்மானத்தை கவர்ன்மெண்டார் அங்கீகரித்துவிட்டார்கள். கூடிய சீக்கிரத்தில் இவ்வேலையை ஆரம்பிக்க முயற்சி செய்யப்படும்

**சக்கரவர்த்தியின் ஜனன மகோற்சவம்.**-நமது ஜியார்ஜ் சக்கரவர்த்தி யவர்களின் ஜனன மகோற்சவம் இவ்வருடம் இந்தியாவில் வருகிற ஜூன்மீ மூன்றும்தேதி செவ்வாய்க்கிழமை கொண்டாடப்படும். அன்று பகிரங்க ஆபீசுகள் வர்த்தக சாலைகளுக்கெல்லாம் விடுமுறையாகும்.

**சென்னை ஐகோர்ட்டு** மேமீ 5-ம்உ திங்கட்கிழமை முதல் ஜூலைமீ 13-ம்உ சனிக்கிழமை வரையிலும் கோடைகால விடுமுறைக்காக மூடப்படும். ஆயினும் அத்தியாவசரமான விஷயங்களைக் கவனிப்பதறகாக, ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர் அவர்கள் வெக்கேஷன் ஜட்ஜியாக வீற்றிருப்பார்.

**எம். ஏ. பரீட்சை.**—இந்த பரீட்சைக்கு இவ்வருஷம் போன 96 பேர்களில் மூன்றுபேர் முதல் வகுப்பிலும், ஆறுபேர் இரண்டாவது வகுப்பிலும், 13 பேர் மூன்றுவது வகுப்பிலும் ஆக 22 பேர் தேறியிருக்கிறர்கள். இப்பரீட்சைக்கு மேலான பரீட்சை இந்த சென்னை சர்வகலா சாலையிலில்லை.

**குழந்தை விவாகங்கள்.**—இந்தியாவிலே சூரத்து நகரில் ஒருநாளிலே 400 குழந்தை விவாகங்கள் நடந்தனவாம். பெண்பிள்ளைகள் 7 வயசுக் குட்பட்டவர்கள். மாப்பிள்ளைமாரோ 9 வயசுக் குட்பட்டவர்கள். விவாகச் சடங்குகள் நடக்கும்போது குழந்தைத் தம்பதிகளை பெற்றோர் தம் மடியிலிருத்தி அழாதிருக்க இனிப்புகள் கொடுத்து வைத்திருந்தார்களாம். பொம்மைக்கல்யாணங்களுக்கும் இக்கலியாணங்களுக்கும் வித்தியாசமுண்டோ?

**ஓர் பெரிய கப்பல்.**—சென்றமீ இறுதியில் பிரிடிஷ் குனாட் கம்பெனியாருக்காக அமெரிக்காவில் "அக்விடானியர்" என்ற பாரிய கப்பல் ஒன்று செய்து முடிக்கப்பட்டு தண்ணீரி லிறக்கப்பட்டது. இது 47,000 டன் நிறையுள்ளது. 3250 பேர் பிரயாணஞ் செய்யத்தக்கது. பிரிட்டிஷ் கப்பல்கள் எல்லா வற்றிலும் இதுவே மெத்தப் பெரியதென்று சொல்லப்படுகிறது.

**ஒருபுது ஆகாய விமானம்.**-ஆகாயவிமானமென்பது ஆகாயத்தில் செல்வது. இதைத் தண்ணீரிலுஞ் செலுத்தக் கூடிய வகையை ஆஸ்திரேலியா இஞ்ஜினியர் ஒருவர் கண்டுபிடித் திருக்கிறர். இது மெத்தப் பிரயோஜனமானது. சமுத்திரத்தில் செல்லும்போது யாதோர் ஆபத்து நேரிடுவதாயிருந்தால் உடனே எழும்பி ஆகாயத்தில்போய் தப்பித்துக் கொள்ளலாம். இது ஓர் நீர்வாழ் பறவைக்கு ஒப்பாயிருக்கிறது.

**மதுவுக்குக் கற்கண்டு பகை.**—ஓர் குடியனை குணப்படுத்த வேண்டு மாயின் அவனைப் பல நாளைக்கு அடிக்கடி கற்கண்டை சப்பிக் கொண்டிருக்கச் செய்தால், அவன் குடியை மறந்து விடுவானென்று அமெரிக்க தேசத்தில் கண்டு பிடித்திருக்கிறர்கள். இது நல்ல மருந்தாய்த்தா னிருக்க வேண்டும். எப்படி யெனில் குடிகாரனெவனும் இனிப்பை விரும்பான். அவனுக்குக் காரமுள்ள வஸ்துவே பிரியம். இதையெவரும் பரிட்சித்துப் பார்க்கத்தக்கது.

**ஓர் நூதன கிராமொபோன்.**—இப்போது இருக்கிற கிராமொபோன் என்னும் பேசும் இயந்திரங்களை விட அதிக சப்தமாயும் தெளிவாயும் பேசவும், பாடவுங் கூடிய ஒரு புது யந்திரத்தை மிஸ்டர் கேப்டன் என்ற அங்கிலேய துரை யொருவர் கண்டுபிடித்திருக்கிறர் இதற்கு ஸ்டென்டொர்போன் எனப்பேர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நூதனயந்திரம் நம் நாடிற்கு வர எத்தனை காலஞ் செல்லுமோ!

**ஓர் புது ரேயில்வே.**—பர்மாவிலிருந்து நேரே சீனுவுக்கு ரெயில்பாதை போடுவதற்கு பிரேரேபனை செய்யப்படுகிறது. இவ்விஷயமாய் லிவர்பூல் மான்செஸ்டரி லுள்ள வர்த்தகசங்கத்தார் முயற்சி செய்து வருகிறர்கள். இப்பிரேரேபனையைபர்மா வர்த்தக சங்கமும் ஆமோதித் திருக்கின்றது. இந்த இருப்புப்பாதை ஈடேறும் பட்சத்தில் சீனு இந்திய வர்த்தகம் மெத்த விருத்தியாகுமெனபதற் கையமில்லை.

**ஒரு படத்தின் விலை 2,61,000 ரூ.**-சமீபத்தில் பரீஸ் பட்டணத்தில் நடைபெற்ற ஓர் சித்திரக்காட்சியின் போது கழைக்கூத்தர்களைப் போல் எழுதியிருந்த சித்திரப்படம் ஒன்று 17,400 பவுன் அல்லது இரண்டு லட்சத்து அறுபத்தோராயிரம் ருபாய்க்கு விலை போனதாம். இது படத்தின் அருமையையும் அங்கு கூடியிருந்தவர்களின்பணக் கொழுமையையுங் காட்டுகிறதன்றோ?

**கண்ணாடிச் சிம்னி** சீக்கிரம் வெடித்து உடையாமலிருப்பதற்கு, ஒரு பாத்திரத்தில் ஜலம் விட்டு அதில்உப்பையிட்டுக் கலக்கி, அதற்குள் சிம்னியை மூழ்கவைத்து, அடுப்பிலிட்டு கொதிக்கவைத்து, இறக்கியாரவிட்டுப் பின் உபயோகிக்கவேண்டும். இப்படிச் செய்தால் ஒருவாரம் ஒரு மாதத்துக்குள் பல சிம்னிகள் உடைகிற இடத்தில், ஓரேசிம்னி குறைந்தபட்சம் ஒருவருஷ வரைக்கும் வருமாம். இதை யொவ்வொருவரும் பரிட்சித்துப்பார்க்கத் தக்கது.

**முப்பதினுயிர ருபாய் அபராதம்.**—லண்டன் நகரத்தின் வடபாகத்திலே ஓர் இடையன் பாலில் தண்ணீர்கலந்து விற்றதற்காக 30,000 ருபாய் அபராத தண்டனை விதிக்கப் பெற்றுனும். இது குற்றத்தின் தன்மைக்கு மிகு கடுந் தண்டனையாகக்காணப்பட்டாலும் இப்படிப்பட்ட பயங்கரமான தண்டனை விதிக்கப்படா விட்டால் பாலில் தண்ணீரும், நெய்யில் கொழுப்பு எண்ணெய் முதலியதுங் கலந்து விற்கும்அநியாயம் ஒழியாது. நமது நாட்டிலும் அதிகாரிகள் இவ்விஷயத்தில் ஏன் தக்க முயற்சியெடுக்கக் கூடாது?.



**ஓர் பெரும் புதையல்.**—வட அமெரிக்காவிலுள்ள கனடாவைச் சேர்ந்த நோவோஸ்கோஷியா என்னும் மாகாணத்துக்கருகே யிருக்கும் ஓர் தீவில், 200 வருஷங்களுக்கு முன்னே கப்பற் கொள்ளைக்காரரால் இரண்டுலட்சம் பவுன் புதைக்கப்பட்டதென நம்பி, சில வருஷங்களுக்கு முன்னே இரண்டுவிசை பூமியைத் தோண்டியெடுக்கப் பிரயத்தனப்பட்டும் கைகூடவில்லை. இப்போது மூன்றுவது தடவையாக அதை மறுபடியுமதோண்டிப் பார்க்க, விஸ்கான்சின் காலேஜ் புரொபசரில் ஒருவர் பலபேர் பங்குக்காரர்களைச் சேர்த்துக்கொண்டு முயற்சி செய்து வருகிறர். இது செத்த ஆடு காற்பணம் சுமைக்கூலி முக்காற்பணமாய் முடியும் போலும்!

**ஓர் நூதன தபாற் பெட்டி.**—கனடா தேசத்தில் நூதனமாய்ச் செய்யப்படும் தபாற் பெட்டிகள், தபால் காகிதங்கள், பாக்கெட்டுகள் முதலியவைகளைப் போட உதவுவது மல்லாமல், உபயோகமான பல வேலைகளை இரவும் பகலுஞ் செய்கின்றனவாம். இவைகள் அந்தந்ததெருவின் பெயரைத் தெரிவிக்கின்றன; வியாபாரிகளுடைய பல விளம்பரங்களைத் தாங்கி நிற்கின்றன; தபால் தலைகளை விற்கின்றன; அதன் உச்சியில் தீபத்தையும் ஏந்திநிற்கின்றன; தபால் தலை வேண்டியவர்கள் தமக்குவேண்டிய ஸ்டாம்பின்கிரயத்தை அதனுள் போட்டு விட்டால் அதனுள் ளிருந்து கோரிய ஸ்டாம்புகள் தாமே வெளியே வருகின்றன. வியாபாரிகளுடைய விளம்பரங்கள் ஒவ்வொன்றுய் ஆறுவிநாடிக்கொருதரம் சுற்றி வருகின்றன. தபாற் பெட்டி, விளம்பரப் பலகை, ஸ்டாம்ப்வென்டர், தீபஸ்தம்பம் இந் நான்கும் செய்கிற வேலையை இந் நூதன பெட்டி ஒன்றே செய்துவிடுகிறது.

**ஓர் பெண்ணின் அபார சக்தி.**—அமெரிக்க ஐக்கிய மாகாணத்தை யடுத்த ரோட்ஸ் என்னுந்தீவில் பியூலா மில்லர் என்ற ஓர் சிறுமி (11 வயதுள்ளவள்) கண்ணிற்குப் புலப்படாமல் மறைவிலுள்ள எந்த வஸ்துவையும் கண்ணிற் கண்டது போல் விவரித்துச் சொல்லி விடுகிறுளாம். மூடப்பட்ட அறையிலுள்ள இரும்பு பெட்டிக் குள்ளிருக்கும் நோட்டுகள் இத்தனை யென்றும், அவற்றின் நம்பர்கள் தொகை இன்னவை யென்றும் சரியாய்ச் சொல்லிவிடுகிறுளாம்.

அவளைப் பரிசோதித்துப்பார்த்தநியூயார்க் டாக்டராகிய க்வாகன் டோஸ் என்பவர், மறைவி லிருக்கிறவைகளையும் பொட்டகிராப்பிடிக்கக் கூடிய யந்திரத்திலுள்ள எக்ஸ்ரேயிஸ் என்னும் வெளிச்சத்தின் திருஷ்டியையு மன்றி அசாதாரணமான மனோ சக்தியையும் அப் பெண் உடைத்தாயிருக்கிறாளென்று தீர்மானித்தார்.

**ஸ்திரி சுவதந்தரவாதிகள்.**—இவர்கள் செய்யுந் தீங்குகளுக்கு அளவு சங்கியையில்லை, முற்றுமில்லை, முடிவுமில்லை. வீட்டைக் கொளுத்துவதும், சன்னல்களை உடைப்பதுமே இவர்கள் முக்கிய வேலையாயிருக்கின்றது. சமீபத்தில் அநேக பொது இடங்களுக்கு தீ மூட்டி விட்டார்கள். "பிடித்தாலுஞ்சரி; அடித்தாலுஞ்சரி; கொன்றாலுஞ்சரி; ஸ்திரிகளுக்கு சுவதந்தரங் கொடுக்கு மட்டும் நாங்கள் சும்மாயிரோம்" என்கிறார்கள். சென்றமாதம், மிஸ்டர் கேர் ஹார்டி அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடந்த ஒரு கூட்டத்திற்கு ஸ்திரிகள் வரப்படாதென்று விலக்கஞ் செய்து கதவுகளைச் சாற்றித் தாளிட்டுக்கொண்டு ஒரு வீட்டின் உள்ளே அக்கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டம் முகிந்தவுடன் உள் தாழ்ப்பாளை வாங்கி விட்டு திறக்கபோனால் கதவு திறக்கக் கூடவில்லை. எந்த சாவியைக் கொண்டும் திறக்கப்படாத உயர்ந்த பலமான லீவர் பூட்டுகளைக் கொண்டு வெளியில் கதவுகள் பூட்டப்படிருந்தன. ஆதலினால் அரைமணி நேரமட்டும் அப்பூட்டுகளைத் திறக்க முயன்றும் பயன்படாமல் வாளைக் கொண்டு கதவின் பலகைகளை அறுத்து வழியுண்டாக்கியபின் கைதிகளைப்போல் உள்ளே அடைப்பட்டிருந்தவர்கள் வெளியில் வரக் கூடுமாயிருந்தது. இந்த சுதந்தரவாதிகளுக்குத் தலைமையான மிஸ்ஸஸ் பாங்கெர்ஸ்ட் என்பவள் ஜெயிலில் வைக்கப்பட்டிருந்தாள். அங்கே அவளுக்கு விதம் விதமான அறு சுவைப் பதார்த்தங்களுடன் அன்னஞ் செய்து வைத்தாலும் அவள் அவைகள் ஒன்றையுந்தொடாமல், தண்ணீரொன்றையே ஆகாரமாய் அநேக நாள் குடித்து வந்ததினால் தேக மெலிந்து நோய் மலிந்தது. அவள் தன் கேவல ஸ்திதியை யிட்டு ஜெயிலினின்றும் விடுதலை செய்யப்பட்டாள். அவளை இப்போது ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் வைத்து சொஸ்தப்படுத்த முயன்று வருகிறார்கள். இப்படியாய் இவர்கள் அடஞ் சாதித்துச் செய்யுஞ் ஜெபஞ் சாயுந்தரத்ததோ?

---

# NEWS OF THE MONTH.

## மாச வர்த்தமானம்.

---

**டில்லி சதிச்சேயல்.**—டில்லிநகர்ப் பிரவேசத்தின் போது இராஜப்பிரதி நிதியை வெடி குண்டால் கொல்ல யத்தனித்த சண்டாளன் இன்னானென்று இன்னுந் திட்டமாய் அறியக் கூடுமாயில்லை. சென்றமீ 12ம் தேதி மத்திய மாகாணத்து உதவி போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் தமக்குக் கிடைத்த சில சமாசாரங்களை யொட்டி, பம்பாய் இராஜதானியைச் சார்ந்த காண்டிஷ் ஜில்லாவிலுள்ள நாண்டர்பார் என்ற விடத்துக்குப் போய், அங்கே ரெயில்வேயில் பிரயாணஞ் செய்து கொண்டிருந்த ஒரு வாலிப பிராமணனைப் பிடித்திருக்கிறார். அவனுக்கு வயது 22. அவன் பேரைக் கேட்டதற்கு முதலில் அதைச் சொல்ல மறுத்தானாம். பிறகு போலீசார் அவன் பேர் இராமசந்திர இரகுநாதன் என்று விசாரித் தறிந்தார்கள். அவனும் அதேயென்று பிறகு ஒத்துக்கொண்டான். இவன் முன் நாகப்பூரில் வசித்தவனென்றும் ஷ நகர்ப்பிரவேச சடங்கின்போது டில்லியில் இருந்தவனென்றும் ஒத்துக் கொள்ளுகிறான். ஆனால் இவனை யறிந்தவர்கள் யாரேனும் உண்டோ வென்றபோது சில நபர்களைக் குறித்துச் சொன்னானும். அவர்களிடம் போய் விசாரித்ததில் இருவர் தவிர மற்றெல்லோரும் அவனையறியோம் என்றார்கள். இவனிடத்தில் அகப்பட்ட சில புகைப்படங்கள் (பொட்டகிராப்) மூலமாய் சில துப்புகள் கிடைக்கலாகுமென எதிர்பார்க்கப் படுகிறது. இவனை டில்லி நகரத்துக்குக் கொண்டுபோய் போலீசார் விசாரணை செய்துவருகிறார்கள்.

**இன்னொரு ராஜ கொலைப் பிரயத்தனம்.**—ஸ்பெயின் தேசத்தரசனாகிய அல்பான்ஸோ என்பவர் சென்றமீ 13ம் தேதி தமது சேனையைப் பரிசீலனை செய்து விட்டுத் திரும்புகையில் ஒரு துஷ்டன் ஜனக் கும்பலுக்குள்ளிருந்து சடுதியில் வெளிப்பட்டு, அரசன் ஏறியிருந்த குதிரையின் கடிவாளத்தை இடதுகையால் பிடித்துக் கொண்டு வலதுகையால் தன் சட்டை சாக்கிலிருந்த கைத் துப்பாக்கியை யெடுத்து அவரைச் சுட்டான். இவன் சுடுவதற்குள்ளாக அரசர் இதை யறிந்து தப்பித்துக் கொள்ளும் பொருட்டு குதிரையை பின்னுக்கு இழுத்துக்கொள்ள சுடப்பட்ட குண்டு குதிரையின் மீது பட்டது. அரசர் அற்புதமாய் தப்பித்துக்கொண்டார். உடனே அருகில் நின்ற போலீசு சேவகன் அக்கொலைப்பாதகனை உதைத்து கீழே தள்ள, அவன் கீழே விழுந்த பிறகும் இரண்டு வெடிசுட்டானாம். ஆயினும் அச்சேவகன் அதைத் தடுக்க முயன்றதில் அக்குண்டுகள் யார் மீதும் படாமல் ஆகாயத்தை ஊடுருவிச் சென்றனவாம். இந்த ஆபத்து சமயத்தில் அல்போன்ஸோ அரசர் ஆச்சரியத்துக்குரிய அமைதியையும் பொறுமையையுங் காண்பித்தார். இதைக்கண்ட ஜனங்கள் அரசர் ஆபத்தினின்று தப்பினதற்காகவும், ஆபத்தில் அவர் காண்பித்த சாந்தத்திற்காகவும் தங்களுக்குண்டான சந்தோஷ மிகுதியை யடக்க மாட்டாதவர்களாய் ஆவேசத்துடன் ஆரவாரக் கூச்சலிட்டதுடன், மிகத் தைரியமாய் அரசனுயிரைக் காப்பாற்றின போலீசு சேவகனை செங்குத்தாய் தோளுயரந் தூக்கிச் சென்றார்கள். அரசர்களை யிவ்வாறு கொலை செய்யத் துணியுங்கொடிய துஷ்டர்களின் பைத்தியத்தை யென்னென்கலாம்!

**பால்கன்--துருக்கி யுத்தம்.**—இந்தயுத்தம் இன்னும் முடிவாயிற்றென்று முடிவாய்ச் சொல்வதற் கில்லை. வல்லரசுக்கள் மத்தியஸ்தஞ்செய்து இருதிறத்தாரும் பத்து நாளைக்குச் சண்டையை நிறுத்திவைக்கும்படிக்கு ஏற்பாடு செய்திருந்தும், மாண்டிநிக்ரோவர் ஸ்குட்டாரி முற்றுகையை விடாது தொடர்ந்து நடத்தி, சென்ற மாதம் 21-ம் தேதி இரவு முழுதுஞ் சண்டை செய்து துருக்கியர்மேல் விழுந்தடித்து ஸ்குட்டாரியைக் கைப்பற்றிக் கொண்டார்கள். 120 பீரங்கிகளும் பிடிபட்டன. ஸ்குட்டாரி இவ்வாறு பிடிப்பட்டபோதிலும் இதை விட்டு விட்டு சமாதானத்துக்கு வரும்படி மாண்டிநிக்ரோவை வல்லரசுக்கள் சம்மதிக்கச்செய்ய இயலுமென்று சொல்லப்படுகிறது. இப்படி வல்லரசுக்களால் முடியாமற்போனால், அல்பானியாவில் அக்கறைகொண்டிருக்கும் அவுஸ்திரியா தானே சென்று, மாண்டி நிக்ரோவை யெதிர்த்து சண்டையிட்டு ஸ்குட்டாரியைப் பிடுங்க முயலுமென்று வியன்னாவில் பேசிக்கொள்ளப்படுகிறது. அல்பானியாவைச் சேர்ந்த ஸ்குட்டாரி யானது மாண்டிநிக்ரோவர் கையில் விடப்படுமானால் அதிலுள்ள ஏராளமான கத்தோலிக்கருக்கு வெகு துன்பங்கள் நேரிடும்.

**அர்ச். பாப்பானவர்.**—நமது அன்புக்குரிய பரிசுத்த பிதாவாகிய பத்தாம்பத்திநாதர் சென்ற மாதத்தில் மெத்தவும் தேக அசௌக்கியமுற, அவர் பிழைப்பதே அரிதாயிருந்ததெனக் கேள்வியுற்று, கத்தோலிக்கு கிறிஸ்துவ உலகமுழுதும் துக்கசாகரத்தி லமிழ்ந்தி, அவருக்குத் தீவிரத்தில் சௌக்கியங் கட்டளையிடவேண்டுமென்று சர்வேசுரனைப் பிரார்த்தித்துக்கொண்டது. அவருக்கு முதல் சாதாரண ஜுரம்போல் கண்டு, பிறகு மும்முரமாகி, நுரையீரல் தாக்குண்டு, தொண்டையில் கபம் கட்டிக் கொண்டு அதிக கஷ்டங்கொடுத்தது. தளர்ந்த வயதினாலும், (வயது 78) பலஹீனத்தினாலும் இந்நோயை அவர் தாங்கமுடியுமோ வெனயாவரும் கிலேசமுற்றிருந்தினர். டாக்டர்கள் எந்நேரமும் அவரைக்காத்து ஔஷத பிரயோகஞ்செய்து வந்தார்கள். கடவுள் கிருபையால் படிப்படியாய் நோய் ஒடுங்கிக் கொண்டுவந்தது. கடைசியாய் மாத முடிவில் வந்த தந்திசமாசாரத்தினால், பரிசுத்த பிதாவானவர், இப்போது எழுந்து பிரதிதினம் பலமணிநேரம் உட்கார்ந்திருக்கக் கூடியவரா யிருக்கிறாரென்று அறிந்து நன்றியறிந்த மனத்துடன் கடவுளுக்கு ஸ்தோத்திரம் புரிகிறோம். இவர் பூரணசுகமடைந்து பழையபடி தமது அலுவல்களைப் பார்க்கவும், இன்னும் பல்லாண்டு கத்தோலிக்கு உலகத்தையாண்டு நன்மை செய்யவும் சர்வவல்லப கடவுள் கிருபை கூர்வாராக!

# DOMESTIC OCCURRENCES.

## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

### விசேஷக் குறிப்பு.

**அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 8-அணா முன்பணம் அனுப்பினாலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப் பட மாட்டாவென்பதை நண்பர்கள் கவனிக்கக் கோருகிறோம். அரைக் கலத்துக்கு மேற்பட்டு முக்கால் கலத்துக்கு உட்பட்டால் முக்கால் ரூபாயாகும். முழுக்கலத்துக்கு ஒரு ரூபாயாகும். கால் ரூபாய்க்கு இவ்விளம்பரங்கள் ஒருபோதும் பிரசுரிக்கப்பட மாட்டா.**

## நன்மரண அறிக்கை.

✠

R. I. P.

திருநெல்வேலியைச் சேர்ந்த வேம்பாற்றில் எனது அருமைத்தந்தையார், ச. சூசைப்பர்ணாந்து என்பார் கண்ணோயால் பீடிக்கப்பட்டு வேண்டிய சிகிச்சைகள் செய்தும் குணப்படாது, கடைசி தேவத்திரவிய அனுமானங்கள் யாவும் சரிவரப்பெற்று தமது மூன்று புத்திரர்களையும் பந்துமித்திரர்களையும் பரதவிக்க விட்டு அர்ச். சூசையப்பருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மார்ச்சு மாதம் முதலாந் திகதி பரலோக பிராப்தியானார். இதைக் கண்ணுறும் கத்தோலிக்கு நேயர்களனைவரும் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக 1 பர. 1 பிரி. 1 திரி. வேண்டிக்கொள்ள வெகுவாய் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்.

சூ. யுவான் அந்தோனி பர்ணாந்து.

---

சென்னை பிருங்காசைல ஸ்தலாதீனரும், இரங்கூன் சின்னக்காந்தத்தில் வசிப்பவருமாகிய ம-ள-ள-ஸ்ரீ. ஏ. ஆரோக்கியசாமிப் பண்டிதர் (கோவில் பிள்ளை) அவர்களின் அருமைக் குமாரரும், பொம்பேயி அர்ச். ஜெபமாலை மாதா பஜனையின் காரிய துரந்தரருமாகிய A. F. சேவியர் (Clerk, General Post Office, Rangoon) என்பவர் ஒருவாரம் கடின சுரத்தால் பீடிக்கப்பட்டு, மார்ச்சுமீ 1913வரு 30-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 10½-மணிக்கு தனது இருபிள்ளைகள் மனைவி தாய் தந்தையர்களைப் பரிதபிக்கவிட்டு 23-வயதாகிய இளம் பிராயத்தில் பரலோக பதவியடைந்தனர். அவர் சடலம் அன்று மாலை 4½ மணிக்குப் பஜனையோரால் மிக விமரிசையுடன் நல்லடக்கஞ் செய்யப்பட்டது இதைக் கண்ணுறும் நண்பர்கள் ஒவ்வொருவரும் அவர் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்வார்களாக.

இப்படிக்கு,

இரங்கூன், 7-4-1913 } J. மரியதுரை, ஷை பஜனையின் காரியதரிசி.

### அரக்கோணம்.

நிகழும் 1913 வரு எப்ரல்மீ 10-ம் தேதி வியாழக்கிழமை காலை 7-மணிக்கு என் அருமை மனைவி, சாலோமி அம்மாள் கடைசி தேவத்திரவிய அனுமானங்களை சரிவரப்பெற்று தன் பந்துமித்திரர் புடைசூழ்ந்து கண்ணீர் பெருக்கிநிற்க பாக்கியமான மரணத்தை அடைந்தனள். மறுநாள் காலை 7-மணிக்கு அரக்கோணம் அர்ச். வியாகுலமாதா கல்லறையில் அவள் சடலம் விமரிசையுடன் நல்லடக்கஞ் செய்யப்பட்டது. இதைக்கண்ணுறு நண்பர்கள் சாலோமி அம்மாளின் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ள மன்றாடுகிறேன். இப்படிக்கு,

சி. ஏ. அந்தோனிபிள்ளை.

இஞ்சின் டிரைவர் எம். எஸ். எம் ரெயில்வே

---

சேலம் ஜில்லா, திருப்பத்தூர் தாலுக்காவில் வாசஞ்செய்து காலஞ் சென்ற, தகப்பனார் பரிபூரணம். தாயார் அந்தோனியம்மாள் இவர்கள் குமாரத்தியும் 80 வது பட்டாளத்து மியூஜிஷன், H. ஜாவியர் மனைவியுமாகிய ராணிமரி மிக்கேல் அம்மாள் 1913 வருஷம் எப்பிரல் மாதம் 7 திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு ஒரு ஆண்குழந்தையையும். பந்து ஜனங்களையும் கண் கலங்கவிட்டு பாகதி சேர்ந்தனள். வயது 18. இதைக் கண்ணுறும் சகோதரர்கள் இவளாத்தும இளைப்பாற்றிக்காக ஒரு. பர. பிரி. திரி. ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்பவனாகிய

A. Simon, Musician,
80 th In'antry. Rangoon.

---

### வரவேற்பு.

வால் காலண்டர்.—அம்லோற்பவ மாதாவின் அழகிய படம் அமைந்த சித்திர வால் காலண்டர் ஒன்று கொழும்பு, ஜாம்பெட்டாதெருவில் "ஈஸ்டர்ன் நாவல்டி ஸ்டோர்ஸ்" வைத்திருக்கும் மகா-ள-ள-ஸ்ரீ ஜெ. எம். எம். பெர்ணாந்து அன்டு பிரதர்ஸ் அவர்களால் எமக்கு அனுப்பப்பட்டது. இதற்காக அவர்களுக்கு நாம் நன்றியறிந்திருக்கிறோம். இவ்வழகிய படம் நமது அறையை அதியுந்நதமாய் அலங்கரிக்கின்றது. இலௌகிகமும், அஞ்ஞானமும் பொருந்திய படங்களுள்ள காலண்டர்களை வீட்டில் வைப்பதைத் தவிர்த்து மேற்கண்டமாதிரி வேதப் படங்கள் அமைந்த காலண்டர்களை வைப்பது வீட்டுக்கு, அழகையும் வீட்டிலிருப்பவர்களுக்கு பக்தியையும், அயலார்களுக்கு நன்மாதிரிகையையும் உண்டுபண்ணும். இவைகளின் விலை பெரியது 8-அணா, சிறியது 6-அணா. வேண்டுபவர்கள் மேற்கண்ட விலாசத்துக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளவும்.



காகிதப் பூமாலை.—பலவர்ணக் காகிதத்தினால் செய்யப்பட்ட அழகிய விசித்திர புஷ்பமாலை யொன்று கொழும்பு கன்னாரத் தெருவிலிருக்கும் மகா-ள-ள-ஸ்ரீ. ச. பி. பாய்வ அவர்களிடமிருந்து வந்தனத்துடன் வரப் பெற்றோம். இஃது திருநாட்களிலும், பெருநாட்களிலும், கோவில்களையும், வீடுகளையும், வீதிகளையும் அலங்கரிப்பதற்கு மெத்த நல்லது. 24 அடி நீளமுள்ள மாலை யொன்றுக்கு விலை அணா—10 வேண்டியவர்கள் மேற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

---

### WANTED.

### தேவை.

இங்கிலீஷும், தமிழும் கற்பிக்கும் உபாத்தியாயராகவும், கோவில் உபதேசியாராகவும் உதவக்கூடிய ஒருவர் ஹூபிலி கோவிலுக்குத் தேவை. மாத சம்பளம் ரூபாய் 15. குடியிருக்க வீடு இலவசம். உபதேசியார் வேலையில் கிடைக்கும் வரும்படிகளை யெல்லாம் அநுபவிக்கலாம்.

Please apply to:—
The Revd. Father D. Kuss,
St. Joseph's European Boys'
School and Boarding Institution,
Fort, Bellary.
OR
The Very Revd. Father Grettler S,J.
Hubli.

### விலை குறைவு.

### இங்கிலீஷ் அன்ட் டாமில் பாப்பியுலர் வக்காபிலரி அன்ட் ரீடர்.

முன் விற்ற விலை ரூ. 2-8-0. தற்காலம் ஒரே ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

மேற்படி புஸ்தகமானது கொஞ்சம் இங்கிலீஷ் படித்தவர்களும், முற்றிலும் இங்கிலீஷ் படியாதவர்களும், பெண்களும், சிறுபிள்ளைகளும் இங்கிலீஷ் பாஷையை வெகு சீக்கிரத்தில் கற்றுக்கொள்ளும் நோக்கமாய் எண்ணிறந்த இங்கிலீஷ் வார்த்தைகளை ஓரசையாகவும், ஈரசையாகவும் மூவசையாகவும், வாக்கியங்களாகவும் இங்கிலீஷ் வார்த்தைகளையே தமிழில் திருப்பி, வாக்கியங்களையும் தமிழ்ப்படுத்தி இருக்கின்றன. (திருஷ்டாந்தமாக) Ache என்னும் மொழியை தமிழில் எக் என்றும், Cash என்னும் பதத்தை காஷ் என்றும், அவைகளின் அர்த்தத்தையும் எக்—வலி: காஷ் பணமென்றும். Who are you என்பதை ஹூ ஆர் யு: நீ ஆர் என்றும், இப்படி பற்பல வகையாய் சிறியவர்களுக்கும் பெரியவர்களுக்கும், கற்றவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பிரயோஜனமாகவும், A B C & Z வரைக்கும் படங்களுடனும், பிள்ளைகளுக்கும் பெரியவர்களுக்கும் பயன்தரத்தக்க அருமையான இங்கிலீஷ் லெட்டர் ரைட்டரும் இன்னும் பல விஷயங்களும் அடங்கியிருக்கின்றன.

மஹா விகடதூதன் ஆபீஸ் மதராஸ்

---

# St. Anthony's Depot.

Altar Candles, Church Ornaments & Ecclesiastical Arts.

கிறிஸ்துவ நண்பர்காள்,

இவ்விடத்தில் இத் தபசுகாலத்தில் ஞானவாசகத்திற்கும், தியானத்திற்கு மேற்ற அநேக புஸ்தகங்களும், சிலுவைப்பாதைப் படங்கள், சிலுவைகள், சுரூபங்கள் முதலியனவும் எம்மிடம் விற்பனைக் கிருக்கின்றன. அவற்றுள் சில முக்கியமானவைகளாவன.—

மன்ரேசா. அல்லது ஞான முயற்சிகளின் வியாக்கியானம் ரூ. 1-14-0; ஞானவொடுக்கங்களுக்கு நியமிக்கப்பட்ட அர்ச். இஞ்ஞாசியாருடைய ஞானத்தியானங்கள் அணா. 0-7-0; ஆத்துமநேசம் அணா. 0-7-0; வெள்ளிக்கிழமைப் புதுமை 0-9-6; அர்ச். வாரம் 0-8-0; சிலுவைப்பாதை சிறிது 0-3-6; சிலுவைப்பாதை பெரிது தோல்கட்டிடம் 0-12-0; வியாகுலப் பிரசங்கம் அரைக்கட்டிடம் 0-8-0; வியாகுலப்பிரசங்கம் கலிக்கோ 0-10-0; திருஸ்தலவாசகம் 0-3-6; திருஸ்தல தரிசனை 0-6-0; தெய்வீக விருந்து ரூ. 1-0-0; சேசுநாதர் திருப்பாடுகளின் தியானம் 0-10-0; கிறிஸ்துநாதர் அநுசாரம் தோல்கட்டிடம் 0-12-0; தேவமாதா, சூசையப்பர் வணக்க மாதங்கள் ஒன்று 0-12-0; வியாகுலமாதா புலம்பல் 0-1-6; அன்னை அழுங்கல் ஒப்பாரி 2-6-0; தேவமாதா வியாகுல ஒப்பாரி 0-6-0; சிந்தாகுலத்திரட்டு சிந்தாகுலக்கோவை 0-4-0; மிகவும் நேர்த்தியாய் வர்ணந் தீட்டிய சிலுவைப்பாதைப் படங்கள் 10×8 இஞ்சு செட். ரூ. 1-4-0; ஷை 17+3 இஞ்சு செட். ரூ. 4-8-0 எண்ணை வார்ணிஷ் 30+22 இஞ்சு செட். ரூ. 35-0-0; மிகவும் நேர்த்தியான கருப்பு போட்டோ படங்கள் (By Professor Gebhard Fugel) செட். 18½×13½ ரூ. 25; இதோ மனிதன் என்ற (Ecce Homo) சுரூபம் 20 இஞ்சு ரூ. 10; ஆண்டவருடைய உயிர்த்

தானச்சுரூபம் 20 இஞ்சு ரூ. 12; இன்னு மநேகவிதமான வெகுமதி பண்ணத்தக்க பல வடிவான சீமை கட்டுப் புஸ்தகங்களும், செபமாலை, படம், சுரூபம், வரவணிக்க முதலியவையும் கோவில் சோடினைச் சாமான்களும் விற்பனைக் கிருக்கின்றன.

1 ரூபாய்க்குக் குறைந்த சாமான்கள் V. P. P. யில் அனுப்பக் கூடாமையால் இவைகளுக்கு ஸ்டாம்பு அனுப்பினுல் ஒப்புக்கொள்வோம்.

Thomas Rodrigo,
No. 40, Kochikadde,
Colombo.

தோமாஸ் உறுதிரீகு,
நெ. 40, கொச்சிக்கடை,
கொழும்பு.

## எடப்பாடி அர்ச் செல்வநாயகி அம்மாள் ஆலய தர்மம்.

அடியில் கையொப்பமிட்டிருக்கும் நாம் உதார குணமுள்ள சகல நண்பர்களுக்கும் அறிவிப்பது யாதெனில்:—

எடப்பாடி அர்ச். செல்வநாயகி அம்மாளின் திருவாலயத்திற்கு பிரதி வருஷமும் பாஸ்கு பண்டிகையின்போது திருயாத்திரைக்காரர் அவள் திருவடியைப் போற்றி, அவள் உதவியைக் கேட்கத் திரளாய் வருவது யாவருக்கும் தெரிந்த விஷயமே. அப்படி வருகிறவர்களுக்குத் தகுந்த விடுதிகளும், சாவடி சத்திரங்களுமில்லாமையால் கடும் வெய்யிலின் வெப்பத்திஞல் அவர்கள் தவித் தலைவதைக்கண்டும், பொருளுதவியில்லாமையால் நாம் அவர்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்ய நாளது வரையில் கூடாமல் போனதைப்பற்றி அதிக வியாகுலப்படுகிறோம். ஆகிலும், அர்ச். செல்வநாயகி அம்மாளை நம்பி இப்போது இந்திய கிறிஸ்தவர்களுக்கு ஒரு சாவடியும் வெள்ளைக்காரர்களுக்கு மற்றொரு சாவடியும் கட்ட யேற்பாடு செய்வதோடு, கோவிலை மராமத்து செய்யவும் துணிந்து ஏறக்குறைய ரூ. 2,500 பெறும்படியான கட்டிடங்களைத் துவக்கிவிட்டோம். தரும சிந்தையுள்ள மரியாயின் தாசர்கள் உடனே நமக்கு கைகொடுத்து இந்த மேன்மையான வேலைகளைச் சீராய் முடிவு செய்ய உதவிபுரியவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். இதைக் கண்ணுறும் சகல கனதனவான்களும், சகல கிறிஸ்துவர்களும் தம் தம் மாலியன்றமட்டும் இந்த காரியத்திற்கு பொருளுதவி செய்வார்களென்று நம்பிக்கையாயிருக்கிறோம். நண்பர்களுடைய தர்மம் எவ்வளவு சிறியதேனும் சந்தோஷமாய் அங்கீகரிக்கப்படும். தேவதாயானவள் அவர்களையும் அவர்கள் குடும்பங்களையும் ஆசீர்வதிப்பாளென்பது திண்ணம்.

ஜே. ஞானதிக்கம்
எடப்பாடி கத்தோலிக்குக்கோவில்
விசாரணை குரு.

## An Appeal for Charity.

The undersigned begs to bring to the notice of the generous public that the Catholic Church at Edapady, which is very largely resorted to by pilgrims from far and near during every Easter, is badly in want of repairs, and further that suitable choultries to accommodate the ever-increasing body of pilgrims are a long-felt need of the locality. At present thousands of them know no shelter during the 3 or 4 days of their stay there, and are completely at the mercy of a hot summer sun. The dificulty of accommodation has of late become so great that the undersigned has been obliged to dissuade intending pilgrims from going to Edapady during the Easter season. It is therefore proposed with the generous help of the pnblic to provide two choultries, one for Europeans and Eurasians and another for Indians near the church premises. The estimated cost af these choultries as also of the repairs to the church is roughly Rs. 2,500. It is hardly necessary to point out that this is an object that must be highly acceptable to our Lord and the Blessed Virgin Mary, who will not fail to shower their choicest blessings on all who help this undertaking. The undersigned hopes that this appeal will meet with a ready response and every one will contribute his mite towards this pious and charitable object.

*GNANADIKAM,*
*R. C. Parish Priest in charge of the Edapady Church.*



IHS நல்ல ஆயன்.

June—1913.

புத்தகம். 11. | "நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுடுகளும் நமக் குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10:16-14.) | நெம்பர். 6

## JUBILEE INDULGENCE.
## ஜூபிலிப் பரிபூரணப் பலன்.

நமது அன்பிற்குரிய ஞானத் தந்தையாகிய பத்தாம் பத்திநாத பாப்பானவர் தமது ஞானமக்களாகிய நம்மெல்லோருக்கும் இவ்வருஷம் ஓர் ஜூபிலிப் பரிபூரணபலனைக் கட்டளையிடச் சித்தமானார். அளவிடக்கூடாத ஞானநன்மையைப் பெறுவிக்கிற இத்தகைய மகா உத்தம ஜூபிலி பரிபூரணப் பலனானது அபூர்வமாய் ஏதோ ஓர் அதி விசேஷமான காலத்தில் மாத்திரம் அருமையாய் அளிக்கப்படும் அரிய ஞான நன்கொடையாகும். பத்தாம் பத்திநாதருடைய காலத்தில் இதுவே முதற் ஜூபிலிப் பரிபூரணப்பலனாகும். இது, பூர்வம் நான்காம் நூற்றுண்டின் துவக்கத்தில் வேத விரோதிகளால் மகா குரூர வாதை துன்பங்களுக்குட்பட்டிருந்த திருச்சபைக்கு உரோமைச் சக்கரவர்த்தியாகிய கொன்ஸ்தாந்தீன் என்பவர் அளித்த ஸ்வாதீன சமாதானத்தின் ஞாபகார்த்தமாக இவ்வருஷம் கொண்டாடப்படும் 16-வது சதாப்தக் கொண்டாட்ட சம்பந்தமாய் அருளப்பட்டது. இந்தச் சமாதான சம்பவத்தின் விருத்தாந்தம் பின் வருமாறு:

நமது திவ்விய கர்த்தர் திருவவதாரமெடுத்துப் பாடுபட்டு, தம திருவிரத்தத்தைச் சிந்தி, தன்னுயிரைக் கொடுத்து மன்னுயிரை மீட்டி ரட்சித்து ஸ்தாபித்தருளிய திருச்சபையானது, அவர் பரலோகத்துக் காரோகணமாயினபின் முந்நூறு வருடங்களாக அஞ்ஞான அரசர்களால் வாக்குக்கெட்டாத கொடிய வாதை வேதனைகளையும், துன்ப துரிதங்களையும், இன்னல் இடுக்கண்களையும் அநுபவித்து வந்தது. திவ்ய இஸ்பிரீத்துசாந்துவினல் தேற்றரவடைந்த அப்போஸ்தலர்களும் அவர்களுடைய சீஷர்களும் எவ்வித துன்பத்துக்கும் அஞ்சாது, ஊரூராய்ச் சென்று சத்யவேதத்தைப் போதித்து, அநேக அற்புதங்களைச்செய்து, பெருந் தொகையான அஞ்ஞானிகளை மனந்திருப்பி வந்தார்கள். இவ்வாறு அப்போஸ்தலர்கள் செய்யும் அதிசயங்களையும் புதுமைகளையும், அவர்களுடைய போதனைகளால் ஜனங்கள் திரள் திரளாய் கிறிஸ்துவேதத்தைத் தழுவுவதையுங் கண்ட அஞ்ஞான அரசர்கள், அசூயையும் ஆங்காரமுங்கொண்டு, இவர்களை இப்படியே விட்டுவிட்டால் நம்முடைய கௌரவமும், செல்வாக்கும், மதிப்பும் அற்றுப்போக நமது இராசாங்கத்துக்கே ஊனநேரிடுமென வெண்ணி, கிறிஸ்துவர்கள் எல்லோரையும் சிதைத்து சின்னபின்னப்படுத்தி சர்வசங்காரஞ் செய்யத் தலைப்பட்டார்கள். கிறிஸ்துவர்கள் என்றபேரைக் கேட்ட உடனே அவர்களைப் பிடிப்பதும் அடிப்பதும், கட்டுவதும் திட்டுவதும், கை கால்களை வெட்டுவதும். சதையைச் சுடுவதும் பிடுங்குவதும், கீறுவதுங் கிழிப்பதும், தோலுரிப்பதும் தலைதறிப்பதுமாகிய நானாவித ஆக்கினைகளைச்செய்து வந்தார்கள். இவைகளுக் கெல்லாந் துணிந்து, மெய்வேதத்தைக் கைவிடாது, படாத ஆக்கினையெல்லாம் பட்டு, கடைசிவரைக்கும் தைரியமாய் நிலை நின்று உயிர்கொடுத்து வெற்றிபெற்ற வேத சாட்சிகள் எத்தனையோபேர்! மற்றவர்களோ வேதனைகளுக் கஞ்சி உள்ளூரிலும் அயலூரிலும் ஓடி ஒளிந்து மறைவான சீவியஞ் சீவிக்க வேண்டியதாயிற்று. அநேகர் மலைகளிலும் குகைகளிலும் சுரங்கங்களிலும் ஒண்டியிருந்தார்கள். உரோமையில்

"காற்றகூம்பு" என்னும் பிரேதச் சுரங்கங்களை கோவில்களாகவும் குருக்களின் வாச் ஸ்தலங்களாகவும் உபயோகிக்கப்பட்டு வந்தன. இவ்விடங்களிலேயே விசுவாசிகளமைதியாய் அநுதினம் திவ்ய பூசைகண்டு தேவத்திரவிய அனுமானங்களைப் பெற்று வந்தார்கள். இந்த ஒளிவிடங்களையுங் கண்டு பிடித்து, அங்குள்ள கிறிஸ்துவர்களை வாதித்து வந்தார்கள் வேத விரோதிகள். இப்படியாய் அநியாய அக்கிரமங்கள் மிகுதியாய் நடந்துவந்த காலத்தில், அதாவது கி. பி. 312ம் வருஷத்தில் சர்வேசுரனுடைய கிருபையால் கிறிஸ்துவர்களுக்கு நல்லகாலம் பிறந்தது. எப்படியெனில், அக்காலத்தில் உரோமையை யாண்டிருந்த கலேரியுஸ் சக்கரவர்த்தி மரணிக்கலானான். மரணிக்கவே மக்சென்சியூஸ் என்னும் அந்நியதேசத்து அதிபதியானவன் உரோமையைக் கைப்பற்றிக்கொண்டு, தானே உரோமைச்சக்கரவர்த்தியென்று பிரசித்தஞ் செய்து, உரோமை சக்கராதிபத்தியத்துக்கு உட்பட்ட மற்ற தேசங்களையும் அடக்கியாள முயன்றான். மேல்தேசங்களாகிய இங்கிலாந்து, பிரான்சு, ஸ்பானியா முதலிய தேசங்களை ஆண்டுவந்த கொன்ஸ்தாந்தின் இராயர் இதைக்கேள்வியுற்று ஷ மக்சென்சியூஸ் என்பவன்மேல் படையெடுத்து ரோமாபுரியை நோக்கிச் சென்றார். இப்படிச் செல்லுமளவில் ஓர்நாள் சர்வேசுரனுடைய சித்தத்தினால், பளபளென ஒளிவீசும் பிரகாசமான ஓர் சிலுவை ஆகாசத்தில் தோன்றுவதையும், அதன் நடுவில் "In Hoc Signo Vinces" என்னும் ("நீ இந்த அடையாளத்தைக் கொண்டே வெற்றி பெறுவாய்" என்றர்த்தங் கொள்ளும்) லத்தீன்வார்த்தைகள் எழுதப்பட்டிருந்ததையும் கொன்ஸ்தாந்தீன் இராயரும், அவருடைய சேனை வீரருங் கண்டார்கள். இதற்கடுத்த நாளிரவில் நமது திவ்விய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துநாதர் ஷ சிலுவையுடன் கொன்ஸ்தாந்தின் இராயருக்குத் தரிசனையாகி, இந்த சிலுவை யடையாளத்தையே உமது யுத்தத் துவஜமாகப் பாவிக்க வேண்டுமென்று அவருக்குக் கற்பித்தருளினார். அவரும் அந்தப்படியே ஓர் சிலுவைக் கொடியைச் செய்வித்து, பயணத்தைத்தொடர்ந்து நடத்தி, உரோமைக்கு மூன்று மைல் தூரத்திலுள்ள திபேர் நதி தீரத்தில் மக்சென்சியூஸின் சேனையோடு எதிர்த்து போர் புரிய ஆரம்பித்தார். எதிரியின் சேனை 1,88,000 வீரர் பலமுள்ளதா யிருந்தும் போதிலும், 40,000 வீரருடைய இவருடைய சேனையானது சிலுவைக் கொடியின் பலத்தை நம்பி அதி வீரத்துடன் போர் புரிய, எதிரியின் சேனை சின்னாபின்னப் பட்டுச் சிதைந்து சிதறி யோடிற்று. மக்சென்சியூசும் திபேர் நதியில் வீழ்ந்திறந்தான். கொன்ஸ்தாந்தின் இராயர் வெற்றிச் சிலுவைக் கோடியுடன் ஜெயபேரிகை முழங்க உரோமை நகர்ப் பிரவேசஞ் செய்தார். தாம் அஞ்ஞானியா யிருந்தாலும் சிலுவைக் கொடியின் பலத்தால் வெற்றி பெற்றதால், கிறிஸ்துநாதர் பேரிலும் அவரைப்பின் பற்றிய கிறிஸ்துவர்கள் பேரிலும் மெத்த ப்ரீதியும் அபிமானமுங் கொண்டவராய், முந்திய அரசர்களால் கிறிஸ்துவர்களுக்கு விரோதமாய் விதிக்கப்பட்டிருந்த சட்டங்களையெல்லாம் முழுமைக்கும் ரத்துசெய்துவிட்டு, இனி கிறிஸ்துவர்கள் தங்கள் இஷ்டப்படி கோவில்களைக் கட்டிக்கொள்ளலாமெனவும், தங்கள் வேத ஆசார சடங்குகளை தாராளமாய் நிறைவேற்றிக் கொள்ளலா மெனவும் அவர்களுக்கு சுயாதீன மளித்து, அந்தப்படியே இராஜ கட்டளையையும் பிறப்பித்தார். முந்திய அரசாட்சிகளில் அஞ்ஞான குருக்களுக்குக் கொடுக்கப்பட்டுவந்த சுதந்தரங்கள் சௌகரியங்கள் யாவையும் கிறிஸ்துவ குருப் பிரசாதிகளுக்குக் கொடுக்கும்படி திட்டஞ் செய்தார். அது தொடங்கி கிறிஸ்துவர்களுக் கிருந்த கஷ்ட துன்பங்க ளெல்லாந் தொலைந்து போக சத்தியவேதமானது உலக மெங்கும் பரவி பிரபல்லியமாயிற்று.

இந்த சந்தோஷகரமான சம்பவத்தின் ஞாபகார்த்தமாகவே நமது பரிசுத்த பிதாவானவர் இப்போது நமக்கு ஜூபிலிப் பரிபூரண பலனை யளித்திருக்கிறார். இந்த பரிபூரண பலன் மகா அருமையும் விசேஷமுமானது. ஆகவே, இந்த ஜூபிலியை கை நெகிழ விடவொண்ணாது. அநேகருக்கு இந்த ஜூபிலி கடைசி ஜூபிலியாக இருந்தாலு மிருக்கலாம். படாத பாடெல்லாம் பட்டு தமது திவ்விய இரத்தத்தைச் சிந்தி மனுக்குலத்தை மீட்டிரட்சித்த சர்வேசுரனுக்கு, ஒரு மனுஷன்கூட சேதமாய்ப் போவது சம்மதமில்லை. ஒவ்வொரு மனுஷனும் மனந் திரும்பி நல்வழியிற் சேர, தக்க சமயத்தை அவனவனுக்குங் கட்டளை யிடுகிறார். இப்போர்க்கொத்த சமயங்களை அசட்டை பண்ணாமல் சுறுசுறுப்பாயும் ஆவலோடும் கைக்கொண்டு அவைகளைத் தக்கபடி உபயோகித்துக் கொள்ளுபவனே சித்தி பெறுவான்.

இந்த ஜூபிலியின் முழுப்பலனை யடைவதற்கு மூன்று நிபந்தனைகளை அநுசரிக்க வேண்டும். அவையாவன: (1) தக்க ஆயத்தத்தோடு பாவசங்கீர்த்தனம்செய்து திவ்ய நற்கருணை உட்கொள்ளுதல், (2) குறிக்கப்பட்ட கோவில்களைச் சந்தித்து அர்ச். பாப்பானவருடையசுகிர்தகருத்துக்காக வேண்டிக்கொள்ளுதல், (3) சக்திக்குத் தக்கபடியாதோர் தருமஞ் செய்தல்.

1 வது **பாவசங்கீர்த்தனஞ் செய்து திவ்ய நற்கருணையுட்கொள்ளுதல்.** ஷ அருமையான ஜூபிலிப் பரிபூரணப் பலனையடைய மெய்யாகவே ஆசையுள்ளவர்கள் **நல்ல** பாவசங்கீர்த்தனஞ்செய்ய முயலவேண்டும். பயபக்தியுடனும், சர்வேசுரனுடன் ஸ்நேகமாக வேணுமென்ற உத்தமகருத்துடனும், மெய்யான மனஸ்தாபத்துடனும், வெட்கம் பயம் ஒளிவில்லாமல் உள்ளபடியேயும் பாவசங்கீர்த்தனஞ் செய்யவேண்டும். திவ்ய நற்கருணையை பக்திச் சுறுசுறுப்பின்றி வெறும் வாடிக்கை வேடிக்கையாக உட்கொள்ளாமல், உண்மையான பயபக்தியுடனும், ஆசையுடனும், தாழ்ச்சி வணக்கத்துடனும் உட்கொள்ளவேண்டும்.

2 வது **கோவில் சந்திப்பு.** அந்தந்த மேற்றிராசனத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் தங்கள் மேற்றிராணிமார்களால் குறிக்கப்பட்ட கோவில்களை பக்தியோடும், பரிபூரணப் பலனை யடைய வேண்டுமென்ற கருத்தோடும் ஆறுவிசை சந்தித்து, அர்ச். பாப்பானவருடைய கருத்துக்காக வேண்டிக்கொள்ளவேண்டும். அதாவது: பதித பிரிவினை மதங்கள் ஒழியவும், குருட்டாட்டத்தி லிருந்துகொண்டு திருச்சபையின்மகிமைக்குப் பங்கம் வருவிக்கத் தேடும் வேதவிரோதிகள் மனந்திரும்பி சத்திய திருச்சபையிற் சேரவும், சத்திய வேத இராஜாக்களுக்குள் சமாதானமும் ஒருமிப்புமுண்டாகவும், சகல கிறிஸ்துவர்களுக்குள் ஒற்றுமையு நேசமும் பெருகவும் வேண்டிக்கொள்ளுதலே.

3 வது **தருமம்.** அவரவர் சக்திக்குத் தக்கபடி தருமங் கொடுக்கவேண்டும். அதாவது: தங்கள் தங்கள் மனசாட்சி சொல்லுகிறபடி தங்கள் வரும்படிக்கும், ஸ்திதிக்கும், நிருவாகத்துக்கு ஏற்றவிதமாய் ஏழைகளுக்குத் தருமஞ் செய்தல்; அல்லது கோவில், மடம், பள்ளிக்கூடங்கள் கட்டுவது, அநாதபிள்ளைகள் சாலை, வியாதியஸ்தர் சாலை நடத்துவது முதலிய பொது நன்மைக்குரிய தருமஸ்தாபனங்களுக்கு உதவுதல்.

இப்படியாய் இந்த நிபந்தனைகள் யாவையும் நமது சந்தாதாரர்கள் அனைவோரும் நுணுநுணுக்கமாயும் சுத்த கருத்துடனேயும் அநுசரித்து, மகா உந்நத ஜூபிலிப் பரி பூரணபலனை யடையப் பிரயாசைப்படுவார்களெனக்கோருகிறோம். இந்த நல்ல சமயத்தை கை நெகிழ விடவொண்ணாது. இதைப்போல் இன்னொரு சமயம் நம்மொருவருக்கும் இனிக் கிடைக்குமோ கிடைக்காதோ அறியோம். ஆகவே, கடவுளினது கரைகாணாக் கருணையால் கிடைத்த இந்த நல்ல தருணத்தை வீணாக்கிக்கொள்ளலாகாது. இந்த பரிபூரணபலனை, அர்ச். கன்னி மரியாயின் அமலோற்பவ திருநாளாகிய வருகிற டிசம்பர்மீ 8உ வரையில் அடையலாமென்றாலும் "ஆறின கஞ்சி பழங் கஞ்சி" என்பதுபோல, ஒவ்வொருவரும் சாக்குப் போக்குச் சொல்லாமல் கூடிய சீக்கிரத்தில் அடையப் பிரயாசைப்படவேண்டும். நம்முடைய சந்தாதாரர்கள் தாங்கள் ஒவ்வொருவரும் இப்படிச் செய்வதுமன்றி, தங்கள் வீட்டிலுள்ளவர்களும் தங்கள் அதிகாரத்துக்குட்பட்டவர்களும் உட்படாதவர்களுமாகிய தங்கள் பந்து மித்திரர்களும் இந்த ஞான நன்மையை அடையும்படி அவரவர்களையும் ஏவிக்கொள்வார்களாக. கடைசியாய், நமது பரிசுத்த பிதா கோருகிறபடி, இந்த ஜூபிலியினால் உலகமெங்கும் கிறிஸ்துவர்கள் ஆத்தும லாபமடைந்து என்றுமழியா ஆனந்த மோட்சபாக்கியத்துக்குப் பங்காளிகளாகக் கடவார்களாக!

---

## DRINKING.
## மதுபானஞ் செய்தல்.

---

அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு. மதுமிஞ்சினால் மதியீனம். ஆகவே அதனின் றகல்வது நன்று. அஃதெவ்வாறு? "மருந்துக்கேனும் மதுபானஞ் செய்வதடாது. முற்றுமதை

யகற்றித் தள்ள வேண்டும். ஒரு சொட்டாகினும் நாவில் தொட்டு வைத்தால் குடி கெட்டுப் போகும்" யென வற்புறுத்தி யோதுவர் ஒரு சாரார். "அளவுக்கு மிஞ்சினாற்றானே விஷம்; கரை கடந்தால் தான் கஷ்டம்; எல்லைக்கப்பால் ஏறினால் ஏதோ தோஷமுண்டாகும். அவசியமான அளவுக்கு அருந்தினால் ஆபத்தில்லை. ஆதலால் மதுபானத்தை அடியோடு விலக்க ஆக்ஞாபிப்பது சரியல்ல. கடவுள் படைத்த பொருளைக் கழித்து விடுவது நன்றன்று. மதுபானம் மனங் குளிரச் செய்கிறதென வேத புஸ்தகத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. அர்ச். சின்னப்பர் "உங்கள் சரீர சுகத்திற்காக மதுபானம் (இரசம்) அருந்தலாம்" என உரைக்கிறார். நமது இரட்சகராகிய இயேசு பெருமானே கடைசி இராப்போஜனத்தில் இரசம் பரிமாறினார். அன்றியும் கானாவூர்க் கலியாண வீட்டில் இரசங் குறைவாய்ப் போனபோது தண்ணீரை யிரசமாக்கி விருந்தினருக்குப் பரிமாறச் சொல்லவில்லையா? இது இப்படியிருக்க மதுவைப் பழித்துப் பேசுவது மதியீனமன்றோ?" என மொழிவார் மற்றொரு சாரார். எவர் சொல்வதுண்மை? இருவர் தஞ்சொல்லையு மெழுதரங் கேட்டே இருவருக்கும் பொருந்த உரைக்கவேண்டும். ஆதலால் இருதாரத்தார் வாக்குமூலத்தையு மாராய்ந்து தெளிதல்வேண்டும். பின்னோர் சொல்வதும் முன்னோர் கூறுவதுமுண்மை. ஏனெனில், மதுவானது மனிதர்களுக்குவரும் வியாதிகளுக்கு மருந்தாகவும், சுகத்தையுங் கெடுத்து அகத்தையும் நீக்கும் பாஷாணமாகவு மிருக்கலாம். மட்டாய்ச் சாப்பிடுவது மதி. அதைக் கடந்தால் அதோகதி. ஆனால் எத்தனை பேர் மட்டை யநுசரித்து நடுநிலையிலிருப்பார்? மனிதசுபாவத்தை நன்குணர்ந்தோர் மதுபானத்தை முற்றும் விட்டு நீங்குவதே நல்ல நெறி யெனச் சாற்றுவர். ஏனெனில், மனிதன் பலவீனன். கண்டதே காட்சி கொண்டதே கோலமென வெண்ணி மயக்கங்கொள்ளுமியல்பினன். உலகமாயையில் உழன்று கிடக்கிறவன். ஆசாபாச வலையிற் சிக்குண்டு அலைக்கழிக்கப்படுகிறவன். செப்பிலுள்ள பொன்னாபரணத்தைக் கீழே கொட்டிவிட்டு செப்பைப் பாதுகாக்கும்பேதை. குதிரையின்மேல் தான் ஏறிச் செல்லாது குதிரை தன்மேல் ஏறிச்செல்ல சம்மதிக்கும் மூடாத்மா. ஆதலால், அவன் ஆழமறிந்து காலையிடவேண்டும். இதையறிந்த பின் பொதுவாக எல்லோரும் மதுபானத்தை முற்றுமே விட்டு விலகுதலே சற்சாதனம். விசேஷமாய் மனதத்துவங் குறைந்து மதக்கட்டைகள் சிதைந்து ஆசாபாசத்திற் கிரையாகி வருகிறவன் ஒருபோது மதுபானத்தைத் தொடலாகாது. அதன் முகத்திலும் விழிக்கக்கூடாது. சுழியாவரு புனலிலிழியா தொழிவது நற்புத்தி. இக்கொடிய குடியால் உலகத்தில் நடக்கும் விகாரவிகற்பங்களை உற்று நோக்கின் இவ்வுண்மை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் துலங்கும். உலகத்தில் ஒருவனுக்குண்டாகுஞ் சொல்லொண்ணாச் சோதனைகளை நினைக்குங்கால் மதுவின் சமீபத்திலு மிருக்கப்படாது. அரவத்தைக் கண்டோடுவது போல் அதைக் கண்டஞ்சி அகல வேண்டு மென்றால் விபரீதமாகாது.

குடியினிமித்தம் ஒருவனுக்கு வருஞ் சோதனைகள் பல. அன்றாடகம் கூலிவேலை செய்கிறவன் வேலையொழிந்த பின் களைதீரக் குடிக்கக் கள்ளுக்கடைக் கேகுவான். ஆலைகளில் கடுவேலை செய்கிறவன் உடலில் உஷ்ணமாகி விட்டதென வெண்ணி குடலைக் குளிராக்கச் சாராயத் தண்ணீரைப் பூராய் வார்ப்பான். அதிகாலையி லெழும்பி கப்பற் வேலைக்கேகும் கூலிக்காரர்களும், கடல்மீது மீன் பிடிக்கச் செல்லுஞ் செம்படவரும் கரைக்குத் திரும்பினால் பசியை மறந்து, பெண்டு பிள்ளைகளை மறந்து, குடிருசியை நாடி ஓடுவார் மதுக்கடையைத் தேடி ஒருவரிருவரைக் கூட்டிக்கொண்டு. இவ்வாறே பலபேருங் களை தீர்க்கவென சாக்குப் போக்குகளை வாய் கூசாது சொல்லி, கிடைத்த பணத்தை மதுபானத்திற் கிறைக்கிறார்கள். இப்படியாய் இவர்கள் களையின்கீழ் பசாசு வலை வைத்திருக்கிறதை யறியாது, சோதனைக் கிணங்குகிறார்கள், வலையி லகப்படுகிறார்கள். பொருளுங் காசு மொருங்கேயமைந்த ஐஸ்வரியவான்களுக்கு வேறுவித சோதனைகள் வரும். வியாதிகளுக்குக் கைகண்டமருந்து விஸ்கி. உண்டசாப்பாடு ஜீரணமாக பிராந்தி உசிதம். வாதத்திற் கவுஷதம் ஜின். உஷ்ணம்போக்க பீர். இரத்தம் சுத்தி செய்ய ஒயின் எனப் பிதற்றுவார், பாவிப்பார், படுகுழியில் விழுவார்.

திருநாள் பெருநாள் வந்தால் எல்லோருக்குமானந்தம். மதுபானிகளுக்கோ பரமானந்தம்! ஏனென்றால் பெருநாளை வெறுநாளாக்குகிறார்கள். கிறிஸ்மஸ் பண்டிகையில், "பாலன் பிறந்தார், பிராந்தி புட்டியைத் திறந்தார்; கர்த்தர் பிறந்தார் கள்ளுகடையைத் திறந்தார்" என மதிகெட்டுப் பிதற்றி மனம்போனமட்டும் குடித்து,



வெறிப்பார்கள். கோவிலில் திருச்சடங்கு, குடிக்கடையில் கும்மாளம். தட்டிக்கேட்க ஆளில்லாதபோனால் தம்பி ஜண்டப்ரஜண்டன். அவன் பாடு கொண்டாட்டத்தின்மேல் திண்டாட்டம். குடிகாரர் பத்துபேர் கூடி சூதாடிக்கொண்டு ஓயாமல் ஒன்றின்மே லொன்று போட்டுக் கொண்டேயிருப்பார்கள். கெலித்தால், சந்தோஷத்தைக் காட்ட ஒரு கிளாஸ்; தோற்றால், துக்கத்தை யகற்ற ஒரு கிளாஸ். கிளாஸ் மிஞ்சினால் குதர்க்க மிஞ்சும்; குதர்க்கம் மிஞ்ச குத்துசண்டை மிகும். மிதமான சந்தோஷத்தோடும் விமரிசையோடும் பக்தியோடும் செலவழிக்கவேண்டிய திருநாளை இப்படியாய் மதுமயக்கத்திலும் சண்டை சச்சரவிலும் போக்கி, தனக்கு அவமானத்தையும் பிறருக்குத் துர்மாதிரிகையையும் உண்டுபண்ணுகிற மதுபானச் சண்டாள துரோகியை மானிடர் வெறுக்க வேண்டியது அவசரமல்லவா?

திருநாள் கொண்டாட்டம் இவ்வாறிருக்க, ஒருவ ரிறந்துபோனால் துக்க வீட்டிற்கு வருகிறவர்கள் பலர் வந்தழுது கதறுகிறார்கள். இழவு வீட்டில் பொழியும் கண்ணீர் மழையில் எவ்வளவு, மதுபான மப்புமந்தாரத்தினின்று வந்ததெனச் சொல்லுபவர் யார்! சடலத்தை சமாதியில் க்ஷேமித்துத் திரும்புகிறார்கள். சாராயப் புட்டித் தாராளமாய்த் திறக்கப்படுகிறது. கொண்டாட்டமென்று சொல்லவும் வேண்டுமோ?

மணவீடு பிணவீட்டுக் கோலத்தை விட பதின்மடங்கு கேவலம். கலியாணக் காட்சி யெல்லாம் குடியிற்செல்லும். சந்தோஷமெல்லாஞ் சாராயத்தில்; விருந்தெல்லாம் விஸ்கி பிராந்தியோடு. மணவீட்டு மகிழ்ச்சி கள்ளுக்கடை யிகழ்ச்சி யாகிப்போம். ஆனந்தக் கொண்டாட்டம் அடிதடியாட்டமாய் முடியும். ஒருவரோடொருவர் அந்நியோந்நியமா யிருந்தவர்கள் பண்டையக்காலத்து வண்டல்களை யெல்லாம் வெளியே யெடுத்துப்போட்டு வலிய சண்டையிட்டு மண்டையை யுடைத்துக் கொள்வார்கள்.

குடியால் வருங் கேடு இம்மட்டோடு நின்று விட்டதோ? இல்லை. அரிய யேசுவின் ஆப்த தாசன் அர்ச். சின்னப்பர்: "அதோ சில ரிருக்கிறார்கள். அவர்களைப்பற்றி யுங்களுக்குச் சொல்லி யிருக்கிறோம். பின்னுங் கண்ணில் நீர் ததும்ப உரைக்கிறோம். அவர்கள் யேசுநாதரது திருச் சிலுவையின் துரோகிகள். ஏனெனில் அவர்களுக்குத் தெய்வம் அவர்களது வயிறே; அவர்களது மகிமை அவர்களது ஈனச்செயலே; அவர்கள் கதி, பட்டுப் பாழாய்ப்போம் அதோ கதிதான்" என்றுசொன்ன மகா பயங்கரமான வார்த்தைகள் மதுபானிகளுக்கே தகும்.

திருச்சிலுவையின் துரோகிக ளல்லவா அவர்கள்? இக் கொடிய கழுமரத்தில் அறையுண்டு கடின வாதைப் பட்டார் யேசுநாதர். தம் முதிரத்தை யெல்லா மிழந்து, உஷ்ணமிகுந்து, நா வறண்டு கண் மருண் டிருக்கத் "தாகமா யிருக்கிறேன்" என அபயச்சத்த மிடுகிறார். மதுபானியோ சற்று மதியாது குடி, குடியெனக் கூவி, நன்றாய்க் குடித்துக் கோலாகோலங்களைச் செய்து ஆத்துமத்தையு மிழக்கிறான். ஐயோ பரிதாபம்!

அவர்களுக்குத் தெய்வம் அவர்களது வயிறே! என்ன விபரீதம்! அக்கியானிகள் கற் சிலையெனப் பல விக்கிரகங்களைக் கும்பிட்டுப் பசாசைத் தொழுகிறார்கள். ஆதிகாலத்தில் அவலக்ஷண சிலையாகிய மோலக் (Molock.) என்னும் விக்கிரகத்திற்குத் தக்க பூசை செய்துவந்தார்கள். அந்த விக்கிரகம் வெண்கலத்தால் வார்க்கப்பட்டது. அதற்கு பரந்தகன்ற வாயும், பருத்து நீண்ட கையு முண்டு. அதனுடல் அக்கினிச் சூளை. இப் பொய்த் தெய்வத்திற்கு மதி கெட்ட பேதையர்கள் பலிகள் பல சாற்றுவார்கள். ஆனந்தமாய்ப் பெற்று, அன்பாய் வளர்த்த அருமந்த பிள்ளைகளை முதலாய்ப் பலியிடுவார்கள். இத் துஷ்டப் பரிபாலனக் கையில் சிசுவை வைப்பார்கள். ஏதோ சூட்சு யந்திரத்தால் கையுயர்ந்து பிள்ளையை வாயினுள் கொண்டுபோடும். போட்டால் அக்கினிச் சூளையில் அகஸ்மாத்தாய்விழும். கொஞ்ச நேரத்திற்குள் பஸ்பமாய் விடும். அவதிப்படுங் குழந்தை அபயமிட்டலறினால், சத்தத்தை யடக்க கொட்டு முழக்கம் லொட்டு லொட் டென்றுகொண் டிருக்கும். இந்தக் காலத்தில் விக்கிரக ஆராதனையை நம்பினோராயினுஞ் சரி, நம்பாதாராயினுஞ் சரி எல்லாருக்கு மோர் தெய்வ முண்டு. அதுதான் மொலக் என்னும் வயிறு. வண்ணான் தாளிபோன்ற அதன் வயிற்றை நிரப்புவது மதுபானம். மிக விமரிசையாய் அது வீற்றிருக்கும் பீடத்தில் மதியிழந்த மானிடர், தம் பணங் காசு, சுக செல்வம், மான மரியாதை, பெண்டு பிள்ளைகள் கடைசியாகத் தம்மாத்தும ஆதாயத்தையுமே தானஞ் செய்கிறார்கள், பலியிடுகிறார்கள். தண்

ணீர் பீப்பாய்போன்ற வயிற்றை நிரப்ப இவ்வளவு கோலஞ் செய்கிறது. ஆ! மது வருந்தும் மனிதனே கேள்: நீ யன்போடு மணந்த அரிய மனைவியாகிய ஆருயிர் துணையாளியி னழகிய வதனம் பசியால் வருந்திக் கவலையால் கறுத்து உருமாறிப்போயிற்றே. கையில் எடுத்து மார்போடணைத்துக் கொஞ்சி முத்தமிட்ட அருமந்த பிள்ளைகள் கந்தைத் துணிகளைக் கட்டிக்கொண்டு, குடிக்கக் கஞ்சியின்றி பஞ்சாய்ப் பறக்கிறார்களே. இதுவெல்லாம் என்? ஏனென்றால் வயிற்றுத்தெய்வத்தை வளர்க்கப் பணத்தையிறைத்தாய். குடியாகிய மோலக் என்பவனைக் கும்பிட, வருங் காசை யெல்லாங் கொட்டிவிட்டு வெறுங் கையனாய் வீடு வந்தாய். தன் கையிற் பொருளை பிறர்கையிற் கொடுக்கும் பேதையும் பதரேயன்றோ?

அவர்களது மகிமை அவர்களது ஈனச் செயலே! மனிதனது புத்தி யிப்படித் தடுமாறிப் போவது முண்டோ! "சாராயத்தை யூற்றி பூராயத்தைக்கேள்" என்றாற்போல் மதுவுண்டவன் மதிமயங்கி, தான் செய்த காரியம் நல்லதோ, பொல்லாததோ எல்லாவற்றையும் உள்ளபடி சொல்லிவிடுவான். மற்றோர் சமயத்தில் விளம்ப வெட்கப்படுங் காரியங்களை மிகவும் விரித்து சவிஸ்தாரமாய்க் காட்டுவான். அவனாலேயே யவன் அவமதிக்கப்படுகிறானென்பதை யறியான். "குடித்தவர் பித்தம் பிடித்தவர்கள் போல பேசாததும் பேசிவிடுவார்."

அவர்கள் கதியதோகதி! பட்டுப் பாழாய்ப் போவான் குடியன். இகத்திலு பரத்திலுமப்படியே. ஆத்துமமுஞ் சரீரமு மழிந்துபோம். குடியினால் புத்தி மந்தமாகி ஒன்றுஞ் செய்ய இயலாதவராய்ப் பயித்தியக்கார ஆஸ்பத்திரியில் கைவிலங்கு போடப்பட்டு கைதியா யிருக்கிறவர்கள் எத்தனையோபேர்! அடாது செய்தவர் படாது படுவார். அப்படி இவ்வுலகத்தில் படாதது பட்டமாத்திரத்தில் புத்திவந்தாலொழிய பெரும்பாலும் மறு லோகத்தில் துன்பம் அனுபவிப்பான். இதுவே கொடிய ஆக்கினை. "அரசன் அன்று கேட்பான், தெய்வம் நின்று கேட்கு" மல்லவா? பொறுமையாய்க் காத்திருந்தவர் கேட்கப்போகிறார். அந்த நாள் வரும்; அது பெரியநாள்; மகா பயங்கரமான நாள். அவன் ஆண்டவரண்டை பயந்து நடுங்கி ஒடுங்கி நிற்கிறான். "உன்னை எமது சாயலாக உருவாக்கி உலகத்தில் வைத்து ஆத்தும அலுவலைப் பார்க்கச் சொன்னோமே; உன்னுடைய கணக்கைக் காட்டு" என்பார். அவனப்போது இஞ்சிதின்ற குரங்குபோல் ஏங்கி ஏமார்ந்து வெறுங் கையைக் காட்டுவான். உடனே நீதி யிடி யவன்மேல் விழும். "சபிக்கப்பட்டவனே என்னைவிட்டகன்றுபோ"வென்னும் வார்த்தைகள் சண்டமாருதம்போல் அவனைத்தாக்கும். அவனும் நரகக்குழியில் தள்ளுண்டு உருண்டோடுவான். ஏனெனில் அவன் சர்வவல்ல சர்வேஸ்பரனைச் சேவிக்காது, வயிற்றுத்தெய்வத்தைத் தொழுதான். குடியெனுங் கடவுளைக் கும்பிட்டான். அவைகளுக் காதாரமா யிருந்த நரகக்கூளியிடஞ் சேர்ந்தான், "தான் தோண்டிய குழியில் தானே விழுந்தான்." ஐயோ பரிதாபம்! இதை வாசிப்போரே! ஆண்டவருடைய நாமத்தால் எச்சரிக்கையா யிருப்பீர்களாக!

பிரிய சகோதரனே! அளவுக்குமேல் அருந்தமாட்டேனெனச் சொல்லுகிறாய். அப்படியே பெருங்குடியர்களெல்லோருஞ் சொன்னார்கள். எப்படி முடிந்தது அவர்களுடைய சொல்? அதைக் கவனி. பாவச்சோதனைகள் பல வரும். கொஞ்சங் கொஞ்சமாய் வரை கடந்து போவாய். உன்னை யறியாமலே யளவுக்கதிகமாய்ச் சாப்பிடுவாய். அதின் மீது அதிக ஆசை கொள்வாய்; விட்டகலப் பிரியப்படமாட்டாய். அதுவும் உன்னைக் கையி லகப்பட்ட கள்ளனைப் போல் கட்டிவைத்துக் கொள்ளும்; உன்னால் என்ன செய்யக் கூடும்?

அரிய சகோதரனே! உன் நெஞ்சில் கையை வைத்துச் சோதித்துப் பார். பொய் சொல்லி உன்னைத்தானே நீ யேய்த்துக் கொள்ளாதே! குடித்து வெறி கொண்டு குரங்கு சேஷ்டை பண்ணத் துவக்குகிறாயா? குடியில் உன் காசை விருதாவா யிறைக்கிறாயா? அப்படியானால், வெள்ளம் வருமுன் அணையைக் கட்டு. உடனே குடியை விட்டகலுவாயாக! அதுவே யுன் சத்துரு. உன்னுயிரைக் கொல்லும் பாஷாணம். உன் னேச் குடும்பத்தைப் பாழாக்கும் கோடரிக்காம்பு. இவ்வித ஆபத்தினின்று விலகவேண்டுமேயானால் மதுபானத்தை முற்றும் விட்டுவிடு. அதுவே நற்சாதனம். அன்றேல் அரவத்தோடுறவாடுகிறாய். அது உதவாது: "குடங்கருட் பாம்போடு டனுறைந்தற்று." குடியின் கெடுதிகளை யெல்லாஞ் சொல்லப் புகுந்தால் எண்ணத் தொலையாது, ஏடிடங்கொள்ளாது. சொன்ன சொல்லை நீர் கேட்டு சுகம் பெறவே



வழி தேடும்! இல்லை என்றால் ஏமாந்து இழக்கடைவீர்; இது நிசமே!!

M. S. M.

---

# CHRISTIAN DOCTRINE.

# ஞானோபதேசம்.

## 19-ம் பாடம்.

### விசுவாச மந்திரத்தின் 12-ம் பிரிவு.

(முன்தொடர்ச்சி.)

---

**2. ஓர் பெரு முட்டாள்.**—அநேக வருஷங்களுக்கு முன் ஒரு அரசன் தன் அரண்மனையில் தமாஷ்காரனான ஒரு கோமாளியை வைத்திருந்தான். இவன் அகடவிகடனாயினும் மகா புத்திசாதுரிய முடையவன். ஒருநா ளவ்வரசன் ஒரு கோலையவன் கையில் கொடுத்து, உன்னிலும் பெரு முட்டாளிங்கு வந்தா லதை யவனுக்குக் கொடுக்கவேண்டும். அப்பேர்ப்பட்டவன் வருமட்டு மிது உன் கையி லிருக்கட்டு மென்றான். சில காலத்துக்குப்பின் அரசன் வியாதியாய் விழுந்தான். கோமாளியும் வழக்கம்போல் அரசனைச் சந்திக்கப் போனான். அப்போது அரசனுக்கும் கோமாளிக்கும் பின் வருமாறு சம்பாஷணை நடந்தது:

அரசன்:—நான் இத்தேசத்தை விட்டுப் போகக் காலம் நெருங்கிவிட்டது.

கோமாளி:—எங்கே போகிறீர்?

அரச.-மறுலோகத்துக்குப் போகிறேன்.

கோ.-ஒருமாதத்துக்குள் திரும்புவீரா?

அரச.-திரும்பமாட்டேன்.

கோ.-இரண்டு மாசம் பிடிக்குமா திரும்பிவர?

அரச.-இல்லை.

கோ.-ஒரு வருஷத்துக்குள் வருவீரா?

அரச.-இல்லை யில்லை; ஒருபோதுந் திரும்பவேமாட்டேன்.

கோ.-அப்படியானால்நீர் போகிற தேசத்தில் சுகமே வாழும்படிக்கான ஏற்பாடுகளை முன்னதாக செய்துகொண்டீரா?

அரச.-ஐயோ! நா னதைப்பற்றி நினைக்கவே இல்லை; அதற்காக மெத்தவும் விசனப்படுகிறேன்.

கோ.-என்ன அதிசயமா யிருக்கிறதே! எப்போதும் சாஸ்வதமாய் வாழப்போகுந் தேசத்துக்குப் பிரயாணப்பட்டிருக்கும் நீர் யாதொரு முஸ்திப்புமில்லாதிருப்பது பெரும் பைத்தியமே. புத்தியில்லாத மூடனே யவ்வாறு செய்யவேண்டும். ஆகையால், அரசனே வாங்கிக்கொள்ளும் நீர் கொடுத்த கோலை. நான் முட்டாள்தான், ஆனால் நீரென்னிலும் பெருமுட்டாளா யிருக்கிறீர்.

என்று சொல்லி முன் அரசன் தனக்கு கொடுத்த கோலை அரசனுக்கே கொடுத்து விட்டான். (Howe)

**3. மோக்ஷத்தைப்பற்றிப் பேசின பிரசங்கி.**—பிரான்சு தேசத்தில் வேதத்துக்காக மகா ஊக்கத்துடன் உழைத்து சிறந்த பிரசங்கியும், பேர்போன புண்யவானுமான புர்சூல் என்னுங் குருவானவ ரிருந்தார். தாம் பாவசங்கீர்த்தனத் தொட்டியிலாவது பிரசங்கத்தொட்டியிலாவது சாவது பெரும் பாக்கியமென்று பலமுறை சொல்லிவருவார். இவர் கர்த்தர் உயிர்த்த திருவிழாவுக்குப் பின் வருந் திங்கட்கிழமை அதிகாலையில் திவ்விய பூசை செய்து முடித்தபின், பாவசங்கீர்த்தன தொட்டிக்குள் சென்று சாயந்திரம் மூன்று மணி மட்டும் பாவசங்கீர்த்தனங் கொடுத்தார். மூன்று மணிக்குப் பிரசங்கத் தொட்டியிலேறி தபசுகாலத்தில் தொடர்ச்சியாய் செய்துவந்த பிரசங்கத்தின் முடிவாக அன்று மோக்ஷத்தைப்பற்றி பிரசங்கித்தார். மோக்ஷத்தின் சிறப் பலங்காரத்தையுஞ் சந்தோஷ பாக்கியத்தையும் பற்றி வர்ணித்து, அவ்வளவு சிறப்பான மோக்ஷத்தில் வீற்றிருக்கும் மகத்துவம்பொருந்திய தேவனை தரிசிக்க இப் பூமியிலுள்ள நம்மால் கூடுமா? இம்மையில் அவரைச் சொற்ப திஷ்டியால் தரிசிக்கக்கூடுமா? கூடாது. ஆனால் நாம் மோக்ஷத்தி லவரை தரிசிக்கக்கூடும், என்று சொல்லிக்கொண்டே உயிர் விட்டார். அப்போது அவ ருயிரில்லாத பிரேதமாய் நின்றபோதிலும் அவருடைய நேத்திரங்கள் வானத்தையே பார்த்தபிரகாரமிருந்தன. அவர் மரண மடைந்ததைப்பற்றிக் கேள்விப்பட்ட ஜனங்கள் அழுத அழுகையுஞ் சிந்தின கண்ணீருங் கொஞ்சமல்ல. இவர் மெய்யாகவே அர்ச்சியசிஷ்டவர் என்றார்கள். சிலர் மோக்ஷத்தைப் பற்றிப் பேசும்போதே அதில் பிரவேசித்தாரென்றார்கள். வேறு சிலர் எல்லோருக்குமிப்பேர்ப்பட்ட பாக்கியம் கிடைக்குமா? என்றார்கள். (Carron.)

**4. மோக்ஷமடைய நமக்குத் தானே நாம் பலவந்தஞ் செய்யவேண்டும்.**-ஒரு குருவானவர் தாம் செய்த பிரசங்கத்தினால் அநேக பாவிகளை மனந் திருப்பினார். அவர்களி லொரு பெரும் பாவி மனந் திரும்பினதுடன் உலகத்தைத் துறந்துவிட்டு கடின ஒழுங்குகளை யநுசரித்துவருஞ் சந்நியாச மடத்தில் சேர்ந்தான். ஷெ குருவானவர் பல வருஷங்களுக்குப் பின், முன் கூறப்பட்ட சந்நியாசமடமிருந்த ஊருக் கருகாமையிலுள்ள கிராமங்களில் வேலையை முடித்தபின் சந்நியாசஞ் செய்யப்போன வாலனைப் பார்க்கும்படி யம்மடத்துக்குப் போனார். சந்நியாசியாரைக் கண்டு பேசி சந்தோஷித்து இவ்விடத்தி லெப்படி யிருக்கிறீ ரென்று வினவினார். அதற்கு சந்நியாசியார்: சுவாமி நா னிவ்விடத்தில் படும் பாட்டைப் பற்றி என்ன சொல்வேன்? துன்பத்தின்மேல் துன்ப முண்டாகிறது. இவ்விடத்தில் மௌனத்தை யனுசரிப்பதும், அடிக்கடி ஜெபஞ் செய்து ஒரு சந்தி சுத்த போசன மனுசரிப்பதும், என்னால் சகிக்கக்கூடுமோ யில்லை. ஒரே வார்த்தையில் என் சிற்றறை ஒரு சிறையாகவும், என் பெரும்படியான வஸ்திரம் விலங்குபோலவுமிருக்கிறது. இதைக்கொண்டு நான் படுஞ் சங்கடத்தை நீங்களே யுத்தேசித்துக் கொள்ளுங்கள் என்றார். இவ் வார்த்தைகளைக் கேட்டு கலங்கி நிற்குங் குருவானவருடைய கரங்களை சந்நியாசியார் பிடித்துக்கொண்டு, சுவாமி நா னிவ்வாறு பேசுவதால் நான் துறவற அந்தஸ்தின்மட்டில் வெறுப்புற்றிருக்கிறே னென்று நினைக்கவேண்டாம். நா னுமக்குத் தெரியப்படுத்தியவைகள் யாவும் மனுஷ சுபாவத்துக்குச் சரிப்படாது வாஸ்தவமே. ஆனால் அவைகளை மனது பொருந்தி பொறுமையுடன் அனுபவியாவிட்டால் மோக்ஷ இராச்சியஞ் சேரக்கூடாது. என் பாவங்களை யெல்லாஞ் சர்வேசுரன் பொறுத்திருப்பாரென்று நம்பி, இச் சொற்ப துன்பங்களை நான் நல்ல மனதுடன் அனுபவிப்பதால் எனக்கு மோக்ஷங் கொடுப்பாரென்கிற நம்பிக்கையால் தூண்டப்பட்டவனாய் எனக்கே நான் பலவந்தஞ் செய்து வருகிறேன் என்றார்.

(Filassier.)

**5. அர்ச். தோமாஸ் மூர் சொன்ன மறுமொழி:**—முந்நூறு வருஷத்துக்கு முன் இங்கிலாண்டு தேசத்தில் எட்டாம் என்றி என்னும் அரசன் தன் பெண்சாதி யிருக்கும்போதே வே றொருத்தியைக் கல்யாணஞ் செய்ய ஆசிக்க, அதற்கு அர்ச். பாப்பானவர் உத்தரவு கொடாதபடியால், புரோடெஸ்டாண்டிஸ்ம் என்னும் புதுவேதத்தை யுண்டு பண்ணி, சத்திய வேதத்தை மறுதலித்துப் புது வேதத்தி லுட்படாதவர்களை குரூரமா யுபாதித்துக் கொன்றான். என்றி அரசனுடைய மந்திரியாகிய மூர் என்பவர் புது வேதத்தி லுட்படாதபடியா லவரைச் சிரசாக்கினை செய்யும்படி கொடுங்கோலன் கட்டளை யிட்டான். இதைப்பற்றிக் கேள்விப்பட்ட மந்திரியின் மனைவியாகிய லூயிசா என்பவள் சிறைக்குப் போய் அரசனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியும்படி தன் புருஷனாகிய மூர் என்பவரை கெஞ்சி மன்றாடினாள். அப்போது மந்திரி மனைவியைப் பார்த்து, "நான் விருத்தாப்பியன்; இன்னம் எத்தனை வருஷகாலஞ் சீவித்திருப்பேன்? சொல் பார்க்கலாம்" என்றார். ஏன்? இன்னும் இருபது வருஷ காலம் பிழைத்திருக்கக்கூடாதா வென்றாள். அதற்கு மந்திரி, "பைத்தியக்காரி, இந்த இருபது வருஷகாலம் வரைக்கும் இப்பூமியில் சீவித்து, சகல பாக்கியம் நிறைந்த மோக்ஷானந்தத்தை யிழந்து, சகல துன்பம் நிறைந்த நரகக் குழியி லுருண்டு நித்திய நெருப்பில் அவியாக் கடடையாய் வேகும்படி புத்தி சொல்ல வந்தாயா?" வென்று அவளைக் கடிந்துகொண்டார். (இவர் சரித்திரம்.)

**6. அர்ச். ஆதிரியான் மனந் திரும்பின காரணம்.**—ஆதிரியான் என்பவர் பூர்வகாலத்தில் உரோமைப் படையில் சேவித்து வந்தார். கிறிஸ்துவர்கள் தங்களுக்குச் சொந்தமான சகலத்தையும் விட்டு கொடுமையாய் உபாதிக்கப்பட்டு நிஷ்டூரமான மரணத்துக்குக் கையளிக்கப்பட்டும், அவர்கள் பயப்படாமல் தைரியத்துடன் சாவதை ஆதிரியான் கண்டு அதிசயித்து, கொலைக் களத்துக்குக் கூட்டிக்கொண்டு போகப்படும் வேத சாக்ஷிகளை பின் தொடர்ந்து, நீங்க ளிவ்வளவு வாதைகளை யநுபவித்து மரண மடைவதால் என்ன லாப முங்களுக் குண்டாகிறதென்று வினவக்கேட்ட வேதசாஷிகள், எங்களுக்கு மோக்ஷத்தி லுண்டாகுஞ் சம்பாவனையின் பெருமையை நாவா லுரைக்குந் தன்மையல்லை. ஒரு போதுஞ் சாகாமல் சகல சந்தோஷ பாக்கியங்களை யனுபவிப்போ மென்றார்கள். ஆதிரியானும் அதே நம்பிக்கையால் தூண்டப்பட்டவனாய், சத்தியவேதத்தைக் கைப்பற்றி வேதசாக்ஷி முடிபெற பாக்கியம் பெற்றார். (இவர் சரித்திரம்.)



## OUR WOMEN.

### நமது மாதர்.

(முன்தொடர்ச்சி)

அறியாமை என்னுந் திரைச்சீலையால் மூடப்பட்டதே நமது மாதர் தற்போது செய்யும் இல்லறம். இத்திரைச்சீலை எப்போது எடுபடுமோ அப்போது தான் சீர்த்திருத்த மார்க்கம் செவ்வைப்படும். அறியாமை என்னும் அந்தகாரத்தில் நமது மங்கையர் கிடந்துழலும் வரையில், நாம் செய்ய முயலும் ஆசார சீர்திருத்தம் யாவும் பயனற்றவையாகும். நமது பெண்பாலர்க்கு கல்வியை ஒழுங்காய்த் தக்கவிதமாய்க் கற்பிப்பதே; சீர்திருத்தத்திற்கு நாம் இப்போது செய்யக்கூடிய ஓர் முக்கிய காரியம். இதுவே வருங்காலத்தில் நம்மவர் செய்ய இருக்கும் சீர்திருத்தங்களுக்குத் தக்கஆதாரமாகும். விஷயம் நிறைந்த கல்வியை நமது சிறுமிகளுக்கு ஊட்டிப்பழக்க வேண்டும். இப்படிப் பழக்க, பெண்கள் தாமே படிக்க வேண்டுமென்கிற ஊக்கங்கொண்டவராய் விளங்கும் போது தான், நமது தாய் பூமியாகிய இந்தியாவுக்கு நல்ல காலம் பிறந்த தென்று நமது தேச சரிதையில் வரையலாம். இந்தியாவை நமது சென்ம தேசமென்று பெருமையாய் எடுத்துப்பேச வேண்டுமானால், இந்தியர் தேசாபிமானிகளென உலகமறிய வெளிப்பட இஷ்ட முண்டானால்; நாம் செய்யவேண்டிய முதற்காரியம் நமது மாதர் நிலைமையை உயர்த்துவதே என்று ஓர் வட நாட்டுநிபுணர் வரைந்திருக்கிறார்.

பால்மண மாறாத பாலிகைகளை, கன்றைக் கொண்டு நுகத்தடியிற் பிணைப்பதுபோல், தாலியென்னும் பாசத்தால் மணவாளருடன் சேர்த்துக்கட்டும் பாலிகாவிவாகம், கல்வி பெண்களுக்கு இன்றியமையாத தென்னும் கருத்துக்கு முற்றும்மாறானது. இதுவே நந்தேய மாதரைக் கல்வி கற்கவொட்டாமற் றடுக்கும் முக்கிய சாதானமாகின்றது. இது விஷயத்தில் நம்மவர், நமது வேதகுருக்கள் உதவியாலும், படித்தவர் பிரயாசையாலும் சீர்திருந்தி வருகிறார்களென்றாலும், கல்வியில் இன்னம் ஊக்கமுடையவர்களாய்த் தோன்ற வில்லை. நமதுமாதரை சீர்திருத்துவதற்கு வேண்டிய முக்கிய கருவிகள் சிறந்த மதக்கொள்கைகளும் கல்வியுமே. இந்துக்கள் முதலியோரைப் போலன்றி, உண்மையும் உயர்வும், சீரும் சிறப்பும் பொருந்திய வேதக் கொள்கைகள் ஆண்டவர் கிருபையால் நமக்குக் கிடைத்திருக்கின்றன. இதனால் நாம் மற்றவர்களை விட சுலபமாய் மேலுக்கு வரவேண்டியவர்கள் என்பது சொல்லாமலே போதரும். ஆனால் நாம் தற்போது அவர்க ளளவு சீர்திருத்த மின்றி யிருப்பதின் காரணம் நமது கல்விக்குறைவே யல்லவா? ஆகவே பெண்களுக்குக் கல்வி புகட்டுவிக்கும் விஷயத்தில் நமக்கு என்ன கஷ்டங்கள் நேர்ந்தாலும் அவைகளை பொருட் செய்யாது, அவர்களுக்குக் கல்வி பயிற்றுவித்து அவர்களை அறிஞராக்கி, அவர்களுடைய தற்கால நிர்ப்பாக்கிய நிலைமையினின்றும் அவர்களை மீட்பது நமது கடமையன்றோ? மாதர் ஈடேற்றத்திற்காய் இந்நாட்டில் பல சங்கங்கள் பலவிடங்களிலும் முயன்று வருந்தியுழைத்து வருகின்றன; ஆனால் இவர்கள் படும் பிரயாசைக்குத் தகுந்தபயன் கிடைக்கிறதாகத் தோன்றவில்லை. ஆயினும் கிடைக்கும் பயன் சிறிதெனக் காரியத்தைக் கை நெகிழவிடலாமா? காலத்தை இகழலாமா? "ஒரே ஒரு இந்துமாது பம்பாயில் நன்றாய்ப் படித்தவளாயிருப்பதாயினும், அவள் நிமித்தம் எவ்வளவு திரவியம் செலவிட்டிருந்தாலும் அது ஒரு பெரிதல்ல," என்று, ஆசாரசீர்திருத்தமே கண்ணுங் கருத்துமாய் உழைத்து பிரக்கியாதி பெற்ற ரானேட் (Ranade) என்னும் மகான் சொல்லியிருக்கிறார். ஆதலால் நம்மவரும் இப்பெரியவரைப் பின்பற்றி, பெண் கல்வி விஷயமாய்த் தக்க கவனம் செலுத்துவார்களாக.

கல்யாண மென்ப தின்னதென் றவர்களறியா முன்னரே, சிறுவயதிலேயே குழந்தைகளை கன்னிகாதானம்செய்து தொலைத்துவிடும் வழக்கம், அவர்கள் புத்தியைக் கெடுக்க ஓர் கெடுதியான காரணமாயிருக்க வேண்டும். அவிழ்க்க முடியாத முடிச்சியில் அவர்கள் ஒருதடவை சிக்கிக்கொண்ட பின், அறிமுக மில்லா அன்னியர் வழிக்கு அவர்கள் உடனே உடன்பட்டு அதன்படி நடக்கவேண்டியவர்களாகின்றனர். ஆடவருடைய சித்தத்துக் கடங்கி அதன்படி ஒழுகுவதே மாதர் வாழ்க்கையின் முடி பென்பதாக யாவராலும் அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது.

இதனால் நமது மங்கையர் பிற்காலத்தில் படுங் கஷ்டத்திற்குக் கணக்கு வழக்கில்லை. நமது பெண்கள் கல்யாண விஷயத்தில் கொண்டிருக்கும் அபிப்பிராயம் நகைப்புக் கிடனாகும். இவ்வுலகில் ஒரு பெண் அநுபவிக்கும் சந்தோஷங்கள் யாவற்றினும் மேலான சந்தோஷம் கல்யாணமே யென்று அதையே அனேகமாய் விரும்புகிறார்களொழிய, மனதிற்கு உவப்பை யளிக்குங் கல்வி முதலியவற்றைக் கனவிலும் நினையார்கள். இந்திய மாதர் அடிமைகளைப் போல் ஆடவர்க்கடி பணிந்திருப்பதன்றி சுயேச்சை யென்பது இன்னதென்றறியார் போலும். ஓர் பெண்பிள்ளை பிறந்தது முதல் இறக்கும் பரியந்தம் யாருக்கேனும் அடங்கியே இருந்து வருகிறாள். சிறுவயதில் தந்தையர் அல்லது பாதுகாப்போர், இளமையில் கணவர், முதுமையில் தம் பிள்ளைகள் ஆக இவர்களது அதிகாரத்துக் குட்பட்டிருந்து காலத்தைக் கடத்துகிறார்களே யொழிய பெண்களுக்கு சுவாதீனமென்பது கிடையாது. சுயேச்சையில்லாப் பெண்கள் சீர்திருத்தம் அடைவதெப்படி?

இதை விட்டு நமது விதவைகளின் நிலைமையைக் கவனிக்கப்புகின், இது மேற்கூறியதினும் கேவலமே. கணவனையிழந்த மனைவி தன் ஆபரணங்களைக் களைந் தெறிகிறாள். இல்லறத்தின் குறிப்பானவை யனைத்தும் அவளைவிட்டு நீங்குகின்றன. விதவைத்தத்துவம் பரிதாபம் இரக்கம் இவற்றிற் கிடனாகியிருப்பதற்குப் பதிலாய், அந்நிலைமைக் குட்பட்ட நிர்ப்பாக்ய பெண்ணின் தலைமேல் அசட்டை, நிந்தனை, குரூரம் முதலியவற்றையே கொண்டு சுமத்துகிறது. விதவையென்னும் பேரே நிந்தனைக் குறிப்பாம். ஓரிளமாது கைம்பெண்ணானால், தகப்பன் அல்லது கணவன் வைத்துப் போன திரவியம் அல்லது சொத்தில் அவளுக்கொருவித பாத்தியதையுமில்லாததுடன், அவளைச்சேர்ந்த குடும்பத்திற்கு அவள் ஓர் அடிமைபோலாகின்றாள். அநேக தடவைகளில் ஒருவிதவை, தன் குடும்பத்திற்கு ஒரு பெருஞ் சுமையாவதன்றி, தன்னுடைய பல குழந்தைகளையுங் கொண்டுவந்து விடுகிறாள். அவளுடைய தாய் தந்தையர் இருக்குமளவும் கஷ்டமில்லை யானாலும், அவர்களுக்குப்பின் அவள் கடைசி அடைக்கலமும் போய் விடுகின்றது. சாஸ்திரவிதிப்படி தன் புருஷனைச் சேர்ந்தவர்கள் அவள் உயிருள்ளளவும், அவளையும் பிள்ளைகளையும் காப்பாற்ற கடமைப்பட்டவர்கள் என்பது மெய்யே. ஆனால் அவள் உற்றார், உறவினர், அவளிடம் தக்கவேலை வாங்கியே, அவளுக்கு வேண்டிய சிற்சில உதவியைச்செய்யத் துணிவார்கள்! தங்கள் பணத்தை விரயம் பண்ண வந்த பயனற்ற வீண்பாரம் என்றும், தங்களுக்கு அவமானமும் துன்பமும் கொண்டுவரும் மூதேவி யென்றும் அவளைச் சதாகாலமும் நிந்தித்து, அவள் வாழ்நாளைத் துன்ப நாளாக்க அஞ்சுகிறதில்லை. அறியாப் பெண்பிள்ளை என்ன செய்வாள் பாவம்! துன்பத்தின் மேல் துன்பம் பெருக, துன்பம் நீங்கி இன்பம் எய்துவோம் என்கிற நம்பிக்கை எள்ளவும் இல்லாதவளாய், இன்னது செய்வ தென்று தோன்றாமல் வரவர தேக மெலிந்து வாடுகிறாள். தன்னுயிர் தனக்கே ஓர் பெருஞ் சுமையாய்த் தோன்ற இனி இவ்வுலகில் இருக்கவும் வேண்டுமா என்றெண்ணி விடுகிறாள். இத்தகைய நிலைமையில் நமக்குள் எத்தனையோ பேர் இருக்கின்றனர் என்பது இதைப் படிப்போரே அறிவர். கணவர் சாக, என்றுமே விதவைகளாயிருக்கும்படி மனைவிமார்களை விடுவது சகல விதத்திலும் மிக்கக் கெடுதியை விளைக்கும் என்பது திண்ணம். நமது தேயத்தில் விதவைகளின் தொகை மிகப் பெரிது. அநேக குடும்பங்களில் சுமங்கிலியரைவிட அமங்கிலிகள் அதிகம். விதவைகள் தொகை அதிகமாயுள்ள ஒரு தேயத்தில் இல்லற வின்பம் இல்லாமலிருப்பது ஓர் ஆச்சரியமல்ல. நமக்குள்ளிருக்கும் அநேக வழக்கங்கள் இக்காலத்துக் குரியவையல்ல என்று முன்னமேயே சொல்லி இருப்பது போல், விதவைகள் நடபடிக்கைக் கென்று முன்னோர் செய்து காட்டியுள்ள ஒழுங்குகள், தற்கால நாகரீகத்திற்கும் மனித இயல்பிற்கும் ஒத்தவை யல்ல. இளமையில் ஓர் மாது தன் கணவனை இழந்தவளானாலும், அவள் மறுபடி தன் வாழ்நாளுள்ளளவும், வேண்டுமென்றாலும் வேண்டாமென்றாலும் இல்லறமென்பதை முற்றுந் துறக்கவேண்டியவளாகிறாள். புனர்விவாகம் செய்துகொண்டால் சாதிக்குப் புறம்பாக்கப்படுகிறாள். தனக்கிஷ்டமிருந்தால் ஏன் அவள் மீண்டும் இல்லற வாழ்க்கையில் நுழையலாகாது? இப்படி நம் விதவைகளைப் பலவிதக் கட்டுப்பாட்டுக்குள் பலாத்காரமாய் வைத்திருப்பதால்தான், தற்கொலை, அவமானம், விபசாரம் முதலிய அநேக கெடுதிகள் நேர, சீரும் சிறப்புமிகுந்து, பெருங் கீர்த்தியுடன் ஓங்கிநின்ற குடும்பங்கள் அலங்கோலையாய்க் கலைந்து பல திக்குஞ் சிதறி, இருந்த விடந் தெரியாமல், இது



யாரிட்ட சாபமோ, தேவகோபமோ என்று பலரும் சொல்லும்படி அழிந்து அதோ கதியாய்ப் போனதைக் காணாதார் யார்? கேளாதார் யார்? இத்தகைய நிலைமையால் நம்மவர்க் குண்டாகுங் கெடுதிகள் கணக்கற்றவை யானமையின் விரிக்கிற் பெருகு மென்றே இம்மட்டே நிறுத்தப்படுகிறது.

வைதவ்வியம் அடைந்த நமது மாதர் புனர் விவாகத்தை நாடாவிடினும், அவர்கள் இப்போதிருப்பதை விட தம்க்கும் தந்தேயத்தார்க்கும் மிக்க பிரயோசன முள்ளவர்களாகும்படி செய்த லுசிதம். காதலர் உயிர்துறக்க மாதர் பிழைக்கும் வகையில்லாமல் அடிமைகளைப் போலுழைப்பதும், அதனால் உண்டாகிற கணக்கற்ற நிர்ப்பாக்கியங்களும் அடியோடே அழிவதற்கான வகை தேடவேண்டியது நமது கடமையல்லவா? அத்தகைய வழிகளில் முக்கியமானது, மாதர் உபயோகமுள்ள நல்ல வேலைகளில் தம்மனதைச் செலுத்துவதே. அவர்களது தற்போதிய நிலைமை நிர்ப்பாக்கியத்திற் குரியதென்றுணர்ந்தும், கண்டுங் காணாதவர் போலவும், கேட்டுங் கேளாதவர் போலவும் இருக்கின்றோம். நம் மனசாட்சி நம்மைக் குத்தி அவர்கள்நிலைமையை உயர்த்தும்படித் தூண்டவில்லையா? நமது முன்னோர் அவர்கள் விஷயமாய்த் தெரிந்து கொண்ட ஒழுங்குகள் அவர்களை வறுமை, அடிமைத்தனம் இவற்றினின்றும் மீட்டுக் காப்பாற்றத் தக்கவையல்ல. அவைகள் அக்காலத்து அறிவிற்கும், நாகரிகத்திற்கும், தேசப் போங்குக்கும் ஒத்தவாறு ஏற்படுத்தப்பட்டவைகள். அவைகள் இக்காலத்துக் கல்வி முதிர்ச்சிக்கும் நாகரிக மேம்பாட்டுக்கும், தேசாபி விருத்திக்கும் சற்றும் பொருந்தியவையல்ல வென்பது காரியா காரியங்களை ஊன்றி யோசிப்போர்க்கு புலப்படாமற் போகாது. ஆகவே "புதியன புகுதலும், பழையன கழிதலும் வழுவல கால்வகை யினானே" என்பதனால், காலத்துக்குத் தக்கவாறு, யுக்தமும் பிரயோசனமுமான காரியங்களை எதற்கு மஞ்சாது தைரியமாய் முன்னின்று முடித்தலே புத்தி. ஜனங்கள் புத்திசாதுர்யமும் மன அமைதியுமுள்ள விதவைகளிட மிருந்து அநேக நன்மைகளை யடையலாம்.* இளமையிற் கணவனை இழந்த மாது, தான் புனர்விவாகம் செய்வதால் தன் ஆத்துமத்தைத் பாவநெறியினின்று காப்பது மன்றி. தன் வாழ்நாளை சரியான விதமாய் தன் குடும்பத்திற்குந் தேசத்திற்கும் பயன் படும்படி செலவழிக்கலாம் என்றறிந்து, அத்தகைய வாழ்க்கையைத் தெரிந்து கொள்வாளாயின், அவளை நாம் தடுப்பது சரியல்ல. அதற்கு மாறாய், விவேகிகளான ஆன்றோர் இத்தகைய விஷயங்களைத் தம்மாலானமட்டும் ஆதரித்து, இடையூறுகளை விலக்க முயலவேண்டும். இந்த காரியத்தில் ஒரே அபிப்பிராயந்தான் உண்டென்பது திண்ணம்; இரண்டு கிடையாது. எப்படி யோசித்தாலும் இவ்வபிப்பிராயத்திற்கு மாறாய் ஒன்றும் சொல்ல முடியாது.

மேலும் சிலர் புனர்விவாகத்தின் மேல் இச்சையின்றி, தம் வாழ்நாளை வேறு காரியங்களில் செலவழிக்குங் கருத்துள்ளவர்களாயிருப்பின், அதற்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்து, தமக்கும் பிறர்க்கும் அம்மாதர் பல விதத்திலும் பயன் படும்படிச் செய்வதும் நம் கடமையே. இது விஷயத்தில் நம்மவர்க்குள் ஏற்பட்டிருக்கும் விதவைகள் கன்னியர் மடங்கள் அளவற்ற பயனை யளிக்கும் ஆற்றலுடையன. அங்கே கல்விக்குக் கல்வி கற்று, மற்றவர்களுக் குதவியாவதுடன், தமது உயர்ந்த ஆபரணமாகிற பதிவிரதா தர்மத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும், வீண் சோதனைகளுக் கிடங் கொடாதிருக்கவும் முடியும். இதனால் இத்தகைய மடங்களை நாமெல்லோரும் ஆதரித்து அவற்றால் உண்டாகும் நன்மைகளை எங்கணும் பரவும்படிச் செய்யவேண்டும்.

கல்வி பரவப்பரவ இந்தியாவில் பலவித மாற்றங்களைக் காண்கிறோம்; மாற்றங்கள் நிறைந்த இக்காலத்தில், குடும்பங்களில் மற்றவர்களைப் போல் விதவைகளும் சம நிலைமை வகிக்கும் படியாகவும், அறியாமையால் அவர்களுக்குண்டான இக் கேட்டை நிவர்த்திசெய்ய ஏதுவான கல்வி முதலியவற்றில் அவர்களைப் பிரவேசிக்கும்படி யாகவும் சீர்திருத்தம் செய்ய ஏற்பட்டால், திடீரென்று செய்ததாகத் தோன்றும் சிலமாற்றங்கள் குடும்பங்களில் செய்ய வேண்டி நேர்ந்தாலும் நேரும். இதனால் முன் சொன்னது போல அநேக இடையூறுகளும் உண்டாகலாம். அப்படி நேரினும் "ஊக்கமது கைவிடேல்" என்னும் நமது மூதாட்டியரின் உயர் மொழியைக் கடைப் பிடித்து, நாம் செய்வதாக மேற் கொண்ட ஏற்பாடுகளைக் கை நெகிழவிடாமல் சரிவரச் செய்து, நமது தேய விதவைகளது நிர்ப்பாக்கிய நிலைமையை உயர்த்தி, அவர்களை முன்னுக்குக்கொண்டுவரப் பின்வாங்கலாகாது. காலாகாலமாய் நன்குமதி

க்கப்பட்டுவரும் நமது வழக்கங்களுக்கு விரோ
தமாய்ப் போகாமலே. நாம் விரும்பி சீக்கிரம்
நிறைவேற்ற வேண்டுமெனக் கருதும் சீர் திருத்
தங்களைச் செய்ய முயல்வது, காரண மின்றி
காரிய முண்டெனப் பிதற்றித்திரியும் நாஸ்திக
வாதத்தை யொக்கும். நமது மாதரை, முக்கிய
மாய் விதவைகளை, துன்பத்திற்கும் அசட்டைக்
கும் ஆளாக்காமல், அறியாமையை நீக்கி, இல்
லாமை துன்ப முதலியவற்றைப் பரிகரித்து,
வருத்தத்தைப் போக்கி, மற்றவர்களுக்கா யுழை
க்கும் உயர்தர வேலையில் அவர்களை ஊக்கி,
தமக்கும் தம் நாட்டிற்கும் உதவியாய் நின்று
நன்மை புரியும்படிச் செய்தால், நந்தேயம்
கூடிய சீக்கிரத்தில் முன்னுக்கு வரும் என்பதற்
கையமில்லை. அப்படியே ஆகும்படி அம்பரா
பரன் அருள்புரிவாராக!

S. Selva Raju.

---

## MARIAN CONGRESS.

### மரியாயின் சங்கம்.

---

சற்பிரசாத சங்கங்கள் உலகத்தின்
பல முக்கிய நாடு நகரங்களில் கூடி,
திவ்ய நற்கருணையில் எழுந்தருளி யிரா
நின்ற சற்பிரசாத நாதருக்கு அதிக தோத்
திர மகிமை வருவிக்கவும், திவ்விய நற்
கருணைப் பக்தியை யின்னும் அதிகமாய்ப்
பிரபல்ய படுத்தவும் வேண்டிய வழிவகை
களை யோசித்து வருவது போல, அர்ச்.
கன்னி மரியாயின் அமலோற் பவத்தை
யும், படைக்கப்பட்ட வஸ்துக்களில் ஒப்பு
உயர் வில்லாத அவளது உந்நத மகிமைப்
பிரதாபத்தையும், அவளுடைய மற்ற உசி
த மேன்மை வரப்பிரசாதங்களையும் பற்
றிப் புகழ்ந்து கொண்டாடவும், அவளைப்
பற்றிப் பதிதர் பிதற்றுந் தப்பறைகளை மறு
த்து அவளுடைய பக்தி வணக்கத்தை
மேன்மேலும் பிரபல்லியப் படுத்தவும் வே
ண்டிய வழிவகைகளை யோசித்துச் செய்ய
மரியாயின் மகா சங்க மொன்று இந்தத்
தென்னிந்தியாவில் கூட வேண்டு மென்
பது சென்ற சில காலமாய், மரியாயின் தா
சர்கள் அனைவோருக்கும் அடக் கொணு
ஆசை விருப்பமாயிருந்து கொண்டு வரு
கிறது. இந்த விருப்பத்தை நிறை வேற்
றுவதற்கான பல ஏற்பாடுகளை சிற்சிலர்
"கத்தோலிக் வாச்மென்" முதலிய பத்தி
ரிகை வாயிலாய் பிரேரேபித்திருக்கிறார்
கள். மரியாயின் சங்க மொன்று கூட்ட
வேணு மென்ற இந்தப் பிரேரேபனையை
நாம் நமது முழு இருதய ஆசை யோடும்
ஆவலோடும் ஆமோதிக்கின்றோம். இப்
படியே மரியாயின் தாசர்கள் யாவரும்,
மற்ற கத்தோலிக்கு விசுவாசிகளனைவோரு
மே இவ்வரிய சமயத்தை அன்பாய் தழுவு
வார்களென்பதற்கு அணுவளவும் சந்தேக
மில்லை. இந்த மகாப் பெரிய சங்கத்தைக்
கூட்டி வெற்றி பெற முடிப்பதற்கு மரியா
யின் தாசர்கள் எல்லோரும் ஏகோபித்து
ஒருமிப்பாய் உழைத்தல் வேண்டும்.
ஒற்றுமையே பிரதானம். ஒருமிப்பு உண்
டானால் மற்றும் வேண்டிய இடம், பொ
ருள், ஏவல் முதலெல்லாம் வெகு சுலபத்
தில் சித்திக்கலாகும். இச்சங்கம், அடுத்த
1914ஆம் டிசம்பர்மீ 8உ யன்று கொண்
டாடப்படப்போகிற அர்ச். கன்னிமரியாயி
னது அமலோற்பவ சத்திய அறிவிப்பின்
வைர ஜூபிலியின் போது கூட்டப்படவே
ண்டு மென்றும், அது சென்னையிலாவது,
அல்லது திருச்சிறுப்பள்ளி யிலாவது நடத்
தப்படவேண்டுமென்றும், தென்னிந்தியா
வி லுள்ளமரியாயின் சபையார்களே தங்கள்
முயற்சியால் இச்சங்கத்தை நடப்பிக்க
வேண்டு மென்றும், இதற்கு கண்டியிலிருக்
கும் பாப்புஸ்தானாதி பதியவர்கள் முதல்
இலங்கை யிலும் தென்னிந்தி யாவிலு
முள்ள அதிமேற்றிராணிமார் மேற்றிரா
ணிமார் அனைவரும், குருக்களும் விஜ
யஞ் செய்யும்படிக் கேட்டுக் கொள்ளப்
பட வேண்டு மென்றும்; இதை நடத்துவ
தற்கு வேண்டிய செலவின் மதிப்புத் தொ
கையாகிய ஆறாயிரம் ரூபாயை ஷெ மரி
யாயின் சபையார்களே முயன்று சவதரி
க்க வேண்டு மென்றும், இச்சங்கம் நடத்
தப்பட வேண்டிய நடவடிக்கைக் கிரமங்க
ளின் விவரத்தைத் தீர்மானிக்கும் பொரு
ட்டு, இவ்விஷயத்தில் விசேஷ அக்கறை
கொள்ளுபவர்கள் முன்னதாக ஒரு சிறு
கூட்டங் கூடவேண்டு மென்றும் பிரேரே
பிக்கப்படுகிறது. சென்னை யதிமேற்றிரா
சனக் கோவிலில் ஸ்தாபிக்கப் பட்டிருக்
கும் "மரியாயின் பிள்ளைகள்" சபையின்
விசாரணைக் கர்த்த ராகிய சங். ஆன்ஸ்டன்
சுவாமிகளும், புதுப்பேட்டை அமலோற்ப



மாதா சபையின் விசாரணைக்கர்த்தராகிய
சுரி. வந். மொன்சின்யோர் ஏ. மெர்க்கஸ்
சுவாமிகளும் இந்த மரியாயின் சங்க விஷ
யமாய் மிக்க ஊக்கங் கொண்டிருக்கிறார்
கள். திருச்சிறுப் பள்ளியிலுள்ள மரியா
யின் சபையின் விசாரணைக் கர்த்தரும்
இதை அன்பாய் ஆமோதிக்கிறா ரென்று
ம-ள-ள-ஸ்ரீ ஏ. ஜெகநாதப் பிள்ளையவர்கள்
மூலமா யறிகிறோம். மேற் கூறப்பட்ட பிரே
ரேபனைகள் மெத்த நல்லவைகளும், பிரயோ
ஜன மானவைகளும், சித்தி பெறுவிக்கக்
கூடியவைகளு மாயிருத்தலால் அவை சக
லருக்கும் அங்கீகார மாகு மென்பதற் கை
யமில்லை. ஆயினும் இதுவிஷயத்தில் அவ
ரவர்களுக்குத் தோன்றும் யோசனைகள்
வேறேது முண்டானால் அவைகளை யிப்பத்
திரிகை மூலமாய் தெரிவித்துக் கொள்ள
லாம். இவைகளை யெல்லாம் நிறைவேற்
றிக் காரிய சித்தி பெறும் வண்ணம் தென்
னிந்தியாவி லுள்ள கத்தோலிக்குக் கிறிஸ்
துவர்கள் அனைவரும், விசேஷமாய் நமது
நல்லாயன் சந்தாதார நேயர்களும் தம்
தம்மாலான உதவி செய்யப் பின் வாங்க
மாட்டார்க ளெனக் கோருகிறோம்.

பிதாவாகிய சர்வேசுரனின் குமாரத்
தியும், சுதனாகிய சர்வேசுரனின் தாயா
ரும், இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுர
னின் பிரிய பத்தினியுமாகிய மாதர்க் கர
சியை, ஜென்ம மாசில்லாம லுற்பவித்து,
பாவ நிழலணுகாதிருந்த பரிசுத்த ஆண்ட
வளை, சகல வரப்பிரசாதங்களாலும் நிறைந்
தலங்கரிக்கப்பட்ட மோட்ச விராக்கினி
யை, பரலோகத்தின் வாசலும், பாவிகளுக்
கடைக்கலமும், கிறிஸ்துவர்களின் சகாய
முமாகிய பரமநாயகியை, மகா பரிசுத்த
கன்னிமரியாயியைப் போற்றிப் புகழ்ந்து
கொண்டாடும் விஷயமாய் உதவி செய்யப்
பிரியப்படா தவர்களார்!!

இந்த மரியாயின் சங்கத்துக்காக உத
வி புரிய விரும்புகிறவர்க ளனைவரும் தங்க
ளுக்கு இஷ்டமானால் தங்கள் உதவித் தொ
கையை "நல்லாயன்" மானேஜருக்கு அ
னுப்பலாம். இவ்வாறு அனுப்புபவர்கள்
பேருந் தொகையும் இப்பத்திரிகையில் பிர
சுரிக்கப்படும்.

பத்திராதிபர்.

---

## FEMALE EDUCATION.

### பெண் கல்வி.

---

பெண் கல்வியைப்பற்றி சுதேசமித்தி
ரன் பத்திரிகையில் ஸ்ரீமதி வே. குழந்தை
யம்மாள் என்னு மாதராள் எழுதியுள்ளது
மெத்த பிரயோசன முள்ளதாதலால் அ
தை யிங்கு எடுத்தெழுதுகிறோம். அது
பின்வருமாறு:

பெண்களுக்குக் கல்வி அவசியம் வேண்
டும். நம்முடைய மக்களுக்குக் கல்வி கற்றுக்
கொடுப்பதென்றால், எழுதவும் வாசிக்கவுங் கற்
றுக்கொண்டால் போதுமானதென்று நினைக்
கக்கூடாது. பல நூற்களை வாசித்து அதிலுள்ள
கருத்தை அறிந்து இல்லற தருமத்தைத் தன்
புருஷன் மனதைப்போல நடத்தவேண்டியது.
அப்படி நடப்பதினால் தாய் வீட்டிற்கும் புருஷ
ன் வீட்டிற்கும் நல்ல கீர்த்தியுண்டாகிறது; அந்
த குடும்பங்கள் சந்தோஷத்தையும் அடைகின்
றன. பெண்களுக்கு விவாகம்செய்து புருஷன்
வீட்டிற்கு அனுப்பும்வரையில், அவர்கள் சகல
விஷயத்திலும் நல்வழியில் நடக்கவும், துர்ச்
சன சகவாசங்கள் செய்யாமலும், சோம்பலாய்
காலங்கழித்துத் திரியாமலும் அவர்களைப் பாது
காப்பது தாய் தந்தையர்களுடைய கடமை. நம
து குழந்தைகளுக்கு ஆபரணங்களைத் தரித்துக்
கண்ணுக்கலங்காரமாகப் பார்க்கின்றது நமக்கு
வழக்கமாக நடந்துவருகின்றது. அதைப்போல்
அவர்களுக்கு உலகத்தில் அழிவில்லாத வாபர
ணமாகிய கல்வியைக் கொடுத்து நாம் சந்தோ
ஷத்தை யடையவேண்டுமன்றோ? கல்வியினால்
சகல ஞானமு முண்டாகின்றது. கல்வி யில்லா
விட்டால் ஞானம் எவ்விதமுண்டாகும்?

"இல்லாளகத்திருக்க வில்லாத தொன்றில்லை
இல்லாளுமில்லாளே யாமாயின்—இல்லாள்
வலிகிடந்த மாற்ற முரைக்குமே லவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும்."

என்கிற வாக்கியத்தை ஒத்திருக்கும் பெண்கள்
வாசித்துப் பிரயோஜன மென்ன, உத்தியோ
கம் செய்யப் போகிறார்களா வென்றும், புரு
ஷர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க மாட்டார்
களென்றும் சிலர் தப்பெண்ணங் கொள்ளு
கிறார்கள். பெண்கள் வாசிப்பதனால் கல்வியின்
பயனாக அவர்களுக்குச் சில சுதந்தரங்கள்
கொடுக்க வேண்டி வரு மென்றோ, அல்லது

தமக்குச் சமமான நிலைமைக்கு ஸ்திரீகளைக் கொண்டுவரும் பக்ஷத்தில் பிறர் நகைப்பார்களென நினைத்தோ புருஷர்கள் இவ்விதமான துர்ரெண்ணங்கள் கொள்ளுகிறார்கள். பரதகண்டத்தில் கல்வி பெறும் ஆண்பிள்ளைகளின் தொகை, வருஷாவருஷம் அதிகரித்து இராஜபாஷையில் பட்டங்கள் வகித்து நாகரிகமடைந்து வருகிறார்கள். அவர்கள் தங்களுக்கு சமமான வதூவரர்கள் கிடைக்கவில்லை என்பதினால் தங்கள் மனதைப் பலவிதத்திலும் செலுத்திவிடும்படி நேரிடுகின்றது. இதற்குக் காரணம் கல்வி கற்ற பெண்களின் தொகை அதிகமில்லாததினால் தானென்று சொல்லக்கூடும். வாசித்தறிந்த பெண்மணிகளாயிருந்தால் அவர்களுக்கு மனமொத்த வாழ்க்கையாயிருக்கும்.

“நற்றாமரைக்கயத்தி னல்லன்னஞ் சேர்ந்தாற்போற்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்—கற்பில்லா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டிற்
காக்கை யுகக்கும் பிணம்.”

என்பதுபோல் தங்கள் பிரியத்தை நாடி நடக்கவேண்டியிருக்கின்றது.

பெண் குழந்தைகளை நன்றாய் வாசிக்கக் கற்பித்து, கண்ணின் கருமணியைப்போல் அவர்களைப் பாதுகாத்து, கிளியை வளர்த்து பூனைவாயில் கொடுப்பது போல் பெற்றோர்களே நிரட்சரகுட்சியாகிய ஒரு வரனைத் தேடிக் கொடுக்கும்படியும் நேரிடுகிறது. அதற்குக் காரணம், ஒவ்வொரு குடும்பத்திலும் வழக்கமாய் நடந்துவரும் சம்பந்தம் தவிர, ஒரே ஜாதியாயிருந்தாலும் புதுக் கால் வெட்டக்கூடாதென்கிற பழமொழியைக் கடைப்பிடித்தவர்களான பெரியவர்களின் வழக்கத்தை அனுசரித்து நடப்பதுதான். நன்றாய் வாசித்தறிந்த நாகரிகமுள்ள கனவான்கள் சிலர், பகுத்தறியும் குணமுள்ளவர்களாய் தங்கள் சுகத்தை நாடி ஆழ்ந்த யோசனையோடு நடந்து வருகிறார்கள். வேறு சிலர் தாங்கள் வாசித்தும் அதன்படி நடக்கச் சக்தியற்றவர்களாய், தங்களுடைய வாழ்நாள் கெட்டதுமன்றி மக்களுடைய ஜீவதசையும் அப்படியே முடியும்படி செய்கிறார்கள். வாசிப்பில் மனமில்லாதவர்களைப் பற்றி நாம் யோசிக்கவே வேண்டியதில்லை. பரதகண்டத்தில் கல்வியபிவிருத்தியிருந்தால் நாளுக்கு நாள் அநேக விதமான நல்ல வழக்கங்கள் அதிகரித்து, நல்லொழுக்கங்கள் அதிகமாய் உண்டாவது நிச்சயம். தேசத்தின் நன்மையையும், குடும்பத்தின் க்ஷேமத்தையும் யாக்கையின் பலனையும் கருதித்தங்கள் பெண்களினிளமைப் பருவத்தை வீணே கழிக்கவிடாமல் அவர்களுக்குக் கல்வியைக் கொடுத்து, பெண் கல்வியை விருத்தி செய்ய வேண்டியது. ஆண்மக்கள் மாத்திரம் பலவிதமான ராஜாங்க பட்டங்கள் பெற்றதினால் நம்முடைய தேசம் நாகரிகமடையாது. நம் தேசத்துப் பெண்களும் பலவிதமான சாஸ்திர கேள்விகளில் ஆராய்ச்சியுள்ளவர்களானால்தான் நம்முடைய நாடு நன்மையடையுமென்பதற்குத் தடையிராது.

---

## CORRECT THINGS FOR CATHOLICS.

## கதோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

### மடங்கள்.

(முன் தொடர்ச்சி)

---

1. மடத்தில் யாரையாவது காண வேண்டுமானால் அதற்கு நேரமும் நாளும் குறிக்கப்பட்டிருக்க, கண்ட நேரத்தில் போய் நான் இன்னவர்களைக் காணவேண்டுமென்று முரட்டுத்தனமாய்க் கேட்பது ஒழுங்கல்ல.

2. முடத்தில் அல்லது போர்டிங் பள்ளிக்கூடங்களில், தான் விரும்பியவர்களைக் கண்டுபேச உத்தரவு கிடையாவிட்டால் முறுமுறுப்பது ஒழுங்கல்ல.

3. வீதத்திற்குத் தகுந்த சாப்பாடு கிடைப்பதைப் பற்றி, சிரேஷ்டர்கள்மேற் குறை கூறுவது ஒழுங்கல்ல.

4. ஏராளமானபேர் கூடியிருக்கும் மடத்தில் அல்லது போர்டிங் பள்ளிக்கூடத்தில், ஏதாவது குற்றங் குறைகள் நேரிடக்கூடுமாகையால், அவைகளை ஒரு பொருட்டாகப் பாவிப்பது ஒழுங்கல்ல.

5. சிரேஷ்டர்கள் உத்தரவில்லாமல் மடத்திலிருப்பவர்கள், அல்லது போர்டிங் பள்ளிக் கூடங்களிலிருப்பவர்கள் கடிதப் போக்கு வரவு நடத்துவதற்கு வெளிக்கிறிஸ்துவர்கள் உதவியாயிருப்பது ஒழுங்கல்ல.



6. மடத்திற்குள் பிரவேசிக்க அநுமதி கிடைத்த பிறகு, போகத்தகாத இடத்திற்கெல்லாம் போவதும், கட்டிடத்தைச் சுற்றித் திரிவதும் ஒழுங்கல்ல.

7. அங்கு செபம் பண்ணும் கன்னியாஸ்திரிகளுக்காவது படித்துக்கொண்டிருக்கும் பிள்ளைகளுக்காவது, இடைஞ்சல் உண்டாகும்படி சப்தமாய்ப் பேசுவதும் சிரிப்பதும் ஒழுங்கல்ல.

8. மடங்களில்வைக்கப்பட்டிருக்கும் தர்மப் பெட்டிகள் அலங்காரத்திற்குத்தான் என்று நினைப்பது ஒழுங்கல்ல.

9. மடத்தை நடத்தும் விதம் யாவும் சிரேஷ்ட தாயாருக்கு நன்றாய்த் தெரியுமாகையால் அவர்களுக்கு ஆலோசனையும் புத்தியும் சொல்லப் புகுவது ஒழுங்கல்ல.

10. கன்னியாஸ்திரியைப் பார்த்து “நீ ஏன் கன்னியாஸ்திரியானாய்? உன் ஊர், பேர், குலம், அந்தஸ்து என்ன? உனக்கேன் கலியாணம் பிரியமில்லை? உன்னையாராவது கலியாணஞ் செய்துகொள்ள கேட்டிருந்தார்களா? மடத்தை விட்டுவர உனக்குப் பிரியந்தானா? மடத்தில் அன்னவஸ்திராதிகளின் சவரட்சணை சரியாய் நடக்கிறதா? ஜனசங்கமின்றி எந்நேரமும் மூலையிலிருப்பது உனக்கு கஷ்டமாயில்லையா? என்பன முதலிய விவேகமற்ற கேள்விகளையெல்லாம் அவர்களிடம் கேட்பது ஒழுங்கல்ல.

11. மடத்தை அல்லது போர்டிங் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியில் வந்த பிறகு அதைப்பற்றிக் குறைகூறுவது ஒழுங்கல்ல.

12. கன்னித்துவ அந்தஸ்தில் சேர்பவர்கள் பேரால் கொடுக்கப்படவேண்டிய தொகையைக் கொடுக்கச் சிணுங்கிப் பிணங்குவது ஒழுங்கல்ல.

(சீர்மை கன்னியாஸ்திரிகள் மடத்திற்கு வரும் போது ஆயிரம், பதினாயிரம், லட்சங் கணக்காய் ஆஸ்தி கொண்டுவந்து கொடுப்பார்கள். இப்படி நிதி சேர்கிறதினாலேதான், அம்மடங்களில் அத்தனை தரும காரியங்களை நடத்தவும், மடங்களையே தக்க பிரகாரம் நடத்திக்கொண்டு வரவுங் கூடுமாயிருக்கிறது. அவரவர்கள் அணிந்திருக்கும் வஸ்திரத்தோடு, கைதட்டி பண்டாரம் போல் வந்துவிட்டால் ஷெ காரியங்களெல்லாம் எப்படி நடைபெறும்? ஆனதுபற்றி பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் பேரால கொடுக்கவேண்டியிருக்கும் அற்ப சொற்ப தொகையையாவது நல்ல மனதோடு கொடுப்பது தகுதி. அதே பிள்ளையை அவர்கள் கலியாணஞ்செய்துக்கொடுப்பதானால் எத்தனை பணம் செலவாகும்!)

13. தங்கள் பிள்ளைகளை நன்றாய்ப் பராமரிக்கவில்லையென்று கன்னியாஸ்திரிகளை ஏசித்திட்டுவதும், அவர்களைப்பற்றி வெளியில் அவமரியாதையாயும் அவதூறும் பேசுவதும் ஒழுங்கல்ல.

14. மடத்துக் கோவில்கள் சாதாரணமாய் சிறு கோவில்களாயிருப்பதனால், அவைகளில் இடங் கிடையாமற் போனால் அதைப்பற்றி குறை கூறுவது ஒழுங்கல்ல.

15. குறித்த நாட்களல்லாத வேறு நாட்களில் பிள்ளைகளை வீட்டிற் கனுப்பக் கேட்பது ஒழுங்கல்ல.

16. பிள்ளைகளை விசாரிக்கும் சந்நியாசிகள் கன்னியாஸ்திரிகள் எல்லா பிள்ளைகளையும் ஒரேவிதமாய்ப் பராமரிக்காமல் சிலரை ஓர வஞ்சனையாய்ப் பார்ப்பது ஒழுங்கல்ல.

17. பிள்ளைகளிடம் அல்லது அவர்கள் பெற்றோர்களிடம் காசுபணம் பறிக்கவும், வெகுமதிகள் வாங்கவும் வழி தேடுவது ஒழுங்கல்ல.

18. எளிய பிள்ளைகளைக் கிறிஸ்துவ நேசத்தோடு விசாரிக்காமல், ஏதோ வயிற்றுக்கில்லாத பரம ஏழைகளென்று அவர்களை அலட்சியம் செய்து மற்றவர்களைவிட அவர்களைக் குரூரமாய் நடத்துவது ஒழுங்கல்ல.

19. கன்னியாஸ்திரிகள் கோள்குண்டணி பேசுவது ஒழுங்கல்ல.

20. அடிக்கடி உலகத்தாரோடு புழங்குவதும் சிரேஷ்டர்கள் அறியாமல் கடிதம் எழுதுவதும் ஒழுங்கல்ல.

21. கந்நியாஸ்திரீ மடத்தில் நடத்தப்படும் திருநாள் பெருநாள் முதலியவைகளுக்கு ஒத்தாசை உதவி செய்யும் பொருட்டாவது, அல்லது வெறு எந்த காரணத்துக்காவது வாலிப ஆண்பிள்ளைகளை உள்ளே வரவிடுவது ஒழுங்கல்ல.

(இம்மாதிரி வருத்துப் போக்காயிருக்கும் வாலிபர்களால் மடங்களுக்கு

அநேக தடவைகளில் பரிகரிக்கக் கூடாத கெடுதிகள் நேரிட்டிருக்கின்றனவென்று முதலாளிமார்கள் அறியவேண்டும்.)

22. மடத்திற்கு வேண்டிய சாமான்கள் வாங்கக் கடைத்தெருவுக்குப்போகும் கன்னியாஸ்திரிகள், வியாபாரிகளிடம் தங்களுக்காக வெகுமதி கேட்பதும் வாங்குவதும், வியாபாரிகளால் உபசரிக்கப்படும் பட்சணங்களை யுண்பதும் ஒழுங்கல்ல.

(இன்னும் வரும்.)

---

## CORRESPONDENCE.

## கடிதங்கள்.

---

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்தரவாதி யல்லர். கடித மெழுதுவோர் தங்கள் கடிதங்களை மிகத் திருத்தமாயும், காகிதத்தின் ஒரே பக்கத்தில்இடது பாரிசத்தில் நாலு விரற்கடை இடம் விட்டும் எழுதுவதுடன் தங்கள் பெயர் விலாசங்களையும் தெளிவாய் எழுதல் வேண்டும். பெயர், விலாசம் வெளிப்படுத்துவதற்கல்ல, கடிதத்தின் உண்மைச் சங்கதிகளைப் பத்திராதிபர் உறுதிப்படுத்திக் கொள்வதற்கே. வெளிப்படுத்துவதற்கு தகுதியற்றன வென்று தள்ளிவிடப்பட்ட கடிதங்கள் திரும்பவும் வாபீஸ் செய்யப்பட மாட்டா. ப—ர்]

### ஓர் அற்புத சௌக்யம்.

கனம் பொருந்திய நல்லாயன் பத்திராதிபர் அவர்களுக்கு அநேக வந்தனம். இரக்கம் நிறைந்த சேசுவின் தாயாகிய லூர்து நாயகி அளித்த அற்புத சௌக்கியத்தை தங்கள் பத்திரிகையின் ஒரு கோணத்தில் பிரசுரிக்க மன்றாடுகிறேன்:

என் மனைவி காணிக்கைமரி கர்ப்பமுற்ற நாலாவது திங்களிலேயே அவளுக்கு நடுக்கல் சுரமெனப்பட்ட ஒருவகை விஷசுரங்காண, அவளை சௌக்கியப்படுத்துமாறு பற்பல சிகிச்சைகள் செய்தும் குணப்படாமல் எனக்குள்ள, பல வேலைகளில் இனி யாதொரு வைத்யஞ் செய்யவும், வேண்டிய மூலிகைகள் சேகரிக்கவுங் கூடாதவனாய் அவள் தாய் வீடாகிய திருக்கோவிலூர் தாலூக்கா, எரையூர் பாளையமென்ற கிராமத்திற்கு அப்போது வந்திருந்த அவள் தாயுடன் அனுப்பிவிட்டு, எந்த நேரமும் துக்காக்கிராந்தனாய். எந்தநேரத்தில் என்ன சாமாசாரம் வரப்போகிறதோ வென்று, என் பல வேலையோடு இந்த திகிலெனு வேலைக்கு மிடங்கொடுத்துக் கொண்டிருந்தேன். சுரம் நாளுக்குநாள் அதிகரித்து வருவதாயும், அதனோடு வயிற்றுப்போக்கும் சாஸ்தியாய் இருப்பதாயும், அன்னபானாதிகள் செல்லாமல் தேகம் ரொம்ப மெலிவுற்று நடமாட முடியாத அந்தஸ்தி லிருப்பதாயும் கேள்விப்பட்டு, என் மனம் புண்ணாக, என்னிருமக்களும் நானும் செய்வதிதுவெனத் தெரியாமல், திகைத்து துக்க சாகரத்தில் அமிழ்ந்தியிருக்குங்கால், ஞானவெளிச்சமற்ற என் மனதில் ஓர் எண்ணம் உதித்தது. அஃதென்னவெனில் லூர்துதாயாரின் சரணடைவதுதான். இந்த எண்ணமானது என் மன இருளை நீக்கவே அந்தக்ஷணமே அத்தாயார் பாதத்தில் வீழ்ந்து, என் அருமந்த பிள்ளைகளைத் தாயில்லாப் பிள்ளைகளாக்கித் தவிக்க விடாமலிருக்கும்படி அக்கருணை நிறைந்த ஆண்டவளைப் பார்த்து நம்பிக்கையுடன் மன்றாடினேன்.

ஆறுமாதமாய் கர்பத் தாலுண்டாகும் பலவித சின்னங்களோடு இவ்வியாதியையும் அனுபவிக்கும் என் மனைவியையும், அவள் வயிற்றிலுள்ள சிசுவையும் யாதொரு துன்பமின்றி காப்பாற்றி நல்ல பேறடையவுஞ் செய்தால், பிறக்குஞ் சிசுவுக்கு அந்த தேவதாயின் நாமமே இடுவேனென்றும். இந்த சம்பவத்தை பத்திரிகை வாயிலாய் பல ரறியும்படி பிரசித்தஞ் செய்வேனென்றும் பிரதிக்கினை செய்து. அவுஷதமாக அத்தாயாரின் அற்புத தீர்த்தம் தருவித்து அனுப்பி, அதைப் பிரதிதினமும் பிரயோகிக்கும் படி திட்டஞ்செய்தேன். பின்னும் லூர்து ஆண்டவளைக் கைவிடாது அநுதினமும் செபித்துவந்தேன். ஆ! என்ன ஆச்சரியம்! லூர்துதாயார் நீசப்புழுவாகிய என் மன்றாட்டை ஏற்று, என்கண்ணீரைத் துடைத்து என்னையும்,என்னிரு குழவிகளையும் களிக்கச் செய்தனள்.

இதோ! பத்துத் திங்களும் மேற்கூறிய பீடைகளோடு கழிய, பிறவிநோக்கும் முந்தின தின முதற்கொண்டு நிமிஷத்திற்கு நிமிஷம், ஓயாமல் வயிற்றுப்போக்கும் போகவே, பேதை பலனற்று கீழே கிடக்கும் படியாயிற்று. யாவரும் நம்பிக்கையற்று, இனி கடைசி தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றுவதே புத்தியென நிர்ணயிக்கப்பட்டது. அண்டை அயல் வீட்டுப்பெண்களும் ஒருவர்பின் ஒருவராய் வந்து அவளின் பரிதாப நிலைமையைப்பார்த்து அங்கலாய்த்தார்கள். இப்படியிருக்க, ஏறக்குறைய அரைமணிநேரம் ஒருவரும் அவளிடமில்லாமல் தனிமையாயிருந்த சமயத்தில் அற்புத தாயார் யாதொரு கஷ்டமான துன்ப நோக்காடுகளின்றி பிரசவிக்கக் கருணைபுரிந்தாள்.

இந்த சுபசெய்தியை கேள்விப்பட்ட நான் அக்ஷணமே 20 மைல் தூரமான அக்கிராமத்திற்கு சென்று, மனங்களிக்க தாயையுங் குழந்தையும் சவுக்கியமாய்க்காணப் பாக்கியம் பெற்றேன். வயிற்றுப்போக்கும் நின்றுவிட்டது. சுரம் பஞ்சாய் பறந்து விட்டது. என் வாக்குத்தத்தப்படி, பிறந்த பாலனுக்கு லூர்துமரிநாதனென நாமகரணஞ் சூட்டி, பேருபகாரியான என் இனிய லூர்துதாய்க்கு நன்றியறிந்ததோத்திரஞ்செலுத்தினேன்.

பரிசுத்த லூர்தன்னையின் திரு இருதயத்திற்கு இன்றும் என்றும் தோத்திர முண்டாகக் கடவது!

Viriyur.
4-4-13.
S. Raphael.

---

### பிளேக் என்னும் பெருவாரிக்கு ஒரு மருந்து.

ஐயா,

இந்தக் கொள்ளை நோயிற்கு மருந்தேகிடையாதென்று பலர் சொல்லி வருகிறார்கள். இவ்வியாதி கண்டால் மடிந்தே போக வேண்டும்; சொஸ்தப்பட்டால், சரியான பெருவாரியல்ல வென்பார்கள். இக்கொடிய வியாதிக்குக் கைகண்ட ஔஷதமொன்று எனக்குத் தெரியும். அது நல்லாயன் சந்தாதாரர்களுக்கு பிரயோசனமாமெனக் கருதி, அதை யிங்கு வரையலானேன். இதைத் தங்கள் பத்திரிகையினோர் கோணத்தில் பிரசுரிக்கத் தயை செய்வீரெனப் பிரார்த்திக்கின்றேன். மனமுள்ளவர்கள் இம்மருந்தைப் பிரயோகஞ்செய்துபார்க்கலாம்.

1910௵ டிசம்பர்௴ 30௳ எங்கள் ஊரில், இந்தக் கொடிய வியாதி துவக்கினது. அன்று தொடங்கி 15 நாள்பரியந்தம்,நாளொன்றுக்கு 2, 3, 4, பேர் இறந்து போனார்கள். இந்தச் சொற்ப ஊரில், இப்படிச் சாகிறதைக் கண்ட ஜனங்கள், ஊர் அழிந்து போகப்போகிறதென்று திகில் பிடித்து, வேலை வெட்டி பாராமலும் சாப்பிடாமலும் முதலாய் ஏங்கியிருந்தார்கள்.

கடைசியாய் வாலிபன் ஒருவனுக்கு இந்த வியாதி காணவே, அவன் தனக்குள் சொல்லிக்கொண்டதாவது: மாட்டு மன்னை நோவுக்குக் கொடுக்கிற மருந்தைச் சாப்பிட்டுப் பார்த்துச் சாவோமேயென்று, அந்த மருந்தைச் சாப்பிட்டான்: சாப்பிட்ட வுடனே நோக்காடும், கட்டியும் தணியத் துவக்கினது. அன்று பொழுது போகு முன்னமே அவன் முழுச் சவுக்கியமடைந்தான். இதற்குப் பின் எங்கள் ஊரில் அந்தப்பெருவாரி கண்டவர்களெல்லோரும், அதே மருந்தைச் சாப்பிட்டு எல்லோரும் சவுக்கியமானார்கள். இந்த மருந்தைச் சாப்பிட்டு மரித்தவர்கள் ஒருவருமில்லை. சொஸ்தமடைந்தவர்கள் 150 க்குக் குறைவில்லை. அந்த மருந்தின் விவரம் பின் வருமாறு:

வெள்ளை உத்தாமணி சாறொழிய வேறில்லை. இந்த வெள்ளை உத்தாமணியை வேலிப்பருத்தி யென்றுஞ் சொல்லுவார்கள்.

பிளேக்கட்டி உள்ளே இருப்பதாகத் தெரிந்த மாத்திரத்தில், பிராயத்துக்கும், தேகத்திற்குந் தக்காப் போல ஏறக்குறைய ஒரு (Tea Spoon) டீ கரண்டி அளவு சாப்பிடவேணும். சாப்பாட்டுக்குப்பின் உடனே இந்த மருந்தைச் சாப்பிட்டால் சாப்பாடும், மருந்தும் வெளிக்கு வந்து விடும். சாப்பாட்டுக்குப் பின் 3 மணி நேரம் பொறுத்துத் தான் இந்த மருந்தைச் சாப்பிடவேணும்.

வெளிக் கட்டியா யிருந்தால், உள்ளுக்குச் சாப்பிடுவதுடன், அந்தச் சாற்றோடு திருகுக் கள்ளிப் பாலையுஞ் சேர்த்து மத்தித்து, கட்டியின் மேற் புறத்தில் தடவுகிறது. உள் கட்டியானால் உடனே மருந்து சாப்பிடவேணும்; வெளிக்கட்டி மாத்திர மிருந்தால், சிலமணி நேரம் பொறுத்து மருந்து சாப்பிடலாம். தடவலாம். ஆனால் எவ்வளவு தாமதப் படுகிறதோ, அவ்வளவு தாமதமாய்க் கட்டிகள் அமுங்கும். உள்கட்டிகளுக்குக் கூடிய சீக்கிரமாய்ச் சாப்பிடுவது அவசியம்.

மிருகங்களுக் கென்றிருந்த மருந்தை மனிதன் சாப்பிட்டு, பிழைக்க வேண்டியதாகி விட்டது. கண்ணுக்குத் தெரியாத முளைக்கிருமி, மனிதனைப் படுகாயப் படுத்தி மரணத்திற்கு ஆளாக்குகிறது. இப்படியிருந்தும் மனிதன் அகந்

தை அணுவளவும் அடங்க வில்லையே! தன்னைப் படைத்த கடவுளை நினையாமற் போகிறானே!

மற்றப் பத்திரிகைகளும் இதைப் பிரசுரஞ் செய்ய விக்கின மில்லை.

S. MUTHUSWAMI PILLAI,
AGRAHARAM, Karippatti, P. O.
SALEM DT.

## அமலோற்பவ நாயகியின் ஜூபிலி கிளப்
### வேம்பார்.

வேம்பார் அமலோற்பவ நாயகி ஜூபிலிக் கிளப்பின் நான்காவது வருடப் பொதுக்கூட்டம் சென்ற மே௴ 11௳ ஞாயிற்றுக்கிழமை கொழும்பு புறக்கோட்டை 4-ம் குருக்குத் தெரு 109 நெ. வீட்டு மேல்மாடியில் மகா-ா-ா-ஸ்ரீ எஸ். எஸ். வாஸ் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் வெகு விமரிசையாய் நடைபெற்றது.

கண்டி, குருணாக்கல், சிலாபம் முதலிய இடங்களிலிருந்து மெம்பர்கள் வந்து சமுகந் தந்தார்கள். ஆஜராகாத அங்கத்தினர்களின் கடிதங்கள் ஸ்தல காரியதரிசி யவர்களால் வாசிக்கப்பட்டது.

மகா-ா-ா-ஸ்ரீ எஸ். ஆர். தல்மேய்தா அவர்களால் "பெண் கல்வி" என்பதைப்பற்றியும், மகா-ா-ா-ஸ்ரீ ஜான்சவியேர் பர்னாந்து அவர்களால் "கூடாது" என்னும் பதத்தை முகவுரையாகக் கொண்டும், மகா-ா-ா-ஸ்ரீ எம். எ. பீ. விக்டோரியா அவர்களால் "ஒழுங்குகள்" என்பதைப்பற்றியும் வெகு சாதுரியமாய், பலமேற்கோள்கள் உதாரணங்களுடன் கூடியிருந்தவர்களின் மனது அக்களிப்படையும்படி பிரசங்கம் செய்யப்பட்டது. அதன்பிறகு மகா-ா-ா-ஸ்ரீ அலெஸ் பர்னாந்து அவர்கள் வெகு உற்சாகத்துடன் "குறிப்புரை" கூற, கனம் அக்கிராசனாதிபதி யவர்களின் அன்பும் ஆதரவு நிறைந்த முகவுரையுடன் கடவுள் நம்மரசரைக் காப்பாராக என்னும் கீதம்பாடப்பட்டு வெகு குதூகலத்துடன் கூட்டம் சமாப்தி பெற்றது.

இங்ஙனம்
M. J. விக்டோரியா,
ஸ்தலகாரியதரிசி,
கொழும்பு.

# GENERAL NEWS AND NOTES.
# பொது வர்த்தமானக் குறிப்புகள்.

**தபால் முத்திரை யந்திரம்.**—அமெரிக்க சாஸ்திரி யொருவர் தபால் முத்திரை யச்சிடுவதற்கு ஒரு புது யந்திரம் செய்திருக்கிறார். அதைக்கொண்டு ஒரு நிமிஷத்தில் பன்னீராயிரம் ஸ்டாம்புகள் செய்யப்படுகின்றனவாம்.

**ஜப்பானுக்குப் போர்க் கப்பல்.**—ஜப்பானுக்காக சமீபத்தில் ஐயர்லாந்தில் "கோல்கோ" என்னுமோர் போர்க்கப்பல் செய்யப்பட்டது. அது 27,500 டன் பாரஞ் சுமக்து செல்லக்கூடிய சக்தி வாய்ந்ததாம். இதுவே உலகத்துள்ள போர்க் கப்பல்களுக்குள் மிக்க பெரிய தென்று சொல்லப்படுகிறது.

**பூமிக்குள் புதைபட்ட நகரம்.**—பஞ்சாப்தேசத்தில் பூர்வம் புதைபட்டுப்போன தட்சசீல மென்னும் நகரத்தைக்கண்டுபிடிக்க அங்கு பூமியை வெட்டிவருகிறார்கள். அந் நகரத்தின் புராதன சின்னங்கள் அநேகங் கிடைக்கின்றனவாம்.

**மோட்டார் வண்டிகள்**—சென்ற மூன்று வருஷங்களில் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வண்டிகளின் தொகை 1797; அவைகளின் கிரயம் ரூபா 12,587,205. இதன்படி வருஷத்துக்கு சராசரி 359 மேட்டார் வண்டிகள் இறக்குமதியாகின்றன வென்று தெரிகிறது. இன்னும் போகப்போக இத்தொகை பெருகுமென்பதற் கையமில்லை.

**மிகச் சிறிய பசு**—பாரிசு நகரத்திலுள்ள ஒரு சாப்பாட்டு விடுதியில், மிகச் சிறிய பசு வொன்று இருக்கிறதாம். அதற்கு ஐந்துவயதாகியும் இரண்டடிக்கும் சற்றுக் குறைவாகவே இருக்கின்றதாம். அது பால்கறக்கிறதுமில்லை! மற்ற எந்த வேலைக்கும் உபயோகப்படுகிறதுமில்லை. விசித்திர விநோதப் பொருளா யிருப்பதினிமித்தம் அதை கசாப்புக்காரனிடம் கையளிக்காமல் காப்பாற்றி வருகிறார்களாம்.

**இந்தியாவிற்கு ஒருகவர்ன்மெண்ட் பாங்கி.**—ஓரியன்டல் பாங்க், அர்பத்நட் அவுஸ், பர்மா பாங்கி முதலிய பாங்கிகள் உள்ளன போல விருந்து திடீரென விழுந்து போனதால், ஜனங்கள் இத்தகைய பாங்கிகள் மட்டில் அநேகமாய் நம்பிக்கைக் குறைவுபட்டு, கவர்ன்மெண்டார் ஆதீனத்தில் அல்லது பரிசீலனையில் நடத்தப்படும் பாங்கிகளிலேயே பணம் போட்டுவைக்கப் பிரியப்படுகிறார்கள். அல்லது நிலம், நீர், வீடு, தோட்டங்களின்மேல் போட்டு வைக்கிறார்கள். ஆகவே சென்னை பாங்கி, வங்காள பாங்கி, பம்பாயி பாங்கி ஆக இந்த மூன்று பாங்கிகளையும் ஒன்றாய்ச் சேர்த்து ஓரே கவர்ண்மெண்டு பாங்கியாகச் செய்யவேண்டுமென்று லண்டன் டைம்சு பத்திரிகை பிரேரேபிக்கிறது.

**ஆகாய ரதம்.**—அடுத்த அக்டோபர் மாதத்தில், அமெரிக்காவி லிருந்து இந்தியாவிற்கு ஆகாய ரதத்தில் பிரயாணம் பண்ணுவதற்கு ஆகாய கமனியாகிய மிஸ்டர். ஜி. எம். டையட் என்பவரால் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இதற்காக ஒரு விசேஷ புது ரதம் ஷெ யாருடைய பேரால் செய்யப்படுகிறது.

**63 நாள் பட்டினி.**—"நல்ல உயிர் நாற்பது நாள்" எனச் சொல்வார்கள். ஆனால் சமீபத்தில் ஒரு பிராஞ்சுக்காரன், கிரானி யென்னும் பேருடையவன், ஓர் கொலைக் குற்றத்திற்காக ஜெயிலில் வைக்கப்பட்டதில் சாப்பாடொன்றுஞ் சாப்பிடாமல் 63 நாள் பட்டினியாயிருந்து, 64 வது நாளில் உயிர்த்துறந்தனனாம். இந்த வைராக்கியம் ஏனோ!

**வெடி குண்டுக்கு வைரி.**—வெடிகுண்டு விழுந்தால் அது வெடிக்காதிருக்கச் செய்ய ஒரு புது யந்திரங் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம். இது சூழ்ச்சிக்கு சூழ்ச்சியாயிருக்கிறது. மனிதனுடைய சூட்சம புத்தி யிவ்வளவு தூரந்தான் செல்லுமெனச் சொல்வதற்கில்லை.

**எலிநாச மருந்து.**—நன்றாய்க் கனிந்த வாழைப்பழத்தில் "பயர்பாக்ஸ்" என்று சொல்லப்படும் தீக்குச்சிகளை 30, 40 வரையில் குத்தி வெயிலிற் காயவைத்துப் பிறகு எலிகள் நடமாடுகிறவிடத்தில் வைத்தால், அதைச் சாப்பிடும் எலிக ளிறந்து போகுமெனச் சொல்லப்படுகிறது. இந்தச் சுலபமான மருந்து பரீட்சித்துப் பார்க்கத் தக்கது.

**ஓர் விநோத தண்டனை.**—அமேரிக்காவைச் சேர்ந்த சின்சின்னாட்டி யென்னுமூரின் மாஜிஸ்திரேட்டு முன்பாக 50 ஸ்திரீகள் யாதோர் குற்றஞ் சாட்டப் பட்டனராம். அவர்கள் குற்ற வாளிகளென ருசுப்பிக்கப்பட்ட படியால் அவர்கள் நாலு வாரம் தவறாமல் கிரமமாக கோவிலுக்குப் போக வேண்டுமென்று மாஜிஸ்டிரேட்டு தண்டனை விதித்தாராம். அவ்வூர் ஜனங்களுக்கு கோவிலுக்குப் போவது ஜெயிலுக்குப் போவது போலும்!



**ஓர் புது வியாதி.**—இந்தியாவின் சுதேச ராஜாங்கங்களில் ஒன்றாகிய டர்பாங்காவில் ஓர் நூதன வியாதி புறப் பட்டிருக்கிறது. இவ்வியாதி கண்டவர்களுக்கு தலையிலிருந்து புஜம் வரையிலும், முகங் கண் காது வாய் முதலியயாவும் ஒரு பக்கம் கறுத்துப் போய் விடுகிறதாம். இந்தக் குறி கண்டவுடன் வியாதிஸ்தன் இறந்துவிடுகிறான். இவ்வாறு அவ்வூரில் 100 பேர் இறந்தனரெனச் சொல்லப்படுகிறது.

**உணவுப் பொருட்கள்.**—சென்ற சில வருடங்களாய் நம்மிந்தியாவில் அரிசி முதல் சகல உணவுப் பொருட்களும் கிராக்கியாய் விற்கப்பட்டு வருங் காரணத்தை விசாரித்தறியும் பொருட்டு, இந்தியாகவர்ண்மென்டார் ஏற்கெனவே ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த கமிட்டியாரின் ரிபோர்ட்டு இவ்வருஷம் கோடைக் காலத்தில் சிம்லாவிக்கு கவர்ண்மெண்டு போகும் போது விஸ்தாரமாய் ஆலோசிக்கப்படுமென்று சொல்லப்படுகிறது.

**இராஜப் பிரதிநிதி யவர்கள்.**—நமது அன்புள்ள இராஜப்பிரதிநிதியாகிய ஹார்டிஞ்சு பிரபு அவர்கள், வருகிற வருஷத்தில் தமது உத்தியோகத்தை ரர்ஜிநாமா கொடுத்துவிட்டு சீர்மைக்கு திரும்புவாரென்றும், அவர் இந்தியாவை விடுவதற்கு முன், அடுத்த நவம்பர் மாதத்தில் தென்னிந்தியாவில் சுற்றுப்பிரயாணஞ் செய்ய வருவா ரென்றுஞ் சொல்லப் படுகிறது. அப்போது, ஐதராபாக்கம், மைசூர், சென்னை ஆக இம்மூன்று இடங்களுக்கும் வருவார் போலும்.

**சில கடின இராகங்கள்.**—சமீபத்தில் தஞ்சையில் கூடின ஸங்கீத மகா ஜன சங்கத்தில். ஓர் வியாஸம் வாசித்த மிஸ்டர் D. P. கணேசய்யர் அபிப்பிராயப்படி, தோடி, வராளி என்னும் இராகங்கள், காதுக்கு வேறு சிலவற்றைப் போல் அவ்வளவு இனிமையா யில்லாவிட்டாலும்

அவைகளை சங்கீத வித்வான்கள் அடிக்கடி பாடுவது எதன் பொருட்டென்றால், அவ்விறையைப் பாடுவது கஷ்ட மென்பதினாலே தான். "மாயாமாளவ கௌளம்" என்பது சங்கீத அப்பியாஸம் செய்பவர்களுக்கு சுலபமானதாம்.

**லண்டனுக்குப் புதிய தந்திமார்க்கம்.**—இப்போது லண்டனிலிருந்து இந்தியாவிற்கு ஒருதந்தி சமாசாரம் வர இரண்டரைமணி நேரம் பிடிக்கிறது. ஆனால் இப்போது பிரேரேபிக்கப் பட்டிருக்கும் புதிய மார்க்கத்தால் கொழும்பிலிருந்து லண்டனுக்கு 10 நிமிஷத்தில் சமாசாரம் செல்லுமாம்.

**அபினி வியாபாரம்.**—சீனர் அபின் தின்னுவதை நிறுத்தி விட்டபடியால், அபின் வியாபாரத்தில் இந்தியாவுக்கு 110 லட்சம் பவுன் நஷ்டமுண்டாகு மென்று சொல்லப்படுகிறது. இப்படி இந்திய ரேன் மதுபானத்தை நிறுத்தக் கூடாது?

**எலெக்ட்றிக் ரெயில்வே.**—"புகைவண்டி" யென்று இப்போது சொல்லப்படும் வண்டிகள் வெகு சீக்கிரத்தில் மின்சார வண்டிகள் என அழைக்கப்படும். நீராவியின் பலத்தால் செல்லுகிற ரெயில் வண்டிகள் இனி மின்சார சக்தியால் டிராம் வண்டிகளைப் போலவே ஓடும். இவ்வித மின்சார வண்டிகளை பரீக்ஷார்த்தமாய் முதலில் பம்பாயில் வழங்க ஏற்பாடு செய்து வருகிறார்களாம்.

**அதிசயப் பிறப்பு.**—சமீபத்தில் திருநெல்வேலியில் ஒரு இடையன் வீட்டில் ஓர் ஆடு, மூன்று தலைகளுடனும் ஆறுகால்களுடனும், ஒரு வாலுடனும் ஓர் குட்டியை ஈன்றதாம். பிறந்த சிறிது நேரத்துக்கெல்லாம் அக்குட்டி யிறந்து விட்டதாம். இந்த விந்தையை அவ்வூர்க் குடிகள் அநேகர் சென்று பார்த்து அதிசயித்தார்கள்.

**தேக்குமர விலை யேற்றம்**—முதற்றரமான மரங்கள் டன் ஒன்று ரூபாய் 160 முதல் 179 வரையில் முன் விற்கப்பட்டு வந்தன. இப்போது அவை 300 முதல் 350 ரூபாய் வரையில் விற்கப்படுகின்றன. இந்த விலை யேற்றத்துக்குக் காரணம், தேக்குமரம் சப்ளை செய்கிற பர்மாதேசத்தில் சென்ற வருஷம் போதிய மழை பெய்யாமை யெனப்படுகிறது. காடுகளில் வெட்டப்படு மரங்கள் காட்டாறுகள் மூலமாய்த்தான் நகரங்களுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமாம். சரியான மழையின்மையால் ஷை யாறுகளில் ஜலம் குறையவே மரங்களைக் கொண்டுவருவதற்குக் கூடாமையாய் விட்டது. புது டில்லிப்பட்டணத்துக்கு அதிகமாய் மரங்கள் ஏற்றுமதி செய்யப்படுவதை இரண்டாவது காரணமாய் கூறப்படுகிறது.

**செயற்கைப் பசும்பால்:**—அசல் பசும்பாலைப் பருகுவதில் "டியூபர்க்குளாஸிஸ்" என்னும் ஒரு வித க்ஷய ரோக முண்டாகிற தெனக்கண்டு செயற்கை விதமாய் பசும் பாலைச் செய்யும் விதத்தை ஜெர்மெனி ரஸாயனிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்! இது தாவரப் பொருட்களிலிருந்து செய்யப்படுகிறது. தாவரப் பொருட்களை யந்திரத்தாலாகிய செயற்கைக் குடலிலிட்டு ஜீரணிக்கச் செய்து அதனின்று பால் இறக்கப்படுகிறது. இப்படிச் செய்யப்பட்ட பாலைப் பருகிப் பரிசோதித்துப் பார்த்த பல சாஸ்திரிகள், அது குடிப்பதற்கு இனிமை யாயிருக்கிற தென்றும், இதனால் ஷை வியாதி உண்டாவதற்கு இடமில்லை யென்றுஞ் சொல்லுகிறார்களாம். இந்தப் பாலை லண்டனில் செய்து, புட்டி 2 அணா வாக விற்க உத்தேசிக்கிறார்கள். இந்த ஆச்சரியமான பால் இந்தியாவுக்கு வராமற் போகுமோ?

**மல்ல யுத்தத்தில் மாண்டான்.**—அமெரிக்க ஐக்கிய மாகாணத்தில் கால்கர்ட் என்னு மிடத்தில், அமெரிக்க மல்ல யுத்தகாரனை பெல்க்கி என்பவருக்கும், லூத்தர் மெக்கார்ட்டி என்பவருக்கும் நடந்த மல்ல யுத்தத்தில், முதல் வரிசையிலேயே முந்தினவர் பிந்தினவரைத் தாக்கி வீழ்த்தவே, தாக்கின அதிர்ச்சியினால் தரையில் வீழ்ந்த சில நிமிஷங்களுக் கெல்லாம் அவர் இறந்தார். ஒருவர் ஒருவருடைய சாமர்த்தியத்தைப் பார்க்க வெண்ணிய வேடிக்கையில் உயிர் துறக்க நேர்ந்தது என்ன பரிதாபம்!

**இருபொழு துணவு**-நாலு தாரங் கொண்டு, நாளது வரையில் சுகஜீவியாயிருக்கும் 92 வயதுடைய புரொபஸர் டூன்கன் துரை, தம்முடைய நீடிய ஆயுளுக்கும், தேக சுகத்திற்குங் காரணம், தாம் வாழ்நாளெல்லாம் தினத்திற்கு இருவேளை புசித்ததே யெனச் சொல்லுகிறார். இது சுத்த உண்மையே. இதற்கு நமது இந்திய ஆயுர்வேத சாஸ்திரத்திலும் ஆதார முண்டு. "உண்பதிருபொழு தொழிய மூன்று பொழு துண்ணோம். உறங்குவது இராவொழிய பகலுறக்கஞ் செய்யோம்" என நோயணுகாவிதி கூறப்பட்டுள்ளது. "ஒருபொழு துண்பவன் யோகி; இரு பொழுதுண்பவன் போகி; மூன்று பொழுதுண்பவன் ரோகி" எனவுஞ் சொல்லப்படுகிறதே.



**ஓர் ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பம்.**—நியூ இங்கிலாண்டு குடும்பத்தைச் சார்ந்த புரொபஸர் டுவைட் என்பர் இறந்தபிறகு அவர் மனைவியும், அவருடைய் கடைசிமகள் மரிகிருதாளும், ஒரே மகன் சூசையும் மூவரும் ஒருமிக்க உலகத்தை வெறுத்து கந்நியாஸ்திரி, சந்நியாச மடங்களில் பிரவேசித்தார்கள். அவருடைய நான்கு புத்திரிகளாகிய ஹெலன், மேரி, பிளாரென்ஸ், கத்தரீன் என்பவர்களும் ஏற்கெனவே கந்நியாஸ்திரி யானவர்கள். ஆக, தாயும், ஐந்து புத்திரிகளும், ஒரு புத்திரனும் தேவ ஊழியத்தில் பிரவேசித்தார்கள். இது வன்றோ தேவ ஆசீர் பெற்ற குடும்பம்? இம் மாதிரி நம் மிந்தியரில் ஒரு குடும்பமேனு முண்டோ?

**மக்களைப் பெற்ற மகராசி.**—அமெரிக்க ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த கிளீவ்லாண்டு என்னு மூரில், கிளார்க்கு என்னு மாதொருத்தி 35 வயதுக்குள் 27 பிள்ளைகளைப் பெற்றனளாம். இது எப்படி யாகுமெனிலோ, நந் நான்கு பிள்ளைகளாக இரண்டு பிரசவங்களும், மும்மூன்று பிள்ளைகளாக மூன்று பிரசவங்களும், இவ்விரண்டு பிள்ளைகளாக ஐந்து பிரசவங்களும், ஆக பத்து பிரசவங்களில் 27 பிள்ளைகளைப் பெற்றாள். இதனால் இவள் தனிப் பிள்ளையே பெறவில்லை யெனத் தெரிகிறது. ஆயினும் பெற்ற பிள்ளைகளில் ஆறுபேரே உயிருட னிருக்கிறார்களாம். 27 மக்களும் உயிரோடிருந்தால், இவளுக்கு மெத்த சந்தோஷ மாயிருக்கு மன்றோ!

**புதுவித துப்பாக்கிக் குண்டு.**—"நார்க்காட்டிக் புல்லட்" என்னும் புதுவிதமான துப்பாக்கிக் குண்டை அமெரிக்கர்கள் செய்து பரிட்சித்துவருகிறார்கள். அதனுடைய விசேஷமாவது என்னவென்றால், அக்குண்டினால் சிறு காயம்பட்டபோதிலும் காயம் பட்ட மனிதன் மயக்கங்கொண்டு தரையில் வீழ்ந்து தூங்கிவிடுவானும். பலத்த காயம் பட்டவர்களோ பெருந் தூக்கம்தூங்கிவிடுவார்களாம். வியாதியின் முகாந்தரத்தாலாவது, காயம் முதலிய உபத்திரவத்தாலாவது தூக்கம் பிடிக்காமல் தொந்தரவு படுகிறவர்களுக்கு ஐரோப்பிய வைத்தியர்கள் "மார்பியா" வென்னும் மயக்க மருந்தை தேகத்திற் குத்தி தூக்கம் உண்டுபண்ணுவதுண்டு. இந்த மயக்க மருந்தையே ஷை துப்பாக்கிக் குண்டில் சேர்த்துச் செய்கிறார்களாம். குண்டினால் உண்டான காயத்தின் நோக்காடு தெரியாதபடி மயக்கம் உண்டுபண்ணும் விஷயத்தில் இந்தப் புதுவித குண்டு மெத்த உசிதமான தென்றே சொல்லலாம்.

**ஸ்திரீ சுதந்தர வாதிகள்.**—ஸ்திரீகளுக்கு வாக்கு சுதந்தரம் கொடுக்க வேண்டுமென்று, பார்லிமெந்து மகா சபையில் மிஸ்டர் டிக்கின்ஸன் என்பவரால் ஒரு மசோதா கொண்டு வரப்பட்டது. அதைப்பற்றி முதன் மந்திரியாகிய மிஸ்டர் ஆஸ்குவித்தும் இன்னும் மற்றவர்களும் வாதஞ் செய்ததில், வாக்குச் சுதந்தரத்தை ஸ்திரி சமூகம் முழுதும் ஏகோபித்துக் கேட்கவில்லை யென்றும், எந்தப் பொருளுக்கும். நாசத்தைச் செய்துவரும் சண்டைக் காரிகளாகிய சில ஸ்திரிகளே சுதந்தரங்கேட்டு வாதிக்கிறார்களென்றும், இந்த ஸ்திரிகள் மற்ற ஸ்திரி சமூகத்துக்கு பிரதிநிதிகளாக மாட்டார்க ளென்றும் சொல்லப்பட்டதுடன், கொண்டுவரப்பட்ட மசோதாவுக்கு விரோதமாக அதிக வாக்கு இருந்தபடியால் அது தள்ளப்பட்டது. ஆயினும் ஸ்திரி சுதந்தரவாதிகள் தங்கள் தீங்கான செய்கைகளை விட்டவர்களல்ல. லண்டன் நகரித்திலுள்ள கோவில்களில் மிக்க நேர்த்தியானதாகிய அர்ச். கத்தரீனாள் கோவில், சமீபத்தில் தீக்கிரையாகி நாசமானதற்குக் காரணம் இவர்களே எனச் சந்தேகிக்கப்படுகிறது.

**ஆசாரத் திருத்த கான்பரன்ஸ்.**-திருச்சினாப்பள்ளியில் சென்ற மாதம் கூடின இந்துக்களின் ஆசாரத்திருத்தக் கான்பரென்சில், ஸ்திரிகளுக்குக் கல்வி கற்பிக்க வேண்டுமென்றும், அவர்களுக்கு வயது வந்த பின்னிட்டே கலியாணஞ் செய்விக்க வேண்டு மென்றும், சிறு பெண்கள் வைதவ்யமடைந்தால் அவர்களுக்கு புனர்விவாகம் தடுக்கப்படக் கூடாதென்றும், வைதவ்ய

மடைந்த ஸ்திரிகளுக்கு தலை மயிர் வாங்கல் முதலிய குரூபங்கள் செய்யப்படாதென்றும், கீழ் ஜாதியாரை உயர்த்த வேண்டுமென்றும், அன்னிய யாத்திரை போவது அவசியமென்றும், இன்னும் சில இதர விஷயங்களைப் பற்றியும் தீர்மானங்கள் செய்தார்கள். தங்களுடைய வேத சாஸ்திரங்களாலும், பழைய வழக்கப் பழக்கங்களாலுங் கட்டுப்பட்ட இந்துக்களே இவ்வாறு முன்வந்திருக்க, சகல விதத்திலும் இந்துக்களை விட அதிக விசாலமான நோக்கமும், பிறர் நேசமும், முற்போக்குங் கொண்டிருக்க வேண்டிய கிறிஸ்துவர்கள், அனாவசியமும், நிஷ்பிரயோசனமும், கேட்டைத் தரத்தக்கவையுமான வழக்கப் பழக்கங்களுக்குக் கட்டுப்பட்டு கடையராய்ப் போவானேன்?

ஆடையாபரணங்கள்மேல் பைத்தியம்.- இந்த விஷயத்தைப்பற்றி, இந்துநேசன் பத்திரிகைக்கு ஒரு கடிதநேயர் மெத்த நேர்த்தியாய் பின்வருமாறு எழுதுகிறார்: சித்திரப் பட்டாடைகளினாலே ஒருவருடைய மேனி மேன்மையாக மாட்டாது. இயற்கை யழகே யழகன்றிச் செயற்கை யழகு அழகல்ல. இதை யறியாமல் இப்போது இந்தியத் தென்னாட்டிலுள்ள ஆண் பெண்கள் ஆபரணங்களிலும், ஆடைகளிலும் அதிகப் பைத்தியம் பிடித்துத் தங்கள் அந்தஸ்துக்கும், வருவாய்க்கும் மிஞ்சி கடன் பட்டாவது வாங்கி யுபயோகிக்கின்றார்கள். அதிக வருமான முள்ளவர்கள் வாங்கி யுபயோகிக்கும் விதமே, குறைந்த வருமான முள்ள ஆண் பெண்களும் ஆடை ஆபரணங்களை யுபயோகிக்கின்றார்கள். ஐவேஜ் ஒத்துவராவிட்டால் கிலிட்டிலாவது அம்மாதிரி யுபயோகிக்கின்றார்கள். இதில் வந்த லாபமோ ஒன்றுமில்லை. ஆனால் ஒரு பயனிருக்கலாம். பொருட் காட்சிகளைப் பார்ப்பதற்குச் சேகரித்து வைத்திருக்கு மிடங்களுக்குப்போகும் சிரமமில்லாமல் இவர்கள் போட்டிருக்கும் ஆபரணாதிகளையே பார்த்து ஆனந்தித்துவிடலாம். பணக்காரர்கள் தான் ஆடையாபரணங்களில் வீணே பொருளைப் போடுவதில் கண்ட பயன் என்ன? தரிக்கிறவர்களுக்கு ஸ்வய ஆனந்தமென்ன இருக்கிறது? பிறர் பார்த்தல்லோ மதித்துப் போகிறார்கள். ஆயிரக் கணக்கான பணத்தைச் செலவு செய்வது ஒரு கண்காட்சி!

இப்படிச் செய்யும் அனாவசியச் செலவுகளை மட்டுப்படுத்திவிட்டு, ஏழைகளிடத்தில் தயைவைத்து, படிக்கும் ஏழைப் பிள்ளைகளுக்கு வாரச்சாப்பாடு, துணி முதலியவைகளை யுதவலாம். ஆனால் நம் வார்த்தையை யார்கேட்பர்! ஏழைச் சொல் அம்பலமேறுமா?

சற்பிரசாத சங்கம்.—இவ்வருஷம் சற்பிரசாத சங்கம் மத்திய தரைக்கடலிலுள்ள "மால்டா" வென்னுந் தீவில் கூடவேண்டுமென்று ஏற்கெனவே செய்த தீர்மானத்தின்படி சென்ற ஏப்ரல்மீ 23-ம் தேதி தொடங்கப்பட்டது. இது 24-வது சங்கமாகும். இச்சங்கத்தில் பாப்பானவரின் ஸ்தானாதிபதியாகிய, கனந்தங்கிய பெர்ராட்டாவென்னும் கர்தினால் விஜயஞ்செய்தார். எல்லா தேசங்களிலிருந்தும் கத்தோலிக்கர்கள் பெருந்தொகையாய் வந்து கூடியிருந்தார்கள். பாப்பானவரின் ஸ்தானாதிபதி அங்கு சென்றபொழுது அவ்வூர் கத்தோலிக்கர்களில் பிரபுக்கள் முதலானோர் மகா கூட்டமாய்க்கூடி அவருக்கு அன்பாய் நல்வரவு கூறி உபசரித்து, அவரை நான்கு குதிரைகள் கட்டிய அழகிய வண்டியிலேற்றி, கீத வாத்தியங்கள், மேளதாளங்கள் முழங்க, இருபுறமும் கத்தோலிக்கர் வரிசை வரிசையாக நிற்க, பிரபுக்கள் முதலானோர்கள் வண்டிகளின் மீதும் மோட்டார் கார்களின் மீதும் பின்தொடர்ந்து வர, வெகு ஆடம்பரமாய் ஊர்வலங்கொண்டு சென்றார்கள். ஊர்கோலஞ் சென்ற தெருவெங்கும் தோரணங்கள் துவஜங்கள் முதலியவை கட்டியும், தரையெங்கும் புஷ்பங்கள் தெளித்தும் வெகு அலங்காரஞ் செய்யப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட அலங்கார ஆடம்பரங்கள் அதற்குமுந்தி அவ்வூர்வாசிகள் யாருங் கண்டிராதவைகளாயிருந்தனவாம். இச்சங்கம் கூடி நடத்திய நடவடிக்கைகள், செய்த தீர்மானங்கள், சடங்குகள் முதலிய விவரங்கள் இன்னும் நமக்கு எட்டவில்லை. இவைகள் எட்டியபின் இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். இவையெல்லாம் இரவும் பகலும் நமக்காக, நம்முடனே வாசஞ்செய்யும் இரட்சக பெருமானின் மகிமைக்கே யன்றோ? சற்பிரசாத நாதருக்கு சதா காலமுந் தோத்திரமு நமஸ்காரமு முண்டாகக் கடவது!

---



## NEWS OF THE MONTH.

### மாச வர்த்தமானம்.

கிரீக் அரசனைக் கொன்றவன்.—கிரீக் தேசத் தரசரைச் சுட்டுக் கொன்ற ஸ்கீனாஸ் என்ற சண்டாளன், சலோனிக்கா சிறைச்சாலையின் சன்னலிலிருந்து தப்பியோடக் குதித்ததில், வீழ்ந்த அதிர்ச்சியால் கன காயப்பட்டு அவலமாய்ச் செத்தான்.

அர்ச். பாப்பானவர்—நமது பரிசுத்த பிதாவாகிய பத்தாம் பத்திநாதருக்கு பனை போல் வந்த பிணி முற்றும் பனி போல் நீங்கிப் போக, அவர் இப்போது சர்வ சௌக்கியமா யிருக்கிறார். பழையபடி தமது நானாவித அலுவல்களை நடத்திக் கொண்டு வருகிறார். எல்லாம் வல்ல ஈசன் அவரைச் சகல நோய் துன்பங்களினின்றுங் காப்பாற்றி இரட்சிப்பாராக!

மிகாடோவின் அசௌக்கியம்.—ஜப்பான் தேசத்துக்கு புதிதாய்வந்த சக்கரவர்த்தியாகிய மிகாடோ, குளிர் சுரத்தால் மிக்க அபாயகரமான ஸ்திதியில் இருப்பதாகவும், எட்டு வைத்தியர்கள் அவருக்கு சிகிச்சை செய்வதாகவும் முதல் சமாசாரம் வந்தது. பின்னர் வந்த தந்திசமாசாரத்தினால் அவருடைய தேகநிலைமை வர வர அதிக திருப்திகரமா யிருந்துகொண்டு வருகிறதென்று தெரிகிறது. அவர் சீக்கிரத்தில் சௌக்கியமடையும்படி கோருகிறோம்.

டில்லி சதிச்செயல்.—இது சம்பந்தமாய் கைதி செய்யப்பட்டதாக சென்ற மாத சஞ்சிகையில் சொல்லப்பட்ட இராமச்சந்திர ரகுநாதனென்பவன்பேரில் ஒரு குற்றமான செய்கையும் சாட்டுவதற்குப் போதுமான ஆதாரம் அகப்படாததால் அவன் விடுதலை செய்யப்பட்டான். இதுவன்றி காசியிலிருந்து லாகூருக்கு சங்கீதம் கற்றுக் கொள்வதற்காக வந்த வங்காள வாலிபர்களிருவரைப் பிடித்து வைத்திருக்கிறார்கள். இவர்கள்பேரிலும் யாதொரு குற்றமும் ஏற்படவில்லை யென்று தெரிகிறது.

இன்னொரு இராஜ கொலைப் பிரயத்தனம்.—அரசர்களையே கொல்வதென கங்கணங் கட்டிக் கொண்ட பாதகர்கள் புறப்பட் டிருக்கிறார்கள்போலும். சென்ற சிறிது காலத்துக்குள் பல அரசர்களுடையவும், அதிபதிகளுடையவும் உயிரைப் பறிக்கத் தேடினார்கள். இப்போது ஜெர்மனியைச் சேர்ந்த பேடன் நாட்டு கிரான்டியூக்கானவர், குதிரைப் பந்தயம் பார்த்து விட்டு அரண்மனைக்குத் திரும்புகையில் ஒரு கொலைப் பாதகன் உருவின கத்தியுடன் டியூக் கிருந்த வண்டியின் படிமேல் ஏறினவுடனே, அவர் எச்சரிக்கை கொண்டு அவனைக் கீழே தள்ளி விட்டார். அவனை யுடனே போலீஸார் கைதியாக்கிக் கொண்டார்கள்.

பால்கன் துருக்கி யுத்தம்.—இந்த யுத்தம் சென்ற மாதத்திலெந்த ஸ்திதியிலிருந்ததோ அதே ஸ்திதியில் தான் இப்போது மிருக்கிறது. சண்டை போட்ட பாடுமில்லை, சமாதானஞ் செய்த பாடுமில்லை. துருக்கியர் சண்டையை விட்டு ஒழிந்திருந்த போதிலும், பால்கன் நாடுகளுக்குள்ளேயே கலகமும் சண்டையு மாயிருக்கின்றது. கிரீஸுக்கும் செர்வியாவுக்கும் ஏற்பட்டுள்ள உடன் படிக்கையின் பிரகாரம் இவையிரண்டும் பல்கேரியாவுக்கு எதிர்த்திருக்கின்றன. பல்கேரியாவுக்கும் கிரீசுக்குஞ் சென்ற மீ 23ம் தேதி ஒரு சிறு சண்டை நடந்தது. அந்தந்த நாட்டு ஸ்தானாதிபதிகளும் லண்டன் நகரத்தில் பலவிசை கூடி காரியா காரியங்களைப் பேசி முடிவானபடி அந்தந்த நாட்டரசர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவரவர்களுடைய முடிவான கருத்தை இன்னுந் தெரிவிக்கவில்லை. இன்னும் ஒரு வாரத்துக்குள் சமாதான உடன்படிக்கை முடிவாகி கையொப்ப மிடப்படுமென்று சொல்லப்படுகிறது.

எம். அண்டு எஸ். எம். ரெயில்வே.—இந்த ரயில்வேயிலுள்ள டிரைவர், கார்டு, பாயின்ட்ஸ்மென், போர்ட்டர்கள் முதலாகிய சிப்பந்தி உத்தியோகஸ்தர்கள் தங்களுடைய சம்பளங்கள் சௌகரியங்கள் மற்ற ரயில்வே சிப்பந்திகளை விட குறைவாயிருக்கின்றனவென்று அதிருப்தி கொண்டு, சென்ற மேமீ துவக்கத்திலேயே வேலையினின்று நின்றுவிட்டு, ரெயில் வண்டிகள் ஓடாமற் செய்ய வேண்டுமென்று பிரஸ்தாபஞ் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் ஷை ரெயில்வே ஏஜெண்டு அவரவர்களுடைய சம்பளங்களையும்

கிரேடுகளையும் யுக்தப்படி மாற்றி உயர்த்தி
ஒழுங்கு செய்தார். மறுபடியும் இப்
போது ஏதோ சில அற்ப காரணங்களை
முன்னிட்டு ஷை சிப்பந்திகள், விசேஷமாய்
பாயின்ட்ஸ்மென், போர்ட்டர்கள் முத
லான கீழ்த்தர சிப்பந்திகள் ஜோலார்பே
ட்டை, காட்பாடி முதலிய சில விடங்களில்
கலகமிட்டு வேலையினின்று ஓரே கட்டாக
நின்றுவிட்டார்கள். இதன் காரணங்களா
க, பெங்களூர் வண்டிகள், மேட்டுப்பாளை
யம் வண்டிகள் சில நாளாய் 3, 4, மணி நே
ரம் தவக்கப்பட்டு வருகின்றன. சில வண்
டிகள் புறப்படாமலே நின்று விட்டன.
இந்தக் கலகம் மற்ற இடங்களுக்கும் பரவு
மெனச் சொல்லப்படுகிறது. இப்படி யாகு
மானால் மெயில்களும், தபால்களும் தவக்
கப்படும்; பிரயாணிகளுக்கு சங்கட்ட மா
கும் என்று அஞ்சப்படுகிறது. நமது சந்தா
தார நண்பர்களுக்கு பத்திரிகை எவ்விதம்
சேருமென நாமுங் கவலை கொள்ளுகி
றோம்!!

**கும்பகோணத்து மேற்றிராணியார் மர
ணம்.**—கும்பகோணத்து மேற்றிராணி
யாராகிய சரியாய் வந்திக்கத்தக்க எச்.
எம். பொத்தேரோ ஆண்டவரவர்கள் விரு
த்தாப்பியத்தால் சென்ற மே மீ 21உ
மாலை 7 மணிக்கு அம்பரன் திருவடியடை
ந்தார ரெனக் கேள்வியுற்று மெத்தவும் விய
சன மடைந்தோம். அவருடைய சரீரம்
அடுத்த நாள் மாலை 5 மணிக்கு மேற்றிரா
சனக் கோவிலுக்குள் அடக்கஞ் செய்யப்
பட்டது. இவருக்கு வயது 76. இவர்
1859ஆ குருப்பட்டம்பெற்று இத்தேசத்
துக்கு வந்து, புதுச்சேரி கலோனியல்
கலாசாலை மானேஜராகவும், புதுவை யச்சு
க்கூடத்துத் தலைவராகவும், மேற்றிராசனக்
கோவில் விசாரணைக் குருவாகவும், விரி
யூர், சந்திரனகூர் பங்கு சுவாமியாராகவும்
இருந்த பிறகு 1899ஆ நவம்பர்மீ 30உ
புதுவையில், மிக வந்திக்கத்தக்க காந்தி
ஆண்டவரால் கும்பகோணத்து முதல் மே
ற்றிராணியாராக பட்டாபிஷேகஞ் செய்
யப்பட்டார். ஆகவே, இவர் ஏறக்குறைய
14ஆ மேற்றிராசனம் வகித்தார். இவர்
மெத்த மனவலிமையும், கொண்ட கருமத்
தில் தளரா ஊக்கமு முடையவர். ஆத்தும
விஷயமாயும், சரீரவிஷயமாயும் இந்தியரி
ன் ஈடேற்றத்தை ஆவலுடன் விரும்பிய
வர். மகா தாட்டீகப் பிரசங்கி. தமிழை
ஐயந் திரிபறக் கற்றவர். தமிழில் பல புத்
தகங்களை எழுதியதுடன், சுவிசேஷத்தை
நல்ல தமிழில் மொழி பெயர்த்தார். இவ
ரைப் போல் இந்திய பாஷையை அதிசிர
மப்பட்டுக் கற்றுத் தேர்ந்த மேற்றிராணி
மார்கள் வெகு சிலரே. நல்ல பாஷாஞான
மும், அநுபோகமு மடைந்த இவரது மர
ணத்தால் கும்பகோணத்து மேற்றிராச
னம் அடைந்த நஷ்டம் சுலபத்தில் பரிகரி
க்கப்படக் கூடிய தல்ல. இந்தப் பெரு
நஷ்டத்தைப் பற்றி கும்பகோணத்து
உதவி மேற்றிராணியாராகிய மகாகனந்
தங்கிய ஷப்புயி ஆண்டவரவர்களுக்கு நம
து உள்ளப்பூர்வமாய் அநுதாபங் கூறுகின்
றோம். சென்ற அரை நூற்றாண்டுக் கதிக
மாய் நம தாண்டவருடைய திராட்சைத்
தோட்டத்தில் வருந்தி யுழைத்து, தளர்
ந்த வயதில் மரித்த இந்த நல்ல மேற்றி
ராணியாருக்கு சர்வ ஜீவதயாபரன் நித்திய
இளைப்பாற்றியைக் கட்டளை யிடுவாராக!

**லேடி ஆர்டிஞ்சும் பள்ளிச் சிறார்க
ளும்:**—டில்லியில் வெடி குண்டு சம்பவத்
தின் போது நமது இராஜப்பிரதி நிதியவர்
களும், அவர் மனைவியாகிய ஹார்டிஞ்சு
பிராட்டியாரும் உயிர்ச்சேத மின்றி காப்
பாற்றப்பட்ட விஷயமாய் ஜனங்களுக்
குண்டான சந்தோஷத்தினுடையவும், நன்
றியறிதலி னுடையவும் அறிகுறியாக பல
விடங்களிலிருந்து ஹார்டிஞ்சு பெருமாட்
டிக்கு காணிக்கைப் பணங்கள் அனுப்பப்
பட்டன. அப்பணத்தை யெவ்வாறு செ
லவிடுவதென யோசித்ததில், ஹார்டிஞ்சு
பிரபு அவர்களின் ஜனனோற்சவ தினமாகிய
நிகழும் ஜூன்மீ 20உ யன்று இவ்விந்தியா
விலுள்ள சகல பள்ளிக் கூடத்துப்பிள்ளை
களுக்கும் விருந்தளிப்பதே உசிதமெனக்
கருதலானார்கள். ஆயினும் இவ்வருஷ மட்டு
மல்ல, இனியெப்போதுமே வருஷாவருஷம்
இப்படியே அந்த நாளை பிள்ளைகளின் பொ
து சந்தோஷ நாளாகக் கொண்டாடவேணு
மென்பது ஹார்டிஞ்சு பிராட்டியாரது அபீ
ஷ்டம். இப்படிச் செய்விப்பதற்குச் சேர்ந்த
பணம் போதாதாகையால், அதைப்பாங்கி
யில் போட்டு, வரும் வட்டியைக்கொண்டு
வருஷா வருஷம் ஜூன்மீ 20உயில் ஆஸ்பத்
திரியிலுள்ள சிறுவர்களுக்கு மாத்திரம்



விருந்தளிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்.
இஃதன்றியும் இவ்வருஷம் மாத்திரம் ஷை
தேதியில், இந்தியாவிலுள்ள எல்லாச் சிறு
பிள்ளைகளுக்கும் விருந்தளிக்க விருப்பங்
கொண்டு, அதற் கென விசேஷ பொதுத்
தண்டல் செய்வித்து, அத்தினத்தை மேற்
கண்ட விதமாய்க் கொண்டாட முயற்சி
செய்ய வேணு மென்று அந்தந்த மாகாண
கவர்னர்களுக்குக் கற்பித் திருக்கிறார். இ
தை யநுசரித்து; சென்றமீ 26ம் தேதி
சென்னை கார்ப்பொரேஷன் ஆபீசில் கலெக்
டர் ஆஸ்டின் துரையவர்கள் அக்கிராச
னத்தில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது.
அதில், ஆர்டிஞ்சு பெருமாட்டியின் அபீஷ்
டப்படி ஜூன்மீ 20உ பள்ளிக்கூடத்துச் சி
றுவர் சிறுமிகளுக்கு விருந்தளிக்க வேண்டு
மென்றும், அதற்காக பொதுத் தண்டல்
செய்விக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்
பட்டது. அந்தக் கூட்டத்தில் ரூ. 880 க்
குக் கையொப்ப மிடப்பட்டது. இதற்கு
10,000 ரூபாய்செலவு பிடிக்கு மென மதிப்
பிடப்பட்டிருக்கிறது.

**வில்லியனூர் சங். கிளேமேன்ட் சுவா
மியார் காலஞ் சென்றார்.**-புதுவையைச்சேர்
ந்த வில்லியனூர் அர்ச். லூர்து நாயகியால
யத்தின் விசாரணைக் குருவாகிய சங்.
கிளெமென்ட் சுவாமியாருக்கு இந்த கோ
டைகால வெப்பத்தினால் தேகத்தின் பல
விடங்களில் கட்டி கண்டு உபத்திரவப்
படுத்திய படியால், அவர் பெங்களூருக்
குப் போய் சுக மடையலா மெனக் கருதி,
சங். லாசர் சுவாமியாரைக் துணையாகக்
கொண்டு புறப்பட்டார். ஓரே மட்டாய்
பெங்களூருக்குப் பிரயாணஞ் செய்வது
கஷ்டமென்று, வழியில் சென்னப் பட்ட
ணத்தில் ஒரு பகல் தங்கிப் போகலாமென்
றெண்ணி சென்னையில் இறங்கின விடத்
தில் அவருக்கு தேகம் அதிக அசௌக்கிய
முற்ற படியால் ஆஸ்பத்திரிக்கு உடனே
போகும் படியான அவசிய நேரிட்டது.
அங்கே கொண்டு போகப் பட்ட கொஞ்
சம் நேரத்துக் கெல்லாம் அவஸ்தையாகி
சங். கிளெமென்ட் சுவாமியார் தமது ஆத்
துமத்தை அம்பரன் கையில் ஒப்புவித்து
1913ஆ மேமீ 19ம்உ செவ்வாய்க்கிழ
மை இரவு 9 மணிக்கு அமைதியாய் யுயிர்
விட்டார். அவருடைய சரீரம் அடுத்த
நாள் காலை 8 மணிக்கு, அர்ச். ஆரோக்கிய
நாதர் கல்லறைக் கோவிலுக்குக் கொண்டு
போகப் பட்டு ரெக்குவீம் பாட்டுப் பூசை
செய்யப்பட்டபின், அக்கல்லறையில் அடக்
கஞ் செய்யப்பட்டது. இவர் இருந்த
பங்கு விசாரணைகளி லெல்லாம் நல்ல சுவா
மியா ரெனப் பேர் பெற்றவர். மிகச் சாது
வானவர். "நல்ல ஆயன்" சந்தாதாரரி
லொருவர். இவருடைய ஆத்தும இளைப்
பாற்றிக்காக நமது சந்தாதாரர் எல்லா
ரும் வேண்டிக் கொள்ளக் கோருகிறோம்.

---

## DOMESTIC OCCURRENCES.

## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

### விசேஷக் குறிப்பு.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம்
ஒன்றுக்கு 8-அணு முன்பணம் அனுப்பினாலன்றி,
குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்
பட மாட்டா வென்பதை நண்பர்கள் கவனிக்கக்
கோருகிறோம். அரைக் கலத்துக்கு மேற்பட்டு
முக்கால் கலத்துக்கு உட்பட்டால் முக்கால் ரூபா
யாகும். முழுக்கலத்துக்கு ஒரு ரூபாயாகும். கால்
ரூபாய்க்கு இவ்விளம்பரங்கள் ஒருபோதும் பிர
சுரிக்கப்பட மாட்டா.

### ஜனன அறிக்கை.

#### வேம்பார்.

எனது தமக்கையாரும், எனது அத்தான்
ம-ா-ா-ஸ்ரீ M. J. விக்டோரியா அவர்களின்
மனைவியுமாகிய மனோன்மணியம்மாள் 1913 ம்
வருஷம் எப்ரல்மீ 12உ சனிக்கிழமை மாலை
5-மணிக்கு தேவானுக்கிரகத்தாலும், அர்ச்.
பொம்பேயி நாயகியின் வேண்டுதலாலும் முதற்
பேறாக ஓர் ஆண் மகவை யீன்றனள். ம-ா-ா-ஸ்ரீ
S. வேதநாயகம் பெர்னாந்து அவர்களையும் ஷை
யாரின் மனைவி ஆரோக்கியம்மாளையும் ஞானத்
தாய் தந்தையர்களாகக்கொண்டு 20உ சங். கு
சைமாணிக்கநாத சுவாமியவர்களால் அக்குழந்
தைக்கு ஞானதீட்சை கொடுக்கப்பட்டு, மனு
வேல் சந்தியாகு அல்பெர்ட் என நாமகரணஞ்
சூட்டப்பட்டது.

இப்படிக்கு.
எஸ். ஆர். தல்மேய்த.

#### இரங்கோன்.

நிகழும் 1913ஆ எப்பிரல்மீ 11உ வெள்
ளிக்கிழமை முற்பகல் 11-30 மணிக்கு எனது
ஆப்தமித்திரரான Financial Commjs-
sioner's Office Assistant Branch Clerk
R. L. மனுவேல் அவர்களின் பிரிய மனைவி மங்

களம் பிராஞ்சீன் அம்மாள், தேவ ஆசீரால் முதல் பேருக ஓர் பெண்குழந்தையைப்பெற்றனள். மேற்கண்ட மாதம் 27 ௳ ஞாயிற்றுக்கிழமை காலை சின்னகாந்தம் அர்ச். அந்தோனியாராலயத்தில் இராஜரிஷி சங். எச். டிசால் (Rev. Fr. H. Dessalle) குருதேசிகரால் ஜோசப்பின் என்று நாமகரணஞ் சூட்டி, ஞானதீட்சை கொடுக்கப்பட்டது. அதற்கு இரங்கோன் கவர்ன்மென்ட் பிரஸ் கம்பாசிட்டர், கனம் A. அருள்தாஸ் அவர்களும், அவரின் பிரிய மனைவி மாகியம்மாளும் முறையே ஞானதந்தை தாயாராக இருந்தனர். இக்குழந்தையின் ஆத்தும சரீரத்துக்குவேண்டிய ஆரோக்கியத்தைக் கட்டளையிட்டருளும்படி திரியேக தேவனின் திருவடிகளைத் தோத்திரிக்கின்ற,

டேவிட் துரைசாமி.

---

## நன்மரண அறிக்கை.

---

### புன்னைக்காயல்.

எனது பிரிய மித்திரரும் இந்ல்லாயன் சந்தாதாருமாகிய J. ஜான்பெர்ணந்து அவர்கள் தமக்கு நெடுநாளா யுண்டாகிய நடப்பு வியாதிக்கு வேண்டும் பல ஔஷதங்கள் பிரயோகித்துங் குணப்படாது, நாளது மே௴ 1௳ மாலை 4½-மணிக்கு கடைசித் தேவத்திரவிய அனுமானங்கள் யாவும் பூரணமாய்ப் பெற்று, அன்று ஒட்டோலகராய் பரலோகத்திற் காரோகணமாகிய கர்த்தரின் திருக் கரங்களில் வெகு அமரிக்கையாய் தமது ஆத்துமத்தை ஒப்படைத்து இவ்வுலகம் விட்டகன்றனர்.

இதனைக் கண்ணுறும் நேயர்க ளனைவரும் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக 1 பர. 1 பிரி. 1 திரி. வேண்டிக்கொள்ளப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறேன்.

ச. அடைக்கல கொன்சால்வஸ்.

### கொழும்பு.

ஐயா! எனது பிரியமித்திரர் ச. தொம்மை சிலுவைப் பெர்ணந்தவர்களின் மனையாளாகிய கு. சேசம்மாட் பெர்ணந்து, பிரசவ வேதனை மிகுதியால் சென்ற மார்ச்சு ௴ 25ம் தேதியாகிய செவ்வாய்க்கிழமையன்று இவ்விக சுக போக இன்பங்களை யெல்லா மறவே பொழித்து. தம் முறவினர். சுற்றத்தார். பந்துக்கட்கெல்லாம் மாற்றொணு துயர பிரலாபத்தை விடுத்து, கடைசி அவஸ்தைப் பூசுதலுடன் திவ்ய நற்கருணை உட்கொண்டு, பின்னேரம் 6-30 மணியளவில் தனது சரீரத்தை மண்ணுக்கிரையாகவிட்டு இவ்வுலகசீவிய கணக்கை ஒப்புவிக்க திவ்ய விரட்சக பெருமான் சமுகமேகினள். 26ம் தேதியாகிய புதன்கிழமையன்று பின்னேரம் 4-30 மணிக்கு அப்பெண்மணியின் ஆத்தும இளைப்பாற்றிக்காக கொழும்பு கொட்டாஞ்சேனை அர்ச். சந்தலூசியாளின் தேவாலயத்தில், அமலோற்பவ அன்னையின் சபையைச் சேர்ந்த இருகுருமார்களால், ஒப்பீஸ் பாடப்பட்டபின், அவள் சடலம் மந்திரிக்கப்பட்டு, சில கிறிஸ்தவ நண்பர்களால் மிகு துக்க பிரலாபத்தோடு மாதம்பிற்றித் தெருவிலமைக்கப்பெற்ற சவச்சாலையில் அடக்கம் பண்ணப்பட்டது.

இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக இதை வாசிக்குங் கத்தோலிக்குக் கிறிஸ்துவ நண்பர்கள் 1 பர. 1 பிரி. 1 திரி. வேண்டிக்கொள்ளும்படியாய்ப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்:

T. Sourimuthu Fernando.

---

## விலைக் குறைவு.

### இங்கிலீஷ் அன்ட் டாமில் பாப்பியுலர் வக்காபிலரி அன்ட் ரீடர்.

முன் விற்ற விலை ரூ. 2-8-0. தற்காலம் ஒரே ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

மேற்படி புஸ்தகமானது கொஞ்சம் இங்கிலீஷ் படித்தவர்களும், முற்றிலும் இங்கிலீஷ் படியாதவர்களும், பெண்களும், சிறுபிள்ளைகளும் இங்கிலீஷ் பாஷையை வெகு சீக்கிரத்தில் கற்றுக்கொள்ளும் நோக்கமாய் எண்ணிறந்த இங்கிலீஷ் வார்த்தைகளை ஓரசையாகவும், ஈரசையாகவும் மூவசையாகவும், வாக்கியங்களாகவும், இங்கிலீஷ் வார்த்தைகளையே தமிழில் திருப்பி, வாக்கியங்களையுந் தமிழ்ப் படுத்தி இருக்கின்றன. (திருஷ்டாந்தமாக) Ache என்னும் மொழியை தமிழில் எக் என்றும், Cash என்னும் பதத்தை காஷ் என்றும்; அவைகளின் அர்த்தத்தையும் எக்-வலி: காஷ் பண மென்றும்; Who are you என்பதைஊஆர்யு; நீ ஆர் என்றும், இப்படி பற்பல வகையாய் சிறியவர்களுக்கும் பெரியவர்களுக்கும், கற்றவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பிரயோஜனமாகவும, A B C & Z வரைக்கும் படங்களுடனும், பிள்ளைகளுக்கும் பெரியவர்களுக்கும் பயனதாத்தக்க அருமையான இங்கலீஷ் லெட்டர் ரைட்டரும் இன்னும் பல விஷயங்களும் அடங்கியிருக்கின்றன.

மஹா விகடதூதன் ஆபீஸ் மதராஸ்.



# நல்ல ஆயன்.

July—1913.

புத்தகம். 11 | "நாம் நல்ல ஆயன் ..நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10:17-14.) | நெம்பர். 7

---

## HOW TO BEGIN THE DAY?

## எப்படி நாளைத் துவக்குவது?

"செம்மையாய் துவக்கப்பட்ட காரியம் செம்மையாய் முடியும்" என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. இதன் உண்மையை அநேகர் தங்கள் அநுபோகத்தில் கண்டிருக்கலாம். ஒருநாளில் நாம் செய்கிற பற்பல காரியங்களின் விஷயமாய் இந்தப் பழமொழி பலிதப்படலாமானாலும், ஒரு நாளையே துவக்கும் விஷயத்தில் இது வெகு லாபகரமாய் அநுசரிக்கப்படத் தக்கது. ஒருவன் ஒரு நாளை நற்காரியத்திலோ துர்க்காரியத்திலோ துவக்குமாப்போல் அந்த நாளும் நன்மையாகவோ, தின்மையாகவோ முடியும். "முதற் கோணல் முற்றுங் கோணல்" என்பது நம் முன்னோரது மூதுரை. இதனால் "முதற் செம்மை முற்றுஞ் செம்மை" என்பதும் பெறப்படும். ஆகவே ஒருநாளை நன்மையாய் முடிக்க விரும்புகிறவர்கள் அதை நற் காரியத்தைக் கொண்டே ஆரம்பித்தல் அவசியம் என்பது விளக்கமாகிறது. கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களாகிய நாம் நாளை நல்லவிதமாய்த் துவக்குவதற்கு திவ்விய பூசையைவிட நல்ல காரியம் வேறெது?

எவ்வித புண்ணிய முயற்சியையும் விட தினந்தோறும் பத்தியோடு திவ்விய பூசை காணுவது மேலானதென்பது நிச்சயத்திலும் நிச்சயமாமே. சாதாரணமாய் கிறிஸ்துவர்கள் ஜெபம், தபம், தர்மம் முதலிய நற்கிருத்தியங்களைச் செய்து, புண்ணிய பலன்களைச் சம்பாதிப்பார்கள். ஆனால் எவனொருவன் தினந்தோறும் பத்தியோடு திவ்விய பூசை காண்பானோ அவன் மேற்சொல்லிய கிறிஸ்துவர்களை விட ஆயிர மடங்கு ஏராளமான புண்ணிய பலன்களைச் சம்பாதித்துக் கொள்வா னென்பதற்குச் சந்தேக மில்லை இது விஷயமாய் நமக்கு அர்ச். லாரன்ஸ் ஜூஸ்தினியார் சொல்லுகிறதாவது: "உனது. ஜெப தப தான தர்மமாகிய புண்ணிய முயற்சிகளை யெல்லாம் தராசின் ஒரு தட்டிலும், நீ பத்தியோடு காணும் ஒரே ஒரு பூசையை மற்றொரு தட்டிலும் வைத்துப் பார்ப்பாயாகில், அந்த ஒரு பூசையானது, அத்தனை புண்ணிய முயற்சிகளையும் விட அதிக பளுவாய் இருப்பதை யறிவாய்" என்பதே. இதற்கு முகாந்தரம் யாதென்றால், கோவிலில் பீடத்திலே நாடோறும் நடந்தேறும் பூசைப்பலியானது கல்வாரிமலையில் நமதாண்டவராகிய சேசுநாதர் நம்முடைய ஈடேற்றத்திற்காகசெலுத்திய பலியே யன்றி வேறல்ல. அதற்கு மிதற்கும் அணுவளவும் வித்தியாச மில்லை. ஆகையால் நாம் தினம் தினம் திவ்விய பூசை காணுவதினால் நம தாண்டவராகிய சேசுநாத சுவாமியின் கல்வாரி மலைப் பலியையே தரிசித்து, அப்பலியின் மூலமாய் அவர் சிந்தின திரு இரத்தப் பலன்களையே ஏராளமாய்ப் பெறுகிறோம். இப்படி தினந்தோறும் திவ்ய பூசை வழியாய் நமது இரட்சகராகிய சேசுநாதர் தமது திருப்பாடுகளின் பேறு பலன்களை கணக்கற்றவிதமாய் நமது பேரில் பொழிகிறார்.

ஆனதுபற்றி நம்மால் ஆனமட்டும் பிரையாசைப்பட்டு அனுதினமும் திவ்ய பூசை காணுமற் போவோமானால், நாம்பெறக் கூடிய அளவற்றநன்மைகளை இழந்து போகிறதுந் தவிர, நமக்கு அத்தியாவசியமாய் வேண்டிய பாவமன்னிப்பையும் அடையாமற் போகிறோம். சாவான பாவ அந்தஸ்திலிருக்கிற கிறிஸ்துவர்கள் அநு தினமும்

பூசை நேரத்தில் தங்கள் பாவ அக்கிரமங்களுக்காக சர்வேஸ்வரனிடத்தில் துக்க மனஸ்தாபத்தைக் கேட்டால், அதைத் தப்பாமல் அடைவார்கள். தேவ இஷ்டப் பிரசாதத்தோ டிருக்கும் பக்தியுள்ள கிறிஸ்துவர்களோ தினந்தோறும் திவ்விய பூசை காணுவதினால் மேன்மேலும் ஏராளமான வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்வதுமல்லாமல், அவர்களுடைய அற்பப் பாவங்களுக்குப் பொறுத்தலையும் அடைவார்கள். மேலும் பூசையின் பலனால் பொறுக்கப்பட்ட சாவான பாவங்களுக்குரிய அநித்திய தண்டனையும் நீங்கிப் போகிறது.

அர்ச். பிரான்சீஸ்கு சலேசியார் சொல்லுமாப்போல திவ்விய பூசையில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப் பலியாகிய சேசுநாத சுவாமியுடன் நாமும் ஏகோபித்து ஜெபிப்போமானால், நம்முடைய ஜெபம் சர்வேஸ்வரன் சன்னதியில் அதிக வலிமையுள்ளதா யிருக்கும். மேலும் நாம் திவ்விய பூசை நேரத்தில் சர்வேஸ்வரனிடத்தி லிருந்து அடையக்கூடிய நன்மைகளை வேறெந்த சமயத்திலும் அடையமாட்டோமென்பது திண்ணம். ஏனெனில், நீசர்களாகிய நமது வேண்டுதல் திருப் பீடத்தில் பலியாகிற சேசுநாத சுவாமியுடைய வேண்டுதலோடு கூட ஒன்றித்துப் போவதால், அதை சர்வேஸ்வரன் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளுகிறார். அவர் தமது திருக்குமாரனுடைய ஜெபத்தை அலட்சியஞ் செய்வாரோ? பரிச்சேதமுமில்லை, பிதாவாகிய சர்வேஸ்வரன் அவருடைய வேண்டுதலுக்கு எப்போதும் காதுகொடுக்கிறாரென்று அர்ச். அருளப்பரும் வசனித்திருக்கிறார்.

மனிதனுடைய இரட்சண்யத்துக்கு- அதற்கு வேண்டிய தேவானுக்கிரகத்தைப் பெறுவதற்கு- இகத்துக்கும் பரத்துக்குமான பல நன்மைகளை யடைவதற்கு திவ்விய பலி பூசையைப்போல உத்தம சாதனம் வேறொன்றுமில்லை. சர்வேஸ்வரனுக்கு உரிய ஆராதனை செலுத்துவதற்கும், அவர் செய்துள்ள அரிய பெரிய உபகாரங்களுக்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்வதற்கும், நமக்கு அத்தியாவசியமாயிருக்கிற பாவ மன்னிப்பு பெறுவதற்கும், இன்னும் நமக்கிந்த கண்ணீர் கணவாயில் வேண்டும் பல சகாயங்களைக் கேட்டடைவதற்கும் திவ்ய பூசை நேரத்தைவிட அதிக சாதகமான நேரம் வேறேதுமுண்டோ? இப்படிப்பட்ட நல்ல நேரத்தை வீணே போக விடுவது மதியீனமன்றோ?

தங்கள் பாவங்களுக்காக உத்தரிக்கிற ஸ்தலத்தில் கொடிய வேதனைப் பட்டுப் பரிகாரம் பண்ணுகிற ஆத்துமாக்கள் பரிசுத்தப் பூசைப் பலியின் பேறு பலன்களை வெகு கனமாய் எண்ணுகிறதுபோல், சகல கிறிஸ்துவர்களும் எண்ணுவார்களே யானால் அவர்கள் பாக்கியவான்களே. ஏனெனில், உத்தரிக்கிற ஆத்துமாக்கள் தங்கள் ஜீவிய நாட்களில் ஏராளமாய் திவ்வியபூசை கண்டு அதன் பேறுபலன்களைக் கொண்டு தங்கள் அநித்ய கடனை நீக்கிக்கொள்ளாமற் போனோமே யென்று வெகுவாய் அங்கலாய்க்கிறார்கள். அந்தோ! அவர்கள் அப்போது அவைகளைப் பெற்றுக்கொள்ள அலட்சியம் செய்து அந்த நல்ல தருணத்தை இழந்து விட்டதைப் பற்றி இப்போது பிரலாபிக்கின்றனர்.

தினந்தோறும் திவ்ய பூசை காண கிறிஸ்துவர்களுக்குக் கடனில்லை யென்றாலும், அப்படிக் காண்பது மிகவும் நல்ல புண்ணிய முயற்சியாகும். அநுதினம் பூசை காணுவது நமது பிரதி தின கடமைகளை நிறைவேற்றுகிறதற்கு யாதொரு தடங்கலா யிராது. அநேக கிறிஸ்துவர்கள் தங்கள் உத்தியோக அலுவல்கள் முகாந்தரமாய் திவ்விய பூசை காணக் கூடாதவர்களா யிருக்கிறோமென முறையிடுகிறார்கள். ஆனாலும் ஐயோ! ஆயிரக்கணக்கான கிறிஸ்துவர்கள் திவ்விய பூசை காணக் கூடுமாயிருக்கும்போதும் பூசை காண அலட்சியம் பண்ணுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் எல்லாவற்றையும் அறிந்து ஆண்டுவருகிற நீதியுள்ள சர்வேஸ்வரன் சன்னதியில் சாக்குப் போக்குச்சொல்லத் துணிவார்களோ? இது விஷயத்தில் சகல கிறிஸ்துவர்களும் அறியவேண்டியதென்னவென்றால்: சர்வேஸ்வரன் நமக்கு ஒருநாளில் கொடுத்திருக்கிற 24 மணி நேரத்தில் அதிகாலையில் ஒரு அரை மணி நேரமாகிலும் திவ்விய பூசை கண்டு, சகல நன்மைக்கும் ஊறணியாகிய சர்வேஸ்வரனுக்கு ஒப்புக்கொடுக்கிற கத்தோலிக்குக் குடும்பங்களை அவர் ஒருக்காலும் இம்மையிலும் மறுமையிலும் கைவிடமாட்டார் என்பதே.



புஜபல பராக்கிரமத்திற் போலவே புத்தி தீட்சண்யத்திலும், விவேகத்திலும் பேர்பெற்ற நெப்போலியன் போனபார்ட் என்னும் பிராஞ்சு சக்கரவர்த்தியானவர் தமதாத்ம காரியத்தை வெகுவாய் அசட்டை செய்து பாப்பானவரைப் பகைத்து அவருக்கு விரோதஞ் செய்தவரானாலும், அவர் ஓர் நாள் ஒருபெண் பாடசாலையைப் பார்க்கப் போன விடத்தில் அதன் சிறுமிகள் வாரத்தின் இரண்டு நாட்களில் (அதாவது ஞாயிற்றுக்கிழமை, வியாழக்கிழமை களில்) தான் பூசைகாண்பது என்றிருந்த ஒழுங்கைத் தெரிந்துகொண்டு அவ்வொழுங்கு புத்தகத்தைக் கொண்டுவரச்சொல்லி, வாரத்திலிருமுறை பூசை காணவேண்டுமென்றிருந்ததை அடித்து, அநுதினமும் பூசைகாண வேண்டுமென்று எழுதிவைத்தாராம். இதனால் அநுதினம் பூசைகாண்பது எப்படிப்பட்ட நல்ல கிருத்தியம் என்பது விசிதமாகிறதல்லவா?

அர்ச். பாப்பானவரால் மெத்தவும் வற்புறுத்திப் போதிக்கப்படும் அநுதினம் நன்மை வாங்குதலாகிய சுகிர்த கிருத்தியத்துக்கு, பிரதிதினம் பூசை காணுதலானது இன்றியமையாத சாதனமாம். அதற்கு இது முன்னோடியெனவும் சொல்லலாம். ஆகவே, அநுதினம் திவ்யநன்மை வாங்கப் பிரியப்படுபவர்களும் பிரியப்படாதவர்களும் அநுதினம் திவ்யபூசை காணப் பிரயாசைப் படுவார்களாக. இந்தச் சுகிர்த அப்பியாசத்தினால் பக்தியும், தேவநேசமும் அதிகரிக்க, அநுதினம் திவ்ய நன்மைவாங்க ஆசையும் தூண்டுதலும் உண்டாகும். ஆனால் அநேகர் அநுதினம் பூசைகண்டாலும் அதினா லடையக்கூடிய நன்மைகளை அடையாமற்போகிறார்கள். எப்படியெனில், "செய்வன திருந்தச் செய்" என்றபடி, தக்க பக்தியோடும், சுத்த கருத்தோடும் பூசைகாணாமல், வெறும் வாடிக்கைக்காகவும், அயலார் மெச்சுவதற்காகவும், வீண் விநோத வேடிக்கைபோல பராக்குடன் பக்தியின்றி பூசை காணுவார்கள். இப்படிச் செய்வதினால் சற்றும் பிரயோசனமில்லாமற் போவதுந் தவிர தேவ கோபத்துக்கும், சாபத்துக்கும் புறத்தில் தூர்மாதிரிகைக்கு மிடமாகும். ஆனது கொண்டு, தக்க பக்தி வணக்கத்துடன் அநுதினம் திவ்ய பூசைகண்டு அதினால் அடையக்கூடிய நன்மையெல்லாம் அடையப் பிரயாசைப்படுவது புத்தி. இப்படியாய் கிறிஸ்துவர்கள் தங்கள் ஆயுள் காலத்தின் ஒவ்வொரு நாளையும் தக்கபத்தியோடு காணும் திவ்விய பூசையைக்கொண்டு செம்மையாய்த் துவக்கி, செம்மை யாய் முடித்து கடைசியில் பாக்கியமானமரணத்தை யடைந்து நித்திய பேரின்ப பாக்கியத்தைச் சுதந்தரித்துக் கொள்ள வருந்துவார்களாக.

## DRINKING.

## மதுபானஞ் செய்தல்.

### மதுபானத்திற்கு மருந்து.

(முன் தொடர்ச்சி.)

இக்காலத்தில் மது மலிந்து, குடிகளழிந்து போவது சாதாரணம். அது கொள்ளைநோய் போல் எங்கும் பரவி, ஈவிரக்கஞ் சற்றேனுமின்றி கடுங் கொடுமை புரிந்துவருகிறது. இக்கொடிய வியாதிக்குக் கைகண்ட மருந்து கண்டுபிடிக்கக் கங்கணங்கட்டிக்கொண்டவர் பலர்; சட்ட நிரூபண சபையில் திட்டஞ்செய்து குடியர்களைமட்டுப் படுத்தவேண்டுமென்பவர் சிலர்; சபைகள் கூடி, சங்கங்கள் ஸ்தாபித்து, உகந்த உபந்நியாசங்களுரைத்து, தகுந்த படிப்பினைகளைப் போதித்து நல்வழி கொண்டு வரவேண்டு மென்பவர் வேறு சிலர். இவ்விரண்டு வழிகளும் வழிகளேயாயினுங் குறை வழிகளே. இஃது சரித்திராநுபவ சித்தாந்தங்களால் நன்கு புலப்படும். இங்கிலாந்து தேசத்தில் குடிவகையைப்பற்றி நிரூபித்த சட்டம் (Legislation on National Drink Bill) இந்த வியாதியைத் தொலைத்திடுமென்றெண்ணினார்கள். அதுபிசகு. ஏனெனில் சட்டங்கள் எவ்வளவு திட்டமுள்ளதாயினுங் கெட்டதைச் செய்யக் கட்டமாகவும், நல்லதைப்புரியச் சுலுவாகவும் ஆக்கும் வழியே யன்றி வேறல்ல. இதுதான் பேர்போன கிளாட்ஸ்டன் (Gladstone) என்பவரின் கருத்து. மனிதரால் உண்டுபண்ணப்பட்ட சட்டங்கள் மனிதனின் வெளியிந்திரியங்களைச் சாருமேதவிர, உள்ளிந்திரிய சக்திகளை யடக்க வல்லவையல்ல. பரமசட்டமானாலும் நன்மைக்கு வழியைக்காட்டவும், தின்மைக்கேகுங் கதவைப் பூட்டவுந்தா னுதவும். ஆனால் ஆத்துமத்தில் அழுத்தமாய்ப் பதிந்திருக்கும் இச்சைகளை முற்று மாற்றமாட்டாது. இதனாற்றான் முதலாவது ஜேம்ஸ் என்பவர் அரசாளுங் காலத்தில் சட்ட நிரூபணசபையார் பகர்ந்தார் பின்வருமாறு:—

"மதுப் பழக்கத்தைக் குறைக்க நமது நாட்டில் எவ்வளவு வருந்தி வருந்தி சட்டங்கள் ஏற்படுத்தியபோதிலு மது குன்றாது தழைத்தோங்கவே செய்கிறது. இதனால் சட்டதிட்டங்கள் மாத்திரங் குடியை யடியோடு அறுக்கா வென்பது வெள்ளிடை மலைபோல் விளங்கும்".

சங்கங்களுஞ் சபைகளும் நல்ல மருந்தா? அவை குடிவெறியை முறிக்க உதவா வெனச் சொல்லக் கூடாது. அக்கூட்டங்களில் நடக்கும் உபந்நியாசங்களும் ஓதப்படும் போதனைகளும் ஒருவாறு மதுபானியை யடக்கக் கூடும். அதுமட்டும் அவனாத்துமத்திலிருக்கும் மதுவாசைப் பாஷாணத்தை ஒருபோதும் முறிக்கவே முறிக்காது. இதுகால நாமறிய அரங்கேற்றிய மதுவிலக்குச் சபைகள் அதோகதியாய் விட்டன. எத்தனையோ கூட்டங்கள் மிகவும் விமரிசையுடன் பல்லோ ரறிய பவுசாய் ஸ்தாபிக்கப்பட்டன. ஆனால் காலையில் மலர்ந்து சுகந்தமணம் வீசி மாலையி லுலர்ந்துபோகும் புஷ்பம்போலாயின. தோன்றிய சிலகாலத்துக்குப்பின் ஊன்றி நில்லாது மாண்டுவிட்டன. மதுவிலக்குச் சபைக ளிருப்பதாக வெக்காள மூதி யெங்குஞ் சொல்லலாம். மதுவை விலக்குவோர் இருக்குநரோ? சந்தேகம்! புத்தி மதிகள் ஜனங்கள் காதி லடிக்கடி விழுந்தபோதிலும், அது மட்டுமே யவர்கள் ஆத்ம ஆவலை யோட்டவில்லை. அதற் கிதுவெல்லாந் தகுந்த தல்ல. ஆத்மகாரியம் இயல்பிற்கு மேற்பட்டது. ஆதலால் ஆண்டவரின் அருள் முதன் முதல் அங்கிருக்கவேண்டும். "அவனன்றியோ ரணுவு மசையாது."

'விசும்பிற்றுளி வீழினல்லான் மற்றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது!

என்பது ஓர் இந்து ஞானியின் ஆப்தமொழி.

பிரிய சகோதரர்காள்! சத்திய மறையைத் தழுவிய நமக்கு இவ்வுண்மை கரதலாமலகம் போலாகும். என் னுதவி யின்றி எது காரியமுஞ் செய்யமுடியாதென யேசு பெருமான் விளம்பினார். ஆத்ம ஆதாயத்தைத் தேடுவதி லவருடைய வரப்பிரசாதம் அத்தியாவசியம். ஆத்ம இரக்ஷணியத்தைக் கெடுக்குந் துரோகியை வெல்ல அவரின ருள் அவசரமென்பதில் பரிச்சேதஞ் சந்தேகமில்லை. குடியானது ஆன்மாவை மடியச் செய்யுங் கொடிய சத்துருக்களில் ஒன்று. ஆத்துமத்தை யழிக்கவல்ல கொள்ளை நோய் இதுவேயென அர்ச். அகுஸ்தீன் சொல்லுகிறார். முத்தி பெறவொட்டாது தடுக்கும் தீய பாவங்களில் ஒன்றென்று அர்ச். சின்னப்பர் வரைந்திருக்கிறார். அர்ச். அகுஸ்தீன் ஆப்பிரிக்காவை ஞான மேய்ப்பரா யாண்டுவந்த காலத்தில், இம் மதுபான வியாதியெங்கும் பரவி, கிறீஸ்துவர்களை, திருச்சபை யநுஷ்டானங்களை யனுசரியாதிருக்கச்செய்து வந்தது. இஃதை நன்குணர்ந்து; ஓர் அர்ச்சியசிஷ்டவர் பரிதபித்துச் சொல்லுவதாவது "குடியின் கொடுமையைக் கவனித்திருப்பவர் எத்தனைபேர்? இத்தீய செயல் எங்கு மோங்கி வளர்ந்து வருகிறது. அதைப்பெரும் பாவமெனக் கொள்ளார். ஆ! மதுபானிகளி னான்மா மாண்டுபோயின. ஆயினு மவைகளையுயிர்ப்பிக்க வல்ல வைத்தியனிருக்கிறான். குடிகெட்டதே யென மனஞ்சோரக் கூடாது. சர்வ வல்லபதயாபரசர்வேஸ்பரனைப் பார்த்து குடியர்களது விருதயத்தின் செவியைத்திறக்கப் பிரார்த்திக்க வேண்டியது. எதிலார் குற்றத்தைக் குறைக்க ஏற்பட்ட வேதமறியா மூதாக்கள் குடிக்கு அவுஷதமில்லை என்று கூறுவார்கள். மனித சுபாவத்தை நன்குணர்ந்த சத்திய திருச்சபையோ அப்படிச் சொல்லாது. மதுபானத்திற்குத் தக்க மருந்திருக்கிறதென பலவந்தமாய்ச் சொல்கிறது. குடிக்கடிமையாகி, கூளியின் கையிலகப்பட்ட பாவியைத் திரும்பவும் நற்பதவிசேர்க்க அது பின்வாங்காது" என்பதே. இத்தோஷத்தி லொருவன் நிலைத்திருப்பதற்குக் காரணம் ஞான வறட்சி. எல்லாம் வறண்ட புலம்போலாயிற்று. "நமது சரீரம் மண்ணினா லமைக்கப்பட்ட பூமியைப்போலவே யிருக்கிறது. மழையின்றி தரை காய்ந்தால், விரை விதைக்கக் கூடாதே போகிறது. அப்படியே மதுபானியி னாத்மம் குடியினால் குணமற்ற நிலமாய்ப் போகிற"தென்பது அர்ச். அகுஸ்தீன் என்போரின் வார்த்தைகள். ஆகையால் நல்ல மருந்து தேவ அருளே! அஃதை யடைவ தெப்படி? ஜெபத்தினாலுந் தேவதிரவியா நுமானத்தினாலுமே.

ஜெபமானது தேவதிரவியப் பொக்கிஷப் பேழையைத் திறக்குந் திறவுகோல். இஃதின் துணையாலே யருளடங்கிய கஜானாவைத் திறக்க வேண்டும். ஆகையினால், மதுபானி தனக்கு அத்தியாவசியமாகிய நித்திய கருணையைக் கொள்ளை அடிக்கடி ஜெபிக்க வேண்டியது. தனது தீய செயலை விட்டகல வேண்டுமென்னும் தாற்பரியத்தோடு அல்லும் பகலும் ஓயாமல் எல்லாம் வல்ல நல்ல தேவனைப் பிரார்த்திக்க வேண்டும். அதிகாலையில் படுக்கையை விட்டெழுந்த வுடன்



அத்தினத்தில் குடியெனும் படுகுழியில் விழாவண்ணம் கடவுள் கிருபை கூருமாறு கேட்க வேண்டும். மாலையில் அன்றடைந்த வெற்றிக்காகத் துதிக்கவேண்டும். அப்படியின்றி சோதனையில் வீழ்ந்தாயோ, அதற்காகப் பொறுத்தல் கேட்டு இனியவ்வாறு செய்யாதிருக்க அவரது சலுகையை யிரந்து மன்றாடவேண்டும். ஒரு குடும்பத்தில் தகப்பனானவன் இக்கொடிய பழக்கத்தில் மூழ்கியிருப்பின். அதை யகற்றவெண்ணி, தாயும் பிள்ளையும் தீவினை செய்வானோடு வாதாடி, வாய் விட்டுப்பேசி எட்டிக்குப் போட்டி செய்வது, எரிகிற கொள்ளியில் எண்ணெயை வார்க்கிறதே யொழிய வேறல்ல. இது உகந்த வழியுமல்ல, தகுந்த மருந்துமல்ல. அவர்கள் இச்சமயத்தில் செய்யவேண்டியது யாதெனில்: பெண்டும் பிள்ளைகளும் ஒன்றாய்க் கூடி பராபரனையென்றும் மன்றாடி வரவேண்டியது. இதுவே பரம அவுஷதம். "கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்" என்றோதிய கடவுள் கருணைபுரியாமற் போவாரோ?

ஒருவன், மதுவினை நணுக வெனக்கணுவளவு மாசையில்லை, அதற்காகவே யநுதினமும் மந்திரஞ் சொல்லிவருகிறேன் என்று இறுமாப்பாயிருக்கலாகாது. தெய்வங் காட்டுமே தவிர ஊட்டாது. ஆதலால் நாமும் பிரயத்தனப்பட வேண்டும். மன உறுதியாயிருத்த லவசியம். இதனிமித்தம் சோதனைகள் வரும் வழிபோகலாகாது. தீவினையகற்று. உன்னைக் கெடுக்குந் தோழர்களிருப்பி னவர்களோடு உறவாடாதே. "சேரிடமறிந்துசேர்ந்து, இணக்கமறிந் திணங்கு" வது தான் மதி. உன்னுயிரை மாய்க்க வல்ல பாஷாண மிருக்குமிட மணுகாதே. குடிகடையிருக்கும் வழிமுதலாய்ச் செல்வது ஆபத்து. அது சத்துரு. அந்த "மாற்றானுக் கிடங்கொடேல்"

ஒரு மனிதன் மதுபான மருந்துவதேயில்லையெனப் பிரதிக்கினை பண்ணினான். அப்படியே இரண்டு நாளாய்க் கடு காபந்தாயிருந்து மரியாதையைக் காப்பாற்றினான். மூன்றாம்நாள் கள்ளுக்கடை மார்க்கமாய்ப் போகச் சம்பவித்தது. கடை நெருங்கினது. கண்டான் கடையை கொண்டான் கள்ளாவேசம். மனதிற் சண்டையுண்டானது. கடைசியாக வெற்றிபெற்றான். கள்ளைப்பழித்து கடையைக் கடந்துசென்றான். ஐந்து நிமிஷம்மட்டும் நடந்திருப்பான்; அப்போது மற்றொரு சோதனை கிளம்பியது. தனக்குள் பின்வருமாறு யோசித்தான்: நான் கள்ளுக் கடைவழி யேகியும் கள்ளைத் தொடாதது எவ்வளவு சமர்த்து! அதிலடைந்ததே வெற்றி! அதற்காகத் திரும்பிப்போய் ஒரு முட்டைவாங்கி வாயிற் கொட்டிவிட்டு வருவேனென யெட்டியெட்டிச் சென்றான். கள்ளுக்கடையுள் நுழையவே, அங்கு வீசின வாசனையும், காணப்பட்ட உல்லாசகேளிக்கைகளும் மதியை மயக்கி அவனை மோசம் போக்கின; செய்தான் தீவினையை. அந்தோ பரிதாபம்! இதுபோல் மனங் குலைந்திருக்கக் கூடாது. வலிமையு முறுதியு மனத்தேயிருக்கவேண்டியது. மனவலிமை யெவ்வாறு வரும்? தேகத்தில் வலிமை வர அன்றாடம் இரண்டு மூன்று வேளை அன்னபானம் செய்துவருகிறோம். அப்படியாயின் ஆத்ம வலிமையடைய யாதேனும் புசிக்க வேண்டாமோ? அவ்வாறு புசிப்பதற்கு ஒன்றுமில்லையோ? இதற்காக மனித சுபாவத்தை நன்குணர்ந்த நமது இரட்சகர் திவ்யநற்கருணையெனுந் தேவதிரவியநுமானத்தையுண்டு பண்ணினார். தமது சரீரத்தையும், இரத்தத்தையும் நம்பொருட்டுபோஜனமாகத் தானஞ்செய்து போயினர். ஏன் அருந்தலாகாது அத்திவ்ய போஜனத்தை? அதுவே மனவலிமை யுண்டுபண்ணு மற்புத வமுது. மனநிலை குலைந்து, குடியி லுழன்று கிடக்கும் மனிதனவ் வமிர்த போஜனத்தை யடிக்கடி சாப்பிடுவானேயாகில் மனத்திடனுண்டாக, சோதனையில் உட்படாது அவன் சுகமடைந்துவருவானென்பது சத்தியம். வேத மறிந்தோரும், விசுவாசம் நிறைந்தோரும் இதை உண்மையெனச் சொல்வர். சேசுசபைக் குருக்களால் நீயுயார்க் என்னும் பட்டணத்தில் பிரசுரமாகும் 'அமெரிக்கா' (America) என்னுஞ் சிறந்த பத்திரிகை யிப்படியே வற்புறுத்தி யுரைக்கிறது. இதை நன்றாயோசித்து, கண்டு பாவித்துப் பயனடைவோமாக!

M. S. M.

## CHRISTIAN DOCTRINE.

## ஞானோபதேசம்.

### 19-ம் பாடம்.

### விசுவாச மந்திரத்தின் 12-ம் பிரிவு.

(முன் தொடர்ச்சி)

**7. மகராசனும் இலாசரும்:-** ஒரூரில் மகராச னொருவனிருந்தான், அவனுக்கு யாதொன்றிலுங் குறைவின்றி, விலை யுயர்ந்த வஸ்திராபரணங்களைப் பூண்டு நா

டோறும் விருந்தாடி வந்தான். அதே ஊரில்
பிச்சைக்காரனான லாசரென்பவன் ஒருவனி
ருந்தான். அவனுடைய அன்னவஸ்திரத்து
க்கு பின்ன முண்டாக, அவன் ஊரில் இரந்
து குடிக்கையில் ஷை மகாராசனுடைய
எச்சில் பறுக்கை முதலா யவனுக்கு அகப்
படாது. கடைசியாய் பிச்சைக்காரனான
இலாசர் செத்தபின், சம்மனசுக்களால்
மோக்ஷத்துக்குக் கொண்டு போகப்பட்
டான். மகாராசன் செத்தபின் நரகக்
குழியில் புதைக்கப்பட்டு சகல ஆக்கினையு
மனுபவித்து வந்தான். ஒருநாள் தேவசித்
தப்பிரகாரம் மோக்ஷந் திறக்கப்பட பிதா
ப் பிதாவாகிய அபிரகாம் மடியில் பிச்சைக்
காரனாகிய இலாச ரிருப்பதை மகராசன்
கண்டு, அபிரகாமை நோக்கி: "தந்தையே!
இவ்விடத்தில் நான் வாக்குக் கெட்டாத
வாதனைகளையுங் கொடுந் தாகத்தையும்
அனுபவிக்கிறேன். இலாசரை யிவ்விட மனு
ப்பி, அவன் விரலால் ஒரு துளி ஜலத்தை
என் வாயில் விடச் செய்தால் பெரு முப
கா்ரமா யிருக்கு" மென்று மன்றாடினான்.
அதற்கு அபிரகாம்: "மகனே உன் மன்று
ட்டு கொடுக்கப்படாது. நீ உலகி லிருந்த
போது சுக போகங்களைச் சுகித்துவந்தாய்;
இலாசரோ கஷ்ட சங்கடங்களையுந் தரித்
திரத்தையு மனுபவித்து வந்தபடியா லிப்
போது மோக்ஷானந்தத்தைச் சுகித்துவரு
கிறான். உனக்கு நரக வேதனை சித்தித்தது;
நீ யதை யனுபவித்துத்தான் தீரவேண்டி
யது" என்றார். (அர்ச். லூக்.)

**8. நரகத் தீயி னகோரம்:**—நரகத்தீ
யிலுள்ள நெருப்பு வேதனை பொறுக்கக்கூ
டாததென்பது நிச்சயம். நமது நெருப்புக்
கும் நரகத்தி னெருப்புக்கு மகா வித்தியாச
முண்டு. மார்த்தினியான் என்னுந் தபோத
னர் வனவாசஞ் செய்து செப தபத்தில்
காலத்தைக் கழித்துவந்தார். சோயே என்
னும் ஓர் துஷ்ட ஸ்திரீ யந்த மகாத்மாவைக்
கெடுக்க யோசித்து; நேர்த்தியான ஆடை
யாபரணங்களைப் பூண்டுகொண்டு, அதெல்
லா மொரு போர்வையால் மறைத்துகொ
ண்டு வனவாசியிடம் போய், வழி தெரியா
மல் அலைந்து திரியுந் தனக்கு இராத்திரிக்
குத் தங்க இடம் கொடுக்கும்படி மன்றாடி
னதின்மேல், வனவாசி மனதிரங்கி பக்கத்தி
லுள்ள சிறு கெபியி லிருக்கச் சொன்னார்.
மறுநாட் காலையி லிந்தக் கெட்டவள் தன்
மேல் போர்வையைக் கழற்றிவிட்டு, வன
வாசியைச் சோதித்து பாவத்தில் தள்ளும்
படி யவரண்டைக்குப் போய் தன் துர்க்
கருத்தை யவருக்கு வெளிப்படுத்தவே,
மகாத்மா வானவர் தமது குகைக்குள் ளோ
டிப்போய் விறகு கட்டைகளைப் பரப்பி,
நெருப்பு மூட்டி கொழுந்துவிட் டெரியும்
அனலில் தம்து பாதங்க ளிரண்டையும்
நீட்டி; நோக்காட்டைப் பொறுக்கமாட்
டாதவராய் சத்தமா யழத் தொடங்கினார்.
அழுகிற சத்தத்தைக்கேட்ட அந்தஸ்திரீ
குகைக்குள் போய்ப் பார்த்தபோது, இவ்
வனலைச் சற்றுநேரம் என்னால் பொறுக்
கக் கூடாவிட்டால், நரகத்தீயின் கொடூர
வேதனையை நித்திய காலமா யெப்படிப்
பொறுப்பேனென்று வனவாசி சொன்ன
வார்த்தைகளைக்கேட்டு அவள் சற்றுயோச
னை செய்து, அன்றே மனந்திரும்பி தன்
நடத்தையைத் திருத்திக்கொண்டு புண்ய
வழியி லொழுகினாள். (Marin.)

**9. அர்ச். தெரேசம்மாளும் நரகமும்.**—
அர்ச். தெரேசம்மா ளொருநாள் செபஞ்
செய்துகொண் டிருக்கும்போது பரவச
மாகி நரகத்தைக் கண்டாள். அதன் வாசல்
கிடுகிடு பாதாளமா யிருந்தது. அதில் அசுத்
தமும் நரகலும் நிறைந்திருந்ததுடன், அவ
லக்ஷண முள்ள விஷ ஜந்துக்கள் நாலாபக்
கமுஞ் சீறிப் பாய்ந்துகொண் டிருந்தன.
அதிலிருந்து பயங்கரத்துக்குரிய அக்கி
னிச் சுவாலைசுவாலித்துக்கொண்டும் காரிரு
ளால் மூடப்பட்டு மிருந்தது. அந்த பயங்
கரத்துக்குரிய அக்கினியி னகோர அன
லின் காங்கையைப் பற்றி விவரிப்பது மனு
ஷனால் கூடாத காரியம். நரக நெருப்புக்கு
முன் பூலோகநெருப்பு ஒன்றுமில்லை யென்
றாள். இந்த பயங்கரக் காட்சியைக் கண்ட
பின் நரகத்தைப் பற்றி யவள் நினைக்கும்
போ தெல்லாம் நடுக்கங் கொண்டு பயந்து
துடிப்பாள். அந்த பயங்கரமான நரக
நெருப்புக்கு தப்பித்துக் கொள்ளும்படி
மற்றவர்களுக்குப் புத்தி சொல்லி வரு
வாள். (இவள் சரித்திரம்.)

**10. நரகத்தில் பசாசுக்கள் படுங் கொ
டிய வேதனை.**—1634-ம் வருஷத்தில் லண்
டன் பட்டணத்தில் ஒரு குருவானவர் ஆ
வேஸமானவர்களை மந்திரித்து பே யோட்
டிக்கொண் டிருக்கும்போது, ஒரு பசா



சைப்பார்த்து, "நீ நரகத்தில் படும் பெரும்
வேதனை யென்னவென்று வினவினார். அத
ற்குப் பசாசு," நாங்கள் நரகத்தி லொரு
போது மவியாத நெருப்பா லிடைவிடா
மற் சொல்லிமுடியாத வேதனை பட்டுவந்து
மதிலுங் கொடிய வேதனை யொன்றுண்டு.
அதென்ன வெனில், சர்வேசுரனைத் தரிசி
யாத வேதனையே பெரும் வேதனை. உலகத்
திலிருந்து மோக்ஷத்தை யெட்டுமான ஓர்
உயர்ந்த ஸ்தம்பத்தை நட்டு, அந்தத் தூ
ணில் கூர்மையான ஊசிகளைநெருக்கமாய்ச்
குத்திவைத்து, அதி லேறிப்போய் ஒரே
ஒரு நிமிஷஞ் சர்வேசுரனைத் த்ரிசிக்க உத்
தர வகப்பட்டால், மிக்க சந்தோஷத்துட
ன் அநேகாயிர ஆண்டுகளாய் துன்பப்
பட்டு அந்தத் தூணின்மே லேறப் பிரயா
சைப் படுவோ மென்றது. பிள்ளைகளே! சர்
வேசுரனைப் பாராம லிருப்பது பசாசுக்கு
மாத்திர மல்ல, நரகவாசிகளாகிய பாவிக
ளுக்கும் பெரும் வேதனையா யிருக்குமென்
றறிவீர்களாக. (Grullois)

**11. நரகாக்கினை முடியுமா?:**—மோ
க்ஷமும் நரகமும் நித்தியமாய் நீளித்திருக்
கும். ஒருபோது முடியாது. சூரியமண்டல
மெட்டுமான மட்டும் மேகத்தை சிறு மண
லால்நிரப்பி, ஆயிர வருஷத்துக் கொரு வி
சை அப்பெரு மணற்குவியலில் ஒரு மணி
மாத்திரமெடுத்துக்கொண்டு, கோடி காதத்
தூரமுள்ள வேறொரு தேசத்துக்குப் போ
யந்த மணியை யவ்விடத்தில் போட்டுவிட்
டு, ஆயிர வருஷ மானபின் பூமிக்கு வந்து
வேறொரு மணல் மணியை யெடுத்துக்கொ
ண்டுபோய் ஷை தேசத்தில் போட்டுவிட்டு,
இவ்வாறு ஆயிர வருஷத்துக்கு ஒரு தட
வை ஒவ்வொரு மணலாய் அந்தக்குவியலை
யெடுத்துவிட எத்தனை கோடா கோடி
யுகம் பிடிக்கும்? கணக்கிடுவது அசாத்தி
யம். அப்படி யந்த மணற்குவிய லெடுபட்ட
போதிலும் நித்திய கால மப்போதே துவ
க்கு வதாகக் காணப்படும். பிள்ளைகளே!
இந்த நித்தியகாலத்தைக்குறித்து நன்றாய்
யோசித்துப்பார்த்து, நித்தியமாய் நரகக்
குழியில் விழுந்து உபாதைப் படாமல்,
ஒரு போதும் முடியாத நித்தியானந்தத்
தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படியான
விதமாய் நடந்துகொள்ளுங்கள்.

(Argentan.)

(விசுவாச மந்திரம் முற்றிற்று.)

## பத்துக் கற்பனையின்பேரில்.

### முதல் பாடம்

### முதல் கற்பனை.

பரலோகத்தையும் பூலோகத்தையும்
அதிலடங்கிய சகலத்தையுஞ் சர்வேசுரன்
படைத்தாரென்று முழுமனதுடன் விஸ்வ
சித்து, அவருடைய சத்திய சபையில் சேர்ந்
து, அவருடைய கற்பனைப்படி ஒழுகுகிறவர்
களுக்குமாத்திரஞ் சம்பாவனையாக மோக்ஷ
பாக்கியத்தைக் கட்டளையிடுவாரென்று நம்
பி, அவர் நமது ஆத்தும சரீர முதலியவற்றிற்
குக் காரணகர்த்தரா யிருக்கிறதைப்பற்றி அ
வரை ஆராதித்துஸநேகித்து, அவரைப்பற்றி
நமது அயலாரையும் ஸ்நேகிக்க வேண்டுமெ
ன்று முதல்கற்பனையில் கற்பிக்கப்பட்
டிருக்கிறது.

**1. ஆண்டவரே உம்மை மாத்திரம் ஆசி
க்கிறேன்.**—அர்ச். அகுவின் தோமாஸ் இ
டைவிடாமல் சர்வேசுரனைப்பற்றி தியானி
த்து அவரைப்பற்றி சம்பாஷிப்பதில் மனஞ்
சலியாதிருப்பார். ஒருநாள் இவர் கர்த்தர்
பாடுபட்ட சுரூபத்துக்குமுன் பக்திஉருக்க
த்துடன் செபிக்கும்பொழுது, "தோமாஸ்
நீ நம்மைப்பற்றி நன்றாய் எழுதினாய்; ஆகை
யால் நம்மிடத்தில் என்ன சம்பாவனை ஆசி
க்கிறாய்" என்ற வாக்கியம் சுரூபத்தினின்று
கேட்கப்பட்டது. அதற்கு தோமாஸ் "என்
சர்வேசுரா, உம்மை மாத்திரம் ஆசிக்கிறே
ன்" என்றார்.

**2. பத்துக்கற்பனை கொடுக்கப்பட்ட வர
லாறு.**-சர்வேசுரன் சீனா மலையில் பத்துக்கற்
பனை கொடுக்கச் சித்தமானார். அவருடைய
கற்பனைப்படி இசரேலித்தார் அந்த மலை
யடிவாரத்தில் நின்று கொண்டிருந்தார்
கள். சூரியோதயமாகவே மலை முழுதும்
அடர்ந்த மேகத்தால் மூடப்பட்டது. மலை
யினின்று மின்னலும் இடிமுழக்கமுங் கே
ட்கப்பட்டதுடன் எக்காளச் சத்தமும்
முழங்கின. இதைக்கண்ட ஜனம் பயந்து
நடுங்கினது. சர்வேசுரன் கட்டளைப்படி
மோசேஸ் என்பவர் மலையுச்சிக்குப்போய்ச்
சேரவே அவ்விடத்தில் தேவதரிசனை
கொண்டார். அப்பொழுது "உன் கர்த்
தாவான சர்வேசுரன் நாமே நமக்கு முன்

பாக வேறே சர்வேசுரன் உனக்கு இல்லாதே போவதாக" என்று துவக்குகிற பத்துக் கற்பனையை சர்வேசுரன் மோசேசுக்குக் கொடுத்தார்.

**3. உறுதியான விஸ்வாசமுள்ள போர் வீரர்.**-உரோமையில் கொன்ஸ்தான்சியுஸ் க்லோரிஸ்என்னுஞ்சக்கரவர்த்தியிருந்தார். இவர் அஞ்ஞானியா யிருந்துஞ் சத்திய வேதத்தின் மட்டில் நல்ல அபிமானங் கொண்டு கிறிஸ்துவர்களை பக்ஷத்துடன் பரிபாலித்து வந்தார். தன் படைச் சேவகரின் பிரமாணிக்கத்தை அறியும்படி ஒரு நாள் படைவீரருக்குத் தாக்கீது அனுப்பி, தான் தன் தேவர்கள்போல் ஒரு பண்டிகை கொண்டாடப்போவதால்,கிறிஸ்துவர்களாயிருக்கப்பட்ட படை வீரரெல்லோரும் தன் சனுகை அடைந்து பெரும் உத்தியோகம் பெற மனதிருந்தால் அஞ்ஞானிகளுடன் சேர்ந்து பலியிடவேண்டுமென்று கற்பித்தார். சிலர் தவிர மற்றக் கிறிஸ்துவ படைவீரரெல்லோருந் தெய்வ பயமுள்ளவர்களாய் பொய்த்தேவர்களுக்கு பலியிடுவதில்லை யென்று உறுதியாய் நின்றார்கள். அப்பொழுது இராயன் தெய்வத்துக்குப் பயந்து தன் கட்டளைப்படி நடவாத கிறிஸ்துவபோர்வீரருக்குப்பெரும் உத்தியோகங் கட்டளையிட்டான். கோழைத்தனமுள்ள கிறிஸ்துவர்களை நோக்கி "அழிந்து போகும் பிரபஞ்ச நன்மை நிமித்தம் உங்கள் கடவுளுக்குத் துரோகஞ்செய்ய நினைத்த நீங்கள் எனக்குப் பிரமாணிக்கமுள்ள சேவகராயிருக்க மாட்டீர்கள் என்று மொழிந்து அவர்களைப் பட்டாளத்தினின்று தள்ளிப்போட்டார். (திருச்சபை சரித்திரம்)

**4.** அதிசயத்துக்குரிய விஸ்வாசம்.—1833௵ கொச்சின் சீனாவில் பயங்கரத்துக்குரிய வேதகலாபமுண்டாக, திரளான கிறிஸ்துவர்கள் நிஷ்டூரமாய் உபாதிக்கப்பட்டு இரத்தஞ்சிந்தி வேதசாக்ஷி முடிபெற்றார்கள். சிறு பிள்ளைகள் முதலாய் நடுவருக்கும் முன் வலியப் போய் தாங்கள் கிறிஸ்துவர்களென்று சொல்வார்கள். பத்துப் பிராய முள்ள ஒரு சிறுவன் கிறிஸ்துவர்களை உபாதிக்கும் அதிகாரிசமுகஞ்சென்று, அவனுக்கு முன் முழந்தாளிட்டு கையிரண்டையுங் கட்டிக்கொண்டு,தனக்குப்பேச உத்தரவு அளிக்க மன்றாடினான்! அதிகாரி பேசலாம் என்கவே பையன் "ஐயா, துரைகளே! உமது பட்டயத்தால் என்னை ஒரு வெட்டு வெட்டும், நான் என்தேசத்துக்குப்போவேன்" நடுவன்: "உன் பெற்றோரெங்கே?" பையன் "அவர்கள் மோக்ஷம் போய்ச்சேர்ந்து விட்டார்கள். நானும் அங்கேபோக ஆசிக்கிறேன்: ஒருவெட்டுப்போதும், மோக்ஷம் போய்ச்சேர்ந்து போவேன்" என்றதைக் கேட்ட அதிகாரியும் மற்றவர்களுஞ் சிறுவனுடைய தளரா விசுவாசத்தையுந் தைரியத்தையுங் கண்டு பிரமித்து அவனைக்கொல்லாமலே வெளியே அனுப்பிவிட்டார்கள். ஆனால் சில காலத்துக்குப்பின் இந்தச் சிறுவன் அஞ்ஞானிகளால் பிடிபட்டு வேதத்துக்காகக் கொல்லப்பட்டான். (Gibson.)

## THE CEREMONIES OF THE HOLY MASS.

## பூசைச் சடங்குகளி னர்த்தம்.

விசுவாசிகள் திருச்சிலுவையின் பலிப்பூசையைக் காணப்போவது என்னவெனில்: சேசுக்கிறீஸ்து நாதரை "கல்வாரி" மலையின்பேரில் சிலுவையோ டறைந்து அவருடைய உயிரைப் பறித்ததைக்கண்டு, அவரை நினைத்து நன்றியறிந்ததோத்திரம் புரிவதற்காம். திருப்பூசை நடக்கும் பீடமும், அதின்பேரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்குந் திருச்சிலுவையும் "கல்வாரி" மலைக்கும், சேசுக்கிறீஸ்துநாதரை அறைந்த சிலுவைக்கும் ஓர் குறிப்பாம். பீடத்தை மூடியிருக்குங் கறுப்பும், வெண்மையுங் கலந்திருக்கும் வஸ்திரம், சேசுநாதர் சிலுவையின்மீது உயிர் விட்டபின் அவ்ரைக் கல்லறையில் அடக்கினபொழுது அவர் திருச்சரீரத்தில் தரித்திருந்த வஸ்திரமாகும். பாத்திரமோ வென்றால் நமது ஆண்டவரை அடக்கஞ்செய்த பரிசுத்தக் கல்லறையாகும். பாத்திரம் நிறுத்தப்படும் அர்ச். கல்லோ வெனில் ஆண்டவரை யடக்கஞ்செய்த பரிசுத்த கல்லறையின் கதவின்பேரில் சுமத்தப்பட்ட பாறங்கல்லுக்குப் பொருந்தும். இரண்டு கத்திரிசால்களும் பழைய ஏற்பாட்டுக்கும் புது ஏற்பாட்டுக்கும் ஓர் பாவனையாவது மன்றி, யூதர்களுக்கும் அஞ்ஞானிகளுக்கும் அருளப்பட்ட விசுவாசத்தின் சோதிப்பிரகாசமாகும். திருப்பூசைபுரியுங் குருவானவரோ வெனில், புதிய ஏற்பாட்டின் பிரதான குருவாகிய சேசுக் கிறிஸ்துநாதரின் அடியவராவர். குருசுவாமியாரின் சிரசில் சவரிக்கப்பட்டிருக்கும் பட்டம் சேசுகிறிஸ்துநாதரின் சிரசில் சூட்டப்பட்ட முண்முடிக் கொக்கும். குருசுவாமியாருக்குத் தரிக்கப்பட்டிருக்கும் நிலையங்கியோவெனில், சேசுநாதரைப் பகடிபரிகாசஞ் செய்து தரித்த அங்கியாகும். குருசுவாமியார் சிரசிற்போட்டு தமது முகத்தை மூடி யெடுக்கும் வெள்ளை வஸ்திர மென்னவென்றால் சேசுநாதரை வெள்ளைக்குட்டையால் கண்ணைக்கட்டி தலையிற் குட்டி உம்மைக் குட்டினவன் ஆரென்று தீர்க்கத்தரிசனஞ் சொல்லென்றதற்கு ஓர் பாவனையாகும். குருசுவாமியார் நிலையங்கிக்குமேல் அணிந்துக் கொள்ளும் வெள்ளை மாந்து சேசுக்கிறீஸ்து நாதரைக் கேலிசெய்ய எரோதிய இராசன் தரித்த வெள்ளை யங்கியின் குறிப்பாம். குருசுவாமியார் இடையிற் புனைந்துகொள்ளுங் கயிறும், மார்பின் குறுக்கிற் போட்டுக்கொள்ளும் பட்டுப்பட்டையும், கரத்தில் தொங்கவிடும் பட்டுப் பட்டையும் என்னவெனில், சேசுக்கிறீஸ்து நாதரை யோர் கள்ளனைப்போல் கசைகளாற் பிணித்திழுத்துக் கொண்டு போனதின் பாவனையாகும். குருசுவாமியார் தரித்துக்கொள்ளும் பூசைவஸ்திரமோ வென்றால், பரிகாச இராசாவாக சேசுக்கிறீஸ்து நாதருக்குத் தரித்த வஸ்திரமாம். இந்தப்பூசையாயத்தத்தின் முன்புறத்தில் தூணைப்போ விருப்ப தென்னவெனில், சேசுக்கிறீஸ்து நாதரை நிறுத்திக்கட்டிய கற்றூணின் குறிப்பாகும். மேலும் அந்த ஆயத்தத்தின் பின்புறத்தில் வரைந்திருக்கும் சிலுவை சேசுக்கிறீஸ்துநாதர் ஜெருசலேம் பட்டணத்திலிருந்து கல்வாரி மலைக்குத் தமது தோளின்மீது சுமந்து கொண்டுபோன பாரமான மரச்சிலுவைக்கு அடையாளம். குருசுவாமியார் "எபிரேயு" "கிரீக்கு" "லத்தீன்" இம்மூன்று பாஷைகளை யுபயோகிப்பது நமக்கெதை ஞாபகப்படுத்துகிறதெனில், சிலுவையின் தலைப்பில் மேற்கூறிய மூன்றுபாஷை எழுத்துகளில் வரைந்த பட்டப்பெயரையாமே. பூசையில் நடக்கும் பற்பலசடங்குகளும், பிரிவுகளும் சேசுக்கிறீஸ்து நாதர் பற்பலவிடங்களில் பட்டனுபவித்தப் பாடுகளையும், அவர் ஒலிவேத்துப் பூங்காவில் பிரவேசித்த நேரமுதல் மோட்ச விராச்சியத்துக்கு ஆரோகணமான நாள்வரையிலுஞ் சம்பவித்தவைகளையும், இஸ்பிரீத்து சாந்துவானவர் அப்போஸ்தலர்களின்பேரில் இறங்கி அவர்களுக்குப் பூரண விசுவாசம் குடிகொள்ளச் செய்ததையுங் குறிக்கின்றன.





குருசுவாமியார் சங்கிஸ்திலிருந்து பீடத்துக்கு வந்தவுடன் பீடத்தின் அடியில் ("Judica meDeus") ஆண்டவரே, யெனக்குத்தீர்ப்பு கொடும் என்கிறநாற்பத்திரண்டாவது சங்கீதத்தைச் சொல்ல இறங்கி வருவதென்ன வென்றால், சேசுக்கிறிஸ்து நாதர் இராப்போசனம் பகர்ந்து திரும்பினதற்கும், ஒலிவேத்து மலையடிவாரத்தி லிருக்கும் கெத்சேமினி பூங்காவில் தமது பரிசுத்தப் பிதாவைநோக்கி மன்றாடினதற்கும் பொருந்தும். பூசையாரம்பத்தில் சிலுவை வரைந்து கொள்வதும், மகா பரிசுத்தத் திரித்துவத்தின் மூன்றாட்களை யழைப்பதும் ஏனெனில், சேசுநாதருடைய கடின மரணப் பாடுகளை நினைத்து புகழ்கொண்டாடப் பிதாச், சுதன்,இஸ்பிரீத்து சாந்துவை யழைப்பதாகும். அப்பொழுது சொல்லப்படும் சங்கீதம் தாவீதரசனை சவுல் என்பவன் இடர் செய்தபொழுது அவர் ஆண்டவருடைய தேவ சன்னதியில் உத்தம மனோ தைரியமடைந்ததை நாம் நினைத்து திவ்விய ரகசியத்திற்குப் பங்காளியாகப் பீடத் தருகில் போவதற் கோர் பாவனையாகும். பூசை துவக்கியபின்பு மோட்சவாசிகளிடத்திற் செய்யும் சாதாரண பாவசங்கீர்த்தனமோ வெனில், நமது முதற் பிதாவாகிய ஆதா மென்பவர் புரிந்த தோஷத்தால் நாமுள்ளாகி யிருக்கும் கொடிய பாவங்கள் நம்மை விட்டகல நமது பாவங்களை நினைத்து உத்தம மனஸ்தாபப் படுதலாகும்.

குரு சுவாமியார் பாவசங்கீர்த்தன மந்திரஞ் சொல்லிக்கொண்டு பீடத்திற்கு முன் குனிவதென்னவெனில், நமது இரட்சகர் மனுமக்களின் பாவத்தால் சுமத்தப்பட்டு பூங்காவனத்தில் தியானஞ் செய்கையில் சாஷ்டாங்கமாக விழுந்து மன்றாடியதற்கும், இரத்த வியர்வை வியர்த்துத் துன்பதுரிதங்களை யனுபவித்ததற்கும் ஒக்கும். குருசுவாமியார் பீடத்தருகிற்சென்று பீடத்தில் முத்தமிடுவதோ வெனில், நமது இரட்சகர் தமது பகைஞரைச் சந்திக்கப் போனதற்கும், அங்கு யூதாஸ்காரியோத்து கள்ளத்தனமாய் அவரை முத்தமிட்டுக் காட்டிக்கொடுத்ததற்கும் பாவனையாகும். குருசுவாமியார் புத்தகம் வைத்திருக்கும் பீடத்தி னோர்கோணத்திற் சென்று அங்கு சிலுவை வரைந்துக்கொண்ட பின்னர் நிருபத்தை வாசிப்பது என்னவென்றால், நமது இரட்சகரைக் கைப்பிடியாகப் பிடித்து கசைகளாற் பிணித்து குற்றவாளியைப்போல் ஆனாஸ், கைப்பாஸ் என்பவர்களுடைய நியாயஸ்தலத்திற்குக் கொண்டு போனபோது, அவ்

விடத்தில் அத்தியட்சக் குருவாகிய ஆனாஸ், கைப்பாஸ் என்பவர்களுடைய ஏவலாளர்களாகிய கயவர் நமது ஆண்டவரை பரிகாச விராசாவாகப் பாவித்து. சின வெறிகொண்டு அவர் திருமுகத்தில் அறைந்ததற்கும், கண்ணைக்கட்டி பகடிசெய்ததற்கும். தலையிற் குட்டினதற்கும், முகத்தில் உமிழ்நீரால் துப்பினதற்கும், குரூரமாய் நடத்தினதற்குங் குறிப்பாகும்.

"சுவாமி கிருபையாயிரும், கிறீஸ்துவே கிருபையாயிரும், சுவாமீ கிருபையாயிரும்" என்று மூன்று மூன்று விசை பரிசுத்தத் திரித்துவக் கடவுளின் மகிமைக்குச் சொல்லப்படுவதென்னவெனில்; அர்ச். இராயப்பரால் மூன்று விசை சேசுநாதர் மறுதலிக்கப்பட்டதாகும். "உன்னத பரமண்டலத்தில் சர்வேஸ்வரனுக்குத் துதி" என்று வசனித்த பிறகு குருவானவர் சுவிசேஷத்தின் சாதாரண வாழ்த்துதலாகிய "ஆண்டவ ருங்களோ டிருக்கக்கடவார்" என்பதைச் சொல்லுவதேதென்றால், நாம் ஆண்டவரிடத்திலும் ஆண்டவர் நம்மிடத்திலும் இருப்பதினால் வரும் பெரும்பாக்கியத்தையும், அர்ச். இராயப்பர் மறுதலித்ததைக் கண்டு சேசுநாதர் அவருடைய முகத்தை யேறெடுத்துப் பார்த்த பொழுது அவரடைந்த மனஸ்தாபத்தையும் காட்டும் பாவனையாகும். நமது இரட்சகர் மனுவுருவாகிய பொழுது வானராச்சியத்தில் சம்மனசுக்கள் ஒருங்கு கூடி மேற்கூறிய சங்கீதத்தைப் பாடினது என்னவெனில், பாவிகள் மனந் திரும்புவதினால் சம்மனசுக்கள் மோட்சத்தி லடையுஞ் சந்தோஷமும் பூரிப்புமாகும். "கிறியெ யேலேயிசோன்" என்னும் வேண்டுதல் விண்ணப்பமும் நிருபமும் சுவிசேஷமும் என்னவெனில்: ஆண்டவருடைய மன்றாட்டும், அற்புதமும், பிரசங்கமும் ஆகும். குருவானவர் பீடத்தில் நிருபம் வைத்திருக்கும் பக்கத்திற்கு வந்து விண்ணப்பக் கற்பனை வாசிப்பதோவெனில், சேசுநாதரை ஆனாஸ, கைப்பாஸ், போஞ்சுபிலாத்திடத்திற்கு அனுப்புமுன் யூதர்கள் கிறீஸ்துநாதர்மேல் வீணிற் குற்றம் சாட்டி அநியாயமாக அவரை சித்திரவதை செய்ததற்கும் பொருந்தும். குருவானவர் பீடத்தின் மத்தியில் நின்று தலைகுனிந்து அதிக அமரிக்கையுடன் புரியும் செபம் என்னவென்றால், சேசுக்கிறீஸ்து நாதரை எரோது ராஜனிடங் கூட்டிக்கொண்டு போனபொழுது, அவன் கேள்வி கேட்டுப் பிடித்துத் தள்ளியதற்கு, ஆண்டவர் தாம் குற்றவாளியல்ல வென்று ரூபிக்க வாய்திறந் தோர் மாறுத்தரஞ் சொல்லாதிருந்ததின் சாயலாமே. குருசுவாமியார் சுவிசேஷம் வைத்திருக்கும் பீடத்தின் பக்கத்திலிருந்து மத்தியில் நின்று பிழைதட்டிக்கொள்வது, சேசுக்கிறீஸ்துநாதரைப் போஞ்சுபிலாத்திடத்துக்குப் பயித்தியக்காரனைப் போலுடுத்தி, அவர் 'உண்மைக்கோர் சாட்சியெனவும், அவருடைய இராச்சியம் பூலோகத்தி லில்லையெனவும் சொன்னதை விசாரணை புரிய இரண்டா முறைக் கூட்டிக் கொண்டு போனதாகும்.

பீடத்தின் வலது பக்கத்திலிருக்கும் புத்தகத்தை இடது பக்கத்திற்குக் கொண்டுபோய் வைப்பது என்னவென்னில், புது ஏற்பாட்டை முதன் முதல் யூதர்களுக்குப் போதித்தும் அவர்களதைக் கைப்பற்றாமல் அசட்டைத் தனமாய் விடுத்ததற்கும், அஞ்ஞானிகளுக்குப் போதித்த போது அவர்கள் திரள்திரளாய் மனந்திரும்பி மெய்ஞ்ஞானத் தீட்சைபெற்று கிறீஸ்துவர்களானதற்கும் ஒக்கும். எரியும் கத்திரிசால்கள் மனோற்சாகத்தையும் ஆண்டவரின் மகிமைப் பிரதாபத்தையுங் காட்டுங் குறிகளாவதன்றி, சேசுநாதர் தமது சுவிசேஷத்தினால் பூலோகத்துக்குக் கொண்டுவந்த விசுவாசப் பிரகாசத்துக்கும் பொருந்தும். சுவிசேஷ ஆரம்பத்தில் குருசுவாமியும் ஜனங்களும் நெற்றியில் சிலுவைவரைந்து கொள்வதோ வெனில், சேசுநாதருடைய போதனைக்கும் சேசுநாதருடையசிலுவைக்கும் வெட்கப்படாதவர்களென்று காட்டுவதற்காமே. இரண்டாமுறை வாயின் பேரில் சிலுவை வரைந்துகொள்வதோவெனில், சேசுக்கிறீஸ்து நாதரைக் குறித்து அறிக்கை செய்ய வாயானது முழு ஆயத்தமாயிருக்கிறதெனக் காட்டவாகும். மூன்றாமுறை மார்பின்பேரில் சிலுவைப் போட்டுக்கொள்வதோ வென்னில், சேசுக் கிறீஸ்து நாதரின் பாடுகளை எப்பொழுதும் பூச்சியத்துடன் இருதயத்தில் நிலைபெற்றிருக்கச் செய்யவாகும். சுவிசேஷம் வாசிக்கும்பொழுது ஜனங்கள் எழுந்திருந்து நிற்பதோவெனில், ஆண்டவர் திருவாய் மலர்ந் தருளி ஆக்கியாபிக்குமாறு சகல வித துன்ப துரிதங்களை அனுபவிக்க முழு ஆயத்தமாக விருக்கிறோமெனக் காட்டலாகும்.

பலியளிக்கக் குருசுவாமியார் பாத்திரத்தின் பேரில் மூடப்பட்டிருக்கும் வஸ்திரத்தைக் களைவதென்னவெனில், சேசுநாதரின் ஆடையையுரிந்து கற்றூணிற் கட்டியதாகும். தட்டின் பேரில் அப்பத்தைப் பலிகொடுப்ப தென்னவெனில், சேசுக்கிறீஸ்துநாதர் தமது திருச்சரீரத்தைக் கசை, வார், பிரம்பினாலடிக்க வொப்புக்கொடுத்ததாகும். கொடிமுந்திரிகைப்பழ விரசத்துடன் தண்ணீர் கலப்பது என்னவெனில், சேசுக்கிறீஸ்து நாதரைச் சிலுவையோ டறைந்திருக்கும் பொழுது, அவருடைய திருவிலாவி லிருந்து பீறிட்டோடி வந்த தண்ணீருக்கும் இரத்தத்திற்கும் பாவனையாகும். தேவதாழ்ச்சிப் பழவிரசம் விட்டிருக்கும் பாத்திரத்தை யொப்புக் கொடுப்பது சேசுக்கிறீஸ்துநாதரைக் கட்டி யடித்ததற்கும், அவருடைய திருவிரத்தம் பூமியில் வெள்ளமாய்ப் பெருகி யோடினதற்கும் பொருந்தும். பாத்திரத்தைத் தட்டால் மூடுவது சேசுக்கிறீஸ்து நாதருக்கு முண்முடி சூட்டினதற்கும், அவரைப் பரிகாச இராசாவாக நடத்தினதற்கும் ஒக்கும். குருசுவாமியார் தமது விரல்களைக் கழுவுவது, போஞ்சுபிலாத்து சூழ்ந்து நிற்கும் ஜனத்திரள் முன்னிலையில் சேசுக்கிறீஸ்து நாதர் ஒன்று மறியாத உத்தமரென்று தன் கரங்களைக் கழுவியதை நமக்கு ஞாபகப்படுத்துகிறதாமே. (Orate Fratres) சகோதரரே, வேண்டிக்கொள்ளுங்களென்பது, சேசுக்கிறீஸ்துநாதர் ஜனங்களிடத்தில் பரிகாச இராசாவாகக் காட்டிக்கொடுக்கப் பட்டதையும், பிலாத்து உடனே "அந்த மனிதனைப்பாருங்கள்" என்றுபெருங்குரலிட்டுச் சொன்னதையும் நாம் ஞாபகப்படுத்திக்கொள்ளச் செய்கின்றது. குருவானவர் அதிக மெதுவாய் செபிக்கும் இரகசிய செப மென்னவெனில், சேசுக்கிறீஸ்து நாதர் தம்மைச் சிலுவையிலறைய வேணுமென்ற தீர்ப்பைக்கண்டு வாயைத்திறந்து மறுமொழி பகராதிருந்ததற்குப் பாவனையாகும். பெருந்தொனியாய் வசனிக்கப்படும் எபிரேயூ பிள்ளைகளின் ஞானகீதமும் முகவுரையுஞ் சேசுநாதர் பாரமான சிலுவை மரத்தால் சுமத்தப்பட்டு சிலுவை மரத்தோ டறையப்பட்டதையும் நம்மை நினைக்கச் செய்விக்கின்றதாமே. (இன்னும் வரும்)

---

## CORRECT THINGS FOR CATHOLICS.

## கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

(முன்தொடர்ச்சி.)

### மேற்றிராணிமார், குருக்கள், சகோதரர்கள், கன்னியர்கள்.



1. குருவானவர் நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதரின் ஸ்தானாபதியென்றெண்ணி அவர் மட்டில் தக்க வணக்கங் காட்டுவது ஒழுங்கு.

2. குருவானவர் தன் சுய சீர்மையையும் இன ஜன பந்துக்களையும் சுக செல்வ சந்தோஷங்களையும் வெறுத்து விட்டு, இங்குவந்து நமக்காக உழைக்கிறாரென்று நினைத்து அவரை நேசிப்பது ஒழுங்கு.

3. குருவானவர் உலக அர்த்தத்தில் கசடறக் கற்ற ஒரு வித்துவானாயும், சிறந்த உத்தியோகஸ்தராயு மிருப்பதுடன், ஞான அர்த்தத்தில் தனக்குத் தந்தையாயிருக்கிறாரென் றெண்ணி நடப்பது ஒழுங்கு.

4. குருவானவருக்கு நம்மைப்போலவே இளைப்பு களைப்பு உண்டென்று நினைலது, அவர் மட்டில் கரிசனை கொள்ளுவது ஒழுங்கு.

5. குருவானவர் பேரில் வருத்த மிருந்தாலும் அவர் பட்டத்தை மதித்து அவருக்கு ஆசாரம் செய்வது ஒழுங்கு.

6. குருவானவரைச் சவரட்சணை செய்வது கிறீஸ்துவர்களுடைய கடன் என்றறிந்திருப்பது ஒழுங்கு.

7. எல்லாவிஷயத்திலும் குருவானவருக்கு உதவியாயிருப்பது ஒழுங்கு.

8. குருவானவரிடம் பேசும் போது "தகப்பனே" அல்லது "சுவாமி" என்று அழைப்பதும் அவரை ஒருமையாய்ப் பேசாமல் பன்மையாய்ப் பேசுவதும் ஒழுங்கு.

[நீ என்று சொல்லாமல் நீங்கள், தாங்கள் என்றும், வா என்னாமல் வாருங்கள் என்றும், அவன் இவன், சொன்னான் பேசினான் என்று சொல்லாமல், அவர் இவர், சொன்னார் பேசினார் என்றும் சொல்ல வேண்டும். சில ஊர்களில் ஏதோ தங்களிடம் கொஞ்சம் ஸ்திதியுண்டென் றுசெருக்கு கொண்டு, ஆங்காரத்தினால் கொழுத்திருக்கும் சில கிறீஸ்துவர்கள் இவ்விதமாக குருக்களைப் பேசுவதைக் கேட்பது மெத்தவும் விசனகரமான காரியம். கெட்ட கிறீஸ்துவர்களும், துர்மார்க்கரும். அப்படிப்பேசினால் ஏதோ விசுவாசங் கெட்ட பயல்களென்று நாம் நினைக்கக் கூடும் ஆனால், கோவிலுக்கு அடுத்தடுத்துப் போகும் கிறீஸ்துவர்கள், அடிக்கடி சற்பிரசாதம் வாங்கும் கிறீஸ்துவர்கள், தாங்களும்

கிறீஸ்துவர்களென்று காட்டிக் கொள்ளும் கிறீஸ்துவர்கள், கண்ணியவான்கள் என்று மதிக்கப் படுபவர்கள் அப்படிப்பேசுவது என்ன அக்கிரமம்! எப்படிப்பட்ட துர்மாதிரிகை! புரொட்டெஸ்டாண்டார் தங்கள் பாதிரிகளை யப்படிப் பேசுவதுண்டு.

ஆனால் சத்திய கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள், நமதிரட்சகரின் ஸ்தானாபதிகளை, அபிஷேகம்பெற்ற தங்கள் குருக்களை தேவத்திரவியாநுமானங்களை நமக்குப் பரிக்கிரகிக்கும் குருக்களை யப்படிப்பேசுவது கிறீஸ்துவ பெயருக்கு அடாத அவமரியாதை யாகும். கேவலம் ஒரு சாதாரண உத்தியோகஸ்தனுக்கு நாம் காட்டும் மரியாதையையாவது தேவனுடைய உத்தியோகஸ்தருக்குக் காட்ட வேண்டாமா?

காரணம், ஆங்காரம். பின்னொன்றுமில்லை. ஏதோ அந்த கிறீஸ்துவர்களிடம் கொஞ்சம் ஸ்திதியுண்டாம்; தங்கள் குருக்களையும் கோவில்களையும் சவரட்சணை செய்கிறார்களாம். அந்த கர்வத்தினால் தங்கள் குருக்களை "அவன்" "இவன்" என்று பேசுகிறார்கள். இந்தக் கிறீஸ்துவர்கள், வேறு ஊர்களிலுள்ள கிறீஸ்துவர்கள் தங்கள் குருக்களுக்குக் காட்டும் மரியாதையைப் பார்த்து "இதென்ன? நீங்கள் இப்படி பயந்து சாகிறீர்கள்- எங்கள் ஊரில் நாங்கள் இப்படிப் பேசுவோம் அப்படிப் பேசுவோம்" என்று அவர்களை ஏளனம் செய்வதுண்டு.

அகப்பையானது, சாதம் நிறைந்த பாண்டத்திலிருந்த போதிலும் சாதத்தின் சுவையை யறியாததுபோல், கிறீஸ்துவர்களாயிருந்தும், குருத்துவ அந்தஸ்தின் மேன்மையை யறியாத விசுவாசக்கண்கெட்ட கபோதிகளே போங்கள் என்று, நல்ல கிறீஸ்தவர்கள் குருவானவருக்குக் கீழ்படிந்து நடப்பதே புத்தி]

9. குருசாபனையால் அனேக குடும்பங்கள் நாசமாயிற்று என்று அறிந்திருப்பது ஒழுங்கு.

10. குருவானவர் செய்யும் நல்ல காரியங்களை எண்ணி அவரால் நேரும் அற்ப சொற்ப குறைகளை க்ஷமித்துக் கொண்டு அயரைப்பற்றிப் புறங்கூறாது, அவரிடத்தில் எப்போதும் போலவே மரியாதையாய் நடந்து கொள்வது ஒழுங்கு.

11. குருவானவருக்குக் கிறீஸ்துவர்களே தாயுந் தகப்பனும் பந்துக்களுமாயிருப்பதால் சுப தினங்களில் அவர்கள் அவரைச் சந்தித்து உபசரிப்பது ஒழுங்கு.

12. குருவானவருடைய பாதுகாவலராகிய அர்ச்சியசிஷ்டவரின் திருநாளின் போது, அல்லது கர்த்தர் பிறந்தபண்டிகை, விருத்தசேதனத் திருநாள், மூன்றிராசாக்கள் திருநாள் முதலிய விசேஷ நாட்களுள் ஒன்றிலாவது சபையாரனைவரும் ஒருமித்து குருவானவரை ஆடம்பரமாய்ச் சந்திப்பது ஒழுங்கு.

13. குருவானவருக்குப் பல வேலையிருக்கு மாகையால், ஒவ்வொருவனும் தன் தன் விஷயத்தைச் சுறுக்காய்ப் பேசி முடித்துக்கொண்டு போய் விடுவது ஒழுங்கு.

14. நேரமில்லாத நேரத்தில், அதாவது சாப்பாட்டு நேரத்தில், அவர் அயர்ந்து நித்திரை செய்யும் நேரத்தில், இளைப்பாறும் நேரத்தில், அல்லது ஏதாவது விசேஷ அலுவலில் அமர்ந்திருக்கும் நேரத்தில் அவரிடம் போக நேரிட்டால் "தொங்ரை மன்னிக்கவேண்டும்" என்று சொல்லி பிறகு தன் அலுவலைப் பற்றிப் பேச ஆரம்பிப்பது ஒழுங்கு.

15. குருவானவருக்காக அநுதின செபத்தில் வேண்டிக் கொள்ளுவது ஒழுங்கு.

16. தனக்கு அநேக உதவி உபகாரங்களைச் செய்து வந்த விசாரணை குரு இறந்த பிறகு அவர் ஆத்துமத்திற்காக பூசை செய்விப்பது ஒழுங்கு.

17. மேற்றிராணியாண்டவரைக் கண்டால் முழங்காலூன்றி மோதிரத்தை முத்தமிட்டு அவர் ஆசீரடைவது ஒழுங்கு.

18. மேற்றிராணியாரிடம் பேசும்போது அவரை "ஆண்டவரே" என்று அழைப்பது ஒழுங்கு.

19. மேற்றிராணியாரின் மோதிரத்தை முத்த மிடுவதற்குப் பலனுண்டென்று அறிந்திருப்பது ஒழுங்கு.

20. குருவானவரைப் பற்றி எழுதும்போது "சங்கைக் குரிய இராஜஷி குரு" என்றும் சிரேஷ்டரைப்பற்றி எழுதும் போது "மிகவும் சங்கைக்குரிய இராஜரிஷி குரு" என்றும், மேற்றிராணியாரைப்



பற்றி எழுதும்போது "சரியாய் வந்திக்கத் தக்க ஆண்டவரே" என்றும், அதிமேற்றிராணியாரைப் பற்றி எழுதும் போது" "மிகவும் வந்திக்கத் தக்க ஆண்டவரே" யென்றும், கருதினாலைப்பற்றி எழுதும்போது மிகவும் வந்திக்கத்தக்க கருதினாலாண்டவரே யென்றும், பாப்பானவரைப் பற்றி எழுதும் போது "பரிசுத்த பிதாவே" என்றும் குறிப்பது ஒழுங்கு.

21. சந்நியாசிகளைப் பிரதர் என்றும் அல்லது சகோதரர் என்றும் அழைப்பது ஒழுங்கு.

22. கந்நியாஸ்திரிகளைச் சகோதரிகளென்றும் தாயார் என்றும் அழைப்பது ஒழுங்கு.

23. சிரேஷ்ட தாயை அழைக்கும் போது "தாயார்" என்றழைப்பதும், அவர்களுக்குக் கடித மெழுதும் போது சங்கைக்குரிய தாயார் என்று குறிப்பதும் ஒழுங்கு.

(தொடரும்)

---

## CORRESPONDENCE.

## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்திரவாதி யல்லர். கடித மெழுதுவோர் தங்கள் கடிதங்களை மிகத் திருத்தமாயும், காகிதத்தின் ஒரே பக்கத்தில் இடது பாரிசத்தில் தாலு விரற்கடை இடம் விட்டும் எழுதுவதுடன் தங்கள் பெயர் விலாசங்களையும் தெளிவாய் எழுதல் வேண்டும். பெயர், விலாசம் வெளிப்படுத்துவதற் கல்ல, கடிதத்தின் உண்மைச் சங்கதிகளைப் பத்திராதிபர் உறுதிப் படுத்திக் கோள்வதற்கே. வெளிப்படுத்துவதற்கு தகுதியற்றன வென்று தள்ளி விடப்பட்ட கடிதங்கள் திரும்பவும் வாப்ஸ் செய்யப்பட மாட்டா. ப—ர்]

### மரியாயின் சங்கம்.

மஹாதனமும் மேன்மையும் பொருந்திய சங். பத்திராதிபர் அவர்கள் திவ்விய சமுகத்திற்கு சிர வணங்கி சர்வேசுரனுக்கு ஸ்தோதிரம் புரிந்தெழுதுவது:

சுவாமிகளே! தங்களது நல்லாயனில் இம் மாதம் பிரசுரிக்கப் பட்டிருந்த "மரியாயின் சங்கம்" என மகுடமிட்டிருந்த வியாசத்தைப் பார்வையிட்டேன். மெத்த வானந்தங் கொண்டேன். நமது தேவ தாயாகிய மரியாயின் சங்கத்திற்கு உழைக்க நாம் பின்வாங்கவில்லை. ஆகையால், சங். சுவாமிகளே! மதுரையில் ஷை சங்க விஷயத்தைப்பற்றி கூட்டங் கூடவும் பணம் வசூல் செய்யவும் ஷை சங்கத்தின் சங். குருசுவாமியவர்களிடமிருந்து உத்தரவுபெற்று நமக்கு அனுப்பிவைப்பீர்களென நம்புகிறேன்.

உண்மையுங் கீழ்ப்படிதலுமுள்ள

கத்தோலிக்கன்,

மதுரை, 16-6-13. வி. அ. ஞானப்பிரகாசம்.

### சேசுவின் திருஇருதயத்தால் கிடைத்த அற்புத சுகம்.

ஐயாவே, இதனடியில் காணும் வாக்கியங்களடங்கிய அநுகூலவிஷயங்கள் எமக்குக் கிடைக்குமாகில் சேசுநாதருடைய திரு இருதயத்தாதனிலும் நல்லாயனிலும் பிரசுரஞ் செய்கிறதாக யான் முன்னமே நேமிதஞ் செய்திருந்தேன். அவ்விதமே யான் கேட்டமன்றாட்டு அநுகூலமாய்க் கிடைத்தன. அவ்வாறே பிரசுரிக்க நீவிர் தயைசெய்வீரெனப் பிரார்த்திக்கின்றேன். அவையாவன: எனது மனைவி மரியசந்தியாகு இரண்டாம் பேறுக 7 மீ கற்பசங்கையாயிருக்கும் சமயம் அடிக்கடி நேரிட்ட வருத்தமான சூட்டு நோவுகளினிமித்தம் யான் அதிக கவலையடைந்து பின் என் மனைவியை ஷை வியாதியில் நின்றும் அப்படியே மனைவியின் பேறு கால சமயங்களிலும் யாதொரு விக்கினமின்றி காப்பாற்றித் தரும்படியாகவும் சேசுவின் திரு இருதயத்தினிடமும் இரக்கம் நிறைந்த தேவ தாயாரிடமும் யான் அடிக்கடிக் கெஞ்சி மன்றாடிக் கேட்டுவந்தேன். அப்படியிருக்க ஷை ஜுன் மீ முதல் தேதி ஞாயிறு காலை சுமார் 9-மணிக்கு எனது மனைவி மரியசந்தியாகு யாதாமொரு விக்கினமின்றி ஓர் பெண்மகவை யீன்றெடுத்தனள். உடனே ஓர்வித அபாய மயக்கம் கண்டும், பல், வாய் கிட்டியும் இப்படியாக பல சங்கடத்திற்குள்ளாக சேசுவின் திரு இருதயத்தினிடமும் இரக்கமுள்ள தேவ தாயாரிடமும் யானடிக்கடி கெஞ்சி மன்றாடிக் கேட்டுவந்த மன்றாட்டு வீண்போகா வண்ணம் அவர்களே தஞ்சமென வெண்ணி சில அவுடதப் பிரயோகங்கள் செய்ய யிப்போது தேவ கிருபையால் தாயும் சேயும் பூரணமான சுகத்துடன் இருக்கி

ருர்கள். அப்படியே யான் முன்னிருந்த வுத்தியோகமும் சேசுவின் இரக்கத்தால் கிடைத்தது. சேசுவின் திரு இருதயத்திற்கு மவரின் நேசத் தாயாராகிய அமலோற்பவ மாதாவுக்கும் சதா ஸ்துதியும் தோத்திரமும் உண்டாவதாக.

குருசடித் தெரு, } இங்ஙனம்
செர்மாதேவி. } ச. ஞா. அந்தோனி.

---

## பரிசுத்த தேவதாயின் வணக்கச் சிறப்பு, கோளும்பு.

---

அம்மணி யுலகமெலா மகமகிழ்ந்
தன்னைவாழ்த்த
உன்னரும் பெருமைதனை
யுலக மதறியச் சாற்ற
சின்ன வோர் சேயன் யானும்
செப்புமிம் மழலைச் சொல்லில்
என்னில்லாப் பிழையிருந்தால்
ஒப்புவாய் தப்புப்பாராய்.

சீர்வாய்ந்த சப்த சமுத்திரங்களாலும், குளிர்ச்சிபொருந்திய நவதானியப் பண்ணைகளாலும், முத்தருக்கள் நிறைந்த சோலைகளாலும், வானளாவிய சிகரிகளாலும் சூழப்பட்டிராநின்ற இலங்கைமா நகரின்கண் மார்கட் தெருவில் வீரபாண்டியன் பட்டணத்துப் பரதகுல பாலியர்களால் மே மீ 29-தேதி 30-தேதி களில் தேவதாயின் வணக்கமாத முடிவு ஆரவாரச்சிறப் பலங்காரத்துடன் கொண்டாடப் பட்டது. அன்று அவ்வீதி பலவிதபுஷ்பச் செடிகளாலும் இலை தோரணங்களாலும் பலவித த்வஜங்களாலும் அலங்கரிக்கப்பட்டு, இரவு 6 மணியளவில் பலவித சைனு லாம்புகளாலும், விசித்திர விளக்கு கூடுகளாலும், எலக்ற்றிக் கிட்சன் லயிற்றுகளாலும் இரவு மாறி பட்டப்பகல்போல் துலங்கிப்பிரகாசிக்க பேன்று வாத்தியங்கள் முழங்க, மத்தாப்புக்கள் பிரகாசிக்க, அதிர் வெடிகள் கோடையுடன் படீர் படீ ரென்று வெடிக்க, பறவைபோலும் பலவித ஜெந்துக்கள் போலும் வாணதினுசுகள் ஆகாய மெங்கும் ஜொலிக்க, ஆண்டவளைத் தரிசிக்கவந்த ஆயிரக்கணக்கான ஜனங்கள் பீடத்தை நோக்கி கைகுவித்திருக்க, அர்மோனிய வாத்தியத்துடன் லாவுதாத்தேயென்னும் சங்கீதம் பாட பரம ஆண்டவள் வீற்றிருக்கும் பீடத்தின் திரை திறக்கப்பட்டது. திறந்ததும், நூதனமாய் அலங்கரிக்கப்பெற்ற அதிவிசித்திர மயமான தேவதூதர்கள் கீதம் பாட மத்தியில் பன்னிரு நட்சத்திரத்தை சிரமீதில் சூட்டி, அருணனை ஆடையா யணிந்து, அம்புலியை பாத பீடமாய்க் கொண்டு, சர்வலோக நாயகி யெழுந்தருளியிருந்த பீடத்தில் எலக்றிக் லயிற்றுக்கள் உடுக்களைப்போ லொளிர, சுகந்த பரிமள மலர்களும் நானாவித பூச்செண்டுகளும் அதிவினோதமான வாசனைவீசி அழகு சொரிய பரமானந்த மோக்ஷ வாசலே அங்குதித்ததுபோற் காணப்பட்டது. பின் ம-ா-ா-ஸ்ரீ சூசை லாரென்ஸ் சவரியாபிச்சைக்காகு அவர்களால் வணக்கச் செபம் துவக்கப்பட்டு 10-மணியளவில் பரம ஆண்டவளின் வணக்கம் வெகு ஆடம்பரச் சிறப்புடன் கொண்டாடப்பட்டு முடிவுபெற்றது.

இங்ஙனம்
பால்ய தர்ம சம்ரக்ஷண சங்கத்தின்
அங்கத்தவரிலொருவன்.

## சிறிய புன்னைக்காயல் பிரியகாவலரான அர்ச். தோம்மை யப்போஸ்தலரின் ஆலய அபிஷேகம்.

---

தென்னவர்வாழும் தென்புன்னை யூர்க்கு வடக்கே முக்கால் மைல் தூரத்துக் குள்ளாயிருக்கும் அழிந்துபோன பூர்வீக சிறுபுன்னைக் காயல் என்னுமிடத்தில், பாரோர்க்குற்ற பல நோய் பிணிவாதைகள் தீர்ப்பப் பரம ஔடதந் தரும் பண்டிதராயெழுந்து, நானாதிக்கிலுமுள்ள நரரானோர் நாடியோடி வருதற்கான நலங்கள் புரிந்து, "நம்மை நம்பினோரைக் கைவிடோ" மென உறுதிமொழி யுடையோராய் அக்கானகத்தின்கண் வீற்றிருக்கும் அர்ச். தோம்மையாரின் ஆலய அபிஷேகம் நிகழும் 1913-ம் வருஷம் வைகாசிமாதம் 10உ யாகிய சனிக்கிழமை மாலை $6\frac{1}{2}$-மணிக்கு ஆரம்பமாகி, சுமார் 7-மணியளவில் முற்றுப்பெற்றது. அப்போதங்குற்ற சடங்கின் விவரமடியில் வருமாறு காண்க:

எங்கும் புகழ்படைத்த யேசுசபையினோர் அங்கத்தவரான சங். எ. கொலெற் சுவாமிகள் முன்னும், பாடகர் அபிஷேகச் சங்கீதம் வாசித்துப் பின்னுமாக அக்கோவிலினின்று தலவாயில் வழியாக வெளியாகினர். அந்நேரம் அதிர்



வேடி படீர் படீரென்றதிர, ஆலயத்தின் கண்ணுள மணிகள் அபிஷேகம், அபிஷேகமென்றொரு பக்க மார்ப்பரிப்ப, பாண்டுவாத்தியம் ஆனந்தமென்று மனதுக்குச் சந்தோஷத்தை மறுபக்க மதிகரிப்ப, பலதிசைகளிலிருந்து வந்து குழுமி யிருந்தவர்கள் வெகு பத்தியாய்த் தங்களிருகரங்களையுங் கூப்பி உவகையெனும் வெள்ளத்தில் மூழ்கி நிற்ப, அக்கோவிலைச் சுற்றிவந்துட்சென்று சகல மோக்ஷவாசிகளுடைய பிரார்த்தனையும் வேறு சில ஜெபங்களும் சொல்லி முடித்தனர். பின்னர் மாலை யாராதனையாகிய வெஸ்பர்ஸ் பாடப்பட்டது. அவ்வேளை பீடத்தின்மேற் செய்யப்பட்டிருந்த சோடினையையும் சுவர்களில் மாட்டியிருந்த சித்திரங்களையும், முகட்டிலிருந்து தொங்கவிட்டிருந்த பலவர்ண மாலைகளையும் உற்று நோக்குபவர், ஆகா, ஈதென்ன ஆச்சரியம்! மோட்சலோகமென்பது இவ்வண்ணந்தா னிருக்குமோ! அம்மம்ம, எத்தகைய அலங்காரமெனத் திக்பிரமை கொள்வாராயினர்.

அப்பால் பல சூரியர்கள் போன்ற மின்சார தீபங்களும் தீவர்த்திகளும் பிரகாசிக்க, வெகு விஜித்திரமாய்ச் சோடிக்கப்பெற்றிருந்த சப்பரத்தின் பவனி காணலாயிற்று. அப்போது சிற்சில இடங்களினின்று வேண்டுதல் செய்ததோடு தமிழ் பாப்பிரியர் கேட்பதற்கினிய ஆசிரிய விருத்தங்களும் பாடப்பட்டன. அதன்பின்னர் பலவித விநோத வாணவேடிக்கைகள் காட்டப்பட்டதோடு அன்று மாலை யுற்சவம் முடிந்தது. மறுநாள் ஞாயிறு வாரத்தன்று மகா ஆடம்பரமாய் பாடற் பலிப்பூசை நிறைவேறியது. இது முகிந்ததும், திவ்ய நற்கருணை யாசீர்வாதம் கொடுக்கப்பட்டது. அப்பால் சப்பர சுற்றுப்பிரகாரமிருந்தது. இதன்முன் னித் திருஸ்தலத்திற்கு வந்து இவ்வப்போஸ்தலரி னுதவியால் தமக்கிருந்த மனக் கவலைகளொழியப் பெற்றவர்களும், அரும்பெரும் புதுமைகள் நடந்து வருவதாகக் கேள்வியுற்று அம்மாதவனைக் காணவந்தவர்களும். ஆக அன்று தினம் கூடியிருந்தவர்களின் தொகை ஆறுயிரத்துக் கதிகமாகவே யிருக்கும். அதில் ஈராயிரம்பேர் அந்த காரத்தி லமிழ்ந்திய இந்துமதத்தினர்களா யிருந்தார்க ளென்பதே அவ்வர்ச்சியசிஷ்டவர் ஆங்கு செய்துவரும் அளவற்ற அற்புதங்களின் குன்றாத சாட்சியமாம். அன்னோர்க் கேம்மைப்போன்று சிலுவை யடையாள முதலிய மந்திரங்கள் தெரியாவிடினும், மேரைமரியாதையுடன் கோவிலுட்புகுந்து தங்களிருதய வாயிலாகப் பண்ணும் ஜெபத்தின் உன்னத மாதிரிகையைக் கண்ணுறுங் காட்சி பெருமாட்சியாய்த் தோன்றியது. அத்திருஸ்தலத்தைச் சந்திக்க வருபவர்க்கு சிறிதும்பெரிதுமான எழு குடிசைக ளிருந்தன. அவைகளில் இடங்காணுது சிலர் வெறுந்தரையி லிருக்க நேரிட்டது. வாயு வேகமாய் வீசியதால் அங்ஙனமிருக்க வசதிக் குறைவாயிருந்தது. ஆதலால் அவரவரா லியன்ற காணிக்கைகளைச் செலுத்திவிட்டு குடிசைகளி லிருந்தவர்கள் தவிர, மற்றையோர் தங்கடங்கள் ஊர்போய்ச் சேர்ந்தனர். தங்கி யிருந்தவர்களிற் சிலர் தான தருமங்கள் கொடுத்து 1. 2, அதற்கு மேற்பட்ட நாட்களுமிருந்து தம்பதி போய் அடைந்தனர்.

இது நிற்க. சிறிதும் பழமையுமா யிருந்த இவ் வாலயத்தை, மரணித்துப்போன தூத்துக்குடி பாவுல் இஞ்ஞாசிப் பருனாந்து அவர்களின் மனைவியளித்த காணிக்கையைக்கொண்டு பெருக்கியும் புதுக்கியு மிருப்பதுடன் சென்ற அபிஷேகச்செலவத்தனையும் அச்சீமாட்டியாலேயே அளிக்கப்பெற்றது. மேலும் ஓர் துவஜ ஸ்தம்பமும், அதற்குரிய சந்தோமையி னுருவம் வரைந்துள்ள கொடியும், இன்னம் கோவிலுக்கு வேண்டிய சில பொருட்களும் அத் தர்மகுண மாது கொடுத்தாள். ஈதன்றியே ஷை யூர் வாலிபர் 14 சிலுவைப் பாதைப் படங்களும் இரண்டு லாம்புகளும் காணிக்கையாகச் சமர்ப்பித்தனர்.

பிறகு ஊர்களிலிருந்து வந்தவர்கள் வேறனேக காணிக்கைகள் கொண்டுவந்தனர். நித்தமும் அவ்விடம் ஐம்பதுக்கு மேற்பட்ட திருயாத்திரைக்காரர் குறையாது வரப்போக யிருக்கிறுர்கள். ஜவளங்களு ளொன்றுகிய நீர்வளமின்றி அங்கு யிருப்பவர் வெகு கஷ்டப்படுகிறபடியால், இதனை நிவிர்த்திபண்ணுவார் எவரோ அவர் அர்ச். தொம்மை அப்போஸ்தலரின் விசேஷ உதவி சகாயம் பெறுவர் என்பது திண்ணம். தற்போது அர்ச். தொம்மை யப்போஸ்தலர் ஆலயமிருக்கு மிடமே முற்காலத்தில் "சிறு புன்னைக்காயல்" எனப் பெயர்பெற்று வழங்கி வந்தது. அறிய விரும்புவோர் சிறிது காலத்துக்குள் வெளிவரும் "புன்னைக்காயல் பூராதனம்" என்னும் புத்தகத்திற் காணலாம்.

மட்டக்களப்பு, } ஜெ. யஸ். லோபோ.
11—6—13 }

## OUR OBLIGATIONS TOWARDS THE HOLY SOULS.

## உத்தரிக்கிற ஆத்துமாக்கள் மட்டில் நமக்குள்ள கடமைகள்.

உத்தரிப்பு ஸ்தலத்து ஆத்துமகாக்களுக்கு நாம் செய்யவேண்டிய கடமைகளைப் பார்ப்போம். பிறர்சிநேகத்தின் பொருட்டு அவர்கள் மட்டில் நமக்கெல்லாம் ஒரு சதாரண கடமையுண்டு. ஆனால் சில ஆத்துமாக்கள் மட்டில் நமக்கு நீதியானபடி கட்டாயமான விசேஷ கடமையுமுண்டு. இந்த நீதியின் கடமையைப்பற்றி பேசியபின் பிறர் சிநேகக் கடமையைப் பற்றியும் சிலவார்த்தைகள் சொல்லத் தகும்.

பிள்ளைகள் முதலிய சுற்றத்தோர் வழக்கமாய்ப் பெற்றோர் முதலானோருடைய சொத்துக்களைச் சுதந்தரிக்கிறவர்களாகிறார்கள். இப்படிச் சுதந்தரிக்கிறதினால் இவர்கள்மேல் பலமுறையும் பாரமான கடமைகள் சுமருகின்றன. ஆனால் எத்தனையோ பிள்ளைகளும் உரிமைக்காரரும் இறந்து போவோருடைய பொருளைச் சுதந்தரித்துக்கொள்ளத் துரிதப்படுகிறார்களேயன்றி, அப்படிச் சுதந்தரித்துக் கொண்டதினால் உண்டாகும் கடமைகளை அநுசரிக்க நினைக்கிறார்களில்லை. இதுமட்டா? செத்தவர்களுக்கு வாக்குப் பண்ணினதையும் நிறைவேற்ற மறந்து போகிறார்கள். இது எவ்வளவு கொடிய செய்கை! ஒரு பிச்சைக்காரனைக் கொள்ளையடிப்பது கொலை செய்வதற்குச் சரியென்று கார்த்தேசு நகரிற் கூடிய நாலாந் திருச்சபைச் சங்கம் சொல்லிற்று. ஆதரவற்றோராகிய இறந்த ஆத்துமாக்களைக் கொள்ளையடிக்கிறது எவ்வளவு பெரிய துரோகமாயிருக்கும்! ஆகையினாலேதான் இறந்தோர் மட்டிலுள்ள கடமைகளை நிறைவேற்றாத சுதந்தரக்காரரைச் சர்வேசுரன் விசேஷ விதமாய்த் தண்டிக்கக் காண்கிறோம். செத்தவர்கள் தேடிவைத்தது பலமுறையும் திடீரென்று அழிகிறதும், சுதந்தரித்தோர்பேரிற் சாபம் விழுந்ததுபோல் தோன்றுகிறதும் இந்த நியாயத்தினால் தான்.

மிலான் பட்டணத்திலே ஒரு நேர்த்தியான தோட்டம் ஒருநாள் ஆலங்கட்டி மழையால் அழிந்தது. ஆனால் அயற் தோட்டங்களுக்கோ ஒரு தீங்கும் சம்பவிக்க வில்லை. இது எப்படியென்று ஒருவருக்கும் விளங்காமலிருக்க, உத்தரிப்பு ஸ்தலத்து ஆத்துமம் ஒன்று ஒருவருக்குத் தோன்றி “நன்றியற்ற கல்நெஞ்சு படைத்த பிள்ளைகளைச் சர்வேசுரன் இப்படித்தான் தண்டிக்கிறார்” என்று வெளிப்படுத்திற்று. சார்ளிமன் என்னும் இராயனுடைய காலத்திலே அநேக யுத்தங்களில் போர் செய்த ஒரு சேவகன் சாகும் போது தன் வாளையும் குதிரையையும் தன் மருமகனிடங் கொடுத்து, “வாள் உனக்கு; குதிரையைவிற்றுவரும்பணத்தை என் ஆத்தும இளைப்பாற்றிக்காகப் பிச்சைக்காரருக்கும், பூசை செய்விக்கும்படிக்கும் கொடு” என்றான். மருமகன் அழுகையோடே அப்படியே செய்கிறேனென்று வாக்குத் தத்தம் பண்ணினான். ஆனால் மாமனைப் புதைத்த பின்பு குதிரையை விற்கக்கொண்டு போன விடத்தில் சரியான விலைவராதபடியால், ஆத்திரப்படுவானேன்; வைத்திருந்தால் பிற்காலம் நல்ல விலைக்கு விற்கலாம்; ஆனால் சும்மாவைத்திருப்பது கட்டுமாவென்று யோசித்து, அதைத் தன் உபயோகத்துக்கே வைத்துக்கொண்டான். ஆறுமாதஞ்சென்றும் குதிரை விலைப்படவில்லை. இப்படியிருக்கையில் மாமனுடைய ஆத்துமம் இவனுக்குக் காணப்பட்டு; “கல் நெஞ்சனே! இதுதானா. உன் வாக்கு; நானோ தேவ இரக்கத்தால் இன்று இரட்சிக்கப்பட்டேன். ஆனாலும் நீ சீக்கிரஞ் செத்து நான் உத்தரிக்கவேண்டியதை நீ உத்தரிப்பாய்” என்று சொல்லி விட்டு மறைந்தது. அப்படியே அவன் நோய்வாய்ப்பட்டுத் தான் கண்ட காட்சியை ஒரு குருவானவருக்குச் சொல்லிச் செத்தான். எத்தனையோ ஆத்துமாக்கள், உரித்தாளிகள் தங்களுடைய கடனைத் தீர்க்காதபடியால் உத்தரிப்பு ஸ்தலத்தினின்று விடுதலை யாகாமலிருக்கிறார்கள். சாகிறவர்கள் யாதேனும் நற்கிரியையைத் தங்களுக்காகச் செய்யும்படியாகச் சொல்லிச் சாகும்போது, அந்நற்கிரியை, தங்கள் சீவிய காலத்தில் தாங்கள் கட்டிக்கொண்ட அநியாயங்களுக்கு உத்தரிப்பாக வேண்டும் என்பதே அவர்கள் கருத்து என்று சொல்லாமலே விளங்கும். ஏனெனில், இவர்கள் தங்கள் குற்றங்களை வெளியிடா விட்டாலும் பலமுறையும் ஆத்தும குருவானவரின் ஏவுதற்படியே இவ்வண்ணஞ் செல்லி விட்டுச் சாவார்கள். பாவங்களுக்குப் பரிகாரமாகச் செய்யும்படி சொல்லப்பட்டவைகளோ தீர்க்கப்படவேண்டுமென்பது கடமை. அவைகள் தீர்க்கப்படா விட்டால் செத்தவர்கள் “கடைசிக்காசு இறுக்குமட்டும்” உத்தரிப்பு ஸ்தல மறியலிலே விடப்படுவோராவார்கள். செத்தவர்களுக்கு நம்மைத்தவிர வேறு சிநேகிதர்களும் உண்டு என்று சொல்லாதிருப்போமாக. “என் சிநேகிதராகிய நீங்களாகிலும் என் பேரில் இரக்கமாயிருங்கள்” என்று யோபு ஆகமத்தில் சொல்லப்பட்ட வாக்கியங்களைத் திருச்சபை உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்குப் பொருத்திச் சொல்லுகிறதைக் கவனியுங்கள். இவ்வார்த்தைகளின்படியே தகப்பன் பிள்ளைகளையும், புருஷன் பெண்சாதியையும், சகோதரன் சகோதரரையும் குறை சொல்லுவோராகிறார்கள். “சாகும்போது கண்ணீர் சொரிந்து வாக்குப் பண்ணினீர்களே. ஆ! உன்னை நேசிக்கிறோம் என்றீர்களே. இதுதானா உங்கள் நேசம்? உங்கள் நேசம் இந்த நெருப்பிலே எனக்கு உதவக்கூடாதா? நீங்கள் மனஸ்தாபப்பட்டுச் சிந்துகிற ஒரு துளிக் கண்ணீர் இதை அவிக்கப்போதுமே. என்னுடன் கூடச் சாக ஆயத்தமா யிருந்தவர்கள் இப்போது எங்கே!” என்று எத்தனையோ ஆத்துமாக்கள் முறையிடுகிறார்களே. மிக நெருங்கிய பாத்தியமுள்ளவர்களும், தங்களுக்கு அருமையானவர்களை மறந்து விடுகிறார்களென்றால், பிறரைப்பற்றிப் பேசவேண்டுமா? சில தாய்மார் கூட இப்படிச் செய்கிறார்கள். இவர்கள் ஒரு பிள்ளையை இறக்கக் கொடுத்து விட்டால் ஓயாமல் அழுவார்கள். என்ன ஆறுதலையும் ஏற்கார்கள். வீட்டுக் கருமங்களையும் பாரார்கள். மற்றப் பிள்ளைகளையும் மறந்துவிடுவார்கள். கோயில் குளத்தையும் அலட்சியஞ்செய்து எப்போதும் அழுத வண்ணமாகவே திரிவார்கள். இறந்த பிள்ளைகளின் ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு சிறு கருமமுஞ் செய்யார்கள். கற்றிம்பறே என்பவர் தம்முடைய பேத்திக்குச் சம்பவித்ததைப் பற்றி எழுதினதாவது: “என் பேத்தி ஒரு பிள்ளையை இறக்கக் கொடுத்தபோது செய்யவேண்டிய எல்லாவற்றையும் விட்டுப்போட்டு, தன் சுபாவ நேசத்தின் மிகுதியினால் அழுது கொண்டேயிருந்து விட்டாள். ஒன்றாலும் ஆறுதலடையாமலிருந்தாள். தேவனோ அவள்பேரில் இரங்கினார். ஒரு நாள் இவள் தரிசனத்திலே ஒரு வடிவரீன பட்டணத்தில் சுற்றுப்பிரகாரமொன்று வந்துகொண்டிருக்கக் கண்டாள். அதற்குள்ளே தன் மகனும் வருவானோவென்று ஓடிப்போய்ப் பார்த்துங் காணவில்லை. கடைசியாய் எல்லாருக்கும் பின்னாலே தன் நேசகுமாரன் நனைந்த வஸ்திரத்தோடும், துக்கக்கோலத்தோடும் வரக்கண்டு, “என் மகனே எல்லாருக்குங் கடைசியாய் வருகிறாய்? முன்னணியில் வந்தாலல்லோ என் ஆசை தீரும்” என்று கேட்க, “ஆ! தாயே! உன் கண்ணீர்தான் என்னைப் பின்னிடப் பண்ணிற்று. அதுதான் என் வஸ்திரத்தை நனைத்துப் பாரமாக்குகிறது. நீ என்னை நேசித்தால் எனக்காக மன்றாடு. தருமங்கொடு. பூசைசெய்வி. அப்படிச் செய்வதுதான் அன்பு, உண்மையான நேசம்” என்று சொல்லி மறைந்தான். தாயும் மனம் ஆறி அப்படிச் செய்தாள். நல்ல பரிசுத்தமுள்ள தாய்மாரும் சில வேளைகளில் இறந்துபோன தங்கள் மக்களை மறந்துபோகிறார்கள். போர்த்துக்கால் தேசத்து இராக்கினியாகிய அர்ச். எலிசபெத்து தன் புருஷனுடன் சந்தாரெம் என்னும் பட்டணத்திற்குப் போகையில், ஒரு முனிவர் வண்டியின் பின்னாலே ஓடிவந்து இராக்கினியைக் காண உத்தரவு கேட்டார். சேவகர்கள் விடவில்லை. ஆனால் இராக்கினி அவரைக்கண்டு கூப்பிடுவித்துச் சமாச்சாரம் கேட்க, அவர் “உம்முடைய மகன் கொன்ஸ்தான்ஸ் தம்மை அநேகம் விசை எனக்குக் காண்பித்துத் தாம் உத்தரிப்பு ஸ்தலத்தில் அநேக காலம் உத்தரிக்கவேண்டியிருப்பதாகவும், ஒருவருஷம் முழுதும் ஒவ்வொரு நாளும் பூசைசெய்வித்தால் மீட்சியடைவாரெனவும் சொன்னார்” என்றார். முனிவர் இதை சொல்லக்கேட்ட சேவர்கள் குலுங்க நகைத்தார்கள். இராக்கினியோ, தன் நாயகனுடன் யோசனைபண்ணி, எப்படியும் பூசைசெய்விப்பதிலே நட்டமென்னவென்று துணிந்து, வெகு புண்ணிய ஆத்துமாவான “மென்டெஸ்” என்னும் குருவானவரிடம் பூசை செய்யும்படியாகக் கேட்டுக்கொண்டாள். ஒருவருஷஞ் சென்றபின் இறந்தபோன மகன் எலிசபெத் அம்மாளுக்குக் காணப்பட்டு, உமது மன்றாட்டுகளால் இன்றைக்கே மோட்சம் சேரப்போகிறேனென்று சொல்லி மறைந்தார். இராக்கினி சர்வேசுரனுக்குத் தோத்திரஞ் செலுத்தும்படியாகக் கோவிலுக்கு போனவிடத்தில் தான் மகனுக்காகப் பூசைசெய்யும்படி கேட்டுக்கொண்ட குருவானவரைக் கண்டபோது, அவர் நேற்றுத்தான் நீர் கற்பித்த பூசையின் தொகை முடிந்ததென்றார்.

ஞானத்தாய் தகப்பன், ஞானப் பிள்ளைகள் மட்டிலும் நமக்குக் கடமையிருக்கிறது. லௌகீக உறவின்முறையோர் பொதுவாய்த் தங்கள் உறவினரின் ஆத்துமங்களை நினையாமற்போகிறார்கள் என்றாலும், ஞான உறவுள்ளோராவது தங்

கள் ஞானத் தாய் தகப்பன், பிள்ளைகள் இவர்களுக்கு உதவி செய்யவேண்டியது. விசேஷமாய்ப் பிறதேசங்களிற் சென்று ஊழியஞ்செய்யும் குருமார்மட்டிலே, அக்குருமாரால் ஞானநன்மைகளை யடைந்தோரெல்லாம் கடமைப்பட்டிருக்கிறார்கள். குருமார் உத்தரிக்கிற ஸ்தலத்திலிருப்பதற்கு அவர்களது ஞானப்பிள்ளைகளே பலமுறையும் காரணமாயிருப்பதுண்டு. இக்குருமார் தங்கள் சொந்த இனசனங்களை விட்டு விசுவாசிகளையே தம் இனசனர்களாக ஏற்றுக்கொண்டிருக்கிறபடியால், இவர்களுக்காக மன்றாடுவது அவ்விசுவாசிகளின் கடனேயாம். குருமாருக்கு நூற்றுக் கணக்கான ஞானப் பிள்ளைகளிருந்தும் குருமார் தாமே அதிகமாய் ஆதரவற்ற உத்தரிப்பு ஸ்தலத்தில் வருந்துகிறார்களென்று நாம் சில காட்சிகளைக்கொண்டு அறிவது துக்கமான காரியமல்லவா? மேலும், நம்மால் உத்தரிப்பு ஸ்தலத்திற்குப் போன ஆத்துமாக்களுக்காக நாம் அதிகமாய்க் கடமைப்பட்டிருக்கிறோமென்பதற்குச் சந்தேகமில்லை. நம்மாலே எத்தனைபேர் நாகத்திற்குப் போயிருக்கக் கூடுமென்ற பயங்கர காட்சியை நடுத்தீர்க்கிற நாளிற் காண்போம். அக்காட்சியைச் சர்வேசுரன் விலக்கியருளுவாராக! ஆனால் தன்னாலே ஒருவரும் உத்தரிப்பு ஸ்தலத்துக்குப்போகவில்லை என்று சொல்லத்தக்கபடி சீவித்த ஆள் உலகத்திலே இல்லை என்னலாம். ஏனெனில், பிறருக்கு இடறலின்றிப் பாவங் காட்டிக்கொள்ளுதல் அரிது. எத்தனையோ தருணங்களில் பிறர் தவறிப்போக காரணமாயிருந்திருப்போம். ஆகவே நாம் ஒரு குறையுமில்லாமல் சந்தோஷமாய்ச் சீவிக்கிற இந்நேரத்திலே, நம்மாலே உத்தரிப்பு ஸ்தலத்திலுட்பட்ட எத்தனையோ ஆத்துமாக்கள் அங்கே உத்தரிக்கிறார்கள். எவ்வளவு பயங்கரமான சிந்தனை! நமது பேரில் எவ்வளவு பாரமான கடமை! உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்களுக்கு உதவிசெய்கிறதும், செய்யாமல் விடுகிறதும் நம்முடைய இன்பமான இஷ்டத்திலே விடப்பட்டிருக்கிற ஒரு புண்ணியமா? இல்லை இல்லை. எத்தனையோ முறை நமக்கு அது கடமையான ஒரு பொறுப்பு. நீதியின் கடமை சில ஆத்துமாக்கள் மட்டிற் சில ஆட்களுக்கு மாத்திரம் உண்டு. ஆனால் பிறர் சினேகத்தின் கடமையோ சகல ஆத்துமாக்களின் மட்டிலும் சகல கிறீஸ்துவர்களுக்கும் உண்டு. நாம் எல்லோரும் சகோதரர். ஐக்கியப் பிரயோஜனத்தின் மூலமாய் நமக்குள்ள எல்லாம் பொது. ஒரு குடும்பத்திலே சுகதுக்கம் எல்லாம் அக்குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்கும் பொதுவாயிருக்கும். நாமோ யேசுநாதருடைய குடும்பத்தவர்கள். ஆகையால் மோட்சவாசிகளுடைய சுகம் நம்முடைய பாக்கியமாகவும்; உத்தரிக்கிற ஆத்துமாக்களுடைய துக்கம் நம்முடைய துக்கமாகவுமிருக்கவேண்டும். நம்முடைய வீட்டு வாசலிலே ஒருவன் பசியாற் சாக நாம் பார்த்திருந்தால் நாமே கொலைக்காரர் என்னப்படுவோம். அப்படியிருக்க நம்முடைய ஞானக்கண் முன்பாகச் சர்வேசுரனிலே பசியும் தாகமுமாயிருந்து துன்பப்படுகின்ற உத்தரிப்பு ஸ்தலச் சகோதரரைப் பார்த்துக்கொண்டிருக்கலாமா? யாராகிலும் ஒருவன் விழுந்து கிடந்து வேதனைப்படுவானாகில், அவனைத் தூக்கி விடவும் அவனுக்கு உதவி செய்யவும் தீவிரிக்காதிருப்போமா? அப்படியிருக்க, உத்தரிப்பு ஸ்தலத்தில் கிடந்து வருந்திப் பிரலாபிக்கின்ற நமது சகோதரருக்கு உதவி செய்யாமல் விடலாமா? இவர்களே தேவனுடைய அருமையான பிள்ளைகள். தேவநீதி அவருடைய கைகளை ஒரு விதமாகக் கட்டிவைத்துப் போட்டது. ஆதலால் நாமே அவர்களுக்கு உதவவேண்டுமென்று விரும்புகிறார். அவர்களுக்குச் செய்வதை நமது நல்ல தேவன் தமக்குச் செய்ததாகவே ஏற்றுக்கொள்ளுகிறார். இந்த ஒரு ஆறுதல் நமக்குப் போதாதா? தேவனுக்கு உதவி செய்யவும் பின்னிடலாமா? இதனாலேதான் எத்தனையோ அர்ச்சியசிஷ்டர்கள் தங்கள் சீவனைக்கூட உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்காக ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். ஒரு ஸ்திரீ உத்தரிப்பு ஸ்தலத்து ஆக்கினைக்குப் பயந்து, சாகக்கிடக்கையில் தேவத்திரவிய அநுமானங்களைப் பெற்றுக்கொள்ளச் சம்மதிக்க வில்லை. சேசுசபையிலே பேர்போன "நூற்றம்பேர்க்" என்னும் குருவானவர் இவள் மனம் திரும்பும்படி பூசைவைத்து இவளுக்காகத் தாம் ஆக்கினைப்படச் சம்மதித்தார். உடனே இவள் மனந்திரும்பித் தேவத்திரவிய அநுமானங்களைப் பெற்றுப்பாக்கியமாய் மரித்தாள். ஆனால் குருவானவரோ அந்த நாள்தொட்டுச் சாகுமட்டும் 16-வருஷமாக ஆத்துமத்திலுஞ் சரீரத்திலும் உத்தரிப்புஸ்தலத்து ஆக்கினையை அநுபவித்து பிறர்சிநேக வேதசாட்சிபோற் செத்தார். நாம் பிறருக்கு அளந்த அளவாலேயே நமக்கும் அளக்கப்படும். நாம் மறந்தால் நாமும் மறக்கப்படுவோம். வணக்கத்துக்குரிய அர்க்கான்ஜலயின்கோறலா என்னுங் கன்னி, உத்தரிக்கிற ஆத்துமாக்கள்பேரில் மெத்தப் பத்தியாயிருந்தாள். சகல ஆத்துமாக்களுக்காகவும் மன்றாடிவருவாள். அறிந்தவர்களுக்காக மாத்திரமல்ல, அறியாதவர்களுக்காகவும் மன்றாடுவாள். இப்படியிருக்கத் தன் தகப்பன் செத்தபோதோ அவரை முழுதும் மறந்துவிட்டாள். ஒரு நாள் தகப்பனுடைய ஆத்துமம் இவளுக்குக் காணப்பட்டு இவளுடைய அசட்டையைக் கண்டித்தது. இவளும் அதிசயப்பட்டுத் தன் காவலான சம்மனசை நோக்கி, என் இப்படி மறந்தேன் என்று கேட்டதற்கு பிரதியுத்தரமாய்: "இது தேவசித்தத்தாற் சம்பவித்தது. உன் தகப்பன் ஒரு கெட்ட மனுஷனல்ல. ஆனாலும் மறுமையைப் பற்றி அவ்வளவாய் கவனித்ததில்லை. பிற ஆத்துமாக்களை மறந்து நடந்தபடியால் சருவேசுரனும் நீ அவரைச் சிலகாலம் மறக்கப்பண்ணித் தண்டித்தார்" என்றது. பிறர் நமக்கு உதவ வேண்டுமென்றால் நாமே இப்போது அவர்களுக்கு உதவி செய்துவைப்போமாக. (Voices from Purgatory)

> இதை வாசிக்கும் நண்பர்களே! நிகழும் 1913-ம் வருடம் மே-மாதம் 23-ந்உ வெள்ளிக் கிழமை மரணமான எனது தாயார் மரிய பிதேலி முறயிஸ் அம்மாள்; ஆத்துமத்தின் நித்திய இளைப்பாற்றிக்காக ஒரு பர. பிரி. திரி. வேண்டிக் கொள்ளப் பிரார்த்திக்கின்றேன். R. I. P.

M. A Missier,
Tuticorn.



# GENERAL NEWS AND NOTES.
## பொது வர்த்தமானம்.

---

**காகிதக் கயிறு:**—காகிதத்தைச் செய்வதற்கு எந்தெந்த வஸ்து உபயோகப்படுகிறதோ அந்த வஸ்துக்களைக் கொண்டு கயிறு செய்கிறார்களாம். இந்தக் காகிதக் கயிறு நூற் கயிற்றை விட அதிக உறுதியாயும் அழகாயுமிருக்கிறதென்று சொல்லப்படுகிறது.

**பட்டின்மேல் ரெயில் வண்டி:**—இராமேஸ்வரத்துக்கும், மண்டபத்துக்கும் மத்தியிலுள்ள ஜல சந்தியில் மரங்களால் மிதப்புப் பாலம்போட்டு அதன்மேல் ரயில் பாதையிட்டு புகைவண்டி யோட்ட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இவ்வேலை ஓர் அமெரிக்க இஞ்சினீயருடைய முன் பார்வையில் நடக்கும்.

**ஆறணு அபராதம்.**—அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தின் மாஜி பிரசிடென்டாகிய மிஸ்டர் ரூஸ்வெல்ட் பிரபுவை மற்றொரு பிரபு குடிகாரனென்று ஓர் பத்திரிகையில் வெளியிட்டதற்காகக் கொண்டுவரப்பட்ட கேசில் ஷ பிரபுவுக்கு ஆறணு அபராதம் விதிக்கப்பட்டதாம். மானிகளுக்கு ஆறணுவென்றாலும், ஆயிரம் வராகனென்றாலும் ஒன்றுதானே.

**மெற்றிரிக்குலேஷன் பரிட்சை**—இப் பரிட்சையில் இவ்வருஷந் தேறினவர்கள் சென்னையில், முதல் வகுப்பு 5 பேர்; 2-வது வகுப்பு 16 பேர்; 3-வது வகுப்பு 27 பேர். ஆக 48 பேரே. இதற்கு முன்னே, நூற்றுக் கணக்காகவும் ஆயிரங் கணக்காகவும் தேறுகிறவர்கள் இவ்வருஷம் அரை நூறுபேருக்குக் கூடவழியில்லை. இப் பரிட்சையின் கதி யிவ்வாறாயிற்று!

**சென்னை இஞ்சினீரிங் காலேஜ்.**—சேப்பாக்கத்தி லிருக்கும் இக்காலேஜ் சைதாப்பேட்டைக் கருகிலுள்ள கெண்டிக்கு மாற்றுவதாய் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக கட்ட பிரேரேபிக்கும் கட்டடத்தின் மதிப்புத் திட்டமும், மாதிரிப் படமும் இந்தியா கவர்ண்மெண்டாரால் இப்போது ஆலோசிக்கப்பட்டு வருகின்றன.

**மணி பார்த்துக்கொள்ள வரி:**—லண்டன் மாநகரிலுள்ள கிரீன்விச் நட்சத்திரக் கணித சாலையின் கடிகாரத்திற் காட்டு மணியே திருத்தமான மணியென்று சகலராலுங் கொள்ளப்பட்டது. இந்தக் கடிகாரத்தில் மணி பார்க்க விரும்பும் வியாபாரிகள் வருஷத்துக்கு வரி இரண்டுபவுன், அதாவது முப்பது ரூபாய் கொடுக்கவேண்டுமென்று உத்தரவாயிருக்கிறது.

**பைத்தியத்தைக் கண்டுபிடிக்கக் குறி:**— பைத்தியம் பிடித்திருப்பவர்கள் கண்களில் நீர் வருவதேயில்லையாம். பைத்தியக்காரனொருவனுக்குக் கண்ணீருண்டா

குமானல் அவனுக்குப் பைத்தியம் நீங்கிற்றென்று சொல்லலாமாம். மனத்தை வெகுவாய் வருத்தும் வியசனமுற்றிருப்பவர்கள் கதறியழும்போது கண்ணீர் வந்தால் அவர்களுக்கு ஆபத்தில்லையாம். கண்ணீர் வராதே போனல் கட்டாயம் அவர்களுகக்கு பைத்தியம் பிடிக்குமாம்.

**ஆனரபில் சர் ஹாரல்டு ஸ்டேவர்ட்:—** மாட்சிமை தங்கிய சென்னைக் கவர்னர் அவர்களின் நிர்வாக சபையிலிருந்து நீங்கிப்போன சர் மர்ரே ஹாமிக் துரைக்குப் பதில் ஆனரபில் சர் ஹாரல்டு ஸ்டேவர்ட்துரை மூன்றுவது மெம்பராக நியமனம் பெற்றாரெனக் கேள்வியுற்று சந்தோஷப். படுகிறோம். முதல் மெம்பர் சர். ஜே. என். அட்கின்ஸன், இரண்டாவது மெம்பர் ஆனரபில் மிஸ்டர் பி. எஸ். சிவசாமிஐயர் ஆவர்.

**யந்திரங்களால் நேரும் விபத்துக்கள்:-** அமெரிக்க ஐக்கிய நாடுகளிலே பலவித கைத்தொழிற் சாலைகளில் வேலைசெய்யும் கூலியாட்களில் யந்திரங்களால் உயிர்ச்சேதமடைபவர்கள் வருஷத்தில் 30,000 பேர்களாம். காயமடைவோர்கள் ஐந்துலட்சம் பேர்களாம். இதனல் அந்த நாடுகளில் எவ்வளவு வேலைகள் நடக்கிறதென்றும், எத்தனை கூலியாட்கள் வேலை செய்கிறார்களென்றும் ஒருவாறு யூகித்துக் கொள்ளலாம்.

**படம் பதித்த நோட்டுகள்:—** சீனவில் புதிதாயேற்பட்ட குடியரசுக்காக மிகவும் வருந்தியுழைத்த பிரசிடென்ட் யுவான் ஷிக்கே, ஜெனரல் லியுவான்ஹங், டாக்டர் ஸன் யாட்ஸன் ஆகிய இவர்களது உருவப்படங்கள் அமைந்த டாலர்நோட்டுகள் ஐம்பது லட்சம் பிறப்பிக்க சீன பைனன்ஸ் மந்திரி உத்தேசிக்கிறார். இவ்வாறு படம் பதித்த நோட்டுகள் பார்ப்பதற்கு மெத்த நேர்த்தியாயிருக்கும். இம்மாதிரி நமது ஜியார்ஜ் சக்கரவர்த்தியாரின் உருவ மமைந்த நோட்டுகள் ஏன் நந்தேசத்தில் வழங்கக் கூடாது?

**கண்ணீர்க் கணவாய்.—** பேர்போன சங். பெர்நார்துவான் என்னும் சேசுசபைக் குருவானவரண்டை, ஒருநாள் சொகுசான உடையுடுத்த ஓர் ஸ்திரி வந்து "இந்த வுலகத்தைக் கண்ணீர்க் கணவாய் என்று சொல்லுகிறார்களே இது சரியா? இங்கிருப்பவர்கள் எல்லோரும் எந்நேரமும் கண்ணீர் சிந்திக்கொண்டா இருக்கிறார்கள்? என்று கேட்க, அவளுக்கு மறுமொழியாக "இல்லை, இல்லை, நான் அப்படி யெண்ணமாட்டேன். உலகத்தை, குணப்படாதவர்கள் குடியிருக்கும் வீடென்றே சொல்வேன்" என்றார். இதைக் கேட்ட ஸ்திரிமதி மயங்கி யாதொன்றுஞ் சொல்ல வாய்வராமல் நிற்கும்போது, குருவானவர் பின்னுந் தொடர்ந்து சொன்னதாவது: "ஆகையினலேதான் இவ்வுலகத்தை விட்டு உயிரோடு போனவர்கள் ஒருவருமில்லை. எல்லோரும் செத்தே போகிறார்கள்" என்பதே.

**கார்மைக்கல்பிரபு இந்திய ருடை தரித்தார்:—** முன் சென்னைக் கவர்னராயிருந்து இப்போது வங்காள கவர்னராயிருக்கும் லார்டு கார்மைக்கல் என்னுங் காருண்ய கனவான் குடிகளிடத்து தயை தாட்சண்ணியமுடையவரென்று நாம் பன்முறை இப்பத்திரிகை வாயிலாய் பகர்ந்துள்ளோம். நமது அன்பும் பட்சமும் யாவரிடத்து இருக்குமோ அவருடைய நடையுடை பாவனைகளையே நாமும் பாவிக்க ஆசை கொள்வோமென்பது சகஜம். இவ்வாறே நமது கார்மைக்கல் பிரபுவும் இந்தியர்கள் மேலுள்ள பட்சத்தால் அவர்கள் உடையைத் தரிக்க ஆசைகொண்டார்போலும். சமீபத்தில் கூச்பீஹார் மகா ராஜா அவர்கள் நடத்திய விருந்துக்கு விஜயஞ்செய்தபோது, லார்டு கார்மைக்கல் இந்திய புருஷருடையையும், அவர் பத்தினியாகிய லேடி கார்மைக்கல் பெருமாட்டி இந்திய ஸ்திரிகளின் உடையாகிய காசிப் பட்டுப் பிடவையையும் உடுத்துக்கொண்டு சென்றனராம். இது வன்றோ மெய்யான அன்பு?

**கால்ரா நோய்க்கோர் நாட்டு முறை:—** (சென்னை நிருபநேயர் S. V. M. எழுதியது) ஒன்றரை வருடம் அல்லது இரண்டு வருடமான பழைய காப்பிக்கொட்டைகாற்படி கொண்டுவந்து, நன்றாகத் தூள் பண்ணி ஒரு புட்டி நாட்டுச் சாராயத்தில் (20 டிகிரி சாராயமாக யிருந்தால் நல்லது) மேற்படி காப்பிக்கொட்டைத் தூளை போட்டு ஒரு நாள் அல்லது இரண்டு நாள் முழுதும் ஊறப்போட்டு மறுநாள் வடிகட்டி ஓர் கல் கார்க் புட்டியில் விட்டு வைத்துக்கொண்டு, ஒரு தடவை பேதியானல் அரை யவுன்ஸ் குளிர்ந்த ஜலத்தில் பத்து துளிவிட்டு கொடுக்கவும்; கொடுத்தும் மறுதடவையும் பேதியானல் இன்னும் அதிகமாக பத்துத்துளி விட்டு (அதாவது இருபது துளி) கொடுக்கவும். இப்படியே பேதியாக ஆக ஒவ்வொரு தடவைக்கும் பத்து பத்துத் துளி அதிகப்படுத்தி மேற்படி அரை யவுன்ஸ் தண்ணீரிலே கொடுக்கவேணும். இது வயித்தியர்களின் ரகசிய முறை.

**பரோடா தேசம்:—** இந்த சுதேச இராஜாங்கத்தில் வித்தியாபிவிருத்தி விஷயமாய் செய்யப்படும் முயற்சிகள் மெத்தவும் மெச்சத்தக்கவை. பிரதமக்கல்வி (அதாவது பிரைமரிப் படிப்பு) எல்லாருங் கட்டாயமாய்ப்படிக்கவேண்டுமென்று சட்ட ஏற்பாடாயிருக்கிறது. அத்தேசத்தி லுள்ளோர் யாவரும் எளிதில் பொது விஷயங்களையும் வேத விஷயங்களையும் படித்துத் தெரிந்து கொள்வதற்கு அனுகூலமாய் இராஜாங்க செலவில் ஊர்கள் தோறும் அங்கங்கே புஸ்தகசாலைகள் புருஷர்களுக்கும், ஸ்திரீகளுக்கும், மகாராசர்களுக்கும், ஏழைகளுக்கும் வெவ்வேறாக ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன. இன்னும் ஏழை எளியோர் யாதோர் செலவின்றி வித்தைக் கற்றுக் கொள்ளுமாறு ரூ 10,000 செலவிட்டு சினமெட்டகிராப் படங்களைப் போல் படங்களை யாங்காங்கே கொண்டுபோய் ஜனங்களுக்குக் காண்பிக்க ஏற்பாடு செய்யப்படுகின்றன. இவ்வாறு பிரதம கல்வியும் பெண் கல்வியும் எப்போது அபரிமிதமாய் பெருகுமோ அப்போதுதான் நமது நாடு செழிக்கும். இது எப்போதோ!

**போர்த்துகீஸ் இந்தியா.—** இந்தியாவில் போர்த்துகேயருக்குச் சொந்தமாயுள்ள நகரங்களிலும், இன்னுமற்ற விடங்களிலும் சத்திய வேதம் பரம்புதலுக்காக நெடுங்காலந் தொடங்கி போர்த்துகல் அரசர்களால் இராஜாங்க கஜானவி லிருந்து திரவிய சகாயஞ் செய்யப்பட்டு வந்தது. இதைக் கொண்டே கோவை, டாமன், டையு, மயிலாப்பூர் முதலிய விடங்களி லுள்ள மேற்றிராணிமார் குருக்கள் முதலானோர்களுக்குச் சம்பளம் கொடுபட்டுவந்தது. இந்தத் திரவிய சகாயத்தை ஒருமட்டாய் நிறுத்தி விடாமல் கொஞ்சங் கொஞ்சமாய்க் குறைத்துக் கொண்டு வந்து, கடைசியில் அதை முற்றும் நிறுத்தி விடப்போவதாக போர்த்துகல் குடியரசு மந்திரி பிரேரேபிக்கிறார். இந்தப் பிரேரேபனை அமுலுக்கு வருமானல், இந்தியாவிலுள்ள போர்த்துக்கீஸ் மிஷனுக்கு ஒருவாறுபணக் கஷ்ட முண்டாகுமென்பதற் கையமில்லை. இதற்கு ஷை விசாரணையைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் தங்கள் தங்கள் பங்கு சுவாமிமார்களுக்கு இப்போது கொடுக்கும் (சப்போர்ட்டு மணியென்னும) ஜீவனும்சத்தொகையை அதிகப்படுத்திக் கொடுக்கவேண்டும்.

**அகந்தை அநியாய மரணமாய் முடிந்தது.—** அமெரிக்காவைச் சேர்ந்த டிரினிடாட் என்னு மூரில் தெய்வபயமற்ற அகந்தைக்காரனொருவன் பூராய்க் குடித்து விளையாட்டிலுங் களியாட்டிலுங் காலத்தைக் கழித்திருந்த ஓர் நாள் தன் தோழரோடு "இதோ பார்! நான்தான் உலகரட்சகரான சேசுக்கிறிஸ்து. செத்துப்போய் உயிர்த்தெழுகிறேன் பார்" என்று கித்தான் துணியை யெடுத்து இடையிற் சுற்றிக் கொண்டு ஒரு பலகையின்மேல் படுத்து செத்தவன்போல் பாசாங்கு காட்டினன். பின்னு மெழுந்திருந்து இன்னும் இரண்டு திராம் போட்டுக்கொண்டு "நானின்னும் சாகவில்லை" என்று அங்கு வைத்திருந்த சாராய காலி பீப்பாவில் குதித்தான். பக்கத்திருந்தவர்கள் பரிகாசமாக அந்த பீப்பாவோடு அவனைத் தூக்கிக்கொண்டு ஓடினர்கள். அப்போது அவன் "இதோ பார் நான்தான் உயிர்த்தெழுந்த ஆண்டவர். உயிர்த்தெழுந்தேன்" என்று ஆங்காரமாய்க் கூவினன். இப்படிக் கூவிக் கூத்தாடுகையில் கால் பிறழ அவனும் பீப்பாயுமாக தலைகீழாய் விழுந்த சிறிது நேரத்துக்கெல்லாம் செத்துப்போனன். தேவநிந்தனை வீண்போகுமா?

**இன்னொரு தேவதூஷனின் கதி:-** ஸ்பெயின் தேசத்தின் தென்பாகத்திலுள்ள முர்சியா நகரைச் சார்ந்த ஆல்புஜன் கிராமத்தில், சமீபத்தில் அடித்தபுசற்காற்றினல் பயிர்ச்சேதமடைந்த ஓர்குடியானவன் கடுங்கோபங்கொண்டு "ஓ! பாழுந்தெய்வமே! உன்னலல்லவா எனக்கிவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது? என்பேரில் சற்றுமிரக்கமில்லா உன்னைக் கண்டேனனல் ஒரே குத்தாய் குத்திக்கொன்று போடுவேன். ஆயினும் உன்னை விட்டேனு? பார்! உன்னை எங்கணும்வியாபி என்

கிறார்களானதினால் இதோ உன்னைச்சுட்டுக் கொல்கிறேன்'' என்று சொல்லி தன் கைத்துப்பாக்கியை யெடுத்து ஆகாயத்தை அண்ணார்ந்து நோக்கிச் சுட்டான். உடனே அவன் தூக்கின கை தூக்கினபடியாயும், அண்ணார்ந்தமுகம்அண்ணார்ந்தவிதமாயும் தூஷ்ணித்த வாய் மறு பேச்சுப் பேச முடியாமலும் நிற்க, இதைக் கண்டவர்கள் ஆச்சரியமு நடுக்கமு முற்று, அந்த தேவதூஷணனை அவன் வீட்டிற்குத் தூக்கிக்கொண்டுபோய்ப் போட்டார்கள். இந்த அதிசயத்துக்குரிய வியாதிக்காரனை அநேக டாக்டர்கள் வந்து பார்த்தும் அவனைப் பழயபடி சௌக்கியப்படுத்த முடியாமற் போயிற்று. சகலருக்கும் இது ஒரு காட்சியாகவும் தேவதூஷணங் கூடாதென்பதற்கோர் சாட்சியாகவு மிருக்கிறது.

**ஸ்பேயினும் வேத படிப்பினையும்.**—ஸ்பெயின் தேசத்தில் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு ஞானோபதேசம் செய்யப்படாதென்று சமீபத்தில் தீர்மானித்தார்கள். அதாவது குருக்கள்மார் நடப்பிக்கிற பள்ளிக்கூடங்களுக்கு பிள்ளைகளை அனுப்பக்கூடாதென்கிறதே. இப்படி புருஷர் தீர்மானிக்க, ஸ்திரிகளோ தைரியமாய் நின்று ஒரே பிடிவாதமாயிருந்து குருக்கள்மாரது பள்ளிக்கூடங்களுக்கே தங்கள் பிள்ளைகளை யனுப்பிக்கொண்டு வருகிறார்கள். புருஷர்மார் வெளியில் தனியாய் ஒருவரோ டொருவர் பேசிக் கொள்ளும் பொழுதும், பகிரங்கமாய்க் கூட்டங்களில் பேசும்பொழுதும் குருக்களுக்கு விரோதமாய் ஆவேசங் கொண்டு பேசினாலும் அவையெல்லாம் முடிந்து வீட்டிற்கு வந்தபோது, தங்கள் பெண்சாதிமார்கள் சொல்லுவதற்குஞ் செய்வதற்கும் தடையேதுஞ் சொல்லத் துணியார்கள். இது ஓர் ஆச்சரியமா யிருக்கிறது. இது விஷயமாய் அர்ச். பாப்பானவர் ஸ்பெயின் தேசத்து ஸ்திரிகளின் தைரியத்தை மெச்சி, அவர்கள் தங்கள் சத்யவேதத்துக்கும், பூர்வ கௌரவத்திற்கும், நாட்டின் நல்லிருப்பிற்கும் பாதகமான வழிகளுக்கு இடங்கொடாதிருக்கவும், பிள்ளைகளுக்கு வழக்கம்போல வேதபடிப்பினையை நிறுத்தாதிருக்கவும் வற்புறுத்திப் போதித்துத் தந்தியனுப்பினார்.

---

# NEWS OF THE MONTH.

## மாச வர்த்தமானம்.

**இராஜப்பிரதிநிதியின் ஜனன தினம்:-** நமது இராஜப் பிரதியாகிய ஹார்டிஞ்சு பிரபு அவர்களின் பத்தினியாராகிய ஹார்டிஞ்சு பெருமாட்டியாரின் அபீஷ்டப்படி, சென்ற ஜூன்மீ 20உ நியமித்த சிறு பிள்ளைகளின் திருநாள் இந்தியா வெங்கும் வெகு ஆடம்பரமாய்க் கொண்டாடப் பட்டது. அன்றையதினம் பள்ளிக்கூடங்களுக்கெல்லாம் விடு முறை யளிக்கப்பட்டது. பள்ளிக்கூடங்கள், கொடிகள் தோரணங்கள் புஷ்பங்கள் முதலிய வைகளால் அலங்கரிக்கப்பட்டு, சிறுவர் சிறுமிகளுக்கு மிட்டாய்கள் முதலிய பலகாரங்களும், பழவர்க்கங்களும் ஏராளமாய்ப் பரிமாறப்பட்டன. அவர்கள் அவைகளை யருந்தி அபரிமித அக்களிப்புங் அகமகிழ்ச்சியுங் கொண்டார்கள். இதுவே ஹார்டிஞ்சு பெருமாட்டியார் கொண்ட ஆசை.

**ஸ்திரீ சுதந்தர வாதிகள்** செய்யுங் கோஷ்டம் இன்னும் அடங்கவில்லை. அநேகரைப் பிடித்து ஜெயிலில் அடைத்துத் தண்டித்தும் அவர்களுக்குப் புத்தி வந்ததாகத் தெரிய வில்லை. இன்னும் முன்போலவே ஜன்னல்களை யுடைப்பதும் வீடுகளுக்குத் தீமூட்டுவது மாயிருக்கிறார்கள். வழிப்பிரயாணிகள் தாகந் தீர்த்துக்கொள்ள தெருக்களில் வைத்திருக்கும் தண்ணீர்த் தொட்டிகளில் அவர்கள் சமீபத்தில்பாஷாணத்தைக் கரைத்தனராம். அன்னத்தில்பின்னங் கலந்த பாதகிகளுக்கென்ன பாடோ? ஸ்திரீ சுதந்தர வாதிகளில் முதன்மையான மிஸ் பாங்கர்ஷ்ட் என்னும் ஸ்திரீயானவள் ஜெயிலில் மறுபடியும் கேவலமாய் நோயுற்றபடியால் விடுதலை பெற்றாள். அவளின் தற்போதிய தேக நிலைமை மிகவும் கவலைக்குரியதாயிருக்கிற தென்று சொல்லப்படுகிறது!

**ம-ா-ா-ஸ்ரீ ராய் சாஹேப் காரசால அருளய்ய நாயுடு காரு:**—சென்ற ஜூன்மீ 3 தேதியாகிய நமது ஜியார்ஜ சக்கரவர்த்தியின் ஜனன மகோற்சுவ தினமன்று வழக்கம் போல் அநேக கனவான்களுக்கு பற்பல கௌரதா பட்டங்கள் அளிக்கப்பட்டன. இவர்களுக்குள் தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியருக்கு சம்பந்தப் பட்டவர் செங்கல்பட்டு ஜில்லா ஸ்ரீபெரும்பூதூரைச் சார்ந்த கீழ்ச்சேரியென்னுங் கிராமத்திலுள்ள, மிராசுதாரர் ம-ா-ா-ஸ்ரீ ராய் சாஹேப் காரசால அருளய்யநாயுடுகாரு ஒருவரேயாகும். இவர் செங்கற்பட்டு டிஸ்டிரிக்ட்போர்டு மெம்பர். பொது நலப்பிரியர். கோவாப்பரேட்டிவ் சொசைட்டீஸ் என்னும் கூட்டுறவு சங்கங்கள் விஷயமாய் அதிக ஊக்கங்கொண்டு உழைப்பவர். இவருடைய பொதுநல ஊக்கத்தையும் உழைப்பையுங் கவர்ண்மெண்டார் நன்கு மதித்து இவரைச் சன்மானித்தது நமக்கு மெத்த சந்தோஷத்தை வருவிக்கிறது. இவருக்கு நமது மனப்பூர்வமாய் சுப சோபன வாழ்த்து கூறுகின்றோம். தென்னிந்தியாவிலுள்ள கத்தோலிக்கு இந்தியருக்குள் கௌர்தாபட்டம் பெற்றவர்கள் வெகு சிலரே. இன்னு மநேகர் ஆகவேண்டுமென்பது நமது கோரிக்கை!



**உடன் கட்டை யேறுதல்:**—இக்கொடிய வழக்கம் இராஜாங்க சட்டத்தால் தடுக்கப்பட் டிருந்தும் யாதோர் காலத்தில் ஓரோர் கேஸ் பிரஸ்தாபிக்கப்படுகிறது. சென்ற ஜூன்மீ 2-ம் தேதி லக்னோ என்னும் பட்டணத்தில், ஓர் பங்காளிமாது கங்காதேவியேனும் பெயருடையவள் முந்தின தினம் இறந்துபோன தன் கணவனோடே தானும் சாகவேண்ணி உயர்ந்த ஆடைகளை யெடுத்து உடுத்திக்கொண்டு உடைக்கு தீ மூட்டிவிட்டாள். தீப்பற்றி யெரிய ஆரம்பித்தவுடனே அதைக் கண்டவர்கள் கூச்சலிட போலீசார் வந்து தீயை அணைத்து, அவள் அப்படிச் செய்ததற்குக் காரணமென்ன வென்று கேட்க, அவள் தன் கணவனுடன் கைலாசம்போக வேணுமென்றாளாம். அதற்கு அவர்கள் நீ காராகிருகத்துக்குப் போவென்று அவளைப் பிடித்துக் கொண்டுபோய் அடைத்து விட்டார்களாம். கல்கததாவில் சுசீல பாலா தாசி என்பவள் இவ்வாறே தன் வஸ்திரத்தில் மண்ணெண்ணெய் ஊற்றி, தீ மூட்டி யெரித்து தன்னை பஸ்பமாக்கிக் கொண்டாள். இம்மாதர்களின் மதியீன மென்னே!

**பாண்டிக் கொலை கேசு:**—இந்தக் கேசில் கொலையுண்ணத்தீர்ப்பு பெற்ற குற்றவாளியாகிய வைத்தியநாதப்பிள்ளை லண்டன் பிரிவி கௌன்சிலுக்கு அப்பீல் மனு செய்திருக்கிறதை நண்பர்கள் அறிவார்கள். இந்த அப்பீல் கேசு ஜுடிஷ்யல் கமிட்டியாரால் சென்றமீ 16-ம் தேதி முதல் 4 நாள் விசாரணையானதன்பின் அப்பீல் மனுதாரன் பக்கமாய்த் தீர்ப்பு சொல்லப்பட்டது. தீர்ப்பு கொடுத்த நியாயாதிபதிகள், குற்றவாளிமேல் சுமத்தப்பட்ட குற்றத்தை ரூபிக்கப் போதுமான நேரான சாட்சியங்களில்லை யென்றும், சாட்சீய சாஸ்திரத்துக்குப் பொருந்தாத சாட்சியங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன வென்றும் அபிப்பிராயப்பட்டு, குற்றவாளியை விடுதலை செய்ய உத்தரவு அளித்தார்கள். இவர் மெய்யாகவே குற்றஞ் செய்திருப்பாரேயாகில் மனுஷனுடைய நீதிக்குத் தப்பினாலும் தெய்வ நீதிக்குத் தப்புவாரோ?

**இரங்கூனில் ஒரு பெருந் தீவிபத்து.** இரங்கூன் ஸர்சண்ட் வீதியிலுள்ள டர் ஹவுஸ்என்ற கட்டிடம் ஜூன்மீ 25-ம்தேதி மாலை 3-மணிக்கு தீப்பற்றிக்கொண்டது. பலமான காற்று வீசினமையால் பக்கத்திலிருந்த இரண்டு தளங்களுள்ள கட்டிடத்திலும் தீப்பரவிவிட்டது. அந்தக் கட்டிடத்தில் டைம்ஸ் ஆப் பர்மா, ஸன்டே டைமஸ் என்ற பத்திரிகைகள் பிரசுரிக்கப்படும் பிக்டோரியல் பிரஸ் என்றஅச்சுக்கூடம் இருந்து வந்தது. இத்தீவிபத்தினால் அந்த அச்சுக்கூடச் சொந்தக்காரருக்கு 74 ஆயிரம் ரூபா நஷ்டமுண்டா யிருப்பதாய் கூறப் படுகிறது. இரண்டு கட்டிடங்களும் அடியோடு நாசமடைந்தனவாம். அதனாலுண்டான நஷ்டம் 15,000 ரூபா யென மதிப்பிடப்படுகிறது.

**மைசூரும் பேண் கல்வியும்.**—மைசூர் மகாராஜா காலேஜில் படித்துவந்த மிஸஸ் நாகம்மாள் இந்த வருஷம் பி. ஏ. டிகிரி பெற்றாள். இம்மாதராளைச் சேர்த்து இப்போது பி. ஏ. பட்டாதாரியான 4 ஸ்திரிகள் மைசூரிலிருக்கின்றனர். ஸ்ரீமதி ரங்கம்மாள், ருக்மணியம்மாள்; சுப்பம்மா, இவர்கள் மூவரும் மகாராணி காலேஜ் உபாத்தியாயனிகளா யிருக்கின்றனர். இவர்கள் தமது கணவன் பிள்ளைகளுடன் குடும்பமாய் வாழ்ந்து வருகின்றனர். நாகம்மாள் அவர்களோ புருஷனிழந்தமாதெனத் தெரிய வருகிறது. இவ்வாறு நமது கத்தோலிக்கு இந்திய ஸ்திரிகள் எப்போது பி. ஏ. முதலிய டிகிரிகள் பெறுவார்களோ,

அப்போதுதான் கத்தோலிக்குக் குடும்பம் முன்னுக்கு வரும்.

## நல்லாயன் ஆபீசு அச்சியந்திரத் துக்காக நன்கொடை.

நாம் சென்ற மாத சஞ்சிகையினுள் அடக்கஞ் செய் தனுப்பிவைத்த அப்பீல் மனுவை அநேக நண்பர்கள் கவனித்தார்க ளில்லை போலும். ஏனெனில், மிகவுங் கொஞ்சம்பேரே அதற்கு விடையனுப்பி யிருக்கிறார்கள். மற்ற நண்பர்களுந் தங்கள் தங்களாலியன்ற மட்டுந் தருமஞ் செய்து எம்மைக் கடனென்னும் நிர்பாக்கியத்தினின்று காப்பாற்றி இரட்சிப்பா ரெனக் கோருகிறோம். பலதுளி பெருவெள்ள மென்பதைச் சிந்தித்து, ஒருவரும் இல்லை யென்னமல் ஒவ்வொருவரும் சொற்ப தொகையாவது கொடுத் துதவுவார்களாக! இதற்காக இம் மாதத்தில் வரப்பெற்ற தொகை பின் வருமாறு. இந்த நன்கொடையாளர்களுக்கு எமது நன்றியறிந்த வந்தனம்.

| | | | |
|---|---|---|---|
| The Revd. Fr, W. G. Hood | 30 | 0 | 0 |
| ,, C. Ponnuthambinather | 2 | 0 | 0 |
| Mr. K. Joseph, Bangalore | 10 | 0 | 0 |
| ,, P. A. Duraisami, Nandidrug | 1 | 0 | 0 |
| ,, V. Croose, Andangodda | 0 | 11 | 0 |
| ,, J, L. Gillier, Backapalli | 0 | 8 | 0 |
| A. Sympathizer | 2 | 0 | 0 |
| Total Rs. | 46 | 3 | 0 |

## DOMESTIC OCCURRENCES.
## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 8-அணு முன்பணம் அனுப்பினுலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட மாட்டா வென்பதை நண்பர்கள் கவனிக்கக் கோருகிறேம். அரைக் கலத்துக்கு மேற்பட்டு முக்கால் கலத்துக்கு உட்பட்டால் முக்கால் ரூபாயாகும். முழுக்கலத்துக்கு ஒரு ரூபாயாகும். கால் ரூபாய்க்கு இவ்விளம்பரங்கள் ஒருபோதும் பிரசுரிக்கப்பட மாட்டா.

## திருமண அறிக்கை.
### வேம்பார்

குறள் வெண்பா.

புதுமண வீட்டிற்புனலை முந்திரிகை
மதுவென விளைந்த வல்லவன்

அருளால் எனது மாமனர் மகன் சிரேஷ்ட புத்திரன் மிக்கேல் பாக்கியம் தெக்குருஸ் முருயிஸ்வுக்கும் மகா-ா-ா-ஸ்ரீ மிக்கேல் அந்தோனி முருயிஸ் அவர்கள் சிரேஷ்ட புத்திரி சௌபாக்கியவதி அந்தோனி சின்னம்மாள் முருயிஸ் பெர்னுந்துவுக்கும் நிகழும் 1913-ம்ளு ஜுன்மீ 2-ம் தேதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு வேம்பார் திவ்விய ஸ்பிரீத்துசாந்து சர்வேஸ்பரன் தேவாலயத்தில் திவ்விய பலி பூசைக்கு முன் ஏழாவது தேவத்திரயானுமானமாகிய, திருமண வார்த்தைப்பாடு மங்களகரமாய் நிறைவேறியது.

இதனைக்கண்ணுறும் ஆயனின் நேயர்களும் ஏனையோரும் இம்மங்கிலியம நீடித்து வாழ பரிசுத்த திருக்குடும்பத்தை மன்றாடும்படி பிரார்த்திக்கிறேன்.

Badulla.
16-6-13.
நிம்பகர்
S. M. Fernandez.

## நன்மரண அறிக்கை.
### கொளும்பு.

ஐயா, வீரபாண்டியன் பட்டணத்திலுள்ள ம-ா-ா-ஸ்ரீ சந்தாஞ பிரஞ்சீஸ்கு வாஸ் அவர்களின் அருமைப் புதல்வரும், என் பிரிய சிநேகிதரும், பாலிய தர்ம சம்ரக்ஷண சங்கத்தின் அங்கத்தவரி லொருவருமாகிய மகா-ா-ா-ஸ்ரீ சூ. மி. வாயூவாந்தக்குருஸ் வாஸ் அவர்கள் காய்ச்சல் என்னும் விஷசுரத்தால் பீடிக்கப்பட்டு எவ்வித ஔஷதங்களாலும் குணப் படாமல் கடைசி தேவத்திரவிய அனுமானங்கள் யாவும் பூரணமாய்ப் பெற்று தனது 24-ம் பிராயமாகிய 1913ளு மேமீ 28உ பின்னேரம் 6 மணிக்கு, தன் அருமைச் சகோதரர் சகோதரிகளையும் மற்றும் பந்துமித்திரர்களையும் இக்கண்ணீர்க் கணவாயில் கலங்க விட்டு பரமபதம் சென்றனர். அவரின் சடலம் மறுதினமாகிய 29உ வியாழக்கிழமை பின்னேரம் 4 மணிக்கு ஓர் அழகிய பெட்டியில் வைக்க, அதன்மேல் அன்றையத்தினம் அவ்வீதியில் பரிசுத்த தேவதாயின் மேமீ வணக்கங்கொண்டாடும் பாலிய சங்கத்தவரால் அப்பெட்டியின்மேல் புஷ்பங்கள் சாத்தப்பட்டன. பின் பேன்று வாத்தியங்களுடன் ஷை சங்கத்தின் பால்யர்களால் அப்பெட்டி கரத்தில் ஏந்தப்பட்டு புறக்கோட்டை சந். பிலிப்பு நேரியார் தேவாலயத்துக்குக் கொண்டுபோய் கனம். குருசுவாமியாரால் ஒப்பீஸ் பாடப்பட்டது. பின் இரண்டு குதிரை கட்டிய கறத்தையில் அப்பெட்டியை வைத்து வழிசென்று பொரளையைச் சேர்ந்த சிமிட்டெரியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. பின் ஷை சங்கத்தின் பிரசிடென்ருகிய மகா-ா-ா-ஸ்ரீ சூசைமனுவேல் ஸ்டீபன் பெர்னுந்தவர்களால். (Wreath.) ரீத் என்னும் புஷ்பம் அக் கல்லறையின்மேல் வைக்கப்பட்டது. இப்பரிதாபத்துக்குரிய செய்தியைக் கண்ணுறும் கனவான்கள் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக 1பர. 1பிரி. 1திரி. வேண்டிக் கொள்ளும்படியாக பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்

பால்யதர்ம சம்ரக்ஷண சங்கத்தின் அங்கத்தவரில் ஒருவனுகிய

மார்கேட் வீதி, கொளும்பு. } S. M. மாசிலான் பீறீஸ்

## எடப்பாடி அர்ச். செல்வநாயகி அம்மாள் ஆலய தர்மம்.

அடியில் கையொப்பமிட்டிருக்கும் நாம் உதார குணமுள்ள சகல நண்பர்களுக்கும் அறிவிப்பது யாதெனில்:—

எடப்பாடி அர்ச். செலவநாயகி அம்மாளின் திருவாலயத்திற்கு பிரதி வருஷமும் பாஸ்கு பண்டிகையின்போது திருயாத்திரைக்காரர் அவள் திருவடியைப் போற்றி, அவள் உதவியைக் கேட்கத் திரளாய் வருவது யாவருக்கும் தெரிந்த விஷயமே. அப்படி வருகிறவர்களுக்குத் தகுந்த விடுதிகளும், சாவடி சத்திரங்களுமில்லாமையால் கடும் வெய்யிலின் வெப்பத்தினுல் அவர்கள் தவித் தலைவதைக் கண்டும், பொருளுதவி யில்லாமையால் நாம் அவர்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்ய நாளது வரையில் கூடாமல் போனதைப்பற்றி அதிக வியாகுலப்படுகிறோம். ஆகிலும், அர்ச். செல்வநாயகி அம்மாளை நம்பி இப்போது இந்திய கிறிஸ்தவர்களுக்கு ஒரு சாவடியும், வெள்ளைக்காரர்களுக்கு மற்றொரு சாவடியும் கட்ட யேற்பாடு செய்வதோடு, கோவிலை மராமத்து செய்யவும் துணிந்து; ஏறக்குறைய ரூ. 2,500 பெறும்படியான கட்டிடங்களைத் துவக்கிவிட்டோம். தரும சிந்தையுள்ள மரியாயின் தாசர்கள் உடனே நமக்கு கைகொடுத்து இந்த மேன்மையான வேலைகளைச் சீராய் முடிவு செய்ய உதவிபுரியவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். இதைக் கண்ணுறும் சகல கனதனவான்களும், சகல கிறிஸ்துவர்களும் தம் தம் மா லியன்றமட்டும் இந்த காரியத்திற்கு பொருளுதவி செய்வார்களென்று நம்பிக்கையாயிருக்கிறோம். நண்பர்களுடைய தர்மம் எவ்வளவு சிறியதேனும் சந்தோஷமாய் அங்கீகரிக்கப்படும். தேவதாயானவள் அவர்களையும் அவர்கள் குடும்பங்களையும் ஆசீர்வதிப்பாளென்பது திண்ணம்.

ஷை தருமத்துக்காக வரவு.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஏற்கெனவே வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை. | 42 | 0 | 0 |
| Mr. A. சுவாமிகண்ணுப்பிள்ளை, சப். அசிஸ்டண்டு சர்ஜன், நெல்லூர் | 2 | ,, | ,, |
| ,, C. ராயப்பன், ஸ்கூல் மாஸ்டர், அக்கிரகாரம் | 1 | ,, | ,, |
| ,, தேவசகாய மூப்பன் பட்டைக் காரர், நாகலூர் | 1 | 4 | ,, |
| ,, துரைசாமிபிள்ளை, சின்னப்பன் பட்டி | 5 | ,, | ,, |
| ,, மதலைமுத்து, முத்தால்பேட்டை | 5 | ,, | ,, |
| ,, சின்னப்பன், பாப்பம்பாடி | 5 | ,, | ,, |
| ,, ராயப்பன், குள்ளம்பட்டி | 5 | ,, | ,, |
| ,, சவரிமுத்து, வாலக்குட்டை | 5 | ,, | ,, |
| ,, செல்வப்பன், பாலக்குட்டைப் பட்டி) | 5 | ,, | ,, |
| ,, செல்வமூப்பன், சடையம்பாளையம் | 5 | ,, | ,, |
| ,, சவரிமுத்து மூப்பன் ஷை | 5 | ,, | ,, |
| ,, சின்னப்ப மூப்பன் ஷை | 2 | ,, | ,, |
| ,, நல்லப்ப மூப்பன் ஷை | 5 | ,, | ,, |
| ,, சவரிமுத்து ஷை | 5 | ,, | ,, |
| ,, சின்னப்ப மூப்பன் ஷை | 1 | ,, | ,, |
| ,, மதலைமுத்து, வெள்ளாண்டி வலசை | 2 | ,, | ,, |
| ஆக மொத்தம் ரூ. | 101 | 4 | 0 |

கத்தோலிக்குக்கோவில், எடப்பாடி. } ஜே. ஞானதிக்கம். விசாரணைக் குரு.

# Superior Watch Co.,

Post Box No. 167 Madras, Q.

### ராஸ்கோப் லீவர் ஜுவல்டு கடியாரம்.

கொலுசுடன் விலை. ரூபா 2—4—0.

7 வருஷம் உத்தரவாதம் கொடுக்கப்படும்.



இது முரட்டு வேலைக்கு உபயோகமானது. இருபக்கம் கனத்த கண்ணாடியால் மூடி போட்டிருக்கும். சக்கரங்களுக்கு கெம்புகள் பிகிந்திருக்கும். இவ்வளவு குறைந்த விலைக்கு இப்பேர்க்கொத்த கடியாரம் இன்னொருவரிடம் கிடைக்காது. ஆயிரக்கணக்கான கடியாரங்கள்செலவாகின்றன.

### இமிடேஷன் வைர நகைகள்.





இந்த இமிடேஷன் வைரக் கம்மலை இப்பொழுதுதான் புதிதாய் சீர்மையிலிருந்துவரவழைத்திருக்கிறோம். இரவைகள் வைத்துள்ள நகைகளை உபயோகிப்பவர்கள் கூட அவைகளுக்குப் பதிலாக இந்தக் கம்மலை வாங்கி உபயோகிக்கிறார்கள். இதன் கிரயம் மெத்தசொற்பம்.

| | | | | |
|---|---|---|---|---|
| சிவப்புக் கம்மல் 1-ஜதை விலை ரூபா. | | 1 | 8 | 0 |
| சுற்றிலும்வெள்ளைக்கல் மத்தியில் சிவப்புக் கல் வைத்த கம்மல். 1-ஜதை ரூ. | | 1 | 8 | 0 |
| சுற்றிலும் சிவப்புக்கல் மத்தியில் வெள்ளைக் கல் வைத்த கம்மல் 1-ஜதை | | 1 | 8 | 0 |
| வெள்ளைக்க்ல் கம்மல் | ஜதை 1க்கு | 1 | 8 | 0 |
| சின்ன சயிஸ் கம்மல் | ஜதை 1க்கு | 1 | 4 | 0 |

### கூந்தல் வளரும் பரிமளத் தைலம்.

36 இனம் சாமான்களுடன் ஆழாக்கு எண்ணெய் அடங்கிய டின் ரூபா. 1 0 0



அதிக பரிமளமுடைய இத்தைலத்தில் கொஞ்ச மெடுத்து தலைமயிர் உற்பத்தி ஸ்தானங்களில் தடவி வாரிக்கொண்டு வந்தால் மயிரானது செழிப்பாயும், அழகாயும் ஆலம் விழுதுபோல ஓங்கி வளரும். மயிர்கால்களுக்குக் குளிர்ச்சியைக் கொடுத்து சிவந்த நிறத்தை மாற்றி நாகப்பழம்போன்ற கரு நிறத்தை யுண்டுபண்ணும். சுண்டு, மயிர் வெடிப்பு. மயக்கம், தலைச்சுற்றல், தேகத்தி லுள்ள சொறி சிரங்கு, வியர்வை நாற்றம், கற்றாழைநாற்றம், மனச்சஞ்சலம். ஞாபகக்குறைவு முதலிய வியாதிகளைக் கண்டித்து. கண்ணுக்கு மிக்க குளிர்ச்சி தருவதுடன் நல்ல பிரகாசத்தையும், சுகந்த பரிமள வாசனையையும், தேகத்தில் மினுமினுப்பையும் தந்து. முகத்திற்கு நல்ல காந்தியைக் கொடுக்கும். இத் தைலம் அநேக பிரபுக்களால் நன்கு மதிக்கப்பட்டு சர்டிபிகேட்டுகளும் பெற்றிருக்கின்றது.



Rs. 1-12-0

ஜூலைமாதக் கடைசி வரைக்குந்தான் இந்த விலைக்கு விற்கப்படும்.

டிராம்வே ரெகுலேட்டர்சுபீரியர் கெடியாரம்.

கொலுசுடன் விலை ரூபா 1-12-0 இதற்கு 5 வருஷம் உத்தரவாதம் கொடுக்கப்படும். புதியமாதிரி, எமது இடைவிடா வியாபாரிகளுக்காகக் குறைந்த விலையில் சுந்தரமான சிறிய சைசில் எமக்கென்றே அமெரிக்காதேசத்தில் உறுதியாகத் தயார் செய்துவந்து அநேகம் செலவாகிறது. இதைச்சிலர் எம்மைப்போல் வெளியிட்டு அதிக விலைக்கு விற்கிறார்கள். விலை கவனிக்கவும்.

### இனம் சாமான்களின் விபரம்.

இத்துடன், பெண்கள் தலையில் வைக்கக் கூடிய வெகு நேர்த்தியான கொண்டைப் பூ 1, தந்த சீப்பு 1, முகம் பார்க்கும் கண்ணாடி 1, ஜெர்மன் சில்வரால் செய்த மை அல்லது புனுகு ஜவ்வாது மை சிமிழ் 1 அதிகவாசனையுள்ள அத்தர் பில்லை 1. வாசனை சோப்பு 1, தாம்பூல மாத்திரை 22. புனுகு டப்பி 1. ராஜா ராணி புருச் 1, கொண்டையில் வைக்கும் கிளி 6, ஆக 36 சாமான்கள் இனமாய் அனுப்பப்படும். 5 பலம் தைலம் அடங்கிய டின் விலை ரூபா. 1 0 0

நமது விலாசம்-சுப்பீரியர் வாட்ச் கம்பெனி, தபால் பெட்டி நெம்பர் 167, மதிராஸ்






August—1913.

புத்தகம். 11 | “நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்” (அரு. 10:17-14.) | நெம்பர். 8


## THE FEAST OF THE ASSUMPTION.

## தேவமாதா மோட்சத்துக்கு எழுந்தருளின திருநாள்.

இம்மாதம் 15-ந் தேதி அர்ச். கன்னி மரியம்மாள் மோட்சத்துக்கு எழுந்தருளின திருநாள்; கடன் திருநாள். இத் திருநாளைக் கொண்டாடுவதில் திருச்சபை கொண்டிருக்கிற நோக்கமும் கருத்தும் என்ன? அர்ச். கன்னிமரியம்மாள் மரணமடைந்து கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்ட பிறகு தெய்வீக வல்லமையினால் உயிர்த்து, ஆத்தும சரீரத்தோடு ஒட்டோலகமாய் பரலோகத்துக்கு எழுந்தருளிப்போக, அவ்விடத்தில் திரியேக சர்வேசுரனால் அந்த நாயகி பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் இராக்கினியாக முடி சூட்டப்பட்டாளென்னும் சத்தியத்தை நமக்கு அறிவிப்பதற்கும், அதை நமக்கு ஞாபகப் படுத்துவதற்குமாமே. இவ்வாண்டவள் இப்படி மோட்சத்துக்கு ஆரோகணமானது விசுவாச சத்தியமல்ல; ஆயினும், இச் சத்தியத்தை மறுப்பதும் அல்லது அதை நம்பாமற் போவது நியாயத்துக்கு முற்றும் விரோதமாவது மல்லாமல், விவேகமும் யோசனையுமற்ற தீர்மானமுமாகும். அப்போஸ்தலர் காலத்திலிருந்து 8-ம் சதாப்தம் வரையிலும் இத் திருநாள் ஒருபத்தித் திருநாளாக அநுசரிக்கப்பட்டு வந்தது. ஆனால் அந்நாள் முதற்கொண்டு நாளது பரியந்தம் அது கடன் திருநாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

திருச்சபையின் கருத்துக்கு நாம் இசைந்து இத் திருநாளை பத்தி விசுவாசமாய்க் கொண்டாடவேண்டிய தல்லவா? இத் திருநாளின் கொண்டாட்டம், சிறப்பு, வைபவம் இவைகள் விஷயத்தில் நாம் அக்கறைகொண் டுழைத்து, கன்னிமரியாயின் கனிகர புத்திர ரென்று காட்ட வேண்டாமா? மனோவாக்குக் கெட்டாத மகிமைப் பிரதாபத்தோடு தம்முடைய தேவ குமாரனுக் கருகில் ஆத்தும சரீரத்தோடு வீற்றிருக்கும் இப் பரிசுத்த அன்னைக்கு அன்றையதினத்தில் திருச்சபையோடு நாமும் ஏகோபித்து நம்முடைய சிரவணம், வணக்கம், துதி, தோத்திரம் இவைகளைச் சமர்ப்பிக்கவேண்டு மன்றோ? மேலும், இந்தத் திருநாளன்று நம்மிடத்தில் உண்டாக வேண்டிய சிந்தனை, உணர்வு, விருப்பம் இவை முதலானவை எத்தன்மையானவைகளாயிருக்க வேண்டியதென இப்போது யோசிப்போம்.

அர்ச். கன்னிமரியம்மாளை நேசியாமலும், அவளைக் கொண்டாடித் துதியாமலுமிருக்க யாராலு முடியுமோ? முடியவே முடியாது. ஏனெனில் அவள் நம்முடைய நேசத்தாய். இந்த நம்முடைய தாய் அன்று சம்மனசுக்களாற் புடை சூழப்பட்டு, வீணையை குரலெடுத்ததுபோல அவர்கள் பாட, ஆத்தும சரீரத்தோடு மோட்சத்துக்கு எழுந்தருளிப் போனாள். அவளுடைய தேவகுமாரன் எதிர் கொண்டுவந்து, தம்முடைய கரங்களால் அவ்வளைத் தாங்கிக் கொண்டு, வான மண்டலங்களில் ஏறி மேகங்களை யெல்லாம் கடந்து மோட்சத்துக்கு அழைத்துச் சென்றார். சூரியனையும், சந்திரனையும் நாணச் செய்யும்படியான சோதிப் பிரகாசத்துடன் அவள் அன்று மோட்சத்தில் பிரவேசித்தாள். அவ்விடத்தில் சகல சம்மனசுக்களும், மோட்சவாசிகளும் ஆர்ப்பரித்து, குதூகலிக்க பரலோகத்துக்கும்

பூலோகத்துக்கும் இராக்கினியாக கிரீடந்
தரிக்கப்பட்டு, ஜெகஜோதியாய் ஜொலிக்
கும் சிம்மாதனத்தில் அமர்ந்திருக்கிறாள்.
இவ்வளவு உயர்ந்த அந்தஸ்துக்கும்,உந்நத
பட்டத்துக்கும் நமது தாய் உயர்த்தப்பட்
ட அந் நாளில் நாம் அகமகிழ்ந்து அக்களி
யாமலிருக்க லாகுமோ? தன் தாய்க்குண்
டான மகிமை பெருமை சிறப்பு இவைக
ளைப் பற்றி மகிழ்ச்சி கொள்ளாத பிள்ளை
யும் இப் புவியிலுண்டோ? ஆகையால், பர
லோகத்திலுள்ள வானோர்களான சகல சம்
மனசுக்கள், அர்ச்சியசிஷ்டவர்கள் பிதாப்
பிதாக்கள், தீர்க்கதரிசிகள், அப்போஸ்த
லர்கள், வேதசாட்சிகள், கன்னியர்கள்முத
லானவர்க ளுடனும் நாமும் ஒன்றித்து,
அவர்களுடையவும் நம்முடைய்வும் தாயும்
அரசியுமா யிருக்கும் இவ் வம்மணியை ஏற்
றிப் போற்றித் துதித்துக் குதூகலிப்போ
மாக. இப்படி சந்தோஷங் கொண்டாடவே
ண்டு மென்பதே திருச்சபையின் கோரிக்
கையும் விருப்பமும். ஆனதுபற்றியல்லவா
அன்று பூசையின் ஆரம்பத்திற்றானே "மரி
யாயின் மகிமைக்காக இப் பெருந் திருநா
ளைக் கொண்டாடுகிற நாம் எல்லோரும்
இப்போது ஆண்டவரில் களிகூர்வோமாக;
அவளுடைய ஆரோகணத்தைப் பற்றி சம்
மனசுக்கள் ஆனந்தங்கொண்டு தேவகுமா
ரனுக்கு இன்னிசை பாடி தோத்திரம் புரி
கிறார்கள்" என்று திருச்சபை நமக்கு ஆர்ப்
பரிப்பு அக்களிப்புடன் கூறி, இத்திருநாளை
சந்தோஷத்துடன் கொண்டாட நம்மை
ஏவுகிறது. ஆனதுகொண்டு பரலோக மகி
மையாலும் இன்ப சுகங்களாலும் நிறைந்
தலங்கரிக்கப்பட்டிருக்கிற நம்முடைய தா
யை அன்று நம்முடைய ஞானக் கண்ணினா
ல் வீட்சித்து சந்தோஷிப்பதோடுகூட அந்
த மகிமைக்கும் பாக்கியத்துக்கும் நாமும்
பங்காளிகளாக அவளுடைய உதவி ஒத்
தாசையை இரந்து மன்றாடுவோமாக.

அர்ச். கன்னிமரியம்மாளுக்குக் கிடை
த்த பாக்கியமான மரணம் நமக்குங் கிடை
க்கு மென்னு நம்பிக்கையால் தூண்டப்
பட்டவர்களாய் நாம் இத்திருநாளைக் கொ
ண்டாடக் கடவோம். நாம் அடிக்கடி மர
ணத்தைப் பற்றிச் சிந்திக்கிறதில்லை. அப்ப
டிச் சிந்திக்க அஞ்சிப் பயப்படுகிறோம்.
இப்படி நாம் பயப்படுவது சர்வேசுரனுக்
குப் பிரியப்படாமற்போவதோடுகூட,நமக்
குங் கேடாய் முடியும். நாம் சாவுக்காக
அஞ்சுவது ஏனோ? நம்முடைய திவ்ய இர
ட்சகராகிய சேசுநாத சுவாமியே மரண
மடைந்தார். ஆத்துமசரீரத்தோடுகூடமோ
ட்சத்துக்கு எழுந்தருளிப்போன அர்ச்.
கன்னி மரியம்மாளும் மரணமடைந்தாள்.
அவளுடைய பாக்கியமான மரணத்தைப்
பற்றி யன்றோ நாம் இத் திருநாளைக் கொ
ண்டாடி குதூகலிக்கின்றோம். நமதாண்ட
வரான சேசுநாத சுவாமியும், நமதாண்டவ
ளான அர்ச். கன்னிமரியம்மாளும் மரண
மடைந்திருக்கையில் அவர்களுடைய பிரிய
மக்களான நாம் மரணத்துக்குப் பயப்பட
லாமோ? நம்மிடத்திலுள்ள விசுவாசக்
குறைவல்லவா இதற்குக் காரணம்? புண்ய
வான்களாய்ச் சீவித்தவர்கள் இப்படி மர
ணத்துக்கு அஞ்சி நடுங்கினவர்கள் அல்ல.
அவர்கள் இக் கண்ணீர் கணவாயை விட்டு
நித்திய பேரின்ப பாக்கியத்தைச் சுகிக்கும்
படி சர்வேசுரனிடஞ் செல்ல, தங்களுக்குக்
காலம் இன்னும் வரவில்லை யென்று அங்க
லாய்த்து, தாவீது இராசாவோடு "மாடப்
புறாவைப்போற் பறந்துபோய் இளைப்பா
றும்படி யார் எனக்குச் சிறகுகளைக் கொடு
ப்பார்கள்" (சங். 54. 6.) என்று சொல்லிப்
பிரலாபித்தார்கள்.

ஒருக்கால் இப் பிரபஞ்சப் பொருட்
கள் மட்டில் நமக்குள்ள ஆகாத பற்றுதல்
களே நாம் இப்படி மரணத்துக்கு அஞ்சக்
காரணமா யிருக்கலாம். அப்படி யானால்
உடனே அப் பற்றுதல்களை விட்டொழிக்
கக் கடவோமாக. இல்லாவிட்டால் மரண
மானது அவைகளைக் கட்டாயமாய் நம்மிட
த்திலிருந்து பறித்துப்போடும். இப்போதே
அவைகளை நாம் சந்தோஷமாய் விட்டுப்
பிரிவது நாம் புண்யத்தில் பிரவர்த்திக்க
அனுகூலமா யிருப்பதுமன்றி, யாதோர்
நன்மையுங் கண்டடையாமல், வேண்டும்
வேண்டாம் என்றாலும் மரண நேரத்தில்
அவைகளை விட்டொழித்து நிர்ப்பாக்கிய
மாய்ச் சாகாமல், அமரிக்கையான நன்மர
ணமடையவும் உதவும். இப் பிரபஞ்ச நன்
மைகளின் மட்டில் யாதோர் பாசமும் பற்
றுதலு மற்று, தமக்கு ஏக நன்மையா யிரு
ந்த சர்வேசுரனை மாத்திரம் நாடிச் சீவித்
ததுதான், அர்ச். கன்னிமரியம்மாளுடைய
பாக்கியமான மரணத்துக்குக் காரணமா
யிருந்த தென்று அறியக்கடவோம்.



இத் திருநாள் நமக்கு மோட்சத்தை
ஞாபகப்படுத்தி அதன்பேரில் ஆவல்கொள்
ளச்செய்கிறது. இப்பிரபஞ்சமானது நமக்
குப் பரதேசம். பரலோகமே நம்முடைய
சுயதேசம். இதைப்பற்றி அர்ச். சின்னப்
பர் வசனித்திருப்பதாவது: "நிலைமையா
ன நகரம் இங்கே நமக் கில்லை; இனிவரும்
பட்டணத்தையே நாடித் தேடுகிறோம்" (எ
பிறே. XIII. 14.) என்பதே. மோட்சமென்
கிற இப் பட்டணத்தின் சிறப்பையும், அ
தன் சுக செல்வங்களையும், மகிமைப் பிர
தாபத்தையும் யாரால் வருணிக்கலாகும்!!

பரிசுத்த கன்னியாஸ்திரியான சீயோ
ன் கத்தரீனம்மாள் ஒருநாள் ஜெப நேரத்
தில் பரவசமானபோது, மோட்ச ஜோதி
யின் கதிர் ஒன்று அவள்மேற் படும்படி செ
ய்ய சர்வேசுரனுக்குச் சித்தமுண்டாயிற்று.
பரவசம் ஒழியவே, அவள் உரக்கக் கூவி
"நான் ஆச்சரியமானவைகளைக் கண்டேன்"
என்றாள். இதைக் கேட்டவர்கள் தங்களு
க்கு, தான் கண்டவைகளைச் சொல்ல அவ
ளைக் கட்டாயப்படுத்தினபோது அவள்
மறுமொழியாக: "நான் பார்த்தவைகளை
தெளிவுபட உங்களுக்குச் சொல்லத் துணி
வு கொள்வேனாகில், அது எனக்குப் பெ
ருங் குற்றமாகும். ஏனெனில், மோட்சத்
தின் வடிவு சோபனத்தையும், அதன் இன்
ப சுகங்களையும், பேரின்ப பாக்கியங்களை
யும் விவரித்துக் காட்டுவது எந்த நரனா
லும் ஆகவே ஆகாது" என்றாள். இப் புண்
யவதி உண்மையையே விளம்பினாள். அப்
போஸ்தலரான அர்ச். சின்னப்பரே மோட்
ச பேரின்ப பாக்கியங்களைப்பற்றி வசனித்
திருப்பதென்ன? "அவைகளைக் கண் கண்
டது மில்லை, செவி கேட்டதுமில்லை, மனித
னுடைய இருதயம் உணர்ந்துகொண்டது
மில்லை" (I. கொரி. II. 9.) என்பதேயாம்.
தம்மைப் பிரமாணிக்கமாய்த் தொழுகிற
வர்களுக்குச் சர்வேசுரன் ஒருக்காலும்
அழியாத மோட்ச பாக்கியங்களைத் தர
வாக்குத்தத்தம் செய்திருக்கிறா ரென்றா
லும், ஐயோ, எத்தனையோ பெயர் இவ்வுலக
அழிவுக்குரிய இன்ப சுகங்களையும், மகிமை
பெருமையையும், ஆஸ்தி பாஸ்தியையும்
தேடுவதிலேயும், அவைகளைச் சுகிப்பதிலே
யும் அனுவலா யிருக்கிறார்கள். தங்கள்
வாழ் நாட்களை யெல்லாம் வீணாட்க ளாக்
கிக்கொள்ள புண்யத்தின்மேல் அருவருப்
பும் அசூயையுங் கொள்ளுகிறார்கள்; மோ
ட்சத்தை முற்றும் மறந்தவர்களாய்ச் சீவிக்
கிறார்கள். அர்ச். தோமாஸ் அக்கெம்பிஸ்
வசனித்திருக்கிறபடி, அவர்களுடைய இரு
தயம் இந்த மோட்ச பாக்கியத்தின்பேரில்
ஆவல் கொள்ளாதபடி பனிக்கட்டியைப்
போல் இறுகிக் குளிரிட்டுப் போயிருக்கின்
றது.

இப்படி நம்முடைய இருதயம் இறு
கிப்போ யிருக்குமானால், நாம் கொண்டாடு
கிற இந்த திருநாளானது அதை இளகச்
செய்யும்படி பார்க்க வேண்டாமோ? மகி
மையின் ஜோதியால் ஜொலிக்கும் சிம்மா
சனத்தின்மேல் வீற்றிருந்து, மோட்ச சுக
செல்வங்களைச் சுகிக்கும் நம்முடைய தா
யான அர்ச். கன்னிமரியம்மாள் தம்முடை
ய மக்களான நாமும் அவைகளுக்குப் பங்
காளிகளாக வேண்டுமென்று ஆவல் கொ
ண்டு நம்மை வருந்தி அழைக்கிறாள். அவ
ளுடைய அழைப்பை நாம் அலட்சியஞ்
செய்யலாமோ? அப்படிச்செய்வோமானால்,
மோட்சமுண்டென்கிற சத்தியத்தை நாம்
விசுவசிக்கிறவர்க ளல்ல வென்பது தெளி
வு. மோட்சத்தைச் சுதந்தரித்துக்கொள்ள
புண்யவான்களுடைய இருதயம் எவ்வள
வோ ஆவல் கொண்டிருக்கையில், நம்மு
டைய இருதயம் குளிரிட்டிருந்தால் அது
எவ்வளவு மதியீனமாகும்!

நாம் இதுகாறும் யோசித்தவைகள் நம்
மனத்திலும் புத்தியிலும் நன்றாய்ப் பதிவத
ற்கு பின்வருஞ் சம்பவம் ஒரு நல்ல உதா
ரணமாகும்: அர்ச். ஸ்தனிஸ்லாஸ் கோஸ்
தாக்கா, அர்ச். கன்னிமரியம்மாளுக்கு விசே
ஷமான செல்வப் பிள்ளையாய்ச் சீவித்து
வந்தார். இவர் சேசு சபையில் உட்பட்டு
ஒரு நவ சந்நியாசியாய் இருக்கையில்
1568 ம் ஆண்டில், தம்முடைய 18-வது
பிராயத்தில், தேவமாதா மோட்சத்துக்கு
எழுந்தளிப்போன திருநாளன்றே மரண
மடைந்தார். அவ்வருஷம் ஆகஸ்டுமாதத்
துவக்கத்தில், முத்திபேறு பெற்ற கனீசி
யுஸ் என்பவர், எல்லோரும் எப்போதும்
மரணத்துக்கு ஆயத்தமா யிருக்கவேண்டு
மென்பதின் பேரில் செய்த பிரசங்கத்தைக்
கேட்ட இவர், அர்ச். கன்னிமரியம்மாள்
மோட்சத்துக்கு ஆரோகணமான தின்த்தி
லேயே தாமும் மரண மடைந்து, இந்தத்
திருநாளை மோட்சத்தில் அவ்வாண்டவ

ளோடு கொண்டாடும் பாக்கியம் தனக்குக் கிடைக்கும்படி கிருபை செய்ய அவ்வாண்டவளை நோக்கிப் பிரார்த்தித்தார். தம்மோடு மடத்திலுள்ளவர்களிடத்திலும் அவர் சொன்னதாவது: “இந்தத் திருநாள் மோட்சத்தில் சொல்லிலடங்காத ஆரவாரச் சிறப்பு, அக்களிப்பு, ஆனந்த மகிமைச் சோபன வைபவங்களுடன் கொண்டாடப்படுகிறதாம். இது மெய்யென்று நான் உறுதியாக நம்புகிறேன். மேலும் இவ்வருஷம் இந்தத் திருநாளை அவ்விடத்திலேயே கொண்டாடுவேன் என்பது எனக்குள்ள நம்பிக்கை.”

இவருடைய ஆசை நிறைவேறாமற் போகவில்லை. ஆகஸ்டு மாசம் 10உ இவருக்குக் காய்ச்சல் கண்டது. காய்ச்சல் அதிகமும்முரமாய் அடிக்கா விட்டாலும் படுக்கையை விட்டெழும்பக் கூடாதவரா யிருந்தார். 14உ மத்தியான வேளைக்குப் பிறகு திரேகம் முழுவதிலும் அபார வியர்வை காண வெகு பலவீன முற்றார். அவருடைய கோரிக்கையின்படி தரையிற்கிடத்தப்பட்டு அவருக்குக் கடைசித் தேவத்திரவிய அனுமானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவர் முகம் பரலோக ஜோதிப் பிரகாசத்தாற் றுலங்கிப் பிரகாசிக்க மறுநாள் காலைமட்டும் தாம் பெறப் போகும் பாக்கியத்தின் பேரில் சிந்தனை கொண்டவராய் இருந்தார். அடிக்கடி தமது கையிலிருந்த அர்ச். கன்னிமரியம்மாளின் சுரூபத்தை முத்திசெய்து கொண்டிருந்தார். பொழுது விடியுந் தருணத்தில் அவருடனிருந்தவர்களெல்லோருங் காண அர்ச். கன்னிமரியம்மாள் அவரிடம் எழுந்தருளி வரவே, அவர் மோட்சாலங்காரியின் மகிமைப் பிரதாப தரிசனத்தில் சகிக்கொணா பேரானந்தங் கொண்டவராய் இப்பாழுடலை நீத்து, பரம தேவ தாயுடன் பரகதி யடைந்தார்.

நமக்கும் இப்பேர்ப்பட்ட பாக்கியம் கிடைக்கக் கடவதாக! நாம் மரணத்தை அடிக்கடி நினைவு கூர்ந்து அதற்காக ஆயத்தம் செய்தும், அழிவுக்குரிய இப்பிரபஞ்சப் பொருட்கள் மட்டில் பற்றுதல் பிரியங் கொள்ளாமல், மோட்ச பேரின்ப பாக்கியத்தை நாடி சீவித்தும் வருவோமானால், பாக்கியமான மரணமடைந்து பரலோக இராச்சியத்தில் நித்தியமாய் இளைப்பாறுவோம் என்பது திண்ணம்.

---

# EDUCATION AND CHARACTER.

## கல்வியுங் குணமும்.

“கல்வி நலனே கலனல்லால் மற்றோரணிகல வேண்டாவாம்” என்றும், “கல்வியினூங்கில்லை சிற்றுயிர்க் குற்றதுணை” என்றும், “கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாஞ் சிறப்பு” என்றும், “கல்வி யழகே யழகு” என்றும், “கடை நிலத்தோராயினுங் கற்றுணர்ந்தோரைத் தலை நிலத்து வைக்கப்படும்” என்றும் “கற்கை நன்றே, கற்கை நன்றே பிச்சை புகினுங் கற்கை நன்றே” என்றும், இன்னும் பலவாறாயும் கல்வியை நம்முன்னோர் பெருமையாய்ப் பேசியிருக்கின்றனர். இக்காலத்திலும் எல்லோரும் கல்வியை நன்கு மதித்து, அதனைக் கஷ்டப்பட்டு நஷ்டப்பட்டு கவலையுற்றுக் கற்று வருகிறார்கள். கல்வி கற்றவர், முற்காலத்தில் விட இக்காலத்தில் ஏராளம். இன்னு நாள் போகப் போகக் கற்போரின் தொகை எங்கும் பெருகுமேயொழிய குறைவுறாது. ஆகவே, இவ்வாறு விசேஷமாய்ப் பாராட்டப்படுங் கல்வியானது குணத்தைச் சீர்ப்படுத்துகிறதோ வெனப் பலருக்கும் பல கால் சந்தேகம் ஏற்படுகிறது. ஏனெனில், கற்றோரெனப் படுபவரிடத்தும், மற்றோர் நாணி வெறுக்கத் தக்க தீச் செயல்கள் காணப்படுவதாலே தான். மிக்க படித்தவனும் மிக்கக் கொடிய செயலைச் செய்யத் துணிகிறான். பீயே, எம்மே என்பன முதலிய வித்தியா பட்டம் பல பெற்றுப் படித்தவரெனப் பெயர் படைத்த பண்டிதர்களிடத்தும், கேவலம் சற்றும் படியாத பாமரர்கள் செய்யும் அகௌரவமான செய்கைகள், சூழ்ச்சிகள், நேர்மையற்ற சூது வாதுகள் முதலியன காணப்படுவது அசாதாரணமல்ல. படித்தவர்களில் பஹிரங்கக் குடிகேடரும், கூத்திக் கள்ளரும், கொலை களவாதிய தீக் கருமங்கள் செய்பவர்களு மிருக்கிறார்கள். இத்தகையோரைக் காணும் பாமரர்கள் “இவர் தானா படிச்சவர்? இவர் படிச்சவரே யன்றி வேறென்ன? இவர் படித்த படிப்பு இவருக்கு ஒரு நலத்தையும் செய்திற்றில்லை போலும். படிப்பு கிடிப்பென்பதெல்லாம் வீண் பிடிப்பே!” எனச் சொல்லுவார்கள். ஆகவே, கல்வியானது மனுடனது இயற்



கைக் குணத்தைச் சீர்ப்படுத்த வல்லதோ, வென்னுங் கேள்வியை ஆராய்வோம்.

கல்வி யென்னும் பதத்திற்கு, அறிவு, கற்றல், வித்தை என அருத்தம் சொல்லப்படுகிறது. ஆயினும், அதை தோண்டல், கிண்டல் என்னும் பொருள்படும், “கல்” என்னும் பகுதியடியாகப் பிறந்த தொழிற்பெயரெனச் சொல்லலாம். அதாவது, யாதொரு விஷயத்தின் அல்லது வஸ்துவின் மேற்புறத்தை அல்லது வெளித் தோற்றத்தை அறிவதோடு மாத்திரம் விடாமல், அதைக் கல்லிக் கிண்டி, அதன் உட்புறத்தையும் செவ்வனே ஆராய்ந்தறியு நுண்ணறிவுக்கே கல்வி என்னும் பெயர் வழங்கிற்று போலும். அதன் உற்பத்தி எப்படியாயினும், கல்வி கற்றலானது அறிவைச் சம்பாதித்தல், விஷயங்களை ஆராய்ந் தறிதல் எனப் பொதுவாய் பொருள்படும். இப்படி யாராயுமிடத்து பெறப்படும் குற்றத்தை நீக்கிக் குணத்தைக் கைக்கொள்ளவேண்டிய கிரமத்தைநோக்கி, நல்ல விஷயங்களை கிரகிக்கும் அறிவிற்கே கல்வி யென வழங்கலாயிற்று.

கல்வியைப் பொதுவாக மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன: வீட்டுக்கல்வி, நாட்டுக்கல்வி, பள்ளிக்கல்வி. **வீட்டுக் கல்வி**யாவது, தாய் தகப்பன்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சிசுப்பிராய முதல் முழு மனுஷராகும்மட்டும், ஊட்டுங் கல்வியாகும். அதாவது, நல்லது இது தீயது இது வென்றும், கொள்ளற்பாலன இவை தவிர்க்கப்பாலன இவை யென்றும், பாவமிது புண்யமிது வென்றும், இவை இத்தன்மையன அவை அத்தன்மையன என்றும் தாங்கள் அநுபோகத்தி லறிந்தவைகளை பிள்ளைகளுக்குப் போதனையினாலும், சாதனையினாலும், நயத்தாலும் பயத்தாலும், கண்டனையினாலும் தண்டனையினாலுங், கற்பிப்பதே. இந்த வீட்டுக் கல்வியே மற்றெல்லா கல்வியையு விட மெத்த முகசிய மானது. ஏனெனில், மனுஷனுக்கு புத்தி நினைவு வுண்டாகும்போதே, அவன் மனது விஷயங்களை எளிதில் அழுந்த பதித்துக் கொள்ளும் பக்குவமா யிருக்கும்போதே புகட்டப்படுவதாலேதான். “தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்” என்பதற்கொப்ப இளம் பிராயத்தில் பெற்றோர்களால் புகட்டப்படும் அறிவு, புத்தி மனதில் ஆழமாய்ப்பதிந்துவிடும். அதன்பிறகு அது ஒரு போதும் அழியாது. ஆதலினால் தாய் தகப்பனுடைய நடத்தை, அறிவு, வித்தை எத்தன்மையவா யிருக்குமோ அத்தன்மையவா யிருக்கும் பிள்ளைகளினுடைய நடத்தையும், அறிவும், குணமும். “அரசனெவ்வழி அவ்வழி குடிகள்” “தாயைப் போலப் பிள்ளை நூலைப்போல சீலை” எனவுஞ் சொல்லப்படுகிறதே.

**நாட்டுக் கல்வி** யென்பது வீட்டிற்கு வெளியே அதாவது, உலகத்திலே மற்ற மனிதரோடு சகவாசஞ் செய்கையில் கிரகிக்கும் அறிவாகும். ஒருவன் எப்படிப்பட்ட குணத்தோருடன் சகவாசஞ் செய்கிறானோ அப்படிப்பட்ட குணங்களே அவனுக்குப் படியும். இதற்கு அத்தாட்சி வேண்டுவதில்லை. இதனா லல்லவோ சகவாச தோஷமெனவுஞ் சொல்லப்படுகிறது. “ஒருவன் நல்லவனோ அல்லது கெட்டவனோ என்று தெரிந்து கொள்வதற்கு, அவன் எத்தன்மையான மனுஷருடன் சினேகம் பண்ணுகிறான் என்று பார்” என்று ஆங்கிலப் பழமொழியும் ஒன்றுண்டு. சகவாசத்தினா லுண்டாகு நன்மையையுந் தீமையையு நமக்கு நன்குணர்த்து மாறு,

“குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்றா
வினனு மறிந்தியாக்க நட்பு”

என்று திருவள்ளுவனார் எச்சரிக்கை செய்திருக்கிறார். அதாவது: ஒருவனது குணத்தையும், குடிப்பிறப்பையும், குற்றத்தையும், குறை வற்ற சுற்றத்தையு மாராய்ந்தறிந்து அவனோடு சிநேகஞ்செய், என்பதே.

**பள்ளிக் கல்வி** யானது, “ஆறுவது வயதில் ஆதியை யோது” என்றபடி பள்ளிக்கூடத்தில் விடப்பட்ட நாள் முதல் உபாத்தியாயரிடத்தில் கற்குங் கல்வியாகும். இதில் பெரும்பாலும் தோஷமிராது. ஆயினும் நெற்பயிரினூடே புன் முதலிய களைகளும் வளருமாப்போல், நல்லறிவுக்கான புத்தகங்களும் புல்லறிவுக்கான புத்தகங்களும் செறிந்து பெருகு மிக்காலத்தில் கல்வி கற்கப் புகு மிளைஞர்கள், அநுபோக மில்லாதவர்கள் தங்கள் கைக் கெட்டும் பலவற்றையும் படித்து, “கண்டதையுங் கற்கப் பண்டிதனாவான்” என்பது போலப் பண்டிதராகிறார்கள். ஆகையினால்

அவர்கள் நல்லறிவுப் பண்டிதர்களோ புல்லறிவுப் பண்டிதர்களோ என்பது அவர்களுடைய நடத்தையினாலே விளங்கும்.

ஆகவே படித்தவனென்று சொல்லப்பட்ட ஒருவன் மேற்சொல்லிய மூன்றுவித கல்வியையும் கற்றவனாகிறான். இந்த மூன்று கல்விகளும் எவ்விதமாயிருந்தனவோ அவ்விதமே யிருக்கும் அவனது குணம். ஒருவனது இயற்கைக்குணம் என்பது அவன் தாய் தகப்பன் மூலமாய் தன் முன்னோரிடமிருந்து பெறும் பிதுர்வழிக் குணம். இந்த இயற்கைக் குணத்தை ஒருவன் தன் கல்வியறிவால் மாற்றுவது பிரயாசை. எந்தச் சமயத்திலும் அது முன் வந்து நிற்கும். அது தீய குணமாயிருப்பின் அதை வெல்லுவதே சரியான வெற்றி.

“வைகலு நீருட்கிடப்பினுங் கல்லுக்கு மெல்லென்றல்
சால வரிதாகு மஃதேபோல் வைகலும்
நல்லறங் கேட்பினுங் கீழ்கட்கு
கல்லினும் வல்லென்னு நெஞ்சு”

கருங்கல்லை ஒரு பாத்திரத்தி லிட்டு தண்ணீரூற்றி நாடோறும் ஊறவைத்தாலும் அது எப்படி ஊறாதோ, அப்படியே இயற்கைத் தீக்குணமுடையாரை எத்தனைப் போதனையினாலும் மாற்றுதல் முடியாது என்கிறார் ஒரு புலவர்.

மேற் குறிப்பித்த விஷயங்களை யாராய்ந்து பார்க்குமளவில், பீயே முதலிய வித்தியா பட்டங்களைப் பெறுவிக்கும் பள்ளிக்கூடத்துப் படிப்பு ஒன்று மாத்திரமே, ஒருவனுடைய குணத்தை முற்றும் மாற்றவல்லதல்ல வென்றே சொல்லல் வேண்டும். “பல நல்ல கற்றக் கடைத்து மன நல்லராகுதன் மாணார்க்கரிது” என்றார் பெருநாவலரும். இதனால் படிப்பு பொதுவில் நல்லதல்ல வென்று எண்ணிவிடப்படாது. படிப்பு பொதுவில் நல்லதே. ஆயினும், ஒருவனுடைய வீட்டுப் படிப்பும் நாட்டுப் படிப்பும் நல்லதானால் அவன் பெரும்பாலும் நல்லவனாகவே யிருப்பான். இதனோடு அவனது பள்ளிப்படிப்பும் நன்றாயிருக்குமானால் “பொன்மலர் நாற்ற முடைத்து” என்றது போல் அவன் மிக நல்ல குணத்தனா யிருப்பானென்பதற்கு எட்டுணையும் சந்தேகமில்லை.

---

# SLANDER.

## அவதூறு.

அவதூறு என்பது ஒருவனைப்பற்றி உள்ளதையோ இல்லாததையோ யாதோர் நல்ல காரணமின்றி பிறரறியச் சொல்லுகிறது. இது சாமான்ய மனிதரிடத்து சாதாரண குற்றமாயிருக்கிறது. இதனுடைய கெடுதியின் கனாகனத்தை அநேகர் அறியாமலே அதை வெகு அற்பமா யெண்ணி, பிறர்மேல் வாய் வந்தமட்டும் தூறு பேசுகிறார்கள். நூற்றில் பத்துப்பேரேனும் சின்ன காரியத்திலாவது, பெரிய காரியத்திலாவது இந்த அவதூறு என்னும் கொடிய பாவத்தைக் கட்டிக்கொள்ளாதிருக்கிறார்களோ என்பது சந்தேகம்! ஒருவன்மேற் கூறும் அவதூறானது அவனைக் கொலை செய்வதற்குச் சமானமாகிறது. ஆம், அது உண்மையிலேயே ஒருவனுடைய பேரையுங் கீர்த்தியையுங் கெடுத்து, அவனிடத்தில் பிறருக்கிருக்கும் நல்லெண்ணத்தைக் கொலை செய்ததற்கொப்பாகும். “புறணி பேசுகிறவனைவிட சர்ப்பத்தின் கடி கெடுதி யல்ல.” “கோட்சொல்லும் வாயானது ஆத்துமத்தைக் கொல்லுகின்றது.” “தன் வாயைப் பத்திரம் பண்ணுகிறவன் தன்னாத்துமத்தைப் பாதுகாக்கிறான்.” என்பன வேதவாக்கியங்கள். ஆகவே நாம் பேச வாய் திறக்கும்பொழுது வெகு ஜாக்கிரதையா யிருத்தல் வேண்டும். நம்முடைய வார்த்தையால் பிறருக்கு அற்பமும் மன வருத்தம் வருவிக்காத விதமாய்ப் பேசவேண்டும். இப்படியே நல்லவர்கள் பேசுவார்கள். நாவடக்கமுள்ளவனே நல்லவன். “வார்த்தைகளின் திரட்சியில் குற்றமில்லாம லிராது. தன்னுதடுகளை அடக்குகிறவனே மகா புத்திமான்:” (அர்ச். யாகப்பர். 30-ம் அதி. 5-ம் வசனம்.) நாவடக்கத்தைப்பற்றி சகலரும் அறிவது அவசியம். ஆனதுபற்றி, “நா” வைப் பற்றிய பின்வரும் வியாசம் வாசிக்கத்தக்கது:—

### நா.

சர்வ ஞான சம்பூரணரான சர்வேசுரனால் சிருஷ்டிக்கப்பட்டுள்ள சிருஷ்டிகள் ஒவ்வொன்றும், அது எவ்வளவுதான் அற்பமானதா யிருந்தாலும் அததுவும், ஒவ்வொரு உபயோகத்துக்காக உண்டாக்கப்பட் டிருக்கின்றதே யொழிய மற்றப்படியல்ல. துரும்பு தொடங்கி தூலம்வரையிலுள்ள தாவர சங்கமப் பொருட்களும், யானை முதல் எறும்பீராக வுள்ள ஜீவ ஜெந்துக்களும், இன்னும் பிறவும் ஒவ்வொன்றும் இன்னின்ன காரியத்துக்கென்று உண்டாக்கப்பட் டிருப்பது போல மனுஷனுடைய உறுப்புகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விசேஷ அலுவலுக்கும் அவசரத்துக்கும் அமைக்கப்பட்டிருக்கின்றது. மேலும் ஒவ்வொரு வஸ்துவிலும் நன்மை தின்மைகளின் தாரதம்மியம் விளங்கும்படிக்கும், அது விஷயமாய் மனுஷனின் பேறுபலன் அதிகரிக்கும்படிக்கும் ஆண்டவர் அதனதன் விஷயத்திலும் நற் பிரயோகத்திற்கே யன்றி துர்ப்பிரயோகத்திற்கும் இடம் வைத்திருக்கிறார்: ஆனதினால் மனுஷனுக்குக்கொடுக்கப்பட் டிருக்கும் அரும்பேறாகிய பகுத்தறிவைக் கொண்டு தின்மையைத் தவிர்த்து நன்மையைக் கடைப்பிடிப்ப தவன் கடமை. அப்படிக்கின்றி மனிதரிற் பெரும்பாலோர் கேவலம் பஞ்சேந்திரியங்கள் பற்றியிழுக்கும் பாதையெல்லாஞ் சென்று, அதர்மஞ் செய்து அவமே அதோகதிக் காளாகிறார்கள்.

பஞ்சேந்திரியங்களில் ஒன்றாகிய நாவானது பிரபஞ்ச வியாபாரத்தால் பெரிதும் பயன்படுகிறபடியால் அதன் விஷயத்தைப் பற்றிச் சற்று விசாரிப்போம். “ஸர்வஸ்ஸிய காத்திரஸ்ஸிய ஸிரப்ரதானம் ஸர்வேந்திரியாணாம் நயனம் ப்ரதானம்” என்னும் சமஸ்கிருத சுலோகப்படி எண்சாணுடம்பிற்கு சிரசு பிரதானம்; பஞ்சேந்திரியத்திற்குப் பிரதானம் கண்ணே யென்பார்கள். ஆனால், ஒருவிஷயத்தில் கண்ணைவிட நாவே பிரதானம் என்னத்தகும். எப்படியெனில், கண், காது, மூக்கு முதலியவற்றை இவ்விரண்டாகவும், நா வொன்றையே ஒன்றாகவும் கடவுள் படைத்திருக்கிறார். இதனாலேயே ஒருவாறு அதனுடைய அருமையும் பெருமையும் விளங்கக் கிடக்கின்றது. மேலும், எந்தச் சிருஷ்டியும் செய்யாத ஒப்பற்ற செய்கை இந்த நாவு செய்கின்றது. அஃதாவது: தேவஸ்துதியே. தேவனுடைய உந்நத மகிமைப் பிரதாபத்தைப் போற்றிப் புகழ்வது நாவே. அவரை வாழ்த்துவது நாவே. அவருடைய திவ்ய திருநாம பாராயணஞ் செய்வது நாவே. ஆபத்தில் ஆண்டவரை அபயமென்றழைப்பது நாவே. ஆனந்தத்தில் அக்களிப்புகொண்டு அவருக்கு நன்றி யளிப்பது மந்நாவே. மேலும், தேவன் தமது கரைகாணாக் கருணையால் திருவுளமிரங்கி, நீச மனுஷனிடத்தில் அணைகடந்த அன்புடன் நற்கருணை வழியாய் எழுந்தருளும்பொழுது, அவரை யெதிர்கொண் டழைக்கும் பேறு நாவினுக்கே யுரியது. ஞானவிஷயமாய் இவ்வளவு பெருமைக்கும் பேருக்கும் குறிக்கப்பட்ட இந் நாவானது இலௌகீக விஷயமாயும் கண்யமும் கம்பீரமுமான செயலுக்கே நியமிக்கப்பட் டிருக்கின்றது. என்றாலும், அநேகர் அதற்கு மாறாக அதைத் துர்ப்பிரயோகம் பண்ணிப் பாவத்தைச் சம்பாதித்துக்கொள்ளுகிறார்கள். எந்நாளும் எத்தனைத் துன்பந் தாழ்வு வந்துற்றபோதும் சத்தியமே பேசவேண்டுமே தவிர ஒருக்காலும் அசத்தியம் பேசுவ தடாது. “பொய்பேசற்க” என்பது எந்தை தந்த தசக்கற்பனையுள் ஒன் றன்றோ? “கண்டொன்று சொல்லேல்” என ஒளவையாரும், “எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோருக்குப் பொய்யா விளக்கே விளக்கு” எனப் பெருநாவலரும் பேசியிருக்கின்றார்கள். நாம் ஒருபோதும் வழக்கோரஞ் சொல்ல லாகாது. எப்போதும் பட்சபாதக மில்லாமல் நடுவு நிலைமையாகவே பேசவேண்டும். அதனிமித்தமே நாவானது கண்களுக்கும் காதுகளுக்கு மத்தியில் வைக்கப்பட்டிருக்கிறது? நமது வாக்கு இருதிறத்தாருக்கும் பொதுவான நியாயத்தைச் சார்ந்ததா யிருக்கவேண்டும். மேலும் எவருக்கும் அற்பமுந் தீங்கு விளைக்காதபடி எச்சரிக்கையாய்ப் பேசவேண்டுமே யல்லாது அதப்பியமும் அவதூறுமான வார்த்தைகளை யணுவளவேனும் பேசவொண்ணாது. இருதரம் பார்த்து, இருதரங் கேட்டு, ஒருதரம் பேசும்படி கண்ணிரண்டாகவும் காதிரண்டாகவும் நா வொன்றேயாகவும் படைக்கப்பட்டன வென்னத்தகும். மேலும் அங்கிலேய பாஷையில் “பேச்சு வெள்ளி, பேசாமை பொன்” என்றோர் பழமொழி யுண்டு. அதன் தாற்பரியமாவ தென்னவெனில், குற்றங் குறையின்றிப் பேசுவது சிலாக்கியம்; எந்தக் குறைக்கும் குற்றத்துக்கு மிடமில்லாதபடி பேசாதிருத்தலோ அதைவிட சிலாக்கியம் என்பதே. நமது தமிழ்ப்பாஷையிலும் “பேசாதிருந்தாற் பிழையொன்றுமில்லை.” “பேசப்போகிறாயோ, சாகப் போகிறாயோ” என்பன பழமொழிகள். “தீயினாற் சுட்ட புண் ணுள்ளாறும், ஆறாதே நாவினாற் சுட்ட வடு” எனவும் சொல்லப்பட்டிருக்கிறதே. நாவினால் எவ்வளவு நன்மையையும் பெருமையையும் விளைக்கக்கூடுமோ, அவ்வளவு தின்மையையும் சிறுமையையும் அதனால் தனக்கும் பிறருக்கும் வருவிக்கக்கூடும். ஒரே சொல்லினால் ஒருவனைக் கொலைப் படுத்தவுங்கூடும். கொலைக்கு மேற்பட்டவிதமாய், ஒருவனுடைய மனதைத் துன்பத் துயரப்படுத்தவுங் கூடும்.

ஒரு வார்த்தை ஒருவனுடைய பெயரையுங் கீர்த்தியையும் மானத்தையு முற்றும் நாசப்படுத்தவுங்கூடும். இப்பேர்ப்பட்ட தீச்செயல் செய்யக் கூடியதைப் பற்றி யல்லவா நாவைக் கடவுள் வாயாகிய சவசத்துள்ளிட்டு, அடிப்புறஞ் சங்கிலிக் கட்டிட்டு, உதட்டாகிய கபாடமிட்டு, பற்களாகிய சேனாவீரர்களைக் காவல் வைத்திருக்கிறார்! அப்படியிருந்தாலுங் கட்டுக்கடங்காத நாவானது அத்துமீறித் தத்தி யெழும்பித் தலைதடுமாறிக் கண்டது பிதற்றித் தீராக்கேடும் பாராப்பாடும் வருத்தின கதைகளைக் காணாதார் யார்? கேளாதார் யார்? இதுபற்றியே "யாகாவாராயினும் நாகாக்கக் காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு" என்றார் வள்ளுவனாரும். வெடி தீர்த்த துப்பாக்கியினின்றும்வெளிப்பட்ட குண்டைப்போல, ஒருக்கால் வாயினின்று வெளிப்பட்ட வார்த்தையை மீண்டும் உட்புகுத்துவது எவராலும் சாத்தியமல்ல. வெளிப்பட்டது வெளிப்பட்டதே; அதனால் எவ்வளவு நன்மை அல்லது தின்மை செய்யக்கூடுமோ அவ்வளவுஞ் செய்துத்தான் தீரும். ஆகையினாற்றான் புத்திமான்கள் அவசியமானபோது அருமையாய்ச் சிற்சில வார்த்தைகள் மாத்திரம் யோசித்து நிதானமாய்ப் பேசுவார்கள். கல்வி யறிவில்லாத கண்மூடிகளும், கர்வங்கொண்ட கசடர்களுமே முன். பின் யோசியாது வாயில் வந்தவாறெல்லாம் பிதற்றிப் பிறரை வருத்தி, "நுணலுந் தன் வாயாற் கெடும்" என்பதுபோல தாமும் வருந்துவார்கள்.

சாந்தமும், பொறுமையும், தயையும், நேசமும் நிறைந்த அமிர்த வசனங்களால் முன் நமக்கு வசனித்து நன்மாதிரிகை காட்டி யருளிய காருண்ய கடவுளாகிய கிறிஸ்துநாதரைப் பின்பற்றவேண்டிய நாம், நமது வார்த்தைகளினால் பிறருக்கு அற்பமேனும் துன்பமும் வருத்தமும் நஷ்டமும் நாசமும் உண்டு பண்ணாதபடி எப்போதும் எச்சரிக்கையாய் பிறர் நேசத்தோடு பேசவேண்டுமென் றறியக்கடவோம்.

---

நமக்கு வரும் துன்பங்கள், நமது பாவங்களுக்குத் தண்டனையாக மட்டுமல்ல, நமக்கு வெகுமானமாகவுங்கூட அனுப்பப்படுகின்றன. இவ்வுலகத்திய ஒவ்வொரு துன்பமும் சர்வேசுரனுடைய சினேகத்துக்கு ஸ்திரமான அத்தாட்சி.

(பாபர் சுவாமி.)

---

# CHRISTIAN DOCTRINE.

## ஞானோபதேசம்.

### பத்துக் கற்பனையின்பேரில்

### முதல் பாடம்

### முதல் கற்பனை.

---

5. **நன்னடத்தையாலுண்டான பலன்.**—1850ஆம் சீனாதேசத்தில் வேத குழப்ப முண்டான் போது ஏராளமான கிறிஸ்துவர்கள் சத்திய வேதத்துக்காகத் தலை கொடுத்து வேதசாக்ஷி முடி பெற்றார்கள். அந்நாட்களில் ஒரு கிறிஸ்துவன் தன் ஊரை விட்டுவிட்டு அஞ்ஞானிகளிருந்த ஓர் ஊரில் குடியேறினான். ஓடு அறுப்பது அவன் தொழில். அவனோடு வேலைசெய்யும் அஞ்ஞானிகள் திட்டிச் சண்டையிட்டு குடித்துப் பலபாவங்களைச் செய்துவந்தும் இவன் அப்பேர்ப்பட்ட சோலிக்குப்போனவனல்ல. வாரத்தில் ஒருநாள் வேலைக்குப் போகமாட்டான். சிலநாட்களில் சுத்தபோஜனமாயிருப்பான். அப்போதைக் கப்போது ஒருசந்தி பிடிப்பான். அந்திசந்தி தனித்து செபிப்பான். இவனுடைய நடத்தையைக் கண்ட மற்றவேலைக்காரர் அதிசயித்து ஒருநாள் அவனைச் சூழ்ந்துகொண்டு, உன் நடத்தைக்கும் எங்கள் நடத்தைக்கும் மெத்த வித்தியாசம்; நீ இன்னானென்று எங்களுக்குத் தெரியச்சொல் என்றார்கள். அப்பொழுது அவன், தான் கிறிஸ்துவனென்று சொல்லி சத்திய வேதத்தைப்பற்றித் தனக்குத் தெரிந்ததை அவர்களுக்கு அறிவித்தான். இதைக்கேட்ட அவர்களுக்கு நூதனவேதத்தின் மட்டில் ஆசையுண்டாயிருந்தபடியால், தூரகிராமத்துக்கு ஆளனுப்பி, ஒரு உபதேசியாரை வரவழைத்து, அந்த வேலையாட்கள் ஞானோபதேசம் படித்து ஞானதீட்சைப் பெற்றார்கள். இன்னம் அநேக அஞ்ஞானிகள் சத்தியவேதத்தில் சேர்ந்தார்கள். மறுவருஷம் அவ்வூரில் நடந்த வேத கலகத்தில் புது கிறிஸ்துவர்களில் அநேகர் இரத்தஞ் சிந்தி வேதசாக்ஷி முடி பெற்றார்கள்.

பிள்ளைகளே! நன்னடைத்தையால்வந்த பலனைப் பார்த்தீர்களா? துர் நடத்தையாலும் அநேக தின்மையுண்டாகுமென்று அறிந்து வேதகற்பனைப்படி நடக்க மறக்க வேண்டாம். (Gibson.)



6. **ஒரு குழந்தையின் விஸ்வாசம்.**—ஜப்பான் தேசத்தில் வேத கலக முண்டானபோது, கணக்கற்ற கிறிஸ்துவர்கள் சத்திய வேதத்துக்காக இரத்தஞ் சிந்தி மரித்தார்கள். ஒருவீட்டிலிருந்த புருஷன் பெண்சாதியான இருகிறிஸ்துவர்கள் தாங்களுஞ் சீக்கிரத்தில் பிடிபட்டு வேதத்துக்காக உயிர் விட்டு மோக்ஷஞ்சேர இருக்கும் பாக்கியத்தைப்பற்றி சம்பாஷித்துக்கொண்டு, தங்கள் சிறுகுழந்தைக்கு என்ன சம்பவிக்குமோ வென்று கலக்கங் கொண்டிருக்கும்பொழுது, வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த பத்துப்பிராயமுள்ள குழந்தை தன் பெற்றோருடைய சம்பாஷணையைக் கேட்டு, அங்கிருந்த ஒரு இருப்பாணியை அடுப்பில் போட்டுப் பழுக்கக் காய்ச்சி அதைக் கையில் எடுத்துக்கொண்டு பெற்றோரிடம் வந்தான். இதைக் கண்ட தாய் அலறியழுது, குழந்தையின் உள்ளங்கை வெந்துபோகுமென்று துக்கிப்பதை குழந்தை கண்டு, "அம்மா, அழாதேயுங்கள். நான் நமது வேதத்துக்காக உங்களுடன் வேதனைப்பட்டு மோக்ஷத்துக்குப் போக ஆவலாயிருக்கிறேனென்று காட்டும்படியே இவ்விதஞ் செய்தேன்" என்றான். பிள்ளைகளே! இச்சிறுவனுடைய விஸ்வாசம் எவ்வளவு ஆச்சரியத்துக்குரியது! பாருங்கள். நீங்களும் வேதத்துக்காக மரிக்கப் பாக்கியம் பெறாவிட்டாலும், நீங்கள் சத்தியவேதத்தின் பிள்ளைகளென்று உங்கள் நல்ல நடத்தையாலாவது காட்டுங்கள். (Howe.)

7. **ஜீல்ஸ் என்னுந் துறவியின் சரித்திரம்.**—போனாவெந்தூர் என்பவர் சிறந்த சாஸ்திரியானபடியால் திருச்சபை அவருக்கு வேதபாரகர் என்னும் பட்டங் கொடுத்திருக்கிறது. இவருடைய மடத்தைச்சேர்ந்த ஜீல்ஸ் என்னுஞ சந்நியாசியார் ஒருநாள் போனாவெந்தூர் சமீபஞ்சென்று "ஸ்வாமி, நீர் சிறந்த சாஸ்திரியா யிருப்பதால் சர்வேசுரனைத் தகுந்தவிதமாய் ஸ்நேகிப்பீர் என்பது உண்மை. படிப்பில்லாத என்னிலும் நீர் சர்வேசுரனை உத்தம மேரையாய் ஸ்நேகித்து, அதனால் உமது இரக்ஷண்யத்தை சுலபமாய் அடையக்கூடுமா யிருப்பதால் மெய்யாகவே தாங்கள் பாக்கியவந்தர்" என்று அவரைப் புகழ்ந்தார். அதற்கு அர்ச்சியசிஷ்டவர் "சகோதரனே! உமது எண்ணம் பிசகான எண்ணமே. ஏனெனில், தேவ கிருபையால் சகலரும் சர்வேசுரனைத் தக்க விதமாய் ஸ்நேகிக்கக்கூடும்" என்ற வார்த்தையைக் கேட்ட ஜீல்ஸ் சகோதரர் "என்ன ஸ்வாமி, எழுத்து வாசனை யறியாதவர்கள்கூட சாஸ்திரிகளைப்போல சர்வேசுரனை ஸ்நேகிக்கக்கூடுமோ?" என்று அதிசய பிரமிப்புடன் சொல்ல "ஆம், மெய்யாகவே ஒன்றுந் தெரியாத ஒரு நாட்டுப்புறத்தான்கூட ஒரு சாஸ்திரியை விட சர்வேசுரனை அதிகமாய் ஸ்நேகிக்கக்கூடும்" என்றார். இதைச் சந்நியாசியார் கேட்கவே, சந்தோஷத்தால் குதித்து, அறையைத் திறந்துகொண்டு வீதி வீதியாய்ச் சென்று "ஏழை ஜனங்களே! படிப்புத் தெரியாதவர்களே! உங்களுக்கோர் நல்ல செய்தி கொண்டுவந்திருக்கிறேன், கேளுங்கள்: உங்களுக்கு மனமிருந்தால் சில சாஸ்திரிகளைப் போலவும், இன்னும் நமது போனாவெந்தூர் சுவாமியாரைப் போலவும் சர்வேசுரனை ஸ்நேகிக்கக்கூடும்" என்று உரக்கக் கத்திச் சொன்னார்.

(Rodriguez.)

8. **நல்ல சமாரித்தான்.**—நாம் சர்வேசுரனை ஸ்நேகிக்கக் கடமைப்பட்டிருப்பதுடன் நமது புறத்தியாரையும் நாம் ஸ்நேகிக்கும்படி சர்வேசுரன் கற்பிக்கிறார். நமது இரட்சகர் அந்தக் கட்டளையை அடிக்கடி அறியச்செய்ததுடன், ஒருசரித்திரத்தால் அதை விளக்கிக்காட்டினார். அது எப்படியெனில்: ஒருவன் பிரயாணஞ் செய்யும்பொழுது கள்ளர் கையில் அகப்பட்டு கொள்ளை யடிக்கப்பட்டதுடன், அடியால் காயமும்படுத்தப்பட்டு வழியில் கிடந்தான். ஒரு சாஸ்திரியும், அவனுக்குப் பின் ஒரு ஆசாரியனும் அவ்வழியே நடந்துபோனபோதிலும், வழியில் காயப்பட்டுக் கிடந்தவனைக் கண்டுங் காணாதவர்களைப்போல் பாராமுகமாய்ப் போனார்கள். இவர்களுக்குப் பின் ஒரு சமாரித்தான் அவ்வழியே போனபொழுது, காயம்பட்டவன் மட்டில் இரக்கங் கொண்டு, அவன் காயத்தைக் கட்டி, தன் வாகனத்தின்மேல் அவனை யேற்றிக்கொண்டுபோய், அருகாமையிலிருந்த சத்திரத்தில் அவனை யிறக்கிவிட்டு, அவன் சௌக்கியமாகுமட்டும் பிடிக்கும் பணத்தை சத்திரக்காரனுக்குக் கொடுத்து, அவனை நன்றாய்ப் பராமரிக்கும்படி சொன்னான். இச் சரித்திரத்தை நமது ஆண்டவர் வெளிப்படுத்தினபடியால், ஞான வறுமையிலும் பிரபஞ்

ச வறுமையிலும் வருந்துவோருக்கு நாம் உதவி புரியும்படி நமக்குப் படிப்பிக்கச் சித்தமானார்.

9. திருடருக்குத் தலைவன். — அப்போஸ்தலரான அர்ச். அருளப்பர் ஒரு நாள் ஒரு ஊருக்குப் போய் கிறிஸ்துவர்களுக்குப் பிரசங்கிக்கும்பொழுது, ஒரு வாலனைக் காண, அவன்மட்டில் அவருக்குப் பிரிய முண்டாகி, அவனைக் கவனமாய் விசாரித்து வரும்படி அவ்வூர் மேற்றிராணியாருக்குக் கற்பித்து, தமது வேலையை முடித்தபின் வேறொரு ஊருக்குப் போனார். இந்த மேற்றிராணியார் வாலிபனுக்கு ஞானோபதேசம் படிப்பித்து, ஞானதீட்சை கொடுத்து, தமது கண்காணிப்பில் வைத்திருந்தார். அவ் வாலன் வேறு துஷ்டரோடு சகவாசஞ் செய்து துர்வேலையில் பழகின படியால், ஊரை விட்டு காட்டில் சென்று, திருடருக்குத் தலைவனானான். சில காலத்துக்குப்பின் அர்ச். அருளப்பர் அந்த ஊருக்குப்போனபோது அவ் வாலனுடைய கஸ்திக்குரிய சரித்திரத்தைக் கேட்டு, மகா துயரங்கொண்டு அவனிருந்த மலைக்குப் போனார். திருடர்கள் இவரைப்பிடித்துத் தங்கள் தலைவனிடங் கொண்டுபோய்விட்டார்கள். இவன் அவரைப் பார்த்தவுடனே அவர் இன்னாரென்று அறிந்துகொண்டு வெட்கி, நாணி, அவரை விட்டுவிட்டு ஓட்டம் பிடித்தான். அப்போஸ்தலரும் அவனைப் பின்தொடர்ந்து சென்று, "மகனே விருத்தாப்பியனான்னைக்கு நீ ஏன் பயப்படுகிறாய்? ஓடாதே, நில்; உன் பாவங்களை ஸ்வாமி பொறுப்பார். உத்தம மனஸ்தாபப்பட்டு அவைகளுக்குத் தகுந்த பரிகாரஞ் செய்வாயாகில், சர்வேசுரன் உன்பாவங்களைப் பொறுப்பார். ஓடாதே, மகனே" என்று அவனுக்குப்பின் இவரும் ஓடினார். அப்போஸ்தலர் இவ்விதமாக தன் பின் ஓடிவருவதைக் கண்ட திருடனுடைய மனது இளக, அவன் நின்று அவருடைய பாதத்தில் விழுந்து பொறுதி பெற்று, அவருடன் வீட்டுக்குத் திரும்பி, அதுமுதல் சன்மார்க்கனாய் ஒழுகினான். (அர்ச். அருளப்பர் சரித்திரம்.)

10. அர்ச். அருளப்பருடைய கடைசிப் பிரசங்கம்.-அப்போஸ்தலரான அர்ச். அருளப்பருக்கு 99 பிராயம் நடக்கும்பொழுது, அவர் நடக்கச் சக்தியற்றவராக ஒவ்வொரு நாற்காலியிலும்கோவிலுக்குத் தூக்கிக்கொண்டுபோகப்படுவார். வெகுநேரம் பிரசங்கஞ்செய்யக்கூடாதவராய் கொஞ்சநேரத்துக்குள் அதை முடிப்பார். எப்பொழுதும் ஒருவர் ஒருவரை நேசிக்கும்படி புத்தி சொல்வார். அடிக்கடி பிறர் ஸ்நேகத்தைப்பற்றிப் பேசியதைக் கேட்டவர்கள் சலிப்படைந்து, "நீர் எப்பொழுதும் பிறர் ஸ்நேகத்தைப்பற்றி ஏன் பிரசங்கிக்கிறீர்"? என்று கேட்க: "பிள்ளைகளே! நான் எப்பொழுதும் அந்தப் பிரசங்கத்தை இரட்டித்து இரட்டித்துச் சொல்வேன். ஏனெனில், நீங்கள் ஒருவரொருவரை ஸ்நேகிப்பீர்களேயாகில் சர்வேசுரனுடைய் கற்பனைகளை யெல்லாம் நிறைவேற்றுவீர்களென்று அறிவீர்களாக" என்றார். (இவர் சரித்திரம்.)

## THE CEREMONIES OF THE HOLY MASS.

## பூசைச் சடங்குகளி னர்த்தம்.

(முன் தொடர்ச்சி.)

குருவானவர் தாழ்ந்த சத்தத்தில் வாசிக்கும் பூசையின் உன்னத பரிசுத்தப் பாகங்கள் சேசுநாதர் பாடுபடும்போது விசுவாசிகள் மனமுருகி வியாகுலப்பட்டதைக் குறிக்கின்றன.

குருவானவர் தமது கரத்தை உயர்த்துவது (2-வது மோசே 17-வது அதிகாரத்தில்) யோசுவாவென்பவர் அமலேக்கியர்களுடன் போர் புரியும்பொழுது, மோசே யென்பவர் தமது கரத்தை யுயர்த்தி மன்றாடியதாகச் சொல்லி யிருப்பதற்குப் பாவனையாகும்.

சீவியர்களுக்காகச் செபம் புரிந்த பிறகு குருவானவர், பலியாகப் போகும் அப்பத்தின் பேரிலும், தேவதாழ்ச்சிப் பழ ரசத்தின் பேரிலும் தமது கரத்தை விரிப்பது என்னவெனில்: பழய வேற்பாட்டின் குருக்கள் காணிக்கைப் பலி யளித்தபொழுது (லேவி-1-அதிகாரம்) பலியளிக்கப்படும் வஸ்துக்களின் பேரில் கரத்தை விரிக்கும்படியாகப் பிறந்த ஆக்கியாபனையின் குறிப்பாகும். இந்தச்சடங்குகள், சேசுக்கிறீஸ்துநாதரைச் சிலுவையோடறைய அவரது தோளின் பேரில் சிலுவையைச் சுமத்திக் கல்வாரி மலைக்கு நடத்திப்போனதற்கும், வழியில் சியோன் குமாரத்திகள் அவரைக்கண்டு தங்களுக்காகவுந் தங்கள் சந்ததியார்களுக்காகவுங் கண்ணீர் விட்டழுததற்கும், அவர் பாடுகள் பட்டான பிறகு வஸ்திரம் உரியப்பட்டுச் சூட்டப்பட்ட முள்முடியுடன் தலைக்கணை யில்லாமல் கரடு முரடான படுக்கையின் பேரில் வளர்த்தப் பட்டதற்கும் குறிப்பாகும்.



குருவானவர் பலியின் பேரில் சிலுவை வரைந்து ஆசீர்வதிப்பது, நம்து இரட்சகரின் கால் கரங்களை சிலுவையின் பேரில் வைத்து ஆணி கொண்டறைந்ததாகும்.

குருவானவர் தனிமையாய் அப்பத்தையும் இரசத்தையும் அபிஷேகம் பண்ணுதல், பாவிகளின் பரிகாரத்துக்கு ஆண்டவர் கொலை யுண்டதையும், இரத்தஞ் சிந்தினதையுங் காட்டுகின்றது.

குருவானவர் பரிசுத்த அப்பத்தை உயர்த்துவது, ஆண்டவரைச் சிலுவையி லறைந்து திரளான ஜனங்களுக்கு முன்னிலையில் அவரைச் சிலுவையோடு உயர்த்தினதாகும்.

குருவானவர் பாத்திரத்தை யுயர்த்துவது ஆண்டவரைச் சிலுவையோ டுயர்த்தின பொழுது அவரது அங்க முழுதுங் குலுங்க அவருடைய திருக்காயங்களிலிருந்து பரிசுத்த இரத்தம் ஓடி வந்ததைக் குறிக்கும்.

கைமணி யடிப்பதோ வெனில், சேசுநாதர் சிலுவையின்மீது உயிர் விட்டவுடனே பூமியதிர்ந்ததற்கும், கோவிலின் திரைச்சீலை கிழிந்ததற்கும், திரிகள் அவிந்ததற்கும், மலைகள் பிளந்ததற்கும், சூரியன் இருண்டதற்கும் பாவனையாகும்.

குருவானவர் பலியின்பேரில் ஐந்து முறை சிலுவை வரைவது, ஆண்டவருடைய ஐந்து திருக்காயங்களைக் காட்டுங் குறிப்பாகும்.

தேவநற்கருணை யெழுந்தேற்றமானது முதல் தேவநற்கருணை பரிமாறப்படுகிற பரியந்தம் நிகழுகின்ற நேரம், ஆண்டவர் சிலுவை மரத்தின் பேரில் தொங்கிக்கொண்டிருந்த மூன்றுமணி நேரமாகும்.

குருவானவர் மரித்தவர்களுக்காகப் புரியும் மன்றாட்டு, ஆண்டவர் தமது பகைஞருக்கும் தம்மைச் சிலுவையோடறைந்த கயவர்க்கும், உலக முழுமைக்கும் ஓர் மத்தியஸ்தராக விருந்து மன்றாடியதையும், அவர் இவ்வுலகத்திலிருந்து பரலோகத்துக்குயர்த்தப்பட்டதையுங் காட்டுகின்றது.

குருவானவர், சுவாமி கிருபையாயிரு மென்று பிழைதட்டிக் கொள்வது, ஆண்டவருடன் சிலுவையோடறையப்பட் டிருந்த கள்ளன் மனந்திரும்பி மனஸ்தாபப்பட்டுப் பொறுத்த லடைந்ததைக் காட்டுகின்றது.

பரமண்டல மந்திரத்தின் ஏழு விண்ணப்பங்கள், கிறீஸ்துநாதர் சிலுவையி லிருக்கையில் வசனித்த வார்த்தைகளை நாம் ஞாபகப்படுத்திக் கொள்ளச் செய்விக்கின்றன.

குருவானவர் அப்பத்தைத் துண்டுகளாக உடைப்பது, ஆண்டவர் தமது சீஷர்கள் நடுவில் உட்கார்ந்து, கடைசி ராப்போஜனத்தில் அப்பத்தைப் பகர்ந்து அவர்களுக்குக் கொடுத்ததை யொக்கும்.

அப்பத்தை மூன்று துண்டுகளாக உடைப்பது என்னவெனில், பரலோகத்திலிருக்கும் மோட்ச வாசிகளும், உத்தரிப்பு ஸ்தலத்திலிருக்கும் ஆத்துமாக்களும், பூலோகத்திலிருக்கும் விசுவாசிகளும் ஆகிய மூன்று பிரிவினையான திருச்சபையோர்களுக்காகக் கொடுக்கப்படுந் திருப்பலி பூசையின் பலன், மோட்சவாசிகளுக்கு ஜெயமும், உத்தரிப்பு ஸ்தலத்திலிருக்கும் ஆத்துமாக்களுக்கு வேதனை நீங்குதலும், பூலோகவாசிகளுக்கு உத்தம பாதையை நாடுதலும் விசேஷித்திருக்கும் பொருட்டே செய்யப்படுகின்றது.

குருவானவர் பிறகு முழந்தாளிட்டு எழுந்து "ஆக்னுஸ் தேயி" என்கிற மந்திரத்தை சொல்லி மும்முறை பிழை தட்டிக் கொள்ளுதலானது, அநேகர் தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டுப் பிழை தட்டிக்கொண்டதை யொக்கும்.

குருவானவர் சற்பிரசாதம் உட்கொள்ளுதலானது: ஆண்டவருடைய திருச் சரீரம் அடக்கம் பண்ணப்பட்டதையும், அது மூடப்பட்டிருந்த பரிவட்டத்தில் அவர் திருச்சாயல் பதியப்பட்டதையும் குறிப்பதாகும்.

குருவானவர் வலது பக்கத்திற் புத்தகம் வாசிப்பது, பரிசுத்த தேவதாயார் தம்முடைய திருக் குமாரன் மரண மடைந்ததால் துக்கசாகரத்தில் அமிழ்ந்தியிருந்தாலும், மீளவும் உயிர்ப்பாரென்கிற நம்பிக்கையால் சர்வேசுரனைப் பிரார்த்தித்ததாகும்.

குருவானவர் சபையைத் திரும்பிப் பார்த்து மீனவுதல் பண்ணுவது, ஆண்டவர் உயிர்த்

து, தம்முடைய திரு மாதாவை மினவிக்கொண்டதையும், அர்ச். மரியமதலேனம்மாளுக்கும், பக்தியுள்ள மற்ற அப்போஸ்தலர்களுக்குந் தரிசனையானதையுங் குறிப்பிக்கின்றது.

குரு ஆசீர்வாதங் கொடுத்தலானது, ஆண்டவர் பரலோகத்துக்கு எழுந்தருளிப் போகிற சமயத்தில் அவ்விடத்திலிருந்த எல்லோருக்கும் ஆசீர்வாதங் கொடுத்ததைக் காட்டுகின்றது.

குருவானவர் கடைசிச் சுவிசேஷம் வாசித்தலானது: ஆண்டவர் மோட்சத்துக்கு ஆரோகணமானபின், அவர் தங்களுக்குப் பலகால் போதித்த போதனைகளையும், செய்த புதுமைகளையும், நடந்துகாட்டிய மாதிரிகைகளையும் அப்போஸ்தலர்கள் சிந்தித்து, நன்றியறிதலுடன் ஆண்டவரைப் போற்றிப் புகழ்ந்ததை யொக்கும்.

குருவானவர் பூசை முடிந்து பீடத்தினின்று இறங்குதலானது: ஆண்டவர் பரலோகத்துக்கு எழுந்தருளிப்போனதை மலைமேல் நின்று பார்த்திருந்தவர்கள் அதிலிருந்து கீழே இறங்கிவந்ததைக் குறிக்கும்.

---

# CORRECT THINGS FOR CATHOLICS.

# கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

(முன்தொடர்ச்சி.)

## மேற்றிராணிமார், குருக்கள், சகோதரர்கள், கன்னியர்கள்.

---

1. குருக்கள் விஷயத்தில் சுதேசியம் பாராட்டி, ஐரோப்பிய குருக்கள் மட்டில் நன்றிகெட்ட தன்மையாய் அசட்டையும், அருவருப்பும், ஆயாசமுங் காட்டுவது ஒழுங்கல்ல.

(நமது இந்திய நாட்டில் அக்கியானவிருள் மண்டிப் பெருகி படர்ந்திருந்த காலத்தில்; மனுவின் அதர்ம சாஸ்திரத்தையும், பேய்மதக் கோட்பாட்டையும், நான் என்னும் ஆணவத்தையும், அறியாமையையுமே ஆதாரமாகக் கொண்டிருக்கும்ஜாதிப் பயித்தியம்,உச்சி மண்டை மட்டும் ஏறியிருந்த காலத்தில், ஒரு பக்கம் மகம்மதியரும் மற்றொருபக்கத்தில் ஏனையோரும் ஒருத்தரோடொருத்தர் மல்லுகட்டிப் போராடி பிரசைகளை வாட்டி, கொள்ளையோ கொள்ளையென்று வந்ததை வாறிக்கொண்டுபோ யிருந்த காலத்தில்; பிண்டாரிகளும், தக்ஸ் ஜாதியாரும் தீவட்டி கொள்ளையாடி நாட்டைக் காடாக்கி, காட்டைக் கரியாக்கி அநியாயம் புரிந்துவந்த காலத்தில்; இவன் என் ஏக புத்திரன், இவள் என் மனைவி, இது என் சொத்து என்று எவனும் நம்பிக்கையோடு சுதந்தரம் பாராட்டக்கூடா திருந்த காலத்தில்; ஐரோப்பிய துரைத்தனத்தார் படைக்கல ஆதரவின்றி, அக்கியான மகம்மதிய மதமருள் கொண்ட சண்டாளர்களின் கோபாவேசத்திற்கு, அந்நிய மதஸ்தர்கள் இலக்கா யிருந்த காலத்தில்; நாள் தப்பினாலும் கெடுவு தப்பாமல் பஞ்சம் படை நோய் ஊர் ஜனங்களைத் தன் கொடுஞ் சாட்டையால் வாட்டி வதைத்துவந்த காலத்தில்; தேசத்தில் நாகரிகமும் படிப்பும், பிரயாணிகளுக்கு அநுகூலமாக ரெயில் பாதைகளும், நல்ல ரஸ்தாக்களும் இல்லாமலிருந்த காலத்தில்; அம்மம்ம! நமது அபரிமித நன்றி யறிதல் நிறைந்த நேசத்திற்கு அருகரா யிருக்கும் ஐரோப்பிய குருக்கள், நமது நாட்டில் விசுவாசம் என்னுந் தீபத்தை யேற்றவும், அப்படி யேற்றிய தீபம் அவியாமல் எரியவும் என்ன பாடுபட்டிருப்பார்களோ, என்னென்ன கஷ்டத்திற்கும் துன்பத்திற்கும் உட்பட்டிருப்பார்களோ அது சுவாமிக்கே சாட்சி. அவர்களுடைய முயற்சியா லன்றோ, சிலபல நூற்றாண்டுகளுக்கு முன்னோ, அல்லது சில்லறை வருஷங்களுக்கு முன்னோ, நமது முன்னோர்கள் ஞான தீட்சை யடைய, நாமும் கத்தோலிக்கு கிறீஸ்துவர்கள் என்னும் சிறந்த நாமத்தைப் பூஷணமா யடையப் பாக்கியம் பெற்றோம். அல்லாவிடில் நமக்கு இந்தப் பாக்கியமேது? அணை புரண்டு பொங்கிக் கொந்தளிக்கும் திரண்ட சமுத்திரத்தின்முன், அதே சமுத்திரத்தின் ஒரு நீர்த்துளி எவ்வளவு அற்பமாய்த் தோன்றுமோ, அப்படியே உலகத்தின்கண் முன் நாம் தனித்தனியே அவ்வளவு அற்பமாயினும், உண்மையான கடவுளைச் சரியான பிரகாரம் ஆராதிக்கிறோம் என்னும் நம்பிக்கையானது நமக்கு மனமகிழ்ச்சியைத் தருகின்றதன்றோ?



இதுபோக, அவ்வைரோப்பிய குருக்கள் அக் காலத்தைப் போலவே இக்காலத்திலும் நமக்காகவும், நமது நாட்டிற்காகவும் தங்களையும் தங்களுக்குள்ளதையும் பரித்தியாகஞ் செய்து, பாடுபட்டுவருவதை கண்கூடாய்க் காண்கிறோ மல்லவோ? ஆதலால் ஐரோப்பிய குருக்கள் மட்டில் விசேஷ பக்தி, விசுவாசம், நன்றிகொண்டிருப்பது நீதி.)

2. சிறுவர்கள், பெண் பிள்ளைகள், விசுவாசத்தில் பக்குவமடையாத கிறீஸ்துவர்கள், புதுக் கிறிஸ்துவர்கள் ஆகிய இவர்கள் முன்னும் பொதுவாய் யாவர் முன்னும் குருக்களைப் பழித்துப் பேசுவது ஒழுங்கல்ல.

(குருக்கள் மட்டிலிருக்கும் மதிப்பு போனால், குரு பக்தி போம்; குருபக்தி போனால் விசுவாசம் போம்; விசுவாசம் போனால் சர்வத்திற்கும் ஆதிகாரணமாகிய தேவ பயம் போம்; தேவபயம் போனால் நல்லொழுக்கம் போம் ; நல்லொழுக்கம் போனால் இகத்திலும் பரத்திலும் நாம் ஆசித்துத் தேடும் நன்மைகள் யாவும் பஞ்செனப் பறந்துபோம்.)

3. குருவானவர்களுக்கு, விசேஷமாய்ப் புதிதாய்க் குருப்பட்டம் பெற்ற வாலிப குருக்களுக்கு அடிக்கடி ஸ்தோத்திரம் செய்தால் அவர்களுக்குக் கர்வம் ஆய்விடுமென்று ஆங்காரிப்பது ஒழுங்கல்ல.

4. இந்திய மேற்றிராணிமார், குருக்கள், சந்நியாசிகள், கன்னியர்களைக் **கருப்பு மேற்றிராணிமார், கருப்புக் குருக்கள், கருப்பு** சந்நியாசிகள், **கருப்புக்** கன்னியாஸ்திரிகள் என்பது ஒழுங்கல்ல.

ஐரோப்பியர்களே நம்மை “பிளாக்” என்றும் “நேட்டிவ்” என்றும் கூப்பிடத்தகாதென்றும், இந்தியரென்று மரியாதையாய் அழைத்தல் அவசியமென்றும் இராஜாங்கத்தார் ஆங்காங்கு திட்டம் செய்து வருகிறார்கள். சாதாரண மனுஷருக்கே இவ்வித மரியாதை அவசியமெனக் கொள்ள, உலகத்தை வெறுத்து மேன்மையான துறவற அந்தஸ்திலுள்ளவர்களுக்கு அம்மரியாதையை மறுப்பது நியாயமோ? ஆகவே நம் நாட்டு துறவற அந்திஸ்தினரை நாட்டு அல்லது இந்திய சந்நியாசிகள், நாட்டு அல்லது இந்திய கன்னியாஸ்திரிகள் என்றழைப்பது கிரமம்.)

5. கத்தோலிக்குக் குருப் பிரசாதிகளைப் பாதிரிகளென் றழைப்பது ஒழுங்கல்ல.

(பாதிரி யென்பது மூல பாஷையில் தகப்பன் என்று அர்த்தங் கொள்ளும் பதமாயினும், அது பொதுவாய் புரோட்டெஸ்டாண்டு குருக்களை யழைக்கும் பதமா யிருத்தலாலும், தமிழ் கிறீஸ்துவர்கள் ஒருவித அலட்சியத்துடன் அப்பதத்தை உடயோகித்தலாலும், நல்ல கிறீஸ்துவர்கள் தங்கள் குருக்களை யப்படி யழையார்கள்.)

தங்கள் மனுவைத் திருச்சபையின் அதிகாரிகளுக்குத் தெரிவித்துக் கொள்ளுவதற்கு முந்தி, குருக்களைக் கோர்ட்டுக்கிழுப்பது ஒழுங்கல்ல. (இப்படிச் செய்பவர்கள் திருச்சபையின் சாபத்திற்குள்ளாவதாக பரிசுத்த பிதா நிருமாணஞ் செய்திருக்கிறார்.)

6. ஆய்ந்தோய்ந்து பாராமல் அபாண்டமான காரியங்களைக் குருக்கள்மேல் சொல்லத் துணிவது ஒழுங்கல்ல.

7. குருக்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் குற்றங் கண்டுபிடிக்க வழி பார்ப்பதும், ஒவ்வொன்றுக்கும் தகாத கருத்தைச்சுட்டிக்காட்டுவதும் ஒழுங்கல்ல.

8. குருக்களை எக்கச்சக்கமாய்ப் பேசுவதும் அவர்களிடம் பேசப்போகு முன் (தைரியத்திற்காகக்,) குடித்துவிட்டுப் போவதும் ஒழுங்கல்ல.

குருக்களை யடிக்க அவர்கள்மேல் கை நீட்டுவது ஒழுங்கல்ல (இப்படிச் செய்பவர்கள் நாயினுங்கடையர்கள்)

9. ஒவ்வொரு இலாக்கா உத்தியோகஸ்தர்களும், தங்கள் இலாக்காவின் சட்ட திட்டங்களை அமுலுக்குக்கொண்டுவர முயற்சி செய்வதுபோல், குருக்களும் தங்கள் இலாக்காவாகிய திருச்சபையின் சட்ட திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவர முயற்சி செய்யும்போது அவரை ஏசித் திட்டுவது ஒழுங்கல்ல.

10. உலகப் பேயாட்டமும் நாஸ்திகமு நிறைந்த சில தேசங்களில் திருச்

சபை உபத்திரவப் படுவதைக் கண்டால் அல்லது கேட்டால், திருச்சபையே அழிந்து போவதாய் நினைத்து, சந்தோஷங் கொண்டு அதனைப் பரிகாசம் செய்வது ஒழுங்கல்ல.

(விசுவாசத்தில் முதிர்ந்த கிறீஸ்துவர்கள், நமதாண்டவர் திருச்சபைக் களித்த வார்த்தைப் பாட்டை யறியாத கிறீஸ்துவர்கள், திருச்சபை எவ்வளவோ கஷ்ட உபத்திரவங்களிலிருந்து விடுபட்டு உலையில் காய்ச்சின பொன்னைப்போல் ஜொலிப்புடன் வெளி வந்திருப்பதைத் திருச்சபை சரித்திரத்தின் மூலியமா யறியாத கிறிஸ்துவர்கள் இப்படிப் பேசுவது சுத்த பைத்தியம்.)

11. திருநாள் பெருநாட்களில் குருக்க்கள் தங்களுக்குள் ஏதோ ஒரு விருந்து எற்படுத்திக்கொண்டால், அதைப்பற்றி விபரீதமாய்ப் பேசுவது ஒழுங்கல்ல.

12. சபையில் நெருப்புப் பொறிபோல் யாதோர் மனத்தாங்கல் தோன்றினால், அதை உடனே அடக்காமல், அணுவை மேருவாக்கி பெருத்த கலகமாக்கி விட்டு, கடைசியாய் எல்லாப் பழியையும் குருவானவர் தலைமேல் சுமத்துவது ஒழுங்கல்ல.

13. யூதாஸ்காரியோத்திற் கிணையாய் யாரோ ஆயிரத்திலொரு நெறி கெட்டவன், தக்க தேவ அழைப்பின்றி, வயிற்றுத்திரத்திற்கோ, அல்லது வெகுமான பிரியத்தை நாடியோ, குருப்பட்டமடைந்து விபரீதமாய் நடந்தால் அதைப்பற்றி (Clergy) குருவர்க்கத்தைப் பழிப்பதும், திருச்சபையை நிந்திப்பதும், விசுவாசத்தில் தடுமாறுவதும் ஒழுங்கல்ல.

14. கோவில் பொருள்களைத் திருடுவதும் உண்டிப்பெட்டிகளைக் கொள்ளை யடிப்பதும் ஒழுங்கல்ல.

15. கோவிலில் யாதா மொருத்தருடைய ஜெப புஸ்தகமோ, ஜெபமாலையோ, வஸ்திரமோ மற்றும் எந்தப் பொருளோ அகப்பட்டால், அதை யுடையவர்களுக்குக் கொடுத்துவிடும்படி குரு சுவாமியார், உபதேசி முதலிய கோவில் உத்தியோகஸ்தர்களிடம் ஒப்புவிக்காமல், யாருக்கும் தெரியாமல் அடக்கமாய் வீட்டுக்குக் கொண்டு போய் "இதுபார் எனக்குக் கோவிலில் கிடைத்தது" என்று தன் சினேகிதர்களுக்குக் காட்டி மகிழ்ச்சி கொள்வது ஒழுங்கல்ல.

16. குருக்களைக் கண்டால் ஒளிவதும், தாங்கள் கிறிஸ்துவர்களென்று அவர்களுக்குக் காட்டிக்கொள்ள நாணுவதும் ஒழுங்கல்ல.

(சிலர் கிறீஸ்துவர்க ளாயினும், தாங்கள் கிறிஸ்துவர்க ளென்று பிரத்தியட்சமாய்க் காட்டிக்கொள்ள சங்கோசங் கொள்ளுகிறார்கள். ரயில்வே ஸ்டேஷன்களிலோ, வர்த்தகஸ்தானங்களிலோ, அல்லது உத்தியோக சாலைகளிலோ, குருக்கள் கன்னியாஸ்திரிகள் ஏதோ ஒரு அற்ப உதவிக்காகத் தவித்துக்கொண் டிருக்கிற சமையத்தில் அவர்கள் இவர்களைக் கண்டும் காணாதவர்கள்போல் நழுவிவிடுவார்கள். கோவிலைக் கண்டால் வணக்கம் செலுத்தமாட்டார்கள். நல்ல நாட்களில் தங்கள் வீட்டில் ஜெபம் பிரார்த்தனை நடக்கும் நேரங்களில் புரோட்டெஸ்டாண்டார் தங்களுடன் இருக்க நேர்ந்தால், அவர்களுடைய முக தாட்சண்யத்திற்குப் பயந்து, மாதாவுக்கு ஸ்தோத்திரமான ஜெபம், பிரார்த்தனைகளை விட்டுவிடுவார்கள். அழகாய்ப் படர்ந்திருக்கும் நெற்றியில் கருப்புப் புள்ளி அல்லது வெள்ளைப் புள்ளி யொன்றை வைத்து அதைப் பங்கப்படுத்தி, இன்னும் அக்கியான ஆபாச முறைகளை யநுசரித்து, தங்கள் சுத்த அக்கியானிகள் என்று பிறர் கண்டுகொள்ளும்படியான விதமாய் நடிப்பார்கள். ஏதோ எட்டுநாளுக் கொருமுறை கட்டத்துடன் சென்று காணும் பூசையுண்டு; தங்கள் வீடும் உத்தியோக சாலையுமே உண்டென்பதா யெண்ணி, கிறிஸ்துவ ஜன சங்கத்தையும், அநேக சமயங்களில் எளியவர்களா யிருக்கும் தங்கள் பெற்றோர் பந்து மித்திரரையும் வெறுத்துத் தள்ளி, தாங்கள் ஏதோ வானத்தி லிருந்து அப்போதுதான் தொப்பென்று குதித்த பரமாத்துமாக்களைப் போல் பாசாங்கு செய்வார்கள். தங்கள் பிள்ளைகளை கிறிஸ்துவ பிள்ளைகளோடு சகவாசம் செய்யவிடாமல், அவர்களை மகம்மதியருள்ளும் இந்துக்களுள்ளும் கழிகடைகளாய்த் திரியும் போலிகளுடன் சகவாசம் செய்வது தங்களுக்குப் பெருமையென்றெண்ணுவார்கள். இப்படிப்பட்ட மாய்மாலக் கிறிஸ்துவர்களை



யாரும் கண்டுபாவியாமல் கிறிஸ்து வேதத்திலும், கிறிஸ்துவ ஜன சங்கத்திலும் பெருமை கொள்ளுவதே கிரமம்.)

17. குருவானவருடைய பிரத்தியேகமான காரியங்களையும், வீட்டு விஷயங்களையுங் குறித்துப் பேசித் திரிவது ஒழுங்கல்ல.

18. குருவானவரிடம் கடன் கேட்பதும், தனக்கு ஜாமின் இருக்கக் கேட்பதும் ஒழுங்கல்ல.

19. குருவானவருடைய வரவு செலவு முதலிய விவரங்களைப் பற்றி அவர் வேலையாளிடம் துப்பு கேட்பது ஒழுங்கல்ல.

20. குருவானவர்மேல் இருக்கும் விரோதத்தைப் பற்றி வேதத்தை வெறுப்பது ஒழுங்கல்ல.

(குருவானவர் சத்திய வேதத்திற் கொரு ஊழியனே யன்றி அதை ஸ்தாபித்தவரல்ல. நாம் சத்தியவேதத்தி லிருப்பதினால் நம தாத்தும கடமைகளை நிறைவேற்றி நமதிரட்சண்யத்தை நிச்சயப்படுத்திக் கொள்ளுகிறோம். ஆனதால் குருவானவர்மேல் இருக்கும் மனஸ்தாபத்தைப் பற்றி, மூட்டுப் பூச்சிக்குப் பயந்து வீட்டைக் கொளுத்தினதுபோல், நமதன்புள்ள சிருஷ்டிகரையும், இரட்சகரையும் பரிசுத்த மாதாவையும் திரஸ்காரஞ் செய்து, சத்திய திருச்சபையையே வெறுத்துத் தள்ளி, நம தாத்துமத்திற்கு நாமே நஷ்டத்தைத் தேடிக்கொள்வது எப்படிப்பட்ட பயித்தியம்!)

21. குருவானவரைத் தங்கள் குமஸ்தாக்களைப்போல் நடத்துவது ஒழுங்கல்ல.

(தென்தேசத்தில் சில இடங்களில் கிறீஸ்துவர்கள் என்னமோ கோவிலுக்குக் கொஞ்சம் பணம் உதவி செய்வதைப் பகு பெருமையாய் எண்ணிக்கொண்டு, குருவானவரைத் தங்கள் ஊழியர்போல நடத்துவார்கள். குருவானவர்களும் அசமாதானம் உண்டாகு மென்று பயந்து, அவர்களுக்குத் தக்கபடி நடப்பார்கள். இது நல்ல கிறீஸ்துவர்களுக்கு அடையாளமல்ல. ஐரோப்பிய சீமையில் லட்சாதிபதிகளும், சாஸ்திரிகளுமான கிறிஸ்துவர்கள், ஊர்பேர் தெரியாமல் கோடி கோடியாய் குருக்களுக்கு வாரிக் கொடுத்து, திருச்சபை காரியங்களை யவர்கள் வசம் முற்றிலும் ஒப்பித்துவிடுவார்கள். பேதைகளான இத் தேசத்தவர்களோ வெனில்: ஏதோ சொற்ப தருமம் செய்து விட்டால் தலைகால் தெரியாமல் ஆடுவார்கள். இது அவர்களிடம் இருக்கும் விசுவாசக் குறைவுக்கு மெய்யான அத்தாட்சி. மேலும் குருக்கள் தங்கள் அலுவலை நடத்தவேண்டிய வைதீக லௌகீக கல்வியில் பயிற்சியடைந்தவர்கள். தங்களையும், தங்களுக்குள்ளதையும் சர்வேசுரனுக்காக தத்தஞ் செய்து தேவ உழைப்பை நேர்ந்துக்கொண்டவர்கள். இதுவு மன்றி, அவர்களை விசாரிக்க சிரேஷ்டர்களும் மேற்றிராணிமார்களு முண்டு. அப்படி யிருக்க, கேவலம், தக்க பயிற்சியும் விவேகமு மில்லாத கிறிஸ்துவர்கள் ஏதோ தேவ காரியங்களில் உதவி செய்வதை முன்னிட்டு, அவர்களைத் தங்கள் ஊழியர்களாகவும், காரியதரிசிகளாகவும், கணக்கர்களாகவும், குமஸ்தாக்களாகவும் நடப்பிப்பது அவிவேகம்.)

22. தன் வீட்டில் நடக்கும் விசேஷ சம்பவ காலங்களில் குருவானவரை மறந்துவிடுவது ஒழுங்கல்ல.

23. சபையைச் சீர்படுத்த, அல்லது ஒரு பொதுநலமான காரியத்தை நடத்த குருவானவர் பணங் கேட்டால், ஐயோ! இந்தச் சுவாமியார் ஓயாமல் பணம் பணம் என்று போடுங் கூச்சலினால் காதும் துளைத்துப்போகிறதே, என்று கத்துவது ஒழுங்கல்ல.

24. குருவானவரை அடிக்கடி தர்மங் கொடுங்கள் என்று அலட்டுவதும், கொடுக்காவிட்டால் அவரை நிந்தித்துத் தூஷிப்பதும், படம் கொடுங்கள், புஸ்தகங் கொடுங்கள், உத்தரீயம் கொடுங்கள், என்றவரைத் தொந்தரிப்பதும்ஒழுங்கல்ல.

(படம், உத்தரியம், புஸ்தகம் முதலியவற்றை அவர் மற்றவர்களைப் போல துட்டுப்போட்டுத்தான் வாங்க வேண்டியதென்று, அறியவும்.)

25. குருவானவர் அநுமதி தராமல் ஆசனத்தில் உட்கார்ந்து கொள்ளுவது ஒழுங்கல்ல.

26. தன் விசாரணைக் கோவில் அவசரத்தைக் கவனியாமல், அந்நிய கோவில்களுக்குத் தானதருமம் அளிப்பது ஒழுங்கல்ல.

27. துலுக்கர்கள் செய்வதுபோல், குருமார்களுக்கு ஒற்றைக் கையால் சலாம் செய்வது ஒழுங்கல்ல.

28. தன் விசாரணை குருவானவரை விட்டு, அந்நிய குருக்களைக்கொண்டு பூசைகள் செய்விப்பது ஒழுங்கல்ல.

(இன்னும் வரும்.)

---

## CORRESPONDENCE.
## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்திரவாதி யல்லர். கடித மெழுதுவோர் தங்கள் கடிதங்களை மிகத் திருத்தமாயும், காகிதத்தின் ஒரே பக்கத்தில் இடது பாரிசத்தில் நாலு விரற்கடை இடம் விட்டும். எழுதுவதுடன் தங்கள் பெயர் விலாசங்களையும் தெளிவாய் எழுதல் வேண்டும். பெயர், விலாசம் வெளிப்படுத்துவதற் கல்ல, கடிதத்தின் உண்மைச் சங்கதிகளைப் பத்திராதிபர் உறுதிப்படுத்திக் கொள்வதற்கே வெளிப்படுத்துவதற்கு தகுதியற்றன வென்று தள்ளி விடப்பட்ட கடிதங்கள் திரும்பவும் வாப்ஸ் செய்யப்படமாட்டா. ப—ர்]

### கோலாலம்பூரிலுள்ள நல்லாயன் சந்தாதா நண்பர்களுக்கு ஓர் விநய வேண்டுகோள்.

ஐயன்மீர்,

எனது மூத்த குமாரன்; மோசேஸ் பிள்ளை என்று அழைக்கப்படும் அந்தோனிமுத்துப் பிள்ளை, லோக்கோமோட்டிவ் இஞ்சின் வேலையில் பயின்றவன். 1911 வருஷத்தில் எனக்கும் என் பந்து ஜனங்களுக்குந் தெரியாமல் சேலம், ஜில்லா, சூரமங்கலத்தி லிருந்து கோலாலம்பூர் வந்து, F.M.S. ரெயில்வே பயர்மேனுகசேர்ந்து இருக்கிறதாக அதே வருஷத்தில் அவனிடமிருந்து ஓர் காகிதம் வந்தது. பிறகு அவன் விலாசமாவது, நிலைமையாவது ஒன்றும் தெரியாததால், மேற்படி யூர் சந்தாதார நேயர்கள் ஏழையாகிய என்மீது கிருபை கூர்ந்து தங்களால் கூடியவரையில் விசாரித்தறிந்து கீழ்கண்ட விலாசத்துக்கு தங்கள் விலாசத்தையும் சேர்த்து தெரிவிக்கும்படியாக தங்கள் மேலான கனத்தைக் கோருகிறேன்.

என் விலாசம்: எம். முத்துப் பிள்ளை,
லோக்கோமோட்டிவ் இஞ்சின் டிரைவர்,
தென் இந்தியா ரெயில்வே கம்பெனி,
சூரமங்கலம், சேலம் ஜில்லா.

---

### கூடலூர், அர்ச். சவேரியார் ஆலயத்தில் சேசுவின் திரு இருதய திருநாள் கொண்டாட்டம்.

சூன்மாதம் 20-ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை $6\frac{1}{2}$ மணிக்கு அதிர் வெடிகளுடன் மேள வாத்திய முழங்க சேசுவின் திரு இருதய கொடியேற்றஞ் செய்யப்பட்டு, இருதய பிரார்த்தனை பாடப்பட்டு திவ்விய நற்கருணை ஆசீர்வாதங் கொடுக்கப் பட்டது. அன்றுமுதல் நவநாளாரம்பிக்கப்பட்டு காலையில் திவ்விய பூசை பலியும் மாலையில் திரு இருதய பிரார்த்தனையுடன் திவ்விய நற்கருணை ஆசீர்வாதமும் நிறைவேறியது. கடைசி தினமாகிய 29-ம் தேதி ஞாயிறுவாரமன்று மாலைகளாலும் துவஜங்களாலும் செடி கொடிகளாலும், நறுமலர்களாலும் ஆலயம் அலங்காரமாயிலங்க, காலை 7-மணிக்குச் சங்கைக்குரிய A. Chouvene சுவாமிகளால் பெரிய பாடல் பூசை வெகு ஆடம்பரமாய் செய்யப்பட்டது. அப் பூசையில் ஏராளமான கிறிஸ்துபக்தர்களும், கன்னியாஸ்திரிகளும், மடத்து உட்பிள்ளைகளும் திவ்விய சற்பிரசாதம் உட்கொண்டனர்கள். பிறகு நமது ஞானத் தந்தையாகிய பத்தாம் பத்திநாத பாப்பானவர் தமது ஞான மக்களாகிய நம் மெல்லோருக்கும் இவ் வருஷம் அளித்திருக்கிற ஜுப்பிலிப் பலனைப் பெறுவதற்கு யிடப்பட்ட கட்டளைப்பிரகாரம், விசுவாசிகள் கோவிலை 6 விசை சந்தித்தும், மற்றும் நியமித்த ஜெபங்களைச் செபித்தும் பரிபூரண பலனை யடைய வருந்தினார்கள். அன்று மாலை 7 மணிக்கு மல்லிகை முல்லை புஷ்பாதிகளால் ஜோடிக்கப்பட்ட சிறிய தோர் ரதத்தின் பேரில் சேசுவின் திரு இருதய சுரூபத்தை ஸ்தாபித்து, கிறிஸ்துவர்கள் முன்னும் பின்னும் ஜெபக் குரல் ஓசையோடு புடை சூழ, பாடகர்கள் பின்னே நின்று இனிய தேவ ஸ்துதி பாட, பெரிய மணிச் சத்தம் தேவ லோகநாதன் வருகையை ஊரெங்கும் அறிவிக்க, அதிர்வெடி பாண்டு வாத்திய கோஷடத்தோடும், வாஷிங்டன் லையிட்டோடும், வாண மத்தாப்பு சிறப்போடும் திருத்தேர் சுற்றுப் பிரகாரம் துவக்கி கிறிஸ்துவர்கள் வசிக்கும் வீதிகளினூடே சென்று சுமார் $9\frac{1}{2}$ மணிக்கு



முடிந்தது. அதன்பின் மகா உன்னத விநோத சிறப் பலங்காரமாயும் தேஜோன்மய மாயும் ஜொலித்துக்கொண்டிருந்த தேவாலய பீடத்தின் மேல் திவ்விய நற்கருணை எழுந்தேற்றம் செய்து தேதேயம் என்ற தேவஸ்துதி பாடி ஆசீர்வாதங் கொடுத்ததோடு திருநாள் முடிவு பெற்றது.

மேற்படி திருநாளைச் சிறப்பித்த குருப் பிரசாதிக்கும், திருச்சபையோருக்கும் கர்த்தர் நீடூழி ஆயுள் அருள்வாராக.

29—6—13. { இங்ஙனம், J. M. B. N.

---

### கீழ்ச்சேரி.

ம-ா-ா-ஸ்ரீ நல்ல ஆயன் பத்திராதிபருக்கு பல்லாயிரம் வந்தனம். ஐயா, யானிங்கெழுதும் சமாசாரத்தைத் தங்கள் பத்திரிகையின் ஒருகோணத்தில் பிரசுரிக்க வேண்டுகிறேன். எங்கள் சிறு கிராமமாகிய கீழ்ச்சேரியின் தென்பாகத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் திரு இருதயநாதர் கோவிலில் வழக்கமாய் நடக்கும் திருவிழாவுக்காக, இந்த கிராமத்து பங்குவிசாரணை குருவாகிய சங். ருஜாரிஷி A, மிக்லாஜிக் சுவாமியாருடைய முயற்சியின் பேரில் ஜூன்மீ 17உ கொடி யேற்றப்பட்டு, திரு இருதயநாதருக்கு நவநாள் ஆராதனை ஆரம்பமாகி, பிரதிதினமும் திரு இருதய நவநாள் மன்றாட்டு, லத்தீன் பாட்டு பிரார்த்தனையுடன் தெய்வநற்கருணை யாசீர்வாதம் கொடுக்கப்பட்டு வந்தது. கடைசி நாளாகிய ஜூன்மீ 25உ புதவாரம் காலை $7\frac{1}{2}$-மணிக்கு சங். மேயர் சுவாமியார் செலபிரண்டாயும், சங். குரூட்சுவாமியாரும், சங். அலூஷியஸ் சுவாமியாரும் முறையே டிக்கன் சப்டீக்கனு யிருந்து திருப்பாட்டு பூசை நிறைவேற்றினார்கள். பூசையில் சுமார் 450 விசுவாசிகள் சற்பிரசாதம் உட்கொண்டார்கள். அன்று மாலை நமது அதிமேற்றிராசன விக்கர் ஜெனரலாகிய அதி. சங், மெர்க்கஸ் சுவாமிகளுடன் 7 குருக்கள் சகாயத்தால் வெஸ்பர்ஸ் என்னும் மாலைப் பிரார்த்தனை ஆடம்பரத்துடன் பாடப்பட்டு, திவ்விய நற்கருணை பீடத்தின் பேரில் ஸ்தாபிக்கப்பட்டு (தேதேயும்) Te Deum என்னும் தேவ ஸ்துதி பாடியபின் தேவ நற்கருணை ஆசீர்வாதங் கொடுக்கப்பட்டது.

பிறகு இரவு $10\frac{1}{2}$-மணிக்கு புஷ்பங்களால் மிக நேர்த்தியாய் அலங்கரிக்கப்பட்ட எழு தேர்கள் தீவட்டி மத்தாப்பு பாணவேடிக்கை அவுட்டுகளுடன் சுற்றுப்பிரகாரமாய் ஊர்வலம் வருகையில், இடைக்கிடையே அலங்கரிக்கப்பட்டிருந்த பூப்பந்தல்களில் சுற்றுப்பிரகாரம் நிறுத்தப்பட்டு, பாட்டுகளும் கீர்த்தனைகளும் பாடிவர 2-மணிக்கு சுற்றுப் பிரகாரம் திரும்பக் கோவிலை யடைந்தது. இந்தத் திருவிழாவுக்கு ஷை குருப்பிரசாதிகளும், சுமார் 2,000 கிறிஸ்தவர்களும் விஜயஞ் செய்தார்கள்.

இவ்வித ஆரவாரச்சிறப்புடன் திரு இருதய நாதரின் திருவிழா நிறைவேறியது மிகவுந் திருப்திகரமானதே. இத்திருவிழாக் கொண்டாட்டத்துக்குப் பிடிக்கலாயின 180 ரூபாயும் சங். விசாரணை குருசுவாமிகளின் ஏற்பாட்டின்படி ஷை கிராமத்திலுள்ள ஏழைக் கத்தோலிக்குக் கிறிஸ்துவ விவசாயிகளிடம், இவர்கள் கவர்ண்மென்டுக்குச் செலுத்தும் பேரீஜு தொகையில் ரூபாய்க்கு $1\frac{1}{2}$ அணு விழுக்காடு வீதம் போட்டு வசூலிக்கப்பட்டது. ஆயினும், இந்தத் தண்டற் பணத்தை ஏழைக ளெல்லோரும் மனத்தாராளமாய்க்கொடுக்க, சில தனிகர்கள் மாத்திரம் கொடாமற்போனது மெத்தவும் விசனிக்கத்தக்கதே. இது ஊர்க்குடிகளின் பொது சமாதானத்துக்கும், க்ஷேமத்துக்கும் நல்ல அடையாளமல்ல. இனிமேலாவது இவ்வூர் கிறிஸ்துவர்கள் தனிகரும் தரித்திரரும் எல்லோரும் ஏகோபித்து, திருநாட்களையும், மற்றப் பொதுக் காரியங்களையும் சமாதானமாய் ஒருமித்து நடத்தப் பார்ப்பார்களெனக் கோருகிறேன். இப்படிக்கு,

கண்டது விண்டோன்.

---

### கத்தோலிக்கு ஜன சமூகாபிவிர்த்தி.

நல்மனதுடன் நயோபதேசங்களால் நமது தமிழ் கத்தோலிக்கு சமூகத்திற்கு நலம் புரிந்துவரும் நல்ல ஆயன் பத்திரிகையின் அதிபரே! சத்விஷயத்தில் சலிப்பின்றி சகாயம் புரியும் சற்குண சந்தாதார நேயர்களே! உங்கள் அனைவோர்களுக்கும் வந்தனம். சென்ற மூன்று மாதங்களாக நமது நேய பத்திரிகையில் "நமது மாதர்" என்ற தலைப்பின்கீழ் ஸ்ரீமான் செல்வராஜு அவர்கள் கிருபை கூர்ந்து வரைந்த அருமை விஷயத்தை வாசித்து வந்தோம். அவர் எடுத்துக்காட்டி யிருக்கும் பல விஷயங்களும் நவீன மல்லவாயினும், இப்போர்க்கொத்த நல் விஷயங்கள் சித்திபெறும்வரையும் ஷையாரைப் போன்ற மேதாவிகள் சதா தூண்டிக்கொண்டிருக்கவேண்டிய தவசியமே.

நமது பரத கண்டத்திலுள்ள சமுதாய பரிஷ்காரிகள் யாவரும் விவித விஷயங்களில் ஜயம் லபிப்பிக்க பலநாளாய் நாவரளக் கத்திக் கொண்டிருக்கிறார்கள். "கனவிற்கண்ட கத்தரிக்காய் கறிக் குதவாததுபோல்" வெறும் வாய்ப் பிரசங்கம் பண்ணுவதினால் மாத்திரம் காரிய சித்தி யாகமாட்டாது. "போதனையைவிட சாதனையே மேல்" என்ற அமிர்த மொழியைப் பின்செல்ல நல்மனதுடைய நண்பர்கள் முன்வந்து உழைக்கவேண்டும். இப்பேர்க்கொத்த சமுதாய அபிவிர்த்தி விஷயங்களை கேட்கும் எல்லா ஜனங்களும் சரிதான், நியாயந்தான், வேண்டியதுதான், என்று பாசாங்கு பண்ணுகிறார்களே தவிர மனந் துணிந்து காரியாகாரியங்களை நடத்திக் காட்ட முன் வருபவர்கள் ஒருவரையுங் காணோம். சொல்லிக் காட்டுகிறவர்களைவிட நடந்து காட்டுகிறவர்களே இப்போது நமது ஜன சமூகத்திற்கு அத்தியாவசியமா யிருக்கிறது.

கேவலம் கல்வி அறிவில்லாத பாமரர்களுக்கும், ஸ்ரீமான் செல்வராஜு அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளதுபோல உலக அனுபோகமற்றவரும், ஆபாச குக்ஷிகளுமாகிய சில பேடை பெண்களுக்கும் பயந்து, நிர்த்தோஷமும், நற்பயன் விளைக்கக் கூடியதுமாகிய தற்கால பரிஷ்காரங்களைக் கைசோரவிடுவது நமது ஜன சமூகாபி விர்த்திக்குப் பெரும் தடங்கலாயிருப்பதைக் கண்டுணரக்கடவோம். நமது சமூகாபிவிருத்திக்கான பல முக்கிய விஷயங்களில் விதவா விவாகத்தையும், ஜாதி வித்தியாசம் பாராட்டாமையையும், எட்டிக்காயை விட கசப்பென எண்ணி வருகிறார்கள் சாமான்யர்.

விஷயங்கள் இங்ஙனமாயினும், சிற்சில நன்மனதுடைய பரிஷ்காரிகள் இவ் விசிஷ்ட விஷயத்தில் முன்வந்திருக்கிறார்களென்பது வாஸ்தவமே. உதாரணமாக, மாயவரத்தில் ஓர் சிறந்த பூமான் சமீபத்தில் விதவா விவாஹம் செய்வித்தாரெனக் கேள்விப்பட்டோம். ஆனால் இவ்விவாகஞ் செய்து கொள்வதற்குப் பிரதிபலனாக வரனுக்கு ஓர் பெருந் தொகையும் ஈந்தனராம். இவ்வித நன்மாதிரிக்கு விலையா? இது நமதுமேதாவிகளின் கோழைத்தனத்தை வெளிப்படுத்துகிறதன்றோ? ஷையார் ஸ்ரீமான் ஆனபடியால் அவர் தொகை கொடுக்க சக்தியுற்றவர். செய்யவேண்டியதும் அவசியமே. ஸ்ரீமானுக்கு ஏழை ஏற்பட்டதாலன்றோ அங்ஙனம் நேர்ந்தது. அதினால் மாஹாத்மிய முள்ள ஓர் நல்ல விஷயத்தை விலைக்கு விற்றாற்போல் ஆயிற்றே. ஸ்ரீமான்களுக்கு ஸ்ரீமான்களே ஏற்பட்டு கீழ் அந்தஸ்திலுள்ள பலர்களுக்கும், நம்மைச் சுற்றியுமுள்ள இதர மதஸ்தர்களுக்கும் நன்மாதிரிகை காட்டவேண்டிய சந்தர்ப்பம் இதோ சமீபித்திருக்கிறது. உணர்வற்றுறங்கும் உண்மை நேசர்களே, உணருங்கள். உற்றதும் உண்மையுமாகிய வழியில் நடக்க, உத்சாஹியுங்கள். பிறரையும் உத்சாஹப்படுத்துங்கள்.

சென்ற சில வருஷங்களாக தென் இந்தியா கத்தோலிக்கு சங்கத்திலுள்ள பல மெம்பர்கள் சமுதாய அபிவிர்த்திக்கான பல நல் விஷயங்களின்பொருட்டு உழைத்து வருகிறார்கள். பலரும் இவ்வித விஷயங்களால் நன்மை பயக்குமென கண்டுணர்ந்தாயிற்று. ஆயினும் என்ன? தைரிய சமேதம் முன் வருபவர்களைத்தான் காணோம். மதுரையில் சமீபத்தில் நடந்த ஓர் இந்து கூட்டத்தில் கலெக்டர் அவர்கள் பஞ்சமர்களுக்கு ஓர் பொதுக்கிணறு திறக்கும் சந்தர்ப்பத்தில், பிறரை உற்சாகப்படுத்தும் பொருட்டு, அவருடைய விசிஷ்ட பிரசங்கத்தில் இங்ஙனம் சொல்லியுளர்: "இதே விஷயார்த்தமாக இந்த ஊரில் 5 கிணறுகள் திறக்கப் பொதுநலப்பிரியர்கள் ஏற்படும் பக்ஷத்தில் 6-வதாக நானும் ஓர் கிணறு ஏற்பாடு செய்வேன்" என்பதே. அதைப்போலவே கல்விமான்களும், ஸ்ரீமான்களும் ஆகிய பத்துப்பெயர் இந் நல்விஷயத்தில் தைரிய சமேதம் முன்வரும் பக்ஷத்தில், அவர்களில் ஒருவனாயிருக்க நான் சித்தமா யிருக்கிறேன். என் தாழ்மையுள்ள அபிப்பிராயத்துடன் அநுகூலித்த அன்பர்கள் யாராவது என்னைக்குறித்து அதிக விபரங்கள் அறியவிரும்பினால் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதிக்கொள்ளவும்.

கத்துவதில் இஷ்டங்கொள்ளாமல்
கர்மத்தை விரும்பும்
ஆர். வி. உடையார்.
சித்தூர், பாலக்காடு.

---

### தூத்துக்குடி.
### பரதரும், நாடகமும்.

ஐயா, பத்திராதிபரே, எங்குலமாக்களின் நலத்தைக் கோரி யான் பின்வரையும் விஷயத்தை நும் பத்திரிகையினோர் கோணத்தில் பிரசுரிக்க தயை செய்வீரெனப் பிரார்த்திக்கின்றேன்:-

கால வித்தியாசத்தால் மதுரை யரசாட்சியை யிழந்தும், பின் வடுகராலும், மகம்மதியராலும் நொறுக்கடிக்கப்பட்டும் வளங் குன்றிக்கிடந்த கார்மணல் கரை (Coromandel Coast) பரதஜன சமூகமானது அப்புறம் தெய்வாதீனத்தால் கிடைத்த திருச்சபைக் குட்பட்டு, இப்போது சில காலமாக தனது முன்னேற்றத்தை நோக்கி விரைவாக நடந்து கொண்டிருக்கிறது. ஜன சமூகத்தின் நடை எத்தனை விரைவாயிருந்தும், தான் நோக்கிச் செல்லும் முன்னேற்றத்தின் உச்சியை இன்னும் அது அடைந்ததாயில்லை. வாஸ்தவந்தான், இருந்தவிடந் தெரியாது உருமாறிக்கிடந்த ஓர் ஜன சமூகமானது தன் பூர்வ நிலைமையை யடையவேண்டுமானால் ஒருவருஷம் இருவருஷம் அல்ல, அநேக வருஷங்கள் செல்லும். மேற் சொன்னபடி முன்னேற்றத்தை நோக்கி தீவிரித்துப்போகும் இந்த ஜனசமூகம், தான் அஞ்ஞான அந்தகாரத்தில் இருந்த காலத்தில், இதற்கு விரோதமாய் மாணிடப்பகுதிகள் ஏற்பட்டிருந்தது போய், ஜனசமூகம் என்றைக்கு மெய்ஞ்ஞான வேத வுண்மையை அநுசரிக்கத் தொடங்கியதோ அன்றிருந்தே பென்னம் பெரிய வேதாளங்கள் பல இந்த ஜனசமூகத்தை வேரோடு வீழ்த்த வேலைசெய்து வருகின்றன. மற்ற ஜனசமூகங்களின்மேல் கடைக்கண்ணோக்கமாய் மாத்திரமிருந்து கொண்டிருக்கும் வேதாளங்கள், எமது பரத ஜனசமூகத்தின் பேரில் மட்டும் முழுக்கண்ணோக்கமா யிருக்குங் காரணமென்னவென்றால், இப்பிரபஞ்சத்தின் எந்தக் கோணத்தைப்பார்த்தாலும் அந்தக் கோணத்தில் எந்த ஜாதியாரென்றாலும் சரி, அந்த ஜாதியார் பூராவும் ஓர் சத்திய மார்க்கத்தைச் சேர்ந்தவராயில்லை. உதாரணமாக, இவ்விந்தியாவில் ஏறக்குறைய நாலாயிரம் ஜாதிகள் இருக்கின்றன. இதில் எந்த ஜாதியார் எல்லாரும் ஒரே வேதத்தில் இருக்கிறார்கள்? ஒவ்வொரு ஜாதியிலும் பசாசின் ஆராதனைக்காரர் பல பேர் இருக்கிறார்கள். ஆனால் எமது பரத ஜாதியிலோ வென்றால், எல்லோரும் கத்தோலிக்கர்; எல்லோரும் சத்திய வேதக்காரர்; எல்லோரும் தேவ பிதாவினால் கிடைத்த ஏககுமாரனை விசுவசிக்கிறவர்கள்; எல்லோரும் ஒரு கண்ட சீராய் நமது தாயாகிய உண்மைத் திருமறையை அநுசரித்து நடக்கிறவர்கள். ஆகவே பேய்க்கு ஆராதனை எமது பரத ஜாதியி லிருந்து இல்வலேசமும் கிடைக்க மார்க்கமில்லை. இதுகண்ட காய்மகாரப் பேய்களின் செய்கை யெப்படி யாயிற்றென்றால்: "ஒவ்வொரு ஜாதியிலும் மிதமோ அமிதமோ அவரவர்களுக்கு இயைந்த வண்ணம் நமக்கு வந்தனை வழிபாடு நடந்துகொண்டு வருகிறது. அப்படியிருக்க, இந்த பரத ஜனசமூகத்தில் மாத்திரம் நம்மைப் பின்செல்லுகிறதற்கு ஒரு ஆத்துமா இல்லையே" யென வர்மித்து வன்மைப் பசாசுக்களெல்லாமொன்றாய்ச் சேர்ந்து, எம் ஜாதியார்மேல் தீராக்கோபம் வைக்கலாயிற்று. அந்தத் தீராக்கோபமே எம்மேல் அடுத்துத்தொடுத்த பேராய் முடிந்தது. ஆம், ஆதிகாலத்துப் போர்களில் எதிரிகள் பாணப்பிரயோகம் பண்ணிக் கொண்டனர் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் இந்த வேதாளங்கள் எம்மைப் பாணப்பிரயோகத்தாலல்ல, ஓர்வித பானப்பிரயோகத்தால் மேற்கொள்ள ஆரம்பித்தது. பானப் பிரயோகம் என்றால் மதுபானப் பிரயோகமே யொழிய வேறல்ல. இம்மதுபானத்தைச் சுகத்திற் கென்றும், பலத்திற்கென்றும், சந்தோஷத்திற் கென்றும், சௌரியத்திற் கென்றும் பற்பல வெறுங் கதைகளைச் சொல்லி, அன்றைக் கொருநாள் ஏதேன் தோட்டத்தில் கடவுளால் விலக்கப்பட்ட கனியை முதலில் பலவீனமுள்ள ஏவையிடத்திற் கொடுத்தது போல அறிஞரால் விலக்கப்பட்ட இந்த மதுபானத்தை அறிவீனமுள்ள பேடிகளுக்குக் கொடுத்து, ஏவை மூலமாய் ஆதாமைக் கெடுத்த வண்ணம் பேடிகள் மூலமாய் பெரியோரைக் கெடுக்க முயற்சித்தது. ஓ! தெய்வாதீனத்தால் கிடைத்த மனோமுயற்சியை நேர்வழியில் நடாத்தப் பிரயாசைப்படும் புருஷ இலட்சணமுடையவரின்முன் ஈனப்பேயின் ஏமாற்றமனைத்தும் எம்மட்டு? உடனே பசாசின் தந்திரத்தை அடியோடு சாய்த்து வேரறுக்க, மதுவிலக்கு சபை யென்னும் ஓர் சன்மார்க்க சபை தூத்துக்குடியில் எமது ஞானப் பிதாவாகிய அர்ச். பிரான்சிஸ் சவியேரின் பாதுகாவலில் ஸ்தாபகமானது. ஸ்தாபகமாகவே பேடிகளை யேய்த்த பசாசுக்கும் பெரியோரை யேய்க்கக்கூடாதே போயிற்று. ஐயோ! பசாசு அணில் ஏறவிட்ட நாய்போல் அங்குமிங்கும் மிரளமிரளப் பார்க்கலானது. ஆயினும் சும்மாவிட்டதா அந்தக் கிழட்டுப் பசாசு? குடியைக்கொண்டு கெடுக்க வந்ததுபோய், இப்போது ஓர் கூத்தைக்கொண்டு ஏமாற்ற வந்திருக்கிறது எமது ஜனசமூகத்தை. விலக்குண்ட கனி வேண்டாமென்பது கடவுளுடைய கட்டளை; வேணுமென்பது ஏவையின் விருப்பம். நட்டுவமும் கூத்தும் வேண்டாமென்பது குருக்கள் கட்டளை; வேண்டுமென்பது

இங்கு சில யௌவனருடைய தீர்மானம். ஏவையினுடைய விருப்பமும் இளைஞருடைய தீர்மானமும் பசாசின் சோதனைக்கு இலக்கியம் என்பதை எவர் அறியார்?

ஓ! நாடகத்தில் மேனாடென்றாலும், கீழ்நாடென்றாலும் எந்த இடத்தில் பாவம் விளையவில்லை? நாடகப் பெண்கள் வேசியர் என்று அழைக்கப்பட்டால் நாடக ஆண்களை என்னென்று அழைப்பது? சகோதரர்களே! வேதவொழுக்கங்களுக்கு இடைஞ்சலாயிருக்கும் விபசாரத்திற்கும் குடிக்கும் ஆஸ்பதமாயிருக்கும் நாடகங்கள் நமது ஜனசமூக முன்னேற்றத்திற்கு ஆஸ்பதமாயிருக்குமோ? மேலும், நாலுபேர் வயிறு வளர்ப்பதற்காக எவ்வளவோ கஷ்டப்பட்டு முன்னேற்றத்திற்கு கொண்டுவர நினைத்திருக்கும் நமது ஜன்சமூகத்தையே தீட்டுப்படுத்தப் பார்க்கலாமா? குருக்களே இந்த நாடகம் வேண்டாமென்கிறபோது, குருக்களுக்குப் பக்க பலமாய் நின்று உதவி செய்யவேண்டியவர்களா யிருக்கிற நாம் அந்த நாடகத்தைத் தலை யெடுக்கவிடலாமா? தலை யெடுக்கவிட்ட துண்மையேல், நல்ல காரியத்திற்கு நாலுதடை அதாவது: நமது ஜனசமூக ஈடேற்றமாகிய நல்ல காரியத்திற்கு, முன், மதுப் பழக்கம் ஓர் தடையாயிருந்ததுபோய், இப்போது நட்டுவம் அல்லது கூத்தாட்டம் மற்றொரு தடையாயிருக்க வழிதிறந்தது போலல்லவா? குடிப்பழக்கத்தைத் தொலைக்க வந்தவராகிய நாம் இந்தக் கூத்தாட்டத்தையும் ஒழிக்க முன்வரவேண்டாமோ? வேண்டாமாயின், நல்ல காரியத்திற்கேற்படும் நாலுதடையையும் நாமே நம்மேல் வலிய இழுத்துக்கொள்ளுகிறோமென்பது பொய்யல்ல.

பரதன்.

---

# GENERAL NEWS AND NOTES.

## பொது வர்த்தமானம்.

---

**இரங்கூனுக்கு ஓர் சர்வ கலாசாலை.**- இரங்கூனில் ஒரு சர்வ கலாசாலை ஏற்படுத்துவதற்குத் தீர்மானஞ் செய்து விட்டார்கள். இதற்கான காரியங்களனைத்தையுஞ் சித்தப்படுத்தி கலாசாலை ஆரம்பிப்பதற்கு சிலகாலஞ் செல்லுமென்றாலும் சர்வ கலாசாலை நிச்சயமாய் விட்டது. இது பர்மாவுக்கு ஒரு நல்ல செய்தியே.

**படுத்துறங்கும் பனைமரம்.**—செங்கற்பட்டு ஜில்லாவில், பட்டுரென்னுங் கிராமத்தில், ஒரு பனைமரம் காலையில் கீழே முற்றுஞ் சாய்ந்து படுத்திருந்து, மாலையில் எழுந்து நிற்கிறதாம். இது என்ன விந்தையோ?

**இராஜப்பிளவை கமிட்டி.**—“கார்பங்கிள்” என்னும் இராஜப்பிளவையால் அதிக உயிர்ச்சேத மாகிறதைப்பற்றி அந்நோயை பற்றறப் போக்கும் வழியுள்ளதோ வென்பதை சோதித்தாராயும் பொருட்டு பிரிட்டிஷ் கவர்ண்மென்டார் ஒரு கமிட்டி யேற்படுத்தி யிருக்கிறார்கள்.

**பிரமசாரிகளுக்கு வரி:**—பரீஸ் நகரத்தில் வரவர ஜனத்தொகை குறைந்து வருகிறதென்றும், பிறப்பைவிட இறப்பு அதிகரிக்கிற தென்றும், இதற்குக் காரணம் கலியாணமில்லாத ஆண்பிள்ளைகளின் தொகைப் பெருக்கமே யென்றுங் கண்டு, தக்க வயதில் கலியாணஞ் செய்து கொள்ளாமல் காலத்தை யோட்டுகிற பிரமசாரிகள் தங்கள் வரும்படியில் 100-க்கு 20 விழுக்காடு குடியரசுக்கு வரி செலுத்தவேண்டுமென்று சட்டம் ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

**பாம்புகடிக்கு மருந்து:**—எவ்வித பாம்பு கடித்தாலும், வாழைத்தண்டு சாற்றைக் கடியுண்டவனுக்குக் குடிக்கக் கொடுத்தால் விஷம் விரைவாக இறங்கிவிடுமாம். இந்த மருந்தை எவ்வளவு, எத்தனை வேளைக்கு, எத்தனை நாளைக்குக் கொடுப்ப தென்பது சொல்லப்படவில்லை. ஆயினும் பாம்பால் கடிபட்டவர்களின் வயது, தேகக்கட்டு முதலியவைகளைக் கவனித்து யுக்தப்படி ஷை சாற்றைக் கொடுத்து பரீட்சை பார்க்கலாம்.

**முதல் மலையாளக் கத்தோலிக் எம்.ஏ.**—இவ்வருஷம் சென்னை சர்வ கலாசாலையின் எம். ஏ. பரிட்சையில் தேறின மிஸ்டர் ஜோசெப்பு பஞ்சிகரம், என்பவர் குருப்பட்டத்துக்குப் படிக்க, கண்டிக் குருமடத்துக் கேகினராம். மலையாளச் சீரிய கிறிஸ்துவர்களுக்குள் எம்மே பட்டம் பெற்றவர் இவர் ஒருவரேயாகும். இவர்களுக்குள்ளே பீயே பட்டம் பெற்ற இன்னொருவர் கண்டிக் குருமடத்தில் படிக்கிறாராம். இவ்விருவர்களாலும் இவர்கள் ஊரில் ஞான நன்மைகள் ஏராளமாய் விளையுமெனக் கோருகிறோம்.



**இன்னொரு மனந்திரும்புதல்:**—ஆக்ஸ்போர்டு காலேஜில் படித்து எம்மே பட்டம் பெற்றவரும், லண்டன் புரொட்டெஸ்டாண்டு பிஷப்பால் பாதிரி பட்ட மடைந்தவரும், இங்கிலாந்தில் பல பிரசித்த புரொடெஸ்டாண்டு கோவில்களில் குருவாயிருந்தவருமாகிய ரெவெரென்ட் ரெஜினால்டு எப். எக்ரீன்ஸ் எம். ஏ. என்பவர் சென்ற மீ முதலில் சத்திய கத்தோலிக்குத் திருச்சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இவர் சத்திய வேத குருப்பட்டத்துக்காக படிப்பதற்கு ரோமாபுரிக்குப் போகப்போகிறார்.

**ஓர் கத்தோலிக்கரின் நன்கொடை:**—வட இந்தியாவிலுள்ள மஸ்ஸூரி என்னுமூரில், சமீபத்தில் காலஞ்சென்ற மிஸ்டர் டேவிட் எமிலி என்பவர் தாம் ஹொட்டல் வைத்திருந்த “உட்வில் ஹொட்டல்” என்ற பெரிய பங்களாவை, ஏழை விதவைகள் முதலிய அநாதப் பெண்பிள்ளைகளின் ஆதுலா சாலையாகவும், லான்டோர் என்னுமிடத்திலுள்ள வேறொரு கட்டிடத்தை தர்ம ஆஸ்பத்திரியாகவும் ஏற்படுத்தவும், அர்ச். பிதேலியார் அநாதப் பிள்ளைகள் சாலைக்கும், வின்பர்க் அநாதப் பிள்ளைகள் சாலைக்கும் ஒவ்வொன்றுக்கும் ரூ. 5000 கொடுக்கவும் மரணசாதனத்தில் எழுதி வைத்தாராம். நமது தென்னிந்தியாவில் ஆதுலர் சாலை யேற்படுத்த யாரையுங் காணோமே! சென்னப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு ஒரு சத்திரங் கட்டிவைக்க எவரையுங் காணோமே!

**ஓர் பாதிரியின் நற்சாட்சி:**—வட அமெரிக்காவிலுள்ள சிக்காகோ நகரில் மெதடிஸ்ட் பாதிரி யொருவர், கத்தோலிக்குத் திருச்சபை, கிறிஸ்துவ கல்வி விஷயமாயும், நல்லொழுக்க விஷயமாயும், பரோபகார கைங்கரியங்கள் விஷயமாயும், நாஸ்திகம் அராஜகங்களுக்கு விரோத மாயும் அவ்வூரில் செய்துவரும் நல்ல வேலையைப்பற்றிப் புகழ்ந்து பேசியபின் “இவ்விதமாய் உழைக்கும் உரோமான் கத்தோலிக்குக் குருக்கள் இவ்வூரிலிருப்பதால் நான் ஒவ்வொரு நாளும் அதிக தைரியங்கொண்டு சமாதானத்துடன் நித்திரை செய்யப்போகிறேன்” என்றுமுடித்தார்.

**பிரிவினைக்காரர் மனந்திரும்புதல்:** —ஜாக்கோபைட் என்னும் பிரிவினை மதத்தைச் சேர்ந்த பிதாப்பிதா வென்னப்பட்ட அம்து மிசிஹா வென்பவர் மலையாளத்தில் தமது வேதத்தின் பெரிய குருவாயிருந்து ஜெருசலேமுக்குத் திரும்பிப் போனபோது, அங்கே மனந்திரும்பி சத்ய கத்தோலிக்கு வேதத்தில் சேர்ந்தார். இவருடன் அப்பிரிவினை மதத்தைச் சார்ந்த வேறு ஆறு பெரிய குருக்களும் ஞானஸ்நானம் பெற்றார்கள். இப்போது விசேஷமாய் பிரிவினை மதக் குருக்கள் கன்னியர்களே சத்தியத்தைக் கண்டுணர்ந்து சத்திய திருச்சபையில் சேர்கிறார்கள். இதனால் பிரிவினை மதங்களின் சத்துவங் குன்றிப் போகிறதென்றாலும் மற்றொரு பக்கத்தில் நாஸ்திகம் நாளுக்கு நாள் பெருத்து பலத்து வருகிறது. பிரான்சிலும், போர்த்துகல்லிலும், ஸ்பெயினிலும் உண்டான வேதகலகங்களுக்கு நாஸ்திகமே காரணம். ஆதலினால் நாஸ்திகம் ஒழிய நாம் அதிகமதிகமாய் சர்வேசுரனை மன்றாடுவோமாக.

**தெய்வ நற்கருணைப் பத்தி :**—சென்ற மே மாதக்கடைசியில், பரிசுத்த திவ்ய நற்கருணைச் சங்கக் கூட்டங்கள் ஒன்றில் இரண்டாயிரஞ் ஜனங்களுக்கு முன்னிலையில், மகா மேன்மை தங்கிய கர்தினால் போர்ண் அவர்கள் பிரசங்கஞ் செய்தபோது, திவ்ய சற்பிரசாதமே புரொடெஸ்டான்டு இங்கிலாந்தை கத்தோலிக்குச் சத்ய வேதத்திற்குத் திருப்பும் ஆற்றலுள்ளது என்றும், திவ்விய நற்கருணைப் பத்தியானது ஜனங்களை மனந்திருப்பி 350 வருஷங்களுக்கு முன்னே அவர்களுக்குச் செய்யப்பட்ட தீங்குகளனைத்தையும் பரிகரிக்கவல்லது என்றும், சற்பிரசாதத்தில் தேவன் பிரசன்னமாயிருக்கிறாரென்ற விசுவாசம் எப்போது கெட்டதோ, அப்போதே ஆதி அஞ்ஞானம் மீண்டும் வந்து சேர்ந்து விட்டதென்றும, அந்த அஞ்ஞானந் தங்களையும் பற்றிக்கொள்ளாதபடி கத்தோலிக்கர் சர்வ ஜாக்கிரதையாயிருக்க வேண்டுமென்றும், இதற்குக் கத்தோலிக்கர் திவ்ய நற்கருணைப் பத்தியை தங்கள் இருதயங்களில் குறைய வொட்டாது பத்திரமாய் காப்பாற்றிக் கொண்டு வரவேண்டுமென்றுஞ் சொன்னாராம். சத்திய கத்தோலிக்கு வேதத்திற்கே உயிராயுள்ளது சற்பிரசாத பத்தி. இதை உண்மைக் கிறிஸ்துவர்கள் பயிற்சி செய்ய முயற்சி செய்தல் வேண்டும்.

**"சோம்பேறிக் கணவன் சட்டம்".**—பெண்சாதி பிள்ளைகளை சம்ரட்சிப்பதற்கு வேண்டிய பணத்தைச் சம்பாதிக்க வகை தெரியாமலோ, அல்லது சோம்பேறித்தனத்தாலோ அவர்களைக் கஞ்சிக்குக் காற்றாய்ப் பறக்க விட்டுவிட்டு, தேசாந்திரம் போய்விடும் திருட்டுப் பயல்களை ஞாயஸ்தலத்துக்குக் கொண்டு வந்து, அவர்கள்மேல் குற்றம் ஏற்படும் பட்சத்தில் அவர்களைக் கைதி செய்து, இத்தகைய திருடருக்கென்று பிரத்தியேகமாய் ஏற்படுத்தப்பட்ட காடுகளில் ஒருநாள் முழுதும் கட்டை வெட்டச்சொல்லி, அதற்குண்டாகிய கூலியை அவர்களுடைய பெண்சாதி பிள்ளைகளுக்குக் கொடுத்துவிட்டு, அவர்களுக்கு சாதாரண கைதிகளுக்குக் கொடுக்கப்படுவனபோல, இராஜாங்கத்தார் செலவில் உண்ண கூழுங் களியும், கட்டிக்கொள்ள முழுந் துணியும் கொடுக்கும்படி அமெரிக்க ஐக்கிய மாகாணத்தில் ஒரு சட்டம் ஏற்படுத்தி அமுலுக்குக் கொண்டுவந் திருக்கிறார்கள். இது வெகு திவ்யமான சட்டம். இவ்வாறான சட்டம் இந் நாட்டிலும் ஏற்படுத்திவிட்டால், எத்தனையோ ஸ்திரீகளும் பிள்ளைகளும் பசியுந் துன்பமு நீங்கி சுகமடைவார்கள்!

**ஒருவனின் மரண சாதனம்:**—சிக்காகோ நகரில் தரித்திர தசையில் சீவித்த தாமஸ் கானலி என்ற ஒருவன் தான் மரணப்படுக்கையி லிருக்கும்பொழுது, பின்வருமாறு மரணசாதனம் தன்னுடைய பங்கு சுவாமியாருக்கு எழுதி வைத்தான்: "எனக்கு வயது 82. நான் சர்வேசுரனுடன் சமாதான மாகவேண்டும். 20௵த்துக்கு முன்னே, 500 ரூபாய்பெறுமான நகைகளை ஒரு சீமாட்டி யிடமிருந்து திருடிக்கொண்டேன். அந்த அம்மாளைக்கண்டு பிடித்து அவள் நஷ்டத்தை நான் பரிகரிக்க வேண்டும். அவளிடமிருந்து வேறு 30 ரூபாயையும், ஒரு அழகிய செப புஸ்தகத்தையுந் திருடிக்கொண்டேன். ஷை நகைகளை விற்று சில்லரைச்சரக்கு வியாயாரஞ்செய்து கொஞ்சம் பணம் சம்பாதித்திருக்கிறேன். அந்தம்மாளுடைய பணத்தைத் திரும்பக் கொடுக்கவேண்டும். ஷை செப புஸ்தகம் என்னிடமிருக்கிறது. அது தங்கத்தால் கட்டியிருக்கிறது. அப் புஸ்தகத்தினுள் அவள் பேரும் இருக்கிறது. சங்கைக்குரிய பிதாவே, என்மீது இரக்கம் வைத்து அந்த சீமாட்டியைக் கண்டுபிடித்துக் கடனைச் செலுத்திவிடுங்கள். பாவங்களால் நான் மிகவும் துன்பப்பட்டேன். என்னுடைய உட்சட்டைக்குள் இந்த அம்மாளுக்காக 3000 ரூபாய் வைத்துத் தைத்து வைத்திருக்கிறேன். இவளுடைய பணத்தைக் கொண்டே இந்தப்பணத்தை யெல்லாம் சம்பாதித்தேன். நான் வேறு மனிதரிடத்தில் அநியாயமாய் அபகரித்த பணத்துக்கெல்லாம் பரிகாரம் பண்ணியாயிற்று. இந்தம்மாளுடைய பணத்தை தயை செய்து எப்படியாவது செலுத்திவிடுங்கள்." என்பதே. இவனுடைய கருத்துப்படியே சுவாமியாரும் அந்த சீமாட்டியைக் கண்டுபிடித்துக் கடனைச்செலுத்தி விட்டார். இதுவே சரியான மனந்திரும்புதல். அநேகர் ஊரில் அநியாயமாய் பணத்தை அபகரித்து, பிள்ளைகளுக்கு ஆஸ்தியாக வைத்துவிட்டுச் சாகிறார்கள். இவர்களுடைய கதி என்ன! அரைக்காசுக்கு முதலாய் உத்தரித்துத் தீரவேண்டும். இல்லாவிடில் சர்வேசுரனுடைய நீதி சும்மா விடாது.

---

## NEWS OF THE MONTH.
## மாசவர்த்தமானம்.

---

**ஸ்திரீ சுதந்தரவாதிகள்.**—இங்கிலாந்தில் ஸ்திரீ சுதந்தரவாதிகளுக்குத் தலைமையான மிஸ் பாங்கெர்ஸ்ட் என்னும் மாதை மறுபடியும் யாதோர் குற்றத்திற்காகப் பிடிக்க அவள் வீட்டை வளைத்துக்கொண்டு வாசற்படியண்டை போலீசார் காத்துக்கொண்டிருக்கையில், ஓர் மாது மிஸ். பாங்கெர்ஸ்ட் உடுத்தும் உடைபோல் உடுத்துக்கொண்டு, ஓர் போர்வை போற்றிக்கொண்டு போலிசாருக்குத் தப்பியோடும் பாவனைகாட்டி வெளியேயோட, வாயலிலிருந்த சேவகர்கள் இவள்தான் மிஸ் பாங்கெர்ஸ்ட் என்று அவளைப் பின்தொடர்ந்து ஓடிப்பிடித்துக்கொண்டு, ஜெயங் கொண்டோமென ஆர்ப்பரித்துக்கொண்டு எல்லோரும் ஓடிப்போனார்கள். பிறகு வீட்டினுள்ளே ஒளிந்துகொண்டிருந்த மிஸ் பாங்கெர்ஸ்ட் யாதொரு தட்டுத் தடங்கலின்றி சாவதானமாய் வெளியே வந்து வேறொரு மறைவிடத்தைத் தேடிக்கொண்டாள். பெண்கள் சாமர்த்தியமே சாமர்த்தியம்!



**மதுரைப்பிள்ளை மரணமடைந்தார்.**—இரங்கூனில் பிரபல வியாபாரியும், இரங்கூன் முனிசிபல் கமிஷனரும், பெரிய பிரபுவும், கவிஞர்களின் சன்மானிய மாகிய ராய்பக்தூர் பெ. மா. மதுரைப்பிள்ளை அவர்கள், சென்ற மாதம் 16-ந்தேதி காலஞ்சென்றாரெனக் கேள்வி யுற்று விசனிக்கிறோம். இவரை இத் தென்னிந்தியாவில் அறியாதார் சிலரே இருக்கலாம். அவர் மீது கவிபாடி பரிசுபெற்ற பாவாணர் பலர்.

**மிஸ்டர் ஜோசேப் கோஸ்த.**—மணப்பாட்டுப் பரதர் குல திலகராகிய ஸ்ரீமான் (கண்ணாடி கோஸ்த. என்னப்படும்) ஜோசெப் கோஸ்த அவர்களின் எதிர்பாராத மரணத்தைக் கேள்விப்பட்டு வெகுவாய் துக்கிக்கலாயினோம். இவர் ஓர் நல்ல கத்தோலிக்குக்கிறிஸ்துவர்; பிரபலவர்த்தகர்; வலது கை செய்வதை யிடதுகை யறியாத வகையாய் வழங்கும் வள்ளல்; கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தின் நான்கு பரிபாலகரி லொருவர்; சற்குணசாது. பரிகரிக்கக்கூடாத இவரது மரணத்தைப் பற்றி இவருடைய குடும்பத்துக்கு எமது உள்ளப் பூர்வமாய் அநுதாபஞ் செலுத்துகின்றோம். இவருடைய ஆத்துமம் நித்திய இளைப்பாற்றியை அடையக்கடவது.

**மேற்றிராணியார்மேல் வழக்கு.**--இரங்கூன் மேற்றிராணியாராகிய சரியாய் வந்திக்கத்தக்க கார்டோட் ஆண்டவர்மீதும், சங். ஷாவே சுவாமியார்மீதும், கத்தோலிக்கு பாரிஸ்டர், மிஸ்டர் ஜெ. எம். சவியேரால் கொண்டுவரப் பட்ட மானநஷ்டப் பிரியாதுகள் சென்ற மீ 18-ந்தேதி, இரங்கூன் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் அவர்களால் தள்ளிவிடப்பட்டன. மேற்றிராணியாருடைய அநுமதி யின்றி குருவானவரைக் கோர்ட்டுக்கு இழுத்ததற்காக ஷை பாரிஸ்டரை திருச்சபைக்குப் புறம்பாக்கினதாக கோவில்ஜனங்களுக்கு அறிவித்ததினால் தனக்கு மானநஷ்ட முண்டாயிற்றென்பது பாரிஸ்டரின் வாதம். ஷை நியாயாதிபதி தீர்ப்புகொடுக்கும்போது, பாரிஸ்டர் தன் சொந்த வேத குருக்கள்மட்டில் காண்பித்த விகற்பமான நடத்தையாலும், எழுதின மதவிரோதமான கடிதங்களாலும் தானே, தன்மேல் திருச்சபை விலக்கத்தை வருவித்துக் கொண்டன ரென்றும், அது இந்தியன் பீனல் கோர்டு, 599 செக்ஷனின் 9-வது விலக்குப்படி குற்றமாகாதென்றுஞ் சொன்னார். குரு தூஷணம குடும்பத்தை யழிக்குமென்று கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களறியவேண்டும்.

**காலஞ்சென்ற சங். துரைசாமிநாதர்.**--சென்னை அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த சங். இராஜரிஷி T. துரைசாமிநாதர் தளர்ந்த வயதினால் சில மாதங்களாய் அசௌக்கிய முற்றிருந்து, சென்ற மீ 13-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை தேக வியோகமாயினார். அவர் சடலம் அன்று மாலை அர்ச். ஆரோக்கியநாதர் கல்லறையில் நல்லடக்கஞ் செய்யப்பட்டது. இவர் அடக்கத்துக்கு மகா கனந் தங்கிய சென்னை யதிமேற்றிராணி யாண்டவரும், பதினைந்து குருக்களும், ஏராளமான கிறிஸ்துவர்களும் வந்திருந்தார்கள். இவர், சதுர் அமீன் என்னும் நியாயாதி பதித்வம் வகித்து மிகப் புகழ்பெற்று வாழ்ந்த ஸ்ரீமான் அழகியம் பிள்ளையின் குமாரர்; 1866௵ குருப்பட்டம் பெற்று கடந்த 47 வருஷங்களாய் சென்னை யதிமேற்றிராசனத்தின் பல விசாரணைகளில் நல்லவேலை செய்து தமது 72-ம் வயதில் மரித்தார். இவருக்கு எம்பிரான் நித்திய இளைப்பாற்றியைக் கட்டளையிடுவாராக.

**கத்தோலிக்கருக்கு ஒரு போது வீடு:**—இங்கிலாந்து, ஸ்காட்லாந்து அயர்லாந்து ஆகிய இந்த பிரிட்டிஷ் தீவுகளி லெல்லாம் கத்தோலிக்கருக்கு ஒரு பெரிய பொது விடுதி ஏற்படுத்துவதற்காக, லண்டன் மா நகரத்தில், பிளீட்டு வீதியில், "சாலிஸ்பரி ஹொட்டல்" என்னும் விஸ்தீரணமான கட்டிடத்தை அதிலிருந்த சமஸ்த ஓட்டல் சாமான்களுடன் வாங்கிவிட்டார்கள். இந்தக் கட்டிடம், கத்தோலிக்குச் சங்கங்கள், மகா ஜனக்கூட்டங் கூடுவதற்கும், மற்ற காரியாதிகளை நடத்துவதற்கும் முக்கிய சாலையாகவும், லூர்து நகரத்துக்கும், உரோமை நகரத்துக்கும் திருயாத்திரை போகிறவர்கள் ஒன்றாய்க் கூடும் மத்தியஸ்தானமாகவும், மற்றபடி பொதுவாய் வழிப்பிரயாணிகள், அயலூரார் ஆகிய கத்தோலிக்கர் தங்கும் சத்திரமாகவும் உதவுவதற்காகக் கருதப்படுகிறது. இம்மாதிரியே ஒரு பொதுக்கட்டிடம் சென்னையில் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்பது பொது நலப்பிரியர்களுடைய கோரிக்கை. இதைச் செய்துமுடிக்க முன் வருபவரைக் காணோம்.

**அர்ச். பாப்பானவர்.**—நமது அன்பிற்குரிய பரிசுத்த பிதாவுக்கு நேர்ந்த வியாதியினின்று காப்பாற்றி இரட்சித்ததற்காக திரியேக சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திர ஆராதனைகள் ரோமாபுரியில் வெகு ஆடம்பரமாக நடத்தப்பட்டன வென்று சமாசார மெட்டுகிறது. நன்றியறிந்த நவநாள் முடிவு கொண்டாட்டத் தினமன்று அங்குள்ள அர்ச். இராயப்பர் கோவிலும். அதை யடுத்த சிறு கோவில்கள், மடங்கள் பள்ளிக்கூடங்கள் முதலானவைகளும் நேர்த்தியாய் அலங்கரிக்கப்பட்டு, தீப கோடிகளால் பிரகாசித்தன. இந்த அலங்காரஞ் செய்வதற்கு நூற்றுத்தொண்ணூறு வேலையாட்கள் அமர்த்தப்பட்டன ரென்றால் அதன் பெருமையை ஒருவாறு யூகித்துக் கொள்ளலாம். உரோமையின் எல்லா பக்கங்களிலும் அதன் சுற்றுப் புறங்களிலுமிருந்து உள்ளூராறும் வெளியூராருமாக ஆயிரக் கணக்கான ஜனங்கள் ஷை கொண்டாட்டத்திற்கு வந்திருந்தார்கள். "தேதேயும்" ஆராதனைக்கு கூட இருந்து துதி செலுத்தினவர்கள் மாத்திரம் ஐம்பதினாயிரம் பேர்களுக்கு அதிகமென்று கணக்கிடப்படுகிறது. சர்வேசுரனுக்குச் சதாகாலமுந் தோத்திர முண்டாகக்கடவது.

**கிராம பஞ்சாயத்துக்கள்:**—ஒவ்வொரு கிராமத்திலும் பஞ்சாயத்துக்களை யேற்படுத்தி, கிராமவாசிகளுக்குள் நேரிடும் விவாதங்கள், சண்டை சச்சரவுகள், வியாஜ்ஜியம் வழக்குகள் முதலியவற்றை அந்த பஞ்சாயத்தார்களே தீர்மானம்செய்தல் வேண்டுமென்று பம்பாய் கவர்னர் ஓர் சட்டம் ஏற்படுத்தத் தீர்மானித்திருக்கிறார். இது சனங்களுக்கு மெத்த அநுகூலமானது. இதனால் வியாஜ்ஜிய வழக்குகளை ஜனங்கள் கோர்ட்டுகளில் தாக்கல் செய்துவிட்டு, வக்கீல்களுக்கும் லாயர்களுக்கும் பணத்தை வாரிக் கொடுத்து பரம ஏழைகளாகாதபடி, சுலபத்திலும், சீக்கிரத்திலும் ஞாயம் பெறலாம். இம்மாதிரி யாகவே செங்கல்பட்டு ஜில்லா ஸ்ரீ பெரும்புத்தூரைச் சார்ந்த பண்ணூர் என்னுங் குக்கிராமத்தில் (இது ஏறக்குறைய முழுதுங் கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களால் குடி யேறப்பட்டது) பஞ்சாயத்து மூலமாய் வழக்குகளைத் தீர்ப்பு செய்யஏற்பாடு செய்யப்பட்டு அதன்படி நடந்தேறி வருகிறதென்றும், அந்தப் பஞ்சாயத்துக்குத் தலைமை அவ்வூர் பங்கு சுவாமியாராகிய தோமாஸ்நாதரென்றுங் கேள்வியுற்று சந்தோஷமானோம். இவ்வாறே அதை யடுத்துள்ள, மொளசூர், கீழ்ச்சேரி, வளர்புரம், செல்லம்பட்டடை முதலிய கிறிஸ்துவ கிராமங்களிலும் இன்னும் வேறு இடங்களிலுள்ள கிறிஸ்துவ கிராமங்களிலும் விசாரணைக் குருக்களைத் தலைமையாகக் கொண்ட பஞ்சாயத்துக்கள் ஏன் ஏற்படக்கூடாது? இதைக் கூட்டுறவு சங்கத்தவர்களும், மற்ற பொதுநலப்பிரியர்களும் கவனிப்பார்களாக.

## நல்லாயன் ஆபீசு அச்சியந்திரத்துக்காக நன்கொடை.

நாம் சென்ற ஜூன்மீ சஞ்சிகையினுள் அடக்கஞ் செய் தனுப்பிவைத்த அப்பீல் மனுவை அநேக நண்பர்கள் கவனித்தார்களில்லை போலும். ஏனெனில், மிகவுங் கொஞ்சம்பேரே அதற்கு விடையனுப்பி யிருக்கிறார்கள். மற்ற நண்பர்களுந் தங்கள் தங்களாலியன்ற மட்டுந் தருமஞ் செய்து எம்மைக் கடனென்னும் நிர்பாக்கியத்தினின்று காப்பாற்றி இரட்சிப்பா ரெனக் கோருகிறோம். பலதுளி பெருவெள்ள மென்பதைச் சிந்தித்து, ஒருவரும் இல்லை யென்னாமல் ஒவ்வொருவரும் சொற்ப தொகையாவது கொடுத் துதவுவார்களாக! இதற்காக இம்மாதத்தில் வரப்பெற்ற தொகை பின் வருமாறு. இந்த நன்கொடையாளர்களுக்கு எமது நன்றியறிந்த வந்தனம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஏற்கெனவே வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை. | 46 | 3 |
| ராய் சாஹேப் காரசால அருளய்ய நாயுடுகாரு (கீழ்ச்சேரி) | 10 | 0 |
| Mr. S. A. ஜெயசீலராய முதலியார். | 1 | 0 |
| ,, M. அருளானந்தம் (சிங்கப்பூர்) | 1 | 0 |
| ,, அநாமதேயம். | 1 | 0 |
| ,, S. V. ஆரோக்கியசாமி பிள்ளை. | 1 | 0 |
| ,, K. P. John, Ranikhet | 1 | 0 |
| ,, The Rev. Fr. Gnanadikkam, | 12 | 0 |
| Mr. A. முத்துக்குட்டி முதலியார்; | 1 | 0 |
| Mrs. அபிஷேகம்மாள்; | 1 | 0 |
| Mr. T. அந்தோனி. (உதகமண்டலம்) | 1 | 0 |
| ,, A. சுவாமிக்கண்ணுப் பிள்ளை; | 5 | 0 |
| Total Rs. | 71 | 3 |



## மரியாயின் சங்கம்.

நாம் இந்த அரும் பெருஞ் சங்கத்தைக் கூட்டும் விஷயத்தில் நமது சந்தாதாரர்கள் அக்கறை கொள்ளும்படி மனுவு செய்தோம். அதை யாருங் கவனித்தாரில்லை. 1800 பேரில் ஒருவரே ஒருவர் சிறு தொகை யனுப்பி ஷை நற்காரியத்தைை ஆமோதித்து உற்சாக வார்த்தை உரைத்துள்ளார். நல்ல காரியம்; நமதுதேவதாயாருக்கு அதிக தோத்திரமகிமை வருத்துவிக்குங் காரியம். இதைக் கைசோரவிடலாமா? மரியாயின் பிள்ளைகள் சபையாருக்குத்தான் இம்முயற்சி முக்கியமென்று எண்ணுவது பிசகு. சரியாய்ச் சொல்லுமிடத்து நாம் எல்லோரும் மரியாயின் பிள்ளைகளே. நமதாண்டவர் சிலுவைமீ திருக்கையில் அர்ச். அருளப்பரை தம் மாதாவுக்குப் பிள்ளையாக ஒப்பித்தது நாமெல்லோரையும் அவளுக்குப் பிள்ளைகளாக ஒப்புவித்ததுபோலல்லவா? ஆகவே, மரியாயின் மக்களாகிய நா மெல்லோரும், நல்லாயன் சந்தாதாரர் ஒவ்வொருவரும் இந்த அதி முக்கியமான காரியம் ஈடேறும் வண்ணம் அக்கறை கொள்ளுவோமாக. கூடுமானவரையில் திரவிய சகாயத்தாலும், சரீரப் பிரயாசையாலும், இந்த மகத்தான மரியாயின் சங்கம் இனிது முடியுமாறு மற்றவர்களோடு சேர்ந்து உழைப்போமாக. பின் கண்டுள்ள 9 மேற்றிராணிமார்கள் இந்த சங்கத்தை அங்கீகரித்து ஆதரவு செய்திருக்கிறார்கள்:—சென்னை யதிமேற்றிராணியார், மயிலை மேற்றிராணியார், திருச்சினாப்பள்ளி மேற்றிராணியார், திருச்சி உதவி மேற்றிராணியார், டாக்கா, மங்களூர், ஐதராபாக்கம், கும்பகோணம், யாழ்ப்பாணம் ஆக இந்த ஊர் மேற்றிராணிமார்கள்.

மரியாயின் சங்கத்தின் செலவுக்காகவந்த வரவு.—

Mr. P. A. துரைசாமி, நந்திதுருக்கம் 1 0 0


## SPECIAL NOTICE
### to the Subscribers of
## *THE "GOOD PASTOR"*

The Manager of "Good Pastor" Press begs to inform the Public in general and the Subscribers of the "Good Pastor" in particular that with the aid of a large Printing Machine, and a variety of useful types, fancy borders and other printing requisites recently acquired, he is prepared to undertake all kinds of Printing work both in English and Tamil: Book work, and Job work such as *Wedding Cards, Visiting Cards, Addresses, Circulars, Letter and Note Heads, Bill Books, Receipt Books, Business Notices, Catalogues, Calendars,* etc. etc.

Neat and prompt execution is guaranteed.

Charges very moderate.

*Mufassal Orders will receive Special attention.*

**A TRIAL IS SOLICITED**

## "நல்ல ஆயன்" சந்தாதாரர்களுக்கு விசேஷ விஞ்ஞாபனம்.

இப்போது நமது "நல்ல ஆயன்" அச்சுக் கூடத்துக்குச் சேகரஞ் செய்துள்ள பெரிய அச்சியந்திரத்தினுடையவும், நானாவிதமான நல்ல புது அச்செழுத்துக்கள், அலங்காரமான பார்டர்கள் முதலிய இதர சாமான்களுடையவும் உதவியைக்கொண்டு இங்கிலீஷிலும் தமிழிலும் புஸ்தகங்கள், விளம்பரங்கள், சமாசாரப் பத்திரிகைகள் வந்தனோபசாரப் பத்திரங்கள், கலியாண நோட்டீசுகள், பில் புக்குகள், ரசீது புத்தகங்கள், வியாபார நோட்டீசுகள், விசிட்டிங் கார்டுகள், வெடிங் கார்டுகள், காலண்டர்கள் முதலிய சகல அச்சுவேலைகளும் அவரவருடைய விருப்பப்படி வேலைத்தரமாய் செய்து கொடுக்கப்படும்.

வேலை நேர்த்தியாயும் சீக்கிரமாயும் முடித்துக் கொடுப்பதற்கு உத்தரவாதம்.

மிகவும் மிதமான கூலி வாங்கப்படும்.

வெளியூர் ஆர்டர்களுக்கு விசேஷ கவனஞ் செலுத்தப்படும்.

பரீட்சார்த்தமாய் ஒரு வேலையாவது கொடுக்கும்படி கோரப்படுகிறது.

மானேஜர்.

# DOMESTIC OCCURRENCES.
## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 8-அணு முன்பணம் அனுப்பினுலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட மாட்டா வென்பதை நண்பர்கள் கவனிக்கக் கோருகிறேம். அரைக் கலத்துக்கு மேற்பட்டு முக்கால் கலத்துக்கு உட்பட்டால் முக்கால் ரூபாயாகும். முழுக்கலத்துக்கு ஒரு ரூபாயாகும். கால் ரூபாய்க்கு இவ்விளம்பரங்கள் ஒருபோதும் பிரசுரிக்கப்பட மாட்டா.

### ஜனன அறிக்கை.

I

வேம்பார்.

எனது ஞானத்தந்தை ம-ா-ா-ஸ்ரீ சூ.ச.கி. பெருணந்து அவர்களின் புத்திரியும், ம-ா-ா-ஸ்ரீ அத்தான் சவேரியா பிச்சை பர்ணந்து அவர்களின் மனைவியுமாகிய பிரிய தங்கை பனிமயம்மாள், சென்றமீ 10உ செவ்வாய்க் கிழமை காலை 9-மணிச் சுமாருக்கு, அர்ச். பனிமயத்தாயின் பாதுகாப்பில் ஓர் பெண்மகவைப் பெற்றனள். தாயும் சேயும் சுகம்.

ம-ா-ா-ஸ்ரீ ஜோன் அந்தோனி பர்ணந்து அவர்களையும், அவர்களின் மனைவி பார்பரம்மாள் கருவாலியோ அவர்களையும் ஞானத்தாய், தந்தையர்களாகக் கொண்டு சங்கைக்குரிய கனம் சுவாமிநாதர் சுவாமி அவர்களால் அக்குழந்தைக்கு மரிய சூசை அந்தோனி அம்மாள் பருணந்து என்னும் நாமகரணத்துடன் ஞானதீட்சை கொடுக்கப்பட்டது.

இப்படிக்கு,
V. M. P. Cruze.

II

தூத்துக்குடி.

எனது தமக்கையாரும், எனது அத்தான் ம-ா-ா-ஸ்ரீ பெர்டின் றிச்சர்ட் பொன்னுத்தம்பி பிம்மேந்த அவர்களின் மனைவியுமாகிய மரிய ஜோசப்பின் மாதரசியம்மாள் பெர்ணந்து 1913ம் வருஷம் ஜூன்மீ 23ம் தேதி இரவு $10\frac{1}{2}$ மணிக்கு தேவானுக்கிரகத்தாலும், எமது ஏக அடைக்கலமும் பாது காவலுமாகிய திவ்விய சந்தமரியதஸ் நேவிஸ் தாயாரின் வேண்டுதலாலும் முதற்பேறாக ஓர் பெண்மகவை யீன்றனள். தேவரீர் எனது தகப்பனர் அவர்களையும், மாமியார் மரிய இசபேல் பருணந்தா ளவர்களையும் ஞானத்தாய் தந்தையர்களாகக் கொண்டு ஜூலை மாதம் 1உ சங். டெல்பர் (Delfer) சுவாமியாரவர்களால் அக்குழந்தைக்கு ஞானத்தீட்சை கொடுக்கப்பட்டு, மரிய அந்தோனி ஜெர்த்துரூத் இசபேல் அம்மாள் என நாமகரணஞ் சூட்டப்பட்டது. தாயும் பிள்ளையுஞ் சுகம்.

உருணுக்கல். 10-7-13. } இப்படிக்கு,
மீக்கேல் பேர்ணந்து,

### நன்மரண அறிக்கை.

தூத்துக்குடி.

திருமந்திரநகர் முனிசிப்பல் பெரோரா ஆஸ்பத்திரியில் மரணமாகும் ஏழைக் கிறிஸ்துவர்களின் நல்லடக்கத்திற்காக நெடுங்காலமாக பொருள் உதவி செய்துவந்தவரும்,ஜீவகாருண்யமுள்ளவரும், பரோபகாரியு மாகிய மகா-ா-ாஸ்ரீ ஜோசேப்பு மரிய மிசியேர் அவர்கள் நடப்பு வியாதியினுல் நாளது வருடம் ஜூலைமீ 15-ந் தேதி சாயரட்சை சுமார் 4-மணிக்கு தேவதிரவிய அநுமானங்க ளெல்லாம் நிறைவேறப்பெற்று "சேசுமரியே சூசை" யென்னுந் திருநாமங்களை அநேகந்தர முச்சரித்து அமரிக்கையுடன் நன்மரணமானுர். இவரது சடலம் மறுநாள் சாயரட்சை திரு இருதயக் கோவிலில் வைத்து மூன்று சுவாமிமார்களால் மந்திரிக்கப்பட்டு, அர்ச். சூசையப்பர் பேரால் நியமிக்கப்பட்ட மையவாடியில் நல்லடக்கஞ் செய்யப்பட்டது. இவ்வைதக் கண்ணுறும் நேயர்கள்;

"சிநேகிதர்களே! நீங்களாவது என்பேரில் தயவா யிருங்கள்; தயவா யிருங்கள்" என்று பரதேசி யாத்துமங்கள் அபயமிடுவதை யுத்தேசித்து, இவ் வான்மாவின் பொருட்டு 1-பர. 1-பிரி. 1-திரி. வேண்டிக் கொள்ள கேட்டுக்கொள்ளுகிறேன்.

(26-7-13.) ஓர் அனுதாபி.

### எடப்பாடி அர்ச். செல்வநாயகி அம்மாள் ஆலய தர்மம்.

அடியில் கையொப்பமிட்டிருக்கும் நாம் உதார குணமுள்ள சகல நண்பர்களுக்கும் அறிவிப்பது யாதெனில்:—

"எடப்பாடி அர்ச். செல்வநாயகி அம்மாளின் திருவாலயத்திற்கு பிரதி வருஷமும் பாஸ்கு பண்டிகையின்போது திருயாத்திரைக்காரர் அவள் திருவடியைப் போற்றி, அவள் உதவியைக் கேட்கத் திரளாய் வருவது யாவருக்கும் தெரிந்த விஷயமே. அப்படி வருகிறவர்களுக்குத் தங்குந்த விடுதிகளும், சாவடி சத்திரங்களுமில்லாமையால் கடும் வெய்யிலின் வெப்பத்தினுல் அவர்கள் தவித் தலைவதைக் கண்டும், பொருளுதவி யில்லாமையால் நாம் அவர்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்ய நாளது வரையில் கூடாமல் போனதைப்பற்றி அதிக வியாகுலப்படுகிறேம். ஆகிலும், அர்ச். செல்வநாயகி அம்மாளை நம்பி இப்போது இந்திய கிறிஸ்தவர்களுக்கு ஒரு சாவடியும்,வெள்ளைக்காரர்களுக்கு மற்ருெரு சாவடியும் கட்ட யேற்பாடு செய்வதோடு, கோவிலை மராமத்து செய்யவும் துணிந்து, ஏறக்குறைய ரூ. 2,500 பெறும்படியான கட்டிடங்களைத் துவக்கிவிட்டோம். தரும சிந்தையுள்ள மரியாயின் தாசர்கள் உடனே நமக்கு கைகொடுத்து இந்த மேன்மையான வேலைகளைச் சீராய் முடிவு செய்ய உதவிபுரியவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேம். இதைக் கண்ணுறும் சகல கனதனவான்களும், சகல கிறிஸ்துவர்களும் தம் தம்மா லியன்றமட்டும் இந்த காரியத்திற்கு பொருளுதவி செய்வார்களென்று நம்பிக்கையாயிருக்கிறேம். நண்பர்களுடைய தர்மம் எவ்வளவு சிறியதேனும் சந்தோஷமாய் அங்கீகரிக்கப்படும். தேவதாயானவள் அவர்களையும் அவர்கள் குடும்பங்களையும் ஆசீர்வதிப்பாளென்பது திண்ணம்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| ஷை தருமத்துக்காக [...]கென்வே வசூலிக்கப்பட்ட தொகை. | 101 | 4 | 0 |
| Mr. தேவசகாயம் பண்டிதர், அமராபுரா, ஏற்காடு. | 8 | 7 | 0 |
| ,, ஹூர்து முதலியார், வெள்ளாண்டைவலசு | 5 | 0 | 0 |
| ,, சூசை முதலியார் ,, | 5 | 0 | 0 |
| ,, A. ஞானதிக்கம், கொம்மி கிரேப்பியர், சைகோன் | 30 | 0 | 0 |
| ,, K. P. ஜான், ராணிக்கட் | 1 | 0 | 0 |
| செ. சவரிமுத்து செட்டியார், செவ்வாப்பேட்டை | 10 | 0 | 0 |
| ப. சவரிமுத்து செட்டியார் ஷை | 2 | 0 | 0 |
| சு. சின்னசாமி முதலியார் ஷை | 1 | 0 | 0 |
| கு. வேதநாயகச் செட்டியார் ஷை | 3 | 0 | 0 |
| ஆ. பெரிய தம்பிச் செட்டியார் ஷை | 4 | 0 | 0 |
| சே. மதலைமுத்துச் செட்டியார் ஷை | 3 | 0 | 0 |
| ச. அண்ணுசாமி செட்டியார் ஷை | 2 | 0 | 0 |
| ச. துரைசாமி செட்டியார் ஷை | 1 | 0 | 0 |
| செல்வராய செட்டியார் ஷை | 2 | 0 | 0 |
| செ. பெரியண்ணன் ஷை | 1 | 0 | 0 |
| ச. பெரியநாயக செட்டியார் ஷை | 1 | 0 | 0 |
| ஆக மொத்தம் ரூ. | 180 | 11 | 0 |

எடப்பாடி; கத்தோலிக்குக் கோவில் } ஜே. ஞானதிக்கம்,
விசாரணை குரு.

ST. ANTHONY'S DEPOT.
Altar Candles, Church Ornaments & Ecclesiastical Arts.

கிறிஸ்துவ நண்பர்காள்,

ஞான வாசகத்திற்கும், தியானத்திற்கு மேற்ற அநேக புஸ்தகங்களும், சிலுவைப்பாதைப் படங்கள், சிலுவைகள், சுரூபங்கள் முதலியனவும் எம்மிடம் விற்பனைக் கிருக்கின்றன. அவற்றுள் சில முக்கியமானவைகளாவன.—

மன்ரேசா, அல்லது ஞான முயற்சிகளின்வியாக்கியானம் ரூ. 1–14–0; ஞானவொடுக்கங்களுக்கு நியமிக்கப்பட்ட அர்ச். இஞ்ஞாசியாருடைய ஞானத் தியானங்கள் அணு 0–7–0; ஆத்துமநேசம் அணு. 0–7–0; வெள்ளிக்கிழமைப் புதுமை 0–9–6; அர்ச். வாரம் 0–8–0; சிலுவைப்பாதை சிறிது 0–3–6; சிலுவைப்பாதை பெரிது தோல்கட்டிடம் 0–12–0; வியாகுலப் பிரசங்கம் அரைக்கட்டிடம் 0–8–0; வியாகுலப்பிரசங்கம் கலிக்கோ 0–10–0; திருஸ்தலவாசகம் 0–3–6; திருஸ்தல தரிசனை 0–6–0; தெய்வீக விருந்து ரூ. 1–0–0; சேசுநாதர் திருப்பாடுகளின் தியானம் 0–10–0; கிறிஸ்துநாதர் அநுசாரம் தோல்கட்டிடம் 0–12–0; தேவமாதா, சூசையப்பர் வணக்கமாதங்கள் ஒன்று 0–12–0; வியாகுலமாதா புலம்பல் 0–1–6; அன்னை அழுங்கல் ஒப்பாரி 0–2–6; தேவமாதா வியாகுல ஒப்பாரி 0–6–0; சிந்தாகுலத்திரட்டு சிந்தாகுலக்கோவை 0–4–0; மிகவும் நேர்த்தியாய் வர்ணந் தீட்டிய சிலுவைப்பாதைப் படங்கள் 10×8 இஞ்சு செட். ரூ. 1–4–0; ஷை 17+3 இஞ்சு செட். ரூ. 4–8–0; எண்ணெய் வார்ணிஷ் 30+22 இஞ்சு செட். ரூ. 35–0–0; மிகவும் நேர்த்தியான கருப்பு போட்டோபடங்கள் (By Professor Gebhard Fugel) செட் $18\frac{1}{2} \times 13\frac{1}{2}$ ரூ. 25; இதோ மனிதன் என்ற (Ecce Homo) சுரூபம் 20 இஞ்சு ரூ. 10; ஆண்டவருடைய உயிர்த்தானச்சுரூபம் 20 இஞ்சு ரூ. 12; இன்னு மநேகவிதமான வெகுமதி பண்ணத்தக்க பல வடிவான சீமை கட்டுப் புஸ்தகங்களும், செபமாலை, படம், சுரூபம், வரவணிக்க முதலியவையும், கோவில் சோடினைச் சாமான்களும் விற்பனைக் கிருக்கின்றன.

1 ரூபாய்க்குக் குறைந்த சாமான்கள் V. P. P. யில் அனுப்பக் கூடாமையால் இவைகளுக்கு ஸ்டாம்பு அனுப்பினுல் ஒப்புக்கொள்வோம்.

Thomas Rodrigo,
No. 40, Kochikadde, Colombo.

தோமாஸ் உறதிரீகு,
நெ. 40, கொச்சிக்கடை, கொழும்பு.



162045

# நமது முறைப்பாடு !

**சந்தாபாக்கி:**—நமது சந்தாதாரரில் பாக்கியைச் செலுத்தாதவர்கள் 745 பேர் இருக்கிறார்கள். இவர்களில் 1912௵ச் சந்தாவைச் செலுத்தாதவர்கள் 256 பேர். இவர்களுக்கு சென்ற பிப்ரவரி௴ முதற்கொண்டு பத்திரிகை நிறுத்தப்படலாயிற்று. மற்ற 489 பேரும், முன்னதாகச் செலுத்தப்படவேண்டிய 1913௵த்திய சந்தாவைச் செலுத்தாமல் நாளதுவரையில் அதாவது, எட்டுமாதங்களாக பத்திரிகை பெற்றுக்கொண்டு வருபவர்கள். ஷை பாக்கிதாரர்களிடமிருந்து வசூலாக வேண்டிய தொகை ரூ. 931 ஆகிறது. ஆகவே, கொஞ்சங் குறைய ஆயிரம் ரூபாய் தங்கிவிட்டால் நாம் பத்திரிகையை எவ்விதம் நடத்துவதென்பதை பாக்கிதாரரான நண்பர்கள் கவனிக்கக் கோருகிறோம். கவனித்து, கூடிய சீக்கிரத்தில் பாக்கியைச் செலுத்துவிடுவார்களாக. இவர்களுக்கு இரண்டுமாதத் தவணை கொடுக்கிறோம். அதாவது, ஆகஸ்டு செப்டம்பர் மாதங்களே. இதற்குள் பாக்கி செலுத்தாத பேர்களுக்கு அக்டோபர்௴ பத்திரிகை நிறுத்திவிடப்படும். இப்படிச் செய்யும் மனவருத்தத்துக்குரிய அவசியத்துக்கு எம்மையுட்படுத்தாதபடி பாக்கிகளைச் செலுத்திப் பத்திரிகையைச் சன்மானிப்பார்களெனக் கோருகிறோம்.

**பத்திரிகை சேரவில்லை:**—பத்திரிகை சேரவில்லை என்று பல நண்பர்களிடமிருந்து முறைப்பாடுகள் மாதம் மாதம் வரப்பெறுகிறோம். பிரதிமாதமும் பத்திரிகைகளை தபாலில் போடு முன்னே அவைகளை ஒருமுறையேயன்றி இருமுறையும் சந்தாதாரரின் ஜாபிதாவோடு மிகு ஜாக்கிரதையாய் தணிக்கை செய்கிறோம். இதற்குப் பின்னும் பத்திரிகை சேரவில்லையென்றால் என்ன செய்வதென்று நமக்குப் புலப்படவில்லை. இது டெலிவரி தபாலாபீசின் தப்பிதமொழிய வேறில்லையென்று சொல்லவேண்டியதாகிறது. ஆகவே, பத்திரிகை சேரப் பெறாத நண்பர்கள் தங்கள் தபாலாபீசுக்கு அப்போதுக்கப்போது ஓயாமல் முறையிட்டுக்கொண்டே வரவேண்டும். சங்கதி யிங்ஙனமாக சில நண்பர்கள் எம்மீது கடுங்கோபங்கொண்டு “பணம் பெற்றுக் கொணடும் பத்திரிகை யனுப்பாத மோசமென்னோ? பத்திரிகை யனுப்பாவிடில் பணத்தை உடனே வாப்பஸ் செய்துவிடும்” என்று எழுதி விடுகிறார்கள். இதைக் காண நம்மனம் புண்ணாகிறது. என் செய்வோம்? இவ் வசையையும் வாங்கிப் பத்திரப்படுத்திக்கொண்டு, சேரவில்லையென்கிறவர்களுக்கெல்லாம் பத்திரிகை திரும்ப அனுப்பிக்கொண்டு தான் வருகிறோம். ஆனால், கையிருப்புக் காப்பிகள் செலவழிந்த பின்னும் நாம் என்ன செய்யக்கூடும்? இதை நண்பர்கள் கவனிக்கக் கோருகிறோம்.

**விளம்பரக்காரர்கள் :**—வியாபார விளம்பரக்காரர்களும், குடும்ப சுபாசுப விளம்பரக்காரர்களும் தங்கள் விளம்பரங்களை யனுப்பி விளம்பரக் கட்டணத்தை பின்னனுப்புவதாக தவணை சொல்லுகிறார்கள். இம்மாதிரியான கணக்குகளை வைப்பதற்குப் போதுமான சிப்பந்திகளில்லாததால், நண்பர்கள் முன்பணமனுப்பி நம்மைச் சன்மானிப்பார்களெனக் கோருகிறோம், (Minimum cost, maximum work) “சிறு விலை, பெரும் பயன்” என்பதுபோல, சொற்ப ஐவேஜைக்கொண்டு பெரிய நன்மை செய்ய வருந்து மெம்து கண்டிதமான வசூலைப் பற்றி நண்பர்கள் நம்மை க்ஷமித்து நம்மீது கருணை கூர்வார்களாக.

பத்திராதிபர்.




நல்ல ஆயன்.

September—1913.

புத்தகம். 11

“நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறாடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்” (அரு. 10:17-14.)

நெம்பர். 9


## ON VENIAL SIN

## அற்பப் பாவத்தின்பேரில்

யூதருக்குள் இருவகையான தராசும் படிக்கட்டும் வழங்கி வந்தன. ஒன்று நியாயமான நிறையைக் காட்டும் சரியான தராசு; அது தேவாலயத்தின் பலிப்பீடத் தண்டையில் வைக்கப்பட்டிருந்து தேவையானபோது உபயோகித்துக் கொள்ளப்படும். மற்றொன்று இராசாங்கத் தராசு; இது அநியாய நிறையைக் காட்டும் கள்ளத் தராசு. இத்தராசைக் கொண்டுதான் அப்சலோம் விலையேறப்பெற்ற தன் தலைமயிரை நிறுத்து இருநூறு ஷீக்கில்ஸ் என்னும் நாணயங்களுக்குக் குறையாமல் விற்பனை செய்ததாக வேதபுத்தகத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்படியே நாமும் நாம் கட்டிக்கொள்ளுகிற பாவாக்கிரமங்களைச் சரியான தராசிலாவது தப்பான தராசிலாவது வைத்து நிறுத்துப்பார்க்கிறவர்களா யிருக்கிறோம். அவைகளைக் கள்ளத்தராசினாலே நிறுத்துப் பார்ப்போமானால் மோசம் போவோமென்பது வாஸ்தவம். அஞ்ஞானமும் குருட்டாட்டமுங் கொண்ட இவ்வுலகம் இவ்விஷயத்தில் நமக்குக் கற்பிப்பதென்ன? ஆங்காரமும் சுயபட்சமும் படைத்த நம்முடைய சுவாபம் நமக்கு சொல்லிக் கொடுப்பதென்ன? “சாவான பாவத்தினால் விளையுங் கேடுபாடுகளே அவ்வளவு கனமானவைகள் அல்லவென்றால், நாம் அற்பப்பாவத்துக்குப் பயப்படத் தேவையில்லை. அதனால் விளையும் தீமை சொற்பம். உண்மையில் அது ஒன்றுமல்லவென்றே சொல்லத்தகும்.” என்பதேயாம். இன்னுஞ் சிலர், “இன்னின்ன பாவம் சாவான பாவம் அல்ல, அல்லவா? அப்படியெனில், அதைக் கட்டிக்கொள்ள அஞ்சவேண்டியதேனோ? அதைப்பற்றிக் கலக்கத்துக்கும் ஐயரவுக்கும் இடங் கொடுக்கப்படாது.” என்பார்கள். பதுவைப் பதியரான அர்ச். அந்தோனியார் இவர்களுடைய மதியீனம், அறியாமை, குருட்டாட்டம் இவைகளைப்பற்றி அங்கலாய்த்துச் சொல்லியிருப்பதாவது: “அநேகர் தங்கள் பாவாக் கிரமங்களைப் பலிப் பீடத்தண்டையிலுள்ள தராசினால் நிறுத்துப் பார்க்கிறதில்லை. அதாவது பாவம் சர்வேசுரனாலும் புண்யவான்களாலும் எப்படி கனமானதெனவும் கெடுதிக்குரியதெனவும் பாவிக்கப்பட்டு வருகிறதோ அப்படி அவர்களாற் பாவிக்கப்படுகிறதில்லை. அதை இராசாங்கத் தராசைக்கொண்டு நிறுத்துப் பார்க்கிறார்கள்; அதாவது உலகம் அதை அற்பமாயும் அலட்சியமாயும் பாவிக்கிறது போல் பாவித்துவருகிறார்கள்” என்பதே.

அற்பப்பாவங்களை நாம் கள்ளத்தராசில் வைத்து நிறுத்து மோசம் போகாமல் சரியான தராசில் வைத்து நிறுத்துப்பார்ப்போமானால்-தேவபயமும் விசுவாசமுமுள்ளவர்களைப்போல் அவைகளைச் சீர்தூக்கிப் பார்ப்போமானால்- ஐயோ, அவைகள் எவ்வளவோ கேட்டுக் குரியவைகளென்றும், அவைகள் நம்மை நஞ்சிட்டுக் கொல்லும் சத்துருக்களென்றும் உணர்ந்து அவைகளுக்காக அஞ்சி நடுநடுங்குவோம். ஆனது பற்றி அவைகளின்பேரில் அருவருப்பும் வெறுப்புங் கொள்வோம் என்பது திண்ணம். ஜெனோவா கத்தரீனம்மாள் அவைகளின் அவலட்சணத்தையும், விகாரத்தை

யும், நிஷ்டூரத்தையுங் கண்டுணரும்போது செத்த சவத்தைப்போலாவாள். அர்ச். ஞானப்பிரகாசியார் அவைகளை நினைக்கும்போதெல்லாம் மூர்ச்சையாய்க் கீழேவிழுந்து விடுவார். அர்ச். கிறிசோஸ்தோம் அருளப்பர் அற்பப்பாவங்களினால் விளையும் தீமையைப்பற்றிச் சொல்லியிருப்பது நமக்கெல்லோருக்கும் பிரமிப்பையுந் திகிலையும் வருவிக்குமென்பதற்கு ஐயமில்லை. அவர் சொல்லியிருப்பதாவது : நான் சொல்வதை நம்பு ; சாவானபாவத்தோடு அற்பபாவத்தை நாம் இணையிடுவது எவ்வளவும் சரியல்ல; ஏனெனில், சாவானபாவம் வாஸ்தவத்தில் சொல்லொண்ணா விதமாய் நமக்குப் பொல்லாப்பை விளைவிக்கக் கூடியது. என்றாலும் அற்பப் பாவத்துக்கும் நாம் அஞ்சி நடுங்கவேண்டியதே. அதேனென்றால், கோரமும் குரூரமும் அவலட்சணமுமுள்ள ஓர் இராட்சதனுக்கு ஒப்பாயிருக்கும் சாவானபாவத்தின் தோற்றமே ஒருவன் வெருண்டு மிரண்டு திக்கு திசை தெரியாமல் தியங்கி நிற்கச் செய்யப்போதுமானது. இப்படி அற்பப்பாவம் செய்யாவிட்டாலும், அது தான் ஒளித்து வைத்திருக்கும் விஷத்தை விழிப்பும் ஜாக்கிரதையுமற்றவர்களுக்கு சன்னம் சன்னமாய் அருந்தக் கொடுத்து, அவர்கள் சாவானபாவத்தைக் கட்டிக்கொள்ளும்படிச் செய்ய காரணமாயிருக்கின்றது'' என்பதே. நம்மை யறியாமலே நம்மில் வியாதி உற்பவித்து, வரவர முற்றி முதிர்ந்து, நமக்கு உயிர்ச்சேதம் வருவிப்பதுபோல, அற்பப்பாவங்களும் நாள் வட்டத்தில் நாம் சாவானபாவத்தில் விழுந்து ஆத்தும நஷ்டமடைய ஏதுவாகின்றன. இப்படி நாம் ஏமாறிப் போகாத வண்ணம் பின்வருமாறு அற்பப்பாவத்தின்பேரில் யோசிக்கக்கடவோம்.

**1**-வது :—அற்பப்பாவம் எத்தன்மைப்பட்டது?

**2**-வது :—அதனால் ஆத்துமத்துக்குண்டாகும் நஷ்டம் என்ன?

**3**-வது :— சர்வேசுரன் அற்பப்பாவத்தின்பொருட்டு இடும் தண்டனை யெப்பேர்ப்பட்டது?

## 1. பிரிவு.

### அற்பப்பாவம் எத்தன்மையானது?

வேதசாஸ்திரியான அர்ச். தோமாஸ் என்பவர் அற்பப்பாவங்கள் இருவகைப்படும் என்கிறார். மனித பலவீனத்தை யொட்டி யோசனை அல்லது கவனக் குறைவினாலும், அறியாமையாலும் கட்டிக்கொள்ளப்படும் அற்பப்பாவங்கள் ஒருவகை; மற்றொருவகை யாதெனில் : அறிந்தும் மனம்பொருந்தியும் கட்டிக்கொள்ளும் அற்பப்பாவங்கள். இவ்வகைப்பட்ட பாவங்களின் பேரிலேயே நாம் இப்போது யோசிக்கத் தகுமென் றறியக்கடவோம்.

ஒவ்வொரு விஷயத்தையும் அததன் தரப்படி ஆய்ந்தோய்ந்து பார்க்கிறவனே புத்திமானென அர்ச். பெர்நர்து வசனித்திருக்கிறார். ஆகவே, நாம் தேவானுக்கிரகத்தின் உதவியைக் கொண்டு அற்பப்பாவம் என்னவென்று சிறிது சீர்தூக்கிப்பார்ப்போமாக. மேற்கூறிய அர்ச். தோமாஸ் சொல்லியிருக்கிறபடி ஆத்துமத்தின் ஒழுங்கீனமே சாவானபாவம். இவ்வொழுங்கீனம் எதில் அடங்கியுள்ளது? சர்வகுணசம்பன்னரும், சர்வ வல்லபரும், சகல நன்மை சொரூபியும், சர்வ உத்தமருமான சர்வேஸ்வரனை எதிர்த்து விரோதிப்பதிலேயும், அவரை அவமதித்துப் புறக்கணிப்பதிலேயும் அடங்கி யிருக்கிறது. எப்படியெனில், ஆத்துமம் தான் இச்சிக்கிற நீச சுகத்தைப் பற்றியோ, ஈன இன்பத்தைப்பற்றியோ, சொற்பமும் நிலையற்றதுமான இலாபத்தைப் பற்றியோ, அல்லது வீணான மகிமை பெருமையைப்பற்றியோ சர்வேசுரனை நீசமாகவும், அற்பமாகவும், அலட்சியமாகவும் எண்ணி, தனக்கு கடைக்கதியாயு மிருக்கும் அவரை விட்டுப் விலகிப்போகிறது. இதனால் அதற்கு வந்துறும் நஷ்டமென்ன? தனக்கு உயிராகவும், சத்துவமாகவும், சர்வ சம்பத்தாகவும், ஒரே வார்த்தையிற் சொல்லவேண்டுமானால் தனக்கு சகலமுமாகவு மிருந்த தேவயிஷ்டப்பிரசாதத்தையும், தேவ அன்பையு மிழந்து ஆத்துமம் மரண மடைவதே. சாவானபாவம் இப்படிப்பட்டதா யிருக்கக்கொள்ள அற்பப் பாவ மாவதென்ன? அதுவும் ஆத்துமத்தின் ஒழுங்கீனமென்றே சொல்லத்தகும். எப்படியெனில்; அற்பப் பாவத்தினால் ஆத்துமம் இப்பிர



பஞ்ச நன்மைகளின்மட்டில் கிரமந்தப்பின பற்றுதலுள்ள தாகின்றது. ஆயினும் இப்பற்றுதலினால் அது சர்வேசுரனை விட்டு முற்றும் விலகிப்போகிறதில்லை. அவரைச் சற்று அற்பமாகப் பாவித்து கொஞ்சம் அப்பால் அவரைவிட்டு எட்டிப்போகிறது. இதனால் தேவ இஷ்டப்பிரசாதத்தை முற்றும் இழக்காமல் தன்னிடத்திலுள்ள கிரமந் தப்பின பற்றுதலுக்கு அளவாக அதைப் போக்கடித்துக்கொண்டு பலவீனப்பட்டுப்போகிறது. ஆனால் அது மரணத்துக்குள்ளாகிறதில்லை.

இப்படி நாம் சாவானபாவத்துக்கும் அற்பப்பாவத்துக்குமுள்ள தாரதம்மியத்தை அறிந்துகொண்டபின் யோசிக்கத்தக்கதென்ன? அற்பப்பாவத்தினாலும் நாம் சர்வேசுரனை நிந்தித்து அவமதிக்கிறோமென்று தெரியவருகிறதல்லவா? சாவானபாவத்தினால் அவருக்கு உண்டாகிற அவ்வளவு அவமதிப்பையும் அவமானத்தையும் அற்பப்பாவத்தினால் அவருக்கு நாம் வருவிக்கிறதில்லை யெனினும், அவரை அவமதிக்கிறோ மென்பது மெய். அன்றியும் எவ்வளவுக்கு அற்பப் பாவங்களினால் நாம் அவரை விட்டு விலகிப்போகிறோமோ அவ்வளவுக்கு நாம் அவரைச் சட்டை செய்யாமற் புறக்கணிக்கிறோ மென்பதும் மெய்யே. சம்மனசுக்களுக்குரிய சாங்கோபாங்கத்தை யுடைய மேற்சொன்ன வேதசாஸ்திரியான அர்ச். தோமாஸ் என்பவர் சொல்லுவதுபோல், அற்பப்பாவத்தைக் கட்டிக்கொள்ளுகிறவன் சர்வேசுரனுடைய கற்பனைகளை முழுதும் மீறிநடவாவிட்டாலும் கொஞ்சத்துக்கொஞ்சம் மீறி நடக்கிறான். ஆம், அவருடைய கற்பனைகளின் மட்டில் அவனுக்கு சற்று அருவருப்பும் அப்பிரியமு முண்டாகிறபடியால் அல்லோ, அவன் அதை சரிவர அனுசரியாமல் அவ்வளவு கவலை யீனமாயும் சங்கைக் குறைவாயும் அனுசரிக்கிறான். இப்படி இப்பாவங்களினால் சர்வேசுரனுக்கு அவமதிப்பும் நிந்தனையும் வருவிக்கிறோமென்றால், இது காரியத்தில் நாம் ஏனோ தானோ வென்றிருக்க எப்படி மனங்கொள்ளலாம் ? இது அற்பக்காரியந் தானேவென்று சொல்வதும் நியாயமல்ல. இப்படிச்சொல்லுவது தேவதூஷணமாகு மென்று அர்ச். பெர்னார்து அபிப்பிராயப்படுகிறார். அற்பப்பாவ விஷயத்தில் நாம் அதிகமாய் கவனிக்கத்தக்கது யாதெனில்: நம்மால் தேவ கற்பனைகள் அற்ப காரியத்தில் மீறப்படுகிறதென்பதை அவ்வளவாய் கவனியாமல், நம்முடைய சமுத்திரையான அனுசரணைக்காக அக்கற்பனைகளை கொடுத்த சர்வேசுரனுடைய மட்டில்லாத மகத்துவத்தையே நாம் அதிகமாய் கவனிக்கத்தகும்.

(இன்னும் வரும்.)

---

## A VALUABLE OLD DOCUMENT.

## விலை மதிக்கத்தக்க ஓர் பூர்வ பத்திரம்.

ஏறக்குறைய நூற்றெட்டாம் ஆண்டில், அதாவது கிறிஸ்தாப்தத்தின் 2-வது நூற்றாண்டின் துவக்கத்தில் அந்தியோக்கியாபுரி மேற்றிராணியாராயிருந்து வேதசாட்சி முடிபெற்ற அர்ச். இஞ்ஞாசியார், தாம் வேதசாட்சியாவதற்கு சீரியா தேசத்திலிருந்து உரோமாபுரிக்குக் கொண்டு போகப்படும்போது, வழியிலுள்ள கிறிஸ்துவர்களுக்கு ஏழு நிருபங்களை யெழுதினார். இந் நிருபங்கள் தேவநேசம் பிறர்நேசம் நிறைந்து, கிறிஸ்துவர்களுக்கு, பூலோகப் பற்றுதலை யறுத்து பரலோக பதவியை நாடுவதற்கும் பொதுவாய் சாங்கோபாங்கத்துக்குமான புத்திமதிகளைப் புகட்டுவதால், நமது தமிழ் நாட்டார் வாசித்துப் பயன் பெறுமாறு, அவைகளை கண்டி குருமடத்து வித்தியார்த்திகள் தமிழில் மொழி பெயர்க்கத் தொடங்கி, உரோமைக் கிறிஸ்துவர்களுக்கு அந்த அர்ச்சிய சிஷ்டவர் எழுதின நிருபத்தின் பின்வரு மொழி பெயர்ப்பை "நல்லாயனில்" பிரசுரிக்க அன்பாய் அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஷெ நிருபங்கள் ஆதியில் அர்ச். இஞ்ஞாசியாரால் கிரேக்கு பாஷையில் எழுதப்பட்டன. பின்னர் லத்தீன் பாஷையில்மொழி பெயர்க்கப்பட்டன போலும். லத்தீன் பாஷையிலிருந்தே இவை இப்போது தமிழில் மொழி பெயர்க்கப்பட் டிருக்கின்றன. நிருபரின் கருத்து சிதைவுறாமற் பொருட்டும், முதனூற்றாண்டில் நிருபம் எழுதப்பட்ட தன்மையும், போக்கும் இந் நூற்றாண்டார் ஒருவாறு அறிந்து கொள்ளுதற் பொருட்

டும் இந்நிருபம் பதப்பொருட் பிரகாரம்
மொழி பெயர்க்கப் பட்டிருக்கின்றது. இவ்
வாறு செய்கையில், மூலபாஷையி னர்த்தத்
துக்குத் தக்க தமிழ்ப் பதங்கள் அகப்படா
தபோது, கூடியவரையில் தக்க பதங்கள்
உபயோகிக்கப்பட் டிருப்பதுடன், மூல பா
ஷை தெரிந்தவர்கள் அர்த்தத்தை நன்கு
ணர்ந்துகொள்ளுமாறு அப்பாஷையின் ப
தங்கள் அடைப்புக்குறிக்குள் வைக்கப்
பட்டுள்ளன. இன்னும் அவசியமெனக் கண்
ட சிற்சில விடங்களில் விளக்கக் குறிப்புக
ளுஞ் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பிதாக்க
ளெழுதின பத்திரங்கள் பிள்ளைகளுக்கு
விலையுயர்ந்த பொக்கிஷ மாகுமல்லவா?
அவைகளை இவர்கள் மேலும் மேலும் வா
சித்து தம் முன்னோரை நினைத்து அவர்
களைத் தங்கள் கண்முன் காண்பது போல
பாராட்டுவார்களே. அப்படிப்போல ஆயி
ரத் தெண்ணூறு வருஷங்களுக்குமுன் நம்
முன்னோரும் பிதாப் பிதாக்களுமான ஆ
திக்கிறீஸ்துவர்களா லெழுதப்பட்ட இத்
தன்மைய பத்திரங்களை வாசிப்பது நமக்
குப் பிரியமா யிருப்பதுடன் அதனால் அவ
ர்கள் எப்பேர்ப்பட்ட பராக்கிரம விசுவா
சிகளா யிருந்தார்களென்றும் அறிந்து
கொள்ளலாம். அவர்கள் அவ்வளவு பிர
மாணிக்கத்துடன் கைக் கொண்டிருந்த
சத்திய வேதத்தில் நாமும் பிறந்து வளர்ந்
ததினிமித்தம் நீதியான பெருமைகொண்
டு, நாமிப்புகழ் பெறுவதற்குக் காரணமான
நம்முன்னோரை யென்றுங் கொண்டாடு
வோம். மேலும், அவ்வண்ணமே நாமும்
நம தந்தஸ்துக் கேற்றவண்ணம் நம்முன்
னோரைக் கண்டுபாவிக்க முயலுவோமாக.
ஷெ நிருபம் பின் வருமாறு:

"அதி யுன்னத பிதாவினதும் அவரின் ஏக
சுதனாகிய கிறிஸ்துநாதரினதும் மகிமைப் பிர
தாபத்தினால் (Magnificentia) இரக்கமடை
யப் பெற்றதும், நமது ஆண்டவராகிய சேசுக்கி
றிஸ்துநாதரின் சிநேகத்துக் கொத்தவண்ணம்
சகலத்தையும் விரும்பியாளும் சர்வேசுரனால்
சிநேகித்து அலங்கரிக்கப்பட்டதும், அவருக்குக
ந்த மகிமை கொண்டு பரிசுத்தமென் றழைக்கப்
படப் பாத்திரமாய்ப் புகழ்பெற்று சகலராலும்
இச்சிக்கப்படப் பேறுவாய்ந்ததும் (Digna quæ
voti compos) தேவ சிநேக சபையென் றழை
க்கப்படும் திருச்சபை முழுவதற்கும் அக்கிராச
னாதிபதியாய் ரோமை நகரில் வீற்றிருக்கப் பாத்
திரமானதும் கிறிஸ்துவின் பிரமாணங்களை அநு
சரித்து (Legem habens) பிதாவின் நாமத்தால்
முத்திரை யிடப்பட்டதுமான அச் சபையாருக்
கு (Ecclesiæ) "தேவனை யேந்துவோன்"
(Theophorus) என் றழைக்கப்படும் இஞ்ஞாசி
யாராகிய நாம், ஆத்தும சரீரத்தி லொன்று கூடி
கிறிஸ்துநாதரின் ஒவ்வொரு பிரமாணங்களுக்
கும் அமைந்து, தேவனை விட்டுப் பிரியாது சமை
யவேத மென்னும் சகல அந்நிய கோலங்களையு
மகற்றி (Omni aliens colore expurgati)
தேவ கிருபையால் நிரப்பப்பட்டுள்ள அவர்கள்
சகலரும் நம்முடைய ஆண்டவராகிய சேசுக்
கிறிஸ்துநாதரின் சகல சுத்த சுக போகங்களை
யும் அடைய விரும்பி எழுதும் நிருபமாவது:"

1. "சர்வேஸ்வரனிட மிருந்து அவருக்குப்
பிரீதியை யுண்டுபண்ணும் உங்கள் முகங்களை
வந்து பார்க்க சமயங் கிட்டவேண்டுமென்று இ
ரந்து மன்றாடினேன். அவ்வரம் எனக்குக் கிடை
க்கும்படி இன்னும் இடைவிடாது கேட்டு நிற்கி
ன்றேன். என் பிரயாணத்தை முடிவுபரியந்தம்
செய்யப் பாத்திரவா னெனச் சர்வேஸ்வரனுக்
குத் திருவுளமானால், கிறிஸ்துவி னிமித்தம் வில
ங்கிடப்பட்ட நான் உங்களைக் கண்டு வாழ்த்து
வே னென்று நம்புகிறேன். தேவ வரம் எனக்
குக் கிடைத்தது. சர்வேஸ்பரனால் நியமிக்கப்
பட்ட பாகத்தை நான் கண்டடைய சகல ஆரம்
பங்களும் நன்றாய் ஒழுங்குப்படுத்தப்பட்டிருக்
கின்றன. ஆனால் என்மேல் உங்களுக்குள்ள உரு
க்க மிகுதியினிடையிலேயேதுந் தீங்குவருமோ
வென்று பயப்படுகிறேன்*. நீங்கள் விரும்பிய
தைச் செய்வது உங்கட்கு எவ்வளவோ இலகு;
ஆனால் நீங்கள் எனக்கு கிருபை செய்யாவிடில்
சர்வேஸ்பரனைக் கண்டடைவது எனக்கு மிக
வும் அரிதான காரியம். மனிதருக்கு நீங்கள் சந்
தோஷ முண்டாக்கவேண்டு மென்பதை நான்
அங்கீகரிக்கமாட்டேன். ஆனால் சர்வேஸ்வரனுக்
கே இதுவரையும் பிரியப்பட நடந்ததுபோல்
இப்போதும் அவரை சந்தோஷப்படுத்தவேண்டு
மென்பதே எனது மனப்பற்றுதல். சர்வேஸ்பர
னைக் கண்டடைய இதைப்போலொத்த தருணம்
ஒருபோதும் எனக்குக் கிடைக்காது. உங்கட்கும்
இப்போது பேசாமல் மௌனமாயிருப்பதைவிட
உத்தமமான காரியம் வேறேதுமில்லை. என்னைப்

* அதாவது அவர்கள் தமக்காய் பரிந்து பேசி தாற் வேதசாட்சி
யாக மரிக்காவண்ணம் தடுப்பார்களோ வென்று பயப்படுகிறார்,



பற்றி நீங்களிப்போது மௌனமா யிருப்பீர்களா
கில்சர்வேஸ்வரன்வார்த்தையாவேன். (Verbum
Dei fiam) அல்லது என் சரீரத்தை மாத்திரம்
சிநேகித்து என் மரணத்தை நீக்கத் தெண்டிப்
பீர்களாகில், மீண்டுமோர் கருத்தில்லாத் தொ
னியாவேன்; சர்வேஸ்வரனுக்குப் பலியாகும்
கிருபை யன்றி உங்களிடமிருந்து எனக்கு
வேறேதும் வேண்டாம். பிறர் ஸ்நேகத்தைக்
குறித்து ஒன்று கூடி (Chorus effecti) கிறிஸ்
துவின் நாமத்தால் பிதாவுக்குக் கீர்த்தனை
கள் பாடுவீர்களாக. ஏனெனில், சீரியாதேசத்து
மேற்றிராணியார் கிழக்கில் நின்று மேற்கு பரி
யந்தங் குற்றஞ் சாட்டி அழைக்கப்படப் பாத்தி
ரரெனத் தேவதிருவுளமாயிற்று. சர்வேஸ்வரனி
னிமித்தம் இவ்வுலகில் அஸ்தமித்து அவரண்
டை மறுவுலகில் உதிப்பதே நன்று."

2. "நீங்களிதுவரையுங் கிறீஸ்துவுக்காக
மரிக்கு மொருவனையும் மயக்கிக் கெடுக்கவில்
லை; சகலருக்கும் நீதியைக் கற்றுக்கொடுத்தீர்
கள். உங்கள் போதனை கற்பனைகளிற் றவறாது
இப்போதும் உறுதியாய் நிற்கவேண்டுமென்ப
தே என்சித்தம். பேசுவதற்கு மாத்திர மன்று,
ஆனால் வாய் பேசுவதை மனமு மிச்சிக்கும்படி
வேண்டிய ஆத்தும சரீரபலத்தை எனக்கு கேட்
டடைவீர்களாக. அப்போது வாயினால் மாத்திர
மன்றி உண்மையாகவே மனதிலும் கிறீஸ்து
வனாயிருக்கிறேனென்று காணப்படுவேன். அப்
படி கண்டுபிடிக்கப்படுவே னாகில் கிறீஸ்துவ
னென்று கூப்பிடப்படவும் பாத்திரவானாவேன்.
அங்ஙனம் பூமியில் நின்று மறைந்துவிட்டாலும்
விசுவாசியெனப் பேரடைவேன். வெளியரங்க
ஆடம்பரங்களிற் பிரயோசனமில்லை. ஏனெனில்
நமதாண்டவராகிய யேசுக்கிறிஸ்துநாதரும் இவ்
வுலகில் வெளியரங்கமாய்ச் சீவித்தபோதல்ல, ஆ
னால் திரும்பவும் பிதாவினண்டையோய் வசித்
து வருமிப்போதே அதிக புகழ்பெற்று வருகி
றார். உலகத்தால் பகைக்கப்படும் பொழுது மனி
தரை கைவசப்படுத்துவதிற் பிரயோஜனமில்லை.
ஆனால் மனத் தைரியத்தோடிருப்பதே கிறிஸ்து
வ தன்மை."

3. "நீங்கள் மாத்திரமெனக்குத் தடை செ
ய்யாவிடில் சந்தோஷத்தோடு சருவேஸ்வரனுக்
காக மரிப்பேனென்று சகல சபையாருக்கும்
எழுதியறிவிக்கிறேன். மிதமிஞ்சியதும் சமயோ
சித மல்லாததுமான பட்சங் காட்டவேண்டா
மென்பதே யுங்களிடமிருந்து நான் கேட்டு நிற்
கும் வேண்டுகோள். என்னைக் காட்டுமிருகங்களி
ன் இறையாய்ப் போகவிடுங்கள். அவைகள் மூல
மாகவே தேவனைக் கண்டடைவேன். தேவதா
னியமாகிய நான் திருகைக்கல்லான மிருகங்க
ளின் தந்தங்களுக்குள் அகப்பட்டு அரைபட்டா
லே கிறிஸ்துநாதரின் சுத்த அப்பமாவேன். அம்
மிருகங்கள் என் சரீரத்தி னொருபாகத்தையும்
விடாது தின்று என் பிரேதக்குழியாகும்படி
யவைகளை தடவி நேசம் பாராட்டுவீர்களாக;
(blandimini) அப்போது நான் மரித்தபிற்பா
டும் ஒருவனுக்கும் சுமையாகமாட்டேன். என்
சரீரமும் இவ்வுலகத்தை விட்டு நீங்குமப்போதே
கிறிஸ்துவி னுண்மையான சீஷனாவேன். இவ்
வெத்தனங்களாற் சர்வேஸ்வரனுக் கேற்ற பலி
யாகும் வண்ணம் கிறிஸ்துநாதரை எனக்காக
வேண்டிக்கொள்ளுங்கள். இராயப்பர் சின்னப்
பரைப்போல் நான் உங்களுக்குக் கட்டளை கொ
டுக்கிறேனல்ல*. ஏனெனில் அவர்களோ அப்
போஸ்தலர்கள்; நானோ தண்டிக்கப்பட்ட குற்ற
வாளி; அவர்களோ சுவாதீனர்; நானோ இற்றை
வரையும் பிறர் வசப்பட்ட அடிமை. ஆனால்
கிறிஸ்துநாதருக்காகப் பாடுபட்டு மரிப்பேனா
கில் அவரால் மீட்கப்பட்டவனாய் எழுந்திருப்
பேன். யாதொரு பொருள்மேலு மபேட்சை ய
ற்றிருப்பதே விலங்கிடப்பட்ட நான் இப்போது
படிக்கும் பாடம்."

4. "சீரியாதேச மிருந்து உரோமை நகர்
வரைக்கும் தரையிலும் கடலிலும் இரவுபகலாய்
போர்வீரரென்னும் பத்து வேங்கைகளின் மத்
தியிலே கட்டுண்டிருக்கிறேன். பட்சத்தை முத
லாய்க் காட்டினாலும் அவர்கள் கொடுமையோ
முன்னிலு மதிகரிக்கும். அவர்கள் துஷ்டத்தன
த்தால் புண்ணிய சாங்கோபாங்கத்தை யதிக
மதிகமாய்க் கற்றறிகின்றேன். "ஆகிலும் இதி
னால் நான் நீதிமானாவதில்லை" (முதல் கொரிந், 4
அதி. 4 வச.) எனக்கென்று எத்தனம் பண்ணப்
பட்ட மிருகங்களால் புசிக்கப்படுஞ் சந்தோஷ
பாக்கியமெனக்குக் கிடைப்பதாக. அதற்காக
அவைகள் அதி மூர்க்கத்தனமுள்ளவைகளாயி
ருக்க வேண்டுமென விரும்புகிறேன்."

"சிலருக்குப் பயந்து அவர்களைத் தொடாமல்
நின்றதுபோல் எனக்குஞ் செய்யாமல் உடனே
என்னை முற்றும் விழுங்கிவிடும்படி அவைகளுக்
கு முக ஸ்துதியான வார்த்தைகள் பேசுவேன்.

* இதைக்கொண்டு சரிதாசிரியர் இராயப்பரும் சின்னப்ப
ரும் ரோமை நகருக்குப்போயங்கு வேதசாட்சி யானார்களென்
னுஞ் சத்தியத்தை யுறுதிப்படுத்துகிறார்.

என்னுடன் அப்பிரீதிகொண்டு மறுதலிக்கும் பட்சத்தி லவைகளை பலவந்தப்படுத்தி யழைப்பேன். உங்கள் கருத்துக்கு விரோதமாய்ப் பேசுகிறேனுகில், என் குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளுங்கள். எனக்குப் பயனுள்ள தெதுவென்று நானறிவேன். இப்போதே கிறிஸ்துவின் சீஷனு யிருக்கத் துவக்குகிறேன். காணப்படும் பொருட்களாயினுஞ் சரி, கண்ணுக் கடங்காப் பொருட்களாயினுஞ் சரி யாதொன்றும் என் மனதைக் கவர்ந்துகொள்ளா திருக்கட்டும். அப்போதே கிறிஸ்துவைச் சம்பாதித்துக்கொள்வேன். நெருப்புஞ் சிலுவையும், மிருகக் கூட்டங்களும், கசையடிகளும் வந்தாலும் வரட்டும்; என் தேகம் அங்கமங்கமாய்த் தறிபட்டாலுஞ் சரி, எலும்பெலும்பாய் முறிபட்டாலுஞ்சரி, சடலம் முற்று யரைபட்டாலுமென்ன? பசாசின் வேறேது கொடிய ஆக்கினைகள் வந்தாலும் வரட்டும்? அவைகளால் கிறிஸ்துநாதரை மாத்திரம் பின்பற்றுவேனுகில் எனக்குப்போதும்.''

5. "இவ்வுலக சிற்றின்பங்களின்மேலெனக்குப் பிரீதி யில்லை. பூமண்டல இராச்சியங்களு மெனக்குப் பயனைத் தருவதில்லை. சேசுநாதருக்காய் மரிப்பது உலகி னெத்திசையையு மாளுவதைவிட அதியுன்னத காரியமென்று உணருகிறேன். நம்மெல்லாருக்காகவும் மரித்த அவரைத் தேடுகிறேன். நமது நிமித்த முயிர்த்தெழுந்த அவரையே மனங்கொண்டு நாடுகிறேன். இதோ கிறிஸ்துநாதருக்கு நான் பிறக்கும் நாள் கிட்டி வந்துவிட்டது. (Partus mihi instat) சகோதரர்களே! என் குற்றத்தை மன்னித்துக்கொள்ளுங்கள். என் சீவனுக்குச் சதி செய்து எனக்கு மரணத்தை வருவிக்கத் தேடவேண்டாம் *. சர்வேசுரனுடைய பொருளாயிருக்க விரும்பு மென்னையிப் பிரபஞ்ச பதார்த்தங்களைக் கொண்டு எய்த்து பூமிக்கு அடிமையாகக் கையளிக்கவேண்டாம். என்னைச் சுத்த வெளிச்சமாகிய என் தேவனைப் பார்க்கவிடுங்கள். அங்கு போய்ச் சேரும்போதே உண்மையான மனிதனுவேன். என் தேவனின் பாடுகளை நான் பின்பற்ற எனக்கு வரந் தாருங்கள். யாராவது தன் தேவனுகிய அவரைத் தன்னுள்ளத்தில் வைத்திருப்பானேயாகில், அவன் நான் விரும்புவ தெதுவென தெரிந்துகொள்வான். அவன் என் னெருக்கிடைகளைக் கண்டு என்மேலிரக்கங் கொள்வான்.''

* அதாவது ஆத்துமத்தின் சீவியத்தையும் மரணத்தையும் பற்றிப் பேசுகிருர்.

6. "இவ்வுலகத்தில் ராச்சிய பரிபாலனம் பண்ணுபவனுகிய பசாசு என்னைத் தன்வசப்படுத்தி, தேவன்மேலெனக்குண்டான நன் மனதையுங் கெடுக்க இச்சிக்கின்ருன். ஆகையால் அங்கிருக்கு முங்களிலொருவனுவது அவனுக்கு உதவி செய்யவேண்டாம். ஆனு லெனக்கு, அதாவது சர்வேஸ்வரனுக்கு உதவியாக வாருங்கள். நீங்கள் உலகத்தை இச்சிக்கும் வரையில் கிறிஸ்துநாதரைப்பற்றி பேசவேண்டாம். பொருமை உங்களிடங் குடிகொண்டிருக்கக் கடவதல்ல. நானங்கு உங்களிடம் வந்து எதைக் கெஞ்சி மன்ருடினபோதிலும் என்னை நம்பவேண்டாம். இப்போது நா னெழுதுவதை நம்பக்கடவீர்கள். உயிரோ டிருக்கும் நான் மரிக்க ஆசைப்பட்டு உங்களுக்கு எழுதுகிறேன். எனது மண்ணுலக ஆசை சிலுவையி லறைபட்டிருக்கின்றது; சடப்பொருட்களை யாசிக்கும் சிற்றின்பவக்கினி யென்னி லில்லை. ஆனுல் சீவியத்தைக் கொடுக்குந் தண்ணீராகிய தேவஅருள் என்னுள்ளத்தி லிருந்து சொல்வதாவது:பிதாவினண்டைவா என்பதே.''

"அழிந்துபோகு மாகாரங்களிலு மிவ்வுலக வின்பங்களின் மேலு மெனக்குப் பிரீதி யில்லை. தாவீதின் கோத்திரத்திற் பிறந்த கிறிஸ்துநாதரின் சரீரமாகிய தேவ அப்பத்தையும் நிர்மல சிநேகமாகிய அவரின் திரு இரத்தபானத்தையுமே விரும்பி யிருக்கின்றேன்.''

7. "இனிமேல் மனிதர் பிரமாணத்துக்கொத்த வண்ணஞ் சீவிக்கமாட்டேன். உங்களிஷ்டப்படி நடந்தா லப்படியே வந்து நேரிடும். நீங்களுந் தேவ கிருபையைக் கண்டடைய ஆசிக்கும்படி யுங்களை மன்ருடுகின்றேன். என்னை விசுவசிக்கும்படி இச்சிறு கடிதமூலமா யுங்களிடங் கேட்டுக்கொள்ளுகிறேன். நான் சொல்வது உண்மையென்று கிறிஸ்துநாதரே யுங்களுக்கு வெளியரங்கப் படுத்துவார். அவரே சத்தியத்தைப் பேசுந் திருவாய். அவர் வழியாகவே பிதாவாகிய சருவேசுரனும் நமக்குச் சத்தியத்தைப் படிப்பித்தார். நான் ஆசிப்பதை யடையும்படியெனக்காக இரந்து மன்ருடுங்கள்.''

"உலகசம்மதப்படியல்ல, ஆனுல் தேவ சித்தத்துக் கமைந்த வண்ணம் உங்களுக் கெழுதினேன். நான் பாடு படுவேனுகில் நீங்களென்னைச் சிநேகிக்கிறீர்களென்றும் அல்லது விடுதலையாகித் தள்ளப்படுவேனுகி லென்னை வெறுக்கிறீர்களென்றும் அடையாளமாம்.''



"உங்கள் செபங்களில் சீரியாவிலுள்ள சபையை நினைவு கூர்வீர்களாக. அதற்குத் தேவனேயிப்போது எனக்குப் பதிலாய் மேய்ப்பராயிருக்கிருர். கிறிஸ்துநாதரும் உங்களன்புமே யதை மேற்றிராணியாருக்குப் பதிலாயிருந்து ஆளட்டும்.''

"அவர்களி லென்னையு மொருவனுய்ச் சேர்க்க வெட்கப்படுகிறேன். ஏனெனில் எல்லோரினுங் கடையானவனும், அகாலத்திற் பிறந்த உருவற்ற பிள்ளைக்குச் சமானமான கிறிஸ்துவனுமா யிருக்கிறேன் யான் (abortivus).''

"ஆனுல் என் தேவனைப் பின்பற்றுவதால் ஒருவாறு மேன்மையடையக் கருணை கொண்டேன். நா னுங்களை மனமாற வாழ்த்துகிறேன். அப்படியே நான் போகு மிடமெல்லாம் என்னையோர் அன்னியனுகப் பாராட்டாமல் கிறிஸ்துநாதரின்பேரால் தங்களிலொருவனுய் என்னையேற்றுக்கொண்ட பட்சமுள்ள சபையாரும் உங்களுக்கு மங்களம் சொல்லுகிருர்கள். அவர்கள் நானிவ்வுலகில் பிரயாணஞ் செய்துகொண்டு வரும் வீதிகளெங்கும் எனக்கு மவர்களுக்குமோர் அலுவலில்லாதே போனுலும் (nihil ad me pertinebant) ஒவ்வொரு பட்டணங்களுக்குமோடிவந்தார்கள் அர்ச்சியசிஷ்டவர்களென்று புகழ்பெறும் அதியோக்கிய எபேசியர் மூலமாய் ஸ்மிர்ணு தேசத்திலிருந்து இதை யுங்களுக்கு எழுதுகிறேன். மற்றவர்களோடு குரோக்குஸ் (Crocus) என்பவரும் என்னுட னிருக்கிருர். அவர்மீது எனக்கு எவ்வளவோ அன்பு. சர்வேசுரனுடைய மகிமையினிமித்தம் சீரியாதேசத்திலிருந்து எனக்கு முன் ரோமை நகரத்துக் கேகினவர்களை நீங்க ளறிந்திருக்கிறீர்களென்று நம்புகிறேன். நானிதோ கிட்டிவந்து விட்டேனென்று அவர்களுக்குஞ் சொல்லுங்கள். அவர்கள் சகலரும் உங்களுக்கும் சர்வேஸ்பரனுக்கு மேற்றவர்கள். ஆகையால் சகலத்திலு மவர்களைத் தேற்றி யாறுதல் பண்ணுவதே யுங்களுக்கழகு.''

"இதை ஐப்பசிமீ இரண்டாந்தேதி எழுதி முடித்தேன் கடைசிபரியந்தம் கிறிஸ்துநாதருக்காக பொறுமையோடுந் தைரியத்தோடு மிருந்து வாழ்வீர்களாக!''

# CHRISTIAN DOCTRINE.

## ஞானோபதேசம்.

### பத்துக் கற்பனையின்பேரில்

### முதல் பாடம்

### முதல் கற்பனை.

11. **தர்மந் தலை காக்கும்:**—ஒரூரில் ஒரு பெரும்பாவி யிருந்தான். இவன் கட்டிக்கொண்ட பாவாக்கிரமங்களுக்குக் கணக்கில்லை. தன் பாதகங்களை சர்வேசுரன் பொறுக்கமாட்டாரென்று இவன் அவநம்பிக்கைகொண்டு, பைத்தியம் பிடித்தவன் போல் எங்கேயாகிலும் ஓடிப்போகலா மென்னுங்கருத்துடன் ஒருநாள் தன் வீட்டை விட்டுப் புறப்பட்டான். அப்பொழுது வீட்டுக்கு அருகாமையில் இளைத்துக் களைத்து நிற்கும் ஓர் ஏழை தனக்கு உதவிசெய்யும்படி அப் பாவியை மன்ருடினுன். வீட்டெசமானுடைய மனது இளகி ஏழைக்குப் புரியும் உபகாரம் கர்த்தருக்கே செய்யப்படுமென்று எண்ணி, அந்த ஏழைக்குப் பசிதீர போசனம் விசாரித்ததுடன் திரவிய சகாயமுஞ் செய்தான். இந்தத் தர்மஞ் செய்த உடனே அந்தப்பாவி வேறே மனிதனுக தன்பாவங்களுக்கு உத்தம மனஸ்தாபப்பட்டு, அன்றே பாவசங்கீர்த்தனஞ் செய்து தனது துர் நடத்தையை முற்றும் விட்டுவிட்டான். இவ்வாறு தான் மனந்திரும்பினதுக்குக் காரணம் தான் செய்த தர்மமே என்று நிச்சயித்தான். பிள்ளைகளே! நீங்களும் பசியாயிருக்கிறவர்களுக்கு அன்னுகாரங் கொடுக்கும்பொழுது சேசுநாத சுவாமிக்கே அதைக் கொடுக்கிறீர்களென்று நிச்சயித்துக்கொள்ளுங்கள். (Gibson.)

13. **அர்ச். மர்த்தீனுரும் பிச்சைக்காரனும்:**—தூர் நகரின் மேற்றிராணியாரான அர்ச். மர்த்தீன் என்பவர் அஞ்ஞானியாயிருந்த காலத்தில் உரோமை இராயருடைய பட்டாளத்தில் சேவித்தார். இவர் ஒரு நாள் படைவீரருடன் குதிரைச் சவாரி செய்யும்பொழுது நிர்வாணமான ஒரு பிச்சைக்காரன் குளிரால் நடுங்கிக்கொண்டு மர்த்தீனுரை தர்மங்கேட்டான். தன்னிடத்தில் பணமில்லாதபடியால் தன் மேற்போர்வையைக் கழற்றி அதைக் கத்தியால் இரண்டு துண்டாக்கி ஒன்றைப் பிச்சைக்கார

னுக்குக் கொடுத்து மற்றொன்றை தமது தோள்மேற்போட்டுக்கொண்டார். அன்று இராத்திரி மர்த்தீன் நித்திரைசெய்யும்பொழுது சேசுநாதர் பாதிப் போர்வையை தமது மேல்போட்ட மேரையாய் அநேக தேவதூதருடன் அவருக்குக் காணப்பட்டு "அஞ்ஞானியா யிருக்கும் மர்த்தீன் இந்தப் போர்வையால் என்னைப் போர்த்தினான்" என்றார். (இவர் சரித்திரம்.)

14. **சேராபியானுடைய அதிசயமான தர்மம்:**—இந்தப் புண்யவான் சர்வேசுரனைப்பற்றி புறத்தியாரை மிதமிஞ்சின விதமாய் ஸ்நேகித்து வந்தார். ஒரு நாடகக்காரன் கெட்டவழியில் நடந்து வந்தபடியால் இவர் அவனுக்குத் தன்னை அடிமையாக விற்றுப்போட்டு, அவனுக்கு அடிமை வேலைசெய்து வந்தார். இவருடைய புத்திமதியாலும் நன்னடத்தையாலும் அம்மனிதன் மனந்திரும்பினதுடன் செராபியார் தனக்கு ஊழியஞ் செய்யாமல் தனக்கு வழி காட்டியா யிருக்கும்படி மன்றாடி அப்போதைக் கப்போது அவருக்கு திரவிய உதவிசெய்து வந்தான். அந்தப்பணத்தை யெல்லாம் இவர் தர்மத்தில் செலவழித்து, ஏழையான ஒரு கைம்பெண்சாதியின் கடனைத்தீர்க்கும்படி தன்னை இன்னொருவனுக்கு அடிமையாக விற்றுப்போட்டார். முன்சொன்ன நாடகக்காரன் இதையறிந்து கடன் பணத்தைச் செலுத்திவிட்டு செராபியாரை விடுதலை செய்து வஸ்திரங்களையும், பணத்தையும், ஒரு சுவிசேஷப் புஸ்தகத்தையும் அவருக்குக் கொடுத்தான். நிர்வாணிகளாயிருந்த ஏழைகளுக்கு ஷை வஸ்திரங்களையுந் தன் போர்வையையுந் தர்மமாகக் கொடுத்து, பணத்தை இறப்போருக்குப் பங்கிட்டுவிட்டார். அவரைப் பார்க்கிறவர்கள் "இப்பேர்ப்பட்ட கந்தைத் துணியைப் போட்டுக்கொண்டிருக்கிறீரே! உமது வஸ்திர மெங்கே?" என்று வினவ: "நான் என்னசெய்வேன்?" சுவிசேஷத்தைக்காட்டி "இந்தப் புஸ்தகம் இவ்வாறு செய்துவிட்டது" என்பார்.

(அர்ச்சியசிஷ்டவர்கள் சரித்திரம்.)

15. **கடன்கோடுத்தவனுடைய சீட்டு:** சுவிட்சர்லாண்டு என்னும் நாட்டில் ஒருவன் அவ்வூர் குடிகளுக்குப் பணமுந் தவசதானியமும் கடனாகக் கொடுத்திருந்தான். சில காலத்துக்குப் பின் பஞ்சமுண்டானதால், அந்த நாட்டார் வெகு சங்கடப்பட்டு வந்தார்கள். ஒருநா ளிந்த தனவந்தன் தனக்குக் கடன்பட்டவர்கள் எல்லோருந் தன் வீட்டுக்கு வரும்படி சொல்லி அனுப்பினதின்மேல், கடன்காரரெல்லோரும் ஷை யான் வீட்டில் போய்க் கூடினார்கள். அப்பொழுது தனவந்தன் கால வித்தியாசத்தைப்பற்றி பேசத் தொடங்கவே, அவன் கொடுத்த பணம் தவசதானிய முதலியவற்றை வசூல் செய்துகொள்ளும் பொருட்டு தங்களைத் தன் வீட்டுக்குக் கபடமாய் வரவழைத்தானென்று கடன்காரர் எண்ணி, மகா துக்க துயரத்துக் குள்ளானார்கள். சம்பாஷணை முடியவே, முஸ்திப்பு செய்யப்பட்டிருந்த போசனத்தைப் புசிக்கும்படி கேட்டுக்கொண்டதின்மேல் அந்தக் கடன்காரர் போசனத்துக்கு உட்கார்ந்தபோதிலும், தங்களை அவன் என்னசெய்யப்போகிறானோ வென்று மன விதனங்கொண்டு, தங்கள் வீடு மாடு நிலம் முதலிய சொத்துக்களை ஏலம் போட்டு தன் கைவசப்படுத்திக்கொள்வா னென்று பயந்துகொண்டிருந்தார்கள். தனவந்தன் அந்த ஏழைகளின் கஸ்தியைக் கண்டு பரிதபித்து அவர்களில் ஒவ்வொருவனுக்கும் ஒரு சீட்டைக் கொடுத்து: மித்திரரே! உங்கள் கடனைப் பற்றி சிந்தனைகொண்டு உங்களுக்கு முஸ்திப்புச் செய்யப்பட்ட விருந்தை நன்றாய்ப் புசியாமற் போனீர்கள். உங்களுக்கு இப்போது கொடுக்கப்பட்ட சீட்டை வாசித்துப் பார்த்தபின் மறுபடியும் பந்தியில் அமருங்க ளென்றான். கடன்காரர் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட சீட்டை திறந்து வாசித்தபோது, கஷ்டகாலத்தி னிமித்தம் தங்கள் கடன் முழுதும் மன்னிக்கப்பட்டதாய் அதில் கண்டிருந்ததை அறிந்து, சொல்லிமுடியாத சந்தோஷ பிரமிப்புகொண்டவர்களாய் மறுபடியும் திருப்தியாய் விருந்துண்டு தங்கள் உபகாரிக்கு நன்றிகூறி வாழ்த்தினார்கள். (Noel)

## 2-ம்பிரிவு.

## முதல் கற்பனைக்கு விரோதமான பாவங்கள்.

### விக்கிரக ஆராதனை.

---

**யாதொரு உருவத்தைச்செய்து அது தெய்வமென்று நம்பி அதை ஆராதிப்பது விக்கிரக ஆராதனை யாகும். நமது தேசத்தில் அனேகர் சூரிய சந்திரனையும், மரம், செடி, மிருகம் முதலியவைகளையும் தெய்வங்களாக ஆராதிக்கிறார்கள். இறந்துபோன மனிதரையுந் தெய்வங்களாகப் பாவிக்கிறார்கள். இது முதல் கற்பனைக்கு விரோதமான பாவமாகும்.**

1. **ஒரு பொன்சிலை.**—அர்ச். செபஸ்தியார் உயிரோடு இருக்கும்போதே அனேக புதுமைகளைச் செய்துவந்தார். உரோமைத் தேசாதிபதியான குரோமான்சியுஸ் என்பவன் தீராக்கொடிய வியாதியால் வாதைப்பட்டு வைத்தியரால் குணப்படாமல், செபஸ்தியாருடைய புதுமைகளைப் பற்றி கேள்விப்பட்டு, அவரை வரவழைத்து, தன்னைக் குணப்படுத்தும்படி அவரை மன்றாடினான். செபஸ்தியாரோ வெனில், சத்திய வேதத்தின் மாட்சியை அவனுக்கு விளக்கிக் காட்டி, சேசுக் கிறிஸ்துநாதருடைய திருநாமத்தால் ஷை அற்புதங்களைச் செய்ததாக அறியச் செய்தார். அப்பொழுது தேசாதிபதி "நீர் குறித்துப் பேசும் சேசுநாதர் என்னைக் குணப்படுத்தினால் ஞானதீட்சை பெறுவேன்" என்றான். அதற்கு செபஸ்தியார், உமது வீட்டிலிருக்கப்பட்ட சிலைகளை உடைத்துவிடவேண்டு மென்று சொன்னதின்மேல், சிலைகளையெல்லாம் நொறுக்கிவிட்டான். சிலநாளைக்குப் பின், இவன் செபஸ்தியாரைத் தன்னிடம் வரவழைத்து தான் இன்னுங் குணப்படாததைப்பற்றி முறையிட்டான். செபஸ்தியார் அவனைப் பார்த்து: நீர் சிலைகளை யெல்லாம் உடைத்துவிட்டபோதிலும், ஒரு பொன் சிலையை மாத்திரம் உடைக்காமல் அதைப் பத்திரப்படுத்தியிருக்கிறீர். அதையுந் தொலைத்துவிடுவீராகில், உமது வியாதி குணப்படுமென்றார். தேசாதிபதி அவ்வாறு செய்தவுடனே பூரண சௌக்கியப்பட்டான்.

(செபஸ்தியார் சரித்திரம்.)

2. **தியோக்கிளேசியானும் சிற்பிகளும்.**- தியோக்கிளேசியான் இராச்சியபாரம் பண்ணுங்காலத்தில் சிற்பி வேலையில் தேர்ந்த 5 வேலையாட்கள் இருந்தார்கள். இவர்கள் உத்தம கிறிஸ்துவர்கள். சேசுக்கிறிஸ்துநாதருடைய திருநாமத்தை உச்சரியாமல் எந்த வேலையையுந் துவக்கமாட்டார்கள். அக்காலத்தில் இராயன் ஒரு சிறந்த மாளிகையைக்கட்ட உத்தேசித்து, கொத்துவேலையிலும் சிற்பி வேலையிலும் தேர்ந்த ஷை 5 வேலைக்காரருக்கு அந்த வேலையை ஒப்பித்தான். சிற்பிகள் நமூனாவில் கண்டபடி இலை, கொடி, பூ, பக்ஷி, மிருகங்கள் முதலிய ரூபங்களை மகா திறமை சாமர்த்தியத்துடன் சகலரும் அதிசயிக்க, சலவைக் கல்லில் கொத்துவேலை செய்தார்களே யன்றி, பொய்த் தேவனுடைய சிலையை நமூனாவில் கண்டபடி கட்டிடத்தின் மத்தியில் செதுக்காமல் அந்த இடத்தை காலியாய் விட்டுவிட்டார்கள்.

கட்டிடத்தை இராயன் போய் பார்த்தபோது, வேலைக்காரரைப் புகழ்ந்துகொண்டாடினான். ஆனால் நமூனாவில் கண்டபடி தன் தேவனுடைய சிலையை சித்திரியாததற்குக் காரணம் ஏதென்று வேலைக்காரரை கோபத்துடன் வினவ, 5 சிற்பிகளும், "இராஜேந்திரனே! நாங்கள் சத்திய கடவுளை வணங்குங் கிறிஸ்துவர்கள். பொய்த் தேவர்களுடைய ரூபங்களைச் செய்வது எங்களுக்குப் பாவமாகும்." என்று தைரியத்துடன் சொல்லக்கேட்ட இராயன் அவர்களை நிஷ்டூரமாய் அடிப்பித்து, ஒரு இருப்புப் பெட்டியில் போட்டு, பூட்டி, ஆற்றில் எறிந்துபோடும்படி கற்பித்தான். இவ்வாறு அந்த 5 பேரும் வேதசாட்சி முடி பெற்றார்கள். (திருச்சபை சரித்திரம்.)

3. **அர்ச். இஸ்தாக்கியார்.**—இஸ்தாக்கியார் ஆஸ்தி பாஸ்தியில் மிகுந்த பேர்போன தளகர்த்தனாய் திராஜன் சக்கரவர்த்திகாலத்தில் உரோமைச் சேனையை நடத்திவந்தார். இவர் ஒருநாள் காட்டில் வேட்டை யாடும்பொழுது ஒரு மானைக் கண்டு, அதை அதிவேகமாய்த் துரத்திக்கொண்டு போகையில், அந்த மான் சடுதியில் ஓட்டத்தை நிறுத்தி வேட்டைக்காரனுக்கு எதிராக நின்றது. அப்பொழுது அதன் தலையில் இரு கொம்புகளுக்கு மத்தியில் பிரகாச கதிரை வீசும் சிலுவையில், அறைபட்ட மேரையாய்க் நமது கர்த்தர் காணப்பட்டார். "மெய்யான பாக்கியத்தை அடையவேண்டுமாகில் விக்கிரக ஆராதனையை விட்டுவிட்டு சத்திய வேதத்தில் உட்படவேண்டும்" என்கிற வாக்கியமுங் கேட்கப்பட்டது. இஸ்தாக்கியார் சத்தியவேத படிப்பினையைக் கற்றுக்கொண்டு தன் குடும்பத்

துடன் ஞானதீட்சை பெற்றார். இதைப் பற்றி கேள்விப்பட்ட சக்கரவர்த்தி மூர்க்க கோபங்கொண்டு இஸ்தாக்கியாருக்கிருந்த பூஸ்திதி தனஸ்திதி முதலிய சகலத்தையும் பறித்துக்கொண்டு அவரை அட்ட தரித்திரனாக்கினான். இதுநிற்க அவருடைய மனைவியும் பிள்ளைகளும் சடுதியில் காணாமல் போனபடியால், இஸ்தாக்கியாருக்கு வாக்குக்கெட்டாத கஸ்தி வியாகூலம் உண்டானது.

இது இப்படியிருக்க, உரோமையர் சத்துராதிகளுக்கு விரோதமாய் சண்டைக்கு முஸ்திப்புச் செய்யுங் காலத்தில், தங்கள் பிரிய படைத் தலைவனாகிய இஸ்தாக்கியார் சேனையை நடத்தினால் ஜெயமுண்டாகும்; ஆகையால், அவரை வரவழைக்கவேண்டுமென்று சொல்லி படை மும்மரிக்க, இராயன் இஸ்தாக்கியாரை படைத்தலைவனாக்கினான். சகலரும் சந்தோஷித்து மகிழ, எஸ்தாக்கியார் படையை நடத்திக்கொண்டு போனபொழுது, முன் காணாமற்போன மனைவியும் பிள்ளைகளும் அற்புதமான விதமாய் தம்மிடம் வந்து சேர்ந்ததைக்கண்டு, சந்தோஷங்கொண்டு சர்வேசுரனுக்கு நன்றிசெலுத்தினார். இவர் படையெடுத்து சத்துராதிகளுடன் போர் பொருது சிறந்த வெற்றியுடன் உரோமைக்குத் திரும்பினபொழுது இராயன் அதிக மகிழ்ச்சிகொண்டு, அடைந்த வெற்றியினிமித்தம் விநோதமான வேடிக்கை விளையாட்டுக்களைக் கொண்டாடி, பொய்த்தேவர்களுக்கு பசுபந்தங்களை சமர்ப்பிக்கக் கற்பித்து, இஸ்தாக்கியாரும்இதில்சேர்ந்து பலியிடும்படி ஆக்கியாபித்தும், அவர் அதற்குச் சம்மதியாதபடியால், அவருடன் மனைவி பிள்ளைகளையும் சிங்கங்களுக்கு இரையாகப் போடும்படி கற்பித்தான். சிங்கங்கள் வேத சாட்சிகளைத் தொடா திருந்ததின்மேல், வெண்கலத்தால் ஒரு பெரிய ரிஷபஞ்செய்வித்து, வேத சாக்ஷிகளை அதில் போட்டு அடைத்து அதன் அடியில் பெரும் நெருப்பு மூட்டக் கற்பித்தான். வேத சாட்சிகள் தேவ பாடல்களைப் பாடிக்கொண்டு தங்க ளுயிரை சர்வேசுரனுக்குப் பலியாக ஒப்புக்கொடுத்தார்கள். (இவர் சரித்திரம்.)

4. **பசிதீரப் புசித்த தெய்வம்:**--யூதர் பபிலோன் அடிமைத் தனத்தி லிருந்த காலத்தில் அத்தேசத்து அக்கியானிகள் பேல் என்னும் பொய்த்தேவனை ஆராதித்துவந்தார்கள். அந்த பேலுக்கு உயிர் உண்டென்று பூசாரிகள் கபடமாய்ச் சொன்னதின்மேல், அச்சனங்கள் உணவு பதார்த்தங்களையுஞ் சாராயத்தையும் கோவிலுக்குக் கொண்டுபோய் பேல் விக்கிரகத்துக்குமுன் வைப்பார்கள். தனியேல் தீர்க்கதரிசியானவரோ, பேலுக்கு உயிர் இல்லையென்றும் அதற்கு முன் வைக்கப்படும் உணவு, பான முதலியவற்றை அது அருந்துகிறதில்லை யென்றும் சொல்லிவருவார். தன் வார்த்தையின் உண்மையை ருசுப்பிக்கும்படி அத்தேசத்து அரசன் தனியேலுக்குக் கற்பித்ததின்மேல், அந்தக்கோவில் வழக்கப்படி போசன வர்க்கங்களையும் கள், சாராய முதலிய லாகிரி வஸ்துக்களையும் வைத்தபின் தரைமேல் மெல்லிய சாம்பலைத் தூவிவிட்டு கோவிலைப்பூட்டி அதற்கு இராஜ முத்திரை யிடும்படி திர்க்கத்தரிசியானவர் கேட்டுக்கொண்டார்.

மறுநாள் காலை அரசனும் தீர்க்கதரிசியும் திரளான ஜனமும் முத்திரையை உடைத்து கோவிலுக்குட் பிரவேசித்தபொழுது, அங்கு வைக்கப்பட்டிருந்த உணவு பதார்த்தமும் பானமும் காணப்படாதபடியால் அரசன் அதிசயித்து, தனியேலை நோக்கி "பார்த்தீரா, பேல் உணவெல்லாம் புசித்து விட்டான்!" என்று பிரமிப்புடன் சொல்லக் கெட்ட தீர்க்கதரிசி புன்னகையுடன்,சாம்பல்மேல் பட்டிருக்கும் பாத அடிகளைப் பார்க்கும்படி அரசனுக்குச் சொன்னார். தரையில் பெரிதுஞ் சிறிதுமான பாத அடிகள் இருப்பதை அரசன் கண்டுகொண்டு, அதை தீர்க்க விசாரிக்கையில் கோவிலுக்குந் தங்கள் வீட்டுக்கும் இருந்த சுரங்கத்தின்வழியாய் அந்த பூசாரிகள் தங்கள் குடும்பத்துடன் கோவிலுக்குட் சென்று, அங்கு வைக்கப்பட்ட உணவுகளைத் தின்றுவந்ததாக அறிந்தபின் அவர்களைக் கொலை செய்யும்படி கற்பித்தான். (தனியேல் சரித்திரம்.)

5. **பசிதாகத்தால் கண்ணீர் சிந்தின சிலை:**—மன்னார் கோவிலில் ஒரு விக்கிரகம் தனக்கு வேண்டிய தர்மம் அரசனும் பிரசைகளுங் கொடாததைப் பற்றி கண்ணீர் விட்டு அழுவதாக பிரஸ்தாபம் பிறந்தது.



திரளான ஜனம் அந்த விக்கிரகத்தைப் போய்பார்த்தபொழுது அதன் இருகண்களினின்று நீர்வடிவதைக் கண்டு அதிசயித்து, அதற்கு திரளான தர்மம் ஒப்புக்கொடுத்து வந்தார்கள். அக்காலத்தில் மதுரையை ஆண்ட அரசனும் அவ்விடத்துக்குப்போய் அங்கு நடந்த அதிசயத்தைக் கண்டு பிரமித்து ஏராளமான தான தர்மங் கொடுப்பதாக பிரார்த்தனை செய்துகொண்டார். மந்திரியோ, சிலையில் ஏதோ சூது இருக்குமென்று, அதன் தலைக்குள் வைக்கப்பட்டிருந்த ஈரப்பஞ்சினின்று நீர் கண்வழியாய் ஒழுகுவதை அறிந்து, அரசனை அவ்விடத்துக்கு அழைத்துக் கொண்டுபோய் பூசாரிகளுடைய கபடத்தை அவருக்குக் காட்டினதின் மேல், அரசன் பூசாரிகள் மட்டில் கோபங் கொண்டதுடன் அவர் செய்த பொருத்தனையையுஞ் செலுத்தினவரல்ல. (மேத். ஞானோபதேச தடாகம்.)

---

# MORAL ADMONITIONS.

## சுபோதனா மஞ்சரி.

---

**மருந்திடுதல்:**—ஆதாமுக்குத் துணைவியாக ஏவாளைப் படைத்தா ரன்றோ சர்வேஸ்வரன்? ஆகவே, புருஷனுக்குப் பெண்சாதி எல்லாத்திலும் துணைவியும், தோழியும், கீழ்ப்பட்டவளுமாக உண்டாக்கப்பட் டிருக்க, இவள் அவனை அடக்கியாளவேண்டுமென எண்ணுவது தகுமா?புருஷனுக்குப் பெண்சாதியேதவிர பெண்சாதிக்குப் புருஷ னல்லவே. சுவருக்குச் சித்திரமோ சித்திரத்துக்குச் சுவரோ? இப்படி யிருக்கச் சில ஆங்காரமுடைய ஸ்திரிகள்தங்கள் கணவர்களை தங்களிஷ்டப்படி அடக்கி யாளவேண்டுமென்ற ஆங்கார எண்ணத்துடன் அவர்களுக்கு மருந்திட்டு அவர்களை தம் வசப்படுத்தத் துணிகிறார்கள். இது மகா பாதகம்! மயக்கங்கொடுத்து கொள்ளை யடித்ததை யொக்கும். அவவிசுவாசிகளும் துன்மார்க்கருமே இப்பேர்ப்பட்ட ஈனத்தொழிலைச் செய்யத் துணிவார்களேயொழிய, கடவுளுக்குப் பயந்தவர்கள், தெய்வபக்தியுள்ளவர்கள், விசுவாசிகள், சன்மார்க்கர்கள் அதை ஒருபோதுங் கனவிலும் எண்ணார்கள். தானாய்க் கனியாத பழத்தை தடிகொண்டடித்துக் கனியவைக்க முயலுவது போல, இது நிஷ்பிரயோசனமான காரியமுமாகும். இடுமருந்தினால் யாதொருவன் தன்வசப்படுவானென்பது வீண் மனோரதம்; இப்படியொருவன் உண்மையில் வசப்பட்டானென்று யாருங் கேள்விப்பட்டதில்லை. இதற்கு மாறாக இத்தகைய இடுமருந்துகளினால் தேக சுகங்கெட்டு, மீளா வியாதியி லகப்பட்டு,அகால மரணத்துக்குள்ளான புருஷர்கள் அனந்தம். அகங்கார குணம் படைத்த மனைவிமார்களே! சிந்தித்துப் பாருங்கள். அருமந்த கணவனை இழந்து அமங்கிலி யாகாதீர்கள். பிள்ளை வரங் கேட்கப்போய் புருஷனைப் பறிகொடுத்ததுபோலவும், உள்ளதுங்கெட்டதடா நொள்ளைக்கண்ணா வென்பது போலவும் புருஷனை யுங்கள் வசப்படுத்தப்போய், புருஷனைப் போக்கடித்துக்கொள்ளாதீர்கள்! தெய்வத்துக்குப் பயந்து, அவர் சித்தத்துக்கு அமைந்து புருஷனுக்குக் கீழ்ப்படிந்து நடங்கள். அப்போது கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார்.

**கருப்பஞ் சிதைத்தல்.**—பூலோக முண்டானது முதல் பதினாறு நூற்றாண்டுகளாய் உற்பத்தியான மனுஷ சாதியனைத்தும் சலப்பிரளயத்தால் அழிந்துபோக, இப்போது இருக்கும் சந்ததி நோவேயின் குடும்பத்தினின்று வந்ததன்றோ? சலப்பிரளயத்துக்குப் பின் மகாத்துமாவான நோவே சர்வேஸ்வரனுக்கு நன்றியறிந்த தோத்திரமாக சர்வ தகனப்பலிகள் செலுத்தினபோது, சர்வேசுரன் நோவேயின் குடும்பத்தை நோக்கி "நீங்கள் பெருகிப் பலுகிப் பூமியை நிரப்புங்கள்." (ஆதியாகமம் 9-1) என்று அருளிச் செய்தார். இதனால் மனுஷ ஜாதி அதிகரித்துப் பலுகவேண்டு மென்பது சர்வேசுரனுடைய சித்தமுங் கட்டளையுமாமே. ஆகவே தெய்வ நியமனப்படி தேவத்திரவியானுமான மாகிய மெய் விவாகங் கொண்டு புத்திரர்களைப் பெற்று வாழ்வது கிரமம். ஆனால் கலியாணஞ் செய்து ஸ்திரி புருஷர்களாய் ஜீவித்தும், தவயா தவமிருந்தும், தான தருமங்கள் செய்தும், நோன்புகள் பல நோற்றும், பிரார்த்தனைகள் பல செய்தும் சிலருக்குப் புத்திரப் பேறில்லாமல் போய்விடுகிறது. இது தெய்வ சித்தம். இப்படியிருக்க, தெய்வ கடாட்சமாய் புத்ர பேறுக்கான கருப்ப முண்டான போது, அதை யழிக்கத் தேடும் பாதகர்களை யென் சொல்லலாம்! சோரப் புருஷருடன் சஞ்சாரஞ் செய்யும் ஸ்திரீகள், கலியாணமாகாத கன்னிகைகள், கைம்பெண்களே பெரும்பாலும் இத்தோஷத்துக்கு ஆளாகிறார்கள்; மேலும் தேக சுகத்தை முன்னிட்டும், குடும்ப அபிவிர்த்தியைக் குறைப்பதற்காகவும் இந்த மாபாதகத்

தைக் கட்டிக்கொள்ளுகிறார்கள். இப்படிப்பட்ட சண்டாளர்கள் எல்லோரும் தலையான லூசிப்பேய்க்குச் சமானமானவர்கள். ஏனெனில், லூசிப்பேயும் ஆங்காரங் கொண்டு சர்வேசுரனுடைய சித்தத்தை எதிர்த்து நின்றது. இப்பாதகர்களும் மனுஷ ஜாதி பலுகவேண்டுமென்ற கடவுளின் திருச்சித்தத்துக்கு எதிர்த்து சிசுஹத்தி செய்கிறார்கள். இப்படிக் கருப்பத்தை யழிக்கத் துணியும் பாவிகளுடைய குடும்பங் குலைந்து மிகு நாசமடையும். இப்படிப்பட்ட பாதகத்தைத் தெரிந்தோ தெரியாமலோ கட்டிக்கொண்ட கர்மிகள் அதற்காக உத்தம மனஸ்தாபப்பட்டு நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்து தாங்கள் சாகுமட்டுந் தவஞ்செய்வார்களாக. மேலும், அநாத சிசுக்களுக்கும் குழந்தைகளுக்குந்தம்மால் கூடியதர்மமுஞ் செய்வார்களாக. சகோதரர்களே! பாவபுண்ணியத்தைக் கவனித்து கடவுளுக்கு அஞ்சி நடவுங்கள். பூலோக வாழ்வே சதமென்று எண்ணிவிடாதீர்கள்! மரணம் திருடனைப்போல வருமென்றும், மரித்தபின் கடவுளுக்கு கண்டிப்பான கணக்குச்சொல்லவேண்டுமென்றும் சிந்தித்துப் பாருங்கள்.

**போலிப்பக்தி** :—சில கிறிஸ்துவர்கள், அந்திசந்தி தவறாமற் கோவிலுக்குப் போவார்கள். அங்கே நெடுநேரம் உருக்கமாய் செபிப்பார்கள். அடிக்கடி "ஆண்டவரே, அர்ச். சூசையப்பரே, அந்தோனியாரே, லூர்து மலை மாதாவே, இருதய சேசுவே, ஆண்டவனே" என்பார்கள். அடிக்கடி நன்மையும் வாங்குவார்கள். இவர்கள் செய்வதெல்லாம் கபடமாய் ஊர் மெச்சிக்கொள்ளச் செய்கிறார்களென்றுஞ் சொல்வதற்கில்லை. உள்ளப் பூர்வமாகவே செய்யலாம். ஆயினும், இவர்கள் செய்யுஞ் செபமும் பண்ணுந் தபமும், நடத்தும் நற்கிரிகைகளும் சர்வேசுரனுக்கு ஏற்காமற் போகின்றன. ஏனெனில், அவர்கள் நடத்தை சரியானதல்ல; உண்மைக் கிறிஸ்துவர்களுடைய நடத்தையல்ல. மோசம், வஞ்சகம், பொறாமை, திருட்டு; முதலிய பாதகங்கள் செய்வார்கள். பிறர் அடைக்கலமென்று வைத்த பொருளை யபகரித்தும், பிறர் பொருளை யநியாயமாய்த் திருடியும், கொள்ளல் விற்றல், கொடுக்கல் வாங்கல் முதலிய விவகாரங்களில் மோசங்கள் செய்தும், லஞ்சம் பரிதானங்கள் வாங்கியும், இன்னும் வேறுவித அநியாயங்கள் புரிந்தும் வருவார்கள். இவர்கள் செய்யும் செப தவ தான தர்மங்கள். கடவுளுக்கு ஏற்குமா? படிக்கிறது திருவாசகம் இடிப்பது சிவன் கோவிலா? இது பற்றியல்லோ நம்முடைய திவ்ய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துநாதர் "என்னைநோக்கிஆண்டவரே, ஆண்டவரே யென்கிற எவனும் மோட்சராச்சியத்தில் பிரவேசிப்பதில்லை. ஆனால் பரமண்டலங்களிலே யிருக்கிற என் பிதாவின் கற்பனைகளை யநுசரிக்கிறவனே மோட்சத்திற் பிரவேசிப்பான்" என்று திருவுளம்பற்றினார். ஆகையினால், வாயினாலும் மனதாலும் செபிப்பது, பூசை காண்பது, மற்ற நற்கிரியைகளைச் செய்வது மாத்திரம் போதாது. பத்துக்கற்பனைகளை யனுசரித்து வரவேண்டும்; நமது நடத்தையை சீர்ப்படுத்திக்கொள்ள வேண்டும்; இயற்கைத் தீக்குணத்தை வெற்றிகொள்ள் இடைவிடா முயற்சி செய்யவேண்டும். இப்படிச் செய்யாமல் "நான் வழக்கமாய் வாங்குகிற லஞ்சத்தை வாங்கிக்கொண்டுதா னிருப்பேன்; வியாபாரத்தில் வழக்கமாய் செய்கிற மோசத்தைச் செய்துகொண்டுதான் வருவேன், யாராவது சற்று அயர்ந்தால் அவர்களது சொத்தை அப்படியே அபகரித்துக் கொள்வேன், செய்கிற விபசாரஞ் செய்துகொண்டுதா னிருப்பேன், ஆனால், இதோடு செபமும் பண்ணுவேன், தவமும் பண்ணுவேன், தானமும் பண்ணுவேன், தருமமும் பண்ணுவேன், நன்மையும் வாங்குவேன்" என்பது தன்னைத்தானே ஏய்க்குஞ் சொல். இது எப்படியிருக்கிறதென்றால், "பாவமுஞ் செய்வேன் புண்யமுஞ் செய்வேன், நரகத்துக்கும் போவேன், மோட்சத்துக்கும் போவேன்" என்பது போலிருக்கிறது. இது எக்காலத்திலும் முடியாத காரியம். "எவனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய முடியாது" என்பது நமது ஆண்டவர் திருவுளம்பற்றின வாக்கியம். அதனர்த்தமாவது: சர்வேசுரனுக்கும் பசாசுக்கும் ஊழியஞ் செய்ய முடியாது என்பதே. ஆ! சகோதரனே, ஒன்றைத் தெரிந்துகொள். மோட்சத்தையோ நரகத்தையோ! நரகத்துக்கான பற்றுதல்களை வைத்திருந்தாயாகில் மோட்சஞ் சித்திக்காது. காலத்தோடே தக்கமுயற்சி யெடுத்துக்கொள். மோசம்போகாதே! இராக்காலம் வரும்! அப்போது நீ யொன்றுஞ் செய்யக் கூடாமை யாய்விடும். இதைத் தீரயோசித்துப்பார்.

**கடன் பூசை**:—திருச்சபையின் சொற்படி கேளாதவன் உனக்கு அஞ்ஞானியைப் போலாகக் கடவானென்று கர்த்தர் திருவுளம் பற்றினார். ஞாயிற்றுக்கிழமை முழுப் பூசை காணவேண்டு



மென்பது திருச்சபைக் கட்டளை. இதை யனேகர் அசட்டை செய்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமை கடன் திருநாள் என்பதைச் சிந்தியாமல், சனங்கள் பெருங் கூட்டமாய்க்கூடி தேர் சுற்றுப் பிரகாரம், பாணவேடிக்கை முதலிய ஆரவாரச் சிறப்புடன் கொண்டாடப்படும் யாதொரு திருநாள் பெருநாளானால் அப்போது மாத்திரம் நாலுபேர் பார்த்து மெச்சத்தக்கதாய்ச் சிறக்க உடுத்துக்கொண்டு கோவிலுக்கும் போவார்களே தவிர, ஞாயிற்றுக்கிழமையாயிற்றே, கடன் திருநாளாயிற்றே, பூசைகாண வேண்டிய கடனாயிற்றே என்று நினையார்கள். மற்ற நாட்களில் அதிகாலையில் எழுந்து தங்கள் உத்தியோக அலுவல் முதலியவைகளைக் கவனிக்கிற அவர்கள் அன்றைக்கு ஞாயிற்றுக்கிழமைதானே யென்று பின்னும் ஒரு தூக்கந் தூங்குவார்கள். "அடேபையா, என்னடா மணி? கோவிலில் தட்டுமணியடித்தால் என்னை வந்து எழுப்பு. அதற்கு முன்னேவந்து எழுப்பப்போகிறாய்; ஜாக்கிரதை. கொன்றுவிடுவேன் அப்படி எழுப்பினாயானால்" என்று சொல்லிவிட்டுத் தூங்குவார்கள். பூசை நேரந் தப்பிப்போனாலும் போகலாம். இவர்களுடைய தூக்கங் குறையப்படாது. பூசை தவறிப்போனால் என்ன? Fine னா? அபராதமா? பிளாக் மார்க்கா? ரிப்ரிமாண்டா? ரெடக்ஷனா? அடிப்பதார்? பிடிப்பதார்? ஒன்றுமில்லையே. இப்படி அரைப்பூசை, காற் பூசை காண்பார்கள்; அல்லது படுக்கையிலேயே முழுப் பூசையையுங் கண்டுவிடுவார்கள். இதற்குச் சமாதானம்: "ஐயா, இராத்திரி பத்துப்பதினோர் மணிவரையிலும் சும்மா பேசிக்கொண் டிருந்துவிட்டேன். அதிகாலையில் நல்ல நித்திரை, அப்படியும் மூன்றாம்மணி யடிக்கும்பொழுது எனக்குத் தெரியும். இந்தப்பயலை தட்டுமணி யடித்ததும் எழுப்படா வென்று அந்தண்டை திரும்பித் தூங்கிவிட்டேன். அவனும் எழுப்பினான்; ஆனால் எழுந்திருக்கலாமென்று இந்தண்டை திரும்பி சற்று கண்ணை மூடினேன். அப்படியே தூக்கமயக்கம் இழுத்துக்கொண்டு போய்விட்டதய்யா. பூசை போயிற்று. என்ன செய்யலாம். என்மேலே குற்றமில்லை." என்பார்கள். "வேணுமென்று நூற்றால் வெண்ணைக்கட்டிபோல நூற்கலாம்" என்றோர் பழமொழியுண்டு. அது போல மெய்யாகவே பக்தி விசுவாசத்துடன் பூசைகாண விரும்புவர்கள் இம்மாதிரி சாக்குப் போக்குகளைச் சொல்வார்களா? யாதோர் தேர் திருநாளைக்குப் பிரயாணப்பட அடுத்தநாள் அதி காலையைக் குறித்ததாயிருக்கட்டும். இராத்திரி யெல்லாந் தூங்குவார்களா? முட்டை முடிச்சுகளைக் கட்டவும், கட்டுச்சோறு கட்டவும் முன்னாளிலேயே சாமக்கிரயங்களைச் சித்தப்படுத்துவதோடு, அன்று நடுச்சாமத்தில் எழுந்திருந்து பிரயாணத்துக்கு முஸ்திப்பு செய்வதில், பிள்ளை குட்டிகளை யெழுப்பி வீடெல்லாம் ஏக கூச்சலாக்கிவிட மாட்டார்களா? இப்படியாய் தங்களுடைய ஆத்தும விஷயத்தில் தங்களைத் தாங்களே ஏய்த்துக் கொள்ளுகிறார்கள் அநேகர். எல்லா காரியங்களையும் உள்ளும் புறமும், அந்தரங்கத்திலேயும், வெளியரங்கத்திலேயும் பற்றும் பற்றாய்க் கண்டறிகிற சர்வஞான சம்பூரணராகிய கடவுளை யேமாற்றலாகுமோ? ஆ! ஸ்நேகிதனே! நீதானே உனக்குள்ளே யோசித்துப்பார். ஒருவாரமெல்லாம் உன் சரீரத்துக்காக உழைக்கிறாய், கவலைப்படுகிறாய், கஷ்டப்படுகிறாய். அதில் ஒருநாளென்கிலும் உன் ஆத்துமத்துக்காக சுறுசுறுப்புடன் ஊழியஞ் செய்ய வேண்டாமோ? சரீரமோ கொஞ்சத்தில் அழிந்து போவது. ஆத்துமமோ ஒருபோதும் அழியாதது. நித்திய பாக்கியமோ நித்திய நிர்ப்பாக்கியமோ அநுபவிக்கப் படைக்கப்பட்டது. "நீ உலக மெல்லாம் உனக்காதாயமாக்கிக் கொண்டாலும், உன்னாத்துமஞ் சேதமாய்ப் போனால் என்ன பிரயோசனம்." "நீ முந்தமுந்த சர்வேசுரனுடைய இராச்சியத்தைத்தேடு. அப்போது இ(வ்வுலகத்த)வைகளுங் கூடக் கொடுக்கப்படும்."

---

# CORRECT THINGS FOR CATHOLICS.

# கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

முன் தொடர்ச்சி.

## சபைகள், சங்கங்கள்.

---

1. எந்தெந்த விசாரணைகளில் சபைகளும் சங்கங்களும் நன்றாய் நடந்து வருமோ, அந்த விசாரணைகளே செழிப்புள்ள விசாரணைகளென் றறிந்திருப்பது ஒழுங்கு.

(தேவை, ஆம் தேவை சங்கங்களும், சபைகளும் ஸ்தாபித்து நடத்த குருக்களுக்கு உதவியாக கிறிஸ்துவர்கள் அவசியம் தேவை. ஆனால் எப்படிப்பட்ட கிறிஸ்

துவர்கள்? தங்கள் அந்தஸ்தின் பெருமை
யையும், சுத்தசீலத்தையும், கல்வித்திறமை
யையும், வாய்ச் சம்பிரயதாயத்தையும் தூ
க்கத்தில் முதலாய் மறவாமல், சதா சிந்தி
த்துக்கொண்டு, பிறரைக்கேவலமாய் நடத்
தும் பரிசேயர்களைப் போன்ற கிறிஸ்து
வர்களல்ல. இதைச் செய்யவேண்டும், அ
தைச் செய்யவேண்டுமென்று சொல்லி,
பிறகு முசலைக் கண்டு பதுங்கின நரியைப்
போல நழுவிவிடுபவர்க ளல்ல. "கத்தோ
லிக்கு வேதத்தில் என்ன? இந்தச் சங்கமி
ல்லை, அந்தச்சங்கமில்லை" யென்று எப்போ
தும் குருக்களையுங் கிறிஸ்துவர்களையுங் கு
றை கூறி, தங்களாலானதைச் செய்யப்
பின்னிடுகிறவர்களல்ல. கிறிஸ்துவர்களுக்
காக ஒருஅற்பபிரயாசையெடுக்கச் சொன்
னால்: "என்னாலாகாது,என்சகோதரனுக்கு
நானென்ன காவலோ" வென்று காயீனைப்
போல் கையைவிரிக்கிறவர்களல்ல.எல்லாப்
பேச்சுக்கும் தலையையாட்டி, பணப் பேச்
செடுத்தவுடன் பதுங்கிக்கொள்ளுகிறவர்
களல்ல. ஆனால், உத்தமமான கிறிஸ்து
வர்கள்; நல்லொழுக்கமுள்ள கிறிஸ்துவர்
கள்; கல்விப்பயிற்சியும் உண்மையான பி
றர் சிநேகமும் உதாரகுணமு முள்ளவர்
கள்; யோக்கியர்கள், நம்பிக்கையுள்ளவர்
கள்; வீண்பெருமையையும் சுயநன்மையை
யுங் கருதாமல் பொது நலத்திற்காக உழை
ப்பவர்கள்; அனைவரையும் சகோதரராகப்
பாவித்து, யாவரோடும் வாஞ்சையாய் நட
ந்து கொள்ளுபவர்கள்; மற்றவர்கள் மன
தை புண்படுத்தச் சகியாதவர்கள்; பெரி
யோர்களுக்கு அமைந்து நடப்பவர்கள்; தி
ருச்சபையின் கருத்து இன்னதென் றறிந்
திருப்பவர்கள் ஆக இவர்களே தேவை. இ
ப்படிப்பட்ட உத்தமர்கள் ஒவ்வொரு விசா
ரணையிலும் தோன்றி, குருக்களோடு ஒன்
றித்து உழைத்துவந்தால், கிறிஸ்துவ ஜன
சமூகம் மெத்தவும் முன்னுக்கு வரும்.)

2. யாதொரு சபையைச் சேர்ந்த
வர்கள் அச்சபையின் கிரமப்படி நடந்து,
அதற்குண்டான விதத்தைச் செலுத்து
வது ஒழுங்கு.

3. சபையார் தங்கள் சபைச் செபங்
களைக் கிரமமாய்ச் செபிப்பதுடன், குறி
த்த நாட்களில் சபையாரோடு சேர்ந்து
நன்மை வாங்குவது ஒழுங்கு.

4. சட்டப்படி சபையார் தரிக்கவே
ண்டிய சின்னங்களைத் தரித்துக்கொள்ளு
வது ஒழுங்கு.

5. ஒவ்வொருவிசாரணையிலிருக்கும்
தனவான்களும் படித்தவர்களும் தாங்க
ளும் தங்கள் குடும்பமும் சுகமாயிருந்தால்
போதுமென் றெண்ணமலும், "எட்டிப்ப
ழுத்தாலென்ன, ஈயாதார் வாழ்ந்தாலென்
ன" வென்று பிறர் கண்டு வெறுக்க இடங்
கொடாமலும், பொது நலத்திற்காகக் கொ
ஞ்சமாவது உழைப்பது ஒழுங்கு.

6. சபையை நடத்துவதினால் உண்
டாகும் சிரமங்களை விட, அதனால் உண்
டாகும் பிரயோசனங்களையே யோசித்து
அச்சிரமங்களைச் சகித்து விடா முயற்சி
யாய் உழைப்பது ஒழுங்கு.

7. சபையில் யாதாமொரு உத்தி
யோகஸ்தனாயிருப்பதினால் வெகுமான
மிருக்கும் பட்சத்தில், கூடவே உழைப்பும்
பொறுப்பும் உண்டென்று அறிந்திருப்
பது ஒழுங்கு.

8. சபையின் வரவு செலவு கணக்கு
களைக் கிரமமாய் வைத்து, அவைகளைப்
பார்க்கவேண்டுமென்று சபையாரில் யாரா
வது கேட்டால், மனங் கோணமல் காட்டு
வது ஒழுங்கு.

9. சபையின் உத்தியோகஸ்தர்கள்,
கூட்டமாய் சபை ஒழுங்கின்படி நன்மை
வாங்கவேண்டிய நாட்களில் (இரண்டு
பூசை கிடைக்கிற இடங்களில்) முந்திய பூ
சையில் நன்மைவாங்கி, சபையார் அநுசரி
க்கவேண்டிய காரியங்களைக்கிரமமாய்விசா
ரிப்பது ஒழுங்கு.

10. குறித்த நாட்களில் கூட்டம்
நடத்தி சபைக்கடுத்த காரியங்களைத் திட்
டஞ் செய்வது ஒழுங்கு.

11. சபையாரைச் சகோதரரைப்
போல் பாவித்து, எல்லாரோடும் ஒற்றுமை
யாய் சகோதர வாஞ்சையுடன் நடப்பது
ஒழுங்கு.

12. ஒவ்வொரு கிராமத்திலும். பிர
தான பட்டணங்களிலும், (Co-operative
Credit Societies) கூட்டுறவுச் சங்கங்களை
ஸ்தாபிப்பது ஒழுங்கு. (ஒரு ஜர்மானிய
கத்தோலிக்குக் கிறிஸ்துவ கனவானால்
ஏற்படுத்தப்பட்ட இந்த கூட்டுறவுச் சங்க



மானது உலகமெங்கும், இந்தியாவின் பல
பாகங்களிலும் ஸ்தாபிக்கப்பட்டு அனந்த
நன்மைகளை விளைவிக்கின்றது. நம் கத்தோ
லிக்குக் கிறிஸ்துவர்களுக்குள்ளும் இத்த
கைய சங்கங்கள் வெகுவாய் ஸ்தாபிக்கப்
பட்டிருந்தால் மெத்த நல்லது.)

13. கூடியமட்டும் ஒவ்வொரு விசார
ணையிலும் மதுவிலக்குச் சங்கங்களை ஸ்தா
பிப்பது ஒழுங்கு. (குடியாகிய கொடிய
துர்ப்பழக்கம் எங்கும் பரவி, பிரசைகளுக்
கு மெத்த நஷ்டத்தை விளைவிக்கும் இக்
காலத்தில், "கள் குடிப்பவன் கடையன்"
என்று இந்தியர்களுக்குள் ளிருந்த வெறுப்
பு போய், கண்ய முள்ளவர்க ளென்றும்,
அறிவுள்ளவர்களென்றும் மதிக்கப்படுகிற
வர்கள் முதலாய்க் குடியைக் கையாடி, பல
வீனமுள்ள தங்கள் சகோதரர்களுக்குத்
துர்மாதிரியாய் பிரவர்த்திக்கும் இக்கால
த்தில், சந்திற்கொரு சாராயக்கடை சகஜ
மாயிருக்கும் இக்காலத்தில், விளையாட்டா
ய்த் துவக்கினது வினையாய் முடிந்ததுபோ
ல் வாலிபர்கள் வேடிக்கைக்கு முதல் முதல்
குடியை யாரம்பித்து, பிறகு அதை மேற்
கொள்ள முடியாமல் பலவிதத்திலும் கேடு
கெட்டுப்போகும் இக்காலத்தில் ஆண்பி
ள்ளைகளைப்போலவே பெண்பிள்ளைகளும்
மானங்கெட்டு குடித்துவரும் இக்காலத்தி
ல், மதுவிலக்கு சங்கங்களை ஸ்தாபித்து
நடத்திவருவது மெத்தவும் பயன் விளை
விக்குமென்பதிற் சந்தேகமில்லை.)

14. குறைந்தது ஒவ்வொரு மேற்றி
ராசன நகரத்திலும், வாலிபர்களுக்காக வி
சேஷ சங்கங்கள் ஸ்தாபித்து, அவர்களைக்
கல்வியிலும் நல்லொழுக்கத்திலும் பொது
நலப்பிரியத்திலும் பயிற்சி செய்துவருவது
ஒழுங்கு. (வாலிபர்கள் கல்விச்சாலைகளை வி
ட்டபிறகு, யாதொரு கட்டுக்குட்படாமல்
யாரோடு சகவாசம் செய்வது, என்னென்
ன புஸ்தகங்களை வாசிப்பது, எவ்வெவ்வித
மாய் கல்வியிலும் நல் லொழுக்கத்திலும்
அபிவிருத்தி யடைவதென்று தெரியாமல்,
தங்கள் மனம்போனபடியெல்லாந் திரிந்து,
துஷ்ட சினேகிதர்கள் அல்லது விசுவாசங்
கெட்ட சங்கங்களாகிய வலைகளில் சிக்கி
பாழாய்ப் போவார்கள். இப்படிப்பட்டவர்
களை யெல்லாம் ஒருங்கு சேர்த்து, குறித்த
நாட்களில் ஜெபம், பிரார்த்தனை, ஞானோப
தேசம், உபந்நியாசங்கள் செய்தல், வைதி
க லௌகிக புஸ்தங்களை வாசித்தல், சத்
விஷயங்களைப்பற்றிச் சம்பாஷணைசெய்தல்
குற்றமற்ற விளையாட்டு விநோதங்களை நட
த்துதல் முதலியவைகளைச் செய்யத் திட்
டஞ் செய்தால், அவர்கள் சோதனைகளுக்
குத் தப்பி, எல்லாவற்றிலும் பக்குவமடை
ந்து நல்ல. கிறிஸ்துவர்களாகவும், சபை
யார்களாகவும், சமுசாரிகளாகவும், பிர
சைகளாகவும், வாழ்ந்து வருவார்கள்.
இப்படிப் பட்டவர்களிடந்தான் தேசாபி
மானமும், வேதாபிமானமும், குலாபிமா
னமும் நன்கு விளங்கி வரும். இப்படிச்
செய்யாமல், வாலிப பிராயத்தில் அவர்கள்
ஏதோ பொடிப்பசங்களென் றவர்களை யிக
ழ்ந்து தள்ளி, அவர்கள் தத்தித் தடுமாறி
ஏதோ ஒரு உத்தியோகம் வகித்து, சமு
சாரிகளானபிறகு அன்னவர்களிடம் கா
ணும் அவிசுவாசம், தீய ஒழுக்கம் முதலி
யவைகளைக் கண்டு பிரலாபிப்பதால், குறை
சொல்லுவதால் பயனென்ன? கிறீஸ்துவர்
களிடம் பொதுநலப்பிரியங் காண்ப தரி
தென்று அநேகர் சொல்வதுண்டு. மேற்
சொன்னபடி வாலிபர்களைப் பயிற்சி செய்
துவந்தால், அவர்களும் கிறீஸ்துவ அமு
தை அதிகமதிகமாய்ப்பருகிவந்தால்,ஐரோ
ப்பியர்களிடம் விளங்கும் உத்தம சற்குண
ங்கள் அவர்களிடமும் விளங்கத் தடை
யிராது.)

15. கூடியமட்டும் ஒவ்வொரு விசார
ணையிலும் பங்கு சுவாமிமார்களைத் தலை
மையாகக் கொண்டு வாசகக் கூடங்களை
ஸ்தாபித்து, அங்கு நல்ல புஸ்தகங்களை
யும் பத்திரிகை களையும் கிறிஸ்துவர்கள்
வாசிக்க ஏற்பாடு செய்வது ஒழுங்கு (இவ்
வித ஏற்பாடானது, இளைஞர்களுக்கு மெ
த்த அவசரம். இவர்களுடைய ஒழிவு நேர
ங்களை, துஷ்ட சகவாசத்திலும், வீண்
பேச்சுகளிலும், ஆகாத புஸ்தகங்களை வா
சிப்பதிலும், சிற்றின்பப் பாட்டுகளைப் பாடு
வதிலும் செலவழிக்க விடாமல் அவர்களை
சற்சன சகவாசத்திற் சேர்த்து, நல்லறி
வூட்டி உத்தமராக்கிவிடும்.)

(இன்னும் வரும்.)

# CORRESPONDENCE.
## கடிதங்கள்

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்கு பத்
திராதிபர் உத்திரவாதி யல்லர். கடித மெழுது
வோர் தங்கள் கடிதங்களை, மிகத் திருத்தமாயு
ம், காகிதத்தின் ஒரே பக்கத்தில் இடது பாரிச
த்தில் நாலு விரற்கடை இடம் விட்டும் எழுது
வதுடன் தங்கள் பேயர் விலாசங்களையும்
தெளிவாய் எழுதல் வேண்டும். பெயர், விலா
சங்கள் வெளிப்படுத்துவதற்கல்ல, கடிதத்தின்
உண்மைச் சங்கதிகளைப் பத்திராதிபர் உறுதிப்
படுத்திக் கொள்வதற்கே. வெளிப்படுத்துவ
தற்கு தகுதியற்றன வென்று தள்ளி விடப்பட்ட
கடிதங்கள் திரும்பவும் வாப்பஸ் செய்யப்பட
மாட்டா. ப—ர்]

### தூத்துக்குடி.

தேம்பாவணிப் பிரசங்கம்:

ஐயா,

சென்னை, இராயபுரம் மஹா வித்வான்,
ஜெகராவு முதலியார் மாணுக்கரும், திருமயிலை
செந்தோம் ஐஸ்கூல் பிரதம தமிழ்ப்பண்டித
ருமாகிய வித்வான் ம. செல்வநாத முதலியார்
அவர்களால் தூத்துக்குடி, திவ்யதஸ்நேவிஸ்
ஆண்டவளின் திருக்கோவில் மண்டபத்தில், 13
நாளாக சொற்சுவை, பொருட்சுவை பொருந்த
வேத மேற்கோளுடன் கடல்மடை திறந்தவாறு
தேம்பாவணிப்பிரசங்கஞ் செய்யப்பட்டது. இப்
பிரசங்கத்தை, பரதகுல ஸ்திரி புருஷர்கள் பிர
திதினமும் பெருங்கூட்டமாய் விஜயஞ்செய்து
கேட்டுப் பேரானந்த முற்றனர். இறுதி நாளா
கிய, சூசையப்பர் முடிசூட்டு படலத்தன்று, சங்
கைக்குரிய மரிய சூசைநாத சுவாமிகளும், பரத
குலாதிபருந் தரிசனந் தந்தனர். பிரசங்க முடி
வில், மிஸ்டர் குரூஸ் மோத்தா அவர்கள், புஷ்ப
மாலைகளைச் சுவாமிகட்கும், பரத குலாதிபருக்
கும், வித்வானுக்குஞ் சூட்டிப் பன்னீர்மழை பெய்
வித்தனர். அப்பால் மிஸ்டர் ஜே. எல். மோத்தா
அவர்கள் வித்வானின் பிரசங்க சாமர்த்தியத்
தைப் புகழ்ந்து அவருக்கு வந்தனோபசார வார்
த்தைகளைக் கூறி முடித்தனர். இவ் விசிட்ட விட
யத்தில் விசேஷ சிரமப்பட்டு காரியத்தை சித்தி
பெற முடித்துவைத்த A. M. C. ஜோஸேப் பர்
ணுண்டோ அவர்களின் செய்நன்றி மறக்கற் பா
லதன்று. தூத்துக்குடி பனிமயமாதாவினுலய வி
சாரணை குருவாகிய சங். எம். ஜே. பின்டோ சுவா
மிகள் ஷை வித்வான் ஸ்ரீ செல்வநாத முதலியார்
அவர்களின் அரிய பிரசங்க சாமர்த்தியத்தைப்
புகழ்ந்து, அவருக்கோர் நற்சாட்சிபத்திரம் அளி
த்தார்கள்.

கண்டு களித்தோன்.

### அர்ச். உத்தரியமாதாவின் மஹோற்சவ சிறப்பு.

திருப்பத்தூர் தாலூக்கா கனமந்தூர் அர்ச்.
சவேரியாராலயத்தின்கண் திருக்கோயில் கொ
ண்டெழுந்தருளியிரானின்ற அர்ச். உத்தரியமா
தாவின் மஹோற்சவம் சென்ற வாண்டுகளிற்
போலவே நாளது 1913ஸ் ஜூலை 19உ புத
வாரம் வெகு ஆடம்பரத்துடன் கொண்டாடப்
பட்டது.

அன்று காலை ஷை விசாரணை பங்கு சுவாமி
யார் சங். B. E. மெயிலன் அவர்களால் திருப்
பலிப் பூசை யொப்புக்கொடுக்கப்பட்டது. உத்
தரிய மாதாவின் சபையாரும் சேசுவின் திரு
இருதய சபையாரும் பெருந் தொகையினராய்
திவ்விய நற்கருணைப் பந்தியி லமர்ந்தனர். அன்று
இரவு சுமார் $8\frac{1}{2}$-மணிக்குப்பின் அழகிய பல
வர்ண சித்திராலங்கிர்த கொத்து வேலைகளா
லும் முத்துக்களாலும் வெகு விநோத விசித்
திர அலங்காரமாய் சிங்காரிக்கப்பட்டிருந்த
விமானங்களில் அர்ச். மிக்கேல் சம்மனசுவினு
டையவும், அர்ச். உத்தரியமாதாவினுடையவும்,
திருச்சுரூபங்களும், அன்றே புதியதாய் சீர்மை
யிலிருந்து வரவழைக்கப்பட்ட பதுவையம்பதி
யரான அர்ச். அந்தோனியாரின் திருச்சுரூபமும்
ஆரோகணிக்கப்பட்டு, கிறிஸ்துவ ஸ்திரிபூமான்
கள் புடை சூழ, நாகசுரமேளமுதலிய வாத்திய
முழங்க, அதிர்வெடிவாணம் மத்தாப்பு முதலிய
வாணவேடிக்கைகளுடன் இடி குமறுவதுபோல்
இடைவிடாது சப்தித்தொலிக்க, கியாஸ்லைட் தீ
பங்கள் பல பூரண சந்திரர்போல் பிரகாசித்து
சுடர்விட்டு ஜொலிக்க, பவனியாக பாதுகாவல
ராகிய அர்ச். சூசைமா முனீந்திரரின் திருவால
யஞ்சென்று, பங்கு சுவாமியார் அவர்களால் மந்
திரிக்கப்பட்டு, ஷை யூர் அர்ச். உத்தரிய மாதா
வின் பக்தபால்ய பஜனையோரும், கோலார் அர்ச்.
லூர்துமாதா பஜனையோரும் பஜித்துவர, ஊர்
வலமாகி சகலரும் கண்டு மகிழ, தம திருப்பீடஞ்
சென்றபின்னர், அமிர்த கவி; மகா-ள-ஸ்ரீ R.A.



ஆரோக்கியசாமி பிள்ளையவர்களால் அர்ச். உத்த
ரியமாதாவின் மீதும் அர்ச். அந்தோனியாரின்
மீதும் இயற்றிப் பிரசுரித்திருந்த விண்ணப்ப மா
லிகை, தோத்திரப்பா பூஷணம் என்னும் இரு
கீர்த்தனங்களும் பாடி விநியோகிக்கப்பட்ட
தோடு உற்சவம் முடிவு பெற்றது.

தேவ தாயாரின் விசேஷ மன்றுட்டின்
பலன் இதற்காக பிரயாசை எடுத்துக்கொண்ட
வர்களுக்கும், பொருள் உதவி செய்து சகலமும்
சிறப்பித்து நடாத்திய புண்ணியசீலருக்கும் உண்
டாவதாக!

இங்ஙனம்,
S. P. அருளானந்தம் பிள்ளை.

---

# GENERAL NEWS AND NOTES.
## பொது வர்த்தமானம்.

---

**ஓர் பெரிய கின்னரம்:**-ஜெர்மனியைச்
சேர்ந்த ஹம்பர்க் கோவிலொன்றில், மின்
சார சக்தியால் இயக்கப்படும் கின்னரமே
உலகி லுள்ளவைகளுக்கெல்லாம் பெரிய
தென்று சொல்லப்படுகிறது.

**மைசூரிற் பிரதமகல்வி.**—மைசூர் கவ
ர்ண்மெண்டார் இன்கம்டாக்ஸ் என்னும்
வருமான வரியால் வசூலாகும் பணத்தை
யெல்லாம் பிரதமகல்வி யபிவிர்த்திக்காக
செலவிடத் தீர்மானித்திருக்கிறார்கள்.

**இன்டியன் நாஷனல் காண்கிரஸ்.**—
இந்த இந்திய மகாஜன சங்கம் இவ்வரு
ஷம் கராச்சியில் கூடுமென்றும், அதற்கு
நவாப் சையத் மகமது சாகேப் பஹதூர்
அக்கிராசனுதிபதியாக நியமனம் பெற்றிரு
க்கிறாரென்றுந் தெரியவருகிறது.

**தொண்டைப் புண் தொலைய.**— ஒரு
பெரும் உருளைக்கிழங்கைக் கொண்டுவந்து
அடுப்புக் கும்பிக்குள் நுழைத்துவைத்து
வெந்தபின், அதை யெடுத்துப் பிட்டு கம்
பளத்துணியில் கட்டி தொண்டையில் ஒத்
தடங் கொடுக்க ஒரே ராத்திரியில் புண்
நீங்கும், சுகமுண்டாகும்.

**ரேயில்வே ஸ்டேஷன்கள்.**—இந்தியா
விலுள்ள ரெயில்வே ஸ்டேஷன்களுக்கெல்



லாம் பெரியது பம்பாயிலுள்ளது. அமெரிக்
காவைச்சேர்ந்த நியுயார்க்பட்டணத்திலுள்
ளது உலகத்திலுள்ள ரெயில்வே ஸ்டே
ஷன்களுக்கெல்லாம் பெரியது. இது கட்டி
முடிக்கப் பிடித்த செலவு 3 கோடியே 30
லட்சம் பவுனும்.

**ஓர் அதிசய பிரசவம்.**—பவேரியா தே
சத்து ஷாந்தால் நகரில் ஒரு மாது 14 மா
தத்திற்குள் 7 குழந்தைகளைப் பெற்றெடுத்
திருக்கிறாள். இம்மாது இரண்டு தடவை
பிரசவித்து முதல்பிரசவத்தில் 4 பெண்க
ளையும் இரண்டாவது பிரசவத்தில் 3 ஆண்
குழந்தைகளையும் பெற்றுளாம்.

**ஓர் அந்தகனின் புத்தி தீக்ஷண்யம்.**—
இங்கிலாந்து தேசத்திலுள்ள கார்ன்வாலில்
வசிக்கும் ஜேம்ஸ் கீம் என்னும் ஒரு பிற
விக் குருடன் ஒவ்வொருநாளும் பிறருதவி
யின்றி 27மைல் தூரம் புதிய விடங்களுக்
குச் சென்று தேயிலை விற்றுப் பிழைக்கின்
றான்; அவன் வழி தப்பிப்போனதே யில்லை
யாம். அவன் எந்தப் பொருளையுந் தொட்
டுப்பார்த்து, இஃது இந்த நிறமுடையதெ
ன்று கூறுவானும்.

**கணக்குப்போடுங் குதிரைகள்.**—ஜெர்
மனியில் ஒரு போதகாசிரியர் குதிரைக
ள் கால்களால் கணக் கெழுதும்படி அ
வைகளுக்குக் கற்பித் திருக்கிறாராம். அ
வைகள் கூட்டல், கழித்தல், பெருக்கல்
முதலிய கணக்குகள் போடுகின்றனவாம்.
ஜெர்மன் பாஷையின் அக்ஷரங்களையும்
கறுப்புப் பலகையில் எழுதிக்காட்டுமாம்.
ஏழு குதிரைகள் இவ்வாறு பழக்கப்பட்
ருக்கின்றனவாம். இது மெத்த ஆச்சரி
யமே!

**இந்தியாவின் பணம்.**—சென்ற 1912
வருஷத்தில் பிரிடிஷ் மோட்டார் வண்டி
கள் வாங்குவதிலே மாத்திரம் 25 லட்சம்
பவுன் இந்தியாவிலிருந்து போயிருக்கிற
தாகக் கணக்கிடப்பட் டிருக்கிறது. இன்
னும், ஜவுளி, இரும்பு சாமான், கண்ணுடி
சாமான், கெரொசின் என்னும் மண்ணெ
ண்ணெய் முதலியவைகளுக்காக இந்தி
யாவின் பணம் எத்தனையோ கோடி
வெளியே செல்கிறது. இப்படி இந்தியா
வின் பணம் பெருந்தொகையாய் வெளியே

போகாமற்படி, தேசத்தின் விளைப்பொருள்களையும் கைத்தொழில்களையும் விருத்தி பண்ணுகிறவரையில் இந்தியாவின் தரித்திரம் நீங்குவதில்லை.

**மரக்கறியும் மாம்ஸ உணவும்.**—மாம்ஸக்கறியைவிட் மரக்கறியே மனுஷ தேகத்தை நோயின்றி வளர்க்கும் சுபாவமுடையதென்று பல உதாரணங்களைக் கொண்டு நிரூபிக்கிறார் ஒரு கடிதநேயர். இது உண்மையா யிருக்கலாம். ஆயினும் மரக்கறி பதார்த்தமென்னும்போது ஷை நேயர் மாமிசத்தின் சாரமாகிய, பால், நெய், தயிர், மோர் இவைகளை விலக்கிப் பேசுகிறாரென்பது தேற்றம். அப்படியானால் யாராவது பாலைத்தவிர்த்து ஜீவிக்க முடியுமா?

**ஓர் அதிசய கட்டிடம்.**—அமெரிக்கா ஐக்கிய நாட்டிலுள்ள வின்வலி நாட்டில் கட்டப்பட்டிருக்கும் சேம்பர் ஆவ் காமர்ஸ் கட்டிடமே மிக்க அதிசயமான கட்டிடமெனக் கருதப்படுகிறது. இக்கட்டிடத்திற்குள் 38 மெத்தைகள் உள. இவைகளில் 4 மெத்தைகள் பூமி மட்டத்திற்குள் கீழிருக்கின்றன. இக்கட்டிடத்தின் உயரம், கீழ்தள வரிசையிலிருந்து 535 அடி; தரை மட்டத்திலிருந்து 495 அடி. இதைக் கட்ட செலவழிந்துள்ள தொகை எழுபத்தைந்து லக்ஷம் ரூபாயாம்.

**பசும்பாலில் தந்தம்.**—பசுவின் பாலைக் கொண்டு ஒருவித தந்தஞ் செய்யப்படுகிறது. இந்த செயற்கைத் தந்தம் இயற்கைத் தந்தத்தைப்போல கடினமாயும், உறுதியாயுமிருப்பதோடு, நாட்சென்றாலும் நிறம் மாறாமல், எப்போதும்தூய வெண்மையாய் இருக்கிறதாம். இதனால் கின்னரப்பெட்டி, கத்திப்பிடி, குடைப்பிடி முதலியன செய்யப்படுகின்றன. ஆனால் மனுஷர்களுக்கு முக்கிய உணவுப் பொருளாயுதவும் அமுதமாகிய பாலை கத்திப்பிடிக்கும் குடைப்பிடிக்கும் உபயோகிப்பது வியர்த்த மன்றோ?

**மின்சார சலவை.**—"தட்டானுக் கஞ்சியல்லோ அணிந்தான் சிவன் சர்ப்பத்தையே" யென்றொரு புலவர் பாடியிருக்கிறார். அது போல வண்ணானுக்கஞ்சி, மின்சார உதவியினால் துணிகளை வெளுப்பதற்கு ஒரு நூதன யந்திரங் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதாம். நகரங்களில் வசிக்கிறவர்கள் வண்ணாருடன் படும்பாட்டுக்கு இத்தகைய யந்திரங்கண்டு பிடிக்கப்பட்டிருக்கிற சங்கதி அவர்களுக்கு, உடனே கஷ்டப்பரிகாரஞ் செய்யாவிடினும், மெத்த ஆறுதலைத் தரும்.

**அலுமினிய வஸ்திரங்கள்.**—அலுமினியம் என்னும் உலோகம் இதுவரையில் பாத்திரங்களும் தட்டுமுட்டு முதலியவைகளும் செய்ய உபயோகப்பட்டு வந்தது. இப்போது இதை நூலாக இழுத்து பட்டுடன் சேர்த்து நேர்த்தியான உயர்ந்த வஸ்திரங்கள் நெய்யலாமென்றும், அதற்குத் தக்க நிறங்களும் கொடுக்கலாமென்றும், விசேஷ தினங்களில் உபயோகப்படும்படியான வஸ்திரங்கள் செய்வதில் இதைவிட மேன்மையானது ஒன்றுமில்லையென்றுஞ் சொல்லப்படுகிறது. இந்த உலோகம் உடுத்தும் உடையாக உபயோகிப்பதற்கு எவ்வளவு தூரம் சௌகரியப்படும் என்பது அநுபோகத்திற்றான் தெரியவரும்.

**மணி சொல்லுங் கடிகாரம்.**—இதுவரையில் ஒருமணி, அரைமணி, கால்மணி முதலிய மணிகளை அடிக்குங் கடிகாரங்களையும், குறித்த மணி நேரத்தில் அலாரம் அடிப்பது, கீதங்கள் பாடுவது, தலையசைப்பது, கண் சிமிட்டுவது முதலிய இயக்கமுடையதுமாகிய கடிகாரங்களையுங் கண்டுள்ளோம். இப்போது, மணி யடிப்பதற்குப் பதிலாய் மனுஷர் சொல்வதுபோல் "ஐயா, இப்போது பத்துமணி" "ஐயா, இப்போது பத்தரை மணி" என்று அந்தந்த மணிக்கு இத்தனை மணியென்று சொல்லும்படியாக கடிகாரத்தில் கருவிகள் இசைத்துச் செய்கிறார்களாம். என்ன விந்தை! இனி தூங்கும் மனுஷரைத் தட்டியெழுப்புங் கடிகாரங்களும் புறப்படும்போலும்!

**விடா முயற்சி.**—விடாமுயற்சி செய்தால் விந்தையான காரியங்களை வினோதமாய் முடிக்கலாம். "கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம், கரடிவெம் புலி வாயையும் கட்டலா மொருசிங்க முதுகின் மேற் கொள்ளலாம்" என்று தாயுமானவர் சொல்லுமாப்போல், மானுடனால் ஆகாததொன்றில்லை, அவன்மாத்திரம் தன் மனதை ஸ்திரப்படுத்தி விடா முயற்சியாயுழைப்பானானால். இப்படிப்பட்ட விடாமுயற்சியாலேயே அனேக மகான்கள் முடியாதென்றெண்ணப்பட்ட காரியங்களை மிக எளிதாய் முடித்திருக்கிறார்கள். வெப்ஸ்டர் என்பவர் தமது பெரிய அகராதியை எழுதி முடிக்க 36 வருஷம் ஓயாமல் உழைத்தார். ஸ்டீபென்ஸன் ஆதியில் புகைவண்டியைக் கண்டுபிடித்து முடிவுக்குக் கொண்டுவர 15-௵ விடாது உழைத்தார். எடிஸன் என்பவர் டெலோபோன் என்னுந் தூர சம்பாஷணை யந்திரத்தைச் சரிப்படுத்த அநேக மாதங்களாக நாடோறும் 19 மணி நேரம் உழைத்துவந்தார். இன்னும் எத்தனையோபேர் விடாமுயற்சியால் மகத்தான காரியங்களை முடித்திருக்கிறார்கள். இவர்கள் செய்து முடித்திருக்கும் காரியங்களே விடா முயற்சியால் விளையும் பயனுக்கு சாட்சிகளாய் விளங்குகின்றன.

**சிறுத்தைகள்.**-பாவ்நகர் மகாராஜா பல சிறுத்தைகளை நாய்களைப்போல பழக்கிவைத்திருக்கிறார். போன், சங்கிலிக்கட்டுமுதலிய காபந்து ஒன்றுமில்லாமல் நாய் பூனைகளைப்போல் தமது வீட்டில் அவைகளை வளர்த்து வருகிறாராம். அவைகளும் தம் எஜமானுக்கு அடங்கி அவர்மட்டில் நேசங்காட்டி வருகின்றனவாம். மகாராஜாவையும் அவர் அரண்மனையிலுள்ளவர்களையுங் கண்டால் அவைகள் கை குலுக்குகின்றன. மகாராஜாவுடன் விளையாடுகின்றன. சமீபத்தில் மகாராஜா வழக்கப்படி இந்தப் பழகின சிறுத்தைகளை காட்டுக்கு வேட்டையாட அழைத்துக்கொண்டு போனபோது, அங்கு காணப்பட்ட ஓர் மான் கூட்டத்தைக் காட்டி, அதில் ஒன்றைப் பிடித்துக்கொண்டு வரும்படி இச்சிறுத்தைகளில் ஒன்றையேவ, அது அவ்வாறே யோடி ஒரு மானை சற்றும் சிதைக்காது செந்தூக்காய் தூக்கிக்கொண்டுவந்து மகாராஜாவின்முன் விட்டதாம். இதுமெத்த ஆச்சரியமன்றோ? புலி சிறுத்தைகளைக்கொண்டு பல அதிசயமான ஆட்டங்களைக் காண்பிக்கும் சர்க்கஸ்காரர்கள் முதலாய் அவைகளைக் கூட்டில் அடைத்துக்கொண்டு சிற்சில நிமிஷங்கள் மாத்திரம் அவைகளுடன் நடமாடுகிறார்கள்.

**ஓர் வினோத பிரஸ்தாபம்.**—மஞ்சகுப்பஞ்ஜில்லாவி லுள்ள விலங்கற்பட்டு என்னுங் கிராமத்தில் ஒரு தோப்பில் ஓர் கழுகு ஓர் குழந்தை குரல்போல கத்துகிறதாம். இவ்வாறு ஒருதரங் கத்திப் பதினாறு நாட் கடந்தவுடனே அக்கிராமத்தில் ஓர் மரணம்நேரிடுகிறதென்றும், இம்மாதிரி கடந்த இரண்டு மாதங்களுக்குள், 35 மரணங்கள் சம்பவித்தனவென்றும், இதை முன்னிட்டு அக் கழுகைச் சுட்டுக்கொல்ல துப்பாக்கி குறி பார்க்கும் பொழுது அது மாயமாய் மறைந்துபோகிறதென்றும் ஓர் பத்திரிகையில் பிரஸ்தாபஞ் செய்யப்பட்டிருக்கிறது. இது விந்தையில் விந்தையாயிருக்கின்றது. குழந்தைக் குரலோசையாய்க் கழுகுகள் கத்துவது சகஜம். ஆனால் அது கத்தலினால் மரணஞ் சம்பவிக்கிறதென்பதும், மேலும் ஒவ்வொரு கத்துக்கு சரியாய் 16 நாட் கழித்து ஒவ்வொரு மரணம் உண்டாகிறதென்பதும் நம்பத்தக்கவையல்ல. ஷை கழுகு ஷை கிராமத்தில் தோன்றி இரண்டுமாதகால மாகிறதாம். இந்த இரண்டு மாதங்களுக்குள் 16 நாட்களுக்கு ஒரு மரணம் என்றவிகிதப்படி கொஞ்சம் ஏறக்குறைய 4 மரணங்களே சம்பவித்திருக்கவேண்டும். ஆனால் சம்பவித்தது 35 மரணம் என்று சொல்லப்படுகிறது. இது எப்படி ஆகும்? அல்லது, இந்த அறுபது நாட்களில், 35 கத்துக்கள் அக்கழுகு கத்தினதென்றும், முறையே ஒவ்வொரு கத்தின் காரணமாக சரியாய் பதினாறுநாட் பொறுத்து ஒரு மரணம் உண்டானதென்றும் புள்ளிபோட்டு கணக்கிட்டுவந்த கணித சாஸ்திரி யாரோ? மேலும் கிராமங்களில் கழுகுகள் கத்துவதும், மானிடர் மரணிப்பதும் சகஜமேயாதலால், கழுகு கத்தினதால் மரணஞ் சமபவித்ததென்பது, காகம் பனம்பழத்தைத் தள்ளினதென்கிற "காகதாலி நியாய" மாக வல்லோ காணப்படுகின்றது. இரண்டு மாதத்துக்குள் 35 சாதாரண மரணம் நேரிடுவதற்கு அக்கிராமத்தின் ஜனத்தொகை பெரிதா யிருத்தல் வேண்டும்; அல்லது "வைசூரி" "வாந்திபேதி" "விஷ ஜுரம் முதலிய தொற்று வியாதி தோன்றியிருத்தல்வேண்டும்." கழுகு கத்த மனுஷர் மரித்தார்களென்பது "மொட்டைத்தலையை முழங்காலோடு முடியிட்டேன்" என்பதை யொக்கும்.

# NEWS OF THE MONTH.
## மாசவர்த்தமானம்.

**இலங்கை-யிந்தியா இருப்புப்பாதை.**- இந்த இருப்புப்பாதை ஏறக்குறைய எல்லாம் முடிந்து விட்டதென்றே சொல்லலாம். ஓரேயொரு பால மாத்திரம் பாக்கியாயிருக்கிறது. இது வெகு சீக்கிரத்தில் முடிவாய் விடுமென்று சொல்லப்படுகிறது. இந்தப் புது ரெயில்வேயை நமது மாட்சிமை தங்கிய இராஜப் பிரதிநிதியவர்கள் அடுத்த ஜனவரிமீ திறக்கப் போகிறார்கள்.

**வைசிராய் விஜயம்.**—நமது மாட்சிமை தங்கிய இராஜப் பிரதிநிதியாகிய ஹார்டிஞ்சுபிரபு அவர்கள் வருகிற நவம்பர்மீ 22ம் தேதி சென்னைக்கு விஜயஞ் செய்து இங்கே நாலுநாள் அதாவது 26ம் தேதி வரைக்குந் தங்கியிருப்பார்கள். அப்போது கார்ப்பொரேஷனிடமிருந்தும், மற்றப் பொதுநல சங்கங்களிடமிருந்தும் வந்த ஞேபசாரப் பத்திரங்களை வரவேற்பார்கள். கார்ப்பொரேஷனது புது ஆபீசு கட்டிடத்தைத் திறக்குஞ் சடங்கு செய்வார்கள்.

**ஒரு வழிபறி.**—சென்ற மாதத்தில் ஓர் நாள் விடியற்காலம் சுமார் 5-மணிக்குப் புதுச்சேரியிலிருந்து விழுப்புரத்திற்குச் செல்லும் ரஸ்தாவின் மத்தியிலுள்ள ஒரு கிராமத்திலிருந்து 5 வண்டிகளைக் கட்டிக்கொண்டு ரெட்டிமார்கள் கல்யாணத்திற்குச் சென்றனர். அவர்கள் பிரயாணப்பட்டுச் செல்வதை முன்னமேயே யறிந்த சுமார் ஆறு கள்வர்கள் அவ்விடியற் காலத்தில் வண்டியி லிருந்தவர்கட்குத் தெரியாமல் அவ்வண்டிகளைத் தொடர்ந்து கொண்டே சுமார் 4 பர்லாங்கு தூரம் சென்றனர். வண்டிகள் அந்த ரஸ்தாவிலிருக்கிற ஒரு பெரிய ஆல விருக்ஷத் தண்டை போனபோது அக்கள்வர்கள் முன்னே சென்று வண்டிகளைப் போக வொட்டாது மறித்துக் கொண்டு, வண்டியி லுள்ளவர்களை இறங்கும்படிக்கு வெருட்டினார்கள். வண்டியிலிருந்த புத்திசாலிப் பெண்கள் தங்களா லியன்ற வரையில் ஆபரணங்களைக் கழற்றி உட்கார்ந்திருந்த வைக்கோலுக்குள் மறைத்து விட்டனர்; இறங்கும்படி பயமுறுத்தவே இறங்கினவருள் ஒரு ஸ்திரீயின்மீது மாத்திரமிருந்த காசுமாலையையும் ஒரு கரத்தினது தங்கக்காப்பு கொலுசையும் பீறித்துக் கொண்டு போய் விட்டனர். இழந்த சொத்தின் மதிப்பு 500 யென்றும், காப்பாற்றப்பட்ட சொத்தின் மதிப்பு அதைப்போல பல மடங்கென்றுஞ் சொல்லப்படுகிறது. அவர்களால் அடியுண்டு காயமடைந்த இருவர்கள் கூடலூர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்யப்பட்டு வருகின்றார்கள். ஆதலால் எப்போதும் பகற்காலங்களில் பிரயாணம் பண்ணுவதே நல்லது.

**துருக்கி-பால்கன் யுத்தம்.**-துருக்கிக்கு விரோதமாய் முன் பால்கன் நாடுகள் சுயேச்சை யடைய வெகு பலமாய்ச் சண்டை செய்து ஜெயித்துக் கடைசியில் லண்டன் உடன்படிக்கைப் பிரகாரம் சமாதான மேற்படுத்த வல்லரசுக்கள் முயன்று வருங் காலத்தில், பால்கன் நாடுகளுக்குள் நில விவரத்தில் ஒன்றுக்கொன்று பிரமாதமான சண்டை நேர்ந்து இப்போது தான் ஒருவாறு ஓய்ந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் துருக்கியானது முன் தானிழந்த நாடு நகரங்களைக் கைப்பற்றி வருகிறது. அடிரியானோப்பிளைப் பிடித்துக் கொண்டுவிட்டது. பால்கன் நாடுகள் ஒவ்வொன்றிற்கும் இச்சண்டையால் கனத்த சேதமே. காலரா முதலிய பல கொடிய வியாதிகளும் இச்சைனியங்களில் பிரவேசித்து மிக்க சேதம் விளைத்து வருவதாய் அறிவிக்கப்படுகிறது. வல்லரசுக்கள் இப்பரிதாப நிலையைப் பார்த்து மறுபடியும் பால்கன் நாடுகளுக்குள் சமாதானம் ஏற்படுத்த அவைகள் அபிப்பிராயங்களை யறிந்து ஒருவித முடிவு செய்ய பிரயத்தனித்து வருகிறார்கள். இவ்வித யத்தனங்களில் துருக்கிக்குச் சுற்றுப்புறங்களிலுள்ள வல்லரசுக்கள் தம் தம் ஆதாயத்தைக் கைவிடாமலே மத்தியஸ்தம் பேசுவதுடன் துருக்கியையும் வெருட்டி அது இழந்து கைப்பற்றிய நாடுகளையும் லண்டன் உடன் படிக்கைப் பிரகாரம் அவைகளை பிரதமத்தில் ஜெயித்த நாடுகளுக்கே உரித்தனவாய்ச் செய்ய முஷ்கரஞ் செய்கின்றன. ஆனால் துருக்கியோ அவைகளுக்கெல்லாம் பயப்படாமல் தானிழந்துவிட்ட பாகங்களை கூடியவரையில் திரும்ப ஆளவும் வகையில் கருத்தாயிருந்து காரியத்தை நடத்தி வருகின்றது.



**வெகு துணிகரமான மோசம்.**—சென்ற மீ 29ம்உ சென்னையில் ஒரு மிகு சாமர்த்தியமான மோசம் பஹிரங்கத்தில் செய்யப்பட்டது. இதைக் கண்டவர்களுங் கேட்டவர்களும் பிரமிக்கலானார்கள். எப்படியெனில், ஒருவன், புரொபஸர் டி. கே. கான் என்னும் பெயர் பூண்டு, தான் மகா ஜால வேடிக்கைக்காரன் என்றும், கொந்தளிக்குங் கடலிலிருந்து ஒரு இராட்சதன் கிளம்புங் காட்சியையும், ஒருகாடு தீப்பற்றி எரியும்போது அதன் மத்தியில் ஒரு அழகிய மாளிகை தோன்ற அதினின்று இரு ஸ்திரீ ரத்தினங்கள் வெளிப்பட்டு அதியற்புதமான வேலைகள் செய்யுங் காட்சியையும், சென்னை ஐகோர்ட்டு, டெல்லி டர்பார், மைசூர் அரண்மனை முதலிய காட்சிகளையுங் காட்டப் போகிறதாகவும், ஒரு பழத்தோட்டம் தோன்ற அதிலிருந்து பழங்களைப்பறித்து ஜனங்களுக்குக் கொடுக்கப் போகிறதாகவும், இன்னும் ஆச்சரியத்துக்குரிய பல ஜாலவித்தைகள் செய்வதாகவுஞ் சொல்லி விளம்பரங்கள் செய்து, நோட்டீசுகள் வழங்கி, குறித்த தினத்தில் சென்னை ஜன சிங்காரத் தோட்டத்திலிருக்கும் விக்டோரியா பப்ளிக் ஹாலில் வாத்தியங்களை முழக்கி டிக்கட்டுகளை விற்க, ஏராளமான ஜனங்கள் டிக்கட்டுகளை வாங்கி அந்த விசாலமான ஹாலை முழுதும் நிரப்பி ஜாலவேடிக்கைகளைப்பார்க்க ஆவலுடன் காத்திருந்தார்கள். குறிக்கப்பட்ட நேரத்துக்குமேல் அரைமணிநேரமாகியும், வேடிக்கை யொன்றுங் காட்டாமையால் ஜனங்கள் கைதட்டியும், கூவியும் பார்த்தார்கள். யாதொரு பதிலுமில்லை. மூடப்பட்டதிரை மூடப்பட்டேயிருந்தது. ஆதலால் ஜனங்களிற் சிலர் இதென்ன வென்று (ஸ்டேஜ்) மேடை மீதேறி திரையினுள்ளே சென்றுபார்க்க அங்கே ஒருவருமில்லாமல், எங்கும் ஏக வெளியாய்க் காணப்பட்டது. ஜால வித்தை பார்க்க வந்தவர்க ளெல்லாம் இந்தமாய விந்தையைக்கண்டு திடுக்கிடலானார்கள். ஜால வித்தைக்காரன் டிக்கட்டு விற்று வந்த பணத்தையெல்லாம் சுருட்டிக்கொண்டு கம்பி நீட்டி விட்டான். இவனைக் கண்டுபிடிக்க போலீசார் முயன்று வருகிறார்கள். இம்மாதிரியான மா மோசம் இச்சென்னைக்கு இதே முதல்விசை போலும்.

### புத்தக வரவு:

"எல்லோருந் தியானிகள்".—என்னும் பெயர்கொண்ட புத்தகம் ஒன்று வரப்பெற்றோம். இது சங். J. Mette சுவாமியார் அவர்களால் நவமா யியற்றப்பட்ட அருமையான புத்தகம். அர்ச். இஞ்ஞாசியாருடைய ஞானமுயற்சிகளே இதில் தெளிவாய்க் காட்டப்பட்டு தியானஞ் செய்கிறவர்களுக்கு சுலபமா யிருக்கும்படி தியானப் பொருள்கள், செய்யவேண்டியபிரதிக்கினை முதலானவைகள் விளக்கமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இதனால் தியானஞ் செய்யத் தெரியாதவர்கள் முதலாய் இப்புத்தகத்தின் உதவியைக்கொண்டு தியானஞ் செய்ய நன்றாய்க் கற்றுக்கொள்வார்கள். உபதேசிமார், உபாத்திமார் முதலானவர்களுடைய உபயோகத்துக்காகவே இப்புத்தகம் பிரதமத்தில் எழுதப்பட்டதென்றாலும் இது சகல கிறிஸ்துவர்களுக்கும், சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகளுக்கும் தேடக்கிடையாத் திரவியமென்றே சொல்லத்தகும். "உலகமெல்லாம் தியானியாததினாலே கெட்டுப்போகிறது" என்று வேதவாக்கியமிருக்கிறபடியால், தியானம் ஒவ்வொருவருக்கும் அவசரம்; ஆகவே இப்புத்தகமும் ஒவ்வொருவருக்கும் அவசரம்; வேண்டியவர்கள் புதுச்சேரி மாதாக்கோவில் அச்சுக்கூடத் தலைவருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். விலை 15 அணா. தபாற்கூலி 0-1-6

# DOMESTIC OCCURRENCES.
## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 8-அணா முன்பணம் அனுப்பினாலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட மாட்டா வென்பதை நண்பர்கள் கவனிக்கக் கோருகிறோம். அரைக் கலத்துக்கு மேற்பட்டு முக்கால் கலத்துக்கு உட்பட்டால் முக்கால் ரூபாயாகும். முழுக்கலத்துக்கு ஒரு ரூபாயாகும். கால் ரூபாய்க்கு இவ்விளம்பரங்கள் ஒருபோதும் பிரசுரிக்கப்பட மாட்டா.

### ஜனன அறிக்கை.

பவுரிங்பேட்டை, M.S.M. Railway இஞ்சின் டிரைவரும் ஷை யூர் அர்ச். அந்தோனியார் கோவிலின் காரியதரிசியுமாகிய கனம். இசரயேல் பிள்ளை யவர்களின் மனைவி, உத்தரிய மரியம்மாள் சென்ற ஜூலைமீ 22-ந் தேதி செவ்வாய்க்கிழமை சாயந்திரம் $6\frac{1}{2}$-மணிக்கு 4-வது பெண் குழந்தையைப் பெற்றனள். ஆகஸ்ட்மீ 10-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை கொரமாண்டல்

அர்ச். செபஸ்தியார் ஆலயத்தில் சங்கைக்குரிய கோரன் குருசுவாமியா ரவர்களால் அக்குழந்தைக்கு ஞானதீட்சை கொடுக்கப்பட்டு, மரிஜீவமணி என்னும் நாமகரணஞ்சூட்டப்பட்டது. அன்புள்ள கடவுள் இக் குழந்தைகுத் தேவாசீர்வாதையுந் திடகாத்திரத்தையும் நீடிய ஆயுளையுந் தந்தருளுவாராக. இப்படிக்கு.

Bowringpet } R. V. தம்புசாமி பிள்ளை.
16—8—13. } ஞானத்தந்தை.

## மோக்ஷதீப அறிக்கைகள்.

### இரங்கூன்.

இரங்கோன், ஸ்டேஷன் ஆஸ்பத்திரியின் கண் வசித்துக் காலஞ்சென்ற எனதருமை தாயார் இலாசரம்மாளுடைய ஆத்துமத்தைக் குறித்து மேற்படி யூர் சின்னகாந்தம் அர்ச். அந்தோனியாராலயத்தில் சங். இராஜரிஷி R. ஷாவ் குருதேசிகரவர்களால் நிகழும் 1913ஸு ஆகஸ்டுமீ 19உ செவ்வாய்க்கிழமை காலை 7-மணிக்கு ஆத்தும இளைப்பாற்றிப் (பெரிய பாடற்) பூசையும் தூம்பாமந்திரிப்பும் திருச்சபைச் சடங்குகளுடன் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இதைக் கண்ணுறும் ஒவ்வொரு கத்தோலிக்கு சகோதரரும் இவ்வாத்துமத்தின் நித்திய இளைப்பாற்றிக்காக மறவாமல் ஒரு பர. பிரி. திரி. வேண்டி ஒப்புக்கொடுக்கும்படி வெகுவாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

இரங்கோன், } இங்ஙனம்,
22-7-13. } C. LAZARUS PILLAI,

### அரக்கோணம்.

1913-ஸு எப்ரல்மீ 10-ந்தேதி பரலோக பிராப்தி யடைந்த என்னருமை மனைவி ஸ்ரீமதி சாலோமி அம்மாளின் ஆத்தும இளைப்பாற்றிக்காக நிகழும் செப்டம்பர்மீ 10-ந்தேதி புதவாரம் காலை 6-மணிக்கு அரக்கோணம் அர்ச். வியாகுலமாதாவின் ஆலயத்தில், ஒப்பீஸ் பூசை ஒப்புக்கொடுக்கப்படும். மாலை 6-மணிக்கு எனது கிரகத்தில் ஜெப ஆராதனையும் ஏழைகளுக்கு அன்னமு மளிக்கப்படும். இதை கண்ணேக்கும் நண்பர்கள் அன்று ஷை சலோமி அம்மாளுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக செய்யப்படும் பூசை, ஜெப ஆராதனைகளோடு தங்கள் தருமமாக 1-பர. 1-பிரி. 1-திரித்துவம் சொல்லி ஒப்புக் கொடுக்கும் படியாக பிரார்த்திக்கின்றேன். இங்ஙனம்,

சி. ஏ. அந்தோனி பிள்ளை.

இஞ்சின்டிரைவர், எம். எஸ். எம். ரெயில்வே,

## நன்மரண அறிக்கைகள்.

### பெங்களூர்,

பெங்களூர் பிளாக்பள்ளி புராதீனரும், தம் உத்தியோகத்தி னிமித்தம் தற்காலம் பல்லாரியில் வசித்திருந்தவருமாகிய (Q. O. S. Minors) பென்ஷன் ஜமேதார் F. C. சவரிமுயகம் பிள்ளை யவர்கள் தமக்கு திடீரென சம்பவித்த ஜுரத்தினால் மெத்த அவஸ்தைப்பட்டு, நிகழும் 1913-ஸு ஜுலைமீ 4-ந்தேதி வெள்ளிக்கிழமை காலை $6\frac{1}{2}$-மணிக்கு கடைசித் தேவத்திரவிய அநுமானங்கள் யாவும் சரிவரப்பெற்று, இக் கண்ணீர் கணவாயையும், தன்னுடைய பத்தினியையும், ஏழு சிறு குழந்தைகளையும் இவ்வுலகில் பரதவிக்கவிட்டு, கர்த்தரின் திருக்கரங்களில் வெகு அமரிக்கையாய் தமது ஆத்துமத்தை ஒப்படைத்தார்.

இதனைக் கண்ணுறும் நேயர்க ளனைவரும் இவ் வாத்தும இளைப்பாற்றிக்காக ஒரு. பர. பிரி. திரி. வேண்டிக்கொள்ளப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறேன். இப்படிக்கு,

F. C. சாமிதாஸ்.

### மணப்பாடு.

மணப்பாடு காலஞ்சென்ற தேவரீர் எனது மாமனார் பெனதீத்துப் பெர்ணாந்து அடப்பனார் அவர்கள் சகோதரரும், எனது சிறியமாமனுருமாகிய தேவரீர் அந்தோனிப் பர்ணாந்து அவர்கள் வீரபாண்டியன் பட்டணத்தில் தமது 84-ம் வயதில் தமது தமையனார் அவர்கள், புத்திரிகள் பௌத்திரிகள், களத்திரங்கள் மத்தியில், கடந்த சூலைமீ 23உ காலை 7-மணிக்கு அமலபராபரன் திருவடி யடைந்தார். இவர் சடலம் இயேசுவின் திவ்ய இருதயச் சபைச் சகோதரரும், பரிசுத்த கர்மேல் சபைச் சகோதரரும் புடைசூழ அர்ச். தோமையப்போஸ்தலர் கோவிலில் குருசுவாமியாரால் மந்திரிக்கப்பட்டு ஷை சிமிற்றேரியில் நல்லடக்கஞ் செய்யப்பட்டது. இவர் ஆத்தும இளைப்பாற்றிக்காய் ஒரு பர. பிரி. வேண்ட மன்றுடும். ஆசற்ற தாசன்,

யு. பி. பிச்சை அடுத்தாரைக் காற்றர்.

### வீரபாண்டியன் பட்டணம்.

வீரபாண்டியன் பட்டணம் காலஞ்சென்ற ம-ா-ா-ஸ்ரீ தொம்மை நேவிஸ் அடுத்தாரைக்காற்ற பூபாலருய மொடுதோமஸ் அவர்கள் புத்திரரும் ம-ா-ா-ஸ்ரீ, அந்தோனி எதுவாடுத் தடுத்தாரைக் காற்றூர் அடப்பனார் அவர்கள் பௌத்திரருமாகிய ம-ா-ா-ஸ்ரீ அ. ஏ. பிதேலிஸ் அடுத்தாரைக் காற்ற பூபாலருயர் அவர்கள் 65-ம் பிராயத்தில் நடப்பு வியாதியால் கடைசி தேவத் திரவியனுமானங்கள் பெற்று தம தேகபுத்திரி, பவுத்திரர், மித்திரர்களுக்கு மதுரகுண நல் வாக்களித்து, இப்பிரபஞ்ச லௌகிக வாழ்வை நீத்து, வைதிக பதவிக்கு சென்ற சூன்மீ 30உ அழைத்துக்கொள்ளப்பட்டார். இவர் சடலம் அர்ச். தோமை அப்போஸ்தலர் தேவாலயத் தமர்த்தப்பட்டு, மூன்று குருசுவாமிகளால் றெக்குவம் பாடப்பட்டபின் இவர் சிரேஷ்ட புத்திரியை க்ஷேமித்த கல்லறையில் பூமிதானம் செய்யப்பெற்றது. இவர் ஆத்தும இளைப்பாற்றிக்காய் வேண்டிக்கொள்ள விரும்பும்.

சகோதரன்,

யு. பி. பிச்சை அடுத்தாரைக் காற்றர்.

## நல்லாயன் ஆபீசு அச்சியந்திரத்துக்காக நன்கொடை.

நாம் சென்ற சூன்மீ சஞ்சிகையினுள் அடக்கஞ் செய் தனுப்பிவைத்த அப்பீல் மனுவை அநேக நண்பர்கள் கவனித்தார்களில்லை போலும். ஏனெனில், மிகவுங் கொஞ்சம் பேரே அதற்கு விடையனுப்பி யிருக்கிறார்கள். மற்ற நண்பர்களுந் தங்கள் தங்களாலியன்ற மட்டுந் தருமஞ் செய்து எம்மைச் கடனென்னும் நிர்பாக்கியத்தினின்று காப்பாற்றி இரட்சிப்பா ரெனக் கோருகிறோம். பலதுளி பெருவெள்ள மென்பதைச் சிந்தித்து, ஒருவரும் இல்லை யென்னுமல் ஒவ்வொருவரும் சொற்ப தொகையாவது கொடுத் துதவுவார்களாக! இதற்காக இம் மாதத்தில் வரப்பெற்ற தொகை பின் வருமாறு. இந்த நன்கொடையாளர்களுக்கு எமது நன்றியறிந்த வந்தனம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஏற்கெனவே வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை. | 71 | 3 |
| Miss. செல்லக் கண்ணம்மாள்; | 1 | 0 |
| Mr. M. பொன்னையா பெர்நாண்டோ | 1 | 0 |
| ,, பிச்சை அடுத்தாரைக் காத்தார் | 1 | 0 |
| ,, M. ஜான் பிள்ளை, லௌடேல் | 1 | 0 |
| ,, P. A. விசேந்தி மிக்கேல் சில்வேயிரா | 3 | 0 |
| ,, J. L. கில்லியர், பாக்கபள்ளி | 0 | 8 |
| Messrs. A. T. அந்தோனிசாமி பண்டிதர், அ 8; A. S. மரியமுத்து பண்டிதர் 4; S. சவரிமுத்து பண்டிதர், 4; C. பிச்சை முத்து பண்டிதர் 2; G. பி. மிக்கேல் பண்டிதர் 2: M. ஆரோக்கியசாமி பண்டிதர் 4; சி. சவரிமுத்து பண்டிதர் 4; A. S. A. 4; M. பொன்னப்பன் பண்டிதர் 4; A. சின்னப்பர் பண்டிதர் 4; G. பக்கிரிசாமி பண்டிதர் G. S. இராயப்பன் பண்டிதர் 1; | 2 | 8 |
| Total Rs. | 81 | 3 |



## எடப்பாடி அர்ச். செல்வநாயகி அம்மாள் ஆலய தர்மம்.

அடியில் கையொப்பமிட்டிருக்கும் நாம் உதார குணமுள்ள சகல நண்பர்களுக்கும் அறிவிப்பது யாதெனில்:—

எடப்பாடி அர்ச். செல்வநாயகி அம்மாளின் திருவாலயத்திற்கு பிரதி வருஷமும் பாஸ்கு பண்டிகையின்போது திருயாத்திரைக்காரர் அவள் திருவடியைப் போற்றி, அவள் உதவியைக் கேட்கத் திரளாய் வருவது யாவருக்கும் தெரிந்த விஷயமே. அப்படி வருகிறவர்களுக்குத் தகுந்த விடுதிகளும், சாவடி சத்திரங்களுமில்லாமையால் கடும் வெய்யிலின் வெப்பத்தினால் அவர்கள் தவித் தலைவதைக் கண்டும், பொருளுதவி யில்லாமையால் நாம் அவர்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்ய நாளது வரையில் கூடாமல் போனதைப்பற்றி அதிக வியாகுலப்படுகிறோம். ஆகிலும், அர்ச். செல்வநாயகி அம்மாளை நம்பி இப்போது இந்திய கிறிஸ்தவர்களுக்கு ஒரு சாவடியும், வெள்ளைக்காரர்களுக்கு மற்றொரு சாவடியும் கட்ட யேற்பாடு செய்வதோடு, கோவிலையும் மராமத்து செய்யவும் துணிந்து, ஏறக்குறைய ரூ 2,500 பெறும்படியான கட்டிடங்களைத் துவக்கிவிட்டோம். தரும சிந்தையுள்ள மரியாயின் தாசர்கள் உடனே நமக்கு கைகொடுத்து இந்த மேன்மையான வேலைகளைச் சீராய் முடிவு செய்ய உதவிபுரியவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். இதைக் கண்ணுறும் சகல கனதனவான்களும், சகல கிறிஸ்துவர்களும் தம் தம்மா லியன்றமட்டும் இந்த காரியத்திற்கு பொருளுதவி செய்வார்களென்று நம்பிக்கையாயிருக்கிறோம். நண்பர்களுடைய தர்மம் எவ்வளவு சிறியதேனும் சந்தோஷமாய் அங்கீகரிக்கப்படும். தேவதாயானவள் அவர்களையும் அவர்கள் குடும்பங்களையும் ஆசீர்வதிப்பாளென்பது திண்ணம்.

| | ரூ: | அ. | ப. |
|---|---|---|---|
| ஷை தருமத்துக்காக ஏற்கெனவே வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை. | 180 | 11 | 0 |
| Mr. தெய்வசகாய ஆசாரி; (செவ்வாப் பேட்டை) | 1 | 0 | 0 |
| ,, ச. பொன்னுசாமிசெட்டி; ஷை | 5 | 0 | 0 |
| ,, வி. குழந்தைசாமிசெட்டி; ஷை | 1 | 0 | 0 |
| ,, ச. சூசை செட்டி; ஷை | 1 | 0 | 0 |
| ,, சின்னப்ப செட்டி; ஷை | 1 | 0 | 0 |
| ,, அருளாநந்து; ஷை | 1 | 0 | 0 |
| ,, சூசை and சவரிமுத்து செ. ஷை | 1 | 0 | 0 |
| ,, A. Friend ஷை | 5 | 0 | 0 |
| ,, Pascal De milla ஷை | 5 | 0 | 0 |
| ,, அந்தோனிமுத்து ஆசாரி; ஷை | 1 | 0 | 0 |
| ,, ஞானப்பிரகாசம்; ஷை | 1 | 0 | 0 |

| | | | |
|---|---|---|---|
| Mr. ம. செல்வப்ப செட்டி; ஷை | 1 | 0 | 0 |
| ,, சூ. மதலைமுத்து செட்டி; ஷை | 1 | 0 | 0 |
| ,, ஆரோக்கியம்மதலைமுத்து; ஷை | 1 | 0 | 0 |
| ,, M. A. மோசேஸ் பிள்ளை. ஷை | 3 | 0 | 0 |
| ,, ப. லூர்துசாமி செட்டி; ஷை | 1 | 0 | 0 |
| ,, ம. சிலுவைமுத்துபிள்ளை; ஷை | 1 | 0 | 0 |
| ,, வெ. மரியசூசை ஆசாரி; ஷை | 1 | 0 | 0 |
| ,, மரிய சவரியா பிள்ளை; ஷை | 2 | 0 | 0 |
| ,, ஆ. சீரங்க செட்டி; ஷை | 1 | 0 | 0 |
| ,, வி. செல்வநாயக ஆசாரி; ஷை | 1 | 0 | 0 |
| ,, சி. அந்தோனிமுத்து ஆ. ஷை | 1 | 0 | 0 |
| ,, சி. மதலைமுத்து ஆசாரி; ஷை | 1 | 0 | 0 |
| ,, ச. மதலைமுத்து ஆசாரி; ஷை | 1 | 0 | 0 |
| ,, T. A. மரியதாஸ் ஆசாரி; ஷை | 1 | 0 | 0 |
| ,, பெரியநாயக ஆசாரி; ஷை | 1 | 0 | 0 |
| ,, ஆ. மதலைமுத்து ஆசாரி; ஷை | 3 | 0 | 0 |
| ,, சின்னதம்பி ஆசாரி; ஷை | 2 | 0 | 0 |
| ,, மெ. கொ. நன்னுசாமய்யர்; ஷை | 1 | 0 | 0 |
| ,, வ. செ. மதலைமுத்துசெட்: ஷை | 1 | 0 | 0 |
| ,, டி. என். மரியதாஸ்; ஷை | 1 | 0 | 0 |
| சூரமங்கலம் நண்பர்கள்; | 1 | 2 | 0 |
| அரிசிபாளையம் நண்பர்கள்; | 3 | 0 | 0 |
| Mr. எ. அமல்தாஸ்பிள்ளை; வக்கீல் (சேலம்) | 5 | 0 | 0 |
| ,, டி. எஸ். செகராஜு பிள்ளை; (பி. ஏ. பி. எல்; வக்கீல் (சேலம்) | 5 | 0 | 0 |
| ,, எ. இரத்தினம்பிள்ளை (அஸ்தம்பட்டி.) | 1 | 0 | 0 |

| | | | |
|---|---|---|---|
| Mr. டிப்டி தாசீல்தார்; (ஈரோடு) | 3 | 0 | 0 |
| ,, கிறிஸ்தீனம்மாள்; ஷை | 1 | 0 | 0 |
| ,, எ. மாசிலாமணி பிள்ளை; ,, | 1 | 0 | 0 |
| ,, தொ. அடைக்கலம்; கோவில் மணியம்; ,, | 5 | 0 | 0 |
| ,, தொ சவரிமுத்து; ,, | 5 | 0 | 0 |
| ,, எஸ். வி. துரைசாமி பி. ,, | 1 | 0 | 0 |
| ,, பி. துரைசாமி பிள்ளை; ரிவினியூ இனிஸ்பெக்டர் ,, | 1 | 0 | 0 |
| ,, சவரிமுத்து ஆசாரி; ,, | 1 | 8 | 0 |
| ,, அப்பாசாமிஆசாரி & லாசர் ஆசாரி; ,, | 1 | 0 | 0 |
| ,, மதலமுத்து ஆசாரி; ,, | 0 | 8 | 0 |
| ,, பி. எல். குருசு; கத்தோலிக்கு பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்; ,, | 1 | 0 | 0 |
| நண்பர்கள்; ,, | 1 | 8 | 0 |
| Mr. எ. பிச்சமுத்து; (சோமனூர்) | 1 | 0 | 0 |
| ,, சி. முத்தப்ப செட்டியார் போஸ்ட்மாஸ்டர்; ஷை | 1 | 0 | 0 |
| ,, எ. குருசாமி செட்டியார் வியாபாரி; ஷை | 1 | 0 | 0 |
| ,, எ. முத்துகுட்டி முதலியார்: (கூடலூர்) | 0 | 12 | 0 |
| ஆகமொத்தம் ரூ. | 273 | 4 | 0 |

எடப்பாடி, கத்தோலிக்குக்கோவில் } ஜே. ஞானதிக்கம், விசாரணை குரு.


# ST. ANTHONY'S DEPOT.

Altar Candles, Church Ornaments & Ecclesiastical Arts.

கிறிஸ்துவ நண்பர்காள்,

ஞான வாசகத்திற்கும், தியானத்திற்கு மேற்ற அநேக புஸ்தகங்களும், சிலுவைப் பாதைப் படங்கள், சிலுவைகள், சுரூபங்கள் முதலியனவும் எம்மிடம் விற்பனைக் கிருக்கின்றன. அவற்றுள் சில முக்கியமானவைகளாவன.—

மன்ரேசா, அல்லது ஞான முயற்சிகளின்வியாக்கியானம் ரூ. 1–14–0; ஞானவொடுக்கங்களுக்கு நியமிக்கப்பட்ட அர்ச். இஞ்ஞாசியாருடைய ஞானத் தியானங்கள் அணா 0–7–0; ஆத்துமநேசம் அணா. 0–7–0; வெள்ளிக்கிழமைப் புதுமை 0–9–6; அர்ச். வாரம் 0–8–0; சிலுவைப் பாதை சிறிது 0–3–6; சிலுவைப்பாதை பெரிது தோல்கட்டிடம் 0–12–0; வியாகுலப் பிரசங்கம் அரைக்கட்டிடம் 0–8–0; வியாகுலப்பிரசங்கம் கலிக்கோ 0–10–0; திருஸ்தலவாசகம் 0–3–6; திருஸ்தல தரிசனை 0–6–0; தெய்வீக விருந்து ரூ. 1–0–0; சேசுநாதர் திருப்பாடுகளின் தியானம் 0–10–0; கிறிஸ்துநாதர் அநுசாரம் தோல்கட்டிடம் 0–12–0; தேவமாதா, சூசையப்பர்வணக்க மாதங்கள் ஒன்று 0–12–0; வியாகுலமாதா புலம்பல் 0–1–6; அன்னை அழுங்கல் ஒப்பாரி 0–2–6; தேவமாதா வியாகுல ஒப்பாரி 0–6–0; சிந்தாகுலத்திரட்டு சிந்தாகுலக்கோவை 0–4–0; மிகவும் நேர்த்தியாய் வர்ணந் தீட்டிய சிலுவைப்பாதைப் படங்கள் 10×8 இஞ்சு செட். ரூ. 1–4–0; ஷை 17+3 இஞ்சு செட். ரூ. 4–8–0; எண்ணெய் வார்ணிஷ் 30+22 இஞ்சு செட். ரூ. 35–0–0; மிகவும் நேர்த்தியான கருப்பு போட்டோபடங்கள் (By Professor Gebhard Fugel) செட் 18½×13½ ரூ. 25; இதோ மனிதன் என்ற (Ecce Homo) சுரூபம் 20 இஞ்சு ரூ.10; ஆண்டவருடைய உயிர்த்தானச்சுரூபம் 20 இஞ்சு ரூ. 12; இன்னு மநேகவிதமான வெகுமதி பண்ணத்தக்க பலவடிவான சீமை கட்டுப் புஸ்தகங்களும், செபமாலை, படம், சுரூபம், வரவணிக்க முதலியவையும், கோவில் சோடினைச் சாமான்களும் விற்பனைக் கிருக்கின்றன.

1 ரூபாய்க்குக் குறைந்த சாமான்கள் V. P. P. யில் அனுப்பக் கூடாமையால் இவைகளுக்கு ஸ்டாம்பு அனுப்பினால் ஒப்புக்கொள்வோம்.

Thomas Rodrigo, No. 40, Kochikadde, Colombo. | தோமாஸ் உறுதிரீகு, நெ. 40, கொச்சிக்கடை, கொழும்பு.





# நல்ல ஆயன்.

October—1913.

புத்தகம். 11 } "நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10:17-14.) { நெம்பர். 10


## ON VENIAL SIN

## அற்பப் பாவத்தின் பேரில்.

### I. பிரிவு.

### அற்பப் பாவம் எத்தன்மையானது?

(முன் தொடர்ச்சி.)

---

தேவ கட்டளைகளை அற்பக்காரியத்திற்றானே மீறிப்போகிறோமென்றும், அப்படி மீறிநடப்பதினால் அற்பப் பாவங்களைத்தானே கட்டிக் கொள்ளுகிறோமென்றுஞ் சொல்லி அவைகளைக் கட்டிக்கொள்ளத் துணிவு கொள்வது நமக்கு எட்டுணையும் நியாயமல்ல. ஏனென்றால், அக் கற்பனைகள் நம்மால் சுலபமாய் அனுசரிக்கப்படத் தக்கவைகளாகையாலும், கஷ்டமானவைகளென்று நாம் சாக்குபோக்குச் சொல்லி அவைகளுக்குத் தப்பித்துக் கொள்ளத் தகாதவைகளாகையாலுமாமே. அற்பக்காரியத்திற்றானே ஆதாமும் தேவ கட்டளையை மீறி பெருங் குற்றவாளியானான். அவன் அநுசரிக்கவேண்டியிருந்த தெல்லாம் என்ன? ஒரு அற்பப் பழத்தை அருந்தாதிருத்தலே அல்லவா? ஐயோ, அவன் எவ்வளவோ சுளுவாய், யாதோர் கஷ்டமும் நஷ்டமும் படாமல் அந்த அற்பக் கனியை விலக்கியிருக்கலாம்!! இத்தகைய முகாந்தரத்தை முன்னிட்டே, அதாவது அற்பக் காரியத்தை அநுசரிக்க தவறினதினாலேயே ஆமானும் எலிசேயுஸ் தீர்க்கதரிசியினால் வெகுவாய்க் கடிந்துகொள்ளப்பட்டான் என்று வேத புத்தகத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. இவன் தனக்குள்ள குஷ்ட வியாதியைப் போக்கிக் கொள்ள ஷை தீர்க்கதரிசியண்டைக்குப் போனான். அப்போது அவர் அவனுக்கு நல்வரவு கூறி உபசரியாமலும், அவனைக் கண்டு அவனோடு ஒரு வார்த்தை முதலாய்ப் பேசாமலும், ஜோர்தான் நதிக்குப் போய் அதில் ஏழுதரம் முழுகும்படி தமது ஊழியன் மூலமாய் அவனுக்குச் சொல்லியனுப்பினார். இதைக் கேட்ட ஆமான் கோபாவேசங்கொண்டு முறுமுறுக்கவே "ஐயா, உம்முடைய குஷ்ட வியாதியைத் தீர்த்துக் கொள்வதற்காக கொடூரமான பத்தியமும் பரிகாரமும் பிடிப்பதவசியமென்று உமக்குக் கற்பிக்கப்பட்டிருந்தால், அதைத் தப்பாமல் நீர் பிடிப்பீர். அப்படிக்கின்றி ஜோர்தான் நதியின் குளிர்ந்த ஜலத்தில் ஏழுதடவை முழுகி வியாதியைச் சொஸ்தப்படுத்திக் கொள்ளுமென்று வெகு சுலபமான முறை உமக்கு சொல்லப் பட்டிருக்கையில், நீர் அதை எவ்வளவோ சுருக்காயும் சுருசுருப்பாயும் அனுசரிக்கத் தகுமல்லவா?" என்று அவனுக்குப் பதில் உரைக்கப்பட்டது. இதனால் தேவ கட்டளைகளை அற்ப விஷயத்திலும் மீறி நடப்பது சரியல்லவென்று தெரியவருகிறதல்லவா? அப்படி அவைகள் நம்முடைய அநுசரணைக்குக் கஷ்டமானவைகளாகவும், அசாத்தியமானவைகளாகவு மிருக்குமானால் நமக்கு யாதோர் சாக்குபோக்குக்கு இடமிருக்கும். ஆனால் அவைகள் நம்மால் சுலபமாய் அனுசரிக்கப்படத் தக்கவைகள். அவைகள் நமக்கு அசாத்தியமுமல்ல, கஷ்டமுமல்ல. ஆகையால் அற்பப் பாவங்களைக் கட்டிக் கொள்ளுகிறவர்கள் சர்வேசுரன் சமுகத்தில் குற்றவாளிகளாகிறார்களென்பதும், அவைகளுக்காக அவர்கள் கண்டிப்பாய் உத்தரிக்க வேண்டியவர்களாகிறார்களென்பதும் குன்றாத சத்தியமாமே.

அற்பப் பாவத்தின் தீமையையும் அதன் விஷத்தையும் நாம் நன்றாய்க் கண்டுணர நாம் விசேஷமாய்க் கவனிக்கத் தக்கவைகள் எவை யெனில், நமக்குக் கர்த்தராகவும், ஆண்டவராகவும், இரட்சகராகவும், இராசாவாகவு மிருக்கும் சர்வேசுரன்தானே இப்பாவங்களினால் நிந்திக்கப்படுகிறாரென்றும், இப்படி அவருக்கு நிந்தை அவமானம் வருவிக்க, தேவ இஷ்டப் பிரசாதத்தினால் நிறைந் தலங்கரிக்கப்பட்டிருக்கும் அவருடைய நேச புத்திரியும், பிரிய பத்தினியுமான ஒரு பரிசுத்த ஆத்துமந்தானே காரணமா யிருக்கிறதென்றும் கவனிக்கவேண்டியதாமே. உயர்ந்த உத்தியோகம் மேலான அந்தஸ்துக்களையுடைய கனவான்களிடத்தில் அல்லது பெரிய மனுஷாளிடத்தில் நாம் சற்றே மரியாதைக் குறைவாய் நடந்துகொள்வோமானால், அது ஒரு பெருங் குற்றமாகப் பாவிக்கப்படு மன்றோ? அஸ்சுவேருஸ் அரசனுக்கு மிகவும் உகந்தவனா யிருந்த ஆமான் காற்படைச் சேவகர்களில் ஒருவனான மர்தேக்கேயுஸ் தனக்கு செய்யவேண்டிய வணக்கம் நமஸ்காரம் செய்யத் தவறினான் என்பதின் நிமித்தம் அவன்பேரில் எம்மாத்திரம் கோபங் கொண்டானென்றால், அவனைக் கொலை செய்விக்கும்படியான யுக்தி யோசனைகளையெல்லாஞ் செய்தான். ஸ்பேயின் தேசத்தி லிருந்து வெற்றிக் கொடியோனாய்த் திரும்பிவந்த ஜேம்ஸ் அல்மான் சோர் என்பவனுக்கு அராபியாதேசத்து அரசன் ஒருவன் சிரசாக்கினையிடக் கட்டளையிட்டான். அதேதெனன்றால் ஷை அல்மான்சோர் தனக்கு வழியில் நடந்த வர்த்தமானம் ஒன்றை அரசனிடத்தில் புன்சிரிப்புடன் வெளி யிட்டதற்காகவே. அது யாதெனில்: காட்டு மார்க்கமாய்த் தான் வரும்போது அவ்விடத்தில் ஒரு சிறு பெண்ணைத் தான் சந்தித்ததாகவும், அப்பெண்ணானவள் யாதோர் துணையுமின்றி ஒன்றியாய் அக்காட்டில் நடமாடுவதைப்பற்றி தான் அவளைக் கண்டித்ததாகவும், அதற்கவள் "அல்மான்சோர் ஸ்பேயின் தேசத்துக் கனவானாய் இருக்கு மளவும் என் கற்புக்கு பழுது நேரிடாது" என்று சொன்னதாகவும் அரசனுக்கு அறிவித்ததேயாம். அரசனிடத்தில் மரியாதைக் குறைவாய் நடந்துகொள்ள வேண்டுமென்கிற நோக்கம் ஒன்று மில்லாமல் அவன்பேரில் தனக்கு நேசமும் நம்பிக்கையுமுண்டென்று காட்டுவதற்காக அல்மான்சோர் சிரித்த சிரிப்பு சிரசாக்கினைக்குரியதென்றால், தெய்வ மகத்துவத்துக்கு முற்றும் பொருந்தாத அற்பப் பாவங்கள் குற்றமற்றவைகளாகுமென்று பாவிக்கவும், கருதவும் படலாகுமோ? "அற்ப விஷயத்தில் முதலாய் சர்வேசுரனுக்கு அவமதிப்பு வருவிப்பது சொற்பமல்லவே" என்று அழுகைப் பிரலாபத்துடன் அர்ச். பெர்னார்து வசனித்திருக்கிறார். நமது கண்களை நாம் எவ்வளவோ அருமையாகப் பாவித்து, அவைகளுக்கு யாதோர் பழுது நேரிடாதபடிக்கும் ஒரு தூசி துப்பு முதலாய் அவைகளில் விழாதபடிக்கும் அவைகளைப் பத்திரமாய்க் காப்பாற்ற அக்கறை கொள்வதுபோல சர்வேசுரனுடைய திருக் கற்பனைகளை நுணுநுணுக்கமாகவும் பிரமாணிக்கமாகவும் அனுசரிக்கக் கவலைகொள்வோமாக. "மகனே, என் கற்பனை உன் கண்மணிக்கு ஒத்ததென வெண்ணி அதை யனுசரி (பழமொழி VII. 2) என்று சர்வேசுரனும் வசனித்திருக்கிறார்.

சர்வேசுரன் நமக்கெல்லோருக்கும் நல்ல தகப்பனா யிருக்கிறார் என்பதை மாத்திரம் நாம் உன்னியோசிப்போமானால், அற்பப் பாவங்களினால் நாம் அவருக்கு நிந்தை அவமானமும், கஸ்தி மனஸ்தாபமும் வருவிக்க மாட்டோமென்பது திண்ணம். ஓர் பிள்ளை, தன் தகப்பன்மட்டில் நடந்து கொள்ளும் விஷயமாய், "என் தகப்பனை நான் குத்திக்கொன்று போடமாட்டேன். உயிர்ச்சேதம் உண்டாகும்படி அவரை அவ்வளவாய் அடித்துக் காயப்படுத்த மாட்டேன். அப்பப்பா! அப்படிசெய்ய நான் ஒருக்காலுந் துணியேன். ஆனால் பிரதிதினமும் காலை தொட்டு மாலை வரையிலும் அவருக்கு மனவருத்தத்தைக் கொடுப்பேன். அவருக்குப் பிரியப்படும்படியாய் யாதொன்றையுஞ் செய்யாமல் அவரைத்திட்டி உதைப்பேன். அவரைத் தலையில் குட்டி முகத்தில் காறி உமிழ்வேன்" என்று சொல்வானானால், அவனுடைய நன்றிக்கேட்டையும், வன்னெஞ்சதனத்தையும் பற்றி என்ன சொல்லலாம்? இவனை யொரு பிள்ளையென்று சொல்லவுந்தகுமோ? மகன் தந்தைக்கு ஆற்று நன்றி இது தானா? பெற்றெடுத்து வளர்த்து பேணிக்காப்பாற்றுந் தகப்பனுக்கு திட்டும் உதையும் குட்டுமா பிரதிநன்றி? அற்பப்பாவங்களை மனம் பொருந்திக் கட்டிக்கொள்ளுகிறவர்களும் இப்படித்தான் தங்களுக்கு நல்ல தகப்பனாயும், பேருபகாரியாயுமிருக்கும் சர்வேசுரனிடத்தில் நடந்துகொள்ளுகிறார்கள். இவர்களை இன்னும் யாருக்கு ஒப்பனையிடலா மென்றால், நமது திவ்ய கர்த்தரைச் சிலுவையி லறைந்து அவருடைய உயிரைப்பறித்த யூதர்களுக்கல்ல, ஆனால் அவரைப் பரிகாச ஏளனங்கள் செய்தும், அவரை அடித்தும் உதைத்தும், அவர் முகத்தில் காறித் துப்பியும் இன்னுமவருக்கு பலவாக்கினைகளையும் புரிந்த யூதர்களுக்கு அவர்களை ஒப்பனை யிடலாம். அற்பப் பாவங்கள் இவ்வளவு துராகிருதமுடையவைகளானால், நாம் எப்படி அவைகளுக்கு இடங் கொடுக்க சம்மதிக்கலாம்?

இது இப்படியாயிருக்க, அற்பப் பாவங்களைக் கட்டிக் கொள்கிறவர்கள் யாரென்று நாம் யோசித்துப் பார்ப்போமானால், அப்பாவங்கள் எவ்வளவோ கனமானவைகளென்று தெரிந்துகொள்வோம். அப்பாவங்கள் ஒரு பரிசுத்த ஆத்துமத்தினால்தானே கட்டிக்கொள்ளப்படுகின்றன. தேவ இஷ்டப் பிரசாதத்தினால் பரிசுத்தப்படுத்தப்பட்டு, சர்வேசுரனுக்கு சுவீகாரப் பிள்ளையாகவும், பிரிய பத்தினியாகவு மிருக்கும் ஆத்துமந்தானே அப்பாவங்களுக் குள்ளாகிறது. ஒருவன் தன் சிநேகிதனால் துன்பப்படுவானானால், அதற்குத் தன் சிநேகிதனே காரணமா யிருப்பதைப்பற்றி அவன் கஸ்திப்படுவானென்பது எல்லோருக்குந் தெற்றெனப் புலப்படும். அந்தத் துன்பம் தன் சொந்த பிள்ளையிடத்திலிருந்து வருமானால் இன்னும் அதிகத் துக்கப்படுவானன்றோ? அப்படியே தமக்குப் பிரிய பிள்ளையாகவும் பத்தினியாகவு மிருக்கும் ஒருபரிசுத்த ஆத்துமாவினால் சர்வேசுரன் நிந்திக்கப்படும்போது அதனால் அவருக்கு எவ்வளவு மனவருத்தமும் வியாகுலமும் உண்டாகுமென்றும், அந்த நிந்தனை எவ்வளவோ கனமானதாயிருக்க வேண்டியதென்றும் அறிந்துகொள்ளக் கடவோமாக.

பிதாப் பிதாவான யாக்கோபு தமக்கு ஜேஷ்ட புத்திரனானவனும், தம்மால் தம் கண்மணியைப்போல் பாவிக்கப்பட்டவனுமான ரூபன் தம்முடைய வீட்டிலேயே கட்டிக்கொண்ட ஓர் அடாத காரியத்துக்காக மனச்சமாதானமும் அமரிக்கையுமற்று, எவ்வளவோ மனோவியாகுலம் அனுபவித்தார். யூதாஸ் கரியோத் தமக்குச் செய்த சதிமானத்தைப்பற்றி நமதாண்டவர் அவ்வளவாய் மனஸ்தாபப்படாமல், அவன் தம்முடைய சீஷனாயிருந்தும், தம்மோடுகூட இருந்து தம்மை யாரென்று அறிந்திருந்தும், தமக்கு இப்பேர்ப்பட்ட இரண்டகம் புரியத் துணிந்த அவனுடைய நன்றிகெட்டதனத்தின் பேரில் மாத்திரம் அதிக மனவருத்தப்பட்டு முறையிட்டதாவது: "என்னைப் பகைத்துக் கொண்டவன் என்பேரில் அபாண்டங்களைப் பேசி யிருந்தால் சிலவிசை அவனுக்கு அகன்று ஒளிந்திருப்பேன். ஆனால் நீ என்னோடு கூடிவாழ்ந்து என்னையறிந்து எனக்கு ஆலோசனை கொடுப்பவனாய் இருந்தாயே" (தாவீது. சங். 55-13. 14.) என்பதேயாம். ஆனபடியால் சர்வேசுரனால் நேசிக்கப்படும் பரிசுத்த ஆத்துமாக்களே! சர்வேசுரனிடத்திலிருந்து ஆத்துமத்துக்குஞ் சரீரத்துக்கும் அநேக உபகார சகாயங்களைப் பெற்றுக் கொண்டவர்களே! நீங்கள் சாவேசுரனுக்கு உகந்த பிள்ளைகளாய் நடந்து, மேன்மேலும் அவருக்குப் பிரியப்படப் பிரயாசைப்படாமல், அற்பப் பாவங்களினால் அவருக்கு மனவருத்தத்தையுண்டுபண்ணலாமோ? அவருக்கு நீங்கள் பிரிய பிள்ளைகளாயிருந்தும் உங்களுடைய நன்றிகெட்ட தனத்தைக் காட்ட அற்பப் பாவங்களைக் கட்டிக்கொள்ளத் துணிவுகொள்ளலாமோ? அதனால் அவருக்கு இடைவிடாத மனோவாதனையையும் அவமானத்தையும் உண்டுபண்ணலாமோ?

அற்பப்பாவம் இப்படி சர்வேசுரனுக்குப் பொருந்தாத துரோக மென்றும், அருவருப்புடன் விலக்கப்படத் தக்கதென்றும் அறிந்துகொண்ட பின்னும், சிலர் அது அவ்வளவு பெரியகுற்றமல்லவென்று சொல்வார்களாக்கும். சாவான பாவத்தோடு அதை ஒப்பனையிட்டுப் பார்க்கையில் அது அவ்வளவு பெரிய குற்றமல்ல தான். ஆனால் அதைத் தன்னிலேயே பெரிய குற்றமென்று சொல்லவேண்டும். ஏனெனில், சர்வேசுரன் அதைப் பகைத்து அதன்பேரில்

அருவருப்பு கொள்ளுகிறார். நாம் வசிக்கும் இப் பூலோகத்தை வான மண்டலத்தோடு ஒப்பனையிட்டுப் பார்க்கையில் அதை ஒரு சிறு புள்ளி யென்றே சொல்லத்தகும். ஆனால் அது ஒரு சிறு புள்ளிதானோ? அதன் சுற்றளவு இருபத்தீராயிரம் மயில் அல்லவா? இப்படியே அற்பப்பாவம் சொற்பக் குற்றமாயினும் அதனால் விளையும் பொல்லாப்பு பெரியது. அற்பப் பாவம் பெரிய குற்ற மல்லவென்று வைத்துக் கொண்டபோதிலும், அதனால் விளையும் பொல்லாப்பு பெரியதல்லவென்று சொல்ல முடியாது. ஆ! அது எவ்வளவு பெரிய பொல்லாப்பென்றால்,தேவகுமாரன் தம்முடைய சர்வாங்கத்திலுள்ள இரத்தத்தையெல்லாம் அதற்காகச் சிந்தினார். நமது கர்த்தர் சாவான பாவங்களுக்காகமாத்திரம் பாடுபடாமல், அற்பப் பாவங்களுக்காகவும் பாடுபட்டாரல்லோ? அப்படியென்றால் அற்பப் பாவத்தின் விஷத்தை நாம் அவ்வளவு லேசாய் மதிக்கலாகுமோ? ஒரு அற்பப்பாவத்தைக் கட்டிக் கொள்வதினால் நமக்கு ஓர் பெரிய இலாபம் வருவதா யிருந்தாலும், ஓர் பெரிய பொல்லாங்கு விலகிப் போகிறதா யிருந்தாலும் நாம் அதைக் கட்டிக்கொள்ளத் தகாது. ஒருவன் ஒரு சிறு பொய் சொல்வதினால் உலகத்தி லுள்ளவர்கள் எல்லோரையும், நரகத்தி லுள்ளவர்கள் எல்லோரையும் மோட்சத்துக்கு அனுப்பிவிடக் கூடுமென்றாலும், அவன் அதைச் சொல்லவொண்ணாது. இப்படி அற்பப் பாவங்கள் நமக்கு பொல்லாப்புக்குரியவைகளா யிருப்பதின் நிமித்தம் அவைகளை நாம் விலக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆயினும் சிலர் "என்ன நாம் அற்பப் பாவங்களைத் தானே கட்டிக்கொள்ளுகிறோம்" என்று அவைகளைக் கட்டிக்கொள்ளத் துணிவார்களே யானால், காலை யிலிருந்து மாலைவரையிலும் அவர்களால் கட்டிக்கொள்ளப்படுகிற அற்பப் பாவங்களின் பெருந்தொகையைப்பற்றியாவது அவைகளை அவர்கள் விலக்க முயலுவது அவசியமென அறிந்துகொள்வார்களாக.

"நீ அவைகளைநிறுத்து சீர்தூக்கிப் பார்க்கையில் அவைகளுக்காக பயப்படாவிட்டாலும், அவைகளைக் கணக்கிட்டுப் பார்க்கையில் 'அவைகளுக்குப் பயந்துநட" வென்கிறார் அர்ச். அகுஸ்தீன். ஆம், ஒரு இடிக்கு ஒப்பாயிருக்கிறது சாவானபாவம். அற்பப் பாவங்களோ கல் மழைக்கு ஒப்பாகும். எப்படியெனில், ஒருவன் மேல் இடி விழுந்த மாத்திரத்தில் அவன் உயிர் துறப்பான். அப்படியே சாவான பாவத்தைக் கட்டிக்கொள்ளும் எவனும் உடனே தன் ஆத்துமத்துக்கு உயிரா யிருக்கும் தேவ இஷ்டப் பிரசாதத்தை யிழந்து அதைப் பிணமாக்கிக் கொள்ளுகிறான். அற்பப் பாவங்களைக் கட்டிக் கொள்ளுகிறவனோ எப்படி கல்மழையினால் ஒரு தோட்டம் நாசமாக்கப்படுமோ அப்படியே இப்பாவங்களினால் தன் ஆத்துமம் என்கிற சிறந்த தோட்டம் நாசமாக்கப்பட விடுகிறான். அன்றியும், சாவான பாவமானது ஒரு கப்பலை மூழ்கடித்து அதற்குச் சேதம் வருவிக்கும் புயலுள்ள சமுத்திரத்துக்கு ஒப்பா யிருக்கக்கொள்ள, அற்பப் பாவங்களாகிய சிறு துளிகள் சேர்ந்து பெரு வெள்ளமாகி நம்முடைய ஆத்தும மென்கிற கப்பலுக்கு நஷ்டத்தை வருவிக்கின்றன. ஆனது பற்றி, நாம் அற்பப் பாவங்களுக்கு அஞ்சி நடக்க வேண்டியவர்களாகவே யிருக்கிறோம். அநேக அற்பப் பாவங்கள் சேர்ந்து ஒரு சாவான பாவ மாகாவிட்டாலும் அவைகள் நாம் சாவான பாவத்தைக் கட்டிக் கொள்ள வழியா யிருக்கின்றன என்பதை நினைவுகூர்ந்து, அற்பப் பாவங்களை விலக்கி புண்ணிய வழியில் நடக்க முயலுவோமாக.

(இன்னும் வரும்.)

# SHORT LIFE OF FATHER DAMIEN.

## தமியான் சுவாமியாரின் சீவிய சுருக்கம்.

இவ்வுலகில் தேச நன்மைக்காகவும், சினேகிதர் நன்மைக்காகவுந் தங்களுயிரைப் பலியாகத்தந்த உத்தமர் பலர் உளரென்ப துண்மையே. ஆகிலு மித்தகைய பெருந்தன்மையான காரியங்களைப் புரிவதற்கு சர்வேசுரனுடைய விசேஷ வரப்பிரசாதம் அவசியமன்று. ஆனால் யௌவன பருவத்தினர் நாடித்தேடு முலக வின்ப சுகமனைத்தையும் வெறுத்து, உற்றார் பெற்றோரையும் ஜென்ம நாட்டையுந் துறந்து, பார்க்க சகிக்கொணா குஷ்டரோகிகளி னிடையில் பல வருஷங்கள் சீவித்து, அவர்கட்குவேண்டிய உதவி சகாயங்களைச் செய்து,கடைசியாய் தானுமவ்வித பிணியால் பீடிக்கப்பட்டு இறக்கத்துணிவது கடவுளின் விசேஷ அனுக்கிரகத்தா லன்றி யாகுங் கருமமோ?. பிறர்நலங் கருதி இத்தன்மையான காரியங்களைச் செய்தவர்களி லொருவர் தமியான் சுவாமியார். இவரது சுருக்கச் சரிதை பின்வருமாறு:



கத்தோலிக்குச் சத்திய திருச்சபை செழித்தோங்கும் பெல்ஜிய (Belgium) நாட்டின் பேர்போன சர்வ கலாசாலையிருக்கும் லுவேயின் (Luvain) நகரத்திற்கு வடக்கே, ஆறு மைல் தூரத்திலுள்ள திரேமெலூ (Tremeloo) என்னுஞ் சிறு கிராமத்தில், 1840-வருடம் ஜனவரி மாதம் 3-ம் தேதி சூசை தமியான் சுவாமியார் பிறந்தனர். அவரது பெற்றோர் அக்குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுக்குமுன், இராணுவ உத்தியோகத்திலிருந்த உறவினர் ஒருவரை, குழந்தைக்கு ஞானத்தகப்பனாக விருக்கும்படி கேட்டபோது, அவர் குழந்தைக்கு சூசை யென்னும் நாமஞ் சூட்டுவதாயின், தாம் ஞானத்தகப்பனாயிருக்கச் சம்மதிப்பதாகச் சொல்லினார். இதனால் தான் தமியான் சுவாமியாருடைய ஞானஸ்நானப்பெயர் சூசையாயிற்று. இவரது தாய் தந்தையர் இவரை வெகு சாக்கிரதையுடன் வளர்த்து வந்தனர். தெய்வபக்தியால் அலங்கரிக்கப்பெற்ற இவருடைய தாயார் குழந்தைக்கு தான் ஊட்டும் பாலோடு புண்யசாங்கோபாங்க புத்தமுதையும் தெய்வசினேக வன்பையும் ஊட்டி வந்தாள். "ஈன்ற பொழுதினும் பெரிதுவக்குந் தன்மகனைச் சான்றோனெனக் கேட்ட தாய்" என்றபடி மகனின் மகிமை மாதாவுடைய தாதலால், சில வருஷங்களுக்குள்ளாக தமியான் சுவாமியார் தமது அருஞ்செயலாலடைந்த பெரும்புகழை இம்மாதுசிரோன்மணி கேட்டு மனமகிழும்படி சர்வேஸ்பரன் திருவுளமானார். ஏனெனில், தமியான் சுவாமியார் மரிப்பதற்கு இரண்டுவருடங்கட்கு முன்தான் எண்பத்து மூன்று பிராயமுள்ள இவரது தாயார் மரணமடைந்தாள். மற்ற பெல்ஜிய கத்தோலிக்கரைப்போல் மதவைராக்கியமும் சாதுரிய குணங்களுமுடையவர் அவருடைய தகப்பனார். இவர், தமியான் சுவாமியார் குஷ்டரோகிகளை தனிப்படுத்தி யிருந்த தீவில் வந்திறங்கிய பின் 1873-வருஷம் மேலோகம் சென்றனர்.

சிறு பிள்ளையாயிருக்கும்போது சூசை தமியானுக்கு விளையாட்டில் அவ்வளவு விருப்பமில்லை. விஸ்தாரமான வயல்களில் தனியாய் உலாத்தப்போவதும், ஏழை யிடையரோடு ஆட்டுமந்தைகளை பின்சென்று ஆட்டுக்குட்டிகளோடு கொஞ்சி விளையாடுவதும் அவருக்கு வெகுசந்தோஷம். இதனால இவரை சிறு இடையன் என்று அழைப்பது வழக்கம். செபஞ் செய்வதும் சூசைக்கு வெகு பிரியம். ஒருநாள் தங்கள் கிராமத்திற் கருகில் சந்தைக் கடை கூடி சனக்கும்பல் அதிகரித்தபோது சூசை தமியானை நாள்முழுவதும் வீட்டில் காணாததால், அவரது தாய்தந்தையர் வெகுவாய்க் கவலையுற்று தேடித்திரிய, சூசையின் செபப் பிரீதியை நன்குணர்ந்த அவரது பாட்டனார் அக்கிராமத்தின் தேவாலயத்தில் சென்று பார்க்கையில், பிரசங்கத் தொட்டியின் கீழ் முழங்காலிருந்து செபித்துக்கொண்டிருந்த தமது பேரனைக்கண்டு ஆனந்தித்து,வீட்டிற்கு அழைத்துசென்றார். இதோ இவ்வாறு விளையும் பயிர் முளையிலே தெரிகின்றது!

இவருடைய அண்ணன் குருபட்டத்திற்குப் படிப்பதா லிவரை வர்த்தகத் தொழிலில் பயிற்றி வந்தனர் இவரது பெற்றோர். ஒருநாள் அர்ச். விகோரியார் ஏற்படுத்திய சபைக் குருக்கள்செய்த பிரசங்கத்தைக் கேட்டபின் தானும் மற்ற குருக்களைப்போல சர்வேஸ்வரனுடைய மகிமைக்காகவும்,ஆத்ம இரட்சணியத்திற்காகவும் உழைக்கத் தீர்மானித்தார். இப்போது இவருக்கு பிராயம் பதினெட்டு. வர்த்தகத்தொழில் கற்பிக்கும் பள்ளிக் கூடத்தில் இவரோடு படித்து வந்த பந்து ஒருவர் இவ்விஷயத்தை, பின் வருமாறு கூறுகின்றார்."பிரசங்கம் கேட்டு திரும்பிவந்தவுடன் சூசை வழக்கம்போல் அன்றிரவு நித்திரை செய்யாமல் ஏதோ ஒரு விஷயம் தம்மனதில் ஆழப் பதிந்ததுபோல் முழங்காலிட்டு பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்." கோவிலில் செய்யும் பிரசங்கங்களை கவனித்து கேட்கும்போதும், நல்ல புஸ்தகங்களை கவனித்து வாசிக்கும்போதும் சர்வேஸ்பரனுடைய ஞான வெளிச்சம் நம்மனதில் பிரகாசித்து, தெய்வசித்த மெது வென தெரியவரு மென்பதற்கு இது வொரு அத்தாட்சி. பாம்பிலே (Pampile) என்றழைக்கப்பட்ட தன் அண்ணன் சேர்ந்திருந்த 'சேசு மரிய திரு இருதயச் சபை" யில் உட்படும்படி தமது தமயன் சொல்லியதால், ஒருநாள் இவரது தந்தை இவரை யழைத்துக்கொண்டு தனது மூத்தகுமாரனைப் பார்க்கப்போனார். அப்போது, சூசை தமியான் தன் சகோதரனோடு கலந்து பேசி அன்றுமுதல் தானும் அம்மடத்திலே காலங்கழிக்கத் தீர்மானித்து தந்தைக்கு இதை வெளிப்படுத்தின போது, தகப்பனின் மனம் ஒருவாறு முதலில்

நொந்தபோதிலும் சர்வேசுரனின் சித்தத்திற்கு
சிறிதுந் தடைசெய்யாது சூசையை மடத்தில்
விட்டு தனியே வீடுபோய்ச் சேர்ந்தார். சூசை
தமியானுக்கு குருபட்டத்திற்கு வேண்டிய சாஸ்
திர பயிற்சி யில்லாதலால் அம்மடத்தில் ஊழி
யஞ்செய்யும் சந்நியாசிமார்களில் ஒருவராக ஏற்
றுக்கொள்ளப்பட்டனர். அவருடைய கபடற்ற
தனத்தையும், யௌவன பருவத்தையும், பெ
ருந் தன்மையையும், புத்திச்சாதூரியத்தையுங்
கண்டு மடத்து சிரேஷ்டரும் மற்றவர்களும்
அவரை மிகவும் பட்சத்துடன் நடத்திவந்தார்
கள். இவ்வளவு தாழ்ந்த வுத்தியோகத்திலிருந்
தாலும் சூசை தமியானுக்கு அது வெகு பிரிய
மாயிருந்தது. சர்வேஸ்வரன் மகிமைக்காக புரி
யும் அற்பவேலையும் பெரும் புகழ்ச்சிக்குரிய
தெனக் கண்டறிந்திருந்தார். மகிமையுடன் இ
ராச்சியம் ஆளும் சக்கரவர்த்தியின் மாளிகை
யில் ஊழியம் புரியும் வேலைக்காரனும் தன் எஜ
மானனுடைய பெருமையால் புகழடைவதுபோ
ல, சர்வாதிபுலகத்திற்குங் கர்த்தாவாகிற கடவு
ளின் பொருட்டு செய்யு மெவ்வேலையும் கடவு
ளின் சமுகத்தில் கனமா யெண்ணப்படு மென்ப
தற்குச் சந்தேகமில்லை.

ஒருநாள் வேதசாஸ்திரம் பயிலுமிவருடைய
தமையன் இவருக்கு லத்தீன் பாஷையில் சில
வாக்கியங்களைப் படிப்பிக்கவே அவைகளை எளி
தாய்க் கற்றுக்கொள்ளுந் திறமையை யறிந்து தி
னந்தோறு மிவருக்கு இலத்தீன் பாஷையின்
இலக்கணநூல் கற்றுக்கொடுக்கத் தொடங்கினர்.
நாளாவட்டத்தில் சூசைதமியானின் கல்வித்திறம்
சிரேஷ்டர் காதிற் கெட்டியவுடன், இவரைக்குரு
ப்பட்டத்திற்கு படிக்கும் மற்ற மாணாக்கரோடு
லத்தீன் பாஷை படிக்கும் வகுப்பிற் போகும்
படி ஆக்கியாபித்தார். இம்மாற்றம் சர்வேஸ்
பரனுடைய சித்தத்தாலாகிய தென்பதற்கு சந்
தேகமுண்டோ? தாழ்ச்சியுள்ளவன் உயர்த்தப்படு
வானென்னும் வேதவாக்கியம் வீணாகுமோ? இவ்
வாறு குருப்பட்டத்திற்கு படித்துக்கொண்டிருக்
கும்போது 1863-ம் வருடம் சூசை தமியான்
சில்லரைப்பட்டம் பெற்றபின் தமது தமயனுக்கு
பசிபிக் மகா சமுத்திரத்தின்கண்ணுள்ள சாண்ட்
விச் (Sandwich) என்னுந் தீவிற்கு போகும்படி
யாக சபையின் சிரேஷ்டரிடத்திலிருந்து உத்தர
வு வந்தது. அவ்விடம்போய் உழைத்து வருவதற்
கு தன் அண்ணன் வெகுவாய் பிரியப்பட்டதால்
கப்பற் செலவிற்கு வேண்டியபணமளித்து பிர
யாணத்திற்கு வேண்டிய சகலமுமாயத்தமான
பின் புறப்படுந் தினத்திற்கு எதிர் பார்த்துக்கொ
ண்டிருக்கையில் திடீரென காய்ச்சல் கண்டு பா
யும் படுக்கையுமாயிருந்தார். இதை யறிந்த சூசை
தமியான் தன் அண்ணனிடஞ் சென்று, தான்
அவருக்குப் பதிலாகப் போவதா லவருக்கு மன
ஆறுதலுண்டாகுமோ வென்று கேட்டு, தன் தம
யனுடைய இஷ்டத்தை யறிந்தவுடன் பரீஸ் பட்
டணத்திலிருக்கும் சபையின் சிரேஷ்டருக்கு
ஒரு கடிதமெழுதி, தன்னை தன் அண்ணனுக்கு
பதிலாக அனுப்பும்படியாகவும், கப்பற்செலவின்
பணத்தை வீணாக்கவேண்டா மென்றுங் கெஞ்சி
மன்றாடினார். சிரேஷ்டர் சூசை தமியான் இஷ்
டத்திற்கிணங்கி பயணஞ் செய்யும்படி கட்டளை
அளித்தவுடன் மகிழ்ச்சியால் மனம் பூரித்து,
பைத்தியனைப்போல் கூத்தாடத்தொடங்கினார் சூ
சை தமியான். இவ்வாறு தன் தமயனுக்கு பதி
லாக சாண்ட்விச் தீவிற்கு போக நேரிட்டதும்
தெய்வாதீனச் செயலே.

புறப்படுமுன் திரேமெலூ (Tremeloo)
கிராமத்திலிருந்த தன் பெற்றோரைச் சந்தித்து
சுபமொழி கூறி, அர்ச். பெர்க்மான்ஸ் அருளப்
பர் அடிக்கடி சந்தித்ததனால் பேர்போன மோ
ன்டேகு (Montaigu) நகரத்தின் தேவ மாதாக்
கோவிலைச் சந்தித்து, அன்று மாலையே பரீஸ்
நகரத்திற்குச் சென்று சீக்கிரத்தில் தமது பய
ணத்துறைமுகப்பட்டணத்தை யடைந்தார். இப்
போது இவருக்கு சுமார் இருபது பிராயம். புரு
ஷோத்தம இலட்சணங்கள் இவரது முகத்தில்
துலங்கும். அவர் கையில் பிடித்து மார்பிலணைத்
திருக்கும் பாடுபட்ட சுருபம் சேசுவின் மட்டில்
அவருக்குள்ள ஆசைப்பற்றுதலைத் தெரிவிக்கும்.
1863-ம் வருடம் கப்பலேறினார். யாத்திரைசெய்
கையில் காற்று புசலினால் வெகு சங்கடத்திற்
குட்பட்ட போதிலும் சர்வேஸ்பரன் பேரில்
முழு நம்பிக்கை வைத்து, தமது பயணம் அனு
கூலமாய் முடியும்படி பிரார்த்தித்து வந்தார்.
தென் அமெரிக்காவின் தென்முனையைக் கடக்
கும் போது புசற்காற்றினால் உடைபட்டு மிதக்
கும்மரக்கலத் துண்டுகளையும், காற்றின் மும்
முரத்தையும், அலைகளின் கொந்தளிப்பையுங் க
ண்டு சிறிது அஞ்சி, சமுத்திரத்தின் நட்சத்திர
மாகிய அர்ச். தேவமாதாவின் பேரால் ஒரு நவ
நாள் தொடங்கி தேவதாயாரின் சுத்திகரத் திரு
நாளன்று முடித்தார். கடைசியாக தமது பாது
காவலராகிய அர்ச். சூசையப்பர் திருநாளாகிய



மார்ச்சு மாதம் 19-ம் தேதி 1863-ம் வருடம்
சாண்ட்விச்சின் முக்கிய பட்டணமாகிய ஓ
னோலுலு (Honolulu) என்னும் நகரில் வந்திற
ங்கினார். வந்த சில மாதங்கட்குப் பின் இவருக்கு
பட்டங் கொடுக்கப்பட்டது. இவருக்கு நியமித்த
பங்கு விசாலமானதும், கரடு முரடானது மா
கையால் சிற்சிலவேளையில் குதிரைசவாரிசெய்வ
து அவசியமாயிருந்தது. தமதுகடமையை நிறை
வேற்றுங்கால் இளைப்பு தவிப்பை ஒரு பொருட்
டாக கவனித்தாரல்லர். ஆத்துமங்களின் நன்
மையே இவரது பிரதான வெண்ணம். ஒருநாள்
பங்குவிசாரணை செய்துவரும்போது ஒரு வுயர்ந்
த மலையினடியில் வர, அம்மலையின் மறு பக்கத்
தில் கிறிஸ்தவர்களிருப்பதாகக் கேள்விப்பட்டு,
தம் குதிரையை ஒரு மரத்தில் கட்டிவிட்டு தாம்
மலைமீதேறி மறுபக்கத்தில் பார்த்தபோது வெ
றும் வெட்டவெளியும், தூரத்தில் வேறொரு மலை
யுமே காணப்பட்டதே தவிர மனிதரொருவரை
யும் காணவில்லை. முன்வைத்த காலைப் பின்வைக்
காத வீரசூரனாகிய சூசை தமியான் சுவாமியார்
அவ்விரண்டாவது மலையையு நோக்கிச் சென்று,
அதன் மீதேறிப் பார்த்தபோது, வேறொரு சிக
ரம் காணப்பட்டதே யொழிய தாம் கேள்விப்பட்ட
கிறிஸ்தவர்கள் அங்குந் தென்படவில்லை. மலை
மேல் ஏறுவதால் கை கால்கள் தேய்ந்து இரத்
தம் பீறிட்டபோதிலுந் தாமெடுத்த கருமத்தை
முடிக்கத் தீர்மானித்து, அம்மூன்றாவது மலையை
யடைந்து, நிறைந்த வொரு கிராமத்தை கண்ணு
ற்று அங்கு சென்றபோது, அங்கிருந்த கிறிஸ்து
வர்கள் வெகுவருஷமாய் குருவானவரைக் காணா
ததால் இவரைக்கண்டதும் மனமகிழ்ந்து இவ
ருக்கு வேண்டிய உபசாரஞ்செய்தனர்.

மேற்சொல்லிய சாண்ட்விச் தீவுகள் எட்
டும் சுதேச அரசனால் ஆளப்பட்டு வருகின்றன.
அனேக வருஷகால மிவ்விடத்தில் குஷ்டநோய்
பெருகி வருவதை யறிந்த அரசாங்கத்தார் இந்
த எட்டுத்தீவிலுள்ள குட்டரோகிக ளெல்லோ
ரையும் மொலோகே (Molokai) என்னும் ஓர்
தீவில் தனிப்படுத்திவிடுவது நலமென்று தீர்மா
னித்து, அத்தீவுகளிலிருந்த பெரு வியாதிக் கா
ரரை மேற்படி மோலோகே தீவிற்கு ஏற்றுமதி
செய்துகொண்டு வந்தார்கள். தமியான் சுவாமி
யார் அவர்கள் மத்தியில் போய் உழைத்துவர மி
கவும் பிரியப்பட்டார். குஷ்டரோகிகளைப் பய
ணப்படுத்துந் தினந்தோறும் அவர்களுடைய
வுற்றார் பெற்றோர் துறை முகத்தண்டை வந்து
கதறியழுங் கூக்குரல் கேட்கும்போதெல்லாம்
தமியான் சுவாமியாருடைய மனம் புண்ணாகும்.
1873-ம் ஆண்டு புதிதாய் கட்டிய ஒரு கோவிலை
மந்திரிக்கிறதற்காக மேற்றிராணியாரும், ஐரோ
ப்பாவிலிருந்து அப்போதுவந்திறங்கிய சில குரு
க்களும், தமியான் சுவாமியாரு மழைக்கப்பட்
டனர். மேற்றிராணியார் கோவிலை யபிஷேகஞ்
செய்து முடித்து குருக்களோடு பேசிக்கொண்
டிருக்கும்போது, மொலோகே தீவிலிருக்கும்
குஷ்டரோகிகளின் ஆத்தும நன்மைக்காக ஒரு
குருவானவர் அவர்கள் மத்தியில் இருப்பது நல
மென்றும், ஆனால் தம்மிடத்தில் குருக்கள் அனே
க ரில்லாததினா லப்படிச்செய்வதற்குக் கடின
மாயிருக்கின்றதென்றுஞ் சொன்னார். இச்சொற்
களைக்கேட்டதும் தமியான் சுவாமியார் “ஆண்
டவரே! இதோ புது குருக்கள் ஐரோப்பாவி
லிருந்து வந்திருக்கின்றார்கள். இவர்களில் ஒரு
வர் எனது பங்கைப் பார்த்து வருவார்களானால்
யான் மொலோகே தீவிற்குப் போக பிரியமாயி
ருக்கின்றேன்.” என்றுரைத்தார். மேற்றிராணி
யார் தமியான் சுவாமியாரது பெருந்தன்மைக்
குணத்தைக்கண்டு அதிசயித்து, அத்தினம் ஐம்
பது குஷ்டரோகிகளை யேற்றிச் செல்லும் ஒரு
கப்பலில் தாமும் தமியான் சுவாமியாரும் செ
ன்று மொலோகே தீவிற் சேர்ந்தார்கள். தங்
கள் மேற்றிராணியாரைக் காணவந்த குஷ்ட
ரோகிகளை நோக்கி, “என் பிள்ளைகளே! இவ்
வளவு காலம் உங்கட்கென்று ஒரு குருவான
வரை நிலையாக இங்கு அனுப்புவதற்கு கூடா
மற்போயிற்று. உங்கள் ஆத்தும காரியங்கள்
வெகுவாய் தடைபட்டிருந்தன. இனி யொரு
போது மப்படியிராது. இதோ உங்கட்காக
யான் ஒரு குருவானவரை யழைத்து வந்திருக்
கின்றேன். அவர் உங்கட்கு தகப்பனைப்போலி
ருப்பார். உங்களுடைய சரீர நன்மைக்காகவும்,
உங்களாத்தும நன்மைக்காகவும் உங்களுடைய
வியாதியை யடைந்து உங்களோடு சீவித்து உயிர்
விட வுத்தேசித்திருக்கின்றார்.” என்னும் மொ
ழிகளை அழுகைக் குரலுடன் உச்சரித்தார் மேற்
றிராணியார். (தொடரும்.)

“மனிதனானவன் உலகத்தை யெல்லாம்
தனக்கு ஆதாயமாக்கிக்கொண்டாலும் தன் ஆத்
துமத்தை நஷ்டப்படுத்திக்கொள்வானானால் அவ
னுக்குப் பிரயோசன மென்ன? அவன் தன் ஆத்
தும மீட்பாக எதைக் கொடுப்பான்?”

# CHRISTIAN DOCTRINE.

## ஞானோபதேசம்.

### பத்துக் கற்பனையின்பேரில்

### 2-ம் பாடம்

### முதற் கற்பனைக்கு விரோதமான பாவங்கள்.

### விக்கிரகாராதனை.

(முன் தொடர்ச்சி.)

---

**6. கண் கண்ட தெய்வம்.**-பூர்வகாலத்தில் அக்கியானிகள் ஒரு பெரும் பாம்பை தெய்வமாகக்கும்பிட்டதுடன் நாடோறும் சகலவித போசன பதார்த்தங்களை அதற்குக்கொடுத்துவருவார்கள். அவ்வூர் அரசன் ஒருநாள் தானியேல் தீர்க்கதரிசியை தன்னிடம் வரவழைத்து, இந்தப் பாம்பு கண்கண்ட தெய்வமா யிருப்பதால் அதை ஆராதிக்கும்படி அவருக்குக் கற்பித்தான். "நீர் கும்பிடும் தெய்வத்தின் கதியை சீக்கிரத்தில் அறிந்துகொள்வீர்" என்று சொல்லி, குங்கிலியம், பிசின், மயிர், கொழுப்பு முதலியவற்றை ஒன்றாய்க் காய்ச்சி உண்டைகளாகத் திரட்டி அவ்வுண்டைகளை அந்த சர்ப்பத்துக்குப் போட்டார். அது ஓர் உண்டையை மகா ஆவலுடன் விழுங்கினபொழுது தொண்டையில் சிக்கிக்கொண்டு மாண்டது. தீர்க்கத்தரிசியானவர் அரசன் அண்டையிற் சென்று தெய்வத்துக்கு சம்பவித்ததை அவனுக்கு தெரியப்படுத்தி, சகலத்தையும் படைத்த சர்வேசுரனைத் தவிர மற்ற எந்த சிஷ்டியையும் கடவுளாக வணங்குவது பாவமாகும் என்று அவனுக்கு விளக்கிக் காட்டினார். (இவர் சரித்திரம்.)

### 3-ம் பாடம்.

### பசாசோடு ஒப்பந்தம் செய்தலும், அதனோடு எவ்விஷயத்திலும் சம்பந்தப்படுவதும்.

### முதல் கற்பனைக்கு விரோதமான பாவங்கள்.

---

எவ் விஷயத்தைப்பற்றியும் பசாசோடு சம்பந்தப்பட்டு ஒப்பந்தஞ் செய்வதும், பில்லி சூனியஞ் செய்வதும், மந்திர தந்திரங்களைச் செய்வதும், இவைகளைச் செய்பவர்களுக்கு உதவி செய்வதும், பில்லி சூனிய முதலியவைகளை எடுக்கும்படிக்கு தகாத உபாயங்களை பிரயோகிப்பதும் முதல்கற்பனைக்கு விரோதமான பாவமாகும்.

**1. மந்திரக்காரனான சிமோன்.**—இவன் பசாசுக்கு தன் ஆத்துமத்தை ஒப்புக்கொடுத்தபடியால் அதற்கு இவன் அடிமைபோல் நடந்துவந்தான். அடிக்கடி அதைக்கண்டு அதனுடன் பேசுவான். அதன் உதவியால் பில்லி சூனிய முதலிய ஆகாத காரியங்களைச் செய்வான். அதன் உதவியால் அதிசயமான காரியங்களை நடத்துவான். அப்போஸ்தலர்களால் செய்யப்படும் புதுமைகளையும், உறுதிப்பூசுதல் பெற்ற புது கிறிஸ்துவர்கள் அன்னிய பாஷைகளை அற்புதமாய்ப் பேசுவதையுங் கண்டு, அதிசயித்துப் பிரமித்து, ஒருநாள் இவன் அர்ச். இராயப்பரிடம் போய் "நீர் என்க்குப் புதுமை செய்யும் வரத்தைக் கொடுத்தால், பெரும் பணத்தொகையை உமக்குக் கொடுப்பேன்" என்றான். அப்போஸ்தலர் மந்திரக்காரனைக் கண்டித்து, தேவ வரத்தை பணத்தால் பெறத் துணிவது பெரும் பாவமென்று அவனுக்குத் தெரியப்படுத்தினார். சீமோனோ அகந்தை கொண்டவனாய் தன்னைத் தேவனென்று வீம்பு பாராட்டி, அவனால் குறிக்கப்பட்டநாளில் திரளான ஜனக்கூட்டம் சமுத்திரம்போல பரவிநிற்க, பசாசின் உதவியினால் அவன் ஆகாயத்தில் ஏறிப்போவதைக் கண்ட ஜனங்கள், இவனே கடவுளென்று எண்ணி பிரமித்து நின்றார்கள். அந்நேரத்தில் அங்கு நின்றுகொண்டிருந்த இராயப்பர் சர்வேசுரனைப் பார்த்து மன்றாட, மந்திரக்காரனைத் தூக்கிக் கொண்டுபோன பசாசு, சர்வேசுரனுடைய கட்டளையால் அவனை விட்டுவிட்டபடியால், அவன் தரையில் தொப்பென்று விழுந்து கை காலை முறித்துக்கொண்டான். (Butler.)

**2. தன்னாத்துமத்தை பசாசுக்கு விற்றுப்போட்டவன்.**—ஓர் ஏழையானவன் பண ஆசை கொண்டவனாய் ஓர்நாள் பசாசைக் கூப்பிட்டு தனக்கு உதவி புரியும்படி மன்றாடினான். உடனே பசாசும் அவனுக்குக் காணப்பட்டு அவனுடைய ஆத்துமத்தை தனக்கு ஒப்புக்கொடுத்தால் அவனுக்கு வேண்டிய பணத்தைக் கொடுப்பதாக வாக்குத் தந்தது. அதற்கு அந்த நிர்ப்பாக்கியன் சம்மதித்து, பசாசின் கோரிக்கைப்படி தன் ஆத்துமத்தை அதற்கு விற்பனை செய்து, தன் இரத்தத்தால் ஒரு முறி எழுதிப் பசாசின் கையில் கொடுத்தான்.


ஞானோபதேசம்.

அதுமுதல் இந்த நிர்ப்பாக்கியன் பசாசுக்குத் தாசனாய் பல பாவாக்கிரமங்களைக் கட்டிக்கொண்டு வந்தான். ஒருநாள் இப்பாவி மற்ற கிறிஸ்துவர்களுடன் ஞான ஒடுக்கஞ் செய்தான். ஒடுக்கநாளில் தன் பாவங்களின் தோஷா தோஷத்தை அறிந்தபின் மகா மனஸ்தாபத்துடன் பாவசங்கீர்த்தனஞ் செய்து, மறுநாள் பத்தி உருக்கத்துடன் முன் தான் பசாசுக்கு எழுதிக் கொடுத்த முறியை தனக்கு வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்ளும்பொழுது, துஷ்டப்பசாசு மகா கோப உக்கிரமத்துடன் அவனுக்குக் காணப்பட்டு, அந்த முறியை அவனிடத்தில் விசிறியெறிந்து விட்டு மறுபடி காணமற்போய் விட்டது. (அர்ச். இஞ்ஞாசியார் ஞானத் தியானம்.)

**3. பசாசு எழுதின படம்.**—ஒரு வாலன் பசாசோடு பேசப்பழகியதின்பின், தனக்குத் தேவையான திரவியங்களை தனக்குக் கொடுத்தால் தன் ஆத்துமத்தை அதற்கு கொடுப்பதாக ஒரு பத்திரம் எழுதி, அதில் தன் இரத்தத்தால் கையொப்பமிட்டான். சில காலத்துக்குப்பின் இவன் ஒருநாள் பேயுடனே சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் சேசுநாதர் சிலுவையில் அறைபட்டு மரித்தபிரகாரம் ஒரு படத்தை சித்திரித்து கொடுக்கும்படி கேட்டுக்கொண்டதின்மேல் பசாசும் ஒரு படத்தை எழுதி அவன் கையில் கொடுத்தது. அவ்வாலன் அந்தப் படத்தில் எழுதப்பட்ட கர்த்தரின் இரத்தம் காயம் முதலியவற்றைப் பார்த்தபொழுது அவன் மிகவும் பச்சாத்தாபப்பட்டு அழுது, அக்ஷணமே முழுதும் மனந் திரும்பி பசாசின் வலையினின்று தப்பித்துக்கொண்டான். (Howe.)

### 4-ம் பாடம்.

### முதற் கற்பனைக்கு விரோதமான பாவங்கள்.

### வீணாசாரம் அல்லது குருட்டுப் பக்தி.

---

சகுன சாஸ்திரம் பார்ப்பதும், குறி கேட்பதும், நல்ல நாள் கெட்டநாள் பார்ப்பதும், மிருகசாஸ்திரம் பக்ஷிசாஸ்திரம் பார்ப்பதும், திஷ்டி கழிப்பதும், காணமல் போன வஸ்துக்களைப் பற்றி குறி கேட்பதும், முதல் கற்பனைக்கு விரோதமான பாவமாகும்.

பிள்ளைகளே! உங்கள் பெற்றோரும் பெரியவர்களும் அடிக்கடி முன் சொல்லப்பட்ட அனாசாரங்களை அனுசரித்து பிறப்பு, இறப்பு, கலியாண முதலியவைகள் நடந்தேறும் நாட்களில் திருச்சபையால் விலக்கப்பட்ட பல சடங்குகளை அனுசரிக்கும்பொழுது அவைகளில் நீங்கள் சேரவேண்டாம். நீங்கள் பெரியவர்களானபின் முன் சொல்லப்பட்ட ஆசாரங்களையுஞ் சடங்குகளையும் ஒருபோதும் அனுசரியா திருப்பீர்களாக.

**1. அர்ச். பேர்நர்துடைய தலைவலி.**—அர்ச். பெர்நர்து சிறுவரா யிருந்தபொழுது கடுந் தலைநோயால் பொறுக்கமுடியாத வேதனைப்பட்டு வருவார். ஒருநாள் இவர் ஷை நோவால் பீடிக்கப்பட்டு வருந்துந் தருவாயில், அவரை மந்திரிக்கும்படி ஒரு கிழவியை அவர் படுத்திருந்த அறைக்குக் கூட்டிக்கொண்டு போனார்கள். அவள் மந்திரக்காரியென்று பெர்நர்து அறிந்த க்ஷணமே, கட்டிலினின்று குதித்து ஷை கிழவியை வெளியே துரத்திவிட்டார். சற்று நேரத்துக்குப் பின் பூரண சவுக்கியம் அடைந்தார். பிள்ளைகளே! நீங்களும் பெர்நர்தைப் பின்சென்று எப்பேர்ப்பட்ட அக்கியான சடங்கிற்கும் உட்படா திருப்பீர்கள். (இவர் சரித்திரம்.)

**2. வெள்ளிக்கிழமை துர் அதிஷ்டமான நாள்.**—வெள்ளிக்கிழமையில் யாதொரு வேலையைத் தொடர்ந்து நடத்தினால் அது அனுகூலப் படாதென்று சிலர் சொல்வதுண்டு. பிரான்ஸ்தேசத்து அரசராகிய 13-ம் லூயிஸ் என்பவர் கடின வியாதியாய் விழுந்து கடைசித் தேவத்திரவிய அநுமானங்களைப் பெற்றபின், தான்சொஸ்தப்படக் கூடுமோ வென்று வைத்தியனை வினவினார். வியாதி பலத்துப்போனதாலும் மறுநாள் வெள்ளிக்கிழமையா யிருப்பதினாலும் வைத்தியன் தன் கருத்தை வெளியிடப் பயப்பட்டவனாய் "அரசனே நாளை வெள்ளிக்கிழமையா யிருக்கினும் சர்வேசுரன் சர்வ வல்லபரா யிருக்கிறார்" என்றான். அரசன் வைத்தியனுடைய கருத்தை அறிந்துகொண்டு புன்னகையுடன் "வெள்ளிக்கிழமை எனக்கு எப்பொழுதும் பாக்கியமான நாளா யிருந்தது. வெள்ளிக்கிழமையில் சிம்மாசனம் ஏறினேன். வெள்ளிக்கிழமையில் என் முதல் வெற்றிகொண்டேன். வெள்

ளிக் கிழமையிலேயே இவ் வுலகத்தை விட்டு என் சொந்த தேசமாகிய மோக்ஷம்போய்ச் சேர ஆவல் கொண்டிருக்கிறேன்" என்றார். வெள்ளிக்கிழமை துர்நாள் என்று அநேகர் எண்ணி அன்று யாதொரு வேலையைத் தொடங்கவும், பிரயாணம் போகவும், பணங் கொடுக்கவும், வாங்கவும் மாட்டார்கள். இது முதற் கற்பனைக்கு விரோதமான பாவம். (Gulliois.)

3. கண் திஷ்டியால் பால்கோடாத பசு.—கண் திஷ்டி முதலிய வீண் ஆசாரங்களை அனுசரித்து வந்த ஒரு ஸ்திரி ஒருநாள் பங்கு சுவாமியாரிடம் சென்று "ஸ்வாமி! யார் கண்பட்டதோ தெரியவில்லை: என் பசு பால் கொடுக்கிறதில்லை, தயவு செய்து ஒரு சீட்டு எழுதிக்கொடுங்கள்" என்று மன்றாடினாள். ஸ்வாமியார் அந்த ஸ்திரியின் தப்பறையான புத்தியை யறிந்தவராய், ஒரு காகிதத்தில் சில எழுத்துக்களைக் கிறுக்கி அதை மடித்து அவள் கையில் கொடுத்து நடுச்சாம வேளையில் பசுக் கட்டியிருக்கும் தொழுவத்துக்குப் போய் தொழுவத்தின் உள் சுவரை ஷை காகிதத்தால் தொட்டு வரும்படி கற்பித்தார். அந்த ஸ்திரீ குருவானவர் கொடுத்த சீட்டை சந்தோஷத்துடன் பெற்றுக்கொண்டு அவர் சொற்படி அன்று இராத்திரி தொழுவத்துக்குப் போனபொழுது, அங்கு தன் வேலைக்காரியின் சகோதரன் பால் கறந்துகொண்டிருப்பதைக்கண்டு அவனைக்கோபித்து துரத்திவிட்டாள். மறுநாள் அந்த ஸ்திரி தன் வேலைக்காரியை வேலையினின்று நிறுத்திவிட்டாள். மறுநாள் பசு முன்போல பால் கறப்பதைக் கண்டு சந்தோஷித்து குருவானவரிடம் போய் நடந்த காரியமெல்லாம் சொன்னாள். அவரும் அவளைப் பார்த்து, திஷ்டி,மந்திரம்,தந்திரம், முதலியவைகளை நம்பவேண்டாமென்று புத்தி புகட்டினார். அவர் கொடுத்த சீட்டில் எழுதப்பட்டதாவது: "இரவில் எழுந்து விழிப்பா யிருந்தால் மாயப் பேய் எல்லாம் பறந்து போம்" என்று கிறுக்கப்பட்டிருந்தது.

ஐயையோ! எத்தனையோபேர் கழுத்தில் நூல் போட்டுக்கொண்டும், கோழி அறுத்தும், மிளகாயைச் சுற்றித் திருப்பிப் போட்டும், இன்னும் பற்பல விதமாய் திஷ்டி கழிக்கிறார்கள். என்ன பைத்தியம்! வயலில் பயிருக்கு திஷ்டி அண்டாதபடி சுண்ணாம்படித்த சட்டி பானையை கவிழ்த்து வைக்கிறார்கள். இது புத்தியற்ற ஜனங்கள் செய்யும் வேலையே யன்றி மற்றப்படியல்ல நீங்களோ பிள்ளைகளே! இப்பேர்ப்பட்டவைகள் பாவமென்று எண்ணி அவைகட்கு உட்படாதிருப்பீர்களாக. (Schmied.)

(இன்னும் வரும்.)

---

# VELANKANNI ACCIDENT.

# வேளாங்கண்ணி விபத்து.

இந்தியாவெங்கும் மிகப் பிரசித்திபெற்ற திவ்ய க்ஷேத்திரமாகிய வேளாங்கண்ணியெனும் வேளான்காணியில் வருஷாவருஷம் செப்டம்பர் மீ 8-ம் தேதியில் நமது திவ்ய தேவதாயாரினது ஜனன மகோற்சவம் மிக வைபவத்துடன் கொண்டாடப்படுவதும், அக்கொண்டாட்டத்திற்கு பல தூரதேசங்களினின்றும் எண்ணிலடங்கா திருயாத்திரைக் காரர்கள் வந்து அப்பரம ஆண்டவளைப் போற்றித் துதித்துப் போவதும் எல்லவருக்குந் தெரிந்த விஷயம். இவ்வாறு இவ்வருஷமும் ஏராளமான ஜனங்கள் ஷை திருநாட் கொண்டாட்டத்துக்கு விஜயஞ் செய்தார்கள். திருநாளும் வெகு ஆடம்பரமாய்க் கொண்டாடப்பட்டது. ஆனால் எந்தவருஷமும் நேராத மிக்க பரிதாபத்துக்குரிய ஓர் விபத்து இவ்வருஷம் நேரலாயிற்று.

நாகப்பட்டணத்திலிருந்து வேளாங்கண்ணிக்குக் கடற்கரை யோரமாய் நடந்து செல்லுபவர்கள் ஷை பட்டணத்துக் கருகே கடக்க வேண்டிய சிற்றாறு ஒன்று இருக்கிறது. இவ்வாற்றை ஒரு சிறு தோணியைக் கொண்டு கடப்பது வழக்கம். இப்படியே சென்ற செப்டம்பர் மீ 4-ம் தேதி யாகிய வியாழக்கிழமை பிற்பகல் சுமார் 3 மணிக்கு ஆற்றைக் கடக்க ஜனங்களேறிச் சென்ற ஒரு படகு திடீரெனக் கவிழ அதிலிருந்த அனைவரும் (சுமார் அறுபது பேரும்) அபய சத்தமிட்டு அலங்கோலமாய் ஆற்றில் விழலானார்கள். இதில் தப்பிப் பிழைத்தவர்கள் போக உயிர் துறந்தவர்கள் 20 பேர். இவர்கள் ஏறக்குறைய எல்லோரும் ஸ்திரிகளும் குழந்தைகளுமே. 14 பேர்களுடைய பிரேதங்கள் மாத்திரம் எடுபட்டு நல்லடக்கஞ் செய்யப்பட்டன; மற்றப் பிரேதங்கள் அகப்படவில்லை. ஆற்றில் மரித்த ஜனங்களுடைய ஆத்தும இளைப்பாற்



றிக்காக மயிலை மகா வந்திக்கதக்க மேற்றிராணி ஆண்டவரவர்கள் உத்தாரப்படி நாகப்பட்டணம், அர்ச். லூர்து மாதா ஆலயத்தில் 15உ சாயுங்காலம் வெஸ்பர்ஸ் என்னும் மாலைப் பிரார்த்தனையும் மறுநாள் காலையில் பெரிய பாட்டுப் பூசையும், அதன் பிறகு கல்லறை மந்திரிப்புச் சடங்கும் விசாரணைகுரு ராஜரிஷி சங். சி. சி. பரெட்டோ சுவாமிகளால் நடத்தப்பட்டன. மரித்து அடக்கஞ் செய்யப்பட்டவர்களுடைய அங்க மச்ச அடையாளங்கள் நாகப்பட்டணம் போலீஸ் கோர்ட்டில் எழுதி வைக்கப்பட் டிருக்கின்றன. ஓர் ஸ்திரியும் தன்னுடைய இரண்டு பிள்ளைகளும் சுமார் ரூ. 1500 கிரயமுள்ள நகைகளுடன் வேளாங்கண்ணிக்கு வந்ததாகவும், இவர்கள் இதுவரையில் திரும்பிவரவில்லை யென்றும் கல்கத்தாவி லிருக்கும் ஓர் குருவானவர் ஷை லூர் குருவானவருக்கு நிருபம் யெழுதி யிருக்கிறார். மேற்கண்ட மூவரும் அவ்விடத்து பான்டு மாஸ்டருடைய (Band Master) மனைவியும் பிள்ளைகளுமாம்:-இவ்விபத்துக்குக் காரணம் பலவாறாய்க் கூறப்படுகிறது. சுமார் முப்பது ஜனங்கள் கொள்ளத்தக்க அந்தப் படகில் அறுபது ஜனங்களை யேற்றிச் சென்றதென்பது ஒன்று. இது விஷயத்தில் படகுக்காரனும் கண்டிராக்ட்காரனும் உத்தரவாதிகளென்று அவர்களிருவரையும் போலீசார் பிடித்து ரிமான்டில் வைத்திருக்கிறார்கள். படகு நட்டாற்றில் செல்லுகையில் படகுக்காரர்கள் வழக்கத்துக்கு விரோதமாய்க் கேட்ட அதிக கூலி காரணமாய் நேரிட்ட சச்சரவு இன்னொன்று. படகு விளிம்பின்மேல் உட்கார்ந்திருந்த ஓர் ஸ்திரி தன் குழந்தையை கைதவறி ஆற்றில் விழவிட படகிலிருந்த மற்றவர்கள் திடுக்கிட்டு அதைப்பார்க்க, அப்பக்கமாய்ச் சாய்ந்தது மற்றொன்று. "யார் வைத்த கொள்ளியாலாயினும் வீடு வெந்ததிற் குறைவில்லை" என்பது போல் காரணம் யாதாயினும் பேதைப் பெண்களும், பாலசர்களும் தங்கள் நாடுநகரத்தைவிட்டு, வீடு வாசலைவிட்டு, உற்றார் உறவினரை விட்டு, பரிதாபம்! எதிர் பாரா விதமாய், யாதோர் ஆயத்தமின்றி அகால மரணத்தை அடைந்து ஆற்றுக்கிரையானார்கள். இந்த சம்பவத்தைக் கேள்வியுறும் சாமான்ய ஜனங்கள் பலவாறாய்ப் பிதற்றி தேவதூஷணங் கட்டிக்கொள்ளுவார்கள். விசேஷமாய்ப் பெண்பாலாரே வாயில் வந்தவாறு பேசத் துணிவார்கள். "இந்த ஆரோக்கிய மாதாவுக்குக் கண்ணில்லையா? அந்த அம்மாளை நம்பி அந்த் அம்மாளுடைய தலத்துக்குத் தானே வந்தார்கள் இவர்கள். பாவம்! இத்தனைபேர்களையும் ஒருமட்டாய் வாயிலே போட்டுக்கொள்ளலாமா? அவர்களை அந்த ஆபத்திலிருந்து காப்பாற்றி இரட்சிக்கப்படாதா? புதுமையுள்ள ஆண்டவளென்கிறார்களே அந்தம்மாளை. தம்மை நாடி வந்த அந்த ஏழைகளைக் காப்பாற்றி ஒரு புதுமை செய்யக்கூடாதா?" என்பனமுதலிய வீண்வாதங்களைப் பேசுவார்கள். ஆயினுங் காரியா காரியங்களைச் சீர் தூக்கிப் பார்க்கும் நுண்ணறிவுடையோர்கள் இவ்விதமாய்ப் பேசவும் எண்ணவும் மாட்டார்கள். அந்தப் படகு கவிழ்வதற்கும், அதிலிருந்தவர்கள் அனைவரும் இறவாமல் சிலர் மட்டுமே சாவதற்கும் மேற்குறித்த வெளிக்காரணங்கள் ஒருபுறமிருக்க, உட்காரணங்கள் வேறா யிருக்கலாம். இதைக் கடவுளே யறியக்கூடும். "அவனன்றி ஓரணுவு மசையா" தென்பதுபோல, எல்லாவற்றிற்கும் ஆதிகாரணமும் ஆதிமூலமுமாயிருக்கிற ஆண்டவரே யறிவார். ஆயினும், ஷை சம்பவத்தால் கிறிஸ்துவர்கள் ஒவ்வொருவரும் எச்சரிக்கை கொள்ளவேண்டும். ஏனெனில், இத் தென்னிந்தியாவில், வேளாங்கண்ணித் திருநாள் போன்ற பல பெருநாட் கொண்டாட்டங்களுக்குப் போகிற திருயாத்திரைக்காரர்களில் அநேகர் யாதோர் சுத்த கருத்தின்றி, பக்தியின்றி, வேடிக்கையார்த்தமாய்க் குடித்து வெறித்து, தின்று, உடுத்து, விளையாடிக்களியாடி மீளலாமென்ற தகாத கருத்துகளோடு போவார்கள். இத்தகையோர்கள் தேவகிருபைக்கும் பாதுகாப்புக்கும், அருகர்களாவார்களா? "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்பது சத்தியவாக்கு. ஆகவே, கடவுளை நம்பாதவர் (அதாவது கடவுளை மறந்து பசாசின் மாயப் பிரபஞ்ச லீலா விநோதங்களிற் சிக்குண்டிருப்பவர்) கைவிடப்படுவார் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? விசேஷமாய், தெய்வத் திருஸ்தல யாத்திரையாய்ப் போகிறவர்கள், எவ்வளவோ பயபக்தியுடனும், சுத்த கருத்துடனுமிருக்கவேண்டும்! அப்படிக்கின்றி சரீர துர் ஆசாபாசங்களால் ஏவப்பட்டவர்களாய் அத்திருஸ்தலங்களுக்குப் போகிறவர்களுக்குத் தெய்வந் துணை நிற்குமா? ஒருபோதும் நிற்காது. "அரசன் அன்று சொல்லும் தெய்வம் நின்றுகொல்லும்" என்றபடி தெய்வம் எத்தனை நாளைக்குத்தான் பொறுக்கும்? கொல்லவேண்டிய ஞாயம் இருக்கையில், சற்று முன்னேயோ, பின்னேயோ, ஓர்

நாள் கொன்று தானே ஆகவேண்டும். சாவேசுரனுடைய தயை அளவில்லாததுதான்; ஆயினும் அவருடைய நீதியும் அளவில்லாததே. இல்லையாயின் அவரை நீதிபரரென்று சொல்வதற்கிடமில்லை.

மேலும் "சாய்ந்த மரம் சாய்ந்திருக்கும் பக்கத்திலேயே விழும்" என்பதற்கொப்ப சற்றும் மனந்திரும்பாது பாவச்சகதியிலேயே புரண்டு கொண்டிருக்கும் மூர்க்கப்பாவிகளை, சில வேளைகளில் சர்வேசுரன் அதிலேயே நாசமாய்ப் போம்படி விட்டு விடுகிறார். இது ஏனெனில், இவர்களைப் பார்த்து மற்றவர்கள் திருந்தும்படி. ஆகவே, ஒவ்வொரு நிமிஷமும் என்ன ஆபத்துக்கள் நேரிடுமோ என்று ஏக்கங் கொள்ளும்படியாய் ஆபத்து நிறைந்த இவ்வுலகத்தில் நாம் எந்நேரமும் சர்வேசுரனுடைய உதவியை நாடியே யிருக்கவேண்டும். அவருடைய அநுக்கிரகமில்லாவிடில் அரை விநாடியும் நாம் ஜீவிக்க முடியாதென்பதை உன்னி நடந்து கொள்ள வேண்டும்.

---

## CORRECT THINGS FOR CATHOLICS.

## கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

(முன் தொடர்ச்சி.)

---

1. விசாரணைக் குருசுவாமியாருடைய ஆதரவின் கீழ் நடவாத சபைகளிலும், சங்கங்களிலுந் தலையிடுவதும், சேர்வதும் ஒழுங்கல்ல.

(சில கிறிஸ்துவர்கள் குருக்களது மேல் விசாரணையை நாடாமல், ஆங்காங்கு சபைகளையும், சங்கங்களையும், பஜனைகளையும் ஸ்தாபித்து அவைகளில் சேர்ந்து, அக்கிராசனாதிபதி, உப அக்கிராசனாதிபதி, காரியதரிசி, உபகாரியதரிசி, பொக்கிஷாதிபதி, பிரசங்கி, மகா வித்வான், ஆலோசனைக் கர்த்தர், பரிபாலகர் இன்னும் என்னென்னவோ பரிபட்டப் பெயர்களை வைத்துக் கொண்டு, திருநாள் பெருநாட்களில் நீண்ட நோட்டீசுகளை யச்சிட்டு, தங்கள் பட்டப் பெயர்களையெல்லாம் அவைகளில் விஸ்தாரமாய்க் குறித்துக் காட்டி, பெருமை பாராட்டி, பிறரால் புகழ்ச்சி பெற்று மகிழ்ச்சி யடைகிறார்கள். இப்படிப்பட்ட சங்கங்கள், பஜனைகள், மழைகாலத்திற் கிளம்புங் காளான்களைப்போல் ஆங்காங்கு தோன்றி, இரண்டு நாள் காகங்களைப் போல் கா, கா என்று கத்தி, நீ சிறியவன் நான் பெரியவன் என்று நாய்களைப் போல் குரைத்து சண்டையிட்டிருந்தபின், கிணற்றில் விழுந்த கல்லைப் போல் அடங்கிப்போகின்றன. திருநாள் பெருநாள் காலங்களில் ஒரு சங்கத்தார் இன்னொரு சங்கத்தாரை வழி மறித்து அடித்துத் துன்பப்படுத்துவதுமுண்டு. அவைகளின் அங்கத்தார் சில சமையங்களில் ஆட்டுத்தோலைப் போர்த்திருக்கும் ஓநாய்களைப் போல், "சங்கத்தார்" "பஜனைப்பிள்ளைகள்" என்று வெளிக்கு வேஷங் காட்டி உள்ளுக்குள் அக்கிரமமான காரியங்களையும் நடத்தி வருவார்கள். இவர்கள் தானா கிறீஸ்துவர்கள்? "நீங்கள் ஒருவரொருவரை நேசிக்கும் நேசத்தைக்கண்டு, நீங்கள் என் சிஷ்யர்கள் என்பதாக உலகம் அறிந்துகொள்ளும்" என்று திருவாய் மலர்ந்த அந்தப் பரமோத்தம போதகராகிய இயேசு பெருமானின் அடியார்கள் இவர்களா? இவர்கள் வீண்பெருமையைத் தேடி, குருக்கள் கட்டுக்குட்படக் கூடாதென்ற மமதை கொண்டு கடிவாள மில்லாத குதிரைபோல் கிரமமின்றி நடப்பதினால் இப்படி யாகிறார்கள். ஆதலால் உண்மையாகவே பொதுநலப் பிரியமுள்ள கிறிஸ்துவர்கள் குருவானவரை மேல் விசாரணைக்காரராக (Moderator) பாவித்துக் கொண்டு, அவருடைய ஆசீர் பெற்று சங்கங்களையும், பஜனைகளையும் ஸ்தாபித்து, வீண் பெருமையைத் தேடாமல் யாவரையும் சகோதர வாஞ்சையுடன் நடத்தி ஒழுங்கை யநுசரித்து வருவது உசிதம். இப்படிச் செய்வதினால் சின்னஞ் சிறிய சங்கங்களாயினும் அவைகள் யாதொரு இடையூறின்றி செவ்வனே நடைபெற்று வளர்ந்து, பெருத்த சங்கங்களுக்கு மூலாதாரமாயிருக்கும்.)

2. ஒருவன் தான் எவ்வளவுதான் பெரிய அந்தஸ்திலிருந்த போதிலும், ஒரு சபையில் சேர்ந்து, கூட்ட நேரத்திலும், செப வேளையிலும் ஜனங்களோடு கொஞ்சங் கலந்திருப்பதினால் தன் கண்ணியம் குறையுமென்று அகங்கரிப்பது ஒழுங்கல்ல.

3. முகதாட்சணியத்திற்குச் சபையில் சேர்ந்துவிட்டு, பிறகு சபையைப்பற்றியும், சபையின் உத்தியோகஸ்தர்களைப் பற்றியும் புறங்கூறுவது ஒழுங்கல்ல.



4. சபையில் சேர்ந்தும் சபையாரோடு கலவாமலிருப்பது ஒழுங்கல்ல.

5. சபையின் பொறுப்பையும் பாரத்தையும் சம்பிரதி முதலிய சபைத்தலைவர் உத்தியோகஸ்தர்கள்மேல் போட்டுவிட்டு, தாங்கள் ஏதுஞ் செய்யாமல், குற்றங் குறைகள் நேர்ந்தால் மாத்திரம் புறங்கூறத் தொடை தட்டித் திரிவது ஒழுங்கல்ல.

6. ஆரம்பத்தில் மாத்திரம் சூரத்தனங் காட்டி, பிறகு பெட்டிக்குட்பட்ட பாம்புபோல அடங்கிப்போவது ஒழுங்கல்ல.

7. சபையார் யாவரும் முந்தி யிருக்கப் போட்டி புரிவது ஒழுங்கல்ல.

8. அனைவரும் சங்கத் தலைவர்களாயிருக்க ஆசிப்பது ஒழுங்கல்ல.

9. சங்கத் தலைவர்களென்ற பிறகு சங்கத்திற்காக சற்றேனும் உழைக்காமல், கடனைக்கழிக்க கூட்டத்திற்கு மாத்திரம் வந்து, எல்லாவற்றிற்கும் சம்மதமென்று தலையாட்டிச் செல்வதும், கூட்டத்திற்கு முதலாய் வரத் தவறிப்போவதும் ஒழுங்கல்ல.

10. சங்கத் தலைவர்கள் எப்படிப்பட்டவர்களாயினும் அவர்கள் தலைவர்களாக நியமிக்கப் பட்டவர்களென்னும் அர்த்தத்தில் அவர்களை மதியாமல் பிணங்குவது ஒழுங்கல்ல.

11. சபையில் யாதொரு அலுவலை நடத்தத் தனக்குத் திறமை அல்லது மனசு இல்லாதபோது, அப்படிப்பட்ட அலுவலின் அந்தஸ்தை யேற்றுக்கொள்ளுவது ஒழுங்கல்ல.

12. சபையின் உத்தியோகஸ்தனா யிருப்பதைப்பற்றி, இல்லாத வெகுமானங்களையும் சுதந்தரங்களையும் தேடுவது ஒழுங்கல்ல.

13. தான் பிடித்த முயலுக்கு மூன்றே காலென்பதுபோல தன் அபிப்பிராயப்படியே யாவும் நடக்கவேண்டுமென்று பிடிவாதம் செய்வது ஒழுங்கல்ல.

14. சபையில் ஏதாவது ஒழுங்கீனங்கள் நடந்தால் தலைவர்களிடம் சொல்லி அவைத் திருத்தாமல் அதைப்பற்றி புறங்கூறுவதும், தான் சபையை விட்டு நீங்குவதும் ஒழுங்கல்ல.

15 கூட்ட நேரத்தில் பசையுள்ளவர்களை மாத்திரம் இருகை கூப்பி உபசரித்து உள்ளே அழைத்துச் சென்று, தலை காய்ந்தவர்களைக் கடைக்கண்ணால் முதலாய் பாராமற் போவது ஒழுங்கல்ல.

16. கூட்டத்திற்கு வரச்சொன்னால், நான் ஒருவன் தானா? நான் என்ன ஒரு கணக்கா? அத்தனை பேரில்லையா? வென்று சாக்குபோக்கு சொல்வது ஒழுங்கல்ல.

(இப்படியே ஒவ்வொருவரும் சொன்னால் கோமுட்டிகள் நிரப்பின பால் குடம் போலாகும்.)

17. ஞாயமான காரணங்களைத் தெரிவிக்காமல் கூட்டத்திற்குத் தப்பிப்போவது ஒழுங்கல்ல.

18. வருஷாந்திரக் கூட்டத்தில் மாத்திரம் வாய்சலிக்கப் பேசிவிட்டு, மற்றைய காலத்தில் கிணற்றில் விழுந்த கல்லைப்போல் அடங்கிக் கிடப்பது ஒழுங்கல்ல.

19. கூட்டமென்றால் ஓட்டம் பிடிப்பதும், சங்கமென்றால் பங்கமென்பதும் ஒழுங்கல்ல.

20. சபை வீதங்களைக் கொடுக்காமல் இழுக்கடிப்பதும், கேட்டால் "எடுத்துவிடு என் பெயரை" என்பதும் ஒழுங்கல்ல.

21. நன்கொடை யளிப்பதாக கையொப்பமிட்டு பிறகு அதை மறந்துவிடுவதும் ஒழுங்கல்ல.

22. சபைப் பணம் தண்டல் செய்ய வந்தவர்களை பிச்சைக்காரரைப்போல் பாவித்து நடத்துவது ஒழுங்கல்ல.

23. சபைப் பணத்தை சபை அதிகாரிகளின் அநுமதியின்றி அபகரிப்பதும், வட்டிக்குவிடுவது முதலிய பரபத்தியங்கள் செய்வதும் ஒழுங்கல்ல.

24. சபைப் பணங்களை விழுங்கிவிட்டு, கணக்கு கேட்டால் ஆந்தையைப்போல் விழிப்பது ஒழுங்கல்ல.

25. தன் ஆலோசனையைப் பிறர் ஏற்றுக்கொள்ளவில்லை யென்று சபையை விட்டு நீங்குவது ஒழுங்கல்ல.

26. தான் ஒரு பொதுநலக் காரியத்தைச் செய்யாவிட்டாலும் பிறர் அப்படிப்பட்ட காரியங்களைச் செய்யும்பொழுது,

அவர்களுக்குப் பக்கபலமாய் நின்று உதவி செய்து அவர்களை உற்சாகப்படுத்துவதை விட்டு, அவர்கள்மேற் குறை கூறுவதும், இழிச்சொல் சொல்லுவதும் ஒழுங்கல்ல.

27. வீண் பெருமைக்காக பல சபைகளில் சேர்ந்துகொண்டு ஒன்றின் கிரமத்தையாகிலும் குறையற அநுசரியாமலிருப்பது ஒழுங்கல்ல.

28. புரொட்டெஸ்டாண்டரால் நடத்தப்படும் ஒய். எம். சி. எ. (Y. M. C. A.) என்னும் வாலிபர் சங்கம், மத சம்பந்தமான சங்கமாகையால் அதில் கத்தோலிக்குக் கிறிஸ்துவர்கள் சேர்வது ஒழுங்கல்ல.

29. படிப்பும் நன்னடத்தையுமுள்ள வாலிபர்கள் யாதோர் சற்சனசங்கத்தை ஸ்தாபித்து நடத்தினால், அதைச் சன்மானித்து இளைஞர்களை உற்சாகப்படுத்தவேண்டிய பெரியவர்கள் அவர்கள் வாலிபர்களாயிருப்பதைப் பற்றி அதில் சேரப் பிணங்குவது ஒழுங்கல்ல.

(நமது இரட்சகர் நரை திரை விழுந்த கிழவனான பிறகு தமது அமிர்த பிரசங்கங்களைத் தொடங்காமல், 30 வயதுள்ள சரியான வாலிபராயிருக்கும்போதுதானே அங்ஙனம் செய்தமையால், யூதர்களும் அவரை அப்படிப் பேசினதுண்டு.)

30. கிறிஸ்துவர்கள் குரு சுவாமிமார்களுக்கு வலது கைக்கு இடதுகைபோலிராமல் எல்லாவற்றையும் அவர்களே செய்யவேண்டுமென்று எதிர் பார்ப்பது ஒழுங்கல்ல.

(கத்தோலிக்கு குருப்பிரசாதிகளுக்கு அலுவல் மெத்த; ஒவ்வொரு விசாரணையிலும் ஈராயிரம், மூவாயிரம் சபையாருண்டு. நித்தமும் செய்யவேண்டிய பூசையும், ஜெபிக்கவேண்டிய ஜெபங்களும், பரிக்கிரகிக்கவேண்டிய தேவத்திரவியாநுமானங்களும், அநுசரிக்க வேண்டிய சடங்காசாரங்களும், தீர்க்கவேண்டிய வியாஜ்ஜியங்களும், விசாரிக்கவேண்டிய காரியங்களும், படித்தறியவேண்டிய விஷயங்களும், இன்னும் பற்பல விதமான தொல்லைகளும் உண்டு. இப்படியிருக்க, அவர்கள் தங்கள் கவன முழுவதையும் சபைகள் சங்கங்களிற் செலுத்த எதிர்பார்ப்பது முற்றிலும் அவிவேகம். ஆதலால் கிறிஸ்துவர்கள் குருக்களுக்குக் கூடியமட்டும் துணை செய்வ தவசியம்.)

31. கத்தோலிக்குக் குருமார்களுக்கு பணம் மாத்திரம் கொடுத்துவிட்டால் போதும். எல்லாம் தாங்களே செய்து முடித்து பேரடைய விரும்புகிறார்களேயொழிய, கிறிஸ்துவர்கள் தங்களுக்கு ஒத்தாசை செய்வது அவர்களுக்குப் பிரியமில்லையென்றெண்ணுவது ஒழுங்கல்ல.

32. சபைக்காக யாதோர் அற்ப அல்லது பெரிய உதவி ஊழியம் செய்தால், அதை குருவானவருக்கே செய்ததாக எண்ணுவதும், குருவானவர்மேல் யாதோர் வருத்தம் ஏற்பட்டால் அதைப்பற்றி சபையைக் கைநெகிழ விடுவதும்ஒழுங்கல்ல.

33. மாவுத்தன் அங்குசத்தால் யானையை நடத்துவதுபோல் கத்தோலிக்குக் குருக்கள் சர்வ அதிகாரங்களையுந் தங்கள் கைகளில் வைத்துக்கொண்டு, கிறிஸ்துவர்களுக்கு எவ்வித சுதந்தரங்களுமளிக்காமல், அவர்கள் குறும்பாடுகளைப்போல தங்களைப் பின்தொடர்ந்து செல்ல பிரியங் கொள்ளுகிறார்களென்று அவர்கள்மேற் குறை கூறுவது ஒழுங்கல்ல.

[மா, (Maux) நகரின் சிறந்த மேற்றிராணியாராகிய பொஸ்லே ஆண்டவர் இவ்விதமான சுதந்திரத்தைப்பற்றிப் பேசுவதாவது: சிருஷ்டிகளுக்கு மூன்றுவிதமான சுதந்திரமுண்டு. முதலாவது, மிருகங்களின் சுதந்திரம், இரண்டாவது, கலகக்காரர்களின் சுதந்திரம், மூன்றாவது, தேவமக்களின் சுதந்திரம். மிருகங்கள் சுதந்திரமுள்ளவைகளாகக் காணப்படுகின்றன. ஏனென்றால் அவைகளுக்கு எவ்வித சட்டமுமில்லை. கலகக்காரர்கள் தங்களுக்குச் சுதந்திர முண்டென்று நினைக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் சட்டங்களுக்கு அடங்காமல் அதன் வரம்பு கடந்து போகிறார்கள். தேவ மக்களோ வெனில் சட்டத்துக்குத் தாழ்மையுடன் பணிந்து நடப்பதில்தான் சுதந்தர முண்டென்று பெருமை கொள்ளுகிறார்கள். இதுதான் மெய்யான சுதந்திரம். மனிதனானவன் அரசனுக்குக் கீழ்ப்பட்ட பிரசை போலவும், தந்தைக்குக் கீழ்ப்பட்ட மகனைப்போலவும் சுதந்திரமுள்ளவனாயிருக்கிறான். ஆனால் அவனோ, தன் நிலைமையை மறந்து; சுய யோக்கியதை தப்பி, தேவ சட்டங்களை மீறி, தன் ஆங்காரத்திற்கும், ஆசாபாசத்திற்கும் இடங்கொடுத்து மனம்போனபடி திரிய ஆசிக்கிறான். இது கலகக்காரர் பாராட்டும் சுதந்திரமேயன்றி பிரமாணிக்கமுள்ள பிரசையும், பணிந்து நடக்குங் குணமுள்ள புத்திரனும் பெருமை கொள்ளத்தக்க சுதந்திர மன்று. தேவ சட்டங்களுக்குக் கீழ்ப்படியாமல் ஆசாபாசத்தின்படி திரிவது கலகமேயல்லாமல் சுதந்திரமென்று யார்தான் சொல்லக்கூடும்? வீண் பெருமை கொள்ளும் மனிதன் ஆங்காரத்தினால் தன்னை உயர்த்திக்கொண்டு தான் முரட்டு கழுதைக் குட்டியைப்போல 'சுதந்திர முள்ளவனாய்ப் பிறந்தவனென்று நினைத்துக்கொள்ளுகிறான். (யோபாகமம். 11-12.) கத்தோலிக்குக் குருமார் அந்த தேவசட்டத்திற்கு இராதாரிகளைப்போலிருப்பதினால் விசுவாசத்திற்கும் நல்லொழுகத்திற்கும் அடுத்த காரியங்களில் கிறிஸ்துவர்கள், தாய் கைபிடித்து நடத்தும் பிள்ளைகளைப்போல் அவர்களைப் பின் தொடர்ந்து வழி நடந்தால் மோசம் வராது.)

(இன்னும் வரும்)

---

## CORRESPONDENCE.

## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்திரவாதி யல்லர். கடித மெழுதுவோர் தங்கள் கடிதங்களை மிகத் திருத்தமாயும், காகிதத்தின் ஒரே பக்கத்தில் இடது பாரிசத்தில் நாலு விரற்கடை இடம் விட்டும் எழுதுவதுடன் தங்கள் பெயர் விலாசங்களையும் தெளிவாய் எழுதல் வேண்டும். பெயர், விலாசங்கள் வெளிப்படுத்துவதற்கல்ல, கடிதத்தின் உண்மைச் சங்கதிகளைப் பத்திராதிபர் உறுதிப்படுத்திக் கொள்வதற்கே. வெளிப்படுத்துவதற்கு தகுதியற்றன வென்று தள்ளி விடப்பட்ட கடிதங்கள் திரும்பவும் வாப்பஸ் செய்யப்பட மாட்டா. ப—ர்]

### சந்தா பாக்கி.

கனந் தங்கிய பத்திராதிபரே,

நிகழும் செப்டம்பர் மீ 15ம் தேதி என் சந்தா பாக்கியைக் குறித்து நினைப்பூட்டுதலாக தாங்கள் அனுப்பிய போஸ்ட் கார்டை மிக விசனத்தோடு வாசிக்கலாயினேன். பணமில்லாமல் எந்தக் காரியத்தையும் நடத்துவது கடினம். அதிலும் சிறிய தொகையாயிருந்தாலும் அவ்வளவு பாதகமில்லை. என்போலும் இரு வருஷ சந்தாக்களை பாக்கி வைத்துக்கொண்டிருப்பவர்களின் தொகை அதிகமாயிருப்பதினால், உண்மையில் தங்களுடைய கஷ்டம் பெரியதாயிருக்க வேண்டுமென்று உணருகிறேன்.

ஆயினும், எங்களன்புள்ள பத்திராதிபரே, கடந்த ஒருவருஷமாய் நான் உத்தியோக மில்லாமலிருந்ததனால் சந்தா செலுத்தத் தடைபட்டது. இது விஷயத்தில் நான் தங்களுக்கு வருவித்த தொந்தரைக்காக என்னை மன்னிக்கப் பிரார்த்திக்கிறேன். என்றாலும், உத்தியோகமில்லையென்று உண்ணாமலிருக்கிறோமா? சரீரம் பிழைக்க உணவு எவ்வகையிலேனும் சவதரிக்க வேண்டுவது போல, பத்திரிகை நடைபெற சந்தாவைச் செலுத்தவேண்டாமா? ஞானவுணவை யூட்டுகிற நல்லாயனுக்கு சந்தாவை எவ்வகையிலேயினும் கஷ்டப்பட்டு அனுப்புவதே நீதி. ஆகவே, இதோ இந்தமாத முடிவுக்குள் என் பாக்கி சந்தாவைத் தப்பாது செலுத்திவிடுவேன். இதற்காக இடைவிடா முயற்சி செய்து வருகிறேன். ஏழையை மன்னிக்கவும்.

Secundrabad,
21—9—13.

C. MARIAN.

### தூத்துக்குடி
### அர்ச். பிரான்சீஸ் சவியேர் மதுவிலக்கு சபையின் 2-வது வருட நிறைவு விழா.

நிகழ் மாதம் 5-ந்உ திவ்ய பனிமய மாதா திருவிழாவன்று இந்த மதுவிலக்கு சபை இவ்வூர் ஒர்னெலாஸ் கலாசாலை மண்டபத்துள் தனது 2-வது வருட பூர்த்தியைக் கொண்டாடியது. மாலை 5-மணிக்குக் கூடிய இம்மஹோற்சவ மஹாஜனசங்கத்திற்கு முத்துப்பேட்டை வண. தியதோர்த் தெ பொன்டேக்க சுவாமிகள் சபாநாயகராக வீற்றிருந்தார்கள். அழகிய திரைச்சீலைகளாலும், பிரகாசம் பொருந்தியபட்டுக்குஞ்சங்களாலும் மகரந்தத்தை அள்ளியிறைக்கும் மலர்ச் செண்டுகளாலும், பிரபை தும்மிய பொற்றுவஜங்களாலும் ஓர் தேவ விமானம் போல் சித்திரித்து வைக்கப் பெற்றிருந்த சிம்மாசனத்தில் சபாநாயகர் வீற்றிருக்க இவரைச் சூழ அணி வகுத்தாற்போலத், திருமயிலை, வண. பின்டோ சுவாமிகளும். மதுரை, வண. ரோச் சுவாமிகளும், மணப்பாடு, வண. உறுதிரிக் சுவாமிகளும், கூடுதாழை, வண. சொயிசா சுவாமிகளும், வைப்பாறு வண. பாக்கியநாத சுவாமிகளும்

இவ்வூர் வண. மரிய ஜோசப்நாத சுவாமிகளும் அமர்ந்திருந்தார்கள். மண்டபத்துள் கூடிய ஜனங்கள் போக அநேக பேர்கள் இடம்பற்றாமல் வெளியில் நின்று கொண்டிருந்தார்கள்.

காரியக் கிரமப்படி முதலாவதாக, எல்லோரும் முழங்காலிலிருந்து "திவ்ய இஸ்பிரீத்து சாந்துவே" என்னும் மந்திரத்தைப் பத்தி விநயத்துடன் உச்சரித்த பின்னர் சபாநாயகர் முதல் மற்றும் குருப்பிரசாதிகள் சகலருக்கும் புஷ்பமாலை சூடியதும் உடனே சபையின் பாதுகாவலரான அர்ச். பிரான்சீஸ் சவியேர் பேரில் பஞ்சரத்தினச் செய்யுட்கள் மகா-ா-ா-ஸ்ரீ சூசை அந்தோனி மஸ்கறீனாஸ் அவர்களால் பாடப்பெற்றன. அப்புறம் சபையின் காரியதரிசி மகா-ா-ா-ஸ்ரீ ஜெபமாலைப் பெர்நாந்து அவர்களால் வருஷ விருத்தாந்த அறிக்கைப் பத்திரம் படிக்கப் பெற்றது. இவ்வறிக்கைப் பத்திரத்தில் சென்னை வண. L. X. பெர்னாந்திஸ் சுவாமிகள் இச்சபைக்குச் செய்துவருகிற உபகாரங்களும், விசேஷமாய் சபையின் அச்சுப்பிரசுரச் செலவு பூராவும் தாம் பொறுத்துக் கொள்வதாய்க்கூறிய அவர்களது ஔதாரிய தாராளத்துவமும் வெகுவாய்ப் பாராட்டப்பட்டு சுவாமியவர்களுக்கு நிரம்பவும் நன்றிகூறப்பட்டது. இதற்பின் வண. பாக்கியநாத சுவாமிகள்—மதுவிலக்கைப்பற்றி ஓர் மாதுரிய பிரசங்கம் பண்ணினார்கள். மதுப் பழக்கத்திற்கு விரோதமாய்க் கத்தோலிக்கு வேதத்தில் இவ்வளவு கண்டிப்பான சட்டங்கள் இருக்கின்றனவோவென இதர மதஸ்தருங்கூட அதிசயிக்கும்படியாய் சுவாமியவர்கள் சுவிசேஷ ஆதாரங்களையே சரமாரியாய்ப் பொழிந்து, சந்தேகாஸ்பதங்களை யெல்லாம் சரிவரமாற்றி, சர்வத்திராளையும் ஆனந்தப்படுத்திக் கரகோஷ்டத்தின் மத்தியில் தமது நேர்த்தியான பிரசங்கத்தைப் பூர்த்திப்படுத்தினர். அப்புறம் ம-ா-ா-ஸ்ரீ அலெக்சாந்தர் விக்டோரியா அவர்களால் பிரமாணவாக்கென்னும் ஐம்மணிப்பா மிகவும் அழகாக வாசிக்கப் பெற்றது. இதன் பின்னால் ம-ா-ா-ஸ்ரீ மாசில்லாமணிபிள்ளை யவர்கள் சபையின் வேண்டுகோள் என்பதாய்ச் சொல்லி சிறந்தவோர் உபந்நியாசம் பண்ணினார்கள். இவ்வுபந்நியாசத்தால் ஜனங்களின் அகத்தில் தோன்றிய கிளர்ச்சியும் முகத்தில் தோன்றிய மலர்ச்சியும் இந்த மட்டென்பதில்லை. அப்புறம் சபாநாயக சுவாமியவர்களால் முடிவுரை கூறப்பட்டது. முடிவுரையின் முதற்பாகமாக எமது பங்கு விசாரணை அதி சங்கைக்குரிய M. J. பின்டோ சுவாமிகள் தமக்கு வந்த அசௌக்கியமே காரணமாகக் கொண்டாட்டத்திற்கு வராமலிருக்க நேர்ந்து விட்டதனால் மிகவும் கவலையுறுவதாகவும், ஆயினும் சபையின் ஒவ்வொரு அநுகூலத்தையும் மிகவும் விரும்புகிறதாகவும், அங்குக் கூடியிருந்தவர்களையும் அவர்களது குடும்பங்களையும் ஆசீர்வதித்ததாகவும், தமது உடல் படுக்கையிலிருந்தாலும் தம் இருதய முழுதும் சபையின்மேல் இருப்பதாகவும் கனம் பின்டோசுவாமிகள் தம்மிடத்தில் சொன்னவற்றைச் சகலரும் அறியச்சொல்லியபின், மதுப் பழக்கத்தால் வரக்கூடிய கஷ்ட நஷ்டங்களை கேட்டவர்களெல்லோரும் நடுநடுங்கிக் கிடுகிடுங்கும்படியாய் எண்ணிறந்த உபமான உபமேயங்களுடன் விளக்கிக்காட்டி முடிவுரையின் எல்லை கண்டார்கள். அப்புறம் மகா-ா-ஸ்ரீ, ஜெபமாலை விக்டோரியா அவர்கள் விஞ்ஞாபனப்பா வென்பதாய் ஓர் ஆசிரியவிருத்தம் வெகு இனிமையாய்ப்பாடி முகித்ததும், மங்களம் பாடப்பட்டு கரகோஷ்ட ஆர்ப்பரிப்புடன் உற்சவம் பூர்த்தியாயிற்று. மதுவிலக்கு சபைக்குப் பல்லாண்டு பல்லாண்டு என மஹாஜனசபையார் பூராவும் வாழ்த்துக்கூறினார்கள். இந்தவிதமாய் இவ்வருட பூர்த்தி நிறைவேறியது.

கண்டுகளித்தோன்.

தூத்துக்குடி.
9—8—13.

---

## பத்திராதிபரின் கவலைகள்.

சங்கைக் குரிய பத்திராதிபரே,

சென்ற சில சஞ்சிகைகளில் சந்தா பாக்கிதாரர்களைப்பற்றி தேவரீர் எழுதிய பிரலாபத்துக்குரிய நோட்டீசுகளைப் பார்வை யிட்டபோது, மெய்யாகவே எனது உள்ளத்தில் மெத்த அநுதாபமும் ஆத்திரமு முதித்தன. பத்திராதிபருக்குள்ள சந்தா பாக்கி சங்கடத்தை நிவிர்த்திக்கும் விஷயமாய் நான் எவ்வாறு அவருக்கு உதவி புரியக்கூடுமென்று எனக்குள் ஆவலாய் யோசித்ததில், பாக்கிதாரர்களுக்கு நானே ஒரு கடிதம் எழுதி என் சிற்றறிவுக்குத் தோன்றியவாறு அவர்கள் தங்கள் பாக்கிகளைச் சேர்ப்பிக்கச் செய்யவேண்டுமென்று பின் வருங் கடிதத்தை எழுதலானேன். நான் எழுதியிருக்கும் விஷயம் முழுதும் பத்திராதிபரைச் சார்ந்திருப்பதனால் அதை வெறுத்துத் தள்ளிவிடாது, தேவரீர் தயை புரிந்து அங்கீகாரஞ் செய்து, அடுத்த பத்திரிகையில் அவசியம் பிரசுரஞ் செய்யும்படி தங்கள் மேலான கனத்தைப் பிரார்த்திக்கின்றேன்.

நல்லாயனில் அன்புற்ற என தரிய சகோதரர்காள்!

கனம் பத்திராதிபர் அவர்களுக்கு இருக்கும் பலவித கவலைகளைக் குறித்து எழுதவேண்டுமானால், பத்திரிகையும் இடங் கொள்ளாது. ஆகையினாலே அவருக்கு இருக்கும் பல கவலைகளில் முக்கியமான மூன்று கவலைகளை மாத்திரம் இதனடியிற் சுருக்கமாக எழுதத் துணிந்தேன்.

**1-வது குருத்துவ கவலை.**—கனம் பத்திராதிபர் அவர்களுக்கு மற்ற குருக்களைப்போலவே ஜெபம், தபம் முதலிய குருத்துவக் கட்டளைகளுண்டு. இவைகளை யெல்லாம் அவர் சமுத்திரையாய் அனுசரிக்கக் கடமைப் பட்டவரா யிருக்கிறார்.

**2-வது பத்திரிகையின் கவலை:**-பத்திராதிபர்களுக்கு இரவும் பகலும் ஒன்றே. சாதாரணமாக ஜனங்கள் பகல் முழுவதும் வேலை செய்து, இரவில் இளைப்பாறி சுகமாய் நித்திரை செய்கிறார்கள். பத்திராதிபர்களுக்கு இரவில் நல்ல நித்திரையும் சுகமும் கிடைப்பதரிது. சில சமயங்களில் இரவில் நன்றாய் அயர்ந்து நித்திரை செய்யவேண்டியவேளையில் பத்திரிகை விஷயமாக நல்ல கருத்துகளும் அபிப்பிராயங்களும் இவர்களுக்குத் தோன்றும். அப்போது நித்திரையையும், சுகத்தையும் கவனியாமல் கண் விழிப்போடு தமது மனதில் உடனுக்குடன் தோன்றும் நல்ல கருத்துகளை ஜனங்களின் பொது நன்மைக் கென்று எழுதுவது முண்டு. இது மாத்திர மல்ல; பகலிலும் கொஞ்சநேரமும் வீண் போக்காமல் பத்திரிகைக்காக எப்போதும் பற்பல விதமான சாஸ்திர புஸ்தகங்களையும், வேத நூற்களையும், முன்னோர்களின் ஜீவிய விருத்தாந்த சரித்திரங்களையும், அவர்கள் சர்வேசுரன் மட்டில் வைத்த பக்தி வைராக்கியத்தையும், பரலோகத்துக்கடுத்த காரியங்களை நாம் இலேசாய் தெரிந்துகொள்ளத் தக்கவைகளையும் எப்போதும் ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பார்கள். நாம் சன்மார்க்கமாய் ஜீவிக்கவும், மோட்சபேரின்ப வாழ்வை அடையவும் "நல்லாயன்" பத்திரிகையில் எத்தனையோ அருமையான விஷயங்கள் கனம் பத்திராதிபருடைய அரும் பிரயாசையால் பிரசுரிக்கப்படுகின்றன வல்லவா? ஒரு பத்திராதிபரின் கஷ்டம், கவலை இவ்வளவென்று அவ்வலுவலில் அநுபோகப்பட்டவர்களுக்கு மாத்திரம் திட்டமாய்த் தெரியும்.

**3-வது கடன் கவலை:**-இது எல்லாவற்றையும் விட பெருங் கவலை. இது இருதயமும் மனமும் ஒத்துநடத்தும் எல்லாவித காரியங்களிலும் உடனுக்குடன் தோன்றி பலவிதமான திகிலையும், மனக் கவலையையும் சஞ்சலத்தையும் உண்டாக்கக் கூடியது. இந்தக் கவலை யுடையவர்கள் உலகத்திலே நாம் பார்க்கிறபடி வெகு கஷ்டத்தையும், நஷ்டத்தையு மடைந்து மெத்தவும் நிர்ப்பந்தராய் ஜீவிக்கிறார்கள். இதுபற்றி யன்றோ "கடன் பட்டார் நெஞ்சம்போற் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்று கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர் தமது அரிய காவியத்தில் எழுதியிருக்கின்றார்? கனம் பத்திராதிபர் அவர்கள் தமக்குள்ள பொதுநலப் பிரியத்தினாலும் பிறர் ஆத்தும இரட்சண்ய ஆவலினாலும் பொது நலங் கருதியே நல்லாயன் அச்சியந்திரசாலையை நிலைநிறுத்துவதற்காகவும், பத்திரிகையை விசேஷமாய் விருத்தி செய்து எங்கும் பரவச்செய்வதற்காகவும் பெருந் தொகையான 2,000 ரூபாய் அளவுக்கு கடன்பட்டிருக்கிறார். நமது கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களில் எத்தனையோ ஆயிரக்கணக்கான ஐஸ்வரியவான்களும், பிரபுக்களும் இருந்தும் நல்லாயன் அச்சியந்திரசாலைக்கு நன்கொடையாக இதுவரையில் வரப்பெற்ற தொகை 81-4-0. இது நம்முடைய கிறிஸ்துவர்களில் யாராவது ஒரு பிரபு செலுத்தக்கூடிய சொற்பத் தொகை. இச் சிறுதொகை அநேக மாதங்களாக வசூலிக்கப்பட்டுவருகிறது.

சென்னப்பட்டணம் மவுண்ட் ரோட்டில் இருக்கும் அமெரிக்கன் மெத்தடிஸ்ட் பப்ளிஷிங் அவுஸ் அச்சியந்திர சாலையை ஏற்படுத்தினவர் டாக்டர் ருடீசில் என்னும் புரோடெஸ்டாண்டு போதகர். இவர் அமெரிக்கா தேசத்தை விட்டு இந்தியாவுக்கு வரும்போது தமது தகப்பனாரால் ஞாபக சின்னமாக போஸ்ட்கார்ட் அச்சிடும்படியான ஓர் சிறிய கைமெஷின் இவருக்குக் கொடுக்கப்பட்டது. தற்காலம் மேற்படி அச்சியந்திர சாலையில் இருக்கும் ஒவ்வொரு மெஷின்களும் நாலாயிரம், ஐயாயிரம், பத்தாயிரம், பதினையாயிரம் ரூபாய் விலையுள்ள நூதனமான மெஷின்கள். இவைகள் ஒவ்வொன்றும் அமெரிக்க

தேசத்திலுள்ள ஒவ்வொரு பிரபுக்களாலும் அச்சியந்திர சாலைக்கென்று தர்ம கைங்கரியமாகக் கொடுக்கப்பட்டது பதினையாயிரம் ரூபாய் மதிப்புள்ள நூதனமான பெரிய மெஷின் (சாமுவேல் கெ. லெப்டன்) என்னும் அமெரிக்கா தேசத்து பிரபுவால் நன்கொடையாக அளிக்கப்பட்டது.

சமீபத்திலே புது கட்டிடத்தால் கொஞ்சம் கடன் நேரிட்டதென்று ஷை பிரஸ் அதிகாரிகள் தெரிவித்தபோது, ஒரு அமெரிக்க சீமாட்டி 20,000 டாலரும், ஒரு சிரேஷ்ட புரோடெஸ்டாண்டு போதகர் 50,000 ரூாயும் கொடுத்து உதவி செய்தார்கள். இந்துக்களிலும் அநேகர் பற்பல விதமான பொது தர்ம கைங்கரியங்கள் செய்து வருகிறார்கள். மாஜி ரங்கூன் மதுரைப் பிள்ளை அவர்கள், லோகோபகாரமாய் ஜனங்களின் பொது நன்மைக்கென்று பப்ளிக் ஹால், பள்ளிக்கூடம், அச்சியந்திரசாலை முதலியவற்றைக் கட்டுவித்திருக்கிறார்.

கத்தோலிக்குக் கிறிஸ்தவர்களில் எத்தனையோ பிரபுக்களும் ஐசுவரியவான்களும், திரவிய சம்பன்னர்களும் இருக்கிறார்கள். ஆத்தும ஈடேற்றத்துக்கான பல அரிய விஷயங்களைப் பிரசுரித்து, ஜனங்களுக்கு சுகிர்த போதனைகளையூட்டுவதற்குத் துணைக் கருவிகளா யிருக்கிற அச்சுயந்திரசாலைகளுக்கு உதவி செய்ய இவர்கள் முன் வருவார்களாக.

கத்தோலிக்குக் கிறிஸ்துவ அன்பர்களே! சாவிலும், வாழ்விலும், இன்பத்திலும், துன்பத்திலும் நம்து மனப்பிரியப்படி எவ்வளவோ பணங்களை வீணில் செலவழிக்க நாம் பின்வாங்குகிறதில்லை. கையில் இல்லாவிட்டாலும் கடன் கொண்டாகிலும் அழிந்துபோகும் லௌகிக ஆடம்பர காரியங்களுக்காக பேரும் கீர்த்தியுமடைய வீணில் பணங்களை செலவழிக்கிறோ மல்லவா? ஆனால் நமது அழியா ஆத்துமத்தின் பேரில் கவலை கொள்ளும்படி செய்து, நம்முடைய ஆத்தும இரட்சண்ணியத்துக்கு துணைக் கருவியா யிருக்கும்படியான "நல்லாயன்" அச்சியந்திரசாலைக்கென்று அவரவர்கள் அந்தஸ்துக்கு தகுந்த பிரகாரம் யாதொரு உதவி, உபகாரம் செய்ய வேண்டாமா?

நான் இவ்வளவு பெரிய நீண்ட நிருபத்தை யெழுதத் துணிந்ததின் முக்கிய அபிப்பிராயம் என்னவென்றால், தர்மம் என்றாலும், நன்கொடை என்றாலும் உடனே கொடுத்து உதவி செய்ய புரோடெஸ்டாண்டு மதஸ்தருக்கு இருக்கும் உற்சாகமும், அன்பும், அபிமானமும் மெத்தவும் பிறரால் பின்பற்றத் தக்கதென என் சொற்ப அநுபோகத்தில் கண்டதைக் கத்தோலிக்கு நண்பர்களுக்குத் தெரிவிக்கவேண்டுமென்பதே. அவர்கள் செய்துவரும் ஒவ்வொரு காரியங்களையும் நான் பார்த்த மட்டில் மெத்த ஆச்சரியத்தை விளைவிக்கக் கூடியதா யிருக்கிறது. பிரபஞ்ச காரியாதிகளிற் சம்பந்தப்பட்டு சமுசாரிகளைப்போல இல்லற வாழ்க்கையை நடாத்துகின்ற புரோடெஸ்டாண்டு போதகர்களுக்கு இவ்வித பெரும் உபகாரங்களும் உதவிகளும் செய்யப்படுகையில், உலகத்தை வெறுத்து, இல்லறத்தைத் துறந்து, துறவிகளாய் தங்களுடைய ஜீவனையும் சர்வேசுரனுக்கென்று தத்தம் செய்திருக்கும் கத்தோலிக்குக் குருமார்களுக்கு நாம் எத்தனை யதிகமாய் உதவியும் சகாயமும் செய்யவேண்டியவர்களாகிறோம்! "நல்லாயன்" அச்சியந்திரசாலை விஷயமாய் பத்திராதிபருக்கு நேரிட்டிருக்கும் கடன் கவலையை யொழிக்க குறைந்தது நல்லாயன் சந்தாதார்ர்களாகிய நாமாவது பிரயாசைப்படவேண்டாமா? இப்படியிருக்க பாக்கி சந்தாதாரர்கள் தாங்கள் செலுத்தவேண்டிய பாக்கித் தொகையை தயவுடன் உடனே செலுத்திவிடும்படியாய் அவர்களை மெத்தவும் பிரார்த்திக்கின்றேன்.

இந்த விண்ணப்பம் மெத்த கவனத்தோடும் கருத்தோடும் ஒவ்வொருவராலும் வாசிக்கப்படுவதோடு கூட மேற்படி காரியங்களெல்லாம் உண்மையென்றும், சுயநயமில்லாமல் கத்தோலிக்கரின் பொது நலாபிவிர்த்தியை நாடினதென்றும் எல்லாரும் ஒத்துக்கொள்வீர்களென்று நம்புகிறேன்.

புல்லறிவுடையோனாகிய அடியேன் எழுதிய இக்கடிதத்தை திரஸ்கரித்துத் தள்ளிவிடாது, அதிலுள்ள குற்றம் நீக்கி குணத்தைக்கொண்டு "நல்லாயன்" பத்திரிகையின் அச்சியந்திரசாலையை சீக்கிரத்தில் நல்ல ஸ்திதிக்கு கொண்டுவரும்படியான வழி வகைகளையும், பண உதவியையும் எல்லாரும் ஏகோபித்து உற்சாகமாய் செய்வீர்களென்று அதிக ஆவலோடும் வாஞ்சையோடும் சர்வேசுரனை முன்னிட்டு எதிர்ப்பார்த்திருக்கிறேன்.

இப்படிக்கு,
C. V. தோமாஸ் பிள்ளை,
ஜெனரல் போர்மேன்,
மெதடிஸ்ட் பிரஸ், மதராஸ்.

---



# GENERAL NEWS AND NOTES.
## பொது வர்த்தமானம்.

**ஏழைப் பிள்ளைகளுக்கு உதவி.**—பள்ளிக்கூடத்தில் படிக்கும் ஏழைப் பிள்ளைகளுக்கு புஸ்தகங்களும், சிலேட்டுப் பலகைகளும் வாங்கிக் கொடுப்பதற்காக நமது காருண்ய கவர்மென்டார், ரூபாய் 69,700 சாங்க்ஷன் செய்திருக்கிறார்கள்.

**ஓர் பெரிய இருப்புப்பாதைச் சுரங்கம்.**- வட அமெரிக்காவைச்சேர்ந்த கனடாநாட்டில் கனடியன் பசபிக் ரெயில்வே கம்பெனியார், ராக்கி மலைகளைக் குடைந்து 16 மைல் நீளமுள்ள சுரங்கங் கட்ட விருக்கிறார்கள். இதை முடிக்க மதிப்பிடப்பட்ட செலவின் தொகை, 5 கோடியே 20 லட்சம் ரூபாயும், கால அளவு 7 வருடமுமாம்.

**ஓர் நூதன யந்திரம்**—டென்மார்க் தேசத்தில் ஓர் புதிய தூரதிருட்டி யந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள் இந்த யந்திரத்தினால் எவ்வளவு தூரத்திலெங்கிலும் நடந்தேறும் விஷயங்களை மின்சாரத் தந்திக் கம்பியின் ஒரு முனையி லிருந்து மற்றொரு முனையில் காட்டலாம். இன்னும் மறுமுனையில் நடந்தேறுவதைத் தானும் காணலாம்.

**பாம்பு கடிக்கு இன்னொரு மருந்து.**—பாம்பால் கடி யுண்டவருடைய சிரசின்மேலே 16 அடி உயரத்திலிருந்து காலன் கணக்காக வெந்நீரை ஊற்றிக்கொண்டிருந்தால் மயக்கம் நீங்கிச் சுகமடைகிறார்களாம். சமீபத்தில் இவ்வாறே பால்நகர் என்ற ஊரில் நாகப்பாம்பு கடிபட்ட இருவர் சுகப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இதுவும் பரிட்சிக்கப்படத் தக்கதே.

**இராஜ மன்னிப்பு.**—சென்றமீ ஸ்பெயின் தேசத்து மன்னனைக் கொல்ல யத்தனித்த பாதகனுக்கு நியாய ஸ்தலத்தில் மரணத் தீர்வை யிடப்பட்டது. ஆயினும் காருண்ய குணமுள்ள அவ் வரசன் அக்கொடியோன் மட்டில் இரக்கங் கொண்டு அவனுடைய குற்றத்தை மன்னித்தருளினார். இந்தப் பெருந்தன்மையான செய்கையைப்பற்றி ஸ்பெயின் தேசத்துப் பத்திரிகைகளெல்லாம் அப் புரவலனைப் புகழ்ந்து பேசுகின்றன.

**சீனர் மனந் திரும்புதல்.**—சீன தேசத்தின் தலை நகரமாகிய பெக்கினிலே சென்ற மாதத்திலே மாத்திரம் 37,000 பேர் மனந் திரும்பி சத்திய வேதத்திற் சேர்ந்தார்கள். இன்னுங் கொஞ்ச காலத்திற்குள், ஜப்பானிலும், சீனாவிலும் பெரும்பாலோர் சத்திய வேதத்தைத் தழுவ, அவை யிரண்டும் கத்தோலிக்க இராச்சிய மாய்விடும்போலும். இந்தியா விஷயத்தில் அவ்வாறு எண்ணுவதற் கிடமில்லை.

**சர் சவலை. ராமசாமிமுதலியார் பிரசவ ஆஸ்பத்திரி.**—சென்னை, ஜார்ஜடவுனில், பிராட்வேயின் வடமுனையி லிருக்கும் ஷை ஆஸ்பத்திரி இதுகாறும் ஷை முதலியாரவர்களின் அதிகாரத்தில் நடைபெற்றுவந்தது. இப்போது அது கவர்ண்மென்ட வசம் ஒப்புவிக்கப்பட் டிருக்கிறது. எழும்பூர் பிரசவ ஆஸ்பத்திரியைப்போல் இதையும் தக்க உபகரணங்களாலும், சிப்பந்திகளாலும், சித்தப்படுத்தி நடத்தினால், இப் பக்கத்து ஜனங்களுக்கு மெத்த உபகாரமா யிருக்கும்.

**பிச்சைக்காரர் பத்திரிகை.**--வர்த்தகர் பத்திரிகை, வியாபாரக்காரர் பத்திரிகை, கிருஷிக்காரர் பத்திரிகை முதலிய பத்திரிகைகள் பிரசுரிக்கப்படுவதுபோல், பிச்சைக்காரர் பத்திரிகை யென்றோர் பத்திரிகை பிராஞ்சு தேசத்தின் பிரதான நகரமாகிய பரீஸ் நகரத்தில் பிரசுரமாகிறது. இப் பத்திரிகையில், பிறர் தர்மம் செய்யும் இடங்கள், சீக்கிரத்தில் நடக்கவிருக்கும் கலியாணங்கள், விருந்துகள், உத்தரகிரிகைகள் முதலியவைகளும் குறிக்கப்பட்டிருக்கும். இந்த சமாசாரங்களை வாசித் தறிந்துகொண்டு பிச்சைக்காரர் அவ்வவ் விடங்களுக்குப் போய் யாசித்து ஜீவனஞ் செய்வார்கள்.

**ஜட்ஜியாய் நியமனம் பெற்ற மாது:**-ஆடவர்களைப்போல் பெண்களுக்கும் புத்தி தீக்ஷண்யம் உண்டு என்பதற்கு ஓர் அத்தாட்சி: ஐரோப்பா கண்டத்திலுள்ள நார்வே தேசத்தில் மிஸ் ருத் ஸொரென்ஸன் என்னும் மாதராளுக்கு தற்போது ஜட்ஜி பதவி கிடைத்திருக்கிறதாம். இம்மாது 1877-ம் வருஷத்திற் பிறந்தவள். 1900-ல் வக்கீல் பரிட்சையில் தேறிப் பன்னிரண்டு வருஷகாலம் அவ் வுத்தியோகத்திலேயே

யிருந்து இப்போது ஹெம்மர் பெஸட் என்னும் பட்டணத்தில் நியாயாதிபதி ஸ்தானம் அடைந்திருக்கிருள். நார்வே தேசத்தில் முதல் முதல் ஜட்ஜிபதவி பெற்ற ஸ்திரி இவள்தான்.

**ஓர் விநோத விவாகம்.**—ஸ்விட்ஸர்லாந்து தேசத்தில் 1870-ம் வருஷத்தில் ஒரு யௌவன புருஷனும் ஒரு யௌவன ஸ்திரீயும் கலியாணஞ் செய்துகொள்ளத் தீர்மானஞ் செய்திருந்தனர். அப்போது பிரான்சுக்கும் ஜர்மனிக்கும் நேரிட்ட சண்டையால், அவர்களது கலியாணம் தடை பட்டுவிட்டது. 42 வருஷம் சென்றபிறகு, அவர்கள் ஒருவரை யொருவர் சந்திக்கு மாறு நேரிட்டது. அப்போது அப் புருஷன் மூன்று முறை விவாகஞ் செய்துகொண்டு மூன்று மனைவிகளையும் இழந்தவனுயிருந்தான். அவளோ மூன்று முறை விவாகஞ் செய்துகொண்டு மூன்று கணவர்களையும் இழந்த விதவையா யிருந்தாள். ஆக இவ் விருவரும் நான்காவதாக விவாகஞ் செய்து கொண்டனர். என்னே இவர்களது பொருத்தம்!

**ஆச்சரியமான தண்டனை** :—புரூக்லினில் ஒருவன் தனது மனைவியையும் பிள்ளையையும் நிர்க்கதியாக விட்டமை பற்றி, அவனுக்கு நியாயாதிபதி "நீ ஒருவார பரியந்தம் ஒருமுறை உன்மனைவியையும் பிள்ளையையும் கோணித்திவிற் கிட்டுக்கொண்டு செல்லவேண்டும்; தினந்தோறும் அவளிடம் அன்பு பாராட்டவேண்டும்; வாரத்திற்கு ஐந்து டாலர் கொடுக்கவேண்டும்; உன் வீட்டு வியவகாரத்தில் உன் மாமியார் வருவது கூடாது. இவ்வாறு நான்கு வாரம் நடக்கவேண்டும். பிறகு நீங்களிருவரும் என்னிடத்திற்கு வரவேண்டும். இவ் விதிக்கிணங்கி நடக்காவிடின், நியாயஸ்தலத்தை அவமதித்தா யென்று உனக்குக் கடின தண்டனை விதிக்கப்படும் என்று கூறினர்.

**குழந்தைப் பார்சல்.**-அமெரிக்காவைப் புது கண்டமென்று சொல்வர். அதற்கேற்றாப்போல் அக் கண்டத்தில் பல நூதன காரியங்கள் கண்டு பிடிக்கப்படுவதுடன் நவீன நடவடிக்கைகளையும் அடிக்கடி கேள்வியுறுகிறோம். புஸ்தகம், துணி, மணி முதலிய சட்டப் பொருள்களைப் பங்கி தபாலில் அனுப்புவதுண்டு. ஆனல் அமெரிக்காவில், கோழி, கிளிப்பிள்ளை, புரு, முசல், சுண்டெலி முதலிய ஜெந்துக்களையும், மானுடக் குழந்தைகளையும் தபால் மூல்மாய் அனுப்பி வருகிருர்களாம். சமீபத்தில் ஒரு குழந்தை ஒருமைல் தூரத்திலுள்ள தன் பாட்டியா ரிடத்திற்கு இன்ஷுர்டு பார்சல் மூலமாய் அனுப்பப்பட்டதாம். அதற்குப் பார்சல் சார்ஜ் ஏழரையணு பிடித்ததாம். வழியில் குழந்தை அழாமல் பராக்குக் காட்டி அதைப் பராமரிப்பதற்கும், ஆகாரம் முதலியவை கொடுத்து ஆதரிப்பதற்கும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும்போதும். என்ன விந்தை! என்ன சௌகரியம்!

**மழைபெய்யுந் தேதிகள்.**—இத் தென்னிந்தியாவில் பின் வருந் தேதிகளில் மழை வருஷிக்குமென ஓர் வான சாஸ்திரியால் கணிக்கப்பட்டிருக்கிறது:

அக்டோபர்மீ

| | | | |
|---|---|---|---|
| 11-ம்தேதியிலிருந்து | | 16-ம்தேதிக்குள்ளும் | |
| 21-ம் | ஷை | 24-ம் | ஷை |
| 27-ம் | " | 30-ம் | " |

நவம்பர்மீ

| | | | |
|---|---|---|---|
| 6-ம்தேதியிலிருந்து | | 19-ம் தேதிக்குள்ளும் | |
| 21-ம் | ஷை | 26-ம் | ஷை |
| 27-ம் | " | 30-ம் | " |

டிசம்பர்மீ 3-ம்தேதியிலிருந்து 9-ம்தேதிக்குள்ளும் 13, 16, 20, 26,-ம் தேதிகளிலும், மழை பெய்யும். அக்டோபர் மீ தத்தில் மழை விஸ்தாரமாய் எங்கும் பெய்து, ஏரி, குளங்கள் நிரம்பி, ஆறுகளில் பிரவாகமுண்டாகும். நவம்பர்மீ கடைசியில் புசலடிக்குமாம். டிசம்பர்மீ 20 முதல் 25-ம் தேதிக்குள் சூறைக்காற் றடிக்குமாம்.

**வாசித்துக்காட்டும் விநோத பத்திரிகை.**—பத்திரிகைகள் சாதாரணமாய் அச்சடிக்கப்பட்டு சந்தாதாரர்களுக்கு அனுப்பப்படுகின்றன. ஆனல் ஆஸ்திரியாவைச் சார்ந்த பூடாபெஸ்ட் என்னும் நகரில் பிரசுரமாகும் "ஹிர்மகண்டோ" என்னும் பத்திரிகை அச்சடிக்கப்பட்டு வழங்கப்படுவதல்ல. அதன் சந்தாதாரர்களுக்கு, உலகத்திலுள்ள விசேஷ வர்த்தமானங்களெல்லாம் டெலபோன் வழியாய் குறித்த நேரங்களில் விவரிக்கப்படும். குறித்த நேரத்தில் சந்தாதாரர்கள் தங்களது காதுகளில் டெலபோன் குழைகளை யெடுத்து வைத்துக்கொள்ள வேண்டுவதுதான். அப்பத்திரிகையின் சங்கதிகளெல்லாம் சவிஸ்தாரமாய்க் கேட்டுக்கொள்ளலாம். பார்த்துப் படிக்க கண்ணுக்குச் சிரமமில்லை. இன்ன நேரத்தில் வர்த்தமானங்கள், இன்ன நேரத்தில் கதைகள், இன்ன நேரத்தில் பாட்டுக் கச்சேரிகள், வாத்தியங்கள் என வகுக்கப்பட்டிருக்கின்றன. சந்தாதாரர்கள் தனியே தாம் தா மிருக்குமிடத்தி லிருந்தே, சங்கீதங்களையும் பாட்டுகளையும், வாத்தியங்களையுங், கதைகளையும், சமாசாரங்களையும் கேட் டானந்திக்கலாம்.



**அற்புத சம்பவங்கள்.**—சென்ற துருக்கி பால்கன் யுத்தத்தில் ஸ்குட்டாரி என்னும் நகர் முற்றுகை செய்யப்பட்டபோது அந் நகரிலுள்ள கத்தோலிக்கருக்கு வெகு இடையூறும் நட்டமும் உண்டானது வாஸ்தவமே. பசியால் இறந்தவர்கள் 54 பேர். குண்டுபட்டு இறந்தவர்கள் 30 பேர். மேற்றிராசனக் கோவில் முதலிய கட்டிடங்களும் பழுதுபட்டுப் போயின. ஆயினும் மாதாவின் விசேஷ கிருபையால் அநேகம் பேர் யாதொரு பொல்லாப் பில்லாமல் காப்பாற்றப்பட்டார்கள். ஆனல் அநேக குடும்பங்கள் தங்கள் வழக்கம்போல் சாயங்காலந்தோறும் செபமாலை செபித்துவந்ததால் ஒரு நஷ்டமும் அடையவில்லை. ஒரு குடும்பத்து மத்தியில் செபமாலை சொல்லி முடிந்ததும் ஒரு குண்டு வந்து விழுந்தது; செபமாலை சொன்னவர்களி லொருவருக் காவது காயமில்லை. செபமாலை சொல்லாத ஒரேஒரு பேர்வழிமட்டும் அக் குண்டால் மாண்டான். ஒரு அம்மாள் நல்லாலோசனைமாதா மட்டில் வெகு பக்தியுள்ளவள். அவள் வீடு அடிக்கடி குண்டு பாயும் வழியிலேயே இருந்தது. என்றாலும் அவளுக்காவது அவள் குடும்பத்துக்காவது அவள் பொருளுக்காவது யாதொரு ஆபத்தும் உண்டாகவில்லை. (ச. வே. பா.)

**ஆகாய கமனம்-ஆச்சரியமான செய்கைகள்!**—மிஸ்டர். எம். பெகு என்ற ஓர் பிராஞ்சு ஆகாயகமனி பார்ப்பவரும் கேட்பவரும் திடுக்கிடும்படியான அரிய வித்தைகள் செய்தார். தாம் சொந்த யுக்தியினல் நிர்மாணித்த ஓர்வித ஆகாய ரதத்தின்மீதேறி மிகு வேகமாய் ஆகாயத்திற் பறந்து, சில நிமிஷங்களுக்குள்ளாக, மேகங்களுக்குள்ளே மறைந்து பின் வெளிப்பட்டு, ரதத்தைக் குப்புறக் கவிழ்த்து தாமுந் தலைகீழாகி, அந்த நிலையிலேயே மனோவேகமென்னத்தக்க அகோரவேகத்துடன் தரையை நோக்கிப் பாய்ந்து வந்து 3000 அடி உயரத்தில் ரதத்தைநேராக நிமிர்த்திப் பறந்தார். பிறகு அவ்விடத்திலேயே அரைமணி நேரமட்டும், தம் ரதத்தோடு பலமுறை குட்டிக்கரணங்கள் போட்டுக் காண்பித்துவிட்டு, அந்த அரிய வித்தைகளைப் பார்த்து ஆச்சரியமுற்றிருந்த ஏராளமான ஜனக் கூட்டங்கள் சொரிந்த வாழ்த்து ஸ்துதிகள் மத்தியிலும், புஷ்பமாரிகள் மத்தியிலும் தரையில் இறங்கினர். என்ன புத்தி தீட்சண்யம்! சிறிதுகாலத்துக்குள் ஜனங்கள் ஆகாயமெங்கும் பறவைகளைப்போல் சர்வ சாதாரணமாய் பறப்பார்க ளென்பதற்குச் சந்தேகமில்லை.

---

## NEWS OF THE MONTH.

## மாசவர்த்தமானம்

**இந்தியா ஸிலோன் இருப்புப் பாதை-**இந்தியா ஸிலோன் இருப்புப்பாதை 1914 ஆ ஜனவரிமீ 15ம் தேதி திறக்கப்படும். இதற்கு இந்தியா இராஜப் பிரதி நிதிகளாயிருந்து விளங்கிய லார்டு கர்ஸன், லார்டு மிண்டோ, லார்டு ஹார்டிஞ்சு முதலினோரும், ஸிலோன் புதிய கவர்னரும், சென்னை கவர்னர் லார்டு பெண்ட்லாண்டும் விஜயஞ் செய்வார்கள். இந்த இருப்புப்பாதையால் தலை மன்னருக்கும், தனுஷ்கோடிக்கு முள்ள தூரத்தை இப்போது 65 நிமிஷத்தில் கடக்கலாமாம்!

**நமது பரிசுத்த பிதா** வாகிய பத்தாம் பத்திநாதர் சென்றமாதத் தொடக்கத்தில் சற்று ஜலதோஷத்தால் அசௌக்கிய முற்றிருந்தது நிமித்தம். அவருடைய டாக்டர் அவரை எல்லா அலுவலினின்றும் அமர்ந்திருக்கச் சொன்னர். ஆயினும் நமதுபிதா தம்மைக் காண அபேட்சித்துவந்தவர்களுக்கெல்லாம் பேட்டி கொடுத்துக்கொண்டு தானிருந்தனர். ஜலதோஷம் பறந்துபோய் விட்டது. இப்போது அவர் சர்வ சௌக்கியமா யிருக்கிருர். சர்வேசுரன் அவரைச் சத்துருக்களுக்கு கையளிக்காமல் காப்பா

ற்றி அவருக்கு நீளிய ஆயுளைக் கட்டளையிடுவாராக!

**ஆஷி ஞாபகச் சின்னம்:**—சென்ற வருஷம், மணியாச்சி ஜங்ஷனில் ஓர் பாதகனால் கொலை யுண்ட கலெக்டர் ஆஷிதுரையின் ஞாபகச் சின்னம் தூத்துக்குடியில் சென்றமாதம் வெகு ஆடம்பரத்துடன் திறந்து வைக்கப்பட்டது. ஞாபகச் சின்னமாய் விளங்குவது ஓர் அழகிய சிறுமண்டபம். இதன் ஒருபக்கத்தில், அலைந்து திரிந்து வரும் ஆடுமாடுகள் நீரருந்த தண்ணீர்த் தொட்டியும், மறுபக்கத்தில் வெயிலில் இளைத்துக் களைத்து வரும் ஏழைப் பிரயாணிகள் தாகந்தீர்த்துக்கொள்ள தண்ணீர்க் குழையும் அமைக்கப்பட் டிருக்கின்றன. இதற்காக உழைத்து, இதை சித்திபெற முடித்துவைக்க விசேஷ சிரமமெடுத்தவர் அவ்வூர் முனிசிபல் சேயர்மானாகிய ஸ்ரீமான் குரூஸ் பெர்நான்டஸ் ஆவர்.

**கோடைக்கானல்.**—(ஓர் கடித நேயர் எழுதுகிறார்) சென்ற ஆகஸ்டு மீ 15௳ இங்கு அர்ச். சலேத்துமலை மாதாவின் திருநாள் மகா ஆடம்பரத்துடன் கொண்டாடப்பட்டது. அதற்கு முந்தின தினம் மாலை அர்ச். தேவதாயாரின் திருச் சுரூபம் ஓர் அழகிய தேரின் மீது எழுந்தேற்றஞ் செய்யப்பட்டு, அர்ச். சலேத்துமலை மாதா கோவிலி லிருந்து, சேசுவின் திரு இருதய நாதர் கோவிலுக்கு, தீவட்டி, மத்தாப்பு, அலங்காரத்துடன் அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார் பஜனைகள் பின்னே பஜித்துவர, வெகு ஆடம்பரமாய் சுற்றுப் பிரகாரஞ் செய்யப்பட்டது. அடுத்த நாள் பெரிய பாடற் பூசை மிக விமரிசையாய் நடைபெற்று முடிந்தவுடன் ஷை தேர் சுற்றுப்பிரகாரம் மறுபடியும், அர்ச். சலேத்துமலை மாதாக்கோவிலுக்கு மேற் சொன்ன ஆடம்பரச் சிறப்புடன் செல்ல திருநாள் கொண்டாட்டம் முகிவுற்றது.

**ஓர் இராச விவாகம்:**-மாஜி போர்த்துகால் இராசாவாகிய மனுவேல் அரசருக்கும், ஜெருமானிய கோகன்சேலன் குடும்பத்தைச் சேர்ந்த அகுஸ்தா விக்டோரியா இராச குமாரத்திக்கும் ஜெருமனியிலே சென்ற மீ 4-ந் திகதி விவாகம் நடக்கலாயிற்று. இராசாவின் மாதாவும், ஜெருமானிய இராச குடும்பத்தாரும், உவேல்ஸ் இளவரசரும் இன்னுமற்ற இராஜ குடும்பத்தாரையும் கூட்டி 80 பேர் அவ்வைபவத்துக்கு விஜயஞ் செய்தார்கள். லிஸ்பன் நகர பிதாப்பிதாவாயிருந்த கருதினால் நெற்றோ மெய்விவாகச் சடங்குகளை நடத்தினார். இராச மன்றல் விருந்தின்போது ஓர் மனைவிக்குத் தன் நாயகன் மேலே யுள்ள கடமைகளையும், விவாகஞ் செய்துகொண்ட இவ்விரு குடும்பத்துக்கு மிடையே புராதனமாக வுள்ள உறவு, உரிமைகளையும் பற்றி மணம்களின் பிதா மெத்த மாதுரியமாய்ப் பேசினார்.

**பாளையங் கோட்டை:**-சென்ற ஆகஸ்டு மீ 24ம் தேதி தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தின் பாளையங்கோட்டைக் கிளைச்சங்கக் கூட்டம், அர்ச். சவேரியார் பள்ளிக்கூடத்தில், சங். ஏ. விஞானப்பிரகாச சுவாமியார் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் கூட்டப்பட்டது. அக்காலை தமது உத்தியோக அலுவலாய் அவ்வூரில் விஜயஞ் செய்திருந்த ஆனரபில் திவான் பஹதூர் எல். டி. சுவாமிக்கண்ணுப்பிள்ளை யவர்கள் ஷை கிளைச் சங்கத்தார் வேண்டுகோளின் பேரில், "கத்தோலிக்கு சங்கத்து அங்கத்தினரின் கடமை" என்பதை மகுடமாகக் கொண்டு ஓர் அரிய உபந்நியாசம் செய்தார். அது முடிந்ததும், உபந்நியாசகருக்கு புஷ்பமாலை சூட்டப்பட்டு, அவருக்கும் அங்கு வந்திருந்தவர்கள் அனைவோருக்கும் புஷ்பம், பந்நீர், சந்தனம், தாம்பூலம் பரிமாறப்பட்டு, அரசர் வாழ்த்துப் பாடல்பாட கூட்டம் முற்றுப் பெற்றது.

**மயிலை அர்ச். தோமையார் கன்னியர் மடம்:**—இம்மடம் திரு மயிலாப்பூரில் ஸ்தாபிக்கப்பட்டு சென்ற செப்டம்பர் மீ 8-ம் தேதியோடு 25-வருடம் பூர்த்தி பெற்றதால் அம்மடத்தின் வெள்ளி ஜூபிலி அன்றைய தினத்திலும், அதற்கு முந்தின, பிந்தின மூன்று நாட்களிலும் மிக வைபவத்துடன் கொண்டாடப்பட்டது. இந்த 25 வருஷங்களுக்குள்ளாக இம்மடம் மிக மகத்தான வேலைகளை முடித்து, கத்தோலிக்கருக்கு வெகுபொதுஜனபிரயோசனத்தைச் செய்துவந்திருக்கின்றது. இம்மடம், 'ஐரோப்பிய ஸ்திரிகளும் இந்தியஸ்திரீகளும் கன்னியராவதற்கு உதவுவதோடு, அக்கன்னியர்களால் பெண்களுக்கு இங்கிலீஷ் பள்ளிக்கூடமும், தமிழ்ப்பள்ளிக்கூடமும், அநாதபிள்ளைகள் சாலையும், விருத்தர்கள் சாலையும், ஏழைகளுக்கு ஆஸ்பத்திரியும் வெகு விமரிசையுடன் நடத்தப்பட்டு வருகின்றன. சர்வேசுரனின் அதிக மகிமைக்காக மிகவுங் கஷ்டப்பட்டுழைக்கும் ஷை கன்னியரால் ஷை மடத்தைச் சார்ந்த பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரி, கோவில் முதலியவைக்கு ஏற்ற கட்டிடங்கள் மெத்த பணச் செலவில் க்ட்டி முடிக்கப்பட்டன. இம்மடம் இன்னும் 25-வருடத்துக்குப் பின் தங்க ஜூபிலி கொண்டாடும்போது இன்னும் அதிக விருத்தியடைந்து, ஜனங்களுக்கு இன்னும் அதிக பிரயோசனத்தைத் தருமென்பதில் ஐயமில்லை. இப்படியே யாகும்படி எம்பிரான் இரங்கி யருளவேணுமென்பது எமது பிரார்த்தனை.



## நல்லாயன் ஆபீசு அச்சியந்திரத்துக்காக நன்கொடை.

நாம் சென்ற சூன் மீ சஞ்சிகையினுள் அடக்கஞ் செய் தனுப்பிவைத்த அப்பீல் மனுவை அநேக நண்பர்கள் கவனித்தார்களில்லை போலும். ஏனெனில், மிகவுங் கொஞ்சம்பேரே அதற்கு விடையனுப்பி யிருக்கிறார்கள். மற்ற நண்பர்களுந் தங்கள் தங்களாலியன்ற மட்டுந் தருமஞ் செய்து எம்மைக் கடனென்னும் நிர்பாக்கியத்தினின்று காப்பாற்றி இரட்சிப்பாரெனக் கோருகிறோம். பலதுளி பெருவெள்ளமென்பதைச் சிந்தித்து, ஒருவரும் இல்லை யென்னாமல் ஒவ்வொருவரும் சொற்ப தொகையாவது கொடுத் துதவுவார்களாக! இதற்காக இம்மாதத்தில் வரப்பெற்ற தொகை பின் வருமாறு. இந்த நன்கொடையாளர்களுக்கு எமது நன்றியறிந்த வந்தனம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஏற்கெனவே வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை. | 81 | 3 |
| A distant sympathiser | 20 | 0 |
| Mr. M. S. சாமிக்கண். ரங்கூன் | 1 | 0 |
| ,, R. M. அந்தோனி, வெல்லிங்டன் | 1 | 0 |
| Mr. A. ஞானதிக்க மேஸ்திரி, திருச்சி. | 0 | 8 |
| ,, மிக்கேல் ஆச்சாரி ,, | 0 | 8 |
| ,, G. S. குருசாமி பிள்ளை, கோயம்புத்தூர். | 0 | 12 |
| ஓர் நண்பர். | 0 | 5 |
| Total Rs. | 105 | 4 |

# DOMESTIC OCCURRENCES.

## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 8-அணா முன்பணம் அனுப்பினாலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட மாட்டா வென்பதை நண்பர்கள் கவனிக்கக் கோருகிறோம். அரைக் கலத்துக்கு மேற்பட்டு முக்கால் கலத்துக்கு உட்பட்டால் முக்கால் ரூபாயாகும். முழுக்கலத்துக்கு ஒரு ரூபாயாகும். கால் ரூபாய்க்கு இவ்விளம்பரங்கள் ஒருபோதும் பிரசுரிக்கப்பட மாட்டா.

### மெய்விவாஹப் பிரகடனம்

### லேன்—பேர்னாந்து.

ஸர்வ ஸக்த, ஸாக்ஷாத் ஸர்வேசுரனின் அருளால், பெரிய தாழை ஸ்ரீமத். தொம்மை சூசை லேன் அவர்களின் சிரேஷ்ட புத்திரர் ஸ்ரீமான் ஜோஸெப் என்ட்றி லேன் அவர்கட்கும் ஸ்ரீமத். ஜோக்கீம் பெர்னாந்து அடப்பனார் அவர்களின் கனிஷ்ட புதல்வி ஸ்ரீமதி மேரி லூர்து பெர்னாந்து அம்மாளுக்கும் நிகழும் செப்டம்பர் மாதம் 3௳ யாகிய புதவாரம் அர்ச். அருளப்பர் முடியப்பர் தேவாலயத்தில் மெய்விவாஹ மென்ற தேவ திரவிய அனுமானம் அருளப்பட்டது. இத்திரு மங்கிலிய தாரணோற்சவம் எம்மதி குலாசாரச் சடங்குகள், நகர்வலம் முதலிய சகல வைபவங்களோடு குறையற நிறைவேறியது. மணாளிருவரும், எம்குல உடையாம் பாண்டிய அணியையே பூண்டிருந்தனர். பிறதேஸங்களிலிருந்து பந்துமித்திரர் அநேகர் ஸமுகந்தந்திருந்தனர். சோபனக் கடிதங்களும், தந்திகளும் வாழ்த்துக்கவிகளும், வெகுமதிகளும், மிகுதியும் வந்து குவிந்தன. ஆக்க, அரீக்க, அழிக்க வல்ல நல்ல தேவனைப் பயின்ற பரமேஸ்வரியாம் கிருபாகரி இப்புதிய மணாளனையும், மணாளியையும் ஆசீர்வதித்து அவர்கள் பழுதிலா தில்லறம் நடத்தி பல சற்புத்திரரைப் பயின்றுப் பல்லாண்டு வாழத் திருவருள் பாலிப்பாளாக!

பெரிய தாழை, 7—9—1913. } இங்ஙனம், "ஓர் பௌரவ மரபினன்".

## நன்மரண அறிக்கைகள்.

### தூத்துக்குடி.

எனது தமக்கையாரவர்கள் புத்திரனும்; எனது மருமகனுமாகிய எட்வீனய்யா பிம்மேந்த 1907 வருஷம் மேமீ 18ம்தேதியாகிய சனிக்கிழமை இரவு 7-மணிக்கு ஜனனமாகி; நடப்பு வியாதியால் எவ்வித சிகிச்சைக்கும் குணப்படாமல் நாளது 1913 வருஷம் ஆகஸ்டுமீ 23ம் தேதி பகல் 12-30 மணிக்கு இப்பாழுலகை விட்டு பரமபதம் சேர்ந்தார். பரிதாபத்துக்குரிய இத் துக்க செய்தியைக் கண்ணுறும் கனவான்கள் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக 1 பர. 1 பிரி. 1 திரி. வேண்டிக்கொள்ளக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

குருணைக்கல், 8-9-13. } இப்படிக்கு, மீக்கேல் பர்னந்து.

### இரங்கூன்.

ரங்கூன் சிகினல் பொகுடா ரோடு, போட்டோகிராப் P. கிலியர் அவுஸ் எட்மவுண்ட்டர், M. ஆரோக்கியசாமி அவர்களின் செல்வக் குமாரத்தி துரைமணி யென்றழைக்கும் சௌ. A. ரூத்துமரியம்மாள் கடந்தவருஷம், அக்டோபர்மீ 24உ செவ்வாய்க்கிழமை மாலை 5-மணிக்கு கர்த்தருக்குள் நித்திரை யடைந்தனள். இக்கன்னிகை அர்ச். அந்தோனியார் பாடசாலையில் வாசித்து வந்தனள். வயது 12. ஆண் குழந்தையில்லாத பெற்றோர் இக்குழந்தையையே ஆண் குழந்தையாகப் பாவித்து அதன் மீது தமதன்பை யெல்லாம் வைத்து வளர்த்து வந்தனர். இவ்வாறே அதன் மற்ற பந்து மித்திரர் யாவரும் அப்பெண்மணியின் மீது வெகு ஆசை பாராட்டி வந்தார்கள். கடைசியில் யாவருக்கும் விசனத்தைக் கொடுத்து விட்டு அம்மாது கர்த்தருக்குள் நித்திரை யடைந்தனள். இக்கன்னிகை மரித்து, ஒரு வருஷம் இம்மாதத்தில் பூர்த்தியாகிறபடியால், அந்த வருஷோற்சவ தினமாகிய 1913ஞு அக்டோபர்மீ 28-ம் தேதி செவ்வாய்க்கிழமை காலை $6\frac{1}{2}$மணிக்கு, இரங்கூன், அர்ச். அந்தோனியார் ஆலயத்தில் சங். ஷாவே சுவாமியார் அவர்களால் ஷை ரூத்மரியம்மாள் ஆத்தும இளைப்பாற்றிக்காக பெரிய பாடற் பூசை செய்யப்படும். இதைக் கண்ணுறும் கத்தோலிக்கு நேயர்களனைவரும் அவ்வாத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர. பிரி. திரி. வேண்டிக்கொள்ளப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
M. S. சாமிக்கண்.
இரங்கூன், 5-9-13. } பொம்பேயி அர்ச். ஜெபமாலை மாதா பஜனை மெம்பர்.

### புன்னைக்காயல்.

## IN MEMORIAM.

### காலஞ்சென்ற ஸ்ரீமான் சூசை முறயிஸ்.

எனது ஆப்தமித்திரரான ஸ்ரீமான் சூசை முருயிஸ் அவர்கள் எம்மை விட்டகன்ற ஆற்றொண்ணுத் துக்க வியாகூலத்தை இதனால் என் நண்பர்களெல்லவர்க்கும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இவர் பெற்றோருக் கேக புத்திரர். சற்புத்திர சிகாமணி. இவருக்குத் தக்க வயது வந்ததும் யாதோர் வியாபார முயற்சியை நாடி இலங்காபுரியை அடைந்து, அவ்விடத்தில் வெகு ஊக்கத்துடனும், விமரிசையுடனும் எடுத்துக் கொண்ட பிரயாசையால் தம்முதலாளிகளினுடையவும், உடன் உழைப்பாளிகளினுடையவும் அன்பைக் கவர்ந்து, எல்லவர்க்கும் நல்லவனெனப் பெயர் பெற்று வந்தார். இவரை, சிறு பிராயத்திருந்தே வருத்திவந்த நோய் நாளடைவில திகரித்து, உபத்திரவ மேலிட்டதனால், இவர் இலங்கைக் கரையைவிட்டகல நேர்ந்தது. இவர் தம்மூரடைந்ததும்; கூடிய ஔஷதங்களெல்லாம் பிரயோகித்தும் குணமாகாது, தம் நம்பிக்கை யெல்லாம் அர்ச். தோமை யப்போஸ்தலர் பேரில் வைத்து, அவர்தம் தேவாலயத்தில் நடந்தேறிய புதுமைகளை உலக முழுதுமே பிரஸ்தாபித்தது மன்றி, அவ்வப்போஸ்தலருக்கு புதிய தேவாலயம் அவ்வூரில் கட்டப்பட இவரே காரணக் கர்த்தராயிருந்தனர். நாளடைவில் இவரின் திரேகம் மெலி வுறுவதைக் கண்ணுற்ற அன்னை முதல் பந்து மித்திரரெல்லவரும் ஆருத்துக்க சாகரத் தமிழ்ந்திப் பரிதபித்தனர். கடைசியாய் எவரும் எதிர்நோக்காத விதமாய் இவரின் காலம் கிட்டிவந்ததால் சகல தேவத்திரவிய அனுமானங்களையும் குறைவின்றித் தக்க காலத்தே பெற்று, சென்றமாதம் 22உ இரவு சுமார் 10-மணிக்கு தமது 23-வது வயதில், தமது ஆத்துமாவை திவ்ய கர்த்தரின் திருக்கரங்களில் ஒப்படைத்து வெகு அமரிக்கையாய் உயிர் துறந்தனர். அர்ச். ஞானப்பிரகாசியார் சபையார் கிரமமாய் மும்முறை பிரேதத்தைச் சந்தித்து, சொல்லவேண்டிய ஜெபங்களைச் சொல்லி முகித்தான பின்னர், அடுத்தநாள் சாயரக்ஷை சுமார் 5 மணிக்கு ஷை சபையாரே பிரேதத்தைத் தூக்கி, இரு அணிவகுத்து வெகு ஆடம்பரமாய் அர்ச். சவேரியார் மையவாடியில் க்ஷேமித்தார்கள். எட்டு நாள் வரை ஷை ஞானப் பிரகாசியார் சபைக் கறுப்புக்கொடி துக்க அடையாளமாய் ஆடியது மன்றி, வாரத்தின் ஒவ்வொரு கூட்டத்தின் போதும், அவ்வாத்தும இளைப்பாற்றிக்காய் வேண்டுதல் செய்யப்படுகிறது மன்றி, இடைக்கிடையே திவ்ய பலி பூசையும் இச்சபையோரால் செய்து ஒப்புக்கொடுக்கப்பட்டு வருகிறது. இதை வாசிக்கும் நண்பர்களும் இவ்வாத்துமத்தை மறவாது வேண்டிக்கொள்ள வேண்டுகிறேன்.

கொழும்பு 18-9-13. } இங்ஙனம், ஆப்த நண்பன்.

---

## எடப்பாடி அர்ச். செல்வநாயகி அம்மாள் ஆலய தர்மம்.

அடியில் கையொப்பமிட்டிருக்கும் நாம் உதார குணமுள்ள சகல நண்பர்களுக்கும் அறிவிப்பது யாதெனில்:—

எடப்பாடி அர்ச். செல்வநாயகி அம்மாளின் திருவாலயத்திற்கு பிரதி வருஷமும் பாஸ்கு பண்டிகையின்போது திருயாத்திரைக்காரர் அவள் திருவடியைப் போற்றி, அவள் உதவியைக் கேட்கத் திரளாய் வருவது யாவருக்கும் தெரிந்த விஷயமே. அப்படி வருகிறவர்களுக்குத் தகுந்த விடுதிகளும், சாவடி சத்திரங்களுமில்லாமையால் கடும் வெய்யிலின் வெப்பத்தினால் அவர்கள் தவித் தலைவதைக் கண்டும், பொருளுதவி யில்லாமையால் நாம் அவர்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்ய நாளது வரையில் கூடாமற்போனதைப்பற்றி அதிக வியாகுலப்படுகிறோம். ஆகிலும், அர்ச். செல்வநாயகி அம்மாளை நம்பி இப்போது இந்திய கிறிஸ்தவர்களுக்கு ஒரு சாவடியும், வெள்ளைக்காரர்களுக்கு மற்றொரு சாவடியும் கட்ட யேற்பாடு செய்வதோடு, கோவிலை மராமத்து செய்யவும் துணிந்து, ஏறக்குறைய ரூ 2,500 பெறும்படியான கட்டிடங்களைத் துவக்கிவிட்டோம். தரும சிந்தையுள்ள மரியாயின் தாசர்கள் உடனே நமக்கு கைகொடுத்து இந்த மேன்மையான வேலைகளைச் சீராய் முடிவு செய்ய உதவிபுரியவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். இதைக் கண்ணுறும் சகல கனதனவான்களும், சகல கிறிஸ்துவர்களும் தம் தம்மா லியன்றமட்டும் இந்த காரியத்திற்கு பொருளுதவி செய்வார்களென்று நம்பிக்கையாயிருக்கிறோம். நண்பர்களுடைய தர்மம் எவ்வளவு சிறியதேனும் சந்தோஷமாய் அங்கீகரிக்கப்படும். தேவதாயானவள் அவர்களையும் அவர்கள் குடும்பங்களையும் ஆசீர்வதிப்பாளென்பது திண்ணம்.

| | ரூ: | அ. | ப. |
|---|---|---|---|
| ஷை தருமத்துக்காக ஏற்கெனவே வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை. | 273 | 4 | 0 |
| Mr. பெ. கொ. தேவசகாயஞ் செட்டி. சாமிநாதஞ் செட்டி சோமனூர், | 1 | 8 | 0 |
| ,, பி. சாந்தப்ப பிள்ளை. சோமனூர், | 1 | 0 | 0 |
| ,, மு. பெரியண்ண செட்டியார், அம்மணி யம்மாள், | 1 | 0 | 0 |
| ,, வியாபாரி அந்தோனி முத்து, பள்ளபாளையம், | 1 | 0 | 0 |
| ,, இராயப்ப முதலியார், ஷை | 1 | 0 | 0 |
| Mr. அ. மரியசூசை முதலி, பள்ளபாளையம், | 2 | 0 | 0 |
| ,, கன்னம்பாளையம் பொது நண்பர்கள். | 3 | 0 | 0 |
| ,, கந்தப்ப கவுண்டன் வலசு பொது நண்பர்கள், | 1 | 8 | 0 |
| ,, பெரமச்சிபாளையம் பெரியண்ணன், | 5 | 0 | 0 |
| ,, ஒலக்கை சின்னகவுண்டனூர் தாவீது | 5 | 0 | 0 |
| ,, கொல்லம்பட்டி பொது நண்பர்கள். | 3 | 0 | 0 |
| ,, செல்லம்பட்டி பொது நண்பர்கள், | 2 | 0 | 0 |
| Rev. A Stanislaus, C. P. Kadagatore, | 2 | 0 | 0 |
| Mr. செ. மலையப்ப முதலி, முத்தால்பேட்டை, | 1 | 0 | 0 |
| ,, அ. தேவசகாய முதலி, ஷை | 3 | 0 | 0 |
| ,, C. Saint Augustin, Muthalpet | 3 | 0 | 0 |
| ,, சூ. அந்தோனிசாமி முதலி, ஷை | 1 | 0 | 0 |
| ,, செ. ஆரோக்கியசாமி முதலி, ஷை | 1 | 0 | 0 |
| ,, சூ. அண்ணாசாமி ஷை | 1 | 0 | 0 |
| ,, ச. மரியசூசை முதலி, ஷை | 1 | 0 | 0 |
| ,, Saint Narasse, Muthalpet | 1 | 0 | 0 |
| ,, ம. தாவீது முதலியார், ஷை | 2 | 0 | 0 |
| ,, ச. செல்வ நாயக முதலியார், ஷை | 2 | 0 | 0 |
| ,, செ. எ. இராயப்ப முதலியார் ஷை | 3 | 0 | 0 |
| ,, சவரியப்பன் மதலமுத்து, ஷை | 2 | 0 | 0 |
| ,, பி. குழந்தைசாமி, ஷை | 1 | 0 | 0 |
| ,, அந்தோனிசாமி முதலி, ஷை | 2 | 0 | 0 |
| ,, செ. சூசை முதலி, ஷை | 2 | 0 | 0 |
| ,, O. Mariasusai Mudalr. ஷை | 1 | 0 | 0 |
| ,, சூ. சவரியப்ப முதலி, ஷை | 1 | 0 | 0 |
| ,, ம. செல்வ முதலியார். ஷை | 1 | 0 | 0 |
| ,, பா. முத்து செட்டியார், ஷை | 1 | 0 | 0 |
| ,, மரி. அருளப்ப செட்டி, ஷை | 1 | 0 | 0 |
| ,, செல். மரிய சூசை செட்டி, ஷை | 1 | 0 | 0 |
| ,, சூ. முத்து முதலியார். ஷை | 1 | 0 | 0 |
| ,, அ. செல்வ முதலியார், ஷை | 1 | 0 | 0 |
| ,, சூ. செல்வ முதலியார். ஷை | 1 | 0 | 0 |
| ,, செ. மரியதாஸ் முதலி, ஷை | 1 | 0 | 0 |
| ,, ச. சவரியப்ப முதலி, ஷை | 1 | 0 | 0 |
| ,, திவ்வியநாதன் முதலி, ஷை | 1 | 0 | 0 |
| ,, ம. செல்வ முதலியார், ஷை | 5 | 0 | 0 |
| ,, ச. இத்தேரி முதலியார், ஷை | 3 | 0 | 0 |
| ,, துரைசாமி முதலியார் அம்மாகண்ணம்மாள், புதுவை, | 1 | 8 | 0 |
| Rev. M. Lazare, Pondichery, | 15 | 0 | 0 |
| Mr. S. T. Velayuda Gramany, | 1 | 0 | 0 |
| ,, காவடிக்காரனூர் பெரிய நாயகம், | 1 | 0 | 0 |
| ,, M. M. Joseph, Erode, | 5 | 0 | 0 |
| ஆகமொத்தம் ரூ. | 371 | 12 | 0 |

எடப்பாடி, கத்தோலிக்குக்கோவில் } ஜே. ஞானதீக்கம், விசாரணை குரு.

## அர்ச் அன்னம்மாள் மடம்,

மண்ணடி.

கத்தோலிக்குச் சகோதரர்களே!

சென்னை, மண்ணடி, அர்ச்.சவேரியார்கோவிலைச்சேர்ந்தஅர்ச். அன்னம்மாள் மடத்துக் கன்னியர் வசிக்கும் விடுதியானது போதுமான விசாலமும் சௌக்கியமு மில்லாததி னிமித்தம், அவர்கள் அடுத்தடுத்துப் பல அசௌக்கியங்களுக்கும். சங்கடங்களுக்கும் உள்ளாகிறார்கள். தங்கள் இருப்பிடத்திலேயே இவர்களால் நடத்தப்பட்டு வரும் பெண்கள் பள்ளிக்கூடத்துக்கும் தக்க இட மில்லாமையால், பள்ளிச் சிறுமிகளும் இடைஞ்சல்பட்டு வருகிறார்கள். இவ் விருவகைக் குறைகளையும் பரிகரிக்க பாடசாலைக்கென்று ஒரு தனிக் கட்டிடம் கட்டுவதற்கு முயன்றதில், அதின் செலவுக்கு ரூ. 10,000 பிடிக்கு மென மதிப்பிடப்படுகிறது. அண்டை அயலில் இதர மதத்தினரால் நடத்தப்படும் பள்ளிக்கூடத்துக் கட்டிடங்களின் மத்தியில், கத்தோலிக்குப் பள்ளிக்கூடம் கேவலமாயிருக்க ஒண்ணாதாகையால். ஷை மதிப்பின்படியே ஓர் கட்டிடம் கட்டி முடிப்பதற்கு பரோபகாரமுள்ள கத்தோலிக்கு ஸ்திரீ புமான்கள் அனைவரும் தங்கள் தங்களால் இயன்றதொகை உதவி செய்து, இத்தரும காரியத்தை முடித்து வைப்பார்களென அவர்களை மெத்தவும் கேட்டுக்கொள்ளுகிறோம். இதற்கு ஒத்தாசைசெய்யும் விசுவாசிகளுடைய ஆத்தும சரீர நன்மைகளுக்காக கன்னியரும்,இவர்கள் கண்காணிப்பில் இருக்கும் ஏழைப் பிள்ளைகளும், பாடசாலைச் சிறுமிகளும் தங்கள் அனுதின செபத்தில் வேண்டிக்கொள்வார்கள்.

நன்கொடை எவ்வளவு சிறிதாயினும் நன்றியறிதலுடன் அங்கீகரிக்கப்பட்டு "நல்லாயனில்" பிரசுரிக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| இதுவரையிலும் வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை. | 107 | 9 | 0 |
| Mr. M. சாவியர், சிலோன் | 1 | 0 | 0 |
| ,, S. T. S. அம்புரோஸ், கோடை | 1 | 0 | 0 |
| Mrs. அற்புதமரி பெங்களூர், | 5 | 0 | 0 |
| ,, சூசை ஞானமரி, கோலாலம்பூர் | 0 | 12 | 0 |
| ஓர் நண்பர் | 20 | 0 | 0 |
| | 135 | 5 | 0 |

மடத்து முதலாளித் தாயாரம்மாள்.

## திருமுகப் படம்.

ரோமாபுரியில் அர்ச். பேதுருவின் பசிலிக்காவில் காப்பாற்றப்பட்டு வணங்கப்பட்டு வருகிற சேசுக்கிறிஸ்துநாதருடைய திருமுகச் சாயலின் மெய்யான படம், லினன் சீலையில் அச்சிடப்பட்டது. பாப்பாண்டவருடைய முத்திரையும் இடப்பட்டிருக்கிறது.

18×12 அங்குல அளவுள்ள படம் ஒன்றுக்கு விலை ரூபா 1 0 0

ஷை திருமுகப் படத்துக்குமுன் வைக்கும் வாடா விளக்குகளுக்கு எரிக்கும் நைட்விக்ஸ் (Night wicks) அடங்கிய (3 மாதத்துக்குப் போதுமான) பெட்டி 1-க்கு அணா 2. 6 மாதத்துக்கு போதுமான பெட்டி 1-க்கு அணா 0 8 0

ச. பி. பாய்வ, நெ. 10, கன்சிஸ்ட்டேரி பில்டிங்ஸ், புறக்கோட்டை, கொழும்பு.

X. P. Paiva, 10, Consistory Buildings, Pettah, Colombo.

கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு

நெடுங்காலமில்லாதது! **அதிமுக்கிய அறிக்கை.** நெருங்கக்கிடைத்தது!!

யாவரும் தேடி யலையும் புத்தக மிதுவே யாதும்.

## அர்ச். அந்தோனியார் சத்துரு சங்காரமாலை.

இஃது எம்மால் பழைய கையேட்டுப் பிரதிகளைக்கொண்டு சென்னை திருமயிலை மேற்றிராணி ஆண்டவரவர்கள் அளித்த உத்தாரப்படி ஷை யூர் ஜார்ஜ டவுன் அர்ச். மோட்சராக்கினி மதுரநாயகி மாதாவின் ஆலய விசாரணை குரு சங். L. X பெர்னாந்தீஸ் சுவாமிகளால் நன்கு பரிசோதிக்கப் பெற்று, இலக்கண, இலக்கிய, சரித்திர வழுவில்லாமல் சுத்தப் பிரதியாக்கி நல்ல கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட் டிருக்கிறது. இதில்,

அர்ச். அந்தோனியார் சரித்திர சுருக்கமும், சத்துரு சங்கார மாலையும், பதின் மூன்று தேவார மன்றாட்டும். சீட்டும், ஜெபமாலையும், அர்ச். மிக்கேயேல் சம்மனசானவருடைய சத்துரு சங்கார மாலையும், சத்துருவை ஜெயிக்கும் மந்திரங்களும், வேறு தனித்தனியான விஷயங்களும், நவமரிய்ச் சிலதும் சேர்க்கப்பட்டு லோகோபகாரமாக சுலப விலைக்கு விற்கப்படுகிறது. இவ்வரிய புத்தகம் ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது. விலைஅணா 4; வி. பி. போஸ்டில் அணா. 6.

☞ இன்னும் சில காப்பிகளே கையிருப்பு இருப்பதால் புத்தகம் வேண்டுபவர்கள் உடனே எழுதிப் பெற்றுக்கொள்ளக் கடவார்கள்.

விலாசம், A. ஜோப்பிள்ளை. (A. Joe Pillai.)
நெ. 30, ஏழுகிணற்றுத் தெரு, ஜார்ஜ டவுன், சென்னை. E.

REGISTERED
3 - NOV 1913
MADRAS



நல்ல ஆயன்.

November—1913.

புத்தகம். 11 "நாம் நல்ல ஆயன் ..நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10:17-14.) நெம்பர். 11

## ON VENIAL SIN

## அற்பப் பாவத்தின் பேரில்.

(முன் தொடர்ச்சி.)

### II. பிரிவு.

### அற்பப் பாவத்தினால் ஆத்துமத்துக் குண்டாகும் நஷ்டம்.

அற்பப் பாவமானது சுலபமாகவே வெகு கெடுதிகளைச் செய்யுந் தன்மையுள்ளது. அதனால் ஆத்துமத்துக்குண்டாகும் நஷ்டம் அற்ப சொற்பமல்ல; பற்பல பெரு நஷ்டங்களே வந்து நேரிடுகின்றன. அதெப்படி யெனில்: அற்பப் பாவமானது ஆத்துமத்தைக் கறைப்படுத்துவதினால் அதன் அழகு சௌந்தரியத்தை யிழக்கச் செய்து அதைச் சர்வேசுரனுடைய கண்ணுக்கு அருவருப்பாயும் அசங்கிதமாயுஞ் செய்துவிடுகிறது.நபுக்கொதொனோசோர் அரசன், தன்னிடத்தில் குற்றேவல் புரிய நியமிக்கப்படுஞ் சிறுவர்கள் நேர்த்தியான முகச்சாயலும், நல்ல தேகக் கட்டு முள்ளவர்களாயிருப்ப தவசியமெனத் தன் மந்திரி பிரதானிகளுக்குக் கற்பித்திருந்தான். அப்படியா யிராதவர்கள் தன் சந்நிதானத்தில் நிற்க அபாத்திரர்க ளெனவும் தெரியச் செய்திருந்தான். இப்படியே சர்வேசுரனும் தேவ இஷ்டப் பிரசாதத்தினால் தமக்குப் பிள்ளைகளா யிருப்பவர்கள் யாதோர் பாவக் கறையின்றி பரிசுத்தர்களாய்ப் பிரகாசித்து விளங்கக்கோருகிறார். ஆகையால் அற்பப் பாவங்களினால் கறைப்பட்டிருக்கும் ஆத்துமங்கள் அவரால் பார்க்கப்படத்தகாத நிர்ப்பாக்கிய நிலைமையி லிருக்கின்றன. சுத்த வெண்மையானதும், நேர்த்தியானதுமான மிக்க விலையேறப்பெற்ற ஓர் பட்டாடையில் கொஞ்சம் எண்ணெய் அல்லது மைக்கறை படுமானால், அது புத்தப் புதியதாயினும், அதன் மதிப்பும் மேன்மையுங் குறைந்து அதனுடைய அசல் விலையில் அரைவாசி விலை முதலாய்ப் பெறுதன்றோ? பார்ப்போர் எவரும் மனோகரமும் பிரியமுங் கொள்ளும்படியான ரூபலாவண்ணியம் பொருந்திய ஓர் இராஜகுமாரத்தியின் முகத்தில் கொஞ்சந் தேமல் அல்லது ஒரு சிறு மரு உண்டானால், அவளுடைய அழகு சௌந்திரிய மெல்லாம் கெட்டுப் போகுமல்லவா? அதுபோலவே தேவ இஷ்டப்பிரசாத அந்தஸ்திலிருக்கும் ஒரு ஆத்துமம் பற்பல பக்திக் கிருத்தியங்களையும் புண்ணிய முயற்சிகளையும் செய்து சிறந்து விளங்கின போதிலும், அது பரலோகத்துக்குச் சுதந்தரியாயும் இராக்கினியாயு மிருந்த போதிலும், ஒரேவோர் அற்பப் பாவத்தைக் கட்டிக்கொண்ட க்ஷணத்தில் தனக்குள்ள அழகு சௌந்தரியத்தை யெல்லாம் போக்கடித்துக்கொண்டு, எவ்வளவு அவலட்சணமும் அசங்கிதமு அடைகிற தென்றால், சர்வேசுரன் அதை ஏறெடுத்துப் பார்க்க முதலாய் மனங்கொள்ளாமல் அதன் பேரில் கோபதாபப்படுகிறார். அன்றியும், நாம் அசுத்தத்தைக் கண்டால் எப்படி வெறுப்புற்று அதை சட்டை செய்ய மாட்டோமோ அப்படியே, சர்வேசுரனும் அவ்வாத்துமங்களின் பேரில் அருவருப்பும் அரோசிகையுங் கொண்டு அவைகளைப் புறக்கணிக்கிறார்.

அற்பப் பாவத்தினால் ஆத்துமத்துக்கு வரும் அவலட்சண கேடு எத்தன்மை யானதென நாம் ஒருவாறு தெரிந்துக்கொள்ள, கான்சியா கர்ரிகிலியா வென்னும் ஸ்பே

யின் தேசத்து பெருமாட்டிக்கு நடந்த ஓர்
அரிய சம்பவத்தை யோசிக்கத்தகும். இப்
பெருமாட்டி சிறந்த ஞாஞசிரியரும், தனக்
கு ஆத்தும குருவுமாயிருந்த அருளப்ப
அவிலா என்னும் அர்ச்சியசிஷ்டவருடை
ய புத்தி போதகத்தினால் நாளுக்கு நாள்
உத்தம தனத்தில் ஓங்கிவளர மிகவும் வரு
ந்தி வந்தாள். சாவான பாவத்தை மகா
ஜாக்கிரதையுடன் விலக்கி நடப்பாள். ஆ
னால் சிற்சில அற்பப் பாவங்களை மாத்திரம்
அவற்றின் கனகனத்தை யறியாமல் சுலப
மாய்க் கட்டிக்கொண்டு வருவாள். மற்ற
படி அவள் சகல விதத்திலும் சுகிர்த சாங்
கோபாங்க நெறியில் ஒழுகி வருவாள். இப்
படிப்பட்ட இவளுடைய உள்ளத்தில் ஓர்
ஆசை யுண்டானது. அது யாதெனில், தன்
னுடைய ஆத்துமத்தின் நிலைமையை அறிய
வேண்டு மென்பதேயாம். ஆகையால் தனக்
கிதை சர்வேசுரன் தெரியப்படுத்தக்கிருபை
கூர வேண்டுமென நெடு நாளாய் அவரை
இரந்து மன்றடி வந்தாள். இக் கருத்துக்
காக இவள் புரிந்த ஜெபதபங்கள் அன
ந்தம். ஒரு நாள் சாயங்கால வேளையில்
தன்னுடைய அறையில் தனித்திருக்கை
யில் ஒரு சம்மனசானவர் வனவாசி ரூபம்
பூண்டு, தமது கையில் ஒரு குழந்தையை
ஏந்தின வண்ணம் இவளுக்குக் காணப்
பட்டார். அவர் கையிலிருந்த குழந்தை
யின் ஸ்திதி பார்ப்பவருக்கு மிக்கப் பரிதா
பத்தை யுண்டாக்கினாலும் அது இருந்த
அவலட்சண கோலத்தைக் காணச் சகிக்க
முடியாததாயிருந்தது. அதேனென்றால்,
உச்சந்தலை முதற்கொண்டு உள்ளங்கால்
பரியந்தம் வைசூரி போன்ற அகோர கொ
ப்புளங்களால் அது நிறைந்திருந்தது. வன
வாசியானவர் அவளை நெருங்கிப் போய்
"பார், இது தான் உன் ஆத்துமம்" என்று
சொல்லிய வுடனே ஒரு மின்னலைப்போல்
மறைந்து போனார்.

இந்த பயங்கரத்துக்குரிய காட்சியை
க்கண்ட இப்புண்யவதி எம்மாத்திரம் திகி
லும் பிரமிப்பும், மனோசங்கடமுங் கொண்
டாளென்றால், அழுகை பெரு மூச்சுடன்
"ஐயையோ, நான் பெரு நிர்ப்பாக்கிய பா
வி! என் ஆத்துமம் இவ்வளவு விகார அ
கோர சுரூபமாயிருக்கின்றதே !!" என்று
தனக்குள் அடிக்கடி சொல்லித் துக்கித்
துக்கொள்வாள் அந்த இரவு முழுதும்
தான் கண்ட காட்சியின் பேரிலேயே சிந்
தனை கொண்டவளாய்த் தூக்கம் பிடிக்கா
மல் அழுத கண்ணும் சிந்தின மூக்குமா
யிருந்தாள். மறுநாள் பொழுது விடிந்த
தும் மிக்க துரிதத்துடன் தன் ஆத்தும
குருவிடஞ் சென்று, தனக்கு நடந்த சக
லத்தையும் ஆத்திரத்தோடும் அழுகையோ
டும் அவருக்குத் தெரிவித்தாள்.

இதைக்கேட்ட அந்த பரிசுத்த குரு
வானவர் அவளை நோக்கி "நீபார்த்தக் குழ
ந்தை உயிருள்ளதா யிருந்ததோ அல்லது
இறந்து போயிருந்ததோ?" வென்று விசா
ரிக்க, அவள் "உயிருள்ளதாகவே யிருந்த"
தென்று மறுமொழி சொன்னாள். அதற்
குக் குருவானவர் "நல்லது நீ மனக் கலக்
கங் கொள்ளாதே; நீ உயிருள்ளக் குழந்
தையைப் பார்த்தபடியால் உன்னுடைய
ஆத்துமம் தேவ இஷ்டப்பிரசாதத்தினால்
உயிர் பிழைத்திருக்கிற தென்றறிந்து கொ
ள். ஆயினும் அது கொப்புளங்களால் நி
றைந்து அவ்வளவு அவலட்சண கோலமா
ய்த்தோன்றினது ஏனெனில், நீ கட்டிக்
கொண்டிருக்கும் அநேக அற்ப சொற்பப்
பாவங்களும் குற்றங் குறைகளுமேயாம்"
என்றார். இதைக்கேட்ட அந்த உத்தமி
அந்நாள் தொடங்கி பாம்பையும் தேளை
யுங் கண்டு நடுங்குவதுபோல அற்பப்பா
வத்தைக் கண்டு அஞ்சி நடுங்கி அதை ம
கா ஜாக்கிரதையுடன் விலக்கி நடந்து, சர்
வேசுரனுக்குப் பிரியப்பட வருந்தி வந்
தாள்.

மிக்க சுறுசுறுப்பாயும் ஆவலாயும் உ
த்தமதனத்தை யடைய பாடுபட்டு வந்த
இப் புண்யவதியின் ஆத்துமமே அவளு
டைய குற்றங் குறைகளால் இவ்வள
வு அவலட்சணமாய்த் தோன்றினதானால்,
கூசாமற் கணக்கற்ற அற்பப் பாவங்களைக்
கட்டிக் கொள்ளுகிறவர்களுடைய ஆத்து
நிலைமையைப்பற்றி யாரால் விவரிக்கலா
கும்!!

அற்பப் பாவங்கள் நம்மிடத்திலுள்ள
தேவ இஷ்டப் பிரசாதத்தை யிழக்கச்
செய்யாவிட்டாலும் நமக்கனுகூலமான அ
நேக தேவானுக்கிரகங்களை யடைவதற்கு
அவைகள் பெருந்தடங்கலாயிருக்கின்றன.
நமக்கு நன்மையாயிருப்பதை யறிய நம்மு
டைய புத்திக்கு ஞானவெளிச்சம், அப்படி



யுறிந்தவைகளைச் சுறுசுறுப்பாய் அனுஷ்டி
க்க ஆசை, ஜெபதவத்தின்மேல் விருப்பம்,
பாவத்தின்பேரில் வெறுப்பு, மனஸ்தாபம்,
சோதனை நேரத்தில் திடன் இவை முத
லானவைகள் சர்வேசுரன் நமக்குத் தய
வாய் அருளும் விசேஷ வரங்களாகும். இ
வைகளை யெல்லாம் நாம் பெற்றுக்கொள்
ளாமற்போக அற்பப்பாவங்களே காரண
மாயிருக்கின்றன.

தனக்கு மனவருத்தத்தையுந் துன்
பத்தையும் வருவிக்காமல் தன் மனசின்
படி பிரமாணிக்கமாய் ஒழுகும் ஒரு பிள்
ளையின்பேரில் அல்லவா தகப்பன் பிரியங்
கொள்வான்? மேலும் அவன்பேரில் தனக்
குள்ள நேச பட்சத்தைக் காட்ட விசேஷ
வெகுமதிகளையும் வெகுமானங்களையும்
அளிப்பானன்றோ? இதே பிரகாரம் சர்
வேசுரனும் தம்முடைய திருச் சித்தத்
துக்கு அமைந்து அற்பப்பாவங்களை வி
லக்கி நடப்பவர்களுக்கு விசேஷ தயவு
காட்டுவாரென்பது திண்ணம். சாவான
பாவங்களை விலக்கி நடப்பதே போதுமெ
ன்று சொல்லி அற்பப்பாவங்களைக் கூசா
மலும் பயப்படாமலுங் கட்டிக்கொள்ளு
கிறவர்கள் தமக்கு நிந்தை அவமானமாய் ந
டந்து கொள்ளுகிறபடியால் அவர்களுக்கு
விசேஷ வரங்களை யருள அவர் யெப்படி ம
னங்கொள்வார்?

எத்தனையோ பெயர் தங்களுக்குச்
செபத்தில் பிரியமில்லையென்றும், அசட்
டை பராக்குகளுண்டாகின்றனவென்றும்
முறையிடுகிறார்கள். எத்தனையோ பெயர்
எவ்வளவு வேண்டிக்கொண்டபோதிலும்
ஒன்றும் அனுகூலமாகிறதில்லை யென்கிறார்
கள். இன்னும் சிலர் தங்களுக்குண்டா
கும் சோதனை தந்திரங்களைச் ஜெயிக்கக்
கூடவில்லையென்று அதைரியப் படுகிறார்
கள். அற்ப சொற்பப் பாவங்களைக் கட்
டிக் கொள்ள இவர்கள் வழக்கப்பட்டு அ
டிக்கடி அவைகளைக் கட்டிக்கொள்ள அஞ்
சமாட்டார்களேயானால் சர்வேசுரனுடைய
விசேஷ கிருபைக்கு இவர்கள் எப்படி பாத்
திரவான்களாவார்கள்? இவர்கள் ஆத்து
மம் தேவ இஷ்டப்பிரசாத அந்தஸ்திலிரு
ந்த போதிலும் அது காசவியாதி பிடித்த
ஒருவனுக்கு ஒப்பாகும். எப்படி யெனில்
காசவியாதி யுள்ளவன் வரவர பலவீனப்
பட்டு, உடம்பில் நல்ல இரத்தமின்றி, வெ
ளுத்து, எலும்புந் தோலுமாகி உயிர்துற
க்கும் நிலைமையில் இருப்பதுபோல, அற்
பப் பாவங்களைக் கட்டிக்கொள்ளும் ஆத்
துமமும் கொஞ்சங் கொஞ்சமாய்த் தேவ
இஷ்டப் பிரசாதத்தை யிழந்து, கடைசி
யாக அதை முற்றுமே இழக்கும் நிலைமைக்
கு வந்து விடுகிறது.

இதுவே- தேவ யிஷ்டப் பிரசாதத்தை
போக்கடித்துக் கொள்ளும் அபாயமானபா
தையிற் கொண்டு போய்ச் சேர்ப்பதே- அ
ற்பப் பாவத்தினால் ஆத்துமத்துக்கு நேரிடு
ம் பெரிய நஷ்டம். இப்பேர்ப்பட்ட நஷ்டம்
ஒரு ஆத்துமத்துக்கு இருவகையாய் வந்
து சம்பவிக்கிறதென்று வேத சாஸ்திரியா
ன அர்ச். தோமாஸ் என்பவர் கூறுகிறார்.
ஆத்துமத்திலுள்ள அற்பப் பாவங்களின்
நிமித்தம் அதற்கு அநுகூலமா யிருக்கும்
அநேக உதவி வரப்பிரசாதங்களை அருள
சர்வேசுரன் திருவுளங் கொள்ளாமற் போ
வதினால் அது பலவீனப்பட்டு, தேவ இஷ்
டப் பிரசாதத்தை சுலபமாய் யிழந்து போ
வது ஒருவகையாம். மற்றொரு வகையாவ
து: அடிக்கடி அற்பப்பாவங்களைக் கட்டிக்
கொள்ளும் வழக்கப் பழக்கத்தினால் ஆத்து
மம் வரவர சாவான பாவத்தைக் கட்டிக்
கொள்ளத் துணிவதேயாம். எவனும் ஒரு
சிங்கக் குட்டியோடு வெகு நாளைக்கு பழக
ஆசிக்க மாட்டான். ஏனெனில் அது வளர
வளர அதன் நகங்களும் பற்களும் உறுதி
பட்டு வருமல்லவா? இவைகளினால் அது
ஒரு வேளை யில்லாவிட்டாலும் இன்னொரு
வேளையில் அவனைப் பீறிக் கீறிக் காயப்
படுத்தி விடுமென்னும் பயத்தினால் அதை
அவன் தொலைத்துப் போட வழிபார்ப்பா
னன்றோ? இப்படித்தான் அற்பப்பாவங்க
ளும் நமது ஆத்துமத்துக்கு பொல்லாப்பை
வருவிக்கக் கூடுமாகையால், அவைகளை
விலக்கி நடக்க நம்மாலான பிரயாசைப்
படுவோமாக. அற்பப் பாவங்கள் தானே
யென்று சொல்லி அவைகளைக் கட்டிக்
கொள்ளத் துணிவது நமக்கு வெகு கே
டாய் முடியும். விலக்கப்பட்ட பழ விஷ
யத்தில் வினோதப் பிரியத்துக்கு ஏவாள்
இடங் கொடாம லிருந்திருந்தால் மனுக்
குலம் கெட்டுப் போயிருக்குமோ? யூதாஸ்
இஸ்கரியோத்திட மிருந்த பணவாசையை
அவன் துவக்கத்திலேயே அடக்க மூயலா
ததினால் அல்லவா தெய்வக்கொலைக்கு முத

லாய் அப்பணவாசை அவனை யுட்படுத்தி விட்டது?

ஆகையால் இசையாஸ் தீர்க்கதரிசி அழுகைக் கூக்குரலுடன் "அடிக்கடி அற்பப் பாவங்களைக் கட்டிக்கொள்ளுகிறவர்களே! ஐயோ, உங்களுக்குக் கேடு! முதலில் சாவானபாவத்தில் விழவும் அதன் பிறகு நரகத்தில் விழவும் உங்களைக் கட்டி இழுத்துக்கொண்டு போகும்படி ஒரு வடக் கயிற்றை உங்களுக்குத்தானே நீங்கள் பின்னிக் கொள்ளுகிறீர்கள்!" என்கிறார். அற்பப் பாவங்களை இவர் வடக் கயிற்றுக்கு ஒப்பனை யிடுவதின் காரணம் யாதெனில், அநேக கயிறுகளைச் சேர்த்துப் பின்னினால் அது ஒரு பலமான கயிறாகி எப்பேர்ப்பட்ட பாரத்தையும் இழுக்க உதவுவது போல, அநேக அற்பப் பாவங்கள் சேர்ந்து ஒரு சாவானபாவமாகா விட்டாலும் அவைகளெல்லாம் சேர்ந்து சாவான பாவத்துக்கு அகன்ற வழியாக்கி விடுகின்றன. சாவானபாவமோ நரகத்துக்கு வழியாயிருக்கிறது. இவ்வளவு நஷ்டத்தை நமக்கு அற்பப் பாவங்கள் வருவிக்கின்றமையால், அவைகளுக்கு நாம் அஞ்சி நடப்பது புத்தியாமென எல்லோருக்குந் தெளிவாகும். அர்ச். தெரேசம்மாள் ஒரு சமையத்தில் பரவசமானபோது சம்மனசானவர் ஒருவர் அவளை நரகவாயிலுக்கு அழைத்துக்கொண்டுபோய் "இந்த கிடுகிடு பாதாளத்தில் அதோ ஒரு சிறு இடம் காலியாயிருப்பதைப் பார். உன்னுடைய இளமைப் பிராயத்தில் நீ சில அற்பப்பாவங்களை விலக்கி யிராவிட்டால், நீ சாவான பாவங்களைக் கட்டிக்கொண்டிருப்பாய். அப்படி நீ சாவான பாவத்தைக் கட்டிக்கொண் டிருந்திருப்பாயே யானால், அதற்காக இந்த இடம் உனக்குக் கிடைத்திருக்கும்" என்றார்.

அற்பப்பாவங்கள் நமது ஆத்துமத்துக்கு இத்தனை கேடுபாடுகளை வருவிக்கக் காரணமாயிருப்பதை முன்னிட்டு நாம் அவைகளை எச்சரிக்கையாய் விலக்க முயலுவோமாக. சாவான பாவத்தில் மாத்திரம் விழாமலிருந்தாற் போதுமென்று சொல்லி, அற்பப்பாவங்களைக் கட்டிக்கொள்ளுகிறவர்கள் உத்தமதனத்தை யடையாமற் போவதோடு கூட சாவான பாவத்தைக் கட்டிக்கொள்ளும் ஆபத்திற்றான் இருந்து வருகிறார்களென்பது திண்ணம். ஆகையால் அடிக்கடி நல்ல பாவ சங்கீர்த்தனத்தினால் தாங்கள் கட்டிக்கொள்ளும் அற்பப்பாவங்களுக்குப் பொறுத்தலடைந்து, மீளவும் அப்பாவங்களுக்கு இரையாகாமலிருக்க பாவ சங்கீர்த்தனத்தின் பொழுது தாங்கள் செய்த பிரதிக்கினைகளில் நிலைத்திருக்க தேவானுக்கிரகத்தை இரந்து மன்றாடுவார்களாக.

(இன்னும் வரும்.)

---

# SHORT LIFE OF FATHER DAMIEN.

# தமியர்ன் சுவாமியாரின் சீவியச் சுருக்கம்.

(முன் தொடர்ச்சி.)

உலக சுக செல்வங்களைச் சற்றுங் கவனியாது கடவுளின் மகிமையையும் ஆத்துமங்களின் இரட்சணியத்தையும் பெரிதாக வெண்ணிய குசை தமியான் சுவாமியாருடைய பெருஞ்செயல் இது. தெள்ளறிவுடைய ஞானிகளும் சகல மனிதருமே இத்தகைய உதாரகுணத்தை மெச்சிக் கொண்டாடுவார்களென்பதற்கு சந்தேகமில்லை. அவர் அத்தீவை விட்டு பிரிய மாட்டேனென்னுந் தீர்மானம்பண்ணினார். வருங் கஷ்டங்கள் எவ்வளவு கொடியனவா யிருந்தபோதிலும் அவைகளை யெல்லாம் ஒரு பொருட்டாக வெண்ணாமல் அந்நோயாளிகளை பராமரிப்பதால் தமக்கு மவ் வியாதி வந்து மோட்ச பதவி சேருமளவும் அவர்களோடு சீவித்துவர எண்ணினார்.

மேற்றிராணியார் மேற்படி தீவிலிருந்து திரும்பிப்போனபின் தமியான் சுவாமியார் குஷ்ட வியாதியஸ்தரின் சீவியத்தைப் பரிசோதித்தபோது அது அவருக்கு மிகவும் பரிதாபத்திற்குரியதா யிருந்தது. தனிப்படுத்தப்பட்டு யாதொரு அதிகாரமுமின்றி, பந்து சனங்களால் கைவிடப்பட்டு, கூடிய சீக்கிரத்தில் பிரேதக்குழியை எதிர்பார்த்துக்கொண்டிருந்ததினால், இந் நோயாளிகள் பற்பல பாவாக்கிரமங்களைக் கட்டிக்கொண்டு நிர்ப்பாக்கியமான ஸ்திதியி லிருந்தார்கள். ஆதலால், தமது வருத்தப் பிரயாசங்களைச் சிறிதுங் கவனியாது, குஷ்டரோகிகட்கு வேண்டிய வுதவிபுரிந்து, அவர்களுடைய வேதனையை நீக்குவதிலேயே தமது காலமெல்லாஞ் செலவழித்தார். இதனால் தாமிருப்பதற்கு ஒரு சிறுவீடு கட்டவும் அவருக்கு நேரங்கிடைக்கவில்லை. அநேக நாள் ஒரு மரத்தின் நிழலே யவருடைய இருப்பிடமாயிருந்தது. அவரது புன் சிரிப்பான முகவசீகரமும், அன்பான சொற்களும், நோயாளிகளின் வருத்தத்தை வெகுவாய் நீக்கி, கடின இருதயமுள்ளவர்களையும் இளகச் செய்தன. தலைநகராகிய ஒனோலுலு பட்டணத்தில் குடியிருந்த ஐரோப்பிய பதிதர் இவருடைய பெருந்தன்மையை கேள்விப்பட்டு 120 பவுனும், வேறு சில நன்கொடைகளுங் கொடுத்தனுப்பினார்கள். இவைகளைக் கொண்டு சீக்கிரத்தில் தாமிருப்பதற்கு ஒரு வீடு கட்டி முடித்தார்.

தாமிருக்குந் தீவில் வேறு குருக்களில்லாததால் தாம் பாவ சங்கீர்த்தனஞ் செய்யவேண்டியபோது வேறு தீவிலிருக்குங் குருக்களிடத்திற்கு போவது வழக்கம். இதை யறிந்த அரசாங்கத்தார் இனியவர் அப்படி குஷ்டரோகமுள்ள தீவினின்று வரக்கூடாதென்றும், அப்படியொருவிசை வந்தால் மறுபடி யங்கே போகக்கூடாதென்றுங் கட்டளையிட்டார்கள். இதைக் கேட்டதுந் தமியான் சுவாமியார் திடாரிக்கத்தோடுஞ் சாந்தத்தோடும் தாம் அக்கட்டளைக்கு கீழ்ப்படியமாட்டோமென்றும்; தமது மேற்றிராணியாரைப் பார்க்கப்போகவும், தமது நோயாளிகட்கு வேண்டியவைகளை சேகரிப்பதற்கும் மேற்படி தீவை விட்டு வெளியே போவதற்கு தம்மையாருந் தடை செய்யக்கூடாதென்றும் மாறுத்தரம் அளித்தார். புகழ்ச்சிக்குரிய இவ்வுத்தரவை கேட்டு ஆச்சரியமுற்ற இராசாங்கத்தார்; அவருடைய போக்குவரவிற்கு தடை செய்யாம லிருந்ததுந் தவிர. சிலவருடங்கட்குப் பிறகு அவர் ஒனோலுலு தலைநகரில் வந்தபோது அரசன் இவரைத் தன்னரண்மனைக் கழைப்பித்து மிகவும் உபசரித்துப் புகழ்ந்து கொண்டாடினான்.

தண்ணீர்க் குறைவால் நோயாளிகள் கஷ்டப்படுவதைக் கண்டு தமியான் சுவாமியார் உடனே இராஜ உத்தியோகஸ்தருக்கு அறிவித்து அக்குறையை நிவர்த்தி செய்தார். குஷ்டரோகிகள் கூடியிருந்த குடிசைகளைச் சீர்திருத்தக் கருதி, தமது சிநேகிதருக்குக் கடிதமெழுதி, யவர்களுடைய தர்மத்தின் மூலியமாய் அநேக மர வீடுகளைக் கட்ட ஆரம்பித்தார். 1874ம் வருஷம் இவ்வேலையைத் தொடங்கி 1888 வருடத்திற்குள் 300 வீடுகட்குமேல் கட்டி முடித்தார். உணவிலும் உடுப்பிலும் நோயாளிகள் அனுபவித்த குறைகளை வெகுவாய் நீக்கினார். சரீரத்திற்கு வேண்டியவைகளை சேகரித்துக் கொடுத்து, அவர்களி னிருதயத்தை கவர்ந்திழுக்கத் தேடினார். தங்களுக்காக இவ்வளவு கஷ்டமெடுத்து உயிரையு மிழக்கத் தீர்மானித் துழைத்துவருங் குருவானவரை சனங்கள் வெகுவாய் நேசித்துவந்தார்கள்.

இதுவரையும் நிலையான கோவிலொன்றும் இத் தீவிலில்லாததால் தமியான் சுவாமியார் குஷ்டரோகிகள் கூடி செபஞ் செய்வதற்கும், திவ்ய பூசை காண்பதற்குந் தக்க ஒரு நேர்த்தியான ஆலயத்தைக்கட்டினார். தாய் தகப்பனில்லாப் பிள்ளைகளை பராமரிப்பதற்கு ஒரு ஸ்தலத்தையும், மரித்தவர்களை யடக்கஞ்செய்ய ஒரு விசாலமான கல்லறையையும், பிணப் பெட்டிகள் செய்து சொற்பவிலைக்கு விற்கும் ஒரு சபையாரையும் ஏற்படுத்தினார். இப் புது கல்லறையில் 1879 வருஷத்திற்குள் 1600 பிணங்கள் புதைக்கப்பட்டன. அவர் தமது சகோதரனுக்கு எழுதிய கடிதத்தில் கூறுகிறதாவது: "நான் கல்லறைக்காரனும் தச்சனுமாயிருக்கிறேன். நேரமிருந்தால் பிணப்பெட்டி செய்கிறேன். இல்லாவிடில் அவர்களுடைய சீலைகளால் மூடிப் புதைக்கின்றேன்" என்பதே. பொழுது விடிவதற்குமுன் திவ்வியபூசைமுடித்துவிட்டு தெருக்களிலும்சந்துபொந்துக்களிலும் சென்று கண்ணிற்குத் தென்படும் குஷ்டரோகிகளை பராமரித்து அவர்கட்கு ஆறுதல் சொல்லுவதும், மரணத்தருவாயிலிருப்பவரோடு நெடுநேர மிருந்து செபித்து, அவர்களுக்கு கடைசித் தேவத்திரவிய அநுமானங்களை தருவதும், கைவிரல்களை யிழந்து ஆகாரம் புசிக்கக்கூடாதவர்களுக்கு போசனம் ஊட்டி வருவதும் இவருடைய அநுதின தொழில்.

சிறந்த புண்ணியசீலரான இவரது சீவியத்தைக் கண்ட அநேக பதித நோயாளிகளும் சத்திய திருச்சபையி லுட்பட்டார்கள். இவ்விஷயத்தைப்பற்றி தமது அண்ணனுக் கெழுதிய கடிதத்தில் பின்வருமாறு விவரித் துரைக்கின்றார். "இங்கு அநேக பதிதர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் உண்மையைக் கண்டறிந்த பின்னர் தான் மரிக்கிறார்கள். இப்படி இவர்கள் நல்ல மரண மடைவதைக் காணும்போதெல்லாம் என் மனம் சந்தோஷத்தால் பூரிக்கின்றது. நோயால் வருந்து மென் சனங்கள், தேவநற் கருணையை யேந்திச் சுற்றுப்பிரகாரம் வரும் எனக்கு முன்

னும் பின்னுமாக பயபக்தியோடு போவதைக் காணும் போதும்; முக்கியமாய் பாதவிரல்களை யிழந்தவர்கள் முழங்கால்களால் நகர்ந்து செல்லுவதைப்பார்க்கும் போதும், அவர்களெல்லோரும் உரத்த சத்தமாய் சர்வேஸ்பரனை ஸ்துதிப்பதைக் கேட்கும்போதும் என் னிருதயம் சந்தோஷ மிகுதியால் துள்ளித் துடிக்கின்றது. நான் பிரசங்கஞ் செய்யும் போது மற்ற குருக்களைப்போல 'என் பிரியமான சகோதரரே'' வென்று சொல்லுவதற்குப் பதிலாக ''குஷ்டரோகிகளாகிய நாமெல்லோரும்'' என்னும் வார்த்தைகளை யுபயோகித்து வருகின்றேன். சனங்கள் என் நிர்ப்பாக்கியத்தைக் கண்டு பரிதபிக்கின்றார்கள். நானோ என் தொழில் பெரும் பாக்கிய முடையதென் றெண்ணுகிறேன்.'' பதினொரு வருடமும் மேற்படி வியாதியினின்று காப்பாற்றப்பட்டபின் இவரும் குஷ்ட நோய் கண்டு மரணமடையும்படி சர்வேசுரன் சித்தமானார்.

1885-ம் வருடம் அவருடைய பாதத்தில் குஷ்டரோகத்தி னடையாளங்கள் காணப்பட்டன. வைத்தியர் இதைப்பற்றி உறுதிப்படுத்தியபின் தமியான் வெகு சந்தோஷ முடையவரானார். ஏனெனில் இந்த வியாதியின் காரணத்தால் அவர் மற்ற குஷ்டரோகிகளோடு அதிக பட்சமாய்ப் புழங்கி அவர்களுடைய ஆத்துமங்களை ஈடேற்றலா மென்பதினாலேயே. தம் தமயனுக்கவர் அப்போதெழுதிய கடிதமிது: ''எனது வியாதி இன்னதென்று யான் நன்றாய் அறிந்திருக்கின்றேன். சர்வேஸ்பரனின் சித்தத்திற்கு என்னை முழுதுங் கையளித்து, சாந்தமாயும் என் ஜனங்கள் மத்தியில் வெகு சந்தோஷமாயுமிருக்கிறேன். என் னாத்தும ஈடேற்றத்திற்கு வேண்டியதை கடவுளொருவர் மாத்திரமேயறிவார். வியாதிக்காரனாகிய எனக்காக வேண்டிக்கொள்ளுங்கள் எனது சனங்களுக்காகவும் மன்றாடுங்கள். உங்கள் அனைவரையும் என் ஜெபத்தில் மறக்கமாட்டேன்.'' என்பதே. ஆ! என்ன அரிதான எண்ணங்கள்! எப்படி யவரது மனம் பொறுமையையுஞ் சாந்தத்தையும் பொழிகின்றன! தமது நேச சனங்களை விட்டு வேறு நாட்டிற்குப் போய் தமது நோயினின்று குணப்படுவதைப் பார்க்கிலும் அவர்களோடு மரித்தங்கேயே யடக்கஞ் செய்யப்படுவது அவருடைய பிரியம்.

தமியான் சுவாமியாருடைய ஆச்சரியத்திற்குரிய பெருந் தன்மையைக் கேள்வியுற்று அனேக பேர்போன பிரயாணிகள் மேற்படி தீவில் வந்து அவரோடு சம்பாஷித்து அதிசயப்பட்டனர். இவரது முன் மாதிரிகையால் தூண்டப்பட்டு அனேக குருக்களும் மூன்று கன்னியாஸ்திரீகளும் இவரது உத்தம தொழிலில் இவருக்கு உதவிபுரிய வந்திறங்கினார்கள். அங்கிலேய பிரயாணிகளிருவர் தமியான்சுவாமியாருடைய உதார குணத்தை பத்திரிகைகளில் வெகுவாய்ப் புகழ்ந்து பேசியதுடன் மற்ற வெகுமதிகளோடு 1000 பவுனும் தருமத்திற்காக அவருக்குக் கொடுத்தனுப்பினார்கள். இத்தொகையைக் கொண்டு ஒரு கோவிலைக் கட்டத் தலைப்பட்டார். ஆனால் நாளாவட்டத்தில் அவருடைய உரு குலைந்து தேகப் பலயீன மடைந்து அவருக்கு சாவு நெருங்கி வந்தது.

அவர் தம் சகோதரனுக்கு வரைந்த கடைசி கடிதம் அவரது கருத்துக்களை துலக்கமாய் காண்பிக்கின்றன.—''நான் இதுவரையுஞ் சந்தோஷமாயுஞ் சமாதானமாயு மிருக்கின்றேன். வியாதியால் வெகுவாய் வருத்தப்பட்டாலும் சர்வேஸ்பரனுடைய சித்தம் நிறைவேற வேண்டுமென்பதே யென தெண்ணம். தினந்தோறும் யான் பூசை செய்ய சக்தியற்றவனாயிருக்கின்றேன். யான் உங்களி லொருவரையும் என் ஜெபத்தில் மறக்கிறதில்லை. நீங்களும் எனக்காக மன்றாடிவாருங்கள். மற்றவர்களையும் எனக்காக மன்றாடும்படி செய்யுங்கள். நான் உயிரோடிருக்குமளவும் பொருமையா யிருக்கும் வரத்தை நன்மை நிறைந்த சர்வேஸ்வரன் எனக்கு அளித்து கடைசியாக நல்ல மரணமடையும் பாக்கியத்தை தந்தருளும்படியாக அநுதினமும் சர்வேஸ்பரனைப் பார்த்து மன்றாடி வாருங்கள்'' இந்தக் கடிதமெழுதிய இரண்டு மாதத்திற்குப் பிறகு ஏப்பிரல் மாதம் 10-ம் தேதி தரும சீலரான தமியான் சுவாமியார் குஷ்ட வியாதியின் கொடூரத்தால் பீடிக்கப்பட்டு, சகிக்கொணா வாதை யுற்று மரணமடைந்து தமது புண்ணியகிரியையால் மோட்சானந்த பதவிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்.

உண்மையாகவே இவர் சுயநலங் கருதாது பிறர் நலங் கருதி மரித்த வேதசாட்சி. இவரது சீவியத்தை வாசிக்கும் நாமும் சர்வேஸ்வரனுடைய அதிக மகிமைக்கும், பிறர் நன்மைக்கு நமது அந்தஸ்துக்கு தக்கவாறு வருத்த கஷ்டங்கட் கஞ்சாது உழைத்துவர முயலவேண்டும். இதுவே பெருந்தன்மை.

ச. தா. செல்வராயன்.



# CHRISTIAN DOCTRINE.

## ஞானோபதேசம்.

### பத்துக் கற்பனையின்பேரில்

### 4-ம் பாடம்

### முதற் கற்பனைக்கு விரோதமான பாவங்கள்.

### வீணாசாரம் அல்லது குருட்டுப் பக்தி.

(முன் தொடர்ச்சி.)

---

4. ஒரு ஜோசியன் செய்த அதிசயம்.—லெமுவான் என்ற ஒருவன் ஜோசியம் சொல்லி வயிறு வளர்த்துவந்தான். தன் மந்திர தந்திரத்தால் பெரும் பணத்தொகை உண்டாக்கும் சக்தித்தனக்கு உண்டென்று பிதற்றி வருவான். இவனுடைய கபடா வார்த்தைகளால் ஏழையான மிலேச்சன் ஒருவன் ஏய்க்கப்பட்டு, தன் வீட்டிலுள்ள தட்டு முட்டு, நகை நட்டு முதலியவைகளை விற்று 110 ரூபாயை லெமுவான் கையில் கொடுத்து, தன்னைத் தனவந்தனாக்கும்படி கேட்டுக்கொண்டான். பிறகு ஒரு வெள்ளாட்டுக்கடாவைக் கொண்டுவரச் சொல்லி, அதைவெட்டி அதன் இரத்தத்தால் ஏதோ சாங்கியஞ் செய்வதுபோலக் காட்டி, குறிக்கப்பட்ட நாளில் தான் இருக்கும் இடத்துக்கு வந்தால், ஆசித்த பணத்தை பெற்றுக் கொள்ளலாம் என்றதின்மேல், ஷை ஏழையும் குறிக்கப்பட்ட நாளில் ஜோசியனிடம் போனபொழுது, அவனைக் காணாதபடியால், சங்கதியை இவன் சர்க்காருக்கு அறிவித்தான். லெமுவான் போலீசாரால் தேடிப் பிடிக்கப்பட்டு, இரண்டு வருஷத்துக்கு கடின காவலில் வைக்கப்படும்படித் தண்டிக்கப்பட்டு 110-ரூபாயையும் ஷை ஏழைக்கு உத்தரித்துப் போடும்படி தீர்மானம் பெற்றான்.

Guillois.

5. ஓர் ஆட்டுமந்தையின் கதை.—ஓர் ஆட்டுமந்தையை மேய்த்துக்கொண்டிருந்த இடையரிடம் சில அந்நியர் சென்று, தாங்கள் சொல்லுகிறபடி செய்தால், மந்தை மேய்க்க இத்தனை ஆட்கள் அவசரமில்லையென்று சொன்னதைக் கேட்ட இடையர் சந்தோஷித்து, அது என்ன உபாயமென்று கேட்டார்கள். அப்பொழுது அந்நியர் ஒரு அர்ச்சியசிஷ்டவருடைய சிறு சுரூபத்தைக் காட்டி, ''இதை ஒரு கோலுக்குக் கட்டி மைதானத்தில் நட்டு ஆடுகளை ஓட்டினால், ஆடுகள் சிதறிப்போகாமல் கும்பலாய் மேய்ந்துகொண்டிருக்கும். துஷ்ட மிருகங்களும் அவைகளை அண்டாது'' என்றதின்மேல், கபடற்ற அந்த இடையர் அந்நியர் சொன்னதை நம்பி அந்த சுரூபத்தை விலைக்கு வாங்கி, ஒரு கோலுக்குக் கட்டி மைதானத்தில் நட்டார்கள். ஆடுகள் வழக்கம்போல் அங்கேயே மேய்ந்து கொண்டிருந்தன. மறுநாளும் அவ்வாறே செய்து தங்கள் வீட்டுக்குப்போய் இரண்டுமணி நேரத்துக்குப்பின் காட்டுக்குப் போனபோது, ஆடுகள் மேய்ந்துகொண்டிருந்தன. மூன்று நாள் ஆடுகளை மைதானத்தில் ஓட்டிவிட்டு வீட்டுக்குப்போய் விட்டார்கள். உருமவேளையில் காட்டுக்குப்போய் ஆடுகளைப்பார்க்கப் போன பொழுது ஒரு ஆடுமுதலாய் கண்ணுக்குத் தென்படவில்லை. ஷை அந்நியர் காட்டில் ஒழிந்திருந்து இடையர் வீட்டுக்குப்போன சமையம் பார்த்து மந்தையை ஓட்டிக்கொண்டு போய்விட்டார்கள். இப்பேர்ப்பட்ட விஷயத்தைப்பற்றி நாடோறுங் கேள்விப்பட்டு வருகிறோம். பிள்ளைகளே, வஞ்சகர் பிதற்றுங் கதையை நம்பாதேயுங்கள். வேதவாக்கியங்களையும் அர்ச்சியசிஷ்டவர்களுடைய சுரூபங்களையும் காட்டி, இப்படி அப்படிச் செய்தால் வியாதி தீறும், பிள்ளை உண்டாகும், வியாச்சியத்தில் செயமுண்டாகும், பில்லிசூனியம் அற்றுப்போம் என்று பிதற்றும் வார்த்தைகளை நம்பாதேயுங்கள். இப்பேர்ப்பட்ட விஷயங்களை பங்கு ஸ்வாமியாருக்குத் தெரியப்படுத்தினால் நலமாயிருக்கும்.

Gibson.

6. குருட்டுப் பத்தியுள்ள கிழவி.—விருத்தாப்பியமான ஓர்கிழவி கடின வியாதியாய் விழுந்தாள். அவளுடைய குமாரத்தி வியாதிக்காரியை அண்டி, ''அம்மா, நீங்கள் வியாதியாயிருக்கிறீர்களே! சுவாமியாரை அழைத்து வருகிறதா?'' என்றாள். அதற்குக் கிழவி: வேண்டாம் வேண்டாம், நான் இதற்குள் சாகமாட்டேன்; சும்மா இரு'' என்றாள். தன் தாய்க்கு வியாதி அதிகரிப்பதைக் கண்ட மகள் வியசனப்பட்டு அயல் வீட்டுக்காரரிடம் போய் தன் சங்கடத்தை வெளிப்படுத்தி, தன் தாயிடம்

போய் குருவானவரை வரவழைத்து கடைசித் தேவத்திரவிய அனுமானங்களைப் பெற்றுக்கொள்வது நலமாயிருக்குமென்று சொல்லும்படி கேட்டுக்கொண்டாள். அவ்வாறே அவ்விஸ்திரீ கிழவி கிட்டபோய் "பாட்டி எப்படியிருக்கிறாய்? குருவானவரை வரவழைக்கிறதர்?" என்றதைக்கேட்ட கிழவி, "சாகப்போகிறவர்களுக்குத் தானே அவஸ்தைவேண்டியது. நான் இன்னும் 12-வருஷம் பிழைப்பேன். நேற்றுத்தானே ஒரு குயில் அடுத்த மரத்தில் உட்கார்ந்து 12 தடவை கூ, கூ என்று கூவிற்று; யாராகிலும் வியாதியாயிருக்கும்போது குயில் எத்தனைவிசை கூவுமோ அத்தனை வருஷம் உயிரோடு இருப்பார்கள் என்பது உனக்குத்தெரியாதா அடி?" என்றாள். உடனே கிழவியினுடைய குமாரத்தி குருவானவருக்கு ஆள் அனுப்பினாள். ஸ்வாமியார் வாசற்படியில் கால்வைக்கவே, கிழவி பேச்சு வார்த்தையற்று சில நேரத்துக்குப் பின் உயிர்விட்டாள். Lohner.

## 5-ம் பாடம்.

### முதல் கற்பனைக்கு விரோதமான பாவம்.

### தேவதுரோகம்.

---

சர்வேசுரனுக்கு வசீகரம் பண்ணப்பட்ட வஸ்துக்களையாவது, மனிதரையாவது இடத்தையாவது தூஷித்து அவமரியாதை அல்லது அசூசை செய்வது தேவதுரோகம் என்னப்படும். ஆகையால், கோவில், கல்லறை, அர்ச்சியசிஷ்டவர்களின் சுரூபம், திருப்பண்டம் இவைகளை அவமரியாதைசெய்வதும், குருக்கள், கன்னியர் முதலியவர்கள் மேல் கை ஓங்குவதும், திவ்விய நற்கருணையை பாவத்துடன் வாங்குவதும் தேவதுரோகமாகும்.

**1. எலியதோருஸ் சம்மனசுக்களால் அடிபடுகிறான்**-முன்காலத்தில் சலமோன் கட்டின தேவாலயத்தில் ஏராளமான திரவியமிருப்பதாக கேள்விப்பட்ட சீரியா தேசத்து அரசன் அந்தத்திரவியத்தை கொள்ளையடித்துக்கொண்டு வரும்படி எலியதோருஸ் என்பவனை ஜெருசலேம் பட்டணத்துக்கு அனுப்பினான். துஷ்டனான எலியதோருஸ் தெய்வபயமின்றி தேவாலயத்தில்பிரவேசித்து கொள்ளையடிக்க பிரயத்தனப்படும்பொழுது, சம்மனசுக்கள் குதிரைமேலேறின பிரகாரம் அங்கு காணப்பட்டு, அவனை மிலாறால் கொரமாய் அடித்து குத்துயிராய் விட்டுவிட்டார்கள். பார்த்தீர்களா பிள்ளைகளே, கோவில் பண்டங்களைத் திருடுவது எவ்வள பெரியபாவமென்று?

2-ம் மக்கபேயுஸ்.

**2. குருவை அடிக்க ஓங்கினவன் கை.**—பூர்வகாலத்தில் ஜெரபாம் என்பவன் இசரேலித்தாரை அரசாக்ஷி செய்த காலத்தில், சத்திய தேவனை மறந்தவனாய் பொன்கன்றுகுட்டி செய்வித்து அதை வணங்கி வரும்படி பிரஜைகளுக்குக் கற்பித்தான். ஆதோன் என்னும் தீர்க்கதரிசி சர்வேசுரனால் அனுப்பப்பட்டு, ஜெரபாமுடைய துர்ச்செய்கையைக் கண்டிக்க, அவனைச்சபித்தக்ஷணமே ஷிபொன்சிலை வைக்கப்பட்டிருந்த பீடம் தகர்ந்துவிழுந்தது. இதைக்கண்ட ஜெரபாமுக்கு மூர்க்க கோபமுண்டாகி தீர்க்கதரிசியை அடிக்க கையோங்கின உடனே, அவனுடைய கை இரும்பு கம்பிபோல் மரத்துப்போனது. தீர்க்கதரிசியானவர் அவன்மீது இரக்கங்கொண்டு அவனுக்காகச் சர்வேசுரனைப் பார்த்து வேண்டிக்கொள்ளவே, அவன் அற்புதமாய்ச் சொஸ்தம் அடைந்தான்.

பிள்ளைகளே! சர்வேசுரனுடைய மனிதராகிய குருக்கள், துறவிகள் முதலியவர்களுக்கு பயந்து அவர்களை சங்கையாய் நடத்துங்கள். சில கிறிஸ்துவர்கள், தங்கள் ஆகாத நடத்தையைப் பற்றி குருக்களால் கண்டித்து தண்டிக்கப்படும்பொழுதும், கலியாண விஷயமாகவும், யாதொரு வழக்கைப் பற்றியும் இன்னும் வேறு சங்கதியை முன்னிட்டும் குருக்கள்மேல் வைராக்கியங்கொண்டு அவர்களை நிந்தித்து தூஷணித்து சிலவிசை அவர்களை அடிக்கவும் துணிகிறார்கள். இது தேவதுரோகம். சர்வேசுரன் இப்பேர்ப்பட்ட வர்களையும் இவர்கள் குடும்பத்தையும் இவ்வுலகத்தில் முதலாய் பழிவாங்காமல் போகார்.

மூன்றாம் அரசர் ஆகமம்.

**3. தேவதுரோகியின் துர்மரணம்.**—பிரான்சில் குழப்பமுண்டான காலத்தில் வழி நடந்துபோன சில சிப்பாய்கள் மழையினிமித்தம் அருகாமையி லிருந்த ஒரு கோவிலில் அடைக்கலஞ் சென்றார்கள்.



இவர்கள் மகா போக்கிரிகளும் எந்தப்பாவத்துக்கும் அஞ்சாத பாதகர். இவர்களில் ஒருவன் சாராயக்கடைக்கு ஓடிப்போய் ஒரு ஜாடி சாராயம் கொண்டுவந்தான். அதை வார்த்துக் குடிப்பதற்கு யாதொரு ஏனம் இல்லாதபடியால், அவர்களில் இன்னொரு துஷ்டன் திவ்விய நற்கருணைப் பெட்டியை உடைத்துத் திறந்து ஒருபாத்திரத்தை எடுத்து அதில் சாராயம் வார்த்துக் குடித்த க்ஷணமே அந்த நிர்ப்பாக்கியன்செத்துவிழுந்தான். இதைக் கண்ட மற்ற துஷ்டர் பயந்து நடுங்கி இது தேவ கோப ஆக்கினையென்று உறுதியாக நம்பி, செத்தவன் கையிலிருந்த பாத்திரத்தைப் பிடுங்கப் பட்ட பிரயாசையெல்லாம் வியர்த்தமான்படியால் பக்கத்துக் கோவிலி லிருந்த குருவானவருக்கு இந்த சங்கதியைத் தெரியப்படுத்தவே, அவரும் தாமதியாமல் அங்கு சென்று செத்தவன் கையிலிருந்து பாத்திரத்தை எளிதில் எடுத்துக்கொண்டார். அந்தப் பாதகர் மனந்திரும்பி தாங்கள் கட்டிக்கொண்ட தேவ துரோகத்துக்குப் பரிகாரஞ் செய்தார்கள். Lassus.

(இன்னும் வரும்.)

---

## CHRISTMAS STORY.

## சுவாமி பிறந்த திருநாள் கதை

அல்லது

உரோமான் கோவிலுக்குப் போகாதே.

மூன்றாம் பிரிவு

---

### முதல் அதிகாரம்.

### பீற்றர் போதகர் அளித்த ஆசீர்வாதம்.

பவுல் போதகர் சத்திய வேதத்தில் சேர்ந்தபின், கத்தோலிக்கு வேத கட்டளைப் பிரகாரம் பிரமாணிக்கமாய் நடந்து வந்தார். காலைமாலை தோறும் தம் குடும்பத்துடன் செபஞ் செய்து, காலை தவறாமல் திவ்விய பூசை கண்டு வருவார். ஞாயிற்றுக்கிழமைகளிலும் பிரதான திருவிழாக்களிலும் பாவசங்கீர்த்தனம் செய்து, நன்மை வாங்குவார். இவர் விஸ்வாசநாயகருடன் வேத தர்க்கம் செய்ததற்குமுன், தான் விட்டுப் பிரிந்த சத்திய வேதத்தைப் பற்றி ஆழ்ந்து நினைத்தவரல்ல. ஆனால் வேதத்தைப் பற்றிய சம்பாஷணைகள் நடந்த காலத்தில், விஸ்வாச நாயகர் எடுத்துக் காட்டும் பதிதமத தவறுகளையும், கத்தோலிக்கு வேத படிப்பினைகளையும் கேட்கையில் தான் தவறினதாக அறிந்துகொண்ட அவருடைய மனச்சாக்ஷி முட்போல அவர் இருதயத்தை குத்தி வாதிக்கும். அப்போது அவர் மனக் கலக்கத்துக் குள்ளாகி, உள்ளத்தில் சங்கடப்பட்ட போதிலும், அதை வெளிக்குக் காட்டாமல், எதிரியின் நியாயம் சரியானதல்லவென்றும், தான் சொன்னதே உண்மையானதென்றும் சாதிப்பார். தன் இருதயத்தில் தோன்றும் ஞானப்பிரகாசத்தைக்கண்டு அதின்படி நடக்க அவருக்கு அப்போதைக்கப்போது மனமுண்டான போதிலும் தன் பெண்சாதிக்குப் பயந்து பின்வாங்கினார். தன் பெண்சாதியானவள் புரோடஸ்டாண்டு மதத்தில் வைராக்கிய முள்ளவளா யிருப்பதாலும், அவளுடைய சகோதரன் சீனியர் பாஸ்டராயிருப்பதாலும், தான் தன் முன்னோருடைய வேதத்தில் சேருங்காலத்தில், அவள் தன்னுடன் கத்தோலிக்கு வேதத்திலுட்படாமல் தனக்குப் பெரும் இடஞ்சலா யிருப்பாளென்றும் பயந்து, வேத சந்தேகங்களாலும் பீடிக்கப்பட்டு, மனச் சங்கடங்களுக் குள்ளாயிருந்தார். இது நிற்க, தன் நிலபல மெல்லாம் ரூத் பேரால் பட்டா செய்யப்பட்டிருப்பதாலும், அவள் பேரால் கடனுக்கு பணம் கொடுத்திருப்பதுமன்றி பாங்கிலும் பணம் கட்டிவைத் திருப்பதாலும், தான் மாத்திரம் புரோடஸ்டாண்டு மதத்தை விட்டு சத்திய வேதத்தில் சேர்ந்தால் பிச்சைக்காரனாக வேண்டுமே என்பது முதலிய எண்ணங்களினால் அதைரியமுற்று அலைக்கழிக்கப்பட்டு வருவார்.

இரா வேளையில், இக்கலக்கத்தால் வெகு நேரம் நித்திரை யின்றி, விஸ்வாச நாயகர் சொன்ன நியாயங்கள் தம் ஞாபகத்துக்கு வரும்பொழுது தாம் செத்தபின் தம்கதி என்னவாகுமோ வென்று அச்சபயங் கொள்வார். சாகும்பொழுது வேதத்தை மாற்றிக் கொள்ளக் கூடாதா வென்று நினைத்து, சற்று ஆறுதல் கொள்வார். ஆயினும் அவர் இருதயத்தில் மனச் சந்தோஷமும் சமாதானமும் வெகுவாய் குறைபட்டிருந்தன. ஆனால் தன் மனைவியாகிய ரூத்தம்மாள் புரோடஸ்டாண்டு கோவிலில் கால்வையேன் என்று சொன்ன வார்த்தை போதகர் காதில் விழுந்த போது, புண்ணாயிருந்த அவர் மனத்தில் சந்தோஷமும் ஆறுதலுமுண்டாகி, அன்றிரவெல்லாம் சர்வேஸ்வரனுக்குத் தோத்

திரஞ் செய்து, குருத்தோலை ஞாயிறு வாரமன்று தன் சபையோருக்கு கடைசிப் பிரசங்கஞ் செய்து, தான் வேதத்தை மாற்றிக் கொள்ள இருக்கும் எண்ணத்தை அவர்கள் கண்டுபிடியாத விதமாய் அறியச் செய்து, அன்றையதினமே தம்மை தமது குடும்பத்துடன் சத்திய வேதத்தில் சேர்த்துக் கொள்ள ஏற்பாடு செய்தார்.

அர்ச்சியசிஷ்ட வாரத்தில் போதகருக்கு பல துன்ப துரிதங்களுண்டான போதிலும், அவர் அதனால் அதைரியங் கொண்டவரல்ல. அவரது சபையைச் சேர்ந்தவர்களில் சிலர், இவர் தன் மனச் சாக்ஷியுடன் செய்வதால் தவறல்லவென்பார்கள். மாசம் மாசந் தனக்கு வரும் சம்பளத்தையும், வேறு கட்டணங்களையும் விட்டுவிட்டு யாதொரு சம்பாதனையும் அகப்படாத ரோமான் மதத்தில் என் சேரப் போகிறார்? யாதோர் மேலான கருத்தால் ஏவப்பட்டு, இந்நஷ்டத்துக்குள்ளாகு மனிதனை நிந்திப்பதிலு மவரைப் புகழுவதே நியாயமென்பார்கள்.

ஆனால், வேறு சிலர்: இவன் கபடன், மிஷன் பணத்தை வேண்டிய மட்டும் தின்றபின். உரோமான் மதத்தில் சேரப்போகிறான்; இவன் மெய்யாகவே குருத்துரோகியான யூதாஸ் என்று சொல்வார்கள். இப்பேர்க்கொத்த இழிவுக்குரிய வார்த்தைகள் அவர் காதில் விழும் பொழுது; "மெய்தான், சத்திய வேதத்தை மறுதலித்து, வயிற்றுக்காக புரோடஸ்டாண்டு மதத்தில் சேர்ந்த பொழுது யூதாசைப் போல நடந்தேன். ஆனால் யூதாசைப்போல என் துர்க்கருத்தில் நிலை கொள்ளாமல் என் இரக்கமுள்ள கர்த்தரைத் தழுவத் தீர்மானித்திருப்பதால், அவரே என்னை மன்னிப்பாரென்று உறுதியாய் நம்பியிருக்கிறேன்" என்று தமக்குள் சொல்லிக் கொள்வார். தமது சபையாரில் சிலர் தமது வீட்டுக்கு வந்து, தமது தீர்மானத்தை மாற்றிப் போடும்படி கேட்டபோதிலும் போதகர் சற்றேனும் மனந் தளராதிருந்தார்.

ரூத்தம்மாளுடைய தமயனுக்கு மிஷனெரி பாதிரியார் தந்தி கொடுத்து, துரிதமாய் புறப்பட்டு வரும்படி கேட்டுக் கொண்டதன்மேல், பீற்றர் என்னும் பெயர் கொண்ட போதகர் பெரிய வியாழக்கிழமை யன்று அவ்வூருக்கு வந்து சேர்ந்தார். மிஷனெரியைக்கண்டுபேசினபின் பவுல் போதகர் வீட்டுக்குப் போனார். அந்நேரத்தில் ரூத்தம்மாள் மாத்திரம் வீட்டிலிருப்பதைக் கண்டு: பவுல் எங்கே? என்றார். அவர் வெளியே போயிருக்கிறார், சீக்கிரத்தில் வருவார் என்றாள். ரூத்தம்மாள் தன் தமையனார். தனக்கு எழுதாமல் வந்ததைப் பற்றியும், கோப முகத்துடனிருப்பதையுங் கண்டு, என்னவோ துர்க்காலங் கிட்டியிருக்கிறதென்று மனதில் எண்ணங் கொண்டு: உட்காருங்கள் அண்ணா, என்று சொல்லி நாற்காலியைக் கொண்டு வந்து போட்டாள்.

பீற்றர்.— குழந்தைக்கு சௌக்கியந்தானா ரூத்?

ரூத்.—மனிதர் உதவி இல்லாவிட்டாலும், தேவ உதவியால் சுகந்தான் அண்ணா!

பீற்.-நீ கடிதமெழுதினபோது நான் வராதபடியால் அதை நீ யின்னம் மனதில் வைத்திருப்பதாகத் தெரிய வருகிறது.

ரூத்.-புலியிலுங் கிலி பெரிதென்பது போல் வியாதியைப் பற்றிய பயத்தால் நீங்கள் பின்னிட்டதாக நினைத்தேன்.

பீற்.-அது மாத்திர மல்ல: மிஷனில் பல வேலையிருந்ததைப் பற்றியும் வர சந்தர்ப்பப்படவில்லை.

ரூத்.-இருக்கலாம்.

பீற்.-(எழுந்து, சுவற்றில் மாட்டியிருக்கும் படங்களைப் பார்த்து) இது என்ன படம் ரூத்?

ரூத்.-அது எங்களையும் எங்கள் குழந்தையையும் இரக்ஷித்த மாதாவின் படம்.

பீற்.-என்ன? குருட்டுப் பத்தியுள்ள உரோமானரைப் போல் பேசுகிறாய்?

ரூத்.-குருட்டு பத்தியாலல்ல, கண்ணுக்குண்மையான அறிவால் பேசுகிறேன்.

பீற்.-என்ன ரூத்? விடுகதை போடுகிறாப் போலிருக்கிறதே!

ரூத்.-இது விடுகதை யல்ல அண்ணா- உண்மையாய்ப் பேசுகிறேன்.

பீற்.-விக்கிரகாராதனை உன் வீட்டில் எப்படி வந்தது?

ரூத்.-என் வீட்டில் அதன் நாமதேய முதலாய் வராது; ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்?

பீற்.-ரோமானர் படத்தைப் பார்த்துதான்.

ரூத்.-உரோமானருடைய படமிருப்பதால்தானா விக்கிரகாராதனைக்காரரென்று சொல்லுகிறீர்கள்.? அதோ பாருங்கள்—இராசா, இராணி, நமது தாய் தகப்பனுடைய படங்கள், நமது மிஷனெரி, அவருடைய துரைசானி படங்கள் கூட தொங்குகின்றன. அவையெல்லாம்



விக்கிரகாராதனைப் படங்களாகாமல், ஒரே ஒரு உரோமான் படந்தானா விக்கிரகாராதனைப் படமாய் விட்டது.?

பீற்.—அது இருக்கட்டும். ஒருவன் தெரிந்துந் தெரியாமல் செய்த குற்றத்தை மனதில் வைத்துக்கொண்டு பழிவாங்குவது கிறிஸ்டியனுக்குத் தகுமா?

ரூத்.-யாரை நான் பழிவாங்கினேன்?

பீற்.-நீ யாரையாவது பழிவாங்கினாயென்று நான் சொல்லுகிறதில்லை. ஆனால் ஒருவனுடைய சொற்பப் பிசகைப் பாராட்டுவது ஞாயமா என்கிறேன்.?

ரூத்.-நான் யாருடைய பிசகையும் பாராட்டவில்லையே.

பீற்.-குழந்தை வியாதியாயிருந்த போது மிஷனெரி வந்து குழந்தையை சந்திக்க வில்லையென்று நீ அவர் மட்டில் கோபங் கொண்டது பெரும் பிசகு. அவர் எனக்குத் தெரிந்த மட்டும், மெத்த நல்ல துரை; அவருடைய துரைசானியோ பயங்காளி......அதைப்பற்றி, அவர் உன் குழந்தையை வந்து பார்க்க வில்லையே யன்றி உங்கள் பேரில் கோபங் கொண்டு அவர் வரவில்லையென்று எண்ணுவது பிசகு.

ரூத்.-துரைக்கு பயமிருந்தாலும் துரைசானிக்கு பயமிருந்தாலும் யாருக்கு என்ன? அவருடைய பயத்தையும் தைரியத்தையும் பற்றி நான் யாரோடும் பேசினவ ளல்லவே.

பீற்.-ரூத், ஒருவரொருக்கு மன்னிப்பு கொடுக்க வேண்டுமல்லவா? அப்படியிருக்க சொற்ப காரியத்தை யெல்லாம் பெரிதாக எண்ணி அதற்காக பிறர்மேல் அடஞ்சாதிப்பது உன்னைப் போல அறிவுள்ளவர்களுக்கு அழகாகுமா?

ரூத்.-நீங்கள் சொல்வதன் பயன் எனக்கு விளங்கவில்லை அண்ணா.

பீற்.-மெய்தானா?

ரூத்.-மெய்தான்.

பீற்.-பாதிரியார் குழந்தையை வந்து பார்க்க வில்லையென்று நீயும் உன் புருஷனும் ரோமான் மதத்தில் சேரப் போகிறது வாஸ்தவமா, அல்லவா?

ரூத்.-அது பெரும் பொய்.

பீற்.-எது பெரும் பொய்?

ரூத்.-பாதிரியார் மேல் கோபங் கொண்டது.

பீற்.-உரோமான் மதத்தில் சேரப் போகிறது?

ரூத்.-அது மெய்யே.

பீற்.-(கோப முகத்துடன்) இந்த துர்ப்புத்தியை உனக்கு போதித்ததார்? ரோமான் மதத்திலிருந்து வந்தவனை நம்பி நமது பெண்ணை அவனுக்குக் கலியாணஞ்செய்து கொடுக்கத் தகாது. துரோகம் புரிவானென்று நான் சொன்ன போதிலும்..........கேட்காமல் செய்தார்கள். இப்பொழுது அதன் பலன் கண்ணுக்கு கையு மெய்யு மாய்த் தெரிகிறது.

ரூத்.-என் கலியாணத்தைப்பற்றி பேசுகிறீர்களோ?

பீற்.-சந்தேகமா? அந்த ரோமான் படவா உன் கண்ணில் மையிட்டுப்போட்டான்.

ரூத்.-ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்பது போல, அண்ணே, சற்று நிதானியுங்கள். உங்கள் பிசகைக் கண்டுகொள்வீர்கள்.

பீற்.-எப்படி?

ரூத்.-நான் ரோமான் மதத்தில் சேருவேன் என்றேனே யொழிய, என் காவலாளியானவர் அதைப் பற்றி என்னோடு ஒரு வார்த்தையும் பேசினதில்லை.

பீற்.-நீ தான் அதில் எப்படிச் சேரலாம்?

ரூத்.-அதில் சேர்ந்தால் என்ன?

பீற்.-அதில் சேர்ந்தால் என்னவென்று மெள்ளச் சொல்லுகிறாயே!

ரூத்.-அதில் சேர்ந்தால் என்ன சொல்லுங்களே, பார்க்கலாம்.?

பீற்.-அதில் சேருவது பாதகமாகும். இந்துக்களாயிருந்த நமது பெற்றோர் பரிசுத்த ஆவியின் கடாக்ஷத்தால் கிறிஸ்துபாதத்தைப் பிடித்தார்கள். நாமும் அவர்களைப் பின்சென்று ஞானப் பிரகாசத்தைக் கைக்கொண்டு, மிஷன் பணத்தால் வளர்ந்திருக்க, அதை விட்டுவிடுவது துரோக மல்லவா? நமது பிதா மாதா பற்றிக் கொண்ட வேதத்தை விட்டுப் பிரிய எப்படி மனம் வந்தது உனக்கு?

ரூத்.-நமது பெற்றோர், அவர்கள் பெற்றோர் கும்பிட்டு வந்த தேவர்களை விட்டுப் பிரிந்ததுந் துரோகந்தானே?

பீற்.—பைத்தியக்காரியைப் போல பேசுகிறாயே! இந்து மதத்திலும் கிறிஸ்து வேதம் எவ்வளவோ உன்னதமானது! குடிசையிலிருப்பவன் மச்சு வீடு கட்டி, அதில் வசிக்க முயற்சிப்பது புகழ்ச்சிக் குரியதே யன்றி யிகழ்ச்சிக் குரியதாகுமா? இதை அறியாயோ ரூத்?

ரூத்.-ஆம், சரி; மச்சு வீட்டிலும் அழகான

அரண்மனையில் வசிக்க முயல்வது அதைவிட எவ்வளவு புகழ்ச்சிக் குரியது!

பீற்.-உன் புத்தியிவ்வளவு விபரீதமாகி, கெட்டழிந்ததற்கு காரணந் தெரியவில்லை.

(என்று சொல்லும் பொழுது) பவுல் போதகருடைய குமாரத்தி அபூர்வமணி வீட்டுக்குவர தன் மாமனைக்கண்டு: இதோ மாமா வந்திருக்கிறார் என்று, அவரைக் கட்டி யரவணைக்க, பீற்றரும் பக்ஷத்துடன் குழந்தையைமுத்தமிட்டார். உடனே சிறுமி வீட்டில் பிரவேசித்து, லூர்துமாதா தரிசனை புஸ்தகத்தை கொண்டு வந்து, "இந்த புஸ்தகத்தை வாசியுங்கள், எவ்வளவு நேர்த்தியாயிருக்கிறது" என்றாள். அதை யவர் வாங்கி மேல்கவரைப் பார்த்தபின், "ரோமான் புஸ்தகங் கூட வைத்திருக்கிறீர்களோ" என்றார். உடனே குழந்தை, "மாமா, அதோ பாருங்கள் மாதாப்படம், அந்த மாதாதான் என்னை சௌக்கியப்படுத்தினார்கள்" என்றாள்.

பீற்.-அடடா! அடியோடு குடும்பம் கெட்டுப் போனது! குழந்தை புத்தி கூட மாறிப்போய் விட்டதே! (என்ற போது பவுல் போதகர் உள் பிரவேசித்து, தன் மைத்துனனைக் கண்டு அதிசயித்து, "குடீவினிங் பிரதரின்லா" என்று மங்களங் கூறினார்.)

ரூத்.-உங்கள் வாயில் அப்பேர்ப்பட்ட வார்த்தை வருவது சரியல்ல அண்ணே.

பீற்.-நீ சற்று சும்மா இரு அம்மா. (பவுல் போதகர் பக்கமாய்த்திரும்பி) உனக்கு என் தங்கையை மண முடித்து கொடுத்த போது, அவளை ரோமான் மதத்தில் சேர்த்துக் கொள்ளத்தானா, ஓய், கொடுத்தோம்? இந்த ரோமானர்களை நம்பப்படாது; கபடர். ஆட்டுத் தோலைப் போர்த்திக் கொண்டு வரும் ஓநாய்களென்ற பைபில் வாக்கியம் அவர்களுக்கே செல்லும். இவ்வளவு கபடும் கள்ளத்தனமுமுள்ள எந்த மதஸ்தரையும் நான் பார்க்கவே இல்லை; எங்கே பார்த்தாலும் இதே கதை தான். எங்கள் மிஷன் இருக்கப்பட்ட இடங்களிலும் அந்த ரோமானரால் உண்டாகுந் தீங்கு கொஞ்சமல்ல. பவுல் அப்போஸ்தலன் சொல்லுவது போல "எதைப் பிடித்து விழுங்கலாமென்று அலைந்து திரியுஞ் சிங்கத்துக்கு ஒப்பாயிருக்கிறார்கள்" இந்த ரோமானர். எரேமியாஸ் உண்மையாக உரைத்திருக்கிற "அருவருப்புக்கும் அழிவுக்குமுரியது" இந்த ரோமான் மதமே.

பவுல்.—நீர் எடுத்துக் காட்டின இரண்டு கொடேஷன்களும் (மேற் கோள்கள்) தவறானவை. (என்று சிரித்தார்)

பீற்.-என்னையா தப்பிதம் பிடிக்கிறாய்? எடு பைபிலை (என்று புஸ்தகத்தை திருப்பித் திருப்பி பார்த்து) பேதுருக்கு பவுல் என்றும், தனியேலுக்கு எரேமியா என்றும் சொன்னதால் என்ன தவறு? இருக்கட்டும், நீ ரோமானாய்ப் போக இருப்பது மெய்தானா?

பவு.-மெய்தான்.

பீற்.-நீ எப்படி யாகிலும் கெட்டுப்போ. அம்மா ரூத்? நீ இந்த வீட்டில் இருக்க வேண்டாம்; எழுந்திரு, பிள்ளையை கூட கூட்டிக் கொண்டுவா, இந்த பீடை பிடித்த வீட்டில் ஒருக்காலும் இருக்க வேண்டாம். இங்குள்ள ஆஸ்தியிலும் இரண்டு மடங்கான ஆஸ்தி தயாராயிருக்கிறது. இவன் உன்னைப் பின் தொடர்ந்து வந்தால் சரி, இல்லாவிட்டால் டைவோர்ஸ் எடுத்துக்கொள். 100 ரூபா சம்பளக்காரனை ஒரு பி-ஏ-யை உனக்கு மண முடித்து வைக்கிறேன். வா, எழுந்து வா.

ரூத்.-என்ன, அண்ணே, பித்து கொண்டவனைப் போல் பேசுகிறீர்? என்ன தான் அதிகாரமுண்டான போதிலும் இப்பேர்ப்பட்ட வார்த்தைகள் உமது வாயில் வரலாமா? உம்மைப் போலொத்த பெரிய மனிதருக்கு இது சரியல்ல; மகாப் பாதகங் கட்டிக்கொண்ட காதகரை ஏசுவது போல் ஏசுகிறீரே! என்ன, நாங்கள் திருடரா, கொலைஞரா, தாறுமாறுக்காரரா, என்ன பாதகம் புரிந்தோம் நீர் இவ்வளவு அநீதமாய்ப் பேசுவதற்கு?

பீற்.-(கோபம் அதிகரித்து, கைகால் நடுநடுங்க,) அடி குட்டி? நேற்று முளைத்த முளைக்கு இவ்வளவு ஆணவமா? ஒரே வார்த்தை, கண்டிப்பாய்ச் சொல். (என்று சட்டைப் பையிலிருந்து கைகுட்டையை எடுத்து விரித்துக் கொண்டு,) நீ எழுந்து என்னைப் பின் சென்றால் சரி, இல்லாவிட்டால், இந்த துணி கிழிவது போல நமக்குள்ள இரத்த பாத்தியம் அற்றுப்போம். சொல். இனி உன் அதிகப் பிரசங்கம் வேண்டாம். இரண்டில் ஒன்று; நீ உன் தகப்பனுக்குப் பிறந்த பிள்ளையானால் எழுந்திரு, இல்லா விட்டால்......

ரூத்.-சகோதர பாத்தியம் அற்றாலுஞ் சரி, எனக்கு வேறு என்ன தின்மை நேரிட்டாலுஞ் சரி என் கழுத்து இரண்டு துண்டாய்ப் போனாலுஞ் சரி என் தீர்மானத்தை மாற்றுவேனில்லை.





என்னையும் என் குழந்தையையும் காப்பாற்றின அந்தப்பரம கன்னிகைக்கு உகந்த பிள்ளையாய் நடப்பேன். அக்கன்னிகை யெனக்கு உதவியாயிருக்கு மட்டும் நான் யாருக்கும் பயப்படமாட்டேன்:

பீற்.-(கையில் பிடித்திருந்த துணியை பர்ரென்று கிழித்து, எழுந்து வாசற்படி பக்கமாய்ச் சென்று, கால் இரண்டையும் பட பட வென்று தட்டி) அப்போஸ்தலனுடைய கற்பனைப்படி உங்கள் வீட்டுத் தூசியையும் இங்கேயே தட்டி விட்டுப் போகிறேன்.

பவு.-(சிரிப்புடன்) என்ன? பைபிலை மறந்தீரோ? இந்த வசனத்தை கர்த்தர் மொழிந்தாரே யன்றி, இது அப்போஸ்தலனுடைய வார்த்தை யல்லவே,

பீற்.-(கோபம் அதிகரித்து) ஓய், நான் உன்னோடு பேச வில்லை. பல்லை யிளிக்க வேண்டாம். (ரூத் பக்கமாய்த் திரும்பி,) என்ன சொல்லுகிறாய் ரூத்!

ரூத்.-துணியைக் கிழித்தாயிற்று கால் தூசியைத் தட்டியாயிற்று; பின் என்ன நான்சொல்லுவேன்? ஆயினும் என் தீர்மானத்தை மாற்ற யாராலுங் கூடாது. சர்வேஸ்வரனுக்கும் அவருடைய பரம தாயாருக்குங் கொடுத்த வார்த்தைப்பாட்டை மீறேன். ஒருபோதும் மீறேன், அண்ணே. எந்த நரனாலும் இதை மாற்றக் கூடாது.

பீற்.-தங்கையே, பிடிவாதம் வேண்டாம். நீ உன் வேதத்தை மாற்றுவதால் வர இருக்கும் பொல்லாப்பு கொஞ்ச மல்ல. அப்போது சந்தேகமற ரோமானர் மதத்தை கட்டாயம் நீ விட்டுவிடும்படி நேரிடும். ஆகையால், பெருத்த நஷ்டமும் நிந்தையவமானமும் வருவதற்குள்ளாக உன் தீர்மானத்தை மாற்றிக்கொள் ரூத். உன் பிரிய தமயனுடைய மனஸ்தாபக் கண்ணீரைப்பார்த்தாகிலும் உன் மனதை மாற்றி விடம்மா. இன்று குட்பிரைடே (பெரிய வெள்ளி) கர்த்தருடைய முகத்தைப்பார்த்து நல்ல வாக்குக் கொடம்மா!

ரூத்.-என்னைப் பற்றி கண்ணீர் சிந்த வேண்டியதில்லை யண்ணே; அதற்கு விரோதமாய், நான் சத்திய வேதத்தில் பிரவேசிக்கப் போவதால் சம்மனசுக்களுடன் நீரும் சந்தோஷித்து மகிழ வேண்டுமே யன்றி துக்கிக்க காரணமில்லை. இன்று பெரிய வெள்ளி: நமக்காகப் பலியான கர்த்தருக்கு என்னை முழுதும் பலியிடப் போகிறேன். நீங்கள் கூறினது போல பொல்லாங்கும் நஷ்டமு முண்டான போதிலும் சகலத்தையும் அறிந்திருக்கும் ஆண்டவருடைய சித்தமின்றி அவைகள் சம்பவியா. அப்படி யவர் பிரபஞ்ச தின்மைகளை வரவிட்ட போதிலும் இவைகளை யவர் என்னாத்தும நன்மைக்காகவே வரவிடுவாரான்தால் அவருடைய திருச்சித்தம் புகழப்படக் கடவது.

பீற்.-பெண்ணே, உனக்கு எவ்வளவு பிடிவாதம்! குரங்குப் பிடி பெண் பிடி யென்பது உண்மையாயிருக்கிறது உன் விஷயத்தில். நல்லது; நீ ஆசிப்பதுபோல கஷ்ட நஷ்டங்களும், துன்ப துரிதங்களும், உனக்கு உண்டாவதாக; சீனியர் போதகராகிய என் ஆசீர்வாதம் உனக்கிதுவே, என்று வீட்டை விட்டு, புறப்பட்டார்.

(இன்னும் வரும்.)

---

## CORRECT THINGS FOR CATHOLICS.

## கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

### உத்தியோகம், ஜனசங்க நடமாட்டம்.

---

1. ஒவ்வொருவனும் தன் தன் நிலைமைக்கும் நாட்டத்திற்கும் ஏற்ற அலுவலைத் தெரிந்துகொள்ளுவது ஒழுங்கு.

2 எஜமானனுக்குக் கீழ்ப்படிந்து குறித்த நேரத்தில் தன் அலுவலுக்குப் போவது ஒழுங்கு.

3. தன் நேரங்களைக் கிரமமாய் வகுத்து வைத்துக்கொண்டு, அந்தந்த நேரத்தில் அந்தந்த வேலையைச் செய்வது ஒழுங்கு.

4. வேலை செய்யக்கடமைப்பட்ட நேரத்தில் வேலை செய்யாமல் வீண்காலஹரணம் செய்வது திருட்டுக்குச் சமானம் என்று அறிந்திருப்பது ஒழுங்கு.

5. யாதொரு வேலையில் முன்னுக்கு வர வேண்டியதானால் அதன் நுட்பங்களை நன்றாய் அறிந்துகொள்ள நாள்பட அதில் நிலைத்திருப்பது ஒழுங்கு.

6. வைத்தியர்களும் சபையதிகாரிகளும் தங்களுக்குத் தெரியவந்த விவகாரங்களை வெளியிடாமல் இரகசியமாய்க் காப்பாற்றுவது தங்கள் கடமை யென்றறிந்திருப்பது ஒழுங்கு.

7. நல்ல உத்தியோகத்தில் சவுக்கியமாய் வாழ்ந்து வருபவர்கள் அற்ப சொற்ப திருட்டில் அகப்பட்டு, அல்லது கொஞ்சம் லஞ்சம் வாங்கி, தங்களுடைய சீவனத்தையே போக்கடித்துக் கொள்வதுண்டாகையால் எப்போதும் நேர்மையுடன் நடப்பது ஒழுங்கு.

8. எசமானனென்றாலும் அவனுக்கும் நியாயம் அநியாயம் என்பன உண்டென்று அறிந்திருப்பது ஒழுங்கு.

9. ஒவ்வொருவனும் தான் செய்தவார்த்தைப் பாட்டைத் தப்பாமல் நிறைவேற்றுவது ஒழுங்கு.

10. உண்மை சொல்லிக்கெட்டாருமில்லை, பொய்சொல்லி வாழ்ந்தாருமில்லை என்று அறிந்திருப்பது ஒழுங்கு.

11. உழைத்து வேலைசெய்வதும் அல்லது தன் தப்பின்றி தேவ சித்தத்தின்படி தரித்திரமாய் இருப்பதும் ஈனமல்லவென்றறிந்திருப்பது ஒழுங்கு.

(இராஜாதிராஜனின் தாயாரும், இராஜகோத்திரத்தி லுதித்தவளுமாகிய பரிசுத்த கன்னிமரியம்மாள் தரித்திரத்தையும் உழைப்பையும் வெறுத்தவளல்ல.)

12. வேலைசெய்து ஜீவிக்கவேண்டிய ஸ்திரீகள் விசேஷமாய் அடக்க ஒடுக்கத்துடன் இருப்பது ஒழுங்கு.

13. ஸ்திரிகள் தங்கள் அலுவலைப்பற்றிப் பலரிடம் பேசவும் புழங்கவும் வேண்டியிருப்பதால் அவர்கள் எல்லோரிடத்தும் பெண்களுக்குரிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் சதுர்வித குணத்தோடு நடந்துகொள்வது ஒழுங்கு.

(அச்சம் என்பது என்றுங் காணாததைக் கண்டவிடத்து அஞ்சுதல்; மடம்-அனைத்தும் அறிந்தும் அறியாததுபோலிருத்தல்; நாணம் - நாணத்தக்கவைகளிடத்து நாணங்கொள்ளுதல்; பயிர்ப்பு-அந்நிய புருஷர் கை தம்மேல்படின் உடம்பு அருவருத்தலாம்.)

14 எவ்வளவுதான் தரித்திரமாயிருந்தாலும் "வறுமையிற் செம்மை" யென்றபடி கற்பைக் காப்பாற்றுவதே தங்கள் பெருமையென்றெண்ணுவது ஒழுங்கு.

15. தங்கள்மட்டில் விசேஷ பற்றுதலையாவது அன்பையாவதுகாட்டும் அந்நிய ஆண்பிள்ளைகளைத் தாமதமின்றி உடனே விட்டு விலகுவது ஒழுங்கு.

16. தங்கள் எசமானர்கள் மரியாதையுள்ளவர்களோவென்று கவனிப்பது ஒழுங்கு.

17. ஆண் தன்னைப்போன்ற ஆணுக்குச் செய்யும் தொந்தரவை விட, பெண் தன்னைப்போன்ற பெண்ணுக்குச் செய்யும் தொந்தரவு அதிகம் என்றறிந்திருப்பது ஒழுங்கு.

18. உலகத்தில் பாக்கியமாயும் மன சந்சந்தோஷமாயும் சீவிக்கவேண்டுமானால் தாழ்ச்சி, மனத்திருப்தி, பிறர் சிநேகம் ஆக இவைகளை யநுசரித்து நடந்துகொள்ளுவது ஒழுங்கு.

(கொஞ்சம் கல்வி, அல்லது காசு கிடைத்தவுடன் தலை தெரிக்க ஆடி அற்பத்தனமாய் நடந்து தன் பூர்வோத்திரம் இப்படி யிருந்திருக்குமென்று பிறர் யூகித்துக்கொள்ள காரணந் தேடிக்கொள்ளாமல், நேற்று எப்படியிருந்தோம், இன்று எப்படியிருக்கிறோம், நாளை எப்படியிருப்போமோ வென்பதை யுன்னி நினைத்து யாவருக்குந் தாழ்மையாய் நடந்துகொள்ளல் வேண்டும்.

உலகத்தில் பாக்கியவானுமில்லை, நிர்ப்பாக்கியவானுமில்லை; அக்கரைக்கு இக்கரை பச்சை, இக்கரைக்கு அக்கரை பச்சை; ஆட்டுக்கு வால் வரையறுத்திருக்கிறார் ஆண்டவர். இந்த சிலுவை வேண்டாமென்றால் இன்னொரு சிலுவை தப்பாமல் வரும்; அவனன்றியோர் அணுவும் அசையாது என்பனவற்றை மனதில் இருத்தி, தேவசித்தத்திற்கு பணிந்து உள்ளதே போதுமென்று திருப்தியடைதல் வேண்டும். மேலும் அவர்கள் அதைக் கொடுப்பார்கள், இவர்கள் இதைக் கொடுப்பார்களென்று எதிர்பாராமல் தன்தன் கஷ்டந் தனக்குதவுமென்று நம்புவது விவேகம்.

நாலுபேர் நன்குவாழ நாமும் அவர்கள் நடுவே வாழவேண்டுமென்பதை கோராமல், நமக்கு ஒரு கண் கெட்டாலுங் கெட்டும். அண்டைவீட்டுக்காரனுக்கு இரண்டுகண்ணுங் கெடவேண்டுமென்று விரும்பினவனைப்போல் பிறர்மேல் பொறாமை கொள்ளாதிருத்தல் வேண்டும்.

கோள்குண்டணி பேசி மனதைக் கெடுத்து குடும்பத்தைக் கலைத்து சண்டை மூட்டிவைக்காமல் ஊரில் நடக்கும் அக்கிரமங்களையும் முறைகேடுகளையும் இங்கு ஆங்கு சொல்லித் திரிந்து, அவர்களுக்கு மானக்கேடு உண்டாக்காமல் அவனவன் தன்தன் காரியத்தைக் கவனித்துத் தன் நடத்தையைத் திருத்திக்கொள்ளல் வேண்டும்.

தன்னால் கூடிய அளவு தன் அயலானுக்கு ஒரு அற்பசொற்ப நன்மையை முகமலர்ச்சியுடன் செய்வது, அல்லது அப்படிச் செய்யக்கூடாதபோது ஒரு நல்ல வார்த்தையாவது கனிவுடன் பேசுவது பெருந்தன்மையுள்ளவர்களுக்கு இலட்சணம்.

தன்னிடம் பாசமாயிருக்கிறவர்களுக்கும், தனக்கு நன்மைசெய்கிறவர்களுக்கும் மாத்திரம் நன்மை செய்யாமல், அவர்களிடம் மாத்திரம் நல்லபேச்சு பேசாமல், தன்னைப் பகைக்கிறவர்களுக்கும், தனக்குத் தின்மை செய்கிறவர்களுக்கும் நன்மை செய்வது தான் சத்திய கிறிஸ்துவேதத்தின் இலட்சணம்.

அன்பை யவதாரமாகக் கொண்ட நமது திவ்விய இரட்சகர் "உன் சத்துராதிகளையும் நேசிப்பாயாக"வென்று திருவுளம் பற்றினார்; அப்படியே நேசித்துங் காட்டினார். ஆ! இது நமக்கு எப்படிப்பட்ட கன்மாதிரிகை!)

தங்கள் எளிய பந்துக்களையும் நேசிப்பது ஒழுங்கு.

("செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்" "எடுப்பின் கிளையுட் கழிந்தாரெடுக்க"என்பன இந்துக்களின் நீதிநூல். தரித்திரம் பூர்வ ஜென்மத்தின் வினையென்பார்கள் அஞ்ஞானிகள். ஆனால் தரித்திரக் கோலத்துடன் அவதாரங்கொண்ட நமதிரட்சகரால் ஸ்தாபிக்கப்பட்ட நமது சத்தியவேதமானது தரித்திரத்தை யிகழ்ச்சி செய்யாமல் அதை மதிக்கின்றது.)

20. பிறர் நமதுமட்டில் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்று நாம் ஆசைப்படுகிறோமோ அப்படியே நாமும் பிறர் மட்டில் நடந்துகொள்ளுவது ஒழுங்கு. (நமதாண்டவர் திருவாய்மலர்ந்தருளிய இவ்வாக்கியத்தின்படி நாம் நடந்துவந்தால் பூலோகமானது மோக்ஷம்போலிருக்கும்.)

21. ஆசையுள்ளவிடத்தில் பூசை நடக்குமாகையால் யாவரோடும் அன்புடன் நடந்துகொள்ளுவது ஒழுங்கு. (ஒரு துளித் தேன் அநேக ஈக்களையிழுக்கும்; பீப்பாய் காடி ஒரு ஈயையும் இழுக்காது.)

22. குற்றம் பார்க்கில் சுற்றமில்லை யென்றறிந்திருப்பது ஒழுங்கு. (குற்றமில்லாதவன் உலகத்தில் யார்? ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு பலவீனமுண்டு.)

23. அம்பட்டன் குப்பையைக் கிளறினால் அவ்வளவும் மயிராய்த் தானிருக்குமென்று அறிநதிருப்பது ஒழுங்கு.

(இந்தக்குடும்பம் இப்படி, இவன் பிறப் பிப்படி, அவவளர்ப்பப்படி யென்று பழிப்பதேன்.)

24 பிறருடைய துர்க்கிருத்தியங்களைக் கண்டிக்கக், கருதுவதைவிட அவைகளைக் கவனித்து தன் நடத்தையைச் சீர்திருத்திக்கொள்வது ஒழுங்கு.

(தொடரும்.)

---

# CORRESPONDENCE.

## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்திரவாதி யல்லர். கடித மெழுதுவோர் தங்கள் கடிதங்களை மிகத் திருத்தமாயும், காகிதத்தின் ஒரே பக்கத்தில் இட்டு பாரிசத்தில் நாலு விரற்கடை இடம் விட்டும் எழுதுவதுடன் தங்கள் பெயர் விலாசங்களையும் தெளிவாய் எழுதல் வேண்டும். பெயர், விலாசங்கள் வெளிப்படுத்துவதற்கல்ல, கடிதத்தின் உண்மைச் சங்கதிகளைப் பத்திராதிபர் உறுதிப்படுத்திக் கொள்வதற்கே. வெளிப்படுத்துவதற்கு தகுதியற்றன வென்று தள்ளி விடப்பட்ட கடிதங்கள் திரும்பவும் வாப்பஸ் செய்யப்படமாட்டா. ப—ர்]

சங்கைக்குரிய பத்திராதிப ரவர்களுக்கு நமஸ்காரம்.

தங்களிடமிருந்து யான் வாங்கி வாசித்த அர்ச். சூசையப்பர் சரித்திரத்தினால் அடைந்த மகிழ்ச்சியும் ஞானப்பிரயோசனமும் மெத்த.

பொதுவாய் அர்ச். சூசைப்பர் தேவமாதாவின் பத்தாவென்றும், தச்சுவேலை செய்துவந்தவரென்றும் ஜனங்கள் அறிந்திருக்கிறார்களேயொழிய அவரது உள்ளாந்திரிய சீவியத்தையும்

அவரிடம் விசேஷமாய் விளங்கிவந்த கீழ்ப்படிதல், தேவ திருவுளத்திற்கமைதி, கற்பு என்னும் சிறந்த புண்ணியங்களை யறிந்தவர் வெகு சொற்பம். இச்சரித்திரத்தில் அவரது சீவியம் வெகு விவரமாய்க் கண்டிருப்பதுடன் இதை வாசிக்கும்போது ஒவ்வொருவருக்குந் தம்மை யறியாமலே நல்லுணர்ச்சிகள் உற்பத்தியாகின்றன. இக் கஷ்டகாலத்தில் கஷ்ட ஜீவனத்திலோ, சமுசாரத் தொல்லையிலோ சிக்குப்பட்டிருக்கும் கிறிஸ்துவர்கள் இப்புஸ்தகத்தை வாசிப்பதினால் ஆறுதலடைவார்கள். பலர் இதை வாசிக்கவேண்டி இதன் விலையைக் குறைத்ததும் நல்ல காரியமே. ஆனதால் அனேகர் அதை வாசிக்கும்படி ஆசைப்படும்,

ஓர் சந்தாதாரன்.

## கருமுத்தன்பட்டி அர்ச். ஜெபமாலை மாதாவின் திருநாள்.

கோயமுத்தூர் மேற்றிராசனத்தைச் சேர்ந்த சோமனூருக்கு அடுத்துள்ள கருமுத்தன்பட்டியில் வருடந்தோறும் அர்ச். செபமாலைமாதாத் திருவிழா வெகு சிறப்பலங்கார வைபவத்துடன் நடந்தேறி வருவதை வெளிஜில்லா வாசிகள் சிலரே அறியாதிருக்கலாம்.

அர்ச். செபமாலை மாதாவின் திருநாள் அக்டோபர்மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை நிகழ்வதென்பது யாவருக்குந் தெரிந்தவிஷயம். ஆகவே இதற்கு முந்தின 10-ம்நாள் ஷை செந்நெல்வயல் சூழ் செழுங் கருமுத்தமாநகரின்கண் திருக் கொடி யேற்றம் செய்யப்பட்டு, அதைத் தொடர்ந்த 10 நாளும் திவ்விய பலி பூசை நடத்தப்பட்டு, மாலையில் தேர் சுற்றுப்பிராகாரஞ் செய்யப்பட்டு திவ்யநற்கருணை ஆசீர்வாதம் அளிக்கப்படும். இத் தசதின உற்சவத்தின் கடை மூன்று நாட்களும் மிக்க விசேஷித்தவை. இந்நாட்களில்தான் நாலு திசைகளினின்றும் திரு யாத்திரைக்காரர்கள் ஆயிரக்கணக்காய் வந்து கூடுவர். இம்மூன்றுநாட்களின் முதல்நாள், அதாவது, சுக்கிரவாரத்தன்று, மகா வந். ஆண்டவரவர்கள் தம் காரியதரிசியுடனும், மற்றுமனேக குருப்பிரசாதிகளுடனும் இத் திருப்பதிக்கு விஜயஞ் செய்வார். மேற்றிராணி ஆண்டவர் இத் திருப்பதிக்குச் சேர ஒன்றிரண்டு மைல் தூரமிருக்கும் போதே, அச்சமயம் இப்பதியின்கண் கூடி நிற்கும் பெருந் தொகைப்பட்ட விசுவாசிகள், பங்கு சுவாமியார், கோவில்மணியக்காரர் முதலிய முக்கிய அங்கத்தினருடன் எதிர்கொண்டு சென்று, பாண்டு, தாரை, நாகசுரம், முதலிய நாலுவித இன்னிசைக் கருவிகள் ஒலிக்க, அதிர்வெடி கிளம்ப, வாண மத்தாப்பின் சோதி பிரகாசம் துலங்க அம் மகான்களை அழைத்துக் கொணர்ந்து, இதற்கென சிங்கார அமைப்பு பந்தலின்கீழ் நிறுத்த, மகா வந். ஆண்டவர் அவர்கள் செங்கோற் கிரீட வஸ்திராபரண மஞ்சிந்து விசுவாசிகளின் பெருந் திரள் சூழ, நடை பாவாடைமீது நடந்து, ஆலயத்தினுட் சென்று யாவருக்கு மாசீரளிப்பார்கள்.

அடுத்தநாளாகிய சனிவாரத்தன்று காலை 7-மணிக்கு குருப்பிரசாதிகளி லொருவராற் பாடற்பூசையும், பூசையினிடையில் நேர்த்தியான பிரசங்கமும், மாலையில் வழக்கம்போல் மற்றக் கிருத்தியங்களும் நடந்தேறும். கடைசிநாளாகிய ஞாயிறுவாரத்தன்று காலை 8-மணிக்கு மகா வந். ஆண்டவரவர்கள் தம் குருப்பிரசாதிகளாற் புடைசூழ்ந்து நிற்க, ஆயிரக்கணக்கான விசுவாசிகள் பாண்டு வாத்திய கோஷ்டத்துடன் ஆண்டவ ரவர்களைத் தரிசித்து ஆலயத்தினுள் அழைத்துச்செல்லுந் தருணம், அதிர்வெடிகளும், ஆலயத்து மணிகளும் கம்பீரமாய் ஒலிக்க, கோவிற் கின்னரம் கை தேர்ந்த ஒருவரால் இன்னிசை மீட்ட, திருப்பலி பூசை ஆரம்பிக்கும். பூசையினிடையில் சாதுரியமுற்ற தேசிகர் ஒருவர் பிரசங்கமேடை யேறி அர்ச். செபமாலைமாதா மீது வெகு உருக்கமாகப் பிரசங்கிப்பார். இவ்வருடம் இத் திவ்விய கருமத்துக்குக் குறிக்கப்பட்ட தமிழ் பாஷையை நன்குணர்ந்தவரான சங். (Rev. Fr. Tignus.) சங். திக்னுஸ் சுவாமிகள். இவர் செய்த பிரசங்கம் என்றும் மறக்கத்தக்கதன்று. பூசை முடிந்ததும் மகா வந். ஆண்டவரவர்கள், முன் ஆலயத்தினுள் சென்றதெங்ஙனமோ அங்ஙனமே, ஆலயத்தை விட்டு வெளிப்பட்டுத் தம்மில்லம் ஏகுவர். அதன்பின்னர், தேர் சுற்றுப் பிரகாரம் நடைபெறும். இச்சமையத்திற்றானே பல வேண்டுதல்கள் நிறைவேறும். இவைகள் அனைத்தும் முடிவுபெற அனேக மணி நேரங்கள் செல்லாநிற்கும்.

சாயரட்சை சுமார் 5 மணிக்கு மகா வந். ஆண்டவரவர்கள் "வெஸ்பர்ஸ்" என்னும் திருச்சடங்கை நிறைவேற்றி தேவநற்கருணை ஆசீர்வாத மளிப்பார். இரவு 8 மணிக்குச் சிறிதும் பெரிதுமான பல தேர்கள் முன் செல்ல, வானமூளாவி நிற்கும் தன்மையதாகப் புலப்படும் மகாச் சிறப்பலங்காரமுற்ற பெரியதோர் தேர் அர்ச். செபமாலை நாயகியின் கொலுவேற்றதன்மையதாய்ப் பின் செல்ல, அவளது வருகையை அஷ்ட திக்குகளிலும் பறை சாற்றுவதுபோல், அதிர்வெடிகள் கிளம்ப, பான்டு, மத்தளம், நாகசுரம், தாரை முதலிய வாத்திய கருவிகளின் சுரங்களிடையே, ஆகாசவாணம், புதைவாணம், புருசு, பலவர்ண மத்தாப்புகள், தீவட்டி முதலியவற்றின் சோதிப் பிரகாசத்துடன் சுற்றுப்பிரகாரம் வெகுதூரஞ் சுற்றிவந்து ஆலயஞ்சேர்ந்தபின், நமது பரிசுத்த கன்னிகையான அர்ச். செபமாலை நாயகியின் சுரூபாசீர்வாதத்தோடு திருவிழா முடிவுறும். ஜனத்திரளின் ஆரவாரம், தேரலங்காரம், கடையலங்காரம் முதலியவற்றை கவனிக்கும் விஷயத்தில் இம் மகோற்சவம் வேளாங்கண்ணி அர்ச். ஆரோக்கியமாதாவினுற்சவத்துக்கு இணையானது அல்லது இரண்டாவதெனக் கூறலாம்.

இம் மகோற்சவத்துக்கு விஜயஞ் செய்யும் திரளான விசுவாசிகள் தங்குவதற்கான விடுதி முதலிய சௌகரியங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆயினும் திரு யாத்திரைக்காரர்களின் தொகை வருடா வருடம் பெருக்கமுறுவதால், அவர்களுக்கு வேண்டிய விடுதி முதலியவைகளை விருத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்வது அவசியமாகிறது. இதை யதிகாரிகள் கவனிப்பார்களெனக் கோருகிறேன்.

கோயமுத்தூர், 15—10—13. } அர்ச். ஜெபமாலை நாயகியின் தாசாதி தாசன்.

## கிறிஸ்துவம்.

கிறிஸ்துவம் என்னும் பதத்திற்குக் கிறிஸ்து வேதாநுசாரம் என்பது பிரதான அர்த்தமா யிருந்தாலும் நாகரிகம் எனச் சொல்லுவதும் கிறிஸ்துவம் என்னும் மொழிக்கு மற்றொரு திரண்ட பொருளாகக் கொள்ளலாம். ஆதி பிதாவினால் அருளவும், நமது இரட்சகராகிய யேசுக்கிறீஸ்துநாத சுவாமிகளால் உறுதி பண்ணவும், அவரை அடுத்துவந்த பரிசுத்த பாப்பரசர்களால் கண்காணிக்கவும், அன்று முதல் இன்றை வரைக்கும் திவ்ய இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரனால் முன்னின்று நடாத்தவும் பெற்றுவருகின்ற நமது சத்திய வேதத்தை எக்காலம் வரையும் அநுசரித்ததோ அக்காலம் வரையும் இக் கீழ் நாடு மிகவும் தேஜஸ் நிறைந்து விளங்கியது. அப்புறம் அகஸ்மாத்தாய் பற்பல நூதன மதங்கள் தலையெடுக்க, அம்மதங்கள் யாவும் பலவீனமுள்ள மானுட சிருட்டியில் ஏற்படக்கூடிய சிற்றின்ப லீலா விநோத சுகாநுபோகங்களில் கண்டிப்பில்லாததும், இலகுவானதுமான சட்டதிட்டங்களை நிருபணம் பண்ண, இழிகுண இன்பத்திற்கு ஈடுபடக்கூடிய ஏழைமதி யுடைத்தான மானுடப் பூண்டுகள் உலக ஜீவியத்திற்கு நோன்பும், தவமும், ஒறுத்தலும், உபவாசமும் மிகவும் தொந்தரவிற்குரியன வெனப்பயந்து, மேற் சொன்ன சதுர்முக ஒழுக்கங்களால் பொதிந்துள்ள சத்திய மறையை மறந்து, பஞ்சேந்திரியங்களின் மிருகசேட்டைக்கு ஒத்துப் போகக்கூடியதான இலேசான சட்டங்களை ஆக்கித் தந்த நவீன மதங்களுக்கு ஆளாயின. பாதையுள் ஒடுக்கமாகிய பாதை பரகதிப் பாதை யெனவும், அங்குமிங்கும் பராக்கில்லாமல் செல்பவரே இந்நுண்ணிய பாதை வழியாய் மோக்ஷ சாம்பிராச்சியத்தைச் எய்துதற் பாலரென்பதும் சத்யவேதப் பிரமாணமாயிருக்க, இப்பிரமாணத்திற்கு விரோதமாய் உண்ணவும், குடிக்கவும், ஆடவும், பாடவும் இச்சை கொண்டு, அவற்றிற் கேற்ற விஸ்தீரணமான விதிகளையுடைய பொய் மதங்களுக் குட்பட்டதும் சற்றேறக் குறைய சர்வசுதந்தரங்களையும் இழந்து இக்கீழ் நாடு தவிக்கலாயிற்று. இனி,

மேனாட்டு விஷயங்களைக் கவனிக்கும்பட்சத்தில் அதுவும், தான் கிறிஸ்து வேதத்தை அநுசரியாதிருந்த காலமுழுதும் தலைபுரண்டு தட்டுக் கெட்டுத் தடுமாறிக் கிடந்து, பின்னர் நமது உண்மைத் திருமறையை ஒப்புக்கொண்ட நாண் முதல் அங்கு, ஒவ்வொரு தேசமும் தத்தம்துரைத்தனத்தைக் கட்டிக்கொண்டு சோபிக்கலாயின. அகங்காரத்தால் ஆசனத்தை விட்டுத் தள்ளப்பட்ட அவலட்சண ரூபிகள் இழந்துபோன பதவியை, அளவில்லாத கருணையுடைத்தான சர்வேசுரன் மானுடர்களுக்குக் கொடுக்க நினைத்த கால முதல், அவர்கள்மேல் பசாசுக்கள் கொண்டிருக்கும் பகையும் வர்மமும் இந்த மட்டு அந்த மட்டென்பதில்லை. மெய்யான கடவுளும் மெய்யான மனிதனுமாகிய கிறிஸ்துவையே ஏமாற்ற நினைத்த பேய்கள் வெறுமனிதராகிய நம்மை இலகுவில் விட்டுவிட்டுச் சும்மாயிருக்குமா? பார்த்தது பிசாசு; கிறிஸ்து வேதத்தை நுணுணுக்கமாய் அநுசரிக்கும் மேலைத் தேசங்களெல்லாம்

செல்வம் தழைத்துச் சிறப்பு பொங்குகின்றது. இதற்குக் காரண மென்ன ? அவைகள் (தேசங்கள்) கொண்டிருக்கும் கிறிஸ்துவேதமே. இதைக்கண்டதும் அவ்வத்தேசங்களையே ஓர் குழப்புகுழப்பத் தீவிர யோசனையோடு ஆரம்பித்தது. சம்மனசுகளுக்குள்ளேயே அகங்காரிகள் ஏற்படுதல் சம்பவிக்க, கேவலம் இந்த மானுடர்க்குள் அகங்காரிகள் அதிக்கிரமிப்பது அதிசயமா? பிடித்தது பசாசு அவர்களை. அறிவிற்குப் பிரதானமான மூளையை அகங்காரத்திற்குப் பிரதானமாகச் செய்தது. அகங்காரத்தோடு அதன் உடன் பிறப்பாகிய தாறுண்மைத்தனமும் ஒன்று சேர, இனி, இத்தனை நாளும் அநுசரித்துவந்த திருச்சபைச் சட்டங்கள் அதிகண்டிப்பான தென்றும், சட்டத்தை நிரூபிக்கும் சற்குணக்குருக்கள் நிர்ப்பந்தக் காரரெனவும் நினைக்கப் பண்ணியது. ஆகவே, வேத விசுவாசங் குறைந்தது; பக்தி அறவே குளிர்ந்தது. இன்னனைய சீர்கேடு, சுவையுள்ள கனியில் சொத்தை விழுவதுபோல் முதல் முதல் பிரான்ஸ் தேசத்தைப் பீடித்தது; அப்புறம் இத்தாலியாவைத் தொட்டது ; பின், இஸ்பாஞியாவைப் பரிசித்தது. இதற்கு மேல் போர்த்துக்காலை கிட்டத்தட்ட விழுங்கியே விட்டது. இப்போது பெல்ஜியத்தையும் மோந்து பார்க்கிறது. எத்தனைக் கெத்தனை மேலைத்தேசங்கள் வேதத்திலிருந்துவிலகி நிற்கின்றனவோ அத்தனைக்கத்தனை ஒழுக்கமும் உயர்வும் அவைகளை விட்டு விலகி நிற்கின்றன. கிறிஸ்துவம் இல்லாதாகவே, அங்கு ஒழுக்கமும் உயர்வும் இல்லையாகிறது. ஒழுக்கமும் உயர்வும் அற்றுப் போகவே, நாகரிகம் எப்படிக் கைகூடும்? குடியும், விபசாரமும், கூத்தும், வேடிக்கையும், அவற்றால் விளையும் விவாஹ விலக்குமுறைகளும், சட்டங்களும் மேனாட்டில் எவ்வளவு விஸ்தீரணமாகி வருகின்றன வெனக் கவனித்தால் இன்னும் இரண்டொரு நூற்றாண்டில் ஐரோப்பிய தேசங்களில் அத்தேசவாசிகளே பூராவர்க அற்றுப்போவார்கள் போல் தோற்றுகிறது.

ஆகவே, ஒழுக்கத்தையும் உயர்வையும் விரும்புவார் யாவரோ, அவர் தூய கிறிஸ்துவத்தைச் சமுத்திரையாய் அநுசரித்தல் வேண்டும். அநுசரித்தால்தான் நாகரிகம் கைகூடும். ஏனென்றால், கிறிஸ்துவமும் நாகரிகமும் ஒருபொருட்பன்மொழி. ஆயிரக்கணக்கான வருடங்ளாக பவுத்த மதத்தைக் கொண்டிருந்த சீனதேசம் தான் கஷ்டத்தேறுவதற்கு அறிகுறியாக இப்போது கிறிஸ்து வேதத்தை தழுவிவருகிறது. மேலும், விடாமுயற்சி யுடைய ஜப்பான் தேசமும் தன் முயற்சி நிறைவேற அங்கு சேசு சபைக் குருக்கள் ஆதீனத்தில் பெரிதோர் சர்வகலாசாலையை நிருமாணித்துக்கொள்ளச் சம்மதம் கொடுத்திருக்கிறது. இப்படி, அஞ்ஞான நாடுகளெல்லாம் நாகரிகத்தைக் கைகொள்ளுவதற்குக் கிறிஸ்துவத்தை ஒப்புக்கொள்ள வேண்டியதாய் வந்திருக்க, வாழையடிவாழையாகக் கிறிஸ்துவத்தைக் கொண்டிருக்கும் நாமோவெனில், இதுவரையில் எவ்வளவோ நாகரிக மேம்பாடு உடையவரா யிருத்தல் வேண்டும்! கிறிஸ்துவம் நாகரிகமென்றால் கிறிஸ்துவரில் இன்னும் அநேகர் அநாகரிகராய் இருப்பதேதெனில், அவர்கள் தங்களுக்குக் கிடைத்த கிறிஸ்துவத்தை, அது கற்பித்துவரும் சட்ட திட்டங்களுக்கு ஒத்த மேரையாய் அநுசரியாதிருப்பதேயாகும். மேலும் தற்கால ஏடாகூடத்திற்கு நம்மிடத்தில் கிறிஸ்துவின் முழு ஒழுக்கங்களும் அமைய வழியில்லாதே போனாலும், அவ்வொழுக்கத்தின் நிழலில் சிறிதோரணுவுங்கூட இராதொழிந்தால், கிறிஸ்துவம் என்கிற வார்த்தைக்கு நாகரிகம் என்னும் அர்த்தம் நமக்கு எப்படிப் புலப்படும்? நல்லது, இப்போது கிறிஸ்துவம் என்பதற்கு நாகரிகம் என்பதே உண்மைப்பொருளாகத் தெரியவேண்டும் பட்சத்தில், நமதுகிறீஸ்துநாதரது நல்லொழுக்கத்தின் அதிநுண்ணிய சாயலேனும் நம் மேல் நிலவும்படி இடங்கொடுக்கவேண்டும். இதுவே நமது வேதாந்த சித்தாந்திகளின் மேலான அபிப்பிராயம்.

தூத்துக்குடி,
1-9-13.

இங்ஙனம்,
பரதன்.

---

## GENERAL NEWS AND NOTES.
## பொது வர்த்தமானம்.

---

**அர்ச். சூசையப்பர் கைத்தொழில் பள்ளிக்கூடம், கோயமுத்தூர்.**—இந்தப் பள்ளிக்கூடத்தை விருத்தி பண்ணுவதற்காக சென்னை கவர்ன்மெண்டார், 15,345ரூபாய் நன் கொடை யளித்திருக்கிறார்கள்.

**சீனக்குடியரசுக்கு புதுத்தலைவர்.**—சீனாவில் சமீபத்தில் வடவூர் ஜனங்களுர்க்கும் தென்னூர் ஜனங்களுக்கும் நடந்த கலகத்தில் வடவூரார் ஒருவாறு ஜெயங்கொண்டு, யுவான்ஷிகே என்பவரை குடியரசுத் தலைவராகத் தெரிந்துகொண்டார்கள்.

**[...]மை யாறு.**—ஆப்பிரிக்காவைச்சேர்ந்த அல்ஜீரியாவில், இரண்டு நதிகள் கூடுமேரிடத்தில் தண்ணீர் இங்கியைப்போல் கருமையாயிருக்கிறதாம். அதை யவ்விடத்து ஜனங்கள் எடுத்து காகிதமெழுதுவதற்கு இங்கியாக உபயோகிக்கிறார்களாம்.

**வங்காளத்தில் கூட்டக் கொள்ளை.**—இப்போது வங்காளத்தில் கூட்டக்கொள்ளை யதிகமாய் நடத்தலால், கையில் யாதொரு ஆயுதமின்றி கொள்ளையடிக்கையில் ஒருவனைப் பிடித்துக் கொடுப்பவருக்கு ரூ. 500-ம்; துப்பாக்கி கத்திமுதலிய ஆயுதங்களை வைத்துக்கொண்டு கொள்ளையடித்துக்கொண்டிருக்கும் ஒருவனைப் பிடிப்பவர்களுக்கு ரூ. 1500-ம் வெகுமானம் அளிப்பதாக கவர்ன்மெண்டாரால் விளம்பரஞ் செய்யப்பட்டிருக்கிறது.

**ஓர் புது யந்திரம்.**—சமுத்திரத்தில் ஓர் கப்பல் பிரயாணஞ் செய்துகொண்டிருக்கும்போது எதிரிடக் கூடிய வேறொரு கப்பல், கற்பாறை, குன்று, பனிக்கட்டி முதலியவைகளைத் தெரிந்து முன்னறிவிக்கக் கூடிய ஒரு புது யந்திரம் இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இது கப்பற் பிரயாணிகளுக்கும், கப்பலோட்டிகளுக்கும் ஓர் நல்ல செய்தி.

**கலியாணப் பெண்கள் ஏலம்.**—கபோல் பானிய ஜாதியார்களுக்குள், கல்யாணத்துக்குத் தக்க பருவமான பெண்களை யேலம் போட்டு, யார் அதிகதொகை கொடுக்கிறார்களோ அவர்களுக்கு அவர்களைக் கலியாணஞ்செய்து கொடுக்கும் வழக்கம் நடந்துவருகிறதாம். பண ஆசை பிடித்தவர்களாய் தாங்கள் பெற்றுவளர்த்த பெண்களை ஆடுமாடுகளைப்போல் இவ்வாறு விற்கத்துணியும் பெற்றோரை என்னென்கலாம்! இக்கொடிய வழக்கத்தை கண்டித்து அடக்க சில புண்யோத்தமர்கள் புறப்பட்டிருக்கிறார்கள் எனக் கேள்விப்படுகிறோம்.

**இங்கிலாந்தரசியின் பாங்கிமார்கள்.**—இங்கிலாந்தரசியின் பாங்கிமார்களுக்கு கனம் ஆனரபில் என்ற பட்டம். ஆயுள்பரியந்தம் தரிக்க அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பாங்கி ஒருத்திக்கு மாதமொன்றுக்கு 875 பவுன் சம்பளம். அரசிக்கு வரும் கடிதங்களுக்கு[illegible]லெழுதுவதும், இதர குமஸ்தாவேலையும், யர்த்திரை போகும்பொழுது கூடச்செல்வதும், விருந்துகளுக்குக் கூட இருந்து நடத்திவைப்பதும் பாங்கிகளின் வேலைகளாம். 'ராயல் டீபார்டி' என்னும் இராஜாங்க விருந்து ஸமயங்களில் இவர்கள் ரூபாய் 150-லிருந்து 750 ரூபாய்வரை பெறுமான புதிய உடைகள் தரிக்கவேண்டும். இவர்களுக்குக் கலியாணமாகும்போது ரூபா 15,000 நன்கொடை கொடுக்கப்படுகிறது. பாங்கிவேலையிலிருந்து நீங்கும்பொழுது இவர்களுக்கு சம்பளத்தில் மூன்றில் இரண்டுபங்கு உபகாரச் சம்பளம் கிடைக்கிறது.

(இந்து நேசன்.)

**க்ஷயரோகத்துக்கு மருந்து.**—பூசினிக்காயை அபத்தியமான பதார்த்த மென்றும் எந்த வியாதியஸ்தரும் அதை அருந்தப்படா தென்றும் பண்டிதர்கள் விலக்கி யிருக்கிறார்கள். ஆனால், பரைஸ் என்னுங் காசியிலுள்ள "பீயேதிராபி இன்ஸ்டிடியூட்" என்னும் ஸ்தாபனத்தின் பிரசிடெண்டு டாக்டராகிய பிரியவருணை என்பவர், க்ஷயரோகிகள் பச்சைப் பூசினிக்காயைத் தின்றால் குண மடைகிறார்களென்று சொல்லுகிறார். இதைப் பரீட்சை செய்து பார்க்க விரும்புவர்கள் ஷெ டாக்டருக்கு எழுதி மற்ற விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

**கண்ணாடிக் கப்பல்.**—சமுத்திரத்துக்குள்ளிருக்கும் ஜீவராசிகளின் தன்மையையும், தண்ணீர்க்குள் உடைந்து அமிழ்ந்து கிடக்கும் கப்பல்களின் நிலைமையையும் கண்டு பிடிக்குமாறு, அடித்தட்டு முழுதும் தெளிவான கண்ணாடியால் மூடப்பட்ட கப்பல் ஒன்று கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவ்வித ஆராய்ச்சி செய்வதற்கேற்றபடி தண்ணீர்க்குள்ளிருக்கும் நுண்ணிய பொருளையும் தெளிவுறக் காண்பதற்குத் தக்க விளக்குகளும் அடியில் வைக்கப்படுமாம். ஆனால், திமிங்கிலத்தைப் போன்ற பெரிய மீன்கள் வெளிச்சத்தைக்கண்டு மிரண்டு கப்பலை மோதினால் கப்பலின் கதி யென்ன வாகுமோ!

**ஓர் பெரிய மலைப்பாம்பு.**—பம்பாய் ராஜதானியைச் சேர்ந்த அமடார்பாட்ஜில்லாவிலுள்ள ஒரு கிராமத்தில் வேட்டை



REGISTERED 3-NOV 1913 MADRAS

யாடச்சென்ற ஒரு துரையால், 8 அடி நீளமும் அதற்கேற்ற பருமனுமுள்ள ஓர் மலைப்பாம்பு சுடப்பட்டதாம். அப்பாம்பின் வயிற்றில் துப்பாக்கி குண்டு பட்டதனாலுண்டான தொளையின் வழியாய் யாதோ ஒரு பறவையின் சிறகு தெரிந்ததால், வயிற்றைக் கீறிப்பார்க்க, அதனுள்ளிருந்து ஆறு வாத்துக்கள் குற்றுயிருடன் எடுக்கப்பட்டன. அது கொல்லப் படுவதற்கு சற்று முன்னே தான் அந்த வாத்துக்களை அது விழுங்கிற்று போலும். ஆடுகளையும், மாடுகளையும் விழுங்கத்தக்க மலைப்பாம்புகளுண்டெனச் சொல்லப்படுகிறது.

பிளேக் நோயைத்தடுக்க வேப்பிலையை வீட்டில்போட்டுக் கொளுத்துதல் மெத்த நல்ல வழி யென்று பீஹார் சுகாதார நிருவாக உத்தியோகஸ்தர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த வேப்பிலைப் புகை பட்டவுடனே பிளேக் கிருமிகள் நாசமடைகின்றனவாம். இது உண்மையாயின், விஷபேதி, வைசூரி முதலிய தொத்துவியாதி நடமாடுங் காலங்களில் இந்துக்கள் தங்கள் வீட்டு வாசற்படிகளில் மாரியாத்தாளுக்கென்று வேப்பிலையைக் கட்டித் தொங்க விடுவதும் சுகாதார விஷயத்தைப் பற்றியே யன்றி, மதாசாரத்தைப்பற்றி யல்லவென்று யூகிக்கத்தக்கதா யிருக்கிறது. இன்னும் இந்துக்களுக்குள் வழங்கும் பல மதாநுஷ்டானங்கள் உண்மையில் சுகாதாரத்தையே அநுசரித்தவைகளா யிருக்கின்றன.

இலங்கையில் வெள்ளப்பெருக்கு.—இலங்கையிலே இரண்டு மூன்று நாளாக கனத்தமழை நெடுநேரம் அபாரமாய் ஓயாமற் பெய்தபடியால் ஆறுகளும், ஏரிகளும், குளங்களும் நிரம்பி கரை கடக்க, எங்கும் வெள்ளப்பெருக்குண்டாகி, பலவிடங்களில் ரெயிற்பாதைகளுக்கும், வீடுகளுக்கும், வீட்டுச்சாமான்களுக்கும், கால்நடைகளுக்கும், வீட்டுப்பறவைகளுக்கும், மன்னுயிர்களுக்குமே பரிதாபத்துக்குரிய நஷ்டங்களை யுண்டாக்கிற்று என்று கேள்வியுற்று வியசனிக்கிறோம். சில விடங்களில் 10,12 அடி தண்ணீர் நின்றது. மலைகள் தகர்ந்துவிழுந்தன. வீடுகள் இடிந்து விழுந்தன: வெள்ளத்தில் அமிழ்ந்திப்போயின. வீட்டிலுள்ள தட்டுமுட்டுச் சாமான்களும், ஆடுமாடு, கோழி வாத்து முதலிய ஜீவப்பிராணிகளும் தண்ணீரில் மிதந்தன. பலஇடங்களில் மனுஷருக்கு உயிர்ச்சேதமுமுண்டாயிற்று. இலங்கையில் இதற்கு முன்னே 1872-௵த்திலும், 1904-௵த்திலும் பெரிய வெள்ளப்பெருக்குகள் உண்டாயின. ஆயினும் இந்த 1913௵த்தைப் போல அவைகள் இவ்வளவு மும்முரமாயிருந்ததில்லை யெனச்சொல்லப்படுகிறது. அநேக ஏழைக் குடும்பங்கள் வீடுவாசலையும், சாமான் செட்டுகளையும், துணிமணிகளையு மிழந்து, இருக்க இடமும், உடுக்க உடையும், உண்ண உணவுமின்றி வழியோரங்களிலும், ஒதுக்கிடங்களிலும், தெருத்திண்ணைகளிலும் நின்று திகைக்கிறார்கள். இதைக்கண்ட பலபரோபகாரிகள் அவ்வேழைகளுக்கு உணவுப்பண்டங்களையும், ஆடைகளையுங் கொடுத்து உதவிவருகிறார்கள். இதுவிஷயத்தில் சிலோன் கவர்ன்மெண்டாரும் அவ்வேழைகளின் நஷ்டத்துக்கு பரிகாரஞ் செய்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

பெண்ணுக்குத் தாயின் புத்திமதி—ஜப்பானில் ஒரு ஸ்திரீ தன் பெண்ணுக்கு கலியாண முகூர்த்த ஸமயத்தில் அடியில் கண்ட பத்து புத்திமதிகளைச் சொல்வது வழக்கமாம். இந்த புத்திமதிகளின்படி நடக்காத பெண்களை ஜனங்கள் இழிவாகப் பேசுவார்களாம்: (1) விவாகமான நிமிஷ முதல் நீ எங்கள் பெண்ணல்ல. இனி உனக்குத் தாயும் தந்தையும் உன் மாமியாரும் மாமனாரும். இதுகால பரியந்தம் எங்களுக்கு எப்படி நீ கீழ்ப்படிந்து நடந்து வந்தாயோ, அப்படியே இனிமேல் அவர்கள் காலாலிடும் வேலையைக் கையால் செய்ய வேண்டும். எள்ளென்பதற்கு முன் எண்ணெயாய் நீ நடந்துகொள்ள வேண்டும். உன் மாமியாரிடத்தில் பக்ஷமாயிரு. (2) மனைவியின் மேலான ஆபரணம் கணவன் சொற்படி நடத்தலாம். உன் கணவன் தான் உன் எஜமானன். அவன் ஏவல்களை பக்தியோடு சிரத்தையாய் செய்யவேண்டியது. (3) வீண்பெருமை பாராட்டாதே. தற்பெருமையால் உன் கணவனுக்கு உன்னிடமுள்ள ஆசை குறையும். (4) கணவன் முன் கடுமையாய்ப் பேசாதே. அவன் உத்தரவுக்கு அட்டி சொல்லாதே: பொறுமை உனக்கு பூஷணமாயிருக்கட்டும். "பொறுத்தார் பூமியாள்வார்" (5) சொல்ல வேண்டியதை ஸமயமறிந்து நயமாய்ச் சொல். வாயாடி என்று பேரெடுக்காதே. அதிகம் பேசுகிறவள் அரைக்காசுக்குக் கூட உதவமாட்டாள். பேச்சு அதிகரித்தால் பொய் தானாகவே நுழைந்துகொள்ளும் (6) ஜோஸ்யப் பித்துள்ளவளாயிராதே. சகுனம் பார்க்காதே. உனக்கு நீ சத்ருவாகிறாய். (7) கிரஹ க்ருத்யங்களை ஸரியாய்ச்செய். வரவுக்குத் தகுந்தபடி செலவு செய் (8) உன் தாய் வீட்டுக்காரர் பணக்காரா யிருக்கிறார்களென்று அகங்காரங் கொள்ளாதே. புக்ககத்தாரையாவது, அவர்கள் சொந்தக்காரரையாவது கேவலமாய்ப் பேசாதே. தாய் வீட்டைப்பற்றி வீண்பெருமை பாராட்டிக் கொள்ளாதே. (9) வலிய வந்தாலும் வாலிபர் சிநேகம் உனக்கு ஆகாது. (10) வர்ணமான உடைகளை உடுக்க ஆசைப்படாதே. எப்பொழுதும் சுத்தமான ஆடையை உடுத்திக்கொள். இந்த நல்ல புத்திமதிகளை ஓர் மனைவி அநுசரித்து வந்தாளானால் புருஷன் பெண்சாதிகளுக்குள் ஒருபொழுதும் மனத்தாங்கல் வராது. (இந். நேச.)

லூர்துநகரில் நடந்த புதுமைகள்.—ஜினேவா நகரின் ஓர் கன்னியாஸ்திரி மார்பு வியாதிப்பட்டு வைத்தியர் சத்திரம் செய்வது அவசியமென்றதற்கு உடன்படாமல் லூர்துநகரத் தீர்த்தத்தில் இரண்டு முறை குளிக்கவே, சொஸ்தமடைந்தாள். 2-அசிசி நகர்க் குருவானவர் கால் முடமாயிருந்ததால் அனுதினந் திவ்விய பூசையை உட்கார்ந்துகொண்டு செய்துவந்தார். அவரும் இரண்டுவிசை லூர்துதீர்த்தத்திற் குளிக்கவே, பூரண சௌக்கியமடைந்து தமது தடிகளை அப்பால் எறிந்துவிட்டு, திவ்விய சற்பிரசாத சுற்றுப் பிரகாரத்தில் மற்றவர்களோடு சென்று ஆண்டவரை வாழ்த்தினார். 3. ஒரு கலியாணமான பெண்பிள்ளை அநேக வருஷங்களாய்த் தீராப்புண்ணினால் வருந்தி, கடைசியாய் லூர்துநகரில் சொஸ்தமடைந்தாள்.

மேற் சொன்ன மூன்று புதுமைகளும் மூன்று சிறந்த வைத்தியர்களால் நற்சாட்சிப் பத்திரம் பெற்றிருக்கின்றன

(சத். வே. பா.)

ஏமாற்ற மடைந்த பெண்.—சென்ற வாரத்தில் மகாமகக் குளத்தின் மேல்கரையில் ஓர் மாது சாவி போடுகிற ஒருவனை அழைத்து தன்னுடைய பெட்டிக்குச் சாவி போடச் சொன்னாள். அவன் சாவி கொஞ்சம் சிக்குகிறதென்று எண்ணெய் கேட்க அப்பேதைப் பெண் உட்சென்று எண்ணெய் கொண்டு வருகிறதற்குள் பெட்டியைத் திறந்து பெட்டிக்குள்ளிருந்த ரூபா 90-ரையும் 10-ரூபா நோட்டையும் ஆக ரூபா 100 யும் தன் பைக்குள் எடுத்து வைத்துக்கொண்டு அவள் வந்தபின் பெட்டிக்கு வேறு சாவிகளைப் போடுவதுபோல பாவனை செய்து, ஒரு சாவியும் சரிப்படவில்லை, நாளைக்கு வேறு சாவிகொண்டுவந்து போடுகிறேனென்று சொல்லிப் போய்விட்டானாம்.

---

## NEWS OF THE MONTH.

### மாச வர்த்தமானம்.

பப்ளிக் சர்விஸ் கமிஷன்.—இந்த கமிஷன் மெம்பர்கள் இன்னுஞ் சில விஷயங்களைப்பற்றி விசாரித் தறிவதற்கு மறுபடியும் இந்தியாவிற்கு வர லண்டனை விட்டுப் புறப்பட்டு விட்டார்கள்.

பனாமா கால்வாய்.—இந்த பிரமாண்டமான கால்வாய் திறக்கும் சடங்கு சென்ற மீ 10-உ பகல் இரண்டுமணிக்கு வெகு அற்புதவிதமாய் நிறைவேறியது. எப்படியெனின், ஐக்கிய மாகாணத்துத் தலை நகரமாகிய வாஷிங்டனில், "ஒயிட் அவுஸ்" என்னும் மாளிகையில் மின்சார யந்திர சூழ்ச்சியால் அமைக்கப்பட்ட ஒரு பொத்தானை பிரசிடெண்ட் உவில்சன் துரை அமுத்த, 4000மைல் தூரத்திலிருக்கும் பனாமா கால்வாயை யடைத்திருந்த கடைசித் தடை வெடியினால் தகர்க்கப்பட்டது. இப்போது சிறிய கப்பல் தோணி முதலியன அக்கால்வாயில் போகலாமென்றாலும், தகர்க்கப்பட்ட பூமியின் துண்டுதுணிக்கைகளாகிய தூறுகளை வாறி யெடுக்குந்தனையும், அதன் வழியாய் சரியானகப்பல் யாத்திரைசெய்ய வொண்ணாது.

திவான் பஹதூர் எல். டி. சுவாமிக்கண்ணுப்பிள்ளை.—சென்னை சர்வ கலாசாலையின் எம். ஏ., எம். எல்., பி. ஏ., பி. எல்., முதலிய பரிட்சைகளில் தேறின மாணவர்கட்கு உரித்தான உடுப்புக்கள், யோக்கிய தாபத்திரங்கள் கொடுப்பதற்கு செனெட்ஹார்ல் என்னும் ஷை சர்வ கலாசாலைச் சபா மண்டபத்தில் வருஷா வருஷம் வித்வ

ஜனர்களின் மகா ஜனசபை கூட்டப்படும். அக்கூட்டத்தில் ஷை மாணவர்கட்குப் புத்திப் பிரசங்கம் சொல்வதற்கு ஓர் சிறந்த புத்திமானைத் தெரிந்தெடுப்பது வழக்கம். அப்பிரகாரமே, இவ்வருஷம் இம்மாதம், 20ந் தேதி வியாழக்கிழமை கூடப்போகிற ஷை வித்வஜன சபைக்கூட்டத்தில் புத்திப் பிரசங்கஞ் செய்ய, நமது நேசர், திவான் பஹதூர் சுவாமிக்கண்ணுப்பிள்ளை தெரிந்து கொள்ளப் பட்டிருக்கிறாரென்று கேள்வியுற்று சந்தோஷமானோம். கத்தோலிக்கு இந்தியரில் முதல்முதல் இப்பெருமைக்குத் தெரிந்து கொள்ளப் பட்டவர் இவரே.

**வைசிராய் விஜயம்.**—மேன்மை தங்கிய கவர்னர் ஜெனரலாகிய ஆர்டிஞ்சு பிரபுவும், அவர் மனைவியாரும், இம்மாதம் 24-ம் தேதியாகிய திங்கட்கிழமை காலை சென்னைஎழும்பூர் ரெயில்வே ஸ்டேஷனில் வந்திறங்குவார்கள். கவர்னர் அவர்களின் சபா மண்டபத்தில் வைசிராய் பல சங்கத்தாரால் வந்தனோபசாரப் பத்திரங்கள் வாசிக்கப்பெறுவார். இவைகளில் நமது தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கமுமொன்று. மாலை சென்னைக் கோட்டையையும் துறை முகத்தையும் பார்த்துவிட்டு, ஜார்ஜ்டவுன் வழியாய் சவாரி போவார். அதன்பின் கவர்னர் மாளிகையில், விருந்து கச்சேரியும், லெவியும் நடக்கும். 25-ம் தேதி செவ்வாய்க்கிழமை காலை சென்னை சர்வ கலாசாலையைச் சார்ந்த புஸ்தக சாலைக்கான கட்டிடத்தின் அஸ்திவாரக்கல் நாட்டுவார். பிறகு ஐகோர்ட்டைப் பார்ப்பார். பிற்பகல் திருவாங்கூர் மகாராஜா, கொச்சி, புதுக்கோட்டை இராஜாக்கள் இவர்களுக்குப் பேட்டி கொடுத்துவிட்டு மவுன்ட்ரோடு வழியாய் கெண்டிக்குப்போய் அங்கு டீ சாப்பிட்டு விட்டு, அங்கிருந்து அடையாறு, மயிலாப்பூர் வழியாய் கடற்கரையோரமாக சென்னைக்குத் திரும்புவார். 26-ந்தேதி புதன்கிழமை காலை சென்னை முனிசிபல் ஆபீசின் புதிய கட்டிடங்களைத் திறந்துவைப்பார். முனிசிபாலிட்டியாரால் வந்தனோபசாரப் பத்திரம் வாசிக்கப்பெறுவார். மாலையில் காஸ்மோபாலிட்டன் கிளப்பில் நடத்தப்படும் தோட்டக் கச்சேரிக்குச் செல்வார். அன்று இராத்திரியே சென்னையைவிட்டுப் பிரயாணமாவார். வழியில் கட்டாக், பங்கிப்பூர், ஆல்வார் முதலிய இடங்களைப் பார்த்துக்கொண்டு டிசம்பர்௴ 5-ந்தேதி டில்லிமா நகரம் போய்ச் சேர்வார்.

**அர்ச். பாப்பானவர்.**—நமது பரிசுத்த பிதாவாகிய பத்தாம் பத்திநாதர் குருப்பட்டம் பெற்று முதற்பூசை செய்து, சென்ற செப்டம்பர்௴ 18-ம் தேதியோடு 55 வருடம் பூர்த்தியானது. அவருடைய சீவிய காலத்தின் முக்கிய அம்சங்களின் கால அளவைக் கவனிக்குங் கால், தமது 24-வது வயதில் குருப்பட்டம் பெற்ற இவர் 25-வருடம் குருவானவராயும், 20-வருடம் மேற்றிராணியாராயும், 10-வருடம் பாப்பானவராயு மிருந்திருக்கிறார். இவருக்கு இப்போது வயது 79. இவருடைய சகோதரரும், ஒருவர் தவிர மற்றெல்லா சகோதரிகளும் ஜீவந்தர்களா யிருக்கிறார்கள். ஆனால் இவருடைய திருச்சபைக் குடும்பத்தில், கடந்த பத்துவருஷத்துக்குள்ளாக அநேகர் காலமாய் விட்டனர். இவரை பாப்பானவராகத்தெரிந்துகொண்டபோது இவரோடு அழைக்கப்பட்ட 64 கர்தினால்மார்களில் இப்போது 26 பேரே ஜீவித்திருக்கிறார்கள், மற்ற 38 பேரும் மறுஉலகம் போயினர். 55 வருடங்களுக்கு முன்னே இவர் முதற்பூசை செய்தபோது இவருடன் பூசைசெய்த இருநூறாயிரம் குருக்களில், சுமார் நூற்றுச் சில்வானக் குருக்களே இப்போது உயிரோடிருக்கலாம். இவர் பாப்பானவர் பட்டத்துக்கு வந்த பத்துவருஷத்துக்குள் உலகத்திலுள்ள மேற்றிராணிமார்களில் பாதிக்குமேல் மறைந்துபோய் விட்டார்கள். இவருக்குக் கொடுக்கப்பட்ட அலுவல் இன்னும் முற்றுப்பெற வில்லையாகையால் இவரை சர்வ ஞானம் நிறைந்த பராபரக்கடவுள் பதனமாய்க் காப்பாற்றிக்கொண்டு வருகிறார். நமது அன்புள்ளபத்திநாதர் சிலமாதங்களுக்கு முன்னே அபாயத்திற்குரிய விதமாய் நோயுற்றபோது, திருச்சபை அலுவல்களில் மிக்க சிரத்தையுள்ள கர்தினால்மார்களில் ஒருவர் "நமது பரிசுத்த பிதா நம்மைவிட்டு இதற்குள் பிரியமாட்டார். அதுகூடாத காரியம்; அவர் இன்னும் திருச்சபைக்கு அவசியமாயிருக்கிறார்." என்று உறுதியுடன் மொழிந்தார். அதுஉண்மையாயிற்று. சர்வேசுரன் திருச்சபைத் தலைவரை இன்னும் பலவருடங்களுக்குக் காப்பாற்றுவாராக!



# DOMESTIC OCCURRENCES.

# குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 8-அணா முன்பணம் அனுப்பினாலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட மாட்டா வென்பதை நண்பர்கள் கவனிக்கக் கோருகிறோம். அரைக் கலத்துக்கு மேற்பட்டு முக்கால் கலத்துக்கு உட்பட்டால் முக்கால் ரூபாயாகும். முழுக்கலத்துக்கு ஒரு ரூபாயாகும். கால் ரூபாய்க்கு இவ்விளம்பரங்கள் ஒரு போதும் பிரசுரிக்கப்பட மாட்டா.

## ஜனன அறிக்கைகள்.

### மதுரை.

சென்னை, பூவிருந்தவல்லிவாசி வி. அ. ஞானப்பிரகாசம் அவர்களின் துணைவி ஸ்ரீமதி வியாகுலமரியம்மாள் 1913௵ செப்டம்பர்௴ 21௳ ஞாயிற்றுக்கிழமை பகல் 12½-மணிக்கு, 5-வது பேறான ஆண்குழந்தையை மதுரை முனிசிபல் பிரசவ ஆஸ்பத்திரியில் ஈன்றனள். 1913௵ அக்டோபர்௴ 11௳ சனிக்கிழமையன்று திண்டுக்கல் கனம், சவரிமுத்து அவர்களும். அவரின் துணைவி ஸ்ரீமதி சலேத்மரியம்மாளும் ஞான தந்தை தாயாக விளங்க, மதுரை அர்ச். வியாகுலமாதா தேவாலயத்தில் சங். பிரின்ஸ் சுவாமியவர்களால் ஷை குழந்தைக்கு ஜோசேப் பர்னாந்தோ ஞானப்பிரகாசமென நாமம் சூட்டப்பட்டு, ஞான தீட்சை கொடுக்கப்பட்டது, தாயும் சேயும் சுகமே இருக்கிறார்கள். இவர்கள் ஆத்தும சரீர சுகத்திற்காக உங்கள் ஜெபத்தில் ஒரு. பர. பிரி. திரி. வேண்டிக்கொள்ள கேட்டுக் கொள்ளுகிறேன்.

### இரங்கூன்.

இதனால், நமது சகோதரர் யாவருக்கும் மிக்க வினயத்துடன் அறிவிப்பது யாதெனில், நிகழும் 1913௵ செப்டெம்பர்௴ 22௳ காலை 10½-மணிக்கு பிரிங்காசலத்தில் வசிக்கும் S. இன்னாசிமுத்து அவர்களின் குமாரத்தியும், நல்லாயன் கையொப்ப நேயரில் ஒருவராகிய F. அந்தோனியின் மனைவியுமாகிய ஆரோக்கிய மங்களமரியம்மை ஓர் ஆண்மகவை யீன்றனள். அக்டோபர்௴ 5௳ இரங்கூன் சின்ன காந்தம் அர்ச். அந்தோனியார் ஆலயத்தில் சங்கைக்குரிய இராஜரிஷி A. Meyrieux என்னும் குருவானவர் குழந்தைக்கு தோமாஸ் என்னும் பெயரிட்டு, ஞானதீட்சை அளித்தனர். கனம் G. D. பிரான்சீஸ் அவர்களும் அவர் மனைவி, திரேசம்மாளும் ஞான தந்தை தாயாக நின்றனர். மேற்படி குழந்தையும் தாயும் அர்ச். சூசைமாமுனிவர் ஆசீரால் சுகம்!

இப்படிக்கு,
மேற்படியாரின் மைத்துனர்,
Daniel Barnabas Pillay,
Steamer "Assam" I. F. Company,
9—X—13. Rangoon.

### கல்கத்தா.

நிகழும் 1913-௵ ஆகஸ்டு-௴ 14-௳ வியாழக்கிழமை. Calcutta, Parry & Co., Distillery, in charge Clerk, R. S. Anthony Pillai அவர்கள் மனைவி, லூர்துமரியம்மாள் தேவ ஆசீரால் முதல் பேறாக ஓர் ஆண் மகவை யீன்றனள். அக் குழந்தைக்கு அக்டோபர்-௴ 15-௳ புதன்கிழமை காலையில் அர்ச். உத்தரியமாதாவி னாலயத்தில் சங்கை. இராஜரிஷி J. Drowhin குருதேசிகரால் Francis Rathinasawmy என நாமகரணம் சூட்டப்பட்டு ஞான தீட்சை கொடுக்கப்பட்டது. இதற்குக் கூடலூர் கிளப். கனம் அ. மரி. அந்தோனிப் பிள்ளையும் அவர் மனைவி லூர்து மரியம்மாளும் முறையே ஞான தந்தை தாயாராக இருந்தனர். இக் குழந்தையின் ஆத்தும சரீரத்துக்கு வேண்டிய ஆரோக்கியத்தைக் கட்டளை யிட்டருளும்படி திரியேக தேவனின் திருவடிகளைப் பிரார்த்திக்கின்ற

P. Anantharayan Pillay.

## நன்மரண அறிக்கைகள்.

### தூத்துக்குடி.

என் அருமைத் தாயார் பிச்சை அந்தோனியாள் பருனாந்து அவர்கள் காலராவென்ற கொடிய வியாதியால் தமது இருபுத்திரர்களைப் பரதபிக்க விட்டு, 1912௵ நவம்பர்௴ 18௳ செவ்வாய்க்கிழமை உதயம் 3-மணிக்கு கர்த்தருக்குள் நித்திரை யடைந்தனள். ஷையார் மரணமடைந்த நாளின் ஞாபகார்த்தமாய், நிகழும் நவம்பர்௴ 18௳ செவ்வாய்க்கிழமை தூத்துக்குடி ஜேசுவின் திரு இருதய ஆலயத்தில் ஷையாருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக திவ்விய

பலி பூசை செய்து ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறுங் கத்தோலிக்கு நேயர்களனைவரையும், இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர. பிரி. திரி. வேண்டிக் கொள்ளப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,
தாயை இழந்து பரதபித்து நிற்கும்
குருணுக்கல். ச. சந்தியாகு பர்னந்து.
கல்கத்தா.

---

பல்லாரி, ஜே. இலா. பிரான்சிஸ்கு உபாத்தியாயருடையவும் மங்கள மரியம்மாளுடையவும் தவித புத்திரனாகிய மரியப்பிள்ளை சிலநாட்களாய் வியாதியால் மெலிவுற்றிருந்து, நிகழும் 1913ஆ செப்டெம்பர்ௗ 14ௗ மாலை 6-மணிக்கு தந்தை தாயாரும், இருசகோதரர்கள், இரு சகோதரிகள், இன்னும் ஏராளமான பந்து ஜனங்களும், நேசர்களும் துக்க சாகரத்திலமிழ்ந்த கல்கத்தாவில் மரண மடைந்தனன். அவனது சடலம் அடுத்த நாள் நல்லடக்கம் செய்யப்பட்டது.

பிராயம் 14-ஆ 6-மீ 29-நாள். இதைக் கண்ணுறுஞ் சகோதரர்கள், மேற்படி ஆத்தும இளைப்பாற்றிக்காக அடியில் வரும் மனவல்லய செபத்தை வேண்டிக் கொள்ளக் கோருகிறேன். "அவஸ்தைப்பட்ட சேசுவின் திரு இருதயமே! மரிக்கிறவர்களின் பேரில் இரக்க மாயிரும்." (300 நாட் பலன்.)

இங்ஙனம்,
மேற்படி சிறுவனின் சிறிய தந்தை
ஜே. இலா. சேபஸ்தியான்.
Clerk, General Post Office,
Calcutta.

## சாமான் வரவேற்பு.

## எக்ஸ். பி. பாய்வா, கொழும்பு.

கிறிஸ்ட்மஸ் சாமான்கள்.—அடுத்த மாதம் நிகழப் போகிற நமது திவ்விய கர்த்தரின் ஜனன மகோற்சவ கொண்டாட்டத்துக்கு, விசேஷமாய், சுவாமி பிறந்த கொட்டகைச் சிங்காரத்துக்கு அநுகூலமான சுரூபங்கள், படங்கள், பூமாலைகள் முதலிய ஜோடினைச் சாமான்கள் ஆகிய இவைகளின் மாதிரிகளிற் சிலபேர்போன கொழும்பு வியாபாரியாகிய எக்ஸ். பி. பாய்வ என்பவரால் எமது பார்வைக்கு அனுப்பப்பட்டன. அவைகள் ஷை விஷயங்களுக்கு மெத்த தகுதியானவைகளாயும் அழகுள்ளவைகளாயும் குறித்த விலை பெறுமதி யுள்ளவைகளாயுமிருக்கின்றன. இந்த சாமான்களின் விவரங்களறிய விரும்புவோர்கள் இப்பத்திரிகையின் கவர் எட்டின் பின்பாதி உட்பக்கத்தி லுள்ள ஷையாரின் விளம்பரத்தைப் பார்க்க.

## CAUTION.

Mr. C. A. Silveira of 2/74, Broadway, Madras, has registered his medicines under the name of "Veeramamunivar" The Public are warned against any imitation or counterfeits of the same. Any person using this name and deceiving the public will render himself liable to prosecution.

Madras, 21—10—13. } A. D. ZACHEUS, B.A.B.L. High Court Vakil.

## எச்சரிக்கை.

சென்னை. பிராட்வே, 2/74 நெ. கிருகத்திலுள்ள சி. ஏ. சில்வெயிராபண்டிதர் தம்முடைய மருந்துகளை "வீரவாமுனிவர்" பேரால் ரிஜிஸ்தர் செய்திருக்கிறார். இதன் பாவனையாய் மற்றவர்கள் செய்யும் போலி மருந்துகள், கள்ள மருந்துகளை வாங்கி மோசம் போகாதபடி இதனால் சகலமான ஜனங்களும் எச்சரிக்கை செய்யப்படுகிறார்கள். இந்தப் பெயரை உபயோகப்படுத்தி, ஜனங்களை யேமாற்றும் நபர்கள் தண்டனைக் குள்ளாவார்கள்.

மதுராஸ், 21—10—13. } ஏ. டி. சாக்கியஸ், B.A.B.L. ஐகோர்ட் வக்கீல்.

## எடப்பாடி அர்ச். செல்வநாயகி அம்மாள் ஆலய தர்மம்.

---

அடியில் கையொப்பமிட்டிருக்கும் நாம் உதார குணமுள்ள சகல நண்பர்களுக்கும் அறிவிப்பது யாதெனில்:—

எடப்பாடி அர்ச். செல்வநாயகி அம்மாளின் திருவாலயத்திற்கு பிரதி வருஷமும் பாஸ்கு பண்டிகையின்போது திருயாத்திரைக்காரர் அவள் திருவடியைப் போற்றி, அவள் உதவியைக் கேட்கத் திரளாய் வருவது யாவருக்கும் தெரிந்த விஷயமே. அப்படி வருகிறவர்களுக்குத் தகுந்த விடுதிகளும், சாவடி சத்திரங்களுமில்லாமையால் கடும் வெயிலின் வெப்பத்தினால் அவர்கள் தவித்தலைவதைக் கண்டும், பொருளுதவி யில்லாமையால் நாம் அவர்கள் கஷ்டத்தீத நிவர்த்தி செய்ய நாளது வரையில் கூடாமற் போனதைப்பற்றி அதிக வியாகுலப்படுகிறோம். ஆகிலும், அர்ச். செல்வநாயகி அம்மாளை நம்பி இப்போது இந்திய கிறிஸ்தவர்களுக்கு ஒரு சாவடியும், வெள்ளைக்காரர்களுக்கு மற்றொரு சாவடியும் கட்ட ஏற்பாடு செய்வதோடு, கோவிலை மராமத்து செய்யவும் துணிந்து, ஏறக்குறைய ரூ 2,500 பெறும்படியான கட்டிடங்களைத் துவக்கிவிட்டோம். தரும சிந்தையுள்ள மரியாயின் தாசர்கள் உடனே நமக்கு கைகொடுத்து இந்த மேன்மையான வேலைகளைச் சீராய் முடிவு செய்ய உதவிபுரியவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். இதைக் கண்ணுறும் சகல கனதனவான்களும், சகல கிறிஸ்துவர்களும் தம் தம் மா லியன்றமட்டும் இந்த காரியத்திற்கு பொருளுதவி செய்வார்களென்று நம்பிக்கையாயிருக்கிறோம். நண்பர்களுடைய தர்மம் எவ்வளவு சிறியதேனும் சந்தோஷமாய் அங்கீகரிக்கப்படும். தேவதாயானவள் அவர்களையும் அவர்கள் குடும்பங்களையும் ஆசீர்வதிப்பாளென்பது திண்ணம்.

| | ரூ: | அ. | ப. |
|---|---|---|---|
| ஷை தருமத்துக்காக ஏற்கெனவே வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை. | 371 | 12 | 0 |
| Mr. S. M. ராஜு முதலியார், பெங்களூர் | 5 | 0 | 0 |
| Doctor G. டோமினிக் அற்புதமரியம்மாள், பெங்களூர் | 5 | 0 | 0 |
| Mr. செல்வம், நங்குவளி | 5 | 0 | 0 |
| ,, L. Lesage, Magasivier செய்கோன் | 1 | 8 | 0 |
| ,, மரிய சூசை, செய்கோன் | 1 | 8 | 0 |
| ,, S. Samore, செய்கோன் | 1 | 8 | 0 |
| ,, Constent, செய்கோன் | 1 | 8 | 0 |
| ,, A. S. Lesage, செய்கோன் | 1 | 8 | 0 |
| ,, B. ராசய்யா, செய்கோன் | 1 | 8 | 0 |
| ,, J. D. தம்பி, செய்கோன் | 1 | 8 | 0 |
| ,, சாமிநாதந் தம்பி, செய்கோன் | 1 | 8 | 0 |
| ,, L. அண்ணுசாமி, செய்கோன் | 1 | 8 | 0 |
| ,, M. J. Xavier, எய்பாங்கு | 1 | 8 | 0 |
| ,, அமிர்தம், செய்கோன் | 1 | 8 | 0 |
| ,, T. S. சாந்தப்ப பிள்ளை, சேலம் | 5 | 0 | 0 |
| ,, ஆரோக்கியம், சவரிபாளையம் | 5 | 0 | 0 |
| ,, இன்னுசிமுத்து, கைவாடி கரனூர் | 5 | 0 | 0 |
| ,, அந்தோனிமுத்து, எடப்பாடி | 1 | 0 | 0 |
| Mr. பிரான்சீஸ் ஜோசேப், கோக்டேக் | 2 | 0 | 0 |
| ஆக மொத்தம் ரூ: | 421 | 4 | 0 |

எடப்பாடி கத்தோலிக்குக்கோவில் } ஜே. ஞானதிக்கம், விசாரணை குரு.

## நல்லாயன் ஆபீசு அச்சுயந்திரத்துக்காக நன்கொடை.

---

நாம் சென்ற சூன் மீ சஞ்சிகையினுள் அடக்கஞ் செய் தனுப்பிவைத்த அப்பீல் மனுவை அநேக நண்பர்கள் கவனித்தார்களில்லை போலும். ஏனெனில், மிகவுங் கொஞ்சம் பேரே அதற்கு விடையனுப்பி யிருக்கிறார்கள். மற்ற நண்பர்களுந் தங்கள் தங்களாலியன்ற மட்டுந் தருமஞ் செய்து எம்மைக் கடனென்னும் நிர்ப்பாகியத்தினின்று காப்பாற்றி இரட்சிப்பாரெனக் கோருகிறோம். பலதுளி பெருவெள்ள மென்பதைச் சிந்தித்து, ஒருவரும் இல்லை யென்னுமல் ஒவ்வொருவரும் சொற்ப தொகையாவது கொடுத் துதவுவார்களாக! இதற்காக இம்மாதத்தில் வரப்பெற்ற தொகை பின் வருமாறு. இந்த நன்கொடையாளர்களுக்கு எமது நன்றியறிந்த வந்தனம்.

| | | |
|---|---|---|
| ஏற்கெனவே வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை. | 105 | 4 |
| Mr. V. அடைக்கலசாமி பிள்ளை, பல்லாரி, | 3 | 0 |
| ஓர் நண்பர், சென்னை | 5 | 0 |
| Mr. சூசை பெர்னந்து, தூத்துக்குடி | 1 | 0 |
| ,, V. கேசவலு சாமிநாதன், ரங்கூன் | 1 | 0 |
| ,, V. வேதநாயகம், Kuala Kuran Bagan Serai | 1 | 12 |
| ,, சாமுவேல் டேவிட், பங்களூர் | 1 | 0 |
| ,, R. V. இராயப்பன், ரங்கூன் | 1 | 0 |
| ,, J. P. பேரோா, அஞ்செங்கோ | 1 | 4 |
| ,, C. D. பிரான்சிஸ், கின்டாட் | 0 | 12 |
| ,, C. S. தேவ சகாய்ம பிள்ளை, கோயம்பத்தூர் | 0 | 8 |
| ,, குரூஸ், நவாலாபிட்டியா | 0 | 14 |
| ,, பிரான்சீஸ் ஜோசப், கோக்டேக் | 1 | 0 |
| Total Rs. | 123 | 6 |

பத்திராதிபர்.

ரசாயன அரண்மனையில் செய்த

# கைகண்ட அபூர்வ மருந்துகள்.

## ஹரிதாசர் வெள்ளி யெண்ணெய்.

சகல விதமான கரே மேக சம்பந்தமான வியாதி, கண்டமாலை, ஆருத ரணங்கள், அசுத்த ரத்தம், மேகநீர், படை, கட்டி, பிளவை, நீரிழிவு, நாள்பட்ட சொறி முதலியவைகள் அடியோடே நீங்கும். அசல் வெள்ளியிலும் மூலிகைகளிலுமே ஹரிதாசருடைய முறையின் படி செய்யப்பட்டது; மிகவும் கைகண்டது:—இதை உபயோகித்தபின், நமக்கு நன்றியறிந்து வந்தனம் எழுதியவர் அநேகர். இந்த மருந்து முதல் ரூ. 5-க்கு விற்கப்பட்டது. இப்பொழுது, அநேகருடைய வேண்டுகோளால், சிலகாலத்துக்கு பலரும் வாங்கி உபயோகித்து நன்மையடையும் பொருட்டு ரூ. 2. 8. க்கு விற்கப்படுகிறது. வேண்டுவோர் சீக்கிரம் எழுதிப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

### ஹரிதாசர் காலராதுளி.

வாந்திபேதிக்கும், சகல பேதி, வயிற்றுவலி அஜீரண சம்பந்தமான வியாதிகளுக்கும் கைகண்ட உப்புத்துளி மருந்து. இம்மருந்தை யுபயோகித்ததில் ஒரு காலரா கேஸாவது மரணமாக முடியவில்லை. புட்டி விலை 1-க்கு ரூ 1-4-0

### ஹரிதாசர் ஹேர்பல் பெயின் பாம்.

இதைவிட கைகண்ட மேல் பூச்சு மருந்து எங்கும் கிடையாதென்று, வாங்கி உபயோகித்தவர்கள் எல்லாரும் சொல்லுகிறார்கள். தலைவலி, கால் கை வலி, இடுப்பு வலி. முழங்கால் வலி, மார்புவலி, பாரிசவாய்வு, முதலிய எவ்விதமான உடம்புவலியும் சீக்கிரத்தில் நீங்கும். ஒவ்வொரு வீட்டிலும், எப்பொழுதும் இம்மருந்து ஒன்று இருக்க வேண்டியது. விலை அணா 10.

### ஹரிதாசர் நேர்வைன் அல்வா.

இதை ஒழுங்காய் சாப்பிட்டு வந்தால் தளர்ந்து போன நரம்புகள் பலப்படும். கை, கால், தலை நடுக்கம் நிற்கும்; பலமுண்டாகும். உடம்பிலுள்ள சகல விதமான சக்திகளும் பலப்பட்டுக் கொண்டே வரும். இதில் தேகத்திற்கு வலிவைக் கொடுக்கக்கூடிய அநேக மூலிகை சத்துக்களும், மருந்துகளும் சாஸ்திர கிரமப்படி சேர்க்கப்படிருந்த போதிலும், வாய்க்கு அதிக உருசியாயும் இருக்கும். பசி அதிகமாம். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் யாவரும் உபயோகிக்கலாம். ஒரு பவுன் பாட்டில் விலை ரூ. 3.

### ஹரிதாசர் என்னுத்தைலம் (ஸ்நான தைலம்)

மேகச்சூடு தணியும்; மேகவியாதி குறையும்; ஞாபகசக்தி யுண்டாகும்: சகல விதமான கண் வியாதிகள் நீங்கும்; குளிர்ச்சியையும், சுகத்தையும் தரும்; முடியையும் வளர்க்கும்; யாவரும், எப்பொழுதும் உபயோகிக்கலாம்.-ஐயா, தேவதாஸ் பிள்ளை பி. ஏ. அவர்களுக்குஎழுதுவது:- உங்களுடைய என்னுத்தைலம் மூன்று ஸ்நாநம் செய்ததில், மங்கலாயிருந்த என் இடது கண், வலது கண்ணைப்போல தெளிவாகி விட்டது. இதை சந்தோஷத்துடன் அறிக்கை யிடுகிறேன்.—இப்படிக்கு தங்கசாமி பிள்ளை, ஹெட்மாஸ்டர், கவர்ன்மெண்ட் டிரெயினிங்ஸ்கூல், பெங்களூர்.

அறிக்கை:—இன்னும் பலவிதமான ஸ்நான தைலங்கள் உண்டு: தைலம் வேண்டுவோர் வியாதியின் குறிப்பைத் தெளிவாக எழுதினால் தகுந்த தைலம் அனுப்பப்படும். ஸ்நான தைலங்கள் எல்லாம் (4 அவுன்ஸ்) புட்டி 1 க்கு ரூ. 1.

### ஹரிதாசர் கூந்தல் எண்ணெய்கள்.

புஷ்ப எண்ணெய்:—பரிமள வாசனை யுள்ளது (3 அவுன்ஸ்) புட்டி 13 அணா. ஹரிதாசர் கூந்தல் எண்ணெய் வாசனை குறைந்தது. தலை மயிரை வளர்க்கும்: நாள் பட உபயோகித்தால், முடிவளரும்; சூடும் தணியும் ரூ. 1.

வியாதியைப் பற்றித் தெளிவாய் எழுதினால் தகுந்த மருந்தும் விலையும் தெரிவிக்கப்படும். பதில் கடிதத்துக்கு ஸ்டாம்பும், மேல் விலாசம் தெளிவாய் எழுதியும் அனுப்பவேண்டியது. இங்கிலீஷில் எழுதினால் நல்லது.

H. தேவதாஸ் பிள்ளை: பி- ஏ.
மானேஜர், ரசாயன அரண்மனை,
2/98. பிராட்வே, மதராஸ்.

# நல்ல ஆயன்.

December.—1913.

புத்தகம். 11 | "நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10:17-14.) | நெம்பர். 12

## ON VENIAL SIN.

## அற்பப் பாவத்தின் பேரில்.

(முன் தொடர்ச்சி.)

### III. பிரிவு.

### அற்பப் பாவத்துக்காக சர்வேசுரன் இடும் தண்டனை.

தண்டனையானது நிழலைப்போல பாவத்தைப் பின்தொடர்ந்து வருவது. ஒரு பொருளின் பருமனை அதன் நிழலைக்கொண்டு நாம் அறிந்துகொள்ளுவதுபோல, பாவத்துக்கு வரும் தண்டனையைக் கொண்டு பாவத்தினால் விளையும் பொல்லாப்பு எவ்வளவு நிஷ்டூரமானதென அறிந்துகொள்ளலாகும். சர்வேஸ்வரன் கோணாத நீதியுடையவராயும் அளவறுக்கப்படாத ஞானமுடையவராயு மிருக்கிறார். மனித சுபாவத்துக் கடுத்த ஆத்திரம், பதட்டம், அறியாமை, குரோதம், பகை முதலியவைகள் அவரிடத்தில் கிடையா. ஆனபடியால் ஒவ்வொரு அக்கிரமத்துக்கும், அளவான தண்டனையே விதிப்பாரென்பது திண்ணம். நியாயத்துக்கு விரோதமான அளவாய்த் தண்டிப்பது அவருடைய சுபாவத்துக்கு எட்டுணையும் பொருந்தாது. அற்பப்பாவத்தின்பேரில் நமக்கு பயமும் அருவருப்புமுண்டாகும்படி சர்வேசுரன் அப்பாவத்துக்காக இம்மையிலே மனிதனை யெப்படி தண்டித்திருக்கிறா ரென்றும், மறுமையில் ஏப்படி தண்டிக்கிறா ரென்றும் யோசித்துப் பார்ப்போமாக.

பழைய ஏற்பாட்டில் சொல்லியிருக்கிறபடி மோயீசன் தேவப் பிரியரா யிருந்தார்! இவரைக்கொண்டே சர்வேசுரன் தம்முடைய பிரஜைகளை எஜிப்து தேசத்து அரசனின் அடிமைத்தனத்தினின்று மீட்டார். தெய்வ சித்தத்துக் கமைந்து இவர் இஸ்ராயேலரை யழைத்துக்கொண்டு வாக்குத்தத்தத்தின் பூமிக்குப் பிரயாணமாகச் செல்லும்போது, வழியில் தேவதூதன் ஒருவர் கோப முகத்தோடு தோன்றி இவரைக் கொன்றுபோட எத்தனித்தார். தெய்வத்துக்கு உகந்தவரா யிருந்த இவர் சிரசாக்கினை செய்யப்படும்படியாய் புரிந்த குற்றமென்ன? தமக்குப் பிறந்திருந்த குழந்தைக்கு விருத்தசேதனஞ் செய்ய பூரண மனசுடையவரா யிருந்தா ரென்றாலும், அந்தப் பச்சைப் பாலகன் விருத்தசேதனத்தின் வேதனையைப் பொறுக்கமாட்டானென்று எண்ணி அதை, நிறைவேற்ற கொஞ்சந் தாமதித்ததுவே அவரது குற்றமாகும். இந்த அற்பக்குற்றத்திற்காக சம்மனசானவர் அவரைக் கொல்லப் போவதைப் பார்த்த அவருடைய மனைவியான சேபோரா என்பவள் உடனே அவ்விடந்திலேயே குழந்தைக்கு சடங்கை நிறைவேற்றித் தன் புருஷனின் உயிரைக் காப்பாற்றினாள்.

பெத்தேலி லிருந்த ஜெரோபாம் அரசன் அண்டைக்கு தேவ கட்டளைப்படி ஜெருசலேமி லிருந்து தீர்க்கதரிசி யொருவர் போனார். இவர் போகிற வழியாய்த் திரும்பக்கூடா தென்றும், வழியில் ஒன்றுஞ் சாப்பிடாமலும், பானம் பண்ணாமலும் பிரயாணஞ் செய்யவேண்டு மென்றும் சர்வேசுரனால் கற்பிக்கப்பட் டிருந்தார். இந்த தேவ கட்டளைப்படி இவர் சுத்த உபவாசமா யிருந்தது மன்றி, பெத்தேலி லிருந்து வேறுமார்க்கமாய்த் திரும்பி வருகையில், கள்ள தீர்க்கதரிசி ஒருவன்

இவரைச்சந்தித்து சொன்னதாவது: "உம்மைப்போல நானும் தீர்க்கதரிசிதான். உம்மை அழைத்துக்கொண்டுபோய் என் வீட்டில் போசனமும் தண்ணீருங் கொடுக்கும்படி கர்த்தருடைய தேவதூதனால் கற்பிக்கப்பட்டிருக்கிறேன் வாரும்" என்று சொல்லி ஏமாற்ற, இவரும் அவனோடு போய் அவன் வீட்டில் போசனஞ்செய்து பானம் பண்ணினார். இப்படி தீர்க்கதரிசி ஏமாறிப்போய்ச் சாப்பிட்டபடியினால் கனமான குற்றத்தைக் கட்டிக்கொண்டவரல்ல. ஆயினும் அவர் பிரயாணமாகிப் போகையில் காட்டிலிருந்து ஒரு சிங்கம் தேவதிருவுளப்படி அவர்மேல் பாய்ந்து அவரைக் கொன்றுவிட்டு, தேவ கட்டளைக்கு விரோதமாய்ச் சாப்பிட்டதற்காகவே இப்படித் தண்டிக்கப்பட்டாரென்று தெரியச்செய்ய அந்த மிருகேந்திரன் அவர் சடலத்தை விழுங்காதபடி அது அடக்கஞ் செய்யப்படும்பரியந்தம் அதைக் கட்டிக் காத்துக்கொண்டிருந்தது. விநோதப் பிரியத்தின் நிமித்தம் அக்கினியாற் சுட்டெரிக்கப்பட்ட சோதோம் பட்டணத்தை லோத் என்றவருடைய பெண்சாதி திரும்பிப் பார்த்ததற்குத் தண்டனையாக உப்புத்தூணாய் சமைந்தாளென வேதப் புத்தகத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. தாவீது இராசா தம்முடைய சேனையின் அபிவிருத்தியைப் பற்றி வீண் பெருமை கொண்டதற்குத் தண்டனையாக அவருடைய தேசத்தில் கொள்ளை நோய் உண்டாகவும், அதனால் மூன்றுநாளைக்குள் எழுபதினாயிரம்பேர் மாண்டுபோகவும் சர்வேசுரனுக்குச் சித்தமானது. ஆரோனின் குமாரர்களான நாடாப், அபிஹியூ என்ற இருவரும் மந்திரிக்கப்படாத நெருப்பை தூபகலசத்துக்கு உபயோகித்துக் கொண்டதற்காகக் கொல்லப்பட்டார்கள். இப்படி அற்பப் பாவத்தின்பொருட்டு சர்வேசுரன் மனிதர்களைக் கடினமாய்த் தண்டித்தார் என்பதற்கு இன்னும் எத்தனையோ உதாரணங்கள் பழைய ஏற்பாட்டிற் காணலாம்.

சாவானபாவங்களைக் கட்டிக்கொண்ட அநேகரை சர்வேஸ்வரன் உடனே தண்டியாமல் விட்டு, அவர்கள் ஒரு அற்பப் பாவத்தைக் கட்டிக்கொண்ட க்ஷணத்திலேயே அவர்களைத் தண்டிப்பதாய் பல ஞான சரிதாசிரியர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இதை நாம் அபினதாபுடைய குமாரனை ஓஸா விஷயத்திற் காணலாம். ஓஸா என்பவன் தேவன் கற்பித்ததற்கு விரோதமாய் தேவ வாக்குத்தத்தின் பெட்டியை எருதுகளைக் கொண்டு இழுக்கச்செய்து கனமான குற்றத்தைக்கட்டிக்கொண்டதற்காகத் தண்டிக்கப்படாமல், அந்த தேவப் பெட்டகமானது மாடுகள் மிரண்டதின் நிமித்தம் சாய, அதைச் சங்கையீனமாய் அவன் தன் கைகளால் தாங்கினதற்காக உடனே கொல்லப்பட்டான். இவ்வளவு கடினமாய் சர்வேசுரன் அற்பப்பாவத்துக்காக மனிதனைத் தண்டித் திருக்கையில், நாம் அப்பாவங்களுக்காக அஞ்சாமலும் பயப்படாமலுமிருக்கலாமோ? அவைகளைக் கட்டிக்கொள்ளும்போது அவைகளுக்குரிய தண்டனையை நம்மேல் வருவித்துக்கொள்வதோடு நம்முடைய சாவானபாவங்களுக்கு உரிய தண்டனையையும் வருவித்துக் கொள்கிறோமல்லவா?

இன்னும் திருச்சபை சரித்திர மூலமாயும், ஞானப் புத்தகங்கள் மூலமாயும் அற்பப் பாவங்களுக்காக சர்வேஸ்வரன் இவ்வுலகத்திலேயே இட்ட தண்டனைகள் எவ்வளவோ பயங்கரத்துக் குரியவைகளென அறிந்துகொள்ளலாம். புண்யவாளனைச் சிறந்து விளங்கின ஹிலாரியார் தமக்குச் செபத்தில் உண்டான பராக்கு, அசட்டைத்தனம் இவை முதலானவைகளைச் சரிவர விலக்காததற்காக அவரைக் கடினமாய்க் குத்தவும், அடிக்கவும், வாதிக்கவும் பசாசுக்குச் சர்வேசுரன் உத்தாவு கொடுத்திருந்தாரென்று . அர்ச். ஜெரோம் எழுதிவைத்திருக்கிறார். அர்ச். ஜெரார்ட் என்பவர் ஒரு இளம்பெண்ணை உற்றுப்பார்த்ததன் நிமித்தம் குருடராக்கப்பட்டாரென்று மடாதிபதியான அர்ச். ஓடோ என்பவர் சொல்லியிருக்கிறார். பல்லாடியுஸ் என்னும் ஒரு சரிதாசிரியர் எழுதிவைத்திருப்பதாவது: ஒரு புண்யவாளன் வனாந்தரத்தில் ஒதுங்கியிருந்து தன்னைத்தானே ஒறுத்து கடின தபசுசெய்துவந்தார். அவருக்கு தயை நிறைந்த சர்வேசுரன் ஒரு தேவதூதனைக்கொண்டு அப்போதைக்கப்போது உயர்தரமானதும் உருசிகரமானதுமான அப்பத்தை யனுப்பிக்கொண்டுவந்தார். இப்படியாய் இவர் அந்த வனாந்திரத்தில் வெகுகாலம் இருந்



துவருங்கால், ஒருநாள் தாம் மற்றவர்களைவிட அதிக பாக்கியம் பெற்றவராகவே யிருக்கிறோமென்று தமக்குள் சிந்தித்துக்கொண்டிருந்தார். அப்போது சர்வேசுரன் அவரைத் தண்டிக்க உருசிகரமுள்ள உயர்தர அப்பத்தை யனுப்பிவையாமல் கடைத்தரமானதை யனுப்பிவைத்தாராம். உரோமை பிரான்சீனம்மாள் ஒருநாள் சும்மா சற்றுநேரம் தனது அறையில் உட்கார்ந்திருக்கையில் திடீரென் கன்னத்தில் கனமாய் அறையப்பட்டாள். அப்போது அவள் தன்னை யடித்தது யாரென்று அறிய சுற்றிலும்பார்த்தபோது ஒரு தேவதூதன் அவளுக்குக் காணப்பட்டு "நீ வீண் காலக்ஷேபம் செய்வதற்காகவே அந்த அறையை நான் உனக்குக் கொடுத்தேன்" என்றார். இன்னும் இப்பேர்ப்பட்ட உதாரணங்கள் எத்தனையோ உண்டு.

மறு உலகத்தில் அற்பப்பாவத்துக்காக இடப்படும் தண்டனை மிகவும்பயங்கரத்துக் குரியதாயிருக்கின்றது. அர்ச். தோமாசு அர்ச். பொனவெந்தூர் இன்னும் மற்ற வேதசாஸ்திரிகளும் இதுவிஷயத்தில் கொள்ளும் அபிப்பிராயம் யாதெனில்: ஒருவன் தேவ இஷ்டப்பிரசாதத்தைப் போக்கடித்துக்கொண்டு இறந்து சாவானபாவங்களோடும், பொறுத்தலடையாத அற்பப்பாவங்களோடும் நரகத்துக்குப் போவானானால், அவ்விடத்தில் இவைகளுக்கும் அவைகளுக்கும் நித்தியகாலத்துக்குத் தண்டிக்கப்படுவான் என்பதேயாம். அதேனென்றால் நரகத்தில் இரட்சண்யமில்லை. மேலும் அற்பப்பாவங்களுக்குப் பொறுத்தலுமில்லை பரிகாரமுங் கிடையாது. ஆகையால், அற்பப் பாவமானது எவ்வளவோ கேட்டுக்குரியதென்பது அறியக்கிடக்கின்றது.

தங்கள் அற்பப்பாவங்களுக்காக இவ்வுலகில் உத்தரியாத புண்யாத்துமாக்கள் உத்தரிக்கிற ஸ்தலத்தில் அவைகளுக்காக கண்டிப்பாய் உத்தரிக்க வேண்டியவர்களாவார்கள். ஒருவன் பொய் ஒன்று சொன்னதற்காக ஒரு அக்கினி குண்டத்தில் உயிரோடு போட்டு சுட்டெரிக்கப்படுவானானால், "அந்த ஆக்கினையை மகா கொடிய ஆக்கினை என்போமல்லவா? ஆயினும் அவன் அதிற் போடப்பட்ட சில நிமிஷங்களுக்குள்ளாக உயிர்துறந்து அந்த வாதனையை தன் சர்வாங்கத்தில் உணரமாட்டான். ஆனால் சொல்லமுடியாத உக்கிரமுடைய அக்கினியில் ஒரு ஆத்துமம் வெகுநாளைக்குசாகாமற் சுட்டெரிக்கப்படுமானால் அந்த வேதனையானது எவ்வளவோ அகோரமாயிருக்கும்! அர்ச். அகுஸ்தீன் சொல்லியிருக்கிறபடி நரகத்து நெருப்புக்கும் உத்தரிக்கிற ஸ்தலத்திலுள்ள நெருப்புக்கும் வித்தியாசமில்லை. நரகத்தில் பாவிகளைச் சுட்டெரிக்கிற நெருப்பே தங்கள் பாவங்களுக்காக உத்தரியாதவர்களை உத்தரிக்கிற ஸ்தலத்தில் சுட்டெரித்து அவர்களைப் பரிசுத்தவான்களாக்குகின்றது. நரகத்திலுள்ள நெருப்பு நித்தியமானதென்றாலும் உத்தரிப்பு ஸ்தல நெருப்பும் நீடிய வாக்கினைக்குரியதென்றே சொல்லத்தகும். அதேனெனில், அதில் வேகிற பரிசுத்த ஆத்துமாக்கள் தங்களிடத்திலுள்ள ஆசை, அன்பு, பற்றுதல், பிரியம் முதலானவைகளையெல்லாம் சர்வேசுரன் பேரிலேயே செலுத்தி அவரை முகமுகமாய்த் தரிசிக்கவும், அவரோடுகூட ஒன்றித்திருக்கவும் ஆவலாய் ஆசிக்கிறார்களேயன்றி வேறு எந்த வஸ்துவின் பேரிலும் அவைகளைச் செலுத்த சொல்லமுடியாத உபேட்சையுடையோராயிருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய உத்தரிப்புக்கடன் தீருமட்டும் அவர்கள் ஆவலாய்த் தேடும் சர்வேசுரனைக் காணமுடியாதவர்கள் ஆகையால், அவர்கள் பொறுக்கமுடியாத வேதனையை அநுபவிக்கிறார்கள். இந்த வேதனையின் அகோரமானது அவர்களுடைய உத்தரிப்பு காலத்தை நீடியதாய்த் தோற்றுவிக்கின்றது. இப்படி இவ் வாத்துமாக்கள் அநுபவிக்கும் வேதனையை ஒழித்து, தம்மோடு மோக்ஷ பேரின்ப பாக்கியத்தைச் சுகிக்கும் பொருட்டு அவர்களைத் தம்மண்டைக்கு வரவழைத்துக்கொள்ள சர்வேசுரன் இரக்கமுடையவராயிருக்கிறார் என்றாலும், அவருடைய நீதியானது அவர்களை அக்கினியாற் சுட்டெரிக்க அவரை உடன்படுத்துகிறது. அரசன் ஒருவன் தன் மனதிற்கினிய சுந்தரவதியான ஒரு இராசகுமாரத்தியை மண முடித்துக் கொண்டதன்பின் அவள் தன்னோடு செங்கோற் செலுத்த தன் இராச்சியத்துக்கு வரும்பொழுது அவள் செய்த குற்றமொன்றுக்காக அவளைப்பிடித்துக் கட்டி விலங்கிட்டு சிறைச்சாலையிலடைத்து வாதனைப்படுத்துவானானால், அவள் கட்டிக்கொண்ட குற்றமா

னது அற்பமாகப் பாவிக்கப்படத் தகுமோ? இப்படியாய் சர்வேசுரனும் தம்மால் நேசிக்கப்பட்ட இவர்கள் மரண மடைந்ததற்குப் பிறகு தம்மோடு அரசாள மோட்சத்திற்கு வருகையில், அவர்களைப் பிடித்துக் கட்டி, உத்தரிக்கிற ஸ்தலத்திற் அடைக்கிறார். ஏன்? அவர்கள் கட்டிக்கொண்டிருக்கிற அற்பப் பாவங்களுக்காகவே. அப்படியானால் நாம் அற்பப் பாவங்களுக்குப் பயப்படாமல் அவைகளைக் கட்டிக்கொள்ளத் துணிவு கொள்வது நியாயமா? அர்ச்சியசிஷ்டவர்கள் அவைகளுக்காக எவ்வளவோ அஞ்சி நடுங்கினார்கள். அவர்கள் கட்டிக்கொண்ட அற்பப் பாவங்களுக்காக எவ்வளவோ துக்கப்பட்டு, கடின ஒறுத்தலுக்கும் உபவாசத்துக்கும் தங்களை உள்ளாக்கி அவைகளுக்காக உத்தரித்தார்ள். மவுரீஸ் என்னும் ஒரு பரிசுத்த மேற்றிராணியார் பிறந்த கொஞ்ச நேரத்துக்குள் ஞானஸ்நான மில்லாமல் மரணமடைந்த ஒரு குழந்தைக்கு அதை நிறைவேற்றுவிக்க தம்மாலான முயற்சி செய்யத் தவறினதைப் பற்றி தம்முடைய மேற்றிராசனத் தொழிலை இராஜீநாமா கொடுத்துவிட்டு ஒரு பரதேசியைப்போல் சீவித்துவந்தார். அர்ச். எயுசேபியுஸ் என்பவர் ஜெபத்தில் தமக் குண்டான பராக்குகளை சரியாய் விலக்குகிறதில்லை யென்று அறிந்து, தாம் இனிமேல் யாதொன்றையும் பார்க்காமல் இருக்கத் தமக்குள் உறுதியாய்த் தீர்மானித்துக்கொண்டு எப்போதும் கண்களை மூடிக்கொண்டே யிருப்பார். அர்ச். பவுலா என்பவள் தன்னுடைய அற்பசொற்ப பாவங்களுக்காக எவ்வளவு கண்ணீர் சொரிந்து பிரலாபிப்பா ளென்றால், அவளைப் பார்ப்பவர்கள் எல்லோரும் அவள் அனேக கனமான பாவங்களைக் கட்டிக்கொண்டவளென்றே தீர்மானிப்பார்கள். இப்படிப் புண்யவான்களாய்ச் சிறந்து விளங்கினவர்கள் தங்கள் பாவங்களுக்காகத் தங்களைத் தானே தண்டித்தும் கண்டித்தும் கடின தபம் புரிந்திருக்கையில், எண்ணிறந்த அற்பப் பாவங்களை கட்டிக்கொள்ளுகிற நாம் மாத்திரம் சும்மா காலத்தைக் கழிக்கலாமோ? உத்தரிக்கிற ஸ்தலத்திலே நாம் உத்தரிப்பதற்குப் பதிலாய் எவ்வளவு சுலபமாய் இவ்வுலகத்திலேயே அவைகளுக்காக உத்தரித்துப்போடலாம். இப் பாவங்களை நாம் கட்டிக்கொள்ளக் காரணமானவைகளை யெல்லாம் விலக்கிவிட்டு, ஜெபத்தாலும் தவத்தாலும் தர்மத்தினாலும் இன்னுமற்ற புண்யக் கிருத்தியங்களாலும் அவைகளுக்காக உத்தரிக்கலா மல்லவா?

உலகத்தில் நடப்பதை சிறிது உன்னி யோசித்தால் அது மிக்க பிரமிப்பை யுண்டு பண்ணு மென்பதற்குச் சந்தேக மில்லை. யாருக்காவது கொஞ்சம் தேக சுகம் கெடுமானால், கொஞ்சம் காய்ச்சல், அல்லது தலைவலி, அல்லது பல்நோவு முதலிய நோய்கள் வருமானால் எவ்வளவோ கலக்கத்துக்கும் கவலைக்கும் இடமாகிறது. அவைகளுக்காக எத்தனையோ மருந்து! எத்தனையோ பரிகாரம்! ஆனால் ஆத்துமத்துக்கு அற்பப் பாவங்களினால் வந்துறும் கேடுபாடுகள் மகா கெடுதிக் குரியவைகளாயினும் அவைகளைப்பற்றி கவலைப்படுகிறவர்கள் எத்தனைபெயர்? வியாதியை ஆரம்பத்திலேயே பத்தியம்பரிகாரத்தினால் கண்டியாவிடில் உயிர்ச்சேதம் நேரிடுமென்று பயந்து அதைத் தீவிரமாய்ப் போக்கடித்துக் கொள்ளுகிறார்கள். அற்பப் பாவ விஷயத்திலும் இப்படி நடந்து கொள்ளுகிறார்களா? இல்லையல்லவா? இதனால் ஆத்துமத்துக்கு உயிர்ச்சேத நேரிடக்கூடுமென்று அவர்கள் அறிந்திருந்தும் அதற்கு அஞ்சிப் பயந்து அதை விலக்குகிறார்கள் இல்லை. இதற்குக் காரணம் மனிதர்களிடத்தி லிருக்கும் விசுவாசக் குறைவே. பாவத்தினால் ஆத்துமத்துக்கு விளையும் பொல்லாப்புகளை மாத்திரம் விசுவாசக் கண்களால் பார்ப்பார்களானால், அழிந்து போகிற சரீரத்திற்கு எடுத்துக்கொள்ளுகிற கவலையை விட அழியாத ஆத்துமத்துக்கு அதிக கவலை யெடுத்துக்கொள்வார்களென்பதற் கையமில்லை. ஆகவே, நம்முடைய ஆத்தும க்ஷேம லாபங்களின்பேரில் கவலை கொண்டு அற்பப் பாவங்களை சுறுசுறுப்பாய் விலக்குவோமாக. அற்பப் பாவங்களினால் நம்முடைய ஆத்துமத்துக்கு நேரும் பொல்லாப்புகளை அடிக்கடி நினைவு கூர்ந்துகொண்டு அவைகளுக்காக அஞ்சி நடப்போமாக. அற்பப்பாவங்கள் "தானே என்று சொல்லி அவைகளைக் கட்டிக்கொண்டு மோசம் போகாதபடி யிருக்க, தேவானுக்கிரகத்தை யிரந்து மன்றாடுவோமாக.

---



# THE NATIVITY OF OUR LORD.

## சுவாமி பிறந்த திருநாள்.

எல்லாத் திருநாட்களையும் விட நமது திவ்ய கர்த்தர் பிறந்த திருநாளே மிகப் பெரிய திருநாள். (திருநாளென்பது உசிதமான நாள், பூஜிதமான நாள் எனப் பொருள்படும்) ஆதித்தாயால் விளைந்த பாவ தோஷத்தைப் போக்கி, நம்மை சர்வேசுரனுடைய பிள்ளைகளாக்கி, நமக்கு மோட்ச ராச்சியி சுதந்தரத்தைப் பெற்றுத்தரவே யல்லவோ நமது திவ்ய இரட்சகர் மனுஷாவதாரம் பண்ணினார்? இவ்வாறு நமது பாவ இருளைப் போக்கவந்த ஞான சூரியன் உதித்த நாள் பெரிய நாளன்றோ? இவ்வளவு பெரிய பூஜிதமான நாளை ஞான சந்தோஷத்திலும், நன்றியறிந்த தோத்திரத்திலும் செலவழிக்காமல் அநேகர் அதை மட்டுக்கடந்த போசனப்பிரியத்திலும், குடியிலும், வெறியிலும் மற்ற தகாதவிதமான சரீர சுகபோகத்திலும் செலவழித்து பாவத்தையும் பழியையுங் கட்டிக்கொள்ளுகிறார்கள். இந்த அதியுன்னத திருநாளில் நமது திவ்ய கர்த்தர் மனுஷாவதாரஞ் செய்த விவரங்களையும் அதன் மகத்துவத்தையும் தியானித்து ஞான பலனடையப் பார்ப்பது புத்தி.

தேவன் மனுஷனானது என்ன ஓர் ஆச்சரியம்! தேவாதிதேவன், சர்வ்லோகாதிபதி, யாவற்றையும் ஒரு நொடியில் ஆக்க அழிக்க வல்ல சர்வேசுரன் ஊத்தையில் உதிக்கும் புழுவுக்குச் சமானமான நீச மனுஷனுக்காக, அவனுடைய நாற்ற உடல் கொண்டு நரருருவானது எப்பேர்ப்பட்ட அதிசயம்! நரருருவானதிலும், ஓர் இராஜாதிராஜன் அல்லது சக்கரவர்த்தி யிடத்தில், மாடமாளிகை கூட கோபுரத்தில், சகல சம்பத்தும் சௌக்கியமும் நிறைந்த சமஸ்தானத்தில் பிறக்கச் சித்தமானாரோ? இல்லை; மிக்க கேவலமும் தாழ்மையும் தரித்திரமுந் துன்பமு நிறைந்த அந்தஸ்தில் பிறக்கச் சித்தமாகிறார். ஓர் ஏழைக் கிழத்தச்சன் குடும்பம். ஓர் சிறிய குடிசை வீடு. ஓர் விருத்தாப்பிய கிழவரும், ஓர் இளங் கன்னிகையுமே அக்குடும்பத்தில் உள்ளவர்கள். வேறு துணையில்லை. ஏவலாள் பணியாள் யாருமில்லை. உற்றார் பெற்றாரொருவரில்லை. விழுந்தாலும் இவர்கள் தான்; எழுந்தாலும் இவர்கள் தான். காசு பணங்கிடையாது; சொத்து சுவாதீனங் கிடையாது. கஷ்டஜீவனம். அன்றாடம் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்தால் தான் சாப்பாடு. இல்லையானால் பட்டினி. இப்பேர்க்கொத்த தரித்திர குடும்பத்திற் பிறக்கத் திருவுளமாகிறார் சர்வ வல்ல சர்வேசுரன். தேவாதிதேவனனவர் இவ்வாறு கேவல ஸ்திதியைத் தெரிந்து கொண்டதற்குக் காரண மென்ன வெனிலோ: கொஞ்சத்தில் அழிந்துபோகிற இந்த அநித்திய உலகத்தின் செல்வ சுக போகங்களை வெறுத்து, என்றும் அழியா நித்திய மோட்சானந்த பாக்கியத்தைத் தேடவேண்டுமென்று நமக்குப் போதிப்பதற்காகவே என்பதாம். இது நிற்க, தேவசுதன் தாம் பிறக்கத் தெரிந்துகொண்ட விடமோ மனுஷர் நிவாசம் பண்ணும் வீடல்ல, வாசல்ல-மாடடை கூடம்; மலைச்சாரல்; மாட்டுச் சாணமும் மூத்திரமும் நிறைந்த மலைக் குகை; பனி, குளிர், காற்று, மழை முதலிய காலக் கொடூரங்களுக்குத் தப்ப வசதியில்லாத திறந்த வெளி. காலமோ, பனி குளிர் மிகுதியான மார்கழிமாதம். நல்ல இளவயதான வாலிபரும் தக்க போர்வையின்றி யிருக்க முடியாத நிறைபனிக் காலம். இத்தகையான கடும் பனிக்குளிரில் திறந்த மாட்டுத் தொழுவத்தில் பச்சைக் குழந்தையும், பசும்பிள்ளைத் தாயும், பெரியவரும் என்ன செய்வார்கள் பாவம்! குளிரினின்றுங் காத்துக்கொள்ள கம்பளம் சால்வை முதலிய நற்போர்வைகளுண்டோ? இல்லை. கந்தைத் துகில் தவிர வேறு எந்தத் துணியுங் கிடையாது. குடிசை வீடாயினும் தாங்கள் குடியிருந்த வீட்டை விட்டு, நாட்டை விட்டு, காட்டை யடுத்த மலைச்சாரலை யண்டிப் போய் இவ்வாறு கஷ்டப்படக் காரண மென்ன வெனிலோ: ஜனக்கணக்கு எடுப்பதற்காக, அன்னிய ஊரிற்போய் வசிக்கும் எல்லா ஜனங்களும் தங்கள் தங்கள் சுய நாட்டுக்குத் திரும்பிவரவேண்டுமென்று உரோமைச்சக்கரவர்த்தி அக்காலையில் பிறப்பித்த கட்டளைக்குக் கீழ்ப்படிந்தே அர்ச். சூசையப்பரும் அர்ச். கன்னிமரியாயியும் தாங்கள் தங்கியிருந்த நசரேத்தூரைவிட்டு, தங்கள் ஜென்ம நாடாகிய பெத்லேகூருக்

குப் போனார்கள். போனவிடத்திலே கர்த்தர் பிறக்குங் காலங் கிட்டியது. இந்த ஆபத்தான நேரத்தில், "பணம் பந்தியிலே குலங் குப்பையிலே" என்ற பழமொழிக்கேற்ப இந்தப் பரிசுத்த திருக்குடும்பமிருந்த தரித்திர கோலத்தைப் பார்த்த அவர்களுடைய சுற்றத்தாரும் சொந்த மனுஷருமாகிய அவ்வூராரில் எவரும் சற்றும் இரங்கி இடங் கொடுக்காமற் போனார்கள். சகல புவன சராசரங்களையும் படைத்த தேவாதி தேவனுடைய தாயாருக்கு தங்க இல்லிடம் கிடையாமற் போய்விட்டது. கடைசியாக ஊருக்கு வெளியே ஆடுமாடுகள் அடைக்கப்படும் ஓர் சிறுமலைக் குகையிலே கொஞ்சமிடங் கிடைக்க அவர் அங்கு போய்த் தங்கவேண்டியதாயிற்று. இப்படியாய் இகலோக பரலோகங்களுக்கு ஏகசக்கராதிபதியாகிய திரியேக சர்வேசுரனின் திருக்குமாரன் மனுஷாவதாரம் பண்ணினார். தேவபாலன் இவ்வாறு பூவுலகத்தாரால் புறக்கணிக்கப்பட்ட போதிலும், தேவுலக சம்மனசுக் கூட்டங்களால் அவர் இடைவிடாது வணங்கவும் துதிக்கவும் வாழ்த்தவும் பட்டார். மோட்சத்தில் தூதர் அதிதூதர் முதலிய தேவகணங்களும் மற்ற மோட்சவாசிகளும் மங்களம் பாடி ஆசிகூறி அக்களிப்புகொண்டார்கள். இந்தப் பிரகாரமே, நாம் இவ்வுலக பெருமை சிலாக்கிய வெகுமானங்களைத் தேடாமல் அதிமுக்கியமாகிய மோட்ச பேரின்ப மகிமைகளை நாடி நடந்துகொள்வோமானால், நமக்கும் இவ்வாறே நன்மை சித்திக்கும். திவ்ய சுதனும், நமக்கு இப்பாடத்தைக் கற்பிப்பதற்காகவே மனுஷாவதாரஞ் செய்தார்.

ஆனதுபற்றி, ஞான பலனடைய விரும்பும் நல்ல கிறிஸ்துவர்களெல்லோரும் சுவாமி பிறந்த திருநாளையில் நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்து, சுத்த இருதயத்துடனே திவ்ய நற்கருணை யுட்கொண்டு திவ்ய பாலனை ஆராதித்து, அவரிடத்தில் தங்களுக்கு அவசியமான பல புண்ணியங்களைக் கேட்டடையப் பார்ப்பார்கள். இப்படிச் செய்வதோடு மட்டு திட்டத்துடன் உண்டு உடுத்து உல்லாசித்து, உலக இரட்சகர் ஜனன மகோற்சவத்தைக் கொண்டாடுவது குற்றமாகாது.

# THE END OF THE YEAR.

## வருஷக் கடைசி.

---

படைக்கப்பட்ட ஒவ்வொரு வஸ்துவிற்கும் முதல் கடைசி யென்றுண்டு. கடவுள் ஒருவரே ஆதியந்த மில்லாதவர். நிகழும் 1913௵த்தின் முதலைக் கண்டோம். அந்த வருஷப்பிறப்பு அன்று நாம் அனைவரும் அக்களிப்பு கொண்டு ஆர்வமுடன் உண்டு உடுத்து ஆடிப்பாடி சிறப்புகொண்டாடினோம். இப்படி ஆரவாரத்துடன் துவக்கின புது வருஷமானது என்றும் புதிதா யிராமல், நாளுக்குநாள் பழயதாகி, விநாடிகள் நிமிஷங்களாய், நிமிஷங்கள் மணிகளாய், மணிகள் நாட்களாய், நாட்கள் வாரங்களாய், வாரங்கள் மாதங்களாய் வெகு துரிதத்தில் நடந்து இதோ முடிவுக்கு வந்துவிட்டது. புது வருஷக் கொண்டாட்டத்தின் ஞாபகம் இன்னும் மனத்தைவிட்டு சரியாய் மறையவில்லை. 12-வது மாதமாகிய டிசம்பர் மாதமும் பிறந்துவிட்டது. இன்னும் முப்பது நாளைக்குள் டிசம்பர்மாதமும் முடிந்துபோம் அதனோடே 1913௵மும் மறைந்துபோம். இவ்வாறு வருஷங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் வருவதுஞ் செல்வதுமா யிருக்கின்றன. மானுடனுடைய சீவியமும் இவ்வண்ணமே சற்று முன்னேயோ பின்னேயோ ஒருநாள் முடிவுக்கு வருமென்பதை யாட்சேபிப்பார் யார்? "பாட்டனார் பூட்டனார் எங்கே? போகமாட்டோமென்றாலும் மரணம் நம்பங்கே" என்றபடி நமது முன்னோர்போன இடத்துக்கு நாமும் ஓர் நாள் போக வேண்டுமே. இவனுக்கு இன்னவயசு, அவனுக்கு இன்னவயசு என்று ஒவ்வொருவருடைய ஆயுளும் சர்வேஸ்வரனால் வரையறுக்கப்பட்டிருக்குமன்றோ? ஆயினும் இவ்வரையறையை அறிவார் யார்? "சென்றநாளெல்லாம் சிறுவிரல் வைத்தெண்ணலாம்;நின்றநாள் யார்க்கும் நினைவரிது." நாம் கழிக்கும் ஒவ்வொரு நாளும் நமது ஆயுளின் குறுக்கமும், நமது கல்லறைக்குப் போக நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு பாத அடியு மல்லவோ! நாள் போகப் போக நமது ஆயுள் வளருமோ குறையுமோ? நாளோடு நமது வயதுங் குறைந்துகொண்டுவருகிறது. ஆயினும் நமது முடிவாகிய மரணம் வருங் காலம் நேரம் நமக்குத் தெரியுமோ? தெரியாது. "சாவு திருடனைப்போல வரும்" என்பது தேவ வாக்கியம். நமது அநுபோகமும் அப்படியே. வருஷத்தின்



கடைசிநாளில் நல்ல கிறிஸ்துவர்கள் எல்லோரும் மேற்கண்டபடி சிந்தனை செய்வார்கள். சிந்தனைசெய்து தாங்கள் சீக்கிரத்தில் சேரப்போகிற மறுமைக்கு வேண்டுபவைகளைப்பற்றித் தக்க முஸ்திப்பு செய்துகொள்ளுவார்கள்.

ஓர் வியாபாரியானவன் ஒவ்வொரு வருஷக் கடைசியிலும், தான் அந்தந்த வருஷத்தில் செய்த வியாபாரத்தில் வரவென்ன செலவென்ன, வந்த லாபமென்ன நஷ்டமென்ன, எவ்வளவு சரக்கு விற்பனை எவ்வளவு நிலுவை, எந்த சரக்கில் லாபம் எந்த சரக்கில் நஷ்டம் என்று விவரக் கணக்கு (Stock-taking) எடுத்துப் பார்த்து, நஷ்டம் உண்டானால் அந்த நஷ்டத்துக்குக் காரணமான சரக்குகளை மறுபடியும் வாங்காமல் முழுதுந் தள்ளி, ஆதாயங் கிடைத்த சரக்குகளை ஏராளமாய் வாங்கி இலாப மடையப் பார்ப்பா னல்லவோ? அப்படியே நமது ஆத்தும இரட்சண்ய அலுவலாகிய அதி முக்கிய வியாபாரத்தைச் செய்கிற நாமும் இந்த 1913-வது வருஷத்தில் நமக்கு வந்த ஆத்தும லாபமென்ன நஷ்டமென்ன, ஆத்துமலாபத்துக்கான புண்ணியங்கள் செய்தோமா அல்லது அதன் நஷ்டத்துக்கான பாவங்கள் செய்தோமா, எந்த காரணத்தால் புண்யம் நேர்ந்தது எந்த காரணத்தால் பாவங்கள் நேர்ந்தன, நாம் இந்த 1913 வருஷத்தில் சீவித்த சீவியம் அதை நமக்குத் தந்த கடவுளுக்குப் பிரியமா யிருந்திருக்குமா, அப்பிரியமா யிருந்திருக்குமா என்பனவற்றை யோசிக்க வேண்டாமோ? யோசித்து புண்யங்கள் வந்த பாதையை மேன்மேலும் பரிபாலித்து, பாவங்கள் வந்த வழியை முழுதும் அடைத்து நாளுக்குநாள் சாங்கோபாங்கத்தி லுயர்ந்து, நீர்மேற் குமிழிபோல அற்பத்தில் அழிந்துபோகும் இவ்வுலக வாழ்வை வெறுத்து, என்றும் அழியா நித்திய மோக்ஷ பேரின்ப வாழ்வை அடைவதற்கு ஆன வழிகளை எற்படுத்திக்கொள்ள வேண்டாமோ?

ஆயினும் அனேகர் "இவ்வருஷம் போகட்டும், அடுத்த வருஷம் ஆகட்டும்" என்று தங்களுடைய அதி முக்கிய ஆத்தும அலுவலை அசட்டை செய்து வருவார்கள் பிரதிவருஷமும். நாம் நாளை யிருப்பது நிச்சயமோ? "நாளைக்கு நாளைக்கென்று நசையடர்ந்துகொண்டபின்பு மாளுவதை யெண்ணி மயக்கமறக் காலமுண்டோ?" என்றபடி, நாளை நாளை, யென்றவர்களில் எத்தனையோபேர்கள் நாளையைக் காணமுடியாமலே நலிந்து நாசமாய் மோசம் போனார்கள். போன வருஷம் இந்த நாளில் இருந்தவர்களில் எத்தனையோ பேர்கள் இந்த வருஷ மில்லாமல் மாண்டு மண்ணோடு மண்ணாய்ப் போனார்கள். நமக்கும் (அடுத்த வருஷத்தைக் காணாதபடி) அக் கதி வாராதென்பது என்ன நிச்சயம்? இந்த வருஷமே ("வருஷக் கடைசி" என்பதை மாற்றி வாசித்தால் எப்படியோ அப்படி) கடைசி வருஷமாகவும் இருக்கலாம். சிநேகிதனே! இதை யாழ்ந்து யோசிக்கவெண்டும். கடைசி என்கிற வார்த்தை மெத்த பயங்கரத்துக்குரிய வார்த்தை; நமக்கு மெத்த புத்தி புகட்டக்கூடிய வார்த்தை; இந்தக் கடைசி என்கிற வார்த்தை நம்மால் சதா சிந்திக்கப்படத் தக்கது; அடிக்கடி கூடுமானால் நிமிஷத்துக்கு நிமிஷம் அதை நாம் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். கடிகாரமானது "டிக் டிக்" என்று சப்திக்கும் ஒவ்வொரு சப்தமும் "கடைசி" "கடைசி" என்று நமக்கு வற்புறுத்திப் போதிப்பதாகப் பாவித்துக்கொள்ளவேண்டும். கடைசி என்கிற வார்த்தை கற்பித்த ஞானத்தால் கடைத்தேறினவர்கள் கணக்கற்றபேர்கள்.

ஆனதுபற்றி அன்பர்காள்! நாம், நம்மில் ஒவ்வொருவருக்கும் இதுவே கடைசி வருஷம் எனப் பாவித்து, ஆண்டவர் திருவாய் மலர்ந்தருளியபடி அதி விசேஷமாகிய ஆத்தும அலுவலை அதி ஆவலுடன் கவனிப்போமாக. வெகு சீக்கிரத்தில் அழிந்துபோகிற இப்பிரபஞ்ச கவலைகளிற் சிக்குண்டு, ஆத்தும அலுவலை அணுவளவுங் கவனியாமல் நாளை, நாளை என்று சொல்லுபவர் இறுதியில் சொல்லொண்ணா துக்கத்துக் காளாவர். நாளை நமது கையில் இல்லை. நாளை என்றும் வரப்போகிற தில்லை. நாளை என்னவாகுமோ நாம் அறியோம். "காலைச் செய்வோமென்று அறத்தைக் கடைப்பிடித்துச் சாலச்செய்வாரே தலைப்படுவார். மாலைகிடந்தான் எழுதலரிதாமற்று அறங்காலை செய்யாதவாறு" என்பது அறநெறிச்சாரம். நாளைநாளை யென்று நாளைக் கடத்திவர நமது கெடுவு முடிவுக்கு வரவும் திடீரென நம்மை யனுப்பினவரிட மிருந்து ஓலை (warrant) வந்தபோது துக்கித்து ஆவதென்ன? "அப்போ நினைக்க வல்லையோ, பாழு மனமே, இப்போ நினைக்கத் தொல்லையோ" என்பதாக வல்லோ முடியும்.

வருஷக் கடைசியில் மேற்கண்டவாறு யோசித்து, நமது ஆத்தும விஷயத்தை ஆராய்ந்து பார்க்கவேண்டும். சர்வேசுரனை அறிந்து அவரை ஸ்நேகித்துத் துதிக்கவும், அதனால் மோட்சத்தை யடையவும் உண்டாக்கப்பட்ட நாம் அப்படிச் செய்கிறோமா வென்று பார்க்கவேண்டும். நாம் சர்வேசுரனை சரியாய்ச் சிநேகிக்கவில்லையானால் இனியாகிலும் அவரைச் சிநேகிக்கவும், அதற்கடையாளமாக அவருடைய சிலுவையை எடுத்துக்கொண்டு அவரைப்பின் செல்லவும் கெட்டியான பிரதிக்கினை செய்துகொள்ளவேண்டும். நல்ல பாவ சங்கீர்த்தனம் செய்து திவ்ய நன்மை வாங்கவேண்டும். சர்வேசுரன் தயவாய்க் கொடுக்கப்போகிற புது வருஷத்தைத் தக்க பிரகாரமாய்ச் செலவழிக்க அவருடைய விசேஷ வரப்பிரசாதத்தை அவரிடம் இரந்து கேட்கவேண்டும். பகை வர்மம், சண்டை மனஸ்தாபமாயிருக்கிறவர்களோடு சமாதானஞ் செய்துகொள்ளவேண்டும். பிறரிடமிருந்து அநியாயமாய் அபகரித்த பொருளுக்கும், பேருக்கும் பரிகாரஞ் செய்யவேண்டும். சகல விதத்திலும் சர்வேசுரனுக்குப் பிரியப்பட நடக்க ஆசைகொள்ளவேண்டும். இதுவே இந்த வருஷக் கடைசி நமக்குப் போதிக்கும் புத்திமதி.

---

# CHRISTIAN DOCTRINE.

## ஞானோபதேசம்.

### பத்துக் கற்பனையின்பேரில்

### 5-ம் பாடம்.

### முதற்கற்பனைக்கு விரோதமான பாவங்கள்.

### தேவ துரோகம்.

(முன் தொடர்ச்சி.)

---

4. சபிக்கப்பட்டவீடு.- இங்கிலாண்டு தேசத்தில் 16-ம்நூற்றாண்டில் புரோட்டஸ்டாண்டு மதம் உண்டான காலத்தில் அந்தப் புது மதத்தில் உட்பட சம்மதியாத கத்தோலிக்கருடைய வீடு வாசலையும், நிலபுலங்களையும், கோவில்களையும், துறவிகளுடைய மடங்களையும் இங்கிலீஷ் ராஜாங்கத்தார் கொள்ளையடித்து தங்கள் மதத்தாருக்கு இனாமாகக் கொடுத்த சங்கதி சரித்திரப் புஸ்தக மூலமாய் உலகம் முழுதும் அறிந்திருக்கிறது. இவ்விதமாக அநியாயமாய்க் கைக்கொண்ட ஒரு சந்நியாச மடத்தில் (Sir. A. Browne.) ப்ரவுன் என்னும் பிரபு தன் சிநேகிதருக்கு பெரும் விருந்திட்டு சந்தோஷ உல்லாசத்துடன் உண்டு குடித்துக்கொண்டிருக்கும்பொழுது, அம்மடத்தை விட்டுத் துரத்தப்பட்ட சந்நியாசிகளில் ஒருவர் விருந்து சாலையில் காணப்பட்டுப் ப்ரவுன் பிரபு கிட்டப் போய் அவனைச் சபித்து "நீ அநியாயமாய் இந்த சந்நியாச மடத்தை கைக்கொண்டபடியால் உன் சந்ததி நெருப்பாலும் தண்ணீராலும் அழிந்து நாசனமாகக் கடவது" என்று சொல்லி வெளியே புறப்பட்டார். சில காலத்துக்குப்பின் அந்த மாளிகை நெருப்பால் சுட்டெரிக்கப்பட்டு அந்தக் குடும்பமும் ஜலத்தில் மூழ்கி அடியோடு நாசமாயினது. (Lee.)

5. ஒரு துலுக்கனும் சுரூபமும்.— சைப்பிரஸ் என்னுந் தீவிலுள்ள ஒரு தேவாலயத்தில் பல துலுக்கர் உத்தரவின்றி பிரவேசித்து அவமரியாதையாய்ப் பேசிக்கொண்டிருக்கையில், அவர்களில் ஒருவன் பீடத்திலுள்ள சுரூபத்தைக் காட்டி, இச்சுரூபத்தால் என்ன பிரயோசனம் என்றான். அருகாமையில் நின்றுகொண்டிருந்த கிறிஸ்துவன், அந்தத் திருச் சுரூபத்தை வணங்குகிறவர்கள் மேல் தேவ ஆசீர்வாதமும், அதை அவசங்கைப்படுத்துகிறவர்கள்மேல் தண்டனையும் வருவதே அதன் பிரயோசனம் என்றான். அப்போது அந்த துஷ்டன் தன் கையிலிருந்த ஈட்டியை நீட்டி சுரூபத்தின் கண்ணைக் குத்தி, இச்சுரூபத்தின் கண்ணைக் குத்துவதால் எனக்கு என்ன தண்டனை உண்டாகும் பார்க்கலாம் என்ற க்ஷணமே, என்ன அதிசயம்! அந்தத் துலுக்கனுடைய கண்விழி கண் குழியினின்று கீழே விழுந்தது. (Cat. en. Ex.)

6. இராயனும் முடியும்.—எராகிளியுஸ் என்னும் இராயர் ஒரு விலை யுயர்ந்த முடியைச் செய்வித்து, கொன்ஸ்தாந்தினாப்பள்ளி கோவிலுக்கு அதைக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தார். 780௵ 4-ம் லேயோ என்னும் இராயன் அந்த முடியை அபகரித்து அதைத் தன் தலைமேல் வைக்கவே, திரேக மெங்கும் சிலந்திகள் கிளம்பி பெரும் வாதைப்பட்டு மூன்றும் நாள் வாக்குக் கெட்டாத வேதனைப்பட்டு மாண்டான். (Cat. en. Ex.)

7. ஓர் தேவதுரோகி அடைந்த சம்பாவனை.- 1834-௵ பியூரிடன்ஸ் என்னப்பட்ட பதிதர் ஒருநாள் இரவில் ஓர் கன்னியாஸ்திரீ மடத்தின் கதவை உடைத்து மடத்துக்கு நெருப்பு வைத்தார்கள். அம்மடத்திலுள்ள கன்னியரும் பிள்ளைகளும் பயந்து நெருப்புக்குத் தப்பித்துக் கொள்ளும்படி நாலாபக்கமாய் ஓடினார்கள். அந்நேரத்தில் அத்துஷ்டர் மடத்துக் கோவிலிற் சென்று கைக்கு அகப்பட்டதைக் கொள்ளை யடிக்கும்பொழுது, ஒரு பாதகன் பீடத்தில் ஏறி திவ்விய நற்கருணைப் பெட்டியை உடைத்து அதிலிருந்த பாத்திரத்தை யெடுத்து அதிலுள்ள திவ்விய நற்கருணையைத் தன் சட்டை சாக்கில் போட்டுக்கொண்டு வெளியே புறப்பட்டான். அநேகர் அவனைப் பின் செல்ல அனைவரும் ஒரு சத்திரத்தில் போய்ச் சேர்ந்தார்கள். ஜனக்கூட்டத்தில் ஒரு கத்தோலிக்கனை இந்தப் பாதகன் கண்டு, "இனி நீ யுன் தேவனை ஆராதிக்கும்படி உன் கோவிலுக்குப் போகத் தேவையில்லை. இதோ பார் உன் தேவன் என் சட்டை சாக்கிலிருக்கிறார்" என்று நற்கருணையை எடுத்துக் காட்டினான். இந்தத் தேவத்துரோகச் செய்கையை அந்தக் கிறிஸ்துவன் பார்க்கவே பயந்து நடுங்கி, பேச வாய் வராமல் மௌனமாய் நின்றான். அந்த துஷ்டப் பதிதனும் உடனே ஒரு வித திகில் கொண்டு முகம் வெளுத்து கூட்டத்தை விட்டு அருகாமையி லிருந்த சிற்றறைக்குள் சென்றான். அங்கு நின்றுகொண் டிருந்தவர்களும் அவனைப் பார்க்கும்படி உள்ளே பிரவேசித்தபொழுது, அவ்விடத்தில் அப்பாதகன் வயிறுவெடித்து, அவலமாய்ச் செத்துக் கிடந்ததைக் கண்டு, மெய்யாகவே இது தேவகோபத்தாலுண்டான தண்டனை யென்று நிச்சயித்தார்கள். (விஸ்வாசம் பரம்புதல் பத்திரிகை.)

8. இரு தேவ துரோகிகள்.—ரெஜியோ என்னும் ஊரில் வேலைக்காரரான இருவர் பெரிய வெள்ளிக்கிழமையன்று போசனஞ் செய்யும்படி சத்திரத்துக்குப் போனார்கள். சத்திரக்காரன் நல்ல கிறிஸ்துவனாகையால் அன்று இறைச்சி சமைக்காதபடிக்கு உத்தரவு கொடுக்கப்பட் டிருந்ததை அறிந்த வேலைக்காரர் சுயம்பாயிக்குப் பணங் கொடுத்து ஒரு கோழி வாங்கி சமைத்துக்கொண்டு வரும்படி கேட்டுக்கொண்டார்கள். அவ்வாறே சமைத்துக்கொண்டு வரப்பட்ட கோழியை இரு வேலைக்காரரும் புசித்துக்கொண் டிருக்கையில், இவர்களில் ஒருவன் சுவரில் தொங்கின சிலுவை சுரூபத்தைக் கழற்றி கீழே போட்டு, அவர்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்த இறைச்சியில் கொஞ்சம் அப்போதைக் கப்போது சுரூபத்தின்மேல் போட்டு தேவதூஷணமான வார்த்தையைக் கக்கிக்கொண்டு இருக்கையில் அவர்களில் ஒருவன் சடுதியில் அவலமாய்ச் செத்துக் கீழே விழுந்தான். (Patnata Catholico.)

9. அர்ச். பாக்கியநாதரும் திருடனும். ஜிரோன் என்னும் நகரத்திலுள்ள அர்ச். பாக்கியநாதர் கோவிலில் திருடர் கன்னம் வைத்து தங்கள் கைக்கு அகப்பட்டதை எடுத்துக்கொண்டு ஓடிப்போனார்கள். அவர்களில் ஒருவன் தனக்கு அகப்பட்ட பட்டுப்பட்டாவளிகளையும், கற்கள் பதிக்கப்பட்ட முடிகளையும், விலை யுயர்ந்த பாத்திரங்களையும் எடுத்துக்கொண்டு வெளிப்படும்போது, அவனுக்கு எதிராக நின்றுகொண்டு இருந்த திருயாத்திரைக்காரனைக் கண்டு: ஐயா! இரகசியமான சங்கதி! நீர் இதை யாருக்குந் தெரிவிப்பதில்லையென்று சத்திய வாக்குக்கொடுத்தால் உமக்கு அதை அறிவிக்கிறேன் என்றான். அதற்கு சம்மதித்த யாத்திரைக்காரனை நோக்கி திருடன் இவ்வாறு சொல்வான்: இதோ என் கையில் விலையுயர்ந்த சாமான்கள் இருக்கின்றன. தற்போது இவைகளை பத்திரமான இடத்தில் ஒளித்துவைத்தால் பிறகு அவைகளை விற்றுப் போட்டு இருவரும் பங்குபோட்டுக்கொள்ளலாம் என்றான். அப்போது யாத்திரைக்காரன் திருடனைப் பார்த்து: நல்லது என்னுடன்கூட வந்தால் ஒரு பத்திரமான இடத்தைக் காட்டுகிறேன்; அங்கே இந்த சாமான்களை பத்திரப்படுத்தலாம் என்றதன்மேல், திருடனும் அதற்குச் சம்மதித்து அவனைப் பின் தொடர்ந்தான். இரவெல்லாம் நடந்து அதிகாலையில் ஜிரோன் நகரிலுள்ள அர்ச். பாக்கியநாதர் கோவிலின் வாசற்படியில் இருவரும் போய்ச் சேரவே, திருயாத்திரைக் காரன் திருடனை நோக்கி நான சொன்ன இடம் இதுதான், உள்ளே சென்று இந்த சாமான்களைப்பத்திரமாய்வை

யென்று சொல்லி அக்ஷணமே அதரிசனமானுன். காணப்பட்ட யாத்திரைக்காரன் அர்ச். பாக்கியநாதரென்று திருடன் அறிந்துகொண்டு, அன்று நடந்த சங்கதியெல்லாம் அந் நகரத்தாருக்கு அறிவித்து, தான் கட்டிக்கொண்ட தேவ துரோகங்களுக்கு உத்தம மனஸ்தாப்பட்டு, தன்னுடைய கெட்ட சீவியத்தை முற்றும் மாற்றிக்கொண்டு உத்தம கிறிஸ்துவனுனன்.

(Ribadeneira.)

10. சிலுவை யடியில் மரணமானவன்.—பிரான்சில் கலகமுண்டானகாலத்தில் ரிபோஷ் என்பவன் குடியரசால் பிடிபட்டான். அப்பொழுது தளக்கர்த்தன் கைதியை நோக்கி, நீ இப்போது சிரசாக்கினைக்குப் பாத்திரவான். ஆனுல் நீ ஒரு காரியஞ் செய்தால் மரணத்துக்குத் தப்பித்துக்கொள்வாய் என்றுன். அதற்கு ரிபோஷ்: நான் செய்யவேண்டியது இன்னதென்று தெரிவித்தால் நீர் சொல்லுகிறபடி செய்யத் தயாரா யிருக்கிறேன் என்றுன். அதற்குத் தளக்கர்த்தன்: மெத்த சந்தோஷம்! இந்தக் கோடாலியால் அதோ ரஸ்தாவுக்கு அருகாமையி லிருக்கும் சிலுவையை வெட்டித் தகர்த்தால் உயிருடன் தப்பித்துக்கொள்வாய் என்றுன். அப்படியே ஆகட்டும் என்று ரிபோஷ் கோடாலியைக் கையில் பிடித்துக்கொண்டு, அதை நாலா பக்கமும் சுழற்றி வீசி "நமது இரட்சண்யத்தின் ஆயுதமாகிய இத் திருச் சிலுவை வையை எவன் சங்கையீனப்படுத்துவானே அவனுக்குச் சாவு" என்று சொல்லி வீரியத்துடன் கோடாலியைப் பின்னும் வீசுவதைக் கண்ட சேவகர் எல்லோரும் பயந்து பின்னிட்டார்கள். இத்தனை போர்வீரரும் ஒருவனுக்குப் பயந்ததினுல் வெட்கங்கொண்டு, அனேகர் அவன்மேல் பாய்ந்து அவனைக் கீழே விழத் தாட்டினுர்கள். நல்ல கிறிஸ்துவனுன ரிபோஷ் திருச்சிலுவையை இரண்டுகையால் அணைத்துப் பிடித்தபடியே துஷ்டரால் கொலையுண்டு சிலுவை அடியில் உயிர்விட்டான். (Guillois.)

நய வசனங்களால் இரண்டு இருதயங்களை வசப்படுத்திக் கொள்ளுகிறோம்: அதாவது, நமது ஆண்டவருடைய இருதயத்தையும், நமது அயலாருடைய ஆத்துமத்தையுந்தான்.

---

# CHRISTMAS STORY.

# கர்த்தர் பிறந்த திருநாள் கதை

அல்லது

## ஞானமணி 3-ம். பாகம்

ஒரு நாவல் கதை.

---

### இரண்டாம் அதிகாரம்.

### பவுல்போதகர் குமாரன் சலமோன்.

பவுல்போதகர் வீட்டில் பெருங்கோஷ்டம் நடந்துகொண் டிருக்கும்போது வாசற்படியில் பெருங்கூட்டஞ் சேர்ந்து, நடக்குஞ் சம்பாஷணையை தமாஷாய்க் கேட்டுக்கொண்டிருந்தார்கள். பீற்றர் போதகர் கோபத்துடன் வெளியே போகும்போது அங்கு கூடியிருந்த கூட்டத்தில் சிலர் என் இவ்வளவு கோபம்? ஒவ்வொருவருந் தத்தம் இஷ்டப்படிக்கான வேதத்தை அனுசரிப்பது குற்றமோ என்று சொல்லிக் கொண்டார்கள். வேறனேகர், விசேஷமாக வாலர் "பார்க்கலாம்! எத்தனை நாள் மட்டும் ரோமான் மதத்திலிருப்பார்களோ பார்க்கலாம். இன்னும் ஒரு மாதகாலத்தில் இவர்கள் நமது சர்ச்சுக்கு திரும்பி வராவிட்டால் என் மீசையை சிறைத்துக் கொள்ளுகிறேன்" என்றுர்கள். "ஒரு மாதங் கூட அவசரமில்லை. நாளை காலையில் அவர்களுடைய கதி யின்னதென்று அறிவீர்கள்" என்று ஒரு துடுக்கன் எல்லோருக்குங் கேட்கும்படி ஆவேசத்துடன் உரக்கக்கூவினுன். இன்னெரு வாலன், சலமோனுடைய தோளைத் தட்டிக் கொடுத்து, "பிரதர்! நான் சொன்னதை மறக்கவேண்டாம். உம்மால் மாத்திரம் சகலமும் முடிவுபெற வேண்டியது. தைரியம் தைரியம் (Courage!Courage!) என்று (அவன் தோளைப் பின்னுந் தட்டிக்கொடுத்தான்.) இதற்குப்பின் கூட்டங் கலைந்து தங்கள் தங்கள் வீட்டுக்குப் போக, பீற்றர் போதகர் மிஷனரி வீட்டுப்பக்கமாய் நடந்துபோனுர்.

27-வருஷகாலமாய் பவுல்போதகர் கத்தோலிக்கராயிருந்த காலத்தில் அக்காள் மகளை மணமுடித்துக்கொள்ள குருக்கள் உத்தரவு கொடாததைப்பற்றி மிஷன் வேதத்தில் சேர்ந்து அதே பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டார். நாலைந்து வருஷங்களுக்குப்பின் அவர்களுக்கு ஒரு ஆண்குழந்தை பிறக்க அதற்கு சலமோன் என்னும் பெயரிடப்பட்டது. மூன்றும் நாள் தாய்க்கு ஜன்னிகாண அவள் அன்றே மரணமானுள். அக்காலத்தில் பவுல்போதகர் 5-வருஷகாலம் காட்டிகிஷ்டு வேலைசெய்து வந்ததைப் பற்றியும், அடிக்கடி மிஷன் வேலையைப்பற்றி வெளியேபோக நேரிட்டதைப்பற்றியும் அவருடைய குமாரன் சலமோன் போர்டிங்கில் சேர்க்கப்பட்டு, அதே ஸ்கூலில் படித்து வந்தான். ஆனுல் அவன் புத்தியில் மந்தனும், நன்னடத்தையற்றவனுமா யிருந்தான். அவனுக்கு பிராயம் அதிகரிக்க அதிகரிக்க, துர்நடத்தையும் அதிகரித்து வந்தது. இராவேளையில் பெரியவர்கள் உத்தரவின்றி வெளியேபோய் ஆடல் பாடல் கூத்து முதலியவைகளை பார்த்துவிட்டு வருவான். போர்டிங் பிள்ளைகளிடத்திலுள்ள புஸ்தகம், வஸ்திரம், பணம் முதலியவைகளைத் திருடுவான். விலக்கப்பட்ட சுருட்டு பீடி முதலியவைகளை உபயோகிப்பான். சில சமயங்களில் சாராய முதலிய லாகிரி வஸ்துக்களையும் அருந்திவருவான். இப்பேர்ப்பட்ட துர்அப்பியாசங்களை விட்டுவிடும்படி உபாத்திமாரால் இரட்டித்து இரட்டித்து எச்சரிக்கப்பட் டிருந்தும் சலமோன் அவர்களுடைய புத்திமதிகளுக்குக் காது கொடுத்தவனல்ல.

இவன் மூன்றும் வகுப்பு படித்து முடித்த பின், மகா துஷ்டத்தன முள்ளவனுய்க் காணப்பட்டபடியால் போர்டிங்கிலிருந்து டிஸ்மிஸ் செய்யப்பட்டான். யாருக்கும் அடங்காத தறிதலையா யிருந்தும் பவுல்போதகருடைய முகத்தைப் பார்த்து அவனை அந்த ஸ்கூலில் 10 ரூபா சம்பளத்தில் கீழ் கிளாசுகளைப் பார்த்து வரும்படி மானேஜர் நியமித்தார். பள்ளிக்கூடத்தில் படித்துக் கொடுக்கும்போதும் சலமோனுடைய குணம் மாறவில்லை. அவனுல் அநேக பிள்ளைகள் ஸ்கூலுக்கு வராமல் நின்றுபோனுர்கள். ஏனெனில் கோபோக்கிரமத்துடன் பிள்ளைகளை யடிக்கவும் உதைக்கவும் தலைப்பட்டதினுல் பெற்றேர் தங்கள் பிள்ளைகளை வீட்டிலே நிறுத்திக்கொண்டார்கள். இக் காரணங்களை முன்னிட்டு ஸ்கூல் மானேஜர் சலமோனை படித்துக்கொடுக்கும் வேலையினின்று நிறுத்திவிட்டார்.

பவுல்போதகர் படாத பாடுபட்டு, பெரிய மனுஷாளுடைய சிபாரிசுகளைக் கொண்டு P. W. D. ஓவர்சியருடைய ரைட்டர் உத்தியோகத்தை தன் மகனுக்குச் சம்பாதித்துக்கொடுத்தார். அந்த இடத்திலும் கிரமமாய் யிருந்தவனல்ல சலமோன். தன் தகப்பனும் சிறிய தாயாரும் குழந்தையுடன் ரோமான் மதத்தில் சேரப்போகிற செய்தி யறிந்த் சலமோன் மூன்று நாள் ரஜாவாங்கிக்கொண்டு தன்னூருக்கு வந்தான்.

பெரிய வெள்ளிக்கிழமை பவுல் போதகர் கத்தோலிக்குக் கோவிலுக்குப்போய், சிலுவைப் பாதைப் பிரசங்கம் முதலியவைகள் முடிவான பின், தன் குமாரத்தியோடு வீட்டுக்குப் போய்க்கொண்டிருக்கும்பொழுது, ஈசாக் உபதேசியார் அவருக்கு எதிர்ப்பட்டு.

ஈசா.—என்ன ஐயா, விசேஷம்? இன்று நீங்கள் கோவிலுக்கு வருவீர்களென்று நினைக்கவில்லை நான்.

பவு.—என்னத்தைப்பற்றி சார்?

ஈசா.—உமது மைத்துனர் வந்ததாகவும், அவர் உம்மையும் உமது மனைவியையும் பயமுறுத்தி கத்தோலிக்கராகக் கூடாதென்று கண்டிப்பான விலக்கம் பண்ணி விட்டதாகவும் வதந்தி.

பவு.—என் மைத்துனன் வந்தது மெய்தான். நாங்கள் சத்திய வேதத்தில் உட்படக் கூடாதென்று அவர் சொன்னதும் வாஸ்தவந்தான். ஆனுல் எங்கள் தீர்மானத்தை மாற்ற அவராலாவது அவர் பாட்டனுலாவது சாத்தியப்படாது.

ஈசா.—உமது மனைவி?

பவு.—ரூத்துடைய தைரியத்தையும் விஸ்வாசத்தையும் இன்றைக்கே கண்டேன் சார்! பெண்ணுய்ப்பிறந்து, படிப்பற்றவளுக்கு தளராத தைரியங் கொடுத்தது பரிசுத்த ஆவியே என்று நான் உறுதியாய் நம்புகிறேன். தேவதாயார் எங்களைக் கடைசிமட்டுங் காத்து இரட்சிப்பாளாக.

ஈசா.-உமது மனைவிக்குகத்தோலிக்கு வேத சத்தியங்கள் எப்படித் தெரிந்தன? சத்தியவேதத்தில் சேர எப்படி ஆசையுண்டானது?

பவு.—நான் முன் அடிக்கடி உம்முடன் வேதவிஷயத்தைப்பற்றிப் பேசி வீட்டுக்குத் திரும்பும்போதெல்லாம் ரூத் நமக்குள் நடந்த சம்பாஷணையைப் பற்றி கேட்க, நான் அவளுக்கு அதன் தாற்பரியத்தை உள்ளது உள்ளபடியே சொல்வது வழக்கம். லூர்துமாதா புஸ்தகத்தை வாசித்தது முதல் அவள் கண்திறக்கப்பட்

டு, அதில் காணப்பட்ட அதிசய ஆச்சரியங்களைப் பற்றி என்னுடன் ஆவலாய் சம்பாஷிப்பாள். கன்னிமரியாயைப் பற்றி புகழ்ந்து பேசி நமது வேதத்தில் இப்பேர்ப்பட்ட ஆறுதல் இல்லையே என்பாள். ஆனல் பிள்ளைக்கு வைசூரி கண்டு லூர்துமாதா தீர்த்தத்தால் குணப்பட்டபோது அவளுக்கு கத்தோலிக்கு வேதத்தின் மட்டில் அதிக விஸ்வாசமும் மரியம்மாள் (என்ன சார், எவ்வளவு பிரயாசைப்பட்டபோதிலும் அதேவார்த்தை வருகிறது) கன்னிமரியாயின் மீது அதிக பக்தியுமுண்டாயின. மேலும் சார், என் மைத்துனன் இன்று சாயரட்சை அவளைப் பேசின பேச்சு கொஞ்சமல்ல. மெத்த திடச்சித்தமுள்ளவர்களும் பயந்து நடுங்கக் கூடிய விதமாய் அவர் மிரட்டிப் பேசினபோதும் ரூத் கிஞ்சித்தென்கிலும் அஞ்சாமல் காட்டிய தைரியத்தை நான் யோசிக்கையில், அவளை யெனக்கு மனைவியாகக் கொடுத்த பராபரனுக்கு நன்றியறிந்த உணர்ச்சி உண்டாகிறது.

ஈசா.—உமது மைத்துனன் இப்போது எங்கே இருக்கிறர்?

பவுல்.—எங்கே இருக்கிறரோ தெரியாது. ஆனல் அவர் பக்ஷபாதகரும் மத வைராக்கியமுமுள்ள மனிதன். தன் கை குட்டையை இரண்டாகக் கிழித்து, இந்த துணி கிழிந்ததுபோல நமது இரத்த சம்பந்தமும் அற்றுப் போயிற்று என்று சொன்னர் சார் அந்த குரூரமனிதன்!!

ஈசா.—அவ்வளவு தூரம் போனரா?

பவு.—அது மாத்திரமல்ல, கால் தூசியைத் தட்டி, உங்கள் வீட்டு தூசியையும் இங்கேயே தட்டிவிடுகிறேன் என்றர்.

ஈசா.—பீற்றர் போதகரை நான் நன்றய் அறிவேன்—மகா சாந்தமும் நேசமு முள்ளவர். கத்தோலிக்கு வேதத்தில் அபிமானமுள்ளவர். தற்போதைய அவருடைய விபரீதநடத்தை அதிசயத்துக்குரியதா யிருக்கிறது!

பவு.—அவர் வீட்டைவிட்டு வெளியேபோகும்போது எங்களுக்கு ஆசீர்வாதம் போட்டுப் போனர்.

ஈசா.—மெய்தானு? இதென்ன கூத்தாயிருக்கிறதே!

பவு.—ஆசீர்வாதமா? இல்லை, எங்கள் மேல் சாபம் போட்டார். கஷ்டங்களும் நஷ்டங்களும் உண்டாவதாக என்று சபித்தார் சார். என்ன கொடுமை! இது தானு கிறிஷ்டியன் சாரிட்டி? (கிறீஸ்துவ நேசம் இதுதானு?)

ஈசா.—மெய்யாகவே அவருடைய நடத்தை கஸ்திக்குரியது. ஐயா போதகரே, நீர் சொன்னதெல்லாம் கேட்கக் கேட்க, உமக்கு மிஷன்காரரால் அநேக துன்பமுண்டாகு மென்பதற்கு சந்தேகமில்லை.

பவு.—நானும் அப்படியே நம்புகிறேன். இன்று வீட்டண்டை கூடின கூட்டத்தில் அநேகர் பேசிக்கொண்ட பேச்சும் எங்கள் காதில் விழுந்தது. எங்களை யிவ்வளவு தூரங் கூட்டிக்கொண்டுவந்த கர்த்தர் எங்களைக் கைவிடுவாரா? அந்த பரிசுத்தகன்னிகை மீது வைத்த நம்பிக்கை சபலமாகுமா? எங்கள் பொருளுக்கு பல பொல்லாங்கு நேரிடுமென்று அறிந்திருக்கிறேன் சார். ஆனல் ரூத் தன் தமையன் தன்னை பயமுறுத்திக் கொண்டிருந்தபொழுது, என் தலை போனலுஞ் சரி, சத்திய வேதத்தை விடேன். என்னையும் என் குழந்தையையுங் காப்பாற்றின அப்பரம கன்னிகையின் பாதத்தை விடேன் என்று தைரியமாய்ச் சொன்னள்.

ஈசா.—உமது மனைவியின் தைரியமே தைரியம்! ஆயினும் உங்களுக்குப் பொல்லாங்கு வராமற் போகவே போகாது.

பவு.—(அதிசயத்துடன்) மெய்தானு?

ஈசா.—மெய்தான் சார். ஜூதித்தம்மாளுக்கு சர்வேசுரன் கொடுத்த தைரியம் உமது மனைவிக்கும் பாலித்திருக்கிறர் கர்த்தர். இது சுபாவத்தா லுண்டாகுங் காரியமல்ல. ஆகையால் நீர் இனி பயப்படத் தேவையில்லை. தேவதாயார் உம்மையும் உமது குடும்பத்தையுஞ் சகல தின்மையினின்று காத்து இரக்ஷிப்பாள்.

பவு.—நானும் அதே நம்பிக்கையுடனிருக்கிறேன். அந்தப் பெரும் புயல் நாளைக்கே எழும்பும்போலும். ரூத்தும் குழந்தையும் நாளை ஞானஸ்நானம் பெற்றபின் என்ன கலகம் நேரிட்டபோதிலும் பரவாயில்லை. பூசைக்குமுன் நடந்தால் நீர் சற்று சகாயமாய் வரவேண்டும்.

ஈசா.—அதற்குச் சந்தேகமா ஐயா; நான் உமது தாசாதிதாசன். என்னலுமக்கு என்னென்ன உதவி வேண்டியிருக்குமோ அதையெல்லாம் சற்றுந் தடையின்றி புரிய உறுதிமொழி கொடுக்கிறேன்.

பவு.—மெனி தாங்க்ஸ் சார். மெத்த வந்தனம் ஐயா.



ஈசா.—நாளை காலையில் புயல் எழும்புமென்றீரே, என்ன காரணத்தைப்பற்றி அப்படிச் சொல்லுகிறீர்?

பவு.—என் மைத்துனன் எங்களோடு வாதாடிக்கொண்டிருக்கும்போது வெளியில் கூடியிருந்த ஜனக்கூட்டத்தில் ஒவ்வொருவனும் பலவாறய் பேசிக்கொண்டிருந்தான். அப்போது அவர்களில் ஒருவன், இன்னும் ஒரு மாதத்தில் அவர்கள் நமது மிஷனுக்கு திரும்பிவராவிட்டால் என் மீசையை சிறைத்துக்கொள்ளுகிறேன் என்றன். மற்றொருவன் "ஒருமாதந் தேவையில்லை, நாளைக்காலையில் அவர்கள் கதி யின்னதென்று அறிவீர்கள்" என்றன். இதை முன்னிட்டே நாளை காலையே புயல் எழும்பு மென்றேன்.

ஈசா.—பயப்படவேண்டாம் ஐயா, துராகிர்தமாய் யாதொரு காரியஞ் சம்பவிக்குமேயாகில் சர்க்காரிருக்கிறது. நாம் நீதியிலிருக்கு மட்டும் யாதொன்றுக்கும் பயப்படத் தேவையில்லை.

பவு.—நானும் அதே எண்ணங் கொண்டிருக்கிறேன். இதைப்பற்றி பயப்படுகிறதில்லை. எனக்கு துன்பதுரிதம் நேரிட்டபோதிலும், கஷ்டநஷ்டங்கள் உண்டானபோதிலும், என் சரீரத்துக் கேஹானியுண்டானபோதிலும் இவையெல்லாம் நான் சத்தியவேதத்தைக் கைப்பற்றினதைப் பற்றி வருவதால் வரட்டும். அப்போஸ்தலருக்கு இது உண்டாகவில்லையோ? பூர்வ கிறீஸ்துவர்களுக்கு உண்டாகவில்லையோ? இக்காலத்திலும் சர்வேசுரனுடைய பிள்ளைகளுக்கு அப்பேர்ப்பட்ட துன்ப முண்டாகிறதில்லையோ?

ஈசா.—நமது கர்த்தருஞ் சத்தியத்தைப் பற்றி தானே சகலவித துன்பதுரிதங்களுக்கும் சாவுக்குமே உள்ளானர்.

பவு.—நானும் அவ்வாறே இதற் கெல்லாந் தயாராயிருக்கிறேன். கர்த்தர் என் பிரதிக்கினையை ஆசீர்வதிப்பாராக. நாளைக்கு சர்விஸ் எத்தனை மணிக்கு துவக்குமோ?

ஈசா.—நாளைக்கா? காலை 6-மணிக்கு துவக்கும். நாளையதினம் திருச்சடங்கு முடிய வெகு நேரம் பிடிக்கும்.

பவு.—நாளை செர்விஸ் முடிந்தபின் தானே ஞானஸ்நானங் கொடுக்கப்படும்?

ஈசா.—இல்லை, முதல் முதல் தண்ணீர் நெருப்பு மந்திரிக்கப்படும். பிறகு பாஸ்கு மெழுகுவர்த்தி, அதன்பின் ஞானஸ்நானத் தொட்டி; இதற்குப்பின் ஞானஸ்நானங் கொடுக்கப்படும். அது முடியவே, திவ்விய பூசை துவக்கப்படும். நாளை சுமார் 10-மணிக்கு கோவிற் சடங்கு முடிவாகும்.

பவு.—அவ்வளவு நேரஞ் செல்லுமா? நேரமாய்விட்டது, போய்வருகிறேன் சார் கூட்நைட்.

என்று விடை பெற்று தன் னிவாசத்துக்கு ஏகினர்.

(இன்னும் வரும்.)

---

# CORRECT THINGS FOR CATHOLICS.

## கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

### உத்தியோகம், ஜனசங்க நடமாட்டம்.

(முன் தொடர்ச்சி.)

---

25. கிறீஸ்துவர்கள் யாவரும் ஒருவருக்கொருவர் சகோதர பாசத்துடன் சீவிப்பது ஒழுங்கு.

(ஒரே பிதாவின் மக்களாய், ஒரேவிசுவாசத்தைக் கைக்கொண்டு, ஒரேகடவுளை ஒரேகோவிலில் ஒரே ஆசாரமுறையுடன் ஆராதித்து, ஒரே இரட்சகரால் ஒரே விதமாய் இரட்சிக்கப்பட்டு, ஒரே ஆத்துமபோசனத்தை ஒரே காத்திலிருந்து ஒரே விதமாய் உட்கொண்டு, ஒரே மோட்சத்தின் பேறடைய ஆசிக்கும் கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் ஒருத்தருக்கொருத்தர் விரோதித்தும், பகைத்தும், ஒருவரொருவரைக் கண்டால் பாம்பைக் கண்ட கீரியைப்போல் சீறுவதும், புலியைக் கண்ட மானைப்போல் பதைப்பதும், ஒருவரொருவரை வெறுப்பதும் முற்றிலும் அவிவேகம். இவ்விஷயத்தில் கற்றேர்கள் உலகத்தின் தீர்மானத்தைக் கவனியாமல் விசுவாசத்தின் போதனையைச் சிந்தித்து, கேவலம் பாமரர்களுக்கு நன்மாதிரிகை காட்டுவது மெத்தவும் அவசியம்.)

26. ஒருசங்கத்தைச் சேர்ந்தவர்கள், ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வருஷத்திற்கொருமுறையாவது ஒரு பொது விருந்து நடத்துவது ஒழுங்கு.

(உண்பன, தின்பனதான் ஒற்றுமையைப் பலப்படுத்தும். விருந்து நடத்த வழியில்லாவிட்டால், ஐரோப்பியருள், வழங்கிவரும் (Tea Party) காப்பிக் கச்சேரியாவது நமக்குள் வழங்கிவருவது நன்று. இதற்கு அத்தனை செலவு பிடிக்காது.)

27. வேசி உறவு காசிலும் பணத்திலும்தான் என்றறிந்திருப்பது ஒழுங்கு.

(பெண் பிள்ளைகள் மட்டில் ஆண்பிள்ளைகளுக்குண்டான பலவீனத்தை உத்தம பதிவிரதைக எல்லாத சில பெண்பிள்ளைகள் கண்டுகொண்டு, கொஞ்சம் சளுக்கு பிலுக்குக் காட்டிப் பணம் பறிப்பதுண்டு. ஆண்பிள்ளைகள் இதையறிந்து நடப்பது விவேகம்.)

28. தருமம் தலைகாக்குமென் றறிந்திருப்பது ஒழுங்கு.

29. முகதாட்சண்யத்தைப்பற்றியும், அல்லது மேரை வெகுமானத்தை நாடியும் தருமம் செய்யாமல் தருமத்தைப்பற்றி (அதாவது பிறர் நேசத்தைப்பற்றி) தருமம் செய்வது ஒழுங்கு.

30. அவனவன் துன்பம் அவனவனுக்குத் தெரியுமென் றறிந்திருப்பது ஒழுங்கு.

31. சன்மார்க்கத்திற்கு விரோதமல்லாததாய் அல்லது சன்மார்க்கத்திற்கடுத்தவையாயிருந்தும் ஆகாத எண்ணங்களை எழுப்பக்கூடிய பாகங்கள் அடங்கப்பெற்ற நாடகங்களுக்குப் போகாதிருத்தல் ஒழுங்கு.

(மனுஷனுடைய கீழாங்கிஷத்திற்கு மாத்திரம் திருப்திசெய்யும் விதமாய் இக்காலத்தில் நாடகங்களை செய்தாடுவார்கள். ஒரு ஆண் ஒரு பெண்ணோடு சரச சம்பாஷணை செய்யும்பாகம் இல்லாத நாடகம் பெரும்பாலும் இருக்காது. அப்பாகம் இல்லாவிட்டாலும் சாமான்ய ஜனத்திற்குத் திருப்தியிராது. அந்த சம்பாஷணையில் சொல்லும் அசுத்த வார்த்தைகளினாலும், அதனால் உண்டாகும் எண்ணங்களினாலும் நாடக சாலையில் கூடியிருக்கும் ஆண், பெண், சிறியோர், பெரியோர், பாலியபிள்ளைகளுக்குள் எத்தனையோபேர் கெடுவதற்குக் காரணமாயிருக்கும். குலுக்கென்று ஜனங்கள் ஒருசிரிப்பு சிரிக்க, ஒருவன் ஈரர்த்தமுள்ள ஒரு அசுத்த வார்த்தையைச் சொல்லுவான். மற்றொருவன் விபரீதமாய்த் தன் சரீரத்தை ஆட்டுவான். ஆனால் இதனால் சுகந்த ரோஜா புஷ்பத்திற்கொத்த கற்புக்கு எவ்வளவு சேதம் என்று நினைப்பாரில்லை. கெட்டபாவனையைக் காட்டி அதனால் நல்போதனை யூட்டுகிறோமென்று சிலர் வாதிப்பார்கள். அவர்களை விட பித்தர்களும் பேதைகளும் நயவஞ்சகர்களும் கிடையா. இப்போதனையை யூட்ட குருமார்களுண்டு. ஆனால் நல்ல விவேகமும் பத்தியுமுள்ள ஒரு சமுசாரியானவன் தன் மனைவியுடனும், பருவமடைந்த தன்மகளுடனும் யாதொரு சங்கோசமின்றி பார்த்துக்கேட்கக்கூடிய விதமாய் நாடகம் நடத்தினால் நல்லதே. இது சன்மார்க்கத்திற்கு உதவியாயிருப்பதுடன், கிறிஸ்துவர்களுக்கு நல்ல காலப்போக்காகவு மிருக்கும். மேலும் இந்நாட்டில் நாடகங்கள் பொழுது விடிகிறவரைக்கும் ஆடுவார்கள். இப்படிப்பட்ட வழக்கத்தைக் கண்டு ஐரோப்பியர்கள் ஆச்சரியம் அடைகிறார்கள். பொழுது விடிகிறவரைக்கும் கண்ணோடு கண்மூடாமல் நாடகத்தைப் பார்ப்பவர்கள் சிலர்; சுருண்டு படுத்துக்கொள்ளுகிறவர்கள் பலர். இதுவுமன்றி பொழுதுவிடிந்து அநேகர் உத்தியோகத்திற்குப் போகவேண்டியவர்களாகையால் அதிகாலைமட்டும் விழித்திருப்பதினால் அவர்கள் சவுக்கியம் கெடுவதுமுண்டு. ஆனால் விசேஷமாய் சனிக்கிழமையிரவில் நடத்தப்படும் நாடகத்தைப்பார்த்த அலுப்பினால் ஞாயிற்றுக்கிழமையின் கடன் பூசையை நிராகரித்தும், அசட்டைத்தனமாயும் அவசங்கையாயும் தூங்கி விழுந்துகொண்டு பூசை கண்டும் பாவத்தைச் சம்பாதிப்பவர்கள் எத்தனைபேர். இதை உத்தேசித்து சனிக்கிழமையில் நாடகம் நடிக்க உத்தரவு கொடாத குருமாரை நிந்தித்துத் தூஷிப்பவருமுளர். இவை யனைத்தும் அவிவேகமன்றோ?)

32. ஒவ்வொருவரும் நல்ல தெருக்களில் உத்தமர் மத்தியில் வசிப்பது ஒழுங்கு. (நல்லவர்கள் கெட்டவர்களினிடையில் வசித்துக் கெட்டுப்போகிறது சாதாரணமே. சகவாசதோஷ மெனவுஞ் சொல்லப்படுகிறதே.

33. நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வமாகையால் யாவற்றிலும் மிதத்தை அநுசரித்து தேக சுகத்தைக் காப்பாற்றுவது ஒழுங்கு.

34. நம்மை யாண்டுவரும் காருண்ய ஆங்கிலேய துரைத்தனத்தாருக்கு எப்போதும் நன்றிபாராட்டி, அவர்களுக்குப் பிரமாணிக்கமுள்ள பிரசைகளாக சீவிப்பது ஒழுங்கு.

(இராஜாங்கத்திலிருந்து யாதோர் சுதந்திரத்திற்காக இந்துக்கள் முதலிய இதர மதஸ்தர்களுடன் சேர்ந்து அதிகாரிகளை யண்டிப்போக நேர்ந்தால், அப்படிப்பட்ட சுதந்திரத்திற்காக முன் வந்திருப்பவர்கள் தங்களுடைய சுய நலத்தை நாடியோ, அப்படிப்பட்ட சுதந்திரம் தற்போது கத்தோலிக்கு சபைக்கு அவசியமோ, அது கிடைக்கும் பட்சத்தில் கத்தோலிக்கு ஜனசமூகத்திற்குப் பயனுண்டாகுமோ வென்பதை யோசித்து பெரியோர்களுடைய ஆலோசனையின்படி நடப்பது ஒழுங்கு )

(இன்னும் வரும்.)

---

# CORRESPONDENCE.

## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்திரவாதி யல்லர். கடித மெழுதுவோர் தங்கள் கடிதங்களை மிகத் திருத்தமாயும், காகிதத்தின் ஒரே பக்கத்தில் இடது பாரிசத்தில் நாலு விரற்கடை இடம் விட்டும் எழுதுவதுடன் தங்கள் பெயர் விலாசங்களையும் தெளிவாய் எழுதல் வேண்டும். பெயர், விலாசங்கள் வெளிப்படுத்துவதற்கல்ல, கடிதத்தின் உண்மைச் சங்கதிகளைப் பத்திராதிபர் உறுதிப்படுத்திக் கோள்வதற்கே. வெளிப்படுத்துவதற்கு தகுதியற்றன வென்று தள்ளி விடப்பட்ட கடிதங்கள் திருப்பவும் வாப்பஸ் செய்யப்படமாட்டா. ப—ர்]

---

### சங். J. M. விசாக் (Revd. Father Vissac) சுவாமியாரின்

### தேக வியோகம்.

சீர்வளங்கொண்ட மைசூர் மேற்றிராசனத்துக்கோர் திலகமாய் விளங்கிய, சங். J. M. விசாக் சுவாமியார் நிகழும் ஆண்டு நவம்பர் மாதம் 13-ந் தேதி வியாழக்கிழமை காலை 9½-மணிக்கு தமது 65-ம் வயதில் நித்தியபரனின் திருவடி சேர்ந்தனர். மறுநாளாகிய வெள்ளிக்கிழமை காலை அவராத்தும இளைப்பாற்றிக்காக சங். குருத்துரோ குருவானவரால் தியாக்கன் சப்டீக்கனோடு ஒப்பீஸ் பூசை செய்யப்பட்டு திருச்சபை யாசாரத்துடன் சவக்ஷேம உற்சவம் நிறைவேற, சத்திய குருப்பிரசாதிகளாலும் கிறிஸ்துவர் முதல் சகல இதர மதஸ்தராலும் புடைசூழ பெங்களூரின்கண் அர்ச். பிரான்சீஸ்கு சவேரியாரின் பெயரால் எழுப்பப்பட்டுவரும் புதிய கட்டிடத்தினுள் அவர் சடலம் அடக்கம் செய்யப்பட்டது. இப்பெங்களூரில் காலமாகும் திருமறை குருக்களின் சடலங்களைப் பூஸ்தாபகஞ்செய்ய திருவிருதய நாதாலைய வட்டாரத்தில் கல்லறை ஸ்தலமிருக்கஷை ஆலயத்தில் அடக்கமான காரணம்: அவர் அக்கட்டிடத்திற்காக மிக்கக் கவலையுடன் எடுத்துக்கொண்ட முயற்சியே பிரதானமாகும். அவ்வாலயம் அதிசிறப்பாகவும் உறுதியான வேலைத்தரமாகவும் அமைக்கத்தக்கதாக இவ்விந்தியாவின் பல பல பாகங்களைச் சுற்றி சிற்ப சாஸ்திர முறைகளைக்கொண்டு தமது கண் காணிப்பில் அஸ்திவாரமிட்டு கட்டிவரும் சமயத்தில் காலமாகியது ஆருத்துயரத்திற்குரியதே! இவ்வுத்தம முனிவர் பிராஞ்சு தேசத்திலுள்ள லேபிய் (Lebuy) என்னும் சிறந்த நகரில் 1848-ம் வருஷத்தில் பிறந்து, 1872-ம் வருஷத்தில் இந்தியாவுக்குவந்து தேவதாழ்ச்சி தோட்டத்தின் உக்கிராணத்தை யேற்றுக்கொண்டு, நித்தியத்தின் உச்சித கதியை நாடி, அநித்தியப் பற்றுதல்களை யகற்றி, முத்தியின்வழியில் நிலைகொண்டவராகி சத்திய மார்க்கத்தின் ஞானப்போதனைகளோடு லௌகிக கல்வியையும் அபிவிர்த்திச் செய்யும்படியாக இப்பெங்களூரின்கண் அர்ச். சூசையப்பரின் பாது காவலிலோர் கலா சாலையை (St. Joseph's College) நிருமித்து இந்நாள்வரையும் சிரமத்துக் கஞ்சாமல் உழைத்துவந்தவராகையால், இவரின் மரண சேதியானது ஒவ்வொரு ஜாதியாரையும் கலங்கச்செய்து பெருமித சஞ்சலத்தி லாழ்த்திவிட்டது. இவரையண்டி கல்வி பயிற்சி யடைந்த சிறந்த மாணக்கர் யாவரும் உலகமெங்கும் சிறந்து விளங்கிவருகிறார்களென்பது மறுக்கப்படாத வாக்கியமாகும். இவ்வித சிறந்த குணமும் பரோபகார சிந்தையும் தளராமுயற்சியு முடைய ஓர் முனிவரை இனி காண்பது அரிது. ஆகையால் இதைக் கண்ணுறும், சகோதரர் யாவரும் அவராத்தும



... 1913 MADRAS

இளைப்பாற்றிற்காக வேண்டிக் கொள்வார்களாக.

இங்ஙனம்,

அவரின் அன்பார்ந்த மாணாக்கரி லொருவராகிய

J. M. ALBERT,
Catholic Priest.

Sacred Heart Church.
Bangalore, 15—11—13.

---

## GENERAL NEWS AND NOTES.
## பொது வர்த்தமானம்.

---

**அநேக பாஷைகள்.**—மேற்கு ஆப்பிரிக்காவில் ஏறக்குறைய சுமார் 400 பாஷைகள் பேசப்படுகின்றனவாம். இதனால் தான் நாகரிகம் அங்கு பரவத் தடங்கலா யிருக்கின்றது என்று சொல்லப்படுகிறது.

**டெல்லியில் கத்தோலிக்குத் தேவாலயம்.**-மாட்சிமை தங்கிய நம் சக்கரவர்த்தி அவர்கள் 100 பவுனும், சக்கரவர்த்தினியவர்கள் 50 பவுனும் டெல்லிமா நகரில் கட்டப்போகிற நம்முடைய தேவாலயத்துக்காக உபகரித்திருக்கின்றனர்.

**தபாலாபீஸ் நோட்டீஸ்.**—தபாற் றலை யொட்டாது கடிதங்களை யனுப்புவோர், அவற்றிற்குக் கவரிருந்தாலும் இல்லாவிட்டாலும் அவற்றை நன்றாக ஒட்டியனுப்ப வேண்டும்; நன்றாக ஒட்டியிராத கடிதங்கள் கிழித்தெறியப் படுமென்று தபாலதிகாரிகள் தெரிவித் திருக்கின்றனர்.

**தபால்களுக்காக மோர்டோர் வண்டிகள்.**—கல்கத்தா, பம்பாய், சென்னை முதலிய இந்தியாவின் பிரதான நகரங்களில் தபால்கள் குதிரை வண்டிகள் மூலமாய் ஆங்காங்குள்ள போஸ்டாபீஸ்களுக்குக் கொண்டுபோகப்பட்டு வருகின்றன. இதனால் நேரும் அபார செலவைக் கருதி இதை நிறுத்தி இனி மோடார் வண்டிகள் மூலமாய் அக்கடிதங்களைக் கொண்டுபோக தபாலதிகாரிகள் யோசித்து வருகின்றனர்.

**உலகத்தில் அதிக இன்கம் டாக்ஸ் செலுத்துபவர்:**—இப்போது ஆஸ்திரியாவில் அமெரிக்க இராஜாங்க பிரதிநிதியாய் விளங்கும் மிஸஸ் பிரடெரிக் கோர்ட் லான்டு பென்பீல்டு என்பவரே உலகத்தில் இருக்கும் மற்றெவரையும் விட அதிக இன்கம் டாக்ஸ்வரி செலுத்துகிறவராம். இவருடைய சொத்தின் மதிப்பு ஒரு கோடியே நாற்பது லக்ஷம் பவுன். இதிலிருந்து இவருக்குக் கிடைக்கும் வருமானம் ஏழு லக்ஷம் பவுன். இவர் செலுத்தும் வரியோ நாற்பத்தொன்பதாயிரம் பவுன்.

**நீரிழிவு வியாதி பரிசோதனை.**—இந்தியாவில் நீரிழிவு வியாதி பரவ அதற்குப் பலர் இரையாகி வருகிறார்கள் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். இந்த வியாதியைப் பரிசோதனை செய்து அதற்குப் பரிகார வழியைக் கையாடுவதற்கு வேண்டிய பிரயத்தனங்களைச் செய்ய இந்தியா கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள். இவ்வித பரிசோதனை பஞ்சாபில் முதல் முதல் ஆரம்பிக்கப்படும். பரிசோதனை செய்வதற்கு அனுபோகமுள்ள ஆபீஸர் ஒருவர் தெரிந்தெடுக்கப்படுவார்.

**இராஜாங்க பிரதிநிதிகளும் அவர்களது சம்பளங்களும்.**--இராஜாங்கப் பிரதிநிதிகள் என்று சொல்லப்படுவோர் இங்கிலீஷ் பாஷையில் "அம்பாசிடர்" என்று சொல்லப்படுவோராகும். இவர்களது சம்பள மெவ்வளவென்பதை விசாரிக்கப் புகுகையில் பின்வருமாறெனத் தெரியவருகிறது. யுனைடெட் ஸ்டேட்ஸ் கவர்ன்மெண்டு பிரதிநிதிகளுக்கு 17,500 டாலர்கள். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு பிரதி நிதிகளுக்கு 35,000 டாலர்கள் முதல் 45,000 டாலர்கள். ஜெர்மன் கவர்ன்மெண்டு பிரதிநிதிகளுக்கு 25,000 டாலர் முதல் 37,500 டாலர் வரையிலென்று சொல்லப்படுகிறது.

**ஹார்ட் பரோ மீடர்.**—என்ற ஒரு நூதன யந்திரம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இதனால் ஒரு மனிதனுடைய இருதயம் எப்படி யிருக்கிறதென்றும், அது கெட்டுப்போயிருந்தால் அதற்குக் காரணம் யாதென்றும், அதற்குச் சிகிச்சை செய்து சீர்ப்படுத்த என்ன செய்யலாமென்றும் அறியக்கூடுமாம். அன்றியும் இதைக்கொண்டு படுக்கையிலிருக்கும் வியாதியஸ்தனுக்கு தொந்தரவு ஏதுங்கொடாமல் சுகமாய்ச் சிகிச்சை செய்யலாமாம். இப்போது இந்த யந்திரம் ஒன்று லண்டன் ஆஸ்பத்திரியில் உபயோகிக்கப்பட்டு வருகிறது. கூடிய சீக்கிரத்தில் உலகத்திலுள்ள எல்லா வைத்தியசாலைகளிலும் இது உபயோகிக்கப்படும் போலும்.

**இந்தியா சிலோன் இருப்புப்பாதை.**--இந்தியா சிலோன் இருப்புப்பாதை திறக்கும் வைபவம் முன் அறிவிக்கப் பட்டபடி 1914-ம் வருஷம் ஜனவரி முதலில் நடைபெறுமெனவும் இன்னும் பாதை வேலை முடிவுபெறவில்லை யென்றும் ஸிலோன் பத்திரிகை ஒன்றிற் சொல்லப்பட்டிருக்கிறது. லண்டனை விட்டுப் புறப்பட்ட ஹார்டிஞ்சு, எலிஜின், கர்ஸன் என்னும் மூன்று படகுகளுள் ஹார்டிஞ்சு படகு ஏடன் துறைமுகம் வந்து தூங்குவதாயும்; எலிஜின் படகு மால்டா தீவு வந்து தூங்குவதாயும், கர்ஸன் படகு வாடர்போர்ட் துறைமுகத்தை விட்டுப் புறப்படவேயில்லை யென்றும் அறிகிறோம். இதனால் எப்போது இப்பாதை திறக்கப்படு மென்பதை நிச்சயமாய்ச் சொல்ல முடியாமலிருக்கிறது.

**ஒரு கொடுங்கோற் சட்டம்.**—போர்த்துக்கல் தேசத்துக் கவர்ன்மெண்டார் தம் ஆட்சிக்குட்பட்ட கீழ் ஆப்பிரிக்காவிலுள்ள நாடுகளில் வசிக்கும் ஆசியர்கள் வருஷந் தோறும் தலை வரியாக ஒரு பவுண் தர வேண்டுமென்றும், புதிதாக வந்து வசிக்க விரும்பும் ஆசியர்கள் 3-வருஷத்திற்கு வருஷந் தோறும் 8 பவுண் தலைவரி தரவேண்டுமென்றும், அதற்குப்பிறகு ஒரு பவுண் தலைவரி தரவேண்டு மென்றும், ஆசியர்களின் அடையாளங்களைத் தெரிந்துகொள்ளுவதற்காக அவர்களைப் புகைப் படம் பிடித்தல், பெருவிரல் குறியெடுத்தல் முதலியன செய்யவேண்டும் என்றும் ஒரு சட்டமேற்படுத்தி யிருக்கின்றனர். ஆசியர் என்பது இங்கு அராபியர், இந்துக்கள், பாரஸீகர், சீனர்களைக் குறிக்கின்றது.

**ஆகாய விமானமும் ஒட்டுக் கேழ்த்தலும்.**—"இரவில் பட்டணங்க ளெல்லாம் நிர்ச்சப்தமாய் இருக்கும்போது 4000 அடி தூரத்திலுள்ள ஒரு ஆகாய விமானத்திலிருந்துகொண்டு ஒருவன் என்னென்ன கேட்கலாமெனின்: "தூங்கும் மனிதனது குரட்டு சப்தம், மனிதர்கள் உரையாடுதல், வண்டிகள், டிராம் வண்டிகள், மோடார்கள் இவைகளோடுதல் முதலியனவாம்" என்று ஒரு பத்திரிகை பிரஸ்தாபிக்கிறது. வண்டிகள், மோடார்கள், டிராம்கார்கள் இவைகளோடுதல் ஒருகால் கேட்கலாமானாலும் மனிதர்கள் பேச்சும், அவர்கள் தூங்கும்போது விடும் குரட்டையும் கேட்கலா மென்பது தான் எவ்வளவு தூரம் சாத்தியமோ! ஆனாலிதையும் கேட்கக் ஒரு நூதன கருவி அவ்விமானங்களி லமைக்கப் பட்டிருக்கும் போலும்!

**ஹார்டிஞ்சு பிரபு:**—வாகிய நமது இராஜப் பிரதிநிதியின் புத்திரியான மிஸ். ஹார்டிஞ்சு என்னும் சிறுமி இராஜப்பிரதியின் எய்டிகாங்கான ஒருவர் நல்ல உடுப்பு அணிந்திருந்ததைக் கண்டு விளையாட்டாக அதைத் தண்ணீரால் நனைத்து அழுக்காக்கிவிடவே, எய்டிகாங் சிறிது முன்கோபியானதால், அச்சிறுமி கையி லிருந்த தண்ணீர்ப் பஞ்சைப் பிடுங்கிக்கொண்டு அச்சிறுமியை அடித்துவிட்டார். சிறுமி அழுதுகொண்டே சென்று தன் தாயிடம் தெரிவித்தாள். லேடி ஹார்டிஞ்சு எய்டிகாங்கின் மீது கோபமாய்த் தன் கணவனிடம் பிரியாது செய்தார். ஆனால் இராஜப்பிரதிநிதி என்ன சொன்னாரென்றால்:—"எய்டிகாங் செய்தது நிரம்ப சரி; மிஸ். ஹார்டிஞ்சின் துஷ்டத்தனத்திற்குத் தகுந்த சிட்சை அவளுக்குக் கிடைத்தது" என்பதே. என்னே, இவருடைய பெருந்தன்மை.

**டாக்டர் நாயர் அவர்கள்.**—பொது நலப்பிரியரான இவர் இப்பட்டண நிவாசிகளுக்காகப்படும் பிரயாசை மெத்த மெச்சத்தக்கதே. இவர் சென்னையின் முனிசபல் விவகாரங்களைப் பற்றி சமீபத்தில் பேசியபோது, சென்னையில் விற்பனையாகும் பல உணவுப் பொருள்கள் பெரும்பாலும் கலப்படமானவைகளென்றும், அரிசி, பால், நெய் முதலிய பிரதான உணவு பொருள்களை கலப்பு கலந்தவைக ளாதலால் ஜனங்களுக்கு வாந்திபேதி, க்ஷயம் முதலிய பல நோய்களுண்டாவதற்குக் காரணமாயிருக்கிறதென்றும், இப்படி விற்பனையாகும் கெட்ட வழக்கத்தை யடக்கத்தக்க மார்க்கம் ஏற்பாடாக வேண்டுமென்றும் உபந்நியாசித்தார். ஆகவே, அசுத்தமான சாமான்களைச் சோதனை செய்ய ஒருசோதனைச் சாலையை கார்ப்பொரேஷன் கட்டிக்கொண்டிருக்கிறது. பால் கறக்கும் மாடுகளை ஓரிடத்தில் சேர்த்துக் கட்டிவைக்க கட்டிடங்

கள் கட்டப்பட்டு வருகின்றன. இவைகளைத் தவிர கவர்ன்மெண்டு ஒரு தகுந்த சட்டம் செய்யவேண்டும். இப்போதுள்ள பீனல் கோட்படி கலப்புக் கலந்து விற்பவர்களை கோர்ட்டுகளில் விசாரணை செய்து தண்டிக்க வழியில்லை. இந்தியா முழுமையும் இந்தப் பெருங் குறை யிருந்துகொண்டிருக்கின்றது. ஜனங்களுடைய சுகா சுகங்களையும், ஆயுளையும் பாதிக்கும் இந்தவழக்கத்தைத் திருத்த முனிசிபாலிடிகளும் கவர்ன்மெண்டும் தாமதமில்லாமல் தகுந்த திட்டங்கள் செய்வது ஜனங்களின் பொது நலத்துக்குப் பிரயோசனமாகும்.

## NEWS OF THE MONTH.

## மாச வர்த்தமானம்.

**திவான்பஹதூர் எல். டி. சுவாமிக்கண்ணுப் பிள்ளை.**—இந்தக் கனவான் நாம் ஏற்கெனவே அறிவித்திருந்தபடி சென்ற மீ 20-ம் தேதி சென்னை சர்வ கலாசாலையில் நடந்தேறிய கான்வொக்கஷனில் வித்தியார்த்திகளுக்கு வெகு நேர்த்தியான புத்திப் பிரசங்கஞ் செய்தார். சர்வ கலாசாலையின் கல்விக் கழகத்தாரால் கல்விமான்கள் என நற்சாட்சிப் பத்திரங்கள் அளிக்கப்பெற்று உலகத்தில் பல விவகாரங்களில் ஊடாடப் போகும் இளைஞர்களுக்கு மெத்த உசிதமான புத்திமதிகள் அப்பிரசங்கத்தில் அடங்கியிருந்தன. அவைகளை உலகாநுபோகம் சற்றுமில்லாத இளைஞர்கள் மனத்திலிருத்தி, பலகாலுஞ் சிந்தித்து, அவற்றின்படி நடக்க வருந்துவார்களானால் அவர்கள் உலக சீவியத்தில் சித்தி பெற்று வாழ்வது மன்றி, மகா பிரசித்தி பெற்ற கல்விமான்களாகவு மாகலாம். அது நீண்ட வியாசமா யிருத்தலால் அதை யிங்கு பிரசுரிக்க கூடாமைபற்றி விசனிக்கிறோம்.

**தென்னார்க்காட்டில் வெள்ளம்.**—சென்றமீ 8-9-ம் தேதிகளில் பெய்த கனத்த மழையினால் பல இடங்களில் சேதமுண்டாயிற்று என்றாலும் சிதம்பரம் தாலுக்காவில் நேர்ந்த நஷ்டம் மெத்த. சிதம்பரத்தை யடுத்த வீராணம் ஏரியும், இன்னுமுற்ற சிற்றேரிகளும் உடைப்பெடுத்துக் கொண்டதனால் சிதம்பரம் தாலுக்கா முழுவதும் எங்கு பார்த்தாலும் ஜலப்பிரவாகமா யிருந்தது சிதம்பரம் முழுதும் ஜலத்தில் மூழ்கியிருந்தது. அநேக கிராமங்கள் வெள்ளத்தால் கனத்த சேத மடைந்தன. சில உயிர்ச் சேதமும் கால் நடைச்சேதமும் உண்டாயினவென்று சொல்லப்படுகிறது. வீடுகள் வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போனவை சில; அமிழ்ந்தினவை சில; இடிந்து விழுந்தன பல. ஆகவே, கிராமவாசிகள் ஆயிரக் கணக்காய் தங்க இடமும், உண்ண உணவும், உடுக்க உடையு மின்றி வருந்தினார்கள். உடனே டிஸ்டிரிக்ட் கலெக்டரும் மற்ற ஜில்லா உத்தியோகஸ்தர்களும் அவ்விடத்துக்குப் போய் வெள்ளத்தினால் வருந்தும் ஜனங்களுக்கு சர்க்கார் செலவில் அன்ன ஆகாராதிகளும், வஸ்திரங்களும் கொடுத்து உதவி புரிந்தார்கள். இவர்கள் கஷ்டத்தை நிவர்த்திக்க சென்னையிலும் மற்ற ஜில்லாக்களிலுமுள்ள கனதனவான்கள் பண உதவிபுரிந்து வருகிறார்கள். பழைய கூடலூருக்கும், ஆலப்பாக்கத்திற்கும் மத்தியில் ஆறு பர்லாங்கு தூரம் ரெயில்வே லைன் உடைப்பெடுத்துக்கொண்டுவிட்டது. அங்கங்கே மணல் மேடுகள் உண்டாய்விட்டன. இவைகளை யெல்லாம் அப்புறப்படுத்தி லைனை செப்பனிட பலநாள் பிடிக்குமெனச் சொல்லப்படுகிறது. இதனாலேயே போனமீ முழுதும் தெற்கே யிருந்து சென்னை வருகிறவர்களும், சென்னையிலிருந்து தெற்கே போகிறவர்களும் ஈரோடு மார்க்கமாய் பிரயாணம் செய்யவேண்டியதாயிற்று. இந்த லைன் முழுதும் செப்பனிடப்பட்டு ரெயில் வண்டிகள் பழையபடி எப்போது போக்குவருத்துக்கு தயாராக்கப்படுமென்று தெரியவில்லை.

**தென் ஆபிரிகாவில் இந்தியரின் நிலைமை**—நமது இந்தியாதேசத்து ஜனங்கள் விசேஷமாய் கூலியாட்கள் தங்கள் ஜீவனார்த்தத்தின் பொருட்டு பல அன்னிய நாடுகளுக்குக் குடியேறி ஜீவனஞ் செய்து வருகிறார்களென்பது யாவரும் அறிந்த விஷயம். நெட்டால், மோரீசு, பீஜி முதலிய தூரத் தேசங்களுக்கு நம் மிந்தியர் நெடுநாள்களுக்கு முன்னேயே குடியேறி அங்கேயே நிலைத்துப் போய்விட்டார்கள். முதற் கூறிய நெட்டால் என்னு நாட்டை உள்ளடக்கிய தென்னாபிரிக்கா தேசத்தில்



30,000 இந்தியர்களுக்கு மேல் குடியேறியிருக்கிறார்கள். இவர்களால் அந்நாட்டிலுள்ள ஐரோபியர் தங்களுடைய வியாபாரம் கெட்டுப்போகிறதென்றும், இவர்களுக்கு சுவாதீனம் கொடுத்துவிட்டால் அதிக செல்வமும் செல்வாக்கும் பெற்று தங்களை அத்தேசத்தினின்றே துரத்தி விடுவார்களென்றும் தப்பெண்ணங்கொண்டு, அவர்கள் அங்கு நிலைக்க வொட்டாதபடி பல சூழ்ச்சிகள் செய்து வருகிறார்கள். அந்நாட்டில் சுவாதீனமாய் குடியிருப்பவன் ஒவ்வொருவனும், தலைக்கு வருஷவாரி, மூன்று பவுன் அதாவது 45-ரூபாய் வரிசெலுத்த வேண்டுமென்றும், சுயேச்சையாய் வியாயாபாரம் செய்கிறவர்கள் வேறு வியாபார வரி செலுத்தி லைசென்ஸ் பெறவேண்டுமென்றும், அந்நாட்டில் பதிவுசெய்யாத கலியாணங்கள் அங்கீகரிக்கப்படா வென்றும், இந்துக்கள் மகம்மதியர்க்குள் வழங்கும் இரண்டு தாரங்கள் கட்டும் வழக்கங் கூடாதென்றும் சட்டம் ஏற்படுத்தியும் இன்னும் பல இடையூறுகளைச்செய்தும் அவர்களை இம்சித்து வருகிறார்கள் இந்தியாவானாலுஞ்சரி, நெட்டாலானாலுஞ்சரி, வேறு எந்தத் தேசமானாலுஞ் சரி காருண்ய பிரிடிஷ் இராஜாங்கத்துக் குட்பட்ட நாட்டின் பிரஜைகளெல்லோரும் சமரசமாய் அநுபவிக்கவேண்டிய பொது ஜன சுவாதீன விஷயத்தில் ஒரு நாட்டார் மற்ற நாட்டாரை இவ்வளவாய் இம்சித்து அகௌரவப் படுத்துவது நியாயப் பிரமாணத்துக்கு சற்றும் பொருந்தா திருத்தலைப் பற்றி, இந்தியர்கள் சீற்றங்கொண்டு, ஷை ஐரோப்பியர்கள் ஏற்படுத்தியுள்ள அநியாய சட்டங்களை மீறி எதிர்க்காமல், எதிர்க்கும் உபாயத்தைக் கைக்கொண்டு விட்டார்கள். இது விஷயமாய் இப்போது இந்தியர்களெல்லோரும் ஏகோபித்து, வரி செலுத்தாமல் குடி யிருப்பது அல்லது வியாபாரஞ் செய்வது, லைசென்ஸ் இல்லாமல் பிரவேசிக்கக்கூடாத நாட்டில் பிரவேசஞ் செய்வது, ஓர் துறையில், தோட்டத்தில், அல்லது சுரங்கத்தில் வேலை செய்பவர்கள் எல்லோரும் ஒரு குமுக்காய் வேலைக்குப் போகாமல் நின்றுவிடுவது, முதலிய சட்ட விரோதமான காரியங்களைச் செய்கிறதும், அப்படிச் செய்வதினால் சட்டப்படி இடப்படுகிற காவல், அபராதம் முதலிய தண்டனைகளுக்கு அஞ்சாமல் அவைகளுக்கு தைரிய சந்தோஷத்துடன் உட்படுகிறதுமாயிருக்கிறார்கள். இதனால் சீற்றங்கொண்ட ஐரோப்பியர்கள், இந்தியர்களை குரூரமாய்த் தண்டிப்பது, வதை செய்வது முதலிய கொடூரங்கள் செய்து வருகிறார்கள். மேற்கண்டவாறு வலிய போராட்டஞ் செய்து சுவாதீனம் பெறக் கங்கணங் கட்டி யுழைக்கும் காந்தி யென்னுங் கனவானும், மற்றவர்களுஞ் சேர்ந்து இப்போது நூற்றுக் கணக்கான பேர்கள் சிறையி லிருக்கிறார்கள். இந்த அநியாயங்களைக் கேள்வியுற்ற மகா மேன்மை தங்கிய இந்திய இராஜப் பிரதிநிதியாகிய ஆர்டிஞ்சு பிரபு அவர்கள் சென்ற மாதம் 23-ந் தேதி தாம் சுற்றுப் பிரயாணம் செய்துவரும்போது திருச்சினாப்பள்ளியி லிருந்து இங்கிலாந்திலுள்ள இந்தியா செக்ரெடரி ஆப் ஸ்டேட்டுக்கும் தென் ஆப்பிரிக்காவின் கவர்னர் ஜெனரலுக்கும், தந்தியனுப்பி மேற்கண்ட முறைப்பாடுகளுக்கு யாதேனும் ஆதாரமுண்டா வென்பதைப்பற்றி நுணுநுணுக்கமான ஆராய்ச்சி செய்யப்பட வேண்டுமென்றும், அப்படி ஆதார மிருக்கும் பட்சத்தில் அவைகளை உடனே அறவே யொழிக்க தக்க முயற்சி செய்தல்வேண்டு மெனவும், அவர்களைவற்புறுத்திக் கேட்டுக்கொண்டார். இனிமேல் கூடிய சீக்கிரத்தில் நெட்டாலிலுள்ள நம்மிந்தியர்களுக்கு நியாயமும், சமாதானமும் கிடைக்குமென்று நம்புகிறோம்.

**சென்னையில் இராஜப் பிரதிநிதியின் விஜயம்.**—மேன்மை தங்கிய ஹார்டிஞ்சு பிரபுவும், ஹார்டிஞ்சு பெருமாட்டியும் சென்ற மாதம் 24-ம் தேதி சென்னைக்கு விஜயஞ் செய்தார்கள். அவர்களுடைய வரவேற்பு மகா ஆடம்பர வைபவமாயிருந்தது. அதற்கு முந்தின இரண்டு வாரங்களாக, தென்னிந்தியாவிலுள்ள இராஜ இராஜாக்களும், ஜமீன்தாரர்கள், மிட்டாதாரர்களும், மற்ற கனதனவான்களும் தங்கள் தங்கள் பரிவாரங்களுடன் சென்னைக்குவந்தபடியே இருந்தார்கள். சென்னை நகரமானது, தெருக்கள் ரஸ்தாக்க ளெங்கும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. எங்கும் ஜனக்கூட்டம் பிரவாக மாயிருந்தது. திங்கட்கிழமை பகல் பத்து மணி முதற்கொண்டு ஜெனரல் ஆஸ்பத்திரி ரோட்டின் இருமருங்கிலும் ஜனங்கள் வந்து நிரம்பிவிட்

டார்கள். போலீசு சேவகர்களும், படைச் சேவகர்களும், சிப்பாய்களும், வாலன்டியர்களும் ரஸ்தாவின் இருபக்கமும், வரிசையாய் நிறுத்தப்பட்டார்கள். மெய்க் காப்பாளச் சேனையும், சோல்ஜர் பட்டாளங்களும், இரண்டு குதிரை நாலுகுதிரை பூட்டிய ரதங்கள் பலவும் சென்ட்ரல் ஸ்டேஷனுக்குள் வந்து தயாரா யிருந்தன. சரியாய் பன்னிரண்டரை மணி யானதும் இராஜப்பிரதி நிதி யவர்களை அவர் பரிவாரங்களுடன் கொண்டு வரும் ஸ்பெஷல் ட்ரேயின் சென்ட்ரல் ஸ்டேஷனுக்குள் பிரவேசித்து வந்து நின்றவுடன், அங்கு காத்திருந்த சென்னைக் கவர்னர் அவர்களும் இராஜாங்க உத்தியோகஸ்தர்களும் தக்க வந்தன வழிபாடுகளுடன் இராஜப் பிரதிநிதி யவர்களையும் அவர் மனையாட்டியையும் வரவேற்று, இராஜாங்க இரதத்திலேற்றிவிட, இராஜ ஊர்கோலம் மெல்லென சென்ட்ரல் ஸ்டேஷனை விட்டு வெளியே கிளம்பிற்று. முன்னும் பின்னும் இராணுவ உத்தியோகஸ்தர்கள் தங்கள் தங்கள் உத்தியோக உடை தரித்து அணியணியாய் ஊர்ந்து வரும் ஊர்கோலம் சென்ட்ரல் ஸ்டேஷன் வாராவதியின்மேல் வரும்போது அதைச் சற்று தூரத்திலிருந்து பார்த்தவர்களுக்கு, வானலோகத்திலிருந்து தேவ கணங்களே திரண்டுவந்தது போலிருந்தது. இவ்வாறு ஊர்கோலம் கம்பீர ஆரவார ஆடம்பரத்துடன் கனந்தங்கிய கவர்னர் மாளிகை யுட்சென்றது. சென்றவுடன் கவர்னர் அவர்களின் சபா மண்டபத்து வாசலில் சென்னை கனதனவானகளெல்லோரும் காத்திருந்து வைசிராய் அவர்களுக்கு அன்புடன் நல் வரவு கூறினார்கள். வைசிராய் அவர்களும் அவர்களனைவருக்கும் நன்றி கூறி கவர்னரது இல்லஞ் சேர்ந்தனர். ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தபடி அன்று மாலை, பல சங்கத்தாரிடமிருந்து வந்தனோபசாரப் பத்திரங்கள் வாசிக்கப்பெற்று அவரவர்க்கும் தக்கவாறு பதிலுரைத்தார். அடுத்தநாள் காலை யூனிவெர்சிட்டி புத்தகசாலைக்கு அஸ்திவாரமிட்டார். 26-ந் தேதி காலை சென்னை புதிய முனிசிபல் ஆபீசைத் திறக்குஞ் சடங்கை முடித்தார். மாலையில் காஸ்மோ பாலிட்டன் கிளப்பில் நடந்த தோட்டக் கச்சேரிக்குச் சென்றிருந்து, இரவு 10-மணிக்கு டில்லிமா நகரத்துக்குப் பிரயாணமாயினர். இராஜ விசுவாசிகள் யாவரும் கவலையுற்றுக் கோரி யிருந்தபடி இராஜப் பிரதிநிதியவர்களின் சென்னை விஜயம் யாதோர் ஆபத்தின்றி திருப்திகரமாய் முடிந்துவிட்டது. இனி யவருடைய மற்றப் பிரயாணங்களும் இனிது முடிந்து சிந்தாத்திரையாய் தம் பதி போய் சேரும்படி எம்பிரான் கிருபை புரிவாராக.

# DOMESTIC OCCURRENCES.
# குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 8-அணா முன்பணம் அனுப்பினாலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட மாட்டா வென்பதை நண்பர்கள் கவனிக்கக் கோருகிறோம். அரைக் கலத்துக்கு மேற்பட்டு முக்கால் கலத்துக்கு உட்பட்டால் முக்கால் ரூபாயாகும். முழுக்கலத்துக்கு ஒரு ரூபாயாகும். கால் ரூபாய்க்கு இவ்விளம்பரங்கள் ஒரு போதும் பிரசுரிக்கப்பட மாட்டா.

## ஜனன அறிக்கை.

என் மனைவி, ஸ்ரீமதி சூசை தனம்மாள் முன் இரண்டு தடவை கடவுளருளால் தரித்த கருப்பம் யாது காரணத்தினாலோ சிதைந்து போய்விட மூன்முந்தடவை கருப்பவதியானாள். ஆனால் இச்சமயம் புதுமையுள்ள அர்ச். அந்தோனியாரின் பூம்பதத்தை நாடி: அந்தோனியாரே, தேவரீர் தயவால் இந்த தடவையில் கருப்பமழியாமல் காத்தருள்வீரானால், தேவரீருடைய பேருதவியை நல்லாயனில் பிரசுரித்து உம் நாமத்தையே அக் குழைந்தைக்குத் தரிப்பேனென நேர்ந்துகொண்டேன். அந்த அர்ச்சிய சிஷ்டவரின் பேருதவியால், என் மனைவி யாதோ ரபாயமின்றி கடந்த 25-10-13 சனிக்கிழமை இரவு 11½-மணி தியாலத்தில் ஓர் ஆண் மகவை யீன்றனள். தாயும் சேயுஞ் சுகம். பின்னும் 28-10-13 செவ்வாய்க்கிழமையில், பெங்களூர் பேட்டை அர்ச். சூசையப்ப ராலயத்தின் பங்கு விசாரணை சங். இராஜரிஷி. (Briyan) பிரியான் சுவாமியாரால், அக்குழந்தைக்கு இருதய அந்தோனியென பெயரிடப்பட்டது.

இங்ஙனம்
அர்ச். அந்தோனியாருழியன்,
JOHN ANTHONY.
K. G. F. Band
Oorgam.



## ஓர் திருமணம்.

பல வளங்கள் பொருந்தி, சத்தியவேத பக்தியுடையராம் பரதகுல மக்கள் வாழும் மணவை நகர் ஸ்ரீமான் நெப்போமுஸ் பீரிஸ் அவர்களின் புத்திர சிகாமணி ஸ்திரம் சுகி ஜேர்மான் பீரிஸ் என்பார்க்கும் ஷை நகர் ஸ்ரீமான் கார்லோஸ் பர்னாந்தீஸ் அவர்களின் புத்திர ரத்ன சிரோன்மணியாகிய சௌபாக்கியவதி மர்கரீத் பர்னாந்தீஸ் என்பார்க்கும் சென்ற மாதம் 5உ புதவாரத்தன்று, மதுராஸ், ஜார்ஜ்டவுன் மதுர நாயகியின் தேவாலயத்தில் திருமாங்கல்ய மகோற்சவம் நடந்தேறியது. இது காரணத்தினிமித்தம் தேவாலயமானது, பெருந்திருநாளுக்குரியவாறு வெகு வலங்கிருத சிங்காரமாய் ஜோடிக்கப்பட்டிருந்தது. இம் மகோற்சவத்திற்கு மிக வன்புடன் வந்து, தயாபரனின் திருவருளை புது மணமக்கட்களுக்காக யிரந்து மன்முடின ஜனத்திரளால் நிறைந்திருந்தது. இதைக்கண்டு வியந்து பேசாதார் ஒருவருமில்லை. இவைகளெல்லாம், மணமக்கட்களுக்குத் தமது சொந்த ஊரில் உற்றூர் உறவினர் மன்றலில் இத்திரு மங்கல்ய வைபவம் நடைபெற வில்லையே யெனும் ஏக்கத்தை நீக்கி, ஊக்கத்தை யூட்டியிருக்குமென்பது திண்ணம். குறித்த நேரமாகிய 7-மணிக்கு மணமகனும் மணமகளும், தனித்தனியே தத்தம் உறவினருடன் தேவாலயஞ் சென்றனர். அங்கே கோவிற் பங்கு சுவாமியாரும், பெண்ணின் பெரிய தகப்பனுருமாகிய கனம் L.X. பர்னாந்தீஸ் சுவாமியார் திருக்கல்யாண திவ்விய ஆசீர்வாதத்தோடு பாணிக்கிரஹண மங்கள மகோற்சவத்தை நிறைவேற்றினார். இது முடியவும், இவர் மகத்தான பூசையுடை யணிந்து, கனம் ஜான்சுவாமியார் டீக்கனாகவும், தூத்துக்குடி கனம் மோத்தா வாஸ் சுவாமியார் சப்டீக்கனாகவும் நிற்க, பெரிய பாடல் பூசை செய்தனர். பூசை நேரத்தில் கனம் பர்னாந்தீஸ் சுவாமியார் அவர்கள், அங்கு கூடியிருந்த ஜனங்களைத் தம்பதிகளுக்காக வேண்டிக்கொள்ளும்படியாகவும், தம்பதிகள் தாமே எப்படி யுத்தமர்களாய் ஒழுகல்வேண்டுமென்றுஞ் சரித்திர சாஸ்திர கோட்பாடுகளுடன் அரிய பிரசங்கஞ்செய்து, "அபிரகாமின் தேவனே! ஈசாக்கின் ஆண்டவனே, யாக்கோபின் கர்த்தாவே! உமது அடியார்களாகிய இவர்களை யாசீர்வதித்தருளும். இவர்கள் பரிசுத்தத்தில் ஒழுக இவர்களுக்கு வேண்டிய வரப்பிரசாதங்களைப் பொழிந்தருளும். ஆண்டவரே! பரலோகத்திலிருந்து இவர்களை யிரக்கமாய் கண்ணோக்கியாசீர்வதியும். அபிரகாமுக்கும் சாராளுக்கும் மிகுந்த சந்தோஷமுண்டாக, தேவரீர் உமது ஆசீர்வாதத்தை யருளினது போல், உமது அடியாராகிய இவர்கள் உமது சித்தத்துக்கு அடங்கி நடந்து எப்போதும் தேவரீராலே சேதமின்றிக் காக்கப்பட்டு ஜீவனுள்ளளவும் உம்மில் அன்பு கூருகிறவர்களாய் நிலைத்திருக்கும்படி உமது ஆசீர்வாதத்தை அனுக்கிரகஞ் செய்யும்" எனும் திருச்சபையின் ஜெபத்தைச் சொல்லி அவர்களை யாசீர்வதித்தார். பூசையின் பின், திவ்விய நற்கருணையாசீர்வாத மளிக்கப்பட்டது. கடைசியாக, தங்கள் பெயர்களை எழுதிவைத்துவிட்டு வெளியேகவும், அங்கு கூடிநின்ற ஜனங்கள் யாவரும் கண்ட காட்சியின் மாட்சியால் மனோரதமுற்று, ஆர்ப்பரித்து கரகோஷ்டமிட்டு சந்தோஷங் கொண்டாடினார்கள். உடனே மணமகனும், மணமகளும் இருதுரவம் பூட்டிய இரதத்தில் ஏறி முன்செல்ல, ஸ்திரிபுமான்கள் நிறைந்த அநேக குதிரைவண்டிகள் பின் செல்ல ஊர்கோலமாய் கலியாண கிருகத்திற்கு எழுந்தருளினார்கள். அங்கே 'கேக்' என்னும் பலகாரமும், மதுரிதபானமும் யாவருக்கும் பரிமாறப்பட்டது. இவ்வண்ணமானபின், விஜயஞ்செய்திருந்த கனதனவான்களும், மனமகிழ்ந்து இச் சதிபதிகளை வாழ்த்தி ஆசீர்வதித்து தத்தம் இல்லம் ஏகினர். சரியாய் வந்திக்கத்தக்க மயிலை மேற்றிராணியாண்டவர் அவர்களும், விக்கர் ஜெனரல் மொன்சிஞ்ஞோர் லோப்பஸ் சுவாமியாரவர்களும் தம்பதிகளை ஆசீர்வதித்துத் தந்தியனுப்பினார்கள். பின்னும், சோபனங்கூறி, தூத்துக்குடி, மணப்பாடு, சிலோன் மற்று மிதர நாடுகளிலுமுள்ளப் பந்துமித்திரர்களிடமிருந்து தந்திகள் பலவும், பரிசுகள் ஏராளமாயும் வந்தன.

மணமக்களிருவருக்கும் அன்பு பெருகுக! சமாதானமாகுக! ஆயுள் தீர்க்கமாகுக! சகலசௌக்கியங்களும் உண்டாகுக! எல்லாச் செல்வங்களும் இனிது அபிவிர்த்தியாகுக! என எல்லாம் வல்ல நல்ல தேவனை வேண்டுகிற ஓர் பரதன்.

## நன்மரண அறிக்கைகள்.

எனது அருமைத் தாயார் ரோசம்மாள் சில காலம் வியாதியாயிருந்து எவ்வித வைத்தியஞ் செய்தும் குணப்படாமல் அக்டோபர்மீ 15-ழ்

தேதி புதன்கிழமை பகல் 12½-மணிக்கு பரலோக பிராப்தி அடைந்தார்கள். மறுநாள் வியாழக்கிழமை சாயரட்சை 5 மணிக்கு கோலாலம்பூர் அர்ச். அந்தோனியார் கோவில் கல்லறையில் நல்லடக்கம் செய்தோம். இவர்கள் ஆத்தும இளைப்பாற்றிக்காக 1 பர. 1 பிரி. 1 திரி. வேண்டிக்கொள்ளும்படியாக பிரார்த்திக்கிற,

சிகாம்புட், } அடியேன்,
4—11—1913 } எஸ். பாப்பு.

திருநெல்வேலி ஜில்லா

பாப்பாகுடி.

சிலோன் விளாத்தங்குடை ரிவர்டேல் தோட்டத்தில் வசிக்கும் தே. ம. மரிதாசன் கண்டக்டருடைய தந்தையும், எனது தமையனுருமாகிய மகா-ள ள-ஸ்ரீ, கனம் தே. மரியான் அவர்களுக்குண்டாயிருந்த நடைபிணியின் நிமித்தம் வேண்டிய சிகிச்சை செய்தும் குணப்படாமல் 1913-ம் ஞு அக்டோபர்மீ 2-ம் தேதியாகிய வியாழக்கிழமை பகல் 11-மணிக்கு சுமார் தமது 70-ம் வயதில் தமது மனைவி, குமாரன், குமாரத்தி, பௌத்திரர் மற்றும் குடும்பத்தார்களையும் இக்கண்ணினீர்க் கணவாயில் கலங்கிப் பரதவிக்கவிட்டு அவர்கள் மத்தியில் நமது திரியேக, ஜெகத்ரக்ஷகராகிய கருணையங்கடவுளின் பரமபதம் சேர்ந்தனர். ஷை யாருடைய சடலம் அடுத்த 3-ம் தேதியாகிய வெள்ளிக்கிழமை பகல் சுமார் 12-மணிக்கு அவருடைய குடும்பத்தாரும் மற்றும் திருச் சபையோர்களும் புடைசூழ ஜெபஆராதனைப் பாடல்களுடன் வெகு பூச்சியத்துடன் எடுத்தேகப்பட்டு, ஷை யூர் மையவாடியில் அடக்கஞ்செய்யப்பட்டது. இதைக் கண்ணுறும் கனதனவான்கள், மித்திரர்கள் யாவரும் இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக 1 பர. 1 பிரி. 1 திரி. வேண்டிக்கொள்ளத் தாழ்மையுடன் மன்றாடி நிற்கும்

ஷை

முள்ளோயா தோட்டம், } சகோதரன்
சிலோன். } ஜான் ஆசீர்பாதம்.
13-10-13

162045

எடப்பாடி அர்ச். செல்வநாயகி அம்மாள்

ஆலய தர்மம்.

அடியில் கையொப்பமிட்டிருக்கும் நாம் உதவி செய்யுங் குணமுள்ள சகல நண்பர்களுக்கும் அறிவிப்பது யாதெனில்:—

எடப்பாடி அர்ச். செல்வநாயகி அம்மாளின் திருவாலயத்திற்கு பிரதி வருஷமும் பாஸ்கு பண்டிகையின்போது திருயாத்திரைக்காரர் அவள் திருவடியைப் போற்றி, அவள் உதவியைக் கேட்கத் திரளாய் வருவது யாவருக்கும் தெரிந்த விஷயமே. அப்படி வருகிறவர்களுக்குத் தகுந்த விடுதிகளும், சாவடி சத்திரங்களுமில்லாமையால் கடும் வெயிலின் வெப்பத்தினால் அவர்கள் தவித் தலைவதைக் கண்டும், பொருளுதவி யில்லாமையாய் நாம் அவர்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்ய நாளது வரையில்கூடாமற் போனதைப்பற்றி அதிக வியாகுலப்படுகிறோம். ஆகிலு, அர்ச். செல்வநாயகி அம்மாளை நம்பி இப்போது இந்திய கிறிஸ்தவர்களுக்கு ஒரு சாவடியும், வெள்ளைக்காரர்களுக்கு மற்றொரு சாவடியும் கட்ட ஏற்பாடு செய்வதோடு, கோவிலையும் மராமத்து செய்யவும் துணிந்து, ஏறக்குறைய ரூ 2,500 பெறும்படியான கட்டிடங்களைத் துவக்கிவிட்டோம். தருமசிந்தையுள்ள மரியாயின் தாசர்கள் உடனே நமக்கு கைகொடுத்து இந்த மேன்மையான வேலைகளைச் சீராய் முடிவுசெய்ய உதவிபுரிய வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். இதைக் கண்ணுறும் சகல கனதனவான்களும், சகல கிறிஸ்துவர்களும் தம்தம்மாலியன்றமட்டும் இந்த காரியத்திற்கு பொருளுதவி செய்வார்களென்று நம்பிக்கையா யிருக்கிறோம். நண்பர்களுடைய தர்மம் எவ்வளவு சிறியதேனும் சந்தோஷமாய் அங்கீகரிக்கப்படும். தேவதாயானவள் அவர்களையும் அவர்கள் குடும்பங்களையும் ஆசீர்வதிப்பாளென்பது திண்ணம்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| ஷை தருமத்துக்காக ஏற்கெனவே வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை. | 421 | 4 | 0 |
| Mr. தேவசகாயம் பண்டிதர், அமராபுரு | 1 | 0 | 0 |
| ,, Venethité காரைக்கால் | 3 | 0 | 0 |
| ,, சவரிமுத்து, காட்டேர், | 5 | 0 | 0 |
| ,, செல்வப்பன் பெரியாகவுண்டனூர் | 5 | 0 | 0 |
| ,, பெரியண்ணன் வெண்டனூர் | 5 | 0 | 0 |
| ,, அந்தோனி முதலியார். வெள்ளாண்டி வரிசை | 5 | 0 | 0 |
| Mrs. சவரியம்மாள் சின்னப்பன் பட்டி | 5 | 0 | 0 |
| ஆக மொத்தம் ரூ. | 450 | 4 | 0 |

எடப்பாடி, } ஜே. ஞானதீக்கம்,
கத்தோலிக்குக்கோவில் } விசாரணை குரு.